தொல்காப்பியம்

சைவ சித்தாந்த நோக்கில்

நூலாக்கம்:

சைவ சித்தாந்தப் புலவர், சைவ சித்தாந்தக் கலாநிதி
சிவத்திரு அ. சொ. சுப்பையா எம்.ஏ.,
சிறப்புநிலைப் பேராசிரியர்
தமிழியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

WITH COURAGE AND FAITH

அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர் - 608 002.
1997

தொல்காப்பியம்

சைவ சித்தாந்த நோக்கில்

(அறிவியல் ஒப்பாய்வுப் படங்களுடன்)

நூலாக்கம்

சைவ சித்தாந்தப் புலவர், சைவ சித்தாந்தக் கலாநிதி

சிவத்திரு அ. சொ. சுப்பையா, எம்.ஏ.,

சிறப்புநிலைப் பேராசிரியர், தமிழியல்துறை

அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

அண்ணாமலை நகர் - 608002

1997

முதற்பதிப்பு: 1997

விலை: Rs 130 --

அர்ப்பணிப்பு

சைவத் தமிழ்ச் சான்றோராகிய தொல்காப்பியர், சங்கம் அமர்ந்து இறைமை பேணிய தமிழ்ப் புலவர்கள், சிவப்பணியே தலையாய பணியாகக் கொண்ட ஆன்றோர்கள் ஆகியோரது மலர்த்திருவடிகளில் இந்நூலை அர்ப்பணிக்கிறேன். அவர்கள் இதனை ஏற்றுச் சிறந்ததோர் நறுமண மாலையாக்கிச் சிவபெருமான் திருவடியில் சேர்ப்பார்களாக!

அ.சொ. சுப்பையா

டாக்டர் எம். ஜி. முத்துக்குமாரசாமி,
துணைவேந்தர்,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

அணிந்துரை

அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழியல்துறை வெளியீடான ''தொல்காப்பியம் — சைவ சித்தாந்த நோக்கில்'' என்ற இந்நூலை முழுவதுமாகப் படிக்கும் வாய்ப்புக் கிடைத்தமைக்கு மிகவும் மகிழ்வுறுகிறேன்.

''ஆடுர் திரு எம். இரத்தினசபாபதிப் பிள்ளை நினைவு அறக் கட்டளை'' சார்பில், 1989 ஜனவரி 3, 4 தேதிகளில் சைவ சித்தாந்தக் கலாநிதி, சிவத்திரு அ. சொ. சுப்பையா அவர்கள் நிகழ்த்திய மூன்று சொற்பொழிவுகளின் நல்லதொரு விரிவாக்கமாக இந்நூல் திகழ்கிறது. ஆன்மீகத்தையும், அறிவியலையும் ஒப்பாய்வு செய்து, ஒருங்கிணைப்பு வரைபடங்களையும் உருவாக்கி, உயரிய பல நூல்களிலிருந்து மேற்கோள்கள் காட்டி எளிய உவமைகளோடு இனிய தமிழில் இந்நூலை யாத்திருப்பது மிகவும் பாராட்டுக்குரியதாகும்.

தொல்காப்பியம் என்ற பழம்பெருந் தமிழ்நூல் சங்ககாலத் தமிழ் இலக்கியங்களுக்கு இலக்கணமாகத் திகழ்ந்த பெருமையுடையது. ஆதலால், இதனை, ஒரு மொழி இலக்கணம் என்ற அளவிலேயே உரையாசிரியர்கள் பலரும் இதுகாறும் பொருளமைதி கண்டனர். ஒரு நூலுக்குப் பலவகைத்தாய் உரைகள் அமையலாமாயினும், விழுமிய கருத்து விளக்கமாக அமைகிற உரையே பெரிதும் பயனுடைத்து என்பது தொல்காப்பியரின் கொள்கை. அதற்கு ஏற்ப, ''இஃது ஓர் அரிய வாழ்வியல் இலக்கணம் எனவும், சிவயோகநெறி நின்று உள்முகமாகத் தத்தம் உடம்பினுள்ளே உற்று நோக்குவார்க்குத் தம்முள்ளே ஆழப் புதைந்து கிடக்கும் அரிய பல ஆன்மீகக் கருவூலங்களை அள்ளித் தரவல்ல சைவசித்தாந்த ஞானநூல் இது'' எனவும் சான்றுகள் பல கூறிப் பல்லாயிரம் ஆண்டுக்காலத் தமிழினத்தின் பாரம்

பரியப் பெருமைகளை எடுத்தியம்புவது இந்நூலின் தனிச்சிறப் பாகும்; அந்த வகையில் இதுவே முதலாவது உரைநூல் என்று கூறுதலும் பொருந்தும்.

'நிலையானதும், அறிவுமயமானதும், துன்பக் கலப்பில்லாதது மான (சத்சித் ஆனந்தப்) பேரின்பம் ஒன்று உள்ளது; அதனை இறப்பிற்குப் பின் பெறுகிற முத்திநிலையில் மட்டுமன்றி இப் பூவுலகில் இப்பூத உடம்பிலேயே நாம் நுகர்ந்து இன்புறுகிற வாய்ப்புகளும், அதற்கான பயின்முறைகளும் உள்ளன' என்பது தொல்காப்பியர் கருத்து. இதனை அவர்,

"அந்தமில் சிறப்பின் ஆகிய இன்பம்
தன்வயின் வருதலும் வகுத்த பண்பே"

என்ற ஓர் அழகிய நூற்பா மூலம் அறிவுறுத்துகிறார்.

'உள்ளம் பெருங்கோயில், ஊனுடம்பு ஆலயம்' என்பார் திருமூலர். என் 'உடலிடம் கொண்டாய், யான் இதற்கு இலன் ஓர் கைம்மாறே' எனச் சிவபெருமானைப் பரவித் திருவாசகப் பண்ணிசைப்பார் மாணிக்கவாசகர். இதேபோல், அப்பரும், சுந்தரரும், அழகுதமிழ் ஞானசம்பந்தரும் தத்தம் ஊனுடம் பினுள்ளே உறுபொருளைத் 'தேடிக் கண்டு கொண்ட' சீர்மை யினைத் தேவாரப் பனுவல்களில் பலவாறு எடுத்தியம்புவர்.

இந்நூலைக் கற்போர்க்கு நூலாசிரியரின் நுண்மாண் நுழை புலமும், அவரது தமிழ், ஆங்கிலம், வடமொழி ஆகிய மும் மொழிப் பயிற்சியும், சைவசமயச் செந்நெறியில் அவர்கள் கொண்டுள்ள பல்லாண்டு அனுபவமும், 'யாம்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்ற சீரிய குறிக்கோளோடு, அவர்கள் உள்ளுணர்வால் தாம் தெளிந்த அரிய ஆன்மீக உண்மைகளைப் பண்டைத்தமிழ் இலக்கிய இலக்கணங்களோடும் நவீன அறிவிய லோடும் இணைத்து ஐயம்திரிபின்றிப் பிறருக்கு வெளிப்படுத்து கிற திறனும் நன்கு புலனாகும்.

இவ்வமையம் நமது அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழியல்துறையில் சிறப்புநிலைப் பேராசிரியராகத் திருமுறை உரை ஆய்வு மேற்கொண்டிருக்கும் நூலாசிரியர் சிவத்திரு அ சொ. சுப்பையா அவர்கள், மேன்மேலும் பல ஆய்வு விரிவுரைகளை எழுதித் தமிழகத்தின் பழம்பெரும் பண்பாட்டினையும், தமிழினத்தின் மறைந்து கிடக்கும் கூர்த்த மதித்திறனையும் உலகறியச் செய்வதற்கு இறைவன் திருவருள் புரிவாராக!

பயனுடைய இந்த நூலை, எங்கள் பல்கலைக்கழகத்தின் வெளியீடாக உலகுக்கு அறிமுகம் செய்வதில் யான் பெருமகிழ்வெய்துகிறேன்.

6--1--1997 எம். ஜி. முத்துக்குமாரசாமி

டாக்டர் அ. ஆனந்தநடராசன்,
தமிழியல் துறைத்தலைவர்
இந்தியமொழிப்புல முதன்மையர்,
அண்ணாமலைப்பல்கலைக்கழகம்.

பதிப்புரை

தமிழ் என்றாலே அமுதம், இன்பம் என்பன பொருள். தமிழ் கூறும் நல்லுலகில் அமுத ஊற்றாக இன்பம் பயப்பது, மிகத் தொன்மையான சைவப் பெருநெறியாகும். அது திராவிடப் பண்பாட்டின் பாரம்பரியப் பெருமைகளை உலகுக்கு உணர்த்தும் சிறப்பு மிக்கது என மேலைநாட்டு அறிஞர்களும் போற்றுவர்.

> ''முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப்
> பழம்பொருளே
> பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே!''

எனச் சிவபெருமானைப் போற்றுவார், மாணிக்கவாசகர். சிவபெருமான் எங்கும் நிறைந்தவர்; எக்காலத்தும் மாறுபாடின்றி நிலைத்திருப்பவர்; அணு முதல் அண்ட பேரண்டம் வரை ஒவ்வொரு பொருளிலும், அவர் தம் அன்பு முத்திரையைச் சீராகப் பதித்துள்ளார்.

இவ் அரிய உண்மைகளை நம் இளைய தலைமுறையினரும் உணர்ந்து தெளிதல் வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தோடு ஆடுர் திரு.எம். இரத்தின சபாபதிப் பிள்ளை நினைவு பன்னிரு திருமுறை சைவசித்தாந்த அறக் கட்டளையை அவர்தம் குடும்பத்தினர் நம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் நிறுவியுள்ளனர். அதன் சார்பாகத் திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள் முதலாகச் சைவ சித்தாந்தத்தில் நிறைந்த அனுபவமுடைய பல நல்லறிஞர்கள் ஆண்டு தோறும் சொற்பொழிவாற்றிச் சைவசித்தாந்தத்தின் உயரிய நெறிமுறைகளை மாணவர்களுக்கும் மற்றவர்களுக்கும் அறிவுறுத்தி வருகின்றனர்.

1989-ல் சிவத்திரு அ. சொ. சுப்பையா அவர்கள் இவ் அறக் கட்டளை சார்பாக மூன்று சொற்பொழிவுகளை நிகழ்த்தினார்கள். அவற்றின் விரிவாக்கமே இந்நூலாக மலர்ந்து சைவமணம் கமழ்கிறது.

தொல்காப்பியம் மூன்று அதிகாரங்களையும் ஒவ்வோர் அதிகாரமும் ஒன்பது இயல்களையும் கொண்ட சீரிய வடிவ அமைப்பினை உடையது. தொல்காப்பியரை அடியொற்றி இந் நூலாசிரியரும் தம் மூன்று சொற்பொழிவுகளின மூலக்கருத்தை மூன்று தலைப்புகளில் இருபத்தேழு இயல்களாக வகுத்தமைத் துள்ள பாங்கு பாராட்டிற்குரியது.

கடவுள் ஒருவரே என்பது சைவசமயத்தின் அழுத்தமான கொள்கை. ஒன்றேயாகிய அப்பரம்பொருள் சிவன் என்றும் சத்தி என்றும் இரண்டு கூறுகளாகி மீண்டும் மீண்டும் இணைவதால்தான் உலக இயக்கம் நிகழ்கிறது என்பது தொன்றுதொட்ட சைவக் கோட்பாடு. அதனை நேர் மின்னாற்றல், எதிர் மின்னாற்றல் என்ற இக்கால மின் இயக்க அறிவியலோடு ஒப்புநோக்கி நூலாசிரியர் சிந்தித் திருப்பது [பக்கம்-29] இன்பம் பயப்பதாகும்.

அதேபோல் மனித உடம்பினை, வெறும் எலும்பு, நாம்பு, தசைகளின் கூட்டமாக மாத்திரம் கருதாமல், இறைவனின் புனித இருக்கையாக வரைபடங்களுடன் அவர்கள் நிறுவ முற்-பட்டிருப்பது, புதுமையான சிந்தனை மட்டுமன்று, உயிரோட்ட முள்ளதாகவும் அமைந்துள்ளது.

கல்லிலும் கனகமணித் திரளிலும் கடவுளின் உருவத்தைக் கண்டு வழிபடுகிற மனிதன், சற்றே உள்முகமாகத் தன் சிந்தையைச் செலுத்தினால், அங்கு ஓர் அழகிய பரிணாம வளர்ச்சியைக் காணமுடியும் என அறுதியிட்டுக்கூறும் நூலாசிரியர் முதற்கண் உயிருக்கு மிகமிக அண்மையில் அதாவது உடலின் உள்உறுப்புகளில் சிவபரத்தின் அருஉருவத்தைக் கண்டு மகிழலாம் என்றும், தொடர்ந்து பிராசாதயோகத்தினை ஒன்றிய மனத்தோடு மேற்கொள்ளின், உயிருக்குள் உயிராகச் சிவபெரு மான் தன் சத்திவடிவில் அருவமாக ஒளிந்து நின்று நம்மை இயக்குவதை உணரமுடியும் என்றும் நூலாசிரியர் தெளிவாக்கு கிறார். இஃது சிவயோகப் பயிற்சியில் அவர்களது ஆழ்ந்த அனுபவத்தைப் புலப்படுத்துகிறது. ஆன்மாக்களுடன் ஒன்றாய், உடனாய், வேறாய் ஆண்டவன் நிற்கிறான் என்ற மெய் கண்டார் வாக்குக்கு இது சான்றாகவும் அமைகிறது.

மேலும், திருமுறைகளையும், சைவசித்தாந்த சாத்திரங்களையும், தொல்காப்பியத்தையும், சங்கத்தமிழ்ப் பாடல்களையும் சான்றுகாட்டி, உடற்கூறுகள் பலவும், கடவுளின் வடிவத்தையும், இயல்பு மற்றும் செயற்பாடுகளையும் சுட்டி உணர்த்த வல்ல சுதைவேலையாம் எனக் குறிப்பிடுவது ஒரு சுவையான செய்தியாகும்.

கடந்த இரண்டாண்டுகளாக இந்நூலாசிரியர், நம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழியல்துறை ஆராய்ச்சிப் பிரிவில் தேவார திருமுறைகளுக்குத் தொன்மையான சைவ சித்தாந்தச் செம்பொருளையும், நவீன அறிவியலையும் துணைக் கொண்டு, ஆய்வு விரிவுரை எழுதி வருகிறார்கள், செவ்விய சிவயோக பயிற்சியும், ஆழ்ந்த தமிழ்ப்பற்றும், ஆங்கில மொழிப் புலமையும், வடமொழி அறிவும், சாத்திர தோத்திர ஈடுபாடும் அறிவியல் சிந்தனைகளும், ஒப்பாய்வு நோக்கும், யாவரும் மனங் கொள்ளத்தக்க இனிய எளிய விளக்கவுரைகளும் கொண்ட அவர்களது இந்நூலை அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழியல்துறை வெளியீடாக உலகினுக்கு அறிமுகம் செய்வதில் பெரிதும் மகிழ்வுறுகிறேன். இதனைப் பயின்று பலரும் பயன் பெற வேண்டுமென ஸ்ரீமந் ஆனந்த நடராஜப் பெருமான் திருவடிகளைப் போற்றுகிறேன்.

புகழ்பூத்த அண்ணாமலைப் பல்கலைக்கழக ஈடில்லாஇணை வேந்தர் உயர்திரு டாக்டர் எம். ஏ. எம். இராமசாமி அவர்களுக்கும், பல்கலைக் கழகத்தைக் கண்ணுங்கருத்துமாகக் காத்து வரும் மாண்பமை துணைவேந்தர் அவர்களுக்கும், பல்கலைக் கழகத்தைச் சிறந்த முறையில் நிர்வகித்துவரும் பதிவாளர் மற்றும் ஆட்சிக்குழு உறுப்பினர்களுக்கும், நூல் வெளியீட்டுத் துறையினருக்கும் என் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

6—1—1997 அ. ஆனந்த நடராசன்

வாழ்த்துரை

தருமபுர - ஆதீன வித்துவான், திருவண்ணாமலை ஆதீன-விரிவுரை அரசு, மதுரை திருஞானசம்பந்த சுவாமிகள் ஆதீனச் சித்தாந்த சைவ வித்தகர், சைவ சித்தாந்த சரபம், பாலகவி

சிவ ஸ்ரீ தத்புருஷ தேசிகர் அவர்கள், தேவகோட்டை

நமது அன்புருவாகிய அரும்பெறற் செல்வர் அ.சொ சுப்பையா அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் ஆற்றிய விரிவுரையைத் தமிழ் மக்கள் அனைவரும் அறிந்து பயன் பெற வேண்டும் என்னும் நல்லெண்ணத்துடன் 'தொல் காப்பியம் - சைவ சித்தாந்த நோக்கில்' என்னும் பெயருடன் நூலாக வெளியிடுவதறிந்து மகிழ்ச்சி அடைகிறோம்.

வரலாற்றுக் காலத்துக்குப் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே சிறப்பாகப் பாரத நாட்டிலும், பொதுவாக உலக நாடுகளிலும் சிவ வழிபாடு - சிவநெறிக் கொள்கைகள் மேலோங்கி இருந்தன என்று வரலாற்று வல்லுநர்கள் முடிவு செய்து இருக்கிறார்கள். தொல்காப்பியம் தமிழகத்திலிருந்த இடைச் சங்க காலத்தில் ஏறக்குறைய ஆறாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் எழுந்தது இந்நூலை நமக்குத் தந்த தொல்காப்பியருக்கு ஆசிரியர் அகத்திய முனிவர்.

அகத்திய முனிவரைப் பற்றிய வரலாறுகள் அனைத்தும் அவரை மேலான சிவநெறிச் செல்வர் என்று தெளிவு படுத்துகின்றன. சிவபெருமானால் அகத்திய முனிவருக்குத் தமிழ் மொழி வலியுறுத்தப் பெற்றது என்றும் முருகப் பெருமானிடம் அவர் தமிழிலக்கணத்தை அறிந்து கொண்டார் என்றும் புராணங்கள் கூறுகின்றன.

சிவநெறிச் செல்வராகிய அகத்திய முனிவரிடம் தமிழ் பயின்றதாலும், தாம் வாழ்ந்த காலத்தில் நாட்டில் சிவநெறி செழித்திருந்ததாலும், தொல்காப்பியர் சிவநெறி உண்மைகளை நன்கு

தெளிந்திருப்பார் என்பதில் ஐயமில்லை: அவரது சிவநெறித் தெளிவு தொல்காப்பியத்தில் இடம் பெற்று இருப்பதில் வியப்பும் இல்லை.

தொல்காப்பியத்தை இதுவரை ஒரு இலக்கண நூலாகவே கண்டு எல்லோரும் பாராட்டி வந்துள்ளார்கள். இந்நூலைச் சமயஅடிப்படையில் கூர்ந்து நோக்கிச் சமயக் கருத்துக்கள் தொல் காப்பிய பொருளிலக்கண அமைதியில் எத்துணை ஒற்றுமை உடையனவாய் இருக்கின்றன. என்பதைத் திரு.அ.சொ. சுப்பையா அவர்கள் இந்நூலில் நன்கு காட்டி உள்ளார்கள். இவர்கள் சைவ சித்தாந்த சாத்திரங்களையும் திருமுறைகளையும் ஊன்றிக் கற்று அவற்றில் ஈடுபடும் உணர்வு மிக்கவர்கள். விதிப்படி மூவகைத் தீக்ஷைகளும் பெற்று, நியமந் தவறாது ஆன்மார்த்த சிவபூஜை, அக்கினி காரியம் ஆகியவற்றைச் செய்துவருபவர்கள்.

மேலும் சைவ சித்தாந்த தத்துவ உண்மைகளை உடற்கூறு கூறும் மருத்துவ உண்மைகளுடன் ஒப்பு நோக்கி இந்நூல் புதிய முறையில் எழுதப் பெற்றுள்ளது.

இதுவரை எவரும் மேற்கொள்ளாத புதிய முயற்சியில் ஈடுபட்டு, யாரும் விரும்பத்தக்க முறையில் இந்நூலை எழுதி உதவிய அன்பர் அ.சொ. சுப்பையா அவர்களுக்குத் தமிழ்ச் சங்கத் தலைமைப் புலவரும் நமது ஆன்ம நாயகருமாகிய சொக்கலிங்கப் பெருமான் இது போன்ற ஆய்வு முறைகளுடன் கூடிய மேலும் பல சிறந்த நூல்களை எழுதி உதவவும், அறிவு வளம் முதலிய எல்லா வளங்களையும் அருளவும் அவரது திருவடிகளைச் சிந்திக்கின்றோம்.

நலமே தழைக!

தத்புருஷம்

உ
முருகா

வாழ்த்துரை

(திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள்)

''தொல்காப்பியம் - சைவ சித்தாந்த நோக்கில்'' என்ற இந்த நூல் ஆழ்ந்து சிந்தித்து எழுதப் பெற்றது.

இதனைச் சித்தாந்தச் செம்மல் அ.சொ. சுப்பையா அவர்கள் கூர்த்த மதியால் அறிவுக்கு விருந்தாகச் சித்தாந்தக் கருத்துக் களை விளக்கி எழுதியுள்ளார்கள்.

இதனை உற்று நோக்கிப் படிப்பவர்கள் பல உண்மைகளை உணர்ந்து உய்வு பெறுவார்கள்.

நூலாசிரியர் நுண்மதியால் எழுதியுள்ளார். பலப்பல தத்து வங்களை ஆய்ந்து வரைந்திருப்பது பாராட்டுதற்குரியது.

திருவருள் துணைபுரிக!

இதனை ஏனோரும் ஓதி உணர்ந்து வானோரும் போற்றும் நிலையில் இனிது வாழ்வார்களாக!

திருச்சிராப்பள்ளி
சுக்கில ஐப்பசிச் சுவாதி

அன்பன்
கிருபானந்தவாரி

பொருளடக்கம்

தொல்காப்பியம்

சைவ சித்தாந்த நோக்கில்

முகவுரை

மலை நாட்டின் தலைநகரம், கோலாலம்பூர். அங்கு ஆறா வது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு, 1987 நவம்பர் 15 முதல் 19 வரை நடைபெற்றது. நவம்பர் 16, திங்கட்கிழமை முதல், கருத்தரங்கங்கள் தொடங்கின,

அன்று பிற்பகல் 2-மணிக்குத் 'தொல்காப்பியத்தில் சைவம்' என்ற எனது ஆய்வுரை இடம் பெற்றது. அப்பேரவையிலே ஐந்நூறுக்கு மேற்பட்ட ஆன்றோர் கூடியிருந்தனர். பண்டைத் தமிழ் இலக்கண இலக்கியங்களுக்கும், அநாதிகாலச் சைவ சித் தாந்தச் செந்நெறிகளுக்கும் உள்ள ஒருமைப்பாட்டிற்கு அறிவி யலை ஒட்டிய அணுகுமுறை கண்டு, அவையோர் அனைவரும் கரஒலி, குரல் ஒலி மூலம் தம் மகிழ்வினைத் தெரிவித்தனர்.

அக்கருத்தரங்கில் கலந்து கொண்ட நம் அண்ணாமலைப் பல்கலைக் கழக அந்நாள் துணைவேந்தர், பேராசிரியர் இராம சேதுநாராயணன் அவர்கள், கூட்டம் நிறைவுற்றதும், தம் முடைய உள்ளார்ந்த பாராட்டினை நேரில் தெரிவித்ததோடு அத்தகைய சொற்பொழிவுகளை, நம் அண்ணாமலைப் பல்கலை கழகத்திலும் நிகழ்த்த வேண்டும் என்ற தமது நல் விருப் பத்தை வெளிப்படுத்தினார்கள்.

தில்லைக் கூத்தன் திருவருளால், சென்னைப்பல்கலைக் கழ கத்தில் இளங்கலைப் பட்டமும், மதுரைக்காமராசர் பல்கலைக் கழகத்தில் 'முதுகலைப்பட்டமும் பெற்றுத், தேவகோட்டை சைவ சித்தாந்த சரபம், சிவத்திரு தத்புருஷதேசிக குருவருளால் சிவஞானத் தெளிவு பெற்றுவரும்| அடியேனுக்கு,

மலாயாப் பல்கலைக் கழகத்தில் நிகழ்த்திய ஆய்வுரை மூலம், 1989 ஜனவரி 3,4 ஆகிய இரு நாட்களில் அண்ணாமலைப் பல்

கலைக் கழகத்தில் ''ஆடூர் திரு எம் இரத்தினசபாபதிப் பிள்ளை அவர்களின் நினைவு பன்னிரு திருமுறை சைவ சித்தாந்த அறக்-கட்டளை''யின் சார்பாக மூன்று சைவ சித்தாந்தச் சொற் பொழிவுகள் நிகழ்த்தும் பேறு வாய்த்தது.

1. ''தொல்காப்பியம் — சைவ சித்தாந்த நோக்கில்''
2. ''சங்க நூல்களில் சைவக் கோட்பாடுகள்''
3. ''சைவ சித்தாந்தச் செம்பொருளும் உடற்கூறும்''

என்ற தலைப்புகளில் சொற்பொழிவு நிகழ்த்தினம்.

சீரார்ந்த மெய்ப் பொருள் உண்மைகள், எளியோரையும் சென்று அடைய வேண்டும் என்பது பன்னெடுங் காலத்து அவா. ஆதலால், செறிவுடைய சித்தாந்த சைவக் கோட்பாடுகளுக்கு விரிவும் எளிய விளக்கங்களும் வேண்டற்பாலன ஆயின.

அத்தகைய கருத்து விளக்கத்துக்கும், மொழி எளிமை. பாட்டிற்கும், பெருமுயற்சியும் நெடிய காலமும் தேவையாயின, எனவே அம்மூன்று சொற்பொழிவுகளின் விரிவாக்கமாகவே இந்நூல் அமையக் காணலாம்.

சைவ சித்தாந்தம் என்பது நன்முத்துக்கள் நிறைந்த ஓர் ஆழ் கடல்.

தொல்காப்பியம் என்பது ஆழ்கடல் முத்தின் அரியதொரு கோவை;

அறிவியல் என்பது அக்கோவையில் இழையோடும் ஒரு பொன் னூல்.

சிந்தனைத் தோற்றமும் ஊற்றமும்: சிவபூஜை நேரத்தில் இவ் அடியேனது சிந்தை சிவத்தின்பால் ஒன்றி நிற்கும்போது, இந்த நூலின் அடிப்படைக் கருத்துக்கள், பெரிதும் உள்ளுணர் வாகவே (Intuition) மலர்ந்தன.

விழுமிய பேரின்பக் குறிப்புடைய அவற்றை மற்றவரும் அறிந்து பயன்பெற வேண்டும் என்ற நோக்கத்தால், வழிபாட்டு

நேரத்திலேயே அவற்றை எழுதியும் வரைபடங்களாக வரைந்தும் வைப்பது வழக்கம். ஆயினும், இக்காலத்தில் உள்ளுணர்வுகளை வெறுங் கற்பனை என்றும் மிகை என்றும் ஒதுக்குகிறவர் பல ராக உளராதலின், அவர்கள் நூல்வழிச் சான்று கேட்பரே என்ற ஐயம் எழுந்ததுண்டு. ஆதலால் கருத்துக்களை வெளிப்படுத் தாமல் தன்னளவில் நிறைவு கண்டு, மன அமைதி கொண்டு, இன்புற்றிருந்த காலமும் உண்டு.

இல்லத்தில் உள்ள சிறு நூலகத்தில், அவ்வப்போது, ஏதே னும் ஒரு நூலை எடுத்து, ஏதேனும் ஒரு பக்கத்தில் ஏதோ ஓரிடத்தை நோக்கினால், முற்றிலும் வியத்தகு முறையில் திருவருள் துணையால், அங்கு, மூலக் கருத்துக்களை அரண் செய்யுமாறு சான்றுகள் முன் நிற்கும்.

அதே போன்று, கருத்து விளக்கத்துக்கு இடர்ப்படுங் காலங் களில், எங்கள் ஞானகுரு சிவ ஸ்ரீ தத்புருஷ தேசிகர் அவர்களது சிந்தனைச் சுடர்கள் இயல்பாகவே கைகொடுத்து உதவும்.

திருவருளின் இக் கருணை வெளிப்பாட்டை, நன்றிப் பெருக் கொடு சிந்தித்து வழிபட, உள்ளத்து எழுச்சிகளும், நூல்வழிச் சான்றுகளும் பின்னிப் பிணைந்து, இக்கருத்துப் பேழை ஒரு சீரிய வடிவம் பெற்றுள்ளது.

இந்நூல் என் உள்ளம் எனும் ஆய்வகத்தில் பத்து ஆண்டு களுக்கு மேல் கருவில் வளர்ந்த ஒரு தெய்வக் குழந்தை. சூலில் பட்ட இடர்ப்பாடுகள் சொல்ல வொண்ணாதன. அப்போதெல் லாம் தாயினும் சாலப் பரிந்து இப்பாவியேனுடைய ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி ஞானப் பாலினைச் சொரிந்து உள்ளத்தில் உயிர்ப்பு ஊட்டிய, எஞ்ஞான்றும் அருள் துணை வராய் ஆன்ம நாயகராய் விளங்குகிற ஸ்ரீ தையல்நாயகி உட னாய ஸ்ரீ வைத்தியநாதப் பெருமான் மலர்த் திருவடிகளைச் சென்னிமேல் சூடிக் கொள்ளுவதில் பெரு மகிழ்வுறுகிறேன்.

நன்றியுரை: இவ்வெளியேனது மறைதிறனைத் தம் கூர்த்த மதியால் கண்டறிந்து, சிறப்பு நிலைப் பேராசிரியர் என்ற தகுதி யோடு அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழியல் ஆராய்ச்சிப் பிரிவில் திருமுறை உரை ஆய்வு செய்யவும், இடையறாது இறை பணியில் ஈடுபடவும் வாய்ப்பளித்த இணைவேந்தர், செட்டி நாட்டுக் கோமகனார், டாக்டர் எம்.ஏ.எம். இராமசாமிச் செட்டியார் அவர்களுக்குப் பெரிதும் நன்றிக் கடப்பாடுடையேன்.

நம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர், டாக்டர் எம். ஜி. முத்துக்குமாரசாமி அவர்கள் டாக்டர் பி. சி. ராய் விருது பெற்ற சிறந்த மருத்துவத்துறை அறிஞரும், நல்ல ஆன்மீகச் செல்வரும் ஆவர். தமிழிலும், திருமுறைகளிலும் ஈடுபாடு மிக்கவர்கள்; அவர்களின் அன்பான அரவணைப்பில் ஆய்வு மேற்கொள்ளுவதும், சைவத் தமிழ்க் கருவூலங்களை நூல் வடிவில் உலகுக்கு உணர்த்துவதும் ஒரு தனி மகிழ்ச்சியைத் தருவதாகும். பண்டைய தமிழ் இலக்கிய இலக்கண நூல்களை சைவ சித்தாந்தத் தோடும் அறிவியலோடும் ஒப்பு நோக்கி ஆய்வு செய்யப் பெற்ற இந்நூலுக்கு அவர்கள் சீரிய அணிந்துரை வழங்கிப் பாராட்டியுள்ளார்கள். அவர்களுக்கு மிகவும் நன்றி யுடையேன்.

இந்நூலை அச்சேற்றி வெளிக் கொணர்வதில், பொறியியல் அறிஞரும், தமிழ் ஆர்வலரும், சிறந்த நிருவாகியுமான அன்பு கெழுமிய பதிவாளர், பேராசிரியர் முனைவர் பழ. சபாரத்தினம் அவர்கள் என்னைப் பலகாலும் ஊக்குவித்தார்கள். அவர் களுக்கு எஞ்ஞான்றும் நன்றியுடையேன்.

தமிழியல் துறைத் தலைவரும் இந்திய மொழிப்புல முதன் மையருமாகிய பேராசிரியர் முனைவர் அ. ஆனந்தநடராஜன் அவர்கள் எல்லோரையும் வாழ்த்தி மகிழ்வதையே நல்லியல் பாகக் கொண்டவர்கள். அவர்கள் பதிப்புரை வழங்கிச் சிறப்பித் துள்ளார்கள். அவர்களுக்கு நன்றி.

பல்வேறு அலுவல்களுக்கிடையே, தம்முதுமைப் பருவத்தின் உடல் தளர்ச்சியையும் மனங் கொள்ளாது, இந்நூலின் மூலப் படிகளைத் திருக்கண்ணோக்கி, ஞானத்தெளிவூட்டி வாழ்த்துரை

வழங்கி அருள்பாலித்த, அன்புருவாய எங்கள் ஞானகுரு, தேவகோட்டை சைவசித்தாந்த சரபம் சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர் பாலகவி வயிநாகரம் வெ. இராமநாதன் செட்டியார் அவர்களது திருமலரடிகளை மனம், மொழி, மெய்களால் வாழ்த்தி வணங்குகிறேன்.

சிந்தனைகளுக்கு உரமூட்டி, முயற்சியைப் பல்லாற்றானும், பாராட்டி, ஆறாவது உலகத்தமிழ்க் கருத்தரங்கிற்கு (மலேசியா) அறிமுக ஓலை தந்து, இந்நூலுக்கும் அரியதோர் அணிந்துரை நல்கிச் சிவத் தொண்டில் அடியேனை மேன்மேலும் ஊக்கு வித்தவரும், முதுபெரும் அருளாளருமாகிய திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகளது திருவடிகட்கு என்றென்றும் நன்றிக் கடப்பாடுடையேன்.

மூலநூலை அச்சுக்கு ஏற்றவாறு படிஎடுப்பதிலும் ஓவியங் களைச் சேகரிப்பதிலும் என் அன்பு மகன் சு. பழநியப்பனும் பெண்மக்கள் சிட்டாள் அழகப்பன், மீனாட்சி பெரியகருப்பன் ஆகிய மூவரும் ஆர்வத்தோடு துணை புரிந்தனர், உடற்கூறு தொடர்பான வரைபடங்களை ஈரோடு மருந்தியல் கல்லூரியில் விரிவுரையாளராகப் பணிபுரியும் என் இளையமகன் சுப்பையா கணேசும், அண்ணாமலைப் பல்கலைக்கழக மருந்தியல் துறை விரிவுரையாளர் திரு வ. வெங்கடாசலமும், பொறியியற் கல்லூரி மாணவி செல்வி அ. நாச்சம்மையும் வரைந்து உதவினர். நன் மக்களாகிய இவர்கள் அனைவரும் இறைவன் திருவருளால் வளமுடன் வாழ வாழ்த்துகிறேன்.

அறிவியல் வரைபடங்களையும் ஆன்மீக வரைபடங்களையும் இணைத்து, ஒப்பு நோக்குப் படங்களை உருவாக்க உதவிய அண்ணாமலைப் பல்கலைக் கழகக் கணிப்பொறியியல் துறைத் தலைவரும் கெழுதகை நண்பருமான பேராசிரியர் பா. பழனி யப்பன் அவர்களுக்குப் பெரிதும் நன்றி.

நூலை அச்சுக்குக் கொண்டு வருவதில் பேரார்வத்துடன் முயன்ற அண்ணாமலைப் பல்கலைக்கழக முன்னாள் இயந்திரப்

பொறியியல் துறைத் தலைவரும், சூரிய வெப்ப ஆய்வியல் அறிஞரும், இறையியலில் நாட்டம் மிக்கவருமான பேராசிரியர் வீர. முத்து வீரப்பன் அவர்களுக்கும், மற்றும் இயந்திரப் பொறியியல் துறைப் பேராசிரியர் அரு. இராமநாதன் அவர்களுக்கும் அன்பு கலந்த நன்றியுரியது.

உடலியல் தொடர்பான மேற்கோள் நூல்களைத் தந்தும், அவ்வப்போது கருத்துப் பரிமாற்றங்கள் செய்தும், தொடர்ந்து என்னை ஆய்வுப்பணியில் ஊக்குவித்த திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் மாண்பமை துணைவேந்தரும், உலகளவில் புகழ்மிக்கத் தலையாய இந்திய விஞ்ஞானிகளில் ஒருவருமான டாக்டர் வீர. முத்துக்கருப்பன் அவர்களுக்கும், ஆங்கில மருத்துவ நூல்களைத் தந்துதவிய நல்லன்பரும், சிறந்த மருத்துவருமான சிறுகூடற்பட்டி டாக்டர் அ. இராதாகிருஷ்ணன் அவர்களுக்கும், என் இதயம் நிறைந்த நன்றி உரியது.

என் அன்பு மனைவியார் திருமதி சுப. வள்ளியம்மை நள்ளிரவில் யான் ஆய்வுப் பணிக்காக அமர்ந்தாலும் உள்ளன்போடு உறுதுணை புரிந்து, என்னுடைய ஆக்கப் பணிகள் அனைத்தும் வெற்றி பெறுமாறு முழுமையாக ஒத்துழைத்து வருபவர்கள். அவர்கள் பலகாலம் தொடர்ந்து இங்ஙனம் இறைத் தொண்டு செய்வதற்கு இறையருளை வேண்டுகிறேன்.

மூன்றாவது அதிகாரத்தை அச்சுக்கு ஏற்றவாறு படி எடுத்து அச்சுப் படிகளைத் திருத்தம் செய்வதில் துணை நின்ற அன்பர், திரு சிவ. சுந்தரலிங்கம் அவர்களுக்குத் திருவருள் துணையால் நன்மை பெருக, வாழ்த்துக்கள்.

நூல் அச்சேறுங்கால் அவ்வப்போது நல்ல ஆலோசனைகளை வழங்கி ஆற்றுப் படுத்திய அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழியல் ஆய்வுத் துறைப் பேராசிரியர் முனைவர் வெ. பழனியப்பன் அவர்களுக்கும், மதுரை, தியாகராசர் கல்லூரி தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் முனைவர்

ந. மாணிக்கம் அவர்களுக்கும், மதுரை, காமராசர் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர் முனைவர் இரா. மோகன் அவர்களுக்கும் நன்றி உரியன.


ஒன்பது ஆண்டுகளுக்கு முன் என்னை அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துக்கு அறக்கட்டளைச் சொற்பொழிவு மூலம் அறிமுகம் செய்த அந்நாள் துணைவேந்தர் பேராசிரியர் இராம. சேது நாராயணன் அவர்களுக்கும், தமிழியல் துறையின் அந்நாள் தலைவர் பேராசிரியர் முனைவர் ஆறு. அழகப்பன் அவர்களுக்கும் நன்றிக் கடப்பாடுடையேன்.

இந்த நூலைச் சீரும் சிறப்புமாக வெளியிடுகிற அண்ணா மலைப் பல்கலைக் கழகப் பதிப்புத் துறையினர்க்குப் பெரிதும் நன்றி உடையேன்.

இந் நூலைச் சிறந்த முறையில் அச்சிட்ட சிதம்பரம் மீனாட்சி அச்சகத்தார்க்கு நன்றி உரியது.

அ.சொ. சுப்பையா

வரைபடங்களும் விளக்கப் பக்கங்களும்




1. விநாயகர் ஆன்மாவை அம்மையப்பரிடம் சேர்த்தல் .

1.இறைவன் திருவடி 2. ஆன்மா - ஔவையார்

3. பரசிவம் - முத்திப்பேறு






மூளையும முதுகுத்தண்டும
(மைய நரம்பு மண்டலம்)



2. தண்பாயுதபாணியும் முதுகந்தண்டும்






1.மூளை
2.கழுத்து எலும்புகள் நரம்புகள் 7
3.மார்பு எலும்புகள் நரம்புகள் 12
4. வயிற்று எலும்புகள் நரம்புகள் 5
5.அடிவயிற்று எலும்புகள் நரம்புகள் 5
6.மூலாதார எலும்புகள் நரம்புகள் 2
7.முகுளம்
8.வெண்முகில் கார் முகில்


மூளையும் முதுகுத்தண்டும்
[மைய நரம்பு மண்டலம்]

3.கலைமகளும் வீணையும் முதுகந்தண்டும்.




4 -இருதயம் - உள் அமைப்பு


1.வலது மேல்அறை   சிவன்
2.இடது மேல் அறை - சத்தி
3. வலது கீழ்அறை - பிள்ளையார்
4. இடது கீழ்அறை - முருகன்
5.மூவிதழ்வால்வு - திரிசூலம்
6.ஈரிதழ் வால்வு   சத்திவேல்
7.-அழுக்கு ரத்தக் கீழ்ப் பெருநாளம்
8.-அழுக்கு ரத்த மேல் பெருநாளம்
9.செங்குருதிப் பெருநாளம்



5. சிவகுடும்பம்




5. இருதயம்




3. சிவகுடும்பமும் இருதயமும்

1. வலது மேல் அறை — சிவன்
2. இடது மேல் அறை — சக்தி
3. வலது கீழ்அறை — பிள்ளையார்
4. இடது கீழ்அறை — முருகன்
5. செங்குருதிப் பெருநாளம் — தெய்வயானை
6. நீல இரத்தப் பெருநாளம் — வள்ளி




அறிவுத்தானம்-மூளை
மாதொருபாகன்

1. பெருமூளை-வலக்கூறு--சிவநாதம்
2. பெருமூளை- இடக்கூறு--விந்துசத்தி
3. சிறுமூளை--ஆதிசத்தி
4. முதுகுத்தண்டு--தண்டாயுதபாணி



6. மாதொரு பாகனும் பெருமூளையும்




7. சோமாஸ்கந்தரும் மூன்று மூளைகளும்

1. பெருமூளை – சிவபெருமான 2. சிறுமூளை - சிவசக்தி

3. நடுமூளை – கந்தன




8.சிவபெருமானின் பிசாணடிக கோலமும
மூளை இணைபபானும




மூளையின் உட்பகுதி

1.ஞானப்பால் ஊட்டகம்
2.தலைமைச் சுரப்பி, [ஆன்மஅல்குல்]
3.வீரக்கழல் [கண் நரம்புக்குறுக்கீடு]
4.மூளை இணைப்பான் [பிசாண்டி]
5.மூன்றாம் நாளம்
6.பகீரத கங்கை நான்காம் நாளம்
7.பெருமூளை 9.முகுளம்
8.சிறுமூளை 10.பீனியல்பாடி




மைய நரம்பு மண்டலமும் ஆகாய கங்கையும்

1. பெருமூளை
2. சிறுமூளை
3, நடுமூளை
4. மூன்றாம் நாளம்
5. தலைமைச்சுரப்பி
6. தலை உச்சிக்குழி
7. மூளை முதுகுத் திரவம்
8. மூளைக் கால்வாய்
9. நான்காம் நாளம்
10. முகுளம்
11. உள் அரண்
12. நடு அரண்
13. மேல் அரண்
14. முதுகுத்தண்டு



மூளையும் முதுகுத்தண்டும்
[மைய நரம்பு மண்டலம்]

பெண்ணின் கூந்தலும், மைய நரம்பு மண்டலமும்
கொடிக் கம்பமும், ஒளிஈர்ப்பானும்



11. ஆலமர் கடவுளும் பார்வைக் குறுக்கோட்டமும்.

மனித உடலில் சைவமும் தமிழும் — ஒப்பாய்வு
(எண்கள் — வரைபடம் — 12 காண்க)

தொல் காப்பியம்	உரிமை ஒழுக்கம்	நிலவியல்	தத்துவம்
8	பேரின்பம்		மீதானம் துவாதசாந்தம்
7 குறிஞ்சி 'மிக்கோன்'	உடன்போக்கு		சஹஸ்ராரம் 1000-இதழ்த் தாமரை மேல் நோக்கு
6 மைவரை உலகம் குறிஞ்சி சேயோன்	கூடல்	ஆகாயம்	ஆக்ஞை சந்திர மண்டலம் கீழ்நோக்கு
5 காடுறை உலகம் முல்லை மாயோன்	ஆற்றிஇருத்தல்	காற்று	விசுத்தி சமநோக்கு
4 தீம்புனல் உலகம் மருதம் இந்திரன் (வேந்தன்)	ஊடல்	நெருப்பு	அநாகதம் சூரியமண்டலம் கிழக்கு
3 முல்லை மாயோன்	ஆற்றி இருத்தல்	நீர்	மணிபூரகம் கீழ்நோக்கு
2 பெருமணல் உலகம் நெய்தல். வருணன்	ஆற்றாது இரங்கல்	நிலம்	சுவாதிட்டானம் மேற்கு
1		நிலம்	மூலாதாரம் அக்கினி மண்டலம் மேல் நோக்கு


மனித உடலில் சைவமும் தமிழும் — ஒப்பாய்வு

(எண்கள் — வரைபடம் — 12 காண்க)

இறையியல்	உடலியலும், மருத்துவ இயலும்
சிவசூரியன் பரசிவம்	தலை உச்சிக்கு மேல் பன்னிரெண்டுஅங்குலம் உயரம் —
சிவன் - சத்தி மாதொரு பாகன்	உச்சித்தலை, பெருமூளை Fontanella, Cerebrum
சதாசிவம் (அருளல்)	மைய் நரம்பு மண்டலம் Central Nervous System மூளை இணைப்பான் தலைமைச்சுரப்பி Corpus Collosum, Pituitary
மஹேஸ்வரன் (மறைத்தல்)	காற்றோட்ட மண்டலம் Resipratory System பிடரி, கழுத்து. நுரையீரல் Cerebellum, Cervical Nerves. Lungs
உருத்திரன் (ஒடுக்குதல்)	குருதி ஓட்ட மண்டலம் Blood Circulatory System நெஞ்சு, இருதயம், நுரையீரல் Thorax Nerves, Heart, Lungs,
விட்டுணு (காத்தல்)	சீரண மண்டலம் Digestive System வயிறு, இரைப்பை, குடல் Lumbar Nerves, Stomach,
பிரமன் (படைத்தல்)	புனர் உற்பத்தி மண்டலம் Reproductive System நாபி, சிறுநீரகங்கள் பிறப்புறுப்புக்கள், Saccral Nerves
விநாயகர் (கொண்டு கூட்டல்)	இருப்பிடம், குதம் COCCYX


[illegible]

	[illegible]		[illegible]
	[illegible]		[illegible]
	[illegible]		[illegible]
	[illegible] Nervous System [illegible]		[illegible]
	[illegible] Respiratory System [illegible]		[illegible]
	[illegible] Blood Circulatory System [illegible] Thorax, Abdomen, Heart, Lungs		[illegible]
	[illegible] Digestive System [illegible] Lumbar Nerves, Stomach		[illegible]
	[illegible] Reproductive System [illegible] [illegible] Sacral Nerves		[illegible]
	[illegible]		[illegible]



12. மனித உடலில் சைவமும் தமிழும்

1.முலாதாரம 2. ..வாதிட்டானம 3.மணிபூரகம்
4.அனாகதம் 5 வசுத்தி 6.ஆக்ஞை
7.சஹஸ்ரா,ம் 8.மீதானம்



13. இடம் தலைப்பாடு

1. பெருமூளை - சிவன்
2. சிறுமூளை - சக்தி
3. நடுமூளை - கந்தன்
4. முகுளம் - கந்தன்
5. மூளை இணைப்பான் - பிச்சாண்டி
6. பிட்யூட்டரி - ஆன்மஅல்குல்
7. மூன்றாம் நாளம்
8. மூளை நீர் - ஆகாய கங்கை
9. நான்காம் நாளம் - பகீரத கங்கை
10. ஹைப்போதாலமஸ் தலையெழுத்து

உ

சிவமயம்

தொல்காப்பியம்

சைவ சித்தாந்த நோக்கில்

நூன்முகம்

"கல்லால் நிழல்மலை வில்லார் அருளிய
பொல்லார் இணைமலர் நல்லார் புனைவரே"

சங்க காலத் தமிழினத்தின் பெருஞ் சிறப்புகளைப் பேச எழுந்தது, இந்நூல்.

தமிழகத்தின் பொற்காலம் எனப் போற்றப் பெறும் சங்க காலத்தில், சீரும் சிறப்புமாக வாழ்ந்தனர், நமது தமிழ் முன்னோர்கள். அவர்களது ஆழ்ந்த நுண்ணறிவையும், ஆன்மீக அருள் வாழ்வையும் இறைமையோடு இன்தமிழை வளர்த்த பெருமையையும், நாமும் சிந்தித்துத் தெளிந்து, சீரிய அந்த நெறியிலே வாழ்ந்து, நமக்கும் தமிழுக்கும் மீண்டும் ஒரு பொற்காலத்தை உருவாக்க விழைவது, நம் ஒவ்வொருவரது கடமையாகும்.

உயர்ந்த இக்குறிக்கோளோடு உருவாக்கப் பெற்ற இந்நூல் தன்னகத்தே மூன்று தொகுப்பு நூல்களையும், ஒவ்வொரு தொகுப்பிலும் ஒன்பது உட்பிரிவுகளையும் கொண்டது.

'தொல்காப்பியம் சிவமயம் — ஓர் அறிவியல் நோக்கு' என்பது முதல் தொகுப்பு. இதில் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தொல்காப்பிய நூலின் சில நூற்பாக்களுக்கு, இன்றைய அறிவியல் உண்மைகளை ஆதாரம் காட்டி, உட்கிடையான சைவ சித்தாந்தச் செம்பொருள் பற்றி விளக்கமாகக் கூறப் பெற்றுள்ளது.

'சங்க நூல்களில் சைவக்கோட்பாடுகள்' என்பது இரண்டாவது தொகுப்பு. இதன் கண் சங்க இலக்கியங்களில் காணப்

பெறும் குறிப்பு மொழிகள், சான்றுகளுடன் விளக்கப் பெற்றுச் சங்கச் சான்றோரது சைவ வாழ்வுநெறி புலப்படுத்தப் பட்டுள்ளது.

'சைவ சித்தாந்தச் செம்பொருளும் உடற்கூறும்' என்பது மூன்றாவது தொகுப்பு, இதன்கண், சிவாகமங்களிலும் சைவ சித்தாந்த ஞான நூல்களிலும் அறிவுறுத்தப்பெற்ற உயர்ந்த கோட்பாடுகள் பலவும், இக்கால உடலியல் அறிவோடு ஒப்பு நோக்கிச் சிந்திக்கப்பெற்று, நமது 'மனித உடம்பு ஒரு சிவாலயம்' என்ற உண்மை தெளிவாக்கப் படுகிறது.

மூன்று அதிகாரங்களுமே முக்கட் செல்வரைப் போற்றுவன.

உலகத்தில் நாம் நுகர்கிற இன்பங்கள் அனைத்தும் துன்பக் கலப்புடையனவாகவும், நிலையற்றனவாகவும், சிறுமை இயல்பு உடையனவாகவுமே உள்ளன.

முக்கட்செல்வர் அருளுகிற இன்பம் ஒன்றே நிலையான தாகவும், அறிவுமயமானதாகவும், தூய பேரின்பமாகவும் (சத்சித் ஆனந்த மாகத்) திகழ்கிறது.

அத்தகைய பேரின்பத்தை, இந்த உலகத்தில், இந்த உடலிலேயே நாம் நுகர்தல் கூடும் எனத் தொல்காப்பியர் அறுதியிட்டுக் கூறுகிறார்.

''அந்தமில் சிறப்பின் ஆகிய இன்பம்
தன்வயின் வருதலும் வகுத்த பண்பே''

என்பது தொல்காப்பியரது அனுபவமொழி.

எனவே, முதற்கண் 'தொல்காப்பியம் — ஒருபேரின்ப நூல்' என்ற உட்கிடையை ஓர் ஆய்வு முன்னுரையாக, இலக்கியம் சைவசித்தாந்தம், புராணம் முதலிய பலதுறைச் சான்றுகளுடன் இணைத்துச் சிந்திப்போம்.

சிவமயம்

தொல்காப்பியம் - பேரின்ப நூல்

ஆய்வு முன்னுரை

தொல்காப்பியரால் இயற்றப் பெற்ற தொல்காப்பியம் பல்லாயிரம் ஆண்டுகட்கு முந்திய பழம் பெருந் தமிழ் நூல் தமிழினத்தின் தொன்மைச் சிறப்பினையும் விழுமிய மரபு களையும் உணர்த்தி நிற்பது.

இடைச்சங்கத்தார்க்கும் கடைச்சங்கத்தார்க்கும் நூலாக இருந்த பெருமை உடையது. இதற்கு முன்னிருந்த ஏராளமான நூல்களும், சமகாலத்தில் தோன்றிய பல்லாயிரம் நூல்களும் கடல் கோளால் மறைந்த நிலையில், நமக்கு இறையருளால் கிடைத்த ஒரு தமிழ் ஞானக் கருவூலம், தொல்காப்பியமாகும்.

தொல்காப்பியம் ஒரு 'மொழி இலக்கண நூல்' எனக்கூறி மருளுவோர் பலர். அஃது ஒரு 'பைந்தமிழ் வாழ்க்கை இலக்கியம் என்ற அளவிலே பெருமையுறுவோர் மற்றொரு சாரார். மேலோட்டமாகப் பார்த்தால். இவ்விரு கருத்துக்களும் உண்மையே.

ஆயினும் ஆழப்புதைந்து கிடக்கும் அரிய நுண்பொருள்களை அகழ்ந்து ஆய்ந்தால், பண்டைத் தமிழ் மகனின் சான்றாண்மை புலனாகும்; அவனது இறைப்பற்று வெளிப்படும்; பேரின்ப வேட்கை தெளிவுறும்; நிறைவான வாழ்க்கையின் உண்மையான இலக்கணம் உணரப்பெறும்; வாழ்வின் முடிந்த முடிவான நிலை, தெளிவாகும்; அதனை அடைவதற்கான நெறி முறைகளும் புலனாகும்.

தொல்காப்பியம், கவிஞன் ஒருவனது கற்பனைக் காவிய மன்று; அதுமெய்ஞ்ஞானி ஒருவரது உள்ளார்ந்த உணர்வுகளின் ஓரிய வெளிப்பாடு; நமது 'உண்மை இன்ப வாழ்வு'க்கு உறு துணை புரிகிற ஓர் உயர்தனி இலக்கணம்.

தொல்காப்பியம், நிலையான பரம்பொருளின் ஆளுமை பற்றியும், ஆட்கொள்ளப் பெற்ற ஆன்மாக்களின் நிலைத்த பேரின்பத்தைப் பற்றியும் பலவாறாகச் சிறப்பித்துக் கூறி, அந்த நிலையான அறிவானந்தத்தை இப்பூவுலகிலேயே பெற்று மகிழ்கிற வழிமுறைகளையும் கூறுவதாகும்.

தொல்காப்பியம் மூன்று அதிகாரங்களாகப் பகுக்கப் பட்டுள்ளது. அவை: எழுத்து, சொல், பொருள் என்பன. ஒவ்வோர் அதிகாரமும் ஒன்பது இயல்களைக் கொண்டது. ஆங்குச் செறிவான செம்பொருள் செய்திகள் பரவலாகப் பேசப் பட்டுள்ளன.

அவற்றுள் மூன்றாவது அதிகாரமாகிய பொருளதிகாரத்தில், அகப்பொருள் பற்றிய மரபுச் செய்திகள் குறிக்கப் பெற்றுள்ளன அவை ஆண்டவன் — ஆன்ம இன்ப உறவு முறைக்குச் சாலப் பொருந்தி இருப்பதைக் காணுகிறோம். ஆயினும் பிற்கால உரையாசிரியர்கள், அச்செறிவான உட்கருத்துக்களை அங்ஙனம் உரை செய்யாமல், உலக ஆண் — பெண் மக்களது உறவு பற்றியனவாகப், பூதத்துவ அடிப்படையிலேயே செம்பொருள் கண்டுள்ளனர்.

அவ்வாறு உரை அமைத்தது ஏன் என்பதும், மூலநூலின் ஆழ்ந்த நுண் கருத்துக்கள் யாவை என்பதுமே இப்பொழுதைய சிந்தனையாகின்றன

★ மூவாயிரம் ஆண்டுகட்கு முற்பட்டதாகத் தொல் காப்பியம் இருக்கப், பன்னிரண்டாம் நூற்றாண்டுக்குப் பின்னரே உரையாசிரியர்கள் நிறைந்திருப்பதைக் காணுகிறோம்.

★ இடைப்பட்ட நீண்ட காலவெளி கருத்து ஒற்றுமைக்கு இடையூறாக அமைந்ததா?

★ வெளி அரசுத்தாக்கங்களும், புறச்சமய ஊடுருவல் களும், அனைய பிறவும், உலகாயதக் கருத்துக்களையே ஊக்கு வித்தனவா?

★ உரையாசிரியர்கள் சைவசித்தாந்த நோக்குடையவர் அல்லரா?

★ சைவ சித்தாந்திகளாக இருந்தும், ஆகமக் கருத்துக்கள் ஆசான்வழி மட்டுமே அறியத்தக்கன என்பதால், மனித உடம்பு களின் பிண்டத் தொடர்பினை மட்டும் பிறர்க்குக் காட்டி, உண்மையை உய்த்துணர விட்டனரா?

★ ''சூத்திரத்து உள்பொருள் அன்றியும், யாப்பு உற,
இன்றி அமையாது இயைபவை எல்லாம்
ஒன்ற உரைப்பது உரை எனப்படுமே'' எனவும்

★ ''ஐயமும் மருட்கையும் செவ்விதின் நீக்கித்
தெற்றென ஒரு பொருள் ஒற்றுமை கொளீஇத்
துணிவொடு நிற்றல் என்மனார் புலவர்''[1]

எனவும், தொல்லாசிரியரே உரை செய்வார்க்கு அறிவுரை புகன்றிருக்கிறாரே. அவரது நிலையான பேரின்ப நூலுக்கே உரையாசிரியர்கள் நிலையற்ற மானுடச் சிற்றின்பத்தை உரை யாக்கியமை ஏன்?

★ இவையேயன்றிக், 'குறிப்புச் சொற்களும், குறிப்புப் பொருள்களுமே சான்றோர் இலக்கியங்களில் மிகுந்து பரந்து வருகின்றன' என்றும்,

அவை 'விரவிய இலக்கியங்களைத் தமிழ்நூல் அறிஞரும் புகழ்வர், வடநூல் அறிஞரும் புகழ்வர்' என்றும்,

அவ்வாறு 'குறிப்பு விரவாத் தொடையை 'வெற்றெனத் தொடுத்தல்' எனக் குற்றங்களுள்ளும் ஒன்றாக வைப்பர்' என்றும்,

75 — ஆண்டுகளுக்கு முந்திய 'இலக்கியச் சொல்லகராதி'[2] என்ற தொகுப்பு நூலின் முகவுரையில் கூறக் காணுகிறோம்.

1. தொல்காப்பியம் மரபியல் 105, 106.
2. இலக்கியச் சொல்லகராதி - சுன்னாகம் அ. குமாரசாமி பிள்ளை முகவுரை ஆனந்த - ஞு ஐப்பசி - மீ

இதிலிருந்து, உவம உருவகங்களும் குறிப்பு மொழியாகி உள்ளுறைப் பொருள் தந்தும், இறைச்சியாய் நின்று, மூலக் கருத்துக்கு வலுவூட்டியும், அரிய நுண் பொருள்களை அடக்கி உள்ளமை அறிகிறோம்.

அறியா நுண்பொருளை, அறிந்த பருப்பொருள் கொண்டு, உவம உருவகம் மூலம் தெளிவுறுத்தலாமென உவம இயல் வகுத்தவர் தொல்காப்பியர்.

அகப்பொருளில், மானிடத் தலைமக்களை உவமையாகக் கொண்டு இறைமை உணர்வாகிய பேரின்பத்தை எடுத்தோதுவ தென்பதே ஆசிரியரது ஆழ்ந்த உள்நோக்கமாகும்.

அவ்வாறன்றி, 'மானிட ஆண் பெண் அக ஒழுக்கம்' என்ற முந்திய உரையாசிரியர்களது கருத்தை ஏற்பின், பல இடங்களில் மேலும் விளக்கங்கள் தேவையாகின்றன.

அவ்விடங்களில் சிலவற்றை நோக்குவோம்.

1. நிலத்தில் உயர்ந்தது குறிஞ்சி; தாழ்வானது நெய்தல் ஆனால் இரண்டையும் விடுத்து, இடைப்பட்ட முல்லையில் 'மாயோன் மேய காடுறை உலகம்' என்ற, முதற்பொருள் பற்றிய நூற்பா தொடங்கப் பெறுகிறதே, ஏன்? (அகத்—5)

2. 'மறையோர் தேஎத்து மன்றல் எட்டு' என்பதற்கு ஆரிடம், பைசாசம் முதலிய வேற்றுப் புல மரபுகளை உரையாக்க வேண்டியது என்னை? (களவு — 1)

3. நல்யாழ்த் துணைமையோர் இயல்பினைக் கந்தருவப் புணர்ச்சி எனக் கொள்ளும்போது, விழுமிய நம் தமிழின மானுடப் பண்பாட்டிற்கு அஃது ஓர் இழுக்காகும் அன்றோ? (களவு — 1)

4. நற்றாய், செவிலி முதலிய உறவினரைத் தலைவிக்கு மட்டுமே அமைத்திருக்கத், தலைவனுக்குக் கூறாமை ஏன்?

5. தொல்காப்பியத் தோழி, தலைவியாவதே இல்லையா? ஏன்?

6. கடவுளரைக் கருப்பொருள் ஆக்கினமை, பொருந்துமா? சிவபெருமானைக் கருப்பொருளாகக் குறிக்கவில்லை; ஏன்? (அகத் — 20.)

7. தொல்காப்பியம் இன்ப ஒழுக்கத்துக்கான இலக்கண நூல் ஆனால் அகப்பாடல்களில் தனி நிலமிலாப் பாலையும் துன்பந் தருவதாகிய பிரிவும் பரவலாகப் பேசப் படுகின்றனவே, ஏன்?

8. 'கூடல், பிரிவு முதலியன உரிமைகள்; அவை மயங்குவ தில்லை; (அகத்-15) அவை சார்ந்த நிலங்களாகிய மலையும், கடலும், பிறவும் மயங்குவதில்லை (அகத் 14) என்பது தொல் காப்பியர் கூற்று. அவ்வாறாயின், முல்லை, மருதம், நெய்தல் முதலிய நிலங்களில் வாழும் மக்களுக்குக் கூடல் முதலிய பிற பிற அக ஒழுக்கங்கள் அமையா' என்பது எவ்வாறு பொருந்தும்?

8. (அ) மூலநூலில் தொல்காப்பியர் 'நெய்தலிலும் புணர்ச்சி ஒழுக்கம்' எனக் கூறியிருந்தால், அவர், உலகியல் சிற்றின்பமாகிய உலக ஆண்-பெண் மக்களது மெய்யுறுபுணர்ச்சி நிலைகளைக் கூறினார் எனக் கொள்ளுதல் பொருந்தும். ஆனால் 'குறிஞ்சியில்' மட்டும் கூட்டம் என்று மொழிவது என்னை?

9. அகத்திணையில் தலைவன் தலைவியர்க்கு இயற்பெயர் சுட்டிக் குறிப்பிடுவது மரபன்று; ஏன்? (அகத்-57)

10. தொல்காப்பியத்தில் பரவலாகப் பேசப்பெறும் பரத் தமை, தமிழர் நாகரிகமா?

11. அடிமைகள், வினைபுரிவோர், ஏவலர் இவர்கட்கெல் லாம் இன்ப உரிமை மறுக்கப்படுகிறதா. இது சமூக நீதியாகுமா? (அகத்-25-26)

12. மடலேறுதலும், முந்நீர் வழக்கமும் பெண்டிர்க்கு இல்லை. இதனால் மகளிர் உரிமை மறுக்கப்படுகிறதா.? இது சமூக நீதியாகுமா? (அகத்-37)

இவை போன்ற எண்ணற்ற ஐயங்களும் அவற்றிற்கான சைவ சித்தாந்த விளக்கங்களுமாகப் பல நூறு பக்கங்களுக்கு மேல், செய்திகள் உருப்பெற்றன.

அவற்றுள், காலமும் இடமும் கருதி, இப்பொழுது ஒரு சில தொல்காப்பியக் கருத்துக்களை மட்டுமே ஈண்டுச் சிவாகமச் செம்பொருளோடு இணைத்துச் சிந்திக்கிறோம்.

சிவாகமங்கள், எக்காலத்தும் நிலையானவையாக, மூன்று பொருள்களை அறிவுறுத்துகின்றன. அவை: பதி எனப்படுகிற பரம்பொருள்; பசு எனப்படுகிற உயிர்கள், பாசம் எனப்படுகிற தளைகள்.

தொல்காப்பியத்திலும் முப்பொருள் உண்மை பற்றிய இக் கருத்து பலப்பல இடங்களில் குறிப்பாகவும் சிறப்பாகவும் பேசப் படுகிறது.

குறிஞ்சித் தலைவன்: ஒன்றே பரம்பொருள். அதனைச் சொரூப (இயல்பு) நிலையில் பரமசிவம் என்றும், தடத்த (தொழிற்படு) நிலையில் பதி, தலைவன் சிவன் என்றும் போற்று கிறோம்.

தன் வயத்தனாதல், தூய உடம்பினனாதல், இயற்கை உணர்வினனாதல், முற்றும் உணர்தல், இயல்பாகவே பாசங்களின் நீங்குதல், பேரருள் உடைமை, முடிவில் ஆற்றல் உடைமை வரம்பில் இன்பம் உடைமை எனும் எண்குணத்தர்[1] சிவ பெருமான்; அவர் ஒருவரே ஆண்; உயிர்களை அடிமையாகவும், உயிரற்ற சடப்பொருள்களை உடைமையாகவும் கொண்டு ஐந் தொழில் இயற்றுகிற அவரே யாவர்க்கும் தலைவர்.

சிவபெருமான் இருக்கும் இடம், யாவற்றிற்கும் உயர்ந்த இடம்; அதற்குக் குறிஞ்சி என்பது பெயர். அஃது அண்ட பேரண்டத்தின் முகடாகிய ஆகாய வெளியாகவும் இருக்கும்; நில உலகத்தின் உயர்ந்த பகுதியாகிய மலையாகவும் இருக்கும்; பிண்டத்தொகுப்பாகிய நமது சிறிய உடலின் சிரசுப் பகுதியாக வும் இருக்கும்; உள்ளங்களில் எல்லாம் உயர்ந்ததாகிய அன்பு உள்ளமாகவும் இருக்கும். இவ்வாறு உயர்ந்த இடங்களிலேயே உறைகின்ற அவரைக் குறிஞ்சித் தலைவன் என்பதுதான் எவ் வளவு பொருத்தம்!

---

1. திருக்குறள் - கடவுள் வாழ்த்து

பரசிவமும் பராசத்தியும்:

நம்முடைய விருப்பம், அறிவு, செயல் போன்ற பல்வேறு ஆற்றல்களையும் நாம் சத்தி என்று கூறுகிறோ மன்றோ? அதே போன்று பரசிவத்தின் அருள் ஆற்றலுக்குப் பராசத்தி என்று பெயர். நம்மீது உள்ள கருணையின் காரணமாகச் சிவபெருமான் தொழிற்படும்போது, பராசத்தியே இச்சா சத்தி, ஞான சத்தி, கிரியாசத்தியாக, உமை, கௌரி முதலிய பல உருவங்களை ஏற்று, முதற்கண் தொழிற்படுகிறாள். அவளது தோற்றத்திற்குத் தக்கதோர் உருவினைச் சிவபெருமான் ஏற்றுக்கொள்கிறார். (எ-டு) ''பிடியதன் உரு, உமை கொள, மிகு கரியது வடி கொ(ண் டு .... அருளினன் .... இறையே'' என்பது திருஞானசம்பந்தர் வாக்கு.

உமை என்னும் அருளாற்றலைத் தன் இடப்பாகத்தில் கொண்டு, சிவபெருமான் மாதொரு பாகனாய் நின்று நமக்கு அருள் பாலிக்கிறார்.

மருத நிலத்து மங்கை: புல்பூண்டு முதல் மனிதர்கள் உள்ளிட்ட நரகர் தேவர்வரை உயிர்கள் எண்ணற்றனவாய் உள்ளன. ஆதி அந்தமில்லாதவன் இறைவன். அவனைப் போன்றே உயிர்களாகிய நாமும். பிறப்பு இல்லாதவர்கள். ஆயினும் இறைவனது முற்றுணர்வுக்கு மாறுபட்டு, நமது அறிவு சிற்றறிவாகவே உள்ளது காலம் காலமாக, நம்மைப் பிணித்துள்ள ஆணவம் என்ற மூலமலம், நம் சிற்றறிவை மேன்மேலும் முடக்கி, நம்மைக் குற்றறிவினராக்குகிறது. இத்தகைய சூழலில் சிவபெருமான் உணர்த்தினாலன்றி எதையும் நம்மால் உணர முடியாது.

ஊழ்வினையின் பயனாகிய இன்பதுன்பங்களைக் கால முறைப்படி அந்த அந்த உயிரே நுகர்ந்து தொலைக்க வேண்டும் என்பது நியதி. அதற்குத் துணை புரிதற்பொருட்டு இறைவன் நமக்கு இந்த உடம்பு. உட்கருவிகள், உலகம், நுகர்பொருள் ஆகியவற்றை, வினை நுகர்ச்சிக்கு ஏற்றவாறு, தந்தருளினார்.

வளமான வயல்களாலும், வற்றாத ஆறுகளாலும் செழிப்புற்ற மருத நிலத்தில் நாம் வாழுவதற்கு வழிவகுத்தார். புற

உடம்பின் தோற்றத்தால் நாம் ஆண், பெண் என்ற பால் வேறு பாட்டோடு காணப்பெறினும், உயிர்ப் பண்பால், பிரமவிட்டுணு உள்ளிட்ட அனைத்து உயிர்களும் பெண்களே.

எனவே மருத நிலத்தில் வாழும் தகுதியுடைய பெண் பாலராகிய நாம் மருத நிலத்து மங்கையரானோம்.

பிறப்பு இறப்பு: அறிவுப் பொருளாகிய உயிருக்கு யாண்டும் அழிவில்லை என்பதால், அஃது 'எழுமைக்கும் ஏமாப்பு உடைத்து'[1] என்பர் ஆன்றோர். உயிருக்குப் பிறப்பு இறப்பு இல்லை என்றாலும், அதற்கு அமைந்த உடம்போ தோன்றுதல்', வளர்தல்', ஒடுங்குதல் என்ற மூவகைத் தொழிற்பாடும் உடையது. எனவே அது நிலையற்றதும் அறிவற்றதும் ஆகிய ஒரு சடப் பொருள்.

உயிர்களாகிய நாம் இவ்வுலகில் ஓரோர் உடம்பினைப் பெறுதலே பிறப்பு; மறுபிறப்புக்காக உடலைவிட்டு உயிர் நீங்குதல் இறப்பு; முடிந்த முடிவாகச் சிவபெருமான் திருவடி சேர்ந்து, பேரின்பத்தில் திளைத்திருத்தல் முத்தி.

வினை அனுபவமும் இறை அனுபவமும்:

நமக்கு இப்பொழுது அமைந்திருக்கும் வாழ்வு வளமானது; ஆயினும், அது நமக்கு நிலையான இன்பம் நல்குகிறதா? எனில் இல்லை என்பதே துணிவு. உலகினில் நாம் இப்பொழுது நுகர்கின்ற இன்பம் துன்பக் கலப்புடையது; அளவால் சிறியது. கால எல்லைக்கு உட்பட்டது. நாம் வாழ்கின்ற இன்றைய வாழ்வும் முடிந்த முடிவு அன்று.

தளைகள் (பாசங்கள்): பரம்பொருளைச் சிந்தியாதவாறு உயிர்களைப் பந்தப்படுத்தியிருத்தலால், பாசங்கள் எனப் பட்டன. 'பச்' என்ற வடசொல்லுக்குப் 'பந்தித்தல்' என்பது பொருள், 'அ' என்பது கருவிப்பொருள் விகுதி; எனவே பாசம் என்றால் 'கட்டி நிற்கும் கருவி' என்னும் பொருளாயிற்று. பசு என்பதில், 'உ' என்பது செயப்படுபொருள் விகுதி; எனவே பாசங்களால் கட்டுண்டு, தம் ஆற்றல் முடங்கிய நிலையில் உயிர்கள் பசுக்கள் எனப்பட்டன,

---

1. திருக்குறள் 398

பாசங்கள் ஐவகைப்படும். அவை; ஆணவம், கன்மம் மாயை, திரோதாயி, மாயேயம் என்பன.

ஆணவம்: ஆன்மா ஒரு வியாபகப் பொருள், அதன் ஆற்றலை எல்லாம் பலவாறாக மறைந்திருந்து முடக்கி, ஆன்ம வியாபகத்தை அணுத்தன்மைப் படுமாறு செய்தலால், இதற்கு ஆணவம் என்பது பெயராயிற்று.

பிறப்பு இறப்பு இல்லாத அநாதிகால உயிரைத் தோற்றமும் இறுதியும் இல்லாத அநாதிகால ஆணவம். அநாதிகாலம் தொட்டே தளைத்து (பந்தித்து) நிற்கிறது. ஆதலால் ஆணவத்தை 'உடன் பிறந்தே கொல்லும் நோய்' என்றும், 'சகஜ மலம்' என்றும், 'இருள் மலம்' என்றும் இன்ன பிறவாறும் அழைப்பர்.

ஆணவ மலத்தால் பந்திக்கப்படாதவர், சிவபெருமான் ஒருவரே. பிரபன், விட்டுனு உள்ளிட்ட ஆன்ம இனம் முழுமையும், பொதுவாக ஆணவத்தால் கட்டுண்டே அல்லலுறுகிறது. கட்டின் அழுத்தம், நெகிழ்ச்சி, வலுவின்மை முதலியவற்றில் மட்டுமே வேறுபாடு காணப்படுகிறது.

அந்த அடிப்படையிலேயே தொல்காப்பியத்தில் இரவுக்குறி, பகற்குறி, அல்லகுறி[1] என்பன ஆளப் பெற்றிருக்கலாம் என்று சிந்திப்பதற்கு வாய்ப்பு உள்ளது.

ஆணவத்தின் எண்குணங்கள் : விகற்பம், கற்பம் குரோதம், மோகம், கொலை, அஞர், மதநகை, விராய் என்ற எட்டும் ஆணவத்தின் தொடர்பால் நமக்கு ஏற்படுகிற குணங்களாகும்,

ஆணவத்தின் பல்வேறு இயல்புகளையும் செயற்பாட்டையும் சைவ சாத்திர நூல்கள்[2] மிகத் தெளிவாகக் கற்பிக்கின்றன.

கன்மம்: நாம் செய்யும் ஒவ்வொரு செயலும், வினை, கருமம், கன்மம் எனப் பல பெயர்களால் அழைக்கப்பெறுகிறது. ஒவ்வொரு வினைக்கும், எதிரானதும் சமமானதுமான பின்

---

1. தொல். களவியல் 41 - 44
2. இருபா இருபஃது. -4

விளைவு உண்டு என்பது அறிவியலாராலும் ஏற்றுக் கொள்ளப் பட்ட உண்மை[1]

ஆன்மா ஆணவமலத்தால் மறைப்புண்டு கிடக்கிறது. அதனால் மெய்ப் பொருளாகிய சிவத்தை மறக்கிறது. அப் பொழுது தற்போதத்துடனும் தன் முனைப்புடனும் தொழிற் படுகிறது. எனவே தொழிற்பாட்டிற்கு ஈடாக இன்ப துன்பப் பயன்கள் விளைகின்றன.

வினையே பிறப்புக்கு வித்து ஆவதாலும், இன்ப துன்பங் களுக்குக் காரணமாவதாலும். இதனை மும்மலங்களுள் ஒன்றாக எண்ணுவர். இதனைப் பொதுவகையால் 'இருவினை'[2] என இலக்கண இலக்கியங்கள் இயம்பும்; எனினும் வினைகளை இரண்டாயிரத்திற்கும் மேற்பட்டனவாகச் சைவ சாத்திரங்கள் விரித்து விளக்குகின்றன. ('வினையும் பயனும்' என்ற எமது நூலில் காண்க)

'இயல்பாகவே பாசங்களிலிருந்து நீங்கியவர், சிவபெருமான் ஒருவரே. அவரே முற்றுணர்வினர், பிறர் யாவரையும் ஏவல் கொள்ளும் முனைவர்' என முன்னர்க் கண்டோம். இக்கருத்துப் பற்றியே தொல்காப்பியரும் சிவபெருமானை 'வினையின் நீங்கி விளங்கிய அறிவின் முனைவன்'[3] எனப் போற்றுகிறார்

கன்மத்தின் குணங்கள் : இருத்தல், கிடத்தல், இரு வினை இயற்றல், விடுத்தல், பரநிந்தை மேவல் என்ற ஆறும் கன்மத்தின் தொடர்பால் நாம் செய்கிற காரியங்களாகச் சாத்திரங்கள் கூறுகின்றன.

மாயையும் மாயேயமும்: ஆணவத்தால் பிணிப்புண்டு, தன்முனைப்போடு வினைசெய்த ஆன்மா, அவ்வினைக்கு ஈடான இன்பதுன்பப் பயனைத்தானே ஏற்று நுகர வேண்டியதாகிறது.

---

1. "Every action has an equal and opposite reaction" - Newton's Law of Motion.
2. 'இருள்சேர் இருவினை' - திருக்குறள். இருவினையின் போக்குவரவு புரிய ''சிவஞானபோதம்''
3. தொல் - மரபியல் - 96

அவ்வாறு நுகர்வதற்குத் துணையாக, ஆன்மா ஊர்ந்துவர ஓர் உடம்பும், செயற்படக் கருவி கரணங்களும், நிலைக்களனாக ஓர் உலகமும், நுகர்ச்சிக்கான வாய்ப்புகளும் தேவையாகின்றன. இந்த நான்கையும், வடநூலார் தனு! கரண! புவன! போகம் என வரிசைப்படுத்துவர்; மாயேயம் என்றும் இதனை அழைப்பர். இவை யாவும் தோன்றி, நின்று அழியக்கூடியவை; எனவே நிலையற்றவை.

உயிர்களாகிய நாம் மெய்யறிவு பெற்று உய்தி அடைதல் பொருட்டு, இவற்றை நமக்கு உருவாக்கித் தந்தவர், சிவபெருமான், அவர்தம் அருளாற்றலாகிய சிவசத்தியைக் கொண்டு இவற்றைச் செய்கிறார். அவரால் செய்யப்பட்ட இவையாவும் 'செய்யுள்' ஆயின.

மாயேயத்தின் மூலப் பொருளாக இருப்பது மாயை. இது சிவபெருமானது பரிக்கிரக சத்தியாகும். ஒரு சடப்பொருளாயினும், இது நிலையானது. ஆன்மாக்களுக்கு அறிவை முதற்கண் மயக்கிப் பின்னர் விளக்குவதால் மாயை எனும் பெயர் பெற்றது. வடமொழியில் மா என்றால் ஒடுக்கம் எனவும், யா என்றால் தோற்றம் எனவும் பொருள் கூறுவர். முன்னர்க் கூறிய உடல் உலகம் முதலிய செயற்பாடுகள் ஒடுங்குவதற்கும், தோன்றுவதற்கும் நிலைக்களனாக இருப்பது, மாயை ஆகும்.

எனவே மாயை என்பது மூலப்பொருள். மாயேயம் என்பது மாயையிலிருந்து முப்பத்தாறு தத்துவங்கள் வெளிப்பட்டு விரிந்து தோன்றியதன் விளைவு, மாயை காரணம்; அதன் காரியம் மாயேயம். இரண்டுமே முதற்கண் ஆன்ம அறிவை மயக்குவதால், இவற்றைப் பாசங்கள் என்றனர்.

மாயையின் குணங்கள்: அஞ்ஞானம், பொய், அயர்வு, மோகம், மைஞ்ஞாலம், சூனியம், மாச்சரியம்,, பயம் ஆகிய ஏழும் மாயையின் தொடர்பால் ஆன்மாவின் கண் வெளிப்பட்டு நிற்கும் குணங்கள் எனச் சாத்திரங்கள் கூறுகின்றன.

மறைப்பு ஆற்றல்: (திரோதாயி)

'சிவமே' எனத் தனது இயல்பு நிலையில் ஒரு வேலையும் செய்யாது சும்மா இருக்கும் பரசிவம், நமது உய்தி கருதி

ஐந்தொழிற் படத்தொடங்கும் போது, பரசிவத்தின் அருட் சத்தியே முதற்கண் வெளிப்படுகிறாள் எனக் கண்டோம்.

இது பராசத்தியின் முதல் வெளிப்பாடு ஆகையால் அந்த நிலையில் அவளுக்கு ஆதி சத்தி என்று பெயர். அப்போது அவள் மும்மலங்களைச் செலுத்தவும், அவற்றை ஆன்மாக் களுக்குத் தொடர்பு படுத்தவும், அதே சமயம் ஆன்மாக்களுக்குச் சிறிது சிறிதாக அறிவு விளக்கம், செயல் திறன், இறைவன் பால் ஈடுபாடு இவற்றை ஊட்டவும் செய்கிறாள். மறைந்திருந்தே இவை யாவற்றையும் சிவசத்தி செய்கிறாள். ஆதலால், சிவ சத்தியை அந்த நிலையில் 'மறைப்பு ஆற்றல்' என்னும் பொருள் படுமாறு, திரோதாயி என அழைப்பர்.

மும் மலங்கள் நம்மிலிருந்து நீங்குகிறவரை உயிர்களாகிய நாம் அவற்றை நுகருமாறு செய்து, நம்மைச் சிவத்தின் பால் அணையவொட்டாமல் அவளும் ஒரு தடையாகவே இருப்பதால் அவளையும் பாசங்களுள் ஒன்றாகவே, சைவசாத்திரங்கள் பகர் கின்றன.

சைவ சாத்திரங்கள் இவ்வாறு இறைவன் இருப்பினையும், அவன் தலைவனாக வெளிப்பட்டு வந்து, நம் உய்தி கருதி ஐந்தொழிற்படுகிற முறைமைகளையும், ஆன்மத் தலைவியர் படி முறையில் அறிவு விளக்கம் பெற்று, இறுதியில் அவன் திருவடி யில் நிலையான பேரின்பம் துய்ப்பதையும் சாற்றுவது போலவே, தொல்காப்பியமும் பல பேருண்மைகளைத் தன்னகத்தே பொதிந் துள்ளமை காணலாம். குறிஞ்சி நிலத்தலைவனின் மேலாண்மை யையும், தலைவிக்கும் அவனுக்கும் உள்ள உறவு, கைக்கிளையில் தொடங்கிக் கூதிர்யாமத்துக் கூட்டத்தில் நிறைவுறுகிறவரையுள்ள இன்பப்படி நிலைகள் பலவற்றையும் உணர்த்துவதோடு, 'முடிந்த முடிவான எல்லையிலா அறிவானந்தம், என்பது இப்பிறவியிலேயே எய்தத்தக்கது என்பதையும் விரிவாகவும், தெளிவாகவும், முற்றி லும் குறிப்பு மொழிகளாலும் கூறுவதன் மூலம் (தொல்காப்பியம்) ஓர் உயர்ந்த 'சைவத் தமிழ் ஆகம நூலா'கத் திகழ்கிறது எனலாம்.

ஆயினும் ஆண்டவனுக்கும், ஆன்மாக்களுக்கும் பேரின்பமாகிய புணர்ச்சி உண்டா? என்பதே சிலரது ஐயமாக இருப்பதைக் காணுகிறோம். எனவே புணர்ச்சி உண்டு என்பதற்கான சில சான்றுகளைத் தொகுத்து நோக்குதல் இன்றியமையாததாகும்.

அறிவியல் சான்று: பேரின்பப் புணர்ச்சிக்கான உறுப்புகள் நம் உடம்பின் சிரசினுள் சீராக அமைந்திருக்கும் முறைமை, இந்நூலின் மூன்றாம் அதிகாரத்தில் செவ்விதே விளக்கப் பெற்றுள்ளது. எனவே, இங்கு இலக்கியச் சான்றுகளை மட்டும் ஓரளவு சிந்திப்போம்.

இலக்கியச் சான்றுகள்: சிவபெருமான் ஆன்மாக்களைப் புணர்ந்து, பேரின்பம் ஊட்டுகிறார் என்பதற்குச் சைவ இலக்கியங்களிலும், சாத்திரங்களிலும் வரலாற்றுச் சான்றுகள் ஏராளமாக உள்ளன.

திருஞான சம்பந்தர் மூன்றாண்டுப் பருவத்தில் உமையம்மையிடம் ஞானப்பால் உண்டு, முற்றுணர்வு பெற்ற குழந்தை. பால் மணம் மாறா அப்பச்சிளங் குழந்தை, தனது ஞானக் கண்ணால் சிவபெருமானைக் கண்டு, தன் தந்தைக்கும் சுட்டிக் காட்டுகிறது. உலகியல் இன்ப நுகர்வுகள் எதையும் நுகர்ந்தறியாத மூவாண்டுக் குழந்தை, களவுப் புணர்ச்சியால் தன் உள்ளத்தைக் 'கொள்ளை கொண்ட கள்வன்' என இறைவனைச் சுட்டுகிறது.

''நீர் பரந்த நிமிர்புன் சடை மேல்ஓர்
நிலா வெண்மதி சூடி
ஏர் பரந்த இன வெள்வளை சோர என்
உள்ளம் கவர்கள்வன்''

என்பது பேரின்ப நுகர்ச்சியில் திளைத்த ஆளுடைய பிள்ளையின் அருள் வாக்கு.

திருநாவுக்கரசர்: தமது வெள்வளையோடு தம்மையும் சிவபெருமான் கொள்ளை கொண்டதாக ஆளுடைய அரசு பாடக் கேட்கிறோம்

சந்தித்த கோவணத்தர் வெண்ணூல் மார்பர்
சங்கரரைக் கண்டீரோ, கண்டோம் இந்நாள்
பந்தித்த வெள்விடையைப் பாய ஏறி
படுதலையில் என்கொலோ ஏந்திக்கொண்டு
வந்திங்கு என் வெள்வளையும் தாமும் எல்லாம்
அணியாரூர் நின்றுஅந்தி கொள்ளக் கொள்ளப்
பொன்தீ மணிவிளக்குப் பூதம் பற்றப்
புலியூர்ச்சிற் றம்பலமே புக்கார் தாமே''[1]

இறைமைக் காதலின் படிமுறை வளர்ச்சியை அடிகளது மற்றொரு திருப்பாடலில் நன்கு அறிந்து இன்புறலாம்.

''முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்
மூர்த்தி அவன் இருக்கும் வண்ணம் கேட்டாள்
பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்தும் அவனுக்கே பிச்சி ஆனாள்
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தார் ஆசாரத்தைத்
தன்னை மறந்தாள்தன் நாமம் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே''[2]

சுந்தரர் : சிவபெருமானையே தம் மனைவியர் பால் தூது அனுப்புகிற அளவுக்கு இணக்கமும் நெருக்கமும் தோழமையும் மிக்கவர் சுந்தரமூர்த்தி. தோழமையால் அவர் சாடுவதைக் கேட்போம்.

''வீண்பேசி மடவார்கை வெள்வளைகள் கொண்டால்,
வெற்பரையன் மடப்பாவை பொறுக்குமோ? சொல்லீர்''[3]

சிவபெருமான் இல்லங்கள் தோறும் சென்று, பிரமகபாலத்தில் பிச்சை ஏற்கிறார். அவ்வாறு பிச்சை எடுக்குங்கால் பிச்சையை மட்டும் கொண்டொழியாது, வீண் பேச்சுப் பேசிப்

---

1. அப்பர் தேவாரம் - 6 : 2 : 9
2. மேற்படி 6 : 25 : 7 திருவாரூர்
3. சுந்தரர் தேவாரம் - 7 : 46 : 3 திருநாகைக் காரோணம்

பிச்சையிட வருகிற இல்லத்துப் பெண்டிர்தம் வெள்ளிய வளையல்களையும் கவர்ந்து செல்லுகிறார்.

இதனைச் சுட்டிக்காட்டும் சுந்தரர், சிவபெருமானை நோக்கி, "இத்தகைய உமது அடாத செயலை மலையரசன் மகளாகிய நும் தேவி முனியாது பொறுப்பாளோ?" எனச் சாடுகிறார்

மாணிக்கவாசகர்: திருப்பெருந்துறையில் தம்மை ஆட்கொண்டு, மூவகைத் தவநெறியையும் தமக்கு உணர்த்தித், தன்னை நன்னெறியில் செலுத்திச், சிவாநுபவத்தில் தோயுமாறு செய்த இறைவனின் வள்ளன்மையைத், திருவாசகம் என்ற நூலில் சிறப்புறப் பாடும் மாணிக்கவாசகர் தம்முடைய பேரின்ப எழுச்சியையும், ஏற்றத்தையும் **திருக்கோவையார்** என்ற நூலின் மூலம் அமைத்தருளக் காணுகிறோம்.

தாயுமானவர்: இறைவன் பால் கொண்ட காதல் மிகுதியையும் பிரிவின் ஆற்றாமையையும் புலப்படுத்தும் பாடல்கள் பலப்பல:

"பார்ஆதி விண்அனைத்தும் நீயாச் சிந்தை
பரியமடலாய் எழுதிப் பார்த்துப் பார்த்து
வாராயோ என்பிராண நாதா என்பேன்"1

"நாதன்ஒரு தரம்உலகம் பார்க்க இச்சை
நண்ணானோ என்றுஎன்றே நானா ஆகிக்
காதல்மிகும் அணி இழையார் எனவாடுற்றேன்
கருத்து அறிந்து புரப்பதுஉன்மேல் கடன்முக்காலும்"2

அருணகிரியார் கந்தவேளைப் புகழ்ந்து திருப்புகழ் இசைக்கிறார்; காளை வாகனனாகிய சிவபெருமான், காமனைத் தன் நெற்றிக் கண்ணால் எரித்தார்; என்றாலும் அவர் எண்ணற்ற கோடி உயிர்களையும் புணர்ந்து, இன்புறுத்தும் தலைவர். அவரது நெற்றிக் கண்ணிலிருந்து தோன்றியவன், முருகப்பெருமான் என்பது ஒரு பாடலின் கருத்து, அப்பாடற் பகுதியைக் காண்போம்.

---

1. தாயுமானவர் பாடல் - ஆகார புவனம் - சிதம்பர ரகசியம் 24.
2. மேற்படி 32.

"காமபாணம் அட்டு அடர்ந்து சோடி மாதரைப்புணர்ந்த
காளை ஏறு கர்த்தன் எந்தை அருள் பாலா!"

என்பது அருணகிரி வாக்கு.

புராண வரலாறுகள்: இனிப் புராணங்களிலிருந்தும், வரலாறுகளிலிருந்தும் ஒரு சில சான்றுகளைக் காண்போம்.

முன்பு ஒரு சமயம் பன்னிரண்டு ஆண்டுகள் பஞ்சத்தால் வாடியது பாண்டியநாடு. மெய்ப்பொருள் உணர்வு தம் நாட்டு மக்களிடம் வற்றியதால், நாட்டில் வற்கடம் சூழ்ந்தது என உணர்ந்து வருந்தினான் பாண்டிய மன்னன். சிவஞான வேட்கையின் பால்பட்ட அவன் உள்ளத்து நெகிழ்ச்சியைச் சிவபெருமான் கண்ணுற்றார்; அருள்பாலிக்கத் திருவுளம் கொண்டார். அறுபது நூற்பாக்கள் கொண்ட 'களவியல்' என்னும் அகப்பொருள் நூலைத் தாமே யாத்து அருளினார். இத்தகைய விழுப்பமிகு பின்னணியில் எழுந்த 'இறையனார் களவியல்' என்னும் அகப்பொருள் நூலில், நிலையான மெய்ப் பொருளைக் காணும் விழுமிய உத்திகாணப் பெறுமா? அன்றி, வெறும் உதிரப் பரிமாறல்களாகிய, சிற்றின்ப உணர்வுகளுக்கு மட்டுமே இடமிருக்குமா? அதனால்தான் இறையனார் களவியல் என்ன 'நுதலிற்றோ' எனின், 'தமிழ் கூறிற்று' என்பார் நக்கீரர். தமிழ் என்பதே பேரின்பப் பொருள் என்பது கருத்து.

அக்கருத்துப் பற்றியே, கபிலர் என்னும் சங்கப்புலவர், பிரஹதத்தன் என்னும் ஆரிய அரசனுக்குத் தமிழறிவு ஊட்டக் கருதிக், குறிஞ்சிப்பாட்டைப் பாடினார் என்பது வரலாறு.

அகப்பொருள் இலக்கணம் கூறவந்த ஒரு பழந்தமிழ் நூலுக்குத் 'தமிழ்நெறி விளக்கம்' என்றே பெயர் அமைந்திருக்கிறது.

பிச்சாண்டிக் கோலத்தில் தாருகா வனத்து இருடிப் பெண்டிரது வளைகவர்ந்த செய்தியினைப் புராணங்கள் நயம்பட உரைக்கும் பேரின்பப்புணர்ச்சி உண்டு என்பதற்கு நூல் வழிச் சான்றுகள் இவ்வாறிருக்க, உடற்கூற்று அறிவியல் கருத்துக்களும் சைவ சித்தாந்த தத்துவ விளக்கங்களும் இக்கருத்தினை

உறுதி செய்வனவாகவே உள்ளன. அதன் விளக்கங்களை, முற்கூறியவாறு, இந்நூலின் மூன்றாவது அதிகாரத்தில் கண்டு தெளியலாம்.

முல்லையில் தொடக்கம் ஏன்?

இல்பம் என்னும் பொருளை மையமாகக் கொண்டு எழுந்த நூல் தொல்காப்பியம்; ''எல்லா உயிருக்கும் இன்பம்[1] பொது'' எனக்கூறிய தொல்காப்பியர் அவ்இன்பத்தை வழங்குகிற தலைவன் எக்காலத்தும் நடுவுநிலையுள்ள திண்ணியன் என்றும், ஆதலால் உயிர்களின் விழைவு, அறிவு, செயல் என்ற முத்திற ஆற்றல்களுக்கு ஏற்பவே, ''தான் அமர்ந்து வருஉம் மேவற்றாகும்'' எனக் கூறி, அவற்றின் இன்பதுன்ப நுகர்ச்சிகள் வேறுபடுமென்றும் கூறிப் போந்தனர்.

அவர் அறிவுறுத்துகிற இன்பம், பொதுவகையால், நாமெல்லாம் உலகியலில் நுகர்கிற சிற்றின்பங்களைப்போல் தோன்றுவது இயல்பு; ஆயினும் பேரறிவாளராகிய அப்பெருந்தகை அளவால் சிறியதாகவும், மிகக் குறுகிய கால எல்லைக்கே நிகழ்வதாகவும், முற்றிலும் உடம்போடு ஒட்டியதாகவும், துன்பக்கலப்புடையதாகவும் உள்ள நிலையற்ற உலகியல்சிற்றின்பத்தை, இத்துணை பெருமைபட, ஒரு பாலியல் நூல்போல யாத்தனர் என உரை கண்டு மகிழ்வது தமிழ் அன்னைக்கு விழுப்பம் சேர்ப்பதாகாது.

மேலும், அவர், ''அந்தமில் சிறப்பின் ஆகிய இன்பம் தன்வயின் வருதலும் வகுத்த பண்பே''[2] என்று கூறுவதிலிருந்து பிறிதோர் பேருண்மை நூலின் உட்கிடையாகப் பொதிந்துள்ளமையினை உணரலாம்.

உலகத்து உயிர்கள் அனைத்தையும் தன் அடிமைப் பொருளாகக் கொண்டவர் சிவபெருமான். அவர் ஒருவரே ஆண்மகன். உயிர்கள் அனைத்தும் பெண்பாலரே. சிற்றறிவும், சார்ந்ததையே சார்ந்து நிற்கும் இயல்பும் உடையன உயிர்கள். அவற்றிற்கு உடம்பு, கருவிகள், உலகம், நுகர்ச்சி ஆகியவற்றைக் கொடுத்து,

1. தொல்காப்பியம். பொருளியல் 219
2. " 239

ஓரறிவுத் தாவரம் தொடங்கி, ஆறறிவு மனிதர்வரை படிமுறையில் வளர்த்து. மனித நேய ஒருமைப்பாட்டில் திளைக்கச்செய்து, சிறிது சிறிதாகப் பல்வேறு தெய்வத் தன்மைகளை ஊட்டி, இறுதியில் தலைவி நிலைக்கு உயர்த்தித், தம் சிவஉலகத்திலேயே நிலைபெறுமாறு செய்கிறார் சிவபெருமான்.

இவ்வாறு உயிர்த்தலைவனாகிய சிவபெருமானுக்கும், உண்மைத் தலைவியாகிய உயிரினத்துக்கும் நிகழ்கிற பேரின்பப் புணர்ச்சியையும், அவ்உயரிய நிலையினை, உயிர்களாகிய நாம் எய்துவதற்கான நெறிமுறைகளையும், நமக்குத் தெளிவுறுத்தும் விழுமிய நோக்குடனேயே, தொல்காப்பியர் இப்பெருநூலைப் படைத்தனர் என்பது முற்றிலும் சாலும்.

புணர்ச்சியே இன்பவாழ்வின் உச்சநிலை. அது நிகழும் இடம் தனிச் சிறப்புடையது. மிகமிக உயர்ந்த அந்த இடத்தை, உலக நிலப்பரப்பின் உயர்ந்த மலைப்பகுதியாகிய 'குறிஞ்சி' என்ற சொல்லால் குறித்தனர், ஆசிரியர்.

புணர்ச்சி எனும் இத்தகு ஒருமையின் நீங்குதல், பிரிவு ஆகும். பிரிவின்கண், உயிர், ஓரிடத்தில் நிலை கொள்ளாமல், புணர்ச்சி பற்றிய சிந்தனை ஏதுவுமின்றி, உள்ளத்தாலும் உணர்வாலும் பரந்துபட்டு அலைந்து திரியும். அப்போது புணர்ச்சி தொடர்பான இன்பதுன்ப உணர்வுகள் அவ்வுயிர்க்கு இல்லையாதலால் அதற்கு ஒரு நிலப்பரப்பும் இல்லை என ஆன்றோர் வகுத்துரைத்தனர்.

எனவே, பேரின்பப் புணர்ச்சி என்பது நூலின்கண் தொல்லாசிரியர் நுதலிய உரிப்பொருள் ஆயிற்று, இதுவே நூலின் மையக்கருத்தும் ஆகும். ஆதலால், உரிப்பொருள் தொடர்பான சூத்திரத்தை ஆசிரியர் புணர்ச்சி என்ற சொல் கொண்டே தொடங்குகிறார்.

ஆயினும் புணர்ச்சிக்கு இடமான குறிஞ்சியை முதற்பொருள் பற்றிய சூத்திரத்தில் முதலில் அமைத்து அச்சூத்திரத்தைத் தொடங்காமல், முல்லை என்ற இடைப்பட்ட நிலத்தில் தொடங்குகிறாரே, இஃது ஏன்? என்பதே இப்பொழுதைய சிந்தனை.

அகத்திணையில் இன்ப ஒழுக்கங்களை ஏழு என வகைப்படுத்தி நோக்குவது நமது பண்டையத்தமிழ்மரபு. அவற்றுள் கைக்கிளை என்பது ஒருதலைக் காமம், பெருந்திணை என்பது பொருந்தாக் காமம். இவற்றை முறையே குறைக்காமம், மிகைக்காமம் எனலும் பொருந்தும். பாலை என்ற நடுவண் திணைக்குப் பிரிவு என்பது உரிப்பொருள்· எனவே இம்மூன்றுக்கும் நிலமில்லை; எஞ்சியுள்ள குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்ற நால் வகை அக ஒழுக்கமும் நிலப்பகுப்பு உடையன எனத் தொல் காப்பியர் கூறுகிறார்

அகத்திணை அடிப்படையில் இவ்வாறு அமைந்த நானிலப் பகுப்பை அவர் விரித்துக்கூறும் போது, 'மாயோன் மேய காடுறை உலகம்' எனச் சூத்திரத்தைத் தொடங்கி, முல்லை நிலத்துக்கு முதலிடம் கொடுத்தமை காணுகிறோம்.

மலையும் மலை சார்ந்த நிலமும், நில உலகத்தின் உயர்ந்த பகுதி. இதனைக் குறிஞ்சி என அழைத்தனர், ஆன்றோர். கடலும் கடல் சார்ந்த நிலமும் நில உலகத்தின் தாழ்வான பகுதி. இதனை அவர்கள் நெய்தல் என அழைத்தனர். இதே போல், இடைப்பட்ட காடும், காடுசார்ந்த நிலமும் முல்லை எனவும் வயலும் வயல் சார்ந்த நிலப்பரப்பும் மருதம் எனவும் பெயர் பெற்றன.

முல்லை நிலத்தலைவனாகத் திருமாலையும், (மாயோன்) குறிஞ்சி நிலத்தலைவனாக முருகனையும் (சேயோன்), மருத நிலத்தலைவனாக இந்திரனையும் (தேவவேந்தன்), நெய்தல் நிலத்தலைவனாக வருணனையும் அவர்கள் வழிப்பட்டிருக் கின்றனர். இங்ஙனம் நால்வகை நிலங்களையும், இவற்றின் இயல்புகளையும் இவற்றை இயக்குகிற தெய்வங்களையும் தொல்காப்பியர் ஒரு சூத்திரத்தின் மூலம் இணைத்துக் கூறுகிறார்.

"மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்

முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனச்
சொல்லிய முறையால் சொல்லவும் படுமே''[1]

என்பது தொல்காப்பிய நூற்பா

நூற்பா அமமப்பில் ஒரு வியப்பு என்னை எனில், உயர்ந்த இடமாகிய குறிஞ்சியையோ, தாழ்வான நிலப்பரப்பாகிய நெய்தலையோ கொண்டு, ஆசிரியர் சூத்திரத்தைத் தொடங்காமல், இடைப்பட்ட முல்லையில் தொடங்குகிறாரே, அஃது ஏன்? என்பதாம்.

1. தொல்காப்பியரே 'மாயோன் மேய காடுறை உலகம்' எனக்கூறி முல்லையை முதற்கண் வைத்தனரா? அன்றி,
2. மால் மீதுள்ள மாலால் (திருமால் மீது கொண்ட பயக்கத்தால்) மற்றவர்கள் முதன்மைத் தானத்திற்கு மாற்றினரா? அன்றி,
3. ஏடு எடுத்து எழுதியவர்கள் செய்த எதிர்பாராத பிழையா? அன்றியும்,
4. நூற்பாவின் இறுதி அடியும் அயலடியும்,

'முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் எனச் சொல்லிய முறையால் சொல்லவும் படுமே' என்று இருப்பது
'குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் எனக்
குறித்த முறையால் குறிக்கவும் படுமே'

எனக், குறிஞ்சி முதற் கண் அமையினும் பொருந்துமே? சீர், தளை, தொடைகளில் குறைவில்லையே? என்பன போன்று பல ஐயங்கள் தோன்றின. அதுபற்றிச் சிந்தித்துத் தெளிவு காண்பதே இந்நூல் எழுந்ததன் நோக்கம். சிந்தனையின் தொடக்கமாக, மாயோன், சேயோன், முல்லை, மைவரை, குறிஞ்சி முதலிய சூத்திரத் தொடர்களைப் பற்றி ஓரளவு அறிந்து கொள்ளுவது, ஆய்வுக்குப்பெரிதும் உதவும்.

---

1. தொல். பொருளதிகாரம், அகத்திணை இயல் - சூத்.5,

முல்லை : மரங்கள், செடிகொடிகளோடு நிறைந்தும், அடர்ந்தும் உள்ள காட்டினையும், அது சார்ந்த பகுதியையும் முல்லை என்பர். முல்லை என்றால் இடைப்பட்ட நிலம் என்பது பொருள். மலைப்பகுதிக்கும் வயல்வெளிக்கும் இடையிலோ, மலைக்கும் கடலுக்கும் இடையிலோ, வயல்பரப்புக்கும், கடற்கரைக்கும் இடையிலோ அமைந்திருக்கிற காட்டு நிலம், முல்லை எனப்பட்டது.

காடுகளினால், மனித இனம் அடைகிற உலகியல் பயன்கள் அளப்பரியன. மழைமேகம் தோன்றுவதற்குக் காரணமாகிப், பசிப்பிணி போக்கும் வேளாண்மைக்குப் பல்லாற்றானும் உறுதுணையாவது காடு; மாசுடைய கரியமில (CO_2) வாயுவைத் தாவரங்கள் தமக்கு உணவாகக் கொண்டு, தூய பிராண (O_2) வாயுவை வெளிவிடுவதன் மூலம், உயிரினத்துக் கழிவுகள் நீக்கப்பட்டும், அவற்றிற்கு இன்றியமையாத் தேவையான பிராணவாயு பெரும் அளவில் கிடைக்கப் பெற்றும் நல்லதொரு பண்டமாற்று நிகழ உதவுகின்றன; மூலிகைகள், காய்கனிகள், எரிபொருள்கள் இன்னோரன்ன தேவைகளை நிறைவு செய்கின்றன. படிமுறை அறிவு வளர்ச்சியில் ஐந்தறிவு வரையுள்ள ஊர்வன, பறப்பனவற்றிற்கும், விலங்குகளுக்கும் காடுகளே புகலிடமாக இருந்து, நாட்டில் ஓர் ஒழுங்குமுறையில் வாழும் மக்களை அவ்விலங்குகளிலிருந்து பிரித்துக் காட்டுகின்றன.

இவையெல்லாம் உலக நிலப்பரப்பிலுள்ள காடுகளின் பொது இயல்பு. இவை போன்றே நமது இந்த மனித உடம்பிலும் காடுகள் நிறைந்துள்ளன. அவை ஏராளமான நரம்புகளின் தொகுதிகளாகவும், குருதி நாளங்களின் கூட்டமாகவும், வயிற்றினுள் குடல்களின் தொகுதியாகவும் அமைந்துள்ளன.

மாயோன் : காக்கும் தெய்வமாகிய திருமாலை மாயோன் என வணங்குதல் பண்டுதொட்ட உலக வழக்கு. என்னைஎனில்,மாயை என்னும் முதற்பொருளிலிருந்து[1] தோற்று

---

1. மாயை என்பது சிவபெருமானது பரிகிரகசத்தி (Potential Energy) இதுதானாக இயங்குதிற ஆற்றல் இல்லாத நுண்ணிய, ஆனால் நிலைத்த, சடப்பொருள். இதனைச் சிவபெருமானது அருட்சத்தியாகிய பராசத்தியே இயக்குகிறாள்.

விக்கப்பட்டது இவ்வுலகம். இதனைக் காப்பதால், திருமால் மாயோன் எனப்பட்டான்.

அடுத்து, மாய் என்ற வேர்ச் சொல்லுக்கு 'அழி' என்பது பொருள். மலங்களால் விளையும் தீமைகளை மாய்த்து உலகத்தைக் காப்பதால் மாயோன் என்பது மற்றொரு பொருள்.

மாயங்கள் பலவும் செய்ய வல்லவன் திருமால், ஆதலால் மாயோன் எனப்பட்டான் என்பது பிறிதொரு பொருள். மாயையினாலான உடம்பினைத் தானும் உடையவன். ஆதலால்) மாயோன் என்பது வேறொரு பொருள்'

மாயைகளினால், தானே மயங்குகிற இயல்புடையவன் ஆதலாலும் மாயோன் எனப்பட்டான் என்பது சாலும்.

இவையெல்லாம் மும்மலப் பிணிப்புடைய சகலவர்க்கத்தைச் சேர்ந்தவர்களும், நம்போல் ஒரு தாயின் கருவில் பத்து மாதங்கள் வளர்ந்து, உலகில் பிறந்து, இன்ப துன்பச்சூழலில் உழன்று, மயங்கிப், பின் இறக்கிறவர்களுமாகிய சிறு தெய்வங்களையே குறிக்கும். இத்தகைய பிரம, விட்டுணு, உருத்திரர்கள் எல்லோரும் ஒரோ ஒரு நிலப்பரப்பை ஒரு கால எல்லை வரை முறையே படைத்துக் காத்து ஒடுக்கும் காரியத்தைக் செய்வதற்காகச், சிவபெருமானால் காரியப் படுத்தப் படுவதால், இவர்களைக் காரியக் கடவுளர் என்னும் அணுபக்கம் என்றும் சைவ சாத்திரங்கள் இனஞ் சுட்டி உரைக்கும்.

பரம்பொருளாகிய சிவபெருமான் இவர்களின் வேறானவர்; மும்மலங்களால் எட்டுணையும் தொடக்குறாதவர். அவர் ஒருவரே பிரபஞ்சம் என்னும் பேரண்டத் தொகுதியைத் தம் சிவசத்தியைக் கொண்டு நமக்காகப் படைத்தும், காத்தும் ஒடுக்கியும் அருளுகிறார். அப்போது. அவரே சிவபிரமா, சிவவிட்டுணு, சிவருத்திரர் என்றவாறு அழைக்கப்படுகிறார். அவர்களைக் காரணக்கடவுளர் என்றும், சம்புபக்கம் என்றும் அழைப்பர். ஆதலால் சிவசத்தியும் சிவவிட்டுணுவும் வேறு வேறல்லர் என்பதும் சாத்திர உண்மை.

மைவரை: மை போன்ற கரிய மழைமேகம் சூழ்ந்த திண்ணியமலை என்பது பொருள். இஃது உலகின் உயர்ந்த நிலப் பரப்பு, திண்மையாலும் இடத்தாலும் மட்டுமன்றி, ஒழுக்கம், பண்பு, இன்பம் முதலிய யாவற்றாலும் உயர்ந்த அதன் சிறப்பியல்பினை நாம் குறிப்புணருமாறு ஆசிரியர் இச்சொல்லை அமைத்துள்ளார்.

சேயோன்: முருகப்பெருமானைச் சேயோன் என வணங்கி வழிபடுதல் பண்டு தொட்ட சைவ மரபு. சேயோன் என்பதற்குச் செய்யோன், சிவந்த நிறமுடையவன் என்பன பொருள்.

செவ்வேள் பரமன் என்றே முருகப் பெருமானைச் சைவ இலக்கியங்கள் பெருமை கூறும். இது, 'சேய்' என்ற வேர்ச் சொல்லிலிருந்து தோன்றியது. குழந்தை என்பது பொருள். அம்மை அப்பராகிய சிவசத்தியருக்கு நடுவில் அமர்ந்திருக்கும் 'இன்பக் குழந்தை' யாகிய முருகனைக் குறிப்பது. செவ்விய, எண்குணங்களை உடைய சிவபெருமானிலிருந்து சிறிதும் வேறு படாதவன், முருகன். அவன் செவ்விய வீட்டு நெறியில் உயிர்களைச் செலுத்துபவன்.

புறத்தார்க்குச் சேயோன் என மணிவாசகர் கூறுவதைப் போன்று, பிற சிறு தெய்வங்களோடு இவனையும் ஒப்பாக நினைப்போர்க்கு இவன் முற்றிலும் சேயோன்; சேய்மைக் கண் நிற்பவன்.

மாயை, கன்மம், ஆணவம் என்ற எவ்வகை மலத்தாலும் துடக்குறாதவன், பந்திக்கப்படாதவன், மயங்காத செவ்வியன் என்ற பொருளிலும் சிந்திப்பது பொருந்தும்.

செவ்விய எண் குணங்களை உடைய சிவபெருமானின் நெற்றிக்கண்ணிலிருந்து தோன்றிய செந்தழல் குழந்தை, முருகன் என்பது அறிதற்பாலது.

இவ்வாறு மாயோனைக் கொண்டு உமையாகிய அம்மை யையும், சேயோனைக் கொண்டு சிவபெருமானாகிய அப்பனை யும் நமக்கு ஆசிரியர் அறிவுறுத்துகிறார்.

தாய்க்குப்பின் தந்தை: தொல்காப்பியப் பொருளதி காரம், நிலையான பேரின்ப ஒழுக்கத்தைப் போற்றுதற்கு எழுந்த நூல் எனக்கண்டோம். பேரின்பத்தை அருளுபவர், யார்? சிவபெருமான். பேரின்பத்தை நுகர்ந்து கொண்டு அவர் திருவடியிலே இன்புற்றிருப்பவர் யாவர்? உயிர்களாகிய நாம். என்றாலும் சிவபெருமான் திருவடியில் நம்மைச் சேர்ப்பதற்கும், திருவடி இன்பத்தில் நம்மைத் திளைத்திருக்கச் செய்வதற்கும் உயரிய துணையாக நிற்பவர் யார்? சிவசத்தியே.!

சிவசத்தியின் துணையால்தான் உயிர்களாகிய நாம் சிவப் பேறு அடைதல்கூடும் என்பது சைவ சித்தாந்தம் அறிவுறுத்தும் உண்மை. எனவே நாம் முதலில் சிவ சத்தியை வழிபட்டு, அவளது துணைகொண்டு சிவபரத்தை அடைய வேண்டுமென்ற குறிப்பை நமக்கு உணர்த்துவதற்காகவே தொல்காப்பியரும் முல்லையை முதற்கண் வைத்து, அதனை அடுத்துக் குறிஞ்சியைக் கூறிப்போந்தனர்.

சிவாகம நெறிமுறைகளை நமக்குத் தெளிவுறுத்தி நம்மையும் சிவானுபவப் பேரின்பத்தில் திளைக்கச் செய்யும் அச்சான்றோர் பெருமகனாரது அறிவுத்திறன் போற்றி வணங்குதற்குரியதாகும்.

இனித் தாய்க்குப்பின் தந்தை என்ற கூற்றினை உலகியல் வழக்கு, இலக்கியச்சான்று, சாத்திரக் கொள்கைகள், அறிவியல் நோக்கு, சைவ சித்தாந்தத் தத்துவக்கோட்பாடுகள். உடலின் அமைப்பு என்றவாறு, பல கோணங்களில் சிந்திப்போம். முதலில் உலகியல் வழக்கினை உன்னுவோம்.

உலகியலில் அம்மை அப்பர்: ஓர் அம்மையும் அப்பனும் அமர்ந்திருக்கிறார்கள். அவர்சள் முன் குழந்தை விளை யாடிக்கொண்டிருக்கிறது. விளையாடிய சிறுகுழந்தை மலங்கழிக் கிறது. உடனே அக்குழந்தையைத் தூக்கி, நீர் கொண்டு மலம் கழுவித் தந்தையிடம் சேர்ப்பிக்கிறவள் தாயே.

இது நடைமுறையில் எல்லோரும் காணுகிற உலகக் காட்சி ஈண்டு முதற்கண் தொழிற்படுபவள் தாயே என்பது தெளிவு.

உயிர்க் 'குழந்தை': இதனை ஓர் இறைமைக்காட்சி யாகச் சைவ சித்தாந்தப் பின்னணியில் சிந்திக்கலாம். இறை உயிர், தளை (பதி, பசு, பாசம்) என்ற மூன்றும் எக்காலத்தும், அழியாத, நிலையான உள்பொருள்கள் என்பது சைவத்தின் அடிப்படைக் கொள்கை.

அவற்றுள் உயிர்களாகிய நாமெல்லாம் குழந்தைகள்; உடலால் நாம் பிறக்கிறோம், சில காலம் வாழ்கிறோம். பின் இறக்கிறோம். ஆனால், உயிரால் நமக்குப் பிறப்பு என்றோ இறப்பு என்றோ இல்லை. உயிர்கள் அநாதி; அவை என்றும் நிலையானவை.

உயிர் அற்ற மலங்கள்: நாம் உண்ட உணவின் எச்சம் உடலிலிருந்து மலமாக வெளிப்படுவது நாம் அறிந்த அன்றாட நிகழ்ச்சி. உயிருக்கும் அத்தகைய மலம் ஒன்று உளது. உயிர்களோடு உடன் பிறந்தே கொல்லும் நோய், அதாவது, அநாதியான மலக்கொடி ஒன்று உயிரை வலிமையாகப் பின்னிப் பிணைத்திருக்கிறது. அதற்கு **ஆணவ** மலம் என்பது பெயர். ஒரு செப்புப் பாத்திரத்தில் இயல்பாகவே களிம்பு ஊறி, அப் பாத்திரத்தை மாசுபடுத்துகிறது அன்றோ? அதேபோல் உயிர்களது இயல்பான ஆற்றல்களை எல்லாம் அந்த ஆணவக்களிம்பு மறைத்து விடுகிறது.

ஆணவத்தின் வலிய பிணிப்பிலிருந்து விடுபடுவதற்காக உயிர்கள் தன்முனைப்பொடு செய்யும் முயற்சிகள் **கன்மவினை** என்ற பிறிதொரு மலமாகி, உயிர்களின் இன்ப துன்பத்திற்கு வித்தாகின்றன.

இவ்விரு மலங்களும் உயிர்களாகிய நம்மை மாசுபடுத்துகின்றன. இயல்பாக நமக்கு விழைவு, அறிவு, செயல் என்ற மூன்று வகை ஆற்றல்கள் உள்ளன. அவற்றுள், ஆணவம், கன்மம் என்ற இருமலங்களும் நமது விழைவாற்றலைத் திசை திருப்பிச், செயலாற்றலை முடக்கி, அறிவாற்றலை மங்கச் செய்கின்றன.

ஆணவத்தை 'இருள் மலம்' என்றும், கன்மத்தை 'இருள்சேர் இருவினை' என்றும் அருளாளர் குறிப்பிடுவர். தீது பயக்கும் இவ்விரு மலங்களும், பேரொளியாகிய சிவபெருமான் திருவருளால் மட்டுமே நீங்குவன.

உயிர்களாகிய நாம், பண்டு தொட்டு, இந்த ஆணவ மலத்தையே உடம்பாகக் கொண்டு, அருவமாகத் திரிந்தோம். அதனைக் கேவலநிலை (தனிநிலை) எனச் சாத்திரங்கள் கூறும்.

சிவனும் சத்தியுமே அம்மை அப்பர்: அறிவற்ற சடப்பொருள் ஆணவம்; அஃது அறிவுள்ள சித்துப் பொருள்களாகிய நம்மை வலிதே கட்டி நின்று, நம் சிற்றறிவையும் ஒளி மழுங்கச் செய்கிறது. இதனைச் சிவபெருமான் கண்ணுற்றார். கீழான அத்தளையிலிருந்து நம்மை விடுவிக்கத் திருவுள்ளம் கொண்டார்.

எனவே நம்மை நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என்ற பஞ்ச பூதங்களுள் சேர்ப்பித்து, உணவு, குடிநீர், மூச்சுக்காற்று இவற்றின் மூலம் தந்தையின் விந்துவுள் கூட்டிப் பின் தாயின் கருவில் புகுத்தித், தமது மாயா சட ஆற்றலையே (Potential Energy), நமக்கு இந்த உடம்பு, உட்கருவிகள், உலகம், நுகர் பொருள்களாகத் தந்தருளினார்.

அவருடைய இப்படைப்புத் தொழிலுக்குத் துணையாக முதற்கண் வெளிப்பட்டு நின்றவள் அவரது அருட்சத்தி.

எனவே சிவபெருமானும் சிவசத்தியும் நமக்குத் தந்தையும் நற்றாயும் ஆவர்; மாயை என்னும் சடசத்தி நமக்குந் செவிலித் தாய் ஆவள்.

மலங்கழுவுதல்: மலங்கள் நம்மிலிருந்து கழுவப்பட்டு, நாம் தூய்மையுற்றால்தான், நிலையான பேரின்பப் பெருவாழ்வு நமக்கு அமையும்.

எனவே, வலிய இம்மலங்களிலிருந்து நம்மை விடுவிக்கச் 'சத்தி நிபாதம்' என்ற அருள் மழையைப் பொழிந்தும், நம்மைப் பிணித்துள்ள மலங்கள் அனைத்தையும் கழுவி, நம்மைத் தூய்மை செய்தும், சிவபெருமானது திருவடிப் பேரின்பத்தில் சேர்ப்பிப் பவள் அன்னையாகிய சிவசத்தியே.

இவ்வாறாக இறைவன் ஆணைப்படி, உடம்பு முதலிய வற்றைப் படைத்து, அவற்றை நிலைபெறுமாறு காத்து, இறுதி யில் ஒடுக்குவதிலும், நமக்கு மறைந்திருந்து வினைவழி வாழ் வினைக் கொடுத்து, இறுதியில் திருவடிப் பேரின்பத்திற்கு அருள் பாலிப்பதிலும், அம்மையே முதற்கண் வெளித் தோன்றித் தொழிற்படுகிறாள்.

பரசிவத்திலிருந்து எங்ஙனம் அருட்சத்தி முதலில் வெளிப் படுகிறாள்? என்பதை இப்பொழுது சிந்திப்போம்.

மின் ஆற்றல் (Electricity) என்பது ஒரேபொருள்; அஃது எங்கும் நிறைந்த அருவப்பொருள். இயல்பு நிலையில் அது, அதுவாகவே செயலற்று இருக்கும். அஃது அதனுடைய தனி நிலை எனப்படும். அப்போது அதனால் நமக்கு யாதொரு பயனும் இல்லை அன்றோ?

அது நேர்மின் ஆற்றல், எதிர்மின் ஆற்றல் (+ve, −ve) என இரு கூறாகப் பிரிந்து, செப்புக்கம்பி போன்ற மின் கடத்திகள் மூலம் ஓடி, மின்விளக்கு, மின்விசிறி போன்றவற்றில் தொழிற் படும்போதுதானே நமக்குப் பெரிதும் பயனுடையதாகிறது?

இவ் உவமையை மனத்தில் கொண்டு, பரம்பொருளின் தனிப்பெரு நிலையையும், தொழிற்படு நிலையையும் நோக் கினால், சித்தாந்த சைவம் எளிதில் புலனாகும்.

தனிப்பெரு நிலை : பரசிவம் என்பது பரம்பொருள் ஒரே பொருளாகிய அது, எங்கும் நிறைந்த ஒரு வியாபகப் பொருள். அணுவுக்குள் அணுவாகவும், அண்டபேரண்டம் முழு வதையும் உள்ளடக்கிய மாப்பேருருவினதாகவும் அஃது ஆனந்தத் திருநடனமிடுகிறது. சிவம் தன்னையே நோக்கிய இயல்பு நிலை

இது. இதனைச் சிவபெருமானது சிறப்பியல்பு என்றும், தன்னியல்பு என்றும் 'சும்மா' இருக்கும்நிலை என்றும், சொரூபநிலை என்றும், உயிர் உலகங்களிலிருந்து வேறாய் நிற்கும் நிலை என்றும், 'சத்சித் ஆனந்தப் பெருநிலை' என்றும் பலவாறு போற்றிப் பரவுவர்.

அப்போது சிவசத்தியின் நிலை என்ன? இதனை ஓர் உவமை மூலம் காணலாம். மல்லிகைக்கு இயற்கையாக நறுமணம் உள்ளது. ஆயினும் அம்மல்லிகை மொட்டாக இருக்கும்போது தேனும் மணமும் வெளிப்பட்டுத் தோன்றாது, மொட்டினுள் அடங்கி இருக்கிறதன்றோ? அதேபோல் பரம் பொருளின் இத்தனிப்பெரு முதல் நிலையில், சிவசத்தி வெளிப் படாமல், சிவத்துள் அடங்கியே இருக்கும். நாம் ஒரு வேலையும் செய்யாது சும்மா இருக்கும்போது நமது ஆற்றல்கள் வெளித் தோன்றாமல் அடங்கிக் கிடக்கின்றன அன்றோ? அதே போன்றதுதான் இதுவும்.

ஐந்தொழில் இயற்றும் நிலை: உயிர்களாகிய நமக்கு நல்லருள் புரியச்சிவபிரான் திருவுளம் கொள்ளுகிறார். அப்போது அவரது அருளாற்றலாகிய பராசத்தி வெளிப்படுகிறாள். சிவத்தின் இடது கூறில் சிவசத்தியாக இருந்து, முதற்கண் அவளே இயங்கத் தொடங்குகிறாள். இறை இயக்கத்தின் முதல் வெளிப்பாடு ஆதலால் இவளை ஆதிசத்தி என அழைப்பர். இந்த நிலையில் சத்தியின் தொழிற்பாட்டிற்கு ஏற்றதொரு சத்தனாய், அவளோடு இயைந்து ஆங்காங்கே சிவனும் தொழிற்படுகிறார்.[1] உயிர்களின் நன்மைக்காக அவள் கொள்ளும் பல்வேறு வடிவங்களுக்கு ஏற்பச் சிவபெருமானும் வெவ்வேறு மாற்று வடிவங்களை மேற்கொள்ளுகிறார். இதனால் உலக இயக்கம் நிகழுகிறது என்பது சைவ சித்தாந்தம்.

> "பிடியதன் உரு உமைகொள மிகுகரியது வடிகொ(ண்)டு... கணபதி வர அருளினன்"[2]

என்ற சம்பந்தர் திருவாக்கு இக்கருத்தினை அரண் செய்யும். சிவபெருமானது தடத்த நிலை என்றும், பொது இயல்பு என்றும்,

---

1. சிவஞான சித்தியார் 2. சம்பந்தர் தேவாரம்

உயிர் உலகங்களோடு ஒன்றாகவும், உடனாகவும் இறைவன் நிற்கிற நிலை என்றும், தொழிற்படு நிலை என்றும் பலவாறு இதனை மொழிவர்.

தாதான்மிய நிலை:[1] இவ்வாறு பரம்பொருள் நமக்காகத் தொழிற்படுங்கால் சிவசத்தியின் நிலை என்ன?

மல்லிகை மலரும்போது, நறுமணமும் வெளிப்பட்டு வந்து, நமக்கெல்லாம் இன்பம் தருகின்றது அன்றோ? அந்த நறுமணம், மல்லிகையை விட்டுப் பிரிந்தா வந்தது? நறுமணமானது, மல்லிகையிலும் நீங்காதிருக்கும். காற்றினில் கலந்து வந்து நமக்கும் இன்பம் தரும்.

அதேபோல் சிவத்தின் ஆற்றலாகிய சிவசத்தி, சிவத்தினின்று எப்பொழுதுமே பிரிவதில்லை. மலரைக்காணுதற்கு முன்னரே அதன் நறுமணம் நமக்கு இன்பம் நல்கக் காணுகிறோம். அதே போல், பரம்பொருள் படைத்தல் முதலிய ஐம்பெருந்தொழில் இயற்றும் போது, சிவத்திற்கு முன்னர் சத்தியே நம் உணர்வுக்கு வருகிறாள். இவ்வாறு இரு கூறாக வெளிவந்த சிவனும், சத்தியும் தம்முள் புணர்கின்றனர். அதன் பயனாக, அருள் வடிவினராய் மூத்த பிள்ளையார் தோன்றுகிறார். ஓங்கார வடிவினவாகிய பிடி, கரி வடிவத்தில் அம்மை அப்பர் புணர்ந்தமையால், ஓங்கார வடிவத்தில், யானை முகப்பிள்ளையார் தோன்றினார் என்பதனை முற்கூறிய சம்பந்தர் வாக்காலும் அறியலாம்.

அருள் தோற்றமும் பொருள் தோற்றமும்: இது முற்றுணர்வினராகிய பரசிவத்தின் அருள் வெளிப்பாடு. அவர் இவ்வாறு தன் அருட்சத்தியை இயக்கித் தெய்வப் பிள்ளையைத் தோற்றுவித்தலைப் போன்றே, அவரே தன் சட ஆற்றலாகிய மாயையினை இயக்கி அதிலிருந்து 36 தத்துவங்களாகிய சடப் பொருள்களையும் தோற்றுவிக்கிறார்.

---

1. தாதான்மிய நிலை: ஒருமையில் இருமை (ஒன்றில் இரண்டு) என்பது பொருள். எக்காலத்தும் நீசகமின்றி ஒன்றாகவே இருக்கும் பரம் பொருளும் சத்தியும் ஐந்தொழில் இயற்றுவதற்காக, ஒன்றியும் வெளிப்பட்டும் இருக்கும் நிலை.

இவ்வுயரிய அருள் தோற்றமும் பொருள் தோற்றமும்[1] யாருக்காக? சிற்றறிவு உயிர்களாகிய நாம் ஞானத் தெளிவு பெற்றுப் பேரின்பப் பெருநிலை எய்துவதற்காக அன்றோ? என்னே இறைவன் திருவருள்! இனிச் சட ஆற்றலை இயக்கும் முறைமை காண்போம்.

நாதமும் விந்துவும்: சிவபெருமானது விருப்பப்படி சிவசத்தி மாயை என்னும் சட சத்தியைத் தொழிற்படுத்துகிறாள். அப்போது நாதம் என்ற ஒலியே முதன்முதலில் தோன்றுகிறது. நாதத்திலிருந்துதான் விந்து என்ற ஒளி தோன்றுகிறது. நாதத் தத்துவத்தைச் சிவனும், விந்து தத்துவத்தைச் சத்தியும் இயக்குகின்றனர்.

பிள்ளையார் சுழி: ஆயினும் அதிவேகமாகச் சுழலும் இயல்புடையது விந்து. அஃது தன் மிகுந்த விரைவு காரணமாக ஒரு சுழியாக விரிந்து வெளிப்படுகிறது. பின்னர், நாதம் ஒரு நேர்கோடாக, விந்துவைத் தொடர்ந்து தாங்குகிறது.

அத்தகு 'விந்து நாத'க் கூட்டத்தை நமக்கு உணர்த்தும் குறியீடுதான், சுழியும் நேர்கோடும் இணைந்த 'உ' என்னும் எழுத்து ஆகும். இதனை நாம் பிள்ளையார் சுழி எனப் பணிவன்புடன் ஏற்கிறோம். இந்த நாத விந்துவின் இயக்கத்தினாலேயே அண்டமும் பிண்டமும் அனைத்துச் சடப்பொருள்களும் தோன்றின. எனவே செய்ந்நன்றிக் குறிப்பும், செய்தொழில் முட்டின்றி நிறைவேறுவதற்கான விருப்பும், பிள்ளையார் சுழி இடுதலினால் உணர்த்தப் பெறுகின்றன. அதனால், அனைத்துக் காரியங்களையும் நாம் பிள்ளையாரை நினைந்தும், பிள்ளையார் சுழி இட்டும் தொடங்குகிறோம்.

ஆதி சத்தியின் முதல் வெளிப்பாடு பற்றிய இவ் உண்மையை அறிவியலின் துணை கொண்டும் அறியலாம்.

---

1. சிவபெருமான் தன்னுடைய நெற்றிக்கண் நெருப்பாகிய அளப்பரிய ஆற்றலிலிருந்து முருகப் பெருமானைத் தோற்றுவித்தார். அதேபோல் சிவசத்தியின் காற்சலங்கையிலிருந்து உதிர்ந்த நவமணிகளைத் திருநோக்கம் செய்து, அவற்றிலிருந்து நவ வீரர்களைத் தோற்றுவித்தார் என்பது கந்தபுராணம்

ஒலியும் ஒளியும்: வானத்தில் இரண்டு மேகங்கள் மோதுகின்றன. அப்போது முதற்கண் தோன்றுவது இடியாகிய ஒலி. அவ்வொலியிலிருந்து தோன்றுவதுதான் மின்னலாகிய ஒளி.

ஆயினும், ஒலியின் வேகத்தை (Velocity) விட, ஒளியின் வேகம் பன்னூறாயிரம் மடங்கு மிகுதியாதலால், மின்னல் பளிச்சிடுவதையே நாம் முதலில் காண்கிறோம். சில நொடிகளுக்குப் பிறகுதான் இடியோசை நம் காதுகளுக்கு எட்டுகிறது.

இஃது அறிவியலாரும் ஏற்கும் அண்டவெளி நிகழ்ச்சி.

இடியிலிருந்து தோன்றிய மின்னல், இடியோசை கேட்கப்படுவதற்கு முன்னதாக நமக்குப் புலனாவது போலவே, சிவனிலிருந்து தோன்றுகிற அருள் சத்தியே சிவனுக்கும் முன்னதாக நமக்கு வெளிப்பட்டு அருள் பாலிக்கிறாள்.

பிண்டத்துள் அண்டம்: நிலவுலகில் போன்றே, நமது மனித உடலிலும் நானிலப் பகுப்பை இறைவன் அமைத்துள்ளார் நமது மனித உடற்கூறில், முன் தலைப்பகுதி - குறிஞ்சி; பின் தலைப் பிடரிப்பகுதி - முல்லை; நெஞ்சுப் பகுதி - மருதம்; வயிற்றுப் பகுதியும் - முல்லை; அடிவயிற்றுப்பகுதி - நெய்தல்; இவற்றுள் எது தன் இயல்பிலிருந்து திரிந்தாலும், அது பாலை.

இவற்றுள், தொல்காப்பியர் தம் நூற்பாவை முல்லையில் தொடங்குகிறார்.

முல்லை என்பது காடும் காடு சார்ந்த நிலமும் எனக் கண்டோம் இத்தகைய காடுகள், நம் உடம்பில் பிடரி, வயிறு ஆகிய இரண்டு இடங்களில் இருப்பதாகவும் கண்டோம். பிடரியிலுள்ளது, நரம்புகள் நிறைந்த காடு, வயிற்றிலுள்ளது, குடல்கள் நிறைந்த காடு.

முல்லைக் காட்டின் பயன்: மின் ஆற்றலைக் கடத்துவது செப்புக்கம்பி. அதேபோன்று, நமது உடலினுள் தெய்வீக ஆற்றலைக் கடத்தும் கருவியாக இருப்பன, நரம்புகள். உடல் முழுவதும் கோடானு கோடி நரம்புகள் மிக நுண்மையாகப்

பரவியுள்ளன. இவை அறிவு நரம்புகள் என்றும் செயல் நரம்புகள் என்றும் (Sensory Nerves & Motor Nerves என்றும்) இரு வகைப்படும். உடல் முழுவதும் பரவியுள்ள இவற்றைப் பிடரி யிலுள்ள நரம்புக் கூட்டமே இயக்குகின்றன.

வயிற்றிலுள்ள குடற்காடுகள், நாம் உண்ட உணவைச் சீரணித்து உடலின் ஆற்றலைப் பெருக்கவும், எஞ்சிய மலத்தைப் போக்கி, நமது உடல் நலனைப் பேணவும் உறுதுணையாகின்றன.

அதே போல்று, பிடரியிலுள்ள நரம்புக் காடுகள் நம் ஊழ்வினைக்கு ஏற்ப, இருவகையில் உதவுகின்றன, தொடக்க வாழ்வில் உணர்வுகளைக் கீழ் நோக்கி உலகியலில் செலுத்தி, நம்மைப் பிணித்துள்ள மலங்களைக் கழுவ உதவுகின்றன. இறுதியில் வினைகள் நீங்கியதும், சீரார்ந்த நம் சிந்தனைகளைச் சிவத்தின் பால் ஈடுபடுத்தி, உணர்வு நரம்புகளை நம் முன்தலை நோக்கி உந்திச் செலுத்தி, உயிரின் ஆற்றலையும், இறைமைப் பண்பினையும் பெருக்கவும் பெருந்துணையாகின்றன,

இவ்வாறு, இரண்டு இடங்களிலுமே, மல நீக்கமும், உடல் நலன் உயிர் நலன்களைப் பேணுதலுமே முல்லைக் காடுகளின் சிறப்பியல்புகளும் பயனுமாம்,

பெண் புத்தி பின் புத்தி;

சிவபெருமான் தனது அருட்சத்தியைக் கொண்டே உலகம் முதலியவற்றைத் தோற்றுவிக்கிறார் எனக்கண்டோம், அருட் சத்தியின் ஆற்றல் அளப்பரிது. அதன் முழு ஆற்றலும் வெளிப் படின், உலகம் தாங்காது,

33000-மின் அழுத்தத்தில் (voltage) உற்பத்தியாகும் மின் ஆற்றலைப் பலப் பல படிநிலைகளில் குறைத்து, இறுதியில் 230-மின் அழுத்தம் என்ற அளவில், நம் இல்லங்களில் பயன் படுத்துகிறோம் அன்றோ?

அதே போன்று, சிவசத்தியும் தன் ஆற்றலைப் படிப்படியாகக் குறைத்துக் கொண்டே வந்து, பத்துமாதங்கள் சுமந்து பெற்ற

நம் அன்னை வரை எளியவளாக, இனியவளாக வருகிறாள் எனில், அவளது அளப்பரிய கருணைதான் என்னே!

பராசத்தியிலிருந்து அவ்வாறு வெளிப்பட்ட முதல் சத்திக்கு, ஆதிசத்தி என்பது பெயர்.

அவள் தொழில் படும் இடமாக அமைவது, நம் பிடரியிலுள்ள சிறு மூளைப் பகுதியேயாகும்.

சிவபெருமானது பெண்மை ஆற்றல் இவ்வாறு நமது பின் தலையில் நின்று தொழிற்படுவதையே, நம்மவர்கள் 'பெண் புத்தி பின் புத்தி' என்ற வழக்கு மொழியாக்கினர் போலும்.

வினை ஊட்டமும் அருள் ஊட்டமும்: ஊழ்வினையின் பாற்பட்ட இந்த நில உலக வாழ்வில், நமக்கு வினைப் பயனாகிய ஊனப் பாலினைக் காலம் அறிந்து அளவாக ஊட்டுபவள், ஆதி சத்தியாகிய இந்த மறைப்பு ஆற்றலேயாம்.

வினையின் நீங்கிய வேளையில், இவளே வெளிப்பட்டு அருளாற்றலாக மாறி நமக்கு இறை அன்பாகிய ஞானப்பாலைச் செவ்விதே புகட்டுகிறாள்.

வழிபடு தெய்வம்: இதனைத் தொல்காப்பியரும்,

> "வழிபடு தெய்வம் நிற்புறம் காப்பப்
> பழிதீர் செல்வமொடு வழி வழி சிறந்து
> பொலிமின் என்னும் புறநிலை வாழ்த்தே
> கலிநிலை வகையும் வஞ்சியும் பெறா"[1]

என்ற நூற்பா மூலம், தெளிவாக்குகிறார்.

சிவசத்தி எவ்வாறு நமக்குப் படிமுறையிலே சிவஞானத் தெளிவை ஊட்டுகிறாள் என்பதைச் சைவ சித்தாந்த சாத்திரங்கள் அறிவுறுத்துகின்றன.

படி முறை ஆன்ம வளர்ச்சியில் சிவசத்தி:

ஆன்ம வளர்ச்சி படிமுறையில் நிகழ்கிறது என்பது சைவ

1. தொல். செய்யுளியல் 415

சித்தாந்தம். இருவினை ஒப்பு[1], மலபரிபாகம்[2], சத்திநிபாதம்[3], திருவடிப்பேறு[4] என்பன உயிர்களாகிய நமக்கான படிமுறை வளர்ச்சிகள் என அருள் நூல்கள் கூறுகின்றன. 'சத்திநிபாதம்' என்பது, சிவபெருமான் திருவருள் ஆன்மாவின் பால் மழையென பொழிதல்; 'திருவடிப்பேறு' என்பது, ஆன்மா சிவபெருமான் திருவடியில் கூடிப் பேரின்பம் துய்த்தல் என்பதாம். முதலில் சத்திநிபாதம் நிகழ, அதன் பிறகே திருவடிப் பேரின்பம் சித்திக்கும் என்பது இதனால் பெறப்படும்.

சைவ சித்தாந்தத்தின் இக்கருத்துக்கு இணையாகத் தொல் காப்பியத்திலும் நூற்பாக்கள் அமைந்திருப்பதைச் காணலாம்.

''காரும் மாலையும் முல்லை''
''குறிஞ்சி கூதிர்யாமம் என்மனார் புலவர்''[5]

முல்லையை முதற்கண் கூறிக் குறிஞ்சியை அடுத்துக் கூறியதற்கு ஏற்பக், கார்காலத்து மாலையின் சிறப்பைத் தொடர்ந்து, கூதிர்காலத்து நள்ளிருள் சிறப்புடையதாகிறது. அதேபோன்று சத்திநிபாதம் என்ற அருள் மழையைத் தொடர்ந்து சிவ சீவக் கூட்டமாகிய பேரின்பப் புணர்ச்சி நிகழ்கிறது என்பது குறிப்பு மொழியாயிற்று.

---

1. இருவினை ஒப்பு: நம்மால் செய்யப்படுவன அனைத்தும் வினையே. நல்வினையாயினும் தீவினையாயினும் இரண்டும் பிறவிக்கு வித்தேயாம். 'நான் செய்தேன், இது எனது செயல்'' என்பன வினையாகின்றன. இத்தகைய தற்போதம் நீங்கி, இன்பத்துள் இன்பம்விழையாது, துன்பத்துள் துன்பமுறாது, எல்லாம் சிவச்செயல் என்ற துணிவுபெற்று, இருவகை வினைகளையும் ஒப்ப நோக்கி உவர்த்தலே இருவினை ஒப்பு எனப்படும்.

2. மலபரிபாகம்: ஆணவம், கன்மம், மாயை என்பன மூன்றும் மலங்கள் அவை நீங்குவதற்கான துணைக் காரணங்கள் தொழிற்படுதலை மலபரிபாகம் என்பர்.

3. சத்திநிபாதம்: சிவசத்தி நம்பால் அருள்மழை பொழிந்து, இறையருளைப் பதியச் செய்தல் சத்திநிபாதம் எனப்படும்.

4. திருவடிப்பேறு: சிவபெருமானது திருவடியாகிய பேரின்பத்தில் ஆன்மா திளைத்திருத்தல், திருவடிப்பேறு ஆகும்.

5. தொல், அகத்திணையியல் 6, 7.

அருட்பனுவல்களில் அம்மை:

தொல்காப்பியரைப் போன்றே சைவ சமய அருளாளர்களும் சிவசத்திக்கு முதலிடம் கொடுத்துச் சிறப்பித்துள்ளனர், இஃது இலக்கியங்களிலிருந்து நன்கு அறியப் பெறும்..

தேவார திருவாசகங்களில் 'அம்மை அப்பன்' என்ற சொல்லாட்சி பயின்று வருவதையும், அங்கு அம்மைக்கே முதலிடம் என்பதையும் காணுகிறோம்.

திருஞான சம்பந்தரது பதிகங்கள் பலவற்றுள், பதிகத்தின் தொடக்கமே, அம்மையைச் சிறப்பித்துப் பரவியுள்ளமை காணலாம்.

'தோடுடைய செவியன்' எனத் தொடங்கும் முதற் பதிகத்தின் முதற் சொல்லே, தோடு என்ற அம்மையின் காதணியைக் குறிப்பதாகும்.

அனல் வாதத்தின் பச்சைப்பதிகம், 'போகம் ஆர்த்த பூண்முலையாள்' என்றும், திருநள்ளாற்றுத் திருப்பதிகம், 'பாடக மெல்லடிப் பாவை' என்றும், கோளறு பதிகம், 'வேயுறு தோளி பங்கன்' என்றும், திருவலிவலத் திருப்பதிகம், 'பிடியதன் உரு, உமை கொள' என்றும், தொடங்கப் பெறுகின்றன; இவை போன்ற சான்றுகள் திருமுறைகளில் பலப்பல உள்ளன.

''இரும்பு மனம் குழைத்(து) என்னை எடுத்து ஆண்ட
அங்கயற்கண் எம்பிராட்டி
அரும்பு(ம்) இளநகை போற்றி——————''1

என்பதாக, முதலில், அரவணைத்து ஆட்கொள்ளும் அம்மையின் பெருமையைப் பாடுகிறார், பரஞ்சோதியார்.

''முன்னிக் கடலைச் சுருக்கி எழுந்துடையாள்
என்னத் திகழ்ந்(து),எம்மை ஆ(ள்)உடையாள்
இட்டிடையின்
மின்னிப் பொழிந்(து), எம் பிராட்டி திருவடிமேல்
பொன்னஞ் சிலம்பில் சிலம்பித், திருப்புருவம்

1, திருவிளையாடல் புராணம்-கடவுள் வாழ்த்து-5

என்னச் சிலைகுலவி, நம்தம்மை ஆளுடையாள்
தன்னில் பிரிவிலா எம்கோமான் அன்பர்க்கு
முன்னி அவன் நமக்கு முன் சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோர் எம்பாவாய்''[1]

இவ்வாறு சிவபெருமானுக்கு முன்னரே சிவசக்தி அருள் மழை பொழிகின்ற சிறப்பினைப் பாடுகிறார் மாணிக்கவாசகர்.

தோத்திர நூல்களைப் போன்றே, சைவ ஞான நூல்களிலும் சிவசக்தி முதன்மையாக வெளிப்பட்டு நின்று, அருள் பாலிக்கும் கருணைத் திறன் விதந்தோதப் பெறுகிறது.

சூரிய ஒளிக்கற்றைகளைக் கண்டு, நாம் சூரியனை அறிவது போலவும், மணத்திலிருந்து மலர் இருப்பதை அறிவது போலவும் சூட்டினைக் கொண்டு நெருப்பின் இயல்புகளைத் தெரிந்து கொள்ளுவது போலவும், உமை அம்மை காட்ட, நாம் சிவனாகிய அப்பனைக் காணுகிறோம்.

முற்றிலும் உலக முகப்பட்டதும், சிவபரத்திற்குச் சேய்மை நிலையில் உள்ளதுமாகிய புறத்திணை யாயினும், இறைமை உணர்வுக்கு மாறான பரத்தை வாழ்வாயினும், இறைமைத் தொடர்போடு கூடிய அடிமைத் தொண்டாயினும், மகன்மை நெறியின் பாற்பட்ட அன்பாயுனும், தோழமையோடு கூடிய நெருக்கமாயினும், தலைவியாய் நின்று இன்புறுகிற தனி உறவு நிலையாயினும்,

நமது வாழ்வின் இத்தகைய எந்த நிலையிலும் உயிர்களாகிய நமக்கு முதற்கண் அருள்பாலிப்பவள் சிவசத்தியே என்பதையும், அவளே நம்மைச் சிவபெருமானிடம் கொண்டு செலுத்துகிறாள் என்பதையும் சைவ சாத்திரங்கள் உறுதி செய்கின்றன.

இங்ஙனம் அம்மையைச் சிறப்பிக்கும் அருள் நூல்களைப் போன்று, உலகியல் அறம் பற்றிக் கூறுகிற நூல்களும்,

''அன்னையும் பிதாவும் முன்னறிதெய்வம்,'
''தாயிற் சிறந்தொரு கோயிலும் இல்லை,
தந்தை சொல் மிக்கதோர் மந்திரம் இல்லை'',

---

1. திருவாசகம், திருவெம்பாவை - 16.

என்றெல்லாம் அறிவுறுத்தித் தலைமையிடத்தைத் தந்தைக்கும் முதன்மைச் சிறப்பைத் தாய்க்கும் உரியதாக்குகின்றன.

சூத்திரத்தில் சிவபெருமானைப் பற்றியோ, சிவசத்தியைப் பற்றியோ யாதும் வெளிப்படையாகக் காணப்பெறவில்லையே. அவ்வாறிருக்க, அவர்களைப் பற்றி ஈண்டு விளக்கிச் சொல்லுவது என்னை? இது சிலரது வினா.

சூத்திரத்தின் முதல் இரண்டு அடிகளில், முல்லை நிலத்து மாயோன் எனத் திருமாலும், குறிஞ்சித் தலைவனாகிய சேயோன் என முருகப்பெருமானும் போற்றப் பெறுகின்றனர் அன்றோ? அம்மை அப்பருக்கும் இவர்களுக்கும் என்ன தொடர்பு? இது சிலருக்கு எழுகின்ற ஐயம்.

எனவே இவைபற்றிச் சிந்திப்போம்:

சிவசத்தியும் திருமாலும்: தாயாகிய சிவசத்தியும் திருமாலும் வேறுவேறு அல்லர் என்பதைச் சைவ வைணவக் கொள்கைகள் இரண்டுமே ஏற்கின்றன.

உலகினைத் தொழிற்படுத்தச் சிவசத்தி ஏற்கும் முதல்நிலை ஆதிசத்தி என்பதும், மாயோன் சிவசத்தியது மறுவடிவமே என்பதும் சாத்திர உண்மைகள்.

> ''எரியலா(ல்) உருவ(ம்) இல்லை; ஏறுஅலால் ஏற(ல்) இல்லை;
> கரியலா(ல்) போர்வைஇல்லை; காண்தகு சோதியார்க்குப்
> பிரி(வு)இலா அமரர்கூடிப் 'பெருந்தகைப் பிரா(ன்)' என்(று) ஏத்து(ம்)
> அரியலால் தேவிஇல்லை ஐய(ன்)ஐ யாறனார்க்கே''[1]

என்பது அப்பர் பெருமான் வாக்கு.

இவ்வுண்மையை வைணவ அருளாளரும் ஏற்பர். ''பிறை தங்கு சடையானை வலத்தே வைத்து'' எனத் திருவாய் மொழிகிறார் திருமங்கை ஆழ்வார்.

---

1 அப்பர் தேவாரம் 4 : 40 : 398

சிவனும் முருகனும்: இதேபோல், சிவபெருமானுக்கும் முருகனுக்கும் வேறுபாடு இல்லை என்பது கந்தபுராணச் செய்தி.

"ஆதலின் நமது சத்தி அறுமுகன்; அவனும் யாமும்
பேதகம் அன்றால், நம்போல் பிரிவிலன்; யாண்டும் நின்றான்
ஏதமில் குழவி போல்வான்; யாவையும் உணர்ந்தான்; சீரும்,
போதமும், அழிவில் வீடும் போற்றினர்க்கு அருள
வல்லான்"[1]

எனச் சிவபெருமான் தமது அருட்சத்தியாகிய உமையம்மையிடம் முருகனது பெருமைகளைக் கூறுவதாக அமைகிறது, இச்செய்யுள்

நிறைவுரை: சத்திநிபாதம் என்ற அருள்மழையைப் பொழிந்து மல அழுக்குக் கழுவி, நம்மை உள்ளத் தூய்மை செய்து, 'எல்லாம் சிவச்செயல்' என்ற உணர்வினை ஊட்டி, ஆண்டவன் ஆன்மப் பேரின்பப் புணர்ச்சிக்கு வழிநடத்துபவள் சிவசத்தியே.

சத்தியும் மாயோனும் வேறு வேறல்லர்; சிவனும் சேயோனும் ஒருவரே. சைவ சித்தாந்தத்தின் சீரிய இவ்வுண்மை களை அடியொற்றியே, தொல்காப்பியரும் முல்லையை முதற் கண் வைத்து, அடுத்துக் குறிஞ்சியைக் கூறியதன் மூலம்,

தலைமை யிடத்தைத் தந்தைக்கும்
முதன்மைச் சிறப்பைத் தாய்க்கும்

உரியதாக்கி நூற்பா யாத்தனர் எனலாம்.

தலைமக்களது உறவினர் யாவர்?

தலைவிக்கு நற்றாய், தந்தை, செவிலி, அண்ணன்மார் எனப் பல உறவுகளைத் தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். ஆனால் தலைவனுக்கு மட்டும் தாய் தந்தையர் பற்றிய குறிப்பு எவ் விடத்திலும் காணப் பெறவில்லையே. அஃது ஏன்? என்பது சிந்தனைக் குரியதாகிறது. அதுபற்றி நோக்குவோம்.

தலைவன் யார்? தொல்காப்பியப் பொருளதிகாரத்தில், கருப்பொருள் பற்றிப் பேசப்படுகிறது. அங்கு நானிலக் கடவுள

1. கந்த புராணம் - உற்பத்திக் காண்டம்

ராக நால்வரைக் குறிப்பிடுகிறார் ஆசிரியர். அவர்கள் மாயோன், சேயோன், இந்திரன், வருணன் என்போராவர்.

புணர்ச்சிக்கு உரியவனாகத் தொல்காப்பியரால் அகத்திணையில் விரித்துக் கூறப்பெறும் தலைவனோ இந்நால்வருக்கும் வேறானவன். கருப்பொருள் தலைவர்கள் நால்வருள் ஒருவனாகக் கருதப் பெறாதவன்.

''பெருமையும் உரனும் ஆடுஉ மேன''1

என்ற நூற்பா மூலம், தலைவனது தனிச் சிறப்புகளைத் தொல்காப்பியர் குறிப்பிடுகிறார்.

சிவபெருமான் ஒருவனே தலைவனாகிய ஆண் என்பதும் ஆன்மாக்கள் அத்துணையும் பெண்பாலரே என்பதும் சைவக் கோட்பாடு.

தலைவனாகிய சிவபெருமானது எண்குணச் சிறப்பினைச் சிவாகமங்கள் தொகுத்தும் விரித்தும் சிறப்பித்துப் பேசும்; தன் வயத்தனாதல், தூய உடம்பினனாதல், இயற்கை உணர்வினனாதல், முற்றும் உணர்தல், இயல்பாகவே பாசங்களினின்று நீங்குதல், பேரருள் உடைமை, முடிவில் ஆற்றலுடைமை, வரம்பில் இன்பமுடைமை என்பன சிவபெருமானது தலைமைப் பண்புகளாம், அவற்றுள்,

முடிவில் ஆற்றல் உடைமை:

''உள்ளம் போல உற்றுழி உதவும்
புள்ளியல் கலிமா உடைமையான''2

எனத் தொல்காப்பியர் தலைவனுடைய உடைமையையும் பெருமையையும் விதந்தோதிச் செல்கிறார். இதிலிருந்து பேரருளாளனாகிய சிவபெருமான் ஒருவரே ஆகாயக்குதிரையையும் அயர்வின்றிச் செலுத்துகிற பேராற்றல் உடையவர் என்பது பெறப்படும்.

---

1. தொல். பொருளதிகாரம் - 95
2. தொல் கற்பியல் - 53

மலப்பிணிப்புக் காலத்தில் மறைந்திருந்து வினைப்பயனை ஊட்டுகிற சிவ ஆற்றல், மலம் நீங்கிய காலத்தில் விரைந்து வெளிப்பட்டு அருள்புரியும் என்பது சைவ சித்தாந்தம்.

இயல்பாகவே பாசங்களின் நீங்கிய தூயவர் சிவபெருமான். ஆன்மாக்களைப் பிணித்துள்ள மும்மலங்களால் அவர் சிறிதும் தொடக்குறுவதில்லை. ஆதலால், அவரை 'நின்மலன்' என்றும், 'நிர்விகாரி' என்றும் சிவாகமங்கள் சிறப்பித்துப் பேசும்.

சிவாகமங்கள் இவ்வாறு போற்றுகிற இறைமைப் பண்புகளைத் தொல்காப்பியத்திலும், பண்டைத் தமிழ் இலக்கியங்களிலும் பரவலாகக் காணுகிறோம்.

> ''வினையின் நீங்கி விளங்கிய அறிவின்
> முனைவன் கண்டது முதல் நூலாகும்''[1]
> ''இடைச்சுர மருங்கில் தவிர்தல் இல்லை''[2]

என்ற தொடர்களால், தொல்காப்பியர் போற்றுகிற தலைவன் சிவபெருமானே எனச் சிந்தித்தல் சாலும்.

நாதத்தின் தலைவனாகிய சிவபெருமானே, குறிஞ்சித் தலைவன் என்பதற்குச் சங்க இலக்கியங்களிலும் இடைக்காலத்துத் தோத்திரப் பனுவல்களிலும் பலப்பல சான்றுகள் உள்ளன. அவற்றுள் சில நோக்குவோம்.

> ''நெடுமலை நாடன் ஊர்ந்த மாவே''[3]
> ''தீயென் தில்ல மலைகிழவோற்கே''[4]
> ''ஒலி வெள்ளருவி ஓங்கு மலை நாடன்''[5]
> ''ஒலி பெருகைலை உயர் கிழவோனே''[6]

பிறப்பு இறப்பு இல்லாத பெருமான்:

சிவபெருமான் ஒருவனே எந்த ஒரு தாயின் வயிற்றிலும் எக்காலத்திலும், கருவாகத் தோன்றாத அநாதி முதல்வன்.

---

1. தொல். மரபியல் 96
2. மேற்படி கற்பியல் - 53
3. ஐங்குறுநூறு 202
4. மேற்படி 204
5. மேற்படி 205
6. கீர்த்தித்திரு அகவல்-146 (திருவாசகம்)

உலகம் முழுவதையும் தனது உடைமையாகத் தோற்றுவித்தும், காத்தும், இறுதியில் ஒடுக்கவல்ல பேராற்றல் உடையவன். உயிர்கள் அனைத்தையும் தமது அடிமையாகக் கொண்ட ஒரே தலைவன்.

இவ்வாறு, தோற்றமும் இறுதியுமில்லா முழுமுதற் பொருளுக்குத் தாயும் இல்லை, தந்தையும் இல்லை என்பது அருளாளர்கள் பலரும் அனுபவ வழியாகத் தெளிந்து கூறுகிற உண்மை.

''ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெருஞ் சோதி......[1]
''தாயுமிலி தந்தையிலி தான் தனியன், ஆயிடினும்''[2]

சிவபெருமானது ஒப்புவமை இல்லாப் பெருமைகளைச் சிவஞான சித்தியார் என்னும் சைவ சாத்திர நூல் சிறப்பித்துக் கூறும்.

''உலகெலாமாகி வேறாய் உடனுமாய் ஒளியாய் ஓங்கி
அலகிலா உயிர்கள் கன்மத்து ஆணையின் அமர்ந்து செல்லத்
தலைவனாய் இவற்றின் தன்மை தனக்கு எய்தலின்றித் தானே
நிலவுசீர் அமலனாகி நின்றனன் நீங்காது எங்கும்''[3]

சிவபெருமானே அனைவர்க்கும் தலைவன் என்பதைச்,
''செத்துப் பிறக்கின்ற தெய்வங்கள் மணவாள!
செங்கீரை ஆடி அருளே!''[4]

என்று முருகப்பெருமான் மீது ஏற்றிப் பாடுவார் குமரகுருபரர். இங்ஙனம், ''சிவபெருமான் ஒருவனே உயிர்களாகிய நமக்கு; அந்தமிலா அறிவானந்தத்தை வாரி வழங்கவல்ல பரம்பொருள், நாம் அவனுடைய தலைமையினை நாடித், தாளினைப் பற்றி வணங்கி, உய்தி பெறுவோம்; அவனுடைய உடைமைகள் அனைத்தையும் நம்முடைய உடைமைகளாகக் கொண்டு இன்புறுவோம்; இதுவே தொல்காப்பிய நல்லாசான் நமக்குக் கூற விழைந்த சீரிய அறிவுரை என்பது துணிவு.

1. திருவெம்பாவை - 8:7:1
2. மேற்படி 8:12:3
3. சிவஞான சித்தியார் 90
4. முத்துக்குமார சுவாமி பிள்ளைத்தமிழ்.

கருவிலே திரு:

சிவபெருமானும் முருகனும் ஒருவரே, வேறு வேறல்லர் என முன்னர்க் கூறி, ஈண்டுச் சிவபெருமானைப் பிறப்பு இறப்பு இல்லாத பெருமான் என்றும், கருவிலே தோன்றாப் பெருமையன் என்றும், முருகனைக் கருப்பொருள் தெய்வங்கள் நால்வருள் ஒருவன் என்றும் வேறுபடுத்திச் சிந்திப்பது என்னை? எனில், கூறுதும்: முருகப்பெருமானது தோற்றம் பற்றி நூல்கள் பலவும் பலவாறாகவே கூறுகின்றன.

''சிவபெருமானும் உமையம்மையும் இன்புற்றிருந்த காலத்தில் சிவபெருமானது விந்துவிலிருந்து தோன்றியவர், முருகப் பெருமான்'' எனப் பரிபாடல் என்னும் சங்கத்தமிழ் நூல் பகர்கிறது.

ஊழி முதல் தோற்றத்தில் சிவபெருமானது நெஞ்சுத் தானத்திலிருந்து தோன்றியவர் முருகப்பெருமான் என வாதுளாகமம் கூறுவதாகத் திருமுருகாற்றுப்படைக்கான நச்சினார்க்கினியர் உரையிலிருந்து அறிகிறோம்.

சூரபன்மனை அழித்தற்காகச் சிவபெருமானின் ஆறுநெற்றிக் கண்களிலிருந்து அக்கினிப் பிழம்பாகத் தோன்றியவர் முருகப் பெருமான் எனக் கந்த புராணம் பண்ணிசைக்கிறது.

எவ்வாற்றாயினும், சிவபெருமானுடைய விந்து, நெஞ்சு, நெற்றிக்கண் என்ற ஏதோ ஒரு கருவில் தோன்றியமையின் முருகப் பெருமானைக் கருப்பொருள் தெய்வங்களுள் ஒருவராகவே, தொல்தாப்பியர் போன்ற பண்டைத் தமிழ்ச் சான்றோர்கள் சிந்தித்தனர்.

இவ்வாறு கொள்ளாது, முருகனையும் சிவபிரானுக்குச் சமமாக, எக்காலத்தும் உள்ள பிறிதொரு பொருள் எனக் கொள்ளின் குற்றம் என்னை? என்பது பற்றி நோக்குவோம்.

சைவக்கடவுளர் பலர் என்பது புறச்சமயிகளின் தவறான கணிப்பு. சிவபெருமானையும், முருகனையும் வேறு வேறு கடவுளராகக் கொள்ளின், வழுவுடைய அவ் எதிர்ப்புலக்கருத்து வலிமை

பெறுவதோடு, முப்பொருள் உண்மை என்ற சைவ சித்தாந்தக் கோட்பாடும் முரண்பாடாகத் தோன்றும்.

மாயோனும் சேயோனும் : ஆற்றல் என்பதும் சத்தி என்பதும் ஒரு பொருளே, முதன்முதலில் சிவத்தின் ஆற்றல் வெளிப்பட்டது; சிவசத்தி தோன்றினாள்; சிவசத்தியும், திருமாலும் வேறு வேறு அல்லர் என்பது சைவர், வைணவர் இருவருமே ஏற்றுக் கொள்ளும் உண்மை.

மீண்டும் சிவ ஆற்றல் வெளிப்பட்டது, திருமுருகன் தோன்றினான் சிவபெருமானும், முருகனும் வேறுவேறல்லர் என்பது கந்தபுராணச் செய்தி. எனவே, கருவில் தோன்றாக் கண்ணுதற் கடவுளாகிய சிவத்திலிருந்து அவரது ஆற்றலாக வெளிப்பட்டுத் தோன்றிய சிவசத்தியும், முருகனும் கருப் பொருளாகப் பண்டைக் காலந் தொட்டே நம் முன்னோரால் வழிபடப் பெற்றனர்.

உயிர்களாகிய நமக்கு உண்மையான அறிவானந்தம் நல்கு கிற, தனிப்பெருந்தலைவனாகச் சிவபெருமானை நம் தமிழினம் போற்றிப் பரவியது. அப்பேரின்பத்திற்கு நம்மை ஆற்றுப் படுத்தும் சேயோனாக முருகப்பெருமானுக்குத் திருமுருகாற்றுப் படை பாடிப்பரவி மகிழ்ந்தது.

தொல்காப்பியர் மாயோனை, முதலில் கூறிச் சேயோனை அடுத்துக் கூறியதற்கு, அவர்தம் தோற்ற அடைவும் ஒரு காரணம் எனலாம்.

தலைமகள் யார்?

கோடானு கோடியாக ஆன்மாக்கள் உள்ளன அவை உடம் போடு கூடி இந்த உலகத்தில் வாழும்போது அவற்றிற்கு ஆண், பெண் என்ற பாகுபாடு உண்டு ஆயினும், அவை உடம்பால் கொண்டவேறுபாடே அன்றி, உயிரால் உள்ள வேறுபாடு அன்று

பிரமன் விட்டுணு தேவர், நரகர் மனிதர், விலங்குகள் நுண் கிருமிகள் உள்ளிட்ட அனைத்து உயிர்களும் எவ்வித வேறுபாடு மின்றிப் பெண் பாலரே உலகில் உயிருக்கு ஒரு வடிவமைப்பைக்

கொடுப்பவர் சிவபெருமானே. உயிர் அவ்வாறு வடிவம் மேற் கொள்ளும்போது நிலம் முதலிய ஐம்பூதங்களால் ஆன உடம் பைப் பெறுகிறது. இதனைத் தொல்காப்பியரும்

"நிலன் நீர் தீவளி விசும்பொடு ஐந்தும்
கலந்த மயக்கம் உலகம் ஆதலின்
இருதிணை ஐம்பால் இயல் நெறி வழாஅத்
திரிவில் சொல்லொடு தழாஅல் வேண்டும்" — என

வகுத்துக்கூறி, உலகமுகப்பட்ட உயிருக்குத் திணை, பால் வகுத் துரைப்பார்.

இத்தகைய ஆன்மாக்கள் அனைத்தும் தத்தம் ஊழ்வினை நுகர்ச்சிக்கு ஏற்பப் பிறப்பு இறப்புச் சுழற்சியில் உழன்று, படி முறையில் அறிவுவளரப் பெற்று இறுதியில், பிறவாயாக்கைப் பெரியோனாகிய சிவபெருமான் திருவடியில் சேர்வதற்கான சிவ ஞானத்தில் தலைப்படுவ.

அப்போது அவையே தலைவியர் ஆவர்.

தலைவிக்கு உறவினர்? எனவே உயிர்களாகிய நாமே தலைவியர்; உயிர்கள் அநாதி. அவற்றிற்குப் பிறப்பு இறப்பு இல்லை என்பது சைவ சித்தாந்தம். அவ்வாறாயின் உயிர்களுக்குத் தாய் தந்தையராகக் கூறப் பெறுவோர் யாவர்? என்ற வினா எழுகிறதன்றோ? உயிர்களை யாரும் படைக்கவில்லை.

உயிருக்கான உடம்பு, அதாவது மெய், படைக்கப் பெறு கிறது. உயிர் மேன்மேலும் இன்பம் நுகர்வதற்கான மெய்யறிவும் விளக்கப் பெறுகிறது.

தந்தை தாய்: உயிருக்கு அவ்வாறு மெய்யையும் மெய்ய றிவினையும் ஆக்கியும் ஊக்கியும் அருளுபவர் யாவரோ, அவர்களே உயிர்களாகிய நமக்குத் தந்தையும் தாயும் ஆவர். அவர்களை யாவர் எனக் காண்போம்.

அநாதி காலந்தொட்டே, உயிர்களாகிய நம்மை ஆணவம் என்ற இருள்மலம் கவ்விப் பிடித்திருக்கிறது. அந்த ஆணவத்

தையே உடம்பாகக் கொண்டு நாம் அறிவு முடங்கிக் கிடந்தோம். அவ்வாறு அவலத்தில் உழன்ற நமக்கு, அறிவு விளக்கம் தந்து உய்விக்க விரும்புகிறார், சிவபெருமான்.

இருளில் இடர்ப்படுவோர்க்கு, விடியும் வரை விளக்கு துணைநிற்கிறது, அவ்விளக்கினைப் போன்றது மாயை. சட ஆற்றலாகிய அது, சிவபெருமானது பரிகிரக சத்தி என்பது சைவ சித்தாந்தம்.

சிவபெருமானது விருப்பத்தையே தனக்கு இடப்பட்ட ஆணையாக ஏற்றுச் சிவசக்தி, மாயை எனும் அந்த ஆற்றலை முதற்பொருளாகக் கொண்டு நமக்கு உடல், உட்கருவி, உலகம், நுகர்ச்சி ஆகியவற்றை அருளுகிறாள்.

மலஇருள் நீங்கித் திருவருள் ஒளி நம்மில் விளங்கித் தோன்று கிறவரை, இம்மாயையினாலான இந்த உடல் முதலியன சிறு விளக்குபோல நம் அறிவு விளக்கத்துக்குத் துணை நிற்கின்றன.

முன்னர் ஆணவத்தையே உடம்பாகக் கொண்டு காரிருளில் கவன்ற உயிரைச் சிவனும் சத்தியும் உணவு, தண்ணீர், காற்று இவற்றுள் ஏதோ ஒன்றின்மூலம் தந்தையின் உடம்பினுள் சேர்ப் பிக்கின்றனர். அவ்வுயிர் தந்தையின் விந்துவில் சில காலம் வளர்ந்ததும், உறவின் மூலம் தாயின் கருவிற்கு மாற்றப் பெறு கிறது. அங்கு 275 நாட்கள் வரை வளர்ந்து, முழுவளர்ச்சி பெற்று உலகில் பிறக்கிறது

இவ்வாறு நமக்கு மாயையினாலான உடம்பு, உட்கருவி, உலகம், நுகர்ச்சி ஆகியவற்றைத் தந்துதவியவர்கள் சிவசத்தியும் சிவபெருமானுமே ஆவர். எனவே அவர்களே எல்லா உயிர் களுக்கும் நற்றாயும் தந்தையும் ஆவர்.

பிறப்பு இறப்புச் சுழற்சியில் சிக்கிய உயிர்களாகிய நமக்கு இவ்வுலகினில் மானுடத் தாய் தந்தையர் உள்ளனர். நம்மைப் பெற்று வளர்த்துப் பேணிக் காத்த அவர்களை மனித தெய்வங் கள் என போற்றி வணங்குவது, சிறந்த நன்றிக்கடனாகும். பிறப்புகள் தோறும் நாம் வெவ்வேறு தாய்தந்தையர் மூலம்

பிறக்கிறோம். ஆனால் எல்லாப் பிறப்புக்கும் துணை நிற்கிற சிவனும் அவரது சத்தியுமே அனைத்துப் பிறப்பிலும் நமக்குத் தந்தையும் தாயும் ஆவர்.

தலைவிக்கு ஒரு செவிலி

செவிலி என்பவள் யார்? வளர்ப்புத்தாய். நற்றாய் என்பவள் ஓர் உயர்குலப்பெண், அவளுக்கு ஒரு குழந்தை அந்த நல்லதாயின் ஆணைக்கு ஏற்ப, அச் செல்லக் குழந்தையை எடுத்துப் பாலூட்டிச் சீராட்டி அன்போடு அரவணைத்து வளர்ப்பவள் யாரோ, அவளே செவிலி எனப்படுவாள்.

உயிர்களாகிய நாமெல்லாம் இறைவனது செல்லக் குழந்தைகள். நமக்கு நற்றாயாக அருள்புரிபவள் இறைவனது ஞான ஆற்றலாகிய சிவசக்தி (Kinetic Energy).

செவிலி தந்த செல்வம்: சிவசத்தியின் அருளாணைப்படி, உயிர்க் குழந்தைகளாகிய நமக்குக் கவசச் சட்டைகளாக ஐந்து உடம்புகளைக் கொடுத்து, உண்ண உணவும், உடுக்க உடையும், இருக்க இடமும், குடிக்க நீரும், ஓடி ஆடி விளையாட ஓர் உலகப் பண்ணையும், இன்புடன் வாழ ஏனைய பல பொருள்களும் தன்னிலிருந்து தந்தவள், சிவபெருமானது பரிக்கிரக சத்தியாகிய மாயை (Potential Energy) ஆவள்.

எனவே மாயை என்பவளே உயிர்களாகிய நமக்குச் செவிலித் தாய் ஆவாள்.

அறிவியல் சான்று: சிவபெருமான் தனது சித் சத்தியைக் கொண்டு மாயையினை இயக்குகிறார் என்பதற்கு அறிவியல் சான்றாக மின்சாரத்தைக் கூறலாம். மின்ஆற்றல் என்பது ஒரேபொருள். ஆயினும் அது நேர்மின்னாற்றல் என்றும் எதிர்மின்னாற்றல் என்றும் இரண்டு கூறுகளாகப் பிரிந்து, செப்புக் கம்பிகளின் மூலம் பாயும்போது, மின்விளக்கு, மின்விசிறி, போன்ற பல பொருள்கள் இயங்குகின்றன அன்றோ?

அதே போன்று பரசிவம் என்பது ஒரே தனிப்பெரு முழுமுதற்பொருள். அது சி (சிவன்) என்றும் வ (வனப்பு ஆற்றல்)

என்றும் இரு கூறாகி 'ம்' என்ற (சட ஆற்றலாகிய) மாயையில் பொருந்திச் சிவம் ஆகிப் பிரபஞ்சம் முழுவதையும் தோற்றி இயக்குகிறது. அப்போது சடமாகிய மூலமாயையிலிருந்து அண்டத்தொகுப்பு முழுவதும் சிவ வடிவமாகவே தோன்றி, மின்ஓட்டமுள்ள செப்புக்கம்பி போன்று எங்கும், எதிலும் சிவம் கலந்த இயக்கப் பொருளாக நிலவுகிறது

தலைவியின் அண்ணன்மார் யாவர்?

மாயையிலிருந்து முதலில் நாதமும் அதனின்று விந்துவும் தோன்றுகின்றன.

விரைவு மிகுந்தது விந்து. அது தாயின் தன்மையில் புள்ளி யாகத் தோன்றி வட்டமாக விரிந்து வெளிப்படுகிறது. தன்னு டைய மிகுந்த விரைவு காரணமாக, நாதத்திற்கு முன்னதாகவே அது நமக்குப் புலனாகிறது.

'வேகங் கெடுத்தாண்ட வேந்தனைத் தலைவனாகக் கொண் டது நாதம். கொடி தழுவிப் படர்வதற்குத் துணையான கொழு கொம்பினைப் போன்ற அஃது, அவ்விந்து வட்டத்தையும் தாங்கி நிற்கும் நேர்கோடாக, விந்துவிற்குப் பின்னர் நமக்குப் புலனா கிறது. இவ்வாறு வட்டமும் நேர்கோடும் இணைந்த 'உ' என் பதை, அம்மையப்பரின் மூத்த பிள்ளை வடிவாக முதற்கண் சிந்திப்பதும், அண்டபேரண்டம் முழுவதும் நீக்கமற நிறைந் திருக்கும் சிவபரம்பொருளைச் சிவமயமாகச் சிந்திப்பதும் அக் காரணம் பற்றியே, எதையும் தொடங்கும்போது 'உ சிவமயம்' என மனம், மொழி, மெய்களால் சிவபரத்தின் துணையினை நாடுவதும், தமிழினப் பெருமக்களின் உயர்ந்த பண்பாயின.

சைவ ஞான நூல்களிலும், சாத்திர தோத்திர நூல்களிலும் அவ்வுண்மைகள் பெரிதும் பரவலாகப் போற்றப் பெறுகின்றன.

முருகப் பெருமானின் திரு அவதாரத்தை முன்னர்க் கண் டோம் சிவசத்தியும் சிவபெருமானும் உயிர்களுக்கு நற்றாயும், தந்தையும் எனவும் கண்டோம். எனவே அம்மையப்பர் அருளிய ஞானக் குழந்தைகளாகிய விநாயகரும் முருகனும் நமக்கு அண்ணன்மார் என்பதைக் கூறவும் வேண்டுமோ?

உயிர்களின் அறிவு விளக்கத்துக்காகவே சிவபெருமானால் தோற்றுவிக்கப்பெற்ற ஞான வடிவினரே அவர்கள். எனவே அவர்களுக்கு ஆன்மாக்களின் அறிவு நிலையையோ, படிமுறை வளர்ச்சியையோ, (தலைமைத் தன்மைக்கு உயர்ந்த) பேரின்பக் களவுப் புணர்ச்சியையோ வேறு யாரும் கூறித்தான் தெரிய வேண்டுமென்பதில்லை. அவர்களே நன்கு அறிவர் என்பது குறிப்பு. அவ்வுண்மையை உணர்த்துதற்காகவே தொல்காப்பியரும்

'தந்தையும் தன்னையும் முன்னத்தின் உணர்ப'[1]
என்ற சூத்திரத்தின் மூலம் நமக்கு அறிவுறுத்துகிறார்.

தலைவிக்கு ஒரு தோழி:

'தோழி தானே செவிலி மகளே' என்பது தொல்காப்பியம். மாயை எனும் செவிலித்தாய்க்கு 36-தத்துவக் குழந்தைகள். அவர்களுள் மனம் என்ற தத்துவமே உயிருக்கு அமைந்த ஆருயிர்த் தோழி. இவ்வுண்மையை சற்றே சிந்திப்போம்.

'உயிர்களாகிய நாம் ஊழ்வினைப் பயனை நுகர்ந்து தொலைக்க வேண்டும்! அதே சமயம், கால அடைவிலே அறிவு வளரப்பெற்று, மெய்ப்பொருளை நாடவேண்டும்'— இதுவே இறைவனது விருப்பம்.

சூரனை வதைக்கப் புறப்பட்ட சுப்பிரமணியருக்கு வீரவாகு முதலிய நவவீரரையும் நல்லபல சிவகணங்களையும் தோழராகச் சிவபெருமான் அருளினார். அதேபோல், நமது வினைவழி விளையாட்டில் - மும்மலங்களுக்கு எதிரான போராட்டத்தில் நாம் வெற்றிபெற்று உயர்வதற்காக, மாயையிலிருந்து 36-தத்துவங்களையும், 60-தத்துவார்த்தங்களையும், நமக்குத் தோழியராகத் தந்தாள் சிவசத்தி

நாதம் முதலிய ஐந்து மேநிலைத் தத்துவங்களும் சுத்த மாயையினாலானவை. அவை, சிவபெருமான் நமக்காக ஐந்தொழில் இயற்றும் இடம், ஆதலால் 'சிவதத்துவங்கள்' எனப்பட்டன. அவை ஆன்ம உய்திக்குத் தெய்வீகத் துணையாக

1. தொல் களவு 135

இருக்கக் காலம் முதல் நிலம் வரையிலான 31-அசுத்தமாயா தத்துவங்களும், உயிருக்கு 'உடனுறை தோழியர்' ஆயினர்.

அவர்களிலும் மனம், புத்தி, அகங்காரம், சித்தம் என்ற நான்கும், முருகனது நவவீரரைப்போன்று, உயிருக்கு அந்தரங்கத் தோழியராவர். அந்த நால்வரிலும் மனம் என்ற உட்கருவியே, முருகனுக்கு வீரபாகு போல, உயிர்களாகிய நமக்கு ஆருயிர்த் தோழியாயிற்று.

தோழியின் ஆற்றல்: முருகன் பரம்பொருள். ஆதலால் முருகனுக்கு உட்பட்டவர் வீரபாகு. இங்கு மனம் என்பது, பேரறிவுப் பரம்பொருளாகிய சிவபெருமானால், சிற்றறிவு உயிர்களாகிய நமக்கு அறிவு விளக்கம் பெருகுதற்பொருட்டு அமைத்தருளப் பெற்றது. எனவே, மனம் என்னும் தோழி நம்மையே வழிநடத்துகிற ஓர் உயர்நிலையில் இருக்கிறது.

மனத்தை நமக்கு அமைந்த ஆறுவது அறிவுக் கருவி எனப் புகழ்ந்து கூறுவர். அஃது இறைவனது ஆணைவழி மட்டுமே தொழிற்படுவது. அதனை நம் விருப்பப்படி தொழிற் படுத்துகிற ஆற்றல் நமக்கு எள்ளளவும் இல்லை.

மனம், அறிவுள்ள பொருளா? எனில், அன்று. மனம் ஒரு சடப்பொருள். ஆயினும், அறிவுப் பொருளாகிய நாம் அறிவு இல்லாத மனம் நடத்திச் செல்லுகிற வழியிலேயே செல்லுகிறோம். இவ்வுண்மை சைவ அருளாளர் பலராலும் பெரிதும் விதந்தோதப் படுகிறது.

> "இந்திரியம் எனைப்பற்றி நின்றே என் வசத்தே
> இசையாதே தன்வசத்தே எனைசார்ப்பது, இவற்றைத்
> தந்தவன் ஆணைவழி நின்றிடலால்."[1]

எனச் சிவஞான சித்தியார் எனும் சைவ ஞானநூல், மனம் உள்ளிட்ட புலன்களின் ஆளுமை பற்றிக் கூறி, அவற்றை நாம் வெற்றி கொள்ள வேண்டுமானால், அவற்றை இயக்குகிற

---

1. சிவஞான சித்தியார் - 306

பரசிவத்தின் திருவடியினையே பற்றி நிற்கவேண்டும் என அறிவுறுத்துகிறது.

உயிர் என்னும் தலைவியை, ஊழ் என்னும் இருள்வினை வழியும், பேரின்பம் என்னும் அருள் நிலை வழியும் ஆற்றுப் படுத்துவது மனம். தலைவிக்கு விளைகிற இடுக்கண்களைப் போக்கி, அவளைக் காக்க வேண்டியது தோழியின் கடமை யன்றோ? ஆதலால் தலைமகளை வழிநடத்துகிற தோழியின் உரிமை பற்றிப் பேசக் காணுகிறோம்:

''உறுகண் ஓம்பல் தன்னியல்பு ஆகலின்
உரியது ஆகும் தோழிகண் உரனே''[1]

அமைச்சும் அரசும்:

மனம், உயிர் இவற்றின் உறவைத் தோழி-தலைவியரிடையே நிலவும் அந்தரங்க நட்புறவை ஒத்ததாக இலக்கியங்கள் சிறப் பித்துக் கூறிச் செல்லச், சைவசாத்தி ரங்களோ, அமைச்சனுக்கும் அரசனுக்கும் உள்ள உறவைப் போன்றது என உவமித்துக் கூறும்

''அமைச்சு அரசு ஏய்ப்ப, நின்று அஞ்சு அவத்தைத்தே'' என்பது மெய்கண்டார் வாக்கு.[2]

தோழியிற் கூட்டம்: உயிர்களாகிய நாம், படிமுறையில் பருவ வளர்ச்சி உறுகிறோம்; சிறிதுசிறிதாக அறிவு வளரப்பெற்று ஞானத் தெளிவுற்று, காமம் சான்ற தலைவி நிலைக்கு முன்னேறு கிறோம். அப்போது, சிவபெருமான் தலைவியாகிய நம்மை நம் தலையிடத்துப்புணர்ந்து (தலை + இடம் + படுதல் = இடந் தலைப்பாடு) இன்புறுத்தத் திருவுளம் கொள்ளுகிறார். அப் போது உயிரில் ஆருயிர்த் தோழியாக மனத்தையே நெறிப் படுத்தித், தலைவியைக் கூடுதலையே, 'தோழியிற் கூட்டம்' எனத் தொல்காப்பியம் கூறும்.

தலைவிக்கு இவ்வாறு நற்றாய், தந்தை, செவிலி, போன்ற பல உறவுகளைக் குறிப்பிட்ட தொல்காப்பியர், தலைவனுக்கு

1. தொல்காப்பியம், பொருள் - 235
2. சிவஞான போதம் சூத் - 4

அவற்றைக்குறிப்பிடவில்லை. அதன் மூலம் அவன் பிறவா யாக்கைப் பெரியோன் என்ற உண்மையை நிலை நிறுத்தினார் எனலாம். மேலும் இத்தகைய உறவுமுறை அமைப்பானது, 'தொல்காப்பியம் ஒரு சிறந்த சைவ இலக்கிய நூல்' என்று உறுதிப்படுத்துகிற சான்றுகள் பலவற்றுள்ளும் தலையாயது எனலாம்.

தொல்காப்பியத் தோழி, தலைவி ஆவதே இல்லையா?

நடைமுறை உலக வாழ்விலும், நாடகம் திரைப்படங்களிலும் தலைவிக்குத் திருமணம் ஆகுங்கால், தோழிக்கும் திருமணம் ஆவதைக் காணுகிறோம். ஆனால் தொல்காப்பியர் கூறும் தோழிக்கோ திருமணம் ஆவதாக யாண்டும் குறிப்பு இல்லை. இஃது என்ன விந்தை! இயல்புக்கு மாறாக உள்ளதே? எனில் கூறுதும்.

தோழி என்பவள் யார்? என்பதை மீண்டும் நினைவு கூர் வோம். மனம் என்ற உட்கருவியே, உயிர்களுக்கு ஆருயிர்த் தோழி. 31-அசுத்த மாயா தத்துவங்களுள் மனமும் ஒன்று என முன்னர்க் கண்டோ மன்றோ?

மாயை என்பது ஒரு சடப்பொருள். அதனின்று தோன்று கிற உடல், உட்கருவி, உலகம், நுகர்ச்சி அனைத்தும் சடமே. ஆதலின் உட்கருவிகளுள் ஒன்றான மனமும் சடம் என்பதும், நிலையற்றது என்பதும், தோன்றிய இடத்துக்கே சென்று ஒடுங்கு வது என்பதும் சித்தாந்தம். மனம் மாயையுள் ஒடுங்கும் என்பது கருத்து.

முற்றறிவினனாகிய சிவபெருமானுக்கும் நிறை அறிவு பெற்ற சீவன் முத்தான்மாவுக்குமே தலைமைப்புணர்ச்சி உண்டு. ஏனைய சிற்றறிவு உயிர்களுக்கும், மனம் முதலிய அறிவற்ற சடப்பொருள் களுக்கும் தலைமைப் பண்பு இல்லை என்பதே வெளிப்படையான சைவ சித்தாந்தக் கருத்து. இவ்வுண்மையே தொல்காப்பியரால் பெரிதும் குறிப்பால் உணர்த்தப்படுகிறது.

மனத்தின் கடமை: உயிர்களாகிய நமக்கு ஊழ்வினைப் பயனை நுகர்வதிலும் மெய்ப்பொருளை நாடுவதிலும் உறுதுணை யாதற் பொருட்டே, மனம் என்ற உட்கருவி மாயையிலிருந்து தோற்றுவிக்கப் பெற்றது.

மனத்தின் நிலை: உயிர் உலக முகப்பட்டுத் திரியும் போது கிளைக்குக் கிளை வரம்பின்றித் தாவித்திரிகிற ஒரு குரங் கினைப் போன்று மனமும் நிலையற்று அலையும்.

உயிர் அருள்வழியில் தலைப்படும்போது, மனத்தின் அலைவு கள் குறைந்து, ஒரு கெடிகாரத்தின் பெண்டுலத்தைப் போல ஒரே சீராக அமையும்.

உயிர் சிவஞானம் தலைப்பட்டுச் சீவன் முத்த நிலையில் திளைக்கும்போது, மனம் குவிந்து, அசைவற்று, ஒரே நிலையில் நிற்கும்.

உயிர் பரமுத்தியாகிய திருவடி இன்பத்திலே நிலைபெறும் போது, உடலும், உலகமும், மனமும் பிறகருவிகளும் பொரு ளற்றன வாகின்றன. அவை தம் தாயாகிய மாயையினுள் ஒடுங்கி விடுகின்றன.

இவ்வாறு உயிராகிய தலைவி, இறைவனாகிய தலைவனைக் கூடுகிற வரை மனத்திற்கு ஓர் உயர்ந்த கடமை உண்டு. குறித்த அக்கடமை முடிந்ததும், மனத்திற்கு வேறு வேலை இல்லை. ஆதலால், தானும் பிறதத்துவங்களைப்போல், மாயை என்னும் தோற்றுவாய்க்குள்ளேயே ஒடுங்கிவிடும்.

எனவே தொல்காப்பியத் தோழி தலைவி ஆவதே இல்லை என்பதாகிறது.

தலைமக்களது பெயர்:

புணர்ச்சி இன்பமும் அது தொடர்பான பிரிவு, இருத்தல், இரங்கல், ஊடல் ஆகியனவும் ஐந்திணை அக ஒழுக்கங் களாம். இவ்வாறு அக ஒழுக்க நெறிகளில் தலைப்படுகிற

தலைவனுக்கும் தலைவிக்கும் சுட்டுப்பெயர் கூறுவதில்லை; அது மரபு அன்று எனச் சூத்திரம் வகுத்துள்ளார், தொல்காப்பியர்.

''மக்கள் நுதலிய அகன் ஐந்திணையும்
சுட்டி ஒருவர் பெயர் கொளப்பெறார்''

என்பது அந்த நூற்பா, அதற்கான காரணங்களை ஈண்டுச் சிந்திப்போம்:

அந்தமில் சிறப்பினாகிய இன்பத்தைப் பற்றிப் பேசும் பேரின்பநூல் தொல்காப்பியம்.

இங்கு அகத்துறைத் தலைவனாகக் கருதப் பெறுபவர் சிவபெருமான் என்றும் அவரே பேரின்பத்தின் நிலைக்களன் என்றும், பேரின்பத்தை அவர்பால் நுகர்கிற தலைவியராகக் கருதப் பெறுவோர் நம்முள் சிவஞானத் தெளிவு பெற்ற சீவன் முத்தான்மாக்கள் எனவும் கண்டோம்.

இந்த அடிப்படையில் தொல்காப்பியம் கூறுகிற நூற்பாவின் உட்கிடையை மேலே நோக்குவோம்:

தலைவனோ எங்கும் நிறைந்த பரம்பொருள். ''ஏது அவன் ஊர்? ஏது அவன் பெயர்? ஆர் உற்றார்? ஆர் அயலார்?''[1] என இறைவனது சுட்டி அறிய முடியாத் தனிச் சிறப்பினை விதந்தோதுவார், திருவாதவூர் அடிகள். அவரே,

''ஒரு நாமம் ஓர் உருவம் ஒன்றும் இல்லார்க்கு ஆயிரம்
திருநாமம் பாடி, நாம் தெள்ளேனம் கொட்டாமோ''[2]

எனப்பாடிப் பரவுகிறார்.

''பேர் ஆயிரம் பரவி வானோர் ஏத்தும் பெம்மான்''[3] என அப்பர் பெருமானும் சிவபெருமானது எண்ணற்ற திருநாமங்கள் பற்றிப் பண்ணிசைக்கிறார்.

---

1. தொல். அகத் - 57
2. திருவாசகம் 8:11:1 மணிவாசகம்
3. திருத்தாண்டகம்-புண்ணிருக்கு வேளூர்

"குறியும், குணமும் ஒரு கோலமும் அற்று
எங்கும், செறியும் பரசிவமாய்..."[1]

என்று இறைவனது கடந்த நிலையிலுள்ள பொதுப் பெயரைக் குறிப்பிடுவார், குமர குருபரர்.

கடந்த சொரூப நிலையில் தனக்கென ஒரு நாமமும் இல்லாத இறைவன், ஆன்மாக்களாகிய நம் உய்தி கருதித் தொழில்படுகிற தடத்த நிலையில், பல திருநாமங்களுடன் பல திருத்தலங்களிலும் கோயில் கொண்டுள்ளார்.

ஒன்றேயாகிய பரம்பொருளுக்குக் காசியில் விசுவநாதர் காஞ்சியில் ஏகாம்பரேசுவரர், ஆலவாயில் சொக்கலிங்கம் அண்ணாமலையில் அருணாசலேசுவர். என்றவாறு, திருத்தலங்கள் தோறும் வேறு வேறு திரு நாமங்கள் உள்ளன.

உலகியல் உவமை கொண்டு சிந்தித்தால் இக்கருத்து மேலும் தெளிவாகும்'

பருவம் எய்திய ஒரு பெண் இருக்கிறுள்; உலகிலே கோடிக் கணக்கான ஆண்கள் இருக்கிறுர்கள். ஆண்கள் அவ்வாறு பலராக இருந்தாலும், ஒரு பெண்ணுக்கு ஒரே ஒருவன் தானே கணவனாக அமைகிறான்? மற்ற ஆண்களெல்லாம் தந்தை அண்ணன் முதலிய வேறு வேறு முறையில்தானே உறவு ஆகின்றனர்?

அதேபோல அக ஐந்திணைக்கு நிலை உயர்ந்த ஆன்மா ஒன்று, இன்ப வாழ்வுக்காகக் காத்திருக்கிறது. தலைவனாகிய பரசிவமோ எங்கும் நிறைந்தவன்; என்றாலும், ஏதோ ஒரு திருத்தலத்திலுள்ள திருமூர்த்தத்தின் மூலமாகத்தான் அவ்வுயிரை ஆட்கொள்ளுகிறான். பரசிவத்தின் அந்த மூர்த்தமே அந்த உயிருக்கு ஆன்ம நாயகன் ஆகிறது.

இவ்வாறு, ஆன்மாக்கள் கோடானு கோடியாக உள்ளன; திருத்தலங்களும், திருக்கோயில் திரு உருவங்களும் ஏராளமாக

1. கந்தர் கலிவெண்பா

உள்ளன. ஒவ்வோர் ஆன்மாவும் வெவ்வேறு மூர்த்தத்தால் ஆட்கொள்ளப் பெறுகிறது ஆயினும், இலக்கணம் என்பது எல்லோருக்கும் பொது. தனக்கெனத் தனிப் பெயரில்லாத வரும், சுட்டி அறியப்படாதவருமாகிய பரசிவம் ஒருவரே, எல்லா ஆன்மாக்களுக்கும் ஒரே தலைவர்.

எனவே தலங்கள் தோறும் வேறு வேறாகச் சுட்டி அறியப் படுகிற அவரது சிறப்புப் பெயரை அகத்திணையில் சுட்டிக் கூறுவது, இலக்கணத்திற்கு எல்லை வரம்பிட்டதாகி வழுவிலே முடியும். எனவே, தலைவனது பொதுப் பெயரே குறித்தல் என்பது பண்டுதொட்ட சைவத்தமிழ் மரபு.

கணவன் பெயரும் காரிகை மரபும்: மேலும் பண்டைத் தமிழகத்தில் (அண்மைக்காலம் வரையில்) கற்புடைய பெண்கள் தத்தம் கணவன் பெயரைக் கூறுவதில்லை என்ற உயர்ந்த மரபு நிலவியது என்பது இதனால் பெறப்படும்,

'ஊரைச் சொன்னாலும் பேரைச் சொல்லாதே' என்பது உலக வழக்கு. இது தொடர்பாகச் சிற்றிலக்கியம் ஒன்றில் காணப்பெறும் சுவைமிகு நிகழ்ச்சி ஒன்றைச் சான்றாக இவண் நோக்குவோம்:

திருக்குற்றாலக் குறவஞ்சி என்பது ஒரு சிற்றிலக்கிய நூல். அதில் சிங்கி என்ற ஒரு குறத்தி, வசந்தவல்லி என்ற ஒரு தலை மகளுக்குக் குறி சொல்லுவதாக ஒரு பாடல். தன்னுடைய சிந்தையைக் கொள்ளை கொண்ட தலைவன் யார்? என வசந்தவல்லி வினவுகிறாள்.

''தாரும் சொல்லிப் பேரும் சொல்லி ஊரும் சொல்லடி' என்பது வசந்தவல்லியின் வேட்கை மிகு வேண்டுதல்.

'ஊரும் பேரும் சொல்லுவதும் குறிமுகமோ?' என எதிர் வினா எழுப்பிக் குறத்தி விடையிறுக்கும் பாங்கு, தமிழ்ப் பண்பாட்டைச் சிறப்பிப்பதாக உள்ளது.

''பெண்ணரசே பெண் என்றால் திருவும் ஒக்கும்
ஒரு பெண்ணுடனே சேரல் என்றால் கூடவும் ஒக்கும்

நிண்ணமாக வல்லவனும் நாதனும் ஒக்கும்
பேரைத் திரிகூடநாதன் என்று செப்பலாம் அம்மே''

இவ்வாறே மூர்த்தி பெயருக்குப் பதிலாகத் திருத்தலப் பெயரை அடையாக்கிப் பாடியுள்ளனர், அருளாளர்கள், தாயுமான ஈசரைத் திருச்சிராப்பள்ளிக் குன்றுடையான் என்றும், வைத்திய நாதரைப் புள்ளிருக்கு வேளூரான் என்றும், சொக்கலிங்கத்தை ஆலவாய் அண்ணல் என்றும், திருக்குற்றால நாதரைத் திரிகூடநாதர் என்றும் தேவார ஆசிரியர்களும் போற்றியுள்ளனர்.

தலைமக்களது ஊரை இவ்வாறு சொல்லுதலுங் கூடப் புறத்தில் பாடாண்திணையில் கொள்ளத்தக்க கடவுள் வாழ்த்தின் ஒரு பகுதியாகும் என இலக்கணம் கூறுகிறார், தொல்காப்பியர்.

''புறத்திணை மருங்கின் பொருந்தின் அல்லது
அகத்திணை மருங்கின் அளவு.........''1

என்பது அந்த நூற்பா. எனவே தலைமகனுக்கு அக ஒழுக்கத்தில் பெயர் சுட்டிக் கூறுவது இல்லை என்ற மரபு, பண்டு தொட்டே தமிழகத்தில் நிலவியமை காணுகிறோம்.

இனி, 'மக்கள் நுதலிய' என்ற சூத்திரத் தொடருக்குப் பொருளைச் சிந்திந்து, அதன் பின்னர், தலைமகளை ஏன் பெயர் சுட்டிக் கூறுவதில்லை? என்பது பற்றிச் சிந்திப்போம்.

மக்கள் நுதலிய அகன் ஐந்திணை:

உயிர்கள் என்பன ஓரறிவு உயிர்களாகிய புல்-பூண்டிலிருந்து, ஆறறிவால் உயர்ந்த மனிதன் உள்ளிட்ட தேவர் நரகர் வரை உள்ள அனைத்து உயிர்களையும் குறிக்கும். உயிர்கள் அனைத்தும் பெண் பாலரே, சிவபெருமான் ஒருவரே ஆண் என்பது சைவசித்தாந்தம்.

சிற்றறிவு உயிர்கள்: ஐந்தறிவுள்ள மிருகங்கள் வரையிலான உயிர்களுக்கு இறைவனை உணர்கிற மன ஆற்றல் இல்லை. எனவே, அவற்றிற்குச் சிவபெருமானது திருவடி இன்பத்தில் நிலைபெற்றிருக்கக் கூடிய தலைமைப் பேறு கிடையாது.

1. தொல். அகத்திணை

சில திருத்தலங்களில் யானை, எறும்பு, குரங்கு, சிலந்தி, எலி முதலிய சிற்றறிவுயிர்களும் சிவபெருமானை வழிபட்டுப் பேறு பெற்றிருக்கின்றன என்று புராணங்கள் கூறுகின்றனவே எனில், அவ்வாறு அவை பெற்ற பேறு, அடிமை, மகன்மை, தோழமை என்பாற்பட்ட பத முத்தியேயன்றித், தலைமைப் பண்புக்கு உரிய பரமுத்தி அன்று எனக் கொள்ளுதல் வேண்டும்.

பெண்பால் உயிர்கள்: நாம் வாழுகிற இப்போக பூமி மட்டுமே சிவ வழிபாடு செய்வதற்கும் பேரின்பம் துய்ப்பதற்கும் சிறந்த இடம். எனவே, தேவர், நரகர் முதலியோருக்கும் இத்தகு பேரின்பத்தை நுகருகிற தலைமைப் பேறு கிடைத்திலது. இதனைத் திருப்பள்ளி எழுச்சியின் பத்தாவது பாடலிலிருந்தும் அறியலாம்:

''புவனியில் போய்ப்பிற வாமையில் நாள் நாம்
போக்குகின்றோம் அவமே இந்த பூமி
சிவன் உய்யக் கொள்கின்ற வாறென்று நோக்கித்
திருப்பெருந் துறையுறை வாய்திரு மாலாம்
அவன்விருப் பெய்தவும் மலரவன் ஆசைப்
படவும் நின் அலர்ந்த மெய்க் கருணையும் நீயும்
அவனியில் புகுந்தெமை ஆட்கொள வல்லாய்
ஆரமுதே பள்ளி எழுந்தரு ளாயே!''[1]

இவற்றிலிருந்து நாம் அறியத்தக்கவாகிய உண்மைகள் ஆவன: பலதர உயிர்களுள்ளும் மனிதர்களுக்கு மட்டுமே தலைமைப் பண்பு உண்டு, மிருகங்கள், பறவைகள் முதலிய சிற்றறிவு உயிர்களுக்கும் பிரமவிட்டுணு முதலிய தேவர்களுக்கும் தலைவி யாகும் தகுதி இல்லை.

இந்த நிலஉலகம் மட்டுமே போகபூமி, வைகுண்டம் சத்திய லோகம் முதலிய மற்ற மற்ற உலகங்களில், சிவபோகம் கூடுவது இல்லை; எனவே, தொல்காப்பியரும் இந்நில உலகிலேயே சிவன் முத்தநிலைக்கு உயருகிற பேறுடைய மக்களைச் சிறப்பிக்கும் வகையில், 'மக்கள் நுதலிய அகன் ஐந்திணை' எனத் தமது

1. திருவாசகம் 8 : 20 : 10, மணிவாசகர்

நூற்பாவை அமைத்துத் தலைமைப்பேறு பெறுவதிலே மக்க ளுக்குச் சிறப்பிடம் தந்தார்.

அடுத்துத், தலைமகளுக்கும் ஏன் பெயர் சுட்டுதல் மரபு இல்லை என்பது பற்றிக் காண்போம்.

தலைமகள் பெயர்: மக்களுக்கு உலகியல் வாழ்விலே பெபர் உண்டு. அப்பெயர் உடம்புக்கா? உயிருக்கா? எனச் சிந்திப்போம். பெயர் உடம்புக்குத்தான் எனில், உயிர் நீங்கிய பிறகும் நீண்டு கிடக்கும் உடம்பு அதே பெயர் கொண்டு அழைக்கப் பெறுதல் வேண்டுமன்றோ? பெயர் உயிருக்குத்தான் என்னில், உயிரோ நிலையானது, சிற்றறிவால் மயங்குகிறது. அறிவின் வளர்ச்சிக்கு ஏற்ப ஓரறிவுப் புல் பூண்டு முதல் ஆறறிவு மனிதர், தேவர் வரை எண்ணற்ற பிறவிகளில் பிறந்து எய்த்தது. அத்தகு உயிர்களும் எண்ணிறந்தனவாகக் கோடானு கோடியாக உள்ளன. அவை தத்தம் அறிவுக்கு ஏற்பப் பல நூறாயிரம் பிறவிகளில் பிறந்து, இம்மனிதப் பிறவியினை எய்துகின்றன.

இம் மனிதப் பிறவியிலும், மனித உடம்புடன் ஊழ்வினைக்கு ஏற்பப் பல நூறு பிறப்புகள் பிறக்கின்றன.

''புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுரராகி, முனிவராய்த் தேவராய்ச்
செல்லா அநின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யே! உன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்''

என்பது மணிவாசகர் வாக்கு. இவ்வாறு ஏராளமான பிறப்பு களிலும் பிறக்கின்ற உயிருக்கு, எல்லாப் பிறப்புகளிலும் ஒரே பெயர் நிலவி வந்திருக்க வேண்டுமன்றோ? அவ்வாறு இன்மையின் உடம்போடு கூடிய உயிருக்கே — உயிர்மெய்க்கூட்டத்துக்கே ஓர் இடைக்கால உலகியல் பெயர் சூட்டப்பெற்று நிலவுகிறது.

1. சிவபுராணம் 26-32

அஃது ஒவ்வொரு மானுடப் பிறப்பிலும் மாற்றம் பெறுகிறது. நிலையற்ற வெவ்வேறு சார்புப் பெயர்களால் உயிர் அவ்வப்போது அழைக்கப்படுகிறது. வாழ்வின் பல நிலைகளையும் கடந்து, இறுதியில் உயிர் பேரின்பம் துய்ப்பதற்கான சிவஞானத் தெளிவு பெறுகிறது.

அப்போது அவ்வுயிர் பரமனால் ஈர்த்துக் கொள்ளப்படுகிறது தனக்கு அது காறும் வழங்கிய தன் நாமம் கெடுகிறது. ஆதலால் சீவன் முத்தான்மாவுக்குப் பெயர் என்பது இல்லை. இதனை அப்பர் அடிகள் திருவாக்காலும் அறியலாம்.

''முன்னர் அவனுடைய நாமம் கேட்டாள்
மூர்த்தி அவனிருக்கும் வண்ணம் கேட்டாள்
பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்
பேர்த்தும் அவனுக்கே பிச்சி ஆனாள்
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தார் ஆச்சாரத்தைத்
தன்னை மறந்தாள் தன் நாமம் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே''[1]

ஆகவே, ஒரு நாமமும் இல்லாத பேராயிரத்தானாகிய தலைவனுக்கும், ஒவ்வொரு பிறப்பிலும் வெவ்வேறு பெயர் கொண்டு பேராயிரத்தோடு உலவி, இறுதியில் ஒரு நாமமும் இல்லாத சீவன் முத்தான்மாவாகிய தலைவிக்கும் நிகழ்கின்ற பேரின்ப அக உறவில் தலைமக்களது பெயர் சுட்டிக் கூறப்பெறுவது மரபு அன்று எனத் தொல்காப்பியர் இலக்கணம் வகுத்தனர் என்பது சாலும்.

அடிமைக்கு ஏன் இன்பம் இல்லை?

''உயிர்கள் எண்ணற்றன. அவை அனைத்துக்குமே, இன்பம் என்பது ஒரு பொதுவான உரிமை ஆகும்''

இக்கருத்துச் சங்க காலத்திற்கும் முன்பிருந்தே நம் தமிழ்ச் சான்றோர்களால் பெரிதும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. இதனைத் தொல்காப்பியர்,

1. திருநாவுக்கரசர் தேவாரம் 6:25:7

''எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது
தான்அமர்ந்து வருஉம் மேவற்று ஆகும்''

என்ற ஒரு நூற்பா மூலம் நமக்கு அறிவுறுத்துகிறார்.

பொதுவகையால் இவ்வாறு எல்லாருக்கும் இன்ப உரிமை பற்றிப் பேசிய தொல்காப்பியர், அவ் இன்பத்துக்கு உரிமை யற்றோர், யார்யார், என்பதையும் செவ்விதே வகைப்படுத்திச் சுட்டிக் காட்டுகிறார்.

அகஒழுக்கத்துக்கு முதற்பொருளாக அமைவது, நிறைவான காமம். தலைவன்-தலைவி இருபாலர்க்கும் உள்ள ஒத்த காமமே நிறைவான காமம் எனப்படும்.

ஒருவர்க்குக் காமம் இருந்து, மற்றொருவர்க்கு இல்லை எனில், அஃது ஒருபுடைக் காமம் என்றும் கைக்கிளை என்றும், குறைக்காமம் என்றும் பெயர் பெறும்.

தலைமக்களுள் ஒருவர்க்கோ, இருவர்க்குமோ காமம் மிகுதியாக இருந்தால், அது பெருந்திணை என்றும் மிகைக் காமம் என்றும் பெயர் பெறும்.

இவ்வாறு குறைக்காமமும் மிகைக்காமமும் உடையோர், நிறைவான காமமாகிய ஐந்திணை அகஒழுக்கத்துக்கு ஏற்றவர் அல்லர் என்பது சான்றோர் அனுபவ வழி உணர்ந்து கூறிய உண்மை. 'அவர்களைப் புறத்திணையில் சேர்ப்பதே பொருந்தும்' என்பது தொல்காப்பியரது கருத்துமாகும். 'அவர்கள் அகஒழுக்க இன்பத்துக்கு உரிமை உடையோர் அல்லர்' என்ற இக்கருத்திலே நமக்கும் ஐயம் இல்லை.

ஆனால், ஏவலர், வினைவலர், அடிமைகள் முதலிய வேறு சிலரும், அகத்திணையின் இன்ப எல்லைக்கு அப்பால் தள்ளப் படுகின்றனரே அஃது ஏன்? என்பதே இப்பொழுதைய சிந்தனை.

அதுபற்றிய நூற்பாக்களையும், தொல்காப்பியரது உட்கருத் தையும், இனி, நோக்குவோம்.

1. தொல், பொருள் - 219

"அடியோர் பாங்கினும் வினைவலர் பாங்கினும்
கடிவரை இல,புறத்(து) என்மனார், புலவர்"[1]
"ஏவல் மரபின் ஏனோரும் உரியர்
ஆகிய நிலைமை அவரும் அன்னர்"[2]

என்பன, தொல்காப்பியரது நூற்பாக்கள்.

இவற்றின் மூலம் அடியோர், வினைவலர், ஏவல் மரபினர் ஆகியோர்க்கு ஐந்திணை இன்பம் (புணர்ச்சி இன்பம் முதலியன) மறுக்கப் பட்டிருத்தல் காணுகிறோம்,

இது சமூக நீதியாகுமா?

இன்ப ஒழுக்கம் இல்லை எனில், இனப்பெருக்கமும் இல்லை என்பது தெளிவு. எனவே இன்ப உரிமை மறுக்கப்படின், அஃது இயற்கையின் சீரான அமைப்பு நெறிகளுக்கே மாறானதாகி, முரண்படும் சமூகத்தில் ஒரு சிலருக்கு மட்டும் இன்பம் மறுக்கப் படுகிறது என்றால். அது சமூக நீதியும் ஆகாது.

எனவே தொல்காப்பிய அகத்திணைக் கருத்துக்கள், மானுடத் தலைவன் - தலைவியரது மெய்யுறு புணர்ச்சி பற்றியன அல்ல என்பது தெளிவாகி,

அவை, பலகாலும் இந்நூலில் கூறியுள்ளவாறு, சிவபெருமான் என்ற தலைவன், உயிர்களாகிய நம்மை ஆட்கொண்டு, தலைவியாக்கிப் பேரின்பத்தில் செலுத்துகிற இறைமை இன்பம் பற்றியனவே என்பதும் உறுதியாகிறது.

ஆகவே, அடிமை என்பார் யார்? யாருக்கு அடிமை? அடிமைத் தன்மையின் ஆழம் எவ்வளவு? என்பன இப்பொழுது சிந்தனைக்கு உரியவாகின்றன.

இங்கு அடிமை என்றது உயிர்களாகிய நம்மையே. 'யாருக்கு அடிமை?' எனில், முதற்கண், நாம் நமது உடன் பிறப்பான

1. தொல், அகத்திணை - 25
2. தொல் அகத்திணை - 26.

கொடிய ஆணவ மலத்திற்கு அநாதிக் காலந்தொட்டே அடிமை யாக உள்ளோம்.

அடுத்து, அவ்ஆணவத்தோடு கூடிய தன்முனைப்பு முயற்சி காரணமாக, வினை என்னும் கன்ம மலத்துக்கு, நாம் அடிமை யானோம்.

மாயா காரியமாகிய நிலையற்ற இந்த உலகப் பொருள் களுக்கும் இதன் தொடர்பான காம, குரோத, உலோப, மத, மாற்சரியங்கள் எனும் தீயஉணர்ச்சிகளுக்கும் நாம் அடிமை யானோம்,

ஆணவமும் கன்மமும் அநாதி காலந்தொட்டே நம்மைப் பிணித்துள்ள இருநோய்கள். அவையே பிறவிநோய்க்கு வித்தா கின்றன.

'மயக்கும்' மாயை:

பெரிதும் துன்புறுத்துகிற உடல் நோய்க்கு, 'முதல் உதவி போன்ற ஆறுதல் மருந்தாக ஒரு வைத்தியன் கொடுப்பது' மயக்க மருந்து.

அதேபோன்று, ஆணவம், கன்மம் என்ற இரண்டு பெரு நோய்களிலிருந்தும் விடுதலை பெறுவதற்கான ஆறுதல் மருந்தாக, இடைக்கால நிவாரணமாக, இருளில் விளக்காகவே, இந்த உடம்பு, உலகம், கருவிகள், நுகர் பொருள்கள் ஆகியவற்றை வைத்தியநாதராகிய இறைவன் நமக்கு அருளினார்.

நாதம் முதல் நிலம் ஈறாக 36-மாயா தத்துவங்களால் இவை அமைக்கப்பட்டன.

இன்றைய மனித சமுதாயத்தில் நம்மைப் பெரிதும் கவர்ந் திழுக்கின்ற நிலையற்ற செல்வமும், பொருளற்ற நில எல்லை களும், வேகமாகச் சுழலும் காலச் சக்கரமும், சிறுமையில் அழுத்தும் இன்பப் பொருள்களும் மாயையின் கூறுகளே.

இடைப்பட்ட காலத்தில் வந்து, நொடிப்பொழுதே நம்மை மயக்கத்தில் ஆழ்த்தி, இடைப்பட்ட காலத்திலேயே நம்மைப்

பிரிந்து செல்லுகிற இத்தகு இடைக்கால மாயப்பொருள்களுக்கும் நாம் அடிமையானது வேதனைக் குரியதே.

'மாயை மயக்கமும் செய்யும்' என்பது சிவஞானசித்தியார்[1]

''நிலம்நீர், தீவளி, விசும்போ(டு) ஐந்தும்

கலந்த மயக்கம்[3] உலகம்'' என்பது தொல்காப்பியம்[2]

மயக்கமும் தெளிவும் கலந்து விரவி ஊட்டுதல் மாயையின் இயல்பு என்பதையே இரு நூல்களும் உறுதிப்படுத்துகின்றன.

புல்லாகிப் பூடாய் ஓரறிவுப் பொருளில் தொடங்கி நாம் சிறிது சிறிதாக அறிவு வளரப் பெற்றோம். ஐந்தறிவு மிருக நிலையில் முதுகு எலும்புகளும் பெருநாளமும் படுக்கையாகக் கிடந்தன. எனவே, உயிரின் இயக்கமும் படுக்கையாகவே இருந்தது.

அதிலிருந்தும் வளர்ந்து, இப்பொழுது மனம் என்ற ஆறாவது அறிவினால், ஐம்புலன் ஒடுக்கும் மனித நிலைக்கு நாம் உயர்ந்துள்ளோம் நமது முதுகெலும்புத் தொடரும் சுழுமுனையும், மேரு நடு நாடியாக நிமிர்ந்து நிற்கக் காணுகிறோம்.

அதனைத் துணையாகக் கொண்டு, இறையருளால், படி முறையில், மேன்மேலும் அறிவு வளம் பெற்று, இறுதியில் முழுமையான சிவஞானத் தெளிவுற்றுத் தலைவி நிலைக்கு நாம் உயரவேண்டும் என்பதுதான் சிவபெருமானது விருப்பம். தொல் காப்பியரது அறிவுரையும் அதுவே.

''உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்'' என்பார் திருவள்ளுவரும்.

ஆயினும் நாம், சிற்றறிவு மானுடராய், முதுகுத் தண்டின் அடிப்பகுதியிலேயே—பண்டுதொட்ட சிறுமையிலேயே—உழன்று கொண்டிருக்கிறோம்.

---

1. சிவஞான சித்தியார் சூத்திரம் - 143
2. தொல். மரபியல் 635
3. ஐந்தும் கலந்த மயக்கம்; என்பதற்கு, நிலம் முதலிய ஐந்தும் பஞ்சீகரணமாகக் கலந்தது என்றும், மயக்கமும் தெளிவும் விரவிக் கலந்தது என்றும் பொருள் கொள்ளலாம். பண்டு தொட்ட பயிற்சி வயத்தால், உயிர்களாகிய நாம், மதில்மேல் பூனை போல மயங்கியும் தெளிந்தும் மருண்டு நிற்கிறோம். இதனை 'இருதிறன் அறிவுளது இரண்டலா ஆன்மா' எனச் சிவஞானபோதம் கூறுகிறது.

நம்முடைய அறிவு, சிற்றறிவு; வேறு யாரேனும் சுட்டி உணர்த்தினால் நாம் உணரக் கூடியவர்கள். சிவகுரு ஒருவர், நமக்குத் தீக்கை மூலம் உணர்த்துகிறார். அப்போது நாம் பரம் பொருளாகிய சிவத்தை, மனம் மொழி மெய் ஆகிய திரிகரண சுத்தியாலும், உணரத் தொடங்குகிறோம். கால அடைவிலே தலைவனாகிய பரசிவத்தை, அவனருளாலே நாம் தலைவியாக இருந்து துய்த்து இன்புறுகிற சிறந்த வாய்ப்பினையும் பெறு கிறோம்.

பரசிவத்துக்கு நாம் அவ்வாறு ஆட்பட்டாலும், தொடக் கத்திலேயே நாம் தலைவியாவது இல்லை. அடிமை மகன்மை தோழமை எனப் படிமுறையில் வளர்ந்து இறுதியில்தான், பரசிவத்தோடு தலைவியாகக் கூடி, அந்தமில் சிறப்பின் ஆகிய இன்பத்தினை அடைகிறோம்.

யாவற்றினும் சிறந்த இவ் இறைமைக் காமத்தின் படிமுறை வளர்ச்சியை ''முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்'' என்ற அப்பர் பெருமானது தீந்தமிழ்ப் பனுவலில் நன்கு உணர்ந்து இன்புறலாம்.

தலைவி நிலைக்கு நாம் உயர்வதே அகத்திணை. அதற்கு முந்திய நிலைகள் அனைத்தும் ஆணவ கன்மமாயா மலங்களுக்கு அடிமைப்பட்டமையின், புறத்திணை.

தொல்காப்பிய அடியோர் யாவர்? ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்களுக்கும், மண் பொன், காலம் முதலிய சட தத்துவங்களுக்கும் அடிமைப் பட்டோர் யாவரோ, அவரே அடியோராவர். பாசங்களால் கட்டுண்டமையின், நம்மைப் பசுக்கள் என்றே வகைப்படுத்தின, சைவசாத்திரங்களும்.

'தொல்காப்பிய' வல்வினையாளர் யாவர்? ''யாவும் இறைவன் செயல்'' என்று துணிவு கொள்ளுவது மெய்யறிவு. அத்தகைய உணர்வே, நம்மைச் சிவபெருமான் திருவடிக்கு வழிநடத்தும். அவ்வாறின்றித் தன்முனைப்போடு, எல்லாம் தனது ஆற்ற லின் விளைவு' எனத் தருக்குற்று **வலிதே வினை** பல செய்து, அவ்வல்வினையால் புண்ணிய -பாவ, இன்ப -துன்பங்களுள்

பிணிக்கப்பட்டோர் யாவரோ, அவரே வல்வினையாளர் ஆவர். பிறப்பு இறப்புச் சுழற்சியில் அவர்கள் அல்லலுறுவர். மெய்யறிவு இல்லாத அத்தகைய அடியோரும் வல்வினையாளரும் அக ஒழுக்கமாகிய தலைவி நிலைக்கு உயர்ந்து வாராததால், புறத் திணையுள் சேர்க்கப்படுகின்றனர்.

''புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க''
என்பது திருவாசகம்[1]

'தொல்காப்பிய' ஏவல் மரபினர் யாவர்: 'யாவர்க்கும் தலைவன் சிவபெருமான்' என்பதை உணர்வது மெய்யறிவு. அவ்வாறின்றித் தாமே தலைவன் எனத் தருக்குற்றுப் பிறரை ஏவல் கொள்ளுதலையே தமது இயல்பாகக் கொண்டவர்கள் யாவரோ, அவரே ஏவல் மரபினர் ஆவர்.

அவர்கள் அடுத்தடுத்து மற்றவர்களுக்கு ஆணை பிறப்பித்துக் கொண்டிருப்பதிலேயே முழுக்கருத்தாய் இருப்பர்; தாம் இட்ட வேலைகளை அவர்கள் செய்யாத போழ்து, ஆணவத்தோடு அவர்களைத் தண்டித்து ஒறுப்பர்; செய்து முடித்த காலத்திலோ, தமது திறமையின் விளைவு' எனக்கருதி இறுமாந்து, வீண் பெருமையில் மயங்கி நிற்பர்.

''மிகல்மேவல் மெய்ப்பொருள் காணார்; இகல்மேவல்
இன்னா அறிவி னவர்''[2]

என்ற திருவள்ளுவரின் தெய்வீக மொழியையும் ஈண்டு இணைத்து நோக்குதல் பொருந்தும். இதன் கருத்து; தன்வலி காரணமாக முரண்பாட்டினையே (மாறுகோளையே) பெரிதும் விரும்புவோர் தீய அறிவினர்; (அவர்கள் இராசத குணம் மிக்க முரடர்கள்); எனவே தாமும் மேலான நிலையிலே பொருந்தி நில்லார், அம் மேலான நிலைக்கு அனைத்தையும் ஈர்த்துக் கொள்ளுகிற முற்றுணர்வுப் பொருளாகிய மெய்ப்பொருளையும் அறியார்.

ஏவல் மரபினர் ஆணவச் செருக்குடன் ஆளுமை செய்தலானும், மெய்யறிவும், ஒன்றிய சிந்தையும் அவர்களுக்கு இல்லாமையானும், முன்னர்க் கூறிய அடியோர், வினைவலர் ஆகிய இருவரையுமே அவர்கள் ஒப்பர்.

---

1. சிவபுராணம்-8, 2. திருக்குறள்-857

இதுகாறும் கண்ட செய்திகளைத் தொகுத்து நோக்கும் போது, பொய்ப்பொருள்கள் மீதுகொண்ட ஆசை காரணமாக மாயை முதலிய மும்மலங்களுக்கும் அடிமைப்பட்ட உயிர்கள்,

தன் முனைப்போடு வலிதே வினைகள் பல செய்து, பாவ புண்ணியங்களைப் பெருக்கிக் கொள்ளுகிற உயிர்கள்,

'நான்', 'எனது' என்ற ஆணவ உணர்வோடு, பிறரை ஏவல் கொள்ளுவதையே இயல்பாகக் கொண்ட உயிர்கள், ஆகிய மூவகை உயிர்களுக்கும்,

மும்மலக்கட்டின் காரணமாக, இறையருள் பதிதலோ, பேரின்ப அகஒழுக்கம் நிகழ்தலோ இல்லை என்லோ சைவ சித்தாந்தக் கோட்பாடு தெளிவாகும்.

இதனை வலியுறுத்தவே தொல்காப்பியரும், அடிமைகள் வினைவலர், ஏவலர் ஆகிய முத்திறத்தாரையும் புறத்திணைப் படுத்தி, நூல் யாத்தனர் எனலாம்.

எனவே இவ்விரு நூற்பாக்களும் கூறவந்த செய்தியாவது: தொல்காப்பியம், மானுடச் சமுதாய அமைப்பினை ஒட்டிய ஆண் பெண் உறவு பற்றியது அன்று எனவும், ஆண்டவனுக்கும் ஆன்மாக்களுக்கும் உள்ள, தலையாய பேரின்ப உறவு பற்றியது எனவும் அறியலாம்.

மடல் ஏறுதல்

''எத்திணை மருங்கினும் மகடூஉ மடல்மேல்
பொற்புடை நெறிமை இன்மையான''[1]

என்பது தொல்காப்பிய நூற்பா. இதன்கருத்து: கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுதியாகவுள்ள ஏழு வகையான் ஒழுக்கங்களுள், எவ்வகைத்தாயினும், பெண்கள் மடலேறுதல் என்பது,பெருமைக்குரிய முறைமையின்மையின், ஏற்புடையதன்று இந்த நூற்பா மூலம் தொல்காப்பியர் பெண்மையின் உரிமைக்கு ஒரு வரம்பிடுவதுபோல் தோன்றுகிறதே! அது சரியா? என்பது பற்றி இப்பொழுது சிந்திப்போம்.

1. தொல். அகத்-38

உலக அமைப்பு :

'நாதம்' முதல் 'நிலம்' ஈறாக உள்ள முப்பத்தாறும் மாயா தத்துவங்கள். அணு என்பது மிகமிகச் சிறிய பொருள்; அண்ட பேரண்டம் என்பது மிகமிகப் பெரிய பொருள். இவை இரண் டிற்கும் இடைப்பட்ட அனைத்துமே, இந்த 36 மாயா தத்துவங் களாலேயே உருப்பெற்றுள்ளன.

கடவுள் மேநிலை :

சச்சிதானந்தமே[1] வடிவானவர், பரசிவம். அவர், தமது இயல்பான நிலையில், இந்த 36-தத்துவங்களையும் கடந்த மீதானப் பெருவெளியில், எவ்விதச் செயலுமின்றிச் 'சிவமே' எனச் சும்மா இருக்கிறார்.

உயிர்களது அவல நிலை :

நம்போன்ற உயிர்களும், ஆணவத்தையே பற்றுக்கோடாகக் கொண்ட அவலநிலையில், தமக்கென உடலோ, உலகமோ. கருவி கரணங்களோ எதுவுமே இல்லாமல், பேயாய் அலைகின்றன இயற்கையாக நமக்கு உள்ள சிற்றறிவும் அப்பொழுது முடங்கிக் கிடக்கிறது.

கடவுள் விருப்பம் :

உயிர்களாகிய நாம் 'ஆணவ' அவலத்திலிருந்து விடுபட வேண்டும்; இருப்பில் உள்ள வினைகளைக் கழிப்பதற்கு ஏற்ற வாழ்வு வாழவேண்டும்; இறுதியில், பேரின்பத்தில் திளைக்க வேண்டும்;- இது கருணையே வடிவான கடவுளது விருப்பம்.

தொழில் தொடக்கம் :

கடவுளின் இந்த விருப்பம் நிறைவுபெற வேண்டுமானால் அவர் தொழில்பட வேண்டும்; உயிர்களாகிய நாமும் தொழில் படுத்தப் பெறவேண்டும். அத்தகைய தொழில் நிகழ்வதற்கு ஓர் இடம் வேண்டும்.

1. சத்சித் ஆனந்தம் - அந்தமில் சிறப்பின் ஆகிய இன்பம் (தொல்- பொருள்-239)

எனவே சிவபெருமான், மாமாயை என்ற தமது பரிக்கிரக சத்தியிலிருந்து ஒரு தொழிற்படு களத்தைத் தோற்றுவிக்கிறார்.

முற்றறிவுடைய தூயவர், சிவபெருமான்; அவர் ஒருவரே ஆண். சிற்றறிவும் மலக்கட்டும் உடையன, உயிர்கள்; பிரமா விட்டுணு உள்ளிட்ட அனைத்து உயிர்களும் பெண்களே.

சிவன் சீவன் இரண்டுக்கும் இடையில் உள்ள ஏற்றத்தாழ்வோ எண்ணவும் ஒண்ணாதது. எனவே இவ்விரண்டும் தொழில்படு வதற்கு இரண்டு தனித்தனி இடங்கள் தேவையாகின்றன.

அந்த மாமாயையின் தலைப்பகுதியாகிய தூமாயையில் சிவ சத்தியால் கலக்குண்ட பாகம் ஐந்து தத்துவங்களாகவும், அடிப் பகுதியாகிய அசுத்தமாயையில் அனந்த தேவரால் கலக்குண்ட பாகம் 31-தத்துவங்களாகவும் விரிக்கப்படுகின்றன.

தனித்தனித் தொழிலகங்கள்:

தூய பரம்பொருள் தொழிற்படுவதற்குத் தூமாயையின் ஐந்து தத்துவங்கள்[1] இடமாகின்றன.

மாசுடைய உயிர்கள் தொழிற்படுவதற்கு, மாசுடைய மாயை (அசுத்தமாயை) யின் 31-தத்துவங்களும் இடமாகின்றன.[1] காலம் முதல் நிலம் ஈறாக உள்ளவை, இவை. எனவே, நிலம், பொழுது இரண்டும் (இரண்டிற்கு இடைப்பட்டனவும்) முதற் பொருள் என மொழிவார் தொல்காப்பியரும்.[2]

சுத்த மாயை, அசுத்த மாயை என்ற இரண்டும் தொடர் பற்று வெவ்வேறாக நின்றால், உயிருக்கு எவ்விதப் பயனும் இல்லை.

---

1. இடம்: பண்ணைத் தோன்றிய எண்ணான்கு பொருளும் - தொல்- மெய்ப் - 245) சிவபெருமானது விருப்பத்தினையே ஆணையாகக் கொண்ட சிவசத்தி அவரிடமிருந்து இருநாழிநெல் (இரண்டு மாயைகள்) பெற்று 32. அறங்களும் தழைக்குமாறு காஞ்சிப்பதியில் திருக்காமக்கோட்டமாகிய அறச்சாலையை அமைத்தனர் என்பது புராணம்.

2. தொல் - அகத்திணை - 3

எனவே, சுத்தமாயையில் உள்ள சிவபரம் உயிர்களாகிய நம்முடன் தொடர்பு கொள்ளும் வகையிலே, 31-தத்துவங்களாலான அசுத்த மாயையின் முதல் ஏழு தத்துவங்களில், தனது ஒவ்வோர் ஆற்றலைத் தொழிற்படச் செய்கிறார். அணு முதல் அண்ட பேரண்டம் வரையுள்ள அனைத்துப் பொருள்களிலும் இந்த அமைப்புப் பொருந்தும்

அத்தகைய பொருள்களில் நமது மனித உடப்பும் ஒன்று. இதுவும் சுத்தமாயை, அசுத்தமாயை என்ற இரண்டினாலும் அமைந்தது.

நமது உடம்பில், புருவநடு தொடங்கி, முன்தலைப்பகுதியில் சுத்த மாயையினாலான பெருமூளை இருக்கிறது. இதுவே சிவ பெருமானது தொழிலகம். நமது உடம்பின் மற்ற பகுதி அசுத்த மாயையினால் ஆனது; இப்பகுதியே உயிர்களாகிய நமக்குத் தொழிற்படும் இடமாவது.

ஆண்மைப் பொலிவு :

நமது தலையில், இந்த இரண்டு மாயைகளுக்கும் இடையில் அழகியதோர் எல்லையாக அமைந்திருக்கிறது, ஓர் அமுத நாளம். வானத்து மூன்றாப்பிறை வடிவினதாகிய இதனை, மூன்றாம் நாளம் (Third Ventricle) என்றே இன்றைய அறிவியலாரும் அழைப்பர். பிச்சாண்டியாகிய சிவபெருமானது அம்மண ஆண்மைக் கோலத்தின் தோற்றம் உடையது இது.

பெண்மைத் தானம் :

நமது தலையில் புருவநடுவிற்கும் பிடரிக்கும் நடுவில், பெரு மூளைக்குக் கீழே, 'பிட்யூட்டரி' (Pituitary) என்னும் ஓர் உறுப்பு இருக்கிறது. மிகுந்த ஆற்றலுள்ள பிட்யூட்டரி என்னும் அமுத நீரை இது சுரக்கிறது.

தத்துவ அடிப்படையில் நோக்கும்போது, இது சுத்தமாயையினாலான சிவதத்துவங்கள் ஐந்தனுள், ஐந்தாவதாகிய 'சுத்த வித்தை' என்னும் தத்துவமாகும்.

சிவாகம நெறிமுறைகளின்படி ஆன்மார்த்த சிவபூசை, சிவ தியானம் முதலியன செய்கிற மெய்யடியாரது ஆன்மா, இந்த

இடத்தில் அணைந்திருந்தே சிவமூலத்தைச் சிந்திக்கும். இதனை (ஆக்ஞை) ஆணைத்தானம் என்ற ஆறாவது ஆதாரநிலையாகச் சைவ ஞான நூல்கள் இடம் சுட்டும்.

உயிராகிய (மகடூஉ) தலைவிக்குப் பெண்மைத் தானமாகச் செயல்படும் பெருமை உடையது இதுவே. இங்குத்தான் ஆண்டவன் - ஆன்மப் பேரின்பப் புணர்ச்சி நிகழ்கிறது.

இற்றைநாள் அறிவியலாரும் இதனைத் தலைமைச் சுரப்பி (Master Gland) என்றே பெயரிட்டு அழைப்பர்.

மேரு நடு நாடி: விண்ணையும், மண்ணையும் இணைத்து உயர்ந்தோங்கி நிற்பது மேருமலை. அதேபோல், நமது உடலில் சுத்தமாயையாகிய முன்தலைப்பகுதியை அசுத்த மாயையாகிய பிற உடலுறுப்புகளுடன் இணைத்து, நிமிர்ந்து நிற்பது, மைய நரம்பு மண்டலமாகும். இது மூளையும் முதுகுத்தண்டும் அடங்கியசீரார்ந்த பகுதியாகும் இதனைச் 'சிவபூமி' என்றும் மூன்றாம் நாளத்தை 'மேருநடுநாடி'[1] என்றும் திருமூலர் குறிப்பிடுகிறார்

மடல் என்பது ஒரு குறிப்பு மொழி: மடலேறுதல் என்பது ஒரு குறிப்புமொழி. இதற்குக் குதிரை வடிவினதாகிய 'பனக்சுருக்கினை ஊர்தல்' எனப்பொருள் கொள்வர்.

நமது தலையினுள் சுத்தமாயையாகிய மூளைக்கும் அசுத்த மாயையாகிய உடம்புக்கும் எல்லையாக அமைந்திருப்பதும், நடு மூளையிலிருந்து தொடங்கிப் புருவநடு நோக்கி வளைந்து கிடப்பதும், மூன்றாம் பிறை வடிவினை ஒத்ததும், அமுதநீர் நிறைந்ததுமாகிய மூன்றாம் நாளமே (Third Ventricle) பாய்ந்து செல்லும் ஒரு குதிரையின் தோற்றத்துடன் காணப்பெறுகிறது; ஆதலால் அதுவே சங்கத்தமிழ்ச் சான்றோரால், மடல் என்று குறிக்கப்பெறுகிறது. 'புள்ளியல் கலிமா' எனத் தொல்காப்பியர் இதனைப் பிறிதோரிடத்தில் சுட்டிக் கூறுவார்.

ஆன்ம வளர்ச்சி: உயிர்கள் அனைத்தும் பெண்களே எனக் கண்டோம். வினைப்பயன் நுகர்வுக்காக உயிர்களாகிய நாம், இந்த உடலில் தொழிற்படுகிறோம். மலங்கள் நீங்க நீங்க

1. 'சிவபூமி' என்ற தலைப்பில், இதற்கான விளக்கம் உளது.
2. தொல், களவியல் - 53

நாம் நமது நரம்புமண்டலத்தில் ஆறு ஆதாரங்களின் வழியாக மேனோக்கி உயர்ந்து முன்னேறுகிறோம் அடிமை, மகன்மை, தோழமை என ஆண்டவன் - ஆன்மத் தொடர்பு சிறிது சிறிதாக வலுப்பெற்று, இறுதியில் நாம் தலைவி நிலைக்கு உயர்கிறோம்.

இன்பக் கூட்டம்: அசுத்த மாயையில், மூலாதாரம் முதல் முகுளம் வரை ஐந்து ஆதாரங்கள் உள்ளன. ஆறாவது ஆதார மாவது சுத்தவித்தை. அது சுத்த மாயையின் ஐந்தாவது தத்துவ மாக, ஆணைத்தானமாக, பிட்யூட்டரி என்ற பெயரோடு நம் சிரசினுள் அமைந்திருக்கிறது எனக் கண்டோம்.

சுத்தமாயை எனப்படும் மேற்பகுதிக்கும், அசுத்தமாயை எனப்படும் கீழ்ப்பகுதிக்கும் இடையில் நம் சிரசினுள், பாய்ந்து செல்லும் ஒரு குதிரையின் தோற்றமுடைய 'மூன்றாம் நாளம் உள்ளது எனவும் முன்னர்க் கண்டோம்.

அசுத்த மாயையின் ஐந்து ஆதாரங்களைக் கடந்து ஆறாவ தாகிய சுத்தமாயைக்குள் ஆன்மா நுழைதல் வேண்டும். அவ் வாறு நுழையும்போது, இரண்டு மாயாகாரியங்களுக்கும் இடை யில் உள்ள 'பாயுங்குதிரை'யின் மேல் ஆன்மா ஏறிச்செல்லுமா? அன்றி, அதன் அடியிலேயே ஊர்ந்து செல்லுமா? என்பதே இப்பொழுதைய வினா.

''அதற்குத் தொல்காப்பியர் கூறும் விடை: அசுத்த மாயை யிலிருந்து சுத்த மாயைக்குள் நுழையும் ஆன்மா, இடைப்பட்டு நிற்கும் மூன்றாம் நாளமாகிய 'பரி'மீது ஊர்தல் இல்லை, அந்த நாளத்திற்குக் கீழேயே வஞ்சிக்கொடி போலப் படுக்கையாக ஊர்ந்து சென்று, ஆறாவது ஆதாரமாகிய பிட்யூட்டரி என்ற பெண்மைத் தானத்தை அடைகிறது. இதன்கண் நிலை பெற்ற உயிர், மூன்றாம் நாளமாகிய இறைவனது ஆண்மைப் பொலிவால் பேரின்பக் கூட்டத்தில் வளம் பெறுகிறது.

உரிமை யாருக்கு? இவ்வாறு உயிர், பரியின் வடிவமுள்ள மூன்றாம் நாளத்தின் மேல் ஏறாமல் அதன் கீழேயே ஊர்ந்து செல்லுவதையே, 'மகடூஉ மடல் ஏறுதல் பொற்புடை. நெறிமை இல்லை' எனத் தொல்லாசிரியர் அறிவுறுத்துகிறார் எனவாம்.

இதற்கான காரணங்களைத் தத்துவ அடிப்படையிலும், அறிவியல் அடிப்படையிலும், இலக்கியச் சான்றுகளுடன் சிந்திப் போம்.

தத்துவ சிந்தனை: மூன்றாம் நாளத்திற்கு மேலே உள்ள பெருமூளைப்பகுதி, தூமாயையினால் ஆனது. மும்மலக் கட்டு நீங்காத உயிர் அப்பகுதிக்குள் நுழைதல் இயலாது. இப்பெரு மூளையே சிவபெருமானது தொழிலகம். அதன் வலக் கூறு நாதம்; இடக்கூறு விந்து. இவற்றின் கூட்டத்தால் தோன்றுவது இலிங்க வடிவம். இதனைச் சாதாக்கிய தத்துவம் எனச் சைவ ஞானநூல்கள் கூறும்.

நாதத்தின் தலைவன் சிவபெருமான்; விந்துவை இயக்குபவள் சிவசத்தி சிவனும் சத்தியும் கூடுவதால் தோன்றுகிற சதாசிவ மூர்த்தமே, சாதாக்கிய தத்துவத்தை இயக்கும் தலைவர்.

இங்குப் பரம்பொருளின் மாற்றுவடிவங்களுக்கும், சடமாகிய மாயா தத்துவங்களுக்கும் உள்ள வேறுபாட்டினை ஐயந்திரிபின்றித் தெளிதல் வேண்டும்.

பரசிவம் என்பது ஒரே முற்றுணர்வுப் பொருள். அது சிவன் என்றும் சத்தி என்றும் இரண்டு கூறாய் இணை பிரியாது நிற்கிறது சிவனும் சத்தியும் கூடுவதால் தோன்றுகிறது சதாசிவம்.

மாயை என்பது பரசிவத்தின் பரிக்கிரக சத்தி. அஃது அறிவற்ற சடம். சிவபெருமான் ஆணைப்படி சிவசத்தி அதனை இயக்குகிறாள், அப்பொழுது அதிலிருந்து முதற்கண் நாததத்துவமும் அதிலிருந்து விந்துதத்துவமும் தோன்றுகின்றன. நாத விந்துவின் கூட்டத்தால் தோன்றுவது சாதாக்கிய தத்துவம்.

நம் உடம்பினுள் சாதாக்கிய தத்துவமாகத் திகழ்வது சிரசிலுள்ள மூன்றாம் நாளமே. எனவே மூன்றாம் நாளமாகிய அந்த மடல் மீது ஏறும் ஆற்றலும் பண்பும் பரிமேலழகனாகிய சிவபொருமான் ஒருவனுக்கு மட்டுமே உண்டு. பெண்பாலராகிய உயிர்களுக்கு அத் தகுதி இயல்பாகவே இல்லை என்பது பெறப்படும்.

அறிவியல் நோக்கு:

மிக நுண்ணிய இயல்புடைய பெருமூளையினுள் வேற்றுப் பொருள்கள் செல்ல முடியாது. அவ்வாறு சென்றால் உயிருக்கு ஊறு விளையும் என்பதாகத் தற்கால அறிவியலாரும் கூறுகின்றனர்.

ஆதலால், மடலேற்றம் என்பது பெண்களுக்கு மரபு அன்று; ஆணுக்கே பொருந்தும் என அறிவுறுத்தினர்.

மாறாக, உயிரானது தன் முனைப்போடு மடலேறத் தலைப்படுமாயின், உடலின் பல பகுதிகளிலும் வெப்பம் மிகுந்து எரிச்சல் ஏற்பட்டு இடர்ப் படுத்தும்; இஃது அனுபவழி மட்டுமே அறியத் தக்க உண்மை.

எனவே, மடலேற்றம் உயிர்களாகிய மகடூஉவுக்கு ஏற்ற தன்று; உரிமைபற்றிய ஐயத்துக்கும் ஈண்டு இடம் இல்லை.

பெருந்திணையே'' ஏன்?

தலைமகனுக்கே மடலேறும் உரிமையை அளித்த போதிலும், அதனை ஐந்திணை ஒழுக்கமாகக் கருதாது, பெருந்திணையின்பால் அமைத்தனரே! அஃது என்னை? எனில் கூறுதும். வேகம் கெடுத் தாண்ட வேந்தனாகிய[1] சிவபெருமானுக்கு எல்லாக்காலங்க ளிலும் ஊர்தியாக அமைவது அறவிடையே ஆகும். எனவே உயிர்களுக்கு அவர் நடைமுறை வாழ்வில், விடையேறியாக வந்தே அருள்பாலிக்கிறார்.

உயிர் முற்றிலும் வினை மலம் நீங்கிய நிலையில் ஞானத்தில் சரியை ஞானத்தில் கிரியை, ஞானத்தில் யோகம் என்றவாறு பர முத்திக்குத்தகுதிபெறும் போது, சிவபெருமான் விரைந்து வந்து அருள்பாலிப்பதற்காகக் குதிரையை ஊர்தியாகக் கொள்ளுகிறார் என்பது பெறப்படும்.

இதற்குத் தொல்காப்பியத்திலிருந்தே ஒரு சான்று காணலாம்

''வினைவயிற் பிறிந்தோன் மீண்டுவரு காலை
இடைச்சுர மருங்கில் தவிர்தல் இல்லை
உள்ளம் போல உற்றுழி உதவும்
புள்ளியற் கலிமா உடைமை யான''[2]

எனவே, புணர்ச்சிக் குறிப்பொடு விரைந்து குதிரைமீது ஊர்ந்து வரும் தலைவனது ஒழுகலாற்றினைப் பெருந்திணை என்றனர், ஆன்றோர்-இதே கருத்துடைய திருவாசகப்பாடல் ஒன்றை ஈண்டு இணைத்துச் சிந்தித்தல் உயரிய பயனை நல்கும்.

பெற்றி பிறர்க்(கு)அரிய பெம்மான் பெருந்துறையான்
கொற்றக் குதிரையின்மேல் வந்தருளித் தன்னடியார்
குற்றங்கள் நீக்கிக் குணம் கொண்டு கோதாட்டிச்
சுற்றிய சுற்றத் தொடர்வறுத்தான் தொல்புகழே
பற்றியிப் பாசத்தைப் பற்(று)அறநாம் பற்றுவான்
பற்றியபே ரானந்தம் பாடுத்துங்காண் அம்மானாய்!-[3]

---

1 சிவபுராணம்

2 தொல், கற்பியல்-53

3 திருவம்மானை-(மாணிக்கவாசகர்)8:8:20

முந்நீர் வழக்கம்:

"முந்நீர் வழங்கம் மகடூஉ வொ(டு)இல்லை".[1] என்பது தொல்காப்பியம். இந் நூற்பாவுக்கு,

ஆற்றுநீர், ஊற்றுநீர், மழைநீர் என்ற மூன்றும் கடலுடன் கலத்தலால், முந்நீர் என்பது கடலைக் குறிக்கும் என்பதும், கடற்பயணத்தில் பெண்டிரை உடன் அழைத்துச் செல்லுவது மரபில்லை என்பதும் உலகியல் தொடர்பான முந்திய உரையாகும். சைவ சித்தாந்த நோக்கில் இந்நூற்பாவுக்கான பொருளைச் சிந்திப்போம்:

முந்நீர் என்றால் கடல் என்பது பொருள். இங்கு, இது குருதி நிறைந்த கடலாகிய நம் இருதயத்தைக் குறிப்பதாயிற்று. நமது நெஞ்சுக் கூட்டிலுள்ளது, இருதயம். இஃது இடப்பகுதி, வலப் பகுதி என்ற இரு கூறுகளை உடையது. இவ்விரு கூறுகளிலும் குருதிநிறைந்து இடையறாது அலை மோதிக் கொண்டிருக்கிறது இங்கு மூன்று நீர்களும் வந்து கலக்கின்றன. அஃது எவ்வாறு எனக் காண்போம்.

ஆற்று நீர்: ஆறுகள் கடலில் கலப்பது இயல்பு. நாம் உண்ணுகிற உணவு சீரணமாகி, வேதியல் மாற்றத்தால் குருதி ஆகிறது. தூய செங்குருதி இருதயத்தின் இடப் பகுதிக்கும், அழுக்கான நீலநிறக் குருதி வலப் பகுதிக்கும், குருதி நாளங்கள் மூலம் இடையீடின்றி வந்து சேர்கின்றன, இக்குருதி ஆறுகள் வற்றாத ஜீவநதிகள். இவை நம் இதயக் கடலுள் கலக்கின்றன.

ஊற்று நீர்: உயிர்களாகிய நமது தலையில் பீட்யூட்டரி (p ituitary) என்ற அமுத ஊற்றும், கழுத்துப் பகுதியில் தைராய்டு (Thyroid) என்ற ஊற்றும், வயிற்றுப் பகுதியில் சிறு நீரகங்களின் சிரசிலே அட்ரினலின் (Adrenalin) என்ற ஊற்றும், இவைபோன்ற மற்றும் பல சிறுசிறு ஊற்றுக்களும், நம்உடல் வளர்ச்சிக்கும், உள்ளத்து எழுச்சிக்கும் தேவையான ஊட்டச் சத்துள்ள நீரை ஊறச்செய்கின்றன.

---

1. தொல்-பொருள். அகத்திணையியல்-37

இவ்வாறு ஊறிய அமுத ஊற்றுக்கள் ஆங்காங்கே குருதியோடு வந்து இதயக் கடலுள் கலக்கின்றன.

மழைநீர்: உயிர்களாகிய நமது அறிவு படிமுறையில் வளர்கிறது. முதலில் உலகமாகிய புறப்பொருள்களையும் ஆணவம் போன்ற தீதுறு கட்டுக்களையும் இனங்கண்டு, விலக்கத் தெரிந்து கொள்ளுகிறது.

அடுத்து ஆன்ம இயல்பு பற்றிய அறிவு விளக்கத்தைப் பெறுகிறது.

அதனால், இறைவனது முழுமுதல் தன்மையை உணரத் தலைப்படுகிறது. இவ்வாறு ஆணவ, கன்ம, மாயக்கட்டுகள் தளர்ந்து, இறைமைப்பண்பில் நயக்கு நாட்டம் மிகும்போது சிவத்தின் அருட்பார்வை நம்பால் பதிக்கிறது. அப்போது நமது உடலின் தலைப்பகுதியில், சிவபெருமானது அருட்சக்தி **திருவருள் மழையாகப்** பொழிகிறது. இதனைச் சத்திநிபாதம் என்பர்.

உயர்ந்த மெய்த்தவத்தின் சீர்மையாலேயே இவ் அருள் மழைப் பொழிவு நிகழ்கிறது, இதனைக்'

"குண்டனாய்த் தலைபறித்துக் குவிமுலையார்
நகைநாணா(து) உழிதர்வேனைப்
பண்டமாப் படுத்(து) என்னைப் பால் தலையில்
தெளித்துத்தன் பாதம்காட்டி———"[1]

என அப்பர் பெருமானும்,

"சிறைபெறா நீர்போல் சிந்தைவாய்ப் புகுந்த
திருப்பெருந் துறையுறை சிவனே"[2]

என மாணிக்க வாசகரும் போற்றிப் பரவுவர்.

இவ்வாறு இறையருளாகிய மழைநீர், ஆகாய கங்கையாக ஓடிவந்து இதயக் கடலுள் கலக்கிறது.

பகீரதன் கடுந்தவம் செய்து, ஆகாய கங்கையை இந்நில உலகுக்குக் கொண்டு வந்த புராணவரலாறு இதற்கு ஒரு சான்று ஆகும்.

இங்ஙனம், ஆற்றுநீர்; ஊற்றுநீர், மழைநீர் ஆகிய மூன்றும் கலந்த இதய நீர் முந்நீர் எனப்பட்டது.

வழக்கம்: இது ஒரு பொதுச் சொல். எந்தச் செய்தியை ஒரு நூல் கருப் பொருளாகக் கொண்டு விளக்கமுற்படுகிறதோ, அந்தச் செய்தியோடு நெருங்கிய தொடர்புடையது, வழக்கம் என்ற சொல்,

இங்குத் தொல்காப்பியப் பொருளகாரம் **தலைமக்களது புணர்ச்சி இன்பம்** பற்றிக் கூற எழுந்தது. எனவே வழக்கம் என்பதற்குப் புணர்ச்சி என்பது பொருளாயிற்று.

மகடூஉ: உயிர்கள் அனைத்தும் பெண்பாலரே. சிவபெருமான் ஒருவரே ஆண் என்பதை முன்னரும் கண்டோம். எனவே மகடூஉ என்பது உயிர்களாகிய நம்மைக் குறிப்பதாயிற்று, **(வழக்கம்) இல்லை:** தலைனாகிய சிவபெருமான், தலைவியாகிய உயிரை இதயத் தானம் என்ற முந்நீர்க் கடலின்கண் புணர்ந்து இன்புறுத்துதல் வழக்கம் இல்லை என்பது நம் பண்டைத் தமிழ்ச் சான்றோர்களது கருத்தாகும்.

இதற்கான காரணங்களை இறையியல், உலகியல், உடலியல் தத்துவம், சாத்திரம், இலக்கணம் முதலிய பல துறைச் சான்றுகள் மூலம் சிந்திக்கலாம்.

சாத்திர நோக்கு: சிவகுரு ஒருவரிடம் முறையாகத் தீக்ஷை பெற்று விதிப்படி சிவசிந்தனையில் இருப்போரை இருபிறப்பாளர் எனச் சைவஞானநூல்கள் சிறப்பித்துக் கூறும்.

நமது இப்பூத உடல் ஒருதாயின் அடிவயிற்றிள் கருவில் தோன்றுகிறது. இது, முதல் பிறப்பு. அவ்வாறு உயிர் அடிவயிற்றில்விருந்து உடம்பினைப் பெற்றாலும், நமது நெஞ்சுத்தானத்தில் நான் ஆன்மிக அறிவு விளக்கத்வைப்பெற்றுப் புதிய பிறப்பு எடுக்கிறது. சிவகுருவினால் சிவமூலமந்திரம் உபதேசிக்கப் பெற்றதும், ஒரு சிவஞானஉடம்பினைப் பெறுதல், இரண்டாவது பிறப்பு'

1. அப்பர் தேவாரம் 4:5,4:
2. திருவாசகம் 8:22:5,

அடிமை, மகன்மை, தோழமை எனப் படிமுறையில் தவம் செய்து வளர்ந்து, உயிர் சிவஞானத் தெளிவுற்றுத், தலைவி நிலைக்கு உயர்ந்து' சிரசுத்தானத்தில் ஆண்டவனாகிய தலைவனுடன் பேரின்பக் கூட்டத்தில் திளைக்கிறது. ஆன்மா அவ்வாறு தவம் செய்வதற்கு உரிய இடம் நெஞ்சு. தவத்தின் நிறைந்த பயனாகிய பேரின்பத்தை நுகர்தற்குத்தகுந்த இடம் சிரசு. எனவே இதயக்கடலில் பேரின்பப் புணர்ச்சி இல்லை என்பது குறிப்பு.

இறையியல் சிந்தனை: கலைப் படைப்புக்கு அதிதேவதை **கலைமகள்** பிரமன் என்ற படைப்புக்கடவுளுக்குச் சத்தியாதலால்' இவளைப்பிராமி என்பர் வடநூலார். இவளைக் காலை. அனுட்டானத்தின் போது, சகல காரிய சாட்சியாய் நெஞ்சுத் தானத்தில் வழிபடவேண்டும்.

கலைகளை நிலைபெறுமாறு காத்தற்கு அதிதேவதை **திருமகள்**. விஷ்ணு என்ற காத்தற் கடவுளுக்குச் சத்தியாதலால் இவளை வைணவி என்பர். நண்பகல் அனுட்டானத்தில் குறி காரிய சாட்சியாக இவளைப் புருவ நடுவில் சிந்திக்க வேண்டும்.'

உரியகாலத்தில் கலைகளை எல்லாம் ஒடுக்குதற்கு அதிதேவதையாக இருப்பவள்' **மலைமகள்**. அழித்தற் கடவுளாகிய உருத்திரர்க்குச் சத்தியாதலால் இவளை ரௌத்ரி என அழைப்பர் மாலை அனுட்டானத்தின் போது, இவளைப் பலகாரிய சாட்சியாக தலைஉச்சியில் துதிக்க வேண்டும். இஃது அன்றாடம் கடைப்பிடிக்க வேண்டிய சைவ அனுட்டான விதி[1]

நமது சிரசினுள் ஆண், பெண் பால் உறுப்புக்கள் உள்ளன என முன்னரும் கூறினோம். வைணவியைக் 'குறிகரும சாட்சிணி என ஈண்டுக் குறிப்பாக உணர்த்தப் பெறுகிறது. இதன்மூலம், நம் சிரசிலுள்ள ஆடூஉ, மகடூஉக் குறிகளின் தொழிற்பாட்டை ஊக்குவிப்பவள், சிவசத்தியின் மறு வடிவாகிய வைணவி எனக் கருதுதல் பொருந்தும்.

---

1 சைவ அநுட்டான விதியும் விளக்கங்களும் பக்கம் 29, 29 சிவஸ்ரீதத்புருஷ தேசிகர் வெளியீடு 28.7-67

மேலும் நம் சிரசுப் பகுதியே ஆண்டவன்-ஆன்மப் பேரின்பப் புணர்ச்சிக்கு இடமாயிற்று என்பதும் இதனால் அறியப்பெறும். **இலக்கிய நோக்கு:** அன்பின் நிலைக் களன் இதயம், அதனை உயிர் என்ற தலைவிக்குப் பிறப்பிடம் எனக் கண்டோம். இதயத்தை மருதிநிலம் என்றும், உயிரை மருதிநிலத்து மங்கை என்றும், முன்னரே சிந்தித்தோம்.

அப்பொழுது உடம்பில் ஊர்ந்த இடமாகிய தலையே குறிஞ்சி என்றும், வளங்கொழிக்கும் இதய வயலே மருதம் என்றும், நரம்புக் காடுகளும் குடற்காடுகளுமே முல்லை என்றும் அடிவயிற்றுச் சிறுநீர் உவர்க்கடலே நெய்தல் என்றும் கண்டோம்

குறிஞ்சிக்கு உரிப்பொருள் புணர்ச்சி, மருதத்துக்கு உரிப் பொருள் ஊடல் என்பதையும் அறிந்தோம். அத்தோடு அமையாது'

''உரிப்பொருள் அல்லன மயங்கவும்பெறுமே''[1]

என்ற நாற்பா மூலம், புணர்ச்சி என்ற உரிப்பொருள் குறிஞ்சிக்கு மாத்திரமே உரியது அது சிரசினில் மட்டுமே நிகழ்வது என்பதை முன்னரும் சுட்டி உணர்த்துதிறார் ஈண்டு இதனை முந்நீர் வழக்கம் மகடூவொடில்லை', என மீண்டும் கூறதல், கூறியது கூறிய குற்றம் ஆமோ? எனில், அன்று.

குறிஞ்சிக்கு உரிப்பொருள் புணர்ச்சி' என முன்னர்க் கூறியது, உரிப்பொருள் அடிப்படையில் அமைந்தது! 'முந்நீர் வழக்கம், என ஈண்டுக் கூறியது முதற்பொருளாகிய ஐந்திணை நில அடிப் படையில் செய்தியைக் கூறி' முந்திபக் கூற்றினை வலியுறுத்திய வாறாம்.

எனவே முந்நீர் வழக்கம் மகடூஉ வொடு இல்லை, என்ற நூற்பாவுக்கு ,

மருதநிலமாகிய குருதிக் கடலில் இறைவனிடத்து ஆன்மா வுக்கு ஊடல் மாத்திரையே உண்டு, கூடல் இல்லை என்பது கருத்து.

---

1 தொல் அகத்திணையியல்-1௯,16

உலகியல் நோக்கு: தலைவியாகிய உயிருக்கு மெய்யறிவு விளக்கம் தோன்றுகிற 'பிறப்பிடம்'[1] மனித இதயம். எனவே, அது தலைவிக்குத்தாய் வீடு. தலைவனாகிய சிவபெருமானுக்கு ஒரு மாமன் வீடு. மாமன் வீட்டிலே மாப்பிள்ளைக்கான விருந்துணவு உண்டு; தலைவியின் ஊடல் உண்டு. ஆனால் தலைமக்களிடையே புணர்ச்சி இல்லை என்பது குறிப்பு. இதிலிருந்து, இதயத்தானத்தில் சிவ—சிவக்கூட்டம் இல்லை என்பது பெறப்படும்,

அறிவியல் நோக்கு: நமது தலையிலுள்ள மூன்றாம் நாளம் (Third Ventricle) அமுதம் (cerebro — Spinal Fluid — CSF) நிறைந்தது என அறிவியலார் கூறுவர்.

மூன்றாம் நாளம் ஆண்டவனின் பிச்சாண்டிக் கோல ஆண்மைப் பொலிவுத் தோற்றத்தினை உடையது. பிட்யூட்டரி என்பது ஆன்மாவுக்கான பெண்மைத்தானம். இவை இரண்டும் நம் சிரசினுள் மிகவும் சிறப்பாக அமைந்துள்ளன.

இவ்வாறு நம் சிரசுப் பகுதியில் உள்ளன போன்று, இதயத் தானத்தில் தலைமக்கள் புணர்ச்சிக்கான ஆண் பெண் பால் உறுப்புகள் இல்லை.

எனவே இதயப் பகுதியில் தலைமக்கள் புணர்ச்சி இல்லை. என்பது தெளிவாகிறது.

தத்துவ நோக்கு: நமது உடம்பினை மூன்று மண்டலங் களாகச் சைவசித்தாந்தத் தத்துவ நூல்கள் பகுத்து நோக்கு கின்றன. சிரசுப்பகுதியைச் சந்திரமண்டலம் என்றும், நெஞ்சுப் பகுதியைச் சூரிய மண்டலம் என்றும், அடிவயிற்றுப் பகுதியை அக்கினி மண்டலம் என்றும் அவை சுட்டி உணர்த்துகின்றன. இதனைச் சற்றே விரித்து நோக்குவோம்.

சிரசு — சந்திரமண்டலம்: ஆழ்ந்த தியானத்தால், சிரசுப் பகுதியில் சித்தத்தைக்குவித்துச், சிவபெருமானைக் கூடி இன்புறு கிறாள் உயிர்த் தலைவி.

---

1. உயிருக்குப் பிறப்பிடம்: உயிர் ஓர் அநாதிப்பொருள்; பிறப்பு இறப்பு இல்லாதது. ஆறாவது அறிவாகிய மனத்தின் துணைக்கொண்டு உயிர் சிவஞான விளக்கம் பெற முற்படுதலை ஈண்டுப் 'பிறப்பு' எனக் குறித்தது,

நம் தலையினுள் நடுமூளையில் தொடங்கி, முன்தலைப் புருவ நடுவினை நோக்கி நீண்டு வளைந்து கிடக்கிறது ஒரு நாளம்' பிறைவடிவினதான இந்த நாளத்தை மூன்றாம் நாளம் (Third Ventricle) என்றனர் அறிவியலார். சிவமூல மந்திரத்தின் பேராற்றலால் இந்த மூன்றாம் நாளம் ஒரு சிவலிங்கத்தின் திரு உருவைப்பெறுகிறது. இதனுள் (CSF என்ற) அமுதம் நிறைந் திருக்கிறது.

நம் தலையினைச் சந்திர மண்டலம் என்றனர், சைவ அருளாளர், எனவே அமுதம் பொழியும் சந்திரமண்டலமே தலைமக்களின் புணர்ச்சிக்கு ஏற்ற 'தேனிலவு' (Honey Moon)த் தானம் ஆகும்.

இதனைத் திருவாதவூரர் திருவாசகத்தில் பல இடங்களிலும் காணலாம்.

"தே(ன்)நி லாவிய திருவருள் புரிந்த என்
சிவ(ன்)நகர் புகப்போகேன்
ஊனில் ஆவியை ஓம்புதற் பொருட்டினும்
உண்(டு) உடுத்(து) இருந்தேனே"[1]

நெஞ்சு — சூரியமண்டலம்:

நம் நெஞ்சில் உள்ள பன்னிரண்டு நரம்புகள் (Thorax Nerves) முதுகுத் தண்டிலிருந்து விரிந்து வெளிப்பட்டன என்பது அறிவியல் கருத்து.

இவற்றைப் பன்னிரு சூரியர்களாகவும், முருகப் பெருமானின் பன்னிரு திருக்கரங்களாகவும் சிந்தித்தனர் சைவ அருளாளர்.

நம் நெஞ்சுக் கூட்டினுள் இயங்கிக் கொண்டிருக்கும் மனித இதயம் என்பது ஒரே உறுப்பு, ஆயினும் நான்கு பகுதிகளைக் கொண்டது. மேலறைகளின் வலது இடது பகுதிகளில் சிவனும் சத்தியும், கீழறைகளின் வலது இடது பகுதிகளில் பிள்ளை யாரும், முருகனும் என,

இதயத்தின் நான்கு பகுதிகளிலும் ஒன்றேயான பரம்பொருள் நான்கு அதிதேவதைகளாக நின்று, உயிர்களாகிய, நமது ஒவ்வோர் இயக்கத்துக்கும் அருள் புரிகின்றனர்.

உயிர் என்பது தலைவி; மனம் என்பது ஆருயிர்த்தோழி.

---

1. திருவாசகம் - திருச்சதகம் 40

'பகலில் புணர்தல் இல்லை' என்பதை நம் முன்னோர் அனுபவ வழித் தெளிந்து நமக்கும் அறிவுறுத்தியுள்ளனர்.

நெஞ்சுத்தானத்தில் மனம் என்ற ஆருயிர்த் தோழி ஒன்றி நின்று சிவமூலமந்திரத்தையே சிந்தித்திருக்க, உயிர் என்ற தலைவி, நெஞ்சில் இருதயத்தைச் சிவலிங்கமாகச் சிந்தித்துத் திருவடியில் தங்கி வழிபாடு இயற்றுகிறாள்.

இருளாய உள்ளத்தின் இருளை நீக்கும் சிவபெருமானைச் சிவசூரியனாகச் சிந்தித்து நெஞ்சுத் தானத்தில் வழிபாடு இயற்றுவது, சிவபூசை மரபு. எனவே இதயம் பூசைத்தான மாயிற்று.

அடிவயிறு — அக்கினி மண்டலம்:

ஜாடராக்கினி என்பது நம் அடிவயிற்றில் உள்ள பெரு நெருப்பு என அறிவியலார் உணர்த்துவர். 'மூலாதாரத்து மூண்டெழுகனல்' என ஔவையார் இதனைக் குறிப்பிடுவார். இவ்வாறு எழுகின்ற அடிவயிற்றுக் காமாக்கினியைச் சிவாக்கினியாக்கி, நாளும் எரி ஓம்பி வழிபடுகிறாள் தலைவி; எனவே, அடிவயிறு அவளுக்கு ஓமத்தானம் ஆயிற்று (இவைபற்றிய விரிவான விளக்கங்களை மேல்வரும் பிற இயல்களில் காணலாம்)

சிரசு — சந்திரமண்டலம்:

இவற்றுள் புணர்ச்சிக்கு உரிய தேனிலவுத் தானம் நமது சிரசு எனக் கண்டோம். அக்கினியின் வெய்ய பரப்பு நிறைந்தது அடிவயிறு, அஃது ஆன்மீகத் தலைமக்கள் கூடி இன்புற ஏற்ற இடமன்று, அதேபோல் சூரியனின் வெங்கதிர் சூழ்ந்த நெஞ்சுத் தானமும், முந்நீர் நிறைந்த இதயக் கடலும் ஆண்டவன் — ஆன்மப் பேரின்பப் புணர்ச்சிக்கு ஒவ்வாதனவாம்.

எனவே குறிஞ்சியை மட்டும் கூடல் ஒழுக்கமாகக் கொண்டு, மருதத்தை ஊடலுக்கும் முல்லையைப் பிரிவின் கண் தலைமக்கள் பொறுத்து இருத்தலுக்கும் நெய்தலைப் பிரிவு ஆற்றாத இரங்கலுக்கும் ஒழுக்க முறையாக்கினர் பண்டைய நம் தமிழ்ச் சான்றோர்; அக்கருத்தினை மேலும் வலியுறுத்த, 'உரிப்பொருள் மயங்குதல் இல்லை' என அறுதியிட்டும் கூறிப் போந்தனர் என்பது பொருந்தும்.

இவ்வாறாகக் குருதி ஆறும்,[1] உயிர்ப்பு நீர் ஊற்றும்[2] திருவருள் மழையும்[3] ஆகிய முந்நீரும் மூவகைத் தத்துவங்களும் கலந்த நம் இதயத்தில், ஆண்டவன் — ஆன்மப் பேரின்பப் புணர்ச்சி நிகழ்தல் இல்லை, என்பது தொல்காப்பியரது அனுபவக் கூற்றாகும்.

மந்திரம், கிரியை, பாவனை என்ற முத்திறச் சாதனங் களைக் கொண்டு, சிவ வழிபாடு செய்தல் சைவ மரபு. அத்தகு நெறி நிற்பாருக்குச், சிவயோகத்தை முறையாகப் பயிற்றுவிக்கு முகத்தான், தொல்காப்பியர், அமைத்த நூற்பாக்களுள்,

'முந்நீர் வழக்கம் மகடூஉ வொ(டு) இல்லை'

என்ற இதுவும் ஒன்றாகும்.

நிறைவுரை: இயல்பாகவே சிற்றறிவினதாகிய ஆன்மா, மும்மலப்பிணிப்பால் மேலும் முடக்குண்டு, அறிவு மழுங்கியும், மயங்கியும், உண்மைகளைத் திரிவுபட உணர்ந்தும் இறைவனது திருவடிப் பேரின்பத்தை நுகராது புறத்தே அலைந்து பின்னர், எவ்வாறு தனது இச்சை அறிவு செயல் என்ற முத்திறத்தாலும் இறைவன் திருவடியைப் பற்றிப் படரத் தலைப்பட்டு, உய்தி அடைகிறது என்பதை மேல்வரும்' புறத்திணையியலில் காண்போம்.

2 புறத்திணை இயல்

வள்ளலும் வள்ளியும்:

உயிர்களாகிய நாமெல்லாம் சிற்றறிவினர்; ஆணவம் என்ற ஒரு பேரிருள், நமது அச்சிற்றறிவையும் மறைத்து மழுங்கச் செய்துள்ளது. அதன் வலிய கட்டிலிருந்து நம்மை விடுவித்து, அறிவு விளக்கம் தந்து உய்விக்க விரும்புகிறார், சிவபெருமான்.

நொடிப்பொழுதில் அவரால் எதையும் செய்ய முடியும்; என்றாலும் பையவே சென்று பற்றறுக்கும் பண்பினர், அவர். அவ்வாறு செய்வதற்கு நியாயமான காரணங்களும் பலப்பல உள்ளன.

---

1. குருதிஆறு. பூதஉணவிருந்து உற்பத்தி ஆவது-ஆன்ம தத்துவம்
2. உயிர்ப்பு நீர்ஊற்று: வித்தியா தத்துவம்
3. திருவருள்மழை: சிவ தத்துவம்

நம்மைப் பிணித்துள்ள நோய் எவ்வளவு கொடுமையானது என்பதையும், நோயாளிகளாகிய நாம் எவ்வளவு சிறியோர் என்பதையும் நாம் புரிந்துகொள்ள வேண்டும். வைத்தியநாத ராகிய இறைவனது பெருமை அளப்பரிது என்பதையும், அவரது அருளினால் மட்டுமே பலநோயை நீக்கமுடியும் என்பதையும் நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். பிணிதீர்க்கும் வைத்திய நெறிமுறைகளை நாம் இடையறாது சீராகக் கடைப் பிடிக்க வேண்டும் என்பதையும் இன்ன பிறவற்றையும் நாம் தெளிவாக அறிந்து கொள்ள வேண்டும்.

அவற்றை நமக்கு உணர்த்தி நம்மை ஈடேற்றுவதே சிவ பெருமானது திருக்குறிப்பு-எனவே எல்லாம் வல்ல இறைவனாகிய அவர், நமது அறிவுக் கண்ணைச் சிறிது சிறிதாகவே திறந்து விடுகிறார். அதன் விளைவாக உயிர்களாகிய நாம் ஓரறிவு, ஈரறிவு, மூவறிவு, நாலறிவு, ஐயறிவு எனப்படிமுறையில் வளர்ந்து, மனம் என்ற ஆறாவது அறிவினையும் பெற்று இன்று மனிதர் என்ற பெயரோடு உலவுகிறோம்.

பண்டைத் தமிழரின் வாழ்வுநெறி:

'அரிது, அரிது, மானுடராய்ப் பிறத்தல் அரிது, என்பது ஆன்றோர் வாக்கு. ஆயினும் இந்த 'மனித வடிவமைப்பு' மட்டுமே வாழ்வின் முடிந்த முடிவு ஆகுமா? என்பது பற்றிச் சங்கத்தமிழ்ச் சான்றோர்களிடம் உயர்ந்த சிந்தனைகள் நிலவி யிருக்கின்றன. உயிர்களாகிய நாம்,

1. இவ்வுலகில் வாழ்வுக்காலத்தில் வளம் பல பெருக்கிப் பின்,
2. சிறுகுழந்தையை 'இருள் அடிக்காமல்' காக்கும் அகல் விளக்குப் போன்றதான இடைக்கால இவ்வுலகத்து வாழ்வும் வளனும் சிறு அளவின, நிலையற்றன என்ற உண்மையை உணர்ந்து,
3. பற்றற்ற பரம்பொருளையே கொழுகொம்பாகப் பற்றி நின்று,
4. கால அடைவில் கந்து (பிறவி) அழிக்கப்பட்டு,
5. முடிவுக் காலத்தில் முத்தி இன்பத்தைப் பெற்றுக்,

6. கால எல்லைக்கு அப்பாலும், அருளாளராக நிலை பெற்றிருக்கும் பெற்றியினையே பண்டைத் தமிழ் மேலோர் விரும்பிப் போற்றியிருக்கின்றனர்.

இதனைத் தொல்காப்பியர் ஒருநூற்பா மூலம் இனிதே விளக்குகிறார். ஆழ்ந்த உட்குறிப்புகள் நிறைந்த அவ்அரிய நூற்பாவினை, இனி ஆய்ந்து நோக்குவோம்:

"கொடி நிலை கந்தழி வள்ளி என்ற
வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும்
கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே"[1]

என்பது தொல்காப்பியப் பெருமகன் அருளிய நூற்பா, இஃது இறை இயல்பினையும் ஆன்ம இலக்கணத்தையும் மும்மலக் கேட்டினையும் முத்திப் பேற்றினையும் முறையாக உணர்த்துகிறது.

பதவுரை: **கொடிநிலை.** முருகப்பெருமான் என்ற கொழு கொம்பினையே பற்றுக் கோடாகக் கொண்டு கொடிபோன்று தழுவிப் பின்னிப் பிணைந்து நிற்கும் உயிரினம் (கொடி நிலையில் வாழும் உயிரினம்)

கந்தழி: உயிருக்கு உடலை அருளவும் அழிக்கவும் வல்ல முருகப்பெருமான் திருவடியினைப் பற்றி நிற்றலின் மூலம், பிறப்பு இறப்புச் சுழற்சிக்கு வித்தாகிய வினைகளை அவனது திருவருளால் களைந்து, உடற்கட்டும் உலகத் தொடர்பும் அழிக்கப்பட்ட 'ஆன்மாக்கள் (கந்து அழிக்கப்பட்ட உயிரினம்)

வள்ளி[3]: அடைக்கலப் பொருளைத் தனக்கு ஓர் அணி கலனாக ஏற்றருளும் முருகப்பெருமானை முழுமையாகச் சார்ந்து, அவனுக்குரிய அணிகலனாகச் சிறந்தோங்கிய ஆன் மாக்கள்

என்ற முதலன மூன்றும்: என்றவாறு, படி முறையில் வளர்ந்து சிவஞானத் தெளிவு பெற்ற மூவகை உயர்ந்த ஆன் மாக்களும்

வடுநீங்கு சிறப்பின்: (மலப்பிணிப்பாகிய) குற்றம் நீங்கியும், இறைத் தன்மை பெற்றும்) உயர் சிறப்பு எய்தியமையால்

கடவுள் வாழ்த்தொடு கண்ணியவருமே: இத்தகு ஆன்மாக் களின் புகழும் சீர்மையும், கடவுள் வாழ்த்தொடு வைத்துக் கருதுதற்கு ஏற்றனவாம்.

1, தொல்காப்பியம், பொருளதிகாரம், புறத்திணை இயல், சூத். 85.

பொழிப்புரை: பதவுரையின் வலப்பகுதியைத் தொகுத்துக் காணப், பொழிப்புரை அமையும்.

விளக்கவுரை

நமது உடலில் உயிர் இருப்பதனால், நாம் இயங்குகிறோம். உடம்பு என்பது ஒருநாள் அழியக் கூடியது. ஆனால் உயிர் என்ற பொருளோ எக்காலத்தும் அழியாதது, நிலையானது. எனவே உயிரை அநாதி (அதாவது, கால எல்லைக்கு அப்பாற் பட்டது) என்று சைவ சாத்திரங்கள் உறுதியாகக் கூறுகின்றன.

உயிர் அறிவு, ஒவ்வொரு நொடியும் வளர்ந்து கொண்டே இருக்கிறது. புல்பூண்டு என ஓரறிவில் தொடங்கி, மிருகங்கள் என ஐந்தறிவுவரை சிறிது சிறிதாக வளர்ந்து, பின்னர் ஆறாவது அறிவாகிய மனத்தையும் பெற்று, உயிர், மனிதனாக உலவுகிறது.

ஆயினும், வடிவத்தால் அமைந்த மனிதத் தோற்றம் மட்டுமே, மனிதனுக்கு உரிய நிறைவான வளர்ச்சி எனக் கொள்ளுதல் தகுமா? மக்களுள் பலர், மாக்களாய் இருப்பதையும் நடைமுறையில் காணுகிறோமே?

ஒரு மனிதன் வளர்கிறான் என்பதற்குச் சான்று என்னஃ அவனது வளர்ச்சியைக் கணக்கிடும் அளவை யாது? அவனிட முள்ள பொன்னும் பொருளும் புகழும் இன்ன பிற நிலையற்ற பொருள்களும் அளவையாமா? அன்று அன்று. அவனது அறிவின் வளர்ச்சியே உண்மையான அளவையாகும். அஃதாயின், அந்த அறிவு வளர்ச்சியை எவ்வாறு அளந்தறிவது?

ஆற்றலும் எதிர் ஆற்றலும்: இரண்டு சிறுவர்கள் விளையாடு கிறார்கள்; ஒரு தூணைத் தம் கையால் பற்றிக் கொண்டு மிக வேகமாகச் சுழன்று சுழன்று விளையாடுகிறார்கள். இப்போது அவர்கள் மேல் இரண்டு வித ஆற்றல்கள் தொழிற்படுகின்றன. ஒன்று, தூணை நோக்கி அவர்களை உள்ளிழுத்துக் கொள்ளு கிறது, மற்றது, தூணிலிருந்து வெளிப்புறமாக அவர்களை இழுத்துக் கொண்டிருக்கிறது[1].

சிறிது நேரம் இவ்வாறு சுற்றிக் கொண்டிருந்ததும் சிறுவர் களுக்குக் கைகள் வலிக்கத் தொடங்குகின்றன; தலையும் சுற்றிக் கிறுகிறுத்து வருகிறது. இப்போது அவர்கள் என்ன செய் வார்கள்?

இரண்டு ஆற்றல்களுள் ஏதேனும் ஒன்றை முழுமையாகச் சாரவேண்டிய கட்டாயம் அவர்களுக்கு ஏற்படுகிறது.

இவற்றை மைய ஈர்ப்பு ஆற்றல் (Centripetal Force) என்றும் மைய எதிர்ப்பு ஆற்றல் (Centrifugal Force) என்றும் பூதத்துவ நூலார் கூறுவர்.

வெளிப்புறத்தே இழுக்கும் ஆற்றலை நம்பி, ஒருவன் தூணில் பிடித்திருந்த தன் கையை நழுவவிடுகிறான். அந்தோ பாவம்! சுழற்சி வேகத்தில், மைய எதிர்ப்பு ஆற்றலால் அவன் வெளியே எங்கோ தொலைவில் தூக்கி எறியப்பட்டுப் பல தொல்லைகளுக்கும் ஆளாகிறான்.

மற்றொருவன், தூணைநோக்கி உள்ளிழுக்கும் ஈர்ப்பு ஆற்றலை விரும்புகிறான். தூணில் அவன் தனது உடம்பு முழுவதையும் அணைத்துக் கொள்ளுகிறான்; அதனால், இன்ப முடன் அமைதியுறுகிறான்.

இவ்விரு சிறுவர்களுள், யார் அறிவால் மேம்பட்டவன்? தூணின் வெளிப்புறத்தே எறியப்பட்டு அவதிக்குள்ளான சிறுவன், அறிவுடையவனா? அன்றித் தூணோடு அணைந்து அமைதியும் இன்பமும் பெற்ற சிறுவன் அறிவு மிக்கவனா?

இதே போன்றுதான், இறைவன் என்னும் பரம்பொருளை நடுநாயகமாகக் கொண்டு, நாம், உலகம் என்னும் பரந்த இப் பண்ணையில் விளையாடுகிறோம். ஒருபக்கம் இறைவன் நம்மை ஈர்த்து நிற்கிறான்; மறுபுறம் ஆணவம், கன்மம் மாயை என்ற மலப்பிணிப்புகள் நம்மைப் பரம்பொருளோடு சேர வொட்டாது அலைக்கழிக்கின்றன. இந்த நம் விளையாட்டு நம்முடைய பிறப்புகள் தோறும் தொடர்கின்றது. இதில் ஒரு நாள் நாம் களைப்புறுகிறோம். அப்போது நாம் முழுமையாகப் பற்றிக் கொள்ள வேண்டிய ஆற்றல் எது? இறைவன் திருவடியாகிய நிலையான உண்மைப் பேரின்பமா? அன்றி, மேன்மேலும் அல்லலில் நம்மை அழுத்தும் பாசத் தொடர்பா?

நிலையான பேரின்பத்தை நோக்கி முன்னேறத் துடிக்கும் மனிதனே அறிவு மிக்கவன் என்பதைக் கூறவும் வேண்டுமோ?

இப்பேருண்மையை நமக்கு உணர்த்துவதற்காக ஒருசமயம் இறைவனே நான்கு திருமேனியோடு நின்று, உலகினை வலம் வருகிற போட்டி ஒன்று நடத்தினார் என்பது புராணம்.

'அம்மையப்பரே உலகம்' என உணர்வது சிவஞானம். அவ்வாறு தெளிந்து அம்மையப்பரை வலம்வந்த மூத்தபிள்ளையார் ஞானப் பழமாகிய மாங்கனி பெற்றார்.

'உலகமுழுவதுமே அம்மையப்பர் ஒன்றாய் உடனாய்க் கலந்திருக்கிறார் என அறிவது சிவதத்துவ உண்மை. அதன்படி, அண்டபேரண்டம் முழுவதையும் வலம்வந்த தம்பியான ஆறு முகன், தண்டாயுதபாணி ஆனார்.

இரண்டில் முன்னையதே சிறப்பு என்பது பரம்பொருள் நமக்கு உணர்த்த விழைந்த பரஞானம்.

தொல்காப்பியரது அளவைச்சிறப்பு: உயர்ந்த இக்கொள் கையைப் பண்டைக் காலந்தொட்டே நம் தமிழினம் மிகச் சிறப்பாகப் பேணி வந்திருக்கிறது.

மனிதனது இத்தகைய மேம்பட்ட அறிவு வளர்ச்சியைத் தொல்காப்பியர் மூன்று நிலைகளில் அளந்து கூறுகிறார். கொடிநிலை, கந்தழி, வள்ளி என்ற மூன்றும் அவ்வாறு கூறப் பெற்ற அறிவு மேம்பாட்டு நிலைகளாம்.

முருகப்பெருமானையும் அவரைப் பற்றிநின்று, மூன்று நிலைகளில் உயர்வு அடைகிற முதிர்ந்த ஆன்மாக்களையும், தொல்காப்பியர் உருவகிக்கும் தெய்வீக முறை ஆழ்ந்து சிந்தித்து வணங்கத் தக்கதாகும்.

1. **தொடக்கநிலை:** முருகப்பெருமானே கொழுகொம்பு எனவும், உயிர்கள் அக்(கொழு) கொம்பினைத் தழுவிப் படரும் கொடி எனவும் உருவகிக்கப்பெறுகின்றனர். கொடிநிலையாகிய இது, மனித அறிவு மேம்பாட்டின் முதல் நிலையாகிய சிவயோக நெறி.

2, **இடைநிலை:** முருகப்பெருமானை மையமாகக் கொண்டு உலக அரங்கில் சுழன்று விளையாடித் திரிந்த ஆன்மா, கால அடைவில், உலக பந்தங்களையும், உடலின் பொறி புல நுகர்ச்சி

களையும் வெறுக்கிறது. இறைவன் திருவருளையே முழுமையாகச் சார்ந்து நிற்கிறது.

சிறிது சிறிதாக அதன் அறிவு வளரும்போது, நிலையான பொருளாகிய தனக்கு, நிலையற்ற பொருள்களான பொறி புலன்களும் உடம்பு முதலியனவும் புறப்பொருள்கள் என்ற உணர்வு வலிமை பெற்று, உயிர் அவற்றை வெறுக்கிறது. உடம்பு அழிதல் (கந்து[1] + அழி) என்ற இது, மனித அறிவு மேம்பாட்டின் இரண்டாம் நிலையாகிய சீவன் முத்தநிலையை ஒருபுடை ஒத்ததாகும்.

3. முதிர்ந்த நிலை:

முருகனே பரம்பொருள் என்ற உறுதியோடு அவனது திருவடி இன்பத்தை நாடுகிற உயிர், அவனது திருவடிகளில் சரணடைகிறது. வள்ளி[2] என்பது முருகனது இச்சா சத்தி எனவும் சிறந்த ஆபரணம் எனவும், இரண்டு பொருள் உடையது வள்ளியாகிய இஃது, ஆன்ம அறிவு வளர்ச்சியின் முதிர்ந்த தெய்வீக நிலை; இது முருக சாருப நிலையை ஒருபுடை ஒத்ததாகும்.

மூன்றும்: சைவ அருளாளர் உயிரினத்தை மூவகைப்படுத்துவர்[3] சகலர், பிரளயாகலர், விஞ்ஞானகலர் எனப் படிமுறையில் அறிவு வளரப்பெற்ற அம் மூவகை உயிர்களை, 'மூன்றும்' என்ற சொல்லால் குறித்தனர், ஆசிரியர்.

முதலன: மேற்கூறிய மூன்றும் முதன்மையானவை என்பது பொருள். எவ்வாறெனில்,

---

1. கந்து (என்பது) 'பண்டியுள் இரும்பும், கம்பமும், யாக்கை மூட்டும் (உடற் கட்டும்) என்று கூறுகிறது சூடாமணி நிகண்டுபுக் 286 - நாவலர் பதிப்பு.

2. ''வள்ளியே வல்லி (படர்கொடி) செங்கைவளை,
புனை இழை (ஆபரணம்) முப்பேரே ' என்பது சூடாமணி நிகண்டு.
இதற்குச், சிவபெருமான் திருமுடியில் உய்திபெறும் பிறைமதி போன்ற அணிகலன் எனவும், முருக வள்ளலைக் கொழு கொம்பாகப் பற்றி நின்று தலைவிநிலைக்கு உயர்ந்த வள்ளியாகிய கொடி எனவும் இரண்டு பொருள் கொள்ளலாம்.

3. மூவகை உயிர்கள் பற்றி, மேலே விரிவுரையில் காண்க,

அ. சிறுதெய்வங்களை வழிபடுதலின் மூலம், பிறஉயிர்களுக்குக் கிடைக்கிற முத்தி உள்ளிட்ட அனைத்து இன்பங்களும் சிறு அளவின; நிலையற்றன; இடைநிலைப்பட்டன.

அவற்றை நோக்க, முருகப் பெருமானை வழிபட்டுப் பேரின்பத்தில் திளைக்கும் ஆன்மாக்கள் தலைமைப் பண்புடையவை, தரத்தால் உயர்ந்தவை.

"செத்துப் பிறக்கின்ற தெய்வங்கள் மணவாள
செங்கீரை ஆடி அருளே"[4]

என்பது குமரகுருபரர் வாக்கு.

ஆ. பரசிவத்தின் திருவடி இன்பமாகிய சச்சிதானந்தப் பேரின்பமே பரமுத்தி. இதுவே முடிந்த முடிவான உண்மை அறிவானந்தம்.

கொடிநிலை, கந்தழி, வள்ளி என்ற மூவகை நிலையும், சாயுச்சியம் என்ற இப்பரமுத்தியைப் பெறுவதற்குத் தோற்றுவாயாக, முதல்நிலைப் பொருளாக உள்ளன.

நரம்பும் நாடிகளும்

நமது இந்திய மண்ணில் சமயமும் தத்துவமும் வேறு வேறாகப் பிரித்து எண்ணப்படுவதில்லை. அதேபோல் நம்மவர்கள் நாடி நரம்புகளுக்குள் மிகுதியாக வேற்றுமை சுட்டுவதில்லை.

பொதுவாக நமது உடல் முழுவதும் உயிரோட்டம் இருக்கிறது. இந்த ஓட்டம் பெரிதும் இரத்த நாளங்களாகிய நாடிகளின் மூலமே நிகழ்கிறது. அதனால்தான் மருத்துவர்கள் உயிர் ஆற்றலைக் கணிப்பதற்கு இருதயத்தின் துடிப்பையும், இரத்த நாளங்களின் துடிப்பை (நாடித்துடிப்பை)யும் கணக்கிடுகின்றனர்.

எங்கும் நிறைந்தவன் பரம்பொருள். அவன் மாதொரு பாகனாகவே இருந்து உலக இயக்கத்தை நடத்துகிறான். அந்த இயக்கம் நம் உடம்பினுள் நரம்புகளின் மூலமாகவே நிகழ்கிறது.

---

4. புள்ளிருக்கு வேளூர், "முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ்.

சுருக்கமாகச் சொன்னால், நரம்பு மண்டலத்தின் மூலம் சிவபரத்தின் இயக்கமும், இரத்த நாளங்கள் மூலம் உயிரின் தொழிற்பாடும் அமைவதாகக் கொள்ளலாம். இயற்கையாகவே நாடிகள் புறக்காழ்ப்பும், பெண்மை இயல்பும் உடையன. நரம்புகளோ அகக்காழ்ப்பும், திண்மையும் உடையன. உடல் முழுவதும் கொடிபோன்று பரந்து கிடக்கும் நாடிகள், கொழு கொம்பு போன்ற நரம்புகளைச் சார்ந்தும், பின்னிப்பிணைந்துமே விளங்குகின்றன.

சிவபெருமான் ஒருவனே ஆண் என்றும், உயிர்கள் அனைத்துமே பெண் என்றும் சைவஞானநூல்கள் உறுதிபடக் கூறும். இவ்வாறு, தலைவி நிலையில் உள்ள உயிர்கள், தலைவனாகிய கடவுளைக் கொடிபோலப் பின்னிப் பிணைந்து முன்னேறுவதையே **கொடிநிலை** என்ற சொல்லாட்சியால் பண்டைய நம் தமிழ்ச்சான்றோர்கள் குறிப்புரைத்தனர் என்பது துணிவு.

விரிவுரை:

கொழுகொம்பும் கொடியும்: உலகியல் தொடர்பாக நா அனுபவிக்கும் எல்லா இன்பங்களும், சிற்றின்பமே. கடவுள் தொடர்பால் நாம் பெறுகின்ற இன்பங்கள், பேரின்பப் பகுதி எனப்படும்.

உலகியல் சிற்றின்பத்தில் தலைவன், தலைவி என இருப்பது போல, இறைமைப் பேரின்பத்திற்கும் தலைவன் தலைவியர் உள்ளனர்.

சிவபெருமான் ஒருவனே ஆண்மகன் என்பதும், பிரமா விட்டுணு, தேவர்கள், மனிதர்கள் உள்ளிட்ட அனைத்து உயிர்களும் பெண்மக்கள் என்பதும் சிவஞான நூல்கள் அறிவுறுத்தும் உண்மை. சிவபெருமானுக்கும் முருகனுக்கும் வேறுபாடு இல்லை[1] என்பது கந்தபுராணச் செய்தி.

உயிர் என்பது, ஒரு வளரும் அறிவுக் கொடி, அது படர்வதற்குக் கொழுகொம்பு ஒன்று இன்றியமையாதது.

---

1. ஆதலின் நமது சத்தி அறுமுகன்; அவனும் யாமும்
பேதகம் அன்றால்; நம்போல் பிரிவிலன்; யாண்டும் நின்றான்;
ஏதமில் குழவி போல்வான்; யாவையும் உணர்ந்தான்; சீரும்
போதமும் அழிவில் வீடும் போற்றினர்க்(கு) அருளவல்லான்''

– கந்தபுராணம்.

சிவபெருமான் உமையம்மையிடம் கூறுவதாக அமைகிறது, இப்பாடல்.

உலகியல் உடலின்பத்தில், பெண்ணாகிய ஒரு கொடி, தன் கணவன் என்னும் கொழுகொம்பைச் சுற்றித் தழுவி வளர்கிறாள் அன்றோ? அதே போன்று இறைமை என்னும் பேரின்பத்தில் உயிர் என்ற வளருங் கொடியே தலைவி; அப்பூங்கொடி தன்னைச் சுற்றிப் படர்வதற்கு, ஏற்றதொரு கொழுகொம்பாக நிற்பவர், முருகப்பெருமான், இஃது அருள் நூல்கள் சாற்றும் உண்மை.

சேவடி படரும் செம்மல் உள்ளமொடு
நலம்புரி கொள்கைப் புலம்புரிந்(து) உறையும்
செலவுநீ நயந்தனை யாயின், பலஉடல்
நன்னர் நெஞ்சத்து இன்னசை வாய்ப்ப
இன்னே பெறுதிநீ, முன்னிய வினையே......

என முருகப்பெருமானிடம் நம்மை ஆற்றுப்படுத்தி வாழ்த்து கிறார் நக்கீரர்[2]

''முருகப்பெருமானின் சிவந்த திருவடிகளைப் பற்றிக் கொண்டு, கொடி போலப்படர்ந்து எழுந்து, முத்தி இன்பத்தில் திளைக்க விரும்புகிற உயர்ந்த குறிக்கோளோடு. நன்மையே செய்யும் சிவநெறியில் தலைப்படுவாயாயின், முத்திக்கு வாயி லாகிய சிவஞானத்தினை இப்பொழுதே வாய்க்கப் பெறுவாய்'' என்பது இச்செய்யுட் பகுதியின் கருத்து

இவ்வுண்மையை நமக்கு அறிவுறுத்துவதற்காக, நமது உடம் பிலேயே சின்னங்களை அமைந்திருக்கிறார், இறைவன். கல் வெட்டில் சான்றுகளை அமைக்கிறான், மனிதன்; உடல் வெட்டில் சான்றுகளை உருவாக்கியிருக்கிறார், இறைவன். எனவே, உயிர்காக்கும் இறைவனது சிறப்புகளை உணர்வதற்கு, உடலின் கட்டமைப்பைச் சற்றே நோக்குவோம்.

நம் உடம்பில் கொழுகொம்பாகச் சுழுமுனை (Spinal Cord) என்ற முதுகுத் தண்டும், படரும் கொடியாகக் குருதி நாளங்களும் (Aorta & Vena Cava) எவ்வாறு தொழிற்படு கின்றன என்பது பற்றிச் சிந்திப்போம்.

2, திருமுருகாற்றுப்படை [62-66]

முதுகுத் தண்டு, முருகப்பெருமான், தண்டாயுதபாணி: நமது முதுகெலும்புத் தொடரினை ஊடுருவித் தேர்வடம் போன்ற பெரிய தொரு நாடி அமைந்திருக்கிறது. 72,000 நாடிநரம்பு களின் தொகுப்பாகிய இதற்குச் சுழுமுனை (Spinal Cord) என்பது பெயர். தண்டுவடம், முதுகுத்தண்டு, எனவும் இதனை அழைப்பர்.

முதுகுத்தண்டின் உச்சிப்பகுதிக்கு முகுளம் என்பது பெயர் நம் அடிவயிற்றில் நாபி அளவில் 'மணிபூரகம்' என்ற விட்டுணுத் தானம் (Lumbar Region) உள்ளது. முதுகுத்தண்டு என்ற சுழுமுனா நாடி, தலையினுள்ளிருக்கும் முகுளம் முதல் அடி வயிற்றிலுள்ள மணிபூரகம் வரை நீண்டு தொங்குகிறது. நம் முதுகில் உள்ள இச்சுழுமுனா நாடியின் அமைப்பை உற்றுநோக் கினால், அஃது ஒரு தண்டினைப்போலத் தோற்றமளிக்கும். 'வாழைத்தண்டு' போன்ற, கிளைகள் இல்லாத மெல்லிய ஒரு நெடுங்கோல் தண்டு எனப்படும். அத்தகைய தண்டினை ஆயுத மாகக் கையில் (பாணியில்) ஏந்திய கடவுள் ஒருவர் இருக்கிறார். அவருக்குத் **தண்டாயுதபாணி** என்பது பெயர்; தண்டத்தைக் கையில் ஆயுதமாக உடையவர் என்பது பொருள்.

யோகதண்டம்:

சிறந்த தவப்பயன் காரணமாக, மலபந்தம் நீங்கிப்பேரின்ப வேட்கையுற்ற, உயர்ந்த ஆன்மாவின் முதுகுத்தண்டு, மற்ற எல்லா மனிதர்களுக்கும் உள்ளது போன்ற சடமாகிய வெறும் நரம்புத் தொகுதியன்று. அஃது ஓர் யோகதண்டம் அவரது சுழுமுனையில் யோக தண்டாயுதபாணியாக நின்று, அவ்வான்மா வைச் சிவநெறியுள் செலுத்தும் செம்மல், முருகப்பெருமானே ஆவார்.

ஆறுமுகம்:

வினைநீங்கி இறைமைப் பேரின்பத்தில் விருப்பமுடைய உயிருக்குத் தாம் யோக தண்டாயுதபாணியாக நின்று முத்திப் பேற்றினை அருள்பாலிக்கும் அதே முருகப்பெருமான், மற்ற உயிர்களை வினைப்பயன் நுகர்ச்சிக்காக உலகியல் வாழ்வில் தொழிற்படுத்தியும் அருளுகிறார். அப்போது அதே முதுகுத் தண்டில் ஆறு ஆதாரங்களுக்கும் தலைவனாய், ஆறுமுகனாய் நின்று அவர் அருள்பாலிக்கிறார்.

ஆறு ஆதாரங்களும் முருகப் பெருமானது ஆறுமுகங்களாயின. முதுகுத்தண்டின் கிளைகளாக நெஞ்சுத் தானத்தில் விரிந்துள்ள (Thorax Nerves என்ற) பன்னிரண்டு பக்க நரம்புகளும், காக்கும் கந்தனுக்குப் பன்னிரு கரங்களாயின.

சிற்றுயிர்களை உலக முகப்படுத்தும்போது ஆறுமுகம், பன்னிருகை, பச்சை மயில், பக்கத்தில் இரு பெண்கள் என்ற உலகியல் தோற்றத்தோடு அருள்பாலிக்கிறார் முருகப் பெருமான்.

பேருயிர்களை மும்மலம் களைந்து முத்திப்பேற்றிற்கு ஆற்றுப்படுத்தும் போது, உலகக் கட்டுகளே இல்லாத, யோக தண்டாயுதபாணியாகத் தாமே ஆண்டிக் கோலத்தில் நின்று, அவரே அருள்பாலிக்கிறார்.

ஒரே கடவுள், உலகத் தோற்ற நிலையில் முருகப்பெருமான்; உயிர்களது ஒடுக்க நிலையில் யோக தண்டாயுதபாணி. இவ் உயரிய கருத்தை ஓர் உலகியல் உவமை கொண்டு சிந்தித்தால், பொருள் மேலும் எளிதாகும்.

ஆலமரம்: ஆலமரத்தில் இரண்டு வகையுண்டு ஒன்று வட ஆல்மரம், மற்றொன்று கல்ஆல்மரம்.

நீண்டு தொங்கும் விழுதுகளை உடைய ஆலமரத்தைச் சர்தாரணமரக எங்கும் காணலாம். இதற்கு வடஆல்மரம் என்பது பெயர். இதன் சிறப்புகள் பல. அவற்றுள் ஒன்று, கால அடைவில் அதன் விழுதுகள் நிலத்தில் வேருன்றித், தளர்ந்த தாய் மரத்தைத் தாங்கத் தொடங்கும், இவ்வாறு, இனவளர்ச்சி என்பது இவ்வகை மரத்துக்கு இயற்கையாகவே தொடர்ந்து நிகழ்கிறது.

(எனவே வாழையடி வாழையான இனவளர்ச்சி கருதி நாம் தென்புலத்தாராகிய நம் முன்னோர்களுக்கு வட ஆல் மரத்தினடியில், திதிக் காலத்தில் எள்ளும் தண்ணீரும் இறைத்து நினைவு அஞ்சலி செய்வதை ஓர் மரபுஆக்கினர், நம் சைவச் சான்றோர்.)

கல் ஆலமரத்திற்கு விழுதுகள் இரா. இது பெரிதும் குறிஞ்சி நிலத்துக்கு உரியது. வீடு பேற்றினை விரும்புவோர்க்குப் புகலிடமாவது.

கல் ஆல் மரம் என்பது, சீகண்ட பரமேஸ்வரனே ஆலமர் கடவுளாய், யோகத்தில் அமர்ந்து, மறைவல்ல நால்வர்க்கும் சின்முத்திரை[1] காட்டி, அருளுபதேசம் செய்த இடமாகும். சைவ வரலாறுகளில் இதற்கான சான்றுகள் பல உள்ளன.

இவ்வாறு விழுதுகள் நிறைந்த வடவால்மரம், பன்னிருகை வேலவனை நினைவுக்குக் கொணர்ந்து, பண்டு தொட்டு இன்று வரையுள்ள, சங்கிலித் தொடர் போன்ற, விரிந்து பரந்த உலக வாழ்வின் தொடர்ச்சிக்கு உவமையாக நிற்கும்.

விழுதுகள் இல்லாத 'கல்லால மரம், யோக தண்டாயுத பாணியை நினைவுக்குக் கொணர்ந்து இன்று தொட்டு எதிர்கால முத்தி இன்பப் பேறுவரையுள்ள, குவிந்த, நிலைத்த பேரின்ப மாகிய உண்மைப் பெருவாழ்வுக்கு உவமை கூறும்

தெய்வீகக் கொடிகள்: கொழுகொம்பைச் சுற்றி ஏறுகின்ற கொடிகளாய், நமது உடம்பில், சுழுமுனையைச் சுற்றி இரண்டு இரத்த நாளங்கள் பின்னிப் பிணைந்து செல்லுகின்றன. ஒன்று தூய இரத்த நாளம் (Aorta) மற்றது அழுக்கு இரத்த நாளம் (Vena Cava).

இவையே போன்று முருகனாகிய கொழுகொம்பைச் சுற்றி, வள்ளி தெய்வயானை என்ற இரு கொடிகள் படர்ந்திருக்கின்றன முருகன், பரசிவத்தின் பிள்ளை வள்ளி தெய்வயானை என்பார். இருவரும் இறைவனாகிய முருகனை இருமருங்கும் தழுவி நிற்பவர்கள்; ஆன்மவர்க்கத்தின் பிரதிநிதிகள். தவநெறி நிற்கும் உயிர்கள் அனைத்தும் இறைவன் திருவடியை இவ்வாறு

---

1. சின்முத்திரை: கையிலுள்ள ஐந்து விரல்களில், பெருவிரல் இறைவனையும், சுட்டுவிரல் ஆன்மாவையும், ஏனைய மூன்று விரல்களும் மும்மலங்களையும் உணர்த்தும். இயல்பாக மும்மலப் பிணிப்புள்ள உயிர் அவற்றின் நீங்கி இறைவன் திருவடியை நாடினால் இறைவன் மனமுவந்து அவ்வான்மாவுக்கு அருள்புரிவான் என்பது பெருவிரலும் சுட்டு விரலும் இணைந்து நிற்கும் சின்முத்திரையின் குறிப்பாகும்.

நான் பற்றி முன்னேறுகின்றன என்பதை நமக்கு உணர்த்தி நிற்கும் தெய்வச் சின்னங்கள் இவர்கள்.

தெய்வயானை: மருதநிலத்துக்குத் தலைவன் இந்திரன்[1] எனத் தொல்காப்பியர் கூறுவார். நமது மனித உடம்பில், இருதயம் என்ற நெஞ்சுத்தானமே மருதநிலம் என முன்னரும் கண்டோம். இந்திரனது மகள், தெய்வயானை,

தெய்வயானை சிவந்த நிறத்தினள். முருகனது முதல் மனைவி யாதலால் அவரது இடப்பாகம் தழுவியவள். இருதயமாகிய தேவலோகத்திலிருந்து செங்குருதியாகிய அளப்பரிய வளங்களைநமது உடம்பின் மூலைமுடுக்குகளுக் கெல்லாம் கொண்டு செல்லுபவள்.

வள்ளியம்மை: நாம் கைகால் முதலிய செயற்கருவிகளாலும், கண்காது முதலிய அறிவுக் கருவிகளாலும், இடையறாது வேலை செய்து கொண்டே இருக்கிறோம். நாம் இவ்வாறு வினை செய்கின்றமையால், உடல்முழுவதும் பரவிய செங்குருதி, ஆங்காங்கே அழுக்கேறி, நீலநிறமாக மாறுகிறது.

உடலில் எங்கேனும் அழுக்கு இரத்தம் தங்கினால், (ODEMA போன்ற) பல நோய்கள் துன்புறுத்தும். அழுக்கு இரத்தம் அவ்வப்போது தூய்மை பெறுதல் வேண்டும். அவ்வாறு தூய்மை செய்வதற்காக நீலநிற அழுக்கு இரத்தத்தை உடம்பின் பல பகுதிகளிலிருந்தும் மீண்டும் இருதயத்திற்குச் சிரைகள் (Vena Cava) மூலம் கொண்டு வந்து சேர்ப்பவள், வள்ளியம்மை.

உயிர்களாகிய நாம், இடையறாது செய்கிற வினைகளின் விளைவான (ஆகாமிய வினைகளை) வருவினைகளைக் களைவதற்கு, முருகப்பெருமானிடம் பரிந்துரை செய்பவள், வள்ளியம்மை, எனவே தெய்வயானையை விட வள்ளியம்மையிடம் நாம் ஒருபடி அதிக ஈடுபாடு கொள்ளுகிறோம்.

---

1. வேந்தன் மேய தீம்புனல் உலகம் - தொல், அகத்திணை. சூத் - 4

வள்ளியம்மையும் தெய்வயானையும் நம்போன்ற உயிர்களே. அவர்கள் முருகன் திருவடிசேரக் கடுந்தவம் செய்தனர். அதன் பயனாகக் கொடிபோலப் பின்னி முருகப்பெருமானாகிய கொழு கொம்பைச் சார்ந்து, தெய்வநிலை எய்தினர். அவர்களைப் போன்றே நாமும், ஒவ்வொருவரும், முருகப்பெருமானைச் சார்ந்தால், முத்திப் பேறு பெறலாம்[1] என்பது ஆன்றோரது ஆழ்ந்த அனுபவ வழி அறிவுரை.

ஒளி ஈர்ப்பான், கொடி மரம், முதுகுத்தண்டு: எங்கோ தொலைவில், நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப் படுகின்றன. அவை நுண்ணிய மின் அலைகளாக (Micro magnet waves) வான வெளியில் பரவுகின்றன. நாம், நம் வீட்டில் உள்ள தொலைக் காட்சி (Television) கருவிக்கு ஓர் ஒளி ஈர்ப்பான் (Antena) அமைக்கிறோம். அது விண்வெளியில் பரவியிருக்கும் நுண்ணிய மின் அலைகளை வாங்கி, நமது தொலைக் காட்சிப் பெட்டியில் பருமையான நிகழ்ச்சிகளாகக் காட்டுகிறது. அவ்வாறு காட்சி களை ஈர்த்து வெளிப்படுத்தும் வகையிலே பெட்டியின் உள் அமைப்பும் செவ்விதே காக்கப்படுதல் வேண்டும்.

அதே போன்றுதான், திருக்கோயில்களில் சுவாமி அம்மன் திருவுருவங்களிலிருந்து இறைமையின் நுண்ணிய அருட்கதிர்கள் வெளிப்பட்டு எப்போதும் திருவருள் வடிவில் திருக்கோயில் முழு வதும் பரவி நிற்கின்றன. சுவாமி அம்மன் திருமுன் (சந்நிதி) நந்திதேவருக்குப் பின்னால் அமைந்துள்ளது, கொடிமரம்; அஃது அவ் அருள்கதிர்களை ஈர்த்துத் தன் அருகில் வீழ்ந்து வணங்கு வோரது சிரசினுள் செலுத்துகிறது.

அவ்வாறு நமது உடலினுள் செலுத்தப்பட்ட திரு அருட் கதிர்களை ஈர்த்து நல்லபயனைத் தருவதற்கு, நம் உடலிலும் ஓர் உள் ஈர்ப்பான் (Internal Antena) இருக்கிறது அதற்கு மைய நரம்பு மண்டலம் (Central Nervous system) என்பது பெயர். இது பெருமூளை, சிறுமூளை, நடுமூளை என்ற மூன்று மூளைப் பகுதிகளைச் சிரசினுள்ளும், சுழுமுனைநாடியை முதுகு எலும்புத் தொடரினுள்ளும் கொண்ட ஓர் ஓங்கார அமைப்பு.

---

1 முந்திக்[கு] ஒரு வித்துக் குருபரன்'' - அருணகிரியார் திருப்பரங்குன்றம் திருப்புகழ்-6

புருவ நடு தொடங்கி அடிவயிறு வரை விரிந்துள்ள இம்மைய நரம்பு மண்டலம், பெண்களது முன்தலை தொடங்கி இடுப்பு வரை வாரித் தொங்கவிடப்பட்ட தலைமுடிப் பின்னலை ஒத்திருக்கும் இதனுடைய அளப்பரிய ஆற்றலை மேல்வரும் பிற பகுதிகளிலும் வரைபடத்திலும் விளங்கக் காண்க.

எனவே, நாம் ஒவ்வொருவரும், சிவாலயங்களில் கொடிக் கம்பத்திற்கு இப்பால், முறைப்படி தரையில் வீழ்ந்து வணங்க வேண்டுமென்பதை ஆன்றோர் வலியுறுத்தியுள்ளனர்.

கந்தனும் கந்தழியும்: கந்து என்றால் 'யாக்கை மூட்டு' எனப் பொருள் கூறுகிறது, சூடாமணி நிகண்டு. யாக்கை என்பது தசை, எலும்பு, நாடி, நரம்புகளால் ஆக்கப்பட்ட உடல். மூட்டு என்றால் என்ன?

துணியை மூட்டித் தரும்படி தையற்காரரிடம் கூறுகிறோம். அவரும் அதனை அழகாகத் தைத்துத்தருகிறார். எனவே மூட்டுதல் என்றால் தைத்தல், உருவாக்குதல் என்பன பொருள்.

நாம் எல்லோரும் உயிர்கள்; நமக்குக் கந்து என்ற இவ்வுடலை உருவாக்சி அருளும் தையல்காரன்[1] கந்தன், அவனே முருகப்பெருமான் என்பது எல்லோரும் அறிந்த உண்மை.

விக்கினங்களை (இடர்களை)ப் பெருக்கியும் களைந்தும் அருள் புரிபவன் விக்கினேஸ்வரன் அதே போன்று, கந்து என்ற நமது இந்த உடம்பினை நமக்குத் தந்தும், இதனைக் காத்தும், பின்னர்க் கரந்தும் இறுதியில் அழித்தும் விளையாடுபவன் கந்தன். ஆக்கலும் அழித்தலும் ஆகிய இரண்டுமே தலைவனது பண்புகளன்றோ?

கந்தனையே பற்றுக் கோடாகக் கொண்டு, உயிர்களாகிய நாம் அவனது திருவடியைக் கொடி போன்று பின்னிப்

---

1. தையல்காரன்: அ) தசை, எலும்பு, நாடி நரம்புகளைக்கொண்டு, நமது உடம்பினைத் தைத்து உருவாக்கியவன்
ஆ) வள்ளி தெய்வயானை யாகிய தையலரைத் தன் பக்கத்தில் அணைத்தவன்.
இ) திருச்செந்தூர்த் திருப்புகழ் - அருணகிரியார்.

பிணைந்து நிற்குங்கால், அத்தகைய ஈரிய உயிரைச் செம்மைப் படுத்தி, அதன் இருவினைகளையும் அவற்றின் பயனாகிய இன்ப துன்பங்களையும் களைந்து, பிறப்பு இறப்புச் சுழற்சியை அறுத்துக் கந்தினை அழிப்பவனும் கந்தனே.

இவ்வாறு, வினைப்பயன்களை அனுபவிக்கும் கருவியாக நமக்கு உடம்பினை ஆக்கித் தருபவனும் கந்தன்; உரியகாலத்தில் நியதிப்படி நாம் இன்பதுன்பங்களை நுகர்ந்து கழிப்பதற்காக நம் உடம்பினைக் காத்தருளுபவனும் கந்தன்; வினை நீங்கிய காலத்து நம் உடம்பினை அழிப்பவனும் கந்தன்.

இவற்றுள் உயிரது வினைநீங்கிய நிலையில் கந்து அழிக்கப் பெறுகிற சிறப்பினைக் கந்தழி என்ற சொல்லாட்சியால், தொல் காப்பியர் உறுதிப்படுத்துகிறார்.

வள்ளி: என்றால் அணிகலன் எனப் பொருள் உரைக்கிறது. சூடாமணி நிகண்டு.

ஆழ்கடலில் வாழும் சிப்பியில் முத்து விளைகிறது. அது சிப்பியின் உள்ளேயே இருந்துவிட்டால் யாது பயன்? சிப்பியின் உடம்பாகிய கூட்டிலிருந்து விடுபட்டுக், கலை நிறைந்த ஒரு சிற்பியின் கையில் சேர்ந்த பிறகுதான், முத்து, ஓர் உயர்ந்த அணிகலனாக மிளிர்கிறது.

அதே போன்று உயிர் என்பது ஒரு நல்முத்து; அது மாயை என்னும் இந்த உடல் கூட்டிற்குள் சிறைப்பட்டுக் கிடக்கிறது. முருகனைச் சார்ந்து நின்று, தனது கந்து (உடம்பு) அழிக்கப் பெற்றால்தான், நல்முத்தாகிய உயிர், முருகனுக்கு ஏற்ற வஃளி (அணிகலன்) ஆகிச் சிறப்புறும். இவ்வாறு முருகன் திருவடியை அடைந்த உயிர், பேரின்பத்தில் திளைக்கிறது.

முத்திப்பேறு:

கூடாகிய சிப்பியிலிருந்து விடுபட்டு உயர்நிலை அடைகிற முத்தினைப்போன்று, அறிவு மேம்பட்ட உயிர் தனது உடற் கூட்டிலிருந்து விடுபட்டு இறையடி சேருகிறது இங்ஙனம் முத் தினைப் போன்று, உயிர் பெறுகிற நிலைத்த பேரின்பத்தை முத்திப் பேறு என மொழிந்தனர், ஆன்றோர்.

இவ்வாறு உயிரது முத்திக்கு வித்தாகும் முருகனை முத்தையா, முத்துக்குமரன் என்ற பெயர்களாலும் பரவித் துதிப்பது தமிழர் மரபு. அவன் தானாகவே விரும்பி மணந்த இச்சா சத்திக்கு, வள்ளி என்பது பெயர்.

அப்பனுக்குப் பிள்ளை: சரண் எனத் தம் திருவடியில் வீழ்ந்த பிறைச் சந்திரனைத் தம் திருமுடியில் அணியாகச் சூடினார், கருணையே வடிவான சிவபெருமான். இது சைவ வரலாறு. அறிவு மேம்பட்டு மெய்யடிமை பூண்ட உயிர் இறைவனது அணிகலனாகிறது என்பதற்கு இஃது ஒரு சான்றாகும். காலில் விழுந்தவனைத் தலையில் தூக்கி வைத்துக் கொண்டு ஆடுகிற அத்தகு அப்பனது நெற்றிக் கண்ணிலிருந்து தோன்றியவர் முருகப்பெருமான்.

ஒரு சமயம் சூரபதுமன் மயிலாகவும், சேவலாகவும் இரு கூறாகி முருகப்பெருமானைத் தாக்க முனைந்தான். வள்ளன்மை மிக்க அவரோ, மயிலை ஊர்தியாகவும் சேவலைக் கொடியாகவும் ஏற்றருளினார். அவரே வள்ளல்; அவரைச் சார்ந்த உயிர்கள் அனைத்தும் வள்ளி.

கந்தழிக்கப்பட்ட ஆன்மா, இவ்வாறு இறைவனுடைய திரு ஆபரணமாகும் விழுப்பத்தினை வள்ளி என்ற சொல்லாட்சி யால் தொல்காப்பியர் சிறப்பிக்கிறார்.

வடுநீங்கு சிறப்பு: வடு என்றால் குற்றம் அல்லது மலம் என்பது பொருள். ஆணவம், கன்மம், மாயை என்ற மூன்றையும் மலங்கள் என்பர் அருளாளர். இவற்றுள், உயிரை அநாதிகாலந் தொட்டே பிணித்து நிற்பது ஆணவ மலம் என்றும், ஆணவத் தின் தொடர்பால் தன் அறிவு முடங்கிய உயிர், தன் முனைப் போடு செய்கிற வினைகள் கன்மமலம் என்றும், இவற்றினின்று விடுபடுதற்கான, அனுபவ விளக்கத்தைப் பெறுதற்காக இறைவன் உயிருக்கு அருளிய உடல், உலகம் முதலியன, மாயாகாரியம் என்றும் சைவ சாத்திரங்கள் சுட்டிக் காட்டுகின்றன.

உயிர்களாகிய நம்மைச் சூழ்ந்துள்ள இக்குற்றங்கள் நீங்கி னால்தான் நாம் நிலையான பேரின்பத்தை அடைய முடியும். நாமாகவே அக்குற்றங்களை நீக்கிக் கொள்ளும் ஆற்றல் நமக்கு

இல்லை. இயல்பாகவே குற்றங்களின் நீங்கிய கடவுளாகிய பரசிவம் ஒருவரால்தான், நம்மைப் பிணித்துள்ள குற்றங்களை நீக்கமுடியும்.

பரசிவம் என்பது ஏவ்விதத் தொழிற்பாடுமில்லாது சும்மா இருக்கும் தனிப் பெருநிலை; முருகன் என்பது நமக்காகத் தொழிற்படுநிலை. இரண்டிலும் கடவுள்தன்மையால் வேறுபாடு இல்லை என்பதை முன்னரும் கண்டோம். எனவே நமது உலகியல் தொடர்பான வாழ்வில் முருகப் பெருமானே நமது மலக்குற்றங்களைக் களைகிறார் என்பது பெறப்படும்.

மலப்பிணிப்பின் அடிப்படையில், உயிரினத்தைச் சைவ ஞானநூல்கள்[1] மூன்றாக வகைப்படுத்தும். அவை, சகலர், பிரளயாகலர், விஞ்ஞானகலர், எல்பன,

ஆணவம், கன்மம், மாயை என்ற மூன்று மலங்களாலும் முடக்கப்பட்டு, இவ்வுலகில், உடம்பு, கருவி கரணங்களோடு, இன்பதுன்பங்களை நுகர்ந்து திரியும் நம்போன்ற ஆன்மாக்கள் சகலர்' எனப்படுவர்.

மும்மலங்களுள், மாயையின் கட்டு நீங்கிவிட ஏனைய இரண்டு மலங்களின் பிணிப்பு உடையோர், 'பிரளயாகலர்' எனப் படுவர்.

ஏனைய இரண்டும் ஒடுங்கி விட, ஆணவமலம் ஒன்று மட்டுமே, ஆற்றல் இல்லாது ஒடுங்கிப் பெயரளவில் தொடர்ந்து நிற்க, இறையருள் வயப்பட்ட ஆன்மாக்கள்' விஞ்ஞானகலர்' எனப்படுவர்.

இவர்களுள் ஊழ்வினைப் பயனை நுகர்ந்து தொலைத்தற் பொருட்டு, உலக வாழ்வினில் உழன்ற போதிலும், முருகப் பெருமானையே கொழுகொம்பாகப்பற்றிக் கொடிநிலையில் பரவத் தொடங்கும் ஆன்மாக்களாகிய சகலரும்,

அப்பெருமானது அருளால் தமது அகத்தே பொறிபுலன்கள் ஒடுங்கப் பெற்ற நிலையில், கடவுள் பற்று மிகுதிகாரணமாகக் கந்துஅழிக்கப்பட்ட உயர்ந்த ஆன்மாக்களாகிய பிரளயா 'கலரும்,

மெய்த்தவத்தால் சிவஞானத் தெளிவுற்று முதிர்ந்து முருகப் பெருமானுக்கு வள்ளி என்றவாறு மேனிலைக்கு உயர்ந்த ஆன்மாக்களாகிய விஞ்ஞானகலரும் வடுநீங்கு சிறப்புடையவர்கள் எனத் தொல்காப்பியர் குறிப்பிடுகிறார்.

கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே:

தெய்வ நிலையை இரண்டாக வகைப் படுத்துவது சைவ மரபு. ஒன்று சம்பு பக்கம்; மற்றது அணுபக்கம்.

சம்பு பக்கம்: சிவபெருமானைப் பரம்பொருளாகக் கொண்டிருப்பது சைவ சமயம். பரம்பொருள் ஒன்றே என்பது சைவ சமயக் கோட்பாடு. ஒன்றே யாயினும், உயிர்களாகிய நமது அறிவு வேறுபாட்டிற்கு ஏற்பப் பல வடிவங்களைக் கொள்ளுகிறார் இறைவன் சிவன், சத்தி, கூத்தரசன், ஆலமர் கடவுள், பிள்ளையார், முருகன் முதலிய பலவும், நம் பொருட்டு இங்ஙனம் எளிவந்த சிவமூர்த்தங்களே.

''மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்'' தேற்றனே![1] என்ற மாணிக்கவாசகரது வாழ்த்துரை, இறைவனது எளிவந்த இத்தன்மையைச் சிறப்பிக்கும்.

சிவபெருமான் கொள்ளுகிற உருவத் திருமேனிகள் பலவற்றையும், நாம் கடவுள் என வாழ்த்தி வணங்குகிறோம். அங்ஙனம் இறைவனை வாழ்த்துதற்கு உரிய பல்லாயிரம் திருநாமங்களுள் 'சம்பு' என்பதும் ஒன்று. எனவே இறைவனது எளிவந்த வடிவங்களைச் சம்பு பக்கம் என்று அழைத்தனர், ஆன்றோர்.

அணுபக்கம்: ஒவ்வொரு நொடியும், உயிர், அறிவால் முன்னேறுகிறது. படிமுறையில் சிறிது சிறிதாக வளர்ந்த உயிர், ஒருகாலத்தில் சிவஞானத் தெளிவு பெற்று முத்திப் பேறு எய்துகிறது. திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி, மாணிக்க வாசகர் முதலிய பலகோடி மெய்யடியார்கள் இவ்வாறு சிவசாயுச்சிய முத்தி நிலையினைப் பெற்றிருக்கிறார்கள்.

---

1. திருவாசகம் - சிவபுராணம்.

உயிருக்கு உள்ளது சிற்றறிவு, அதனையும் முடக்கி உயிரின் வியாபகத்தை அணு அளவினதாக ஆக்கிவிடுகிறது, ஆணவம் என்ற இருள்மலம். எனவே ஆணவச் சார்புடைய உயிரை, 'அணு' என்றே அழைத்தனர் அருளாசிரியர்கள். ஆணவ மலப் பிணிப்புகள் நீங்கித் தெய்வத் தன்மையுறுகிற ஆன்மாக்களை **அணுபக்கம்** என்று அவர்கள் சுட்டி உரைத்தனர்.

கொடிநிலை, கந்தழி, வள்ளி என்ற மூவகை உயிர்களும் முருகன் திருவருளால் மலக்குற்றங்கள் நீங்கப்பெற்றுத் தூய ஆன்மாக்களாய்த் தெய்வ நிலை எய்தியவை. உலகியலில் உழலும் நம்முடைய கீழ்மையை நோக்க இவ்வான்மாக்கள் மிக மிக உயர்ந்தவர்கள்; எனவே கடவுளோடு வைத்துப் போற்றத் தக்கவராவர்.

இதனால், இறைமையைப் பற்றுக் கோடாகக் கொண்டு, படிமுறையில் வளர்ந்து வரும் ஆன்மாக்களும், பற்றறுத்துப் பிறவி நீக்கும் பெறுகிற சீவன்முத்தான்மாக்களும் பரமுத்தி இன்பத்தில் திளைக்கிற உயர்சிறப்புடைய ஆன்மாக்களும் குருமார்களாகச், சப்பு பக்கக் கடவுளரோடு சேர்த்து, வாழ்த்தி வணங்கத் தக்க அணுபக்கக் கடவுளராவர் என்பது தொல்காப்பியரது அறிவுரையாகும்.

சைவ இலக்கிய நூல்களில், கடவுள் வாழ்த்தினைத் தொடர்ந்து, சமய சந்தான குரவர்களுக்கான வாழ்த்துகள் அமைந்திருப்பது, தொல்காப்பியரது இவ்விலக்கணத்துக்குச் சான்று பகரும் இலக்கியமாகும்.

தொகுப்புரை:

தொல்காப்பியர் இந்த நூற்பாவினைக் கொண்டு, சைவ சித்தாந்தத்தின் சீரிய பல கோட்பாடுகளைத் தெளிவாக உணர்த்துகிறார். அவற்றைத் தொகுத்து நோக்குவோம்.

ஆன்மா என்பது, அறிவுப்பொருள் ஆயினும், அது சிற்றறிவு ஆன்ம அறிவின் வளர்ச்சி, ஓரறிவுப் பொருளாகிய செடிகொடிகளில் தொடங்குகிறது. ஈரறிவு, மூவறிவு, நாலறிவு, ஐயறிவு என அது படிமுறையில் வளரும்போது, அறிவுக்கு ஏற்ற உடம்பினை (கந்தினை) உயிர் அவ்வப்போது பெறுகிறது.

ஒவ்வொரு கந்தாக அழிந்து புதிய கந்தினைப் பெற்று ஆறாவது அறிவாகிய மனத்தினைப் பெற்றதனால் மனிதனாகிறது.

மனித உடலிலுள்ள உயிரும், தத்துவ அறிவு, ஆன்ம அறிவு, இறைமை உணர்வு[1] எனப் படிமுறையில் வளர்ந்து வருகிறது.

அப்போது அது கொழுகொம்பினைச் சுற்றிச்சூழ்ந்த கொடி நிலைக்கு உயர்கிறது; கந்து முழுமையாக அழிக்கப் பெறுகிறது ஆதலால், கடவுளுக்கு அணிகலனாகிறது.

ஒவ்வொரு நிலையிலும் கடவுளரோடு சேர்த்துச் சிந்தித்து வாழ்த்தத் தக்க சிறப்புடைய தாகிறது.

தொல்காப்பியர் அறிவுறுத்தும் சீரிய இக்கருத்துக்களைச் சைவசித்தாந்த சாத்திரங்கள் எவ்வாறு கூறுகின்றன என நோக்குவோம்:

1 முப்பொருள் உண்மை:

இறை; பரசிவம் என்பது தனிப்பெரு நிலை; முருகன் என்பது பொது (அல்லது, தொழிற் படு) நிலை.

உயிர்: ஓரறிவு முதல் ஆறறிவு வரை கருவிகளை உடையனவும், அதற்கும் மேலாகச் சிவஞானத் தெளிவு பெற்றவையுமான கோடானுகோடி ஆன்மாக்கள்.

தளை: வடு, குற்றம், பாசம், கட்டு, மலம், இருள் எனப் பலவாறு அழைக்கப்படுவனவும், உயிரினத்தை இறைஇன்பத்திற்குச் செல்ல விடாது மறைத்தும், தடுத்தும், மயக்கியும் நிற்பனவு மான பந்தங்கள்.

இவை மூன்று பொருள்களும், எக்காலத்திலும் உள்ள நிலையான பொருள்கள் என்பது சைவத்தின் அடிப்படையான கொள்கை. இவற்றை முறையே, கடவுள் என்ற சொல்லாலும் கொடிநிலை, கந்தழி, வள்ளி என்ற சொற்களாலும் வடு என்ற சொல்லாலும் தொல்காப்பியர் அறிவுறுத்துகிறார்.

---

1 இதனைப் பாசஞானம், பசுஞானம், பதிஞானம் எனப் பகர்வர், சைவ ஞான நூலார்.

இவ்வாறு, சைவசித்தாந்தத்தின் பதி.பசு. பாசம் என்ற முப்பொருள் உண்மைக் கோட்பாடு, தொல்காப்பியரால் மற்றொரு வடிவில் உரைக்கப்படுகிறது'

2. சார்ந்ததன் வண்ணமாவது உயிர்: உயிர் எந்தப் பொருளைச் சார்ந்து நிற்கிறதோ அந்தப் பொருளையே தனக்குப் புகலிடமாகச் சார்ந்து அதிலேயே மேன்மேலும் அழுந்தி பாசத்தோடு சேர்ந்து பாசமாகவும், இறையோடு சேர்ந்து இறையாகவும் நிற்கும் இயல்புடையது.

பண்டைக் காலந் தொட்டுப் பாசங்களால் பந்திக்கப் பட்டிருந்த உயிர், குற்றமுடையது. தளைகள் நீங்கி இறைமையை அடைய விரும்பும் உயிர், வடுநீங்கு சிறப்புடையது. அது கொடிபோல் படர்ந்து இறைவனது திருவடியைப் பற்றிக் கொண்டு மேலே உயர்கிறது எனச் சைவ நெறியில் குறிப்பிடுகிறார் தொல்காப்பியர்,

3. வினை என்னும் வித்து: நல்வினை தீவினைகளாகிய இரண்டும் இருள் சேர் இருவினைகளாம். இவை தளைகள் என்றும் வடுக்கள் என்றும் சுட்டப் படுவன. வினைகளே உயிர்களது பிறப்பு இறப்புச் சுழற்சிக்கு வித்தாவன. இவை ங்கிய உயிர், மீண்டும் பிறப்பதில்லை. எனவே வினையின் நீங்கிய உயிர்களுக்கு உடல் என்ற மாயா இயந்திர தனு மாயப் பொறி (Mechanical Device) தேவையில்லை. சிவாகமங்கள் கூறும் இவ் உண்மையைக் கந்தழி என்ற சொல்லாட்சி மூலம் தொல்காப்பியர் அறிவுறுத்துகிறார்

4 வடுநீங்கு சிறப்பு: தம் திருவடியில் வீழ்ந்து சரண் அடைந்த பிறைச் சந்திரனைத் தமது திருமுடியில் அணியாகச் சூடினார், சிவபெருமான். இயல்பாக, வடு உடையது சந்திரன். கலைகள் தேயத் தேய வடுவும் தேய்ந்தது. இவ்வாறு வடுத் தேய்ந்து தூய்மையுற்ற பிறை, சிவபெருமானுக்கு அணிகலனாகி, மாதர்ப்பிறை[1] யாகி மாண்புற்றது.

---

1 மாதர்ப்பிறை: [திருவையாற்றுத் திருப்பதிகம்] – திருநாவுக்கரசர்,

பாசங்கள் நீங்கிய உயிர் ஒவ்வொன்றும், இதே போன்று, இறைவனைச் சரணடைகிறது. அவனுக்குரிய உயரிய அணி கலனாகிறது. சைவ ஆன்மாவின் இச்சிறப்பினை 'வள்ளி என்ற அழகிய சொல்லால் அறிவுறுத்துகிறார். தொல்காப்பியர்.

5 **மலபரிபாகம்:** ஆணவம், கன்மம். மாயை என்ற மூன்றும் தளைகள். அவை களையப்பட வேண்டிய பொருள்கள். அவ்வாறு தளை நீங்கித் தூய்மையுற்ற உயிர்தான் சிறப்புநிலை அடைகிறது. இதனை 'வடு நீங்கு சிறப்பு' என்ற தொடரால் தொல்லாசிரியர் உணர்த்துகிறார்.

6 **மூவகை வழிபாடு:** தெய்வ வழிபாட்டைக் குருவழிபாடு என்றும், இலிங்க வழிபாடு என்றும், சங்கம வழிபாடு என்றும் மூன்று வகையாகச் சைவ சித்தாந்தம் உணர்த்தும்.

கொடிநிலை என்ற தொடர்மூலம் சங்கமம் எனப்படும் மெய்யடியார் நிலையையும், கந்தழி. வள்ளி என்ற சொற்களின் மூலம், உடலோடு கூடியிருந்த போதிலும் உலகப்பற்று நீங்கிப், புலன்கள் அடங்கி, இறைமைச் சிந்தனையில் ஊற்றமுடன் நிற்கும் சீவன்முத்தராகிய (குரு) ஆசிரிய நிலையையும், கடவுள் என்ற சொல்லாட்சி மூலம் இலிங்க நிலையையும் கூறிச் சைவ சமய முத்திற வழிபாட்டின் இன்றியமையாத தன்மையை அறிவுறுத்துகிறார், தொல்காப்பியர்.

7 **மூவகை ஆன்மாக்கள்:** தளைகளின் பிணிப்பு நிலைக்கு ஏற்ப, ஆன்மாக்களை மூன்று வகைப் படுத்துவர், சைவ அருளாளர்.

ஆணவம், கன்மம், மாயை என்ற மூன்று மலங்களாலும் ஒருங்கே பிணிக்கப்பட்டவர், சாதாரண உயிர்களாகிய நம்போன்றோர். இவர்களைச் சகலர் என்ற சொல்லால் சித்தாந்திகள் குறிப்பிடுவர்.

இவர்களுள் கடவுளை நம்புவோரும் உண்டு. நம்பாதவரும் உண்டு. இவர்கள் முறையே அகத்திணை புறத்திணையின்பால் அமைவர்.

நம்பாதவரைக் கைக்கிளை என்னும் சிறுமைப் பண்பாளருள் சேர்த்துப் புறத்திணையிலும், நம்பினவர்களை அறவழிப்பட்ட ஐவகை ஒழுகலாறுகளுள் (ஐந்திணையுள்) சேர்த்து அகத்திணையிலும் அமைத்துக் காட்டுவார், தொல்காப்பியர். நம்புவோர், கடவுளையே கொழுகொம்பாகக் கொண்டு கொடி எனப் படர்ந்து முன்னேறுவர். சகலர் எனப்பெறும் இவர்கள், மூன்றாம் தர உயிர்கள் ஆவர்.

கந்தழிக்கப்பட்ட நிலையில் மாயா உடற்கட்டு நீங்கி, அல்லது உடம்பு இருந்தபோதிலும், மாயா உலகத்தின் பிடிப்புத் தளர்ந்த நிலையில், ஆணவமும் கன்மமும் மட்டும் பந்தித்து நிற்கும் இரண்டாம் தர உயிர்கள் பிரளயா கலர் ஆவர். பிரளய காலங்களில் மலமாகிய வடுநீங்கப் பெறுகின்றமையின், இப் பெயர் பெற்றனர்.

மாயையும், வினையும் நீங்கிவிட, ஆணவம் என்ற மூல மலமும் இறுதியில் தன்வலி இழந்து பெயரளவில் நிற்கும். இந்த நிலையில், 'எல்லாம் பரசிவத்தினது விருப்பம், அவரது அறிவு, அவரது செயல்' எனத் தெளிந்து, முத்திப் பேரின்பத்தில் நிலைபெறுகிற முதிர்ந்த ஆன்மா, முதல்தர ஆன்மாவாகும்.

சிவஞானத் தெளிவுடைய இவ்வகை ஆன்மாக்கள் விஞ்ஞான கலர் ஆவர். சிவஞானம் என்ற சிறப்பு அறிவு (விஞ்ஞானம்) பெற்றமையால் வடுக்கள் நீங்கப்பெறுகின்றமையின், இப்பெயர் பெற்றனர்.

இவ்வாறு சகலர், பிரளயாகலர், விஞ்ஞானகலர் எனச் சைவசித்தாந்த ஞானநூல்கள் வகைப்படுத்திய மூவகை உயிர் நிலையை முறையே கொடிநிலை என்றும் கந்தழி என்றும் வள்ளி என்றும் தொல்காப்பியர் சிறப்பித்துள்ளார்.

கொடிநிலை என்பது உயிரின் தொடக்க வளர்ச்சி நிலைகளையும் கந்தழி என்பது பிறவித்தளை அறுபட்ட இறைமை நிலையையும், வள்ளி என்பது முதிர்ந்த உயிரது முத்தி இன்ப நிலையையும் குறிப்பனவாய்த் தொல்காப்பியத்தில் இடம் பெறக்காணுகிறோம்.

8. **கடவுள் வாழ்த்தும் அடியார் வாழ்த்தும்:** மெய்யடியார்களாகிய சகலரும், பொறிபுலக் கட்டு நீங்கி இறைவழியில் நிற்கும் பிரளயாகலரும், மூலமலமும் தன்வலி இழந்த நிலையில் சிவ ஞான விளக்கம் பெற்று அயராத அன்போடு அரனது திருவடி சேர்கின்ற விஞ்ஞானகலரும் ஆகிய மூவகைப் பேரருளாளரும் கடவுளோடு சேர்த்துச் சிந்திக்கவும் வாழ்த்தவும் வணங்கவும் தக்கோராவர்.

''மால் அற, நேயம் மலிந்தவர் வேடமும் ஆலயம் தானும் அரன்எனத் தொழுமே''[1] என்ற மெய்கண்டார் திருவாக்கும், தொல்காப்பியர் கூறும் பண்டைத் தமிழ்ப் பண்பாடும் இவ்வாறு ஒரேகருத்தையே விளக்குகின்றன.

சைவ நூல்களிலும் விநாயகர், பரசிவம், பராசத்தி, நடராஜர் தக்ஷிணாமூர்த்தி, முருகன், கலைமகள், திருமகள் முதலிய கடவுளர்க்கான வாழ்த்துக்களைத் தொடர்ந்து, திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், திருநாவலூரர், திருவாதவூரர் முதலிய சமய சந்தான குரவர்களாகிய உயர்பக்குவ ஆன்மாக்களுக்கான வாழ்த்துக்களைக் கூறுவதும் சைவமரபாக உள்ளது.

9 பரசிவத்தையும் அவரது எளிவந்த தோற்றங்களையும் சம்புபக்கம் என்றும், ஆன்ம நிலையிலிருந்து சிவஞானத்தால் உயர்வு பெற்ற ஆன்மாக்களை அணுபக்கம் என்றும் சித்தாந்த சைவநூல்கள் கூறும்.

பரசிவத்தைக் 'கடவுள்' என்ற சொல்லாலும் ஆன்மவர்க்கத்தை 'முதலன மூன்றும்' என்ற தொடராலும் தொல்காப்பியர் குறிப்பிடுகிறார்.

10) கடவுள் ஒருவரே என்பதும் உயிர்கள் கோடானுகோடி என்பதும் சைவ சித்தாந்தம். தொல்காப்பியத்தில் இவ்உண்மை இங்குத் தெளிவாக வலியுறுத்தப் பெறுகிறது.

11 முத்தியில் ஆன்ம நிலை; முத்திப்பேற்றில் ஆன்மாவின் நிலை என்ன என்பது பற்றிச் சைவசித்தாந்தம் தெளிவாகக் கூறுகிறது.

1] சிவஞான போதம் 12-ஆம் குத்

உயிர் என்பது சீவான்மா, பரசிவம் என்பது பரமான்மா. முத்திநிலையில் உயிர் பரசிவத்தை அத்துவிதமாகக் கூடுகிறது. ஆயினும் ஏக ஆன்மாவாக ஐக்கியமாவதில்லை; சிவத்துக்குச் சமமாக ஐந்தொழில் செய்வது மில்லை.

சிவனும் சீவனும் கலப்பால் ஒன்றாகவும், பொருள் தன்மையால் இரண்டாகவுமே உள்ளனர். இறைவன் தலைவன்; உயிர் அவனது உடைமை. முத்தி இன்பத்தைப் பரசிவம் ஊட்டுகிறார் உயிர் அதனை நுகர்ந்து இன்புறுகிறது. இவை சைவசித்தாந்தம் அறிவுறுத்துகிற சுத்தாத்துவித சைவக் கோட்பாடுகள்.

இதே போன்று, கடவுள் என்ற பரம்பொருள் வேறு, வள்ளி என்ற முத்தான்மா வேறு என்பதைக் குறிப்பால் பிரித்து உணர்த்திய தொல்காப்பியர், கடவுள் வாழ்த்தைத் தொடர்ந்து, உயர்நிலை ஆன்மாக்களின் வாழ்த்தும் சேர்ந்து அமையத்தக்க விழுப்பமுடையது என்றும் கூறுவதன்மூலம் சுத்தாத்துவித சைவசித்தாந்தத்தைத் தெளிவாக உணர்த்துகிறார்.

தலைச்சங்க, இடைச் சங்க காலங்களில் உயரிய இச்சைவக் கோட்பாடுகள் மேலோங்கி இருந்தன என்பதற்குத் தொல் காப்பியரது இந்த நூற்பா சான்று பகர்கிறது.

கருத்துரை: கொடிநிலையிலுள்ள உயிர்களும் கந்தழிக்கப் பட்ட உயிர்களும், வள்ளி எனும் இறை ஆபரணமாகிய உயிர் களும், மலக்குற்றம் நீங்கியவை. எனவே முதல்நிலை அறிவு பெற்ற அவை கடவுள் வாழ்த்தொடு சேர்த்துக் கருதத் தக்க சிறப்புடையவை.

நிறைவுரை: இங்ஙனமாக, இருள்வினை செய்த ஆன்மா எவ்வாறு இறைவன் திருவடி இன்பத்தை உணராமல், பிரிந்து, செய்மையிலும், அருள்வினை ஈட்டிய ஆன்மா தலைவிநிலைக்கு உயர்ந்து, இறைவனது இன்பத் திருவடியைக் கூடி, அணிமையிலு மாக நிற்கின்றன என்பவற்றை மேல்வரும் 'களவியலில் காண்போம்.

3 களவியல்

அ களவுப் புணர்ச்சி

தலைமகன் ஒருவனும் தலைமகள் ஒருத்தியும் தனி இடத்தே சந்திக்கின்றனர். இனம் தெரியாத ஓர் உள்ளுணர்வால் உந்தப் பட்டு, ஒருவர்பால் ஒருவர் ஈர்க்கப்படுகின்றனர். அதன் விளைவு குறிஞ்சி ஒழுக்கமாகிய புணர்ச்சி.

இக்களவுப் புணர்ச்சியை, 'அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கின் காமக் கூட்டம்' என மொழிவார், தொல்காப்பியர்.

விளையாடுதற் பொருட்டுத் தன் தோழியரோடு வெளியிடத் துக்கு வந்தவள், தலைமகள். விதிவயத்தால் அவர்களைப் பிரிந்து தனியளான நிலையில், தலைவன் எதிர்ப்படுகிறான்.

வேட்டையாடுதற்குத் தன் கூட்டத்தோடு வந்தவன், தலைவன். அவனும் தலைவியைப் போன்றே விதிவயத்தால் தன் தோழரைப் பிரிந்து தனியனாகி, மானைத் தேடி வந்த நிலையில், இப்பெண்மானைக் காணுகிறான்.

அன்பின் பெருக்கு, ஐந்திணை ஒழுக்கத்திற்கு அடிகோலு கிறது. இதனைத் தொல்காப்பியர், இரண்டு நூற்பாக்களின் மூலம் சிறப்பாகப் பேசுகிறார்.

நூற்பாக்களின் உள்ளீடான கருத்துக்கள் சைவ சித்தாந்தத் தோடு மிகவும் பொருந்தி வருகின்றன. ஆனால் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட இவ் உயரிய சங்க நூலுக்குச், சில நூற்றாண்டுகளுக்கு முன் உரை எழுதிய நல்லாசிரியர்கள், எக் காரணம் பற்றியோ சித்தாந்த சைவக் கருத்துக்களை இணைத்துச் சிந்திக்காது விட்டிருக்கின்றனர்.

வேதங்களும் சிவாகமங்களும் சிவபெருமானாலேயே அருளப் பெற்றன என்பது சைவச் சான்றோர்களது தெளிவான கருத்து. வேதங்கள் என்பன உலகில் வாழுகிற உயிர்ப்பொருள்கள், உயிரில் பொருள்கள் அனைவர்க்கும் பொதுவான அறிவுரைகளை யும் அற நெறிகளையும் கூறுவன; எனவே பொதுநூல்.

சிவாகமங்களோ எனில், மனம் என்ற ஆறாவது அறிவினைத் துணையாகக் கொண்டு, மேன்மேலும் அறிவு விளக்கம் பெற்றுச் சிவஞானத் தெளிவு பெறுகிற மேநிலை ஆன்மாக்களுக்கான சிறந்த அருள் நெறிகளை உணர்த்தி நிற்பன; எனவே சிறப்பு நூல்களாகப் போற்றப் பெறுகின்றன.

ஊழியின் தோற்றக் காலம் தொட்டே, வேதங்களும் சிவாகமங்களும் நிலவி வருகின்றன.

புறச்சமய ஊடுருவல்;

வேதக் கொள்கைகளில் முரண்பட்டு, வேற்றுச் சமயங்களைப் பரப்பிய புத்தரும், சமணரும் பிறரும், பண்டு தொட்டே, வேத சிவாகமங்களை ஒழித்துக்கட்ட முற்பட்டனர். அம்முயற்சியின் ஒருகூறு, சிவபெருமானைப் பற்றிப் பேசுகிற நூல்கள் அனைத்தையும் அழித்தல்.

எனவே கடல்கொண்ட சைவத்தமிழ்ச் சங்கநூல்களோடு, கடல்கொள்ளுவிக்கப்பட்ட சைவ நூல்களும் எண்ணிலடங்காத வையாய் இருத்தல் வேண்டும். பொதுவான உலக அறநெறி கூறும் நூல்களிலும், சைவக் கடவுளரது பெயர்கள் மட்டும் புறச் சமயக் கடவுளரது பெயர்களாக மாற்றப்பட்டுத், தோற்றக் காலத்தில் சைவ நூல்களாக இருந்தவை, இடைக் காலத்தில் பிறசமய நூல்களாக மதமாற்றம் செய்யப்பட்ட அவலமும் உண்டு (எ.டு) ஆலமர் கடவுள், அசோக மரத்து அருகன் ஆயினமை.

சைவசமய மறுமலர்ச்சி:

ஏழாம் நூற்றாண்டுத் தொடக்கம், திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி, மணிவாசகர் போன்ற சைவ அருளாளர்கள் தமிழகம் முழுவதும் சைவ நெறியைப் பரப்பினர். 'வேதநெறி தழைத்தோங்க மிகு சைவத்துறை விளங்க' அவர்கள் இயற்றியருளிய சித்தாந்த சைவ சாரமாகிய தேவார, திருவாசகத் தீந்தமிழ்ப் பனுவல்கள், கேட்போர் உள்ளத்தை உருக்கிச் சிந்தனையைச் சிவன்பால் செலுத்தவல்லன.

என்றாலும் தத்தம அறிவின் முதிர்ச்சிக்கு ஏற்பவே, நூல்களைக் கற்றல் உலகப் பொதுவழக்கு. எனவே உலகப் பொது நூலாகிய வேதங்களைக் கற்றோர் மிகுதி. சிறப்பு நூலாகிய சிவாகமங்களைப் பயிலுகிற உயர்நெறியாளர் குறைவு. உயர்நிலைப் பள்ளி மாணவர்களின் எண்ணிக்கைக்கும், கல்லூரி முதுகலை மாணவர்களின் எண்ணிக்கைக்கும் உள்ள வேறு பாட்டினைப் போன்றதே இது.

எனவே தொன்மைக் காலத்துத் தொல்காப்பியம் இறையனார் களவியல் போன்ற விழுமிய சைவ நூல்களுக்கு உரை எழுதிய பிற்கால நல்லாசிரியர்கள், வேதக் கருத்துக்களின் தாக்கத்திற்கு ஆட்பட்டதிவ் வியப்பில்லை.

சங்கத் தமிழின் விழுமிய சைவக்கோட்பாடுகளை உணராது வேதநூல்களின் துணைகொண்டு, அவர்கள், உலக முகப்படுத்தி உரைகள் எழுதினர், படித்தற்கு எளிதாய்ப் பழக்கத் தோடு ஒத்ததாய், உள்ளத்திற்கு உவகை ஊட்டுவதாய் அவ்வுரைகள் அமைந்தன.

உரையில்லாத பழம்பெரும் நூல் ஒன்றிற்குச் சில உரைகள் கிடைக்கின்றன; அதுவும் வேதக் கருத்துக்களை ஆங்காங்கே மேற்கோள் காட்டி. என்றால், அவற்றை உலகியல் இன்பமே குறிக்கோளாகக் கொண்ட மக்கள், ஏற்றுக் கொள்ளுவதில் தடை என்ன?

வாழையடி வாழையாகப் பலகாலும் பயின்று வரும் அவ் உரைகளை, உண்மைச் சைவ நெறிக்கு ஆற்றுப்படுத்துவ தென்பது அவ்வளவு எளிதாமோ?

எனினும் தொல்காப்பியரது தெய்வ மணம் கமழும் நூற் பாவையும், அதன் அடி ஆழத்தில் பொதிந்து கிடக்கும் நுண் பொருளையும் அகழ்ந்து காண முற்படுதல் விழுமிய சைவத் திற்கும், தெய்வத் தமிழுக்கும் செய்கிற அரியதொரு தொண் டாகும்.

இனி, நூலினை நோக்குவோம்:

காமக்கூட்டம்: காமக்கூட்டம் என்பது என்ன? அதற்கு ஏது வாயிருப்பது யாது? கூட்டம் எங்கு நிகழ்கிறது? கூட்டத்திற்குத் துணை நிற்போர் யாவர்? அவர்தம் இயல்புகள் யாவை? துணை யாகும் கருவிகள் யாவை? என்பன போன்ற பல சிந்தனைகளை உள்ளடக்கியதாய்த் தொல்காப்பியக் களவியல் முதல் நூற்பா அமைகின்றது.

ஆ மறையோர் தேயமும் மன்றல் எட்டும்:

"இன்பமும் பொருளும் அறனு(ம்) என்(று) ஆங்(கு)
அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கின்
காமக் கூட்டம் காணும் காலை,
மறையோர் தேஎத்து மன்ற(ல்) எட்டனுள்
துறையமை நல்யாழ்த் துணைமையோர் இயல்பே"[1]

என்பது தொல்காப்பிய நூற்பா.[1] இதன் பதவுரை, கருத்துரை மற்றும் விளக்க உரையைக் காண்போம்.

பதவுரை:

இன்பமும்: உண்மையானதும், நிலையானதும் முற்றறிவின் பாற் பட்டது மாகிய பேரின்பமும்,

பொருளும்: அப்பேரின்பத்துக்கு நிலைக்களனாகிய சிவம் என்னும் செம்பொருளும்,

அறனும்: அப்பேரின்பத்தை அடைதற்கான சிவானுட்டான வழிமுறைகளாகிய சிவாகம அறநெறியும்,

என்றாங்கு: என்ற இவை எல்லாம்

அன்பொடு புணர்ந்த: உண்மையான உள்ளன்புடன் கூடிய

ஐந்திணை மருங்கின்: குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்ற ஐவகை ஒழுகலாறுகளின் வழிநிகழ்கின்ற புணர்தல் இருத்தல், ஊடல், இரங்கல், பிரிவு ஆகிய ஐந்து உரிப்பொருள் களுள்:

1, தொல். களவியல்-1

காமக்கூட்டம்: ஆண்டவன்—ஆன்மாவுக்குள் நிகழும், களவுப் புணர்ச்சியாவது என்ன என்பதை,

காணுங்காலை: மூன்றாவதாகிய சிவஞானக் கண்கொண்டு நோக்கும் போது,

மறையோர்: வேதசிவாகம முறைப்படி முக்காலமும் சிவ வழிபாடு செய்து, சிவயோகத்தில் முதிர்ச்சியுற்ற மேநிலையிலுள்ள அறவோர்,

தேயத்து: (அத்தகு அறவோராகிய ஆன்மாக்கள்) தங்குகிற இடமாகிய மனித உடம்பின்கண்,

மன்றல் எட்டனுள்: மூலாதாரம் முதல் துவாதசாந்தம் வரையுள்ள எட்டுத் தானங்களுள்,

துறையமை: முறையாக அமைந்த

நல்யாழ்: நரம்புமண்டலத்தின், பேரியாழ் போன்ற, முதுகுத் தண்டினை இயக்கி உயிருக்கு ஆற்றல் விளக்கம் அருளுகின்ற.

துணைமையோர் இயல்பே: சிவசத்தியினது எளிவந்த தோற்றங்களாகிய கலைமகள் முதலானோரது கருணை வெளிப்பாடே ஆம்.

கருத்துரை

சிவபெருமானாகிய தலைவன் சீவனாகிய நம் போன்ற உயிர்களைக் கூடிப் பேரின்பம் அருளுவதற்குச் சிவசத்தியே துணைக் காரணம் ஆகிறாள். அஃது இந்த மனித உடலில் நிகழ்கிறது.

விளக்கவுரை

மறையோர்: 'மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்' என்பது திருவாசகம்.[1]

அறிவு வேறுபாட்டால், உயிர்கள் பல திறத்தனவாய் உள்ளன. அவற்றை ஓரறிவிலிருந்து ஆறறிவு வரை பகுத்தும் விரித்தும் கூறுகிறார் தொல்காப்பியர்.

மனம் என்ற ஆறாவது அறிவு பெற்றவர்கள், மனிதர்களாகிய நாம். நம்மிலும் வேறுபாடுகள் ஏராளம். காமம் சாலா இளமையோள் (53)', அடியோர், வினைவலர் (25)', ஏவலர் (26) மிகுகாமத்தோர் (54)' அறிவர் (153) மேலோர் (31) மையறு சிறப்பின் உயர்ந்தோர் (115) நிறைமொழி மாந்தர் (480) முதலிய பல்வேறு பக்குவ நிலையில் உள்ள மக்களைத் தொல்காப்பியர் சுட்டிக் காட்டுகிறார்.

வேத சிவாகமங்களாகிய திருமறைகள், சிவபெருமானால் அருளப் பெற்றன என்பது சைவநூல் துணிபு அவற்றில் வல்லவர்கள், முதிர்ந்த சிவயோகிகளாய்ச் சிவஞானத்தில் தலைப் பட்டிருந்தனர்; வேதசிவாகம நெறி நின்று, சிவத்தையே இடையறாது தியானித்திருந்தனர். இத்தகைய அருளாளர்களே மறையோராவர்.

தேஎம் என்றால் இடம்; நிலைக்களன் என்பது இதன் பொருள். உயிர் குடியேறியுள்ள நம் உடம்பே, இந்த உயிருக்குத் தேயம் ஆகும்.

மன்றல் எட்டு: ''மனுவும் கௌடில்யரும், மரபின்படி எண் வகை மணங்களை விவரிக்கின்றனர். அவற்றுள் சில, மணம் என்ற பெயருக்கே தகுதியற்றவை''[1] என மொழிவர், ஆய்வாளர். ஆகவே, தமிழ்ச் சான்றோராகிய தொல்காப்பியர் தகுதிக் குறைவான அவ் எண்வகை வடபுல மணங்களைக் குறித் திருப்பார் என்பது பொருந்து மாறில்லை.

ஆகவே மன்றல் எட்டு யாவை என்பதைச் சைவசித்தாந்த நோக்கில் சிந்திப்போம்.

பொதுவாக நம் உடல் முழுவதும் உயிர் பரவியிருப்பினும் சிறப்பாக உயிர் உடலில் தொழில்பட்டு அறிவு விளக்கம் பெறும் இடங்கள் ஆறு என்ப.

---

1 கீழை மேலை நாடுகளின் மெய்ப் பொருளியல் வரலாறு தொகுதி 1 பக்கம் 168 அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அனாகதம், விசுத்தி, ஆக்ஞை என்ற ஆறும் உயிர் தொழிற்படுகிற ஆறு ஆதாரங்களாம். இவை ஆறும் மாயையின் விரிவாகிய மைய நரம்பு மண்டலத்தில் உள்ளவை.

ஆறு ஆதாரங்களோடு சஹஸ்ராரம் என்ற உச்சித்தலையும், துவாத சாந்தம் என்ற மீதானப் பெருவெளியும் சேர்த்து, மொத்தம் எட்டுத் தானங்கள் ஆயின.

சஹஸ்ராரம்:

அறிவுத் தானமாகிய நம் பெருமூளையை ஆயிரம் இதழ் கொண்ட ஒரு தாமரை மலராகக் கொள்ளுவர் ஆன்றோர். இதுவே ஏழாவதாகிய சஹஸ்ராரம் (அ) பிரமரந்திரம் என அழைக்கப்படுகிறது,

மீதானம்:

இதனைத் துவாத சாந்தம் என அழைப்பர் வடநூலார். நமது உடம்புக்கு வெளியே தலைஉச்சிக்குப் பன்னிரண்டு அங்குல உயரத்தில் மீதானத்தில் சிவபெருமான் எப்பொழுதும் திரு நடனமிடுகிறார். அங்கு அவர் சச்சிதானந்தப் பேரொளியாய்த் திகழ்கிறார்.

எத்தொழிலும் செய்யாது மீதானப் பெருவெளியில் சும்மா இருக்கும் பரம்பொருளாகிய சிவபெருமான், உயிர்களாகிய நமது மேம்பாட்டிற்காக மிகமிக எளிவந்த தோற்றங்களுடன் ஆதாரத் தானங்களில் தங்குகிறார்,

மூலாதாரத்தில் சிந்திப்போரது இடர்களைக்களையும் விநாயக ராகவும்,சுவாதிட்டானத்தில் சிவயோக ஞானத்தைத் தோற்றுவிக் கும் படைப்புக் கடவுளாகிய சிவபிரமாவாகவும், மணிபூரகத்தில் காத்தற் கடவுளாகிய சிவவிட்டுணுவாகவும், அனாகதத்தில் மல மாசுகளை ஒடுக்கும் கடவுளாகிய சிவருத்திரராகவும்,

விசுத்தியில் மறைந்து நின்று அனைத்தையும் இயக்கும் மஹேஸ்வரராகவும்,

ஆக்ஞையில் ஆன்மாவுக்குப் பேரின்பம் ஊட்டும் சதாசிவ ராகவும் தொழிற்படுகிறார்.

ஆக்ஞை என்ற ஆறாவது ஆதாரத்தில், ஞானமும் கிரியை யும் சம அளவில் உள்ள சதாசிவமாக இறைவன் தொழில் படுகிறார்.

நாத தத்துவத்தில் ஞானமே வடிவாகச் சிவன் என்ற பெயரோடு, சத்தியைத் தொழிற்படுமாறு விந்து தத்துவத்தில் செலுத்தி நிற்கிறார்.

சிவனும் சக்தியும் அர்த்த நாரீஸ்வர வடிவத்தில் நாத விந்து தத்துவங்களாகப் பெருமூளையின் வலது இடது கூறுகளில் இவ்வாறு ஐந்தொழில் இயற்றும் இடம் சஹஸ்ராரம் எனப்படும்

ஆறு ஆதாரங்களில் நின்று அறிவு விளக்கம் பெற்ற உயிர், உலகப்பொருள்களின் நிலையாமையையும், உயிராகிய தன்னுடைய ஆற்றலின் சிறுமையையும் தெளிவாக உணர்கிறது. இதனைத் தத்துவசுத்தி என்றும் ஆன்மசுத்தி என்றும் ஞான நூல்கள் கூறுகின்றன.

இடம் தலைப்பாடு: இத்தகைய பக்குவம் பெற்ற உயிர் ஏழாவது தானமாகிய சஹஸ்ராரத்திலுள்ள சிவபெருமானது திருவடியையே மனம் ஒன்றித் தியானிக்கிறது. அதன் மூலம் இவ்வுடலுடனேயே இவ்வுலகில் வாழும் போதே சிவபெருமான் என்ற தலைவரது திருவடியை ஆக்ஞை என்ற ஆறாவது ஆதாரத்தில் கூடிப் பேரின்பத்தில் திளைக்கிறது. களவுப் புணர்ச்சிக்கு இடம் தலை எனவே இடம் தலைப்பாடு என்றனர்.

இதனைச் சீவன் முத்த நிலையின் தொடக்கம் எனல் பொருந்தும்.

இல்வலியுறுத்தல்: மனித உடலில் முதுகுத் தண்டிலுள்ள முதல் ஐந்து ஆதாரங்களில், உயிர் என்னும் தலைவி இற்சிறைப் பட்டு இரந்து நிற்கிறாள்; பெருமூளையின் கீழுள்ள ஆறாவது ஆதாரமாகிய ஆக்ஞையில், சிவபெருமான் திருவடியைக் கூடி இன்பம் துய்க்கிறாள். ஆயினும் அது களவுப் புணர்ச்சியே.

எனவே, தலைமகன் தலைமகளைக் கற்பு நெறியில் திருமணம் செய்துகொண்டு, அவளை அவனது இல்லத்திற்கு அழைத்துச் செல்லுமாறு, தோழியும் பிறரும் வற்புறுத்துவர். இதனை' 'இவ்வலியுறுத்தல்'[1] என்ற தொடரால் தொல் காப்பியர் குறிப்பிடுகிறார்.

கற்புடைய நங்கைக்குக் கணவன் திருவடியே புகலிடம் அன்றோ? அதனால்தான்,

'சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே''[2] என்பார் தொல் காப்பியரும்.

தலைமகனது தனி இடம் மீதானப் பெருவெளி. அங்குச் சிவபெருமான் திருவடியில் ஆன்மா நிலையான சிறந்த பேரின் பத்தைத் துய்த்துக் கொண்டிருப்பதைத் பரமுத்தி என்றும் சிவசாயுச்சியம் என்றும் அருளாளர் கூறுவர்.

இதிலிருந்து இல்வலியுறுத்தல்[3] என்ற தொல்காப்பியர் கூற்றுக்குச், சிவசாயுச்சியம் என்ற சித்தாந்த சைவ முத்தி நிலையை இறைவனிடம் வேண்டி நிற்றல் எனப் பொருள் கொள்ளுதல் தகும்.

இவ்வாறு சிவாகம நெறி நின்று சிவப்பேற்றினில் தினைக்கும் மறையோர்க்கு, அவ்வாறு சிவசிந்தனையைத் தூண்டி வளர்க்கிற இடங்கள், மூலாதாரம் முதல் மீதானம் வரையுள்ள எட்டு, என்பதாயின.

இவ் எட்டுத்தானங்களும் உள்ளிட்ட தேசுடைக் கோளமே 'மறையோர் தேஎத்து மன்றல் எட்டு 'எனத்தொல்காப்பிய ரால் சிறப்பிக்கப் பெறுகிறது.

சாத்திரச் சான்று: திருவுந்தியார் என்ற சைவசாத்திர நூலில்' ஒருபாடல், இக்கருத்துக்கு அரணாக அமைகிறது.

ஆதாரத் தாலே, நிராதாரத் தேசென்று
மீதானத் தேசெல்க' உந்தீபற
விமலற்(கு) இட(ம்) அ(து) என்(று) உந்தீபற.[3]

---

1 தொல்காப்பியம், மெய்ப்பாட்டியல்-259
2. தொல்கற்பியல். 51
3. திருவுந்தியார்-8

ஆதாரம்: சுட்டி அறியப்படும் ஆறு ஆதாரங்கள்; சிவபெருமான் உயிர்களைத் தொழிற்படுத்தும் இடங்கள்.

நிராதாரம்: உச்சித் தலையிலுள்ள ஆயிரம் இதழ்த்தாமரை. சிவபெருமான் உயிர்களின் பொருட்டுத் தாமே தொழிற்படும் இடம்.

மீதானம்: தலை உச்சிக்கு மேலே பன்னிரண்டு அங்குல உயரமாகிய துவாதசாந்தப் பெருவெளி-இதுவே தனிப் பெருந்தலைவனாகியசிவபெருமானதுசச்சிதானந்தப் பெருங்களமாகும்; 'சும்மா இருக்குமிடம்' என்பர்.

விமலன்: இயல்பாகவே, மலமாசுகளிலிருந்து நீங்கிய தூயவன்: சிவபரம்பொருள்.

இவ்வாறு சைவசாத்திரங்களும், தொல்காப்பியத்தைப் போன்று, மறையோர் தேஎத்து மன்றல் எட்டினை மற்றொரு வகையால் குறிப்பிடக் காணுகிறோம்.

அடுத்து இசையின் மாட்சியைச் சிந்தித்துத், துறையமை நல்யாழ்த் துணைமையோர் பற்றி நோக்குவோம்.

ஆணைத்தானம்: புணர்ச்சிக்கு இடம் தலை என்பதாலேயே 'இடம் தலைப்பாடு' என்பது சங்கநூல்களில் சீர்மிகு சொல்லாட்சியாகப் பயின்று வருகிறது.

தவநெறி: தலைமகனது தனி இடம் மீதானம். சிவசாயுச்சியம் என்ற பரமுத்தி பெறுகிற ஆன்மா, சிவ பெருமான் திருவடியில் நிலையாக இன்புற்றிருக்கும்.

இ. இசையின் மாட்சி:

இன்பம் பயப்பது இசை. இசைக்கு அடிப்படையானது ஒலி. ஒலியை எழுப்பிச் சீராக இசைத்தால் இன்பம் உண்டாகும்.

இவ்வாறு ஒலி எழுப்பும் கருவிகள்: தோல் கருவி, துளைக் கருவி, நரம்புக் கருவி, மிடற்றுக் கருவி என்பன.

இவற்றுள் வீணை, யாழ் முதலியன நரம்புக் கருவி வகையைச் சேர்ந்தன. பறை, மத்தளம், பேரிகை முதலியன தோல் கருவிகளையும், புல்லாங்குழல் நாதசுரம் முதலியன துளைக் கருவிகளையும், வாய்ப்பாட்டு என்பது மிடற்றுக் கருவியையும் குறிப்பன.

ஒரு கலைஞன், தனது உள்ள எழுச்சிகளை இவ் இசைக் கருவிகள் மூலம் செவ்விதே வெளிப்படுத்தலாம்.

திருஞான சம்பந்தரது தீந்தமிழ்த் தேவாரப் பனுவல்கள், அவரது அருள் உள்ளத்தின் வெளிப்பாடு. அவற்றை அவ்வோசை நயந்தோடு அப்படியே யாழில் மீட்டிய பெருமை, திருநீலகண்ட யாழ்ப்பாணரைச் சேரும்.

பேரியாழினை மீட்டி, உயிர்களாகிய நமது அறிவினை விளக்கித் தூண்டுபவர், சிவபெருமான். அவரை 'வீணை விகிர்தர், யாழ்மூரிநாதர், வேயுறுதோளி பங்கன் விடமுண்ட கண்டன் மிக நல்ல வீணை தடவி', முதலிய விழுமிய தொடர் களால், சைவ குரவர்கள் போற்றிப் பரவுவர்.

விண்ணகத் தேவருள் ஒருவராகிய கந்தருவ இனத்தவர், யாழ் என்னும் நரம்புக் கருவியில் இன்னிசை எழுப்பி, இன்பம் துய்க்கும் இனியர்கள். ஆண் பெண் இருபாலாரும் யாழ் இசைப் பதில் வல்லவர்கள். அவர்களுடைய யாழின் நரம்புகளிலிருந்து எழுகின்ற மயக்கும் இன்னிசையில், அவர்கள் தம்வயம் இழந்து, கூடிப் புணர்ந்து இன்புற்றுக் களித்துத் திரியும் கூட்டத்தினர்.

இறையனார் அகப்பொருள் என்ற களவியல் நூல் இவர் களுடைய இவ் இயல்பினை உவமையாக்கிப் பேசுகிறது.

''அன்பின் ஐந்திணைக் கள(வு)எனப் படுவது
அந்தணர் அருமறை மன்றல் எட்டினுள்
கந்தருவ வழக்கம் என்மனார் புலவர்''[1]

1. இறையனார் [அகப்பொருள்) களவியல் - 1

இறையனார் களவியல்:

ஒரு சமயம் பாண்டிய நாட்டைப் பன்னிராண்டு வற்கடம் (பஞ்சம்) சூழ்ந்தது. அங்குச் செம்பொருள் உணர்த்தும் அறிவும், நிலையான முத்திப் பேரின்பத்திற்கு ஆற்றுப்படுத்தும் அறநெறியும் வல்ல சான்றோரைக் காணாது பாண்டிய மன்னன் மிகவும் துயருற்றான்.

அவனது கவலையைப் போக்கத் திருவுளம் கொண்டார் ஆலவாய் அண்ணலாகிய சிவபெருமான். அகப்பொருளில் அறுபது நூற்பாக்களை அவரே யாத்தருளினார் என்பது வரலாறு. அந்நூல் 'இறையனார் அகப்பொருள்' என்னும் பெயர் பெறுவதாயிற்று.

''அன்பின் பெருக்கால் தனியிடத்துக் கூடிய தலைமக்களது களவுப் புணர்ச்சி, கந்தர்வர்களுடைய தன்னிச்சையான இன்பப் புணர்ச்சியைப் போன்றது'' எனக் கூறுகிறது இறையனார் களவியல்.

இது, மிக அழகானதோர் உவமை. ஆனால் உவமிக்கப் படும் பொருள் பற்றியே உரை வேறுபாடு எழுகிறது.

திரு ஆலவாய் இறைவனால் அருளப்பெற்ற இவ் உயர்ந்த நூலுக்குக் கடைச்சங்கப் புலவரான நக்கீரரால் சீரிய தோர் உரை செய்யப்பட்டு முருகப்பெருமான் (உருத்திர சன்மன்) திருமுன் அரங்கேற்றப்பட்டதாக வரலாறு உள்ளது. அவ்வுரை, காலம் காலமாகச் சிடர்களுக்குச் செவிவழி உரைக்கப்பட்டு, இடைக் காலத்தில் எண்ணற்ற மாறுதல்களையும் இடைச் செருகல்களையும் தாங்கி, இப்பொழுது உருமாறிக் கிடக்கக் காணுகிறோம்.

வடசொற்களின் மிகையும், வேற்றுப் புலத்து மரபுகளைத் தமிழ்ப் பண்பாடு என வேறுபடக் கூறியுள்ள முறையும் அந்தணர் அருமறை மன்றல் முதலிய சொற்களுக்கு (முதல் சூத்திரம்)க் குன்றக் கூறிய உரையும், பிறவும், நக்கீரர் தம், நல்லுரையினை, மாற்றார் மாசுபடுத்தி உள்ளனர் என்ற மெய்ம்மையைப் புலப்படுத்தும்.

களவியல் உரைகாரர், தொல்காப்பிய நூற்பாக்களை மேற்கோள் காட்டி உரை விளக்கம் செய்தது போலவே தொல்காப்பிய உரையாசிரியர்களும் இறையனார் களவியல் நூற்பாக்களையும் அதன் பிற்கால உரைகளையும் சான்று காட்டித் தொல்காப்பியச் சூத்திரங்களுக்கு உலகமுகப்பட்ட சிற்றின்பப் பொருள் உரைத்துப் போந்தனர்.

சிற்றின்பமும் பேரின்பமும்:

நமது மனித உடம்பு ஒரு சடம். இஃது அறிவற்றது; நிலையற்றதாய் ஒரு கால எல்லையில் அழிவது; இதன்மூலம் நாம் பெறுகிற சிற்றின்பமும் அத்தன்மையதே.

இந்த உடம்பின் உள்ளிருந்து, இதனை இயக்குவது, உயிர். அஃது ஓர் அறிவுப்பொருள். நிலையானது. அழிவு இல்லாதது. படி முறையில் வளர்ந்து, உயர்நெறி நின்று, இறைவனைக் கூடி அஃது அடைகின்ற இன்பமோ, உண்மையான, நிலையான, பேரின்பமாகும்.

எனவே பண்டைய பொற்காலத் தமிழகத்து அகப்பொருள் நூல்களுக்கு, அழிவற்ற பேரின்பச் செம்பொருளையே உரையாகக் கொள்வதுதான் சாலச் சிறந்தது. அதுவே விழுமிய பண்டைத் தமிழ்ப் பண்பாட்டிற்கும், தெய்வத் தமிழ்மொழியின் சீர்மைக்கும் பெருமை சேர்ப்பதாக அமையும்.

இனி, நூற்பாவின் உட்கிடையை நோக்குவோம்.

ஈ. துறையமை நல்யாழ்: செப்புக் கம்பி, சிறந்ததொரு மின்கடத்தியாகும். எனவே மின் ஆற்றலை ஓர் இடத்திலிருந்து பிறிதோர் இடத்துக்குக் கொண்டு செல்லச் செப்புக் கம்பியையே நாம் பெரிதும் பயன்படுத்துகிறோம்.

அதேபோல், நமது உடலிலுள்ள நரம்புகள், தெய்விக ஆற்றலை உடல்முழுவதும் பரப்பவும், ஒருங்கிணைக்கவும் வல்ல தனித்தன்மை உடையவை.

கோடானுகோடி நரம்புகள், நமது உடம்பின் மூலைமுடுக்குகளில் எல்லாம் பரவியுள்ளன. அவற்றின் கட்டுப்பாட்டுக் கேந்திரமாக உள்ளது, மைய நரம்பு மண்டலமாகும்.

தாமரை மலர் போன்றதும், மிகமிக நுண்ணியதுமான முளை என்ற ஒரு தெய்வீக நரம்புத் தொகுதியின் தலைமையில் இஃது இயங்குகிறது இதன் அடிப்பகுதியாகிய முதுகுத்தண்டு, 72,000 நாடி நரம்புகளைக் கொண்டது.

இந்த மைய நரம்பு மண்டலத்தின் மொத்த அமைப்பும், ஒரு பேரியாழின் வடிவினை ஒத்தது. இதனைத் துறையமை நல்யாழ் எனத் தொல்காப்பியர் குறிப்பிடுகிறார்.

துணைமையோர்: சிவபெருமான், உயிர்களாகிய நம் பொருட்டுச் செய்யும் அருட்செயல்களைத் தமது சித்சத்தியின் மூலமாகவே செய்கிறார்.

சித்சத்தியும், எளிய உயிர்களாகிய நாம் எளிதில் பயனுறுமாறு, தனது பேராற்றலைச் சிறிது சிறுதாகக் குறைத்து, எளிவந்த தோற்றங்களில் நமக்கு அருளுகிறாள்.

அவை பராசக்தி, ஆதிசத்தி, இச்சாசத்தி, ஞானசத்தி, கிரியாசத்தி, இரெளத்தி, வைணவி, பிராமி முதலியன.[1]

கலைமகள்: இவ்வாறு நமது அறிவினை விளக்கித் தூண்டுவதற்காகச் சித்சத்தி எடுத்துவந்த எளியதொரு தோற்றமே கலைமகள் என்பது. உயிரின் அறிவுக்கு ஆக்கமும் ஊக்கமும் அருளுவதால், இவளைப் பிராமி என்பர். ஆக்கும் கடவுள்' பிரமா; அவரது சத்தி, பிராமி.

காரண காரியக் கடவுளர்:

ஈண்டு இவர்கள், உயிரின் அறிவுக்கு ஆக்கமும் ஊக்கமும் தருகிற, காரண பிரமாவாகிய சிவபெருமானையும் அவரது சித்சத்தியையுமே குறிப்பர்.

உயிருக்கு உடம்பு எனும் சடப்பொருளை ஆக்கித் தருபவர், **காரியபிரமா** என்பதையும், உயிருக்கு அறிவு என்னும் சீர்மையை ஆக்கி அருளுபவர் சிவபெருமானாகிய **காரண பிரமா** என்பதையும், தெளிவாக நாம் வேறுபடுத்தி உணர்தல் வேண்டும்.

---

1. ''எல்லாச் செயல்களுக்கும் சாட்சியாய் விளங்குகிற சிவசத்தி, பிராமி வைணவி, வரளத்ரி என மூவகைப்பட்டுக் காலை, மத்யானம், சாயுங் காலம் ஆகிய வேளைகளுக்கு ஏற்ப விளங்கி நிற்கும்'' சைவாநுட்டான விதியும் விளக்கங்களும் சிவஸ்ரீதத்புருஷ தேசிகர் [27-8-67 பதிப்பு]

நமது நெஞ்சுத்தானத்தின் இருதயத்திற்கும், வயிற்றின் இரைப்பைக்கும் நடுவில் உதரவிதானம் (Diaphragm) என்ற ஓர் அமைப்பு உண்டு இதுவே நமது இதயத்தில் பிராமி வீற்றிருக்கும் இடமாகும்

''வெண்தா மரைக்(கு)அன்றி நின்பதம்
தாங்களன் வெள்ளைஉள்ளத்
தண்தாயமரைக்குத் தகாது கொலோசகு(ம்)
ஏழு(ம்)அளித்(து) உண்டா(ன்)
உறங்க.ஒழித்தான் பித்தாகஉண்டாக்கும்
வண்ணம் கண்டான் சுவைகொள்
கரும்பே சகல கலாவல்லியே!''

— ஸ்ரீ குமரகுருபரர் அருளிய
சகல கலா வல்லிமாலை.

நமது அன்பின் பெருக்கிற்கு ஏற்பப், பிராமி நம் நெஞ்சுத் தானத்தில் இந்த வெண்தாமரையில் வீற்றிருந்து 72,000 நாடி நரம்புகளாலானதும் பேரியாழ் போன்றதுமான நமது சுழுமுனா நாடியை இயக்குகிறாள்.

படைப்பு சத்தியாகிய அவள் எழுப்புகிற யாழ்ஒலி, மந்திர அகவலாக[1] மேலே எழுகிறது. முதலில் வெறும் கற்பனை போல் தோன்றுகிற இச்செய்தி, ஆழ்ந்து ஒன்றிய மனப் பயிற்சியால் அனுபவ உண்மையாகி, அரிய நற்பயனை நல்குவதைக் கால அடைவினில் தெளிவாக உணரலாம்.

திருமகள்: படைக்கப்பட்ட உலகினைக் காப்பவர் விட்டுணு. அவருடைய சத்தி, வைணவி. சிவபெருமான் ஆணை ஏற்று உலகினைக் காக்கும் அவர், காரிய விட்டுணு எனப்படுவார், அவர், நம்போன்ற ஆன்ம வர்க்கத்தைத் சேர்ந்தவர்.

உயிருக்கு அறிவு விளக்கம் அருளியவர் காரண பிரமா என முன்னர்க் கண்டோம். அவ் அறிவினை மேலும் வளர்த்துக் நிற்பவர், காரண விட்டுணுவாகிய சிவபெருமானே ஆவார் அவருடைய சித்சத்தி வைணவி. ட்ராசத்தியின் எளிவந்த

1. அகவல் - அகப்படுத்துதல்:

வடிவமே இவர் என்பதை நாம் தெளிவாக உணர்தல் வேண்டும்.

ஊன் உடம்பாகிய ஆலயத்தில், வைணவிக்குப் புருவ நடுவே இருப்பிடம் என்று சிவாகமங்கள் அறிவுறுத்துகின்றன. இக் காரணம் பற்றியே திருக்கோயில்களில் கருவறை நிலைகளிலும், வீடுகளின் முகப்புகளிலும் நெற்றிப்பொட்டில், இரு யானைகள் அமுது சொரியும் திருமகளது, (கஜலெட்சுமி) திரு உருவத்தைச் சிற்ப சித்திர வடிவமாக அமைத்துள்ளனர், நம் ஆன்றோர், எனலாம்.

நம் நெஞ்சுத்தானத்தில் அமர்ந்து, சுழுமுனை நாடியாகிய பேரியாழைப் பிராமி மீட்டியதால் எழுந்த மந்திர அகவல் ஒலி, புருவ நடுவை அடைகிறது. நெஞ்சில் பல்லவியாக எழுந்த ஒலி சிரசினுள் திருமகளின் துணைகொண்டு அனுபல்லவியாக வளர்கிறது,

மலைமகள்: ஒடுக்குந் தொழில் உருத்திரரைச் சேர்ந்தது. அவரது சத்தி ரௌத்திரி. நமது உடம்பில் அவளது இருப்பிடம், உச்சித்தலை. உயிர்களது தன் முனைப்பான சிந்தனைகளை ஒடுக்கி, அனுபல்லவியாகத் தம்பால் வந்த மந்திர அகவலை, மீதானத்தே உள்ள பராசக்தியின் பாதங்களில் சரணமாக்குதல், மலைமகளின் கருணை.

பராசக்தி: மீதானத்தில் பரசிவத்துடன் தாதான்மியமாய் ஒன்றி நிற்கும். பராசத்தி, ஆன்மாவின் இவ் அகவலைப் பரசிவத்திடம் சேர்ப்பிக்கிறாள். இவ்வாறு ஆன்மாக்களாகிய நமது இ(ச்)சையானது கலைமகள், திருமகள், மலைமகள் ஆகியோரால் பல்லவி, அனு பல்லவி, சரணம் என்ற முறையில் வளர்ச்சியுற்று இறைவன் திருவடியைச் சென்று அடைகிறது.

'இன்னிசை வீணையில் இசைந்தோன் காண்க'[1]
என்பது திருவாசகம்.

படிமுறை அருளிப்பாடு:

இதன்மூலம், சிவபெருமான் உயிர்களாகிய நமது அறிவின் வளர்ச்சியையும் சிவசிந்தனையையும் திருவடிப் பேற்றிற்கான

---

1. திருவண்டப்பகுதி - மாணிக்கவாசகர்

நமது வேட்கையையும், அறிந்து, ஆண்டானாகவும், தந்தையாகவும், தோழனாகவும், தலைவனாகவும் வெவ்வேறு நிலைகளில் நமக்கு அருள்பாலிக்க வருகிறார். இதனைத் திருவாதவூரர்

"ஈசன் அடி போற்றி எந்தை அடி போற்றித்
தேசன்அடி போற்றி சிவன் சேவடி போற்றி"[1]

என முறைமைப் படுத்தி இசைக்கக் காணலாம்.

உயிர்களாகிய நமது உய்தி கருதி, மாயை என்ற முதற் காரணத்திலிருந்து உலகம் முதலியவற்றைப் படைக்க விரும்பும் நிமித்த காரணனாகிய சிவபெருமான். தான் படைத்தல் முதலிய ஐந்தொழில் புரிவதற்குத், துணைக்காரணமாகத் தமது சித்சத்தியையே கொள்ளுகிறர் என்பது சைவசித்தாந்தம்.

நல்யாழ்த் துணைமையோராகப் பராசத்தியின் எளிவந்த தோற்றங்களே அமைகின்றன என்ற கருத்து சைவ சித்தாந்தக் கோட்பாடுகளுடன் பெரிதும் பொருந்தி வரக் காணுகிறோம்.

சிவ அனுட்டானம் செய்யும் மெய்யடியார்கள், நாளும் வைகறைப் போழ்தில் தம் நெஞ்சுத்தானத்தில் பிராமியையும், நண்பகல் பொழுதில் தம் புருவநடுவில் வைணவியையும் அந்திமாலையில் தம் உச்சித்தலையில் ரௌத்ரியையும், இரவில் மீதானத்தில் பராசத்தியையும் சிந்தித்தும் வழிபட்ட பின்னர் சிவமூல மந்திரத்தைத் தியானிப்பது வழக்கம்.

இவ்வாறு நமது மனம் இறையன்பில் ஒன்றி நிற்க மைய நரம்பு வழி இசைக்கப் பெறுகிற மந்திர ஒலி, சிவபெருமானை ஆன்மாவின்பால் அகவி அழைப்பதாக அமைகிறது.

அகவல் என்பது அகப்படுத்துதல் என்னும் பொருளுடையது சிவபெருமான் ஆன்மாக்களை அகவி அழைப்பதும், ஆன்மாக்கள் சிவபெருமானை அகவி அழைப்பதும் ஆகிய இருவழியிலும் இது நிகழ்ந்தமைக்குச் சைவ வரலாற்றில் சான்றுகள் உள்ளன.

திருப்பெருந்துறையில் திருவாதவூரரைச் சிவபெருமான் அகவி அழைத்த பெற்றியைத் தலபுராணம் சிறப்பாகப் பேசும்

1. திருவாசகம் - சிவபுராணம்

திருவாதவூரர் இயற்றியருளிய திருவாசகத்தின் முதல் நான்கு செய்யுளும் அகவற்யாவால் அமைந்தவையே.

எனவே ஆன்மா அகவி அழைக்க ஆண்டவன் அருள் புரிகிறான் என்பது பெறப்படும். என்னை எனில்,

சிவபெருமானே நாதத்தின் தலைவன், மந்திர வடிவினன்; அவனே வேதசிவாகமங்களை உருவாக்கியவன்; அவனே பேரியாழை மீட்டும் பேரருளாளன்.

இறைவன் யாழ்நரம்பினை மீட்டுகிற நோக்கமும், அவனது ஐந்தொழில் நோக்கமும் ஒன்றே. அஃது, ஆன்மா ஆண்டவனைக் கூடிப் பேரின்பத்தில் திளைத்திருக்க வேண்டும் என்பதே.

ஒரு பெண்ணின் புற உடம்பில் முன்தலை தொடங்கி இடுப்பு வரை தொங்குகிறது, அவளது அழகிய கூந்தல், அதே போல, அவளுடைய உடம்பின் உள்ளே புருவநடு தொடங்கி இடுப்புவரை அமைந்துள்ளது, மூளை - முதுகுத்தண்டினாலான மைய நரம்பு மண்டலம்.

ஈண்டுப் பெண்ணின் உடம்பில் புறத்தே காணப்படுகிற கூந்தலின் தோற்றம் அவள் உடம்பிலே வெளிப்படத்தோன்றா அக உடம்பில் உள்ள மைய நரம்பு மண்டல அமைப்புக்கு ஓர் உவமை ஆயிற்று.

மிருச்சகடிகம் போன்ற வடமொழி நூல்களில் ஒரு பெண் ணின் கூந்தல் தொகுதியும், யாழும் ஒப்புவமை யாக்கப்பட்டு உள்ளமை காணுகிறோம்.

எனவே துறையமை நல் யாழ் என்பது சிவாகம நெறியில் பயிற்றுவிக்கப் பெற்ற மைய நரம்பு மண்டலத்தைக் குறிப்ப தாயிற்று.

துணைமையோர் இயல்பு: என்பது பராசத்தி உயிர்களாகிய நமக்கு அருள்பாலிக்கும் பெற்றியைக் கூறுவதாகும்.

பராசத்தி, பரசிவத்தை எக்காலத்தும் நீங்காத தன்மை யினள். மலரும் மணமும் போல, தீயும் சூடும் போல குணிகுண

பாவத்தால் தாதான்மியமாய்ப் பரசிவத்தின் இடப்பாகத்தில் எப்பொழுதும் இருப்பவள்.

உயிர்களாகிய நம்மீது அவளுக்கு அளப்பரிய கருணை எனவே நாம் படிமுறையில் அறிவு வளரப்பெற்று அடிமை, மகன்மை, தோழமை நெறிகளையெல்லாம் கடந்து, பரசிவத்தோடு தலைவி நிலையில் அத்துவிதமாகக் கூடி, அவளைப் போலவே நாமும் இன்புற்றிருக்க வேண்டும் என்பது பராசத்தியின் விருப்பம்.

இக்கருத்தினைச் சைவசாத்திரங்கள் பதினான்குனுள் எட்டினை இயற்றியருளியவரும் சந்தான குரவர் நால்வருள் ஒருவருமான உமாபதி சிவம் என்னும் பேரருளாளர், தமது திருவருட்பயன் என்ற நூலில் தெளிவாகக் குறிப்பிடுவதைக் காணலாம்.

''தன்னிலைமை மன்உயிர்கள் சாரத் தரும்சத்தி;
பின்னமிலான், எங்கள் பிரான்'' — [1]

பராசத்தியின் இத்தகைய பேரருள் திறத்தினையே துணைமையோர் இயல்பு என்ற தொடரால் தொல்காப்பியரும் குறிப்பிடுகிறார்.

சிவத்துக்கும் உயிர்களுக்கும் உள்ள உறவு:

சிவபெருமானுக்கும் உயிர்களுக்கும் உள்ள அநாதியான அத்துவிதத் தொடர்பைச் சைவசித்தாந்தம் செவ்விதே விளக்குகிறது.

சிவபெருமான் ஒருவரே முழுமுதலாகிய தனிப்பெருங் கடவுள் எனச் சாற்றுகிற சைவ சாத்திரங்கள், உயிர்களின் உய்தியைத் திருவுளம் கொண்டு, அவர் பல்வேறு திருமூர்த்தங்களிலும் தோற்றமளிக்கிற பாங்கினை வெகுவாகப் பரவித் துதிக்கக் காணுகிறோம்.

'பேதை ஒருபால் திருமேனி ஒன்(று) அல்லன்'[1] என இசைக்கிறது திருவாசகம்.

---

1. திருவருட்பயன், உமாபதிசிவம்.
1. திருவெம்பாவை: 10.

சூலுற்ற திரிசிரபுரத்துச் செட்டிப் பெண்ணுக்கு, அவளது தாயின் வடிவில் வந்து மருத்துவம் பார்த்த தாயுமான ஈசனின் பெருங்கருணையைத் தலவரலாற்றினாலும் திருவிழாக்களினாலும் அறிகிறோம்.

நம்போன்ற மனித இனத்துக்கு மட்டுமே திரு உருக்கொண்டு அவர் அருளுகிறார் என்றில்லை. பாலின்றி வாடிய பன்றிக்குட்டி போன்ற சிற்றின உயிர்களுக்கும் பால் நினைந்தூட்டும் தாயாகத் தாய்ப் பன்றி வடிவில் தோன்றிய வரலாறு திருவிளையாடற் புராணத்தில் போற்றப் பெறுகிறது.

உயிர்கள்: சிவபெருமானைப் போன்று, உயிர்களும் அறிவுள்ள சித்துப் பொருள்களே; ஆயினும் சிவபெருமானோ முற்றுணர்வினர், கருவி கரணங்களின்றி அனைத்தையும் ஒருசேர அறியும் பேராற்றல் உடையவர்; உயிர்கள் கருவிகரணங்களின் துணைகொண்டு ஒரோ ஒன்றை மட்டுமே அறிகின்ற சிற்றறிவுப் பொருள்களே.

அநாதியே உயிர்களாகிய நம்மைப் பற்றி நிற்பது, ஆணவம் என்ற மூலமலம் அதன் பிணிப்பால் உயிர்கள் தம் இயல்பான சிற்றறிவும் முடங்கிக் குற்றறிவாய்க் கிடக்கின்றன. ஆணவ மலத்தையே உடம்பாகக் கொண்ட அந்த அவல நிலை, கேவல (தனி) நிலை எனப்படும்.

கன்ம மலம் என்ற வினைகளுக்கான பயனை, நாம் நுகர்ந்தே கழித்தல் வேண்டும். அதற்கு ஏற்றவாறு, தாவரம் முதல் மால் அயன்வரையிலான வெவ்வேறு மாயா உடலங்களை இறைவன் நமக்கு அருளியுள்ளார். இன்றைய இவ் இடைக்கால நிலை, சகலநிலை எனப்படும்.

வினைகளும் மலங்களும் நீங்கி மெய்யறிவு விளங்கப் பெறும் போது, சிவசத்தியையே அருள் உடம்பாகக் கொள்ளுகிறது உயிர். முடிந்த முடிவான இவ் வுயர்ந்த நிலை சுத்த நிலை எனப்படும்.

இவ்வாறு உயிர்கள் அனாதியே ஆணவத்தையும், இடைக் காலத்தில் மாயையையும், இறுதியிலே சிவபெருமான் திருவருளையுமே உடம்பாகக் கொள்ளுகின்றன.

அத்துவிதம்: இந்த மூன்று நிலைகளிலுமே, சிவபெருமான் உயிர்களுடன் ஒன்றாயும், வேறாயும் உடனாயும் நிற்கிறார். உயிர்களுடன் அவையேயாய், தானேயாய், அவையே தானேயாய் நிற்கும் சிவபெருமானது இந்நிலைகள், உயிர்களின் வினை வேறு பாட்டிற்கேற்பவும் ஆணவமல பந்தத்துக்கு ஏற்பவுமே அமை கின்றன.

ஒன்றாய் நிற்றல்: உயிருடன் ஒன்றாய்க் கலந்து நிற்கும் நிலையில், சிவபெருமான் சிவசத்தி வடிவில் நம் பின்தலைப் பிடரியில் மறைப்பு ஆற்றவாக நின்று, ஊழ்வினைப் பயனாகிய பாலை ஊட்டுவார்.

இதனைத் தொல்காப்பியர், "வழிபடு தெய்வம் நிற்புரம் காப்ப..." என்ற தொடரால் குறிப்பிடுகிறார்.

வேறாய் நிற்றல்: உயிரின் வேறாய்க் கடந்து நிற்கும் நிலையில் சிவபெருமான், நமது உச்சித் தலைக்கு மேலே பன்னிரண்டு அங்குல உயரத்தில் மீதானப் பெருவெளியில் சச்சிதானந்த சொரூபியாய் எவ்விதத் தொழிலும் செய்யாது வாளா இருப்பர்.

இதனை "ஓங்கு மலைநாடன்..." என்ற தொடரால் சங்க இலக்கியங்களும் 'மிக்கோன்' என்ற சொல்லால் தொல் காப்பியரும் குறிப்பிடக் காணலாம். குறிஞ்சித் தலைவனாக முருகனைக் கொண்டு மீதானத் தலைவனாகிய சிவபெருமானை மிக்கோன் என்றனர்.

உடனாய் நிற்றல்: உயிரின் உடனாய்க் கூடிநிற்கும் நிலையில் சிவபெருமான் நமது உச்சித்தலையில் சிவனாக நிற்பர். இதனைச் 'சிறைப்புறத்தான்' எனச் சங்க இலக்கியங்களும், தொல் காப்பியமும் குறிப்பிடுகின்றன.

2. ஒன்றி உயர்ந்த பாலது ஆணை:

"அவரவர் வினைவழி அவரவர் அனுபவம்"

என்பது ஆன்றோர் வாக்கு. இருள்சேர் இருவினைகள் நீங்கி மெய்த்தவத்தால் உயர்ந்து, சிவஞானத் தெளிவு பெற்ற ஆன்மா சிவபெருமானுக்கு ஏற்ற தலைவி ஆகிறது.

இதனைத் தொல்காப்பியர், களவியல் இரண்டாம் சூத்திரத்தில்

> "ஒன்றே வேறே என்றிரு பால்வயி(ன்)
> ஒன்றி உயர்ந்த பால(து) ஆணையி(ன்)
> ஒத்த, கிழவனும் கிழத்தியும் காண்ப
> மிக்கோ(ன்) ஆயினும் கடிவரை இன்றே"[1]

எனக்கூறி, சிவமாகிய தலைவனுக்கும் உயிராகிய தலைவிக்கும் உள்ள உறவினைக் குறிப்பிடுகிறார்.

> "அவையே தானேயாய் இருவினையின்
> போக்கு வரவு புரிய ஆணையின்
> நீக்க மின்றி நிற்கும் அன்றே"[2]

என்ற சிவஞானபோதம் இரண்டாம் சூத்திரமும் இதே கருத்தை வலியுறுத்தக் காணுகிறோம்.

ஒன்றி உயர்ந்த பாலது ஆணை: 'ஒன்றிய பால்' என்றும் 'உயர்ந்த பால்' என்றும் கூட்டிப் பொருள் கொள்ளலாம்.

பால்: பண்டைத்தமிழ்ச் சான்றோர், ஊழ்வினைப் பயனைப் பால் என்ற சொல்லால் குறித்தனர். அவ்வாறு அவர்கள் குறித்ததற்கான சூழலைக் காண்போம்:

ஒரு சமயம், அறக்கடவுள் தவம் செய்து, சிவபெருமானுக்கு ஊர்தியாகும் வரம்பெற்றார்; அதனால் அறவிடை தோன்றியது. அதன் தோற்றத்தை நமக்கு உணர்த்துவதற்காகச், சிவபெருமானால் பசு இனம் இவ்வுலகில் படைக்கப் பெற்றது.

அதுகாறும் தூய ஒரு பொருளாகவே இருந்தது அறவிடை. உலகில் வாழ வேண்டிய நிலை ஏற்பட்டபோது, புல்லையும் தண்ணீரையும் உட்கொண்டது. உண்பதும் குடிப்பதும் வினைகள். எனவே அப்பொழுது பசுவுக்கு ஊழ்வினை தொடங்கியது.

---

1. தொல் களவியல் - 2. ஆம் சூத்திரம்
2. சிவஞானபோதம் - 2. ஆம் சூத்திரம்

செய்த வினைகள் புண்ணிய பாவமாக அவரவர் கணக்கில் ஏறி, இன்பதுன்பங்களாக வாழ்வில் பரிணமித்தது போல, பசு உட்கொண்ட புல்லும் தண்ணீரும் குருதியாக வேதியல் மாற்றம் பெற்றும் பின்னர், பாலாகவும் பரிணமிக்கிறது. எனவே பாலை, வினையின் பயன் என்றவாறு சங்கத்தமிழ்ச் சான்றோர் பொருள் கொண்டனர்.

வினைப்பயன் ஊட்டம் நியதிவழி நிகழும் எனக் கூறவந்த மாதவச் சிவஞான முனிவரும், பாலை நியதிக்கு மாற்று மொழியாகக் கூறக் (சிவஞான மாபாடியம்) காணலாம்.

ஆணை: உயிர்களுக்கு வினைப்பயன்கள் ஊட்டப் பெறுகிற முறைமை என்பது பொருள்.

உயிர்களாகிய நமக்கு அருள்பாலிக்கத் திருவுளம் கொள்ளு கிறார் சிவபெருமான். அவருடைய உட்கருத்தைச் 'சங்கற்பம் என்பர் வடநூலார். அதனையே, அவர் தனக்கு இட்ட ஓர் ஆணையாக ஏற்று ஐந்தொழில் இயற்றுகிறாள் சிவசத்தி மேலும், அவள் அவ்வாறு ஐந்தொழில் இயற்றும்போது, உயிர்ப் பொருள்கள் அனைத்தையும் தனக்கு அடிமையாகவும். உயிரற்ற சடப்பொருள்கள் எல்லாவற்றையும் தனது உடைமையாகவும் கொண்டு, அவற்றைத் தன் ஆணைவழிச் செலுத்துகிறாள். எனவே, ஆணை என்பதைச் சிவசத்திக்குரிய பரியாய பெயராகக் கொள்ளுவார், சிவஞான முனிவர்.

அவ்வாறு சிவசத்தியே உயிர்களாகிய நம்மை இவ்வுலகில் இயக்கினாலும், அவரவர் ஊழ்வினைக்கு ஏற்றவாறுதான் இன்பதுன்ப நுகர்ச்சியை அருளுகிறாள் எனவே, ஊழும் வலுவுடைத்தாகி, நமது அநுபவத்திற்குத் திருப்புமுனையாகிறது இக்கருத்துப் பற்றியே தொல்காப்பியரும் 'பாலது ஆணை' என்றவாறு சூத்திரத் தொடர் அமைத்தனர் போலும். இவ்வுண்மையை, 'இருவினையின்... ஆணையின்' என்ற சிவஞான போதச் சூத்திரத் தொடர்களாலும் அறியலாம்.

ஒன்றி - உடம்போடு கூடிய உயிர் வினைகளைச் செய்கிறது அவ்வினைகள் மனம், மொழி, மெய் என்ற கருவிகளால் செய்யப்

படுகின்றன. நல்வினை, தீவினைகளேயன்றிச், சிவத்தின்பால் கொண்ட மெய்த்தவமும் ஓர் 'அருள் வினையே'.

துணைநின்ற கருவிகள் ஒடுங்கினாலும், செய்த உயிரை, வினைகள் யாண்டும் தொடர்கின்றன. இதனை, 'ஒன்றி' என்ற தொல்காப்பியச் சொல்லாட்சி உறுதி செய்கிறது. இதனை ஓர் உலகியல் உவமை கொண்டும் உய்த்துணரலாம்.

காட்சிக்குப் புலப்படுவனவற்றைப் பருப்பொருள்கள் என்றும் புலப்படாதவற்றை நுண்பொருள்கள் என்றும் கூறுகிறோம். பருமையான உடம்பினைக் கொண்டு, பருமையான இந்த உலகத்தில், பருமையான பலவகைப் பொருள்களையும் ஒருவன் ஈட்டுகிறான். ஈண்டு, ஒருவன் என்பது நுண்மையான ஓர் உயிரும், பருமையான ஓர் உடலும் சேர்ந்த ஓர் வடிவமைப்பு

ஈட்டப்பட்ட பொருள் பருமையாக நமக்குப் புலப்படினும், ஈட்டிய முறை மிகவும் நுண்ணியதாகிறது. அஃது அறநெறியில் ஈட்டிய பொருள் என்றும், புறநெறியில் பிறரிடமிருந்து வஞ்சனையால் கவர்ந்த பொருள் என்றும், அருள் நெறியில் இறைவன் பால் செய்த மெய்த்தவம் என்றும், பலதிறத்த தாகிறது.

இப்போது ஈட்டமும் இரண்டு வகைத்தாகிறது. ஒன்று: பருமையதாகிய உலகப்பொருள் ஈட்டம். மற்றது, நுண்ணிய தாகிய, புண்ணியம், பாவம், திருவருள் ஆகிய ஈட்டம்.

கால அடைவிலே, அவ்வாறு பொருள் ஈட்டிய மனிதனுடைய பருமையான பூத உடலை நீத்து, அவ்வுடலினுள் இயங்கிக் கொண்டிருந்த நுண்ணிய உயிர் பிரிந்து செல்லுகிறது. அப்போது நிகழ்வது என்ன? பருமையான உடலோடு, பருமையான உலகப் பொருள்கள் செல்லுகின்றனவா? அன்றி அந்த நுண் உயிராவது அவற்றைக் கொண்டு செல்லுகின்றதா? எனில், இரண்டுமே இல்லை.

ஆனால், அப்பருப்பொருளை ஈட்டுங்கால், நுண்ணிதே, ஈட்டிய புண்ணியம், பாவம், திருவருள் என்பன எஞ்சியுள்ளனவே! நுண்மையான அவை என்ன ஆகின்றன?

கிடத்தப்பட்ட பருஉடம்பு சடம்; ஈட்டிய உலகப் பொருள் களும் சடம். அவற்றை விட்டு நீங்கிய நுண்ணிய உயிரோடு, நுண்ணிதே ஈட்டிய வினைகளும் உடன்சென்று, மறுமறுபிறப்பு களில், வினைமுதிர்வு காலத்தில், உரிய பயனைத் தருகின்றன.

இவ்வாறு நுண்ணிய வினைகள், நுண்ணிய உயிரோடு, பல பிறப்புகளிலும் ஒன்றிச் செல்லுவதையே 'ஒன்றிய பால்' என்ற தொடரால் தொல்காப்பியர் குறிப்பிட்டனர் எனலாம்.

உயர்ந்த பால்: பிறப்புக்கு வித்தாவது வினை. வினைகளின் வன்மை, மென்மைக்கு ஏற்பவும். நன்மை தின்மைக்கு ஏற்பவுமே வாழ்வின் இன்ப துன்பங்கள் அமைகின்றன. அவரவர் செய்த வினைகளின் இன்பதுன்பப் பயனை, அவரவரே நுகர்ந்து கழிக்க வேண்டும் என்பது நியதி.

எனவே சிவபெருமான் தனது சிற்சத்தியைக் கொண்டு, உயிர்கள் செய்த இருவினைக்கு ஏற்ப இன்பதுன்பப் பயனாக ஊனப்பாலையும், 'அருள்வினை'க்கு ஏற்ப ஞானப்பாலையும் ஊட்டுவிக்கிறார்.

அவ்வாறு அவை ஊனப்பாலை உண்ணும் போது, சிவபெரு மான் அவ்வுயிர்களுக்குப் புலப்படாமல் மறைந்து நின்றும், ஞானப்பாலை உண்ணும்போது அம்மையப்பராக வெளிப்படத் தோன்றி நின்றும் அருள்பாலிக்கிறார்.

எனவே ஒருவர் எத்துறையில் முயன்றாலும், ஓங்கி நிற்கும் அவர்தம் ஊழ்வினை வழியில் மட்டுமே அவரது இன்ப துன்ப அநுபவம் அமையும். வினைப்பயன் நுகர்ச்சிக்கு மாறாக, யாரும் எதையும் செய்தல் இயலாது. இதனை மாணிக்கவாசகர் திருவாக்கால் அறியலாம்.

''குழைத்தால், பண்டைக் கொடுவினை நோய்
காவாய், உடையாய்! கொடுவினையேன்
உழைத்தால் உறுதி உண்டோ தான்?''[1]

---

1. திருவாசகம், குழைத்தபத்து, *8:33:1*

எனவே வினைப் பயனாகிய பாலைத் தொல்காப்பியர் 'உயர்ந்தபால்' என்றனர்.

ஈண்டு, 'முதிர்ந்த பால்' ஓங்கிய பால்' என்பன போன்று அடைகொடுக்காது, 'உயர்ந்த பால்' என அடைகொடுத்ததன் சிறப்பினையும் உன்னுதல் வேண்டும்.

இம்மை மறுமைப் பயன்களுக்கு இழுத்துச் செல்லுவன இருள் சேர் இருவினைகள். அவற்றைக் குறிப்பதாயின் 'முதிர்ந்த வினை' 'ஓங்கிய வினை' எனலாம் ஆனால் இங்கு ஆசிரியர் குறிக்க விழைந்ததோ, அம்மைப் பயனாகிய முத்திப் பேரின்பத்துக்கு ஆன்மாவைச் செலுத்துகிற 'அருள்சேர் உயர் வினை' என்பதால், 'உயர்ந்த பால்' என மொழிந்தனர்.

இவ்வாறு ஊழ்வினைகள் நீங்கி, அருள்வினையால் உயர்ந்த ஆன்மாக்கள், கற்பு நெறியில் ஆண்டவனுடன் என்ஞான்றும் இன்புற்றிருக்கும் பெற்றியினை, மேல்வரும் கற்பியலில் காண்போம்.

4. கற்பியல்

அ. கற்பு என்பது என்ன?

உலக வாழ்வில் ஒரு பெண் ஒரே ஒரு ஆண் மகனையே தன் மனத்தால் கணவனாகச் சிந்தித்தலும், அவனையே தன் கணவனாக வாயால் மொழிதலும், அவனோடு மட்டுமே உடலால் அணைதலும், கற்பு நெறி எனப்படும்.

இவ்வாறு மனம், மொழி, மெய் என்ற மூன்று கருவிகளும் ஒன்றிற்கு ஒன்று முரணாமல் காத்து எப்போதும் ஒருவனையே தன் கணவனாகக் கொண்டு உளயாரப் பேணிப் போற்றுகின்ற ஒருத்தியே கற்புடைய பெண் ஆவாள்.

இங்ஙனம் சிந்தனைகள் ஒரே இடத்தில் குவிந்து நிற்றலைத் 'தலைப்படுதல்' எனப்பகர்வர், ஆன்றோர். ஒரே நெறியில் அயராது திண்மையுடன் நிற்றலால், இது கற்பு நெறி எனப் பட்டது.

தெய்வீகக் கற்பு:

சீரிய இக்கொள்கை, உலகத் தலைமக்களது மெய்யுறு புணர்ச்சிக்குப் பொருந்துவது போலவே, சிவபெருமானாகிய தலைவன், ஆன்மாவாகிய தலைவிக்கு அருளுகிற ஆன்மீக வாழ்வுக்கும் செவ்விதே பொருந்துவதாகும்.

ஆன்மாக்கள் கோடானுகோடி, அவை அனைத்தும் பெண் பாலரே, என முன்னரும் கண்டோம்,

அவற்றுள், 'சிவபெருமான் ஒருவரே ஒப்பாரும் மிக்காரும் இல்லாத தனிப்பெருந் தலைவன்' என்ற உறுதியான கொள்கைப் பிடிப்புக்கொண்ட ஆன்மாவே தெய்வீகக் கற்புடைய சைவ ஆன்மா ஆகும்.

''வம்(பு) அறா வரிவண்டு மணம் நாற மலரும்
மதுமலர்நற் கொன்றையான் அடிஅலால் பேணா
எம்பிரான் சம்பந்தன் அடியார்க்கும் அடியேன்......''[1]

எனத் திருஞானசம்பந்தரது கற்பின் மாட்சியை, எதிர்மறை கொண்டு ஏற்றி, அடிபணிகிறார் சுந்தரமூர்த்தி.

''திருவும் மெய்ப் பொருளும் செல்வமும் எனக்கு உன்
சீருடைக் கழல்கள்......''[2]

என்பதும் சுந்தரர் திருவாக்கே.

''பாரொருகால் வந்தனையாள், விண்ணோரைத்தான் பணியாள் பேரரையற் கிங்ஙனே பித்தொருவ(ர்) ஆமாறும் ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தான்''[3]

எனச் சிவபெருமான் ஆன்மாவைக் களவு, கற்பு நெறியில் ஆட்கொள்ளும் பெற்றியை விதந்தோதுவார், மாணிக்கவாசகர்.

---

1 தேவாரம் 7:39:5

2 தேவாரம் 7:69:1

3 திருவாசகம் 8:7:15

இவ்வாறு அடியார் திருக்கூட்டத்துக் கற்பின் மாட்சிக்குத் தேவார திருவாசகப் பனுவல்களில் பல நூறுசான்றுகள் உள்ளன.

இத்தகைய உயரிய கற்பு நெறி, உயிர்களாகிய நம்மிடத்தில் இயல்பாகவே எவ்வாறு தோன்றுகிறது? என்பது பற்றிச் சிந்திப்போம்.

அருளாளர்கள் எந்த ஒரு செயலையும் தம்முடைய செயலாக எண்ணமாட்டார்கள்; எந்த ஒரு விருப்பத்தையும் தமது விருப்பமாகக் கருதமாட்டார்கள்; எந்த ஒரு சிந்தனையையும் தமது அறிவின் வெளிப்பாடு எனத் தருக்குறமாட்டார்கள். அனைத்தும் சிவபெருமானது விருப்பம், சிவபெருமானது அறிவு, சிவபெருமானது செயல் என்றே துணிவர். இதனை ''ஏகனாகி இறைபணி நிற்றல்''1 எனச் சைவ சாத்திரங்கள் சிறப்பிக்கும்.

சிற்றின்பத்தைக்கூடச் சிவச்செயல் எனக் கொள்ளும் துணிவு சைவ அருளாளர்களின் தனிப்பெருஞ் செல்வமாகும். திருஞான சம்பந்தர் போன்ற பெரியவர்கள் இச்செந்நெறி நின்றவர்கள் என்பதற்குச் சான்றுகள் பலப்பல உள்ளன. அவற்றுள் ஒன்று.

''செப்ப நெஞ்சே நெறிகொள் சிற்றின்பம்
துப்ப(ல்) என்னா(து) அருளே துணையாக
ஒப்பர் ஒப்பர் பெருமான் ஒளி வெண்ணீற்று
அப்பர் சோற்றுத் துறை செ(ன்)(று) அடைவோமே''2

என்பது திருஞான சம்பந்தர் வாக்கு. அனைத்துச் சிற்றின்பங்களையும் ஆண்டவனின் அருளிப்பாடு எனக் கொண்டனர், பண்டைத் தமிழ்ச் சான்றோர். எனவே விளைவும் சிவமாகவே இருந்தது. இதனை ஓர் உலக வாழ்வியல் நெறி கொண்டு சிந்தித்தால், இவ்வுயரிய கருத்தின் நுண்மையும் மாண்பும் தெளிவாகும்.

கருவிலே திரு: சிவபெருமானையே சதாகாலமும் சிந்தித்துக் கொண்டிருக்கிறான் ஒரு கணவன். அவனது விந்துவில், சிவபெரு

---

1. சிவஞானபோதம் சூத் - 10
2. சம்பந்தர் தேவாரம் 1:28:1

மான் ஆணைப்படி கருவாகப் புகுத்தப் பெறுகிறது, ஒரு சீரிய உயிர். அஃது அவன் விந்துவில் சிவசிந்தனையுடனே சிலகாலம் வளர்கிறது.

சிவத்தை ஒருபோதும் மறவாது, திரிகரணங்களாலும் வழிபடுகிற இயல்புடையது அக்குடும்பம்; அஃது ஒரு சைவக்குடும்பம்; எனவே தலைமக்களாகிய கணவன் மனைவியர் உறவுகொள்ளும் போதும் (புணர்ச்சிக் காலத்தும்) அவர்களுடைய சிந்தனை சிவத்தின்பால் இருக்கிறது. அந்த வேளையில் அவ்வுயிர்க் கரு, தந்தையின் விந்து விலிருந்து தாயின் வயிற்றுக்குள் மாற்றப்பெறுகிறது. எனவே அஃது அப்போது சிவமாகவே உட்புகுகிறது.

தாயும் இடையறாத சிவசிந்தனை உடையவள். ஆகவே அஃது ஒரு சிவக்குழந்தையாக அவள் வயிற்றிலே வளர்கிறது, உரிய காலத்தில் உலகுக்கும் வெளிப்படுகிறது.

அவ்வுயரிய குடும்ப மரபு சைவமரபு. எனவே அவ்வழிப் பிறக்கும் குழந்தையும் கருவிலே திருவுடையதாக அமையும். பிறந்து, வாழ்ந்து, பிரியும், சைவ நெறிக்கு ஏற்ப, அவ்வுயரிய உயிர் முத்திப் பேற்றினையும் பெறும்.

திருவாரூரில் பிறக்க முத்தி; காசியில் இறக்க முத்தி; திருவண்ணாமலையை நினைக்க முத்தி; சிதம்பரத்தைத் தரிசிக்க முத்தி என்பது ஆன்றோர் அனுபவம் சற்றே விரித்து நோக்குவோம்

திருவாரூரினைப் பிருதிவித்தலம் என்பர். நமது உடம்பிலே பிருதிவித் தானமாக அமைவது அடிவயிறு. அதுவே புனர் உற்பத்தி மண்டலம். முற்கூறியவாறு சிவசிந்தனையுடைய தலைமக்கள் தம் புணர்ச்சியால், அங்குக் கருவுற்றுப் பிறக்கும் சிவக் குழந்தை வாழ்நாள் முழுதும் சிவநெறி நின்று, இறுதியில் சிவப் பேற்றினைப் (முத்தியை) பெறும் என்பது உறுதி. எனவே திருவாரூரில் பிறக்க முத்தி என்பதாயிற்று. ''திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன்' என்றார் சுந்தரரும்[2].

---

1. சம்பந்தர் தேவாரம்: 1:23:1.
2. சுந்தரர் திருத்தொண்டத் தொகை 7:23:1

அடுத்துக், காசி முத்தி பற்றிக் காண்போம். ஒன்றிய மனத்தின் துணையால் புருவநடுவில் சிவதியானம் முதிர்வுற்றுச் சிவஞானத் தெளிவு பெற்ற ஓர் உயிர், தலைஉச்சியை (சிகையை)ப் பிளந்து கொண்டு வெளியேறுகிற போது, சிவப்பேறு அடைகிறது என்பது சைவக் கொள்கை.

சிகா சிகா என அடுக்கினால் காசிகாசி என ஒலிக்கும் அண்டத் தொகுப்பின் தோற்றமுடையது நமது உடம்பு. இதில் சிகை மூடிய சிரசினுள் இருக்கும் மூளைப்பகுதியே ஆகாய மண்டலம் என முன்னர்க் கண்டோம். அதுவே (காசி) விசுவ நாதரது தொழிலகம்.

காசி விசுவநாதர் திருமுன் இறப்போர்க்குச் சிவப்பேறு உறுதி என்பது தலையாய சைவக் கோட்பாடு. தூய அவ்வுயிரை அன்னை விசாலாட்சி தன் திருமடியில் கிடத்திக் கொள்ள அதன் அதிநுண்ணிய (ஆனந்தமய கோசச்) செவியில் ஐந்தெழுத்தை ஓதி அருளுகிறார், காசிவிசுவநாதர். உயரிய இச்சைவக் கோட்பாடும், அன்றாட ஆழ்நிலைச் சிவதியானத்தில் அனுபவித்து உணரத்தக்க பேருண்மையாகும்.

அடுத்துத் திருவண்ணாமலை பற்றிச் சிந்திப்போம். அயனும் மாலும் அரிதில் முயன்று தேடியும், அண்ண (நெருங்க) முடியாதவாறு, பேரழல் பிழம்பாய் – 'அண்ணா மலையாய்ச் சிவபெருமான் காட்சியருளிய இடம் திருவண்ணாமலை. இதனைத் தேயுத் தலம் என்றும், இதனை ஒன்றிய சிந்தையுடன் நினைப்போர்க்கு முத்தி என்றும், அருளாளர் தம் தெளிந்த ஞானத்தால் கூறியுள்ளனர்.

மூலாதாரத்து அக்கினியைச் சிவாக்கினியாகச் சிந்தித்து எரி ஓம்புவார்க்கு வினைகள் கருகி ஒடுங்கச் சிவ ஞானப் பேரொளி தோன்றும். சுவாதிட்டானம் முதலான மேல் ஆதாரங்களிலும் அதற்கு அப்பாலும், அச்சிவாக்கினி பரவிச் சிவதாணுவாய் அளப்பரிய ஆற்றலுடன் திகழும். அதனை நினைந்து உருகுவார்க்குச் சிவப்பேறு உறுதி என்பதாயிற்று.

அடுத்துச், சிதம்பர முத்தி பற்றிச் சிந்திப்போம். விராட்புருடனது இதய கமலமாகத் தில்லைப்பதியைக் கூறுவர். பதஞ்சலி

வியாக்கிரபாதர்க்குப் பரசிவம் 'திருக்கூத்துத் தரிசனம்' கொடுத்து முத்தி அருளிய இடம் இதுவே. இது நம் உடம்பில் இதயத் தானமாகும். இங்குச் சிவத்தைச் சிந்தித்து, உளம் நெகிழ்ந்து தரிசித்து முறைப்படி இடையறாது அந்தர்யாகமாக, அகப் பூசனைகள் புரிவார்க்குச் சிவப்பேறு உறுதி என்பதாம்

இவ்வாறு, உயிர் சரீரத்தோடு பிறக்கிற இடம் – திருவாரூர்-சரியை; நாளும் வழிபாட்டு முறையால் வளம் கொழிக்கும் இடம் - தில்லை - கிரியை; ஒன்றிய சிவசிந்தனையால் உயர்ந்து விளங்கும் இடம் - திருவண்ணாமலை - யோகம்; உச்சித்தலை வழிப் பிரிந்து, பரசிவத்தை அடையும் இடம் - காசி - ஞானம்

எனவே இந்த நான்கும் உயிர்கள் உரிய பதமுத்திகளையும் பரமுத்தியையும் படிமுறையில் பெறுதற்கு உறுதுணையாய இடங்களாம். நில உலகில் சிவபெருமான் திருக்கோயில் கொண்டுள்ள திருத்தலங்கள் அனைத்துமே சிறப்பான பயன்களைத் தர வல்லன. எனினும், அவற்றினும் மேலாக, அவரவர். உடம்பிலே உள்ள திருத்தலங்களையும் செவ்விதே பேணுதல், அளப்பரிய பயனை நல்குவதாகும்.

இவ்வாறாக, மாறாத இன்ப அன்போடு சிவத்தைச் சிந்தித்து அனைவரும் வாழ்ந்த காலம் வரை மெய்ம்மை சிறந் தோங்கி நிலவியது. ஆனால் பிற்காலத்தவர் உயிர் வளர்ச்சியை விட, உடல் வளர்ச்சிக்குச் சிறப்புக் கொடுத்தமையால், உலகத் தலப் பயணங்களை மட்டும் ஒரு சடங்காக எண்ணலாயினர் மனம் ஒன்றியோ ஒன்றாமலோ, மக்கள் அங்கெல்லாம் சென்று வரத் தலைப்பட்டனர்.

ஆழ்கடலில் மூழ்கி முத்துக்குளிக்கும் முயற்சிக்கு மாறாக, அலைகளின் மேல் மிதப்பவற்றை அரித்தெடுத்து முத்தினைத் தேடுவதும், அத்தகு முயற்சியையும் ஆய்வு என ஏன் கொள்ளுதல் கூடாது என மாறுகோள் பேசுவதும் பலரது பழக்கமாயின

இதேபோன்று மக்களுடைய சிந்தனை பலவாறாகப் பருமையும், எளிமையும், பொய்ம்மையும் நோக்கிச் சிதறலாயிற்று. எனவே மனத்தை ஒரு நிலைப்படுத்திச் சிந்தையைச் சிவத்தின்

பால் குவித்துச் செலுத்துதற்கு மந்திரோபதேசம் முதலிய கிரியைகள் வேண்டற்பால வாயின

இதனைத் தொல்காப்பியரும் ஒரு சூத்திரத்தின் மூலம் அறிவுறுத்துகிறார்.

சடங்குகளின் தோற்றம்

''பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் கரணம் என்ப''[1]

என்பது தொல்காப்பியச் சூத்திரம். இதன் மூலம், அக்காலத்திலேயே புறச் சமய ஊடுருவல்களும், உலகாயதக் கொள்கைகளும் பரவத் தொடங்கியதை நன்கு ஊகிக்க முடிகிறது.

ஆணவ, கன்மங்களின் பிடியிலிருந்து நாம் விடுபட வேண்டுமென்பதற்காகவே, மாயையினாலான உடம்பு, உட்கருவிகள், உலகம், நுகர்ச்சி ஆகியவை நமக்கு இறைவனால் அருளப்பெற்றன ஆனால் நாம் இரு மலங்களின் அழுக்கிலிருந்து விடுபடுவதற்குப் பதிலாக, மூன்றாவது மலமாகிய மாயையின் கவர்ச்சியிலே மிகுதியும் மயங்கி மும்மலங்களுக்கும் அடிமையானோம். மாயாகாரியங்கள் தருகிற சிறுசிறு இன்பங்களையே பேரின்பமாகக் கருதி, அவற்றை அடைவதிலும், தக்க வைத்துக் கொள்ளுவதிலும், நுகர்வதிலும் மிகுதியான அக்கறை எடுத்துக் கொண்டோம், பொய்மொழியும், வழுவான வாழ்வும் நடைமுறையில் இயல்பாயின. அவற்றிலிருந்து மனம் முதலிய கருவி கரணங்களைத் தூநெறிப்படுத்தவும் இறை இன்பத்தில் செலுத்தவும், சைவ அனுட்டானப் பயிற்சிகள் அன்றாடம் தேவையாயின.

மருந்தும் விருந்தும்:

உடலுக்குத் தேவையான ஊட்டச்சத்து நாம் உண்ணும் உணவிலேயே உள்ளது. அது குறைபடின் நோய்கள் பல தோன்றுதல் இயல்பு. நோய்க்கு மருந்தாக, உரிய ஊட்டச் சத்தினை ஊசி மூலம் (Transfusion) உட்செலுத்துவது மருத்

1. தொல் கற்பியல் - 143

துவ முறை. அதே போன்று பொய்யாலும் வழுவாலும் விளைந்த சிந்தனைச் சிதறல்களைத் தவிர்க்கவே வாசி என்னும் பிராணனை உள்அடக்கி சிவ(ா)என்னும் மூலப் பொருளைக் கரணவழிப்புகுத்து கிற கட்டாயம் ஏற்பட்டது சிவகுரு மூலம் பெறுகிற மந்திர உபதேசமே கரணம் என்க.

ஆ. கற்பு மணம்:

"கற்பெனப் படுவது கரணமொடு புணரக்
கொளற்குரி மரபிற் கிழவன் கிழத்தியைக்
கொடைக்குரி மரபினோர் கொடுப்பக் கொள்வதுவே"[1]

என்பது தொல்காப்பிய நூற்பா.

கொடைக்குரி மரபினோர்: என்பதற்குத் தக்கதோர் சிவகுரு என பொருள் கொள்ளுதல் சாலும். அவரை நிறைமொழி மாந்தர்[2] எனப்பிறிதோர் இடத்தில் சிறப்பித்துக் கூறுவார் தொல் ஆசிரியர்.

நூல்களில் மேலெழுந்த வாரியாகப் படித்த செய்திகளை மட்டுமே மூலதனமாகக் கொண்டு, பொன்னும் புகழும் பிறவுமே கருதித் தம்மையே சிவகுருவாகக் காட்டிக் கொண்டு, உலகினை ஏமாற்றுகிற போலிகளும் வஞ்சனையாளர்களும் யாண்டும் உலவுகின்றனர். அவர்கள் கூறுவன மந்திரம் ஆகா எனவே அனுபூதிமான்களாகிய நிறைமொழி மாந்தரே மந்திரோபதேசத் திற்கு உரியவர் என்பது கருத்து.

சிவபெருமானாகிய தலைவனிடம் கொன்றை மாலை பெற்றுவருமாறு தம் நெஞ்சினைத் தூதுவிடுகிற உமாபதி சிவனார், செல்லும் வழியில் நெஞ்சினை வஞ்சிக்க வல்ல புறச் சமயப் போலிகளைப் பற்றி 'நெஞ்சுவிடுதூது' என்ற தம் சாத்திர நூலில் (அடிகள் 107—119) விரிவாகக் கூறி எச்சரிக் கிறார். அதனை ஆங்குக் கண்டு தெளிக

1. கற்பியல் 140

2. நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த மறை மொழி தானே மந்திரம் என்ப - செய்யுளியல் 480

கொளற்குரி மரபு: எல்லா உயிர்க்கும் இன்பம் [1]என்பது பொதுவானதோர் உரிமை. ஆயினும் அவரவர் வினைவழியே அஃது அமையும் என மொழிவார் பிறிதோரிடத்தில் பண்டை வினைப் பயனின் அனுபவமே இன்றைய வாழ்வு; இதில் பெறுகிற இன்பமும் வினை வழிப்பட்டது; நிலையற்றது. எனவே, நிலையான பேரின்பம் என்பது, ஆணவம் வினை என்ற மலங்கள் நீங்கத் தலைப்படும் போதுதான் அமையத் தொடங்கும். அதனை உணர்ந்து அந்நெறி நிற்க விழைவோரே, மந்திரரோபதேசத்தை பெற்றுக் கொள்ள உரியவர் என்பது உறுதி.

"கொடுப்போர் இன்றியும் கரணம் உண்டே
புணர்ந்(து)உடன் போகிய காலை யான"[2]

என்பது தொல்காப்பியச் சூத்திரம். முன்னர்க் கூறியது போல, கொடுப்போர் என்பது ஈண்டு மனித உடம்பு தாங்கிய குருமாரைக் குறித்தது. இனிச் சூத்திரத்தின் உட்கிடையை நோக்குவோம்.

புணர்ந்து உடன்போகிய காலை:- முன்னர்ப் பலகாலும் கூறியது போல, ஆண்டவனுக்கும் ஆன்மாவுக்கும் பேரின்பப் புணர்ச்சி என்பது நமது தலையினுள், பிட்யூட்டரி என்ற சுத்தவித்தை தத்துவத்தில் நிகழ்கிறது; அந்தநிலையில் ஆன்மா, அசுத்தமாயையினாலான கீழ்நிலைத் தத்துவங்களை எல்லாம் கடந்து,—தனது அசுத்தமாயா உடம்பினை நீத்து—, உணர்வு நிலையில் பிரளயாகலராகவும் விஞ்ஞான கலராகவும் உயர்ந்து, சுத்தமாயா உடம்புடன் நிற்கிறது. அப்போது, கொடுப்போர் இன்றியும் மானுடச் சட்டைதாங்கிய ஒருவரைக் குருவாக அதிட்டித்து நம் போன்ற சகலர்க்கு உபதேசம் செய்வது போலன்றிச் சிவபெருமான் தாமே முன்னின்றும், உள்நின்றும் அவ்வுயர்நிலை ஆன்மாக்களுக்கு அருள் உபதேசம் புரிவார். எனவே கொடுப்போராகிய மானுடக் குருமார் அங்கு இல்லை என்க. (எ—டு) கண்ணப்பரைக் குடுமித்தேவர் ஆட்கொண்ட முறைமை.

---

1. எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது தானமர்ந்து வரூஉம் மேவற்றாகும் பொருளியல்- 19

2. தொல்காப்பியம் கற்பியல் 141

விளக்கவுரை: ஆன்மாக்களைச் சகலர், பிரளயாகலர், விஞ்ஞானகலர் என மூவகைப் படுத்துகிறது சைவசித்தாந்தம்.

சகலர்: புல்பூண்டு தொடங்கிப் பிரமா, விட்டுணு, தேவர்கள் உள்ளிட்ட நாம் எல்லோரும் மும்மலப் பிணிப்புள்ளவர்கள். எனவே சகலவர்க்கத்து உயிரினம் என அழைக்கப்படுகிறோம்.

பக்குவம் அடையாத நமக்குச் சிவபெருமான் தாமே நேரில் வருவதில்லை. படர்க்கையாக, மானுட உருவில் உள்ள ஒருவரை அதிட்டித்து நின்றே, சிவபெருமான், நமக்குக் குருவாக அருள் புரிகிறார்.

பிரளயாகலர்: 'நில்லா உலகம் புல்லிய நெறித்தே'[1] எனத் துணிந்து, மாயையின் மயக்கத்திலிருந்து விடுபட்டு, ஆணவம், கன்மம் என்ற இருமலங்களால் மட்டுமே பந்திக்கப்பட்ட ஆன்மாக்கள் பிரளயாகலர் ஆவர்.

சிவநெறியில் பக்குவப்பட்ட அவ்வுயிரினத்துக்குச் சிவபெருமான், தாமே முன்னிலையில், தெய்வ வடிவத்துடன், திருநீலகண்டனாய் மான் மழு முதலியன ஏந்திய நாற்கரத்துடன், நேரில் காட்சிதந்து அருளுகிறார்.

விஞ்ஞானகலர்: "தன்னை மறந்தாள், தன் நாமம் கெட்டாள், தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே"[2] என்றவாறு, சிவநெறியில் செவ்விதே வளர்ந்து, அனைத்தையும் சிவச்செயலாகவும், சிவமயமாகவும் கொள்ளுகிற உயர்பக்குவ ஆன்மாக்கள் விஞ்ஞானகலர் எனப்பெறுவர். மாயா, கன்ம மலங்கள் முற்றிலுமாக நீங்கி, ஆணவமும் தன் ஆற்றல் ஒடுங்கிப் பெயரளவில் ஒட்டி நிற்க, அவ்வாறு மெய்ஞ்ஞானத்தில் திளைத்திருக்கும் அவர்களுக்குச சிவபெருமான், தன்மையில், உள்நின்று, தம்மை உள்ளுணர்வு (Intuition) வாயிலாகவே, உணர்த்தி அருளுகிறார்.

எனவே மானுட (சகலவர்க்க உடம்புடன் கூடிய) குரு வடிவம் என்பது சகலவர்க்கத்தினர்க்கு மட்டுமே என்பதும், ஏனைய உயர்பக்குவ ஆன்மாக்களுக்குப் படர்க்கை வடிவம்

---

1. தொல்காப்பியம் புறத்திணை, காஞ்சி - 76
2. அப்பர் தேவாரம்,

அன்றிப் பிறமுறைகளிலும் சரணம் என்ற மந்திரோபதேசம் நிகழும் என்பதும் இச்சூத்திரத்தால் உணர்த்தப் பெறும் சைவ சித்தாந்த மெய்ப்பொருளாம்.

இ. பரத்தமை:

இத்தகைய கற்பு நெறிக்கு மாறாக, மனத்தின் எண்ணங்கள் தலைவிரித்தாடச், சிந்தனைகள் சிதறுண்ட நிலை பரத்தமை எனப்படும். குவிந்த கற்பு நெறிக்கு நேர்மாறாகப் பரந்து திரிதலின் பரத்தமை எனப்பட்டது. உலக வாழ்வில் கண்களைப் பரப்பிக் கருத்தினைப் பரப்பி, உள்ளத்தைப் பரப்பி, உடம்பினைப் பரப்பி, இன்பம் எனும் பெயரால் நோயினையும் பரப்பி, அலைந்து திரியும் இயல்பினை உடையோர் பரத்தையர் ஆவர். இஃது ஆண் பெண் பால்வேறுபாடின்றி இருபாலார்க்கும் பொருந்தும்.

பரத்தையின் பரந்துபட்ட சிந்தனைச் சிதறல்களையும், சிறுமை இயல்புகளையும், 'திருப்புகழில்' அருணகிரியார் திருவாக்கால் அறியலாம்.

ஆயினும், பரத்தை என்ற சொல், அவையல் கிளவியாக இன்று வழக்கிலுள்ள கடுஞ்சொல் போலன்றித் தொல்காப்பியர் காலத்தில், கற்புக்கு மறுதலையாகக் கொள்ளப்பட்டிருப்பதை அறிகிறோம்.

"பப்(பு) ஓதிப் பவணனாய்ப் பறித்ததொரு தலையோடே
திரிதர்வேனை..."[1]

பரந்துபட்ட பொய்யான நூல்களை ஓதி நாளை வீணாக்கிய மைக்காக அப்பரடிகள் இவ்வாறு வருந்துகிறார்.

'பப்(பு)அற வீட்டிருந்து உணரும் நின் அடியார்...'[2]

"மெய்யடியார்களது மனமானது பரந்து விரிந்து அலையாமல் குவிந்து ஒருவழிப்பட்டு, நிட்டை கூடி நின்று, இறைவன் திருவடி இன்பத்தை உணரும்" என மாணிக்கவாசகர் சிவனடியார்தம் சீலம்பற்றிப் பாடுகிறார்.[2]

---

1 அப்பரடிகள் 4:5:47

2 மணிவாசகர்: திருப்பள்ளி எழுச்சி 8:20.6

இவ்வுயரிய நிலைக்கு மாறாக அமைந்த அவலநிலை ஒன்றினைப் பட்டினத்தார் கூறக் கேட்போம்.

"கைஒன்றுசெய்ய விழிஒன்றுநாடக் கருத்துஒன்று எண்ணப்
பொய்ஒன்று வஞ்சகநா ஒன்று பேசப் புலால் கமழும்
மெய்ஒன்று சாரச் செவிஒன்று கேட்க விரும்பும்யான்
செய்கின்ற பூசைஎவ் வாறுகொள் வாய், வினை தீர்த்தவனே.'

பன்னிருவர்

தலைவன், தலைவியரிடையே அக ஒழுக்கம் நிகழுவதற்கு துணையாகப் பன்னிருவரை குறிப்பிடுகிறார், தொல்காப்பியர்.

"தோழி தாயே பார்ப்பான் பாங்கன்
பாணன் பாடினி இளையர் விருந்தினர்
கூத்தர் விறலியர் அறிவர் கண்டோர்
யாத்த சிறப்பின் வாயில்கள் என்ப.[1]

அக ஒழுக்கம் நிகழ்வதற்கு அவர்கள் வாயில்போல் இயங்குதலின், வாயில்கள் எனப்பட்டனர்.

நம் தலையினுள் ஆல்ஃபேக்டரி (Olfactory Nerve) முதலிய 12 முக்கியமான நரம்புகள் இருப்பதாகவும், அவை அறிவுத்தானமாகிய மூளையுடன் இணைக்கப் பெற்று நமது உடம்பின் மொத்த இயக்கத்திற்கும் துணை நிற்பதாகவும் மருத்துவ நிபுணர்கள் ஆய்ந்து கூறுகின்றனர்.

பன்னிரண்டு சூரியர்கள் எனச் சைவ ஞான நூல்களும், 12-திங்கள், 12-ராசி வீடுகள் எனச் சோதிட நூல்களும், பன்னிரு வாயில்கள் எனத் தொல்காப்பியரும், 12-தலை நரம்புகள் (Cranial Nerves), 12 மார்பு நரம்புகள் (Thorax Segmants) என உடலியலாரும், பன்னிரு திருக்கரங்கள் எனக் கந்த புராணமும் மொழிவதில், ஊழ்வினை ஊட்டத் தொடர்பான ஓர் இயைபு இருப்பதைக் காணலாம்.

---

1. தொல்காப்பியம், கற்பியல்-52

உலகில் மின்கடத்திகளாகச் செப்புக் கம்பிகள் இருப்பதைப் போன்று, தெய்வீக ஊற்றத்திற்கு உறைவிடமாக நமது உடலில் நரம்பு மண்டலமே அமைந்திருக்கிறது.

சிவசத்தியின் பால் பதிவாகிற நமது ஊழ் வினைகளுக்கு ஏற்ப, விண்ணிலுள்ள சூரியர்கள், சந்திரன், ராசி வீடுகள் முதலியனவும், நம் உடலிலுள்ள தலை நரம்புகள் (12), மார்பு நரம்புகள் (12) என்பனவும், வினைப் பயனை நமக்கு ஊட்டும் வாயில்களாக அமைந்து, இவ்வுடம்பின் கண்ணும் உலகின் கண்ணும், உயிர்களாகிய நம்மைத் தொடர்பு படுத்தி, வினைப் பயனாகிய இன்ப, துன்ப நுகர்ச்சிக்குத் துணை நிற்கின்றன. இங்கு வினையூட்ட முறைமையைச் சிறிது விரித்து நோக்குவோம்.

உருத்து வந்தூட்டும் ஊழ்வினை

நாம் ஈட்டிச் சேர்த்த மொத்த வினைத் தொகையும் சிவ சத்தியின்பால் பதிவாகி இருக்க, நமது ஏன்ற வினையின் ஏட்டுப் படிகள் மாயையின் கூறுகளாகிய விண்மீன்களிலும் வான் கோள் களிலும் பதிவாகி,

நமது குண இயல்புகளைக் கால நியதிக்கு ஏற்ப மாற்று கின்றன என்பது சாத்திரங்கள் கூறும் உண்மை.

அவ்வாறு விண்மீன்களிலும் வான் கோள்களிலும் பதிவான ஏன்ற வினைகள், நமது தலையில் உள்ள (12-Cranial Nerves என்னும்) நாடி நரம்புகள் வழியாகவும், நமது நெஞ்சில் உள்ள (12 - Thorax Nerves என்னும்) நரம்புகள் வழியாகவும், நமது உடம்பினுள் பாய்ந்து, நமது குணநல ஏற்றத்திற்கும் மாற்றத் திற்கும் துணயாகின்றன என்பதும்,

அந்த நாடி நரம்புகள் பன்னிரண்டுமே, தொல்காப்பியர் அறிவுறுத்தும் 12 - வாயில்கள் என்பதும், சைவ சித்தாந்திகள் வழிபடும் 12 - சிவசூரியர்கள் என்பதும்.

வீணை விகிர்தனான சிவபெருமான் நமது வினைப் பயன் நுகர்ச்சிக்கு ஏற்பத்தம் சத்தியைக் கொண்டு இந்தப் பன்னிரு நரம்புகளையும் மீட்டி நமது மனத்தை இயக்குகிறார் என்பதும்.

மனம் ஒரு தோழியாக நின்று, உயிரை வழி நடத்துகிறது என்பதும்,

இதுவே, ஊழ்வினை உருத்து வந்து ஊட்டுகிற முறைமை என்பதும்,

ஆய்வாளர் சிந்தனைக்கு அரிய விருந்தாகும்.

வினை ஈட்டமும் பயன் ஊட்டமும் கால நியதிக்கு ஏற்ப அவ்வினை செய்த நம்மையே இவ்வாறு வந்து அடையுமாறு இறையருள் கூட்டுவிக்கிறது.

இச்சருத்தை இத்துறை வல்லார் மேலும் சிந்திப்பது உயர்ந்த பயனைத் தருவதாகும்.

பிரிவு: எக்காலமும் சிவபெருமான் ஆன்மாவோடு ஒன்றாகவும், உடனாகவும், வேறாகவும் நின்று அருள்பாலிக்கிறார்[1] எனப் பகர்கிறது சிவஞானபோதம். உயிரும் சிவத்தையே பற்றுக்கோடாகக் கொண்டு, சிவ உலகத்தில், சிவன் திருவடி நிழலில், சிவ வடிவோடு, சிவனது சச்சிதானந்தப் பேரின்பமாகிய விலையிலாக் கருவூலத்தை நீங்காது நிற்றலே 'கற்பு' நெறியாகும்.

அவ்வாறின்றி, உலகியல் கருவில் உற்பவித்தல் என்பது பிரிவு எனப்படும்.

மூவாண்டுக் குழந்தையாகிய திருஞானசம்பந்தருக்கு அவ்வுயரிய சிவ உணர்வு ஏற்பட்டதாலேயே, சீர்காழித் திருக்குளக்கரையில், அம்மே அப்பா! "அம்மே அப்பா!" என விளித்து அழுதது. குழந்தையின் மெய்ஞ்ஞான முதிர்வுகண்டு, அம்மையும் அப்பனும், விரைந்து தோன்றி, ஞானப்பால் ஊட்டித் திருவருள் பாலித்தனர்.

இக்கருத்து, தொல்காப்பியத்திலும் இடம்பெற்றுள்ளமை காண்போம்.

உ பிரிந்தோன் மீளுதல்:

தலைவன், வினையின் நீங்கிய தலைவியைத் தழுவத் துடிக்கிறான். அவனது விரைவினையும், ஆற்றலையும், அருளிப்

1 சிவஞானபோதம் - சூத் - 2

பாட்டினையும் தொல்காப்பியர் ஒரு நூற்பாமூலம் வருணிக்கிறார்.

''வினைவயிற் பிரிந்தோன் மீண்டுவரு காலை
இடைச்சுர மருங்கில் தவிர்தல் இல்லை
உள்ளம் போல உற்றுழி உதவும்
புள்ளியல் கலிமா உடைமை யான''[1]

இந்நூற்பாவுக்கான பொருளைப் பதவுரை, விரிவுரை, கருத்துரை மூலம் விளக்கமாகச் சிந்திப்போம்.

பதவுரை

வினைவயின்: ஆன்மாக்கள் நுகர்ந்து கழிக்க வேண்டிய வினைகளின் நிமித்தம்

பிரிந்தோன்: வினைவயப்பட்ட ஆன்மாவினிடம் வெளிப்படத் தோன்றாமல், முன்னர் அவ் ஆன்மாவின் பிடரியில் ஆதி சத்தியோடு மறைந்திருந்து, வினைப் பயனை ஊட்டி வந்த சிவபெருமான்,

மீண்டுவரு காலை: அவ்வினைகளை அவ் ஆன்மா முழுவதுமாக நுகர்ந்து, கழித்து, அவ்வினைகளினின்று நீங்கியமையால், தூய்மையுற்ற ஆன்மாவாகிய, அத்தலைவிக்குப் பேரின்பம் அருளுவதற்குத் திருவுளம் கொண்டு (சிவபெருமான்) வெளிப்பட்டு வரும்போது

உள்ளம் போல; சிற்சத்தியால் விரைந்து செயல்படுத்தப் பெறுகிற அவரது திருவுளக் குறிப்புகளை (சங்கற்பங்களை)ப் போல,

உற்றுழி உதவும்: தமது விருப்பத்திற்கு ஏற்பத் துணை நிற்கும்.

புள்ளியல் கலிமா: நிலம் தீண்டாது, கலித்த ஓசையுடன் பறந்து செல்லும் இயல்புடைய குதிரை[1]யினை

உடைமையான: (உலகப் பொருள்களுள் உயிர்ப் பொருள்களை அடிமையாகவும், உயிரற்ற சடப் பொருள்களைஉடைமைப் பொருள்களாகவும் கொண்ட சிவபெருமான், விரைந்த செயல் திறனுடைய ஆகாயக் குதிரையினை) உடைமையால்,

---

1, தொல். கற்பியல், 192

இடைச்சுர மருங்கில்: ஆன்மாவின் வினை ஊட்டத்துச்சாக
ஆதி சத்தி மறைந்திருந்து தொழில்பட்ட,
தலையின் பிடரிப் பகுதியாகிய இடைப்
பட்ட நிலங்களில்

தவிர்தல் இல்லை: தடைப்பட்டு மேலும் மறைந்திருந்து தங்கு
தல் இல்லை; விரைந்து சென்று அருளுவன்
(எம்)

விளக்கவுரை:

வினைவயின்: ஆன்மாக்களாகிய நாம் எல்லாம் வினை வயப்பட்டவர்கள். பொதுவாக நமது பிறப்பு, வாழ்வு, இறப்பு என்ற உலகியல் சுழற்சிக்கு அச்சாணியாக இருப்பவை, நாம் செய்துள்ள வினைகளே.

பிரிந்தோன்: ஆன்மா வினைப்பயனை நுகர்கிற காலத்தில் அதனைப் பிரிந்திருக்கும் தலைவனைக் குறிப்பதாயிற்று. பிரிதலாவது ஈண்டு, மறைந்திருத்தல் என்ற பொருளை உடையது.

ஆன்ம வினையையும், ஆண்டவன் மறைப்பையும் சற்றே விரித்து நோக்குவோம்.

மூவகை வினைகள்: நாம் பல பிறப்புகளிலும் செய்த மொத்த வினைகளுள், அவ்வப்போது நுகர்ந்து கழித்தவை போக, நம் கணக்காகச் சிவசத்தியின்பால் எஞ்சி நிற்கும் வினைக்குச் சஞ்சிதம் என்று பெயர்.

மொத்த வினைகளுள், முதிர்வுற்று நமக்கு இன்ப துன்ப நுகர்ச்சிக்காக இப்பொழுது எதிர் வந்து நிற்பனவற்றிற்குப் பிராரத்தம் என்று பெயர்.

அவ்வப்போது நாம் செய்கிற புதிய வினைகளுக்கு ஆகாமியம் என்று பெயர்.

வினைவயிற் பிரிவும் பொருள் வயிற்பிரிவும்: வினைகளை நுகர்ந்து கழித்தற்கும், மெய்ப் பொருள் ஞான ஈட்டத்துக்கும் துணையா நிற்கும் கருவிகளே உடம்பு முதலியன. அவை நிறை

வுறுகிற வரை பிறப்பு இறப்புச் சுழற்சியில் சிக்கிய ஆன்மா, ஆண்டவனைப் பிரிந்திருக்க வேண்டியதாகிறது.

இத்தகைய பிரிவுகளை வினைவயிற் பிரிவு என்றும், பொருள் வயிற் பிரிவு என்றும் கூறுவர்.

அப்பரடிகளது சமண வாழ்வு, வினைவயிற் பிரிவுக்கு ஒரு சான்றாகும். திருவொற்றியூரில் சூழுரை தப்பிய சுந்தரர் கண்ணொளி நீங்கியதோடு, பல்லாற்றானும் தோழமை தந்த சிவபெருமானையும் சிலகாலம் பிரிந்திருக்க நேர்ந்தமையும் வினைவயிற் பிரிவே.

திருப்பெருந்துறையில் திருவாதவூரரை ஆட்கொண்ட பெருமான், அவர் சிதம்பர மான்மியங்களாகிய மெய்ப் பொருளையும் நிச்சயித்து அறிதற் பொருட்டு, அவரை அங்கேயே விட்டுப் பிரிதல், பொருள்வயிற் பிரிவுக்குப் பொருந்தி வரும் சான்று ஆகும்.

வினைவயிற்பிரிவு: வினைகள் கழிகிறவரை பிறப்பு நீங்காது; பயனை நுகர்ந்து தொலைத்தாலன்றி வினைகழியாது என்பன நியதி எனவே ஊழ்வினையாகிய நோயினை நுகர்ந்து கழித்தற் பொருட்டு நாம் இப்பூவுலகில் பிறக்கிறோம்.

நோயுற்ற குழந்தைக்கு மருத்துவர், ஊசிமூலம் மருந்து ஏற்றுகிறார். அப்போது அச்சிறுகுழந்தை அழுகிறது. ஆயினும் ஈன்றெடுத்த அன்புத்தாய் இடைமறிக்கவில்லை. நோயாகிய பெருந்துன்பத்துக்கு ஊசியாகிய சிறுதுன்பமே நன்மருந்து என்பதை அவள் அறிவாள். ஊசிபோடுகிற அந்தச் சிறிது நேரம் தனது பார்வையை வேறு பக்கம் திருப்பிக் கொள்ளுகிறாள். இஃது ஓர் உலகியல் நிகழ்ச்சி.

அதே போன்றுதான் இறையியலில் தலைமக்களின் அகவாழ் விலே, வினைமலம் என்பது பேரின்பக் கூட்டத்திற்கு ஒரு தடை யாக இருக்கிறது. ஆயினும் தலைவனாகிய சிவபெருமான், நமது வினைநுகர்ச்சிக்குத் துணை செய்யும் பொருட்டுத் தன்னை

வெளிப்படக் காட்டிக் கொள்ளாது, நமது பிடரியில் மறைந்து நின்று அருள் பாலிக்கவே செய்கிறார்.

அந்த நிலையில் அவர் திரோபவன் என்றும் அவரது சத்தி திரோதாயி என்றும் அழைக்கப் பெறுகின்றனர்.

அன்னையின் அருளால் மூவினை நீக்கம்: அவ்வாறு ஆன்மா தன் வினைப்பயனை நுகர்ந்து கழிப்பதற்குத் துணையாக நிற்பவள் சிவபெருமானது அருட்சத்தியே. பெருமானது ஆணைப்படி அவள் நமது பின்தலைப் பிடரியில் ஆதிசத்தியாக மறைந்திருந்து உரிய காலத்தில் உரிய அளவுப்படி நமக்கு ஊழ்வினைப் பாலை ஊட்டிப் பிராரத்த வினையாகிய மலத்தைக் கழிப்பிக்கிறாள்.

நிறைமொழி மாந்தராகிய சிவகுரு அருளும் தீக்கை மூலம், குவிந்து கிடக்கும் சஞ்சித வினையைச் சாம்பலாக்குகிறாள்.

நமக்கு இறை உண்மையை உணர்த்தியும், நம்பால் ஆணவத்தை ஒடுக்கியும், 'எல்லாம் சிவச்செயல். அவனது விருப்பம், அவனது அறிவு' என்ற உணர்வினை ஊட்டியும் ஆகாமிய வினை நம்மை அணுகாதவாறு காப்பவளும் அவளே.

மீண்டுவருகாலை: இவ்வாறு பிராரத்த வினையை நுகர்ந்து கழித்தும், ஆகாமியம் என்ற ஏறுவினையை வாராமலே தடுத்தும், சஞ்சிதம் என்ற வினைத் தொகுதியை மூலப்பதி வேட்டிலேயே அழித்தும், முத்திற வினைகளும் முழுவதுமாக நம்மிடமிருந்து நீங்கிய காலத்தில், மாயையினாலான இந்த உடம்பும் நமக்குத் தேவையற்ற தாகிறது.

பிரிவுக்கான வினைநுகர்ச்சி முதலிய காரணங்கள் நீங்கியதும் இன்புறுபருவத்தை நாம் எய்துகிறோம். அப்போது சிவபெருமான் எவ்வாறு வெளிப்பட்டுவந்து அருள்பாலிக்கிறார் எனக் காண்போம்.

உள்ளம் போல: சிவபெருமான் எவ்விதக் கருவி கரணங்களையும் துணைக்கொள்ளாது சங்கற்ப மாத்திரையால் ஐந்தொழில் புரிகிறார் எனச் சிவாகமங்கள் செப்புகின்றன. அவருடைய திருவுள்ளக் கருத்தினையே தனக்கு இடப்பட்ட

ஆணை என ஏற்று விரைந்து தொழிலாற்றுகிற சிவசத்தியை அவர் எப்போதும் தம் இடப்பாகத்து உடையவராக இருக்கிறார்.

ஈண்டு உள்ளம் என்பது சிவபெருமானது திரு உள்ளத்தை (சங்கற்பத்தை)க் குறிப்பதாயிற்று.

உற்றுழி உதவும்: இடியினின்று தோன்றுகிற மின்னல் இடியினை விடப் பத்துலட்சம் மடங்கு கூடுதல் வேகம் காரணமாக இடியினுக்கும் முன்னதாக மிக விரைந்து நமக்குக் காணப்படுகிறது அன்றோ?

அதேபோன்று, சிவத்திலிருந்து வெளிப்படுகிற சத்தி, தன் அளப்பரிய வேகத்தால், சிவபெருமானின் திரு உள்ளக் குறிப்பை உணர்ந்த மாத்திரையே மிக விரைந்து தொழிற்பட்டு, ஆன்மாக்களின் மலமாசுகளை நீக்கியும், சிவபெருமான் திருவடிகளில் ஆன்மாக்களைச் சேர்ப்பித்தும் அருள் புரிகிறாள். இஃது அவளது உற்றுழி உதவும் பண்பு ஆகும்.

புள் இயல்கலிமா: சிந்தையைப் போல விரைந்து செல்ல வல்லதும், நிலத்தின் கண் தோயாது பறவையைப் போன்று பறந்து செல்லும் ஆற்றலுடையதும் நல்லதொரு தோழனைப் போல உறுதுணை புரியும் இயல்புடையதும், இடைச்சுரமருங்கில் தடையின்றிப் பாய்ந்து செல்லும் தன்மையுடையதும், சீரான ஒலியுடன் கலித்துக் கலித்துச் சென்று இன்புறுத்து வதுமாகிய உயர்ந்த இனக்குதிரை என்பது இத்தொடருக்கு அமைகின்ற பொருள்.

இத்தகைய அளப்பருஞ் சிறப்புடையது அவ் உயர்நலக் குதிரை. அதனை ஊர்ந்து செல்லும் தகுதி ஒரே ஒருவருக்குத் தான் உண்டு. அவரே பரிமேல் அழகராகிய சிவபெருமான்.

நிலம், பொழுது, சூழலுக்கு ஏற்பச் சிவபெருமான் வெவ்வேறு பொருள்களை அதிட்டித்துத் தொழிற்படுத்தும் பேராற்றல் மிக்கவர். பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்[1] என்பார்

1. திருவெம்பாவை 10

மணிவாசகர். ஆன்மாக்களை வினை நுகர்விப்பதற்கும், வினை நீங்கியதும் அவற்றைத் தம் திருவடிக்கீழ் நிலைபெறச் செய் வதற்கும் சிவசத்தியையே தமக்கு உடம்பாகக் கொள்ளுகிறார் எனச் சாத்திரங்கள் கூறுகின்றன.

அப்போது சிவசத்தியே சிவபெருமானுக்குப் புள்ளியல் கலிமா ஆகிறாள்.

பேரண்டத் தொகுப்பினை ஒத்த நமது மனித உடலில் நம் தலையே ஆகாய மண்டலம் எனவும், இங்குச் சுத்தமாயை அசுத்தமாயை என்ற இரண்டிற்கும் எல்லையாக இருப்பது மூன்றாம் நாளம் (Third Ventricle) என்ற ஒரு தெய்வீக உறுப் பாகும் எனவும் முன்னரும் கண்டோம். இந்த நாளமும் இதன் மேற்பகுதியும் சுத்தமாயை; இந்த நாளத்தின் கீழ்ப்பகுதி அசுத்த மாயை.

சிவபெருமானது பிட்சாடனக் கோலத்தின் ஆண்மைப் பொலிவை நினைவுறுத்தும் இந்த நாளமே புள்ளியல் கலிமா என ஈண்டுக் குறிப்புரைக்கப்படுகிறது. தூமாயையினாலான இவ் உயரிய குதிரையை ஊர்ந்து வர வல்லவர் சிவபெருமான் ஒருவரே.

(அசுத்த மாயையின் தொடர்பிலுள்ள நம்போன்ற ஆன் மாக்களோ, வஞ்சிக்கொடி போல இந்த நாளத்தின் கீழ் ஊர்ந்து சென்றுதான் பெண்மைத்தானத்தை அடைய முடியுமேயன்றி, இப்புள்ளியல் கலிமா மீதூர்தல் யாண்டும் இல்லை. அதனால் தான் தொல்காப்பியரும்,

''எத்திணை மருங்கினும் மகடூஉ மடன்மேல்
பொற்புடை நெறிமை இன்மையான''[1]

என்றனர்.)

இடைச்சுரமருங்கில்: சுத்தமாயைக்கும், பிரகிருதிமாயைக்கும் இடைப்பட்ட பகுதி என்பது பொருள் சுத்தமாயையினால் ஆனவை நாதம் முதலிய ஐந்து சிவதத்துவங்கள். இவை சிவபெருமான் நமக்காகத் தொழிற்படுகிற களம்; எனவே சிவதத்துவம் என்ற பெயரால் அழைக்கப்படுகின்றன.

அசுத்த மாயையின் கீழ்ப்பகுதியைப் பிரகிருதி மாயை என்றும் அழைப்பர், இது சித்தம் முதல் நிலம் ஈறாக 24-தத்துவங்களாக விரிகிறது. அசுத்த ஆன்மாக்களாகிய நம்போன்றார்க்கு உலகியல் வாழ்விற்கான கருவிகரணங்களைக் கொண்டமையின், இதனை ஆன்மதத்துவம் என்றும் அழைப்பர்.

தூய ஆண்டவனின் தொழிலகமாகிய சிவதத்துவத்துக்கும், மாசுடைய ஆன்மாக்களின் வாழ்விடமாகிய ஆன்ம தத்துவத்துக்கும் இடைப்பட்ட பகுதியாக விளங்குவது வித்தியா தத்துவம்எனப் படும். காலம் முதலிய ஏழு அசுத்தமாயா தத்துவங்களாலானது இது. இஃது ஆண்டவனின் பேரருள் திறத்திற்கும் ஆன்மாக்களின் சிறுமைப் பண்புகளுக்கும் இடையில் ஒரு பாலமாகத் திகழ்கிறது. சிவசத்தியின் முதல் வெளிப்பாடாகிய ஆதிசத்தி இவ்விடத்தில் மறைந்திருந்து ஆன்ம இயக்கத்திற்குத் துணை நிற்கிறாள். அவள் இச்சாசத்தி, ஞானசத்தி, கிரியாசத்தி எனத்தன் எளிவந்த தோற்றங்களால், ஆன்மாவின் இச்சை, ஞானம், கிரியை என்ற மூவகைத் திறனையும் விளக்குமாறு தூண்டுகிற இடம் இதுவே.

முன்னர்ப் புறத்திணையில் 'வழிபடு தெய்வம் நிற்புறம் காப்ப......! என ஆதிசத்தியின் தொழில்படு இடத்தைக் குறிப் பிட்ட தொல்காப்பியர், கற்பியலின் இச்சூத்திரத்தில், அவ் இடத்தின் இயல்பினை 'இடைச்சுர மருங்கில்' எனக்குறிப்புரைத் தனர் எனலாம்.

அறிவியல் சிந்தனை: 'இடைச்சுரமருங்கு' தொடர்பான இவ்வுண்மைகளை அறிவியல் கண் கொண்டும் ஆய்ந்து நோக்கலாம்.

பெருமூளை, சிறுமூளை, நடுமூளை, முகுளம், முதுகுத் தண்டு இவை அடங்கிய நமது உடற்பகுதி மையநரம்பு மண்டலம் எனப்படும். இவற்றின் வடிவமைப்பும், செயற்பாடும் இந்நூலின் மூன்றாம் அதிகாரத்தில் விரிவாகக் கூறப்பெற் றுள்ளன. எனவே இங்கு அவற்றின் தத்துவத் தொடர்பினை மட்டும் சிந்திப்போம்.

பெருமூளை = சிவதத்துவம்;

முதுகுத்தண்டினைக், கழுத்துப்பகுதி என்றும், உடற்பகுதி என்றும் இரண்டு கூறாக நோக்குவர். முதுகெலும்புகள் ஒன்றன் மேல் ஒன்றாக, உருத்திராக்க மணிகளைப் போல், அழகாக அடுக்கப்பெற்றுள்ளன. முதுகுத்தண்டு என்பது தேரின் வடம் போன்று, 72,000 நாடிநரம்புகளாலான ஒருவலிமையான நரம்புத் தொகுதி. அதிலிருந்து முதுகுகெலும்புகளின் இடையில் 31-பக்க நரம்புகள் பிரிந்து செல்லுகின்றன.

கழுத்தில் பக்க நரம்புகள்—ஏழு உள்ளன. அவை வித்தியா தத்துவங்கள் ஏழினையும் ஒத்தன.

உடற்பகுதியில், பக்க நரம்புகள் இருபத்து நான்கு (24) உள்ளன. அவை ஆன்ம தத்துவங்கள் இருபத்து நான்கை உணர்த்துவன.

பெருமூளைக்கும், உடற்பகுதிக்கும் இடைப்பட்டு நிற்பவை சிறுமூளை, நடுமூளை, முகுளம், கழுத்துநரம்புகள் என்பன. இவையே சிவனையும் சீவனையும் இணைக்கும் 'இடைச்சுர மருங்கு' எனலாம்.

சிறுமூளை என்பது பின்தலைப் பிடரியில் உள்ளது. அறிவு நரம்புகளும், செயல் நரம்புகளும் இங்குத்தான் காடுபோல்[1] மண்டிக்கிடந்து தொழிற்படுகின்றன. இச்சை என்ற விருப்ப உணர்வு, மறைபொருளாய் உள்ளது. இச்சை, அறிவு, செயல் மூன்றும் சிவசத்தியால் இயக்கப் பெறுகின்றன.

ஒரு பெண் தன் கூந்தலை மூன்று கூறாகப் பிரித்துப் பின்னிக் கொண்டாலும், இரண்டு கூறுகளே புறத்தார்க்கு வெளிப்படத் தோன்றுவதாயும், ஏனைய ஒன்று மறைந்து கிடப்பதாகவுமே உள்ளது அல்றோ? அதேபோன்றுதான், அறிவுக் கூறும், செயல் கூறும் எல்லோருக்கும் புலனாகி நிற்கின்றன. இச்சை என்ற கூறுமட்டும் வெளிப்படத் தானே புலப்படாமல், தொடர்புடைய பிறிதொரு செயல்மூலமாகவே மற்றவர்கள் அறியுமாறு அமைந்துள்ளது.

---

1. பிடரியில் நரம்புகள் காடுபோல மண்டிக்கிடப்பதால், இப்பகுதியை 'முல்லை நிலம்' என்றனர் பண்டைத் தமிழ்ச்சான்றோர்.

உலகமுகப்பட்ட உயிருக்கு, நரம்பு மண்டலத்தின் இயக்கம் முதுகுத்தண்டின் வழியாகக் கீழ்நோக்கி அமையும்; இறைமைப் பயிற்சி செய்வோர்க்கு உயிர் மேல்நோக்கிச் சென்று, புருவநடுவில் குவிந்த சிந்தையோடு தியானிக்கத் துணைபுரியும்.

தவிர்தல் இல்லை: தங்குதல் இல்லை என்பது பொருள். அதுகாறும் ஆண்டவன்-ஆன்மப் பேரின்பக் கூட்டத்துக்குத் தடையாக இருந்த மும்மலங்களும் நீங்கியமையாலும், தூய ஆன்மாவுக்கு விரைந்து அருள்பாலிக்க வேண்டுமென்பது சிவபெருமானது திருவுளக்குறிப்பு ஆதலாலும், நம் பிடரியில் அதுகாறும் மறைந்திருந்து, ஆன்மாவை அதன் ஊழ்வினைக்கு ஏற்ப (முதுகுத்தண்டுவழி)க் கீழ்நோக்கிச் செலுத்தி ஊனப் பாலையே ஊட்டிக் கொண்டிருந்த திரோதான சத்தி, தானே அருட்சத்தியாக மாறி, ஆன்மாவை மேல் நோக்கிச் செலுத்தித் திருவருளாகிய ஞானப்பாலை ஊட்டிச் சிவபெருமான் திருவடியில் சேர்ப்பிப்பதாலும், ‘இருவினை ஒப்பு, மலபரிபாகம், சத்தி நிபாதத்தைத் தொடர்ந்து தான் சிவப்பேறு’ என்பதே சைவ சித்தாந்தம்’ ஆதலாலும், இடைச்சுரமாகிய பிடரிப்பகுதியில் எவ்விதத் தடையும் இல்லை என்பதாம்.

விளைவுரை: நமது உடம்பில் ஞானபீடமாகத் திகழ்வது, முன் தலையிலுள்ள பெருமூளையே. இதன் இருகூறுகளுக்கு நடுவில் தான் பிறைவடிவான மூன்றாம் நாளம் உள்ளது. சிவபெருமான் திருவுளக் கருணையால், மெய்த்தவத்தோர்க்கு இந்த நாளம் **ஆண்மைப் பொலிவினைப்** பெறுகிறது.

பெருமூளையின் கீழ்ப்பகுதியில் உள்ளது, ‘பிட்யூட்டரி’ என்னும் சுரப்பி. இதுவும் சிவபெருமான் திருவருள்துணையால், மெய்த்தவம் புரியும் உயர்ந்த ஆன்மாவுக்குப் **பெண்மைத்** தானம் ஆகிறது.

இவ்வாறு நம் ஒரே தலையினுள் ஆண்பெண் உறுப்புக்கள் இரண்டும் ஒருசேர ஒரே இடத்தில் உள்ளனவா? என்ற ஐயம் சிலருக்கு எழலாம்.

சிவபெருமான் மாதொருபாகன் என்பது உயர்ந்த சைவக் கொள்கை தனது இடப்பாகத்தில் சத்தியை எப்பொழுதும் கொண்டிருப்பவன் என்பது கருத்து.

அதேபோல், உலகப் பொருள்கள் அனைத்துமே தத்தமக்குள் ஆண்மை பெண்மை இரண்டையும் ஒருங்கே அமையப்பெற்றிருக்கின்றன. இதற்குச் சான்றுகளும் எண்ணற்றனவாய் உள்ளன.

எடுத்துக்காட்டாக, நிலத்தின் உயர்ந்த பகுதியாகிய மலையினை நோக்குவோம். மலையின் உச்சியில் ஆண்மையை நினைவுறுத்தும் குவடும், மலையின் பிளவுகளில் பெண்மையை நினைவுறுத்தும் குகைகளுமாக, ஆண்பெண் அமைப்போடு தோன்றுகின்றன அன்றோ?

அதேபோன்று, நம் உடம்பில் உயர்ந்த இடமாகிய சிரசினுள் (பெருமூளை என்ற) குறிஞ்சியும், அதன் கண் (மூன்றாம் நாளம் என்ற) சிவபெருமானது பிட்சாடன ஆண்மைப் பொலிவும், அதன்கீழே (பிட்யூட்டரி என்ற) ஆன்மாவின் பெண்மைத் தானமும், செவ்விதே அமைந்திருக்கின்றன. சிவபெருமான் திருவருள் அவற்றை இயக்குதலால், ஆண்டவன் — ஆன்மப் பேரின்பப் புணர்ச்சி நம் தலையிடத்து நிகழ்கிறது.

இனிப், பேரின்பம் பற்றிய தொல்காப்பியச் சிந்தனைகளை மேல்வரும் பொருளியலில் காண்போம்.

5. பொருளியல்

அ. நிலை பேரின்பம்

இன்பம் என்ற ஓர் அக உணர்வினை மையமாகக் கொண்டு, அரிய தொரு நூலை, நம் தமிழினத்துக்குத் தந்தருளியவர், தொல்காப்பியர்.

இரண்டு பொருள்கள் பொருதும் போது, புதியதோர் உணர்வு தோன்றுகிறது.

பொருதுதல் என்பது அன்பு வழி அமையின், அதனைப் புணர்ச்சி எனக் கூறுவர்; ஆணவ வழி நிகழின் அதனைப் போர் எனப் பகவர்.

அன்பு வழிப் பட்டதை அகத்திணை என்றும், ஆணவ வழிப் பட்டதைப் புறத்திணை என்றும், இலக்கணம் வகுத்துரைக்கிறார், தொல்காப்பியர்.

ஏனைய எழுத்திலக்கணம், சொல்லிலக்கணம் இவற்றை விடப் புணர்ச்சி இலக்கணமே தொல்காப்பியத்தில் மிகுந்து காணப்படுகிறது.... அதிலும் பொருள் கட்டுப்பாடு பற்றிய புணர்ச்சிகளை விட, ஒலிக்கட்டுப்பாடு பற்றிய புணர்ச்சிகளே தமிழில் மிகுதி. இரண்டும் ஒன்றின் ஒன்று மேவி வருவனவே எனினும் ஓர் இடத்தில் ஒலிக்கூறு மேலோங்கியுள்ளதா? பொருள் கூறு மேலோங்கியுள்ளதா? எனப் பகுத்து அறியவேண்டும்.

எழுத்தும் எழுத்தும் புணர்ந்து சொல் உருவாகிறது. சொல்லும் சொல்லும் புணர்ந்து, பொருள் பொதிந்த ஒரு தொடர் உருவாகிறது.

இது, மொழியிலக்கணத்தின் தோற்றம்.

தலைவனும் தலைவியும் புணர்கிறார்கள், இன்புறுகிறார்கள் இஃது, அன்பின் விளைந்த அக ஒழுக்கம்.

வானத்தில் இரண்டு மேகங்கள் பொருதுகின்றன; இடி என்ற பேரொலி எழுகிறது. இது, நிலவியல் – அறிவு கூறும் இயற்கை நியதி.

வீறு கொண்ட இரண்டு அரசுகள் பொருதுகின்றன; அதன் விளைவு; நாட்டிற்கும் நாட்டு மக்களுக்கும் துன்பம். இது பொய்ம்மையாகிய உலகப் பற்றின் காரணமாகத் தோன்றிய, புற ஒழுக்கம்.

இவற்றிலிருந்து ஓர் உண்மை புலனாகிறது: அன்பு வழிப் புணர்ச்சி இன்பம் பயப்பது; ஆணவ வழிப் போராட்டம் துன்பம் தருவது, என்பதே அவ்வுண்மை.

இப்பொழுது, இன்பம் என்பது என்ன? என்பது பற்றி அறிய முற்படுவோம்.

அறிவியல் சிந்தனைகளையும், உலகியல் நடைமுறைகளையும் துணையாகக் கொண்டு, தொல்காப்பியர் கூறுவனவற்றைச் சைவ சமயக் கோட்பாடுகளுடன் இணைத்துச் சிந்திப்பது, நமது அறிவுக்குத் தெளிவூட்டுவதாக அமையும்.

இன்பம் என்பது சிற்றின்பம் என்றும் பேரின்பம் என்றும் இரு வகைப்படும்

சிற்றின்பம் என்பது உலகியல் தொடர்பானது; பேரின்பம் என்பது இறைமைத் தொடர்பானது.

சிற்றின்பம்:

"செப்ப நெஞ்சே! நெறிகொள் சிற்றின்பம்
துப்ப(ல்) என்னா(து) அருளே துணையாக
ஒப்ப(ர்) ஒப்பர் பெருமான் ஒளிவெண்ணீற்று
அப்பர் சோற்றுத் துறைசென்(று) அடைவோமே"[1]

இது, சைவ சமய குரவர்களுள் ஒருவரான திருஞான சப்பந்தரது அருள்வாக்கு. இல்லற நூல்களில் விதித்த அறிவுரைப்படி, நமது ஐம்புலன்களால் நுகரப்படும் சிற்றின்பங்களையும் 'நான், எனது ஆற்றலால் நுகர்கிறேன்' என்ற ஆணவ உணர்வு இன்றி, 'இறைவன் திருவருளையே துணையாகக் கொண்டு இவ்வின்பத்தை நுகர்கிறேன்' என்று சிந்தித்தால், அதனைச் சிவபெருமான் உவந்து ஏற்று அருள் பாலிப்பார், என்பது இப்பாடலின் திரண்ட கருத்து.

எனவே, நெறியான சிற்றின்பத்தைச் சைவ சமயம் ஒதுக்க வில்லை என்பது தெளிவு.

சுவை, ஒளி, ஓசை, ஊறு, நாற்றம் என்ற ஐந்தும் புலன்கள். நா, கண், காது, தோல், மூக்கு என்ற ஐந்தும் பொறிகள். உயிர்களாகிய நாம், மனத்தின் துணைகொண்டு நம் உடலில் உள்ள மேற்கண்ட புலன் பொறிகளின் வாயிலாக உலகப் பொருள்களை நுகர்கிறோம். இதுவே சிற்றின்பம் எனப்படும்.

1. திருஞான சம்பந்தர் தேவாரம் 1:28:1

உலகில் வாழும் எல்லா உயிர் இனங்களும் இன்பமாக வாழவே விரும்புகின்றன.

ஆயினும் மக்களது அறிவு வேறுபாட்டினைப் போன்றே, இன்ப நுகர்ச்சியின் ஏற்றத் தாழ்வும் பல வகையாக இருக்கக் காணுகிறோம்.

உண்டியில் இன்பம், பெண்டிரில் மயக்கம், கல்வியில் ஊற்றம் காட்சியில் கருத்து, பொய்ப் புகழில் ஒட்டம், மெய் உணர்வில் நாட்டம், — என ஒவ்வொருவரது இன்ப உணர்வுகளும் மாறு பட்டு அமைகின்றன.

மேலும், உலக நடைமுறையில் நாம் இவ்வாறு நுகரும் இன்பமானது, ஆற்றலால் மிகச் சிறியதாகவும், மிகக் குறுகிய தொரு கால எல்லைக்கு உட்பட்டதாகவும், துன்பக் கலப்புடைய தாகவுமே இருக்கக் காணுகிறோம்.

அகத்துறையில் எடுத்துக் கொண்டாலும், தலைமக்கள் சேர்ந்து வாழுங்காலங்களில் இன்பம் மட்டுமன்றித் துன்பமும் விரவி வருதலையும், அதேபோல் அவர்கள் பிரிந்து வாழுங் காலத்தில் மங்கல மனைவிழா, பொது விழாக்கள் முதலிய புறத்திணை இன்பங்கள் நிகழ்தலையும் காணுகிறோம்.

பேரின்பம்: சைவ சாத்திரங்கள் சிற்றின்ப நுகர்வினை ஒதுக்கவில்லை, என்பது கண்டோம் அளவால், கால வரை யால், துன்பக் கலப்பால், சிற்றின்பம் சிறுமை யுடையதே, எனினும் அஃது ஊழ்வினை நுகர்ச்சி அளவுக்கு வேண்டற்பாலது என்பதையும் அதுவே பேரின்ப நுகர்வுக்கு முன்னோட்டப் பயிற்சிநிலை என்பதையும் சைவம் முழுமையாக ஏற்றுக் கொள்ளுகிறது.

இரண்டு வயதுக்குழந்தை ஒன்று, சிற்றில் சமைத்தாலோ, சிறுதேர் உருட்டினாலோ நாமும் மகிழ்வோடு அதற்குத் துணை நிற்கிறோம்; அதனுடைய அந்த விளையாட்டில் ஊக்கு விக்கிறோம்.

ஆனால் இருபது வயதிற்கு மேல் வளர்ந்த பிறகும் அக் 'குழந்தை' அதே விளையாட்டினைத் தொடர்ந்தால், அதன் அறிவு வளர்ச்சியை என்னென்பது? அதன் முன்னேற்றத்தில் நாட்டங்கொண்டோரது மன நோவினைத் தான் எவ்வாறு விளக்குவது?

சிற்றில் சமைத்த சிறுகுழந்தை, தன் வளர்ந்த பருவத்தில், அரசுப் பண்புடையதாயின், அரண்மனை கட்டலாம்; ஆன்மீக எழுச்சியுடையதாயின் ஆலயங்கள் சமைக்கலாம்.

சிறுதேர் உருட்டிய குழந்தை, ஆகாய விமானமோ ஆலயத்துத் திருத்தேரோ ஓட்டுதற்கு முற்படலாம். இவை குழந்தையின் சீரான அறிவு வளர்ச்சிக்குச் சான்றாவன.

இதேபோன்றுதான், இருபது வயதிலிருந்து சிற்றின்பம் துய்க்கிற ஒருவன், எழுபது எண்பதிலும் இடையறாச் சிற்றின் பத்திற்காக மட்டுமே ஏங்கித் தவிப்பானாகில், அவனுடைய அறிவு வளர்ச்சியை என்னென்பது?

சிற்றின்பத்தின் ஒவ்வொரு நுண்ணிய நிலையையும். உள்ளத்து எழுச்சிகளையும், உடலின் மாற்றங்களையும் உன்னிப் பாய்ச் சிந்தித்து, அவை பேரின்பத்திற்கு எவ்வாறு முன் னோட்டப் பயிற்சியாக அமைகின்றன என ஆய்ந்து தெளிந்து பேரின்ப நுகர்வினை விழைதலே, மனித அறிவிலிருந்துமேம்பட்டு உயர்ந்ததாகிய தெய்வீக நிலையாகும்.

இத்தகைய முற்கூறிய ஐம்புலன்களைக் கடந்த நிலையில், மனம் ஒன்றிக்குவிந்து, இறைவன் திருவடியில் நிலையான சிவஞான இன்பத்தில் உயிர் திளைத்திருத்தலே பேரின்பமாகும்.

உலகியல் சிற்றின்பத்தை நோக்கிய உயிரின் வாழ்வினைக் கீழ்நிலைத் தொழிற்பாடு எனவும், இறைமைப் பேரின்பத்தை நோக்கிய உயர் வாழ்வினை மேநிலைத் தொழிற்பாடு எனவும் அருளாளர் மதிப்பிடுவர்.

இந்த இரண்டு நிலைகளிலும் உயிருக்கு உறுதுணையாகச் செயல்படுவது மனம் என்ற உட்கருவியாகும். மனம் பற்றிய விரிவான செய்திகளை மரபியலில் காண்போம்.

ஆ. இன்பம்- ஒரு பொது உடைமை:

"எல்லா உயிர்க்கு(ம்) இன்ப(ம்) என்பது
தா(ன்)அமர்ந்து வரூஉம் மேவற்(று) ஆகும்" —[1]

இவ்வாறு பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே, நம்முடைய சைவத்தமிழ்ச் சான்றோராகிய தொல்காப்பியர், உலகில் வாழுகின்ற அனைத்து உயிர்களின் இன்ப நுகர்வு பற்றிச் சிந்திக்கிறார்

எறும்பு முதல் யானை ஈறாக உள்ள விலங்கினமாயினும் சரி, நம் போன்ற மனித உயிர்களாயினும சரி, பிரமா விட்டுணு உள்ளிட்ட தேவ கணங்களாயினும் சரி, — எல்லா உயிர்களுக்கும் இன்பம் என்பது ஒரு பொது உடைமை; இவ்வாறு மேலான தோர் உண்மையை விதந்தோதும் தொல்காப்பியர், அந்த இன்பத்தை நுகர்வதிலே, உயிர்களுக்கு இடையில் உள்ள ஏற்றத் தாழ்வுகளையும், அதற்கான காரணத்தையும் எடுத்துரைக்கிறார்

'மனம் போல் வாழ்வு' 'அவரவர் வினைவழி, அவரவர் அனுபவம்' என்பன, உலகினில் வழங்கிவரும் தொடர்கள், அதே போல், ஒவ்வோர் உயிரும் தன்தன் உள்ளத்தில் எழும் சிந்தனைகளாலும், நாவினால் வெளிப்படுத்தும் சொற்களாலும், உடம்பால் செய்யும் செயல்களாலும் ஏதோ ஒரு வினையைச் செய்து கொண்டே இருக்கிறது.

'தினை விதைத்தவன், தினை அறுப்பான்; வினை விதைத்தவன், வினை அறுப்பான்' என்பது உலக வழக்கு.

'வினையைச் செய்தவனே, அதற்கு ஈடான பயனை, அதற்கு உரிய காலத்தில் நுகர்ந்து தொலைக்க வேண்டும்', எனச்சைவ ஞான நூல்கள் தெளிவுற மொழிகின்றன.

இன்றைய அறிவியலும் இக்கருத்தினை முழுமையாக ஏற்கிறது. "ஒவ்வொரு வினைக்கும் எதிரானதும் நிகரானதுமான (மாற்றுவினை) வினைப்பயன் ஒன்று உண்டு" (Every action has an equal and opposite reaction) என்பது, நியூட்டன் என்ற மேலைநாட்டுப் புவியியல் மேதையின் பொருள் அலைவுக் கோட்பாடு.

---

1) தொல்காப்பியம் - பொருளியல் 219

'வினையே பிறப்புக்கு வித்து' என்பது சைவசித்தாந்தம். தொல்காப்பியர் இந்த வினைக் கோட்பாட்டினைத் தமது நூலில் பல இடங்களில் எடுத்தியம்புகிறார்.

'' 'வினை' எனப் படுவது வேற்றுமை கொள்ளாது
நினையுங் காலைக் காலமொடு தோன்றும்''[1]

மொழியால் வருகிற வினைக்கு மட்டுமன்றி, உடலாலும் மனத்தாலும் உருவான வினைகளுக்கும், செய்தோனின் உயர்வு தாழ்வு நல்வினை, தீவினை என்ற எவ்வித வேற்றுமையையும் இல்லாது, காலநியதிப்படி, பயன் தோன்றும், என்பதை ஆசிரியர் தமது இந்தச் சொல்லதிகார நூற்பா மூலம் குறிப்பாக உணர்த்தக் காணுகிறோம்.

வினைவயிற் பிரிந்தோன், வினையின் நீங்கி விளங்கிய அறிவன், வினை உயிர் மெலிவு, பாலது ஆணை என்பன போன்ற தொடர்களும் தொல்காப்பியரால் ஆளப்படுகின்றன.

வினை காரணமாகப் பிறப்பு இறப்புச் சக்கரத்தில் நாம் சுழலுகிற போது, மறைந்திருந்து வினைப்பயனை ஊட்டுகிற இறைவன், நாம் வினையின் நீங்கிய வழி, வெளிப்படத்தோன்றி நம்மை ஆட்கொள்ளும் விரைவினை. முன்னர்க் கற்பியலில் கண்டோம்.

முன்செய்த வினைகள் நம்மை இன்பதுன்பச் சக்கரத்தில் சுழற்றுகின்றன. வினைக்கட்டுகளிலிருந்து நாம் விடுதலை பெறுவதற்கும், மெய்ப் பொருளாகிய பரசிவத்தின் பெருங்கருணையை உய்த்துணர்வதற்கும் உறுதுணையாகவே, இந்த உடம்பு முதலியன மாயை எனும் சட ஆற்றலிலிருந்து இறைவனால் நமக்கு அருளப்பெற்றன.

அவ்வாறாயின் இந்த உடம்பு உலகம் முதலியனவே, நிலையான நிறைவான இன்பத்தை நமக்கு நல்குமா? எனில், அன்று அன்று.

---

1. தொல்காப்பியம். -சொல்-வினையியல்-1

பொழுது விடிகிற வரை, சிறிய அகல்விளக்கு ஒன்று இருளில் தவிப்போனுக்குச் சிறுதுணையாக நிற்பதுபோல, ஆணவ மல இருளில் தவிக்கும் நமக்குச் சிவ சூரியச் செங்கதிர்கள் தோன்றுகிற வரை, இந்த உடல் உலகம் முதலியனவும் ஓர் இடைக்காலச் சிறுவிளக்காக, நமக்கு அருளப் பெற்றவையே.

எனவே, இவற்றால் நாம் துய்க்கிற இன்பம் எத்துணை பெரிய தாயினும், அஃது அகல்விளக்கின் ஒளி போன்ற சிறு இன்பமே.

இவ்வாறு நிலையற்றதும், அளவால் சிறியதும், துன்பக் கலப்புடையதுமான உலகியல் இன்பத்தைச் சிற்றின்பம் எனக் கண்டோம்.

அவ்வாறாயின் நிலையானதாகிய ஓர் இன்பம், அளப்பரிய தாகிய ஒரு பேரின்பம், துன்பக்கலப்பே இல்லாததாகிய ஒரு தூயஇன்பம் உண்டா? என்ற வினா எழுகிறது அதற்குத் தொல்காப்பியரே விடை பகர்கிறார். அதனை ''அந்தமில் சிறப்பின் ஆகிய இன்பம்'' எனப்பெருமையும் கூறுவார்.

அந்தமிலா இன்பம்:

''அந்தமில் சிறப்பின் ஆகிய இன்பம்
தன்வயின் வருதலும் வகுத்த பண்பே''[1]

'அந்தமில்' என்பது, முடிவில்லாத, நிலையான, அழிவில்லாத (Permanent, Eternal) தன்மையைக் குறிக்கும்.

இதனை வடநூலார் 'சத்' என மொழிவர்.

'சிறப்பு' என்பது உயிர்களது அறிவு விளக்கத்தைக் குறிக்கும். பண்டு தொட்ட ஆணவமலப் பிணிப்பால், தனது அறிவுக் கண் மூடப்பெற்று, அறியாமை என்னும் இருளிலே அலமந்து கிடக்கும் உயிர் சிறிது சிறிதாக அறிவுக்கண் திறக்கப்பெற்று, மெய்ப் பொருளை உணரும் மனத்தினைப் பெறுதலே, சிறப்பு ஆகும்.

---

1. தொல். பொருள். 239.

இதனைத் தொல்காப்பியரே ஒரு நூற்பா மூலம் உணர்த்தக் காணுகிறோம்.

"ஒன்றறி வதுவே உற்றறி வதுவே
இரண்டறி வதுவே அதனொடு நாவே
மூன்றறி வதுவே அவற்றொடு மூக்கே
நான்கறி வதுவே அவற்றொடு கண்ணே
ஐந்தறி வதுவே அவற்றொடு செவியே
ஆறறி வதுவே அவற்றொடு மனனே
நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத் தினரே"[1]

என்ற நூற்பா மூலம், ஆன்மச்சிற்றறிவு வளர்ச்சியடையும் முறைமையை ஆசிரியர் புலப்படுத்துகிறார்.

மனம் என்ற ஆறாவது அறிவினைப் பெற்றதனால்தான், நமக்கு மனிதர் என்ற சிறப்புப் பெயர் வழங்குகிறது.

மற்றொரு நூற்பா மூலம், 'வினையின் நீங்கி விளங்கிய அறிவினரே முனைவர்[2] எனச் சிறப்பிக்கப் பெறுகிறார்.

எனவே, 'சிறப்பினாகிய' என்ற தொடர்மூலம், அறிவின் பெருக்கமே உயிரின் சிறப்பு, சிவஞானமாகிய பேரறிவு கூடி வருதலே உயிருக்குத் தனிச்சிறப்பு என்பதைத் தொல்காப்பியர் அறிவுறுத்துகிறார். இதனை வடநூலார் 'சித்' என மொழிவர்.

'இன்பம்' என்பது சிவபெருமானது திருவடிப்பேறாகிய பேரின்பம். இதனை வடநூலார் 'ஆனந்தம்' என அழைப்பர்.

முற்றறிவுடைய முதல்வன் சிவபெருமான். வினைநீங்கி அறிவு விளக்கம் பெற்ற தூய ஆன்மா அவரது திருவடியில் நிலை பெற்றிருத்தலே அவ்வுயிர் பெறுகின்ற ஒப்புயர்வற்ற உண்மையான பேரின்பமாகும்.

இதனைத் திருவடிப்பேறு என்றும், (சத்சித் ஆனந்தம்) சச்சிதானந்தம் என்றும், வீடுபேடு என்றும், முத்திப் பேறு என்றும், சாயுச்சியம் என்றும், பரமுத்தி என்றும் பல விழுமிய சொற்களால் குறிப்பர்.

---

1. தொல், மரபியல் 571.
2. தொல், மரபு, 640.

பேரின்பம் எப்போது கூடும்? திருவடிப்பேறு என்பது, இந்த உடலோடு கூடிய உலக வாழ்வினை நீந்த பிறகு அமையும் என்பர் பலரும்.

ஆயினும், 'வினையின் நீங்கி, விளங்கிய அறிவைப் பெற்ற' மேலான உயிர், உடலோடு கூடியிருப்பினும், தன் முனைப்பு இன்றி, இறைபணி நின்று, எஞ்சிய வாழ்வின் சிந்தை முழுவதை யும், சிவபெருமான் திருவடியிலேயே நிலைபெறுமாறு நிறுத்து தலால், அதற்குச் 'சீவன் முத்தர்' என்ற சிறப்புப் பெயர் நிலவு கிறது.

அத்தகு சீவன்முத்த நிலையில், உடலோடு கூடிய இந்த மனிதப் பிறவியிலேயே, திருவடிப் பேரின்பம் சித்திப்பதற்கு வாய்ப்பு உண்டு என்பது சிவாகமக் கருத்து.

தொல்காப்பியரும் இதனை உறுதிப் படுத்துகிறார். தனது கருத்தைத் 'தன்வயின் வருதலும் வகுத்த பண்பே' என்ற தொடர் மூலம் அவர் நமக்குத் தெளிவாக்குகிறார்.

சாத்திரச் சான்று: உயிர் உடலோடு கூடி நிற்கிற இவ் வாழ்வுக் காலத்திலேயே, நமக்குச் சிவபெருமான் நிலையான அறிவானந்தத்தை அருளுவார் என்பது சிவாகமங்கள் அறுதி யிட்டுக் கூறும் உண்மை. 'சிவாகமங்கள் சித்தாந்தம் ஆகும்' எனமுதலில் கூறிச் சிவபெருமானின் பேரருள் திறத்தையும் சிறப்பித்துப் பேசுகிறார், சகலஆகம பண்டிதராகிய அருள்நந்தி சிவனார், தமது சிவஞானசித்தியார் என்னும் சாத்திர நூலில்.

சித்தாந்தத் தேசிவன்தன் திருக்கடைக்கண் சேர்த்திச்
செனனம் ஒன்றிலே, சீவன் முத்தராக
வைத்(து)ஆண்டு, மலங்கழுவி ஞானவாரி
மடுத்(து) ஆனந் தம்பொழிந்து, வரும்பிறப்பை அறுத்து,
முத்தாந்தப் பாதமலர்க் கீழ்வைப்பன்' என்று
மொழிந்திடவும் உலகர்எல்லாம் மூர்க்கர்ஆகிப்
பித்தாந்தப் பெரும்பிதற்றுப் பிதற்றிப் பாவப்
பெருங்குழியில் வீழ்ந்திடுவர்; இதுஎன்ன பிராந்தி?''[1]

1) சிவஞானசித்தியார் 268

சைவஅருளாளரின் இக்கருத்து, தொல்காப்பியரது சைவசித்தாந்தக் கொள்கையினை அரண்செய்வதாக அமைந்திருக்கக் காணலாம்.

இறைவன் திருவடி இன்பத்தை இப்பிறவியிலேயே துய்க்கவும் கூடும் என்ற உண்மையைத், திருமூலரும் நமக்கு அறிவுறுத்துகிறார்.

"கண்டுகண்(டு) உள்ளே கருத்துற வாங்கிடில்,
கொண்டு கொண்(டு) உள்ளே குணம்பல காணலாம்;
பண்டுநந்(து) எங்கும் பழமறை தேடியை
இன்றுகண்(டு) இங்கே இருக்கலு(ம்) ஆமே"[1]

இலக்கியச் சான்று:

இதனை மாணிக்கவாசகரது தீந்தமிழ்த் திருவாசகத்தால் சிந்திப்பது, இன்பம் பயப்பதாகும்,

அண்டமுத(ல்) ஆயினா(ன்) அந்தமிலா ஆனந்தம்
பண்டைப் பரிசே பழ அடியார்க்(கு) ஈந்(து) அருளு(ம்)
அண்டம் வியப்புறுமா பாடுதுங்காண் அம்மானாய் -[2]
பந்தம் பறியப் பரிமேற்கொண் டான்தந்த
அந்தமிலா ஆனந்தம் பாடுதுங்கான் அம்மானாய்[3]
அந்தமொன் றில்லா ஆனந்தம் பெற்றேன்
யாதுநீ பெற்றதொன் றென்பால்......[4]

தத்துவப் பின்னணியில் அறிவியல் சான்று: சுழுமுனை நாடி என அழைக்கப் பெறுவது, நமது முதுகுத் தண்டு. அதன் கீழ்ப் பகுதியில் சிற்றின்பத்திற்கான உறுப்புகள் உள்ளன. அதே போன்று, சுழுமுனையின் மேல் பகுதியில், பேரின்பத்திற்கான உறுப்புகளை, இறைவன் நமக்கு அருளியிருக்கிறார்.

நம் சுழுமுனையின் உச்சிக்கு, முகுளம் என்பது பெயர். அதன் மேல் உள்ள பெருமூளைப் பகுதி சுத்தமாயையினால் ஆயது.

1) திருமூலர் திருமந்திரம் - 566
2) திருவாசகம் 8:8:9
3) திருவாசகம் 8:8:3
4) திருவாசகம் 8:22;10

இங்குச் சிவதத்துவங்கள் ஐந்தும் உள்ளன. சிவபெருமான் நமக்காகத் தொழிற்படுகிற நிலையில், இவையே அவரது அலுவலகம் ஆவன.

முகுளத்துக்குக் கீழே உள்ள பகுதி, 31-பக்க நரம்புகளைக் கொண்டது; அசுத்த மாயையினால் ஆனது. இஃது இரண்டு கூறுகளை உடையது. மேற்கூறாக உள்ள ஏழு (Cervical Segments) கழுத்து நரம்புகளும் வித்யாதத்துவங்கள் ஏழையும் நினைவுறுத்துவன, அதேபோல், கீழ்க் கூறாக உள்ள 24 இருபத்து நான்கு முதுகுநரம்புகளும், ஆன்ம தத்துவங்கள் 24-ஐ நினைவுறுத்துவன. நெஞ்சில் 12, வயிற்றில் 5, அடிவயிற்றில் 5, மூலாதாரத்தில் 2 என்றவாறு அவை விரிந்து, தேர் வடம்போன்றும் ஆலவிழுதுகள் போன்றும் அமைந்துள்ளன. மும்மலங்களால் பிணிக்கப்பட்ட நம்போன்ற உயிர்கள் பொதுவாக இந்த 31-தத்துவங்களுள்தான் அலைந்து திரிகின்றன.

சுத்தமாயை இறைமைத் தானம் எனவும், பிரகிருதிமாயை ஆன்மாக்களின் வாழ்விடம் எனவும், இடைப்பட்ட அசுத்த மாயை, இறைவன் மறைந்திருந்து ஆன்மாக்களுக்கு வினைப் பயன் ஊட்டுகிற வித்தியா தத்துவம் எனவும் சாத்திரங்கள் அறிவுறுத்தும் 'சுரவழி' என்ற இலக்கியச் சொல்லாட்சி இதனோடு ஒத்ததாகும்.

நமது முகுளத்தின் மேல், சுத்தமாயையில், நடுமூளை என்ற இன்பத்தானம் ஒன்று இருக்கிறது.

திருக்கோயில்களில் சோமாஸ்கந்தர் என்ற திருஉருவ அமைப்பில், அம்மையாகிய அருட் சத்திக்கும், அப்பனாகிய சிவ பெருமானுக்கும் நடுவில், குழந்தையாகிய கந்தவேள் இன்பமுடன் அமர்ந்திருப்பதைப் பார்க்கிறோம் அல்லவா?

நமது உடம்பிலும் சத்சித் ஆனந்த வடிவாகிய இத்தகைய சோமாஸ்கந்த மூர்த்தம் ஒன்று உள்ளது நம் முன்தலையிலுள்ள பெருமூளைப்பகுதி அப்பனாகவும், பின்தலைப் பிடரியிலுள்ள சிறுமூளைப்பகுதி அம்மையாகவும் இருக்க, இடையிலுள்ள இந்த

நடுமுளையே கந்தவேளின் இன்பத்தானமாகிறது. அறிவியலாரும் இதனை இன்பத்தானம் (Pleasure Centre) என்றே அழைக்கின்றனர்.

தலையில், தலைவன்:

இந்த நடுமூளையிலிருந்து, மூன்றாம் நாளம் என்ற ஒரு பிறைவடிவ நாளம் தொடங்கி, நம் புருவ நடுவை நோக்கி வளைந்து கிடக்கிறது. இது, கந்தவேளின் திருவடியை அருணகிரியாருக்கு நினைவூட்டுகிறது. தொல்காப்பியரும், புணர்தலை உரிப்பொருளாகக் கொண்ட குறிஞ்சி நிலத்துக்கு முருகவேளையே தலைவனாகக் கூறுகிறார். 'சேயோன் மேய மைவரை உலகம் என்பது அவரது கூற்று.

இந்திரனது வச்சிரப்படை, எம்பெருமானது இடபக்கொடி, கஜலெட்சுமி, பிறைக் கீற்று, தலைவன் வரைவு கடாவி ஏறும் மடல், இவை போன்ற பற்பல தோற்றங்களை உடைய இந்த நாளம் சிவபெருமானது பிச்சாண்டிக் கோலத்தின் ஆண்மைப் பொலிவினை நினைவுறுத்துமாறு அமைந்துள்ளது (இதன் விரிவாக்கத்தை மூன்றாம் அதிகாரத்தில் காண்க).

அகத்திணையியலில் குறிஞ்சிக் கிழானாகக் கந்தவேளைக் கூறிய தொல்காப்பியரும், களவியலில், 'மிக்கோனாயினும் கடிவரையின்றே' எனப் பாவிசைத்துச் சிவபெருமானது தனிப் பெரு முதன்மையைச் சிறப்புற மொழிகிறார்.

தலையில், தலைவி: நம் தலையின் பெருமூளைக்குக் கீழே மையப் பகுதியில், தலைமைச் சுரப்பி (Pituitary — the master gland) ஒன்று உள்ளது. இதுவே நம் உடலிலுள்ள மற்ற பகுதிகளின் வளர்ச்சியையும் செயற்பாடுகளையும் கட்டுப் படுத்துகிறது.

வினையின் நீங்கிய உயிருக்கு, இந்த இடமே, பெண்மைத் தானம் ஆகும்.

ஆண்டவன் — ஆன்மப் புணர்ச்சி, இங்குத்தான் நிகழ்கிறது. ஆன்மா அறிவு விளக்கம் பெறுவதும், பேரின்பத்தில் தலைப்

படுவதும், சிவசத்தியையே தனக்குத் தூய உடம்பாகக் கொள்ளு வதும், சுத்தவித்தை எனப்பெறும் இப்பெண்மைத்தானத்தில் தான்.

தலையில், பேரின்பக் கூட்டம்: சிவயோக நெறி நிற்பாரது மனம், சிவமூலமந்திரத்தை முறையாகச் சிந்தித் திருக்கும். அப்பொழுது, உயிர் என்ற தலைவி, அசுத்தமாகிய நமது கீழ் உடம்பிலிருந்து விடுபட்டுக், குண்டலினி எனும் சிவ (விந்து) ஆற்றலின் துணையால் மேலே ஏறி; நம் தலையினுள் சுத்த வித்தை என்ற. இப்பெண்மைத் தானத்தைச் சேரும

அதுகாறும் 'கூன்பாண்டிய'னாக இருந்த மூன்றாம நாளம் சிவமூலமந்திர ஆற்றலால் பொலிவு பெற்றுப் பிச்சாண்டியின் ஆண்மைக் கோலத்தோடு, 'நின்ற சீர்நெடுமாற'னாகி, இப் பெண்மைத் தானத்தைப் பொருந்தும். இதனையே,

'பேரின்பப் புணர்ச்சி' என்றும் 'திருவடி இன்பம்' என்றும் சைவ சித்தாந்தம் சிறப்பித்துக் கூறும்;

'தலைவன் தலைவியரது இன்பக் கூட்டம்' என்று பழந்தமிழ் நூல்கள் பாங்குற மொழியும்;

'ஆண்டவன் ஆன்மப் புணர்ச்சி' என்று, அனுபவ இன்பமாக அருளாளர் பண்ணிசைப்பர்.

ஆண்டவன்—ஆன்மப் பேரின்பப் புணர்ச்சிக்கு இடம், நம் தலை; ஆதலால், அகத்துறையில் இடந்தலைப்பாடு' ஓர் சீர்மிகு சொல்லாட்சியாயிற்று.

அந்தமிலா அப்பேரின்பம் இந்தப் பிறப்பிலேயே அமைதலும் கூடும் என்பது பண்டு தொட்டு இன்றுவரை சைவ அருளாளர்கள் அனுபவ வழி தெளிந்து கூறுகிற உண்மை:

அடுத்து, அப்பேரின்பப் புணர்ச்சிக்கு முன்னும் பின்னும் ஆன்மா எய்துகிற மெய்ப்பாடு பற்றிக் காண்போம்.

6. மெய்ப்பாட்டியல்

அ அந்தக்கரணங்கள்:

"அகத்தின் அழகு முகத்தில் தெரியும்"
என்பது ஆன்றோர் வாக்கு,

ஒவ்வொருவருடைய உள்ளத்தின் அடி ஆழத்திலும் உணர்ச்சிகள் தோன்றுகின்றன அவை உடம்பில் வெளிப்படையாகச் சில மாறுதல்களை விளைவிக்கின்றன. மெய் என்ற உடம்பின் கண் நிகழும் இத்தகைய மாற்றத்தை 'மெய்ப்பாடு' என அழைத்தனர் அறிஞர்.

இதன் மூலம், உள்ளத்தில் எழுகின்ற ஆழமான உணர்ச்சி, புறத்தேயுள்ள உடலுறுப்புக்களையும் இயக்கவல்லது என்ற உண்மையையும், அதற்கு மறுதலையாக, உடம்பில் வெளியே காணப்படுகிற மாற்றங்களுக்கு, மிகநுண்ணிய ஓர் ஆழ்நிலை உணர்வும் ஏதுவாகிறது என்ற உண்மையையும் நாம் அறிய முடிகிறது.

உள்ளம் என்பது என்ன? நமது எண்ணங்களை வழிநடத்தக் கூடிய ஆழ்ந்த உள்மனம், உள்ளம் எனப்படும், கண்ணுக்குப் புலப்படாத உட்கருவிகளுள் இதுவும் ஒன்று. சித்தம் என்ற சொல்லால் சைவசித்தாந்திகள் இதனை அழைப்பர்.

இனி, உள்ளத்தில் உணர்ச்சிகள் எப்பொழுது தோன்று கின்றன? ஏன் தோன்றுகின்றன? யார்யாருக்குத் தோன்று கின்றன? என்பன பற்றிச் சிந்திப்போம்

ஒருவன் பாம்பினைப் பார்க்கிறான்; அவனுக்கு அச்சம் ஏற்படுகிறது கழிகொண்டு அடிக்க முற்படுகிறான். இது ஒரு புறம்.

மற்றொரு புறம், தவழுகின்ற குழந்தை ஒன்று அப்பாம்பினைப் பார்க்கிறது. மனமகிழ்வோடு அதனைப் பிடிக்க முனைகிறது.

காட்சிக்கு உட்பட்டதோ, பாம்பு என்ற ஒரே பொருள். ஆனால் அது, வளர்ந்த மனிதனின் உள்ளத்திலும், தவழுங் குழந்தையின் எண்ணத்திலும் வெவ்வேறு சிந்தனைகளுக்கு வித்திடுகிறது. அன்றோ? இடவே, அவர்களுடைய புறச்செயல் களிலும் மாறுபாட்டைக் காணுகிறோம்

எனவே சிந்தனைக்கு ஏற்பவே மெய்ப்பாடு தோன்றும் என்பதாயிற்று.

பாம்பு எதுவும் எதிரில் இல்லாத ஒரு சமயம். அப்பொழுது ஒருவன் ஒரு பாம்பினைத் தன் உள்ளத்தில் நினைந்து, அது முன்னொரு சமயம் தன் நண்பனைத் தீண்டித் துன்புறுத்திய அவலத்தைச் சிந்திக்கிறான்; அல்லது அப்பாம்பு தன்னை நோக்கிக் கடிக்க வருவதாகக் கற்பனை செய்கிறான். அப்போதும் அவனை அச்சமும் நடுக்கமும் உலுக்குகின்றன.

எனவே மெய்ப்பாடு தோன்றுவதற்கு மனஎழுச்சி காரண மாயினும், அந்த உள்ள எழுச்சிக்கு அப்பொழுதைய உடன் நிகழ்ச்சி மட்டுமன்றிக் கடந்த கால நினைவுகளும், எதிர்கால நிகழ்வு பற்றிய கற்பனைகளும் கூட வித்து ஆகின்றன.

'வினைவிதைத்தவன் வினைஅறுப்பான்; தினைவிதைத்தவன் தினைஅறுப்பான்' என்பது பழமொழி

சித்தத்தின் செயற்பாடு

புல்பூண்டிலிருந்து தொடங்கியது, நமது நீண்ட நெடிய வாழ்க்கைப் பயணம். அதன் முந்திய நினைவுகளையும் இன்றைய நிகழ்ச்சிகளையும் இணைத்து நோக்கி,

முன்னர்த் தொடர்புடையவற்றின் பால் மனத்தைச் செலுத் தியும் தொடர்பு அற்றவற்றின் பால் மனத்தை வெறுக்கச் செய்தும், நம்முடைய மனம், மொழி, செயல்களைக் கட்டுப் படுத்தி இயக்குவது, சித்தத்தின் ஒரு பகுதியே ஆகும்.

முன் நிகழ்ச்சிகள் என்பன யாவை? முன்னர்ப் பல பிறவி களிலும், இப்பிறவியின் கடந்த ஒரு நொடி வரையிலும் நாம் செய்துள்ள நல்வினை, தீவினைகள்

முன் நிகழ்ச்சியின் தொடர்பு என்பது, அவ்வினைகளுக்கு ஏற்ற புண்ணிய பாவங்கள்.

புதிய நிகழ்ச்சி என்பது அப்புண்ணிய பாவங்களுக்கு ஏற்ற இன்ப துன்பங்கள். இவற்றின் 'கைஏடு' தான் சித்தம் என்ற உள் உறுப்பு.

சைவ சித்தாந்த அருளாளர்கள், இவற்றை மிகவும் சிறப்பாகத் தொகுத்தளிக்கின்றனர்.

மனம்: எதிரில் இருக்கும் ஒரு பொருளைக் கண்ணோ, காதோ தாமாகப் பற்ற முடியாது. அவை அவ்வாறு பற்றுவதற்கு முதற்கண் துணை நிற்பது மனம் என்ற உட்கருவி. இது நம் நெஞ்சின்கண், இச்சா சக்தியால் தொழிற்படுத்தப் பெறுகிறது.

புத்தி மனத்தால் பற்றப் பெற்ற அப்பொருள், இன்ப துன்ப உணர்வுகளை விளைவிக்கிறது. அதனைத் தன் சிற்றறிவுத் திறனால் உறுதிப்படுத்துகிறது, புத்தி என்ற மற்றோர் உட்கருவி இது நம் பிடரியில் அறிவு நரம்பு. மண்டலத்தில் ஞான சத்தியால் தொழிற்படுத்தப் பெறுகிறது.

அகங்காரம்: அப்பொருளை மேலும் பற்றுதற்கோ ஒதுக்குதற்கோ தன் முனைப்பொடு முயற்சி செய்யத் துணைநிற்கிறது, 'நான்' என்ற 'அகங்காரம்' இது நம் பிடரியில் செயல்நரம்பு மண்டலத்தில் கிரியாசத்தியால் தொழிற்படுத்தப் பெறுகிறது.

சித்தம்: அப்பொருள் மனம்பற்றுகிற தொடக்கத்தில் நமது கண்பார்வையில் விழுவதும் விழாதிருப்பதும் முதல் நிகழ்ச்சியன்று; அஃது ஒரு தொடர் நிகழ்ச்சியே; முன்னர் எப்பொழுதோ நடந்த ஒரு முதல் நிகழ்ச்சியின் தொடர்ச்சியே, அது.

கண்பார்வையில் உள்ள பொருள் நல்லதா, கெட்டதா? என்பது இங்குக் கருத்தன்று. முன்நிகழ்ச்சிக்குத் தொடர்பு உடையதா? தொடர்பு அற்றதா? என்பதே சிந்தனை.

அந்த முதல் நிகழ்ச்சிகளின் 'கணிப்பான'கா (Computer) இயங்குவது **சித்தம்** என்ற உள்மனம். இதனை உள்ளம் என்பர்.

மூலப்பிரகிருதி என்றும் குணங்களின் கூட்டுவடிவம் என்றும் சைவசித்தாந்திகள் இதற்குத் தத்துவப்பெயர் சூட்டுவர். 'அவ்வியக்தகுண சரீரம்' என இதனை வடநூலார் அழைப்பர் 'பிராரத்த வினையின் பதிவேடு' என்றும் 'தலைஎழுத்து' என்றும் இதனைக் குறிப்பிடுதல் முற்றிலும் பொருந்தும்.

இது நம் தலையில் 'பிட்யூட்டரி' என்ற பெண்மைத் தானத்திற்குச் சற்று மேலே, மூன்றாம் நாளம் என்ற ஆண்மைப் பொலிவுக்குக் கீழே, ஆயிரம் இதழ்கொண்ட 'மூளை' என்னும் தாமரையின் காம்பாக, 'ஹைப்போதாலமஸ்' என்ற பெயரோடு, நாம் வினைநுகர்கிற காலத்தில் ஆதிசத்தியாலும், வினை நீங்கிய காலத்தில் சிவசத்தியாலும் இயக்கப் பெறுகின்றது.

சித்தத்தில் மலமாகத் தேங்கிக் கிடக்கும் முனைப்பும் விதைப்பும் ஏராளம் ஏராளம். அவற்றிலிருந்து முழுவதுமாக விடுபட்டால்தான், முத்திப் பேறு சித்திக்கும்.

'சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனை ஆண்ட அத்தன்'[1] எனச் சிவபெருமானைப் போற்றுகிறார், மாணிக்கவாசகர்.

சித்தமலம் நீங்குவதற்குச் சிவபரம்பொருளைப் பற்றி நிற்றல்தான் ஒரேவழி. அவ்வாறு நாம் சிவத்தைப் பற்றுவதற்கு நமக்கு ஒரு கருவி வேண்டும். அக்கருவியே மனம் என்பது.

ஆ) ஐந்து உடம்புகள்: உயிர்களாகிய நமக்கு ஐந்து உடம்புகள் உள்ளன. அவை: அன்னமய கோசம் (இந்திரிய) பிராணமய கோசம், (புறநோக்கு,) மனோமயகோசம், (அகநோக்கு) விஞ்ஞானமய கோசம், ஆனந்த மயகோசம் என்பன.

---

1. திருவாசகம், அச்சோபத்து - 1.

இவற்றுள் மனோமய கோசம் என்பது நடுவில் உள்ள உடம்பு, மனம் என்ற ஆறாவது அறிவினால் இயக்கப் பெறுவது. புற உடம்பில் உள்ளவை போன்றே, மன உடம்பிலும் கருவி கரணங்கள் உள்ளன.

புறநோக்கு (objective awareness), அகநோக்கு (Subjective Experience) என இருவழி நோக்குடையது,மனம். மனம்→ இந்திரியம்→பொறி (கண்)→புறத்தே உள்ள நிலையற்ற உலகப் பொருள்கள் எனப் புறநோக்கில் சென்றால், பொய்ப்பொருள் அறிவு வளரும். இதனைப் பாசஞானம் என்றும் பசு ஞானம் என்றும் பகுத்துரைப்பர்.

மனம்→விஞ்ஞானம் (இறையருள்)→ஆனந்தம்→சிவம் என அகநோக்கில் நின்றால், மெய்ப்பொருள் உணர்வு பெருகும். இதனைப் பதி ஞானம் எனப் பகர்ந்து, பரவித் துதிப்பர்.

பொய்யும் மெய்யும்: பொய்ப்பொருள்கள் அனைத்தும் சுட்டி அறியப்படுவன; தலை கால் முதலிய அவயவப் பகுப்பு உடையன அவை எக்காலத்தும் ஒரே தன்மையாய் இருப்ப தில்லை; நிலையற்ற தன்மையுடையன; அவை யாவரும் காணுமாறு காட்சிக்கு எளியவை. பரந்து பட்ட ஆய்வுக்கு நிற்பவை.

மெய்ப்பொருள் என்பதோ எக்காலத்தும் எவ்வித மாறுதலு மின்றி ஒரே தன்மையதாய் நிலைத்திருப்பது; நம்முடைய 'தன் முனைப்பால்' ஆய்வு செய்து அறிய முடியாதது; ஆயினும் நம் தணியாத வேட்கைக்கு ஏற்பத் தண்ணளி சுரப்பது.

அவ்வாறு தண்ணளி சுரப்பதைச் சத்திநிபாதம் எனச் சைவ சித்தாந்தம் கூறும். அவ்வாறு இறையருள் துணை நிற்கும் போதுதான் நமக்கு மெய்ப்பொருள் உணர்வு தோன்றும். மனமும் அக நோக்கில் ஈடுபடும்.

மனம், புத்தி, அகங்காரம், சித்தம் என்ற நான்கும் அகக் கருவிகள். அவற்றுள் மனம் என்ற அகக்கருவி, பற்றும்; புத்தி நிச்சயிருக்கும்; அகங்காரம் தொழிற்படும்; சித்தம் சிந்திக்கும் இதனை முன்னரும் கண்டோம்.

பொய்ப்பொருளாயினும் மெய்ப்பொருளாயினும் முதலில் அதனைப் பற்றுவது மனமே. பற்றப்பட்ட பொருளுக்கு ஏற்பப் புற உடம்பிலோ ஆழ்நிலை உடம்பிலோ (அன்னமய கோசத்திலோ ஆனந்தமய கோசத்திலோ) அதிர்வு அல்லது அமைதி ஏற்படுகிறது. இக்காரணம் பற்றியே மனத்தை உயிரின் தோழி என்றும், மனம் வழியிலான இறைமை ஈர்ப்பைத் தோழியிற் கூட்டம் என்றும் தொல்காப்பியர் சிறப்பித்துரைப்பார்.

மெய் என்பது உடல் என்ற நிலையற்ற பொய்ப் பொருளையும் குறிக்கும், மெய்ப்பொருள் செம்பொருள் என்ற நிலையான இறைமையையும் குறிக்கும். எனவே, மெய்ப்பாட்டியலை அமைத்துத் தந்ததன் மூலம், நம் உணர்வுகள் உடம்பினில் தொடங்கி இருமையில் வளர்ந்து, இறைமைத் தொடர்பினால் சிவபெருமான் திருவடியைச் சேர்ந்து, பேரின்பத்தில் திளைத்தல் வேண்டு மென்பதே, தொல்காப்பியர் நமக்கு அறிவுறுத்த வந்த சைவ சித்தாந்தக் கோட்பாடாகும். அதற்கு ஏற்றவாறே அவர் நூற் பாக்களை அமைத்துள்ளார் என்பதும் தெளிவு.

அறிவும் உணர்வும்: எனவே புறக்கண் கொண்டு புறத்தே உள்ள பொய்ப்பொருள்களைப் புறநோக்கில் காண்பது அறிவு என்றும்,

அகக்கண் கொண்டு அகத்தில் உறையும் மெய்ப்பொருளை அகக்காட்சியில் காண்பது உணர்வு என்றும் வேறுபடத் தெரிதல் வேண்டும்

அக உணர்விலும் கூட, நிலைபற்ற பொய்ப்பொருள்களைப் பற்றி நின்று, வறிதே சிந்திக்கலாம்; நிலையான மெய்ப் பொருளைப் பற்றி நின்று இனிது நோக்கவும் செய்யலாம். எனவே நோக்கப்பெறும் பொருளின் தன்மைக்கு ஏற்ப, நோக்குவோனுக்கும் உயர்வு தாழ்வுகள் விளைகின்றன.

அகநோக்கில் இறைமைப்பண்பே தலையாய சிறப்புடையது. எனினும், அதிலிருந்து நம்மை வேற்றுப் புலனுக்கு இழுக்கும் அச்சம், நகை, இளிவரல் முதலிய எத்தனையோ உணர்வுகள், நம்மில் அடிக்கடி எழுகின்றன.

அவற்றின் மூலகாரணங்கள் யாவை எனக்கூறி, அவற்றிலிருந்து நம் மனத்தை எவ்வாறு மடைமாற்றம் செய்வது என்ற உத்தியைக் கூறுவதான, ஒருசிறுதுணைநூலே (Clue & Guide) 'மெய்ப்பாட்டியல்' ஆகும்.

சில நூற்பாக்களைக் கொண்டு இக்கருத்தினைச் சிந்திப்போம்

இ) உயிரின் 'விளையாட்டுப் பண்ணை'

''பண்ணைத் தோன்றிய எண்ணான்கு பொருளும்
கண்ணிய புறனே நானான்!கு) என்ப''
''நாலிரண்(டு) ஆகும் பாலுமா ருண்டே''[1]

இவை இரண்டும் தொல்காப்பிய மெய்ப்பாட்டியலின் முதல் இரண்டு நூற்பாக்கள்.

இவற்றின் மூலம் சைவ சித்தாந்தத்தில் கூறப்பெறும் தத்துவ ஒடுக்க முறையை ஆசிரியர் உணர்த்துகிறார் எனலாம். நூற்பாக்களின் திரண்டகருத்தை நோக்குவோம்.

பண்ணை என்பது ஈண்டுச் சிவபெருமானது பரிக்கிரக சத்தியாகிய (Potential Energy) மாயையைக் குறிக்கும். மாயை, சுத்தமாயை அசுத்தமாயை என இருவகைப்படும்.

சடமாகிய இதிலிருந்துதான் அண்டமும் பிண்டமும் தோன்றின. எனவே அண்ட பிண்டங்களுக்கு இடையே ஒரு பொதுவான அமைப்பு முறை உண்டு.

அண்டத் தொகுப்பு (பிரபஞ்சம்) என்பது சிவபெருமானது மாப்பேருரு (விராட்புருட வடிவம்) ஆகும். பிண்டம் என்ற நம் மனித உடம்பு, அண்டத்தின் குறுவடிவமே.

சுத்தமாயை என்பது சிவபெருமான் உயிர்களாகிய நம் பொருட்டுத் தொழிலியற்றும் இடம். இதிலுள்ள ஐந்து தத்துவங்களுள் சுத்தவித்தை என்ற ஐந்தாவது தத்துவத்தைச் சிவலோகத்திற்கு ஒப்பிடலாம்.

---

1. தொல்காப்பியம், மெய்ப்பாட்டியல் 245, 246

சுத்தவித்தை: முன்னர்க் கற்பியல் நூற்பாவில் கண்டவாறு வினைவயிற் பிரிந்த உயிர் அவ்வினையின் நீங்கிய வழி ஆதிசத்தி என்ற இறைவனின் மறைப்பு ஆற்றலால் சுத்த வித்தை என்ற இச்சிவ தத்துவத்திற்குச் செலுத்தப்பெறுகிறது[1]

இதனையே 'அல்குல்' என்று தொல்காப்பியரும்[2] பிட்யூட்டரி (Pituitary, the Master Gland) என்று உடலியலாரும், ஆணை (ஆக்ஞை)த் தானம் எனச் சைவ சாத்திரங்களும், சுத்தவித்தை, ஆனந்த மயகோசம் எனச் சைவ சித்தாந்த தத்துவக் கட்டளைகளும் இடம் சுட்டுகின்றன.

அசுத்த மாயை என்பது காலம் முதல் நிலம் ஈறாகிய முப்பத்தொரு தத்துவங்களால் ஆனது. இதனையே,

''முத(ல்)எனப் படுவது நிலம்பொழு(து) இரண்டின்
இயல்(பு)என மொழிப இயல்(பு)உணர்ந் தோரே''

என்ற நூற்பா மூலம் அசுஒழுக்கத்திற்கான முதற்பொருளாகத் தொல்காப்பியர் குறிப்பிடுகிறார்.

மாமாயை என்னும் பண்ணையில் ஆன்ம உறைவிடமாகத் தோன்றிய அசுத்தமாயையின் 31-தத்துவங்களும், புணர்ச்சித் தானமாக முன்னர்க் கூறிய சுத்தமாயையின் சுத்தவித்தை என்ற ஒன்றும் ஆக 32-தத்துவங்களும் மெய்ப்பாட்டிற்கு நிலைக்களனாயின. அவை வருமாறு:

சுத்தமாயையில், சுத்தவித்தை	1	ஆனந்தமயகோசம்
அசுத்தமாயை,யில் காலம், நியதி, கலை, வித்தை, அராகம், புருடன், மாயை	—7	விஞ்ஞானமய கோசம்
பிரகிருதி மாயையில் புரியட்டகாயம் (மனம், புத்தி, அகங்காரம் என்ற உட்கருவிகளும் சுவை, ஒளி, ஓசை ஊறு, நாற்றம் என்ற ஐம்புலன்களும் ஆக எட்டும்)	—8	மனோமய கோசமும் இந்திரியமய கோசமும்

---

1. சிவஸ்ரீ தத்புருஷதேசிகர் சிவபூஜா விதியும் விளக்கங்களும் பக்-96 'சுத்தவித்யா தத்துவத்தை அடைந்ததாகப் பூசகன் தன்னைப் பாவித்துக் கொள்ளுவது, பூசகனுக்கும் சிவத்துக்கும் நெருங்கிய தொடர்பை உண்டாக்குவதாகும்.'
2. தொல்காப்பியம் - மெய்ப்பாட்டியல் 259

சித்தம் என்ற ஊழ்வினைப் பதிவேடு...	—1		பால்[1]
கண் முதலிய அறிவுக் கருவிகள் ...	—5	15	அன்னமய கோசம்
கை முதலிய செயற் கருவிகள் ...	—5		
நிலம் முதலிய பூதங்கள் ...	—5		
ஆகத்தத்துவங்கள்		32	

இந்த முப்பத்திரண்டு தத்துவங்களில் மெய்ப்பாடு தோன்றுமெனக் கூறுகிற ஆசிரியர், உள் உடம்புகளாகிய ஆனந்தமய, விஞ்ஞான மய, மனோமய, இந்திரியமய கோசங்களிலுள்ள 16—தத்துவங்கள் மெய்ப்பாடு தோன்றும் சிறப்பிடங்கள் என்றும்.

அவற்றிலும் ஆனந்தமய, விஞ்ஞானமய கோச தத்துவங்களாகிய எட்டும் தனிச் சிறப்புடையன என்றும் அறிவுறுத்துகிறார்.

'மேலும் அவர், 'நாலிரண்டு ஆகும்' என வெறுமே கூறாது, 'நாலிரண்டாகும் பாலுமாருண்டே' என மொழிகிறார். அதிலிருந்து (ஒருவருக்குப்) புறத்தே வெளிப்படத் தோன்றுவதாகிய மெய்ப்பாடு, பால் என்ற வினைப் பயனாலும் நிகழ்வதாகிறது என்ற சைவ சித்தாந்த உண்மை அரண் செய்யப் பெறுவதை உணரலாம்.

ஈண்டுக் கோசங்களைப் பற்றிய சிந்தனையும் இன்றியமையாததாகும். ஒவ்வோர் உயிருக்கும் சட்டை போல இருப்பன ஐந்து உடம்புகள், இவற்றை அன்னமயகோசம், பிராணமயகோசம், மனோமயகோசம், விஞ்ஞானமய கோசம், ஆனந்தமயகோசம் எனப் பகுத்துக் கூறுவர்.

1. அன்னமய கோசம் என்பது சோற்றால் அடித்தபிண்டம். இது நம் கண்களுக்குப் புலனாகிற பருமையான உடம்பு. இது கருவி கரணங்களோடு கூடி உயிர் தொழிற்பட உதவுகிறது.

2. பிராணமய கோசம் (இந்திரியமய கோசம்) என்பது புறக்கண்ணுக்குப் புலப்படாத ஒரு நுண்ணிய உடம்பு, உயிர், புற உடம்போடு பொருந்தி நிற்க உதவுகிறது

1. பால்: பசு செய்யும் வினை புல் தின்பதும், நீர் பருகுவதும். அவ்வினைக்குப் பயன், பால்.

3) மனோமயகோசம் (புரியட்டகாயம்) என்பது நடுவண் உடம்பு; மிகவும் நுண்மையானது; புறத்தே உள்ள பருமையான உடம்பினைப் போல்றே, நுண்ணிய கருவி கரணங்களை உடையது (எடு) மலக்கண், மனக்காது என்பன காண்க. புறக்கருவிகளைத் துணையாகக் கொண்டு புற உலகப் பொருள்களை உயிர் பற்று வதற்கும், அகக்கருவிகளைத் துணையாகக் கொண்டு அகநோக்கில் உள்முகமாகச் சென்று உயிர் இறைவனடி சேர்வதற்கும் உறு துணையாக இருப்பது மனோமயகோசமே. நமது உடம்பில் நெஞ்சுப்பகுதியை இதற்கான இருப்பிடமாகக் கொள்ளலாம்.

4) விஞ்ஞானமய கோசம் என்பது ஆன்ம அறிவுக்கு மேன் மேலும் விளக்கம் தந்து, உலகப் பொருள்களின் நிலையாமை யையும், மெய்ப்பொருளின் நிலைத்த பேரின்ப இயல்பினையும் அறிவுறுத்துவது. திருக்கோயில் கருவரையை அடுத்து உள்ள அர்த்த மண்டபத்தை ஒத்தது, இந்த உடம்பு.

5) ஆனந்தமய கோசம் என்பது அதி நுண்ணிய உள்உடம்பு ஆகும். திருக்கோயில் கருவறையைப் போன்றது இது.

நமது உடம்பில் வயிற்றின் அடிப்பகுதியை ஓமத்தானமாக வும், நெஞ்சினைப் பூசைத்தானமாகவும், சிரசினைத் தியானத் தானமாகவும் கொண்டு சிவ வழிபடு செய்தல் வேண்டும் என்பது சிவாகம விதி. இந்த மூன்று இடங்களுமே ஆனந்த மயகோசம் ஆகும்.

திருக்கோயில்களை இருதய வடிவத்திலும், மனித வடிவத் திலும் அமைத்து, யாகசாலைகளையும் நிர்மாணிக்கும் முறை களை இத்துடன் இணைத்துச் சிந்தித்தால் உண்மை புலனாகும்.

மலக்கேடுகளைச் சுட்டெரிக்கவும் ஆன்மாவுக்கு அறிவு விளக்கம் தரவும், சிவப்பேற்றினை நல்கவும் என நமது அடி வயிறு, நெஞ்சு, சிரசு ஆகிய மூன்று இடங்களையும் சிவபெரு மான் தனக்கு இருப்பிடமாகக் கொள்ளுகிறார்.

அடுத்து, இச்சூத்திரத்துக்குப் பிறிதொரு வகையாலும் பொருள் காணலாம்.

ஆன்மா ஓர் உடம்பினுள் சிறைப்பட்டுக் கிடக்கிறது. இவ் உடம்பு மாயையின் விரிவாகிய முப்பத்தாறு தத்துவங்களால் ஆனது. இவற்றுள் தலையாய ஐந்து தத்துவங்களும், தலைவனாகிய சிவபெருமானுக்குத் தொழிற்படு களங்கள். அவற்றுள் கடைசித் தத்துவமாகிய சுத்தவித்தை என்ற ஒன்றும், அசுத்த மாயையில் காலம் முதல் நிலம் வரையிலான தத்துவங்கள் 31-ம், ஆக 32-தத்துவங்களாலான ஓர் அமைப்புக்குள்,

ஒவ்வோர் ஆன்மாவும் அதனதன் பிராரத்த வினைகளை நுகர்ந்து கழிக்கிறது; புதிய புதிய வினைகளை ஈட்டுகிறது; அல்லது மெய்ப்பொருள் நாட்டத்தை மேற்கொள்ளுகிறது.

உயிர் மாயா உடம்பினுள் இவ்வாறு சிறைப்பட்டுக் கிடக்க, தலைவனாகிய சிவபெருமான் சிறைப்புறத்தனாக, அசுத்த மாயையின் புறத்தே நின்றுகொண்டு ஆன்மாவை இயக்குகிறான். அவ்வாறு முப்பத்திரண்டு தத்துவங்களின் சார்பினால், ஆன்மா அதனதன் வினைகளுக்கு ஏற்ப நுகர்கிற அனுபவங்கள், முப்பத்திரண்டு வகை மெய்ப்பாடுகளாயின.

கண்ணிய புறனே நானான்கு என்ப:

சிறைப்பட்ட ஆன்மாவின் மெய்ப்பாடு இவ்வாறிருக்க, வினையின் நீங்கி உடலை நீத்துப் புறத்தே மீதானத்து இறைவனின் திருவடி நோக்கி முன்னேறும் போது, ஆன்மாவின் மெய்ப்பாடு எத்தன்மையது என்பதைத் தொல்காப்பியரே குறிப்பிடுகிறார்.

'கண்ணிய புறனே நானான்கு என்ப'[1] என்பது அவரது கூற்று. எனவே உடம்பிலிருந்து விடுபட்டு மேலே மீதானத்தை நோக்கி உயர்ந்து செல்லும் ஆன்மா பதினாறுவகை மெய்ப்பாடுகளைப் பெறும் என்பது தொல்காப்பியர் கருத்தாகும். சைவஞான நூல்களும் இத்தகு கொள்கையையே குறிப்பிடுகின்றன

---

1. தொல் மெய்ப்-1

ஆன்மாவின் உலகியல் வாழ்வு, ஆன்மீக நெறி, தெய்வீகமேம்பாடு இவற்றிற்கு ஏற்ப, ஆன்மாவின் தொழிற்பாடும் அமைகிறது. இவற்றை முறையே, கீழாலவத்தை, மத்தியாவத்தை, மேலாலவத்தை எனப்பகுத்துக் காண்பர் சைவசித்தாந்திகள். சிவாகமங்கள் அறிவுறுத்துகிற இக்கருத்தினை மனத்திற் கொண்டு தொல்காப்பியரும் புறஉடம்பின்கண் மெய்ப்பாடு என்றும், அறவழிப்பட்ட அகப்புற மெய்ப்பாடு என்றும், அருள்வழிப்பட்ட அவத்தைகளாகிய நுண்ணிய மெய்ப்பாடு என்றும் மூன்று வகையால் சிந்தித்துள்ளமை காணுகிறோம்.

இவ்வாறு ஆழ்நிலை அகஉணர்வினால், ஒருபுடை புற உடம்பின்கண் மாற்றங்கள் வெளிப்படத் தோன்றுகின்றன. இத்தகைய இயல்பு மிகப் பரந்த அண்டத்திலும் உள்ளது; மிகச் சிறியதாகிய பிண்டத்திலும் உள்ளது.

அண்டத்து மெய்ப்பாடு: எரிமலை, கடல் கொந்தளிப்பு, தென்றல், புயல், நில அதிர்வு முதலிய இயற்கை மாற்றங்களை இதற்குச் சான்று கூறலாம். அரசியல், சமுதாய நல மாற்றங்களும் கூட, அண்டத்து மெய்ப்பாடு எனல் பொருந்தும்.

பிண்டத்து மெய்ப்பாடு - கீழாலவத்தை: நமது மனித உடம்பின் கண், பிறர் காணுமாறு, நிகழுகிற மெய்ப்பாடுகளை எட்டு என வகைப்படுத்தித் தொல்காப்பியர் சூத்திரம் அமைத்துள்ளனர்.

"நகையே அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகை என்று
அப்பா(ல்) எட்டே மெய்ப்பா(டு) என்ப"[1]

இவை ஒவ்வொன்றும் நன்னான்கு வேற்றுப்புலப் புற நிகழ்ச்சிகளின் தூண்டுதலால், ஒருவனது மனத்தின் அடி ஆழத்தில் கிளர்ச்சியை ஏற்படுத்த, அவ் ஆழ்நிலைக் கிளர்ச்சியின் விளைவாக, உடலின் புறத்தோற்றத்தில் பிறர்காணுமாறு 32-மெய்ப்பாடுகள் தோன்றுகின்றன என இச்சூத்திரக் கருத்து எட்டுச் சூத்திரங்களில் விரித்துப் பேசப்படுகிறது (சூத். 4—11)

1) தொல். மெய்ப்-3

இஃது உலக வாழ்வில் பொதுவாக எல்லா உயிரினத்தும் காணப்பெறுகிற ஒன்று. இதனைப் 'புறத்திணையின் பாற்பட்ட மெய்ப்பாடு' என்ப. சைவசித்தாந்திகள் குறிப்பிடுகிற 'உயிரின் கீழால் அவத்தை'யோடு இதனை ஒப்பிடலாம்.

மத்தியாவத்தை:

இவ்வாறு முதல் பதினோரு சூத்திரங்களால் புறத்திணையின் பாற்பட்ட மெய்ப்பாடுகளை வகைப்படுத்திய தொல்காப்பியர் அடுத்துச் சூத்திரம் 12-ல் அகத்திணைக்கும் புறத்திணைக்கும் பொதுவாக நிகழும் மெய்ப்பாடுகளைத் தொகுத்து உரைத்தனர்.

''ஆங்(கு)அவை ஒருபா லாக, ஒருபால்
உடைமை[1] இன்புறல்[2] நடுவுநிலை[3] அருளல்[4]
தன்மை[5] அடக்கம்[6] வரைதல்[7] அன்பு[8] எனாஅக்
கைம்மிகல்[9] நலிதல்[10] சூழ்ச்சி[11] வாழ்த்தல்[12]
நாணுதல்[13] துஞ்சல்[14] அரற்றுக்[15] கனவு[16] எனாஅ
முனிதல்[17] நினைதல்[18] வெரூஉதல்[19] மடிமை[20]
கருதல்[21] ஆராய்ச்சி[22] விரைவு[23] உயிர்ப்பு[24] எனாஅக்
கையாறு[25] இடுக்கண்[26] பொச்சாப்புப்[27] பொறாமை[28]
வியத்தல்[29] ஐயம்[30] மிகை[31] நடுக்கு[32] எனாஅ
அவையும் உளவே அவையலங் கடையே''[1]

1) உடைமை = செல்வம். செல்வ நுகர்ச்சி; எனவே உவகை எனும் பொருளில் வந்தது. ஒரு பொருளின் மேல் பற்று இருக்குமாயின், அப்பொருளை தனக்கு உடைமையாகப் பெறுங்காலத்து, எழுகின்ற உவகை என்பர் உரையாசிரியர். இதனை வேறு வகையிலும் சிந்திக்கலாம். அப்பொருள் பொய்யான உலகப் பொருளாகவும் இருக்கலாம். நிலையான மெய்ப்பொருள் ஞானமாகவும் அமையலாம். மேலும் 'தான், சிவபெருமானது உடைமை' என்ற மெய்யான உணர்வும், உவகை யளிப்பதாகும்.

1) தொல். மெய்ப்-12

2) இன்புறல்: உடைமையை நினையுந்தோறும், இடையிட்டுப் பிறக்கும் மன மகிழ்ச்சி.

3) நடுவுநிலை: காம, வெகுளி, மயக்கம் முதலிய குற்றங்களினின்று நீங்கினோர்கண்ணே நிகழ்வதாகிய சமநிலை.

4) அருளல்: தம்மிலும் எளியார்பால் இரக்கம் கொள்ளுதல்.

5) தன்மை: உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசாத் தகைமை; இயல்பது கரவாப் பண்பு.

6) அடக்கம்: இறைவன், குரு, மற்றும் உயர்ந்தோர் மாட்டுக் காட்டப் பெறும்பணிவு (பணிந்த மொழி, தணிந்த நடை, தானை மடக்கல், வாய்புதைத்தல்) என்பன.

7) வரைதல்: தகாதன ஒதுக்கித் தக்கன ஏற்று ஒழுகும் முறைமை.

8) அன்பு: மனத்தின்கண் நிகழும் நேயம்; இரக்கத்திற்கு மூலமாவது.

9) கைம்மிகல்: சிறுமைப் பண்பு மீகுதல், (பிறரை அடித்தல், பிறர் பொருளைக் களவாடுதல் முதலிய தீயசெயல்களைக் 'கைந்நீட்டல்' என்று இக்காலத்தும் இகழ்ந்துரைக்கின்றோம் அன்றோ?)

10) நலிதல்: நல்லோர்க்கும் இன்னா செய்து நெருங்குதல்.

11) சூழ்ச்சி: பிறருக்குத் துன்பம் நேருமாறு, உண்மையைச் சுழற்றி உரைத்தல் முதலின.

12) வாழ்த்தல்: 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்பது போல, உலகோர் வாழுமாறு மனத்தில் நினைத்தல்.

13) நாணுதல்: தன்னுடைய முந்திய இழிநிலை எண்ணித் தானே மனத்துள் நாணுதல்.

14) துஞ்சல்: உறக்கம்; மனம் ஒடுங்குதல்.

15) அரற்று: மனத்தாலன்றி, மொழியாலும் புலம்புதல்.

16) கனவு: வாய் வெருவுதல்.

17) முனிதல்: அருளும் சினமும் இன்றி, இடைநிகர்த்த தாய், வெறுத்தல்.

18) நினைதல்: விருப்பொடு மனத்தின்கண் எண்ணுதல்.

25) கையாறு: வினை ஒழிந்து அயர்தல்.

26) இடுக்கண்: துன்பம்.

27) பொச்சாப்பு: பாதுகாத்துச் செல்லுகின்ற பொருளின் கண், யாதானும் ஒரு நிகழ்ச்சியால் இடையறவுபடுதல்

28) பொறாமை: அழுக்காறு.

29) வியர்த்தல்: மனம் புழுங்குதல்.

30) ஐயம்: ஒரு பொருள்மேல், இதுவோ அதுவோ என இரு பொருள்தன்மை கருதி வரும் மனத் தடுமாற்றம்.

31) மிகை: உள்ளத்தில் எழும்தருக்கு (திருநீலகண்ட நாயனார் இளமை மீதூர வரைவின் மகளிர்பால் அணைந் தமையைக்கூறலாம்.

32) நடுக்கு; ஐயம், அச்சம், அன்பு, கோபம், முதலிய வற்றால் மனம் நடுங்குதல்.

இவ்வாறு இச்சூத்திரத்தின் மூலம், தொல்காப்பியர் அகம், புறம் என்ற இருவகை ஒழுக்கத்துக்கும் பொதுவான மெய்ப் பாடுகளைக் கூறியுள்ளார்.

புற நிகழ்ச்சிகளின் தாக்கத்தால் மட்டுமன்றி மன வளர்ச்சி காரணமாக, அவரவர் உள்மனத்தின் கண் விளைகின்ற அக உணர்வுகளின் எழுச்சியாலும் முப்பத்திரண்டு வகை மெய்ப்பாடு கள் தோன்றுகின்றன என்பது இச்சூத்திரத்தின் மூலம் அறியப் படும் செய்தியாகும்.

இதனைக் சைவ நூல்கள் கூறுகிற மத்தியாவத்தையுடன் ஒருவாறு ஒப்பிடலாம்.

மேலாலவத்தை:

தொடர்ந்து 13-முதல் 20 வரையுள்ள எட்டுச் சூத்திரங்களும் அகத்திணை ஐந்தற்கும் ஒத்தனவாய்ச் சைவ ஞான நூல்கள் கூறுகிற மேலாலவத்தையோடு பெரிதும் பொருந்தி வருகின்றமை காணலாம்.

''புதுமுகம் புரிதல், பொறிநுதல் வியர்த்தல்...''

முதலாக ஆங்குக் கூறப்பெறும் அனைத்து மெய்ப்பாடுகளுமே, ஆழ்ந்த உள்மனத்து நிகழக் கூடியனவாகவும் ஆழ்ந்து உள்ளுணர்வுடையோரே. நுண்ணிதின் அறியக் கூடியனவாகவுமே உள்ளன. ஒன்றிண்டு மெய்ப்பாடுகளை இங்கு விரித்து நோக்குவோம்.

புகுமுகம் புரிதல்: உயிர் பொதுவாக அசுத்த மாயையினா லான கீழ் உடம்பு முழுவதிலும் பரவி நின்று தொழில்படுவதே இயல்பு ஆயினும் கீழ்நிலைகளை எல்லாம் படிமுறையில் கடந்து சிவஞான முதிர்வு பெற்ற உயிர், ஒவ்வோர் ஆதாரத்திலும் உரிய முறையில் வழிபட்டுத் தேறி, இறுதியில் 'பிட்யூட்டரி' என்ற சுத்தமாயா தத்துவத்தை அணைந்து சிவதத்துவத்தைச் சேரு கிறது. இவ்வாறு ஆன்மா அசுத்தமாயையின் நீங்கிச் சுத்தமாயை யில் நுழைவதையே, 'புகுமுகம் புரிதல்' என்ற தொடரால் தொல்காப்பியர் அறிவுறுத்துகிறார் எனலாம்.

இது தொடர்பான சிவாகமக் கருத்து ஈண்டு இணைத்துச் சிந்திக்கற் பால தாகும்.

''அசுத்த மாயை தொடக்குண்டு வாழும் உயிர்கள், சுத்த மாயா தத்துவங்களையும கடந்து தத்துவாதீதராக விளங்கும் சிவபெருமானைப் பூசிப்பதற்குத் தகுதியுடையவரல்லர்.

சிவபூசை செய்வதற்குரிய தகுதியை நாம் பெறுவதற்குச் சுத்த தத்துவத்தில் தொடர்பு கொள்ளுதல் வேண்டும் அதனால்...

ஆன்ம தத்துவங்கள் இருபத்து நான்கையும் வித்யா தத்து வங்கள் ஏழையும் கடந்து, சிவதத்துவங்களில் அடிநிலையின தாகிய, சுத்த வித்யாதத்துவத்தை அடைந்ததாகப் பூசகன் தன்னைப் பாவித்துக் கொள்ளுவது, பூசகனுக்கும் சிவத்துக்கும் நெருங்கிய தொடர்பை உண்டாக்குவதாகும்''[1]

அல்குல் தைவரல் இரு கையும் எடுத்தல்[1]

நமது சிரசினை ஆனந்தமய கோசம் என முன்னரும் கண்டோம் அங்குப் பெருமூளையின் இருகூறுகளுக்கு நடுவில், சிவபெருமானது பிச்சாண்டிக் கோல ஆண்மைப் பொலிவுடன் மூன்றாம் நாளம் இருப்பதையும் அதன் கிழ்ப் பெண்மைத்தான மாகப் பிட்யூட்டரி என்ற சுரப்பி இருப்பதையும் சிந்தித்திருக் கிறோம்.

புற உடம்பில் உள்ளன போன்றே ஆனந்தமய கோசத்திலும் உயிருக்குக் கருவி கரணங்கள் உள்ளன; அவை சுத்தமாயை யினால் ஆனவை. பேரின்பத் தானத்தில் உள்ள அவற்றை இன்பக்கண், இன்பக்காது என்றவாறோ நுண்கண், நுண்செவி என்றவாறோ அழைக்கலாம்.

ஆழ்ந்த சிவதியானத்தின் போது, அசுத்தமாயையினாலான கீழ் உடம்பினை விட்டுக் சுத்தமாயையினாலான நுண் உடம்பி னுள் நுழைகிற ஆன்மா, தனது தூய நுண்கரங்கள் இரண்டைத் தூக்கிக் குவித்துப், புருவ நடுவினை நோக்கி முன்னேறுகிறது.

---

1. சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர் - சிவபூஜா விதியும் விளக்கங்களும் 1986-பக்-96
1 தொல். மெய்ப்பட்டியல் - 15

அப்போது அது பிட்யூட்டரி என்ற பெண்மைத்தானத்தைத் தொட்டுச் செல்லுவது இயல்பு. இதனையே தொல்காப்பியர் 'அல்குல் தைவரல்' என்றும் 'இருகையும் எடுத்தல்' என்றும் இரண்டு மெய்ப்பாடுகளாகக் குறித்தனர் எனலாம்.

''கரங்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன்கழல் வெல்க''1

என்ற திருவாசக மெய்ம்மொழிகள் தொல்காப்பியரது இம் மெய்ப்பாட்டு இலக்கணத்துக்குச் சிறந்த இலக்கியமாக விளங்கக் காணலாம்.

ஈ. ஊனக்கண்ணும் ஞானக்கண்ணும்:

இப்பொழுது, மெய்ப்பாட்டியலின் இறுதி நூற்பாவினைச் சிந்திப்போம்.

''கண்ணினும் செவியினும் திண்ணிதின் உணரும்
உணர்வுடை மாந்தர்க்(கு) அல்லது தெரியின்
நன்னயப் பொருள்கோள், எண்ணருங் குரைத்தே''2

மெய்ப்பாடு என்பது அக உணர்வுகளின் வெளிப்பாடு, அதனுள் ஆழ்ந்து பொதிந்து கிடக்கும் நுண் பொருளைப் புரிந்து கொள்ளுவதற்கு நூல் அறிவு மட்டும் போதாது; நுண்ணறிவும் வேண்டும். அஃது ஆராய்தற்கு அரியது. ஆனாலும், அதன் செறிவான ஆழ்ந்த நுண்பொருளை, நமது அகக் கண்ணாலும், நுண் செவியாலும் பெறுகிற, ஆழ்ந்த அனுபவ நுண் உணர்வினால் மட்டுமே புரிந்து கொள்ள இயலும்'' என்பது இந்நூற்பாவின் திரண்ட கருத்து.

கண் என்றும் செவி என்றும் இங்குக் குறிக்கப் பெறுவன, நமது பரு உடம்பிலுள்ள புற உறுப்புக்களை அல்ல.

கண் என்பது அகக்கண் ஆகும். அது முன்னர்க் கூறிய ஆனந்தமய கோசம் என்ற அதிநுண்ணிய இன்ப உடம்பில் உள்ளது. அதனை நெற்றிக் கண் என்பர் அருளாளர்.

1. சிவபுராணம் - 9, 10
2. தொல்காப்பியம்-மெய்ப்பாட்டியல் 271

சிவபெருமானுக்கு மூன்று கதிகள். அவை: வலது கண் சூரியன், இடது கண் சந்திரன், நெற்றிக்கண் அக்கினி.

சிவபெருமானைப் போன்று, நமக்கும் மூன்று கண்கள் உள்ளன. அவற்றுள் ஊனக்கண்கள் இரண்டும் நமது புற உடம்பினில் அமைந்துள்ள புற உறுப்புக்களாம், அவையே போல் புரியட்டகாயம் எனப்படும் மனோமயகோசத்திலும் கண் முதலிய உறுப்புக்கள் உள்ளன.

மூன்றாவதாகிய நெற்றிக்கண் சிவபெருமான் திருவருளால் நமக்கு அருளப்பெற்ற ஞானக்கண் ஆகும். அது, மூன்றாம் பிறை வடிவினதாய் நர் தலையில் பெருமூளையின் இரு கூறுகளுக்கு நடுவில் அமைந்துள்ளது. அதனை மூன்றாம் நாளம் என்றே அறிவியலாரும் அழைக்கின்றனர்.

தலையின் மையத்தில் முகுளத்திற்கு மேலே நடுமூளை உள்ளது. அதிலிருந்து வெளித் தோன்றுகிறது இந்த மூன்றாம் நாளம். இதன் உள்ளே நிறைந்திருக்கும் அமுதத்தின் (CSF) ஆற்றலுக்கு ஏற்ப, இது விரிந்தும் சுருங்கியும் இயங்குகிறது.

இதனையே இந்நூற்பாவில், கண் என்ற சொல்லால் தொல்காப்பியர் குறித்தனர். நடுமூளையிலிருந்து வெளித்தோன்றிய இது, புருவ நடுவினை நோக்கி நீண்டு, பிட்யூட்டரியைத் தீண்டுகிறது.

ஆன்ம அல்குல்: நமது மனிதத் தலையின் மையப் பகுதியில் ஓர் அமுதசுரபி உள்ளது. அதனை அறிவியலார் 'பிட்யூட்டரி' என அழைப்பர் (Pituitary, the master gland). அச்சுரப்பி மனித உடலிலுள்ள மற்ற சுரப்பிகளுக்கெல்லாம் அன்னை. அதன் வளர்ச்சிக்கும் இயக்கத்துக்கும் ஏற்பவே, நமது உடல் வளர்ச்சியும் உள்ளத்து எழுச்சியும் அமையும் என்பது அறிவியற் கருத்து. இதனை ஆணைத்தானம் (ஆக்ஞை) எனச் சாத்திரம் வல்லார் போற்றுவர்.

பிட்யூட்டரி என்ற இவ்விடமே. சிவபெருமான் நம் தலையிலுள்ள மூன்றாம் நாளத்தை இயக்கி, அதனை ஆண்மைப் பொலிவுறச் செய்து, தலைவியாகிய உயிரைப் புணர்ந்து பேரின்பம் நல்கும் இடமாகும். அப்போது அஃது ஆன்ம ஆவுடையாரா கிறது.

பெண்மைக்கு நிலைக்களனான அதனைத் தொல்காப்பியர் 'அல்குல்' என மொழிவார் (259)

நுண் செவி: உயிர் ஆற்றல் இங்குச் சிரம் குவிந்து நின்று தான் சிவபெருமானது பரநாத ஒலியைக் கேட்கிறது. அப்போது இஃது (பிட்யூட்டரி) ஒரு நுண்செவியாக இயங்குகிறது.

அதி நுண்ணிய பரம்பொருளை ஓரளவேனும் புரிந்து கொள்ள வேண்டுமானால், நம் சிரசினுள் ஆனந்தமய கோசம் என்னும் பிட்யூட்டரியில் உள்ள நுண்காது, நுண் விழிகளின் இயக்கம் சீராகக் குவிந்திருக்க வேண்டும்.

அங்ஙனம் அமையவில்லையாயின், ஆன்மாவால் பர ஒளியைக் காணவோ, பரநாதத்தைக் கேட்கவோ இயலாது

இவ் உண்மையை உணர்த்தி, மெய்ப்பொருளில் நாட்டமுறச் செய்வதற்காகவே, 'காதற்ற ஊசியும் வாராதுகாண் கடை வழிக்கே' எனச் சிவபெருமான் பட்டினத்தார்க்கு அருளுபதேசம் செய்தார்.

இந்த நுண்செவியை நோக்கி, முன்னர்க் கூறியவாறு நெற்றிக்கண் என்ற மூன்றாம் நாளாம் நீண்டு கிடக்கிறது. அதனால் தமிழ் இலக்கியங்களில் 'செவிவரை நீண்ட கண்' என்ற தொடர் உவமையாகப் பயின்றுவரக் காணுகிறோம். 'ஆணைத்தானத்தைத் திண்டுகிற மூன்றாம் நாளம்' என்றும் 'ஆன்ம அல்குலைப் பற்றிய ஆண்டவனது ஆண்மைப் பொலிவு' என்றும் இதற்குப் பொருள் அமையும்.

தொல்காப்பியரும் உவம இயல் என்ற ஒருதனி இயலையே ஆக்கித்தந்துள்ளார். இனி அவ் உவம இயல் பற்றிச் சிந்திப்போம்.

7. உவம இயல்

அ. உவமம் - ஒரு விளக்கம்

பண்டைய நாளில், நம் தமிழ் முன்னோர்கள் பலதுறை விற்பன்னர்களாய் வாழ்ந்திருக்கின்றனர். ஒவ்வொரு துறையிலும் உள்ள, நுண்ணிய மறைபொருள் பற்றிய தெளிவான சிந்தனையும், விளங்கிய அறிவும் உடைய அவர்கள், அனைத்துப் பொருள்களிலும், அநாதி முதலாகிய மெய்ப்பொருளைக்[1] கண்டிருக்கிறார்கள்.

மெய்ப்பொருளைத் தாம் கண்டதோடு, பிறர்க்கும் காட்டி உயர்ந்த, நிலையான பேரின்பத்திற்குப் பிறரையும் ஆற்றுப்படுத்துவதே, அவர்களுக்கு, உயரிய ஓர் இலக்காகத் திகழ்ந்திருக்கிறது.

இலக்கினை அடையும் நெறிமுறைகளை வகுத்தும், விரித்தும் தொகுத்தும் கூறுவதை இலக்கணம் என்றும்,

அந்நெறிவழி விளைகின்ற பயனையே இலக்கியம் (இலக்கு+ இயம்) என்றும் அறிஞர் கூறுவர்.

மெய்ப்பொருள் பற்றிய பெரும்பாலான நுண்ணிய கருத்துக்கள் ஆன்றோர்பால் பெரிதும் உள்ளுணர்வாகவே அமைகின்றன. எனவே தம் அனுபவங்களைத் தெளிவாக உலகத்தவர்க்கு உணர்த்தி அவர்களையும் உய்வித்தற்கும் அவர்கள் விரும்பினர்.

''எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு'' —திருக்குறள். 423

மூவகை அளவைகள்: (Units of measurement)

அதன் பொருட்டு அவர்கள் காட்சி அளவை, கருதல் அளவை, உரை அளவை என்ற மூவகை அளவைகளைக் கைக் கொண்டனர்.

காட்சி: அடுப்பின் நெருப்பிலிருந்து புகை எழுவதை எல்லோரும் காணுகிறோம். அப்போது, 'புகை உள்ள இடத்தில் நெருப்பும் உளது' என்ற உண்மையை நினைந்து, கருத்தில் கொள்ளுகிறோம்.

கருதல்: தொலைவில் ஒருமலைப் பக்கத்தில் புகை எழுவது, புலனாகிறது. அப்போது, நாம் முன்னர்க் கண்ட அடுக்கள நெருப்பும் அதனின்று தோன்றிய புகையும் மனக்கண் முன் நிழலாடுகின்றன. ''நெருப்பின்றிப் புகையாது. எனவே புகையுள்ள அம்மலையில் நெருப்பும் இருத்தல் வேண்டும்'' என ஊகிக்கிறோம். இதனை அனுமானம் என்பர் வடநூலார். இது முன்னர் நம் கருத்தில் பதிவாகியிருக்கும் செய்தியின் வெளிப்பாடு ஆகும்

இதுபோன்ற தொடர் சிந்தனைகள் நம் உலகியல் வாழ்வில் ஏராளமாக நிகழ்கின்றன.

இவையே போல் காட்சிக்குப் புலனாகும் பருமையான உலகப் பொருள்களைக் கொண்டு காட்சிக்கு அரிய நுண்ணிய மெய்ப்பொருள்களையும் விளங்குமாறு செய்யலாம் எனச் சான்றாண்மை மிக்க அப்பெரியவர்கள் எண்ணினர்.

எனவே புறத்தே, கண்ணுக்குத் தெரிகிற உலகத்துப் பொருள்களைச் சுட்டிக்காட்டி, அவற்றைப் போன்றே கண்ணுக்குப் புலப்படாத நுண்பொருள்களை அவர்கள் கருத்தில் பதிப்பித்தனர். இவ்வாறு உணரச் செய்வதை உவமித்தல், உவமை கூறி உணர்த்துதல் என்றனர்.

உரை: காட்சியும் கருதலுமாக இவ்வாறு வெளித்தோன்றிய உண்மைகள், எதிர்காலத்தவரது உய்திக்காக நூல் வடிவம்

(உரை வடிவம்) செய்யப் பெற்றன. அதனையே செய்யுள் ஆக்கம் என்றனர். அவ்வாறு உருவாக்கப்பட்ட நூல்களே இலக்கிய இலக்கணங்களாக இன்றும் திகழ்கின்றன.

இவ்வாறு எதிர்காலச் சந்ததியினர், செய்யுள் என்ற உரை அளவையையும், உவமை என்ற கருதல் அளவையையும்[1] புறப் பொருள் என்ற காட்சி அளவையையும் கருவியாகக் கொண்டு,

அணுவிற்குள் நுண்ணிய அணுவாயும், அப்பாலைக்கும் மிக அப்பாலாயும் காட்சிக்குள் நிற்காத மெய்ப்பொருள் இன்பத்தை (நிலையான உண்மைப் பேரின்பத்தை) அடைவதற்கு நம் தமிழ் முன்னோர்கள் பெருந்துணை புரிந்திருக்கின்றனர்.

தொல்காப்பியத்தின் பொருளதிகாரம் முழுவதும் அவ்வாறு மெய்ப்பொருளை உணர்த்த எழுந்த கருத்தாழம் மிக்கதொரு சைவ நூலாகும். இவற்றுள் உவம இயல் பற்றி ஈண்டு ஓரளவு சிந்திப்போம்.

உவமையிலாப் பரம்பொருளும் உவம இயலும்:

சச்சிதானந்த சொரூபியானவர், சிவபெருமான். இஃது அவரது இயல்பான சிறப்பு நிலை.

உயிர்களாகிய நமது உய்வு கருதி அவர் தொழிற்படும் போது, அருவம், அருஉருவம், உருவம் என்ற மூன்று பொது நிலைகளை அவர் மேற்கொள்ளுகிறார்.

அருவம் என்ற நிலையில் அவர் தம் பேராற்றலாகிய சிவ சத்தியையே தமக்கு உடம்பாகக் கொண்ட ஞானவடிவினரா கிறார்.

---

1. 'உவமைகளைக் கருத்தில் கொண்டு ஆன்மாக்கள் ஈடேறவேண்டும்' என்பதும்' 'கூறப்பெறும் உவமைகள் ஆன்ம ஈடேற்றத்திற்கு உறு துணையாமாறு அமைதல் வேண்டும்' என்பதும் தொல்காப்பியர் போன்ற பழந்தமிழ்ச் சான்றோர்களின் விழுமிய கொள்கைகளாம் இவ்வாறு எளிய ஒன்றைக் கருத்தில் இருத்தி, அரிய ஒன்றை அறிந்து கொள்ளத் துணைநிற்றலின், உவமை கூறுதலும் கருதல் அளவையின் ஒருபகுதியாயிற்று.

அருஉருவ நிலையிலும் உருவநிலையிலும் சிவசத்தி என்ற ஞானப் பேராற்றலையும் சுத்தமாயை என்ற தம் வைப்பு ஆற்றலையும் இடமாகக் கொண்டு எளிவந்த, நிலையில் காட்சி அளிக்கிறார்.

நாம் சிவன்கோயில்களில், சிவலிங்கத் திருமேனியையும் பிறபிற சிவ மூர்த்தங்களையும் கண்டு வழிபடுகிறோம். அவை எல்லாம் வடிவத்தால் மாயை எனும் சடஆற்றலிலிருந்து வெளிப் பட்ட சிலைகளாகவும் உலோகச் சிற்பங்களாகவுமே நமக்குக் காட்சியளித்தாலும்,

சிவஞானப் பேராற்றலாகிய சிவசத்தியின் அருளுருவாகவே சிவபெருமான் அங்கு மறைந்திருப்பதை நாம் கருதி உணர்தல் வேண்டும்.

நமக்கு மெய்ப்பொருள் அறிவை ஊட்டுதற்காகச் சிவபெரு மான் மேற்கொள்ளும் உருவ வேறுபாடுகள் எண்ணற்றனவாம்.

''தாபர சங்கமங்கள் எனும் இரண்டு உருவில் நின்று
மாபரன் பூசைகொண்டு மன்னுயிர்க்கு அருளை வைப்பன்''

என்பது சிவஞான சித்தியார். (2:28)

கல்லாகக் காணும்போது அங்குக் கடவுள் பற்றிய சிந்தனை தோன்றுவதில்லை. கடவுளாகக் காணும்போது, அங்குக் கல் என்ற எண்ணம் எழுவதில்லை.

''மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்தில் மறைந்தது மாமத யானை
பரத்தை மறைத்தது பார்முதல் பூதம்
பரத்தில் மறைந்தது பார்முதல் பூதம்'' எனத் திருமூலர்

உணர்த்துவார், இதனை ''கல்லைக் கண்டால் நாயைக் காணோம் நாயைக்கண்டால் கல்லைக் காணோம்'' என, உலகமாந்தர், நடைமுறையில் ஒரு பழமொழியாக வேறொரு வகையில் கூறுவர்.

அவ்வாறு அவர் மேற்கொள்ளும் மிகப்பெரிய வடிவம் 'விராட் புருட வடிவம்' என்ற மாப்பேருரு ஆகும். அப்பேருரு வின் மிக மிகச் சிறிய தொகு வடிவமைப்பே நமது இந்த மனித உடம்பு ஆகும்.

இந்த நம் உடம்பில் உள்ள சிறுசிறு உறுப்புகள் போலவே மிகப்பெரிய விராட்புருட வடிவிலும் உறுப்புகள் உள்ளன. ஆறு ஆதாரங்கள், ஐந்து கலைகள், நால்வகை வாக்குகள் மூன்று மண்டலங்கள், இரண்டு எதிர்நிலை ஆற்றல்கள் முதலிய அனைத்தும் உள்ளன என்பது சைவ அருளாளர் அனுபவ வழித் தெளிந்த உண்மை

எனவே காணப்படுகிற, பருமையான நமது உடம்பின் செயல், பயன், வடிவம், பண்பு இவற்றை உவமையாகக் கொண்டு, நமது நுண்ணுடம்பில் நிகழ்வனவற்றையும், அதே போல் சிவபரத்தின் மாப்பேருருவின் இயல்புகளையும் பிறவற்றையும் நமக்கு உணர்த்த விரும்பினர், நம் முன்னோர். நம் முன்னோர்.

அதற்கான ஓர் இலக்கணமாக அமைந்ததே உவம இயல் ஆகும்.

ஆ. உவமம்- பெயர்க்காரணம்

பிரணவத் தோற்றம்: மின் ஆற்றல் (Electricity) என்பது ஒரே பொருள். அது நமக்குப் பயன்பட வரும்போது மின் கம்பிகளில் நேர்மின் ஆற்றல் (+Ve), எதிர்மின் ஆற்றல் (—Ve) என இருகூறாகிப் பின்னர் அவை இரண்டும் பொருந்தி நின்று மின் சாதனங்களை இயக்குகின்றன.

அதேபோன்று, பரசிவம் என்ற ஒரே முழு முதற்பொருள், நமக்காகத் தொழிற்படத் தொடங்கும்போது சிவன் என்றும் சத்தி என்றும் இருகூறாகி வெளிப்படுகிறது.

நமக்கு உடல், உட்கருவி, உலகம் நுகர்பொருள் இவற்றை நல்குவதற்காகச் சிவனும் சத்தியும் மாயை என்ற சட ஆற்றலில் பொருந்துகின்றனர்.

அப்போது நாதம் என்ற தலையாய சிவ தத்துவமும் விந்து என்ற சத்தி தத்துவமும் தோன்றுகின்றன.

சிவன் நாத தத்துவத்தையும், சத்தி விந்து தத்துவத்தையும் அதிட்டித்து நின்று மீண்டும் பொருந்த, அப்போது நாதவிந்து

தத்துவங்களின் வெளிப்பாடாக, ஓம் என்ற பிரணவ ஒலி தோன்றுகிறது.

பிரணவ விரிவாக்கம்

ஓம் என்பது குவிந்த (சமட்டி) நிலை. நமக்குப் பயனுறும் பொருட்டு அஃது, சிவசத்தியால் மேலும் இயக்கப்பட்டு அ,உ,ம் என விரிகிறது. அதனை விரிபிரணவம் (வியட்டி பிரணவம்) என அழைப்பர். அதனின்று தான் அண்டசராசரங்கள் அனைத்துக்கும் வேண்டிய, பலவகை ஒலிகளும் வெளிப்பட்டு விரிந்தன. இது, சைவ சித்தாந்தம் அறிவுறுத்தும் தத்துவ வெளிப்பாடு.

ஈண்டு விரிபிரணவ இயக்கமுறை பற்றிச் சிறிது விரித்து நோக்குவோம். அஃது 'உவமம்' என்றதன் பெயர்க் காரணத்தை அறிய உதவியாகும்.

வானவெளியில் இரண்டு மேகங்கள் மோதுகின்றன. அதன் விளைவாக, முதலில் இடியாகிய ஒலி தோன்றுகிறது. அதிலிருந்து தான் மின்னலாகிய ஒளி வெளிப்பட்டுப் பரவுகிறது. எனினும், ஒலியைவிட ஒளி நூறாயிரம் மடங்கு விரைவாகப் பாய்ந்து செல்லக் கூடியது.

எனவேதான் இடியிலிருந்து தோன்றுகிற மின்னலையே நாம் முதலில் காணுகிறோம்; இடியைப் பின்னர்க் கேட்கிறோம்.

இஃது உலகியல் தொடர்பான அறிவியல்.

அதே போன்று, ஒன்றேயாகிய பரசிவம், சிவன் என்றும் சத்தி என்றும் இரு கூறுகளாகித் தொழிற்படத் தொடங்கும் போது,

மிகமிக விரைவாகத் தொழிற்படும் பராசத்தியே முதன் முதலில் ஆதிசத்தி என்ற பெயரோடு நமக்காக வெளிப்படுகிறாள். அவளை ஒத்த தலைவனாகச் சிவன் பின்னர்த் தோன்றுகிறான்.

இது சைவ அருளாளர் தம் உள்ளுணர்வால் தெளிந்து கூறுகிற இறை இயல்பு.

அஉம் என்ற விரிபிரணவத்தில், 'உ' என்பது ஒளியையும் அதனை இயக்குகிற சத்தியையும் குறிக்கும்.

'அ' என்பது ஒலியையும் அதனை இயக்குகிற சிவனையும் குறிக்கும்.

'ம்' என்ற மகரஒற்று, சடஆற்றலாகிய மாயை என்னும் களத்தினைக் குறிக்கும்.

விரிபிரணவம் மேன் மேலும் விரிந்து பரந்து வெளிப்படும் அப்போது, விரைந்த இயல்புடைய 'உ'கரம் முதலிலும், 'அ'கரம் அதனைத் தொடர்ந்தும் வெளிப்போந்து, 'ம்' என்ற மாயா சட ஆற்றலை ஊர்ந்து உலகாதிகளை இயக்கும்.

எனவே. முதற்கண் ஓம்—அஉம் என்றமுறையிலே தொடங்கு கிற உலக இயக்கம்,

'உ'கரத்தின் மிகுந்த விரைவு காரணமாக, 'உஅம்' 'உவம்' என மாறி அமைகிறது. அதுவே அகரச் சாரியை பெற்று, 'உவம இயல், உவமஉருபு, உவமப்போலி' என்ற இலக்கண வழக்காக உருவாகியது எனலாம்.

வானத்தில், மின்னலைக் கொண்டு இடியை அறியலாம். இல்லத்தில், அன்னையைக் கொண்டு அப்பனைத் தெளியலாம். இறைமையில், சத்தியைக் கொண்டு சிவத்தை உணரலாம். ஒலியில் அகரம் இன்றி உகரம் இல்லை என்பதே உண்மையா யினும் விரைந்து முதலில் வெளிப்படுவது உகரமே யாதலால்,

உகரத்தைக் கொண்டுதான் அகரத்தை அறியலாம் இவையேபோல், பருமையான காட்சிப் பொருளை உவமை யாகக் கொண்டு

நுண்ணிய மறைபொருளைக் கருதி உணரலாம்.

உஅம் (உவம்) என்பது, நாம் நன்கு அறிந்ததும் பருமை யானதுமான காட்சிப் பொருள்.

அஉம் என்பது நாம் அறிய வேண்டியதும், உவமத்தின் முந்திய நிலையாகியதும், நுண்மையானதும், குவி பிரணவத்திலிருந்து வெளிப்பட்டதுமான விரி பிரணவப் பொருள்.

ஓம் என்பது மேற்கூறிய விரிபிரணவத்துக்கு மூலமாகியதும் அதனினும் அதி நுண்ணியதும், குவிந்து நிற்பதும், முதற்கண் வெளிப்பட்டதுமான பிரணவப் பொருள்.

சத்தி என நாம் பரவித் துதிக்கும் சிவபெருமானது பேராற்றல், ஓம் என்ற குவிபிரணவத்தால் உணரத்தக்கதாகும்.

சத்தியைக் கொண்டுதான் சிவத்தை நாம் உணர இயலும் என்பது முன்னர்த் தெளிந்த உண்மை. இவ்வாறாக, (உவம்) உஅம்→அஉம்→ஓம்→சத்தி→சிவன்→பரசிவம் என, விரிபிரணவ குவிபிரணவத்தின் மூலம் ஒப்புமை கூறி நுண்ணிதின் நுண்ணிதாகிய பரம்பொருளின் பல்வேறு இயல்புகளை நமக்கு உணர்த்துதற்காக எழுந்த அரியதொரு துணை நூலே உவமஇயல் எனப் படும்.

எனவே உவம இயல் என்பது ஒரு காரணப் பெயராயிற்று. இவ்வாறு 'உவம' என்ற சொல்லாட்சியில் கூடச் சைவ சித்தாந்தக் கொள்கை விளங்கித் தோன்றுமாறு அமைத்திருக்கும் தொல்காப்பியரது சீர்மை பெரிதும் வணங்குதற்கு உரியதாகும்.

உவமத் தோற்றம்: கண்ணுக்குப் புலப்பட்டு நிற்பன பருமையான பொருள்கள். கருத்துக்குப் புலப்படுவன நுண் பொருள்கள். இவ்வாறு பருமையாகவும், நுண்மையாகவும் முன்னர் நிகழ்ந்த நிகழ்ச்சிகள், அவற்றால் விளைந்த நல்வினை, தீவினையாகிய இருபால் பயன்கள் நிகழ்ச்சியில் தலைப்பட்டோரும், உடன் நின்றோரும், பயன் நுகன்றோருமாகிய உயிர்கள், நிகழ்ச்சிக்குத் துணையாக இருந்த அவ் உயிர்களின் குண இயல்புகள் — என,

முந்தியவற்றை எடுத்துக் காட்டியும் குறிப்பால் உணர்த்தியும், எதிர்மறை கொண்டு விளக்கியும்,

அவற்றின்மூலம் பிறிதொரு அரிய செய்தியை நாம் உணருமாறு சொல்லுவது உவமம் ஆகும் எனத் தொல்காப்பியர் இலக்கணம் வகுத்துள்ளார்.

இ. உவமையின் இலக்கணம்

"வினை,பயன் மெய்,உரு என்ற நான்கே
வகைபெற வந்த உவமத் தோற்றம்"—1

என்பது தொல்காப்பிய நூற்பா.

வினை என்பது, ஆணவ மலத்தின் உந்தலால், ஆன்மா முனைந்து ஈட்டிய செல்வமாகிய வினை;

பயன் என்பது வினைக்கு ஈடானது; இன்பதுன்பமாகப் பரிணமிப்பது; அவ்வினை செய்தோனாலேயே அனுபவித்தாலன்றித் தொலையாதது.

மெய் என்பது வினைநுகர்ச்சிக்காகவும், ஆணவ ஒடுக்கத்துக்காகவும், மெய்யுணர்வு பெறுவதற்காகவும் இறைவனால் ஒருகருவியாக நமக்கு அருளப்பெற்ற, மாயையினாலான உடம்பு

உரு என்பது உயிரின் இன்ப, துன்ப நுகர்ச்சிக்கு ஏற்றவாறு அருளப்பெற்ற இச்சை, அறிவு, செயல் என்ற முத்திறன். சாத்துவிக, இராசத, தாமச குணங்கள் எனினும் அமையும்.

ஆன்மாக்களாகிய நாம் ஆணவ மலத்தின் வலிய கட்டினால் நல்வினை தீவினை என்ற வினைகளைச் செய்கிறோம்.

உரிய காலங்களில் வினைகளுக்கு ஏற்ற பயனாக இன்ப துன்பங்களை நுகர்கிறோம்.

அவ்வாறு நுகர்வதற்குத் துணையாக ஏற்றதொரு மெய்யினை (உடம்பினை)ப் பெறுகிறோம்.

அப்போது ஆணவ கன்மவினை நுகர்ச்சிக்கு ஏற்பவே நமக்கு அறிவும், விழைவும், செயல் திறன்களும் சிவபெருமானால் உருவாக்கித் தரப் பெறுகின்றன; குணங்களும் அமைகின்றன.

---

1) தொல் - உவம இயல் - 1

அவற்றைக் கொண்டு, இன்றைய வாழ்விலே நாம் அனுபவிக்கும்இன்ப துன்பங்கள், முந்திய பிறப்புகளில் நம்மால் ஈட்டிச் சேர்க்கப்பட்ட நல்வினை தீவினைகளின் பயன் என்பதையும், அதேபோல்,

இன்றைய வாழ்வில் நாம் செய்யும் இருவகை வினைகளும் மெய்த்தவங்களும், முறையே மறுமைக்கு வித்தாகவும் அம்மைப் பேரின்பத்துக்கு ஆற்றுப்படுத்துவனவாகவும் அமைகின்றன என்பதையும்

நம் தமிழ் முன்னோர்கள் பல்லாற்றானும் நமக்கு அறிவுறுத்திப் போந்தனர்.

அடுத்து, வினைப்பயன் நுகர்ச்சிக்கு ஏற்ற உடம்பும், உலகமும் பிறவும் எவ்வாறு செய்து நமக்கு அருளப்பெறுகின்றன என்பது தொடர்பான செய்திகளை, மேல்வரும் செய்யுள் இயலில் நோக்குவோம்.

8. செய்யுளியல்

சான்றாண்மை மிக்கவர்கள், சங்க காலப் புலவர்கள். தாம் நினைத்த பொழுதெல்லாம் திருக்கயிலாயம் புகுந்து பரமசிவன் திருவடியினை வணங்கித் திருவருள் பெற்றுத் திரும்புகிற நற்பேறு உடையவர்கள் அவர்கள்.

இவ்வாறு திருக்கயிலாயம் புகுவதும், திருவருள் பெறுவதும், திரும்பி வருவதும், தீந்தமிழ்த் தெய்வப்பாக்களைப் பாடுவதும் அவர்களுக்கு மிகவும் எளிவந்த ஒரு கலையாகவே இருந்திருக்கிறது.

ஆசிரியம், வஞ்சி, வெண்பா கலிப்பா என்ற நால்வகைப் பாக்களையும் நானிலத்தோர்க்கு அவர்களால் வழங்க முடிந்திருக்கிறது. தமிழகத்தில் அவர்கள் மூலமாக ஒரு தெய்வீகப் பேரொளி பரவி இருந்திருக்கிறது.

இவை எல்லாவற்றிற்கும் காரணம் யாது? அவர்களது சைவ சமய உணர்வும், சைவ நெறியின் பாற்பட்ட சீலமிகு வாழ்வுமே ஆம்.

அவர்களுடைய சைவ வாழ்வு வெறுங் கற்பனையோ, நம் போன்றார் எய்த முடியாத ஒன்றோ அன்று. விழைவும் முயற்சியும் இருந்தால் இறையருள் துணை நிற்கும்.

நமது மனித உடல் முழுவதும் பரவிக் கிடப்பது உயிர். அவ்வாறு பரந்துபட்ட உயிரின் ஆற்றலை இறையருளால் அவர்கள் குவிந்த மனத்துடன் ஒன்று திரட்டி, மேரு நடுநாடி எனப் படும் முதுகுத் தண்டின் வழியாக மேலே எழுப்பி வானமண்டல மாகிய சிரசிற்குக் கொணர்ந்து, சுத்த மாயையினாலான புருவ நடுவில் (Pituitaryயில்) நிறுத்தி, அங்குப்பிறை மதியாகிய மூன்றாம் நாளத்தினால் அமுதம் பொழியப் பெற்றுச் சிவமாந் தன்மை எய்திய சிலராய் வாழ்ந்திருக்கிறார்கள்.

ஆதலால். விண்ணும் மண்ணும் அவர்களுக்கு வேறுவேறாகத் தோன்றவில்லை.

இவ்வாறு, சிவசிந்தையோடு யோகநெறிநின்று அவர்கள் வழிபட்ட முறைகளை நாமும் பின்பற்றினால் நமக்கும், மொழிக்கும், சமயத்துக்கும், சமுதாயத்துக்கும், சிறந்த தெய் வீகப் பயன் விளைவது உறுதி.

அ. கலைமகளும் பேரியாழும்:

உதரவிதானம். இருதயம் என்பது ஒரு குருதிக் கடல். இது, நம் உடலில் நெஞ்சுத் தானத்தில் இருக்கிறது. இதன் அடியில் ஒரு வெண்தாமரை மலர் உள்ளது. அதற்கு உடலியல் அறிஞர் கள் இட்டபெயர், உதர விதானம் (Diaphragm) என்பது. கும்பிக்கு அமைந்த ஒரு குப்பாயம்போல் இருப்பதால், இஃதும் ஒரு காரணப் பெயராயிற்று. (உதரம்: வயிறு; விதானம்: கோபுரம்)

கலைமகள்: சிவபெருமானது படைப்பு ஆற்றலுக்குக் கலை மகள் என்று பெயர். ''கல என்ற முதல் நிலைக்கு, நீக்கலும்

நியமித்தலும் பொருள். ஆகையால் இருளை நீக்கிப், போக நியமனத்தைச் செய்வது எனக் கலை என்ற பதத்துக்குப் பொருள்"[1] என அறிவுறுத்துவார், வாலையானந்தர்.

உயிர்களாகிய நம் சிற்றறிவை அநாதி காலந்தொட்டு முடக்கி வைத்திருக்கிறது ஆணவம் என்ற இருள் மலம். அதனை, 'உடன்பிறந்தே கொல்லும் நோய்' என்பர் அறிஞர். அதன் தீய ஆற்றலை நம்மிலிருந்து சிறிது சிறிதாக நீக்குவதும், சிவஞான ஒளியினை நம்பால் ஊட்டுவதும் படைப்பு ஆற்றலின் தொழில்; ஆதலால் அவ்வாற்றலுக்குக் கலைமகள் என்று பெயர்.

பரம் பொருளாகிய சிவபெருமான் எங்கும் நிறைந்தவர், அவருடைய படைப்பு ஆற்றலாகிய கலைமகளும் பொது நிலையில், எல்லா இடங்களிலுமே நிறைந்திருக்கிறாள்.

ஆயினும் அவளோ ஞானத்தின் உறைவிடம். ஞானத்தின் நிறம் வெண்மை.

எனவே வெண்தாமரை மலரையும், அம்மலர்போன்ற மெய்யடியார்களது வெள்ளை உள்ளங்களையுமே தனக்குச் சிறப்பான உறைவிடமாகக் கொள்ளுகிறாள்:

"வெண்தா மரைக்கன்றி நின்பதம்
தாங்களென் வெள்ளை உள்ளத்
தண்தா மரைக்குத் தகாதுகொ லோ...
சகல கலா வல்லியே"[2] என வினவுகிறார் குமரகுருபரர்.

அந்த வகையிலே நமது நெஞ்சில் வெண்தாமரை ஆசனமாகிய உதரவிதானமே கலைமகளுக்கு உறைவிடமாகிறது (முன்னர்க் களவியலிலும் இது பற்றிச் சிந்தித்தோம்.)

பேரியாழ்

நமது உடம்பில் 72,000 நாடி நரம்புகள் இருப்பதாக அறிஞர் கூறுவர். இந்த நரம்பு மண்டலத்தின் கேந்திரத் தானமாக இருப்பவை, முதுகுத்தண்டும் மூளையும் இணைந்த பகுதி.

---

1) சித்தாந்தப் படவிளக்கம் (ஸ்ரீ வாலையானந்த சுவாமிகள்) - பக். 57
) சகலகலா வல்லி மாலை-1 குமரகுருபரர்.

இதனை மைய நரம்பு மண்டலம் (Central Nervous System. என்பர். இஃது ஒரு பேரியாழின் அமைப்பினைப் போன்றது. நமது உடம்பில் உதரவிதானவம் என்ற வெள்ளைத் தாமரை யில் வீற்றிருந்து, கலைமகள், 72000 நாடி நரம்புகளைக் கொண்ட இப்பேரியாழை இயக்குகிறாள்.

இ. யாப்பு — ஒரு செய்யுள் உறுப்பு:

மாத்திரை, எழுத்து, அசை, சீர் எனத் தொடங்கி எண் வகை வனப்பு ஈறாக 34-செய்யுள் உறுப்புகளை முறைப்படுத்திச் செய்யுள் இலக்கணத்தைக் கூற முற்படுகிறார், தொல்காப்பியர் அவற்றுள் யாப்பு என்பதும் ஓர் உறுப்பாக உள்ளது. யாப்பு என்ற சொல்லுக்குக் கட்டுதல் என்று பொருள். எலும்பு, நரம்பு தசை தோல் முதலியவற்றால் ஆகிய உடம்புக்கு யாக்கை என்று பெயரிட்டதும், அவற்றால் அது கட்டப்பட்டதாலே ஆம்.

செய்யுள் என்றால் செய்யப்பட்டது என்று பொருள். நமது உடம்பாகிய யாக்கையும், வினைநுகர்ச்சிக்கு ஏற்பச் சிவபெரு மானால் யாத்து அருளப் பெற்ற — மாயையிலிருந்து செய்து தரப்பட்ட — ஒரு செய்யுளே. நமக்கு ஓர் அனுபவக்களமாக ஆக்கித்தரப் பெற்றவையே இந்த உலகமும் பிறவும். எனவே இவற்றை ஆக்கை, யாக்கை, செய்யுள் எனக் கூறுவது தான் எவ்வளவு பொருத்தம்!

யாப்பு என்பதற்குத், தொல்காப்பியர்,

எழுத்து முதலா ஈண்டிய அடியில்
குறித்த பொருளை முடிய நாட்டல்
யாப்பு என மொழிப யாப்(பு)அறி புலவர்"[1]

என இலக்கணம் வகுத்துள்ளார். அதன் உட்கிடையை நோக்குவோம்.

எழுத்தின் முதன்மை: உலகின் முதல் தோற்றம் நாதத்தில் (ஒலி என்ற எழுத்தில்) தொடங்குகிறது என்பதாகச் சைவ

1) தொல் - செய்யுள் - 74
2) நாதம், ஒலி, எழுத்து, Sound என்பன ஒரு பொருளை உணர்த்தும் பல சொற்கள், "தோற்றம் துடியதனில் .. " என்பது உண்மை விளக்கம்

சித்தாந்தம் விளம்புகிறது இன்றைய அறிவியலும் அவ்வுண்மையை ஏற்கிறது. ஒலியிலிருந்து தோன்றியவையே மந்திரங்களும், மொழிகளும், பிற பிற உலகப் பொருள்களும்.

அடியின் கண் யாப்பு: உயிர்களாகிய நமக்கு முடிந்த முடிவான இன்பம், சிவபெருமான் திரு அடியில் பேரின்பம் துய்த்தலே' என்பதும், அஃது ஒப்றே நிலையான அறிவானந்தம்[1] (சத்சித் ஆனந்தம்) என்பதும் சைவத்தின் தலையாய கொள்கை.

குறித்த பொருள்: இவ்வாறு எழுத்து (ஒலி) முதலாக அடி (திருவடி) ஈறாக (தத்துவரூபம் முதல் சிவபோகம் வரை[2] நாம் வாழ்வதற்கெனச் சிவபெருமானால் யாத்தருளப் பெற்றது இவ்வுலக வாழ்வு. இஃது இறைவன் திருஅடியையே குறிக்கோளாகக் கொண்ட வாழ்க்கை.

பொய்யான பொருள்களை இனம் கண்டு ஒதுக்கலும் மெய்யான இறைமைப் பொருளையே குறியாகக் கொண்டு ஒழுகலும், இவ்வாழ்வின் உண்மை நோக்கமாகும்

இத்தகைய உயரிய உண்மை வாழ்வே யாப்பு எனப்படும் இதனைத் தொல்காப்பியர், செய்யுளியலில் இந்நூற்பா மூலம் செவ்விதே உணர்த்தக் காணுகிறோம்.

யாப்பு-இன்பப்பொருளின் ஓர் அங்கம், ஏன்?

மொழி இலக்கணம் கூற வந்த பிற்கால ஆசிரியர்கள் 'ஐந்திலக்கணம்' என்ற பகுப்பு முறையில் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி எனத் தனித்தனி நூல் இயற்றினர்.

ஆனால் தொல்காப்பியரோ, அகப்பொருள் இலக்கணமாகிய இன்ப ஒழுக்கத்தோடு இணைத்துப் பொருளதிகாரத்தின்

1) நிலைபேரின்பம் என்பதைத் தொல்காப்பியர் 'அந்தமில் சிறப்பின் ஆகிய இன்பம்' எனக் கூறி மகிழ்வர் பொருளியல்-239

2) தத்துவரூபம்--- சிவபோகம்: உண்மை நெறி விளக்கம்

ஓர் அங்கமாகவே செய்யுள் இலக்கணத்தை அமைத்துள்ளார். காரணம் என்னை எனில், நிலையான பேரின்பத்தைக் குறிக்கோளாகக் கொண்டதே பண்பட்ட வாழ்க்கை; அஃது இறைவனால் நமக்குச் செய்து தரப்படுகிறது; எனவே செய்யுள் என்பதாயிற்று. அத்தகைய பேரின்பம் இந்த உடலுடன் கூடிய இம்மைப் பிறப்பிலேயே அடைவதற்கான வாய்ப்புகளும் உள்ளன.

"அந்தமில் சிறப்பின் ஆகிய இன்பம்
தன்வயின் வருதலும் வகுத்த பண்பே"—[1]

எனவே இன்பத்தின் உறைவிடமாகத் திகழ்வது செய்யுள் ஆகவே செய்யுள் இயல் என்பது தொல்காப்பிய அகப்பொருள் அதிகாரத்தின் சிறப்பான ஓர் இயலாயிற்று

தளை: தளை என்ற சொல்லுக்குக் கட்டு என்று பொருள். பிற்கால யாப்பிலக்கண நூலார் 'தளை'யை ஒரு செய்யுள் உறுப்பாகவே கொண்டிருக்கின்றனர்; இரண்டு சீர்கள் தம்முள் தளைத்து (கட்டுப்பட்டு) வருதல் என்று அதற்கு உரையும் கண்டனர்.

ஆனால் தொல்காப்பியரோ, தளையைத் தனிஉறுப்பாகக் கொள்ளவில்லை. அடியின்கண் வரும் ஓர் உட்பிரிவாகவே கொண்டு நூற்பா யாத்தனர்.

"நாற்சீர் கொண்டது அடிஎனப் படுமே
அடியுள் எனவே தளையொடு தொடையே
அடியிறந்து வருதல் இல்லென மொழிப"—[2]

ஈ) யாப்பும் தளையும்: யாப்பு என்றால் கட்டு என்று பொருள். தளை என்றாலும் கட்டு என்றே பொருள்.

இவற்றுள் யாப்பினைச் செய்யுள் உறுப்பாக்கிச் சிறப்புச் செய்த தொல்காப்பியர், தளையினைத் தள்ளிவைத்தது ஏன்

1) தொல். பொருளியல் - 239
2) தொல்-செய்யுளியல் 31,32,33

என்பது முந்திய உரையாசிரியர்கள் பலருக்கும் ஒரு வினாவாகவே உள்ளது.

தொல்காப்பியத்தை வெறும் மொழிஇலக்கணமாக மட்டும் கொள்ளாமல், சைவசித்தாந்தச் செந்நெறி சாற்றும் ஒரு பேரின்ப நூலாகக் கொண்டால், ஆசிரியரது ஆழ்ந்த உட்கிடையை ஒருவாறு அணுகி நிற்பவர்களாவோம்.

உடலும் உயிரும் ஒருங்கிணைந்தது தான் இந்த உலக வாழ்வு. இஃது ஒரு நிலையற்ற வாழ்வு என்பது தெளிவான உண்மை. இதற்கும் மேலாக உயர்ந்த வாழ்வு ஒன்று உண்டு; அஃது இறைவனும் உயிரும் 'பாலது ஆணையா'லே[1] ஒன்றி நிற்றலாகும்.

உடம்பு என்பது சில ஆண்டுகளில் அழிந்து விடுவது. ஆனால் உயிரின்தன்மை அவ்வாறன்று.

நிலையான பொருள்கள்—மூன்று: இறைவனைப்போன்றே ஆதியும் அந்தமும் இல்லாதன உயிர்களும் தளைகளும் என்பது சைவசித்தாந்தம். 'பதியினைப்போல் பசுபாசம் அநாதி' என்பார் திருமூலர்[2].

இவ்வாறாக, இறை உயிர் தளை என்ற மூன்று பொருள்களும் எக்காலத்தும் நிலையாக உள்ள அழியாப் பொருள்கள்.

இறை: என்பது ஒன்றே; அதுவே பரசிவம் என்ற பேரின்பப் பொருள்.

உயிர்கள் எண்ணற்றன; சிற்றறிவும் சிறுசெயலும் உடையன அறிவிக்க அறிவன; சார்ந்த பொருளின் வண்ணமாவன.

தளைகள்: மூன்று. அவை: ஆணவம், கன்மம், மாயை என்பன. இறைமைப் பேரின்பத்திற்குச் செல்லவொட்டாமல் உயிரினத்தை வலிதே கட்டி, அவற்றின் இயல்பான சிற்றறிவு சிறுசெயல் சிறு விருப்பங்களையும் முடக்கி நிற்பன. இம்

1) தொல். களவியல்-2
2) திருமூலர் திருமந்திரம்

மூன்றும் தளையின் ஒருவகை எனலாம். இவையேயன்றி மேலும் இரண்டு தளைகள் உள்ளன. அவை ஆதிசத்தியும், மாயேயமும், இவற்றை இரண்டாவது வகை எனலாம்.

சிவசத்தியின் முதல் வெளிப்பாடாகிய ஆதிசத்தியும், (சிவ ஆணைப்படி) சிவசத்தியால் மாயையிலிருந்து நம் பொருட்டு உருவாக்கித் தரப் பெற்ற (உடல் உட்கருவி, உலகம், நுகர்ச்சி என்ற நாற் கூறுடைய) மாயேயமும் தளைகளாகவே சேர்த்து எண்ணப் படுவது மரபு.

என்னை எனில், செய்தவனே அனுபவித்தாலன்றித் தொலையாத வினைகளை, செய்த அவனவனுக்கு, உரிய காலத்தில் உரிய அளவில் உரிய முறையில் ஊட்டு விப்பவள் ஆதிசத்தி. அவ்வாறு அவள் ஊட்டுவதற்குக் கருவியாகத் துணை நிற்பது மாயேயம். எனவே அவையும் ஓரளவு வலிமையாகவும் மறைந்திருந்தும் உயிர்களைத் தளையிடுகின்றன.

இவ்விருவகைத் தளைகளுக்கும் வேறுபாடு உண்டு. ஒரு மனிதனது உடைமைகளைக் கவர்வதற்காகக் கொள்ளையர் அவனைக் கட்டிப்போடுவதைப் போன்றது முதல்வகை.

அம்மனிதனது பிணியை நீக்க முற்படும் மருத்துவன் கட்டியைக் கத்தியினால் அறுத்தும், தீயினால் சுட்டும் பிறவாறும் வைத்தியம் செய்வதற்காக அவனைக் கட்டும் கட்டினைப் போன்றது இரண்டாவது வகை.

துன்பத்தைக் கொணர்வது முதல்வகைக் கட்டு, அது தளை எனப்படும்.

நிலையான பேரின்பத்திற்கு ஆற்றுப்படுத்துவது இரண்டாவது வகைக் கட்டு, அஃது யாப்பு எனப்படும்.

யாப்பு என்றாலும் தளை என்றாலும் கட்டு என்பதே பொருள்; ஆயினும் யாப்பு என்பது உயிரை ஆண்டவனோடு பேரின்பத்தில் இணைக்கத் துணைநிற்கிறது; தளை என்பதோ உயிரை ஆணவாதி மலபந்தங்களில் அழுத்தி, இறை இன்பத்தை நுகரமுடியாதவாறு அளப்பரிய துன்பங்களில் சிறைப்படுத்துகிறது.

எனவே யாப்பு சிறந்து ஓங்கி நிற்கிறது. ஆதலால் தொல் காப்பியரும் செய்யுள் உறுப்புக்கள் முப்பத்து நான்கில் ஒன்றாக யாப்பினைக் கொண்டார்; தளையினை அவ்வாறு ஓர் உறுப்பாகக் கொள்ளாது ஒதுக்கினார்.

தளை பற்றிய குறிப்பு எதற்காக?

ஆயினும் தள்ளத்தக்கதாகிய தளையை முற்றிலுமாக ஒதுக்காமல், ஏன் சில நூற்பாக்களில் குறிப்பிடுகிறார் என்ற துணை வினா ஒன்றும் எழுகிறதன்றோ?

வினைப்பயனை ஆன்மா அனுபவித்தாலன்றித் தொலையாது. ஆதலால் ஆணவமலம் ஓரளவு ஒடுங்கி, ஆன்மா சிவன்முத்த நிலைக்கு உயர்ந்து, ஆண்டவனோடு பேரின்பக் கூட்டத்தில் தலைப் படினும், வினைப்பயனாகிய இன்பதுன்பங்கள் இருந்து கொண்டே இருக்கும். அத்தகைய 'வினைஎச்சம்' நீங்குகிறவரை அஃது உடம்போடு வாழ்ந்து, எஞ்சிய வினையை நுகர வேண்டும் என்பது நியதி. பிறப்பு இறப்புச் சுழற்சியிலிருந்து முழுமையாக விடுபடுகிறவரை, மூவகை மலபந்தங்களும் ஒரோ ஒன்றேனும் உயிரைத் தளைத்து நிற்பதால், தளையின் இயல்புகளை ஆன்மா அறிய வேண்டியது இன்றியமைமை தாகிறது. எனவே, தளையினைப் பற்றியும் சில நூற்பாக்களில் ஆசிரியர் சுட்டி உணர்த்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது எனலாம்.

தளைகளும், தலைவனாகிய சிவபெருமானது திரு அடியில் தான் தஞ்சம் புகுந்து கிடக்கின்றன. தில்லைக் கூத்தனின் ஊன்றிய திரு அடிக் கீழே, மும்மலங்களும் முயலகன் என்ற பெய ரொடு முடங்கிக் கிடக்கக் காணுகிறோம். அவை அறிவற்ற சட மாதலால், தாமாக இயங்க முடியாது. அவற்றை இயக்குபவனும் இறைவனே. எனவே தொல்காப்பியர்

"அடியுள்ளனவே தளையொடு தொடையே
அடியிறந்து வருதல் இல்லென மொழிப"[1]

எனச் சிவபெருமான் திருஅடியில் தளைகளின் இயக்க ஒடுக்கங் களை, இயம்புகிறார் எனலாம்.

---

1) தொல் செய்யுளியல். 101

நால்வகைப் பாக்கள்

இனிச், சிவபெருமானது திருவடியையே குறிக்கோளாகக் கொண்ட (உயரிய உலகவாழ்வு என்னும்) யாப்பின்கண் எழு கின்ற நால்வகைப் பாக்களின் தோற்றம், முறைவைப்பு, பயன் முதலியன பற்றிச் சிந்திப்போம்.

''ஆசிரியர் வஞ்சி வெண்பாக் கலிஎன
நால்இயற்று என்ப பாவகை விரியே''

எனத் தொல்லாசிரியர், பாக்களை நால்வகையாகக் குறிப்பிடு கிறார்: அவற்றுள், முதற்கண், ஆசிரியம் என்ற அகவற்பா பற்றிக் காண்போம்.

௧. அகவற்பா

உடலினுள் இருக்கிறது, உயிர். கடந்த நிலையி லுள்ள கடவுளை அஃது அகவி அகவி அழைக்கிறது.

தன் அகத்துள் வந்து அருள்புரியுமாறு வேண்டுதலே அகவுதல் எனப்படும்.

முருகன் என்ற குழந்தையை விழுங்கி அகப்படுத்துதற்காகச் சூரபதுமனாகிய மயில் ஆணவத்தோடு அகவி ஆர்ப்பரித்தது. ஆனால் அதுவே, முருகன் திருவருளால், அவனது திருவடிக்குள் ஊர்தியாக அகப்பட்டு ஆணவம் ஒடுங்கித் தெய்வீக ஒளிபெற்று இன்றும் அகவிக் கொண்டிருக்கிறது.

இவ்வாறு இருளகற்றி ஒளியூட்டும் தன்மை ஆசிரியம் எனப் படும். எனவே முருகப்பெருமானை ஞானகுரு என்றும் ஞான தேசிகன் என்றும் அருணகிரியார் அகம்குவிந்து விளித்துரைப்பார்.

அதேபோல, மல இருளின் கொடுமையையும், சிவபரத்தின் அருளாற்றலையும் சிந்திக்கிறது உயிர்; தன் அகத்தே ஆசிரிய னாகத் தோன்றி உய்விக்குமாறு இறைவனை வேண்டுகிறது.

இறைமை உணர்வுடைய அந்த நிலையில் அவ்வுயிரின் ஆன் மீக எழுச்சி, அகவற்பாவாக, ஆசிரியப்பாவாக வெளிப்படுகிறது.

தொல், செய்யுள் - 101

அகவ(ல்) என்பது ஆசிரியம்மே [1]என்பது தொல்காப்பியம் அவ்வாறு உயிரின் நுண்ணிய அகவல்ஒலி வெளிப்படுவதற்குச் சிவபெருமானது படைப்பு ஆற்றலாகிய கலைமகளே உறுதுணை புரிகிறாள். உயிருக்கு அமைந்த உடலின் உதரவிதானத்தில் வீற்றிருந்து, 72000 நாடிநரம்புகளாலான பேரியாழை (மைய நரம்பு மண்டலத்தை) இயக்கி, உயிரின் அகவல் குறிப்பைத் தெரிவிக்கிறாள்.

இத்தகைய அகவல், இருபாலும் நிகழலாம். உயிர் எவ்வாறு இறைவனை அகவி அழைக்கிறதோ, அதே போன்று, இறைவனும் பருவமெய்திய உயிர்களைத் தம்பால் அகவி அழைப்பது இயல்பே

திருப்பெருந்துறையில் சிவபெருமான் திருவாதவூரரை அகவி அழைத்ததும், திருவாதவூரர் சிவபெருமானது 'கீர்த்தி' யைப் 'போற்றி' அகவி நின்றதும்[2] வரலாற்று நிகழ்ச்சிகள்.

இறைவனது அகவலை நாடிநரம்புகளின் வழியாக உயிருக்கு உணர்த்துபவளும் கலைமகளே.

அடுத்து, வெண்பா உருவாகும் சூழல் பற்றிச் சிந்திப்போம்.

உ. வெண்பா

உயிர்களாகிய நாம் ஒவ்வொருவரும் ஊழ்வினை வயத்தால் உடம்பினைப் பெற்றோம். சிவபெருமானது விருப்பத்தையே ஆணையாக ஏற்ற அருட்சத்தி, மறைப்பு ஆற்றலாய் ஆதிசத்தி என்ற பெயரொடு, நம் ஒவ்வொருவரது சிறு மூளைப் பகுதியிலும் நின்று, நமது ஊழ்வினை நுகர்ச்சிக்கு ஏற்ப நம்மைக் கீழ் நோக்கிச் செலுத்திக் கொண்டிருக்கிறாள்.

கால அடைவிலே, உயிருக்கு உலக அவலங்களில் உவர்ப்பு ஏற்படுகிறது. நல்வினை தீவினை இரண்டையுமே ஒப்பநோக்கி உவர்த்து ஒதுக்குகிறது. அப்போது உய்வு வேண்டித் தவநெறியில் தலைப்படுகிறது.

---

1. தொல். செய்யுளியல், 77
2. திருவாதவூரர் இயற்றிய திருவாசகத்தின் முதல் நான்குபாக்களும் அகவல் பாக்களே

அனாதியே அதனைப் பிணித்திருந்த ஆணவமலம் சிறிது சிறிதாக ஒடுங்குகிறது. அப்போது மாயையாகிய உலகப் பற்றும் மறைய, மெய்ஞ்ஞான ஒளி ஓரளவு அதற்குப் புலனாகிறது.

அத்தகைய பருவ வளர்ச்சியுற்ற ஆன்மாவுக்கு அருள் பாலிக்கச் சிவபெருமான் திருவுளம் கொள்ளுகிறார். அவரது அருட்சத்தி திருவருட்கருணையை அவ் ஆன்மாமீது அருள்மழை வெள்ளமாகப் பொழிகிறாள்.

ஆன்ம அறிவின் இத்தகு படிமுறை வளர்ச்சியை இருவினை ஒப்பு, மலபரிபாகம், சத்திநிபாதம் எனச் சைவ சாத்திரங்கள் சிறப்பித்துக் கூறும்

இது தொடர்பாக சில இலக்கியச் சான்றுகளையும் அறிவியல் கருத்துக்களையும், தத்துவக் குறிப்புக்களையும் இணைத்துச் சிந்தித்தல் பயனுடைத்தாகும்.

''முன்னிக் கடலைச் சுருக்கி...'' எனத் தொடங்கும் திருவெம்பாவைப்[1] பாடலில், மாணிக்கவாசகர்,

''முன்னி அவள் நமக்கு முன்சுரக்கும் இன்னருளே என்னப் பொழியாய் மழை ஏலேலோர் எம்பாவாய்'' என இறைவியின் கருணைமழையை ஏற்றி மகிழக் காணுகிறோம். சைவ சித்தாந்த சாத்திரநூல்கள் பதினான்கனுள் எட்டினை இயற்றியருளிய கொற்றவன்குடி (இன்றைய அண்ணாமலைப் பல்கலைக்கழக வளாகம்) உமாபதி சிவனார், நெஞ்சுவிடு தூது என்னும் தமது ஞான நூலில் இறைவனது தசாங்கங்களுள்' ஆற்றின் சிறப்பைப் போற்றுவது ஆழ்ந்த உட்குறிப்புகளை உடையதாகும். அப்பாடற் பகுதியின் திரண்ட கருத்தை ஈண்டு நோக்குவோம்:

''சிவபெருமானது ஆறு, அளப்பரிய கருணை என்னும் (மீதானம்) பெருமலையில் தோன்றி, அறமாகிய (சஹஸ்ராரம் எனும் உச்சித்தலைச்) செழுங்கிரியில் விழுந்து, உயிரின் அளவற்ற வல்வினைகளைக் களைந்து, ஓங்கார ஒலியுடன் (சிரசினுள்) எங்கும் முழங்கி, மும்மலக் காட்டில் வேர்பறித்துக், கல்விக்கரை கடந்து,

1. திருவெம்பாவை-16

ஐம்புல வேட்கையும், ஐம்பொறிச் செயற்பாடும் அழித்துப் பந்தம் எனும் சோலை பறித்து......

(அக்கினி மண்டலம், சூரிய மண்டலம், சந்திர மண்டலம் என்ற) மூன்று மண்டலத்துச் சோதியையும் சோதித்து,

(மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அனாகதம், விசுத்தி, ஆக்ஞை என்ற) ஆறு ஆதாரத்தும் (குண்டலினியாக மேனோக்கிச்) சென்று,

விந்து நாதமும் கடந்து, பரவெளி எங்கும் பரந்து விரிந்து, பரம்பொருளுக்கே தஞ்சமாயதும், ஆன்ம சிற்றறிவுக்கு அப்பாற் பட்டதுமான அந்தமிலா ஆனந்தம் என்பதோர் பேரின்ப ஆறாகும்''[1]

இக்கருத்தினை உட்கொண்டு, தாயுமானவரும்[2] ''அகண்டா காரசிவ போகம் எனும் பேரின்ப வெள்ளம் பொங்கித் ததும்பிப் பூரணமாய் ஏக உருவாய்க் கிடக்குது'' எனப்பாடி, அதனைப் புசித்து இன்புறுதற்கு சகத்திலுள்ளோர் அனைவரையும் அறை கூவி அழைக்கக் காணுகிறோம்.

மணிவாசகரும் தம் கோயில் திருப்பதிகத்தில், ''சிறைபெறா நீர்போல் சிந்தைவாய்ப் பாயும் திருப்பெருந் துறையுறை சிவனே! இறைவனே! நீ என் உடல் இடம் கொண்டாய்...[3]'' என இசைப்பது சத்திநிபாதக் கருத்தினை அரண் செய்வதாகும்.

இது தொடர்பான உடலியல் குறிப்புகளை இணைத்துச் சிந்திப்பது, இற்றைநாள் அறிவியல் நோக்கினர்க்கு மனத்தெளிவை உண்டாக்கும். மூளைநீர் (Cerebro Spinal Fluild — CSF) என்பது நம் தலையினுள் மூளைப்பகுதியை முழுவதுமாகச் சூழ்ந்து பரந்து கிடக்கிறது. அது, பின்தலையில் பிடரியினுள் அமைந்திருக்கும் (Cistern என்ற) அமுத ஏரியில் தேங்கி நின்று அங்கிருந்து முதுகுத்தண்டினை (Spinal Cord) முழுக்காட்டுகிறது. பெருமூளையின் மடிப்புகளுள் நிறைந்து நின்று, அறிவு மேம்பாட்டுக்குத் துணைபுரிகிறது.

---

1 நெஞ்சு விடு தூது - உமாபதி சிவனார்

2. தாயுமானவர் பாடல் 30 : 3

3. திருவாசகம் - 8:22:5

அனைவர்க்கும் உடல் அமைப்பால் இஃது ஒரே மாதிரி யாகவே இருந்த போதிலும், உயர்பக்குவ ஆன்மாக்களுக்கு இதன் ஆற்றலும் தொழிற்பாடும் சிறந்தோங்கி நிற்கின்றன என்பது அனுபவ உண்மை.

இறையியல்: பகீரதனின் கடுந்தவப் பயனால் ஆகாயகங்கை பகீரத கங்கையாகி நிலஉலகிற்குப் பயன்தர வந்தது போல், மூளையின் மேற்பரப்பில் பெருமளவில் ஓடி, முதுகுத் தண்டின் வழி மூலாதாரத்தை அடைந்து சிறுமைப் பண்புகளில் வீணாகிக் கொண்டிருந்த அமுதநீர்,

உயர்பக்குவ ஆன்மா சிவமூலமந்திரத்தை (முத்திபஞ்சாக் கரத்தை) முறைப்படி தியானித்தலால், முன்னர் அம்பலாய்க் கூம்பிக் கிடந்த மூளைப்பகுதி, ஆயிரம் இதழ்த் தாமரையாய் அலர்ந்து நிற்க, அதன் இடைப்பட்ட மடிப்புகளிலெல்லாம் (CSF) பரவி நின்று பெருமூளைக்கும், இறைமைச் சிந்தனைக்கும் வலுவூட்டுகிறது.

சிவஞானத்தின் நிறம் வெண்மை
தூய்மையின் நிறம் வெண்மை

எனவே மலம் நீங்கித் தூய்மையுற்றுச் சிவஞானத்தில் தலைப் படுகிற ஆன்மாவுக்குச் சிவசத்தி பொழியும் அருள் மழையும் தூய வெண்மையதாகிறது.

ஆகவே, சிவசத்தியின் அருள் வெள்ளத்தில் மூழ்கித்திளைக்கும் தூய ஆன்மா அப்பொழுது வெளிப்படுத்தும் இனிய செய்யுள், வெண்பா ஆகும்.

'அகவல் என்பது ஆசிரி யம்மே,
அஃ(து)ஆன்(று) என்ப வெண்பா யாப்பே'[1]

வானிலிருந்து கீழ்நோக்கிச் செங்குத்தாக (Vertical) விழுவது மழை நீர். அதே போன்று மீதானப் பெருவெளியிலிருந்து சத்தி நிபாதமாகப் பொழிகிறது, அதிநுண்ணிய அமுததாரை. அதுவே வெண்பாவின் தோற்றுவாய்.

---

1. தொல் செய்யுளியல் – 77,78

இவ்வாறு மேலிருந்து கீழே மூலாதாரம் நோக்கி வீழ்ந்த விந்துசத்தி, எவ்வாறு குண்டலினியாகக் கீழிருந்து மேல்நோக்கிக் கலித்துக் கலித்து ஏறுகிறது என்பதைக் காண்போம்.

உஉ. கலிப்பா

துள்ளல் என்பது, நம்முடைய அன்றாட வாழ்க்கையில் பல நேரங்களில் பலவாறாக நிகழ்கிறது.

மாடிப்படிகளில் ஏறும்போது கால்களை மாறி மாறித் தூக்கி வைத்து ஏறுகிறோம். அப்போது கால்களிலும் உடம்பிலும் உள்ள நாடி நரம்புகளில் ஓர் எழுச்சி ஏற்படுகிறது. அதனைத் துள்ளல் எனக் கூறுவர். அஃது எளிதில் பிறர் கண்ணுக்குப் புலனாகிற புற நிகழ்ச்சியாகும்.

ஆனால், பிறருக்குப் புலனாகாமல் நம் அகத்துள் நிகழும் மற்றொரு வகைத் துள்ளலும் உண்டு. அதனை உள்ளக் கிளர்ச்சி என்பர். நம் மனத்துக்கு இன்பம் தரத் தக்கனவற்றைக் கண் முதலிய அறிவுக் கருவிகளால் நுகரும்போது ஏற்படுகிற மன எழுச்சியே அது.

வீணையின் நரம்புகளை மீட்டுதல் போன்று, நம் உடலிலுள்ள ஐந்து அறிவுக் கருவிகளும் நாடி நரம்புகளில் எழுச்சியை ஏற்படுத்துவதால் செயற்கருவிகள் துள்ளிக் குதித்து, நம் உள்ளத்தின் ஆழத்தில் எழுந்த இன்பத்தைப் பிறர் அறியுமாறு வெளிப், படுத்துகின்றன. இதனை 'மெய்ப்பாடு' என மொழிவர், அறிஞர்.

இத்தகைய துள்ளலுக்கு ஏதுவான நுகர் பொருள்களும் பலவாறாக வேறுபட்டுக் கிடக்கின்றன

சிறுவன் இனிப்புப் பொருளைச் சுவைத்து மகிழ்கிறான்; மெய்யடியார் சிவாநுபவத்தை நுகர்ந்து இன்புறுகிறார். இன்பம் என்பது பெயரளவில் ஒன்றுதான் என்றாலும், இவ்விரு இன்பத்திற்கும் தரத்தால் அளப்பரிய வேறுபாடு உண்டு அன்றோ?

பலகாலம் தவம்செய்து சத்திநிபாதம் என்ற இறையருளைப் பெறுகிறது, ஆன்மா. அவ்வாறு இறையருள் பதிந்த, (சத்திநிபாதம் பெற்ற) ஆன்மா பேருவகை எய்துகிறது. அதுகாறும் உடலின் கீழ்நிலை ஆதாரங்களிலேயே அலைந்து திரிந்த அவ்வான்மா இப்போது உடலின் மேனிலை ஆதாரங்களிலும் போக்குவரத்துப் புரிகிற ஆற்றலைப் பெறுகிறது. இதனைக் குண்டலினி ஆற்றலின் இயக்கம் என்பர்.

இறை அருள் பதித்த இன்பத்தால் அந்த ஆன்மா உள்ளம் துள்ளுகிறது. மூலாதாரம் முதல் முகுளம் வரையுள்ள முதுகுத் தண்டு என்ற ஏணியின் ஐந்து ஆதாரப்படிகளையும் அது கலித்துக் கலித்து ஏறுகிறது.

சுழுமுனையில் குண்டலினி ஆற்றல் ஏற்றுகிற இன்பம் அன்றோ அது? அதனை அளவிடவும் முடியுமோ?

இவ்வாறு ஆதாரயோகத்தில் ஆன்மா ஒன்றிய மனத்துடன் இயைந்து நிற்க, அதன் துள்ளும் உள்ளத்தின் இன்ப வேகத்தில் இறைஅருளும் துணைநிற்க, அவ்வான்மா இசைக்கிற செய்யுளும் துள்ளல் ஓசையில், கலிப்பாவாக வெளிப்படுகிறது.

'துள்ளல் ஓசை கலிஎன மொழிப —[1]

என்பது தொல்காப்பியம்.

இதன் மூலம், பண்டைய தமிழகத்தில் சிவயோக நெறியில் திளைத்த சீர்மை மிக்கோர் நிறைந்திருந்தனர் எனவும், அவர்களுடைய உள்ளத்தைச் சிவபரத்தின் அளப்பரிய கருணை ஆட்கொண்டிருந்தது என்வும், அதன் விளைவு பேரின்பத்துள்ளல் எனவும், அதனால், சங்க காலத் தமிழ்ச் சான்றோரில் பலர், கலிப்பா இயற்றிய பெருமைக்குள்ளானார்கள் எனவும் கொள்ளுதல் பொருந்தும்.

அடுத்து, வஞ்சிப்பா எழுகிற வழிமுறைகளைச் சிந்திப்போம்.

ஈ) வஞ்சிப்பா:

மனம் ஒன்றிய நெடுந்தவத்தால் உயிருக்குச் சிவஞானம் சித்திக்கிறது. முன்னர்க் கீழ்நிலை ஆதாரங்களில் கலித்துக் கலித்து ஏறிய ஆன்மா, மேலும் பக்குவம் அடைந்து கழுத்துப் பகுதியிலுள்ள விசுத்தி என்ற ஐந்தாவது ஆதாரத்திற்கு வருகிறது.

அங்கு அதுகாறும் மறைப்பு ஆற்றலாயிருந்து ஆன்மாவுக்கு ஊழ்வினைப் பாலை ஊட்டி உலகமுகமாகக் கீழ்நோக்கிச் செலுத்திக் கொண்டிருந்த ஆதிசத்தி,

இப்போது அங்கிருந்து புருவநடுவை நோக்கிப் பழிதீர் செல்வமாகிய[1] பேரின்பத் தானத்திற்குச் (Pituitary) ஆன்மாவை செலுத்துகிறாள். அப்போது மூன்றாம் நாளத்திற்குக் கீழே ஆன்மா ஊர்ந்து செல்லுகிறது. எனவே, ஆன்மாவுக்கு அஃது ஒரு படுக்கைநெறி (Horizontal) யிலான இன்பப் பயண மாகும்.

ஆணைத்தானமாகிய பிட்யூட்டரியில்தான் ஆண்டவன் ஆன்மா பேரின்பக் கூட்டம் நிகழுகிறது.

தலைவன் அளப்பரிய ஆற்றலும் முற்றுணர்வும் உடைய 'மிக்கோன்' (களவியல்—2). அவனைக் காணுதற்குச் செல்லுகிற ஆன்மாவோ 'கிழவோன் அறியா (மிகச்சிறு) அறிவினள்[2].

தூங்கல் ஏன்?

ஆன்மா மூலதாரத்திலிருந்து விசுத்திவரை நெடுந்தூரம் துள்ளித்துள்ளிச் செங்குத்தாக மேல்நோக்கி (Vertical) ஏறினதனால் விளைந்த களைப்பினாலும், புருவநடுவைநோக்கிய படுக்கை யான (Horizontal) அருட் பயணத்தாலும், மூன்றாம் நாளத்திற்குக் கீழே குறுகலான ஒருசுரவழிச் செலவினாலும மிகப்பெரிய ஒருவரை அணுக அணுக ஏற்படுகிற இயல்பானதோர் அச்சம் கலந்த பணிவினாலும், இன்பக் கூட்டத்திற்குச் செல்லும் ஒரு தலைவியின் மருட்கையாலும் இன்ன பிறவற்றாலும் விளையும் மெய்ப்பாடே, வஞ்சிக்கொடி

1. பழிதீர்செல்வம் - செய்யுளியல் - 106
2. களவியல் - 27

போன்று ஆன்மா மெதுவாக ஊர்ந்து செல்லுதற்குக் காரணம் ஆயிற்று. அத்தகைய உணர்வுடன் முன்னேறும் ஆன்மாவி லிருந்து வெளிப்படுகிற இசை, ஒரு தூங்கல் ஓசையாக அமைந்த வஞ்சிப்பா ஆகும்.

சிவஞானத்தில் தலைப்பட்ட உயர்நிலை ஆன்மாக்களின் உள்ள எழுச்சியை உணர்த்தும் பா, வஞ்சிப்பா. இதனைத்

தூங்க(ல்) ஓசை வஞ்சி ஆகும்'[1]

என்ற நூற்பாமூலம் தொல்காப்பியர் அறிவுறுத்துகிறார்.

ஏ) நான்கும் இரண்டில் இயலும் ஆறு:

இங்ஙனம் தோன்றிய நான்குவகைப் பாக்களுள் ஆசிரியம் வஞ்சி என்ற இரண்டும் ஒரு நடையுடையன என்றும், வெண்பா கலிப்பா என்ற இரண்டும் ஒரு நடை உடையன என்றும் தொல்காப்பியர் குறிப்பிடுகிறார்.

ஆசிரிய நடைத்தே வஞ்சி ஏனை
வெண்பா நடைத்தே கலிஎன மொழிப[2]

என்பதால் தொல்காப்பியருக்கும் முந்திய பழம்பெருந் தமிழ கத்திலேயே, இம் மரபு உணரப்பட்டிருப்பதை அறியலாம்.

எவ்வாறு நான்கு இரண்டினுள் இயலும் என்பதைத் தத்துவ நோக்கிலும், அறிவியல் அடிப்படையிலும் சிந்திப்போம்:

ஆன்மாவின் மாசினை அறுத்துத் தேசினைப் பெருக்கத் திருவுளம் கொள்ளும் சிவபெருமான், ஆசிரியனாய் வந்து சிவ மூலமந்திரத்தைச் செவியினுள் அகவுகிறார். அம்மந்திர அகவல் செவியினுள் படுக்கையாக ஊர்ந்து, அறிவுத் தானமாகிய பெருமூளையில் தைக்கிறது. தாயின் வாய் அசைவு கண்டு பேச முயலும் மழலையைப்போல, ஆண்டவனின் அகவலைக் கேட்கிற ஆன்மா, தானும் அகவுகிறது. சிவமூலத்தைச் சிந்திக்கிறது. இஃது ஆன்ம அறிவு வளர்ச்சியின் முதல் நிலை.

---

1. தொல். செய்யுளியல் - 80
2] தொல், செய்யுளியல் - 104

சிவபெருமானது அருளிப்பாட்டின் முதல் தோற்றம் ஆதி சத்தி. அவளே தொடக்கநிலையில், ஆன்மாக்களாகிய நமக்கு 'வழிபடு தெய்வம்'[1] ஆகிறாள். நமக்கு ஊழ்வினைப்பயனாகிய பாலை ஊட்டுவதற்காகவும், 'பழிதீர்செல்வ'[1] மாகிய சிவபெரு மானது திருவடி இன்பத்தில் சேர்ப்பதற்காகவும், அவள் ''றைந் திருந்து தொழிற்படும் இடம் நம் 'புறந்தலையில்'[1] சிற்றறிவுத் தானமாகிய சிறுமூளை ஆகும்.

ஒன்றில் இரண்டு எனும் தாதான்மிய நிலையில் சிவபெரு மானைப் பிரியாது எப்போதும் இணைந்திருப்பவள் சிவசத்தி. அவள் தன்னைப்போன்றே ஆன்மாக்கள் அனைத்தையும் ஆண்ட வனுடன் இரண்டில் ஒன்று எனும் அத்துவிதக் கூட்டத்தில் இன்புற்றிருக்கச் செய்கிறாள்.

''தன்னிலைமை மன்னுயிர்கள் சாரத் தரும் சத்தி
பின்ன(ம்) இலான் எங்கள் பிரான்''[2]

என்பார், உமாபதி சிவம். எனவே பக்குவம் அடைகிற போது ஆன்மா பேரின்பத்தானமாகிய பிட்யூட்டரியை நோக்கிச் செலுத்தப் பெறுகிறது.

அவ்வாறு ஆதிசத்தியின் அருளால், சிவபெருமானைக் கூடிப் பேரின்பம் எய்தச் சிரசினுள் ஊர்ந்து செல்லும் ஆன்மா வஞ்சிக் கொடி என மெதுவாகப் மூன்றாம் நாளத்தின் கீழ்ப், படுக்கை யாக ஊர்ந்து சென்று, பிட்யூட்டரி என்ற ஆணைத்தானத்தை அடைகிறது.

ஆன்மாவின் படிமுறை அறிவு வளர்ச்சியில் இது நான்காவது நிலை. இவ்விரண்டு நிலைகளிலும் ஒலிப்பயணம் படுக்கையாகவே அமைகிறது.

மேலும், அடக்கமான அகவல் ஓசைக்கும், முனைப்பு இல்லாத தூங்கல் ஓசைக்கும், ஓசை அமைப்பால் அதிக வேறுபாடு இல்லை. எனவே, தொல்காப்பியர் 'ஆசிரிய நடைத்தே வஞ்சி' என மொழிந்தனர்.

1] தொல். செய்யுளியல் - 106

2] திருவருட்பயன், பதிமுது நிலை - உமாபதிசிவனார்.

அதேபோன்று, மீதானம் தொடங்கி முதுகுத்தண்டு வழி மேலிருந்து கீழாகப் பொழியும் சத்திநிபாத வெண்பா ஓசையும் திருஅருள்முகப்பட்ட ஆன்மாவின் இன்பத் துள்ளலால் மூலாதாரத்திலிருந்து முதுகுத்தண்டு வழிக் கலித்துக் கலித்து மேலே ஏறும் கலிப்பா ஓசையும் இவை இரண்டுமே உயரப்பாங்கில் (Vertical) தோன்றிய நடையின. எனவே தொல்காப்பியர் 'வெண்பா நடைத்தே கலி' என மொழிந்தனர்.

நால்வகைச் சைவ நெறியும் நால்வகைப் பாக்களும்:

இவ்வாறு ஆன்மா, தொண்டு (சரியை) நெறியிலே சிவபெருமானை அகவி அழைத்து, மகன்மை (கிரியை) நெறியிலே சிவசத்தியின் தூய வெள்ளிய அருள்மழைப் பொழிவில் திளைத்துத், தோழமை (யோக) நெறியிலே கலித்துக் கலித்து மேலே ஏறி,

அன்பு (ஞான) நெறியிலே, 'படுக்கை'யில் 'தூங்கு'ம் 'வஞ்சி' யாகிறது.

படுக்கை என்பது, ஆன்மா சிரசினுள் மூன்றாம் நாளத்திற்குக் கீழே ஊர்ந்து செல்லுகிற 'சுரவழி (Horizontal) அமைப்பு' எனவும், 'பேரின்பப்பாதை' எனவும் இருவகையால் கொள்ளப் பெறும்.

தூங்கல் என்பது அப்பேரின்பத்தானமாகிய (பிட்யூட்டரி என்ற) ஆன்ம ஆவுடையாரை நோக்கிய, ஆன்மாவின் பெண்ணியல்புப் பயணம் எனவும் 'தூங்கல் 'ஓசை அமைப்பு' எனவும் இருவகைப் பொருள் பெறும்.

வஞ்சி என்பது 'பாவின் வகை' எனவும், 'கொடி' எனவும், தலைவியாகிய 'ஆன்மா' எனவும் பொருளமைதி பெறும்.

இதிலிருந்து பண்டைய நம் தமிழ்ச்சான்றோர்கள் சைவத்தின் நால்வகை நெறிநின்று செந்தமிழின் நால்வகைப் பாக்களையும் எழிலுறப் பாடிச் சைவத்தின் துணைகொண்டு தமிழை வளர்த்த சீர்மையை அறியலாம்.

அவர்கள் காலம், சைவமும் தமிழும் தழைத்து இனி தோங்கிய பொற்காலமாயிருந்தது. தமிழன்னை சிவமாகிய தந்தையோடு கூடி. இன்புற்றுத் தலை நிமிர்ந்து உலவினாள்.

மீண்டும் அத்தகைய தொரு பொற்காலத்தை, முன்னோர் களது மரபுநெறி நின்று சிந்திப்பது, உண்மைத் தமிழனின் தலையாய கடமையாகும்.

9. மரபியல்'

சைவமும் தமிழும்:

சைவசித்தாந்தத்தின் வினைக்கோட்பாட்டினைப் பண்டைத் தமிழ்ச் சான்றோர்கள் செவ்விதே உணர்ந்திருந்தனர்.

உயிர்களாகிய நமது அறிவு, சிற்றறிவு என்பதையும், அதுவும் முழுமையான விளக்க மின்றி முடங்கிக் கிடக்கிறது என்பதையும் அவர்கள் சிந்தித்திருக்கிறார்கள்.

முடங்கிய அறிவும், முதிர்ந்த வினையும்: நமக்கு உள்ள சிறு அளவினதேயாகிய அறிவினையும் முடக்கி, நமது விருப்பத்தைத் திசை திருப்பி, நம்மைத் தீய புறச்செயல்களில் முடுக்கி விடுவது, ஆணவம் என்ற மூல இருள் மலமாகும்.

ஆணவத்தின் வலிய பிடியுள் சிக்கிய நாம், நம்மை அவ்வாறு சிறைப்படுத்தியுள்ள ஆணவத்தையோ, அதன் தீய தன்மை களையோ சிறிதும் உணர்வதில்லை. ஆணவத்தின் தூண்டுதலால், நாம் தன்முனைப்போடு செயல்படுகிறோம். ஒவ்வொரு செயலும் நமக்கு வினையாகிறது.

ஒவ்வொரு வினைக்கும் ஈடான பயன் உண்டு என்பதையும், அவ்வினைப் பயனை, வினைமுதிர்வுக் காலத்தில், நாமே நுகர்ந்து கழிக்க வேண்டும் என்பதையும், தொடக்கத்தில் வினையைச் செய்யும்போது, நாம் சிறிதும் சிந்திப்பதில்லை.

''தொன்று தொட்ட நெறியினை மயங்காது உரைப்பது

வாழ்வின் குறிக்கோள்: வினைகளை நுகர்ந்து கழித்தலும் அறிவு (மெய்ப்பொருள்) விளக்கம் பெறுதலுமே நமது இந்த மானுட வாழ்வின் குறிக்கோள் என்ற சைவக் கொள்கையில் பண்டைய நம் முன்னோர்களுக்கு உள்ளார்ந்த பிடிப்பு, இருந்திருக்கிறது.

ஆ. வினைநீக்கமும் அறிவு விளக்கமும்:

தொல்காப்பியரது மரபியல் நூற்பாக்களில் ஒன்று இக் கருத்தினைத் தெளிவாக்குகின்றது.

> ''வினையின் நீங்கி, விளங்கிய அறிவின்
> முனைவன் கண்டது முதல்நூல் ஆகும்''[1]

கருத்து: உயிர்களாகிய நம்மை வினைகளும், அறியாமை இருளும் (ஆணவமும்) பற்றிக் கொண்டிருப்பதையும்,

அவை நீங்கினால்தான், நாம் கூர்த்த மதியினையுடைய நுண்மாண் நுழை புலத்தினர் ஆவோம் என்பதையும்,

மெய்ப் பொருள் விளக்கத்தால் நாம் அப்பொழுது உருவாக்குகிற நூல், முதல் நூல் என உலகத்தவரால் ஏற்றுக் கொள்ளத் தக்க தகுதியுடையதாக அமையும் என்பதையும்,

தொல்காப்பியரது இந்த நூற்பா உணர்த்தி நிற்கிறது.

ஐம்பூதக் கலப்பு:

இவ்வாறு, வினை நுகர்ச்சி, பொருள் ஈட்டம் இவற்றிற் காகவே ஐந்து பெரும் பூதங்களாலான இந்த உடம்பு, உலகம் முதலியன நமக்காகப் படைத்து அருளப் பெற்றன என்பது சைவக் கொள்கை.

அவ்வாறு உடம்பினைப் பெற்ற உயிர், எத்தகைய அறி வினையும் உடம்பினையும் பெற்றிருக்கிறதோ அதற்கேற்ப

---

1) தொல்காப்பியம், மரபியல் - 96

வினைப்பயன்களை (சுவைகளை) நுகரும்; இம்மூன்று நிலைகளைக் கொண்டு அந்த உயிர் உயர்திணையைச் சேர்ந்ததா? அல்லது, உயர்வு அல்லாத (அஃறிணை) திணையைச் சேர்ந்ததா? என்பதை நிர்ணயிக்க வேண்டும் எனத் தொல்காப்பியர் ஒரு நூற்பா மூலம் அறிவுறுத்துகிறார்.

நிலம் நீர் தீவளி விசும்போ(டு) ஐந்தும்
கலந்த மயக்கம் உலகம் ஆதலின்
இருதிணை ஐம்பால் இயல்நெறி வழாஅமைத்
திரிவில் சொல்லொடு தழாஅல் வேண்டும்[1]

ஐம்பூதச் சேர்க்கையாலான இந்த உலகத்தைப் போன்று நமது உடலும் ஐம்பூதங்களால் ஆனதே.

இவை மாயையின் வெளிப்பாடு என்பதும் நமக்கு மயக்கத்தினையும் தெளிவினையும் விரவிக் கலந்து ஊட்டுதல் மாயையின் இயல்பு என்பதும் சைவ சித்தாந்தம்.

நம்மை ஆணவ இருள் கவ்விப் பிணித்திருக்கிறது. அவ்விருள் தேய்ந்து, சிவசூரியச் செங்கதிர்களால் அகவாழ்வு ஒளிமயமாக வேண்டும். அவ்வாறு நமது உள்ளத்திற்குச் சிவசூரியக் கதிர்களால் விடிவு நேரும் வரை, உதவுகிற சிறுவிளக்குப் போன்றதே, மாயையினாலான நமது இந்த உடல் உலகம் முதலியன.

உடல்நோய் நம்மைப் பெரிதும் துன்புறுத்தும் போது 'முதல் உதவி' போன்றதோர் ஆறுதல் மருந்தாக வைத்தியர் கொடுப்பது மயக்க மருந்து.

அதுபோல, மல பந்தத்தினாலான நமது பிறவிப் பெருநோய்க்கு, ஆறுதல் மருந்தாக — அறிவு விளக்கமாக முதற்கண் நமக்கு வைத்தியநாதன் யாத்தருளிய செய்யுளே இந்த் உடல் உலகம் முதலிய இடைக்கால நிவாரணங்கள்.

கலந்த மயக்கம்: நிலம் முதலிய ஐந்தும் கலந்தது என்றும், மாயையின் இயல்பான மயக்கமும் தெளிவும் விரவிக் கலந்தது என்றும் பொருள் கொள்ளலாம்.

---

1) தொல் மரபியல் - 91

வினையின் நீங்கி: என்பதனால் அதற்கு முந்திய நிலையில் வினைகள் இருந்தன என்பதும்.

விளங்கிய அறிவின் முனைவன்: என்பதனால் முன்னர் அறிவு, விளங்கப் பெறாமல் முடங்கிக் கிடந்தது என்பதும்.

வினைநீக்கம் அறிவு விளக்கம் 'இவற்றிற்காகவே நிலம் நீர் முதலிய ஐம்பூதங்களாலான இந்த உடல் உலகம் முதலியவற்றை (இறைவன் திருவருளால்) நாம் பெற்றுள்ளோம் என்பதும்,

இந்த வாழ்வில் நிலம்—பொழுது என்ற முப்பத்தொரு மாயாதத்துவங்களை முதற்பொருளாக நாம் கொண்டுள்ளோம் என்பதும், அந்தமிலாப் பேரின்பத்திற்கு வாயிலாகிய ஐந்திணை அக ஒழுக்கத்தில் நாம் தேறினால் உயர்திணையிலும், இன்றேல் அல்திணையிலுமாக வைக்கப்பெறுவோம் என்பதும் பெறப்படும்.

சைவசித்தாந்தமும் இக்கருத்தையே வலியுறுத்துகிறது. 'வினையே நமது பிறப்பு இறப்புக்கும், இன்பதுன்பங்களுக்கும் வித்து. ஆணவம் என்ற அநாதி மலத்தால் நம் அறிவு முடங்கிக் கிடக்கிறது. இவ்விரு மலங்களின் கட்டிலிருந்து விடுபடவே, மாயையிலிருந்து உடல் முதலியன இறைவனால் நமக்கு அருளப் பெற்றன.

மும்மலங்களும் நீங்கப் பெற்றுச் சிவஞானத் தெளிவால் சிவபெருமான் திருவடியில் இன்புற்றிருப்போரே முத்தர்' —என்பன சைவத்தின் தெளிவான முப்பொருள் கொள்கை.

இங்ஙனம் வெவ்வேறு உடம்புகளைப் பெற்ற உயிர்களில் எவை எவை அறிவால் மேம்பட்டவை என்றும், எவை எவை அறிவால் தாழ்ந்தவை என்றும் தொல்காப்பியரே மிக விளக்கமாக, எட்டு நூற்பாக்கள் மூலம் பட்டியலிட்டுக் காட்டுகிறார்.

இ. ஓரறிவு முதல் ஆறறிவு வரை...

ஆணவத்தால் மயங்கிக் கிடக்கும் உயிர்களில் சிலவற்றிற்கு 'ஊறு' என்ற அடிப்படை உணர்வு ஒன்று மட்டுமே இருக்கிறது.

மேல் தோலினைப் பிற பொருள்கள் தொடும்போது, மெய்சிலிர்த்தல், மகிழ்ந்து பூரித்தல், துன்புற்று வாடுதல் போன்ற நிலையை, உறுதல் அல்லது ஊறு என்பர் அறிஞர்.

அத்தகைய ஊறு என்ற ஒரே ஓர் உணர்வு மட்டும் உடைய உயிரினத்தை நிலத்திலும் நீரிலும் ஊன்றி வளர்கின்ற தாவரங்களாக இறைவன் படைத்தருளினார். அவை ஓரறிவு உயிர் என அழைக்கப் படுகின்றன.

ஈரறிவு உயிர்: வேறு சில உயிர்களுக்குத் தோலின் தொடு உணர்வோடு, நாவினால் சுவையினை உணர்தல் என்ற இரண்டாவது உணர்வும் இருக்கிறது. அவற்றிற்கு நாக்கு என்ற பொறியைத் தந்து, சங்கு, சிப்பி, நத்தை போன்ற வடிவ அமைப்புள்ள உடற்கூடுகளை இறைவன் அருளினார். அவை ஈரறிவுயிர்' என அழைக்கப்படுகின்றன.

மூவறிவு உயிர்: மற்றும் சில உயிர்களுக்கு மேலே கூறிய ஊறு, சுவை என்பவற்றோடு, மூக்கினால் நுகர்ந்து நாற்றத்தை உணருகிற மூன்றாவது ஆற்றலும் உண்டு. அவற்றிற்கு மூக்கு என்ற பொறியையும் தந்து, சிதலை எறும்பு போன்ற உடலங்களை இறைவன் அருளினார். தோல், நாக்கு, மூக்கு என்ற மூன்று ஆற்றல்களை உடைய அவ்வுயிர்கள் மூவறிவுயிர் எனப்படுகின்றன.

நாலறிவு உயிர்: இன்னும் சில உயிர்கள், மேற்கூறிய மூன்றுடன், ஒளியைக் காணுதலாகிய ஆற்றலையும் உடையன. நான்கு அறிவுடைய இவற்றிற்குக் கண் என்ற உறுப்பினையும் தந்து நண்டு, தும்பி, வண்டு போன்ற உடலங்களை அருளினார்.

ஐயறிவு உயிர்: ஏனைய சில உயிர்கள், ஊறு சுவை நாற்றம். பார்வை இவற்றோடு ஐந்தாவதாகிய ஒலிகளைக் கேட்கும் அறிவாற்றலையும் உடையன. எனவே காதுகளோடு கூடிய விலங்குகள், பறவைகள் முதலியவற்றின் உடம்புகளை இறைவன் அறிவு உயிர்களுக்கு அருளினார்.

ஆறறிவு உயிர்: ஐயறிவோடும்கூட, அவற்றினும் மேலான உணர்விலுள்ள உயிர்களைப் பார்க்கிறார் இறைவன். அவற்றிற்கு மனம் என்னும் ஆறாவது அறிவினைக் கொடுத்து மனிதர், தேவர், அசுரர் என்ற பெயரோடு உயர்திணைப் பொருள்களாக வாழ வைக்கிறார்.

இவை அனைத்தும் உயிர்களின் அறிவுக்கும், வினைகளுக்கும் ஏற்ப, இறைவன் திருவருளாகிய ஆணையால் கூட்டுவிக்கப் பெறுகின்றன என்பது தொல்காப்பியர் கருத்து.

''ஒன்றே வேறே என்றுஇரு பால்வயின்
ஒன்றி உயர்ந்த பால(து) ஆணையின்...''—[1]

என்ற களவியல் நூற்பா, அவரது கருத்துக்குச் சான்றாக அமைகிறது (பால் என்பது நியதி; ஆணை என்பது திருவருள்; —சிவஞானமாபாடியம்)

தொல்காப்பியர் கூறும் படிமுறைப் பரிணாம அறிவு வளர்ச்சி:

மேற்கண்டவாறு, ஓரறிவுத் தாவர நிலையிலிருந்து இறையருளால் படிப்படியாக முன்னேறி, ஆறறிவு மனித உயிருக்கு நாம் உயர்ந்துள்ள நிலையினைத் தொல்காப்பியர் சில நூற்பாக் களின் மூலம் நமக்கு அறிவுறுத்துகிறார்.

''ஒன்(று)அறி(வு), அதுவே உற்(று)அறி வதுவே,
இரண்(டு)அறி(வு), அதுவே அதனொடு நாவே,
மூன்(று)அறி(வு), அதுவே அவற்றொடு மூக்கே,
நான்(கு)அறி(வு), அதுவே அவற்றொடு கண்ணே,
ஐந்(து)அறி(வு), அதுவே அவற்றொடு செவியே,
ஆ(று) அறி(வு), அதுவே அவற்றொடு மனனே,
நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத் தினரே''
''புல்லும் மரனும் ஓரறி வினவே
பிறவு(ம்) உளவே அக்கிளைப் பிறப்பே''
''நந்தும் முரளும் ஈரறி வினவே
பிறவு(ம்) உளவே அக்கிளைப் பிறப்பே''

---

1. தொல் களவியல் - 90
2. தொல் மரபியல் - 571 - 578

"சிதலும் எறும்பும் மூவறி வினவே
பிறவு(ம்) உளவே அக்கிளைப் பிறப்பே"
"நண்டும் தும்பியும் நான்கறி வினவே
பிறவு(ம்) உளவே அக்கிளைப் பிறப்பே"
"மாவும் புள்ளும் ஐயறி வினவே
பிறவு(ம்) உளவே அக்கிளைப் பிறப்பே"
"மக்கள் தாமே ஆறறி வினவே
பிறவு(ம்) உளவே அக்கிளைப் பிறப்பே"
"ஒருசார் விலங்கு(ம்) உள என மொழிப"

'பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே' என்ற தொடர் மூலமும், 'ஒருசார் விலங்கும் உள' என்ற நூற்பா மூலமும் நாம் அறியத் தக்க சில மேலான உண்மைகள் உள்ளன,

மனம் என்ற ஆறாவது அறிவினைப் பெற்ற மனிதருள்ளும், ஓரறிவு முதல் ஐயறிவு வரையுள்ள குறை மதியாளரும், குறுகிய மனத்தினர்; உடம்பால் மனிதராய அவர்கள், உள்ளப் பண்பால் விலங்குகளை ஒப்பர் என்பது ஒன்று

மற்ற உயிர்களுள்ளும், மனிதர்க்கும் மேலான தெய்வீக உணர்வு உள்ள குரங்கு, யானை, சிலந்தி, ஈ, எறும்பு, மயில், எலி போன்ற மாண்புடைய உயிர்ப் பொருள்களும் உள்ளன என்பது இரண்டாவது.

எனவே உடலால் மனிதராய் உலவுவது மட்டு மன்றி, உள்ளத்தாலும் நாம் தேவரினும் மேலான உயர்ந்த பண்புகளையும் இறைபணியையும் கொண்டு, நம் வாழ்வில் முன்னேற வேண்டும் என்பது கருத்து.

மாணிக்க வாசகர் அறிவுறுத்தும் ஆன்ம வளர்ச்சி:

தொல்காப்பியர் கூறுகிற உயிர்களின் படிமுறை வளர்ச்சியைத் திருவாசகத்தில் மாணிக்க வாசகர் மேலும் தெளிவாகக் கூறுவதைக் காணலாம்.

''புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப் பல்விருக
மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக் கல்லாய்
மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய் வல்அசுர
ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்(து) இளைத்தேன், எம்பெருமான்
மெய்யேஉன் பொன்அடிகள் கண்(டு) இன்று
வீடு(உ)ற்றேன்''[1]

இவ்வாறு புல் பூண்டு, பறவை, விலங்கு எனப் பல பிறப்புகளில் வினைகளை ஈட்டியும், சிலவற்றை நுகர்ந்து கழித்தும், மேலும் புதிது புதிதாக ஈட்டியும், ஒருவாறாக அனுபவ அறிவு சிறிது சிறிதாக வளரப்பெற்று, மனிதன் என்னும் இன்றைய உயர்ந்த நிலையினை நாம் அடைந்திருக்கிறோம்.

அது மட்டுமன்று, மனிதனாகவும் பலப்பல பிறப்புகளைப் பிறந்து இளைத்திருக்கிறோம். இனியாவது பிறப்பினை ஒறுத்துச், சிவபெருமானின் செம்மலர் நோன்தாளைச்[2] சிந்தித்து உய்திபெறுதல் வேண்டும்.

ஈ) சமுதாய அமைப்பு:

இவ்வாறு உயிரினத்தின் தொன்மை தொட்ட தனித்துவத்தை அறிவியலைச் சார்ந்து, தத்துவ அடிப்படையில் மிகத் தெளிவாக விளக்கிய தொல்லாசிரியர்,

மனம் என்ற ஆறாவது அறிவினையும் பெற்ற மனித இனம் தம்முள் மெய்ஞ்ஞான மேம்பட்டால், எவ்வாறு ஐவகைப்படுகின்றது என்பதையும் தெளிவாக்குகிறார்.

மாயேயம் என்பது, மாயை என்ற நுண்ணிய சடஆற்றலின் காரிய வெளிப்பாடு. முற்கூறிய தாவர சங்கமமாகிய அறுவகை உடலங்களும், அவை தத்தம் வினைகளுக்கேற்ப நுகர்தற்கான

1] திருவாசகம் சிவபுராணம் 26-32.
2] சிவஞானபோதம் - 12 - ஆம் சூத்திரம்.

உட்கருவிகளும், அவை தங்கி நின்று நுகர்தற்கான உலகங்களும், அவை அவ்வாறு நுகர்தற்கான நுகர்ச்சிப் பொருள்களும் மாயேயத்துள் அடங்குவன.

நிலையற்ற அப்பொருள்களையே நிலையானவை என மயங்கிச் சார்ந்து நிற்கும் 'உலகியலாரைத் தொல்காப்பியர் புறத்திணையின் கண் வைத்தார்.

ஏனையோரை ஐவகை ஒழுக்கமுடைய நாநிலத்தாராகச் சிறப்பித்தார். அறவாழி அந்தணர், செங்கோல் அரசர், வணிகத்தால் வளம் பெருக்கும் வைசிகர், உழுதுஊண் நிகழ்த்தும் வேளாண் மாந்தர் என நால்வகை வருணத்தாரை உள்ளடக்கியது தொல்காப்பியச் சமுதாயம்[1]. உயிரின் செயற்பாட்டிற்குத் துணைநிற்கும் ஐவகை உடல்களையுப், ஒரு தெங்கின் காயையும் உவமைகளாகக் கொண்டு இந்நாநில ஐந்திணைப் பாகுபாட்டினைச் சிந்திப்போம்.

தேங்காயின் உள்ளே சுவையானதும் சத்துள்ளதுமான இளநீர் உள்ளது நல்ல இன்பப்பயன் தரும் அதனைச் சுற்றி வெண்ணிறப் பருப்புப் பரவிநிற்கிறது பருப்பினைச் சூழ்ந்து மெல்லிய செந்நிறத் தோல் அமைந்திருக்கிறது. பருப்புக்குக் காவலாகக் கடினமானதோர் ஒடு உள்ளது. அதற்கும் வெளியே, தென்னை மரத்தின் உயரத்திலிருந்து கீழே விழும்போது அதிர்வினை ஏற்றுத் தேங்காய் உடைந்து விடாமல் தாங்குகிற நார்த்தொகுதி, ஓட்டின் புறத்தே உள்ளது.

I		II
உடம்பில் உயிரின் தொழிற்பாடு (சிவபோகம்)		தேங்காய் இன்சுவை (முடிந்த முடிவு)
1) ஆனந்தமயகோசம்	ஞானம்	இளநீர்
2) விஞ்ஞானமயகோசம்	யோகம்	வெண்பருப்பு
3) மனோமய கோசம்	கிரியை	செந்தோல்
4) பிராணமய கோசம்	சரியை	கடின ஒடு
5) அன்னமய கோசம்	சரியை	நார்த்தொகுதி

1] தொல் மரபியல் 71,72,78,81

III	IV
ஒழுக்கம்	சமுதாயம்
பரமுத்தி	உண்மைப் பேரின்பம்
(மீதானம்)	(சச்சிதானந்தம்)
குறிஞ்சி	ஞான வடிவான அந்தணர்
முல்லை	நாட்டைக்காக்கும் அரசர்
பாலை	....
மருதம்	பொருள்வளமிக்க வணிகர்
நெய்தல்	உழுது உணவளிக்கும் வேளாளர்

இவ்வாறு ஒன்றை ஒன்று சார்ந்து நின்று இன்பமுடன் வாழுகிற சிறந்ததோர் சமுதாய அமைப்பினைத் தொல் காப்பியர் மரபியலில் சித்திரிக்கக் காணுகிறோம்.

உ) நிறைவுரை:

'தொல்காப்பியம்' என்ற தமது உயரிய நூல் மூலம் தொல் காப்பியர் நமக்கு அறிவுறுத்துகிற அரிய உண்மைகள் யாவை?

இதற்கான விடையை அவருடைய மொழியிலேயே சிந்திப்பது சுவையும் பயனும் நல்குவதாகும்.

தொல்காப்பியர், உயிர்களாகிய நம்மைப் பார்த்துப் பேசுகிறார்; அவருடைய கருத்தாழம் மிக்க அறிவுரைகளை இப்பொழுது செவிமடுப்போம்

''மனம் என்ற ஆறாவது அறிவு படைத்த ஏ, மனிதனே, நீ அறிந்து தெளிய வேண்டிய உண்மைகள் ஏராளம், ஏராளம்.

உயிர்களுக்கு இயல்பாக உள்ள அறியும் ஆற்றலை 'அறிவு' எனக் கூறுகிறோம். இந்த அறிவு ஒவ்வொரு நொடியும் வளர்ந்து கொண்டே இருக்கிறது.

தொடு உணர்வு என்ற முதலாவது அறிவினை மட்டும் பெற்று, நீ ஒரு காலத்தில் புல், பூண்டு, தாவரம், மரமாய் நின்றாய்.

சற்றே வளர்ந்தாய்; இரண்டாம் அறிவாம் சுவை உணர்வினை உன் நாவின் மூலம் பெற்றாய். பின்னர்,

மூன்றாம் அறிவாம் நுகர்ச்சி ஆற்றலை மூக்கின் மூலம் பெற்று, வளர்ந்தாய், தொடர்ந்து,

நான்காம் அறிவாகிய பார்வை அறிவும் உனக்குக் கண் மூலம் கிடைத்தது. அதிலும் வளர்ந்து,

ஐந்தாவதாகிய செவியின் மூலம், கேட்கும் ஆற்றலையும் பெற்றாய். இவை ஐந்தும் புலன்கள். இவ்வாறு ஐம்புலன் அறிவும் பெற்றிருந்தும் விலங்குத் தன்மையிலிருந்து நீ உயராததால், கீழ்மட்ட உயிராகவே கருதப்பட்டாய்.

"ஒன்(று)அறி(வு) அதுவே உற்(று)அறி(வு) அதுவே..."
தொல், மரபியல் 571

தொடர்ந்த அறிவு வளர்ச்சியில் உன்னிடம் மனம் என்ற ஆறாவது அறிவு தோன்றியது. அறிவு விளக்கம் தருகிற அமைச்சனாகவும்,[1] வழிநடத்திச் செல்லும் தோழியாகவும்[2] மனம் என்ற அவ் உட்கருவி உனக்குத் துணை நிற்கிறது. அதனால் நீ இப்பொழுது உயர்திணைப் பொருளாகிய மனிதனாக உலவுகிறாய்.

உனக்கு அமைந்திருக்கிற இந்த மனித உடம்பு, ஏனைய ஐந்தறிவு வரையுள்ள உயிரினத்துக்கு அமைந்த உடலங்களையும் பிற உலகப் பொருள்களையும் போன்றே, நிலம் நீர் தீ காற்று ஆகாயம் என்ற ஐந்து பூதங்களும் கலந்த ஒரு மயக்க[3] மருந்தே. இவ் உண்மையை நீ இப்போது ஓரளவு அறிகிறாய். அது மட்டுமா? ஐம்பூதச் சேர்க்கையாலான இவ் உலகப் பொருள்களுள் எவை எவை உயர்திணை, எவை எவை உயர்வு அல்லாத திணை (அஃறிணை) என்று பகுத்து உணரும் நல்லபேற்றினையும் இப்பொழுது நீ பெற்றிருக்கிறாய்.

---

1. 'அமைச்சு அரசு ஏய்ப்ப நின்று அஞ்சவத் தைத்தே'
-சிவஞான போதம்
2. தோழி சூழ்தலும் உசாத்துணை நிலைமையிற் பொலிமே. களவியல் 36.
3. நிலம் நீர் தீ . . . மரபியல்-91

ஆயினும் உன்னுடைய இவ்வளவு பெரிய வளர்ச்சியில் முழுமை உள்ளதோ? எனில், 'இல்லை' என்றே துணிந்து கூறலாம்.

பண்டு தொட்ட பயிற்சி காரணமாக, உன்னிலும் கீழான எளிய பொருள்களிலேயே உனது வேட்கை மிகுந்து காணப் படுகிறது.

ஐம்பூதங்களால் ஆன அவற்றின் நிலையாமையை[1] நீ உணர்ந்திருக்க வேண்டும்[2] உன்னையும், உன்னுள் வளர்ந்திருக்கும் அறிவினையும், நீ தெளிவாக உணர்ந்திருக்க வேண்டும்[3]

அறியாமை இருளிலிருந்து உன்னை மீட்டு உனக்கு அறிவு விளக்கம் தந்தருளிய[4] (சிவபெருமான் என்ற) தலைவனது பெருங்கருணைத் திறத்தை நீ உணர்ந்து, அவனிடத்துக் காமம் கொண்டிருக்க வேண்டும்,

ஆனால், நீயோ, காமஞ்சாலா இளையோளாய்-கைக்கிளை மகளாய் — அவன் அன்பொடு அரவணைக்க விரும்பியும், நீ அவன்பால் அன்பிலாப் பேதையாய், — அல்லலுறுகிறாயே! இஃது என்னே உறக்கமோ?[5]

காமம் என்பது இரண்டு வகை: ஒன்று, உலகியல் காமம். ஏனையது இறைவன் பால் காமம்[6].

உலகியல் காமம் என்பது நிலையற்ற சிற்றின்பப் புணர்ச்சிக்கே பெரிதும் வழிவகுப்பதால், ஐம்பெருங் கேடுகளுள் ஒன்று என அறிவுடைய பெருமக்களால் வரையறையோடு ஒறுக்கப் பட்டது மெய்ப் பொருளின் வேறாயது[7] எனச்சுட்டி உணர்த்தப் பெற்றது.

1 காஞ்சித்திணை - தொல் புறத்திணையியல்

2 தத்துவ ரூபம், தத்துவ தரிசனம், தத்துவ சுத்தி

3 ஆன்ம ரூபம், ஆன்ம தரிசனம்

4 ஆன்மசுத்தி, சிவதரிசனம், சிவயோகம்-இவைபற்றி உண்மை விளக்கம் என்ற உமாபதியாரின் சைவஞான நூலில் காண்க

5 திருவெம்பாவை - 7

6 'காமப்பகுதி கடவுளும் வரையார் ஏனோர் பாங்கினும் என்மனார் புலவர்' - தொல் புறத்திணை 23

7 தொல் களவியல் - 2 'ஒன்றே, வேறே என்(று) இரு பால்வயின்'.

இறைவன்பால் காமம் என்பது ஓர் இன்பப் பேரூற்று. அருளாளராலும் பாராட்டப் பெற்றது. மெய்ப் பொருளோடு ஒன்றாயது[1] ஐந்திணை ஒழுக்கம் என அறவோரால் உணர்த்தப் பெற்றது.

இதனை நீ தெளிவாக உணர்ந்திருத்தல் வேண்டும். இறைமைக் காமத்தால் நீ அடைகிற பயன் என்ன? முதலில், நீ அவனது திருவடிகளில், கொழுகொம்பு தழுவிய கொடிபோலப் பின்னிப் பிணைந்து நிற்கிறாய். அவ்வாறு[6] கொடிநிலையில் நிற்கும் உன்னை, அவன் அள்ளி அரவணைத்து மேலேற்றுகிறான் உன்னைப் பிணித்திருந்த ஆணவ மலக்கட்டு அப்பொழுது தளர்கிறது.

நிலையற்ற ஐந்து பூதங்களின் சேர்க்கையால் கட்டப் பெற்ற இந்த மானுடயாக்கையிலிருந்து — கந்திலிருந்து — உன்னை அவன் கட்டவிழ்க்கிறான். நீ உன்னுடைய கந்து அழிக்கப் படுகிறாய். உனது பிறப்பு இறப்புச் சுழற்சிக்கு வித்தாக இருந்த வினைமலம் இப்பொழுது நீங்குகிறது; மாயா மலமும் மறைகிறது.

உன்னிடமிருந்த ஆன்ம நலத்தை ஏற்றுக் கொண்ட அவன் அந்தமிலா அறிவானந்தத்தையன்றோ உனக்கு அருள் பாலித் திருக்கிறான்?

"தந்த(து)உன் தன்னைக் கொண்ட(து)என் தன்னைச்
சங்கரா! ஆர்கொலோ சதுரர்?
அந்த(ம்) ஒன்(று) இல்லா ஆனந்தம் பெற்றேன்
யாதுநீ பெற்ற(து) ஒன்(று) என்பால்?"[2]

தொடர்ந்து அவனுடைய முழுமையான அன்புக்குப் பாத்திரமான நீ அவன் விரும்பி அணியும் வளளி என்ற உயர்ந்த அணிகலன் ஆகிறாய், இப்போது, சிவசத்தி என்ற இறை அருளே உனக்கு உடம்பு ஆகிறது.

---

1 கொடிநிலை, கந்தழி. வள்ளி தொல் புறத் 85
2 திருவாசகம், கோயில்பதிகம் - 10

இவ்வாறு ஆணவம் கன்மம் மாயை என்ற மூன்று மலங்களின் கட்டுக்களிலிருந்து விடுபட்ட நீ, **வினையின் நீங்கி விளங்கிய** அறிவினால் முனைவன்[1] ஆகிறாய். உன்னை ஆசானாக உலகம் ஏற்கிறது. திரு அருளினையே கண்ணாகக் கொண்டு, நீ கண்ட மெய்ப்பொருள் வெளிப்பாடுகளை முதல்நூல் எனச் சான்றோர் ஏற்கின்றனர்.

கடவுளராகிய விநாயகர், சிவன், சத்தி, நடராசர், முருகன் இவர்களை வாழ்த்திய அதே முறையிலேயே உன்னையும் கடவுளரோடு சேர்த்து, உலகம் வாழ்த்திப் போற்றுகிறது.

ஓரறிவுப் பூண்டாயிருந்த நீ, படிமுறையில் இவ்வாறு ஏற்றம் மிகப் பெற்றுக், கடவுள் நிலைக்கு ஓங்கி வளர்ந்த சிறப்பினை, மற்றவர்களும் உய்த்துணரச் செய்வது உனது கடமை. உய்த்து உணர்ந்து, பேரின்பத்தைப் பெற விழைவது, அவர்தம் பொறுப்பு.''

இவ்வாறு, தொல்காப்பியம் என்ற தமது அருள் நூலின் மூலம், உயிர்களாகிய நமக்குத் தொல்லாசிரியர், கடவுள் இன்பத்தை நுகரும் வழிமுறைகளைச் செவ்விதே உணர்த்து கிறார்.

கொம்மை வரிமுலைக் கொம்(பு) அனையாள்[2] கூறனுக்குச்
செம்மை மனத்தால்[3] திருப்பணிகள் செய்வேனுக்(கு)
இம்மை தரும்பயன்[4] இத்தனையும் ஈங்(கு)ஒழிக்கும்[5]
அம்மை[6] குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே.[7]

திருச்சிற்றம்பலம்

---

1 வினையின் நீங்கி விளங்கிய அறிவின் முனைவன் கண்டது முதல் நூலாகும் - தொல் மரபு 96 2 கொம்பனையாள் - உமாதேவி
3 செம்மை மனத்தால் - திருவடி அன்றிப் பிறிதொன்றுய் சிந்தியாத செவ்விய மனத்தால் 4 இம்மை தரும்பயன் - இம்மையில் செய்யப்படுகிற இருவினைகளான ஆகாமிய வினையின் பயன்கள்
5 ஈங்கு ஒழிக்கும் - இங்கேயே தங்குமாறு, ஒடுங்குமாறு செய்யும்
6 அம்மை - சிவப்பேறு, 7 திருவாசகம் 8 : 40 : 10.

சங்க நூல்களில் சைவக்கோட்பாடுகள்

முன்னுரை

சங்க காலத்தைத் தமிழகத்தின் பொற்காலம் என்பர் அறிஞர். தனிப்பெருங் கடவுளாகிய சிவபெருமானே தமிழ்ச் சங்கத்திற்குத் தலைமை வகித்ததாக வரலாறு உண்டு. முருகப் பெருமான் நக்கீரர்க்குத் தமிழ் உணர்த்திய பெருமையும் போற்றி உரைக்கப் பெறுகிறது. இவ்வாறாகச் சைவத்தைச் சார்ந்திருந்தது சங்க காலத் தமிழகம்.

அப்பனாகிய சிவனைச் சார்ந்திருந்தாள், அன்னையாகிய தமிழ்; எனவே தமிழன்னை பொலிவுடன் திகழ்ந்தாள், சிவபெரு மான் திருமுன், சங்கத்தமிழ்ப் புலவர்கள் சைவத்தமிழ் இலக் கியங்களையும் அவற்றிற்கான இலக்கணங்களையும் சமைத் தனர்.

தமிழில், இலக்கு என்பது குறியிடம். அஃது 'இறைவன் திருவடி எய்துதல்' என்ற கொள்கையாகும். இயம் என்பது கொள்கைகளின் தொகுப்பு; எனவே இலக்கியம் என்பது இறைவன் திருவடியில் இன்புற்றிருக்கிற கொள்கைகளின் தொகுப்பு ஆகும். இலக்கணம் என்பது அக்கொள்கையை நிறைவேற்றத் துணைநிற்கும் நெறி முறைகள். எனவே தமிழ் இலக்கண இலக்கியங்கள் சைவசமய மாண்பினை விரிப்பனவாகவே உள்ளன என்பது பொருந்தும்.

பண்டைத்தமிழ் இலக்கியங்கள், அறிவியல் அடிப்படையில் அமைந்தவை; மெய்யறிவின் துணைகொண்டு சைவத்தின் பெருமை பேசுபவை; தந்தையாகிய சிவபெருமானையும், தாயாகிய தமிழன்னையையும் பொன் மஞ்சத்தில் இருத்தி, அவர்தம் பொலிவு கண்டு பூத்து மகிழ்ந்தவை; இம்மை இன்பங்கள், மறுமை நலன்கள், அம்மைப்பேறு என்ற எல்லாச் சிறப்புகளுக்கும் வழிவகுத்தவை.

சங்கத்தமிழ்ச் சான்றோர்கள், நூலறிவோடு நுண்ணறிவும் மிக்கவர்கள். ஆண்டவன் — ஆன்மப் பேரின்பப் புணர்ச்சியை தத்தம் அனுபவ வாயிலாக நுகர்ந்து களித்தவர்கள்.

அவர்கள் நுகர்ந்தது இறைமைப் பேரின்பம்; சச்சிதானந்தப் பேரின்பம்; நிலையான சிவஞானப் பேரின்பம், அதனை இவ்வுலகில் இவ்வுடலின் துணை கொண்டே பெற இயலும் என்பது அவர்களது அனுபவம், 'அந்தமில் சிறப்பின் ஆகிய இன்பம் தன்வயின் வருதலும் வகுத்த பண்பே' என்பர் தொல்காப்பியர். அவ்வுண்மையை நமக்கு உணர்த்திச் சைவநெறிப்படி நிற்கச் செய்து, நம்மையும் பேரின்பத்தில் திளைக்கச் செய்வித்தற்காகவே, பலப்பல அகத்துறைப் பாடல்களை ஆன்றோர்கள் குறிப்பு மொழியில் ஆக்கி அருளினர்; அவற்றில், பொருள் பொதிந்த உருவகங்களையும் வடிவமைத்துப் பாடினர்.

குறிப்பு மொழி இல்லாத பாடல்களை வெற்றுப்பாடல்கள் என அக்காலப் புலவர்கள் மதிப்பீடு செய்தார்கள். இன்று நமக்குக் கிடைத்துள்ள எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண் கீழ்க் கணக்கு முதலிய பண்டைத் தமிழ் இலக்கியங்களில் அகத்துறை நூல்கள் பலவற்றுள்ளும் சிவபெருமானையும், சைவ நெறிகளையும் பற்றிய குறிப்பு மொழிகள் நிறைந்து கிடக்கக் காணலாம்.

சங்கம் மருவிய காலத்தில் தமிழர்கள் வேற்றுச் சமயங்களையும் வெறுத்து ஒதுக்காமல், அண்ணன் தம்பியராக அரவணைத்துச் சென்ற சீர்மையைக் காணுகிறோம். ஆனால் சங்கம் மருவிய காலந்தொட்டு ஆறாம் நூற்றாண்டு வரை சமண சாக்கியர்களின் ஆதிக்கம் தமிழகத்தை அவலத்தில் அழுத்தியிருந்த நிலையை வரலாறுகள் கூறுகின்றன. சைவசமய உயர்கோட்பாடுகளை ஒழித்துக்கட்ட வரிந்துகட்டிக் கொண்டு நின்றன, அப்புறச் சமயங்கள்.

சங்கத்தமிழ் நூல்களுள் கடல் கொள்ள அழிந்தவை பல; அதேபோல் கொள்ளுவிக்கப்பட்டு அழிந்தவையும் பலவாதல் வேண்டும். மாற்றுச் சமயிகளின் காழ்ப்புணர்ச்சி காரணமாகவும், சைவத்தின் பெருமையை அடிச்சுவடு தெரியாமல்

மறைப்பதற்காகவும், தத்தம் சமயங்களைத் தமிழகத்தில் வேரூன்றச் செய்வதற்காகவும் மாற்றுச்சமயிகள் பண்டுதொட்டு இயற்றிய கேடுறு செயல்கள் பலப்பல. அவர்களது தூண்டுதலால் ஆற்றில் எறியப்பட்ட அருந்தமிழ் நூல்களும், அக்கினியில் எரிக்கப்பட்ட அரிய நூல்களும் அளவிடற்கரியன. இடைக்கால வரலாறுகளே இவ்வுண்மைக்குச் சான்று பகர்வனவாக உள்ளன.

இடைக்காலம் ஏழாம் நூற்றாண்டில், சிவநெறி காக்க வந்த திருஞான சம்பந்தரைப் புனல்வாதத்திற்கும் அனல்வாதத்திற்கும் அழைத்தவர்கள், சமணர்கள், அதேபோல், தமிழர்தம் உணர்ச்சி களைத் தூண்டியும், அருளாளர்தம் அறிவினை வினவியும், அப்பாவிகளது அறியாமையைப் பயன்படுத்தியும், அவர்கள் தமிழினத்தை வஞ்சித்துத் தமிழ் நூல்களை அழிக்க முற்பட்டிருக் கின்றனர்.

சிவபெருமான், சிவசத்தி முதலிய சைவக் கடவுளர்தம் பெயர்களை வெளிப்படையாகக் கூறிய நூல்கள் எல்லாம் அழிந்தன, அழிக்கப்பட்டன குறிப்பு மொழியில் கூறப்பட்ட செய்திகள் மாற்றார்க்குப் புரியாததாலோ, எதிர்காலத் தமிழ னுக்குப் புரியாது என்ற கருத்தாலோ, விட்டுவைக்கப்பட்டன.

இவ்வாறு ஆற்றிலும் கடலிலும் நெருப்பிலுமாக அழித்த ஒழிக்கப்பட்ட சைவத்தமிழ் இலக்கியங்கள் ஏராளமானதாகவே இருந்திருக்க வேண்டும். முந்திய அக்காலப் பயிற்சிவயத்தாலோ என்னவோ, இன்றும் கூட அப்பாவித் தமிழர்கள் தம்மிடம் உள்ள அருந்தமிழ் ஏடுகளின் பெருமை உணராது, அவற்றை ஆற்றில் விடுகிற பழக்கம் தொடர்ந்து நிலவிவரக் காணுகிறோம்.

சிவத்தை சார்ந்து நின்றே சங்ககாலத் தமிழர்கள் வாழ்ந் தனர் என்பதற்கு, ஆலமர் கடவுள், திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுள், பிறவாயாக்கைப் பெரியோன், முக்கண்ணன், நீலமணி மிடற்று அண்ணல் போன்ற எத்துணையோ குறியீட்டுச் சொற்கள் சங்கநூல்களிலேயே காணப்பெறுகின்றன. இவை போன்ற இன்னும் எத்துணை சிவப்பெயர்கள் அழிந்துபட்ட நூல்களில் இருந்தன என்பதையும் அறிய இயலவில்லை.

பண்டைத் தமிழ்நூல்கள் பலவற்றுள் வழங்கிய சைவசமயக் கடவுளரின் பெயர்கள், பிறமதத் தெய்வங்களின் பெயர்களாக மாற்றப் பெற்றுச் சைவநூல்களே வேற்றுச் சமய நூல்களாக 'மதமாற்றம்' செய்யப் பட்டு மக்கள் மத்தியிலே பரப்பப் பட்டன.

பேரொளிப் பிழம்பாகிய சிவபெருமானைச் சிவசூரியன் என்றும் அருக்கன் என்றும் அழைப்பது சைவ மரபு. மனித உடலின் சிரசுப்பகுதியைச் சந்திரமண்டலமென்றும் நெஞ்சுப் பகுதியைச் சூரிய மண்டல மென்றும், அடி வயிற்றுப் பகுதியை அக்கினி மண்டலம் என்றும் சிந்தித்து நெஞ்சுத் தானத்தில், சிவபெருமானுக்கு அந்தர்யாக பூசை செய்வது சைவ நெறி இவ்வாறு சைவசமயிகள் வழிபட்டுப் போற்றிய அருக்கன் என்ற சிவசூரியனை, மாற்றுச்சமயிகளில் ஒருசாரார் தமக்குச் சாதகமாக, அருக தேவன் என்ற தலை வனாகக் கொண்டு, பல பண்டைத் தமிழ் நூல்களையும் தமது நூல்களாகக் கால அடைவில் உறுதிப்படுத்தித் தமிழினத்தை வஞ்சித்தார்கள் என்ற கருத்தும், ஆலமர் கடவுள் அசோகவனத்து அருகனாகிச், சைவக் கருவூலங்கள் சமண சாக்கியர்களின் உடைமையாயின என்ற கருத்தும் சிந்தக்கத்தக்கன. எனவே தமது சமயத்தைப் பரப்பும் வெறித்தனமான உள் நோக்கோடு சமணர் சாக்கியர்கள் ஆறாம் நூற்றாண்டுவரை, சைவ நூல்களையும், சைவத்தின் பெருமை பாடிய தமிழ் நூல்களையும், பல்லாற்றா னும் அழித்தும், பெயர்மாற்றங்கள் செய்தும், மொழியாலும் சமயத்தாலும் தம்மை உயர்ந்தோராகப் பொய்த் தோற்றம் காட்டி, அன்று அரசு கட்டிலில இருந்தவர்களையும் தம் ஆதிக்கத்துள் வைத்திருந்தனர் என்பதை வரலாற்று சான்றுகள் மெய்ப்பிக்கின்றன அவற்றுள சில சான்றுகளைக் காண்போம்.

பல்லவ மன்னன் மகேந்திரவர்மன் சமணர்களின் பிடியில் சிக்கி, வடமொழியைத் தனக்கு ஆட்சி மொழியாகக் கொண்டி ருந்தான். சமணத்திலிருந்து சைவத்திற்குத் திரும்பிய வாகீசப் பெருந்தகையை அழித்து ஒழிக்க முற்பட்டான். நீற்றறையில் இட்டும், நச்சுப்பால் ஊட்டியும், யானை கொண்டு இடர மூனைந்தும், கல்லொடு கட்டிக் கடலினுள் பாய்ச்சியும், அவரை அச்சமண வேந்தன் பலவாறு துன்புறுத்தினான். இறுதியில் மெய்ப்பொருள் உணர்ந்தால்; சைவத்தைச சார்ந்தான்.

மதுரைக் கூன்பாண்டியன் சமணத்தைச் சார்ந்து நின்றதால் பாண்டியநாடே சமண ஆதிக்கத்தில் நிலைகுலைந்தது. திருஞான சம்பந்தரும் பல்லாயிரம் சிவனடியாரும் குழுமியிருந்த சைவத் திருமடத்திற்குச் சமணர்கள் தீயிட, மன்னவனே துணை நின்றான்.

சைவ மன்னனாகிய சேரன்செங்குட்டுவனது இளவல், சமணராகத் துறவு பூண்டு இளங்கோ அடிகள் என்ற பெயரொடு 'சிலப்பதிகாரம்' யாத்தனர்.

சீவக சிந்தாமணி என்ற 3 ஆம் நூற்றாண்டுச் சமண நூல் 12-ஆம் நூற்றாண்டுக் குலோத்துங்கச் சோழனையே ஈர்த்திருந்த தென்றால். இடைப்பட்ட காலங்களில், தமிழகத்தில், அதன் செல்வாக்கு எத்துணை வலியதாய் இருந்திருக்க வேண்டும் என்பதை ஒருவாறு ஊகிக்கலாம். இவையே போன்று இன்னும் எத்துணை எத்துணையோ சான்றுகள்; விரிக்கின் பெருகும்.

இவ்வாறு சைவமும், அதனைச் சார்ந்தமையால் வளம் கொழித்த செந்தமிழும், புறச்சமய வெறியர்களால் நலிவுற்றிருந்த காலத்தில்தான், சைவத்தமிழகம் செய்த நற்றவப் பயனால், ஏழாம் நூற்றாண்டில், திருஞான சம்பந்தரும், திருநாவுக்கரசரும் நம்மிடையே தோன்றித் தீந்தமிழ்ப் பனுவல்கள் பல ஆயிரம் பாடித் தலம் தலமாகச் சென்று, தமிழ் மக்களிடையே முடங்கிக் கிடந்த சைவ உணர்வினை மீண்டும் உயிர்ப்பித்து எழுப்பிச் சைவமும் தமிழும் தழைத்து இனிதோங்க அருந்தொண்டாற்றினர்.

பிற்காலம்; அடுத்துச், சங்கநூல்களுக்குச் சொற்பொருள் கண்ட பிற்கால உரையாசிரியர்கள், அவற்றில் ஆழப்பொதிந்து கிடக்கும் சைவ சித்தாந்த உட்கிடையை அகழ்ந்து, உணர்ந்து வெளிப்படுத்தாமை இடைக்காலத் தமிழகத்தின் அவலத்திற்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

அண்மைக்காலம்; அண்மைக் காலத்தில் வாலையானந்தர் போன்ற அருளாளர்களால் (திருக்குறளில் சைவம் முதலிய அரிய

நூல்களின் மூலம்) சங்கத்துக்கும் சைவத்துக்கும் இருந்த நெருங்கிய உறவு வெளிக் கொணரப்பட்டிருக்கின்றது. எனினும், உணரத்தக்க உட்கிடைகள் இன்னும் ஏராளமாகவே உள்ளன.

அதோடு, அண்மைக் காலங்களில், தமிழக மண்ணில் சிந்தனைச் சிதறல்கள் சீர்மையின்றிப் பரவி வருவதைக் காணு கிறோம். பல தமிழ்ப் பேராசிரியர்கள், தம்முடைய இயல்பான கீழ்மை அறிவுக்கு ஏற்ப, ஒரு சில மேலைநாட்டு மனோதத்துவ வாதிகளின் தகாத உரைகளை அளவுகோலாக வைத்து, பண் பட்ட சங்ககாலச் சான்றோர்களின் சீலத்தை மாறுகோள்படச் சிந்திக்கும் அவலத்தை என்னென்பது? திருக்குறள் போன்ற உயர்ந்த சைவக் கருவூலங்களையே வேற்றுச் சமய நூல்களாக மதிப்பீடு செய்து, சமயப் பொதுநோக்கு' என்ற தமது போலி மதிப்பினை உயர்த்திக்கொள்ள முனையும் 'தமிழ் முனைவர்கள் 'பெருமை' யைத்தான் என்னென்பது?

நிகழ்காலம்: இன்றைய உலகம், அறிவியல் உலகம்; வேகமாக இயங்கத் துடிக்கும் உலகம். 'அழுத்தத்தைக் கூட்டி, அச்சினை முடுக்கி, நில உலகையே இன்னும் வேகமாகச் சுழலச் செய்ய லாமோ?' எனச் சிந்திக்கிற உலகம்.

'இலக்கியத்தால் என்ன பயன்? ஷேக்ஸ்பியராலும் மில்ட் னாலும் நாம் அடைகிற பயன் என்ன? என்று வினா எழுப்ப முற்படுகிறது, இன்றைய மேலைநாட்டு இளைய சமுதாயம், நமது நாட்டிலோ, பண்டைய தமிழகத்தின் பாரம்பரியப் பெருமையை மட்டும் பேசி, வெற்று அலைகளை வீசித்திரியும் வீணர்கள் ஒருபுறம்; முந்திய நம் பொற்கால வாழ்வினை நம் பாத, நம்பவிரும்பாத இளையோர் இன்னொருபுறம். இவற்றிற்கு இடையே நாம் மேலைநாட்டு இயந்திர வாழ்வுக்காக ஏங்கி அலைகிறோம். அவர்களோ; நம் கீழைநாட்டுத் தத்துவங்களுக் காக மண்டியிட்டு வருகிறார்கள்.

இன்றைய இளைஞர்களின் நாட்டம் முழுமையும் அறிவி யலிலே. நமது பண்டைய முன்னோர்களின் முறைமைகளும் அறிவியலே என்பதை எண்ணும்போது இறும்பூது எய்துகிறோம்.

பணத்தைக் கொண்டு இறை இன்பத்தை நுகர முடியாது; படிப்பைக் கொண்டு பரம்பொருளைக் காண முடியாது என்பன நமது முன்னோர் அறிவுறுத்திய உண்மை. சிவபெருமானது அடியையும் முடியையும் தேடி எய்த்த திருமாலும் பிரமனுமே இதற்குச் சான்று

பூதத்துவ அறிவியலை இன்றைய மனிதன், பார்முழுதும் பரப்பி, அண்டவெளியிலும் விரித்து, நிலைகொள்ளாது தவிக்கிறான். பண்டையத் தமிழனோ, பார் உள்ளிட்ட அண்டங்கள் முழுவதையும் ஓர் அணுவுக்குள் அடக்கி, அகமும் புறமும் மெய்ப்பொருளாகிய இறைவனைக் கண்டு அகமிக மகிழ்ந்திருந்தான், இவ் அரிய உண்மைகளை எல்லாம் இன்றைய இளைய தலைமுறையினர்க்கு, அவர்கள் மனம் கொள்ளுமாறு தெளிவுறுத்துதல் மூத்தோர்தம் கடமை.

எதிர்காலம்: எனவே ஒவ்வொரு தமிழனும் சங்ககாலத் தமிழ் நூல்களில் ஆழப் பொதிந்து கிடக்கும் அரிய சைவ சித்தாந்தக் கருத்துக்களை முறையாகச் சிந்தித்து, அந்நெறி நின்று, சைவத்தையும், தமிழையும் வளர்த்தல் வேண்டும். சிவநெறியைப் பேணினால், நாமும் இறைமைப் பேரின்பத்தில் உய்தி பெறுவோம் என்பது உறுதி.

சிவத்தின் அரவணைப்பில் தமிழன்னை மீண்டும் புத்துயிர் பெற்றுப் பொலிவுடன் திகழ்வாள் என்பதில் ஐயமில்லை.

அத்தகைய பொற்காலம் மீண்டும் தமிழினத்துக்கு வருவதற்கு, நாம் எஞ்ஞான்றும் அம்மையப்பன் திருவடிகளைப் போற்றி நிற்போமாக!

திருச்சிற்றம்பலம்

1. எழுமாடக் கூடல்

ஐங்குறுநூறு என்பது எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று. சங்க காலத்துத் தமிழ்மக்களது அறத்தொடு புணர்ந்த வாழ்வை விதந்தோதுகிறது, இந்நூல்.

இதன்கண் உள்ள ஐந்நூறு பாடல்களுள் மூன்றாம் நூற்றை இயற்றியவர் கபிலர். பாண்டி நந்நாட்டில் திருவாதவூரில் பிறந்தவர், பறம்பு மலையினை ஆண்ட வேள்பாரிக்கு உயிர் நண்பர்; அவனது அவைக்களப் புலவராகவும் திகழ்ந்தவர்; ஆரிய அரசன் பிரகதத்தனுக்குத் தமிழ் அறிவித்தற்காகக் குறிஞ்சிப் பாட்டை இயற்றினார் என்பது வரலாறு.

சிவபெருமான் ஆன்மாக்களைக் குறிஞ்சியில் கூடிப் பேரின்பம் நல்குகிறார் என்பது பண்டைத் தமிழர் அனுபவழி உய்த்துணர்ந்த சைவக் கொள்கை.

தமிழினத்துக்கே தனிப்பெருஞ் செல்வமாகத் திகழ்ந்த உயர்ந்த சைவ சித்தாந்தக் கோட்பாடுகளை மாற்றாரும் மனம் கொள்ளுமாறு, குறிஞ்சி பாடிய கபிலரது மாண்பு பெரிதும் போற்றுதற்கு உரியது.

எனவே, முதற்கண் அவரது குறிஞ்சித்திணைப் பாடல்களில் எவ்வாறு சைவசித்தாந்தத்தின் விழுமிய கருத்துக்கள் பொதிந்து கிடக்கின்றன என்பதைக் காண்போம்.

அன்னாய், வாழி! வேண்டு, அன்னை! நம் ஊர்ப்
பார்ப்பனக் குறுமகப் போலத் தாமும்
குடுமித் தலைய மன்ற —
நெடு மலை நாடன் ஊர்ந்த மாவே'' — 1

இஃது ஐங்குறு நூறு 'குறிஞ்சித்திணை'யில் உள்ள இரண்டாவது பாடல், இதன்கண், பண்டைச் சைவசித்தாந்தத்தின் விழுப்ப மிகு கருத்துக்கள், பலவாறு குறிப்பால் உணர்த்தப் பெறுகின்றன அவற்றை ஈண்டுச் சிந்திப்போம்'

1. ஐங்குறுநூறு - குறிஞ்சி, அன்னாய் வாழிப்பத்து - 2.

தோழி ஒருத்தி, தன் தலைவியிடம், தலைவன்து வருகை யினைக் கண்டு உவந்து சொல்லியதாக அமைகிறது, இப்பாடல். பாடலின் பொருள்: அன்னையே வாழ்க! யான் சொல்லுவதை விருப்பிக் கேட்பாயாக! அன்னையே! நீண்ட மலை நாட்டிற்கு உரிமையுடையவனாகிய தலைவன், உன்னைத் திருமணம் செய்து கொள்ளும் விருப்பத்தோடு, வரைதல் வேண்டித் (தன் உறவினர் யாரையும் அனுப்பாது) தானே குதிரைமீது வருகிறான்.

அந்தக் குதிரையின் உளை மயிர்,[1] நம் ஊரில் உள்ள பார்ப்பனச் சிறுவனது அழகிய குடுமியைப் போன்று உள்ளது' இஃது இப்பாடலின் வெளிப்படையான பொருள்.

அ) பாடல்கூறும் மொத்தச் செய்தியும் இவ்வளவே தானா?

ஆ) சொற்கள் வெற்றடைவாகச் சேர்க்கப்பட்டுள்ளனவா?

இ) இத்தகைய நயமிகுந்த உவமைகள், பிறமொழி இலக்கியங்களில் இல்லையா?

ஈ) இப்பாடலிலிருந்து, சங்க காலத் தமிழுக்கும் தமிழினத்துக்கும் இருந்ததாகக் கருதப்பெறும் விழுப்பம் தான் என்ன?

இவை போன்ற பல ஐயங்களும் வினாக்களும் எழுவது இயல்பே யன்றோ?

இப்பாடலிலுள்ள குடுமி, நெடுமலை நாடன் போன்ற ஒரு சில குறிப்பு மொழிகளைக் கூர்ந்து நோக்கின், பாடலில் பொதிந்துள்ள ஆழ்ந்த உட்பொருள்களின் செறிவும், பற்பல உண்மைகளும் புலனாகும்.

முதலில் குடுமி என்ற சொல்லைப் பற்றிச் சிந்திப்போம். குடுமி என்றால் என்ன? தலையின் மேற்பரப்பில் பரவலாக முளைத்துள்ள மயிரைச், சுற்றிலும் சீராக மழித்து, உச்சியில் உள்ளனவற்றை ஒன்று சேர்த்து, ஒரு மலைக்குவடுபோல அழகாக முடிதல், குடுமி எனப்படும்.

குடுமி வைத்துக் கொள்ளும் பழக்கம், பண்டைத் தமிழகத்தில் பொதுவாகவும், பார்ப்பன இனத்தில் சிறப்பாகவும் இருந்தது என்பதற்கு இஃது ஓர் சான்றாகிறது.

---

1. உளை மயிர்: தலையில் இருகாதுகளுக்கும் இடையில் வளர்ந்து நெற்றியின் மேல் விழுகின்ற மயிர்.

ஏன் குடுமி வைத்துக் கொண்டார்கள்? என்பது பற்றி, அறிவியலைத் துணையாகக் கொண்டு இப்பொழுது சிந்திப் போம்.

நமது உடம்பில், நமது சிந்தனைக்கும் அறிவுக்கும் ஊற்றுக்காலாக அமையும் இடம் எது? அதுவே நமது தலையி லுள்ள மூளை என்ற உறுப்பு ஆகும்.

மூளையின் அமைப்பு:

இஃது, ஏழுதொப்பிகள் ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கப் பெற்ற தோற்றத்தை உடையது[1] என உடற்கூறு வல்லுநர்கள் மொழிகின்றனர்.

இஃது இமயம் போன்ற ஒரு மடிப்புமலையை ஒத்தது எனச் சைவ இலக்கியங்களிலிருந்தும் அறியலாம்.

மூளை என்பது ஒரே பொருள்தான்; என்றாலும் செயற் பாடு கருதி அதனை மூன்று பகுதிகளாகச் சிந்திப்பது வழக்கம். பெருமூளை, சிறுமூளை, நடுமூளை என்ற இந்த மூன்று பகுதி களுள் நாம் எல்லோரும் இப்பொழுது பொதுவாகப் பயன் படுத்துவது, நமது பிடரிப்பகுதியுள்ள சிறுமூளையேயாகும், மிகப் பெரிய அறிவியல் மேதைகளும் கூட, உலக நிகழ்வுகளைப் பற்றித் தமது சிறுமூளையின் துணைகொண்டே சிந்திக்கின்றனர்.

பயன்படு முறை: பொதுவாக, முன்தலையிலுள்ள நமது பெருமூளையை நாம் பயன்படுத்துவது மிகவும் குறைவு.

அடுக்கான ஏழு தொப்பிகள் பலகாலம் பயன்படுத்தப் பெறாது கிடந்தால், ஒன்றில் ஒன்று அழுந்தி, அமிழ்ந்து, ஒரு வெற்றுக் குவியலாவது இயல்பேயன்றோ!

அதே போன்று, பன்னெடுங்காலமாகப் பயனின்றிக் கிடத் தலால், நமது முன்தலையிலுள்ள பெருமூளையும் தகுந்த வளர்ச்சியின்றி ஒருதாமரை மொட்டைப்போல் கூம்பிக் கிடக் கிறது

---

1. இந்நூலின் மூன்றாவது பகுதியான, 'சிவபூமி'யில் விளக்கம் காண்க.
2. I am Joe's Body Book Published by Berkley Reader's Digest 4th edn April 1981

அம்பலும் அலரும்: கூம்பிக் கிடக்கும் மலரின்மொட்டைத் தமிழ் நூல்கள் அம்பல் என அழைக்கும். அம்பலின் இதழ்கள் சற்றே விரிந்தால், அலர் என அழைக்கப்பெறும்

குழந்தையாக இருந்த பெண் ஒருத்தி, சிறுமியாகிறாள். அவள் சிறுமியாகவே இருந்து விட்டால் வாழ்வில் பயன் என்ன?

சிறுமி பூப்பு எய்த வேண்டும்; மனித உணர்வுகள் எழ வேண்டும். திருமணம் கமழவேண்டும். அஃது அன்றோ உண்மை யான வாழ்வு!

அதேபோன்று கூம்பிக் கிடக்கும் மலரின் மொட்டும், அதனுள் ஊறுகிற இனிய தேனும், பெருகுகிற நறுமணமும் வெளித் தோன்றாமல் அடங்கிக் கிடந்தால் யாது பயன்? அம்பல் சிறிது சிறிதாகத் தன் அழகிய இதழ்களை விரித்து அலர்தல் வேண்டும்.

"அலரில் தோன்றும் காமத்து மிகுதி"—1

என்பது தொல்காப்பியம்.

அலர்ந்த தாமரைப்போது ஆண்டவனுக்குப் பூசைப் பொருளாகிறது. அதுபோல, நமது முன்தலையில் வளர்ச்சியின்றி அம்பலாய்க் கூம்பிக்கிடக்கும் பெருமூளையும், அழகுற அலர்ந்து மலர்தல் வேண்டும்.

இவ்வாறு மழுங்கலாய்க் கிடக்கும் இந்த அறிவுத் தானத்தை மலர்ந்து ஒளிவீசச் செய்தல் யாங்ஙனம்?

அறிவியலில் விடை இல்லை;
ஆனால், அருள் வாழ்வில் இடமுண்டு.

தியானத்தின் தனிச்சிறப்பு: சூரியனைக் கண்டு தாமரை இயற்கையாகவே மலர்கின்றது அன்றோ? அதேபோல், சிவ சூரியனாகிய பரம்பொருளின் அருட்கதிர்கள் தீண்டியதும், நம் தலையிலுள்ள இந்த மூளைக் கமலமும் முகிழ்த்து ஆயிரம் இதழ்த் தாமரையாகிச் சிறப்புறுகிறது அதன் மடிப்புகளுக்கு இடையே

1. தொல் பொருளதிகாரம் - 161

தேன் போன்ற அமுதநீர் (CSF) எப்போதும் நிறைந்திருக்கிறது. மடிப்புகளின் மிகுதிக்கு ஏற்பவே மனிதனின் அறிவு மேம்பாடும் இருக்கும் என்பது அறிவியலார் கணிப்பு. பெருமூளை அவ்வாறு முகிழ்த்தற்குச் சிவமூலமந்திர தியானமே பெருந்துணை புரிகிறது.

சிவயோக நெறிநின்று, சிவமூலமந்திரத்தை முறையாகத் தியானிப்பவர்களுக்கு, ஆயிரம் இதழ் கொண்ட அழகியதாமரை மலராகப் பெருமூளை வளர்கிறது.

இறைவன் தொழிற்படத் தொடங்கும் போது, சுத்த மாயையைத் தனக்கு அலுவலகமாக ஆக்கிக் கொள்ளுகிறான் என்பது சித்தாந்தம். நமது தலையில் உள்ள பெருமூளையே, நம் உடம்பில் சுத்த மாயையின் வெளிப்பாடாகும். ஆகவே, அஃதே சிவபெருமான் நம் உடலில் தங்கி, ஐந்தொழில் இயற்றும் இடம் என்பதைக் கூறுவும் வேண்டுமோ?

கூம்பிக்கிடக்கும் தாமரைமொட்டினுள் தேனும் நறுமணமும் முடங்கியே கிடக்கின்றன அது போல், அமிழ்ந்து கிடக்கும் நமது பெருமூளையில் சிவபெருமான் தங்கி இருந்தும் அவர் விளக்க மின்றி மறைந்தே இருக்கிறார்

அலர்ந்து விரிந்த தாமரை மலரில் தேனும் நறுமணமும் வெளிப்பட்டுத் தோன்றி இன்பம் தருகின்றன. அதேபோல் நமது தலையினுள் விரிந்து செழித்த ஆயிரம் இதழ்த் தாமரை' யிலும் சிவபெருமான், சிறப்பாக வெளிப்பட்டு நின்று அருள் புரிகிறார்.

அலர்ந்த தாமரைப் போது, ஆண்டவனுக்குப் பூசைப் பொருளாகிறது. அதேபோலச் சிவத்தியானத்தின் மூலம், சிவனது அருளாலே, அறிவு விளக்கம் பெறுகிற ஆன்மா, ஆயிரம் இதழ்த் தாமரை போன்ற, தனது அறிவுத் தானமாகிய மூளையை, ஆண்டவனது திருவடியில் சேர்ப்பித்தலே கடமை யாகும். இதற்கும் சிவத்தியானம் ஒரு நல்ல கருவியாகும்.

2. திருக்குறள் 1147

ஏழாவது அறிவு: மனம் என்ற ஆறாவது அறிவினைப் பெற்று மனிதனாக வளர்ந்த ஒருவன் சிவத்தியானத்தின் மூலம் சிவஞானம் என்ற ஏழாவது அறிவினைப் பெற்று உயர்நிலை அடைகிறான்.

ஏழுதொப்பிகளும் உரிய வளர்ச்சியைப் பெற்று வானவெளி ஆய்வுக்குப் பயன்படுகிற ரேடார் கருவியைப் போன்று பரசிவத்தின் ஞானப் பேரொளியை எங்கும் பரப்புகின்றன.

இத்தகைய ஞானநெறியில் பண்பட்ட பண்டைத் தமிழர்கள், அவ்வளர்ச்சியின் புறத்தோற்றமாகச் சில வெளிப்படையான குறியீடுகளைக் கொண்டனர் எனத் துணிவதற்கு இடமுண்டு.

பண்டைத் தமிழ் மன்னர்கள், தம் தலையில் குடுமிக்குமேல் பொன்னாலான மணிமுடி சூடிக் கொண்டனர்; வேதசிவாகம விற்பன்னர்கள் உச்சித்தலையில் குடுமி வைத்துக் கொண்டனர்; தவநெறி நிற்கும் ஆன்றோர் சடாமுடி தரித்துக் கொண்டனர்' வைசிய வேளாளர்கள் குடுமி வைத்து தத்தமக்கு உரிய தலைப்பாகைகளையும் அணிந்து கொண்டனர். பொதுவாக அனைவரும் குடுமி வைத்துக் கொண்டமை, ஏழாவது அறிவின் எழுச்சி காரணம் பற்றியே எனலாம்.

பார்ப்பனக் குடுமி; இனி, ஐங்குறுநூறு கூறுகிற செய்தியைச் சிந்திப்போம்.

ஐங்குறு நூற்றுத் தலைவனது குதிரையும், பார்ப்பனச் சிறுவர்தம் குடுமிபோலத் தம்நெற்றியில் உளைமயிர் உடையதாய் இருந்தது என்பது செய்தி.

'கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும்' என்று கூறுகிறோம், கட்டுத்தறியே கவிபாடும் ஆற்றல் உடையது என்றால் கம்பன் எவ்வளவு சிறப்பாகக் கவிபாட வல்லவன் என்பதை அது குறிப்பால் உணர்த்து மன்றோ?

அதேபோல, சிவஞான நெறியில் ஒழுகும் பார்ப்பனச் சிறுவனது குடுமியைப் போன்றது. தலைவன் ஊர்ந்த குதிரையின் உளைமயிர் என்றால்.

அம்மலை நாடனாகிய தலைவனும், குடுமித் தலையன் என்பதும், அவன் சிவஞானத் தெளிவு பெற்றோன் என்பதும் குறிப்பால் பெறப்படும்.

வேறு உறவினர் யாரையும் அனுப்பாது, தானே வரைவு கூடர்வி 'வந்ததிலிருந்து, 'தாயுமிலி தந்தையிலி, தான் தனியன்'1 ஆகிய சிவபெருமானே பரிமேல் அழகனாகிய அத்தலைவன் என்பது அறியப்படும்.

'நெடு மலை நாடன்' என்ற தொடரில் உள்ள மூன்று சொற்களும் அரிய உண்மைகளை உணர்த்துவன. நெடு என்பது ஆதியும் அந்தமும் இல்லாத சிவபெருமானது அநாதி நெடுங் காலத்தையும் மலை என்பது அவரது மலையனைய பேராற் றலையும், நாடன் என்பது பக்குவ ஆன்மாக்களை ஏற்றுக் கொள்ளுதற்காகத் தானே வலிய நாடி வந்து ஆட்கொள்ளும் அவரது அளப்பரிய கருணை வெளிப்பாட்டையும் குறிப்பன வாம். இதற்குத் திருத்தொண்டர் புராணத்தின் மெய்யடியார் கள் வாழ்வே சான்று ஆகும்.

இத்தகைய பீடுடைத் தலைவன் உனக்கு அமைந்தது ஒரு நற்பேறு' எனத் தலைமகளுக்குத் தோழி கூறுவதாக, ஐங்குறு நூற்றுப் பாடல் கருத்து அமைவதைக் காணலாம்.

இலக்கியச் சான்று: ஓர் அருளாளரது கூற்றினை, மற்றோர் அருளாளரது வாக்கின் துணைகொண்டு சிந்திப்பது, உயர்ந்த கருத்து விளக்கமாகவும், செய்தியின் உண்மைக்கு ஒரு நல்ல அரணாகவும் அமையும் என்பது உறுதி.

எனவே ஈண்டுத் திருவாதவூரரது திருவாசகத்திலிருந்து ஒரு சான்று காண்போம்.

"உன்கையில் பிள்ளை உனக்கே அடைக்கல(ம்) என்று
அங்(கு)அப் பழம்சொல் புதுக்கு(ம்)எம் அச்சத்தால்,
எங்கள் பெருமான்! உனக்(கு) ஒன்(று) உரைப்போம் கேள்
எம்கொங்கை நின்அன்ப(ர்) அல்லார் தோள் சேரற்க;

---

1. திருவாசகம், திருச்சாழல்-3.

எம்கை உனக்(கு) அல்லா(து) எப்பணியும் செய்யற்க;
கங்குல் பக(ல்) எம்கண் மற்(று) ஒன்றும் காணற்க;
இங்(கு) இப் பரிசே எமக்(கு) எம்கோன் நல்குதியேல்,
எங்(கு) எழி(ல்) என் ஞாயிறு எமக்(கு) ஏலோர்
எம்பாவாய்''—1

என்பது ஒரு திருவெம்பாவைப் பாடல்.

''திருமணத்தின்போது, மணமகனிடம் தன்மகளைத் தாரை வார்த்துக் கொடுக்கும் அவளது தந்தை, 'இப்பொழுதிருந்து இவள் உமக்கு அடைக்கலம்' எனக்கூறி, அவளை அவனது உடைமை ஆக்குவது பண்டுதொட்ட வழக்கம். ஆகவே, உலகு அனைத்துக்கும் தந்தையாகிய எங்கள் பெருமானே! உன்னிடம் ஒரு வேண்டுகோள் உளது, கேட்டு அருள்வாயாக!

உன்னுடைய திருவடியையே எப்பொழுதும் சிந்தித்து வணங்குகிற மெய்யடியார் ஒருவரே எமக்கு மணாளர் ஆவதற்கும்' அவர் வாயிலாக, இரவும் பகலும் எந்நேரமும் உன்னுடைய திருஉருவினையே நாங்கள் கண்டு மகிழவும், உன் திருவடிக்கே என்ஞான்றும் தொண்டு செய்யவும் திருவருள் புரிவாயாக!

இத்தகைய அரிய பேற்றினை யாம் பெறுவோமாயின், உலகில் வேறுயாது வேண்டும் எங்கட்கு? ஞாயிறு கிழக்கில் உதித்தால் என்ன? திசைமாறி வேறு இடங்களில் உதித்தால் என்ன? நும் திருவருள் நிறைந்திருந்தால், அதுவே போதும்; எமக்குத் தீங்கு ஒன்றும் நேராது'' இவ்வாறாகத் திருவெம் பாவைத் தலைவியர் சிவபெருமானிடம் விண்ணப்பித்துக் கொள்ளுகின்றனர்.

எனவே, 'நல்ல சிவனடியார் தொடர்பும், இடையறாச் சிவசிந்தனையும், உயரிய சிவத்தொண்டுமே, நிலையான பேரின் பத்திற்கு வழிகோலும்' என்ற இத்திருவெம்பாவைக் கருத்தையும் குடிமித் தலையனாகிய உன் தலைவன் நிறைந்த சிவஞான அருளுடையவன்; எனவே உன்னுடைய திருமண வாழ்வு

1. திருவாசகம் திருவெம்பாவை 19.

என்றும் இன்பமுடையதாகும்; இஃது உனக்கு அமைந்த பெரும் பேறு' என்ற ஐங்குறுநூற்றுத் தோழியின் வாழ்த்துரையையும் இணைத்து நோக்குங்கால்,

சங்க காலத் தமிழ்மகனின் பண்பட்ட மனநிலையானது எவ்வளவு மேலோங்கி இருந்தது என்பது தெளிவாக உணர்ந்து இன்புறத் தக்கதாகும்.

ஆ. தோழியின் சிறப்பு

தோழியிற் கூட்டம் என்பது ஐந்திணை அக ஒழுக்கத்தில் ஒருதுறை. அதனை ஒட்டிய குறுந்தொகைப் பாடல் ஒன்றினைக் காண்போம்.

''தலைப்புணைக் கொளினே, தலைப்புணைக் கொள்ளும்,
கடைப்புணைக் கொளினே, கடைப்புணைக் கொள்ளும்,
புணைகை விட்டுப் புனலோ(டு) ஒழுகின்,
ஆண்டும் வருகுவள் போலு(ம்), மாண்ட
மாரிப் பீத்திகத்து நீர்வார் கொழுமுகைச்
செவ்வெரிந் உறழும் கொழுங்கடை மழைக்கண்
துளிதலைத் தலைஇய தளிர்அன் னோளே''[1]

தலைவியோடு ஒத்த மனநிலையுள்ள தோழியைத் தலைவன் அறியுமாறு அமைந்தது இப்பாடல்.

அரும்பத உரை: மாரிப்பித்திகம் — மழைக் காலத்தில் மலரும் பிச்சிப்பூ; இதன் அரும்பு சிவந்திருக்கும். வெரிந்—புறம், முதுகு, பிச்சிப்பூவின் தண்டு, புணை—மிதக்கும் தன்மையுடைய மரத்துண்டு போன்றவை. கொழு—வளமைமிக்க, கொழுத்த. முகை—அரும்பு. உறழும்—போல (வினை உவமம்).

விளக்கவுரை: ஒரு மாரிக்காலத்தில், தலைவியும் தோழியும் ஆற்றில் நீராடிக் கொண்டிருக்கிறார்கள். சிறிது சிறிதாக வெள்ளம் பெருகுகிறது. நீரின் உயரம் மிகுகிறது.

1. குறுந்தொகை - 222 சிறைக்குடி ஆந்தையார்

அப்போது தண்ணீர்ப்பரப்பின் மேல், மரத்துண்டு போன்ற ஒருமிதவை, தோழியின் கைக்கு எட்டுகிறது. தோழி அம்மிதவை யின் நுனிப்பகுதியைப் பற்றுகிறாள், பாதுகாப்பிற்காக. தலை விக்கோ, தோழிதான் சிறந்த வழிகாட்டி, (Friend, Philosopher and Guide). அவளை உயிர்த்தோழி என்பது தான் எத்துணை பொருத்தம்? எனவே தலைவி என்ன செய்கிறாள்? தோழி பற்றிய அதே நுனிப்பகுதியே சிறந்த பாதுகாப்பு எனக் கொண்டு அதனையே தானும் பற்றுகிறாள்.

சிறிது நேரத்தில், நுனிப் பகுதியை விட்டு, மிதவையின் அடிப்பகுதியைத் தோழி பற்றுகிறாள். தலைவியும் அவ்வாறே நுனிப் பகுதியைவிட்டுத் தோழி பற்றுகிற அதே அடிப்பகுதியைத் தானும் பற்றுகிறாள்.

பின்னர் மிதவையை முழுவதுமாக விடுத்துத் தோழி தண்ணீரின் ஊடே நடந்தோ, நீந்தியோ செல்லத் தலைப்படு கிறாள். அப்போது தலைவியும் மிதவையைக் கைவிட்டுத் தோழியைப் பின்பற்றித் தண்ணீரிடையே நடந்து அல்லது நீந்தி, அவள் செல்லுமிடம் தானும் செல்லுகிறாள்.

இவ்வாறு, பாடலின் முதல் நான்கு அடிகளும், தலைவிக்கும் தோழிக்கும் உள்ள நிறைவான மன ஒருமைப்பாட்டைச் சிறப் பாகச் சித்திரிக்கின்றன. அடுத்துப் பின் மூன்று அடிகளில் பித்திகையின் 'தலையும், முதுகும்' உவமிக்கப்படுகின்றன.

பித்திகை அரும்பின் வள்விய மொட்டுப் பகுதியிலிருந்து, அதன் முதுகாகிய சிவந்த காம்பு வழியாக மழைநீர் ஒழுகுகிறது. அப்போத, இயல்பான அதன் செந்நிறம், மழைநீரினால் மேலும் வளமை பெருகியதால், அது ஒளிமிக்கச் செம்மையைப் பெறு கிறது.

பித்திகையின் சிவந்து கொழுவிய அரும்பினையும் சிவந்த தண்டுப் பகுதியையும் போன்று தலைவியினது கடைக்கண் செவ் வரி ஓடியதாய்க் குளிர்ச்சி உடையதாக இருக்கிறது. அவளது பசிய மேனி, மழைத்துளியால் பொலிவுற்ற தளிரைப் போன்று உள்ளது.

இவை இப்பாடலால் அறியப்பெறும் வெளிப்படையான செய்திகள். தலைவியின் மென்மையையும், அவளது செவ்வரி ஓடிய கண்ணின் தண்மையையும், தோழியின்பால் அவளுக்கு உள்ள மன ஒருமைப்பாட்டையும் சிறந்த ஒப்புவமைகள் மூலம், நமக்கு அறிவிக்கிறார் ஆசிரியர் என்பது இப்பாடல் மூலம் அறியக்கூடிய வெளிப்படைக் கருத்தாகும்.

இப்பாடலின் மொத்தக் கருத்தும் இவ்வளவேயாயின், இதனால் ஆன்றோர் அடையும் விழுமிய பயன் யாது? சொல் நயமும், நடை நயமும், மேலோட்டமான கருத்தும் மட்டுமே இருந்தால் போதுமா? உவமையின்பாற் பட்ட உட்கருத்துத் தான் என்ன? இப்பாடலின் மூலம் ஆசிரியர் நமக்கு தெளிவுறுத்த வந்த அரிய செய்திகள் யாவை? என்பன கருதற்பாலன.

தலைவி — யார்?

முதற்கண் இப்பாடலில் உருவகிக்கப்பட்ட தலைவி, தோழி என்பார் யாவர் என்பதைச் சிந்திப்போம்.

ஆன்மாக்களாகிய நாம் அனைவரும் பெண்பாலரே; எனினும் ஓரறிவு முதல் ஆறறிவு வரை பலவகைப்பட்ட உயிர்களாய் உலவுகிறோம். ஆறறிவு மனித இனத்துள்ளும், பண்டுதொட்ட பயிற்சி வயத்தால், ஐந்தறிவு விலங்கின் இயல்புகள் மாறாத மாக்களும் காணப்படுகின்றனர்; அறநெறிப்பட்ட ஒழுகலாறுகளை உடைய மனிதர்களும் மிகுதி; அருள்வயப்பட்டு இறைமைப் பண்பில் மேலோங்கி நிற்கும் தலையாய பெருமக்களும் உள்ளனர். இவ்வாறு ஆறறிவு உயிரினம் பொது நிலையில் மூவகையாகக் காணப்படுகிறது. இது, கால அடைவிலே, கருத்துத் தெளிவால் வளம் பெறுகிற, ஆன்ம அறிவின் படிமுறை வளர்ச்சி யாகும்.

இவர்களுள் இறுதியில் கூறப்பட்ட அருள் வயப்பட்டோரே ஆண்டவன்—ஆன்மப் பேரின்பப் புணர்ச்சிக்குத் தக்க தலைவியர் ஆவர். இவ்வாறு, சிறுபான்மையினரான அவர்களுக்காக வகுக்கப் பட்ட இவ் இலக்கண வரம்புகள், பொது இலக்கணமாக யாவர்க்கும் எல்லா உயிர்களுக்கும் பொருந்துவது யாங்ஙனம்? எனில், கூறுதும். ஆன்மாக்கள் கோடானுகோடியாக உள்ளன

இவை அனைத்தும் படிமுறையில் அறிவு விளக்கம் பெற்று, இறுதியில் இறைவன் திருவடியை அடையும் என்பதும், அங்குப் பேரின்பத்தில் திளைத்திருக்கும் என்பதும் உறுதி. ஆதலால் இப்பேரின்ப இலக்கணம் எல்லா உயிர்களுக்கும் பொதுவாகக் கொள்ளத் தக்கதேயாம்.

தோழி — யார்?

தோழி என்பவள் யார்? என்ற தலைப்பில் முன்னர்ச் சிந்தித்தவற்றை ஈண்டு ஒரு முறை நினைவுக்குக் கொணர்வோம்.

உயிருக்கு உடம்பினை அருளியவர்கள் சிவபெருமானும் சிவசத்தியும். எனவே உயிர்களாகிய நமக்கு அவர்களே தந்தையும் நற்றாயும் ஆவர். உயிருக்கு உடம்பாக நிற்பது மாயை எனும் சடசத்தி. எனவே சிவபெருமானது பரிக்கிரகசத்தியாகிய மாயை, நமக்குச் செவிலித் தாய் ஆவாள். மாயை 36-தத்துவங்களாக விரிந்து பலவாறு பொருந்தி நிற்றலால், உடம்பு, கருவி கரணங்கள், உலகம், நுகர்ச்சி ஆகியவை தோன்றுகின்றன. இந்த 36—தத்துவங்களும் மாயையின் குழந்தைகள்; இவற்றைச் செவிலியின் மக்கள் என்பது சாலும்.

'தோழி தானே, செவிலி மகளே' என்பது தொல்காப்பியம். அதற்கேற்ப, மாயையிலிருந்து வெளிப்பட்ட மனம், புத்தி, அகங்காரம், சித்தம் என்ற நான்கு நுண்கருவிகளும், உயிர்களாகிய நமக்கு, இறைவனால் அருளப்பெற்ற அந்தரங்கத் தோழியராவர்.

அவை எவ்வாறு உயிருக்குத் துணை நிற்கின்றன என்பதை இனிக் காண்போம்.

மனம்: தத்துவ நோக்கில் பார்க்கும்போது மனம் என்பது (Universal Mind என) ஒரே பொருள். மழைநீர் தூய ஒன்றேயாயினும் தான் விழுகிற நிலத்திற்கு ஏற்ப மாறுபடுவதைப் போன்றே, மனத்தின் தொழிற்பாடும் ஒவ்வோர் உயிருக்கும் அதனதன் ஊழ்வினைக்கு ஏற்பவும், தவ வலிமைக்கு ஏற்பவும் வேறுபடுகிறது.

மனத்தை மனிதனுக்கு அமைந்த ஆறாவது அறிவுக் கருவிஎன வகைப்படுத்துவார் தொல்காப்பியர். அதனை உயிர் எனும் அரசனுக்கு அமைந்த ஓர் அமைச்சனாக உருவகிப்பார், மெய் கண்டார். உயிர் எனும் தலைவிக்கு அமைந்த ஒரு தோழியாக வருணிப்பர், பண்டைத் தமிழ்ச் சான்றோர். இக்கருத்தே, குறுந்தொகையின் இப்பாடலில் மேவி நிற்கக் காணலாம், அன்பின் நிலைக்களனாயிருப்பது மனம் என்பதும் மனத்தின் இருப்பிடம் நெஞ்சுப் பகுதியே என்பதும் தத்துவ வழியாக அறியத்தக்க உண்மைகளாம்.

புத்தி: இப்பூமண்டலம் முதலியன, 36—மாயா தத்துவங் களாலான ஒரு நிலையற்ற பொருள் எனமுன்னர்க் 'கண்டோம். இது பற்றிய நிலையற்ற தத்துவ அறிவினில் மூழ்கிக் கிடக்கிறது நமது இன்றைய சிற்றறிவு. இதனைப் புத்தி தத்துவம் என்பர் அறிவு நரம்புகள் (Sensory Nerves) என்ற பெயரால், இது நம் பின்தலைப் பிடரியிலிருந்து ஆட்சி புரிகிறது.

அகங்காரம்: நிலையற்ற இவ்வுலகச் செல்வத்தை வெற்றி கொண்டதால் விளைவது, மமதை. இதனை அகங்கார தத்துவம் என்பர். செயல் நரம்புகள் (Motor Nerves) என்ற பெயரால், புத்திக்கு இணையாக இதுவும் பிடரியிலிருந்தே ஆட்சி செலுத்து கிறது.

சித்தம்: இதனை மூலப்பிரகிருதி என்றும் முக்குணங்களின் கூட்டம் என்றும் கூறுவர். இதனின்றுதான் ஆன்ம தத்துவங்கள் இருபத்து நான்கும் விரிகின்றன. நமது தலையினுள் பெரு மூளைக்குக் கீழே Hypothalamus என்ற பெயருடைய தாமரைக் காம்பினைச் சித்தத்தின் இருப்பிடமாகக் கொள்ளுதல் சாலும். நாம் முன்னர்ப் பல பிறவிகளிலும் ஈட்டியுள்ள வினைத் தொகுதியிலிருந்து, இப்பிறப்பில் நுகர்ந்து கழிக்க வேண்டியவை, பிராரத்த வினைகள் எனப்படும். அவ்வினைகள், சித்தம் என்ற மாயாதத்துவத்தை நிலைக் களனாகக் கொண்டு, நம்தலையினுள் இருந்து ஆட்சி செய்து கொண்டிருக்கின்றன. எனவே சித்தத் தைத் 'தலைவிதி' என்றும் 'வினைகளின் பதிவேடு' என்றும் கூறுதல் பொருந்தும்.

ஆன்மாவுக்கு இச்சை, அறிவு, செயல் எனும் மூவகைத் திறன் உள்ளன. அவற்றுள் ஆன்ம அறிவுக்கும், ஆன்ம செயற் பாட்டிற்கும் நம் பின் தலைப் பிடரியில் உள்ள புத்தி தத்துவமும், அகங்கார தத்துவமும் கருவிகளாக அமைகின்றன. அவை போன்றே ஆன்ம விருப்பத்துக்கு நிலைக்களனாகவும் நுண்ணிய ஒரு கருவி நம் உடம்பில் உள்ளது. அதுவே மனம் என்ற ஆறாவது அறிவுக் கருவியாகும்,

மனத்தின் ஏற்றம்; அறிவுக் கருவிகள் ஐந்து, செயற்கருவி கள் ஐந்து ஆகிய பத்தும் முரட்டுக் குதிரைகள். ஆன்மநலனுக் கேற்ப அக்குதிரைகளை அடக்கி வாழ்க்கைத் தேரை வழிநடத் தும் சாரதி மனமே. ஏதேனும் ஒன்றை எதிர்பார்த்துக் கொண்டே நிற்பது ஆன்ம இயல்பு. எனவே ஆன்மாவைப் ''பார்த்தன்' என்றும் ஆன்மாவுக்காக வாழ்க்கைத் தேரைச் செலுத்துகிற மனத்தைப் 'பார்த்த சாரதி' என்றும் அழைத்தல் பொருந்தும்.

சித்தம், புத்தி, அகங்காரம் என்ற மூன்றன் இயக்கத்தை யும் இயைபு படுத்தி, உரிய கால எல்லை வரை, ஆண்மாவை உலகியல் சூழலில் உழல விட்டும், அதன் பின்னர்ச் சிவத்தின் திருவடி நோக்கித் திசை திருப்பியும் வழி நடத்துவது மனம் என்ற கருவியே.

மனத்தின் ஆற்றல் ஆன்ம அளவோடு நின்று விடுதல் இல்லை; தலைவனாகிய சிவபெருமானிடமும் செல்லுகிறது; நமது சிந்தனை ஓட்டங்களை எல்லாம் உடனுக்குடன் பிரதி பலிப்பதன் மூலம் நமது அறிவின் ஏற்ற இறக்கங்களை எல்லாம் இறைவன் அறியுமாறு செய்கிறது. தலைவன் ஆன்மாவைக் கூடி இன்புறுத்துதற்கு உரிய இடத்தையும் காலத்தையும் கூட அஃது அத்தலைவன்பால் குறிப்பிடும் இயல்பினது.

''தோழியின் முடியும் இடனுமா ருண்டே''[1] என்பது தொல் காப்பியம். இரவுக்குறி, பகற்குறி, சேய்மை, அணிமை என்ற குறிப்பு மொழிகளாலும் இவ் உண்மையை உணரலாம். அணிமை என்பது நெஞ்சினில் நிகழும் மகன்மை நெறி; சேய்மை என்பது சிரசினில் நிகழும் தலைமக்கள் புணர்ச்சியாகிய அன்பு நெறி.

---

1. தொல். களவியல், 3|

ஆன்ம விருப்பம் சிவத்தினின்று புறம்போய்த் திரியின், அவ்வமயங்களில் சிவபெருமானை அவ் உயிரின்பால் அணுகாமல் தடுக்கவல்ல ஓர் அரசப் பிரதிநிதி (Regent) ஆகவும் மனம் இயங்குகிறது.

இவ்வாறு தலைவனை ஆன்மாவின்பால் வருவிப்பதிலும், வாராது தடுப்பதிலும், இடம் குறியிடுதலிலும், இல்வலியுறுத்தலிலும், அனைய பிற அகத்துறை, புறத்துறைச் செயற்பாடுகளிலும் மனத்தின் பங்கு அளப்பரிது.

''சூழ்தலும் உசாத்துணை நிலைமையிற் பொலிவே''[2]

இருவகை வெள்ளம்:

நமது வாழ்வில் ஆற்றுவெள்ளம் இரண்டு வகையாகப் பெருகி வருகிறது ஒன்று இருவினையால் வருகிற காட்டாற்று வெள்ளம். மற்றது சிவபரத்தின் கருணையால் வெளிப்படுகிற திருவருள் வெள்ளம்.

இருவினை ஆற்றில் இடைக்காலப் புணை:

இறைவனால் உயிர்களாகிய நமக்கு இந்த உடல் முதலியன அருளப் பெற்றதன் குறிப்பு என்ன? என்பதை நாம் ஒவ்வொருவரும் சிந்திப்பது கடமையாகும்.

நம்மைப் பிணித்துள்ள ஆணவ மலமும், இருவினை மலமும் நம்மிடமிருந்து நீங்க வேண்டும்; நாம் மெய்ப்பொருள் உண்மையை உணர்தல் வேண்டும்; அதன்மூலம் நிலையான சிவ ஞானப் பேரின்பத்தில் திளைத்திருக்க வேண்டும் என்பனவே அவரது விருப்பமும் குறிக்கோளும்.

உடம்பு, உட்கருவிகள், உலகப் பொருள்கள், நுகர்ச்சி இவற்றின் துணை கொண்டே நாம் இருவினைகளை நுகர்ந்து கழிக்க முடியும். அவ்வாறு நுகர்ந்து கழிக்கும் காலத்திலேயே, ஆணவம் முதலிய மலங்களின் கேடுகளையும், ஆன்ம ஆற்றலின் சிறுமையையும், சிவபரத்தின் பேரருள் திறத்தினையும் உணர

---

1. தொல். 31. 2. தொல். களவியல் - 36

முடியும்; தீயன ஒதுக்கி நல்லன நாடுதற்கு உரிய, மெய்த்தவப் பயிற்சியைப் பெற முடியும்; சிவபரத்தின் திருஅருள் மழைப் பொழிவில் பன்னலமும் பெற்று உய்தி அடைய முடியும்.

எனவே அவ்வாறு நாம் உய்தி அடைதற்குத் துணை நிற்கும் கருவிகளாகத் தனது வைப்பு சத்தியாகிய (Potential Energy) மாயையிலிருந்தே சிவபெருமான் உடம்பு முதலியவற்றை நமக்கு அருளினார்.

இவையே இருவினை ஆற்றோட்டத்தில் நமக்கு ஓர் இடைக் காலப் புணையாக அமைகின்றன. இவற்றுள் கடைப்புணை, தலைப்புணை பற்றிச் சிந்திப்போம்.

கடைப்புணைக் கொள்ளுதல்: நமது இருவினைப் பயன் களாகிய இன்ப, துன்பங்களை, நாமே உரிய காலத்தில் நுகர்ந்து கழித்தல் வேண்டும் என்பது நியதி. எனவே ஒரு கால கட்டம் வரை, நாம் உலகியலில் உழலவேண்டிய நிலை ஏற்படுகிறது. அதற்காகவே, நம் வாழ்வில் ஏற்றத் தாழ்வுகளைச் சீராக அமைக்கிறாள் சிவசத்தி. அப்போது அவள் தன்னை மறைத்துக் கொண்டு, நம் பிடரியில் அமர்ந்து, உயிரையும் மாயாதத்துவங்களையும் இயக்குகிறாள். அவள் அவ்வாறு நம் வாழ்வின் ஓட்டத்தைக் கீழும் மேலுமாக இயக்குவதற்கு ஓர் ஏது வேண்டுமன்றோ? அத்தகைய ஆதார ஏதுவாக இருப்பது, சித்தம் என்ற வினைப்பதிவேடு ஆகும்.

சித்தத்தில் பதிந்த நம் ஊழ்வினைக்கு ஏற்பவே சிவசத்தி மனத்தினைத் தொழிற்படுத்துகிறாள், உலக இன்ப துன்பங் களை நுகர வேண்டிய காலமாயின், மனம் என்ற தோழியை நம் முதுகுத்தண்டினைச் சுற்றிக் கீழ்முகமாகச் செயற்படுத்து கிறாள் மனத்தினைத் தொடர்ந்து, உயிரும் கீழ்நோக்கிய செயற் பாட்டில் இன்ப துன்பங்களை நுகருகிறது.

உயிரின் கீழ்நிலைத் தொழிற்பாடு இது. இதனைக் 'கீழால் அவத்தை' எனச் சாத்திர நூல்களும், 'கடைப்புணைக் கொள்ளு தல்' எனச் சங்க இலக்கியங்களும் சுட்டி உரைக்கும்.

விதியின் விளையாட்டு: தலைவிதிக்கு ஏற்பவே, நமக்குச் சிறுமையில் விருப்பம் மிகுகிறது; நமது சிற்றறிவும் சிறுசெயல்களும் தூண்டப் பெறுகின்றன. எனவே சித்தத்தின் குறிப்புக்கு ஏற்ப, மனத்தின் விருப்பமும், மனத்தின் தூண்டுதலுக்கு ஏற்ப அறிவுக் கருவிகள் செயற்கருவிகளின் தொழிற்பாடும் அமைகின்றன,

ஆக 'இருவினை ஆறு' எனும் உலக இன்பதுன்பங்களில், அவ்வினை நீங்கும் காலம் வரை, நமது மனம் நம்மைப் பெரிதும் அலைமோதச் செய்கிறது.

தலைப்புணைக் கொள்ளுதல்: நல்வினை தீவினை ஆகிய இருவினைகளும் ஒழிந்தபோது, 'தலைவிதி' தன்வலி இழக்கும். அனைத்தும் சிவச்செயல் என மனம் நமக்கு அறிவுறுத்தும். இருவினை ஒப்பு, மலபரிபாகம் என்றவாறு, மாசுகள் ஒவ்வொன்றாகத் தன்வலி இழக்கும் போது, சிவசத்தி தன் திருவருள் மழையால் உயிரை மேலும் தூய்மையுறச் செய்கிறாள். இதனைச் சத்திநிபாதம் என்பர்.

அப்போது ஆன்மா சுத்தவித்தையில் அணைகிறது; சுத்த மாயையினாலான தூய உடம்பையும் தூயமனத்தையும் பெறுகிறது.

ஆற்றின் வெள்ளத்தில் தலைப்புணைக் கொள்ளும் இலக்கியத் தோழியை முன்னர்க் கண்டோம். அவளைப் போன்றே, திருவருள் வெள்ளப் பெருக்கில் சிவபெருமான் திருவடியைப் பற்றுதற்காக, ஆன்மாவை மேல்நோக்கிச் சிரசினுள் செலுத்துகிற தத்துவத்தோழியாக மனம் அமைந்திருக்கக் காணுகிறோம்.

இவ்வாறு சுத்தமாயையினுள் ஆணைத்தானம் என்னும் சுத்தவித்தைக்கண் ஆன்மா அணைவதை, உயிரின் 'மேலால் அவத்தை' எனச் சாத்திர நூல்களும், 'தலைப்புணைக் கொள்ளுதல்' எனச் சங்க இலக்கியங்களும் குறிப்புரைக்கின்றன.

இதனைத் தொல்காப்பியர் போன்ற பண்டைத் தமிழ்ச் சான்றோரிலிருந்து பன்னிரண்டாம் நூற்றாண்டுச் சேக்கிழார் பெருமான் வரை, பலரும் தெளிவாக உணர்ந்திருக்கின்றனர்.

உள்ளுறை உவமம் அமைகின்ற முறைமைபற்றிக் கூறவந்த தொல்காப்பியர்.

"கிழவி சொல்லி(ன்) அவ(ள்)அறி கிளவி;
தோழிக்(கு) ஆயின் நிலம்பெயர்ந்(து) உரையாது;
கிழவோற்(கு) ஆயின் உரனொடு கிளக்கும்
ஏனோர்க்(கு) எல்லாம் இடம்வரை இன்றே"[1]

எனத்தலைவி, தோழி, தலைவன், ஏனையோர் உள்ளுறையர்கப் பேசினராயின், அது முறையே, அவரவர் சிற்றறிவு, நிலம், பேராற்றல் என்ற எல்லைக்கு உட்பட்டதாக இருக்கும் என விளக்குகின்றார்.

மருத நிலமாகிய நம் நெஞ்சுத்தானமே மனத்தின் நிலைக் களன் என முன்னர்க் கண்டோம். எனவே நெஞ்சு அளவில் உணர்வதற்கு மனம் துணைநிற்கிறது என்பது தொல் காப்பியத்திலிருந்து பெறப்படும்.

நனவு, கனவு, உறக்கம், பேருறக்கம், உயிர்ப்படக்கம் என்ற உயிரின் ஐவகைத் தொழிற்பாட்டில், உறக்கம் வரைதான் மனத்தின் துணை அமையும் எனவும், நெஞ்சில் அமைதியுறுதலே உறக்கம் எனவும் சைவசித்தாந்தத் தத்துவங்கள் கூறுகின்றன. இதுவும் தொல்காப்பியக் கருத்தோடு ஒத்ததாகவே இருக்கிறது

எனவே, உயிரின் மேநிலைப் பயணத்தில், மனம் என்ற தோழியின் பொறுப்புகள் சிறிது சிறிதாகச் சித்தம் என்ற தோழியின்பால் சேர்வதை உய்த்துணரலாம்.

'தலைப்புணைக் கொள்ளும்' என்ற இக்குறுந்தொகைப் பாடலின் கருத்தைச், சேக்கிழார் பெருமான் திருத்தொண்டர் புராணம் என்ற தம் அருள் நூலில், சுந்தரரின் திருவுளச் சிறப்பாக, விதந்து ஓதக்காணுகிறோம்;

---

1. தொல் உவமயியல் 26 - 29.

''ஐந்துபேர் அறிவும் கண்களே[1] கொள்ள,
அளப்பரும் கரணங்கள் நான்கும்
சிந்தையே[2] ஆகக், குணம்ஒரு மூன்றும்
திருந்து சாத் துவிகமே[3] ஆக,
இந்துவாழ் சடையான் ஆடும் ஆனந்த
எல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்தபே(ர்) இன்ப வெள்ளத்துள்[4] திளைத்து
மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தார்''—[5]

சுந்தரமூர்த்தி என்ற தலைவி தில்லைக்கூத்தன் என்ற தலைவனிடம் பேரின்பம் துய்ப்பதற்கு, அவருடைய கருவிகரணங்களாகிய தோழியர் எவ்வாறு துணைநின்றன(ர்) என்பதைச் சற்றே விரித்து நோக்குவோம்.

1. **கண்கள்:** ஒவ்வோர் உயிருக்கும் ஐந்து உடம்புகள்[1] (சட்டைகள்) உள்ளன. அவற்றுள் மூன்று உடம்புகளுக்குக் கண், காது, முதலிய உறுப்புகள் செவ்விதே அமைந்துள்ளன. வெளிப்படையாகத் தெரிகிற உடம்பு, சோற்றால் அடித்த பிண்டம் இதிலுள்ள கண்களை ஊனக் கண் என்பர். இந்த உடம்புக்குள் நுண் உடம்பாக இருந்து இந்தச் சோற்று உடம்பைச் செலுத்துவது, மனஉடம்பு இதிலுள்ள கண்களை மனக்கண் என்பர். இந்த மனஉடம்புக்குள், இன்னும் அதி நுண்ணிய உடம்பாக இருந்து, எல்லாவற்றையும் இயக்குவது, பேரின்ப உடம்பு. இதிலுள்ள கண்களை ஞானக்கண் என்பர்.

ஊனக்கண், மனக்கண், ஞானக்கண் என்பன போன்றே, காது, மூக்கு முதலிய பிற உறுப்புகளையும் கொள்ளுதல் வேண்டும்.

ஊனக்கண் உலகியல் சிற்றின்பத்துக்கு உதவுவது ஞானக்கண் இறைமைப் பேரின்பத்தில் திளைக்கச் செய்வது.

மனக்கண் இவ்இருபாலும் உயிர் செல்லுவதற்குத் துணை புரியும் தோழமை உடையது. எனவே மனம் என்பது ஒரு தோழி என்பதும், உயிர்த் தலைவி என்பதும் தெளிவு.

1:1 அன்னமயகோசம், பிராணமயகோசம், மனோமயகோசம், விஞ்ஞானமயகோசம், ஆனந்தமயகோசம் என்பன ஐந்து உடம்புகள்.

ஆண் பெண் குழந்தைகள் அனைவர்க்கும் பால் உறுப்புக்கள் உள்ளன; ஆயினும் உடல் வளர்ந்து தக்க பருவம் எய்தும்போது தானே அவர்களுக்கு அவ்வுறுப்புகள் பற்றிய உணர்வுகள் ஏற்படுகின்றன? அதேபோல் மனிதர்கள் யாவர்க்குமே உள் உடம்புகளும் அவற்றிற்கான உறுப்புகளும் உள்ளன. மனித சிந்தனைகள் உள்முகமாகத் திரும்பி இறைவனை நோக்கி அழுத்தமாகப் பதியும்போது, அவ் அழுத்தத்துக்கு ஏற்பவே, அகக்கண்களும் ஏனைய அக உறுப்புகளும் எழுச்சியுற்றுச் செயல்படுகின்றன.

சேக்கிழாரது அருந்தமிழ்ப் பாடலில், 'ஐந்துபேர்' என்றது, பேரின்ப உடம்பிலுள்ள கண், காது, மூக்கு, நாக்கு, தோல் என்ற ஐந்து அறிவுப் பொறிகளைக் குறிக்கும். மற்ற பொறிகள் எல்லாம் தத்தம் செயல்பாடுகளை நீங்கி ஒடுங்க, ஞானக் கண்களே அச்செயற்பாடுகளையும் மேற்கொண்டன, என்பது கருத்து.

ஒரே பொருளாகிய மின்சார ஆற்றல், நமக்குப் பயன்படும் போது, நேர்மின், எதிர்மின் என இரண்டு கூறுகளாகப் பிரிந்து, பின்னர் இணைந்து, தன் ஆற்றலை வெளிப்படுத்துகிறதன்றோ? அதே போல, ஞானக் கண்ணும் ஆண்கூறு, பெண்கூறு என இரண்டு கூறுகளாகப் பிரிந்து பின்னர்ப் பொருந்தி நிற்கின்றது பெண் கூறாக இருப்பது சுத்தவித்தை என்ற தத்துவம். ஆண் கூறாக இருப்பது சாதாக்கியம் என்ற தத்துவம்; இதனையே நெற்றிக்கண் என அருளாளரும், 'வாள் நுதல்' என வண்டமிழ் இலக்கியங்களும் இயம்புகின்றனர்.

சைவசித்தாந்தம் கூறுகிற இத்தத்துவக் கருத்துக்கள், உடற்கூற்று அறிவியல் அடிப்படையில், உண்மையா? என்ற ஐயம் பலருக்கும் எழுவது இயல்பே. ஆதலால் அறிவியல் சான்று களைக் கொண்டு, அவர்களது ஐயத்தைத் தெளிவித்தல் கடமை யாகிறது.

'ஆணைத்தானம், (ஆக்ஞை ஆதாரம்)' எனச் சாந்திரங் களாலும், 'சுத்தவித்தை' எனச் சைவ ஞான நூல்களாலும்'

'அல்குல்' என ஆன்றவிந்த சங்கச் சான்றோர்களாலும், 'தலைமைச் சுரப்பி, பிட்யூட்டரி' (Pituitary) என இக்கால உடலியல் அறிஞர்களாலும் பெரிதும் பாராட்டப் பெறுகிறது ஒரு தலையாய உறுப்பு. இது நம் தலையினுள் பெருமூளையின் அடிப் பகுதியில் அமைந்துள்ளது. ஒரு மொச்சை விதையின் இரண்டு பக்கப்பருப்புகளைப் போன்று, இஃது இரண்டு கூறுகளாகத் தோற்றம் அளிக்கிறது[1], இதிலிருந்து ஹம் க்ஷம். என்ற இரண்டு நுண்ணிய ஒலிகள் எழுவதாக அருளாளர் கூறுகின்றனர்.

'எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்' என்ற மூது மொழிக்கு ஏற்ப, நுண் ஒலித் தானமாகிய பிட்யூட்டரியின் இரண்டு கூறுகளும் ஆன்மாவுக்குப் பேரின்ப உடம்பில் அமைந்த 'ஞானக் கண்' ஆகும். முத்தி பஞ்சாக்கரத்தை முறையாகத் தியானித்து, இறைமையில் ஊறிய ஆன்மா, கீழேயுள்ள தனது அசுத்தமாயா உடற்பகுதியை விட்டு மேலே எழுந்து, சிரசினுள் சுத்தமாயா தத்துவங்களுள் ஒன்றான சுத்தவித்தை எனும் இப்பகுதியைச் சார்கிறது. அப்போது அத்தூய ஆன்மாவுக்குப், பிட்யூட்டரியின் இந்த இரணடு கூறுகளும் இரண்டு கண்களாக இயங்குகின்றன.

அடுத்து, இந்தப் பிட்யூட்டரிக்கு மேலே, இதனைத் தீண்டிக் கொண்டு, பிறைவடிவ நாளம் ஒன்று விளங்கித் தோன்றுகிறது. இதனை மூன்றாம் நாளம் (Third Ventricle) என உடற்கூற்று அறிவியல் நூல்களும், சாதாக்கிய தத்துவம் எனச் சைவசித்தாந்த சாத்திரங்களும், 'செவிவரை நீண்டகண்' எனச் சங்க இலக்கியங்களும் குறிப்பிடுகின்றன.

முத்தி பஞ்சாக்கரத்தின் ஆற்றலால், இந்த மூன்றாம் நாளம் சிவமாந்தன்மையினைப் பெறுகிறது. இதுவே ஆன்மாவுக்கு மூன்றாவது கண்ணாக, நெற்றிக்கண்ணாக நீண்டு, முற்கூறிய பிட்யூட்டரியை (ஆணைத்தானத்தை)த் தீண்டுகிறது.

ஒரு பாம்பிற்கு அதனுடைய கண்களே செவியாகப் பயன் படுவது போல, ஆணைத்தானத்து இரண்டு கண்களே ஆன்

1 Posterior and Anterior Lobes of the Pituitary.

மாவுக்கு நுண் செவியாகவும் பயன்படுகின்றன' எனவே அவற்றைத் தீண்டி நிற்கும் மூன்றாம் (நாளக்) கண்ணைச் 'செவிவரை நீண்ட கண்' எனப் பண்டைச் சான்றோர் பாராட்டினர் எனலாம்.

இம்மூன்று கண்களின் இணைந்த நோக்காலேயே, உச்சித் தலைக்கு மேலே உள்ள மீதானப் பெருவெளியும், அங்குப் பரம் பொருளின் பெருங்கருணைத் திறனும் விளங்கித் தோன்று கின்றன. அப்போது தில்லைக் கூத்தனின் திருநடனத்தைக் காணவும், திருச்சிலம்பொலியைக் கேட்கவும் இயலும் என்பது சைவ அருளாளர் பலரும் அனுபவ வழிக் கண்டு, நுகர்ந்து, நமக்கும் உணர்த்திய உண்மை.

கரணங்கள் நான்கு என்பது மனம், புத்தி, அகங்காரம். சித்தம் என்ற நான்கு நுண்ணிய உட்கருவிகளைக் குறிக்கும். இவற்றுள் மனம் என்பது உயிருக்கு விருப்பத்தைத் தூண்டுகிற அந்தரங்கத் தோழி. இதயத்தின் கீழே பொருந்தி நிற்பது.

புத்தி என்பது உலகப் பொருள்களை ஆன்மா அறிவதற்குத் துணைநிற்கும் அறிவுக் கருவி. அகங்காரம் என்பது ஆன்மா உலக முகப்பட்டு முனைந்து செயல்படத் துணை நிற்கும் செயற் கருவி. புத்தி அகங்காரம் இரண்டும் பின்தலையில் பிடரியில் அறிவு நரம்புகளாகவும், செயல்நரம்புகளாகவும் இயங்கு கின்றன.

சித்தம் என்பது உயிரின்பால் விருப்பம், அறிவு, செயல் என்ற முற்கூறிய மூன்று ஆற்றல்களும் விளங்கித் தோன்றுவதற்கு ஆதாரமாக உள்ள 'தலைவிதி', முன்தலையில் பெருமூளைக்குக் கீழே 'ஹைப்போதாலமஸ்' என்ற பெயருடைய பகுதியே 'தலை எழுத்து'ப் பொறிக்கப்பட்ட ஆவணக் களரியாகும்.

சிந்தையே ஆக என்பதற்கு விருப்பம், அறிவு, செயல் என்ற மூன்று ஆன்ம ஆற்றல்களும் சித்தத்துள் ஒடுங்கி என்பது பொருள் சைவ அருளாளர்கள் முக்குணங்களின் கூட்டமான மூலப்பிர

கிருதியைச் சித்தம் என மொழிவர். உலக வாழ்வில் உழல வேண்டிய தலைவிதி உடையவர்களுக்கு முக்குணங்களும், மூவகை ஆற்றல்களும் விரிந்து செயல்படும் என்பதும் அசுத்த மாயை யினாலான கருவிகரணங்கள் பெரிதும் துணைநிற்கும் என்பதும் சைவக் கொள்கை.

அனைத்தும் சிவபெருமான் விருப்பப்படி, அவன் அருளால் நிகழ்கின்ற சிவச்செயல் எனத் தெளிவார்க்கு, ஆன்ம ஆற்றல்கள் ஒடுங்கிவிடுகின்றன; புதியவினைகள் பற்றுவதில்லை; அவர்களுக்கு உரிய மூலப்பிரகிருதி (மூலப் பதிவேடு)யும் சிவபெருமான் திருவடியில் சேர்ந்து விடுகிறது.

எனவே, அவர்கள் தத்தம் தவச்சிறப்பிற்கு ஏற்பப் பிரளயா கலர், விஞ்ஞானகலர் என்ற மேநிலை ஆன்மாக்களாகிச் சுத்த மாயையினால் ஆன பேரின்ப உடலையும், கருவிகரணங்களையும் பெறுகின்றனர். (மெய்த் தவத்தால் உயர்ந்த மேலோர்கள் சிவபெருமான் திருவடியிலேயே நிலையான அம்மை இன்பம் துய்க்கும் வண்ணம் சிவசத்தியையே உடம்பாகப் பெறுகின்றனர்).

திருந்து சாத்துவிக குணம்: புலியின் முரட்டு குணத்தையும் எருமையின் தாமச குணத்தையும் இழந்து, ஆன்மா பசுவின் சாத்துவிக குணத்தில் குவிந்து நின்று, கால அடைவில் அப் பசுத்துவமும் சிவத்தை மட்டுமே சார்ந்து விளங்கும்போது, சிவபெருமானது எண்குணங்களும் உயிரின்பால் பதிவதால், அதுகாறும உலகியலை நோக்கியிருந்த சாத்துவிக ஆன்மா, இனி இறைமை நாட்டமுடைய 'திருந்து சாத்துவிக'க் குணமுடையதாகித் தெய்வீகப் பொலிவினைப் பெறுகிறது.

அறிவியல் நோக்கு:

தோழி தலைவி பற்றிய தத்துவ் சிந்தனையாகிய இவ் உண்மைகளை, அறிவியலின் துணை கொண்டும் ஆய்ந்து நிறுவலாம்.

உடலினுள் **ஆறு:** பொதுவாக எல்லா உயிர்களுக்கும் சிரசினுள் 'ஆகாய கங்கை' என்ற புனித ஆறு ஓடுகிறது. அது சிரசினுள் மூளையின் மடிப்புகளிலும், நாளங்களிலும் நிறைந்து, தலை

முழுவதும் பரவிப் பிடரிவழியாக, முதுகுத்தண்டிலும் வழிந்து, வயிற்றின் அடிப்பகுதியை அடைகிறது. எனவே இதனை மூளை - முதுகுத்தண்டு - நீர் (Cerebro Spinal Fluid - CSF) என அறிவியலார் அழைப்பர்.

புணை: உடலினுள் ஓடும் இந்த ஆற்று வெள்ளத்தில், உயிருக்குப் புணையாக இருப்பது எது? மைய நரம்பு மண்டலம் (Central Nervous System). இது மூளையும் முதுகுத்தண்டும் அடங்கிய நரம்புத் தொகுதி.

இதன் மேற்பகுதியிலும் கீழ்ப்பகுதியிலுமாக இரண்டு வசந்த மண்டபங்கள் நமது உடம்பினுள் அமைந்திருக்கின்றன. கீழே, அடிவயிற்றில் இருப்பது, நிலையற்ற உலகியல் சிற்றின்பத்திற் கானது. மேலே தலையில் இருப்பதோ, எல்லையற்ற அறிவானந்தமாகிய இறைமைப் பேரின்பத்திற்குக் களமாவது.

கடைப்புணை: ஓர் அரும்பு எவ்வளவுதான் பருமையாகக் கொழுத்திருந்தாலும், அதன்மேல் விழுகிற மழைநீர், அதனுள் நுழைவதில்லை; மாறாக, அதன் புறப்பகுதியின் மேலே விழுந்து அதன் முதுகு போன்ற தண்டின் வழியாக வழிந்து நிலத்தில் சேருமன்றோ?

அதேபோன்று ஆணவ, கன்ம, மாயா மலங்களால் முடக்கப் பட்டுப் பெருமூளை ஓர் அம்பலாய்க் கூம்பிக் கிடக்கும்போது, மெய்யறிவு தோன்றாது; ஆன்ம அறிவு மூகையாய் இருக்கும்; மனம் உலகியல் சிற்றின்பங்களிலேயே பெரிதும் தலைப்பட்டுக் கீழ் நோக்கி நிற்கும்; மனத்தைத் தொடர்ந்து ஆன்ம அறிவும் கீழ்முகமாக உலகியல் சிற்றின்பங்களையே நாடி அலைந்து கொண்டிருக்கும். அப்போது (CSF என்ற) அமுத வெள்ளமும் முதுகுத்தண்டு வழியாகக் கீழ்நோக்கிப் பாய்ந்து, அடிவயிற்று உறுப்புகள் மூலமாகக் கீழ் நிலையிலேயே வீணாகிக் கொண்டு இருக்கும்.

தலைப்புணை:

மலரின் அரும்பு தன் இதழ்களை விரித்துப் போதாக மலர்ந்து நிற்குங்கால், அம்மலர் இதழ்களின் இடைவெளியில்

ஒரு சில மழைத் துளிகளாவது தங்கி நிற்கிற வாய்ப்பு உள்ள தன்றோ? அதேபோல் சிரசினுள் சித்தம் என்ற தூய மனத் தோழியின் துணை கொண்டு, ஆன்மா சிவமூலமந்திரத்தைத் தியானிக்கும்போது, முன்தலையினுள்ளிருக்கும் பெருமூளை சிறிது சிறிதாக அலர்ந்து ஆயிரம் இதழ்களைக் கொண்ட ஒரு தாமரை மலர்போல் பொலிவுறுகிறது.

CSF என்ற அமுத வெள்ளம், Aqua Duct என்ற நீர்த்தாரை வழியாகப் பெருமளவில் சிரசின் மையப் பகுதியுள் புகுந்து, பெருமூளையின் மடிப்புகளில் நிறைகிறது; சிவமூலமந்திர ஆற்றலைப் பெற்றுத் தாமரை இதழ்களாகிய பெருமூளை மடிப்புகளின் இடைவெளிகளில் தேங்குகிறது.

இப்போது தூயமனமாகிய சித்தமே உயிருக்குத் தோழி. அது புணையாகிய நரம்பு மண்டலத்தின் தலைப் பகுதியைப் பற்றி நிற்கிறது. தோழியைச் சார்ந்து தொழிற்படுகிற தலைவியாகிய ஆன்மாவும் தலையினுள் குவிகிறது; பேரறிவுக் களனாகிய 'ஆக்ஞை' ஆதாரத்தில் அணைகிறது; தன் தலைக்கு மேலே உள்ள மூன்றாம் நாளம் சிவலிங்கத் திருவடியாய்த் தன் தலையினைத் தீண்டிக் கொண்டிருப்பதை உணருகிறது இதனைச் "சித்தத்தினுள்ளே சிவலிங்கம் காட்டி......" என ஔவையார் அகவுவார்; 'திருவடிப் பேறு' எனச் சாத்திரங்கள் போற்றும்.

கடையும் தலையும்: மும்மலக் கட்டுடைய உயிர் வினைவயத்தால் அல்லலுறும்போது, மனம் என்ற தோழி முதுகுத் தண்டின் கடைப்பகுதியைப் புணை எனப் பற்றுவாள். உயிர்த்தலைவியும் அதனையே பற்றி அலைப்புறுவாள். புணையின் கடைப்பகுதி வலிமையற்றே இருக்குமன்றோ? ஆதலால் அதனைப் பற்றும் போது, பிடிப்பிலும் உறுதி இராது, அலைப்புமிகும்.

மெய்த்தவப் பயனால் மேநிலையுறுகிற உயிா இறைஇன்பம் நுகரத் தலைப்படும்போது, தூமனத்தோழி மலர்ந்த தாமரையாகிய தலைப்பகுதியைப் புணையாகக் கொள்ளுவாள்; உயிர்த் தலைவியும் அதனையே பற்றி நின்று பேரின்பம் துய்ப்பாள். புணையின் தலைப்பகுதி உறுதிமிக்கது. ஆதலால் பிடிப்பிலும் உறுதி இருக்கும், அமைதி நிலவும்.

உவமை நயம்: இப்பாடலில், கடைப்புணைக் கொள்ளும் தோழியாகிய மாசுடைய மனமும், அவளைச் சார்ந்தே இயங்குகிற தலைவியாகிய உயிரும், அறிவு கூம்பிய அரும்பின் நிலைக்கு அதாவது, இறைமை உணர்வு எய்தா மூகை நிலைக்கு உவமை ஆயின.

அதேபோல், தலைப்புணைக் கொள்ளும் தோழியாகிய தூய மனமும், அவளைச் சார்ந்த உயிரும், அறிவுப் பூவின் இதழ் விரித்த நிலைக்கு... அதாவது, பூப்பு எய்திக் காமம் சான்ற இறை உணர்வு எய்திய, இன்ப நிலைக்கு... உவமை ஆயின

'புணைகை விட்டுப் புனலோடு ஒழுகுதல்' என்பது எதைக் குறிக்கும்? அஃது உலகியல் பற்றுக்கோடு எனப்படும் மாயா பந்தங்கள் அத்துணையையும் விட்டுத் திருவருளையே உயிர் பற்றுக் கோடாகக் கொள்ளும் பெருநிலையைக் குறிப்பதாகும்.

கொற்றவன்குடி உமாபதி சிவனார்[1] தமது 'நெஞ்சுவிடுதூது' என்னும் சாத்திர நூலில், சிவபெருமானது தசாங்கம் பற்றி எழிலுறப் பாடுகிறார்:

''சிவபெருமானது அருளாகிய ஆறு, மீதானத்திலிருந்து நம் சிரசு என்னும் செழுங்கிரியில் விழுகிறது. அஃது ஓங்கார ஒலியுடன் சிரசினுள் பரந்து விரிந்து, மும்மலக் காட்டினையும் பஞ்சமா பாதகங்களையும், அனைய பிறவற்றையும் அழித்து,

முதுகுத் தண்டுவழி இழிந்து, மூன்று மண்டலத்தும், ஆறு ஆதாரத்தும் செல்லுகிறது. பின்னர் விந்து, நாதம் கடந்து, மீண்டும் மீதானத்துச் சென்று, பரவெளி எங்கும் பரந்து விரிந்து பரம் பொருளுக்கே தஞ்சமாகிறது. அஃதே அந்தமிலா ஆனந்த ஆறு ஆகும்'' என்பது அப்பாடல் பகுதியின் திரண்ட கருத்து.

ஈண்டு, உமாபதியாரின் அருளாகிய ஆறு பரவெளியில் பரம் பொருளுக்கே மீண்டும் தஞ்சமாகும் நிலை, குறுந்தொகையில் கூறிய புணைகை விட்டுப் புனலோடு ஒழுகுதல் என்னும் செயற்பாட்டோடு ஒக்கும்.

நிறைவுரை: இனி, இக்குறுந்தொகைப் பாடலில் நுண்ணிதே பொதிந்து கிடக்கும் சைவ சித்தாந்தக் கருத்துக்களைத் தொகுத்து நோக்குவோம்.

---

1. நெஞ்சுவிடு தூது (38-50) உமாபதி சிவனார்.

மனம் என்னும் தோழியோடு முழுமையாக ஒட்டிநின்று தொழிற்படுகிற உயிர் என்னும் தலைவி,

கலடப்புணைக் கொண்டு, கீழ் நிலைப்பட்டுத், தன் ஊழ் வினைக்கு ஏற்ப, உலகியல் இன்ப துன்பங்களை நுகர்வதும்,

தலைப்புணைக் கொண்டு மேல் நிலைக்கு உயர்ந்து. தன் தவ வலிமைக்கு ஏற்ப, இறைபேரின்பத்தில் திளைப்பதும்,

உடல் என்ற புணையையும், மனம் முதலிய தோழியரையும், உலகம் முதலிய நிலைக்களன்களையும், நுகர்ச்சி போன்ற வினைப்பயன்களையும் நீத்து, இறுதியில்,

தோழியாகிய மனம் முதலிய தத்துவங்கள் மாயையினுள் ஒடுங்குவதைப் போன்று, தலைவியாகிய தானும் முடிந்த முடிவாகத் தலைவனாகிய சிவபெருமான் திருவடியில் ஒடுங்கிப் பேரின்பம் துய்க்கும் என்பதும்,

இக் குறுந்தொகைப் பாடல் மூலம் சிறைக்குடி ஆந்தையார் குறிப்பால் நமக்கு உணர்த்த வந்த செய்திகள் எனலாம். மேலும், கடைப்புணை தலைப்புணை புணைகைவிடுதல் என்றவாறு சைவ சித்தாந்தம் அறிவுறுத்துகிற ஆன்ம அறிவின் படிமுறை வளர்ச்சியையும் எடுத்தியம்புகிறது எனலாம்.

மாண்ட மாரிப் பித்திகத்து — மாரிக்காலத்துப் பெரிதும் காணப்படுகிற பித்திகைப் பூவின், கொழுமுகை, செவ்வெரின் கொழுத்த மொட்டும் சிவந்த தண்டும், உறழும் — ஒளியுடன் விளங்கு வனபோல துளிர்தலைத் தலைஇய -- சத்திநிபாத அருள் மழையில் மூழ்கி நனைந்தமையால், நீர்வார் — திரு அருளாகிய அமுத வெள்ளம் (CSF) தனது வளம் மிகுந்த சிரசுப்பகுதியிலும், செந்நிற முதுகுப் பகுதியிலும் நிறைந்து நிற்க, கொழுங்கடை மழைக்கண் — (அருளார் அமுதத்தால் பெற்ற, செழுமையையும் தண்மையையும் கொண்டு செவ்வரி ஓடிய கடைக் கண்களை உடைய தலைவி, தளிர் அன்னோளே — வனப்புடன் கூடிய பசிய மேனியை உடையவள் ஆவள். முறையான சிவதியானத்தாலும் நிறைவான சத்திநிபாதத் தாலும், தலைவி ஒளியுடன் திகழ்கிறாள் என்பது குறிப்பு

4. மனைமன்றுள் ஆடி

அறிவின் வளர்ச்சியே ஆன்ம எழுச்சிக்குச் சான்று, எப் பொருளிலும் மெய்ப்பொருள் காணும் அறிவே உண்மை அறிவு என்பார் திருவள்ளுவர்.

ஓரறிவுப் புல்பூண்டிலிருந்து படிப்படியாக அறிவு வளரப் பெற்று ஆறறிவு மானுடத்தையும் வென்று, ஒப்புவமை இல்லாத சிவஞானத் தெளிவு பெறுகிறது ஓர் உயிர். தலைவி நிலைக்குத் தகுதி பெற்ற அவ் ஆருயிர் தலைவனாகிய சிவபெருமானைக் கூடிப் பேரின்பத்தில் திளைக்கிறது. ஆயினும் ஒருசமயம் விதி வயத்தால் அத்தலைவி தலைவனைப் பிரிந்து நிற்கவும் நேர்கிறது.

அப்போது தோழி தலைவியிடம் கூறுகிறாள்: "தலைவனைப் பிரிந்து நீ தனித்திருக்க ஆற்றாய்" என்று.

அதற்கு மறுமொழி கூறுகிறாள் தலைவி, ஒருபாடலின் மூலம். மாமலாடன் என்ற ஒரு சங்ககாலப் புலவர் தன்னையே அத் தலைவியாகப் பாவித்துப் பாடிய அப்பாடல் குறுந்தொகை எனும் தொகுப்பு நூலில் 46-ஆவது பாடலாக அமைந்திருக் கிறது.

தலைவன் சிவபெருமான் என்றும் தலைவி ஆருயிர் என்றும் கண்டோம். தோழி என்பாள் யார்? என்ற வினா எழுகிறது. மனம், புத்தி, அகங்காரம், சித்தம் என்பன நுண்ணிதே நமக்கு அமைந்துள்ள அகக்கருவிகள். இவற்றை ஓர் அரசனுக்கு அமைந்த அமைச்சு எனச் சைவஞான நூல்கள் உறவு காட்டும் இவற்றைப் பண்டைய நம் சங்கச் சான்றோர்கள் அகத்துறை இலக்கியங்களாய் அமைக்குங்கால் உயிருக்கு உறுதுணைபுரியும் தோழியர் எனக் கொள்வது மரபாயிற்று.

எனவே மாமலாடரின் பாடலில் தோழியின் கூற்றாக மறைந்து கிடப்பது, தலைவியாகிய உயிரின் மனக்கலக்கம்; தலைவியின் மறுமொழியாக அமைவது, உயிரின் ஆழ்ந்த சிவ

ஞானத் தெளிவு, வேண்டிய வேண்டியாங்கு ஈயவல்ல கருணையாளன், சிவபெருமான், சித்த மலம் அறுவித்துச் சிவமாக்கி ஆள்பவன். அடியாரது தூயசிந்தையைத் தம்பால் ஈர்த்துக் குவித்து அவரைச் சிவமாக்கும் பேரருளாளன்.

மெய்யடியார்களது இதயக் கமலத்தில் வீற்றிருந்து அவர்கள் உள்ளன்போடு செய்யும் அபிடேகம் முதலிய பூசைகளை மனமுவந்து ஏற்றுக் கொள்ளுபவன் அவன். உயிர்களாகிய நமது மனம் வாக்குக் காயம் ஆகிய எல்லாம் கடந்த, புலப்படாப் பொருளாகிய அவன், நல்லன்பர்களது இதயத்தாமரையில் தன் சத்தியோடும், பிள்ளைகளாகிய கணபதி, முருகன் ஆகியோருடனும் எளிவந்த தோற்றத்துடன் அருள்பாலிக்கும் உயர் பண்பினன்.

அவனைப் பிரிந்த போழ்து, அவனது மெய்யடியார்கள் மிகுதியும் வருந்துவர். இவ் உண்மையை அவன் முற்றிலுமாக உணர்வன். எனவே, விண்ணும் மண்ணும் எங்கும் நிறைந்த அவன், எந்த ஒரு வேற்றுப் பகுதிக்குச் சென்றிடினும், அடியேனது துயரத்தை நன்கு அறிவன்; உடன் வருவன். எனவே அவனது பிரிவு எம்மால் ஆற்றியிருக்கற் பாலதே'' என்று தலைவி, மறுமொழி கூறுவதான குறிப்பில் அமைகிறது, இச்சங்கப்பாடல்.

''ஆம்பல் பூவின் சாம்பல் அன்ன
கூம்பிய சிறகர் மனைஉறை குரீஇ
முன்றில் உணங்கல் மாந்தி, மன்றத்(து)
எருவின்நுண் தாது குடைவன ஆடி
இல்இறைப் பள்ளித் தம்பிள்ளையொடு வதியும்
புன்கண் மாலையும் புலம்பும்
இன்றுகொல்? தோழி, அவர் சென்ற நாடே''[1]

பாடலின் திரண்ட கருத்து:

''வாடிய ஆம்பல் மலர் போன்று குவிந்த சிறகுகளை உடைய ஒரு சிட்டுக் குருவி; அது, தான் வாழும் வீட்டின் முற்றத்தில், உலரும் தானியங்களைத் தின்கிறது.

---

1. குறுந்தொகை - 46. (மாமலாடன்)

பின்னர்ப் பொதுமன்றில் உள்ள எருவின் நுண்ணிய பொடியைக் குடைந்து விளையாடுகிறது. வீட்டு இறை இடத்தில், தன்குஞ்சுகளோடு வாழ்கிறது.

இவை உலகம் எங்கணும் காணப்பெறுகிற நடைமுறை நிகழ்ச்சிகளே. பிரிந்த தலைவன் தங்கியுள்ள அந்நாட்டில் மட்டும் இவை நிகழாவோ? பிரிவுத்துயரும் மாலைப்பொழுதும் துன்பம் தருகிற தனிமையும் அங்கு மட்டும் இல்லையோ?

எனவே அவற்றைக் கண்ணுறும் தலைவன், விரைவில் திரும்பி வருவான் என்பது உறுதி; அதுவரை யான் பொறுமை யாக ஆற்றி இருக்கிறேன்'' எனத் தலைவி கூறுவதாக அமை கிறது இப்பாடல்.

காரும் மாலையும் முல்லை; பிரிவின்கண் தலைமக்கள் ஆற்றியிருத்தல் முல்லை நிலத்து உரிமை, என்பது தொல் காப்பியம்.

இனி, இப்பாடலில் ஆழ்ந்த உட்பொருளாக் அமைந்துள்ள குறிப்பு மொழிகளைச் சிந்திப்போம்.

ஈண்டுச் சிவபெருமான் குருவியாகவும், மனம் ஒன்றி வழி பாடியற்றும் மெய்யடியார்களே அக்குருவியின் கூம்பிய சிறகராக வும், அவர்கள் ஆன்மார்த்தமாகத் தம் நெஞ்சுத்தானத்தில் சிவபெருமானுக்குச் செய்யும் திருநீற்று அபிடேகமே 'எருவின் நுண்தாது ஆடி' எனவும், கணபதியும் முருகனும் 'பிள்ளை களாகவும் உருவகம் செய்யப்பெற்றுள்ளனர். அதன் விளக்கத் தைக் காண்போம்.

ஆம்பல் பூவின் சாம்பல் அன்ன கூம்பிய சிறகர்:

இத் தொடரானது, உயிர்களாகிய நமது பரந்து கிடக்கும் அறிவை, ஒருசேரக் குவித்து, முத்தி நெறிக்கு ஆற்றுப் படுத்திப், பேரின்பம் அருள்பவராகிய சிவபெருமானது, ஈசான முகத்தைக் குறிப்பதாயிற்று.

ஐந்து முகக்கடவுள்: சிவபெருமானுக்கு ஐந்து முகங்கள் எனச் சிவாகமங்கள் இயம்புகின்றன. அவற்றின் பெயர்களையும் வண்ணங்களையும், வடிவங்களையும், அவை நோக்கும் திசை களையும், ஆற்றும் தொழில்களையும், நமது உடலில், அவற்றை நாம் உணரும் இடங்களையும், அவை தொழிற்படுத்தும் மண்டலங்களையும் முறையாக நாம் கற்று அறிந்து கொள்ளுதல் வேண்டும்.

எண்	பெயர்	வண்ணம்	நோக்குந்திசை
1	ஈசானம்	முத்துவெள்ளை	மேல்
2	தத்புருஷம்	மஞ்சள்	கிழக்கு
3	அகோரம்	கறுப்பு	தெற்கு
4	வாமதேவம்	சிவப்பு	வடக்கு
5	சத்தியோஜாதம்	வெள்ளை	மேற்கு

வடிவம்	தொழில்	உடலில் தொழிலாற்றும் இடம்	மண்டலங்கள்
குழந்தை	அருளல்	தலை	ஆகாயம்
வாலிபர்	மறைத்தல்	கழுத்து	காற்று
வீரம்	ஒடுக்குதல்	நெஞ்சு	நெருப்பு
பெண்மை	காத்தல்	வயிறு	நீர்
ஆண்பெண் இருமை	படைத்தல்	அடிவயிறு	நிலம்

இவற்றிலிருந்து, ஈசானம் என்பது சிவபெருமானது மேல் நோக்கிய திருமுகம் என்பதும், பழுப்பு (முத்து வெள்ளை)ச் சாம்பல் நிறமுடையது என்பதும், முத்திப் பேரின்பம் அருள வல்லது என்பதும் பெறப்படும். திருவாசகத்தில்,

"பிறந்த பிறப்(பு) அறுக்கும் எங்கள் பெருமான்!
நிறங்கள் ஓர் ஐந்துடையாய்!........"[1]

என்ற சிவபுராணத் தொடர் இதனை உறுதிப்படுத்தும்.

கூம்பிய சிறகர்: மெய்யடியார்களும், சிவகணங்களும் இறைவனை எப்பொழுதும் சூழ்ந்திருப்பர்; சிவபெருமான் என்னும்

1. திருவாசகம், சிவபுராணம் 48,49 ஆவது அடிகள்.

சிட்டுக்குருவிக்கு அவர்கள் சிறகுகளைப் போன்றோர். குருவியின் சிறகுகள் கூம்பிநிற்பது போலவே, சிவனடியார்களது சிந்தைகளும் குவிந்து சிவபெருமானது திருவடியிலேயே ஒன்றி நிற்பன.

பொதுவாக, மனிதமனம் அலைபோதித் திரிவது; நாயாய்ப் பேயாய் அலைவது; எண்ணற்ற சிந்தனைகளுச்கு உறைவிடமாகி எந்த ஒரு நிலையான முடிவுக்கும் வாராமல் தவிப்பது. இத்தகைய மனத்தினால் எவ்விதப் பயனும் இல்லை.

மனம் ஒருங்கே குவிந்து ஒரே நிலையில் ஒருவழிப்பட்டு நின்றால், உயர்ந்த குறிக்கோள்களை எளிதில் அடைய முடியும். அறிவிலும் தெளிவு ஏற்படும்.

அவ்வாறு நமது மனத்தைக் குவித்துச் சிவஞானத் தெளிவினை ஊட்டவல்லவர் சிவபெருமான் ஒருவரே.

> "பப்(பு)அற வீட்டிருந்(து), உணரும்நின் அடியார்
> பந்தணை வந்தறுத்தார் ... "[1]

என்ற திருவாசகத் திருப்பள்ளி எழுச்சி, அடியவர்களது மனம் இயல்பாகப் பரந்து அலைவதையும், அதனைக் கட்டுப்படுத்திக் குவிந்த உள்ளத்தராக்கி, அவரை வீட்டு நெறியில் தலைப்படச் செய்பவர் சிவபெருமான் என்பதையும் உணர்த்துவதாயிற்று.

மனை உறை குரீஇ என்பது வீட்டினுள் வாழும் குருவி என்னும் பொருளதாய், ஈண்டு மெய்யடியார்தம் இதய வீட்டில் வாழும் சிவபெருமானைக் குறிக்கும்.

உயிருக்குள் உயிராய் உறைந்து நின்று, நம்மை எல்லாம் இயக்குபவர் சிவபெருமான். அவருக்கு உடம்பாக அமைந்தன, எண்வகைப் பொருள்கள். அவற்றை அட்டமூர்த்தம் என்பர். அவற்றுள் உயிரும் ஒன்று. நிலம், நீர், தீ, வளி, வெளி என்ற ஐந்து பூதங்களும், சூரியன், சந்திரன் என்ற இரு சுடர்களும் பிற மூர்த்தங்கள்.

---

1. திருப்பள்ளி எழுச்சி: 8:20:6

ஐந்து பூதங்களால் ஆனதே நமது உடம்பும். சிவபெருமானது மூன்று கண்களைப் போலவே சூரிய மண்டலம், சந்திரமண்டலம் அக்கினி மண்டலம் என்ற மூன்று மண்டலங்களைக் கொண்டது இந்த உடம்பு. (எனவே நமது இந்த ஊன்உடம்பையும் தமக்கு உறைவிடமாகக் கொண்டவர் சிவபெருமான் என்பது தெளிவு). இதனைச்,

"சிந்தையே கோயில் கொண்டஎம் பெருமான்
திருப்பெருந் துறையுறை சிவனே!
எந்தையே! ஈசா! உடலிடம் கொண்டாய்;
யான் இதற்(கு) இலன்ஓர்கைம் மாறே!"[1]

என்ற மாணிக்க வாசகரது திருவாசகத்தின் மூலமும் அறிந்து இன்புறலாம்.

முன்றில்: என்பது இல்முன், வீட்டு முற்றம், தலைவாயில் எனப் பொருள் உடையது. ஈண்டு நம் மனித உடம்பின் முன் தலைப் பகுதியை இது குறிக்கும்.

அண்டத் தொகுப்பினைப் போலவே, நமது உடலாகிய பிண்டமும், சுத்தமாயை, அசுத்த மாயை என்ற இரு மாயா தத்துவங்களால் ஆக்கப்பெற்றது இவ் உண்மையை, நக்கீரர், திருமுருகாற்றுப்படை என்னும் தமது நூலில்,

'இருபேர் உருவின் ஒருபேர்யாக்கை'[2]

எனச் சூரபதுமனது யாக்கையின்மேல் வைத்துக் குறிப்பிடுவார்.

உலகினை இயக்கும்போது, சிவதத்துவம் முதலிய ஐந்து சுத்தமாயா தத்துவங்களையும், சிவபெருமான், தமக்குத் தொழிலகமாகக் கொள்ளுகிறார். இது, நம் உடம்பின் முன் தலைப் பகுதி.

உயிர்களாகிய நாம் கருவினுள் உருபெறும் போது, முன் தலை உச்சிக்குழி வழியாக, உயிர் உடலோடு சேர்க்கப்பெறுகிறது

---

1. கோயில் திருப்பதிகம்: 8:22:10   2. திருமுருகாற்றுப்படை நக்கீரர்

சிவஞானத் தெளிவு பெற்ற உயிர், இறுதியில் பரமுத்தி யாகிய வீடுபேற்றினை எய்துதற்கு, இத் தலையின் உச்சி வழி யாகவே வெளியேறுகிறது

நமது தலையில் புருவநடு தொடங்கி உச்சித்தலை வரை உள்ள பகுதிக்கு முன்தலை, நெற்றிக்கண், வாள்நுதல், என்ற வேறு குறியீடுகளும் உள.

உணங்கல் என்பது உலர்ந்த தானியங்கள் எனப் பொருள் படும் ஈண்டு, 'நான்', 'எனது' என்ற ஆன்ம தற்போதமும் தன் முனைப்பும் ஒடுங்குவதைக் குறிப்பதாயிற்று.

நாமெல்லாம் சிற்றறிவு உயிர்கள். நம்மைத் தொன்று தொட்டே ஆணவம், கன்மம் என்ற இரு கொடிய மலங்களும் வலிதே பிணித்துள்ளன. அதனால் இச்சிற்றுயிரும் குற்றுயிர் ஆயிற்று. ஈரம் (இரக்கம்) உள்ளவை போன்ற வஞ்சத் தோற்றம் உடையன அம்மலங்கள். அவற்றின் வெய்ய பிடியிலிருந்து நம்மை விடுவிக்க, இறைவன் மாயையிலிருந்து நமக்கு உடம்பு, உலகம் முதலியவற்றை அருளினார். ஆனால் மாயையின் காரியங்களால் அறிவுத் தெளிவு மட்டுமன்றி, அறிவில் மயக்கமும் விளைகிறது.

பேரின்ப வேட்கையுடையோர் மெய்யடியார்; அவர்கள் இடையறாச் சிவசிந்தனையுடன், சைவநெறியில் நிற்பர் ஆதலால் அவர்களுக்குச் சிவபெருமான் திருஅருள் நோக்கால் மும்மலங் களும் உணங்கித் தம் ஆற்றல் ஒடுங்குகின்றன. அந்த நிலையில் அவர்கள் மாசுநீங்கி மெய்யறிவு பெற்றோராய்த் தலைவி நிலைக்கு உயர்கின்றனர்.

இவ்வாறு தலைவி நிலைக்கு உயர்ந்த ஆன்மாக்களை ஆசிரியர் 'உணங்கல்' என்ற சொல்லால் குறிப்பிடுகிறார்

மாந்தி: என்பது 'தின்று', 'உண்டு' என்னும் பொருளுடையது. ஈண்டுத் தலைவனாகிய சிவபெருமான் தலைவியாகிய நமது நலம் கொண்டு, நமக்குப் பேரின்பம் அருளியவாறு குறித்தது.

''வரியார் வளையார் ஐயம் வவ்வாய், மாநலம் வவ்வுதியே'' என்று பண் இசைக்கிறார் திருஞானசம்பந்தர்.[1]

'பிச்சாண்டியாக வரும் சிவபெருமான் பெண்கள் இடுகிற பிச்சையை ஏற்காது அவர்களது தலையாய பெண்மை நலத்தையே கவர்ந்து செல்லுகிறான்' என்பது இதன் கருத்து.

''தந்ததுஉன் தன்னைக் கொண்டதுஎன் தன்னைச்
சங்கரா ஆர்கொலோ சதுரர்!''[2]

கடையேனாகிய என்னை உன்திருவடிக்கீழ் ஏற்றுக் கொண்டு ஒப்பு உவமையில்லாத உன்னையே எனக்குத் தந்திருக்கிறாய். இப்பண்ட மாற்றில் யாரே சமர்த்தர்?' என்ற மாணிக்கவாசகரது மணிமொழி இங்கு இணைத்துச் சிந்திக்கத் தக்கது.

நமது உடலின் உயர்ந்த பகுதி, தலை. இதுவே குறிஞ்சி நிலம். இதன் தலைவன் சிவபெருமான்.

உயிர், உடல் முழுவதும் பரவியிருப்பதாயினும், சிறப்பாக மூன்று இடங்களில் மேம்பட்டு நிற்கும். அவை மனித உடம்பின் 'குறிஞ்சி'யாகிய தலை, 'மருத'மாகிய நெஞ்சு, 'நெய்த'லாகிய அடிவயிறு என்பன.

மிக உயர்ந்த பகுதியாகிய குறிஞ்சியும், மிகத் தாழ்வான பகுதியாகிய நெய்தலும், உயிர் என்னும் அரசனுக்கு இரு வசந்த மண்டபங்கள். அவற்றின் இடைப்பட்ட நெஞ்சுத் தானமாகிய மருதநிலமே அத்தாணி மண்டபமாம்

உயிர், தனது உலகியல் சிற்றின்பங்களை, வயிறு, அடிவயிறாகிய நெய்தலில் நுகர்கிறது.

உயர்ந்த பக்குவம் அடைந்த நிலையில், உயிர், தனது உடம்பின் முன்தலைப் பகுதியில் சிவபெருமானைக் கூடி இன்புறுகிறது ஆண்டவன் ஆன்மப் புணர்ச்சிக்கு இடம் தலை. எனவே அகத்துறையில் 'இடந்தலைப்பாடு' ஓர் சீர்மிகு சொல்லாட்சியாயிற்று.

---

1. சம்பந்தர் தேவாரம் 1:63:1
2 மணிவாசகர், திருவாசகம்

"இன்பே அருளி எனைஉருக்கி உயிர்உண்கின்ற எம்மானே"[1]
"பெருந்தேவியும் தானும்ஓர் மீனவன்பால்
ஏற்றுவந்து ஆருயிர் உண்ட திறல் ஒற்றைச்சேவகனே"[2]
"அன்றே என்றன் ஆவியும் உடலும் உடைமை எல்லாமும்
குன்றே அனையாய் என்னை ஆட்கொண்ட போதே
கொண்டிலையோ"[3]

என்ற திருவாசகத் தொடர்களிலிருந்து சிவபெருமான் மெய்யடியார்களது ஆன்ம போதத்தையும், உடல் பொருள் ஆவியையும் இருவினை போன்ற பிற உடைமைகளையும் தாமே ஏற்றருளும் பேரருளாளர் என்பது தெளிவாகும்.

மணிவாசகரது 'உயிருண்ணிப் பத்து' என்ற 34-ஆவது திருவாசகத் திருப்பதிகம் முழுமையும், சிவபெருமான் 'உயிர் உண்ணி' என்பதற்கும், 'அவன் அருளால் அவன்தாள் வணங்'குகிற உயிர்களுக்குச் '**சிவானந்தம் மேலிடும்**' என்பதற்கும் சான்றாகத் திகழ்கிறது.

மன்றத்து என்பதற்குப் 'பொது இடத்தின் கண் உள்ள' என்று பொதுவாகப் பொருள் கூறலாம். ஈண்டு, நமது உடலின் நெஞ்சுத் தானத்தை இது குறிப்பதாயிற்று.

உடலின் அனைத்துப் பகுதிகளிலும் ஓடுகிற குருதி முழுவதும் நமது இதயமாகிய பொது இடத்துக்கு வந்துதான், தூய்மை பெற்றுத் திரும்புகின்றது. எனவே நமது நெஞ்சு, பொது மன்றமாயிற்று.

எருவின் நுண் தாது: எருவின் நுண்ணிய பொடி என்பது பொருள். பசுவின் எருவினை, விதிப்படி எரித்த சாம்பலிலிருந்து வடித்தெடுத்த நுண்மையும் தூய்மையும் பொருந்திய திருநீறு என்பது ஈண்டுப் பொருளாயிற்று.

1. எண்ணப்பதிகம் 8:44:3
2. திருப்பாண்டிப் பதிகம் 8:36:10
3. குழைத்தபத்து 8:33:7

குடைவன ஆடி: உயிர்களாகிய நாம், சிவபெருமானுக்கு ஆன்மார்த்த சிவபூசை செய்யும் இடம், நமது நெஞ்சுக் குழி ஆகும் இங்கு உள்ள நமது மனித இதயம் ஒரு சிவலிங்கத்தின் அமைப்புப் போன்று, உடலின் நடு இடத்தில் இருப்பதும், இடையறாது இங்குப் பெருமானுக்குக் குருதியால் மிகச்சீரான முறையில் அபிடேகம் ஆகிக் கொண்டிருப்பதும், உடற் கூற்று நோக்கில் அறியத்தக்க உண்மைகளாம். நெஞ்சினைப் பூசைத் தானமாகவும், தலையைத் தியானத் தானமாகவும், அடிவயிற்றை ஓமத்தானமாகவும் சைவசித்தாந்த ஞான நூல்கள் அறிவுறுத்தும்.

இறைவனை நம் இதயக் கமலத்தில் எழுந்தருளச் செய்து பால், தயிர். நெய், கோமயம், கோநீர் என்ற ஆவின் ஐம் பொருள் (பஞ்சகவ்யம்) களாலும், பழச்சாறு, சந்தனம், திரு நீறுமுதலியவற்றாலும் அபிடேகித்துப் பூசித்தல், ஆன்மார்த்த சிவபூசையின் மையக் கருத்தாகும்,

மெய்யடியார்களது இத்தகைய அகப்பூசையையும் தூய வெண்ணீற்றையும் சிவபெருமான் விரும்பி ஏற்றுக் கொள்கிறார் என்று ஞான நூல்கள் உறுதி கூறுகின்றன.

"விலையிலி சாந்தமென்று வெறி நீறு பூசி, விளையாடும் வேடவிகிர்தர்"[1] எனவும், "மெய் எலாம வெண்ணீறு சண்ணித்த மேனியான்"[2]

எனவும் சிவபெருமானை அப்பரடிகள், பரவித் துதிப்பார்.

2 'கொம்பன நுண்ணிடையாள் கூறனை நீறுஅணிந்த வம்பனை' எனச் சுந்தர மூர்த்தியும்

'ஒண்மையனே! திரு நீற்றை உத் தூளித்(து) ஒளிமிளிரும் வெண்மையனே'[4]

என்று மாணிக்க வாசகரும், அனையவாறே பிறரும், சிவ பெருமானது நீறுபூசிய திருமேனிப் பொலிவைப் பாங்குறப் பரவித் துதிப்பர். இங்குப் பெருமானுக்கு வெண் குருதியாலும் மிகச் சீரான முறையில் அபிடேகம் ஆகிக் கொண்டிருப்பது, உடற்கூற்று நோக்கில் அறியத்தக்க உண்மையாகும்.

---

1 அப்பர் 4:8:9　　2 அப்பர் 4:
3 சுந்தரர் 7:83;7　　4 நீத்தல்விண்ணப்பம், 8:6:22

இல் இறை: இல் என்பது வீடு; இறை என்பதற்கு முதன்மையானது, மிக முக்கியமானது என்பன பொருள். நமது மனித உடம்பாகிய வீட்டில், முக்கியமான இடம், இருதய மாகும்.

திருமருகல் என்னும் திருத்தலத்தில் இறைவனைப்போற்றிப் பரவுங்கால், திருஞானசம்பந்தப் பெருமான்,

"சிந்தா எனுமால் சிவனே எனுமால் முந்தா எனுமால் முதல்வா எனுமால்"[1]

என இறைவனைப் புகழ்ந்து பாடுவார். இதிலிருந்து இறை என்பதன் முதன்மை பெறப்படும்.

இறை என்றால் சிறகு என்பதும் பொருள். (குறுந்தொகை 374-5). ஒரு பறவை பறப்பதற்குப் பக்கச் சிறகுகள் இன்றி யமையாதன. எனவே, மனித இருதயத்தின் சிறைபோன்றவை, இடது வலதுபகுதிகள் என்பதும் இங்குக் கொள்ளற்பாலது.

தம் பிள்ளையொடு வதியும்: கணபதி, முருகன் என்ற தம் பிள்ளைகளோடும், சிவ சத்தியோடும், சிவபெருமான், நமது இதயத்தில் எப்பொழுதும் இருக்கிறார் என்பது குறிப்பு.

நமது இருதயம் என்பது ஒரே உறுப்புத்தான். எனினும் அதன் தொழிற்பாடு கருதி, அதை வலதுபகுதி, இடதுபகுதி என இரண்டாகவும், மேல் அறை கீழ் அறை என இரண்டாகவும், ஆக நான்கு பகுதிகளாகப் பிரித்து நோக்குகிறோம். இற்றை நாள் விஞ்ஞானிகளும் இக்கருத்தை ஏற்பர்.

தலைவனாகிய பரசிவம், ஒரே பொருள். சச்சிதானந்தமே அதன் வடிவம், (சத் - நிலையானது, சித்-ஞானம், ஆனந்தம்-இன்பம்)

உயிர்களாகிய நம் பொருட்டு இவ் அண்டத் தொகுப்பினை இயக்கும்பொழுது, சூழலுக்கு ஏற்றதொரு சிவ வடிவத்தை அஃது எடுத்துக் கொள்ளுகிறது. இவ்வாறாகச் சிவன் என்றும், அவரது ஆற்றலாகிய சத்தி என்றும் அவர்களது பிள்ளைகளாகிய

கணபதி, முருகன் என்றும், ஒன்றேயாகிய பரம்பொருள், எளியோராகிய நம் பொருட்டுப் பலவாக விரிந்து அருள்பாலிக் கிறது.

மெய்யடியார்களாகிய நமது இருதயத்தில், வலது பக்கத் தில் சிவன், இடது பச்கத்தில் சத்தி, வலது கீழ் அறையில் கணபதி, இடது கீழ் அறையில் முருகன் என்றவாறு, ஒரு சிவ குடும்பமே மனித இதயத்தில் நின்று இயங்குகிறது.

சிவந்த நிறமும், நடுநிலைப் பண்பும் கொண்ட ஒரே தலைவன் சிவபெருமான். அவருடைய இடப்பாகம், சிவசத்தி, அவள், சிவபெருமானது ஆணையை ஏற்று, உயிர்களாகிய நமக்கு அருள் புரிபவள். நம்மைப் பிணித்துள்ள மலங்களைக் கழுவி நம்மைத் தூயவராக்குபவள்.

ஒரு முறை பிரமனுக்குக் காட்சியருள இருவரும் நிலவுலகிற்கு வந்தனர்.

''பிரமன் ஒரு மிகு காமி; அவன், தான் படைத்த பெண் ணின் அழகிலேயே மயங்கிக் காமுறும் இயல்பினன். எனவே பேரழகுடைய நீ அவன்முன் தோன்றினால், அவன் உள்ளம் விகார முறும்'' என அன்னையிடம் கூறினான், சிவபெருமான்.

இருவரும் தம்முள் வடிவத்தை மாற்றிக் கொண்டு அவன் முன் செல்லுவது எனத் தீர்மானித்தனர் வலப்புறச் சிவபெரு மான், சத்தியின் வடிவத்தையும், இடப்புறத்துச் சத்தி, சிவபெருமானது வடிவத்தையும் ஏற்றுக் கொண்டு, பிரமன் முன் காட்சி அளித்தனர். வண்ணமும் வடிவமும் மாறின; ஆனால், இடமும் உருவும் மாறவில்லை.

ஆழ்ந்த தியானத்திலிருந்து கண்திறந்த பிரமன், தன் எதிரில் காரிகை ஒருத்தி நிற்கச் கண்டான். அலைக்கழிந்த மனத்த னாய்க் காலிலிருந்து சிரசுவரை அவளையே பார்த்தான்.

பெண் உருவில் நின்ற சிவபெருமான், சிறிதே முறுவலித் தார்; ஆண் வடிவத்திலிருந்த சத்தி சற்றே நாணினாள். இயற்

கைக்கு முரணான இவ்விரு நிகழ்ச்சிகளும் பிரமனைச் சிந்திக்கு வைத்தன. பெருமானது திருவிளையாடலை உணர்ந்தான்; வெட்கினான்; பொறுத்தருளுமாறு வேண்டினான்...

சிவசத்தியரது வண்ண, வடிவ மாற்றம் இவ்வாறு திருவானைக்கோயில் புராணத்தில் பேசப்படுகிறது.

இப்புராண வரலாற்றுக்கும், நமது உடல் அமைப்புக்கும் உள்ள ஓர் அரிய ஒற்றுமை, உன்னி உணரத்தக்கது. சுத்தமாயா தத்துவம் என்ற நம் முன்தலலப் பகுதியில் உள்ளது பெருமூளை. இது வலம், இடம் என்ற இரு கூறுகளை உடையது. வலது கூறாகிய சிவன் அமைதியாக இருக்க, இடது கூறாகிய சத்தியே வேலைகள் பலவும் செய்கிறது.

அசுந்த மாயையின் 31-தத்துவங்களும், நமது உடம்பில் புருவ நடுவிற்குக் கீழுள்ள பகுதிகளாம். இக்கீழ்ப்பகுதியும் வலம், இடம் என்ற இரு கூறுகளை உடையது.

மூளையின் வலது கூறு உடம்பின் இடதுபகுதியையும் மூளையின் இடது கூறு உடம்பின் வலதுப்பகுதியையும், கத்தரிக் கோலின் இயக்கம் போன்று மாறிநின்று இயக்குகின்றன என்பது அறிவியலார் கருத்து.

இருதயத்தின் இடதுபகுதி தூய செங்குருதியாலும், வலது பகுதி அழுக்கான நீலநிறக் குருதியாலும் நிறைந்திருக்கின்றன

எப்பொழுதும் தனது சத்தியை இடப்பாகத்தில் கொண்ட சிவன், பிரமன் பொருட்டு நிலஉலகம் வந்த பொழுது, வண்ண மாற்றமும் வடிவ மாற்றமும் செய்து கொண்ட தன் விளைவே, இது என்பது சிந்திக்கற்பாலது.

சிவபெருமான் தமது பிள்ளைகளோடு நமது இருதயத்தில் வதியும் பெற்றியினை இனிச் சிந்திப்போம்.

இருதயத்தின் மேல் அறைகளையும் கீழ் அறைகளையும் (Atrium and Ventricle) இணைப்பதற்குத் தனித்தனியே

ஒருவழிப் பாதைகள் (Valves) உள்ளன. வலதுபக்கம் உள்ளது மூவிதழ் கொண்ட திரிசூல வடிவினது (Tricuspid). தந்தையின் உடைமைகள் மூத்த பிள்ளைக்கு உரியவை என்னுமாறு வலது மேலறையில் வீற்றிருக்கும் சிவபெருமானிடமிருந்து அவரது ஆயுதமாகிய திரிசூலத்தினையும் நீலக்குருதியையும் பெற்று, அவற்றைத் திறம்பட இயக்குகிறார், மூத்த பிள்ளையாகிய கணபதி அவர் அம்மை—அப்பனை வலஞ்சுற்றிவந்து தேமாங் கனி பெற்றதற்குச் சான்றாக. வலது கீழ் அறையிலிருந்து வெளி வந்த நீல அழுக்கு இரத்தம் இருதய மேல் அறைகளை வலஞ் சுழித்து நுரையீரலுக்குச் செல்லுகிறது 'நுரையீரலிலுள்ள பிராணவாயுவால் தூய்மை அடைந்து செந்நிறத்தைப் பெற்று அஃது இடது மேல் அறையைச் சேர்கிறது. 'தந்தை வலத்தால் அருள்கைக் கனியோனே'[1] என்பது அருணகிரியார் வாக்கு.

இடது பக்கம் உள்ள ஈரிதழ் வால்வு (MITRAL VALVE) வேலாயுதத்தை ஒத்தது. இடது மேலறையில் வீற்றிருக்கும் சிவசத்தியிடமிருந்து சத்திவேலையும் செங்குருதியையும் பெற்று அவற்றைக் கொண்டு நம் உடலில் வதியும் அவுணர்களை அழித்தும் தேவர்களைக் காத்தும் அருள் பாலிக்கிறார், முருகப் பெருமான்.

அவர் அம்மை—அப்பனை வலம் வாராது, தனது மயில் ஊர்தியில் ஏறி உலகனைத்தையும் ஒரு நொடியில் சுற்றியும் தேமாங்கனி பெறாது, வெகுளியும் அழுக்காறுமே பெற்றார் என்பது புராண வரலாறு. (கதையின் சுவைக்காக இவ்வாறு கூறுவதேயன்றி, எவ்விதத் தீநெறியும் இவர்களைப் பற்றுவ தில்லை) இதற்குச் சான்றாக, இடது கீழ் அறையிலிருந்து மேல் நோக்கி வெளிப்பட்டு நம் உடல் முழுவதும் மூலை முடுக் கெல்லாம் பரவுகிற சிவப்புநிறக் குருதி, ஆங்காங்கே தொழிற் படு உறுப்புகளுக்குத் துணை நின்று அத்தொழிற் பாட்டின் விளைவாக எழுந்த அழுக்கையெல்லாம் சுமந்து, நீலநிறக் குருதியாகி, இறுதியில் வலது மேலறையைச் சேர்கிறது.

நமது உடல்நலத்துக்காகச் செங்குருதி வடிவிலான செவ்வேள் பரமன் அருளியது ஏராளம்; அதற்கு ஈடாகத் தூய அச்செங்

1 திருப்பரங்குன்றம், திருப்புகழ்-3

குருதி நம் உறுப்புகளிலிருந்து இதயத்திற்குக் கொண்டு சென்ற தெல்லாம் வெறும் அழுக்குத்தான்.

''தந்தது உன்தன்னைக் கொண்டது என் தன்னைச
சங்கரா ஆர்கொலோ சதுரர்?''[1] என மாணிக்கவாசகர்

இறைவனுடன் செய்த பண்ட மாற்றுப்பற்றிப் பேசுவார்.

தன் நிலையில் ஒன்றேயாய பரசிவம், நமது நலன் கருதி நமது இருதயத்தில் நான்கு கூறுகளாகச் சிவன், சத்தி, கணபதி முருகன் என வெளிப்பட்டு அருள் புரிகிறார். இதனைச் சிவ பெருமானது தொழிற்படுநிலை (தடத்த இலக்கணம்) எனச் சைவசித்தாந்த சாத்திரங்கள் அறிவுறுத்தும்.

மெய்யடியார்களாகிய நமது இதயத்தில் சிவபெருமான் இவ்வாறு தம் மனைவி மக்களொடு அமர்ந்து அருள்பாலிப்பதைக் குறுந்தொகை ஆசிரியர், 'இல் இறைப் பள்ளி தம் பிள்ளையொடு வதியும்' என்ற தொடரால் நயம்படக் குறிப்பிடுகிறார்.

உயிருக்குள் உயிரான இறைவன், தம் பிள்ளைகளோடு நமது மனித உடலுள் கொலு வீற்றிருந்து பூசனைகளை ஏற்குமிடம், நமது இருதயமே என்பதைக் கூறவும் வேண்டுமோ?

நிறைவு: சிவ ஞானத் தெளிவு பெற்ற ஓர் உயர்பக்குவ ஆன்மா (உயிர்), நாளும் சிவதியானம், சிவபூசை முதலிய வழி பாடுகளை முறையாகச் செய்கிறது. சிவபெருமானை ஆன் மார்த்தமாகத் தன் இதயத்தில் வைத்து வழிபடுகிறது தலைவ ரான சிவபெருமானால் பல்காலும் இன்புறுத்தப் பெறுகிறது.

ஒரோ ஒருகால், அவர், தன்னைப் பிரிந்த காலத்து, ''இத்தகைய சிவவழிபாடு இயற்றுவோர், சிவபெருமானது பரந்த வியாபகத்துக்கு உட்பட்ட எல்லா நாடுகளிலும் இருப்பர் எனவே அவர்களுக்கு அருள் பாலிக்கும் போது, பெருமான் மெய்யடியாராகிய நமது நிலையையும் மறவாது எண்ணி அருள்

1 திருவாசகம் கோயில்திருப்பதிகம் 8:22:10

புரிவார்'' என்ற மன உறுதியுடன் இருப்பர் என்பதே குறுந்தொகையின் இப்பாடலுக்குத் திரண்ட கருத்தாகும்.

''பண்பால் யாழ்பயில் பாணபத்திரன்
தன் போல் என்பால் அன்பன்...''[1]

எனச் சிவபெருமான் தானே, சேரமான் பெருமானுக்கு வரைந்த திருமுகப் பாசுரத்திலிருந்து, மெய்யடியார்களை மறவாது அருள் பாலிக்கும் அவரது பெருங்கருணை புலனாகும்.

5. கொங்கு தேர் வாழ்க்கை

'பெண்களின் கூந்தலுக்கு இயற்கையாகவே மணம் உளதா? இது பாண்டிய மன்னனுக்கு எழுந்த ஐயம்.

இயற்கையாக மணம் இல்லை; நறுமண மலர்களைச் சூடுவதாலும், பிறபிற மணப் பொருள்களின் தொடர்பாலுமே ஒரு பெண்ணின் கூந்தலிலிருந்து மணம் வெளிப்படுகிறது, இது நக்கீரர் போன்ற சங்கப் புலவர்களின் வாதம்.

'உயர்குலப் பெண்டிர்க்கு இயற்கையாகவே கூந்தலில் மணம் உண்டு' என்பது சைவ சித்தாந்தம் கூறுகிற தத்துவ உண்மை.

அதை உறுதிப்படுத்தவும், சங்கத் தமிழ்ப் புலவர்கள் மூலம் நமது மயக்கத்தைப் போக்கவும், சிவபெருமான் திருவுளக் குறிப்பால் எழுந்தது ஒரு பாடல்.

குறுந்தொகை என்னும் எட்டுத்தொகை நூலில் காணப் பெறும் அப்பாடலையும் அதற்கான சைவசித்தாந்த விளக்கத்தையும் நோக்குவோம்.

''கொங்குதேர் வாழ்க்கை அம்சிறைத் தும்பி
காமம் செப்பாது கண்டது மொழிமோ!
பயிலியது கெழீஇய நட்பின் மயி(ல்)இயல்

1 திருமுகப்பாசுரம்: பதினோராம் திருமுறை.

செறிஎயிற்(று) அரிவை கூந்தலின்
நறியவு(ம்) உளவோ?நீ அறியும் பூவே''[1]

இப்பாடலுக்குச் சொற்பொருள் வழி வெளிப்படையாகத் தோன்றும் பொதுவகையான கருத்தினை முதற்கண் நோக்குவோம்.

''மலரின்கண் தேனை ஆய்ந்து உண்ணுகிற வாழ்க்கையினையும் (உள்ளிடத்தே) அழகிய சிறகுகளையும் உடைய வண்டே!

என்பால் கொண்ட விருப்பின் காரணமாக, என்னை மகிழ்வித்தற்காகக் கூறாமல், நீ அறிந்த உண்மையை அறிந்தவாறே கூறுவாயாக.

நீஇதுகாறும் எத்தனையோ மலர்களில் தேனை ஆராய்ந்து உண்டிருக்கிறாய். அத்தகைய இனிய மலர்களுள், பலகாலும் என்னோடு நெருங்கிப் பழகிய நட்பினையும், மயிலின் மெல்லியல்பினையும் உடைய இப்பெண்ணின் கூந்தலைப் போன்று நறுமணம் உடைய மலர்களும் உளவோ?'' — என்பது இப்பாடலின் பொருள்.

''இவள் ஓர் உயர்குலத் தலைவி; இவளது கூந்தல் இயற்கையாகவே நறுமணம் உடையது'' — என்பது இதன் கருத்து.

சங்கத்தமிழ் இலக்கியங்ஙள் நமக்குச் சிவயோக நெறியைப் பயிற்றுவிப்பனவும் அதன் மூலம் சிவஞானத் திறவுகோலாக அமைவனவும் ஆம். உருவங்கள் ஏன்?

சிவன், சிவன் இரண்டுமே கண்ணுக்குப் புலப்படாத அதி நுண் பொருள்கள். சைவசமய இலக்கியங்களும் சாத்திர நூல்களும் சிவனின் நுண்ணிய உள்உணர்வினை எழுப்பிச் சிவபரத்தின்பால் ஈடுபடச் செய்பவை.

1 குறுந்தொகை 2-ஆம் பாடல் இறையனார் அருளியது.

நால்வகைத் தவநெறியில் நிற்கும் அருளாளர்க்குச் சிவன் சீவன் ஆகிய நுண்பொருள்களின் இயல்புகளும் இணைப்புகளும் புலனாகும். ஆனால் உலகமாந்தர் நிலை அவ்வாறன்று. முற்றிலும் பருமையான பொருள்களை மேனோக்காகவே அறியும் பண்புடைய அவர்களுக்கு, நுண்மை புலனாவதில்லை

எனவே இறைமைப் பண்பினைச் சிறப்புவகையால் மட்டுமன்றிப் பொதுவகையாலும் உணர்த்த வந்த அருளாளர்கள்,

நுண்ணிய உயிரைச் கண்ணுக்குப் புலப்படுகிற ஒரு தலைவியாகவும், சிவபெருமானைத் தலைவனாகவும் உருவகித்து இலக்கியச் சோலையின் அகத்துறையில் உலவ விட்டனர்.

அத்தகைய உருவக அமைப்பு, இல்லாத ஒன்றின் கற்பனை அன்று; உலக மாந்தரின் உடலுறவு பற்றியதும் அன்று. உண்மையான நல்லடியார் தம்உள்ளத்து உணர்வுகளின் இறைமை ஓவியமே அது. அத்தகைய உட்கிடை அமைந்த சங்கத்தமிழ் அகத்துறைப் பாடல்களுள் இதுவும் ஒன்று

களவுப் புணர்ச்சியில் ஒரு தலைவியின் ஆன்ம நலத்தை உண்டான் தலைவன். பலகாலம் புணர்ச்சி பயின்றும் அவளை வரைவு கொள்ளாது காலம் நீட்டிப்பதையும், தலைவியின் வருத்தத்தையும் உணர்கிறாள் தோழி. கற்பு நெறியில் தலைவன் தலைவியை மணந்து தன் இல்லத்துக்கு அழைத்துச் செல்ல வேண்டும் என்ற குறிப்பினளாய்த் தலைவனிடம் தலைவியின் தகைமை பற்றி வினவுகிறாள்.

இவ்வாறு, ஒரு தோழியின் கூற்றாக அமைகிறது இப்பாடல். முதலில் இப்பாடலில் சிறப்பு வகையால் அமைந்த உட்கிடைப் பொருள் பற்றிச் சிந்திப்போம்.

தலையின் புறத்தே இருப்பது கூந்தல்; அதேபோல்
தலையின் உள்ளே இருப்பது பேரறிவுத் தானம்.
புறக் கூந்தலுக்கு மணம் உண்டு; அதுபோல்

அகத்தே உள்ள அறிவுத் தானத்துக்கும் ஓர் ஈர்ப்பு ஆற்றல் உண்டு புறத்தே, தும்பி என்பது நீண்டு வளைந்த உறிஞ்சு குழலை

உடைய வண்டு; அது பூக்களில் அமர்ந்து ஆய்ந்து தேன்பருகும் இயல்பினது. அதே போன்று,

அகத்தேயும் தும்பி வடிவ நாளம் ஒன்று உள்ளது; சிவ பெருமான் அத்தும்பியை இயக்கிப், பூப்பெய்திய ஆன்மாக்களின் மலபரிபாகத்தையும், காமம் சான்ற தன்மையையும் தேர்ந்து, உரிய காலத்தில், ஆன்ம நலத்தை 'உண்ணும்' இயல்பினர்.

பாடலில் காணப் பெறும் அரிவை, மயிலின் சாயலை உடையவள்; பயிலியது கெழீஇய நட்பினள்; செறி எயிற்றினள்; அவளைப் போன்றே ஆன்மா என்னும் தலைவியும் தொண்டு, மகன்மை நெறிகளில் பயின்று, தோழமை நெறியில் முதிர்ந்து, செறிவான ஞானநெறியில் தலைப்பட்டவள்; மயிலைப் போன்று அகவி அழைத்து ஆண்டவனையே தன்னுள் அகப்படுத்தும் பேறு பெற்றவள்.

நாளும் ஏராளமான பூக்களில் தேன் உண்ணுகிறது, வண்டு. அதேபோல், ஒவ்வொரு நொடியும், முற்கூறியவாறு பருவம் எய்திய, எண்ணற்ற ஆன்மாக்களின் ஆன்ம போதத்தைக் களைந்து, அவற்றை உய்விக்கிறார். சிவபெருமான்[1].

உயர்குலப் பெண்டிர்தம் கூந்தல் இயற்கையாகவே மணம் உடையது என்பது இதன் திரண்ட கருத்து.

இத்தகைய உயர்குலப் பெண்டிர் யாவர்? என்பதையும், அரிவை, கூந்தல் தும்பி, தேன், நட்பு, முதலியவற்றின் ஆழமான பொருளையும் அகழ்ந்து காண முற்படுவோம்.

கொங்கு தேர் வாழ்க்கை:

தேனைத் தேர்ந்து உண்ணுதல் வண்டின் இயல்பு. அதே போல், தக்க ஆன்மாவைத் தேர்ந்து, உரிய முறையில் ஆட் கொள்ளுதல் சிவபெருமான் இயல்பு என்பது இத்தொடரின் உட்குறிப்பு.

உயிர்ப் பொருள்கள், உயிரில் பொருள்கள் அனைத்துக்கும் சிவபெருமானே தலைவர்.

---

1 ''பிறந்தநாள் மேலும் பிறக்கும்நாள் போலும் துறந்தோர் துறப்போர் தொகை'' - திருவருட்பயன் 11, உமாபதிசிவனார்.

தனிப் பெருநிலையில் அவற்றினின்று வேறாக இருக்கும் அத்தலைவர், அவற்றிற்காகவே ஐந்தொழிலியற்றும் போது, அவற்றோடு ஒன்றாகக் கலந்தும், உடனாக நின்றும் அவற்றை இயக்குகிறார்.

உயிர்களாகிய நம்மைத் துன்பப் பெருங்கடலிலிருந்து விடுவித்து, ஒப்புயர்வற்ற சத்சித் ஆனந்தப் பெருநிலைக்கு உயர்த்த வேண்டும் என்பதே அவரது திருவுள்ளம்.

துன்பத்திற்குக் காரணம், மலமாசுகளின் வலிய பிணிப்பு என்பதனையும், அவற்றினின்று நம்மை விடுவித்து நிலையான பேரின்பத்தை அருள்வல்ல ஒரே தலைவர் சிவபெருமானே என்பதனையும் நாம் தெளிவாக உணர்தல் வேண்டும்.

அத்தகு மெய்ஞ்ஞானத்தைப் பெறுதற்குத் துணையாகத் தனது வைப்பு ஆற்ற (Potential Energy) வாகிய மாயையிலிருந்து நமக்கு உடம்பு உட்கருவிகள் முதலியவற்றைச் சிவ பெருமான் தந்தருளினார்.

அத்தோடு அமையாது, தனது ஞானசக்தி (Kinetic Energy) யாகிய அருளாற்றலையே நம் உடம்பினுள் பின்தலைப் பிடரியில் நிலைபெற்றிருக்குமாறு செய்து, நம்மை முழுவதுமாக இயக்குமாறும் அருள்பாலித்தார்.

அதுமட்டுமன்று, தானே நமது தலை உச்சியின் புறத்தே தங்கியிருந்து, நமது சிவஞான வேட்கையைத் தேர்ந்து நோக்கவும் செய்கிறார்.

அவர் ஆன்மாக்களை ஆட்கொள்ளும் முறை பலதரத்த தாகும். ஆன்மாவின் பாசப்பிணிப்பு, அறிவு வளர்ச்சி, சிந்தனைத் தெளிவு இவற்றிற்கு ஏற்பவே அவர் ஆன்மாவுக்கு அருள் புரிகிறார்.

இதனை மணிவாசகர் திருவாக்காலும் அறியலாம்.

''எப்பெருந் தன்மையும் எவ்வெவர் திறமும்
அப்பரி(சு) அதனால் ஆண்டு கொண்(டு) அருளி''[1]

---

1 திருவாசகம் கீர்த்தித் திரு அகவல் 8:2:125

அடிமை, மகன்மை, தோழமை, பேரின்பக் கூட்டம் என்ற வாறு படிமுறையில் அவரது அருளிப்பாடு அமைகிறது. ஒரு குழந்தை வயிற்றின் சீரண ஆற்றலுக்கு ஏற்ப அதன்தாய் அக் குழந்தைக்கு உணவு ஊட்டுவதைப் போன்றதே, இது. எனவே, ஈண்டு இறைவனின் நடுவு நிலைமைக்கு எவ்வித இழுக்கும் இல்லை.

பாசப்பிணிப்பால் அறிவு முடங்கிய ஆன்மாவுக்குச் சிவபெருமானே மாயையினாலான கருவிகளைக் கொடுக்கிறார்; அறிவு விளக்கம் செய்கிறார்; கால அடைவில், சிவபரத்தின் முழுமுதல் தன்மையைச் செய்ந்நன்றியோடு ஆன்மா சிந்திக்கத் தலைப்படுகிறது. அப்பொழுது.,

மும்மலங்கள் ஒடுங்கிய உயிர் தூய்மையுறுகிறது; சுத்த மாயையினாலான பெருமூளைப் பகுதியில், சுத்தவித்தை என்ற பிட்யூட்டரியில் அணைகிறது.

சிவபெருமான் ஈண்டு ஆன்மநலன் முழுவதையும் தானே ஏற்றுக்கொண்டு,[1] பதிகரணங்களையும், பதிஞானத்தையும், திருவடிப் பேரின்பத்தையும் ஆன்மாவுக்கு அருளுகிறார்.[2]

வேட்டுவப் புழுவைத் தானாக்கும் குளவியைப் போன்று, ஆன்மபோதத்தை ஏற்று, ஆன்மாவைத் தானாகவே ஆக்கிப் பேரின்பத்தில் திளைக்கச் செய்கிறார்.[3]

இவ்வாறாகத் தேனைத் தேர்வு செய்து உண்ணும் வண்டு போலச் சிவபெருமானும் உயிர்களைத் தகுதித் தேர்வு செய்து அறிவின் தெளிவிற்கு ஏற்பவே ஆட்கொள்கிறார் என்பது,

---

1 'அன்றே என்தன் ஆவியும், உடலும், உடைமை, எல்லாமும் குன்றே அனையாய்! என்னைஆட் கொண்டபோதே கொண்டிலையோ?
- திருவாசகம் குழைத்த பத்து 8:33.7

2 'தந்த(து)உன் தன்னைக் கொண்ட(து)என் தன்னைச் சங்கரா! ஆர்கொலோ சதுரர்? - திருவாசகம் கோயில் திருப்பதிகம் 8:22;10

3 ஆம்பல் பூவின் சாம்பல் அன்ன கூம்பிய சிறகர் மனை உறை குரீஇ முன்றில் உணங்கல் மாந்தி, மன்றத்து .... குறுந்தொகை 46

'கொங்கு தேர்வாழ்க்கை' என்ற தொடரிலிருந்து பெறப் படுகிற சைவ சித்தாந்தச் செம்பொருளாகும்.

அம்சிறைத் தும்பி

பூவிலிருந்து தேனை உறிஞ்சுவதற்கு அமைந்த நீண்டு வளைந்த குழல் வடிவக் கருவி தும்பி எனப்படும். அத்தகைய தும்பியை உடைமையால் தேன் உறிஞ்சும் வண்டுக்குத் தும்பி என்பது பெயராயிற்று.

நீண்டு நிலத்தைத் தொடுகிற யானையின் புழைக்கைக்குத் தும்பிக்கை என்பது பெயர் அன்றோ?

அம்சிறைத் தும்பி—அழகிய உட்சிறகுகளைத் தன் இருமருங் கிலும் உடைய தும்பி.

இஃது, சிவபெருமான் திருக்கைலையிலும் திருத்தில்லையிலும் நமது உடம்பில் சிரசு, நெஞ்சுத் தானங்களிலும், சிவகணங்கள் தன் இரு மருங்கிலும் சூழ்ந்திருக்க, உயிர்கட்கு அருட்பாலிக்கும் சிறப்பினை விதந்தோதியது.

> ''இறைவன் ஈண்டிய அடியவ ரோடும்
> பொலிதரு புலியூர்ப் புக்(கு) இனி(து) அருளினன்
> ஒலிதரு கைலை உயர்கிழ வோனே''[1]

என்ற மாணிக்கவாசகர் அருள்வாக்கும் இக்கருத்தினையே வலியுறுத்துவதாகும். ஈண்டிய — திரண்ட; புக்கு — புகுந்து; ஒலிதரு — பரநாதத்தை அருளுகிற

சிவகணங்கள் இருமருங்கும் சூழ்ந்திருக்கத் திருக்கயிலையில் அமர்ந்து பரஒலி எழுப்பி நமக்காக ஐந்தொழிலைப் புரியும் சிவபெருமான், நமது ஆன்ம வளர்ச்சி கண்டு மகிழ்ந்து, நம்மை

1 திருவாசகம், கீர்த்தித் திரு அகவல் 144 - 146

ஆட்கொள்ளுதற் பொருட்டுத் தன் அடியவர் புடைசூழத் தில்லையம்பதியில் புகுந்தருளினன் என்பது இப்பாடற்பகுதியின் கருத்து.

விராட் புருட வடிவம் என்பது அண்ட பேரண்டங்களையும் உள்ளடக்கிய சிவபெருமானது மாப்பேரு ஆகும், அதன் இருதயமாகத் திகழ்வது தில்லைச் சிற்றம்பலம். நமது உடம்பில் சுத்தமாயா இருதயமாக இருப்பது சிரசின் முன்பகுதி. அதே போல், அசுத்தமாயா இருதயமாக விளங்குவது நெஞ்சுத்தானம்

அறிவியல் நோக்கு: அறிவியலைத் துணைக் கொண்டு அது பற்றிச் சிந்திப்போம். நமது மனித உடம்பினில் சிரசின் மையப் பகுதியில் தும்பிவடிவில் ஒரு நாளம் உள்ளது. அதன் இரு மருங்கிலும், இரண்டு பக்க நாளங்கள் உள்ளன.

அறிவியலார் இவற்றை முறையே, நடுவில் உள்ள நாளத்தை மூன்றாம் நாளம் (Third Ventricle) என்றும், பக்க நாளங்கள் இரண்டையும் முதல் நாளம், இரண்டாம் நாளம் (First Ventricle Second Ventricle) என்றும் அழைப்பர்.

தும்பிவடிவ மூன்றாம் நாளம் நமது நடுமூளை (Mid brain) யிலிருந்து வெளிப்பட்டுப் புருவநடு நோக்கிப் பெருமூளையின் இருகூறு (Right & Left hemispheres of the cerebrum) களுக்கு நடுவில், கீழேயுள்ள பிட்யூட்டரி (Pituitary, the master gland) என்ற தலைமைச் சுரப்பியைத் தீண்டிக் கொண்டு நீண்டு வளைந்து கிடக்கிறது.

இதனுள் மூளைநீர் (cerebro spinal fluid) என்ற ஒருவகை அமுதம் நிறைந்திருக்கிறது.

ஒரு மொச்சை விதையின் இரண்டு பருப்புகளையும் அவற்றின் நடுவில் உள்ள சிறிய முளையையும் போன்று, நம் ஒவ்வொருவர் தலையிலும் இந்த மூன்று நாளங்களும் அமைந்துள்ளன,

தத்துவ சிந்தனை: தும்பிநாளத்தின் தோற்றமும் தொழிற்பாடும் ஆண்மைப் பொலிவுடைய சிவபெருமானது பிச்சாண்டிக் கோலத்தை நினைவுறுத்துவனவாம்.

சுத்தமாயையினாலானது நம் சிரசுப் பகுதி; ஏனைய பகுதி சிவபெருமானால் நமக்கு வினைநுகர் களமாக ஆக்கித்தரப்பட்ட, அசுத்தமாயையினாலான ஒரு சிறை ஆகும்.

நமது உடலாகிய சிறையின் புறத்தே இருந்த சிவபெருமான் நமது இறைமைப் பண்பினைக் கண்ணுற்று, இச்சிறையினுள் புகுந்து, நம் சிரசினில் உள்ள தும்பி வடிவ நாளத்தை இயக்குகிறார். அதுவே அவரது தூக்கிய திருவடியாகி நற்பயன் நல்குகிறது.

சுத்தமாயையினாலான நம் சிரசுப் பகுதியில் சிவபெருமானால் இவ்வாறு இயக்கப்பெறுகிற 'தும்பி நாளம்' இரண்டு மாயா உடம்புகளுக்கும் ஓர் எல்லையாக அமைந்துள்ளது. அசுத்தமாயையினையே தனக்குப் புகலிடமாகக் கொண்டது ஆன்மா. எனவே அதனால் நாளத்தின் கீழேதான் வஞ்சிக் கொடிபோல ஊர்ந்து செல்ல முடியுமேயன்றி, நாளத்தின் மேலே ஊர்ந்து, அதனைச் செலுத்த முடியாது. இவ்வுண்மையைத் தொடர்பு படுத்திச் 'சென்று அடையாத திருஉடையான் திரிசிராப்பள்ளிக் குன்று (உ)டையான்' எனப் பண் இசைப்பார் திருஞானசம்பந்தர்.

சிவபெருமான் ஒருவரே ஊர்ந்து வரத் தக்க இந்தப் பரி வடிவ நாளத்தின் மேல் உயிர்கள் (தலைவி) ஏற முனைவது வெந்தணலில் கூட்டுவிக்கும் என்பது, உயரிய சிவயோக உண்மை அதனை நமக்கு உணர்த்த விளைந்த தொல்காப்பியரும்

''எத்திணை மருங்கிலும் மகடூஉ மடல்மேல்
பொற்புடை நெறிமை இன்மை யான''[1]

என நூற்பா யாத்து, நம்மையும் சிவயோக நெறிப்படுத்தினார்.

---

1 தொல், அகத்திணையியல் - 38

எல்லா மனிதர்களின் தலையிலுமே, இந்தத் தும்பிவடிவ நாளம் உள்ளது. அது பிட்யூட்டரி என்ற ஆணைத்தானத்தைத் தீண்டிக் கொண்டு தான் இருக்கிறது. என்றாலும், சிவநெறி நின்று இடையறாது சிவதியானம் செய்து அதன் பயனாய் உயர்ந்த சிவஞானம் தலைப்பட்டோர்க்கே,

திருவருள் துணையால், ஆணைத்தானம் பெண்மையின் சீர்மையையும், மூன்றாம் நாளம் ஆண்மையின் பொலிவினையும் பெற்றுப், பேரின்பக் கூட்டம் தலையினுள் நிகழ்கிறது.

'இடம்தலைப்பாடு' என்ற இலக்கியச் சொல்லாட்சி இதனால் எழுந்தது என்க.

தும்பிவடிவ நாளத்தை 'மேருநடுநாடி' என்றும், பக்க நாளங்களை 'மிக்கு இடை, பிங்கலை' என்றும் திருமூலர், திருமந்திரோபதேசம் செய்வார். (இந்நூல் 3-ஆம் அதிகாரம் சிவபூமி'யில் விளக்கம் காண்க)

அருணகிரியாரோ, தும்பிவடிவ நாளத்தை முருகன் திருவடி எனச் சிந்தித்து, அப்பெருமானது திருவடிபட்டுத், தன்தலையில் பிரமன் எழுதிய 'தலைஎழுத்து' அழிந்தது எனப் பண் இசைப்பார். தேவர் சிறைமீட்ட முருகனின் பெருமையைக் கந்த புராணம் சிறப்பிக்கும்.

இரண்டு யானைகள் அமுதம் சொரிய, நலம்சேர் நங்கையாய் நடுவண் வீற்றிருக்கும் கயலக்குமியின் தோற்றப் பொலிவினை இந்த மூன்று நாளங்களின் மூலம், சைவ அருளாளர்கள் தமது ஊன்உடம்பாகிய ஆலயத்தின் முகப்பிலே உள்ளுணர்ந்தனர். சிவசத்தி நம் உய்திகருதி எடுத்துக்கொள்ளும் பல எளிவந்த தோற்றங்களுள் இலக்குமியும் ஒன்று என்பது சிவாகமத் துணிவு.

எனவே, சிவாலய அருத்த மண்டப முகப்புகளிலும், அடியார்தம் இல்லங்களின் முகப்புகளிலும், கயலக்குமியின் திருவுருவத்தைச் சமைத்து மகிழ்ந்தனர்.

தலையின் உள்ளே இருக்கும் இந்த மூன்று நாளங்களின் 'திரிசூலத்' தோற்றத்தைப் பக்கநோக்கிலும் (Side View) எதிர்ப்பார்வையிலும் (Frontal View) கண்ணுற்றனர் சைவ அருளாளர். அதன் விளைவாகத் தமிழ் நெடுங்கணக்கில், வரிவடிவ அமைப்பிலே, ஆயுதம் என்ற எழுத்து, முறையே விசர்க்க (÷) வடிவத்தையும், முப்பாற்புள்ளி (ஃ) வடிவத்தையும் பெற்றது எனலாம்.

சிவசிந்தனையாளர் திரிபுண்டரீகமாக (≡)த் திருநீறு அணிவதற்குப் பல காரணங்கள் உள்ளன. அவற்றுள் இந்த அமுத நாளங்களின் அமைப்பும் ஒன்றாதல் கூடும்.

தும்பியின் வடிவத்தை ஒத்ததும், கார்த்திகை ரோகிணி என்ற இருமனைவியர் புடைசூழ விளங்குவதுமான கூனுற்ற பிறைமதி, சிவபெருமான் திருமுடியில் மாதர்ப் பிறையாய் மகிழ்வுற்றுப் பொலிவதைப்பற்றி, மற்றொரு இயலில் சிந்திப்போம்.

இவ்வாறு ஒவ்வோர் அருளாளரும், சிவபூமியாகிய தம் சிரசினில், தும்பி வடிவ நாளத்தின் மூலம் தத்தமக்குக் கிடைத்த இறையருள் அனுபவத்தைப் பலவாறாக விதந்தோதக் காணலாம்.

பயிலியது கெழீஇய நட்பின்:

'எழுமையும் என்னோடு பயிலுதல் பொருந்திய நட்பினை உடையவள் தலைவி' எனத் தலைவிக்கும் தனக்கும் உள்ள நீண்ட நெடிய தொடர்பினைத் தலைவன்பால் நினைவு கூர்கிறாள், தோழி.

தோழிஎன்பாள் யார்? என முன்னர்க் கண்டோம். 'தோழி தானே செவிலி மகளே' என்பது தொல்காப்பியம். மாயையின் தத்துவக் குழந்தைகளாகிய மனம், புத்தி, அகங்காரம், சித்தம் என்ற நான்கும், தலைவியாகிய உயிருக்குச் சிவபெருமானால் அருளப் பெற்ற ஆருயிர்த் தோழிகள்.

உயிர் தனது அறிவுக்கும் செயலுக்கும் ஆசைகளுக்கும் ஏற்ப, ஏராளமான பிறப்புகளைப் பிறந்து இளைத்திருக்கிறது.

பிறப்புகள் தோறும் மாயையிலிருந்துதான் அதற்கு உடம்பு முதலியன அருளப்பெற்றன. எல்லாப் பிறப்புகளிலும் கருவி கரணங்கள் அனைத்தும் இருந்தும், அறிவின் வளர்ச்சிக்கு ஏற்பவே ஒவ்வொரு கருவியாக வெளிப்பட்டு இயங்கும்; அந்த போல், மனத்தின் தொழிற்பாடும் விளக்கமாகத் தோன்றுவது, மனிதப் பிறப்பில்தான். அதனால்தான் மனத்தை உயிரின் ஆறாவது அறிவு எனத் தொல்காப்பியரும் சுட்டிக் கூறினார்.

மனம் என்பது, மாயை என்ற ஒரு நுண்பொருளிலிருந்து வெளிப்பட்ட தத்துவம். மாயை என்ற ஒரே பொருள் அண்ட பேரண்டம் முழுமைக்கும் மூல வித்தாக இருப்பது போன்று, மனம் என்ற ஒரே பொருள் அனைத்து உயிர்களுக்கும் ஓர் அகக்கருவியாக அமைந்துள்ளது.

மனத்தின் தனித்தன்மை யாது? எனில், உயிரைச் சிவத்தின் பால் செலுத்துவதேயாம். என்றாலும், வெவ்வேறு உயிரின் வெவ்வேறு வகையான (பிராரத்த) ஊழ்வினைக் கழிவுக்காக மனமும் மாறுபாட்டுடன் இயங்க வேண்டியதாகிறது.

அப்படியிருந்தும், உயிரோடு ஒட்டி உறவாடி, அதன் ஒவ்வோர் அசைவையும் நுணுகி அறிந்து செயல்படுகிறது, மனம்.

எனவே உயிரின் பண்டு தொட்ட இயல்புகளும், அறிவின் படிமுறை வளர்ச்சியும், அதன் தோழியாகிய மனத்திற்குத் தான் மிகத் தெளிவாகத் தெரியும்.

தொண்டு, மகன்மை, தோழமை என்ற மூவகையான மெய்த்தவ நெறியில் இடையறாது பயின்று, ஆழ்ந்த சிவ தியானத்தில் உயிராகிய தலைவி தலைப்படுதற்கு மனமே துணை நிற்கிறது.

உயிர் சிவஞானத்தில் தலைப்பட்டுச் சிரசினுள் குவிந்து நிற்கும்போது, மனத்தின் தொழிற்பாட்டைச் சித்தம் ஏன்று கொள்ளுகிறது.

சித்தம் என்பது மூலப்பிரகிருதி என்றும், அஃது உயிர் நுகர்ந்து தொலைக்க வேண்டிய வினைகளின் பதிவேடு என்றும் கண்டோம்.

புல்பூண்டு தொடங்கி ஒவ்வொரு பிறப்பிலும். சித்தம் என்ற மூலப் பிரகிருதியிலிருந்துதான், ஆன்மதத்துவங்கள் 24-ம் வெளிப் பட்டு, உயிருக்கு உடம்பாகின்றன. எனினும் வினைநுகர்ச்சிக் காலத்தில், சித்தம் தன்னை வெளிக்காட்டிக் கொள்ளுவதில்லை.

வினைகள் அனைத்தும் கழிந்த நிலையில்தான். ஏனைய ஆன்ம தத்துவங்கள் அனைத்தும் சித்தத்துள் ஒடுங்கச், சித்தம் என்ற தோழி சிவத்தை நாடி நிற்கிறது.

"வினையின் நீங்கி விளங்கிய அறிவின்
முனைவன் கண்டது முதல் நூ(ல்) ஆகும்"[1]

என்ற தொல்காப்பியக் கூற்றின் ஆழ்நிலைப் பொருள் அப்போது தான் புலனாகிறது.

இவ்வாறாகப், 'பயிலியது கெழீஇய நட்பு' என்ற தொடர். தலைவிக்கும் தோழிக்கும் உள்ள பண்டு தொட்ட மிக நெருக்க மான நட்பினை உணர்த்துவதாகிறது. தலைவியின் வளர்ச்சியில் தோழி கண்ட நிறைவினைப் புலப்படுத்துவதாகவும் அமைகிறது.

மயில் இயல்: குவிந்து கிடந்த ஒரு மயிலின் தோகைகள் விண் முகில் கண்டு விரிகின்றன; வண்ண ஒளி வீசுகின்றன, இன்பத்தைத் தன்னுள் அகப்படுத்துவதற்காக மயில் அகவு கின்றது. இது மயிலின் இயல்பு.

அதே போன்றது தான் ஒரு தலைவியின் நிலையும். அவளுடைய சிந்தனைகள் புறஉலகில் அலைமோதித் திரிந்த போது, பேரறிவுத்தானமாகிய பெருமூளை அம்பலாய்க் கூம்பிக் கிடந்தது.

பின்னர் அவள் இறைமை வயப்பட்டபோது, இடையறாச் சிவதியானத்தின் விளைவாக, அஃது அலர்ந்து ஆயிரம் இதழ்த் தாமரையாக விரிகிறது. இவ்வாறு பூப்பு எய்திய நிலையில்

1 தொல் மரபியல் - 96

உயிர் காமஞ்சான்ற தலைவியாகும் போது சிறைப்புறத்துச் சிவபெருமானைத் தன்னுள் அகப்படுத்துவதற்காக, மயிலினைப் போன்று, அகவி அகவி அழைக்கிறது.

செறி எயிறு: செறிவான, நிறைந்த, இடையீடற்ற, முறையான, நெருக்கமான, அழகிய பற்கள். இஃது, உயிர் எனும தலைவியின் இடையீடற்ற சிவசிந்தனையையும சிவபெருமான் பால் அவளது மிகவும் நெருக்கமான உறுதியான அன்பினையும் உணர்த்துவதாகும்

பற்கள் முத்து வெள்ளை நிறத்தில் இருப்பது இயல்பு என்பர் அறிஞர். 'முத்தன்ன வெண்ணகையாய்! .....[1] என்பது மாணிக்கவாசகர் வாக்கு.

''முறிமேனி, முத்தம் முறுவல், வெறிநாற்றம்
வேல்உண்கண், வேய்த்தோள் அவட்கு''[2] என்பது குறள்

சிவபெருமானுக்கு ஐந்து திருமுகங்கள். அவற்றுள் ஒரு முகம் மேல்நோக்கியும், மற்ற நான்கும் நான்கு திசைகளையும் நோக்கியும் இருக்கும். மேல் நோக்கிய திருமுகத்துக்கு ஈசானம் என்பது பெயர், அதன் நிறம் முத்து வெள்ளை. உயிர்களுக்குப் பரமுத்தி அருளுவது அந்த முகமே.

இவ்வாறு, ஆட்கொள்ளும் தலைவனாகிய சிவபெருமானின் நிறமும், ஆட்படும் உயிராகிய தலைவியின் எயிற்று நிறமும் முத்துவெள்ளையாயின், பரமுத்திப் பேறு உறுதியே யன்றோ?

இங்ஙனம் 'செறிஎயிற்று அறிவை' என்ற தொடர், தலைவியின் நிறைந்த அன்பினையும், உயர்ந்த பண்பினையும் உணர்த்துவதோடு, முத்திப் பேரின்பம் நுகர்தற்கான அவளது தகைமையையும் வலியுறுத்துவதாகும்.

அரிவை: சிவபெருமானுக்கு இச்சாசத்தி, ஞானசத்தி, கிரியாசத்தி என இருப்பது போல, ஆன்மாக்களாகிய நமக்கும் விருப்பம், அறிவு, செயல் என்ற மூன்று இயல்புகள் உள்ளன,

1. திருவெம்பாவை
2 திருக்குறள் - 113

நமது ஆணவக்கட்டு, வினைநுகர்ச்சி இவற்றிற்கு ஏற்ப அம்மூன்று இயல்புகளும் நமது உலகியல் வாழ்விலும், இறைமைப் பற்றிலும் துணைநிற்கின்றன.

எண்ணிக்கையால், இறைவன் ஒருவனே; உயிர்களோ கோடானுகோடி; இடைநிற்கும் தளைகள் ஐந்து -- என்பது சைவசித்தாந்தம்.

அரிவை என்பது பொது வகையால் பெண்டிரைக் குறிப்ப தாகும் ஈண்டு அது சிறப்பாக உயர்தவ (குல)ப் பெண்டிரைக் குறிப்பதாயிற்று.

உயர்குல பெண்டிர் என்பார் யாவர்?

இறைவனாகிய சிவபெருமான் ஒருவரே ஆண் என்பதும், புல்பூண்டிலிருந்து பிரம விட்டுணு உள்ளிட்ட கோடானு கோடி உயிர்களும் பெண்களே என்பதும் நாம் முன்னரே கண்ட சைவ சித்தாந்தக் கோட்பாடுகள்.

உயிர்கள் தத்தம் அறிவின் திறத்திற்கு ஏற்ப, ஓரறிவுப் புல்பூண்டிலிருந்து, ஆறறிவு மானுடர் தேவர்வரை ஒவ்வோர் அறிவாகப் படிமுறையில் விளக்கம் பெற்றுப் பலவகை வடிவ வேறுபாடுகளையும் பெறுகின்றன; இது பண்டு தொட்ட நம் சைவத்தமிழ்க் கொள்கை[1].

மனம் என்ற ஆறாவது அறிவினைப் பெற்று மனித வடிவம் பெற்ற உயிர், மேன்மேலும் அறிவு விளக்கம் பெற்று, ஒவ்வொரு நொடியும் படிமுறையில் வளர்ந்து வளர்ந்து, உயர் நிலை எய்திப் பேரின்பத்தில் திளைக்கிறது[2].

---

1. ''ஒன்(று) அறி(வு) அதுவே உற்(று) அறி(வு) அதுவே
இரண்(டு) அறி(வு) அதுவே அதனொடு நாவே
மூன்(று) அறி(வு) அதுவே அவற்றொடு மூக்கே
நான்(கு) அறி[வு] அதுவே அவற்றொடு கண்ணே
ஐந்[து] அறி[வு] அதுவே அவற்றொடு செவியே
ஆ[று] அறி[வு] அதுவே அவற்றொடு மனனே
நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத் தினரே'' - தொல் மரபியல் 27

2. ''அந்தமில் சிறப்பின் ஆகிய இன்பம்
தன்வயின் வருதலும் வகுத்த பண்பே -'' - தொல் பொருளியல் 47

பொறிபுலக் கட்டினில், விலங்கென வாழ்ந்த, இறந்த காலத்துக் குற்றறிவினையும், மனம் போனபோக்கிலே அலை மோதுகிற நிகழ்காலத்துச் சிற்றறிவினையும்,

சத்சித் ஆனந்தம் என்ற எதிர்காலத்து அந்தமிலாப் பேரறி வானந்தத்தையும், நினைவு கூரும் தன்மையுடைய உயிரே தலைமைப் பண்புக்குத் தகுதியுடைய உயிராகும்.

அது சிவம் என்னும் இலக்கினை நோக்கி நகரத் துடிக்கும். அத்தகைய பெருவேட்கையே, அது சிவப் பணியில் சிறப்பாக நகர்ந்து முன்னேறத் துணை செய்யும் அங்ஙனம் சிவத்தை நோக்கி நகர்ந்து அருள் தொண்டு செய்யும் சீரிய உயிர்க்கூட்ட மாகிய நகரத்தாரைத், தக்க ஆன்மாக்களாகச சிவபெருமான் தேர்வு செய்து ஆட்கொண்டருளுகிறார்.

ஆட்கொள்ளும் முறைமை:

'இறை உணர்வு உடைமை' என்பது ஒரு சிறப்பு எனக் கண்டோம். அத்தகு உடைமையிலும் ஆன்மாக்களுக்குள் வேறு பாடு உண்டு.

விஞ்ஞானகலர்: நிறைவான சிறப்பறிவு (விசேட ஞானம்) உடைய உயிர்கள் விஞ்ஞானகலர் எனப்படுவர். மாயை, கன்மம் ஆகிய மலங்கள் நீங்கப் பெற்ற அவர்கள், ஆணவம் என்ற மூலமலமும் தன்வலி இழந்து, பெருங்காயம் இருந்த கலம் போல, புறப்பற்று நீங்கி, அகப்பற்றும் வாசனை அளவில் பற்றி நிற்கும் உயிர்கள் ஆவர்.

அவர்கள் ஒருநெறிய மனத்தால், குவிந்த சித்தத்தைப் பெற்றிருப்பர். (மனம் என்பதை நெஞ்சுத் தானத்திலும், சித்தம் என்பதைச் சிரசுத்தானத்திலும் முன்னர்க் கண்டோம்).

இவர்களுக்குச் சிவபெருமான் தானே அருவமாக உள் நின்று, தம் திருக்குறிப்பால், உள்ளுணர்வாக (Intution) மெய்ப் பொருளை உணர்த்துதலால், இவர் விசேடமான பதிஞானத்தைப்

பெறுகின்றனர்; கலைகளினின்று நீங்கி, முத்திப்பேரின்பத்தை நுகர்கின்றனர். எனவே இப்பெயர் பெற்றனர். இறைவன் திருவடியையே பற்றுக்கோடாகக் கொண்ட இவர்கள் மேலான அருளாளராகத் திகழ்கின்றனர்.

பிரளயாகலர்: அவர்களை அடுத்து நிற்போர், தாமரை இலைத் தண்ணீர் போன்ற இயல்புடைய சான்றோர் ஆவர். அவர்கள் மாயையின் மயக்கும் தன்மையை உணர்ந்து, அதன் கட்டில் அழுந்தாமல், உலகப் பொருள்களின்பால் பற்று நீங்கி வாழும் உத்தமர்கள்.

ஆணவம் கன்மம் ஆகிய இரண்டு மலங்களின் பிணிப்பில் மட்டும் இருக்கும் இவர்கள், பிரளய காலத்தில் கலையாதி கட்டுக்கள் நீங்கி, உயர்நிலை எய்துதலால், பிரளயாகலர் எனப் பெயர் பெற்றனர்.

இவர்களை ஆட்கொள்ளும் போது, நாற்கரம், நீலகண்டம், மான் மழு, பிறைநுதல் இவற்றுடன் முக்கட்செல்வராய்ச் சிவபெருமான் இவர்கள்முன் தோன்றி நின்று அருள் பாலிப்பர்

சகலர்: அவர்களுக்கும் அடுத்தநிலையில் உள்ளவர்கள், ஆணவம், கன்மம் மாயை என்ற மூன்று மலக்கட்டுடைய நம் போன்றோர் ஆவர். சகலர் என அழைக்கப் பெறும் இவர்களுள் பிரமா, விஷ்ணு உள்ளிட்ட தேவர்களும், மனிதர்களும் ஒருசில விலங்குகளும் அடங்குவர்.

> "மக்கள் தாமே ஆறறி(வு) உயிரே
> பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே
> ஒருசார் விலங்கும் உளஎன மொழிப"[1]

என்பது, பல்லாயிரம் ஆண்டுகட்டு முன்பே நம்மவர் கணித்த சித்தாந்தம். (பிற என்பது தேவர், அசுரரைக் குறிப்பதாகும்).

உயிர்களாகிய நம்முடைய இன்றைய மனித வடிவம் சகலர் என்னப்படும். அநாதியே நம்மைப் பற்றியுள்ள ஆணவம் என்ற

1 தொல்காப்பியம் - மரபியல் - 33, 34

மூலமலமும், அதன் தூண்டுதலால் நாம் செய்த வினைகளாகிய கன்ம மலமும், அவ்வினைகளின் பயனை நாம் நுகர்தற் பொருட்டு இறைவனால் உருக்கொடுத்து அருளப்பெற்ற மாயா மலமும் — ஆகிய இம்மூன்று மலங்களாலும் கட்டுண்டு கிடப்பவர்கள் நாம்.

மானைக்காட்டி மானைப் பிடித்தல் என்ற முறையாலும், பன்றிக்குட்டிக்கும் அதன் தாயாக நின்று பால் ஊட்டி அருளுதல் போலவும், மனிதர்களை மனித உருவில் குருவாக எழுந்தருளியும் ஏனையோரை அந்த அந்த உருக்கொண்டும் சிவபெருமான் ஆட்கொள்ளுகிறார்.

உயிரினத்தின் ஏனையோர், புறத்தாராம்ப் புறத்திணைக் கண் நின்று, கால அடைவில் படிமுறையில் அறிவு விளங்கப் பெற்று அகவாழ்வு புகுவர் என்பது குறிப்பு.

விடுதலை: முட்டையுள் முடங்கிக் கிடக்கும் உயிரை அதனின்று விடுவித்து, முழு உடம்புடன் உலகினில் உலவச் செய்வதற்கு, மீனின் கண்ணும், ஆமையின் மனமும், கோழியின் உடற்பரிசமும் உறுதுணையாகின்றன அன்றோ?

அதே போன்று சகலவர்க்கத்தினர்க்குச் சிவகுரு மூலம் வழங்கப்பெறும் சிவதீக்கையும் பலவாறாக அமைகிறது.

உலகக் கூட்டினுள் அறிவு முடங்கிக் கிடக்கும் உயிரினத்திற்கு, முதலில் அதன் கண்ணுள்ள அறியாமையை நீக்குதற்கும் அடுத்து, அதன் ஆன்மசிற்றறிவினைச் சிவம் என்னும் பேரறிவில் விளங்கச் செய்வதற்கும், குருவடிவில் வருகிற சிவபெருமான் தீக்கை புரிந்தருளுகிறார்.

சரியை என்ற தொண்டு நெறியாளர்க்குச் சமயதீக்கையும், கிரியை என்ற மகன்மை நெறியாளர்க்கு விசேட தீக்கையும், யோகம் என்ற தோழமை நெறியாளர்க்கு நிர்வாண தீக்கையும் அருளப்பெறுகின்றன. இந்த மூவகை நெறியிலும் முதிர்ந்து சிவஞானம் தலைப்பட்டார், அன்பு நெறியில் தலைவி நிலைக்கு உயர்கின்றனர்.

நமக்கும் உயர்கதி உண்டா?

நாமும் இயற்கை மணக் கூந்தலைப் பெறுவோமா? என்ற ஐயமும் வேட்கையும் நல்லோர்க்கு எழுவது இயல்பு.

மும்மலங்களால் பிணிக்கப்பட்ட நாம், அசுத்த மாயை என்னும் மருத்துவமனையில், 'உயிர்நலம்' பெறுதற்காக உலவித் திரிகிறோம்.

'மலநோய் நீங்கவேண்டும், நிலையான சிவானந்தம் சித்திக்க வேண்டும்' — இவையே இறைவன் நமக்கு இவ்வாழ்வினை அமைத்துத் தந்ததன் திருக்குறிப்பு.

உயர்ந்த அக்குறிக்கோளை நாம் அடைவதற்கு, அவர் தமது திருஅருட்சத்தியையே நமக்குத் துணைநிற்கச் செய்கிறார். உலகம் முழுவதையும் அவரது ஆணைப்படி நமக்காகவே மாயையிலிருந்து, அன்னையாகிய சிவசத்தி தோற்றுவிக்கிறாள், அவளே அனைத்து உயிர்களுக்கும் பாலை ஊட்டுகிறாள்.

''எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது
தான் அமர்ந்து வருஉம் மேவற் றாகும்''[1]

என்பது பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே நம்மவர் கொண்டுள்ள சைவத்தமிழ்க் கொள்கை.

''இன்பம் என்பது அனைத்து உயிர்களுக்கும் உரிமை; எனினும், 'அவரவர் வினைவழி தான் அவரவர் அனுபவம், நிகழும் ''என்பது இதன் கருத்து.

சிவபெருமான் ஆணைப்படி சிவசத்தி எல்லா 'உயிர்க் குழந்தை'களுக்கும் பாலை ஊட்டினாலும், அந்த அந்த ஆன்மா வின் ஊழ்வினைக்கும் மெய்த்தவ மேம்பாட்டிற்கும் ஏற்ப, அவள் ஊட்டுகிற பாலும், ஊனப் பாலாகவோ ஞானப்பாலாகவோ அமைகிறது.

திருவருள் துணையால், நாம் மலக்கட்டு நீங்கப் பெறும் போது அசுத்த மாயையிலிருந்து விடுதலை பெற்றுச், சுத்த

1 தொல்காப்பியம் பொருளியல் - 27 ஆம் சூத்திரம்

மாயையில் வாழத் தலைப்படுகிறோம். அங்குச் சிவானந்தம் சித்திக்கிறது. நாமும் உயர்குலப் பெண்டிராய், இயற்கை மணமுடைய கூந்தலைப் பெறுகிறோம்.

இதுவே இவ்வுலகில் ஒவ்வோர் ஆன்மாவும் முடிந்தமுடிவாகப்பெறுகிற தலையாய சீவன்முத்தநிலையாகும். இத்தகைய உயர்ந்த பேற்றினை, நாம் இப்பூவுலக வாழ்வில், இந்த உடம்புடனேயே எய்துதல் இயலும் என்பதை நம் சைவத்தமிழ்ச் சான்றோர்கள் பண்டுதொட்டே அனுபவ வழி உணர்ந்திருக்கின்றனர்.

> "அந்தமில் சிறப்பின் ஆகிய இன்பம்
> தன்வயின் வருதலும் வகுத்த பண்பே"[1]

நாம் நுகர்ந்து தொலைக்க வேண்டிய வினைகள் முழுவதுமாகக் கழிந்த போது, வினைப்பயனாகிய பால், வேறு ஒன்று இன்மையால், சிவசத்தி, சிவபெருமான் திருவுளப்படி, நமக்குச் சிவஞானப்பாலையே ஊட்டி அருளுகிறாள்.

அப்போது நாம் ஆனந்தமய கோசத்தில் வாழும் விஞ்ஞான கலர் ஆகிறோம்.

அறிவியல் நோக்கு:

சிவசத்தி நமது பின்தலையில் இருந்து நம்மை இயக்குகிறாள் எனக் கண்டோம்.

> "வழிபடு தெய்வம் நிற்புறம் காப்பப் பழிதீர் செல்வமொடு
> வழிவழி சிறந்து பொலிமின்........."[2]

அவள் அவ்வாறு இயங்குதலால், அதுகாறும் முதுகுத்தண்டு வழியாகக் கீழ்முகத் தொழிற்பாட்டில் அலைமோதிய உயிர், இப்போது அருட்சத்தியின் திருவருளால், பெருமூளையின் கீழே, படுக்கையாக வஞ்சிக்கொடி என ஊர்ந்து 'சென்று, பிட்யூட்டரி (Pituitary) என்ற பெண்மைத் தானத்தில் அணைந்து நிற்கிறது.

---

1 தொல்காப்பியம் பொருளியல் – 47 ஆம் சூத்திரம்

2 தொல் செய்யுளியல் 106

பிட்யூட்டரியே, சுத்தவித்தை என்னும் சுத்தமாயா தத்துவமாகும். இதுவே நம் உடம்பில் உள்ள ஆறு ஆதாரங்களில் தலையாய 'ஆக்ஞை' (ஆணை) என்னும் ஆதாரமாகும். சிவசத்தி சிவபெருமானின் ஆணையை ஏற்பதும், சிவஆணைப்படி உயிரினையும் உடலையும், கருவிகரணங்களையும் தன் ஆணை வழிச் செலுத்துவதும் இந்த இடமே ஆதலால் இஃது ஆணைத் தானம் என்ற பொருத்தமான பெயரைப் பெற்றது.

உடலின் வளர்ச்சிக்கும், உள்ளத்து எழுச்சிக்கும், உயிரின் மேம்பாட்டிற்கும் இச்சுரப்பி தலையாய பெருந்துணை புரிகிறது.

எனவே, அறிவியலாரும் இதனைத் தலைமைச் சுரப்பி (Master Gland) என்றே அழைக்கின்றனர்.

இதனை அணைந்து நிற்கிற ஆன்மாவே, உயர்குலத் தலைவி எனப் போற்றப்பெறும். இதுகாறும் விளங்காது கூம்பிக் கிடந்த சுத்தமாயை, (மலமாசுக்கள் நீங்கித் தூய்மையுற்ற ஆருயிர்க்கு, (இப்போது சிவபெருமானது திருவருளால்,) விளங்கித் தோன்றுகிறது.

எனவே சுத்தமாயையினாலான சிவன் முத்தான்மாக்களின் சிரசில் அமுதம் சுரக்கிறது, ஆற்றல் பெருகுகிறது, நாதம் எழுகிறது. நறுமணம் கமழ்கிறது, உண்மைப் பேரின்பம் தலைப்படுகிறது.

அருள்சத்தி எவ்வாறு துணை நிற்கிறாள்? நாம் எவ்வாறு மல நோயினிலிருந்து படிப்படியாக விடுபடுகிறோம்? 'உயர் நலத்தை எவ்வாறு பெறுகிறோம்? என்பவற்றை, உலக நடைமுறையையும் அறிவியல் கருத்துக்களையும் கொண்டு சிந்திப்போம்.

குளத்து நீரில் கல்லைப் போட்டதும், தண்ணீரின் மேற் பரப்பில் வட்டவட்டமாக அலைகள் தோன்றிப் பின்னர் மறைகின்றன அன்றோ?

அதே போன்றுதான் நம் மனித வாழ்விலும், ஊழ்வினை நுகர்ச்சிக்கு ஏற்றவாறு, சுற்றமும், நட்பும் சுற்றிச் சுற்றி வருகின்றன' உள்வட்டம், வெளிவட்டம் என்றவாறு, பல பல வட்டங்களாகப் பரந்து விரிகின்றன. இந்த வட்டங்களிலுள்ள சுற்றங்கள் அனைத்தும் மலப்பிணி நீக்கத்துக்கான மருந்துகளே; தண்ணீரின் மேற்பரப்பில் எழிலுறத் தோன்றி மறையும் அலைகளைப் போன்றவையே. நோய் குறையக் குறைய மருந்துகள் தேவையற்றன அன்றோ?

அதேபோல், கால அடைவிலே, அறியாமை நீங்க நீங்க 'நில்லா உலகம் புல்லிய நெறித்தே'[1] என்ற மெய்யுணர்வு தோன்றும். 'மருத்துவமனை நமக்கு நிலையான வாழ்விடம் அன்று, என்ற உண்மை புலனாகும்; உலகப் பற்று, தேய்வுறும்; பதிஞானம் மேலோங்கும்.

அப்போது மாவட்டம், வட்டம், சிறுசுழி என உறவுவட்டங்கள், சிறுத்துக் கொண்டே வந்து, குடும்பம் என்ற ஒரு கட்டுக்குள் நிற்கும். அதுவே மேலும் குறைந்து, உடல் உயிர் என்ற அளவிலே ஒரு கூட்டுக்குள் ஒடுங்கும். பின்னர்,

> "நீரில் குமிழி இளமை; நிறைசெல்வம்
> நீரில் சுருட்டு(ம்) நெடுந்திரைகள் — நீரில்
> எழுத்(து)ஆகும் யாக்கை; நமரங்காள்! என்னே
> வழுத்தாத(து) எம்பிரான் மன்று?"[2]

இளமை, செல்வம், உடம்பு என்பன நிலையற்ற பொருள்கள் அம்மூன்றையும் துணைக்கொண்டு, நிலைத்த பொருளாகிய தில்லை மன்றாடியின் திருவடியருளைப் பெறுதல் வேண்டும் என்பது கருத்து.

> குடம்பை தனித்(து)ஒழியப் புள்பறந் தற்றே
> உடம்போடு உயிரிடை நட்பு [3]

---

1 தொல்காப்பியம் புறத்திணையியல் - 18

2 நீதிநெறி விளக்கம் கடவுள் வாழ்த்து - குமரகுருபரர்.

3 திருக்குறள் 338

என்றவாறு, உடலின் நிலையாமையைத் தெற்றென நாம் உணரும்போது உடம்பு என்பது ஒரு வினை நுகர் கருவி எனவும், அனுபவ வழியாகப்பதிஞான விளக்கத்தைப் பெறுதற்காகச் சிவபெருமானால் நமக்கு அருளப்பெற்ற ஓர் அரிய சாதனமே அது எனவும் எண்ணத் தலைப்படுவோம்.

அப்போது மாயையின்பாலுள்ள பற்று, தாமரை இலைத் தண்ணீர் போலப் பெரும் அளவு நீங்கி, நாமும் பிரளயாகலர் என்ற இருமலத்தார் நிலைக்கு உயருகிறோம். முதிர்ந்த விளாம் பழம் கூட்டினுள் இருந்தாலும், ஓட்டினில் ஒட்டாமல் இன் சுவையும் நறுமணமும் பெற்றுத் தனித்துக் கிடப்பது போல், உடம்பினில் பற்றில்லாத உயிரும் மாயாமலக் கட்டினின்று விடுபட்டுச் சிவசத்தியைச் சார்ந்து நிற்கும்

இரு மாயையினாலான உடம்பு: நாம் இப்பொழுது பெற்றிருக்கும் இந்த மனித உடம்பு புறத் தோற்றத்தால் ஒன்றே போல் காணப் பெறுகிறது, எனினும் இது சுத்தமாயை, அசுத்த மாயை என்ற இரண்டு மாயைகளினால் ஆயதாய், ஒன்றினில் ஒன்று நுண்ணிய ஐந்து உடம்புகளை உடையதாய் இருக்கிறது.

ஐந்து உடம்புகள்: நமது உடம்பில் கருவிகளுடன் புறத்தே காணப்படுவது, 'சோற்றால் அடித்த பிண்டம்' என்ற **அன்னமய கோசம்** ஆகும்

இதன் உள்ளே, புறக்கருவிகளை இயக்குகிற பிராணன் இந்திரியங்கள் உள்ள உடம்புக்கு இந்திரியமய கோசம் (அல்லது புலன் உடம்பு, **பிராணமயகோசம்**) என்பது பெயர்.

அதன் உள்ளே, அவ்விந்திரியங்களையும் இயக்குகிற மனம் முதலிய அகக்கருவிகளை உறுப்பாகக் கொண்ட உடம்பு ஒன்ற உள்ளது அதற்கு **மனோமயகோசம்** என்பது பெயர்.

மனோமய கோசத்துக்கு உள்ளே, சிறப்பு அறிவினை நமக்கு ஊட்ட வல்ல ஓர் உடம்பு உள்ளது. சிறப்பு அறிவினை (விசேட ஞானத்தை) இஃது உயிருக்கு ஊட்டுவதால், இதனை **விஞ்ஞான மயகோசம்** என்பர்.

உயிர், பொதுவாக அன்னமயகோசம், இந்திரிய மயகோசம் என்ற புற உடம்புகளில் பரவித்திரிந்து, புற உலக வாழ்வின் இன்பதுன்பங்களிலேயே பெரிதும் அலைமோதித் திரிகிறது. அஃது அவ்வாறு திரிவதற்கு மனம் என்ற ஆறாவது அறிவுக் கருவி துணை நிற்கிறது.

அதனுள் இருப்பது ஆனந்த மய கோசம் ஆகும். மனோ மயகோசத்தின் உள்முக இயக்கத்தால், உயிர், தான் பெறுகிற சிறப்பறிவின் மூலம், ஆனந்த மயகோசத்தை அடைகிறது. அங்குச் சிவபெருமான் திருவடியில் தலைப்பட்டு முத்திப் பேரின் பத்தில் திளைக்கிறது.

இந்த ஐந்து உடம்புகளுள், மனோமயகோசம் நடுவண் அமைந்துள்ளது. மலப்பிணிப்புற்ற உயிர் ஊழ்வினைப்பயனை உரிய காலத்தில் உரிய அளவு நுகர்தற்கும், மாசுகள் நீங்கிய உயிர் இறைவன் திருவடி இன்பத்தில் திளைத்திருப்பதற்கும் ஏற்ப, மனம் என்ற தோழி (அமைச்சு), நடுவண் கோசமாக நின்று, உயிர் என்ற தலைவி (அரசி)யைப் பொறிபுலன் வழி யாகப் புறத்தேயும், விஞ்ஞான ஆனந்தமய கோசங்களின் வழியாக அகத்தேயும் செலுத்துகிறது.

மனம் அவ்வாறு உயிரை வழிநடத்துவதற்கு, மனத்தினை ஆணையிட்டு இயக்குபவள், (சிவபெருமானது பேரருள் ஆற்றலாகிய) சிவசத்தி ஆவள் சிவபெருமானது ஆணைப்படி உயிர்களாகிய நமக்கு ஊழ்வினைகளை ஊட்டிக்கழித்து, மும் மலங்களையும் தனது அருள் பொழிவால் கழுவி, நம்மைச் சிவபெருமான் திருவடியில் உய்விப்பதற்காகவே, சிவசத்தி அனைத்தையும் இவ்வாறு இயக்குகிறாள்.

கோசமும் பாசமும்: இனி, இரண்டு மாயைகளினால் ஆன நமது உடம்பினுள் ஐந்து கோசங்களும் பொருந்தி நின்று தொழிற்படும் முறைமையையும், உயிர் ஆங்காங்கே பெறுகிற இன்ப வேறுபாடுகளையும், இன்பத்தை ஊட்டுகிற இறை இயல்பு களையும், பற்றிச் சிந்திப்போம்.

குறிஞ்சி: ஐந்து கோசங்களுள், ஆனந்தமய கோசம் என்ற அதிநுண்ணிய உள்உடம்பு, சுத்தமாயையினால் ஆயது.

மனித வடிவமைப்பில், நம் தலையிலுள்ள பெருமூளைப் பகுதியாக இதனைச் சிந்தித்தல் பொருந்தும்.

நிலப்பகுதியின் உயர்ந்த இடத்தைக், குறிஞ்சி என்பர். வடபுலத்து உயர்ந்து நிற்கும் மலை, இமயம்; அது நில அதிர்வினால் தோன்றிய ஒரு மடிப்பு மலை என்பர். அங்கிருந்து. கங்கை முதலியவற்றாத புண்ணிய நதிகள் தோன்றி நாட்டை வளப்படுத்துகின்றன அங்குத்தான் சிவபெருமான் மலை மகளோடும், மற்றவரோடும் வீற்றிருந்து உலகு அனைத்துக்கும் திரு அருள் பாலிக்கும் திருக்கயிலாயமலை உள்ளது.

''ஒலிவெள் அருவி ஓங்குமலை நாடன்... ''என ஐங்குறு நூறு 205-ஆவது பாடலும், ''ஒலிதரு கைலை உயர் கிழவோனே!'' எனத் திருவாசகம் கீர்த்தித் திரு அகவலும், குறிஞ்சித் தலைவனது சிறப்பினை விதந்தோதுகின்றன.

நிலப்பரப்பில் உயர்ந்த இமயம் போன்று, மனித உடலில், உயர்ந்த இடமாகிய தலையே குறிஞ்சி ஆகும். பொறுவாகக் கூம்பிய மொட்டுப் போல்று அம்பலாய் நம் தலையினுள் இருக்கும் பெருமூளை. இடையறாத ஆழ்ந்த சிவ தியானத்தின் மூலம், ஆயிரம் இதழ்கொண்ட அழகிய தாமரை மலராக அமர்ந்து, ஒரு மடிப்பு மலையின் தோற்றத்துடன் பொலிவுறு கிறது. ஆகாயகங்கை என்னும் அமுத ஆறு [Cerebro Spinal Fliud] இங்குத் தோன்றி உடல் நலத்தையும் உள்ளத்தின் வளத்தையும் பெருக்குகின்றது.

கூம்பிக்கிடக்கும் நிலையில், பெருமூளையின் இரண்டு கூறுகளும் வெற்றுக் குவியல்களே. சிவபெருமான் திருவடிக்கீழ், அவை இணைமலராய்ச் சேரும் போது, அவையே பதிகரணங்கள் காந்தத் தொடர்பில் உள்ள இரும்புத் துகள்கள் தாமும் அக்காந்த ஆற்றலைப் பெறுவது போல, சிவத்தொடர்புடைய பெருமூளைக் கூறுகள், பதிஞானத்தின் உறைவிடமாகின்றன.

''இணையார் திருவடி என்தலைமேல் வைத்தலுமே
துணையான சுற்றங்கள் அத்தனையும் துறந்(து)
ஒழிந்தேன்'' 8:13:1

''பேராசை யா(ம்) இந்தப் பிண்டமறப் பெருந்துறையான்
சீரார் திருவடி என்தலைமேல் வைத்த பிரான்'' 8 13:10

இங்ஙனம், இதனைச் சிவபெருமானின் தொழிலகம் என்றும், உயர்பக்குவ ஆன்மாக்களின் உறைவிடம் என்றும், சைவ அருளாளர்கள் அனுபவ வழி ஆய்ந்து கூறியுள்ளனர். இதுவே ஆண்டவன் — ஆன்மப் பேரின்பப் புணர்ச்சிக்கான இடம், ஆதலால் குறிஞ்சி ஒழுக்கம், இடம் தலைப்பாடு முதலிய தொடர்கள், பண்டை இலக்கியங்களில் சீர்மிகு சொல்லாட்சி பெற்றுத் திகழ்கின்றன.

முல்லை: அடுத்து, விஞ்ஞானமய கோசம். இஃது அசுத்த மாயையினால் ஆயது. அசுத்த மாயையின் வெளிப்பாட்டை இரண்டு பகுதிகளாகச் சிந்திப்பது சைவ மரபு, ஒன்று, சுத்தமும் அசுத்தமும் விரவிய மேற்பகுதி. இதனைச் சுத்தாசுத்தம் என்பர். மற்றது முற்றிலும் அசுத்தமாகிய கீழ்ப்பகுதி இதனை அசுத்தமாயை (அல்லது பிரகிருதி மாயை) என்று அழைப்பர்.

மனித வடிவமைப்பில், நம் பின்தலைப் பிடரியில் உள்ள சிறுமூளை நடுமூளை முதுகுத்தண்டு இவை அடங்கிய மைய நரம்புமண்டலத்தின் கீழ்ப்பகுதியைச் சுத்தாசுத்த மாயையாகவும், எஞ்சிய உடலை அசுத்த மாயையாகவும் சிந்திப்பது பொருந்தும்.

காடும் காடுசார்ந்த நிலமும் முல்லை. இது குறிஞ்சிக்கும் மருதத்துக்கும் இடைப்பட்டோ, மருதத்துக்கும் நெய்தலுக்கும் இடைப்பட்டோ குறிஞ்சிக்கும் நெய்தலுக்கும் இடைப்பட்டோ இருக்கும். எனவே இங்கு உள்ள தெய்வமும், முழுமுதற் பொருளாகிய சிவத்துக்கும், பாசப்பிணிப்புற்ற உயிர்களுக்கும் இடை நிலைப்பட்ட 'இடைய'ராகவே இருக்கும்.

கொத்துக் கொத்தாகப் பிடரியினுள் சிறுமூளையில் அமைந்திருக்கும் அறிவு நரம்புகளும் (Sensory Nerves), செயல் நரம்பு

களும் (Motor Nerves), ஓர் அடர்ந்த நரம்புக் காட்டினையே நினைவுறுத்தும். சிவசத்தியே இப்பகுதியை நம் ஊழ்வினைக்கு ஏற்ப இயக்குகிறாள். இதனைத் தொல்காப்பியர்......

''வழிபடு தெய்வம் நிற்புறம் காப்பப்
பழிதீர் செல்வமொடு வழிவழி சிறந்து, பொலிமின்...''[1]

என அறிவுறுத்துவார் 'இடையனுக்குப் புத்தி பிடரியிலே', 'பெண் புத்தி பின்புத்தி, என்ற வழக்காறுகளும் இதுபற்றி எழுந்தவையே.

சிறுமூளைப் பகுதியாகிய முல்லையில் ஆண்டவன்—ஆன்மப் பேரின்பக் கூட்டம் நிகழ்தல் இல்லை. எனினும், சிவபெருமானது தொடர்பு நிலைபெற்று இருப்பதாலும், ஆன்ம எழுச்சியின் அடுத்தகட்டம் பெருமூளையிலுள்ள ஆணைத்தானத்தில் நிகழ விருக்கும் புணர்ச்சியே ஆதலாலும், இவை பற்றி ஆன்மா உறுதியாக இருப்பதாலும், ஈண்டு ஆன்மா, பிரிவுக்காலத்திலும் பொறுமையாக ஆற்றியே இருக்கிறது.

மருதம்: ஐந்து உடம்புகளுள் நடுவண் உடம்பாகத் திகழ்வது மனோமயகோசம் ஆகும். மனம் என்ற அசுத்த மாயா தத்துவத்தால் இயக்கப்பெறுவது, இது.

நாது உடம்பின் நெஞ்சுத்தானத்தை மனோமய கோசம் எனச் சிந்தித்தல் பொருந்தும்.

'நிலப்பரப்பில், வயலும் வயல் சூழ்ந்த பகுதியும் மருதம் எனப்படும். வயலின் விளைபொருள்களால் உலகம் வளமுறுகிறது மருதத்திற்குத் தலைவன் இந்திரன்' என்பன தொன்று தொட்ட தமிழ்க் கொள்கை.

நமது மனித உடலில் வளங்கொழிக்கும் வயலாக இருப்பது, நம் நெஞ்சுத் தானத்திலுள்ள இருதயமே. இங்கு உள்ள செங்குருதிப் பூக்களும், வெண்குருதிப் பூக்களும் (RBC & WBC, Red & white Blood Corpuscles) உடலின் இயக்கத்திற்கு இன்றியமையாதவை.

அரசனுக்கு ஓர் அமைச்சனைப் போன்றும், தலைவிக்கு ஒரு தோழியைப் போன்றும், உயிரின் அறிவுக்குத் தூண்டு

1 தொல் புறத்திணை

கோலாக அமைவது மனம் என்ற நடுவண் உடம்பேயாம். அங்ஙனம் மனமும் உயிரும் இணைந்து நின்று, அரசோச்சும் அத்தாணி மண்டபமாக விளங்குவது நெஞ்சுத்தானமே. சரியை, கிரியை, யோகம் ஆகிய மூவகைத் தவநெறியில் நிற்கும் உயிர், தனது தோழியாகிய மனத்தின் துணை கொண்டு தான், இங்குச் சிவபெருமானுக்கு அகவழிபாடு இயற்றுகிறது.

அடுத்துத் தலைவிநிலைக்கு உயர்ந்த, ஞானம் தலைப்பட்ட ஆருயிரும், மனத்தின் தூண்டுதலாலேயே சிவபெருமானுடன் இங்கு ஊடுகிறது. மருதத்திற்கு உரிப்பொருள் 'ஊடல்' என்பது சைவத்தமிழ்க் கொள்கை.

உயிரின் அறிவை விளங்கச் செய்வதற்கும், சிவபரத்தை நன்றிப்பெருக்குடன் சிந்திக்கச் செய்வதற்கும், அவ் உயர்தனிக் கிழவனின் திருவடியில் அணைந்து பேரின்பத்தில் திளைப்பதற்கும், உயிருக்குத் துணை நிற்பது மனமே ஆகும்.

வினைப் பயனை நுகர வேண்டிய ஆன்மா, அந்த அந்த இன்பதுன்பப் பயன்களை நுகர்தற்காக, உயிர்களைப் புலன்களில் ஈடுபடுத்திப் புறக் கருவிகளின் மூலம் புற உலகில் செலுத்துவதும் மனமே ஆகும். அதனாற்றான், ''மனம் போன போக்கெல்லாம் போக வேண்டாம்'' என ஔவையார் அறிவுரை கூறிப்போந்தனர் போலும்!

மனம் ஒன்றிநின்று, குவிந்து உள்முகப்படுவது பேரின்ப வாழ்வு; அதுவே பரந்து, உலக முகப்படுவது சிற்றின்ப வாழ்வு.

பேரின்பம் நிலையானது; சிற்றின்பம் நீர்க்குமிழி போன்றது.

நெய்தல்; பரந்துபட்ட உலகச் சிற்றின்பத்தில், ஊழ்வினை காரணமாக உலவித்திரிகிறது உயிர். எனினும் தனது மெய் யுணர்வு காரணமாக, இறைவனைப் பிரிந்த நிலைக்காக, அஃது ஆற்றாது தவிக்கும். கீழ்முகப்பட்டு இயங்கும் உயிரின் ஆற்றல், அப்பொழுது, அடிவயிற்றில் நிலைகொண்டிருக்கும்.

அடிவயிற்றுச் சிறுநீர்ப்பை (Urinary Bladder) நிலஉலகு உவர்க்கடலை நினைவுறுத்துகிற நெய்தல் ஆகும்.

அகமும் புறமும்: காமஞ்சான்ற உயர்பக்குவ ஆன்மாவைச் சிரசினில் சுத்தமாயையில் சிவபெருமான் புணர்ந்து பேரின்பம் நல்குவதிலிருந்து ஐந்திணை அகவாழ்வு தொடங்குகிறது. அது, சிவயோகத்தில் முதிர்ந்து சிவஞானத்தில் தலைப்படுகிற ஆன்மாவின்கண் நிகழ்வதாகும்.

தொண்டு, மகன்மை, தோழமை என்ற மூவகைத் தவநெறியில் இறைமை உணர்வோடு நின்றபோதிலும் உலகமுகப் பட்டுக் காமஞ்சாலாது வாழும் இருநோக்குடைய ஆன்மா, கைக்கிளையின் பாற்படுவதாகும்.

தொண்டு முதலிய இளமைத் தவநெறியில் பயிலும்போதே, பரமுத்தி முதலிய மூதிர்தவப் பயனைப்பெற முனைப்புடன் நிற்பது, பெருந்திணை யாகும்.

செம்பொருள் அருளும் பேரின்பத்தை நாடாது, மண்ணும் பொன்னும், மங்கையும், பிறவும் அளிக்கும் உலகச் சிற்றின் பத்தை நாடித்திரிவோர் புறத்திணையின் பாற்படுவர், அப்போது அன்னமயகோசமும் இந்திரியமய கோசமும் பெருமளவில் தொழிற்படும்.

இவ்வாறு அமைந்த மனித உடம்பில், நாம் இப்பொழுது பெரிதும் சிந்திக்க இருப்பது. அகத்திணையின் பாற்பட்ட' சுத்தமாயையினாலான ஆனந்தமய கோசமேயாம்.

நீ அறி பூவே:

''எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது
தா(ன்)அமர்ந்து வருஉம் மேவற்(று) ஆகும்''[1]

என்பது தொல்காப்பியம், தத்தம் வினை ஈட்டத்திற்கு ஏற்பவே உயிர்கள் சிறிதும் பெரிதுமான இன்பங்களை நுகர்ந்து வருகின்றன.

அவை படிமுறையில் அறிவு வளம் பெற்று முடிந்த முடி வாகச் சிவபெருமானது திருவடிப் பேரின்பத்தில் திளைக் கின்றன.

1 தொல் பொருள் - 213

உடலோடு கூடிய பொழுது நுகர்கிற பேரின்பத்தைச் சீவன் முத்தி எனவும், உடலின் நீங்கியபோது நுகர்வதைப் பரமுத்தி எனவும் சாத்திரம் வல்லார் உரைப்பர்.

சீவன் முத்த நிலையில் தலைவனாகிய சிவபெருமான் தலைவியாகிய ஆன்மாவை அதன் தலையில் பிட்யூட்டரி என்ற ஆணைத்தானத்தில் புணர்ந்து பேரின்பம் நல்குகிறார். இந்த ஆணைத்தானமே 'பூ' எனச் சிறப்பிக்கப் பெறுகிறது. ஆன்மாவின் இடையறாச் சிவதியானத்தின் விளைவாக இப் பெண்மைத் தானம் பூப்பு எய்துகிறது; இங்குச் சுரக்கும் உயிர்ப்பு நீர், அமுதமாகிறது. இங்கு உயிரின் ஆன்மபோதத்தைச் சிவபெருமான் ஏற்றுக்கொண்டு, தனது ஒப்பற்ற எண்குணப் படிமங்களை ஆன்மாவுக்கு அருளுகிறார்.

''அந்த(ம்) ஒன்(று) இல்லா ஆனந்தம் பெற்றேன்
யாது நீ பெற்ற(து) ஒன்று என்பால்''

என வினவுவார், மணிவாசகர்[1].

தன் தலையில் ஆன்மா அடைகிற இப்பேரின்பமே, பரமுத்தி இன்பத்துக்கு முன்னோட்டப் பயிற்சியாக அமைகிறது

அத்தகைய பேரின்பப் புணர்ச்சியில் ஆண்டவனால் அரவணைக்கப் பெற்ற ஆன்மாக்கள் எண்ணற்றவையாகும்.

''பிறந்தநாள் மேலும் பிறக்கும்நாள் போலும்
துறந்தோர் துறப்போர் தொகை''[2]

''காம பாண(ம்) அட்(டு) அனந்த
கோடிமா தரைப்புணர்ந்த
காளை ஏறு கர்த்த(ன்) எந்தை அருள்பாலா[3]

இவ்வாறாகத் தலைவன் 'அறிந்த பூக்கள்' அளவிட முடியாதன. எண்ணற்ற அப்பூக்களுள் எம் தலைவி கூந்தலின் நறு

---

1 திருவாசகம் 8:22:10

2 திருவருட்பயன் – 11 உமாபதி சிவம்

3 அருணகிரியார் திருப்புகழ்.

மணத்தை ஒத்த பூவும் உளவோ? எனத் 'தோழி' சிவபெருமானை வினவுவதாக அமைகிறது, பாடல். ஆதலால்,

'நீ அறிபூவே' என்ற தொடர், சிவபெருமானால் ஆட்கொள்ளப் பெற்ற கோடானுகோடி பக்குவ ஆன்மாக்களைக் குறிப்பதாயிற்று.

கூந்தல்:

பெண்களின் தோற்றப் பொலிவிற்கு மெருகூட்டுவது கூந்தல் நெற்றி முகப்பிலே தொடங்கித், தலை ஓட்டின் மேலே முழுவதுமாகப் பரவி விரிந்து, பிடரியிலிருந்து இடுப்புவரை அழகுறப் பின்னப்பட்டுத் தொங்கும் தலைமயிர், கூந்தல் எனப்படும்.

இஃது ஒரு புறத் தோற்றம். இதனோடு முற்றிலும் ஒத்த அமைப்புடைய ஓர் உறுப்பு, நம் ஒவ்வொருவர் தலையின் உள்ளேயும் இடம் பெற்றிருக்கிறது.

அதனை அறிவியலார் மைய நரம்பு மண்டலம் (Central Nervous System) என்று அழைப்பர். பெருமூளை, சிறுமூளை நடுமூளை, முதுகுத்தண்டு ஆகியவை அதில் அடங்கும்.

அது திருக்கோயில்களில் உள்ள கொடிக்கம்பத்தையும், நம் வீட்டுத் தொலைக்காட்சிப் பெட்டிக்கான ஒளி ஈர்ப்பானை (TV Antana)யும் ஒத்ததாகும். இதனைச் 'சிவபூமி' என்ற பெயரால் திருமூலர்[1] சிறப்பிப்பார்,

எல்லா மனிதர்களுக்கும் மையநரம்பு மண்டலத்தின் வடிவமைப்பு[2] ஒரே மாதிரியாகத்தான் உள்ளது.

பேரறிவுத் தானமாகப் பெருமூளையும், சிற்றறிவின் நிலைக்களனாகச் சிறுமூளையும். உறக்க காலக் 'கட்டுப்பாட்டு அறை'யாக முகுளம், முதுகுத்தண்டும் அமைந்துள்ளன.

1 'சிவபூமி' - மூன்றாம் அதிகாரம், இயலில் விளக்கம் காண்க
2 'மையநரம்பு மண்டலம்' - மூன்றாம் அதிகாரம், 2 - ஆம் இயலில் காண்க.

மாதொரு பாகன்:

எல்லா இடங்களிலும் சிவனும் சத்தியும்[1] இணைந்தே தொழிற்படுகின்றனர். ஆயினும் சில இடங்களில் சிவத்தின் பேராற்றல் பெரிதும் வெளிப்பட்டுத் தோன்றும், வேறுசில இடங்களில் சிவசத்தியின் அருளிப்பாடு வீச்சாகக் காணப்படும். குழந்தைகளின் நலனைக் குறிக்கோளாகக் கொண்ட ஒரு குடும்பத்தில், அடுக்களையில் தாயின் அன்பும், படிப்பறையில் தந்தையின் பரிவும் மேலோங்கி இருக்கிறதன்றோ? அதே போன்றது தான், இதுவும். ஒரு பெண் தன் கூந்தலை நடுவில் 'வகிடு' எடுத்து. இருமருங்கும் புனைந்து கொள்ளுகிறாள் அன்றோ? அதேபோன்று, தலையினுள் இருக்கும் அறிவுத் தானமாகிய மூளையும் வலது, இடது என இரு கூறுகளாக அமைந்துள்ளது.

பெருமூளையின் வலது கூற்றினைச் சிவனும், இடது கூற்றினைச் சத்தியும், மாதொரு பாகனாக மறைந்து இருந்து இயக்குகின்றனர்.

ஆதிசத்தியும் முருகனும்: பின் தலையிலுள்ள சிறுமூளையினைச் சிவசத்தியின் முதல் வெளிப்பாடாகிய ஆதிசத்தி இயக்குகிறாள்,[2]

நடுமூளை, முகுளம், முதுகுத்தண்டு இணைந்த பகுதியை அம்மையப்பர்தம் இன்பக் குழந்தையாகிய முருகன் தொழிற்படுத்துகிறான். இஃது ஒரு தெய்வீக அமைப்புமுறை சிவயோக நெறி நின்று அனுபவ வழி இதனைத் தெளிவாக உணரலாம்.

சிறைப்புறத் தலைவன்:

சிவசிந்தனை தோன்றுவதற்கு முன்னரும் பின்னரும் பரசிவத்தின் நிலை என்ன? ஆன்மாவின் நிலை என்ன? கருவி கரணங்களின் நிலை என்ன? என்பன பற்றிச் சிந்திப்போம்

---

1 "குவளைக் கண்ணி கூறன் காண்க
அவளும் தானும் உடனே காண்க" - திருவாசகம் - *8:3:64*

2 'வழிபடுதெய்வம் நிற்புறம் காப்ப . . . '' தொல்காப்பியம் பொருள் - *415*

நமது உடம்பு, உயிருக்கு அமைந்த ஒரு சிறைக்கூடமே. இதனை நமக்கு ஆக்கிந்தந்த தலைவர் சிவபெருமான். அவர் நம் தலை உச்சியிலே 'சிறைப் புறத்தானாக'த் தங்குகிறார்.

தலைவியாகிய உயிர் இற்சிறை (இற்செறிவு)ப் படுகிறாள். அப்போது ஏழடுக்கு மூளை அம்பலாய்க் கூம்பிக் கிடக்கிறது. இறை ஆற்றலும் வெளிபடத் தோன்றாதிருக்கிறது.

இனிச் சிவதியானத்தினால் ஏற்படுகிற மாறுதல்கள் யாவை? என உன்னுவோம்.

இடையறாத ஆழ்ந்த சிவதியானம் செய்யும்போது, ஆன்மா மேநிலையுற்றுச் சிவதத்துவத்தை அணைகிறது. அம்பலாய்க் கூம்பிக் கிடந்த அறிவுத்தானம் அலர்ந்து ஆயிரம் இதழ்த் தாமரையாகித் தேனும், மணமும், தெவிட்டாத இன்பமும் நல்குகிறது.

அதுகாறும் இற்செறிவுபட்ட ஆன்மாவை உய்விக்க விழை கிறார் பரசிவம் எனவே இந்த உடற்சிறையுள் புகுகிறார்; ஆயிரம் இதழாகப் பூத்த பெருமூளைப் பகுதியில் திருவடி வைக்கிறார்; நடுநாளத்தை ஆண்மைப் பொலிவுடைய தாக்கி இயக்குகிறார்.

அவ்வாறு பூப்பு எய்திக் காமஞ்சான்ற உயிரின் முன்தலையில், அலர்ந்திருக்கும் சிவஞான பீடத்தில், சிவபெருமான் தேவரும் மூவரும் காணாத தன் அழகிய திருவடியை வைக்கிறார்.

இதனைத் திருவடிதீக்கை எனச் சாத்திரங்கள் சிறப்பித்துக் கூறும்.

"மூலை இருத்தாரை முற்றத்தே விட்டவர்
சாலப் பெரிய(ர்)என்(று) உந்தீபற
தவத்தில் தலைவ(ர்)என்(று) உந்தீபற"[1]

கூம்பிக் கிடக்கும் அம்பல் நிலையில். அறிவுத்தானம் ஒரு வெற்றுக் குவியலே.

---

1 திருவுந்தியார் - 12 2 திருவாசகம் 8:13:1 3 திருவாசகம் 8:13:10

இறைவன் திருவடிக்கீழ்ப், பெருமூளையின் இருகூறுகளும் இணை மலராகச் சேரும்போது, அவையே பதிகரணங்கள் ஆகின்றன. பரவெளியின் பற்பல தத்துவ உண்மைகளும், பரம் பொருளின் தனிப் பெருநிலையும் ஆன்மாவின் சிவஞானக் கண்ணுக்குத் தெளிவாகும்.

காந்தத் தொடர்புடைய இரும்புத் துகள்களும் காந்த ஆற்றலைப் பெறுவது போலச் சிவத் தொடர்பிலுள்ள மூளைக் கூறுகளும் சிவஞானத் தெளிவினைப் பெற்றுப் பேரொளியோடு திகழ்கின்றன.

''ஒரு பெண்ணின் கூந்தலை ஒத்தன, பேரறிவுத்தானங்கள். தொடக்கத்தில் அம்பலாய்க் கூம்பிக்கிடந்த அவை, இடையறாச் சிவதியானத்தால் அலர்ந்து ஆயிரம் இதழ்த் தாமரையாய் மணம் பரப்புகின்றன; சிவபெருமான் திருவடி மலராகின்றன.

இத்தகு இறைமைச்சிறப்பு, சிவஞானம் தலைப்பட்ட உயர் பக்குவ ஆன்மாக்களுக்கே நிகழ்கிறது'' என்பன இப்பாடலி லிருந்து நாம் அறியத்தக்க உண்மைகளாம்.

'சிவபெருமான் ஒருவனே தியானிக்கற்பாலன்' என்ற உப நிடதமொழியை நாம் வாழ்நாளில் உணர்ந்து, பயின்று, உய்தி பெறுவோமாக!

3. பிறை தொழும் பெண்டிர்

ஓர் ஆண்யானையும் பெண்யானையும் அன்புடன் வாழ் கின்றன. அஃது ஒரு வறண்ட பாலை நிலம். நீர் வேட்கையால் பெண்யானை பெரிதும் வருந்துகிறது. தன் அன்பு மனைவியின் வருத்தத்தைப்போக்க ஆண்யானை விரும்புகிறது.

தொலைவில் நெடிதுயர்ந்த ஓர் யாமரம். பொதுவாக யாமரப் பட்டையில் நீண்ட காலத்துக்கு நீர்ப்பசை இருக்கும். எனவே ஆண்யானை அந்த யாமரத்தைத் தன் கொம்பால் குத்துகிறது. பெயர்ந்த அதன் பட்டையைத் தன் துதிக்கையால் எடுத்துச் சுவைத்துப் பார்க்கிறது.

அந்தோ! யாவின் பட்டைசிறிதும் நீர்ப்பசை அற்று வறண்டு அன்றோ கிடக்கிறது?

களிறு தனது இனிய பிடியின் வருத்தம் போக்க இயலாமையை எண்ணித் துயரம் கொள்ளுகிறது; அண்ணாந்து மேலே நோக்கி, அவல நெஞ்சத்தோடு பிளிறுகிறது.

இஃது ஒரு பாலைக்காட்சி, பாலைத் திணைக்கு உரிப் பொருள், பிரிவு என்பது இலக்கணம்.

இக்கருத்தினை உள்ளடக்கிய ஒரு குறுந்தொகைப் பாடலை (307)க் காண்போம்.

பெண் யானையின் வருத்தத்தை நீக்க முயலும் ஆண் யானையைத் தான் செல்லும் வழியிலே கண்டும், தலைவன் தலைவியின் வருத்தத்தைப் போக்க விரைந்து வந்திலனே எனத் தலைவி இரந்து கூறுவதாக அமைகிறது, பாடல்.

''வளைஉடைத்(து) அனைய(து) ஆகிப் பலர்தொழச்
செவ்வாய் வானத்[து) ஐஎனத் தோன்றி
இன்னம் பிறந்தன்று பிறையே, அன்னோ!
மறந்தனர் கொல்ஒ! தாமே களிறுதன்
உயங்குநடை மடப்பிடி வருத்த(ம்) நோனாது
நிலைஉயர் யாஅம் தொலையக் குத்தி
வெள்நார் கொண்டு கைசுவைத்(து) அண்ணாந்(து)
அழுங்கல் நெஞ்சமொடு முழங்கு(ம்)
அத்த(ம்) நீள்இடை அழப்பிரிந் தோரே''[1]

''உடைந்த வளையலைப் போன்ற, மதியின் மூன்றாம் பிறை, இடம் அகன்ற செவ்வானத்தின்கண் விரைந்து தோன்றி, இன்னும் வெளிப்பட்டு வரவில்லையே! அந்தோ! தலைவர் நம்மை மறந்தனர் போலும்!

ஆண்யானை, வருந்திய நடையையும் மடப்பத்தையும் உடைய தன் பெண் யானையின் நீர் வேட்கையாகிய வருத்தத்

1 குறுந்தொகை - 307 கடம்பனூர்ச் சாண்டில்யன்.

தைப் பொறாமல், நெடிது உயர்ந்த யாமரம் அழியுமாறு தன் கொம்பினால் குத்தி, நீர்ப்பசை யற்று வறண்டதனால் சீழ்மைப் பட்ட அதன் பட்டையைச் சுவைத்து

மேலே நோக்கித், தனது பிடியின் துயர்நீக்க இயலாத கையறு நிலைக்காகப் பெரிதும் துயருருகிற நெஞ்சமொடு, அவல மாய்ப் பிறுகின்ற அரிய காட்சியை உடைய நீண்டசுரவழியின் கண்

பிரிவுத்துயரால் நாம் அழுமாறு, (நம்மை) விட்டுப் பிரிந்து சென்ற தலைவர் நம்மை மறந்தனரோ? என்பது பாடலின் வெளிப்படையான கருத்து,

தலைவியைப் பிரிந்து சுரவழிச் சென்றான் தலைவன். பிரிவுத் துயரால் வாடுகிறாள் தலைவி. மீண்டு வாராமையால் தலைவன் தன்னை மறந்திருப்பானா? என்ற ஐயம் அவளுக்கு எழுகிறது

செவ்வானத்தில் மூன்றாம் பிறை தோன்றாமையைத் தலைவன் வாராமையோடு இணைத்துச் சிந்தித்துப் புலம்பு கிறாள் தலைவி.

ஈண்டுப் பிறை என்ற சொல்லுக்கு நிறைந்த பொருள் இருப்பதாகத் தோன்றுகிறதே! அஃது என்ன?

பிறை என்றதுமே, நமக்கு விரைவில் நினைவுக்கு வருவது வானவீதியிலே வளர்ந்தும் தேய்ந்தும் வலம் வருகிற சந்திரனே. முழுவதுமாகக் கலைகள் தேய்ந்த அமாவாசை நாளில், சந்திரன் வானத்தில் காணப் பெறாமையால், அதனைப் பிரிவிற்கும், மூன்றாம் பிறையாகவே அது மீண்டும் பிறத்தலால் அதனைத் தலைவன் மீண்டு வருதற்கும் குறிப்பு உரைத்ததாகக் கொள்ளு வது பொருந்தும்.

திங்களுக்கு ஒரு முறையே மூன்றாம் பிறை வருதலால் அது சிறப்புடையதாயிற்று என உரை விளக்கம் செய்வாரும் உளர்.

அவை எல்லாம் மேலெழுந்த வாரியாகச் சரி எனத் தோன்றினாலும், விழுமிய சங்கப் பாடல்களில், அச் சொல்

லாட்சி எத்தகைய உள்ளீட்டுப் பொருளைக் குறிக்கும் என்பதை நோக்குதல் வேண்டும்

பிறை தொழும் பெண்டிர்

சங்க காலத்தில் பெண்கள் பிறை தொழுதனர் என்பதற்குச் சான்றுகள் பல காட்டுவர் அறிஞர், ஏன் பிறை தொழுதனர் என்பதற்கான காரணமும் கூறுவர்.

நல்ல தொரு கணவனைப் பெறுதல், இன்பமான இல்லற வாழ்வு இவை பிறைதொழுதலின் குறிக்கோளாக இருந்திருக் கின்றன.

பிறைதொழுதற்கும் நல்ல கணவனைப் பெறுதற்கும் என்ன தொடர்பு? இவ்வாறு ஐயம் எழுவது இயல்பு

அதேபோல், பிறை தொழுதலால் இன்ப வாழ்வு எவ்வாறு அமையும்? என்பதும் பலருடைய சிந்தனையைத் தூண்டுகிறது.

''எல்லா உயிர்க்கு (ம்) இன்பம் என்பது
தா(ன்) அமர்ந்து வரூஉம் மேவற்(று) ஆகும்':[1]

என்பது பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முந்திய தொல்காப்பியர் கூற்று

''இன்பம் என்பது யாவர்க்கும் உரிமை; ஆயினும் விதிப் படியே அமையும்" என்பது இதன் கருத்து.

ஊழ்வினையை நுகரவேண்டிய முறை விதி எனப்படும்.

அவ்வாறு 'ஊழ்வினை இன்பம்', பற்றிக் கூறிய தொல் காப்பியர் மேலான, நிலையான, அறிவுமயமான ஓர் உண்மைப் பேரின்பத்தையும் சுட்டி உணர்த்துகிறார் அதனை,

''அந்தமில் சிறப்பின் ஆகிய இன்பம்
தன்வயின் வருதலும் வகுத்த பண்பே"

என்ற நூற்பாவால் அறிகிறோம்,

---

1 தொல்காப்பியம் பொருள் 219
2 தொல்காப்பியம் பொருள் 239

இவை, சைவ ஆகமங்களோடு மிகவும் ஒட்டிய கருத்துடையன. வாழ்வின் ஒவ்வொரு நிலையிலும் இன்பம் இருந்தாலும் அவை பெரிதும் நிலையற்றன சிற்றின்பமாகவே உள்ளன என்பதும், எனினும் ஈறில்லா பேரின்பம் ஒன்று உளது என்பதும், அப் பேரின்பத்தை நாம் இவ்வுடலுடன் இவ் வாழ்விலேயே எய்துதல் கூடும் என்பதும், தொல்காப்பியத்தால் அறியக் கூடிய உண்மைகளாம்.

பேரின்பத்தை அடைவதற்கான நெறிமுறைகளைச் சைவ சித்தாந்த சாத்திரங்கள் மிகச் சிறப்பாக எடுத்தோதுகின்றன.

அந்த நெறிகளைத் தொண்டு நெறி, மகன்மை நெறி, தோழமை நெறி, அன்பு நெறி என வகுத்து விளக்குவர் சைவ அருளாளர். அவற்றை ஒவ்வொன்றாகக் காண்போம்.

சரியை என்பது (சரீரத்தால்) உடம்பால் சிவத்தொண்டு செய்தலாம். திருக்கோயிலைத் தூய்மை செய்தல், நந்தனவனம் அமைத்தல், மலர் தொடுத்தல் முதலிய உடலால் செய்யும், தொண்டுகள் இதில் அடங்கும்.

அப்போது உயிர் சிவபெருமானிடம் வேண்டுவது யாது? மனம் மொழி, மெய் அனைத்தும் கடந்து, மீதானப் பெருவெளியிலிருக்கும் சிவபெருமானைத் தன் அகத்துள் எழுந்தருளுமாறு அகவி அழைப்பது, தொண்டு நெறியாளர் பண்பு.

கிரியை என்பது மனம் முதலிய உட்கருவிகளையும், நீர், பூ முதலிய புறக் கருவிகளையும் கொண்டு சிவலிங்கத் திருமேனியை அகமும் புறமும் பூசித்தல். கரணங்களால் செய்யப் பெறும் காரியங்கள் கிரியை எனப்படும்.

அவ்வாறு கிரியையில் பயிலும் உயிர், சிவபெருமானிடம் வேண்டுவது யாது?

மும்மலப் பிணிப்பால் இருள் கவ்விய தன் உள்ளத்து இருளை நீக்குமாறும், நெஞ்சுத்தானத்தில் பேரொளியான சிவசூரியத் தோற்றத்தை அருளுமாறும் வேண்டுதல் கிரியையாளர் பண்பு.

யோகம் என்பது மனம் முழுமையாகச் சிவதியானத்தில் ஒன்றி நிற்றல் புறத்தே, திருக்கோயில் ஓமகுண்டங்களில் வளர்க்கப்பெறும் சிவாக்கினியைப் போன்று, ஒவ்வொருவருடைய இல்லத்திலும் உள்ளத்திலும் (உடம்பின் அடிவயிற்றில்) சிவாக்கினியை ஓம்பி, அதில் சிவபெருமான் திருவுருவைப் பேரழல் தோற்றமாக வெளிப்படக் காட்டுமாறு ஆன்மா ஒன்றிய உள்ளத்தோடு சிந்திப்பது யோக நெறியாம்.

அப்போது உயிர் இறைவனை வேண்டுவது யாது?

மலமாசுகள் சிவாக்கினியில் சுட்டு எரிக்கப்படவும், வினைகள் அனைத்தும் சிவச்செயலாக நிகழவும், புருவநடுவில் சத்திநிபாதம் என்ற அருள்மழை பொழியவும், சுத்தமாயையாகிய அறிவுத்தானம் விளக்கமுறவும் ஆன்மா இறைவனை இரந்து நிற்கும்.

யோக முதிர்ச்சியில் ஆன்மா ஒன்றிய மனத்துடன் சிவதியானம் செய்யும். அஃது ஆன்மா சிவபெருமானை நோக்கிப் புரியும் 'கன்னித்தவமே' ஆகும் அப்போது ஆன்மாவுக்குப் பல அரிய உண்மைகளைச் சிறிது சிறிதாக இறைவன் உள்நின்றே உணர்த்தி அருளுவார்.

அவ்வாறு ஆன்மா இறைவனால் உள்முகமாக (In-tuition) உணர்த்தப் பெறுபவற்றுள், 'செவ்வாய் வானத்து ஐ எனத் தோன்றிப் பிறக்கும் சிவமாகிய பிறையும்' ஒன்றாகும்.

எனவே சங்க இலக்கியங்களில் காணப்பெறும் பிறைக்கு ஒரு தனிச் சிறப்பு உண்டு; அது பற்றிய செய்திகளை மேல்வரும் பகுதிகளில் விரிவாகச் சிந்திப்போம்.

பிறை சூடிய பெம்மான்:

தக்கனது சாபத்தால் தனது கலைகளை ஒவ்வொன்றாக இழந்து கொண்டிருந்தான், சந்திரன். தன்னைக் காக்கும்படி பிரமனையும் விட்டுணுவையும் வேண்டினான்.

படைக்கும் கடவுள் பிரமன், காக்கும் கடவுள் விட்டுணு: ஆயினும் அவனது தேய்ந்த கலைகளை அவர்களால் திரும்பப் படைத்துத் தரவோ, எஞ்சிய கலைகளைத் தேயாது காத்து நிற்கவோ முடியவில்லை.

எனவே தில்லைக் கூத்தன் திருவடியில் சரண்புகுந்தான், சந்திரன். அவ்வாறு தஞ்சம் புகுந்த மதியைத் தண்ணளியோடு ஏற்றுத், தன் சிரசினில் ஓர் அணியாகச் சூடிக்கொண்டார் சிவபெருமான்.

கலைதேய்ந்த மதி, கண்ணுதலோன் கருணையால், மாதர்ப் பிறைக் கண்ணியாயிற்று. அவரது திருமுடியில் அழகான ஓர் அணியாகவும் திகழ்ந்து கொண்டிருக்கிறது.

இவ்வரலாற்றின் மூலம் நாம் அறியக்கூடிய உண்மை என்ன? ஆணவம் முதலிய மும்மலங்கள் நீங்கி, ஆன்மா ஆண்டவனைச் சரண் அடைதல் வேண்டும். அவ்வாறு சரண் அடைந்தால் அவ்வுயிர் அவரது அருள் நோக்கால், அவர் சிரசிலேயே ஓர் அணியாக நிலைபெறுகிறது.

இவ்வாறு தில்லைக் கூத்தன் தன் திருமுடியில் பிறையைச் சூடியது அவரது தன்னிகரில்லாத் தலைமைப் பண்புக்கும் பேரருள் திறனுக்கும் ஒரு சான்றாகும்.

உடலிடம் கொண்ட பெருமான்:

மனிதனது சாதனைகளுக்குச் சான்று பகரும் கல்வெட்டுக்களைப் போன்றே, நமது மனித உடல்வெட்டும் இறைவனது பெருமைகளை எடுத்தியம்பிக் கொண்டிருக்கிறது.

ஒரு மனிதன் இறந்தாலும் உலகளாவிய மனித இனம் ஊழிவரை இருக்குமன்றோ? எனவே சிவபெருமான் தனது வடிவ, உருவ, செயற்பாடுகளுக்கு நிலையானதொரு சான்றாக நம்மிடத்தில் உருவாக்கி வைத்திருப்பது உடல் வெட்டு ஆகும்.

மனம் என்ற ஆறாவது அறிவினை உடையவன் மனிதன் அவன் தன்னையும், தன் தலைவனையும் நன்கு உணர்ந்து, உய்தி அடைய வேண்டும். அதற்காகவே சிவபெருமான் மனித இனத்துக்குத் தன் உருவத் தோற்றத்தை நல்கினார்.

தில்லைக் கூத்தன் திருமுடியில் ஒளிரும் பிறைமதியைப் போன்றே, உயிர்களாகிய நம் ஒவ்வொருவர் தலையிலும் பிறைமதி ஒன்று உள்ளது. அதனை நாம் எவ்வாறு காண்பது?

பாம்பின் கால் பாம்பு அறியும் என்பது பழமொழி:

ஒரு மொழியைக் கற்றவர்க்கே, அம்மொழியின் நெடுங் கணக்குப் புரியும்; ஒரு கலையில் தேர்ந்தவர்க்கே, அக்கலையின் நுண்ணிய சிறப்பியல்புகள் புலனாகும் அதே போன்றுதான், மனம் ஒன்றிய சிவயோக நெறியில் தலைப்பட்டுத் தேறியவர் களுக்குத்தான், தத்தம் உடம்பிலேயே சிவசாருபம் தெளிவாகும்.

அறிவியல் கருத்து:

மனித உடலியலைத் துணைக் கொண்டும் இவ்வுண்மையை ஓரளவு சிந்திக்கலாம்.

மொச்சை விதையில், இருபருப்புகளும் அவற்றின் நடுவே ஒரு முளையும் இருக்கிறதன்றோ? அதே போன்றுதான், நம் தலையிலுள்ள பெருமூளையின் இருகூறுகளுக்கு இடையில் மூன்று அமுத நாளங்கள் உள்ளன. மூளைக்கூறுகளை ஒட்டினாற்போல் உள்பகுதியில் மொச்சைப் பருப்பினைப் போன்று இருமருங்கும உள்ள நாளங்களை முதல் நாளம் என்றும் இரண்டாம் நாளம் என்றும அறிவியலார் அழைப்பர்.

அவை இரண்டிற்கும் நடுவே, மூன்றாம் பிறையின் வடிவில் அமைந்துள்ள நாளத்திற்கு மூன்றாம் நாளம் (Third Ventricle) என்றே பெயரிட்டுள்ளனர்.

வானத்துச் சந்திரனில் போன்றே இந்த நாளத்திலும் அமுதம் (Cerebro Spinal Fluid - CSF) நிறைந்திருக்கிறது.

முன்தலைப் பகுதியில் உள்ளது பெருமூளை; பின்தலைப் பிடரியுள் இருப்பது சிறுமூளை. இரண்டுக்கும் நடுவில் அமைந்திருக் கிறது நடுமூளை. நடுமூளையை அறிவியலார் இன்பத்தானம் (Pleasure Centre) என்றே அழைப்பர். இந்த நடுமூளையிலிருந்து

வெளிப்பட்டுப் புருவ நடு நோக்கி வளைந்து கிடக்கிறது மூன்றாம் நாளம்.

இனி, எவ்வாறு இந்தப் 'பிறை நாளம்' ஆண்மைப் பொலிவினைப் பெற்றது என்ற வரலாற்றினைக் காண்போம்.

பிச்சாண்டியும் பிறையும்

தவத்திலும் மேலான தனிப்பெருந் தலைவனோ, கற்பிலும் மேலான கடவுளோ இல்லை எனத் தாருகாவனத்து இருடியரும் அவர்தம் பெண்டிரும் தருக்குற்றிருந்தனர் அவர்களுடைய தவ நெறியையும் கற்பொழுக்கத்தையும் சோதிக்கவும் அவர்களை நன்னெறிப்படுத்தி உய்விக்கவும் திருவுளம் கொண்டார், சிவபெருமான்.

தான் ஓர் அம்மணக்கோலச் சுந்தரனாக இருடிப்பெண்டிர் முன் பிச்சாண்டிக் கோலத்தில் சென்றார். அவர்கள் காமவயப் பட்டுத் தம் கைவளைகளை நெகிழவிட்டனர். மோகினி வடிவில் சென்ற விட்டுணுவின் எழிலுருவில் இருடிகள் மயங்கித், தம் நிலை இழந்தனர். இது சைவ புராணம் கூறுகிற இறைவனின் பிச்சாண்டிக் கோல வரலாறு.

சிவபெருமானின் அம்மணப் பிச்சாண்டிக் கோலத்தை ஆலயங்களில் காணலாம்.

பௌராணிகப் பின்னணியில் அமைந்த, சிவபெருமானின் இத்திருக்கோல வடிவமைப்பு, நம் தலையினுள் பிறை வடிவ மூன்றாம் நாளத்தில் பொலிவுற்றுத் திகழ்கிறது.

தாருகாவனத்து இருடிப்பெண்டிரின் தருக்கடக்கியது போலவே, நம்முள் பக்குவ ஆன்மாக்களின் சித்த மலத்தை அறுவித்து, நம்மையும் சிவமாக்கி ஆட்கொள்ளுதற்குச் சிவபெருமான் நம் சிரசினில் இயக்குகிற கருவியே, இப் 'பிறைநுதல்' என்பதைக் கூறவும் வேண்டுமோ?

"சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனைஆண்ட
அத்தன்எனக்(கு) அருளிய வா(று) ஆர்பெறுவார்
அச்சோவே"[1]

தலையினுள் பால் உறுப்புக்கள்: அடுத்து, நம் தலையிலுள்ள பால் உறுப்புகளின் அமைப்பையும், தொழிற்பாட்டையும், பண்பு நலன்களையும் பற்றிச் சிந்திப்போம்.

சுழுமுனையின் இருமுனை:

நமது முதுகுத்தண்டு (Spinrl Cond)க்குச் சுழுமுனை என்று பெயர். இதனை 'மூன்று மண்டலத்தின் முட்டிய தூண்' என்று விதந்து ஓதுவார் ஔவையார் [2]

நமது உடம்பை மூன்று மண்டலங்களாகப் பகுத்துக் காண்பர் அருளாளர். தலையினைச் சந்திரமண்டலம் என்றும் நெஞ்சகத்தைச் சூரியமண்டலம் என்றும், அடிவயிற்றுப் பகுதியை அக்கினி மண்டலம் என்றும் அவர்கள் தெளிவாக உணர்த்துகின்றனர். அந்த மூன்று மண்டலங்களையும் சுழுமுனை இணைத்துச் செங்குத்தாக நிற்கிறது என அமைப்பு விளக்கம் தருகிறார் ஔவையார்.

சுழுமுனையின் அடிப்பாகத்தில் இருப்பது மூலாதாரம். அங்குப் பால் வேறு பாட்டிற்கேற்ப, ஆண் பெண் குறிகள் உள்ளன அன்றோ? இவ்வமைப்பு, மான்[2] என அழைக்கப்படுகிற அசுத்தமாயா தத்துவத்தில் உள்ளது;

புருவநடுவிற்குக் கீழ்உள்ள உடற்பகுதி அசுத்தமாயையினால் ஆயது. கீழ்முனையில் போன்றே, சுழுமுனையின் தலைப்பகுதியிலும் ஒரு மூலாதாரம் உள்ளது. இது, விந்து என்று அழைக்கப்படுகிற சுத்தமாயா தத்துவத்தில் உள்ளது; இங்கும் ஆண் பெண்குறிகள் உள்ளன.

மோகினி, மான் என்ற அசுத்தமாயா தத்துவங்கள் ஆன்மாக்களாகிய நமக்கு விளையாட்டுத் தளம்.

நாதம், விந்து, சாதாக்கியம், ஈசுரம், சுத்தவித்தை என்ற ஐந்தும், விந்து என்ற சுத்த மாயாதத்துவங்கள். அவை சிவ

1, ஔவையார்: 'விநாயகர் அகவல்'
2. சுத்தமாயை - விந்து 5 தத்துவங்கள்
சுத்தாசுத்தமாயை - மோஹினி 7 தத்துவங்கள்
அசுத்தமாயை - மான் 24 தத்துவங்கள் ஆக 36 - தத்துவங்கள்

பெருமான் நமக்காகத் தொழிற்படும் களம். அதன் உள் அமைப்பை நோக்குவோம்.

பிறை ஓர் எல்லை: சுத்தம் அசுத்தம் என்ற இந்த இரண்டு மாயா உடம்புகளுக்கும் நடுவில் அவற்றை இணைத்து நிற்கும் ஓர் எல்லையாக அமைந்திருப்பது பிறை வடிவ மூன்றாம் நாளமாகும்.

சுழுமுனையின் தலைப்பகுதி முகுளம்; அதற்கு மேலே இருப்பது நடுமூளை; நடுமூளையிலிருந்து வெளித்தோன்றிப் புருவ நடுநோக்கி வளைந்து, பிட்யூட்டரி என்ற தலைமைச் சுரப்பியைத் தொட்டுக் கொண்டு இருப்பது, மூன்றாம் நாளமாகும்.

அல்குல்: காம வாயில்களுள் பெருஞ்சிறப்புடையது அல்குல் என்ற பெண்மைச் சின்னமாகும். தொல்காப்பிய[1] மெய்ப் பாட்டியலிலும் இதுபற்றிப் பேசப்படுகிறது.

முதுகுத் தண்டின் கீழ்ப்பகுதியிலுள்ளதைப் போன்றே, மேல் பகுதியிலும், நம் புருவங்களுக்கு நடுவில், உயிர்ப்பு நீர்களைச் சுரக்கும் புனித வாயில் ஒன்று உள்ளது.

இதனை ஆணைத்தானம், ஆக்ஞை எனச் சைவ சித்தாந்திகளும், 'பிட்யூட்டரி — தலைமைச் சுரப்பி' (Pituitary, the Master Gland) என் அறிவியலாரும் அழைப்பதில், ஒருமித்த கருத்துடையவர்களாகவே இருக்கின்றனர். இதனை ஆன்ம அல்குல் என்றும் ஆன்ம ஆவுடையார் என்றும் அழைத்தல் பொருந்தும்

உயிருக்கும் உடம்புக்கும் உள்ள தொடர்பினை இரண்டு நிலைகளில் பகுத்து நோக்குவர், அருளாளர். ஒன்று உலகமுகப் பட்ட பொதுநிலை. மற்றது, அருள் வழிப்பட்ட சிறப்புநிலை. சிறப்பு நிலை எய்தியோரை 'இரு பிறப்பாளர்' எனப்போற்று வது மரபு.

உலகப் பொதுநிலை: உலக முகப்பட்ட பொது நிலையில், உயிரின் ஆற்றல், உடல் முழுவதும் பரவி நிற்கும். அப்பொழுது நம் சிந்தனைகளும் செயல்களும், பல வழிகளிலும் விரிந்தும், பரந்தும் கிடக்கும்.

உண்மைத் தவ நிலை: ஆனால் உயிர் உண்மைத் தவவலியால் சிறப்புற்ற காலத்தில் உயிரின் ஆற்றல் முழுவதும் ஒருங்கே குவிந்து சிறப்பறிவுடைய ஓர் உள் உடம்பின் (விஞ்ஞான மயகோசத்தின்) துணையால் நம் தலையிலுள்ள பிட்யூட்டரி என்ற ஆணைத் தானத்தை அணைந்து நிற்கும்.

உயிராற்றல் இவ்வாறு நம் தலையினுள் குவிந்து நிற்கும் இடம், பெண்மையின் சின்னமாகிய அல்குல்[1] என்றும் தேன் நிலவுத் தானம் என்றும் சங்ககால மெய்யுணர்வாளர்களால் இடம் சுட்டிக் குறிப்புரைக்கப் பெறுகிறது.

ஆண்மையின் ஆணைக்காகக் காத்திருக்கும் பெண்மை இயல்புகள், பிட்யூட்டரி என்ற ஆணைத்தானத்தில் (Master Gland)) பெருகி நிற்கின்றன. காமஞ்சான்ற ஆன்ம எழுச்சியே இது. இதனையே இறைவனும் விரும்புகிறார்

இஃது ஓர் ஞான நிலை.

அரும்பு நிலை; ஆனால், மனிதர்களாகிய நாம் எல்லோரும் பிறக்கும்போதே ஞானிகளாகப் பிறப்பதில்லை, அப்போது, நம் முதுகுத் தண்டின் மேற்பகுதியிலுள்ள 'பிறை நாளம்' ஒரு சிறு குழவிக் குஞ்சாகவே இருக்கிறது. ஆணைத்தானமும் அரும்பாகவே இருக்கிறது.

பருவ வளர்ச்சி: அரும்பாயும், குஞ்சாயுமிருந்த குழந்தைகள் வளர்ந்து, பன்னிராண்டில் பூப்பு எய்திப் பருவ மங்கையராய்ப் பொலிவுறுவதும், பதினாறு ஆண்டில் திண்மையுற்று வீறுடைய காளையராய் விளங்கித் தோன்றுவதும் உலக இயல்பேயன்றோ?

அதேபோல், தொண்டு, மகன்மை, தோழமை என்றவாறு படிமுறையில் உயிர் அறிவு சீராக வளர்ந்ததன் பின்னரே, நாம்

---

1. *அல்குல் தைவரல் - தொல் மெய்ப்பாட்டியல் 15*

தலைமைப் பண்புக்குத் தக்கவராகிறோம். அப்போது பிறை நாளமும், பெண்மைப் தானமும் பேரின்ப உறவுக்கு ஏற்ற வளர்ச்சியைப் பெறுகின்றன.

தலைவனும் தலைவியும்: சிவபெருமான் ஒருவரே ஆண்மகன், அவரே தலைவன். கோடானு கோடி உயிர்களும் பெண் பாலரே, இவை முன்னரும் கூறிய சைவசித்தாந்த உண்மைகள்.

உயிர்களாகிய நாம் சிவயோக நெறிநின்று ஒன்றிய மனத்தோடு சிவபெருமானையே தியானிக்கும் போது, இந்த மூன்றாம் நாளமே முருகன் திருவடியாகவும், சிவபெருமான் திருவடியாகவும், சிவலிங்கமாகவும் பேராற்றலுடனும் ஆண்மைப் பொலிவுடனும் திகழ்கிறது.

'சத்தத்தினுள்ளே சதாசிவம் காட்டி' என்பார் ஔவையார். சத்தம் என்பது நாததத்துவம், சதாசிவம் என்பது கீழே ஆவுடையாரும் மேலே இலிங்கமு மாகிய, சிவபெருமானது அருவுருவத் திருமேனி.

நமது பெருமூளையின் வலது கூறு நாததத்துவம். அதன் இடது கூறு விந்துதத்துவம். இடது கூறைச் சார்ந்து நிற்கும் பிட்யூட்டரி என்பது ஆன்ம ஆவுடையராய்த் திகழ. வலது கூறைச் சார்ந்துள்ள மூன்றாம் (பிறை) நாளம் சிவபெருமானது பிச்சாண்டி ஆண்மைப் பொலிவுடன் இலிங்கமாய்ப் பிட்யூட்டரியைப் பொருந்தி நின்று சதாசிவத் திருமேனியாகத் திகழ்கின்றது. இதனையே ஔவையாரும் சத்தத்தினுள்ளே சதாசிவம் காட்டி எனப் பரவித்துதித்தனர்.

தேன் நிலவு: தண்மையும் இனிமையும் உடையது. விண்மதி அதிலிருந்து அமுதம் பொழிந்து கொண்டே இருக்கும். அதனால் இளங்காதலர்கள் 'தேன்நிலவு' (Honey Moon) இல்பத்தைப் பெரிதும் விரும்புவர்; பொழிலையும், புனலையும் நாடிச் செல்வர்.

நம் தலையிலுள்ள மூன்றாம் (பிறைவடிவ) நாளமும் அவ்வாறு அமுதத்தைப் பொழிகிறது எனவும்,

தலைமக்கள் புணர்ந்து இன்புறுகிற தேன்நிலவுத் தானமாக நம் தலையினுள் இருக்கும் பேரின்பத் தானம் (Pituitary) பிட்யூட்டரி எனவும், கண்டோம். அதனை, ஆன்மாவுக்கு, நுண்ணுடம்பில் அமைந்த ஆன்ம 'அல்குல்' எனவும் அப்பேரின்ப உறவைத் தலைமக்கள் புனல் விளையாட்டு' எனவும் சங்க நூல்கள் சிறப்பிப்பது எத்துணை பெருத்தம்?

விழுமிய ஆண்டவன் - ஆன்மப் பேரின்பப் புணர்ச்சிக்கு இடம் தலை என்பதாலன்றோ, இடந்தலைப்பாடு என்பது தொன்மைச் சங்க நூல்களில் சீர்மிகு சொல்லாட்சி ஆயிற்று?

பிறையும் வான்புரவியும்:

நமது உடலினுள் வான மண்டலமாயிருப்பது சிரசு. அதனுள்ளிருக்கும் மூன்றாம் பிறை நாளத்தைச் சிவபெருமான் வான்புரவி போன்றதொரு ஊர்தியாகக் கொண்டு, ஐந்தொழில் இயற்றுகிறார். இவ்வுண்மையை, இலக்கியங்களிலிருந்தும் அறியலாம்.

''உள்ளம் போல உற்றுழி உதவும்
புள்ளியல் கலிமா உடைமையான''[1]

என்பது தொல்காப்பியக் கூற்று. ''தலைவியாகிய ஆன்மா வினைப்பயன் நுகர வேண்டிய காலத்தில், இறைவன் அவளைப் பிரிந்திருந்தான். ஆயினும், அவ்வான்மா படிமுறையில் தூய்மை யுற்ற போது, உற்றுழி உதவும் அருட்சிந்தையால், இன்புடன் விரைந்து பறக்கும் ஆற்றல் மிகுந்த தன்னுடைய வான் புரவியில் ஊர்ந்து நொடிப் பொழுதில் அத்தலைவிக்குத் திருவருள் பாலிக்கிறான்'' என்பது கருத்து.

''எப்போதும் தேன்புரையும் சிந்தையராய்த் தெய்வப்பெண்
ஏத்திசைப்ப வான்புரவி ஊரும் மகிழ்ந்து''[2]

என வான்புரவியாகிய சிவஊர்தியைப் பாடுகிறார் மணிவாசகர்

1 தொல் - கற்பியல் 53
2 திருவாசகம் 8;19:6 திருத்தசாங்கம்.

'இங்ஙனம், பேரின்பமாகிய பேரருளினை நல்க வல்ல வான் புரவி இன்னும் தோன்ற வில்லையே!' என்பது இக்குறுந் தொகைப் பாடல் தலைவியின் ஆழ்ந்த மனக் குறையாகும்.

பிறை தோன்றாமைக்குக் காரணம் என்ன?

தனது பிடியின் நீர்வேட்கையைப் போக்க விழைந்ததுகளிறு. அதற்காக யா மரத்தைத் தன் கொம்பினால் குத்தியது. ஈண்டு அதன் கடமை உணர்விலோ, செய்வினைத் திறனிலோ எவ்விதக் குறைவுமில்லை. ஆயினும், அந்தோ! யாமரப் பட்டையில் நீர்ப்பசை இல்லை. இஃது எதனைக் குறிக்கிறது? பேரின்பம் நுகர்தற்குத் தக்க பருவத்தைத் தலைவி இன்னும் எய்தவில்லை என்பதையும் ஆகவே, பிறை தோன்றாமைக்குக் காரணம் தலைவனின் மறதியன்று; தலைவியின் அலராப் பருவமே என்பதையும் குறிப்பதாயிற்று

ஆணவ இருள் அறிவை முடக்க, வினைகளின் தொகுதி ஆற்றலைக் கட்டிப்போட, மாயையின் மயக்கத்துள் மருண்டு கிடக்கும் ஆன்மாவுக்குத் தன் சிரசினுள், நீங்காது நிலவுகிற, மூன்றாம் பிறை வெளிப்படத் தோன்றா திருப்பது இயல்பே.

மும்மலங்களும் நீங்கும்போது, ஆன்மத் தலைவிக்கு முதுகுத் தண்டு வழியான கீழ்முகச் செயற்பாடு குறைகிறது. விண்வெளிப் பயணத்துக்கு ஏதுவான, பிறையின் தோற்றம் தெளிவாகிறது. சிரசினுள்ளிருக்கும் மூன்றாம் பிறை வடிவநாளம் சிவதியானத் தால் ஆண்மைப் பொலிவைப் பெற்றுப், பிட்யூட்டரி என்னும் பெண்மைத் தானத்தில் பக்குவ ஆன்மாவுக்குப் பேரின்பம் நல்குகிறது.

ஆதலால், மல நீக்கமும், தேனிலவும் பேரின்பப் பேறுமே சங்ககாலத் தமிழர் விரும்பிய உயர்ந்த குறிக்கோள்கள் என்பது தெளிவு. இராவணம் ஊர்ந்து திருக்கயிலைக்கு மீண்ட சுந்தரனை, உபமன்யு முதலிய பெருந்தவ முனிவரும் வணங்கினர், ஆதலால் ஒளிபொருந்திய பிறையின் தோற்றத்தால், உலகோர் அனை வரும் தொழுது போற்றுவர் என்பது உணரற்பாலது.

அடுத்துக் கன்னிப்பெண்கள் பிறை தொழுதற்கான காரணங் களை நோக்குவோம்: நல்ல கணவனை அடைதல், மழைவளம் பெருகுதல், நன்மக்கட் பேறு, இன்ப வாழ்வு என்பதாகப் பிறை தொழுதலின் நோக்கத்தை உலகியலோடு தொடர்பு படுத்தி உரையாசிரியர்களும் உரைகூறிப் போந்தனர், ஆயினும் மெய்ப்பொருள் விளக்கமாகச் சிந்திக்கும்போது, மும்மல நீக்கம், சிவஞானம் விளங்கப் பெறுதல், சிவபரத்தையே தலைமகனாக அடைதல், அந்தமிலா அறிவின்பத்தில் திளைத்திருத்தல் எனப் பொருள் கோடலே சாலும்

இங்ஙனம் உடலோடு கூடிய நிலையில், சிரசினுள் நிகழுகிற ஆண்டவன் ஆன்மப் பேரின்பக் கூட்டமும், அதன் பயனான இம்மைப் பேரின்பமும், உடலின் நீங்கிய நிலையில் எய்துகிற பரமுத்தியாகிய பேறும், பண்டைத் தமிழ்ச் சான்றோர் தம் வேட்கையாயிருந் திருக்கின்றன.

இவ்வுயரிய தமிழ்ப் பண்பாட்டினை உள்ளடக்கியே, சங்கத் தமிழ்க் கருவூலங்களில் பிறைதொழும் பெண்டிர் பற்றிப் பரவலாகப் பேசப்படுகிறது.

6. முலையிடைக் கிடக்கும் முதல்வன்

தலைவனைப் பிரிகிறாள் தலைவி. பிரிவுத்துயரால், இரங்கி நிற்கும் அவளது ஆற்றாமையைப் புலப்படுத்துகிறது ஒரு குறுந் தொகைப் பாடல். அதனை ஈண்டுக் காண்போம்

''வெம்திறல் கடுவளி பொங்கர்ப் போந்தென
நெற்றுவிளை உழிஞ்சில் வற்றல் ஆர்க்கும்
மலைஉடை அரும்சுரம் என்ப, நம்
முலையிடை முனிநர் சென்ற ஆறே''[1]

---

1 குறுந்தொகை 39, ஔவையார்

இஃது ஔவையார் என்னும் அருந்தமிழ்ப் புலவர் பாடியது.

அரும்பதவுரை: நம் முலையிடை முனிநர் — நமது இரண்டு கொங்கைகளின் இடையே கிடப்பதை வெறுத்தவர்; சென்ற ஆறு — பிரிந்து சென்ற வழியானது; வெ(ம்) திறல் கடுவளி — வெம்மையானதும் பெருவலியுடையதும் மிக்க விரைவானதுமான காற்று; பொங்கர் -- மரத்தின் கிளைகளிலே; போந்தென - வீசுதலால்; உழிஞ்சில் — வாகை மரத்தினது; நெற்று விளை வற்றல் — நன்கு முதிர்ந்த நெற்றினது வற்றல்; ஆர்க்கும் — ஒலிக்கும் இடமாகிய; மலை உடை அரும் சுரம் — குறிஞ்சி திரிந்த பாலை நிலமாகும்.

தலைவன் ஒருவன், தலைவியின் இரண்டு கொங்கைகளின் நடுவில் இன்புற்றிருந்த முந்திய நிலையையும், அவளது முலைகளை வெறுத்து. அவளைப் பிரிந்து, மரக்கிளைகளிலே வெய்ய பெருங்காற்று வலிமையாக வீசுதலால், வாகை மரத்தின் முற்றிய நெற்றுக்கள் ஒன்றுடன் ஒன்று மோதி அவல ஒலி எழுப்புகின்ற மலைகளை உடைய பாலை நிலத்தில், அவன் 'துன்புடன்' செல்லுகிற இப்பொழுதைய நிலையையும். ஒப்பு நோக்கித், தலைவி கவல்கிறதாகக் காட்சி அளிக்கிறது இப்பாடல்.

நெடும்பல்லியத்தை[2] என்ற மற்றொரு பெண்பாற், புலவரும், 'இடைமுலைக் கிடந்தும் நடுங்கலான தலைவனை விளித்து அவனது இயல்பினைப் பாடுகிறார்.

இவ்வாறு இடைமுலைக் கிடந்த தலைவர்தம் நிலையேயன்றிப் பிறை தொழுத பெண்டிர் பற்றிய குறிப்புக் களையும் தமிழ் இலக்கியங்களில் பரவலாகக் காணுகிறோம்.

நாம் இப்போது சிந்திக்க விழைவது யாது? எனில், 'சங்க காலத்துச் சான்றாண்மை மிக்கப் பெண்ணொருத்தி, ஆன்றோரும் அறிஞர்களும் கூடியுள்ள ஓர் அரச அவையிலே, அல்லது

2 குறுந்தொகை - 178

அத்தகையவர்கள் அறியுமாறு, இவ்வளவு வெளிப்படையாகத் தலைவன் தன் முலைகளிடை முன்னர் இன்புற்றிருந்தான் என்பதைப் பாடுவாரா?' என்பதே.

எனவே, முலைகள், பிறை, சுரவழி முதலிய சங்க இலக்கியத் தொடர்களுக்கு, உள்ளீடான குறிப்புப் பொருள்களைச் சங்கப் புலவர்கள் கொண்டிருந்தனர் என்பது துணிவு. முறையாக இவற்றைச் சிந்தித்தல், இவ்விரு பெருமாட்டிகளின் சான்றாண் மைக்கு அரண் செய்வதாக அமையும் அன்றோ?

'இருபேர் உருவின் ஒருபேர் யாக்கை'

முருகப் பெருமானின் வேல்பட்டதும், சூரபதுமனின் உடல் மயிலாகவும், சேவலாகவும் இரண்டு கூறாயிற்று. அசுத்த மாயையான கீழ்ப்பகுதி தூய்மையுற்று, விந்து தத்துவத்தை உணர்த்துகிற மயிலாயிற்று, மயில், முருகப் பெருமானுக்கு ஊர்தியாகக் கீழேயும், சுத்தமாயைப் பகுதியாகிய சேவல் நாத தத்துவத்தை உணர்த்துவதாய் பெருமானது கொடியாக மேலேயும், தத்தமக்கு உரிய இடத்தை அருளப் பெற்றன. இது கந்தபுராணம் கூறுகிற வரலாறு. இதனை,

'இருபேர் உருவின் ஒரு பேர் யாக்கை'

எனத் திருமுருகாற்றுப் படையில் நக்கீரர் உரைப்பார்.

சூரபதுமனின் உடலைப் போன்றே, நமது இந்த உடம்பும் முண்டம் பிண்டம் என்ற இரண்டு கூறுகளை உடையது. முண்டம் என்பது தலை; புருவ நடுவிற்கு மேலுள்ள நெற்றிப் பகுதி; இது விந்து என்னும் சுத்த மாயையினால் ஆனது, பிண்டம் என்பது நம் உடம்பில், முண்டத்திற்குக் கீழ் உள்ள பகுதி. இது (மோஹினி,[1] மான்[2] என்ற இரண்டு கூறுகளை யுடைய) அசுத்தமாயையினால் ஆனது.

---

1 மோஹினி அசுத்தமாயையின் மேல் பகுதி: இறைவன் மறைப்பு ஆற்றலாய் நின்று, ஆன்மாவுக்கு ஊழ்வினைப் பயனை ஊட்டுகிற இடம்; 'சுரவழி' என்ற இலக்கியச் சொல்லாட்சிக்கும் பொருளாய் அமைவது.

2 மான்: அசுத்தமாயையின் கீழ்ப் பகுதி, ஆன்மாவுக்கு ஊழ்வினை நுகர்விடம்

காமவாயில்கள்: முற்றிலும் அசுத்த மாயையினாலான கீழ் உடம்பில் உலக இன்பத்துக்குத் துணைநிற்கும் பலப்பலக் கருவிகளும் காமவாயில்களும் உள்ளன. அவை பருமை நிலையில் யாவர்க்கும் வெளிப்படையாகத் தோன்றுவன. புறத்திணை என்ற உலகவாழ்வில் இன்பம் சேர்ப்பன.

அவற்றைப் போன்றே, சுத்தமாயையினாலான நம் சிரசினுள்ளும் கருவாய்களும் காமவாயில்களும் மிகமிக நுண்ணிய உறுப்புகளாக அமைந்துள்ளன. அவை அகம் என்ற ஆன்மீக வாழ்வில் பேரின்பம் சேர்ப்பன. எனவே, அடுத்து, நம் ஒவ்வொருவர் தலையிலும் உள்ள காமவாயில்கள் பற்றிச் சிந்திப்போம்.

மார்பகங்கள்: (புறமும் அகமும்)

புறத்தே ஒரு பெண்ணுக்குப் பொலிவினைத் தருவன மார்பகங்கள். ஆண்மகனுக்குக் காமத்தைத் தூண்டுகிற காம வாயில்களுள் முதன்மையானவை மார்பகங்களே. பால் உறவுக் காலத்தில் இருபாலார்க்கும் இன்பம் சேர்க்கும் இவை, மகப் பேற்றின்போது பால் சுரந்து, குழந்தைக்கு ஊட்டி மகிழ்வன. உலக நடைமுறையில் ஒரு பெண்ணின் புற உடம்பிலே, நெஞ்சினில் மார்பகப் பொலிவினைக் காணுகிறோம். ஆன்மீகத்தில், நமது நுண்ணிய அக உடம்பில் மார்பகங்கள் எங்கே இருக்கின்றன?

நமது சிரசினுள் அமைந்திருக்கும் பெருமூளையின் இரண்டு கூறுகளுமே, ஒரு பெண்ணின் இரண்டு மார்பகங்களை ஒத்தன. பெருமூளையைக் கீழிருந்து நோக்குகிற இன்றைய மருத்துவ வல்லுநர்களும், பெருமூளையின் கீழ்ப்பகுதியில் இரண்டு முலைக் காம்புகள் (Mamillary Bodies) இருப்பதைச் சுட்டிக் காட்டுகிறார்கள்.

இடைமுலைக் கிடந்த தலைவன் யார்?

பெருமூளையின் இரண்டு கூறுகளுக்கும் உள்ளே, இடது பக்கத்தில் ஒன்றும், வலது பக்கத்தில் ஒன்றும், — ஆக இரண்டு

'அமுத' நாளங்களும் இவற்றிற்கு நடுவே மூன்றாவது நாளம் (Third Ventricle) என்ற ஒன்றும்— ஆக மூன்று அமுத நாளங்கள் நம் தலையின் மையப்பகுதியில் உள்ளன.

பெருமூளையின் இரண்டு கூறுகளுக்கு நடுவில் வான்பிறை வடிவிலே ஓர் உறுப்பு உள்ளது. அதற்குக் கார்பஸ் கலோசம் (Corpus Collosum) என்பது பெயர். இஃது ஓர் ஆணின் பாலுறுப்பினைப் போன்றது. நம் எல்லாருடைய சிரசினுள்ளும் 'மார்பக' மூளைக் கூறுகளுக்கு நடுவில், கார்பஸ் கலோசம் ஆகிய 'தலைமகன்' தொன்றுதொட்டு நீங்காது இருந்து வருகிறான். அவனது இருப்பும் புணர்ப்பும், சிவதியானத்தால் பெரிதும் பக்குவப்பட்ட ஆன்மாக்களால் மட்டுமே தெளிவாக உணரற்பாலது. இதனை இயக்கும் தலைவனே, இடைமுலைக் கிடந்த தலைவன் ஆவான். அவன் யாரெனக் காண்போம்.

அம்பலும் அலருர்:

ஒன்றன் மேல் ஒன்றாக அடுக்கப்பட்ட ஏழு தொப்பிகளின் அமைப்பினை உடையது பெருமூளை என அறிவியலார் கூறுவர். அவ்வாறு உயர்ந்து நின்று பூத்துக் குலுங்க வேண்டிய பெருமூளை, உரிய பயிற்சி இன்மை காரணமாக, நம் போன்ற சாதாரண மக்களுக்கு அவலமாய்க் கூம்பிக் கிடக்கிறது. இவ்வாறு கூம்பிக்கிடக்கும் மூளையை **அம்பல்** என்றும், மலர்ந்து விரிந்த மூளையை **அலர்** என்றும் தொல்காப்பியர் முதலிய பண்டைத் தமிழ்ச் சான்றோர்கள் பகர்ந்துள்ளனர்.

அரும்பு நிலை:

எல்லாப் பெண்குழந்தைகளும் பிறக்கும் போதே மார்பகங்களுடன் தான் பிறக்கின்றன. எனினும் அவற்றின் திரட்சி பிஞ்சு உடம்பிலே வெளிப்பட்டுத் தெரிவதில்லை சிறுமி என்ற அரும்பு நிலையிலிருந்து வளர்ந்து பூப்பெய்திய காலந்தொட்டு, அவளது மார்பகங்களின் எழுச்சியிலும் மாற்றத்தைக் காணுகிறோம்.

அதே போன்றதுதான், உயிர்களாகிய நம் அனைவர் நிலையும். நம் எல்லோருக்கும் நுண் உடம்பில் தலையின் முன்

பகுதியில் மார்பகங்கள் உள்ளன. தெய்வீகத் தன்மையுடைய அவை, தொடக்கத்தில் வெளிப்பட உணரப்படுவதில்லை.

அம்பலை அலராக்குவது யாங்ஙனம்?

உடற்பயிற்சி செய்யும் ஒருவன், கை, கால், மார்பு, முதலிய புற உறுப்புகளுக்கு ஏற்ற பயிற்சிகளை முறையாகத் தொடர்ந்து செய்வதன் மூலம் அந்தந்த உறுப்புகளை எழிலுற வளர்த்துக் கொள்ளுகிறான். அது புற உடம்புக்கான பயிற்சி.

அதே போல், யோகாசனப் பயிற்சிச் செய்யும் ஒருவன், தனது இருதயம், நுரையீரல், வயிறு, குடல் முதலிய உள் உறுப்புக்களை நலமுடன் வைத்துக் கொள்ளுகிறான்.

அதே போன்று, கூம்பிக் கிடக்கும் பெருமூளையை உரிய முறையில் ஒன்றிய மனத்துடன் தியானப் பயிற்சி செய்வதன் மூலம், மலர்ந்து மணம் கமழச் செய்ய இயலும் என்பதில் நமது பண்டைத் தமிழ்ச் சான்றோர் ஆழ்ந்த நம்பிக்கையும், அனுபவ அறிவும் பெற்றிருந்தனர். நாம் சிவதியானத்தை முறைப்படி செய்து வரும்போது, சிவபெருமான் மூன்றாம் நாளத்தினுள் தானே உட்புகுந்து இயக்குகிறார். அஃது ஆண்மைப் பொலிவினைப் பெறுகிறது; பிட்யூட்டரி என்ற பெண்மைத் தானத்தில் (ஆக்ஞை ஆதாரத்தில்) சிரங்குவித்து நிற்கும் உயிராகிய தலைவியைப் புணர்ந்து பேரின்பம் நல்குகிறது.

தொல்காப்பிய ஐந்திணை அக ஒழுக்கத்தைக் கொண்டு, நமது சிரசே குறிஞ்சி என்றும், அதன் தலைவன் சேயோனாகிய முருகப் பெருமான் என்றும், அவனே ஆன்மத் தலைவியரைப் பேரின்பத்தில் செலுத்துகிறான் எனவும் கண்டோம்.

சிவபெருமானும் முருகப் பெருமானும் வேறு வேறல்லர் என கந்தபுராணம் அறிவுறுத்தும். எனினும் கந்தவேளின் தந்தை சிவபெருமான் ஆதலால், தொல்காப்பியர் சிவபெருமானை மிக்கோன்[1] என்ற சொல்லால் போற்றி மகிழக் காணுகிறோம்.

---

1 ''ஒன்றே வேறே என்றிரு பால்வயின் . , '' தொல் களவு - 2

'குறிஞ்சித் தலைவனாகிய முருகனே ஆன்மா என்னும் தலைவிக்கு ஒத்த தலைவன்; எனினும், மிக்கோனாகிய சிவபெருமானே அத்தலைவன் ஆகவும் விளங்கலாம் சைவ சமய நெறியில் அத்தகு இலக்கணமும் உளது என்பது நூற் பாவின் உட்கிடை.

எனவே இடைமுலைக் கிடந்த தலைவனை முருகன் எனக் கொள்ளினும், சிவபெருமான் எனக் கொள்ளினும், இரண்டும் ஒக்கும். அவர்கள் தொழிற்படுத்துவதால்தான், நம் சிரசினில் உள்ள மூன்றாம் நாளம் ஆண்மைப் பொலிவுற்று. இந்த உடம்புக்குள் சிறைப்பட்டிருக்கிற உயிருக்கு உய்தியும் பேரின்ப மும் நல்குகிறது என்பதை நாம் மனங் கொள்ளுதல் கடமை யாகும்.

உலக வாழ்வில் ஓர் ஆண்மகனை முதலிலேயே கவருவன ஒரு பெண்ணின் மார்பகங்கள். அதே போன்று, ஆன்மீக வாழ்வில், பரசிவம் ஒருவரே ஆண்மகன்; அவரை நம்பால் ஈர்க்கும் மார்பகங்களாகத் திகழ்பவை. சிவஞான பீடமாகிய நமது பெருமூளைக் கூறுகளே யாம் (Right and Left hemispheres of the cerebrum).

தியானம்: மனத்தை அலையவிடாமல் ஒன்றியிருந்து இறை வனை நினைக்கும் பயிற்சியைத் தியானம் என்று கூறுகிறோம். 'சிவபெருமான் ஒருவனே தியானிக்கற்பாலன்' என்பது உபநிடதம் கூறுகிற உண்மை, மனம் ஒன்றிச் சிவபெருமானைத் தியானித் தலால், நமது சித்த மலமாகிய ஊழ்வினை நீங்கும்; அறியாமை என்னும் ஆணவக்கூறு அகலும்; அசுத்தமாயையில் அல்லலுற்ற மனம் தூய்மைப்படும்' கீழான சிந்தனைகள் மாறி, விழுப்பமான உயர்ந்த இறை உணர்வுகள் தலைப்படும், இங்ஙனம் சிவதியானம் ஒன்றே உயிர்களாகிய நமக்கு இம்மை இன்பத்தையும், மறுமை வாழ்வினையும், அம்மைப்பேற்றினையும் அடைவிக்கவல்லது.

மந்திரங்கள்: தியானத்திற்கு மந்திரங்கள் பெரிதும் துணை நிற்கின்றன. பரம்பொருளாகிய சிவபெருமான் மந்திர வடிவினன் ஆதலாலும், மந்திரங்கள் நாதத்தின் தலையாய வெளிப்பாடு

ஆதலாலும், ஏனைய பௌதிக மீஒலிகள் (Ultra Sound) யாவற்றிலும் சிவமூலமந்திரம் பலகோடி மடங்கு ஆற்றல் மிக்கது ஆதலாலும், அதனை இடையறாது மனம் ஒதுங்கால் அம்மந்திர ஒலி, இமயமலைச் சிகரங்களை ஒத்த பெருமூளையில் ஆயிரக்கணக்கான இதழ் (மடிப்பு)களிலே ஓர் இனிய அதிர்வினை எழுப்புவதும் உயிரின் அறிவு அவ்வொலி அலைகளிலேயே அழுந்தி நிற்பதும் இயல்பாகிறது.

அப்போது. நுண்ணிய மனக்கண்ணால், சுத்தமாயா தத்துவங்களையும அவற்றின் அமைப்பையும் செயற்பாட்டையும் மிகத் தெளிவாகக் காணலாம். இது சைவ நெறி வழியிலான அனுபவ உண்மை. பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே, நம் தமிழ்ச் சான்றோரால் அறியப்பெற்ற இவ்வுண்மையை இன்றைய அறிவியலாரும் (Scaning முதலியவற்றால்) நடைமுறையில் உறுதி செய்கின்றனர்.

முலையிடை முனிநர்: தலைவியின் மார்பகங்களில் முனிவுற்று அவற்றைப் பிரிந்து சென்ற தலைவன் என்பது இத்தொடருக்குப் பொருள். இதிலிருந்து, முன்னர்ச் சிலகாலம் தலைவன் தலைவியின் முலையிடைத் துஞ்சினான் என்பதும், இப்பொழுது ஏதோ காரணத்தால் அவற்றின்பால் முனிவுற்றான் என்பதும் பெறப்படும்.

இல்லற வாழ்விலும் கூட, ஒரு பொதுவான உலக வழக்கைக் காணலாம். கணவன் பலகாலும் நன்னெறிப்படுத்தி, அறிவுறுத்திய நிலையிலும், மாறுகோள் படுகிற மனைவியை அவன் சிலகாலம் விட்டுப் பிரிவதும், பின்னர்க் கூடுவதும் இயல்பேயன்றோ?

ஔவையாரின் இப்பாடலில். தலைவனின் முனிவுக்குக் காரணம் கூறப்பெறவில்லை; ஆயினும், மாணிக்கவாசகரது திருவாக்கிலிருந்து, முனிவுக்கான காரணத்தை, உய்த்துணரலாம்.

''பரமானந்தப் பழங்கடல் அதுவே......
எந்தம் பிறவியில் கோபம் மிருந்து''[1]

1 திருவாசகம் - திருஅண்டப்பகுதி - 66 & 73

'ஆன்மாக்கள் மும்மலப் பிணிப்பிலிருந்து விடுபட்டு, முத்திப் பேரின்பத்தில் திளைத்திருக்கவேண்டும்' என்பதே சிவபெருமான் திருவுள்ளம், எனவே ஔவையார் கூறுகிற உயர்பக்குவ ஆன்மா எவ்வளவுதான் சீவன்முத்த நிலைக்கே உயர்ந்திருந்தாலும் பிறப்புக்கு வித்தாகிய வினைகள் முழுவதுமாக நீங்கிப் பிறவிப் பிணி அறுத்துக்கொண்டு, பேரின்பத்தினை எய்தவில்லையே என, அத்தலைவிபால் தலைவன் முனிந்தனன் என்று பொருள் கொள்ளுதல் சாலும்.

சுரவழி: அடுந்துச் சுரவழியைப் பற்றிய பாடற் செய்திகளை மீண்டும் நோக்குவோம்: அஃது ஒரு மலை உடைஅருஞ்சுரம். குறிஞ்சி நிலம் திரிபு பட்டதால், பாலையாக மாறிய தன்மையது. முருகனையே தலைவனாகக் கொண்டது குறிஞ்சி நிலம். தலைவனே தலைவியின் பால் முனிவுற்றுச் சென்ற நிலையில், அக்குறிஞ்சி நிலம் தன் வளமை இழந்து, அருஞ்சுரம் ஆயிற்று என்க.

அஃது ஒரு 'வெம்திறல் கடுவளி' வீசுகின்ற சுரம்; அங்கு வீசுகின்ற காற்று வெம்மையும் விரைவும் மிக்கது. தலைவன் தலைவியைப் பிரிந்து, தனித்துச் சென்ற வழி, காற்று மண்டலம் என்பது தெளிவாகிறது. அண்டத்திலும் பிண்டத்திலும் ஐம் பூதங்களின் அமைப்பு முறை[1] ஒரே தன்மையன. நமது உடம் பினுள் காற்று மண்டலமாக இருப்பது நுரையீரலும், கழுத்துப் பகுதியும் ஆகும். இங்குத்தான் சிவபெருமான் மறைப்பு ஆற்ற லாயிருந்து, ஆன்மாக்களாகிய நம்க்கு ஊழ்வினைப் பயனை ஊட்டுகிறான்.

'அஃது ஓர் 'உழிஞ்சில் வற்றல் ஆர்க்கும் சுரம்; வாகையின் முதிர்ந்து உலர்ந்த வற்றல் நெற்றுக்கள் காற்றினால் அலைப் புண்டு, ஒன்றோடு ஒன்று மோதி ஒலி எழுப்பும் சுரம். பாலை என்னும் அகத்திணைக்கு, வாகை என்பது புறம்,

பாடலின் உட்கிடை: தலைவி — ஒரு சீவன் முத்தான்மா. தலைவன்—சிவபெருமான். தலைவி மெய்த்தவ நெறி நிற்பவள்;

1 நிலம் நீர் தீவளி விசும்பொடு ஐந்தும் கலந்த மயக்கம் உலகம் - தொல்-மரபியல் - 91.

தலைவனோடு களவுப் புணர்ச்சியில் இன்பம் துய்த்தவள்; கற்பு வாழ்க்கைக்காகக் காத்திருப்பவள். ஆயினும் அவள் வினை எச்சத்தின் காரணமாக, மாய உடம்புகளில் உறைபவள் இன்னும் இருந்து சாத்துவிக குணத்தைப் பெறாதவள். எனவே அவளுக்குப் பேரின்பம் நிலையானதாக அமையவில்லை.

பிராரத்த வினை நீங்கினால்தான் பிறவித்தளை நீங்கும் மும்மலங்கள் கட்டு விடும்; திருவருள் சித்திக்கும். ஆதலால் வினைகளுக்கு உரிய இன்ப துன்பப் பயனை ஆன்மாவுக்கு ஊட்டிக் கழித்த பிறகு, நிலையான பேரின்பத்தை நல்குவதற் காகவே, அவளது முலைகளை நீங்கிச் சுரவழிச் செல்லுகிறான், தலைவன், அவனது பிரிவு, வினைவயிற் பிரிவு, ஆன்மாவின் ஈடேற்றத்தையே கருத்தாகக் கொண்டது.

நிறைவுரை: சித்தமலமாகிய மூலகன்மத்தையும், ஆணவத்தின் ஆணிவேரையும் அறுத்து, நமக்குப் பேரின்பம் நல்க வல்ல ஒரே தலைவன் சிவபெருமானே; இஃது அருளாளர் பலரும் தம் அனுபவ வழித் தெளிந்து, நமக்கு அறிவுறுத்திய பேருண்மை யாகும். எனவே நாமும் சிவதியானத்தை மேற்கொள்ளுவதன் மூலம், சிவஞானமாகிய தூய மார்பகங்கள் விளங்கப் பெற்றுத் திருவருள் துணையால், பேரின்பம் துய்ப்போமாக!

7. நீர்த் துறைக் காவலன்

அன்னாய் வாழி! வேண்டு, அன்னை! உவக்காண்
மாரிக் குளத்துக் காப்பான் அன்னன்;
தூவலின் நனைந்த தொடலை ஒள்வாள்,
பாசி சூழ்ந்த பெருங்கழல்,
தண்பனி வைகிய வரிக் கச்சினனே![1]

பகற்குறி நாடி வருகிறான் தலைவன், அவனது வருகையை யும், எழிலார் தோற்றத்தையும், அவனுடன் தலைவி பேரின்பம் நுகரத்தக்க முறைமையையும் தோழி தலைவியிடம் எடுத்தியம்பு கிறாள்.

1 ஐங்குறு நூறு - பாடல் எண் 206 - கபிலர்.

அரும்பத உரை: உவக்காண்—நடு இடத்தில் காண்பாயாக; மாரிக்குளம்—மழை நீரால் நிறைந்தகுளம்; காப்பான்—குளத் தின் கரை உடைபடாமலும், குளத்து நீரை ஒருவரும் மாசு படுத்தாமலும் காத்து நிற்போன்; தூவல் — மழைத்துளி; தொடலை ஒள்வாள்— வளைந்து தொங்குகிற, ஒளி பொருந்திய, சூரியவாள்; பாசி—(நீரின்) தூய்மையைக் கெடுப்பதும் மறைப் பது மாகிய மாசு; கழல்—வீரக்கழல்.

விரிவுரை: உவக்காண் காணவேண்டிய பொருள் அருகில் இருந்தால் இவண் காண் என்றும், தொலைவில் இருந்தால் அவண் காண் என்றும், இடைநிலத்தில் இருந்தால் உவண்காண் என்றும் கூறுவர். ஈண்டு உவக்காண் என்பதற்கு இடைநிலைப் பொருளைக் காண்க என உரைபகர்வர்.

இதனை உஅகாண் எனப் பகுத்தும் நோக்கலாம். அப்போது, உகரத்தைக் கொண்டு அகரத்தைக் காண் எனப் பொருள் அமையும்.

ஓம் என்பது பிரணவ ஒலி, இதுவே தில்லைக். கூத்தனின் உடுக்கையிலிருந்து முதலில் வெளிப்பட்ட ஒலியாகும். உயிர் களாகிய நமது உய்திகருதித் தோற்றுவிக்கப் பட்ட இவ்வொலி விரிந்து விரிந்து, அண்ட பேரண்டத் தொகுப்பு அத்துணையும் தோன்றின.

ஓம் என்ற குவிந்த நிலையிலிருந்து அஉம் என்றவாறு பிரணவம் விரிகிறது. ஆதலால் ஓம் என்பதைக் குவி (சமட்டி) பிரணவம் என்றும்: அஉம் என்பதை விரி (வியட்டி) பிரணவம் என்றும் உரைப்பர்.

அறிவியலில், O என்பது ஆக்ஸிஜன் என்ற உயிர்க் காற்றையும், H என்பது ஹைட்ரஜன் என்ற நீர்வாயுவையும் உணர்த்தும் குறியீடுகள் அன்றோ? அவையே போல் அகரம் சிவபெருமானு (Power) க்கும், உகரம் சிவபெருமானது அருளாற்ற

லாகிய சிவசத்தி (Kinetic Energy)க்கும், மகர ஒற்று சடமாகிய மாயா ஆற்றலு (Potential Energy)க்கும் குறியீடுகளாயின.

அகரத்திலிருந்து உகரம் தோன்றுகிறது;
இடியிலிருந்து மின்னல் தோன்றுகிறது;
ஒலியிலிருந்து ஒளி வெளிப்படுகிறது;
நாதத்திலிருந்து விந்து வெளிப்படுகிறது;
சிவத்துள்ளிருந்து சிவசத்தி வெளிப்பட்டுத் தோன்றுகிறாள்

இவ்வாறு ஒரு பொருளிலிருந்து பிறிதொரு பொருள தோன்றினாலும், முதற் பொருளைவிட, அதனின்று தோன்றிய துணைப்பொருளின் வேகம் (விரைவு) மிகுதி.

பிரணவ விரிவும் விளைவும்: 'தாய் எட்டடி பாய்ந்தால்' குட்டி பதினாறு அடி பாயும்' என்பது பழமொழி, அதேபோல், 'ஒலியின் வேகத்தைவிட, அதனின்று வெளிப்படும் ஒளியின் வேகம் பத்துநூறாயிரம் மடங்கு மிகுதி' என்பது அறிவியலார் கணிப்பு. ஆதலால், மின்னலின் பளிச்சிடு ஒளியை முன்னர்க் காண்பதும், அதன் தோற்றுவாயாகிய இடியின் 'தடபுட' ஒலியைப் பின்னரே கேட்பதும் இயல்பு ஆகிறதன்றோ?

அதேபோன்று, அகரமாகிய சிவபெருமானைவிட, உகரமாகிய சிவசத்தி மிகமிக விரைவாகச் செயல்படுகிறாள். எனவே உகரம் முதற்கண் விரைந்து வெளிப்பட்டுப் பரந்து விரிய, அதனை அகரம் தொடர்கிறது. அதனால் அஉம் என்ற விரி பிரணவம் உஅம் (உவம்) என்ற மாறுபட்ட தோற்றத்தைப் பெறுகிறது.

உகரத்தைத் தொடர்ந்த அகரத்தால், தொல்காப்பியத்தில் உவம இயல் தோன்றியது. (உஅம்+அகரச் சாரியை). புலன்

களாலும் பொறிகளாலும் அறியத்தக்க பருமையான பொருள் களை உவமையாகக் கொண்டு, கண்ணுக்குப் புலனாகாத நுண்பொருளையும், உய்த்துணர்தல் வேண்டும் என்பது தொல் காப்பியச் சான்றோன் கருத்து. இவ்உண்மை அவரால் பல வாறாக உணர்த்தப் பெறுகிறது.

நிலப்பரப்பில் உயர்ந்தது குறிஞ்சி, எனினும் அது முல்லையைத் தொடர்கிறது. சேயோன் ஆகிய சிவபெருமான் மாயோனாகிய சத்தியைத் தொடர்கிறான். இவ்வாறாகச் சத்திநிபாதத்தைத் தொடர்கிறது சிவசீவக் கூட்டம்.

உலகியலிலும் இவ்வுண்மை நன்கு புலனாகும். நாம் ஒரு தாயின் கருவிலே உருப்பெறுவதற்குத் தோற்றுவாயாக இருப்பவர் தந்தையே யாயினும் அத்தாய் காட்டிய பிறகுதானே தந்தையை அறிகிறோம்? அதேபோல்,

சிவசத்தியின் துணையால் சிவத்தைக் காணவேண்டும் என்பது சைவக் கொள்கை. அண்டசராசரங்களையும் தோற்றி யும், காத்தும், இயக்கி அருள்புரிபவன் சிவபெருமானே; அங்கு அவனுக்குத் துணைநிற்பவள் சிவசத்தியே. ஆதலால்,

உவக்காண் என்பதற்கு வேறுவகையாலும் பொருளைச் சிந்திக்கலாம். 'பேரின்பமாகிய உவகையை இப்பொழுதே எய்து தற்குக்காண்'; 'உவகையுறுதற் பொருட்டுக் காண்' 'உவகையுடன் காண்' எனப்பல பொருள்பட நூலாசிரியர் அதனை வியங்கோளாக்கினர் எனலும் பொருந்தும், பேரின்ப மாகிய உவகையை ஊட்டுபவர், சிவபெருமான்; அத்தகைய பேரின்ப உவகையும் இவ்வுலக வாழ்விலேயே நாம் அடையக் கூடிய ஒன்றுதான் என்பது பண்டு தொட்ட சைவத்தமிழ்க் கொள்கை. இக்கருத்தைத் தொல்காப்பியரும்,

---

1 உ அக்காண்,

2 உவக்காண் என்றவாறு இத்தொடரில் சைவ சித்தாந்தத் தத்துவப் பொருள், பொதிந்து கிடப்பதை உன்னி உணர்க

3 உகரத்தைக் கொண்டு அகரத்தை உள்முகமாகக் காண்க

4 'சிவசத்தியைக் கொண்டு சிவத்தைச் சிந்தையுள் காண்க'

"அந்தமில் சிறப்பின் ஆகிய இன்பம்
தன்வயின் வருதலும் வகுத்த பண்பே"[1]

என்ற நூற்பா மூலம் செவ்விதே உரைப்பர்.

தொல்காப்பியர் செய்யுளியலில் முப்பத்து நான்கு செய்யுள் உறுப்புகளைச் சிறப்பாகத் தொகுத்தும் வகுத்தும் கூறுவார். அவற்றுள் நோக்கு என்பதும் ஒன்றாயிற்று. உவக்காண் என்ற ஐங்குறுநூற்றுத் தொடர், தொல்காப்பியரது 'நோக்கு' என்ற இச் செய்யுள் உறுப்பினைப் பெரிதும் சார்ந்து நிற்கக் காணலாம்.

ஆன்ம சிற்றறிவு பரம் பொருளை நாடாத இளமைப் பருவத்தினைக் 'காமஞ்சாலாப் பருவம்' என்பார் தொல் காப்பியர். அப்பருவத்தில், நமது முகத்தில் உள்ள இரண்டு கண்களும் மேலும் கீழுமாக இமைத்து, இயங்கிப், புறப் பொருள் களையே கண்டு கொண்டிருக்கின்றன. காட்சிப் பொருள்கள் சேய்மையில் இருப்பின், அவண்காண் என்றும், அணிமையில் இருப்பின், இவண்காண் என்றும் கூறுவது உலக வழக்கம்,

திரைப்படம் காட்டுவதில் பயன்படும் இரண்டு கார்பன் களைப் போன்று நமது தலையினுள்ளும் இரண்டு முக்கிய நரம்புகள் உள்ளன. அவற்றிற்கு OLFACTORY NERVES என்று பெயர் சிவயோக நெறியில் முதிர்ந்து, சிவதியானத்தில் முறையான பருவம் எய்திய காலத்தில் நம் இரு கண்களின் நோக்கும் சிவமூலமந்திர ஆற்றலால், மின் இயக்கம் பெறு கின்றன; ஒன்றை ஒன்று தம்முள் பொருந்தியும் பிரிந்தும், பொருந்தியும் பிரிந்துமாகப் புருவ நடுவில் கூடுகின்றன; புதிய தோர் எழுச்சிக்கும் வித்திடுகின்றன.

ஈண்டுப் பொருந்துவன கண்களின் நோக்கே (olfactory நரம்புகளின் ஆற்றலே) என்பதும் கண்மணிகள் யாண்டும் பொருந்துதல் இல்லை என்பதும் குறிப்பு.[2]

---

1 தொல் - பொருளியல் 239

2 'நிலம் மயங்குதல் இல்லை; கருப்பொருள் மயங்கும்' என்ற தொல்காப்பியரது அறிவுரை காண்க.

அப்போது ஆன்ம அறிவு அணிமையிலோ, சேய்மையிலோ உள்ள புறப்பொருள்களை நோக்கிப் புறத்தே செல்லாமல் உள்முகமாக (Subjective Experience) அகநோக்கில் செல்லு வதையே ஐங்குறு நூற்றாசிரியர் 'உவக்காண்' என்றனர்.

இது காறும் 'உவக்காண்' என்பதற்கு இலக்கிய, தத்துவ, அறிவியல் பொருள் கண்டோம். ஆயினும் நடைமுறைப் பயிற்சியில் இடைநிலத்தில் உவக்காண்பது யாங்ஙனம்? பேரின்ப உவகையை எய்துமாறு காண்பது யாங்ஙனம்? சச்சிதானந்தப் பொருளை உவகையுடன் இவ்வுடலினுள் காண்பது யாங்ஙனம்? என்ற வினாக்கள் எழுகின்றன அன்றோ? இவற்றிற்கான விடையை அறிவியல் துணைகொண்டு ஆய்ந்து நோக்கலாம்.

மின்சாரம் (Electricity) என்பது இயல்பால் ஒரே பொருள். அஃது அவ்வாறு ஒன்றாகவே இருந்துவிட்டால், நமக்கு ஒரு பயனும் இல்லை, எனவே அது நேர்மின் ஆற்றல், எதிர்மின் ஆற்றல் (+ve, —ve) என இரு கூறுகளாகப் பிரிந்து, தனித் தனிச் செப்புக்கம்பிகளில் ஓடி, ஓர் இணைப்பான் (Switch) மூலம் பொருதும்போது, மின்ஆற்றல் வெளிப்பட்டு ஒலி, ஒளி வடிவில் நமக்குப் பலவாறாகப் பயன் தருகின்றது அன்றோ?

அதே போல், நமது அறிவின் நிலைக்களனாகிய மூளை என்பது ஒரே பொருள்; ஆயினும் வலது இடது என்ற இரண்டு கூறுகளாகித் தொழில்படுகிறது. ஒருவரேயாகிய பரசிவம், உயிர்களாகிய நமது உய்தி கருதிச் சிவன் சத்தி என இரண்டு கூறாகி ஐந்தொழில் புரிகிறார். சிவன் மூளையின் வலது கூறினையும், சத்தி இடது கூறினையும் இயக்குகின்றனர். அவை முறையே நாத தத்துவம், விந்து தத்துவம் ஆகின்றன அவ்விரண்டும் பொருந்திய நிலையில் அவ்விருமூளைக் கூறுகளுக்கு நடுவில் உள்ள மூன்றாம் நாளம் சாதாக்கிய தத்துவமாகப் பேராற்ற லோடு இயங்கத் தொடங்குகிறது. மூறுகிய சிவதியானத்தால் அஃது ஊற்றம் பெறுகிறது.

சாதாக்கியம் என்பது என்ன? சிவனும் சத்தியும் முறையே அறிவும் செயலுமாகச் சம அளவில் அருஉருவாய் விரவி நிற்கும்

சிவலிங்கத் திருமேனியைச் சாதாக்கியம் என்பர். திருக்கோயில் கருவறையில் உள்ள சிவலிங்கத்தைப் போன்றே, நம் சிரசின் நடுவில், Corpus Collosum என்ற அறிவியல் பெயரோடு ஓர் உறுப்பு அமைந்திருக்கின்றது. இதனை நெற்றிக்கண் என்பர் சைவ அருளாளர். எனவே வலது கண்ணுக்கும் இடது கண்ணுக் கும் இடையில் புருவ நடுவில் உவக்காணின், நெற்றிக்கண்ணாகிய இந்த மூன்றாம் ஞானக்கண் புலனாகும். தற்கால அறிவியலில் மீ ஒலி (ultra sound) மூலம், புறப்பொருள்களை நிழற்பட வாயிலாக (Scan செய்து) காண்பது போல, ஒவ்வொருவரும் தத்தம் உள்ளுறுப்புக்களை அகக் கண்ணால் காணமுடியும். என்பதை, இற்றைநாள் விஞ்ஞானமும் ஏற்கிறது இதனைச் 'சத்தத்தினுள்ளே சதாசிவம் காட்டி' என ஆயிரம் ஆண்டு களுக்கு முன்பே, ஔவை மூதாட்டியும் 'விநாயகர் அகவலில் அறிவுறுத்தியுள்ளமை காண்க.

சிவபெருமான் பேரின்பப் பொருள், அவரைக் காண்பதும் உவகை; காண விழைவதும் உவகை. 'உடம்பினை முன்னம் இழுக்கு' என்று எண்ணியிருந்த திருமூலர் போன்ற சைவப் பேரருளாளர்களும் சிவதியானத்தில், சிவமூல மந்திர ஒலியின் பேராற்றலால், உடம்பினுக்குள்ளே உறு பொருளாகிய பரம் பொருளின் பலதிற, வடிவ, உருவ வேறுபாடுகளையும், செயற் பாடுகளையும், பேரின்பப் பயனையும் உள்முகமாகக் கண்டு உவகை கொண்டிருக்கின்றனர்.

எனவே உவகை எய்துதல் வேண்டுமென்ற வேட்கையோடு, உவமப் பொருளாகிய மூன்றாம் நாளத்தையே சிவலிங்கமாகச் சிந்தித்து உவகையூட்டும் அப்பேரின்பப் பொருளைச் சிவமூல மந்திரத்தின் துணைக் கொண்டு, இரண்டு கண்களுக்கும் இடைப் பட்ட புருவநடுவில், உவகையுறுதற் பொருட்டு உவகையுடன் காண்க என ஐங்குறுநூற்றின் ஆசிரியர் அறிவுறுத்துகிறார். அதற்கேற்ப, நாம் உவக்காணின், நம் தலையின் மையப் பகுதி யில் சிவலிங்கத் திருமேனியைக் காணலாம் என்பதும், மூன்றாம் நாளமே சிவலிங்கமாகத் திகழப் பிட்யூட்டரியே ஆன்ம ஆவுடையா ராக இருக்க, ஆண்டவன் ஆன்மப் பேரின்பப் புணர்ச்சியில் ஆன்மா திளைக்கும் என்பதும் உறுதி.

மாரிக்குளம்: கார்காலத்துப் பெருமழையால், குளத்தில் நீர் நிறையும் என்பது உலகியல் உண்மை, அதேபோல் சத்தி நிபாத அருள்மழையால் ஆன்மாக்களின் சிரசு ஓர் அமுதக் கடலாகிறது என்பதும் அவர்கள் 'கொள்கையினால் உயர்ந்த நிறையுடையா' ராகின்றனர் என்பதும் சைவசித்தாந்தம் அறிவுறுத்தும் தத்துவ உண்மைகள்.

இதனை மணிவாசகர் போன்ற அருளாளர் தம் அனுபவ மூலம் நன்கு உணரலாம். [4]'சிறைபெறா நீர்போல் சிந்தை வாய்ப் புகுந்த திருப் பெருந்துறையுறை சிவனே' என்பது திருவாசகம்.

இற்றைநாள் அறிவியலைக் கொண்டு சிந்திப்பின், இது நம் சிரசினுள் நிறைந்திருக்கிற மூளைநீர் (Cerebro Spinal Fluid—CSF) என்பதோடு ஒத்திருக்கக் காணலாம். இதனை விரிவாகப் பின்னர்க் காண்போம்.

எல்லா மனிதர்களுக்கும் இம்மூளைநீர் இருப்பினும், இடையறாச் சிவதியானத்தினால், சத்திநிபாத அருள் மழைப் பொழிவினைப் பெறுகிற உயிர்களுக்கு, மூளை நீரே பேராற்றல் உடைய அமுதமாகி, ஆன்ம அறிவுக்கு அப்பாற்பட்ட பல அரிய சிந்தனைகளுக்கு வளமூட்டுகிறது. எனவே அவர்கள் கொள்கையினால் உயர்ந்த நிறையுடையோர் ஆகின்றனர்.

காப்பான்: உலக நடைமுறையில் குளத்தை ஒருவன் எவ்வாறெல்லாம் காப்பான்? பெருமழையினால் நீர் பெருகிய குளத்தினைக், கரை உடையாமல் காத்தல் என்பது ஒருவகை; நீர் நிறைந்த குளத்தில் நீராடத் துணிவோரை எச்சரித்துக் காத்தல் என்பது மற்றொரு வகை; குடிநீர்க் குளமாயின் மக்களும் மாக்களும் அதனை மாசுபடுத்தாமல் காத்தல் என்பது பிறிதொருவகை.

உலகத்து நீர்நிலைகளை இவ்வாறு காத்து நிற்கும் காவலனைப்போலச் சிவபெருமானும் உயிரினத்தின் காவலனாகத் தோன்றுவதைத் தோழி தலைவியிடம் விதந்தோதுகிறாள்.

கரை உடையாது காத்தல்:

சிவபெருமான் ஆகாய கங்கையைத் தன் சடையிலுாய் அடக்கி: நாம் வாழும் நில உலகைக் காத்தருளினார் என்பது புராணம்.

'மலைமகளை ஒருபாகம் வைத்தலுமே மற்றொருத்தி
சலமுகத்தால் அவன்சடையில் பாயு(ம்' அது என்னேடீ!
சலமுகத்தால் அவன்சடையில் பாய்ந்திலளேல், தரணி எல்லாம்
பிலமுகத்தே புகப்பாய்ந்து பெருங்கேடாம் சாழலோ: (8:12:7)

என்பது புத்தரை வாதில் வென்ற மாணிக்கவாசகரது கூற்று. சிவபெருமான் ஆகாய கங்கையின் ஆணவத்தை அடக்கித் தரணியினைக் காத்தருளிய தகைமைக்கு இப்பாடல் ஒருசான்று.

எச்சரித்துக் காத்தல்: தலையாய சைவத்தினை நீங்கிப் புறப்புறச் சமயமாகிய சமணத்தில் சார்ந்து, அவல வாழ்வில் உழன்றதற்காக இரங்குகிறார் அப்பரடிகள். அவரது தேவாரத்தைக் கேட்போம்:

"காத்தாள்பவர் காவல் இகழ்ந்தமையால்,
கரைநின்றவர் கண்டுகொள் என்று சொல்லி
நீத்தாய கயம்புக நூக்கியிட நிலைகொள்ளும்
வழித்துறை ஒன்றறியேன்.........

ஊட்டிக்காத்தல்: சிவபெருமான் திருவுளப்படி, அவரது அருளாற்றலாகிய சிவசத்தி, பரஞானம் என்ற இறை அறிவினையும் அபரஞானம் என்ற உலக அறிவினையும் தனது திருமுலைகளிலிருந்து சுரந்து, அமுதத்தில் கலந்து ஆருயிர்க்கு ஊட்டுகிறாள். உயிர் அதனை உண்டு, இன்பத்தில் திளைக்கிறது.

நமது உடம்பில். தலையிலுள்ள பெருமூளையின் இரண்டு கூறுகளே பெருமாட்டியின் இரண்டு திருமுலைகள் என்பதையும், அங்குச் சுரக்கும் பரஞான அபரஞானத்தை உண்டு, உயிர் சிவஞானத் தெளிவு பெறுகிறது என்பதையும் அனுபவழி உணரலாம்.

'காயத்துள் அமுது ஊற ஊற, நீ கண்டு கொள்'

என்று காட்டிய

சேயமாமலர்ச் சேவடிக்கண் நம்சென்னிமன்னித் திகழுமே'[1]

என்ற மணிவாசகரது அனுபவ மொழியை ஈண்டு இணைத்துச் சிந்திப்பது நற்பயன் தருவதாகும்.

தூவல்; மழைச் சாரல், ஈண்டு சிவசத்தியின் அருள்மழை வீழ்ச்சியைக் குறிப்பதாயிற்று; இதனைச் சத்திநிபாதம் என்பர்.

இருவினை ஒப்பு, மலபரிபாகம், — இவற்றைத் தொடர்வது, சத்திநிபாதம், என்பது சைவசித்தாந்தம். எனவே இருவினை ஒப்பு என்றால் என்ன, மலபரிபாகம் என்றால் என்ன, என்பது பற்றி முதற்கண் ஓரளவு அறிதல் வேண்டுமன்றோ?

மும்மலங்கள்யாவை? சிவபெருமான் என்னும் தலைவனிடம், உயிர் என்ற தலைவி அனுக முடியாதவாறு தடையாயிருப்பன, ஐந்து மலங்கள், அவை: ஆணவம், கன்மம், மாயை, திரோதாயி, மாயேயம் என்பன.

அவற்றுள் திரோதாயி எனப் பெறுவது சிவசத்தியே. அவள் நமது ஊழ்வினைக்கு ஏற்ப இன்பதுன்பங்களாகிய பாலை, மறைந்திருந்து உரியகாலத்தில் நமக்கு ஊட்டுகிறாள்; அவ்வினைகள் நீங்கி. நல்லறிவு பெறுகிறவரை நாம் ஆண்டவனை அடைய முடியாதவாறு சிவசத்தி நம்மை உலக முகப்படுத்துகிறாள். நாமும் புறநோக்கிலேயே அலைகிறோம், எனவே இடைக்காலத் தடையாக நிற்கும் அவளையும் பாசங்களுள் ஒன்றாக்கினர் ஆன்றோர்.

மாயேயம் என்பது மாயையின் காரிய வெளிப்பாடு. நமது ஊழ்வினைக்கு ஏற்பச் சிவசத்தியால் நமக்கு மாயையி லிருந்து உடம்பு, உட்கருவிகள், உலகம், நுகர்பொருள்கள் ஆகியவை படைத்துத்தரப்படுகின்றன. வினைநுகர்ச்சிக்கும் அறிவு விளக்கத்துக்கும் துணையாக வெளிப்படுகிற அவை, காலமுதிர்வுவரை வேற்றுப்புலனிலேயே நம்மைக் கவர்ந்து இழுப்பதால் அவையும் மலமாயின.

---

1 திருவாசகம்: சென்னிப்பத்து 5

ஆகவே இடைக்காலத் தளைகளாகிய திரோதாயி, மாயேயம் என்ற இரண்டையும் நீக்கி அநாதியாகிய ஆணவம், கன்மம், மாயை என்ற மூன்றையும், மும்மலங்கள் எனக்குறிப்பது மரபு

இருவினைகளின் தோற்றமும் தொழிலும்: நான் என்ற தற்போத உணர்வோடும், தன்முனைப்போடும் செயற்படும் போது, அதுவே நல்வினை, தீவினை என இருவினையாகிறது; புண்ணியமாகவும் பாவமாகவும் மாறுகிறது; உரியகாலத்தில் இன்ப துன்பப் பயனைக் கொணர்கிறது; அப்பயனை நுகர்தற் பொருட்டு, மறுமறு பிறப்புக்கும் வித்தாகிறது.

தற்போதத்தையும் தன்முனைப்பையும் விட்டு, அனைத்தும் சிவபெருமான் திருவுளப்படி, அவரது பேரறிவுத் தூண்டுதலால், அவருடைய செயலாகவே நிகழ்கின்றன என்ற உணர்வு, ஒவ்வோர் உயிருக்கும் ஒரு காலகட்டத்தில் நிகழவே செய்யும்.

அப்போது நல்வினை தீவினை என்ற இருவினைகளையும் உயிர், வேறுபாடின்றிக் காணும். அவ்வாறு உயிர் இருவினை களையும் ஒப்ப நோக்கி உவர்த்தலை, **இருவினை ஒப்பு** என்பர் அருளாளர். முந்திய வினைகள் நுகர்ந்து கழிக்கப்பட்டுப் புதிய வினைகளும் ஏறாத நிலையில், கன்ம மலம் ஒடுங்கும்.

நான் என்ற அகங்காரமும், எனது என்ற மமகாரமும் ஆணவத்தின் வலிய கூறுகள், அவை நம்மில் நீங்கியபோது ஆணவம் என்ற அநாதி மூல மலமும். நம்மிடத்தில் தன் ஆற்றலைச் செலுத்த முடியாது ஒடுங்கும். இவ்வாறு ஆணவ மலம் ஒடுங்குவதற்கான துணைக்காரணங்கள் தொழிற்படுவதை **மலபரிபாகம்** என்பர் அருளாளர்.

தாய் அன்பு:

ஒரு சிறுகுழந்தை மலங்கழித்ததும், அக்குழந்தையின் அன்புத் தாய், மனமகிழ்வோடு, தண்ணீர்கொண்டு அதனைத் தூய்மை செய்து தந்தையிடம் சேர்ப்பிக்கிறாள் அன்றோ? அதேபோன்று இருவினை ஒப்பும் மலபரிபாகமும் நிகழ்ந்த நிலையில், ஆன்மா வின் பால் கருணைகொண்டு, சிவசக்தி தன் திருவருளையே மழை யாகப் பொழிகிறாள். இதனைச் **சத்திநிபாதம்** என்பர்.

மாயையினாலான இந்த உடம்பின்கண் சத்திநிபாதம் எவ்வாறு நிகழ்கிறது என்பதை நோக்குவோம். உயிரின் செயற்பாட்டிற்குத் துணையாக இந்த உடம்பு இறைவனால் நமக்கு அருளப்பெற்றது. அப்போது சிவசத்தியின் முதல் வெளிப்பாடாகிய ஆதிசத்தி உடம்பின் பின்தலைப் பிடரியைத் தனது இருப்பிடமாக[1]க் கொள்ளுகிறாள், அங்கு அவள் மறைந்திருந்து தொழிற்படுதலாலும், ஊழ்வினை முடிவும் அறிவுத் தெளிவும் நிகழும் வரை, நமது கண்களுக்கு இறை இன்பத்தைக் காட்டாது மறைத்தலாலும், அவளுக்குத் திரோதாயி (மறைப்பு சத்தி) என்பது பெயராயிற்று.

வினைகளுள் உயிர் அழுந்தி நிற்கும் காலங்களில், திரோதாயி என்ற ஆதிசத்தி, முதுகுத்தண்டினைச் சுற்றிக் கீழ்நோக்கியே நம்மைச் செலுத்துகிறாள்; வினைக்கு ஏற்ற ஊனப்பாலை ஊட்டுகிறாள்.

வினைகளும் நீங்கி, நான் என்ற அகந்தையும் (ஆணவமலக் கட்டும்) அறுபட்ட போது, திரோதாயியே அருட்சத்தியாகிறாள். அப்போது ஞானப்பாலை[2] ஊட்டுகிறாள்; அதற்காகச் சிரசினுள் இருக்கும் நடுநாளத்தின்[3] அடியில் உயிரை ஊர்ந்து செல்லுமாறு[4] செய்கிறாள்; மீதானப் பெருவெளியிலிருந்து நுண்ணிய ஆற்றல்மிகுந்த அருள்மழையைச்[5] சிரசினுள் பொழியச் செய்கிறாள். தலையில் எல்லோருக்குமே முளைநீர் இருக்கிறது. அதுவே சத்திநிபாதத்தால் பேராற்றலுடைய அமுதமாகிறது.[6]

---

1. வழிபடு தெய்வம் நிற்புறம் காப்ப தொல் செய்யுளியல் 105
2. ஒன்றே வேறே என்றிருபால்வயின். தொல். களவியல் 2,
3. நடுநாளம்-மேருநடுநாடி, சிவபூமி என்ற தலைப்பில் காண்க.
4. "வினைவயிற் பிரிந்தோன் மீண்டுவரு காலை
   இடைச்சுர மருங்கில் தவிர்தல் இல்லை" - தொல். கற்பு-53.
5. சிறைபெறா நீர்போல் சிந்தைவாய்ப் பாயும்
   திருப்பெருந், துறையுறை சிவனே. .', திருவாசகம் 8:22:5
   "செய்ய தருமச் செழுங்கிரியின் மீதிழிந்து
   வையம் பரவ மகிழ்ந்து எழுந்து" உமாபதியாரின் நெஞ்சு விடுதூது (40)
6. அகண்டாகார சிவபோகம் எனும் பேரின்ப வெள்ளம் பொங்கித்ததும்பிப் பூரணமாய் ஏகஉருவாய்க் கிடக்குது தாயுமானவர் 10:3 (காடும் கரையும்)

தொடலை ஒள்வாள்: தொங்குகின்ற தன்மையும், மிகுந்த ஒளியும், வளைந்த வடிவும், நிறைந்த கூர்மையும், அறுக்கின்ற ஆற்றலும் உடைய ஒரு கருவி என்பது பொருள். தலைவனது அரைக் கச்சில் தொங்குகிற வாளைக் குறிப்பதாயிற்று. இதனை அறிவியல் துணைகொண்டு சிந்திப்போம்.

அறிவியல் நோக்கு; நம் தலையின் மையப்பகுதியில் ஒரு நாளம் உள்ளது. அதனை மூன்றாம் நாளம் (Third Ventricle) என்று அறிவியலார் அழைப்பர். அது பிறைச் சந்திரனை ஒத்த ஒளியையும், வடிவத்தையும், இயல்பினையும் உடையது. செவிப் பக்கம் இருந்து நோக்கினால், அந்த மூன்றாம் நாளம் நமது தலையினுள் ஒளி பொருந்திய வாள் ஒன்று தொங்குவதைப் போன்று தோற்றம் அளிக்கும். அதனுள் (CSF - Cerebro Spinal Fluid என்ற) மூளைநீர், அமுதம் போன்று ஊறி, நமக்கு அளப் பரிய ஆற்றலைத் தருகிறது.

அதன் இரண்டு பக்கங்களிலும் இரண்டு நாளங்கள் உள்ளன. அவற்றின் இருமருங்கிலும் பெருமூளையின் இருகூறுகள் ஆயிரம் இதழ்களை உடைய ஓர் அழகிய தாமரைவடிவில் அமைந் துள்ளன. அதன் இதழ்களின் இடைவெளிகளிலெல்லாம் சிவ அமுதம் (CSF) நிறைந்திருக்கிறது.

ஒள்வாளின் அமைப்பும் ஆற்றலும்: வானினை ஒத்தது நமது தலையிலுள்ள மூன்றாம் நாளம் எனக் கண்டோம்; இஃது இன்பத் தானமாகிய நடுமூளையிலிருந்து வெளிப்படுகிறது; அதனால் தான் போலும் இது பேரின்பத்தின் தோற்றுவாயாகவும் அமைகிறது. பெருமூளையின் வலதுகூறினை ஓரளவு சார்ந்து, புருவநடுவினை நோக்கி நீள்கிறது: கத்தரிக்கோல் வடிவினதாகிய பார்வை-வளையத்தை ஊடுருவித், தலைவிதிப் பதிவேடாகிய தாமரைக் காம்பினை உராய்ந்து, பேரின்பத் தானமாகிய (பிட்யூட்டரி) தலைமைச் சுரப்பியைத்[1] தீண்டுகிறது.

மூன்றாம் நாளத்தை நடுநாளம், மேருநடுநாடி, சாதாக்கியம், சதாசிவம், இறைவன் திருவடி, பிச்சாண்டி, கஜலெட்சுமி, நெற்றிக்கண் என்றெல்லாம் சைவநூல்கள் சிறப்பித்துப் பேசும், இலக்கியங்களோ, செவிவரை நீண்டகண், பிறைமதி, ஒள்வாள் போன்ற தொடர்களால் வருணித்து மகிழும்.

1. ஒன்றே வேறே என்(று)இருபால்வயின். தொல் களவு 2

அதேபோல் பிட்யூட்டரியைத், தலைமைச்சுரப்பி, ஆக்ஞை-ஆதாரம், ஆணைத்தானம், ஈரிதழ்த்தாமரை, பெண்மையின் நிலைக்களன், சுத்தவித்தை, ஆனந்தமயகோசத்தின் நுண்செவி என வெவ்வேறு துறையினரும் பலவாறு விதந்தோதுவர்.

சுத்தவித்தையில் கிரியையைவிட ஞானம் மிகுந்து இருக்கும் என்பது சித்தாந்தம். பிட்யூட்டரியும் (Posterior & Anterior Lobes என்ற) இரண்டு கூறுகளை உடையதாய் ஈரிதழ்த் தாமரையை ஒத்திருக்கிறது. இது பெருமூளையின் இடது கூறினை ஓரளவு சார்ந்து நிற்கிறது.

சிவசிந்தனையால் விளையும் பேறு : சிவமூல மந்திர தியானத்தால், மூன்றாம்நாளம் சிவமாந் தன்மையைப் பெறு கிறது; நாம் திருக்கோயில்களில் கண்டு வழிபடுகிற சிவலிங்கத் திருமேனியில் வடிவத்தையும், அம்மணக்கோலப் பிச்சாடன மூர்த்தியின் ஆண்மைப் பொலிவையும் பெற்றுப் பேராற்றலுடன் திகழ்கிறது.

அப்போது, ஆக்ஞை - ஆதாரத்தை அணைந்த ஆருயிரின் நிலை என்ன? தத்துவ ஆடைகள் அனைத்தையும் களைந்த அம்மண நிலையில், அது சிவசத்தியையே தனக்கு உடம்பாகப் பெறுகிறது. அங்குப் பிட்யூட்டரியே பெண்மையின் சின்னமான ஆன்ம ஆவுடையாராகத் திகழ்கிறது.

இத்துணை செயற்பாடுகளையும் இயக்குபவள், சிவபெரு மானது அருட்சத்தி. பூப்பெய்திக் காமஞ்சான்று, தலைவி நிலைக்கு உயர்ந்த ஆருயிரை, இப்பெண்மைத் தானத்தில் சேர்த்துச், சிவபெருமான் திருவடி இன்பத்தைத் துய்க்குமாறு ஆன்மாவுக்குத் துணை நிற்பவள் சிவசத்தியே. இக்கருத்துப் பற்றித் தான்.

---

1 திருவருட்பயன் - பதிமுதுநிலை - 2

2 இங்ஙனம் சுத்தமாயையினாலான நமது தலையினுள் ஒளிபொருந்திய வாள்வடிவ நாளம் ஒன்று. பெண்மைத்தானமாகிய பிட்யூட்டரியை நோக்கித் தொங்குவதைத் ''தொடலை ஒள்வாள்-'' என உயிரோவியம் ஆக்கினர் ஆசிரியர்,

"தன்நிலைமை மன்னுயிர்கள் சாரத் தரும்சத்தி
பின்னமிலான் எங்கள் பிரான்"—1

என அருட்சத்தியின் கருணையை விதந்தோதுவார், உமாபதி சிவனார்.

பாசி சூழ்ந்த பெருங்கமல்:

நமது தலையினுள் பெருமூளைக்கும் சிறு மூளைக்கும் நடுவில் உள்ள நடுமூளையை இன்பத்தானம் எனக் கூறுவர் அறிவியலார். இதனை முருகப்பெருமான் உறையும் கந்தமலை எனல் சாலும்,

சிவபெருமான் அமர்ந்து ஐந்தொழில் இயற்றுகிற இடம் பெருமூளை. சிவசத்தி ஆதிசத்திவடிவிலே மறைந்திருந்து, நமது வினை நுகர்வுக்கும் இறை உணர்வுக்கும் ஏற்ப, ஊனப்பாலையோ ஞானப்பாலையோ ஊட்டுகிற இடம் சிறுமூளை இவ்விரண்டுக்கும் இடையிலே, அப்பனுக்கும் அம்மைக்கும் நடுவிலே அன்புக் குழந்தையாய் நடுமூளையை இருப்பிடமாகக் கொண்டு கந்தவேள் அமர்ந்திருக்கிறார். இஃது, சிவனுக்கும் சத்திக்கும் நடுவில் முருகன் என்றவாறு திருக்கோயில்களில் நாம் நாளும் வணங்கி வழிபடும் சோமாஸ்கந்த மூர்த்தத்தை ஒத்தது.

முற்கூறிய மூன்றாம் நாளம் (Third Ventricle) இந்த நடுமூளை (Mid-brain)யிலிருந்து வெளித் தோன்றுகிறது எனக் கண்டோம், அருணகிரிநாதர் போன்ற அருளாளர்கள், நடுமூளையை முருகனாகவும் நடுநாளத்தை முருகன் திருவடியாகவும் வாழ்த்திப் போற்றுவர். நடுநாளம் தலைவிதிப் பதிவேட்டை (Hypothalamus) உராய்ந்து செல்லும் போது, அங்கு முன்னர்ப் பிரமனால் எழுதப்பட்ட தலை எழுத்து அழிந்து விடுகிறது என்பது அவர் தம் அருள்வாக்கு.

"சேல்பட்(டு) அழிந்தது செந்தூர் வயல்;பொழில் தேங்கடம்பின்
மால்பட்(டு) அழிந்தது பூங்கொடி யார்மனம்; மாமயிலோன்
வேல்பட்(டு) அழிந்தது வேலையும் சூரனும் வெற்பும்; அவன்
கால்பட்(டு) அழிந்த(து)இங்(கு) என்தலை மே(ல்)அயன்
கையெழுத்தே"[1]

---

1 கந்தரலங்காரம் 40–அருணகிரிநாதர்

கத்தரிக்கோலின் மையப்பகுதியை ஒத்தது, பார்வை வளையம் (Optic Chiasm) எனக் கண்டோம். நம் எதிரில் இருக்கும் பொருள், பார்வைத் திரையில் (Retina) இடவலமாற்றத்துடன் பதிவாவதற்கு இப்பார்வை வளையத்தில், பார்வை நரம்புகள் இடவலமாகப் பின்னி அமைந்திருப்பது காரணமாகிறது.

வளைந்த இப்பகுதியை நடுநாளம் ஊடுருவிச் செல்லுகிறது. அதனைக் கீழே பிட்யூட்டரி என்ற பெண்மைத்தானத்திலிருந்து 'உவக்காண்' கிறது ஆன்மா. அப்போது முருகன் திருவடிக்கு அமைந்த வீரக்கழல் போன்று இப் பார்வை - வளையம் ஆன்மாவுக்குக் காட்சி அளிக்கிறது.

சிவபெருமானுக்கும் முருகனுக்கும் வேறுபாடு இல்லை என்பது கந்தபுராணம் கூறும் உண்மை. குறிஞ்சித் தலைவனாகச் சேயோனை (முருகவேளை)க் கொண்ட தொல்காப்பியர், களவியல் 2-ஆம் நூற்பாவில், 'ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப; மிக்கோன் ஆயினும் கடிவரை இன்றே' என்ற தொடர் மூலம், பரசிவத்தின் தலைமைச் சிறப்பைப் போற்றுகிறார்.

எனவே இப் பார்வை - வளையத்தினை ஊடுருவிச் செல்லும் நடுநாளத்தை, வீரக்கழல் அணிந்த முருகன் திருவடியாகவும், சிவபெருமான் திருவடியாகவும் சிந்தித்தல் பொருந்தும்.

திருக்கோயில்களில், தென்முகம் நோக்கி மோனநிலையில் அமர்ந்திருக்கும் ஆலமர் கடவுளை வழிபடுகிறோம். அவரிடம் காணப்பெறுகிற தனிச் சிறப்பு யாது? வலக்கைப் பெருவிரலையும், சுட்டுவிரலையும் இணைத்து, ஏனைய மூன்று விரல்களை நீக்கி நிற்கும் சின்முத்திரையாகும். இதன் மூலம் அவர் நமக்குக் குறிப்பாக உணர்த்துவது என்னை?

ஆணவம் (நடுவிரல்), கன்மம் (அணிவிரல்), மாயை (சிறுவிரல்) ஆகிய கேடுறு மலங்கள் மூன்றோடும், இயல்பாக உறவு கொண்டிருப்பது, உயிர் (சுட்டுவிரல்). அவற்றின் நீங்கி, உயிர் சிவபெருமான் திருவடியை (பெருவிரலை) அணைய முற்படின், அவர் விரைந்து சென்று ஆன்மாவை ஏற்றுத் திருவருள் பாலிப்பார் என்பது அம்முத்திரையின் உட்பொருள்.

பார்வை வளையம் Optic chiasm), சிவபெருமானது பெருவிரலும் சுட்டுவிரலும் பொருந்தி நிற்கும் சின்முத்திரையை நினைவுறுத்துவதாக அமைந்துள்ளது. பிட்யூட்டரி என்ற ஆணைத்தானத்தில் (ஆக்ஞை ஆதாரத்தில்) நிலைகொள்ளும் ஆன்மா, அதற்கு மேலே உள்ள நடுநாளத்தைச் சிவலிங்கமாகச் சிந்தித்துப் பார்வை வளையத்தின் மூலம் மேலே நோக்குங்கால் மீதானப் பெருவெளியிலுள்ள பரசிவம் என்ற தனிப் பெரு முழு முதலைக் கண்டு இன்புறலாம் என்பது அருளாளர் கண்டு உணர்ந்த உண்மை. இதனைச்

''திருச்சிலம்(பு) ஓசை, ஒலிவழி யேசென்று
நிருத்தனைக் கும்பி(டு)' என்(று) உந்தீபற
நேர்பட அங்கே நின்(று) உந்தீபற''[1]

எனச் சைவசித்தாந்த சாத்திரங்கள் பதினான்கனுள் முதலாவதாகக் கருதப்பெறும் திருவுந்தியார் என்ற நூலில், ஆசிரியர், திருவியலூர் உய்யவந்த தேவநாயனார் அறிவுறுத்துகிறார்.

பாசி; குளத்தில் பசிய நிறத்துடன் படர்ந்து நீரை மாசு படுத்தும் ஒருவகைத் தாவரத்திற்குப் பாசி என்று பெயர். இது கொடிப்பாசி என்றும் படர்பாசி என்றும் இருவகைப்படும். கொடிப்பாசி தண்ணீரில் நீந்துவோரின் கால்களில் பின்னியும், படர்பாசி, நீர்த்துறைகளில் கால்வைப்போரை வழுக்கியும் நீரினுள் மூழ்கச் செய்யும்.

இவையே போன்றுதான், உயிரினை மூழ்கடிக்கும் பாசங்களும் உள்ளன. அவை, ஆணவம், கன்மம், மாயை என மூன்று. இறைவனையும் உயிரினத்தையும் போன்று, பாசங்களும் ஆதி அந்தமில்லாத அநாதியே இதனைப்

''பதி,பசு, பாச(ம்)எனப் பகர் மூன்றில்
பதியைப் போல்பசு பாசம் அநாதி'' என்பார் திருமூலர்[2]

---

1 திருவுந்தியார் - 17 2 திருமந்திரம்

உயிர்களாகிய நமக்கு விருப்பம். அறிவு, செயல் என்ற மூத்திற ஆற்றல் உண்டு. அவற்றை ஆணவமலம் அநாதி காலபாகவே முடக்கி, இறை பேரின்பத்தை நாம் நுகர முடியாதவாறு தடுத்து வந்திருக்கிறது. ஆணவத்தின் வலிய பிணிப்பில் நிலைதடுமாறும்போது நாம் தற்போதத்துடனும், தன்முனைப்புடனும் பற்பல வினைகளைச் செய்கிறோம். அது கன்ம மலம் என்ற பெயருடன் கிளைத்துப் பெருகுகிறது.

ஒவ்வொரு வினைக்கும் எதிர்விளைவு உண்டு என்பதும், வினை செய்தவனே அதன் பயனை அனுபவிக்க வேண்டும் என்பதும் நியதி அவ்வாறு முந்திய வினைகளின் பயனை நுகர்தற்கு ஏற்ப, உடம்பு, கருவி கரணங்கள், உலகம், நுகர்ச்சி ஆகியவை வேண்டுமன்றோ? வினையை நுகர்ந்து கழித்தால்தான், அதன் ஆற்றல் ஒடுங்கும். ஆணவத்தின் கேட்டினையும், சிவபரத்தின் பெருங் கருணையையும் உயிர் உணர்ந்து அறிவு விளக்கம் பெற்றால் தான், தீய ஆணவமும். கன்மமும் ஒடுங்கும்.

எனவே ஆணவம், கன்மம் ஆகிய இரண்டு மலங்களின் பிடியிலிருந்து நம்மை விடுவித்து, அறிவு முதலிய ஆற்றல்களை விளங்கச் செய்வதற்கு, இடைக்காலத் துணையாகச் சிவபெருமான், தமது வைப்பு சத்தியாகிய மாயையைத் தொழிற்படுத்துகிறார்,

மாயை 36-தத்துவங்களாக விரிகிறது. உயிருக்குச் சட்டைகளைப் போன்று ஐந்து உடம்புகள் கிடைக்கின்றன. அவற்றுள், சுத்தமாயையினாலான நாதம் முதலிய ஐந்து சிவதத்துவங்களையும் சிவபெருமான். தனக்குத் தொழிலகமாகக் கொள்ளுகிறார். அஃது உயிருக்கு ஆனந்தமய கோசம் (பேரின்ப உடம்பு) ஆகிறது.

அடுத்துச் சுத்தமும் அசுத்தமும் விரவிய, காலம் முதலாய ஏழு வித்யா தத்துவங்களையும் தெய்வீக ஆற்றல்களின் நிலைக்களன் ஆக்குகிறார். அஃது உயிருக்கு விஞ்ஞானமய கோசம் (மெய்யறிவு உடம்பு) ஆகிறது.

முற்றிலும் அசுத்தமாயையினாலானது மூலப்பிரகிருதி. அது சித்தம் என்ற முக்குணச் சமட்டியை முதலாகக் கொண்ட 24

ஆன்ம தத்துவங்களினாலானது. அஃது உயிருக்கு மனோமய கோசம், பிராணமயகோசம், அன்னமயகோசம் என்ற மூன்று உடம்புகளாக உருவெடுக்கிறது. சித்தம் என்ற இம்மூலப்பகுதியே, இன்பமாகவும் துன்பமாகவும் உயிர் அனுபவித்துத் தொலைக்க வேண்டிய நல்வினை, தீவினைகளின் பேரேடு ஆகும். இதனையே தலைவிதி என்றும், தலை எழுத்து என்றும், பிரமன் கைஎழுத்து என்றும் பலவாறு கூறுகிறோம்.

இவ்வாறு மூன்று மலங்களும் உயிர்களாகிய நம்மை வலிதே பிணித்துச், சிவபரத்தின் மேன்மையை நாம் உணர முடியாத வாறு தலையிட்டு நிற்கின்றன. உயிர்களாகிய நாமோ அறிவும் பிற ஆற்றல்களும் உடைய உயர்ந்த பொருள் ஆனால் நம்மைப் பிணித்துள்ள பாசங்களோ அறிவு ஆற்றலில்லாத சடப் பொருள்கள்.

பேராற்றல்; பாசங்கள் மூன்றுக்கும் தனித்தனியே சில இயல்புகள், உண்டு. ஆனால் அவ்வியல்புகள் உயிரினத்னதப் பற்றி நிற்கும்போதுதான் வெளிப்பட்டுத் தொழிற்படுமேயன்றித் தனித் திருக்கும்போது தம்முள் முடங்கியே கிடக்கின்றன. மேலும் அவை சிற்றறிவுப் பொருள்களாகிய நம் போன்ற உயிரினத்தைத் தான் பற்றித் தளையிட முடியுமேயன்றி, முற்றறிவுடைய முழு முதற் பொருளாகிய சிவபரத்தின் முன்னால், செயலற்று முடங்கி விடுகின்றன. எனவே ஆணவம் முதலியவற்றை ஒடுக்கும் பேராற்றல் சிவபெருமான் ஒருவருக்கே உண்டு என்பதை அறிக.

நாம் மும்மலப் பற்றை. விட்டு, முழுமுதற் கடவுளைப் பற்றுங்கால் நாம் அவ்வாறு தீய ஒன்றைவிட்டு உயர்ந்த ஒன்றைப் பெறுவதற்கு (வீடுபேற்றிற்கு)ச் சிவபெருமானே பெருந்துணை புரிகிறார்.

நடுவுநிலைமை: சிவபெருமான் கருணையே வடிவானநடு நிலையாளர்; ஆதலால்,உயிரினத்தை வதைக்கும் பாசங்களையும்

வெறுத்தொதுக்காமல் தம் திருவடிக்கீழ் வேறுபாடின்றி ஏற்றருளு கிறார். அதனால்தான், தில்லைக்கூத்தன் வலது திருவடிக்கீழ், ஆற்றல் ஒடுங்கிய மூன்று மலங்களும் முயலகன் என்ற வடிவில் முடங்கிக் கிடப்பதை நம்மால் காணமுடிகிறது. ஊன்றிய அத் திருவடியில், பேராற்றலின் சின்னமாகிய வீரக்கழல் கவினுறத் திகழ்கிறது.

மலங்களிலிருந்து வீடுபட்டு நிலையான அறிவானந்தத்தை அடையத் தவமியற்றும் ஆருயிர்களை, அவர் தனது தூக்கிய இடது திருவடிக்கீழ் நிலைபெறுமாறு செய்கிறார். வலது திருவடி, சிவபெருமான் திருவடி எனவும், இடது திருவடி, அம்மையார் திருவடி எனவும் காண்க. இவ்வாறு, தீய மலங்கள் ஒருபால் செயலற்றுக்கிடக்க, நல்லுயிர்கள் பிறிதொருபால் பேரின்பத்தில் திளைத்திருக்கத், தில்லைச் சிற்றம்பலத்துப் பெருமான் ஆடுகிற திருக்கூத்தின் நடுவுநிலைப் பெருமையைத் தான் என் என்று புகழ்வது!

பாசிசூழ் பெருங்கழல்: தற்காலத்தில் பலரும் 'வாழ்க்கை என்பது அனுபவிப்பதற்கே' என்ற தத்துவக் கூற்றின் உண்மைப் பொருளைத் தவறாகப் புரிந்துகொண்டு, புதிது புதிதாகத்தாமே இன்பங்களைச் சிந்தித்து நுகர்வதே 'வாழ்க்கை அனுபவம்' என மயங்கி, மேன்மேலும், புதுவினைகளைச் செய்கின்றனர். சித்தத்தைப் பெரிதும் சூழ்ந்து கிடப்பது இத்தகைய புதுவினை களும் பிராரத்த வினைகளும் ஆகிய கன்ம மலம் ஆகும். அது கொடிப்பாசியைப் போன்று உயிரைப் பின்னிப் பிணைத்து நின்று மறுமறு பிறப்புக்கும் இன்பதுன்பங்களுக்கும் வித்தாகித் தொடர் வது, உயிரை ஆற்றலுடன் முடக்குகிற அத் தொடர்பாசி முற்றுணர்வின னாகிய முதல்வன் திருவடிக்கழலில் ஆற்றலற்று அடங்கிக் கிடக்கும். வீரக்கழலணிந்த வலது திருவடிக்கீழ், ஒடுங்கிக்கிடக்கும் முயலகன் என்ற மும்மல ஆற்றல்கள் சூழ்ந்துள்ள திருவடி என்பதைப் 'பாசி சூழ்ந்த பெருங்கழல்' எனக் கபிலர் சிறப்புடன் பாடுகிறார்.

சிவயோகம் முதிர்ந்து, சிவஞானம் தலைப்பட்ட ஆருயிர் சிவதியானத்தால் ஆக்ஞை - ஆதாரத்தை அணையும்போது,

அதற்குச் சிவபெருமான் திருவடி தெரிகிறது; அத்திருவடியில் அணிந்துள்ள வீரக்கழல் புலப்படுகிறது; அவ்வீரக் கழலை வினைத் தொடராகிய கொடிப்பாசி செயலற்றுச் சுற்றிக் கொண்டு கிடப்பதும் தெரிகிறது. இவ்வாறு பாசிசூழ்ந்த பெருங்கழலை'த் தன் சிரசின் உள்ளேயே ஆருயிர் நுகர்ந்து இன்புறுகிறது.

''சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனைஆண்ட
அத்த(ன் எனக்(கு) அருளியவா(று) ஆர்பெறுவா(ர்)
அச்சோவே''[1]

என மாணிக்கவாசகரைப் போன்று, அதுவும் பேரின்பத்தில் திளைக்கிறது.

நிறைவுரையாக இப்பாடலின் செய்திகளைத் தொகுத்து நோக்குவோம் நமது பிறப்பு இறப்புகளுக்கும் இன்ப துன்பங் களுக்கும் காரணமாக உள்ள வினைத்தொடரையும் மலமாசு களையும் சிவபெருமான் ஆற்றல் இழக்கச் செய்து வீரக்கழல் அணிந்த தனது வலது திருவடியில் அழுத்தி நிற்கிறார். சத்திநி பாதம் என்ற திருவருள் மழையால், உயிர்களாகிய நமது மல மாசுகள் முழுமையாகக் கழுவப்பட்டு, நாம் தூய்மையுறு கிறோம். அத்தகைய திருவருள் மழை, மீதானப் பெருவெளி யிலிருந்து நமது சிரசினுள் மிக நுண்மையாகப் பொழிகிறது.

சிரசினுள் பொழிகிற அமுதநீர், அறிவுத்தானமாகிய மூளையைப் பெரிதும் வளப்படுத்துகிறது. ஆயிரம் இதழ்களைக் கொண்ட அழகிய ஒரு தாமரை மலரினைப் போன்று, சுருள் சுருளாக நமது மூளையின் மடிப்புகள் எண்ணற்றவையாய் அமைந்துள்ளன. அவற்றின் இடைவெளிகளில் ஆகாய கங்கை என்ற அமுத நீர் தேங்குகிறது. அதனைச் சிவபெருமானே ஒவவிட்டுணுவாக இருந்து காத்தருள்கிறார்.

பெருமூளையின் இரண்டு கூறுகளுக்கு நடுவில் உள்ளது மூன்றாம் நாளம். அஃது ஒளிபொருந்தித் தொங்குகிற ஒரு வாளின் அமைப்பினை உடையது. அதனைத் தொழிற்படுத்தி, உயிர்களாகிய நமது தலைவிதி என்னும் பாசத்தை அறுப்பவர்

1 திருவாசகம், அச்சோ பத்து - 1

சிவபெருமான். அவரால் ஆற்றல் ஒடுக்கப்பட்ட பாசத்தொடர் அவரது கழல் அணிந்த வலது திருவடியிலேயே அடங்கிக் கிடக்கிறது CSF என்ற ஆகாய கங்கையின் அமுதநீரால் நனைந்ததும், முறுக்கேறிய தலை நரம்புகளின் தொகுதியுமாகிய சிவஞான அரைக்கச்சினை உடையவர், அவர்.

சிவஞானம் என்ற நிலையான பேரின்ப உவகையைப் பெற்று உய்வதற்கு விழைகிற ஆன்மா சிவமூல மந்திரத்தால் தனது புருவ நடுவில் சிவபெருமானை முறையாகச் சிந்தித்தால், அவர் இப்பிறப்பிலேயே கூட அவ்வான்மாவுக்குப் பாசங்களை நீக்கிச் சிவஞானப் பேரின்பம் நல்குதல் கூடும்.

இவ்வுண்மை தொல்காப்பியராலும், கபிலர் போன்ற சங்கத் தமிழ்ச் சான்றோர்களாலும் பல்லாற்றானும் சிறப்புற வலியுறுத்தப் பெறுகின்றது.

நாமும் அத்தகு திருவடிப் பேரின்பத்திற்காக உவக்காண்போமாக!

8. தலைவி உண்ட பேரின்பத் தேன்

அன்னாய், வாழி! வேண்டு, அன்னை! நம்படப்பைத்
தேன்மயங்கு பாலினு(ம்) இனிய - அவர் நாட்டு
உவலைக் கூவல் கீழ
மா(ன்)உண்(டு) எஞ்சிய கலிழி நீரே''[1]

தலைமகனோடு உடன்போக்கு மேற்கொண்ட தலைவி ஒருத்தி, பின்னர் மீண்டும் தாயகம் வருகிறாள். அப்போது அவளுடைய தோழி அவளைப் பார்த்து, ''ஏடி தோழி! நீ தலைவனுடன் போயினையே; அங்கு நீ அருந்திய நீர் உனக்கு

1. ஐங்குறுநூறு, குறிஞ்சித்திணை - 3-ஆம் பாடல்

ஏற்புடைத்தாய் இருந்ததா?' என வினவுகிறாள். அவ்வாறு வினவிய தோழிக்குத் தலைவி விடை பகர்வதாக அமைகிறது இப்பாடல்.

அரும்பதவுரை : படப்பை - புழக்கடைத் தோட்டம்; உவலை - இலைதழை, உலர்ந்த சருகுகள்; கூவல் - நீரைப் பெறுதற்குத் தோண்டப்பட்ட தாழ்வான பள்ளம். மான் - விலங்குப் பொதுப்பெயர்; கலிழி - கலங்கல்

மேனோக்கான பாடற் பொருள் : ''அன்னையே! வாழ்க! யான் சொல்லுவதை விரும்பிக் கேட்பாயாக! அன்னையே! தலைவனது நாட்டில் இலைகள் உதிர்ந்து மட்கியதும், பள்ளங்களின் அடிப்பகுதியில் கிடப்பதும், விலங்கினம் உண்டு கலக்கி, எஞ்சியதுமாகிய கலங்கல் சின்னீரையே யான் அங்குக் குடித்தேன்.

ஆயினும், நமது புழைக்கடைத் தோட்டத்தில் உள்ள தேனடைகளினின்று பெற்ற இனிய தேனை, ஆவின் பாலுடன் கலந்து பருகினால், கிடைப்பதாகிய இனிய சுவையை விடத், தலைவனது நாட்டுச் சின்னீர், இன் சுவையுடையதாய் இருந்தது,' இஃது இப்பாடலின் வெளிப்படையான பொருள்.

இனி, இதன்கண் பொதிந்து கிடக்கும் சைவ சித்தாந்தச் செம்பொருள் சாரத்தைப், பாடல்தலைவியைப் போன்று, நாமும் உண்டு இன்புறுவோம்.

கலிழி நீர் உண்டது என்னை?

அவனோ மலைநாட்டுத் தலைவன்
அவளோ மருத்நிலத்து மங்கை

'வறப்பினும் வளம்தரும் வண்மை உடையது மலை' என்பது நானில இலக்கணம். மலையினில் நன்னீர் சுரக்கும் ஊற்றுகள் உண்டு; வழிந்தோடும் அருவிகள், வழிதோறும் பல உண்டு; வளம் கொணரும் தூய ஆறுகளும் ஆங்காங்கே தோன்றும்.

மலையின் வளம் அவ்வாறு இருக்கத் தலைவி, மான் உண்டு எஞ்சிய கலிழி நீரினை உண்டது யாங்ஙனம்? நீர்விடாய் மிகினும், விலங்குகள் உண்டு கழித்த சின்னீரை அருந்த உயர் குலப் பெண் ஒருத்திக்கு மனம் உடன் படுமா? அவ்வாறு கலங்கிய நீரை அருந்துவது உடல் நலத்துக்கு ஏற்றதா? 'இன்ப மயக்கத்தில் உண்டனள்' என அமைதி கூறின், அக்கால ஐந்திணை அக ஒழுக்கத்தில், மெய்யுறு புணர்ச்சியே மேலோங்கி இருந்தது என்றல்லவோ கொள்ளப் பெறும்? அதனை ஓர் உயர்ந்த வாழ்வு நெறியென்றோ, அவ்வாறு வாழ்ந்த தலைமக்களைத் தலையாய மக்கள் என்றோ, அவர்களுடைய காலத்தைப் பொற்காலம் என்றோ, எவ்வாறு எண்ணிப் பெருமை கூறுவது? இவை இயல்பாக எழுகின்ற சில வினாக்கள்.

''குறிப்புச் சொற்களும் குறிப்புப் பொருள்களுமே சான்றோர் இலக்கியங்களிலே மிகுந்து பரந்து வருகின்றன'' என்பது அறிஞர்[1] கருத்து. எனவே ஐங்குறு நூற்றின் இப்பாடலில் ஆழப் பொதிந்து கிடக்கும் குறிப்பு மொழிகளை நாமும் அகழ்ந்து நோக்கி, உண்மையான அறிவானந்தத்தை உண்டு மகிழ்வோம்.

நம் படப்பை: முதலில், 'நம் படப்பை' என்ற சொல்லாட்சி, இதயத்தானத்தை எவ்வாறு குறிக்கிறது எனக் காண்போம். தமிழகப் பண்பாட்டில் சமயமும் தத்துவமும் வேற்றுமை தோன்றாது இணைந்து நிற்பது போல, நமது உடம்பில் நாடி களும் நரம்புகளும் பின்னிப் பிணைந்து தொழிற்படுகின்றன.

நாடியும் நரம்பும் ஒன்றெனத் தோன்றுவது போல் நம் தமிழர்களின் கடவுட் கொள்கையும், தத்துவ நோக்கும் (Religion and Philosophy), இவர் தம் குருதியில் இரண்டறக் கலந்திருக்கக் காணலாம். மைய நரம்பு மண்டலம் (Central Nerves System) என்ற நரம்புகளின் கட்டமைப்பு, உடல் முழு வதும் பெரிதும் சிறிதுமான நரம்புகளாகக் கிளைத்து, மூலை முடுக்கெல்லாம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அதுபோலக் குருதி ஓட்ட மண்டல (Blood Circulatory System)மும் உடலின்

1 இலக்கியச் சொல்லகராதி-சுன்னாகம் அ. குமாரசாமி பிள்ளை 75 ஆண்டு களுக்கு முன் ஆனந்த ஆண்டில் பதிப்பிக்கப்பட்டது.

எல்லாப் பாகங்களிலும் இரத்த நாளங்களின் மூலம் இயங்கிக் கொண்டிருக்கிறது. சற்றே ஆழ்ந்து நோக்கினால், நரம்புகள் (Nerves) தெய்வீக ஆற்றலின் நிலைக்களனாகவும், நாளங்கள் (நாடிகள் - Blood vessels) உயிர் ஓட்டத்தின் வழித் தடமாகவும் அமைந்திருப்பதை உணரலாம்.

சிவபெருமான் நமது மைய நரம்பு மண்டலத்தின் ஆறு ஆதாரங்களிலும் நின்று ஐம்பெருந்தொழில் இயற்றி அருளும் பெற்றியை முன்னர்ச சிந்தித்தோம். குருதி நாளங்கள் வழியாக நமது உடலில் ஓடுகிற உயிர், கொழுகொம்பு தழுவிய கொடி போல, நரம்புகளைப் பின்னிப் பிணைந்து, சிவபெருமானைச் சார்ந்தே தொழிற்படுகிறது. இதனைக் 'கொடி நிலை' என்ற சொல்லாட்சியின் மூலம் தொல்காப்பியர்[1] குறிப்புரைக்கிறார். குருதி ஓட்டத்தின் மையப்பகுதி இருதயம். எனவே உயிருக்குத் தாய்வீடு இருதயம் எனலாம். உயிர் அமைதியாக உறங்குவதும் இருதயமாகிய தாயின் மடியில்தான். மனம் என்ற அமைச்சு துணை நிற்க, ஓர் அரசியாக அமர்ந்து, அரசோச்சும் அத்தாணி மண்டபமும் இருதயமே. உடம்பு எனும் நானிலத்தில் இருதயமே வளங்கொழிக்கும் மருத நிலமாகும்.

எனவே, பாடலில் 'நம் படப்பை' எனத் தலைவி குறிப்பிடும் இடம், நமது மனித உடலில் இருதயத்தைக் குறிப்பதாயிற்று.

கூவல் : அடுத்துக் கூவல் என்பது, நம் தலையிலுள்ள பிட்யூட்டரி என்ற மூளைப் பகுதியை எவ்வாறு குறிக்கும் எனக் காண்போம்.

பிட்யூட்டரி என்பது தலைமைச் சுரப்பி; அது தனக்கு மேலே உள்ள பெருமூளையிலிருந்து சுரந்து வருகிற அமுதத்தை ஏற்பதன் மூலம் இறை ஆணையை ஏற்கிறது. (Hypothalamus என்ற) தலைவிதி ஏட்டிலிருந்து சில உயிர்ப்பு நீர்களை ஏற்பதன் மூலம் 'இருவினையின் ஆணை' (பால் அது ஆணை)யை ஏற்கிறது

1 'வள்ளலும் வள்ளியும்' என்ற, முதல் அதிகாரம் இரண்டாம் இயலில் 'கொடிநிலை' பற்றிய விளக்கத்தைக் காண்க.

இரண்டு ஆணைகளுக்கும் ஏற்ப, ஆன்மாக்களாகிய நம்மை இயக்குகிறது. இவ்வாறு உயிர்ப்பு நீர்கள் தேங்கி நின்று தொழிற் படுகிற 'மூளைப் பள்ளம்' கூவல் என்ற சொல்லால் குறிக்கப் பெறுகிறது.

உவலை : காய்ந்து உலர்ந்த சருகுகள் என்பது பொருள். இஃது ஈண்டு, இறைவன் திருவடிபட்டுத் தீய்ந்த ஊழ்வினை களைக் குறிப்பதாயிற்று.

ஹைப்போதாலமஸ் (Hypotholamus) என்ற பகுதி, நமது பிராரத்த வினைகள் குறிக்கப் பெற்றுள்ள வினைப்பதிவேடு எனக் கண்டோம். தலைவிதி, தலை எழுத்து என்றெல்லாம் நாம் அறிவது இதனையே எனவும் உணர்ந்தோம். இது' பிட்யூட்டரிக்குச் சற்று மேலேயுள்ள தாமரைக் காம்பு ஆகும்' இங்கிருந்து சில உயிர்ப்பு நீர்கள் பிட்யூட்டரியில் சேர்கின்றன

தலை எழுத்து வலிமையுடையது, என்றாலும் இறைவன் திருவடிபட்டு அழிவது என்பது அருளாளர் கருத்து, எனவே ஈண்டு இறைவன் திருவடிபட்டுத் தீய்ந்து, ஆன்ம ஆவுடையாரை (கூவலை) அணைந்த ஊழ்வினைகள், ஆற்றலற்ற நிலையில் உவலை எனக் குறிக்கப்பட்டன.

இனிய தேன் மயங்கு பால்:

பல மலர்களிலும் ஊறுகிறது தேன், ஈக்கள் அதனைச் சேகரித்துத் தேன் கூட்டிற்குக் கொண்டு வருகின்றன. அதே போல் நமது உடம்பில் பல இடங்களில் ஊறுகின்றன, குருதியும், குருதி அணுக்களும். அவை அவ்விடங்களிலிருந்து இருதயம் என்ற கூட்டிற்கு வந்து சேர்கின்றன. இருதயத்திலிருந்து புறப் படுகிற செங்குருதி பல்வள மிக்கது. அது நமது உடம்பு முழு வதும் பரவி, நல்ல உடல் நலத்தையும், மிகுதியான ஆற்றலை யும் தருகிறது.

எனவே 'தேன் மயங்கு பால்' என்ற தொடரால், தலைவி யின் 'பிறந்த இடத்துப் பெருமை' பேசப்படுகிறது.

அவர் நாடு: அடுத்து, 'அவர் நாடு' என்பது எதைக் குறிக்கிறது? எனக் காண்போம். எங்கும் நிறைந்தவர் பரம்பொருளாகிய சிவபெருமான். அவர் மக்களின் நலனுக்காக ஒவ்வோர் ஊரிலும் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி இருக்கிறார். இறைவன் அங்குக் கோயில் கொண்டிருந்தும் எல்லா மக்களாலும் அங்குச் சென்று அவரை வழிபடுவதற்கு வாய்ப்பதில்லை. எனவே உலக மக்களை உய்விப்பதற்காகவே அவர் திருவிழா ஏற்றுத் திருவீதி உலா வருகிறார்.

அதே போன்று நம் உடம்பில், சிவபெருமான் தனது சத்தியுடன் மறைந்து நின்று ஐந்தொழில் இயற்றும் இடம், நம் தலையின் முன் பகுதியிலுள்ள பெருமூளையின் இருகூறுகளாம். நமது ஊன் உடம்பில் அதுவே கருவறை. அப்பகுதி சுத்தமாயையினால் ஆயது.

அதுவே பாடலில் குறிக்கப்பெறுகிற 'தலைவரது நாடு ஆகும்,

கூவல்: சிவபெருமானின் எளிவந்த கருணை: இனிக் கூவல் என்ற சொல் மூலம் நாம் அறியத் தக்க தத்துவ உண்மைகள் யாவை? என நோக்குவோம்.

சுத்தமாயையினாலான நம் பெருமூளை, சிவபெருமானின் தனி இடமாகும். அங்கு மும்மலப் பிணிப்புடைய உயிர் உட்செல்லுதல் இயலாது. ஆயினும் உயிர்களாகிய நமது மலங்களைக் கழுவி, நம்மைத் தூய அறிவினராக்கிப் பேரின்பம் துய்க்கச் செய்யவேண்டும் என்பதே சிவபெருமானது பெருவிழைவு.

எனவே நம் மைய நரம்பு மண்டலத்தின் புறப்பகுதியாகிய முதுகுத் தண்டினையே (Spinal Cord) அவர், தனது தேரோடும் திருவீதியாகக் கொள்ளுகிறார். பெருமூளையை இருப்பிடமாகக் கொண்ட அவர், மிகமிக எளிவந்தவராகச் சிறுமூளை, முகுளம், முதுகுத்தண்டு ஆகியவற்றில் உள்ள ஆதாரங்களைத் தமது இடமாகக் கொண்டு இன்னருள் புரிகிறார்.

ஆதாரத்தானங்கள் என்பவை, திருஉலாக் காலத்தில் இறைவன் சிறிது நேரம் தங்குகிற மண்டபங்களைப் போன்றவையே.

பண்டுதொட்டு இன்றுவரை நம் சைவத் தமிழ்ச் சான்றோர்கள் இவ்வுண்மையைத் தெளிவாகவே உணர்ந்திருக்கின்றனர். எனவே நமது மைய நரம்பு மண்டலத்தில் ஆறு ஆதாரங்களைத் தெய்வீகத் தானங்களாகத் தெளிந்து போற்றினர். அவை:

1. மூலாதாரம் (இடுப்பில் கருவாய்க்கும் எருவாய்க்கும் நடுவில், (Coccyx) உள்ளது.

2. சுவாதிட்டானம் மூலாதாரத்திற்கு இரண்டு விரல் அளவு மேலே உள்ளது (Sacrum) புனர் உற்பத்தி மண்டலம்.

3. மணிபூரகம் (நாபித்தானம் – Lumbar) உணவு சீரண மண்டலம்.

4. அனாகதம் (நெஞ்சுத்தானம் — Thorax) குருதி ஓட்ட மண்டலம்.

5. விசுத்தி (கழுத்துப் பிடரி—Cervical) காற்று மண்டலம்.

6. ஆக்ஞை (புருவநடு — Pituitary & the Brain) ஆகாய மண்டலம்.

பரம்பொருளாகிய சிவபெருமான் உயிர்களாகிய நம்மை உய்விப்பதற்காகப் பல்வேறு உருவத் திருமேனிகளுடன், நமது உடம்பில் இந்த ஆதாரங்களில் தங்கி அவற்றை இயக்குகிறார். நுண்ணிய அவ்வியக்கம், தற்காலத்து 'அக்கு பஞ்சர்' (Aqu Puncture) வைத்திய முறையை ஒருபுடை ஒத்ததாகும்.

மூலாதாரத்தில் சிவபெருமானே, விநாயகர் வடிவில் விற்றிருந்து, நமக்கு ஏற்படுகிற இடையூறுகளைக் களைகிறார். சுவாதிட்டானத்தில் (சிவ) பிரமனாக அமர்ந்து, நமக்குப் பதி அறிவினை ஊட்டிச் சிவத்தொண்டு என்ற சரியை நெறியில் நம்மை ஆட்கொள்ளுகிறார். மணி பூரகத்தில் சிவ விட்டுணுவாக அமர்ந்து, பதி அறிவினை வளர்த்து நிலைபெறச் செய்து,

மகன்மை என்ற கிரியை நெறியில் செலுத்துகிறார். அனாகதத்தில் சிவ உருத்திரராக அமர்ந்து, நம்மிடத்து உள்ள மல மாசுகளை ஒடுக்கி, நமது மனத்தை ஒரு நிலைப்படுத்திச் சிவயோக நெறியில் நிற்கச் செய்கிறார். விசுத்தியில் மகேசுவர வடிவத்தில் மறைந்திருந்து, நமது ஊழ்வினைப் பயனையும், கடவுட் பண்பையும் ஊட்டுகிறார்.

ஆக்ஞை என்பது ஆறாவது ஆதாரம் ஆறு ஆதாரங்களுள் இடத்தால் மட்டுமன்றிச் செயற்பாட்டாலும் தலைமைப் பண்பாலும இதுவே மிக உயர்ந்த ஆதாரம். இஃது ஈரிதழ்த் தாமரை வடிவில், நம் தலையினுள், பெருமூளையின் அடிப்பகுதியில் அமைந்துள்ளது. இதுவே நம் உடம்பில் உள்ள எல்லா உயிர்ப்பு நீர்ச் சுரப்பிகளுக்கும் தலைமையானது. எனவே அறிவியலார் இதனைத் தலைமைச் சுரப்பியாக, பிட்யூட்டரி (Pituitary the Master Gland)என்றே அழைப்பர். இது மேலே பெருமூளைப் பகுதிகளிலிருந்து வருகிற ஆணைகளை ஏற்றுக் கொள்ளுகிறது; தானும் சில உயிர்ப்பு நீர்களைச் சுரக்கிறது. அவற்றின் மூலம் தனக்குக் கீழுள்ள சுரப்பிகளையும் பிற உறுப்புகளையும் தன் ஆணைவழிச் செலுத்துகிறது.

சைவ அருளாளர்கள் அறிவுறுத்துகிற சுத்தமாயை நமது தலையிலுள்ள பெருமூளை எனவும், சுத்தமாயையின் ஐந்தாவது தத்துவம் ஆகிய சுத்தவித்தை, பிட்யூட்டரி எனவும் கொள்ளுதல் ஏற்புடைத்தாகும்.

கலிழி நீர் உண்டமை: சிவபெருமான் நரம்பு மண்டலத்தின் ஒவ்வோர் ஆதாரத்திலும் தொழிலியற்றும்போது, உயிரும் அந்த நரம்புகளைச் சுற்றிக் கொடிபோலச் சூழ்ந்துள்ள குருதி நாளங்களில் தங்கிக், காந்தம் கண்ட இரும்புபோல, அவரால் ஈர்த்துக் கொள்ளப்பெறுகிறது.

(துரு ஏறிக் கறை படிந்த இரும்பு, தூய்மையுறும் வரை, காந்தத்தால் இழுக்கப்படுவதில்லை; அஃது இரும்பின் குற்றமேயன்றிக் காந்தத்தின் இயலாமை யன்று).

உலா வரும் தேரைப் பின்தொடரும் சிறுவன், அத்தேர் நிலைகொள்ளும் இடத்தினைத் தானும் அடைவது போல, ஆதாரத் தானங்களைச் சூழ்ந்து நின்று சிவத்தைப் பற்றிய ஆன்மா, சிறிது சிறிதாக அறிவு விளக்கம் பெறுகிறது; சிவத் தொண்டின் மாட்சி உணர்கிறது. தொண்டுநெறி, மகன்மை நெறி, தோழமை நெறி எனப் படிமுறையில் வளர்ந்து அன்பு நெறியில் தலைவி நிலைக்கு உயருகிறது.

உயிர், தொடக்க கால வாழ்வில் ஆணவாதி மலங்களால் பெரிதும் கட்டுண்டபோது, அசுத்தமாயை என்ற கீழ் உடம் பிலேயே (புருவத்திற்குக் கீழே உள்ள உடம்பிலேயே) உலவு கிறது. அம்மலங்கள் ஒடுங்கும்போது ஆன்மா தூய்மையுறுகிறது. அப்போது, சுத்தவித்தை என்ற பிட்யூட்டரியில் அணைகிறது.

அகத்துறையில் அல்குல் என அழைக்கப் பெறும் பெண்மைத் தானம், பிட்யூட்டரியே. நம் பிடரியிலுள்ள ஆதிசத்தியின் அருளால், உயிர் இதனை அணைந்து பெண்மை இயல்புகளோடு நிற்கிறது. இதனை ஆன்ம ஆவுடையார் என அழைத்தல் பொருந்தும்.

அப்போது சிவபெருமான் மூன்றாம் நாளத்தை[1] இயக்கு வதால், அஃது ஆண்மைப் பொலிவுற்றுச் சிவலிங்க வடிவத்தைப் பெறுகிறது,

சிவமூலமந்திர தியானத்தின்போது, இலிங்கமும் ஆவுடை யாரும் பொருந்துகின்றன; இலிங்க வடிவினராகிய சிவனுக்கும், பிட்யூட்டரி என்ற ஆவுடையாரில் பெண்மை இயல்புடன் நிற்கும் உயிருக்கும் இவ்வாறாகப் பேரின்பக் கூட்டம் நிகழுகிறது.

அப்பொழுது ஆன்மா பருகுகிற அமுதமே ஈண்டுத் தலைவி உண்ட கலிழிநீராகக் கூறப்பெறுகிறது.

அவர் நாட்டு நீர்:

ஒரு மலையில் சுனைகளில் நீர் ஊறுவதாலும், மழைநீர் விழுவதாலும், நீர்பெருகித் தாழ்வான நிலப் பகுதிக்கு ஆறாக ஓடி வருகிற தன்றோ? அதேபோலத் திருவருள் துணையால்,

1. Corpus Collosum

மீதானப் பெருவெளியிலிருந்து இறைவனது திருவருள் பொழிவாக[1] விழுகிற மழைநீரும் குருதி ஓட்டத்திலிருந்து மாற்றுவடிவு எடுக்கிற ஊற்றுநீரும்[2] என இரண்டும் நமது சிரசினுள் மூளை நீராக (Cerebro Spinal Fluid)ப் பரவி நிற்கிறது.

நெஞ்சுத் தானத்தில் எல்லோருக்குமே குருதி ஓட்டம் பரவலாக இருந்தாலும், பிள்ளைப் பேறுடைய ஒரு தாய்க்குத் தன் குழந்தையைக் கண்ணுற்ற தாய்மை அன்பிலே அக்குருதியே, பாலாகச் சுரக்கிற தல்றோ? அதே போன்று சாதாரண மனிதனுக்கு மூளைநாளங்களில் ஓடுகிற குருதி, வெறும் மூளை நீராக இருக்கிறது; அது சிவ மூலமந்திர ஒலியால் அளப்பரிய ஆற்றலைப்பெற்று அமுதமாக மாறுகிறது. அதனை ஆகாய கங்கை[3] என அழைக்கிறோம்.

மூளைநீர் என்பது புருவ நடுவில் தொடங்கி, மேல்நோக்கி மண்டை ஓட்டினை ஒட்டினாற்போல் (Sub arachnoid Space) தலை முழுவதும் பரவி, நமது பிடரியிலுள்ள அமுத ஏரியில் (Cistern) தேங்கி, முதுகுத் தண்டு (Spinal Cord) வழியாகக் கீழ்நோக்கிப் பாய்ந்து, நமது உலகியல் வாழ்வுக்குப் பயன்படுகிறது. இதனை வீணாக்கி விடாது காப்பாற்றுவதோடு, இதனை மேலிடத்திலேயே அணையிட்டு இதன் ஆற்றலைப் பெருக்கி, உடல்நலத்துக்கும் உள்ளப் பண்புக்கும், உயிரின் உய்திக்கும் பயன்படுத்துவதே அறிவுடைமையாகும். இதனையே பகிரதன் என்ற பேரரசன் முன்னொரு காலத்தில் செய்தான் என்பது புராண வரலாறு.

---

1 திருவருள் பொழிவு - சத்திநிபாதம். இதனை மாணிக்கவாசகர், 'சிறை பெறா நீர்' என உவமிப்பார் "சிறைபெறா நீர்போல் சிந்தைவாய்ப் புகுந்த திருப்பெருந்துறை உறை சிவனே" - திருவாசகம்

2 ஊற்றுநீர்: இருதயத்திலிருந்து வெளிப்படுகிற குருதி, வாயினில் எச்சிலாகவும், மூக்கில் சளியாகவும், கண்ணில் நீராகவும் கோழையாகவும், தோலில் வியர்வையாகவும் மாற்றம் பெறுவதைப் போலவே, தலையினுள் மூளை நீராகிறது.

3 நெஞ்சு விடு தூது -உமாபதிசிவம்

மான் உண்டு எஞ்சிய கலிழி நீர்:

மானின் தோற்றமும் தொழிற்பாடும்; நம் தலையில் பெரு மூளையின் இரண்டு கூறுகளுக்கு நடுவில் மூன்று நாளங்கள் உள்ளன. அவற்றுள் நடுநாளம் ஒரு தனிச் சிறப்பு வாய்ந்தது. அது, பாய்கின்ற ஒரு மானின் வடிவத்தையும், பிறை மதியின் வடிவத்தையும் ஒத்தது. சிவபெருமானின் பிச்சாண்டிக் கோல ஆண்மைப் பொலிவை நினைவூட்டுவது. இதற்கு அறிவியலார் இட்ட பெயர் மூன்றாம் நாளம் (Third Ventricle) என்பதாம்.

அதன் இருமருங்கிலும் இரண்டு நாளங்கள் உள்ளன. நம் வாயின் இருமருங்கிலும் எச்சில் ஊறி, நாவினை நனைப்பது போல் இந்த மூளை நாளங்களுள், (CSF என்ற) மூளைநீர் சுரந்து நடுநாளத்தின் மேல் பொழிகின்றது. தந்தையின் விந்து தாயின் கருப்பைக்கு மாற்றப் பெறுவது போல, மான்வடிவ மூன்றாம் நாளத்தால் உண்ணப்பட்டு எஞ்சிய இந்த மூளை நீர் பிட்யூட்டரி என்ற பெண்மைத்தானத்தில் சேர்கிறது. இவ்வாறு மான்வடிவ நாளம் உண்ட அமுதநீர், மான் உண்டு எஞ்சிய கலிழிநீர் ஆயிற்று.

இதனை ஆண்டவன் — ஆன்மப் பேரின்பப் புணர்ச்சியின் போது பிட்யூட்டரி என்ற ஆன்ம ஆவுடையாரில், மான் வடிவினதாகிய மூன்றாம் நாளத்தால் கலக்குண்டு, எஞ்சிய அமுதநீர் என்க. இதனை 'மானால் கலக்குண்ட நீர்' என்னும் பொருள்பட 'மான் கலிழிநீர்' என்றனர்.

இதனைப் பிறிதொரு வகையாகவும் சிந்திக்கலாம். பிட்யூட்டரி என்பது தலைமைச் சுரப்பி; விந்து என்ற சுத்தமாயையினாலானது; முத்தி பஞ்சாக்கரத்தை முறையாக எண்ணும் போது ஆன்மா அணையும் இடம் பிட்யூட்டரியே, என்பன முன்னர்ப் பலகாலும் அறிந்த செய்திகள். பிட்யூட்டரியே, உடலின் பிறபகுதிகளிலுள்ள ஏனைய அசுத்தமாயா சுரப்பிகளுக்கு ஊட்டச்சத்து அளிக்கிறது. அசுத்தமாயைக்கு **மான்** என்று பெயர். எனவே பிட்யூட்டரியில் சுரக்கும் அமுதம், மான் என்ற அசுத்தமாயா உடம்பினுக்கு உணவு ஆகிறது. அவ்வாறு

மானுக்கு உணவாகியது போகப், பிட்யூட்டரியில் எஞ்சிநிற்கும் நீரை 'மான் உண்டு எஞ்சிய நீர்' எனச்சுட்டி உரைத்தனர் எனலும் பொருந்தும்.

அஃது எவ்வாறு இனியதாயிற்று?

மூன்றாம் பிறை (Corpus collosum) என்பது நடுமூளையில் தொடங்கிப் புருவநடுவினை நோக்கி நீண்டு, பார்வை வளையத்தை (Optic chiasm) ஊடுருவி, வினைப்பதிவு ஏட்டை (Hypothalamus) உராய்ந்து சென்று, பெண்மைத் தானத்தை (Pituitary)த் தீண்டிக் கொண்டிருக்கிறது எனக் கண்டோம்.

இஃது எல்லா மனிதர்களுக்கும் உள்ள, பொதுவான ஒரு பூதத்துவ அமைப்பு. மின் ஓட்டமுள்ள மின்சாதனங்கள் ஆற்றலுடன் விளங்குகின்றன அன்றோ? அதேபோல் சிவ தியானம் செய்யும் சிறப்பியல்பினர்க்கு, இவ்வுறுப்புக்கள் அனைத்தும் அளப்பரிய தெய்வீக ஆற்றலைப் பெறுகின்றன. சிவமூலமந்திரத்தை விதிப்படி எண்ணும்போது, தலையினுள் தோன்றுகிற நுண்ணிய ஒலி அலைகளால், அறிவுத்தானமாகிய பெருமூளை என்ற ஆயிரம் இதழ்த் தாமரையில் 'ஞான அதிர்வு கள் தோன்றுகின்றன. மந்திரத்துக்கு உரிய தலைவராகிய சிவபெருமான், பிறைவடிவ நாளத்தின் உள்நின்று அதனை ஓர் இலிங்க வடிவினதாக்கித் தொழிற்படுத்துகிறார். அஃது ஆண்மையின் பொலிவைப் பெறுகிறது.

பிட்யூட்டரியில் தலைவியாகிய ஆன்மா அணைய, அப்பகுதி பெண்மையின் சீர்மையைப் பெறுகிறது. சாதாரண பூதத்துவ மூளைநீரும் பேராற்றல் உள்ள விந்து சத்தியாகி இறைமைத் தன்மையைப் பெறுகிறது. அப்போது நிகழும் ஆண்டவன்-ஆன்மப் பேரின்பப் புணர்ச்சியில் சிவபெருமான் 'உண்டு' எஞ்சிய கழிநீராகிய விந்துசத்தி, பெண்மைத் தானத்தை அடைகிறது, அங்கு அதனைத் தலைவியாகிய ஆன்மா உண்டு பேரின்பத்தில் திளைக்கிறது.

இவ்வாறாகச், சிவமூலமந்திர ஒலியால் பேராற்றலைப் பெற்றதாலும் சிவபெருமானே மூன்றாம் நாளவடிவில்

உண்டபின் விந்துசத்தியாக விளைந்ததாலும், பேரின்பக் கூட்டத்தில் வெளிப்பட்டதாலும், பெண்மைத்தானமாகிய சுத்தவித்தையை (பிட்யூட்டரியை)ச் சேர்ந்ததாலும், உயிருக்குப் புத்துணர்வும் சிவஞானத் தெளிவும் ஊட்டியதாலும் தலைவிக்கு இந்த மூளைநீர் இன்சுவை உடையதாயிற்று என்க.

சங்க காலத்து இப்பாடலிலிருந்து அறியத்தக்க சாத்திர உண்மைகள் யாவை? எனில்,

உலக நடப்பில் நமது இருதயத்துக் குருதியினால் நாம் பெறுகிற ஆற்றல் சிறப்பானதாகும்; எனினும், இறைமைத் தொடர்பால், ஆயிரம் இதழ்த் தாமரை போன்ற நமது பெரு மூளையின் கீழேயுள்ள பிட்யூட்டரி என்ற அமுதசுரபியில், பிச்சாண்டிப்பெருமான் ஆன்மநலன்களை எல்லாம் ஏற்றுக் கொண்டபின், அவரது ஆண்மைப் பொலிவால் கலக்குண்டு எஞ்சிய அமுதநீர், இதயத்துக் குருதியைவிட நிறைவான இன்பம் பயப்பதாகும்.

உயிர்களாகிய நாம் இருதயகமலம் என்ற அசுத்தமாயையில் பயிலுகிற இறைமைப் பண்பு, சுத்தமாயையினாலான சிவ தத்துவம் என்ற பெருமூளைப் பகுதியில் செவ்விதே வளர் வதற்குச் சிவாமுதம் துணைநிற்கிறது.

எனவே இருதயத்தை இருப்பிடமாகக் கொண்ட மனம் என்ற ஆறாவது அறிவுக்கருவி ஒடுங்கினால் மட்டும் போதாது, தலையிலுள்ள சித்தம் என்ற தலைவிதி ஏடும் தேய்ந்து ஒடுங்க வேண்டும்.

''சித்தமல(ம்) அறுவித்துச் சிவமாக்கி எனைஆண்ட
அத்த(ன்) எனக்(கு) அருளியவா(று)
ஆர்பெறுவார்? அச்சோவே''

—மாணிக்கவாசகர்[1]

1 திருவாசகம், அச்சோபத்து - 1

9. தலைவன் தந்த தழை ஆடை

அன்னாய், வாழி! வேண்டு அன்னை! என்னை
தானும் மலைந்தான்; எமக்கும் தழைஆயின;
பொன் வீ மணி அரும்பினவே—
என்ன மரம்கொல், அவர் சார(ல்) அவ்வே! [1]

அரும்பத உரை: சாரல்—மலைச்சாரல்; பொன்வீ—பொன் போன்ற நிறமுடைய பூக்களோடு; மணி அரும்பினவே--மணி போன்ற அரும்புகளும் உடையன; மலைந்தான் — அணிந்து கொண்டான்; தழை ஆயின—ஆடை ஆயின.

அந்தமிலா ஆனந்தம் பெற்ற ஒரு தலைவியின் கூற்றாக அமைகிறது, இப்பாடல்.

பாடலின் பொருள்: "அன்னையே வாழ்க! யான் கூறுவதை விரும்பிக் கேட்பாயாக! அன்னையே! இயற்கைப் புணர்ச்சியில் இன்பம் நல்கிய தலைவன், பொன்னிறப் பூக்களையும் மணியன்ன அறும்புகளையும் கொண்டதழைகளை எனக்கு ஆடையாகத் தந்தான். எனக்கு மட்டுமா தந்தான்? தானும் அணிந்து கொண்டான்.

என்னே அவனது அன்பு! என்னே அவனது மலைநாட்டு வளம்! என்னே அழகிய பொன் வண்ணப் பூக்கள்! அப்பொன் வீமணி நல்கும் பொலிவுடை மரங்கள் என்ன மரங்களோ! (இத்தகு மரத்தை யான்வேறு எங்குமே கண்டதில்லை).

இஃது இப்பாடலின் வெளிப்படையான பொருள், இனி இதன்கண் பொதிந்து கிடக்கும் ஆழ்ந்த உட்பொருளைச் ந்றிப்போம்.

தலைவன் யார்? உயிர்ப் பொருள்கள் அனைத்தையும் தனக்கு அடிமையாகவும், உயிரில் பொருள்கள் யாவற்றையும் தனக்கு உடைமையாகவும் கொண்ட ஒரே தலைவன்; அவனே செம் பொருளாகிய சிவபெருமான்.

ஐங்குறு நூறு - குறிஞ்சி -

தலைவி யார்? உள்ளத்தால் பூப்பு எய்திக் காமஞ்சான்ற உயிர்க் கூட்டம். தலைவிக்கு நீண்டதொரு வாழ்க்கை வரலாறு உண்டு. அதனை விளக்கமாகப் பின்னர்ச் சிந்திப்போம்.

சாரல் என்பது எதனை? தன்னேரில்லாத் தலைவன் சிவ பெருமான் எனக் கண்டோம். அவர் தன்னளவிலே சும்மா இருக்கும் இடம் மீதானப் பெருவெளி ஆகும். மீதானம் என்பதைத் துவாத சாந்தம் என்பர் வடநூலார். உயிர்களாகிய நமது தலை உச்சிக்கு மேலே பன்னிரண்டு அங்குல உயரம் என்பது இதன் பொருள். இது பரம்பொருளின் இயல்பான சிறப்பு நிலை.

அவ்வாறாயின், அப்பெருமானுக்குப் பொதுநிலை என ஒன்று உண்டோ? என்ற வினா எழுகிறதன்றோ?

உண்டு. அவர் உயிர்களாகிய நம்பொருட்டுத் தொழிற் படுகிற 'தடத்த' நிலையே அப்பொது நிலையாகும். அப்போது அவர் தங்கியிருக்கும் உயர்ந்த இடமே 'சாரல்' என்ற சொல் லால் இப்பாடலில் குறிப்பிடப் பெறுகிறது. அஃது எந்த இடம் எனக் காண்போம்.

நம்பொருட்டு அவர் அவ்வாறு தொழிற்படும்போது, முதலில் நமக்கென ஒரு வாழ்விடத்தை அமைத்துத் தருகிறார். அத்தகைய மறுவாழ்வு (Rehabilitation)க்கு நிலைக்களனாக அமைவது, மாயை என்ற ஒரு சடப்பொருள். அஃது இறை வனது வைப்பு ஆற்றலே (Potential Energy) அன்றி, வேறன்று. அதனைப் பரிக்கிரக சத்தி என்பர் வடநூலார். அந்த மாயை யிலிருந்து நம் ஒவ்வொருவருக்கும் ஏற்ற உடம்பு, உட்கருவிகள், உலகம், நுகர்ச்சி இவற்றை அவர் தன் சித்சத்தியாகிய ஆணை வழிப் படைத்தருளுகிறார். வடமொழியில் இவை முறையே தநு, கரண, புவன, போகம் எனப் பேசப்படுகின்றன.

இவ்வாறு உயிரின் வாழ்விடம் மாயை என்பதாயிற்று. அஃது இரண்டு கூறுகளைக் கொண்டது. அதன் மேற்கூறு,

சுத்தமாயை எனவும், கீழ்க்கூறு அசுத்தமாயை எனவும் அழைக்கப் பெறும். அசுத்த மாயை மேலும் விரிந்து, சுத்தாசுத்தம் என்ற இடைநிலைப் பகுதியாகவும், முற்றிலும் அசுத்தம் என்று அடிப்பகுதியாகவும் அமையும்.

இத்தகைய அமைப்புமுறை உடல் உலகம் யாவற்றிற்கும் பொதுவாகும். நமது மனித உடம்பில் தலையினுள் புருவத்திற்கு மேலுள்ள பெருமூளைப் பகுதி, சுத்தமாயை எனவும் ஏனைய உடற்பகுதிகள் அசுத்தமாயையின் விரிவாக்கம் எனவும் கொள்ளுதல் பொருந்தும். சுத்தமாயை ஐந்து தத்துவங்களாகவும்,[1] அசுத்தமாயை முப்பத்தொரு தத்துவங்களாகவும்[2] விரிகின்றன என்பது சைவசித்தாந்தம் மட்டுமே அறிவுறுத்துகிற தனிப்பெருங் கொள்கை.

இவ்வாறு 36-தத்துவங்களால் வடிவமைக்கப்பட்ட நமது இந்த உடம்பில், சிவபெருமான் இருந்து தொழிற்படுகிற இடம் எது? எனக் காண்போம். மின் ஆற்றல் என்பது ஒரே பொருளாயிருந்தும், நமக்குப் பயன்பட வரும்போது, நேர்மின் ஆற்றல் என்றும் எதிர்மின் ஆற்றல் என்றும் இரண்டு கூறாகித் தொழிற்படுகிற தன்றோ? அதேபோல், ஒன்றேயாகிய பரசிவம், சிவன் என்றும் சத்தி என்றும் இருகூறாகி, நமக்காகத் தொழிற்படுகிற நிலையில், நமது அறிவுத்தானமாகிய பெருமூளையின் இருகூறுகளையுமே (Right and Left hemispheres of the Cerebrum) தனக்கு நிலைக்களனாகக் கொள்ளுகிறது.

அடுத்துப் பெருமூளையைச் 'சாரல்' எனக் குறிப்புரைத்தல் எங்ஙனம் பொருந்தும்? என்பதைச் சிந்திப்போம். நிலப்பரப்பில்

---

1 சுத்த மாயா தத்துவங்கள்: நாதம், விந்து, சாதாக்கியம், ஈசுரம், சுத்தவித்தை என்ற ஐந்து (5)

2 அசுத்த மாயா தத்துவங்கள்; காலம், நியதி, கலை, வித்தை, அராகம், புருடன், மாயை என்ற ஏழும் (7) அசுத்தமாயையின் மேற்பகுதி. அதன் கீழ்ப்பகுதியில் மனம், புத்தி, அகங்காரம், சித்தம் என்ற அந்தக்கரணங்கள் 4-ம், கண்முதலிய அறிவுக்கருவிகள் 5-ம் கைகால் முதலிய செயற்கருவிகள் 5-ம், சுவை முதலிய தன்மாத்திரைகள் 5-ம், நிலம் ஈறாகிய பூதங்கள் 5-ம் ஆக 24-ம் அடங்கும்.

உயர்ந்த பகுதியினை மலையென அழைக்கிறோமன்றோ? அதேபோல் நமது மனித உடம்பின் உயர்ந்த பகுதியாகிய தலையையும், நம் உடம்புக்கு அமைந்த மலையெனக் கொண்டனர், பண்டைத் தமிழ்ச் சான்றோர். அவர்கள் அவ்வாறு கொண்டதற்கு விழுமிய பல காரணங்களும் உள்ளன.

நில உலகில் நாம் வாழும் இந்தப் புண்ணிய பூமிக்கு வடக்கே உள்ளது இமயமலை. அதன் தென்பக்கச் சாரலில் உள்ளது திருக்கயிலாயம் என்ற புனித மலைப்பகுதி. அதனையே சிவபெருமான் உமையொடு அமர்ந்து, உயிரினத்துக்குத் திருவருள் பாலிக்கும் இடம் என அருளாளர் வணங்கித் துதிப்பர். இமயத்திலுள்ள கைலாயத்தைப் போன்றதே, நம் தலையிலுள்ள பெருமூளையும்.

பன்னூறாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர், ஆழ்கடலாக இருந்த ஒரு நிலப்பரப்பே, கால அடைவில் பற்பல நில அதிர்வுகளால், அதன் மேற்பரப்பு குவிந்தும் மடிந்தும், குவிந்தும், மடிந்தும், மிக உயரமான ஒரு மலையாயிற்று எனவும், அதுவே இமயமலை எனவும், அஃது ஒரு மடிப்புமலை எனவும் நிலநூல் வல்லார் கருதுவர்.

அதேபோல், பலகாலம் அம்பலாய்க் கூம்பிக்கிடந்த நம் பெருமூளை, இடையறாச் சிவதியானத்தால் அலர்ந்து, மண்டை ஓட்டினுள்ளேயே சுருள் சுருளாக மடிந்து, ஒருமடிப்பு மலையின் தோற்றத்துடனேயே திகழ்கிறது எனலாம்.

மலை என்பது உயர்ந்தது மட்டுமன்றித் திண்மை மிக்கது; வண்மை நிறைந்தது; பிறபகுதிகளுக்கு நல்ல வளம் கொணர்வது பனிமூட்டமும் மேக மூட்டமும் உடையது; வற்றாத சீவநதிகளுக்குத் தாயகமாவது.

இத்தகைய பெருமைகள் பலகொண்ட மலையினைப் போன்றே, நம் உடம்பில், தலையும் திண்மையானது; அறிவுத் தானமாகிய பெருமூளைக்குக் கவசமாக நிற்பது; ஊட்டச்சத்து மிக்க அமுதநீர் பலவற்றைச் சுரப்பது; வெண்முகிலும் கார் முகிலும் (White mater & Grey mater) சூழ்ந்து கிடப்பது; உடலின் பிறபகுதிகள் அனைத்துக்கும் எல்லா நலன்களும் தந்து,

தன்வழிச் செலுத்துவது. (இதன் விரிவான செய்திகளை, இந்நூல் மூன்றாம் அதிகாரத்தில் காண்க).

எனவே, தமிழினத்துப் பேரின்ப ஒழுகலாறு பற்றிப் பெருமையுறப் பேசும் கபிலதேவர், தம் ஐங்குறுநூற்றுக் குறிஞ்சி ஒழுக்கப் பாடல்களில், தலைவிநிலைக்கு உயர்ந்த சிவஞானிகளின் பெருமூளைப் பகுதியையே, தலைவனாகிய சிவபெருமான் உறைகிற மலைச்சாரல் எனப்போற்றி உரைத்தனர் என்க.

என்ன மரம் கொல்!: தலைவனுடைய மலைச்சாரலில் உள்ள பொன்வண்ணப்பூக்களைத் தருகின்ற அரிய மரத்தின் பெருமை வியந்து போற்றப்பெறுகிறது. நமது தலையினுள் பெருமூளையே தலைவனது சாரல் எனக் கண்டோம். எனவே ஈண்டு மரம் என்றது, நம் முதுகுத்தண்டினைக் குறிப்பதாயிற்று. மூளையும் முதுகுத்தண்டும் இணைந்த பகுதியை மையநரம்பு மண்டலம் என்பர் அறிவியலார். மூளையின் மடிப்புகள் நிறைந்த பகுதி பரந்துபட்ட தழைகளையும், முதுகுத்தண்டு அடிமரத்தினையும் ஒத்திருக்கக் காணலாம். இதனை,

> "இருள்படப் பொதுளிய பராரை மராஅத்து
> உருள்பூந் தண்தார் புரளும் மார்பினன்"[1]

என நக்கீரர் முருகப்பெருமானைப் புகழ்ந்து கூறும் செய்தியுடன் இணைத்து நோக்குதல் பயனுடைத்து.

அடுத்துப் பொன் வீ, மணி அரும்பு, தழை என்ற தொடர்களால் ஆசிரியர் குறிப்புரைக்கும் உண்மைகள் யாவை? எனக் காண்போம்.

பொன் வீ : பொன் போன்ற நிறமுடைய பூக்கமும், மணி போன்ற ஒளியும், வடிவும் கொண்ட அரும்புகளும் கூடிய தழைகள், தலைமக்கள் இருவருக்கும் ஆடையாயின என்பது கருத்து.

தத்துவ நோக்கு : பொன் வீ என்பது பொன் போன்ற மலர்கள் என்னும் பொருளதாகி பெண்மையும் ஒளியும் பொருந்

1 திருமுருகாற்றுப்படை, திருப்பரங்குன்றம் - 10

நிய சுத்தமாயையைக் குறிப்பதாயிற்று. மணி அரும்பு என்பது செந்நிற அரும்பு எனவும், மணி வடிவ அரும்பு எனவும் பொருள னவாகி, விந்து, நாத தத்துவங்களைக் குறிப்பால் உணர்த்தின.

சுத்த மாயை, சிவபெருமான் நமக்காகத் தங்கித் தொழில் படுகிற இடம் சுத்தமாயையின் ஐந்தாவது தத்துவம் சுத்த வித்தை இதன் நிறம் பொன்மை[1] என்பன சைவ அருளாளர் அனுபவழித் தெளிந்த உண்மைகள். எனவே சுத்தவித்தையி லுள்ள அரும்புகளும், மலர்களும் தலைமக்களுக்குத் தழையாயின என்பது குறிப்பு.

அறிவியல் நோக்கு: நமது மனித உடம்பில் சுத்தவித்தை எங்கு உள்ளது? நம் தலையினுள் பிட்யூட்டரி என்ற தலைமைச் சுரப்பி ஒன்று பெருமூளையின் அடிப்பகுதியில் உள்ளது. அஃது அளப்பரிய ஆற்றலை உடையது.

அது பல உயிர்ப்பு நீர்களைச் சுரக்கிறது. இதனைத் தலைமைச் சுரப்பி (Master Gland) என அறிவியலாரும், ஆக்ஞை ஆதாரம், ஆணைத்தானம் எனச் சைவ அருளாளரும் அழைப்பர். இதுவே சுத்தவித்தை எனப்படுகிறது.

உலகப் பற்றுகளாகிய தத்துவ ஆடைகளைக் களைந்து' இறைகாமம் சான்ற ஆருயிர், அருட்சத்தியின் துணையால் சுத்தவித்தை என்ற இத்தலைமைச் சுரப்பியை அணைகிறது. இங்குத்தான் சிவபெருமான் சீவனைக்கூடிப் பேரின்பம் நல்கு கிறார்.

தானும் மலைந்தான்:

பொன்வீ, மணி அரும்புடன் கூடிய தழைகளையே தானும் அணிந்து கொண்டான் என இதற்கு மேலோட்டமான பொருள் கூறலாமாயினும், சிவபெருமான் இயற்றுகிற ஐந்தொழில்களுள், அருளல் என்ற இறுதித் தொழிற்பாட்டை இது குறிப்பால் உணர்த்துவதாயிற்று.

---

1 சுத்தவித்தை - பொன்னிறம் வாலையானந்த சுவாமிகள், சைவ சித்தாந்தப்பட விளக்கம் பக்,

மாயையிலிருந்து நமக்கு உடம்பு முதலியவற்றை படைத்துத் தருகிற சிவபெருமான், குறிப்பிட்ட ஒரு கால எல்லைவரை நம்மை உலக வாழ்வில் நிலை பெற்றிருக்குமாறு காத்து, இறுதியில் அவற்றை நம்மிலிருந்து பிரித்துத் தன்னுள் ஒடுக்கிக் கொள்ளுகிறார் இவ்வாறு படைத்தல், காத்தல், அழித்தல் என்ற முத்தொழில்களும் முறையாக நிகழ்த்தப் பெறுகின்றன. இஃது உலகத்து உயிர்கள் அனைத்துக்கும் பொது வகையால், மாயையைக் கருவியாகக் கொண்டு, இறைவன் அருளும் முறை.

அடுத்து, அவர் சிறப்பு வகையால் உயிர்களை எவ்வாறு உய்விக்கிறார் என்பதைக் காண்போம். சிவனும் சத்தியும் இருகூறாகி, அம்பலாய்க் கூம்பிக் கிடக்கும் பெருமூளையின் இருகூறுகளிலும் தங்கி, நாதவிந்து தத்துவங்களை இயக்கிக் கொண்டு, தம்மை வெளிக்காட்டாது மறைந்தே இருப்பர். அப்போது சிவசத்தி, தன் ஆயிரத்தில் ஒரு கூறாக, ஆதிசத்தி என்ற பெயரோடு வெளிப்பட்டு, நம் பின்தலைப் பிடரியுள் சிறுமூளையில் தங்குகிறாள். அங்கு, நம் தாயாக மறைந்து நின்று நமது ஊழ்வினைகளுக்கு ஏற்றவாறு ஊனப் பாலை ஊட்டுகிறாள். மும்மலங்கள் நம்மில் நீங்கும்போது, அவளே அருட்சத்தியாகி, ஞானப்பாலை ஊட்டிச் சிவஞானத் தெளிவுடைய ஆன்மாக்களைச் சிவபெருமான் திருவடியில் சேர்ப்பித்துப், பேரின்பம் துய்க்குமாறு அருள் புரிகிறாள்.

இங்ஙனம் வினைகள் தொடரும் காலத்தில், உயிர்களிடமிருந்து தன்னை மறைத்துக் கொள்ளுதலும், வினை நீங்கிய நொடியில் தன்னை வெளிக்காட்டி அருளுதலும், இறைவன் உயிர்களின்பால் இயற்றுகிற தலையாய இரண்டு தொழில்களாம்.

எமக்கும் தழையாயின: பொன்னிறப் பூக்களும், மணிபோன்ற அரும்புகளும் கூடிய தழைகள், உயிராகிய தலைவிக்கு ஆடையாயின என்பது பொருள். அவ்வாறாயின், உயிர்த் தலைவிக்கு வெவ்வேறு காலச்சூழலில் வேறுவேறாய ஆடைகள் இருந்தன என்பதும், சிவபெருமான் என்ற தலைவனைப் புணர்ந்து பேரின்பம் துய்த்த பின்னர், அவளுக்குப் பொன்வியும்

மணியரும்பும் மாற்றுடையாயின என்பதும் பெறப்படும். எனவே அத்தகைய ஆடைகள் எவை எவை என்பது நம் சிந்தனைக்குரிய தாகிறது. அதனைத் தெளிவாக நாம் உணர வேண்டுமானால், ஆன்மாவின் படிமுறை அறிவு வளர்ச்சியைப் பற்றி ஓரளவு நினைவுகூர்தல் வேண்டும்.

முப்பொருள்: இறைவனைப் போலவே, உயிர்களும் தளை களும் கால எல்லைக்கு அப்பாற்பட்ட அநாதி. இறைவனாகிய சிவபெருமான் ஒருவரே பேரானந்த மெய்ப்பொருள். அவரை உயிர்களாகிய நாம் அடைய முடியாதவாறு தடையாக இருக்கும் 'இன்பப் போலிக'ளே தளைகள் எனப்படுவன. அவை, ஆணவம், கன்மம், மாயை என்ற மூன்று.

முந்திய கேவல நிலை: அவற்றுள் ஆணவம் என்பது மூலமல மாகும். அநாதி தொட்டு உயிரை இருளில் அழுத்தி நிற்பது ஆணவமே. ஆணவத்தால் முழுமையும் பிணிக்கப்பட்டு, உயிர் அவலத்தில் உலவிய காலம், உயிரின் கேவலநிலை (தனி நிலை) எனப்படும். அப்போது உயிர் ஆணவத்தையே தனக்கு ஆடை யாக (உடம்பாக)க் கொண்டிருந்தது. ஆணவத்தின் சார்பால் வினைகள் பல செய்தது; அதனால் கன்ம மலத்தாலும் கட்டுண்டது.

இன்றைய சகல நிலை; ஆணவம், கன்மம் என்ற இவ்விரு மலக்கட்டுகளிலிருந்து நம்மை விடுவிக்கவும், ஆன்ம அறிவினை விளங்கச் செய்யவும், ஆனந்தத் தேனை நமக்கு ஊட்டி இன்புறுத்தவும் திருவுளம் கொண்ட சிவபெருமான், மாயை யினாலான உடம்பு முதலியவற்றை நமக்கு அருளினார். இது 'துணியிலுள்ள அழுக்கினைப் போக்க உவர்மண் போன்ற பிறி தோர் அழுக்கினைச் சேர்த்தல் போன்றதே யாம்'—என நயம் பட உவமிப்பர் ஆன்றோர்.

(சிவபெருமான் திருக்குறிப்பால், மாயையிலிருந்து பெற்ற மாற்று உடையாகிய உடம்புடனேயே நாம் இப்பொழுது வாழுகிறோம்)

மாயையின் பஞ்ச கலைகளாலானவை, உடம்பு முதலியன. ஆதலால், நம்முடைய இப்பொழுதைய வாழ்வு, சகலநிலை எனப்படும்.

மாயையினாலான உடம்பும், உலகப் பொருள்களும், பிறவும் நமக்கு அருளப்பட்டதன் நோக்கம், ஆணவ கன்மங்களின் பிடியிலிருந்து நாம் விடுபட வேண்டுமென்பதே. ஆனால், நாம் இருமலங்களின் அழுக்கிலிருந்து விடுபடுவதற்கு மாறாக, மூன்றாவது மலமாகிய மாயையினை மிகுதியாகச் சார்ந்து, மும்மலங்களுக்கும் அடிமையானோம். எப்போதும்போல இறைவன் திருவருள் இங்கும் நமக்குத் துணை நிற்பதாயிற்று. அதனால், உயிர் சிறிது சிறிதாக மும்மலங்களின் கேட்டினை உணர்ந்து. அவற்றிலிருந்து விடுபடுவதற்காக இறைவனைச் சாரத்தலைப்படுகிறது.

சகல நிலையில் உயிரின் அறிவு வளர வளர, 'மாயா தத்துவங்கள் நிலையற்றன, அறிவற்றன, அவை வெறும் சடம் என்பதையும், 'அவற்றின் வேறாயது, அறிவுப்பொருளாகிய உயிர்' என்பதையும், 'சிற்றறிவு உயிர், சிவபெருமான் திருவருள் துணையால் மட்டுமே, மும்மல நீக்கமும், முத்திப் பேரின்பமும் எய்த முடியும்' என்பதையும், அனுபவங்களின் மூலம் தெளிவாக உணருகிறது.

தொண்டு நெறி, மகன்மை நெறி, தோழமை நெறி என மூவகைத் தவ நெறிகளில் படிப்படியாக முன்னேறி, உயிர் இறுதியாக ஞானத்தில் தலைப்படுகிறது. இவ்வாறு மலங்கள் ஒடுங்கித் தூய உயிராகும்போது, அன்பின் பிணைப்பாகிய தலைவி நிலைக்கு உயருகிறது. அப்போது. அசுத்த மாயா உடம்பிலிருந்து, கொஞ்சம் கொஞ்சமாக மனத்தூய்மையுற்றுச் சுத்தமாயா உடம்பினைப் பெறுகிறது. இந்த நிலையிலேயே ஆன்மாவுக்குச் சுத்தவித்தையின் பொன்னிறப் பூக்கள் ஆடையாகின்றன.

அசுத்த மாயையின் 31–தத்துவங்களையும் தனக்கு ஆடையாக (உடம்பாக)க் கொண்டிருக்கிறது ஆன்மா. பற்று நீங்கிப் பேரின்பத்திற்குத் தலைப்படும்போது, உயிர் தனது தத்துவ

ஆடைகளை ஆங்காங்கே விட்டு விட்டு அம்மண நிலையில், சிரசுத் தானத்தில் சிவபெருமானைச் சேருகிறது.

சிவபெருமான், இப்பூவுலகில், தலைவியாகிய உயிரைப் புணர்ந்து பேரின்பம் நல்கும் இடம், நம் தலையில் பிட்யூட்டரி என்ற ஆணைத்தானம் ஆகும். இது சுத்தமாயையின் ஐந்தாவது தத்துவமாகிய சுத்தவித்தை ஆகும். இதன் நிறம் பொன்மை என்பது சிவாகமங்கள் அறிவுறுத்தும் உண்மை,

பேரின்பக் கூட்டத்துக்குப் பின், சிவபெருமான், அசுத்த மாயா தத்துவங்களைக் கடந்து வந்த ஆன்மாவுக்குச் சுத்த வித்தையின் பொன்னிறப் பூக்களையும் அரும்பு, தழை ஆகிய வற்றையும் ஆடையாகத் தந்து அணிந்து கொள்ளச் செய்து, அவற்றைத் தானும் அணிகிறார். இஃது ஆன்மாவின் சீவன், முத்தநிலை. பாடலின் கருத்து இந்த அளவிலேயே அமைகிறது என்றாலும், ஆன்மாவின் படிமுறை வளர்ச்சியை முழுமையுறச் செய்வதற்கு, ஆன்மாவின் சுத்தநிலை பற்றியும் சுருக்கமாக இவண் குறிப்பிடுதல் வேண்டும்.

ஆன்மாவின் சுத்தநிலை: சைவ ஞான நூல்களில் கூறியுள்ள படி, உயர்ந்த பக்குவ ஆன்மாக்களின் பசுகரணங்கள் சிவபெரு மான் திருவருளால் பதிகரணங்களாக மாற்றப் பெறுகின்றன பிச்சாண்டியாய் நின்று சிவபெருமான் ஆன்மா போதத்தைத் தானே ஏற்றுக் கொள்ளுவதும், ஆன்மாவைத் தம்பால் முழுமை யாகச் சார்ந்திருக்கும் வண்ணம் பிச்சேற்றி ஆளுவதும், தன் எண் குணங்களையும் ஆன்மாவின்பால் பதிய வைப்பதும், சிவ சத்தியையே ஆன்மாவுக்கு உடம்பாக அருளுவதும் இந்த நிலை யில் நிகழ்கின்றன.

''தந்த(து)உன் தன்னைக் கொண்ட(து)என் தன்னைச்
சங்கரா ஆர்கொலோ சதுரர்!
அந்தம் ஒன்(று) இல்லா ஆனந்தம் பெற்றேன்
யாதுநீ பெற்ற(து) ஒன்(று) என்பால்'' —1

---

1 மாணிக்கவாசகம், திருவாசகம், கோயில் திருப்பதிகம்-10

என்பனபோன்ற அருள் வாக்குகளாலும் இவ்வுண்மையை உய்த்துணரலாம்.

நிறைவுரை: இவ்வாறு கபிலர், பொன்வீ, மணி அரும்பு, மலைச்சாரல், முதலியவற்றைக் கொண்டு இறை பேரின்பத்தைக் குறிப்பால் உணர்த்திய முறைமையினால், 'நம் தலையினுள் சுத்த வித்தையே பேரின்பத்தானம்' என்ற சித்தாந்த சைவக் கோட்பாட்டினை அரண் செய்திருக்கிறார் எனலாம். மேலும்,

''அந்தமில் சிறப்பின் ஆகிய இன்பம்
தன்வயின் வருதலும் வகுத்த பண்பே''1

எனத் தொல்காப்பியர் கூறுகிற சீவன் முத்தநிலைக்கும் இப் பாடல் ஓர் இலக்கியமாகத் திகழ்கிறது.

''யாது மூரே யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா
நோதலுந் தணிதலும் அவற்றோர் அன்ன''

—கணியன் பூங்குன்றனார்.

1 தொல் - பொருள் - 239

சைவசித்தாந்தச் செம்பொருளும் உடற்கூறும்

1. சிவம் எனும் செம்பொருள்

உடம்பினை முன்னம் இழுக்(கு) என்(று) இருந்தேன்;
உடம்பினுக்(கு) உள்ளே உறுபொருள் கண்டேன்;
உடம்பு(உள்)ளே உத்தமன் கோயில் கொண்டா(ன்) என்று
உடம்பினை யான்இருந்(து) ஓம்புகின்றேனே."[1]

தமிழகம் அன்றும் இன்றும்: சைவ சித்தாந்தத்தின் தத்துவ சிந்தனைகள் பழம்பெருமை வாய்ந்தவை, அவற்றின் ஆழ்ந்த உட்பொருள்களை நம் பண்டைத் தமிழ் முன்னோர்கள் நுண்ணிதே அறிந்து தெளிந்திருந்தனர். சிவாகமங்களின் சாரமாகிய சைவ சித்தாந்தச் செந்நெறியில், அவர்கள் தமது வாழ்வு முறைகளை அமைத்துக் கொண்டு, நிலையானதும் அறிவு மயமானதுமான உண்மைப் பேரின்பத்தில்[2] (சத்சித் ஆனந்தத்தில்) திளைத்திருந்தனர் என்பதற்கு அகச்சான்றுகள் ஏராளமாக உள்ளன. அவற்றை ஆழ்ந்து சிந்தித்தால், அக்காலத் தமிழகத்தின் பொற்கால வளமைக்குச் சைவ சித்தாந்தச் செந்நெறிகளே ஆணி வேராக இருந்தன என்பதும் தெளிவாகிறது.

ஆனால் இன்றைய உலகமோ, விஞ்ஞானச் சார்புடைய தாயிருக்கக் காணுகிறோம். நிலவியலில் தொடங்கி, நீரியலில் மிதந்து, உடலியலைத் தொடர்ந்து, உளவியலை ஊடுருவி. வானியலைத் தொட்டு நிற்குமாறு அறிவியல் துறைகள் ஒவ்வொரு நாளும் பல நூறாகப் பெருகிப் பரந்து விரிந்து கொண்டே இருக்கின்றன. புற உலக அறிவு மேம்பட்டுவரும் இந்நாளில், அகவாழ்வில் அமைதி இல்லை; இன்பம் இல்லை; எங்கும் ஒரே குழப்பம், கூச்சல், போர், சோர்வு. இத்தகைய பெருந்துன்பத்திலிருந்து விடுபட வேண்டும், அமைதியாக இன்பமுடன் வாழவேண்டும் என்ற பெருவிருப்பும் உள்ளத் துடிப்பும் இன்று உலகில் வாழும் ஒவ்வோர் உயர்ந்த மனிதனிடமும் காணப்பெறுகின்றன.

---

1 திருமந்திரம் 725
2 சச்சிதானந்தம்

அந்த முறையிலே, சைவ சித்தாந்தச் செம்பொருள், இன்றைய அறிவியல் ஆய்வு மேம்பாட்டுக்கும், நலிந்து மயங்குகிற நல்ல உள்ளங்களுக்குத் தெளிவூட்டுவதற்கும், மலிந்து கிடக்கும் வன்முறைச் சிந்தனைகள் திருந்துவதற்கும், உலக ஒருமைப்பாடு தழைப்பதற்கும் பெரியதொரு துணையாக அமையும் என்பது உறுதி.

எனவே இத்தகைய இன்னல்களிலிருந்து விடுபடப் பழம் பெரும் சைவ சித்தாந்தக் கோட்பாடுகளையும், இக்காலத்து மேலோங்கித் தோன்றுவதாய அறிவியல் ஆய்வு நுணுக்கங்களையும் இணைத்து ஒப்பு நோக்கி, மெய்ப்பொருள் காண்பது பயனுடையதாகும். இன்றைய அறிவியலின் பலதுறைக் கருத்துக்களைப் பொதுவாகவும், உடலியல் துறைச் சிந்தனைகளைச் சிறப்பாகவும் எடுத்துக்கொண்டு, அவற்றைத் தொன்மைச் சைவ நெறிகளோடு இணைத்துச் சிந்திப்பது இந்நூல் எழுந்ததன் நோக்கமாகும்.

இந்த முயற்சியின் முன்னோடியாகச் சைவம் என்றால் என்ன? சித்தாந்தம் என்றால் என்ன? செம்பொருள் என்றால் என்ன? என்பவற்றை ஓரளவேனும் அறிந்து கொள்ளுதல் வேண்டும்.

சைவம் என்பது என்ன? திலத்தோடு தொடர்புடையது தைலம் என்பதைப் போலச் சிவத்தோடு தொடர்புடையது சைவம் ஆகும். சிவத்தையே தனிப்பெரு முழுமுதற்பொருளாக மனம் மொழி மெய் என்ற திரிகரணங்களாலும் இடையறாது சிந்தித்து வழிபடுவோர் சைவர் ஆவர்.

சித்தாந்தம் என்றால் என்ன? சித்தம் என்றால் முடிவு என்பது பொருள்; அந்தம் என்றாலும் முடிவு என்பதே பொருள்; எனவே சைவ சித்தாந்தம் என்றால் சிவஞானப்பேறு பற்றிய முடிந்த முடிவு என்பது பொருளாயிற்று.

சிவபரத்தின் திருவருளில் திளைத்தலைச் சிவஞானம் என்பர். சிவஞானத்தின் அளப்பரிய பெருமைகளையும், அதனை அடைவதற்கான நெறிமுறைகளையும் நாம் தெளிந்து உய்தி பெறுதல் வேண்டும். அதற்கு உறுதுணையாக, ஊழியின் தொடக்கத்தே,

சிவபெருமான் செய்தருளியவையே **வேத சிவாகமங்கள்** என்பது அருளாசிரியர்கள் துணிவு, அவ்வாறு இறைவனால் அருளப்பெற்ற **வேதங்கள்**, உலகத்தில் இருக்கின்ற அனைத்துப் பொருள்களுக்கும் **பொது**; அவரால் அருளப் பெற்ற **சிவாகமங்களோ** எனில்,அவை ஆறறிவுடைய மனித இனத்துள்ளும் சைவ உணர்வு மேம்பட்டு வளர்ந்த உயிர்களுக்குச் செந்நெறி காட்ட வந்த **சிறப்புடையன.**

வேத வாழ்வினைக் கடந்த சைவ அருளாளர்கள் தம் நுண்ணிய உள்முகச் சிந்தனையால், சிவாகமங்களின் நெறிமுறைகளை ஐயந்திரிபின்றிக் கற்றனர்; வழுவின்றி அந்நெறி நின்றனர்; உயரிய சிவஞானத்தில் திளைத்தனர். பிறபிற சமயக் கோட்பாடுகளையும் ஆய்வு செய்தனர் அவற்றுள் நிலவும் உயர்ந்த கருத்துக்கள் சிவாகமங்களில் முன்னரே செறிவாக நிறைந்திருப்பதைக் கண்டனர். தாம் தெளிந்து நுகர்ந்து இன்புற்ற சிவாகமக் கருத்துக்களைச் சைவ சித்தாந்தத் தத்துவங்களாகவும் ஞான நூல்களாகவும், நமது சிற்றறிவிற்கு ஏற்புடைய வகையில், எளிமையாக்கி அருளினர். இவ்வாறு இறையருள் துணையால், ஆய்வு செய்து அறுதியிடப்பட்டதும் அதற்குமேல் வேறொரு முடிவு இல்லாததும், பிறசமயக் கருத்துகள் அனைத்தும் தன்னுள் அடங்கியதுமாகிய சிவஞானத் தெளிவே சைவ சித்தாந்தமாகும்.

சைவத்தின் காலமும் களமும்: சைவ சித்தாந்தத்தை அண்மைக் காலத்தில், அதாவது 12, 13ஆம் நூற்றாண்டுகளில் உருவானதாக இக்கால ஆய்வாளர்கள் கூறுவர் முறையாகச் சிந்தித்தால், அவர்கள் கருத்து பிழையானது என்பது புலனாகும். எடுத்துக்காட்டாக ஒன்று காண்போம்: இந்திய அரசியல் சட்டங்கள் அண்மையில், 1947இல்தான் தொகுக்கப் பெற்றன; என்றாலும் ''குடவோலை முறை'' என்ற குடியாட்சித் தத்துவம், பண்டைச் சோழர் கால்த்திலேயே நடைமுறை வழக்கிலிருந்ததாக வரலாறு கூறுகிறது. எனவே குடியரசு என்ற சிந்தனை மேல்நாடுகளில் தோன்றுவதற்குப் பன்னெடுங்காலம் முன்னதாகவே, நம் தமிழ் நாட்டில் வழக்கில் இருந்தது என்பதற்கு இஃது ஒரு சான்று ஆகிதன்றோ?

இவை போன்றனவே சைவக் கொள்கைகளும். சைவத்தின் மெய்கண்ட சாத்திர நூல்கள் இயற்றப் பெற்ற காலம் ஆயிரம் ஆண்டுகளுக்கு உட்பட்ட அண்மைக் காலமே. என்றாலும், சிவபெருமான் இப்பேரண்டத் தொகுப் பினையும் சிவ ஆகமங்களையும் உயிரின உய்வு கருதிப்படைத் தருள, உயிர்களுக்குச் சைவ நன்றி உணர்வு, முதற்கண் எப் பொழுது தோன்றியதோ, அப்பொழுதிருந்தே - அதாவது வர லாற்றுக்கு முந்திய அநாதி காலந்தொட்டே - நம் சைவ சமய மும், கோட்பாடுகளும், நிலவி வந்திருக்கின்றன என்பதே உண்மையாகும்.

சைவத்தின் களம்: சிவபெருமானே தனிப்பெரு முழுமுதற் பொருள். அண்டத் தொகுப்பு முழுமையும் அவரால் ஆக்கப் பெற்றவையே. எனவே கோடானுகோடி அண்டங்களையும் தனது களமாக உள்ளடக்கி நிற்பது சைவ சமயம் என்பது துணிவு. உயிர்ப்பொருள்கள், உயிரில் பொருள்கள் என்ற இரு வகைப் பொருள்களும் இதனுள் அடங்கும். ஒலியும் ஒளியும் எங்கெங்கு உள்ளனவோ, சொல்லும் பொருளும் எங்கெங்கு வழங்குகின்றனவோ, அங்கெல்லாம் சைவம் வெளிப்படை யாகவோ, மறைந்தோ வாழ்கிறது; வாழும் என்பதும் உறுதி.

சிவபெருமானே பரம்பொருள்: 'கடவுள் இல்லை' என்பாரும் 'கடவுள் பலர்' என்பாரும் உலகில் எக்காலத்தும் இருக்கவே செய்கின்றனர். அவ்இரு பாலரையும் விடுத்துச் சிந்தித்தால், 'பரம்பொருள் ஒன்றே' (ஏகம்சத்) என்பதில் நன்மக்கள் அனை வரும் ஒருமித்த கருத்துடையவரே. எனினும் உலக மாந்தரின் மாறுபட்ட அறிவு வளர்ச்சி, நில அமைப்பு, மொழிவளம், வாழ்க்கை முறை இன்ன பிற முரண்பாடுகளால், ஒவ்வொரு காலத்திலும் சமயக் கொள்கைகள் பலவாக உருவெடுத்தன. ஒவ்வொரு சமயத்தவரும் தத்தம் கருத்திற்கு ஏற்ப அப்பரம் பொருளுக்கு வெவ்வேறு பெயர் சூட்டினர். ஏனைய சமயத் தாரது உருவ வழிபாட்டு முறைகளை இகழ்ந்து பேசி, உலகத் தவரைத் தம்மிடத்துக்கு மதமாற்றம் செய்ய முனையும் மாற்றுச் சமயிகளுங் கூடத், தம் வழிபாட்டிற்கென ஏதோ ஓர் உருவத்தையும், அதற்கு ஒரு பெயரையும் வைத்து, 'வான மண்டலத்துப் பொன்னிறச் சிங்காதனத்தில் அத்தேவன் வீற்றிருப்ப' தாகச் சித்திரித்துப் பேசுவர்.

பிறபிற சமயங்கள் இவ்வாறு தம்முள்ளேயே முரண்பட்டு நிற்க, உலகச் சமயங்கள் அனைத்திலும் மேலாகச் சைவசமயம் ஒன்றே தெளிவான சித்தாந்தம் கொண்டதாய் இருக்கிறது. 'பரம்பொருள் ஒன்றே' என்பதிலும், அந்தமிலா அறிவானந்த (சச்சிதானந்த) சொரூபியாகிய அது, தன் இயல்பு நிலையில் (சொரூப இலக்கணத்தில்), பெயரோ, உருவமோ, குணம் குறியோ ஒன்றுமில்லாதது என்பதிலும், அது நமக்காகத் தொழில்படுகிற தடத்த இலக்கணத்தில், உயிரினத்தின் மாறுபட்ட அறிவு நிலைக்கு ஏற்ப, அருவம், அருஉருவம் உருவம் எனப் பல்வேறு நிலைகளைத் தானாகவே கொள்ளுகிறது என்பதிலும் சைவஞான நூல்கள் உறுதியான கருத்தினை வெளிப்படுத்துகின்றன.

எனினும்,, பரம்பொருளைப் பரசிவம் என்ற பெயரால் நம் தமிழினம் சிறப்பித்து மகிழ்கிறது 'அவ்வாறு ஒரு நாமம், ஓர் உருவம் ஒன்றுமில்லாப் பேராயிரத்தானைச் சிவம் என்ற பெயரால் ஏன் அவர்கள் அழைத்தனர் என்பது உயரிய சிந்தனைக்கு ஒரு விருந்தாகும். அது பற்றிய கருத்துக்களை இப்பொழுதுச் சிந்திப்போம்.

செம்பொருள் என்பது எதைக் குறிக்கிறது?

''பிறப்(பு) என்னும் பேதைமை நீங்கச் சிறப்(பு) என்னும்
செம்பொருள் காண்ப(து) அறிவு''[1]

என்பார் வள்ளுவப் பெருந்தகை. செம்பொருள் என்பதற்கு, 'வீட்டிற்கு நிமித்த காரணமாகிய செவ்விய பொருள்'' எனப் உரைகாண்பார் பரிமேலழகர். செம்மையான பொருள், சிவந்த பொருள் எனவும் பிறபிற அறிஞர்கள் உரை கூறுவர். சிவந்த பவள நிறத்தை உடைய அச்செவ்வியரைச் சிவம் என அழைப்பதுதான் எவ்வளவு பொருத்தம்! முத்திப் பேற்றினை அருள வல்ல அவரே செம்பொருள் ஆவர் என்பது நம் பண்டைத் தமிழ்ப் பெருமக்களது கருத்து.

செம்பொருளின் வியாபகம்: நமது உடலின்கண் ஆற்றலை வளர்ப்பது செங்குருதி என்ற செந்நிற இரத்தமாகும். சிவப்பு அணுக்கள் (Red Blood Corpuscles) நிறைந்திருப்பதால் அஃது அச்செந்நிறத்தைப் பெற்றது. நமது உச்சித் தலையிலிருந்து

---

1 திருக்குறள் - 358

உள்ளங்கால் வரை செங்குருதி ஓடாத இடமே இல்லை. இவ்வாறு நம் உடல் முழுவதும் பரவிய செங்குருதியைப் போன்றே, மிக நுண்ணிய அணுமுதல் மிகப்பெரிய அண்ட பேரண்டம் வரை எங்கும் வியாபகமாய் நீக்கமற நிறைந்திருப்பவர் சிவபெருமான் என்பது சைவக் கொள்கை.

செம்பொருளின் படைப்பு ஆற்றல்: உடலிலுள்ள திசுக்களை (Tissues) உருவாக்கவும், உயிரூட்டவும், வளர்த்துப் பின் அழிக்கவும் குருதியின் சிவப்பு அணுக்களே உறுதுணையாகின்றன. இவ்வாறு உடலின் வளர்ச்சிக்கு வேண்டிய செங்குருதியைப் போன்று, உயிரின் வளர்ச்சிக்குத் துணை நிற்பவர், சிவபெருமான்; அவர் ஒரு செந்தழல் மேனியர். நெருப்புப் போன்று சிவந்த நிறத்தராகிய அவரைத் தமிழர்களாகிய நாம் **பர(ம)சிவம்** என்றும் **சிவபெருமான்** என்றும் அழைத்து வணங்குகிறோம்.

''செந்தழல் புரைதிரு மேனியும் காட்டித்
திருப்பெருந் துறையுறை கோயிலும் காட்டி''[1]

என்பது வாதவூரரது மணிவாக்கு.

செம்பொருளின் காப்பு ஆற்றல்: உடல் நலத்துக்கு ஊறு செய்யும் தீய கிருமிகளின் தாக்குதலிலிருந்து நமது உடலைப் பாதுகாத்து நிற்பவை வெள்ளை நிறக்குருதி அணுக்கள் (White Blood Corpuscles). அவை முன்னர்க் கூறிய செங்குருதி அணுக்களைச் சூழ்ந்து நிற்பன. எதிரிகளின் தாக்குதலிருந்து நாட்டைப் பாதுகாக்கும் போர் வீரர்களைப் போன்றே வெண்குருதி அணுக்கள் நம்மை நோய்களிலிருந்து காத்து, உடல் நலம் சீராக இருக்கத் துணை நிற்கின்றன.

இவைபோன்று, ஆணவ, கன்ம, மாயையாகிய தீயமலக் கட்டுக்களிலிருந்து நம்மைக் காத்து, நிலைபேரின்பம் நல்குதற் பொருட்டுச் செம்மேனியனாகிய சிவபெருமானும் தூய வெண்ணீற்றினைத் தன் திருமேனி முழுவதும் பூசியருளுகிறார். திருநீறு நமக்கு மந்திரமாகிறது; தந்திரமாகிறது; மருந்தும் ஆகிறது. இதனை நமக்கு உணர்த்துவதற்காகவே ''மந்திரமாவது நீறு, வானவர் மேலது நீறு'' என்றும், உருவளர் பவளமேனி ஒளி நீ(று) அணிந்து உமையோடும் வெள்ளை விடைமேல் ....''[2] என்றும் பண் இசைக்கிறார், திருஞானசம்பந்தர்.

செம்பொருளின் ஒடுக்கும் ஆற்றல்: உடலின் திசுக்களுக்குச் செங்குருதி அணுக்களே உயிரூட்டம் கொடுக்கின்றன எனக் கண்டோம். அதே அணுக்கள் தாம், தேய்ந்த திசுக்களை உயிர்ப் படக்கமும் செய்கின்றன.

---

1 திருவாசகம் - திருப்பள்ளி எழுச்சி - 8

2 தேவாரம் திருஞான சம்பந்தர்

''கறுப்பும் சிவப்பும் வெகுளிப் பொருள''[1]

என்பது தொல்காப்பியம் எனவே சிவந்த நிறத்தால் மட்டு மன்றி, வெகுண்டு அழிக்கும் குணத்தாலும் சிவப்பின் இயல்பு களை உடையது செங்குருதி என்பது தெளிவு. இங்ஙனம் உடல் திசுக்களை ஆக்கவும், காக்கவும், அழிக்கவும் வல்ல செங்குருதி யினைப் போன்று, ஆன்மாக்களாகிய நம்மை வலிதே பிணித் துள்ள ஆணவாதி மலக்கட்டுகளை ஒடுக்கவும், ஆன்ம அறிவைப் படிமுறையில் வளர்த்துப் பேரின்பம் நல்கி அருள்பாலிக்கவும் வல்லவர் செம்பொருளாய சிவபெருமான் ஒருவரே என்பது உறுதி. செங்குருதியின் இயல்புகளைக் கொண்டு, செம்பொருளின் சில கூறுகளை ஒப்பு நோக்கினோம். இனி மூச்சுக்காற்றின் துணை கொண்டு முழுமுதற்பொருளின் சீர்மையினைச் சிந்திப்போம்.

வாசியும் சிவாவும்: ஐம்பெரும் பூதங்களுள் ஒன்றாகிய காற்றுக்கு வாசி என்ற பெயரும் உண்டு. இது போக்குவரத்துப் புரியும் இயல்பினது. 'வாசி வாசி' என அடுக்கிக் கூறினால் '**சிவா சிவா**' என ஒலி எழும். உயிர் உடம்பை ஒட்டி நிற்ப தற்குப், பிராணவாயு (OXYGEN) என்ற மூச்சுக் காற்றுப் பெரிதும் துணைநிற்கிறது. இதனை '**வாசி**' என்பர் அறிஞர். அது போல உயிர்களாகிய நாம் இந்த உலகத்தில் வாழுமாறு சேர்த்து வைப்பதற்கும், நம் பிறப்பினை அறுத்து, முத்திப் பேற்றினை அருளுவதற்கும் உறுதுணை புரிவது '**சிவம்**' என்னும் பேராற்றல் ஆகும். ஆதலால் **சிவா** என்பதே மந்திரக் குறியீடாயிற்று.

போக்கும் வரவும் புரிவிக்கும் புண்ணியன்: நண்பன் ஒருவன் நம் வீட்டிற்கு வருகிறான். வா வா எனக் கூறி வரவேற்கிறோம். வருக வருக என்ற பொருளாகிறது. தெருவில் சென்று கொண்டிருக்கிறோம். நாய் ஒன்று குரைத்துக் கொண்டே நம்மை நோக்கி நெருங்குகிறது. சி சி என்று அதனை விரட்டுகிறோம். இங்கு, சி சி என்பது போ போ என்னும் பொருளதாகிறது. சி என்பதை '**நாயோட்டு மந்திரம்**' எனக் குறிப்பு மொழியால் உணர்த்துவார் திருமூலர். எனவே, வாசி வாசி என்றால் வந்துபோ, வந்துபோ என்பது பொருள்

1 தொல்காப்பியம் - சொல்லதிகாரம் 372

சிவா சிவா என்றால் போய்வா போய்வா என்பது பொருள். வாழ்வு எனும் பெருங்கடலில், எண்பத்து நான்கு நூறாயிரம் யோனி பேதங்களில் பிறந்தும், இறந்தும், பிறந்துமாகப் போக்கு வரத்துப் புரிகின்றது உயிர். அவ்வாறு உயிர் போக்கு வரவு புரியத் துணை நிற்கிற பரம்பொருளுக்குச் சிவம் என்பது பெயராயிற்று.

அமைதியின் உறைவிடம்: அலைமோதித் திரியும் மனத்தை ஒரு நிலைப்படுத்துவதிலும், சிந்தையைக் குவித்துச் சீராக்கு வதிலும் வாசி என்னும் பிராணவாயுவே பெருந்துணை புரிகிறது. அதே போன்று, உயிராற்றலை எல்லாம் ஒருங்கே குவித்தும் தக்க ஆன்மாக்களைப் பேரின்பத்தில் நிலைநிறுத்தியும் அருளுகிற செம்பொருளே சிவம் எனப் பெறுகிறார்.

பூத ஒலி ஓரிடத்தில் தோன்றுவதற்கும், இடம் விட்டு இடம் பெயர்வதற்கும், இறுதியில் ஒடுங்குவதற்கும் உறுதுணையாக இருப்பது **வாசி** என்னும் பிராணவாயுவே. அதே போன்று, மாயையிலிருந்து ஓம் என்னும் பிரணவ ஒலியும், அதனின்று விந்துவாகிய ஒளியும் அதிலிருந்து பிறபிற தத்துவப்பொருள் களும் தோன்றுவதற்கும் இறுதியில் அவை அனைத்தும் மாயையில் ஒடுங்குவதற்கும் தலைமைக் கர்த்தாவாகத் திகழ்பவர் சிவபெருமான். 'நாதன் தாள்வாழ்க' என்பது திருவாசகம்.

சைவ அருளாளர்களைப் போன்றே[1] இன்றைய அறிவியலாரும் ஒலியின் முதன்மையை ஏற்றுக் கொள்ளுகின்றனர். மீ ஒலியின் துணை கொண்டு இக்கால அறிஞர்கள், பல செயற்கரிய செயல் களைச் செய்து வருகின்றனர். இங்ஙனம் பேராற்றல் உள்ளன வாகக் காணப்பெறும் மீ ஒலியையும், மீ ஒளியையும் விடக் கோடானு கோடி மடங்கு ஆற்றல் மிக்கன 'சி' என்ற பரநாத மும், 'வ' என்ற பரவிந்துவும், இவற்றின் தலைவராக இருப்பவர் அம்மையப்பனாகிய சிவபெருமானே, அவரே சொல்லும் பொருளுமாய் விளங்குகிறார்.

மங்கல ஒலி: ஒலியின் வெளிப்பாடு எழுத்து. ஒரு செடியின் அரும்பு மொட்டுக்கள் தம் அழகிய இதழ்களை விரித்தலால், வீ என்றும், மலர்தலால் மலர் என்றும் பூத்தலால் பூ என்றும் பெயர் பெறுகின்றன அன்றோ? அதே போன்று ஒலி ஓரிடத்தி

1 'தோற்றம் துடிபதனில் தோயும் திதியமைப்பில்' உண்மை விளக்கம்-36

லிருந்து வெளிப்பட்டு எழுதலாலும் உறங்கிக்கிடக்கும் பிற பொருள்களை உசுப்பி எழுப்புதலாலும் ஒலிக்கு, எழுத்து என்பது காரணப் பெயராயிற்று.

வண்ணப் பூக்கள் சிலபல சேர்ந்து 'செண்டு' ஆகின்றன. செண்டுகள் வரிசைப்படுத்தப்பட்டு மாலை ஆகின்றது. அதே போல், எழுத்துக்கள் சில சேர்ந்து சொல்லாகிச், சொற்கள் இணைந்து பொருள் பொதிந்த தொடர்களாகின்றன. இதனை வன்னம், பதம், மந்திரம் என வரிசைப்படுத்துவர், வடநூலார் ஒலிகளில் மங்கல ஒலியும் உண்டு, மாறான ஒலியும்[1] உண்டு. மங்கல வழக்கு என்பது புதியதன்று; அது பண்டு தொட்ட நம் தமிழர் மரபு.

"மங்கல மொழியும் அவையல் மொழியும்
மாறில் ஆண்மையில் சொல்லிய மொழியும்
கூறிய மருங்கில் கொள்ளும் என்ப"[2]

என்பது தொல்காப்பியம். உள்ளப் பண்பினை வளர்த்து உயரிய மேம்பாட்டிற்கு உறுதுணையாவது மங்கல ஒலியாகும்.

மங்கலப் பொருள்: சிவம் என்ற சொல்லுக்கு மங்கலம் என்பது பொருள். உடலுக்கும் உள்ளத்துக்கும் இன்பத்தைத் தருவன மங்கல காரியங்கள். அதேபோல், மண்ணுலக இன்ப மாகிய இம்மை வளத்தையும், விண்ணுலக இன்பமாகிய மறுமை நலத்தையும், இறைவனது திருவடிப் பேரின்பமாகிய அம்மைப் பேற்றினையும் அருளவல்ல மங்கலப் பொருள் 'சிவம்' எனப் பெயர் கொண்டது.

திருஐந்தெழுத்து : மங்கல ஒலிகளுள் சிறந்தவை, மந்திரங் கள். அவற்றுள் தலையாயது, திருஐந்தெழுத்தால் ஆகிய சிவ மூலமந்திரம். செம் பொருளாகிய சிவம் திருஐந்தெழுத்தாகிய மந்திர வடிவில் நின்று தன்னை நமக்குக் காட்டி அருளுகிறது.[3] என்பது சிவாகமக் கருத்து. உயிர்களிடத்து மெய்யறிவு தோன்று வதற்கும், மேன்மேலும் தெளிவாக விளங்குவதற்கும், இறுதியில்

1 'நச்சு ஒலிக்கு ஒரு நந்திக் கலம்பகம்' என்பது நாடறிந்த செய்தி,
2 தொல்காப்பியம் - பொருளியல் 240
3 'அரனுக்கு என்றே வைத்தவாம், மந்திரங்கள் வடிவு'
-சிவஞானசித்தியார் - 78

இறைவன் திருவடியாகிய பேரின்பத்தில் உயிர்கள் திளைத்திருப் பதற்கும் உறுதுணையாவது திருஐந்தெழுத்தே. இஃது அருளாளர் அனுபவ வழித் தெளிந்த உண்மை.

''தும்மல் இருமல் தொடர்ந்த போழ்தினும்
வெம்மை நரகம் விளைந்த போழ்தினும்
இம்மை வினை அடர்த்(து) எய்தும் போழ்தினும்
அம்மையி னும்துணை அஞ்சு எழுத்துமே''[1]

என்பது திருஞானசம்பந்தர் அருள்வாக்கு.

இனித் திருஐந்தெழுத்தின் வகைகளையும் அருளிப்பாட்டி னையும் காண்போம். தூல ஐந்தெழுத்து சூக்கும ஐந்தெழுத்து, அதிசூக்கும ஐந்தெழுத்து என்பவற்றோடு, எட்டு, ஆறு, நாலு எழுத்துக்கள் கொண்ட சிவமந்திரங்களையும், பிஞ்செழுத்து, பேரெழுத்து, பேசும் எழுத்து, பேசா எழுத்து என்பவாகிய ஓரெழுத்துச் சிவ மந்திரங்களையும், தலைமைப் பண்பு கருதி, திருஐந்தெழுத்தாகக் கொள்ளுவது மரபு. இதனைக் கொற்றவன் குடி உமாபதி சிவாசாரியார் திருவாக்கால்[2] அறியலாம்.

சிவபெருமான் திருநாமமாகிய திரு ஐந்தெழுத்து, நிறை மொழி மாந்தராகிய[3] ஒரு சிவகுருமூலம், சீடனுக்கு, அவனது தகுதிக்கேற்பச், சிவ ஆணைப்படி, உபதேசிக்கப்படும்போதுதான் மந்திரம் ஆகிறது.

சிவகுரு, தொடக்கத்தில் தூல பஞ்சாக்கரத்தைச் சமய தீக்கையிலும், அடுத்துச் சூக்கும பஞ்சாக்கரத்தை விசேட தீக்கை யிலும், இரண்டு நிலையில் உபதேசித்து, உயிரைப் பிணித்துள்ள படுக்கைநிலை (Horizontal)க் கட்டுக்களை நெகிழச் செய்கிறார்.

பின்னர், நிர்வாண தீக்கையில் அதிசூக்கும பஞ்சாக்கரம் உபதேசிக்கப் பெறுகிறது. அஃது உயிரைப் பிணித்துள்ள மும் மலக்கட்டை அறுவித்து, உயிரை உயர்நிலைக்கு உய்வித்து

1 தேவாரம் 3: 22:6 திருஞானசம்பந்தர்

2 கொடிக்கவி - கொற்றவன்குடி உமாபதி சிவனார், (அண்ணாமலைப் பல்கலைக்கழக வளாகத்தில் உள்ளது, கொற்றவன்குடி.)

3 ''நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திரம் என்ப'' -தொல்காப்பியம்

(Vertical Elevation), அம்மைப் பயனாகிய முத்திப் பேற்றிற்குச் செலுத்துகிறது. அடுத்துச் செம்பொருளின் இயல்பு நிலையை யும், தொழில் இயற்றும் நிலையையும் தொகுத்து நோக்குவோம்.

இயல்பு நிலை : இவ்வாறு அளப்பரிய சிறப்புடைய அச் செம்பொருள், மீதானம் என்ற துவாத சாந்தப் பெருவெளியில், உயிர்களாகிய நம் ஒவ்வொருவர் தலைஉச்சிக்கு மேலே பன்னி ரண்டு அங்குல உயரத்தில், நாம் விரும்பினாலும், விரும்பா விட்டாலும், திருநடனம் ஆடிக்கொண்டே இருக்கிறது. நிலை யான மெய்ஞ்ஞானப் பேரின்பமே (சத்சித் ஆனந்தமே) அங்கு அதற்கு வடிவம் ஆகும். பரம்பொருளின் இந்த அண்டவெளி நடன (Cosmic Dance)ச் சிறப்பை இக்கால அறிவியலாரும் உணர்ந்து வியப்புறுகின்றனர். கோடானுகோடி சூரிய ஒளியினை உடைய அப்பேரொளிப் பிழம்பினைச் 'சிவசூரியன்' என்று சைவ மெய்யடியார்கள் வாழ்த்தி வழிபடுவர். இஃது அச்செம் பொருளின் இயல்பு நிலை.

தனக்கென ஒரு விருப்பு வெறுப்பு இல்லாமல், உயிர்களாகிய நமது உய்தியிலேயே பெருவிருப்பம் கொண்டு, ஐந்தொழில் இயற்றுகிற அச்செம்பொருள், தன்னை எவ்வாறெல்லாம் வெளிக் காட்டிக் கொள்ளுகிறது என்பதை இனி நோக்குவோம்.

மாப்பேருரு: வெட்ட வெளியில் நின்று கொண்டு, தலைக்கு மேலே அண்ணாந்து பார்க்கிறோம். அங்கே பரந்துபட்டுக் கிடக்கும் அருவமாகிய வானவெளி தெரிகிறது. முதலும் முடிவும் இல்லாத அப்பெருவெளி, மிகப்பெரியதொரு சிவலிங்கத் தின் தோற்றத்தையன்றோ நம் சிந்தையில் நிறுத்துகிறது? சிவபெருமானது அந்த மாப்பேருருவினுள் நாமும் நம்மைச் சுற்றி யுள்ள அனைத்துப் பொருள்களும் அடங்கி நிற்கிற தன்மை புலனாகிறது. அண்டபேரண்டம் முழுவதும் உள்ளடக்கிய அப் பெரியநிலை சிவபெருமானது **வியாபக நிலை** எனப்படும்.

கோயில் கொண்டமை: உயிர்களின் உய்தி கருதி உலக முழு வதையும் படைத்த பரம்பொருள், நில உலகின் பல்வேறு தலங் களிலும், அருஉருவத் திருமேனியோடு, சிவலிங்கமாகக் காட்சி யளித்து, அருள்பாலிக்கிறது. அப்போது, வைத்தியநாதர், தாயுமானவர் முதலிய பல ஆயிரம் சிறப்புப் பெயர்களால் அது

போற்றப் பெறுகிறது. 'பேராயிரம் பரவி வானோர் ஏத்தும் பெம்மான்' எனப் பண் இசைப்பார் அப்பரடிகள்.

அத்தகைய அருஉருவம் மட்டுமன்றி, உருவத்திருமேனி கொண்டும் மெய்யடியார்களுக்குக் காட்சி அருளுவது, சிவபெருமான் கருணை. உருவத் திருமேனிகளை 64-மூர்த்தங்களாக வழிபடுவர் அருளாளர். சிவபெருமான் உருவத்திருமேனி ஏற்றுத் திருவீதி உலாவரும் எழிலுறு காட்சியை இன்றும் திருவிழாக் காலங்களில் காணுகிறோம்.

அட்டமூர்த்தம் : சூரியன், சந்திரன், உயிர் என்ற மூன்றோடு, ஐம்பெரும் பூதங்களாகிய நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என்ற ஐந்தையும் சேர்த்து, ஆக எட்டுப் பொருள்களையும் சிவபெருமான் தனக்கு உடம்பாகக் கொள்ளுகிறார். இவற்றைச் சிவபெருமானது அட்டமூர்த்தம் என அருள் நூல்கள் பரவித் துதிக்கும்.

''இருநிலனாய்த் தீயாகி நீரும் ஆகி
இயமான னாய்எறியும் காற்றும் ஆகி
அருநிலைய திங்களாய் ஞாயிறு ஆகி
ஆகாச மாய்அட்ட மூர்த்தி ஆகி...''[1] —அப்பர்

''இரு சுடரோடு இயமானன் ஐம்பூதம் என்று
எட்டு வகையும், உயிரும் யாக்கையுமாய்க்
கட்டி நிற்போனும்.........''[2] —மணிமேகலை

இவற்றுள் சூரியன், சந்திரன், நிலம், நீர், தீ ஆகிய ஐந்தும் உருவம் உடையவை. உயிரும், ஆகாயமும் அருவமானவை. காற்று என்ற பூதம் அரு உருவமானது. இவையே போன்று, சிவபெருமானும் அருவம், அருஉருவம், உருவம் என (உயிர்களின் பக்குவத்திற்கு ஏற்ப) நின்று அருள் புரிகிறார்.

அணுவிற்குள் பரமன்: பொருள்களுள் மிகமிகச் சிறியது அணு. அதனை மேலும் பிரிக்க முடியாது என அண்மைக் காலம் வரை நம்பியிருந்தனர், மேலை நாட்டு அறிவியலார். ஆனால் நம் சைவ அருளாளரோ பல்லாயிரம் ஆண்டுகளுக்கு

---

1 அப்பரடிகள் நின்ற திருத்தாண்டகம்

2 மணிமேகலை, சமயக் கணக்கர்தம் திறம் கேட்டகாதை,

முன்னரே, அணுவுக்குள் அணுவாய் நின்று ஆனந்தக் கூத்தாடும் சிவபரத்தைச் சிந்தித்திருக்கின்றனர்.

''அணுவுக்குள் அணுவாய், அப்பாலுக்கு அப்பாலாய் ..''[1] எனப் பரவித் துதிக்கிறார். ஔவையார்.

''சென்று சென்று அணுவாய்த் தேய்ந்து தேய்ந்து ஒன்றாம்
திருப்பெருந் துறைஉறை சிவனே
ஒன்றுநீ அல்லை, அன்றி ஒன்றில்லை''[2] ...

எனச் சிவபரத்தின் பெருமையைப் போற்றுகிறார் மணிவாசகர்.

அண்டமும் பிண்டமும்: அணுவிலும், அண்ட வெளியிலும், ஆலயங்களிலும் ஐம்பூதங்களிலும் சிவபெருமானின் தோற்ற இயல்பு இவ்வாறிருக்கப், பிண்டமாகிய நமது உடம்பினுள்ளும் சிவத்தோற்றம் மிகச் சிறப்பாக அமைந்திருக்கக் காணுகிறோம்.

நமது இந்த உடம்பின் மொத்த வடிவமைப்புமே ஒரு சிவ லிங்கத்தைப் போன்றதாகும்; நமது தலை, உள்ளும் புறமும் ஒரு சிவலிங்கத்தின் வடிவினையுடையது; கைவிரல்கள் ஒவ் வொன்றும் ஒரு சிவலிங்கத்தின் தோற்றமுடையன; இருதயத்தின் அமைப்பு ஒரு சிவலிங்கம்; குருதியிலுள்ள கோடானுகோடி நுண்ணிய சிவப்பு அணுக்கள் ஒவ்வொன்றும் சிவலிங்கமே. பிற வும் இவ்வாறே.

சிவபரம் பொருள் அநாதிகாலந் தொட்டே, நமது உடம்பி னுள் அத்துவிதமாய்க் கலந்து நின்றும், வெளிப்படத் தோன்றி நின்றும், அருள்பாலிக்கும் கருணையைப் பலபல சைவ அருளாளர்களும் அனுபவ வழி உணர்ந்து தெளிந்திருக்கின்றனர்.

''எந்தையே ஈசா! உடல்இடம் கொண்டாய்
யான் இதற்கு இலன் ஓர் கைம்மாறே''[3]
''அறிவு அரியான், தனைஅறிய, ஆக்கை ஆக்கி
அங்கங்கே உயிர்க்கு உயிராய் அறிவுகொடுத்து அருளால்''[4]

---

1 விநாயகர் அகவல் - ஔவையார்
2 திருவாசகம் - கோயில் திருப்பதிகம்-மணிவாசகர்
3 மாணிக்கவாசகர், திருவாசகம் 8:22;10
4 அருள் நந்திசிவம்-சிவஞான சித்தியார்-324

"மானிடர் ஆக்கை வடிவு சிவலிங்கம்
மானிடர் ஆக்கை வடிவு சிதம்பரம்
மானிடர் ஆக்கை வடிவு திருக்கூத்தே"[1]

"உடலுக்குள் நீநின்று உலாவியதைக் காணாமல்
கடல்மலை தோறும் திரிந்து கால் அலுத்தேன் பூரணமே"[2]

அம்மை அப்பன்: அணுவிலிருந்து அண்ட பேரண்டம் வரை நமக்காகச் சிவபெருமான் தொழிற்படும்போது, சிவன், சத்தி என இரண்டு கூறாகிப் பின்னர்த் தம்முள் பிரிந்தும் புணர்ந்தும், பிரிந்தும் புணர்ந்துமாக இயங்கியே அருள்பாலிக்கிறார். இக் காலத்துப் பல்வேறு அறிவியல் துறைகளின் ஆய்வு முடிவுகளும் இவ்வுண்மையை அரண் செய்வனவாகவே உள்ளன.

அணுக்கதிர் இயக்கம்: தன் அளவில் இயக்கமில்லாது நிற்கும் ஓர் அணு, புரோட்டான், எலெக்ட்ரான் என்ற இரு கூறாகிச் செயற்படுதலாலேயே அணுக்கதிர் இயக்கம் நிகழ்கிறது.

மின்விளக்கு: எங்கும் நிறைந்ததாகிய மின்சாரம் என்ற ஒரே பொருள், நேர்மின் ஆற்றல், எதிர்மின் ஆற்றல் என இரு கூறாகிப் பிரிந்தும், பின்னர் இணைந்தும் தொழிற்படுதலால் அன்றோ நமக்கு மின்விளக்கு போன்ற மின்சாதனங்கள் பயனைத் தருகின்றன?

இவையே போன்றுதான், மீதானத்தில் எவ்விதச் செயற்பாடுமின்றி, ஒரே பொருளாயிருக்கும் சிவபரமும் அம்மை அப்பன் என்ற அர்த்தநாரீசுர வடிவத்தில் நமக்காக இயங்குகிறது

நீலவாலிழை பாகத்தர்: நமது இருதயத்தின் ஒரு பகுதியில் செந்நிறக்குருதியும், மற்றொரு பகுதியில் நீலநிறக் குருதியுமாக, உடலின் இயக்கத்திற்குத் துணை நிற்பது போலவே, செம்பவள நிறத்தனாகிய சிவபெருமானும், நீலவாலிழையாகிய தன் சித்சத்தியைத் தன் இடப்பாகத்தில் கொண்டு, உயிர்களாகிய நமது உய்திக்காக, உலகங்களைப் படைத்தும், காத்தும், ஒடுக்கி

1 திருமூலர் திருமந்திரம்-17 2 பட்டினத்தார். பூரணமாலை-23

யும் முத்தொழில் புரிவதோடு, வினைவயப்பட்ட உயிர்களுக்கு மறைந்திருந்து வினைப்பாலை ஊட்டியும், வினையின் நீங்கிய தூய ஆன்மாக்களுக்கு ஞானப்பாலை ஊட்டி அருளியும், ஆக ஐந்தொழில் புரிகிறார்.

உயிர்களும் சிவசத்தியின் அருளாலேயே தத்தம் தவநெறிக்கு ஏற்ப எல்லா நலன்களும் பெற்று, இறுதியில் சிவபரம்பொருளைச் சென்று அடைகின்றன. இவ்வாறு, தன்னியல்பால் ஒன்றேயாய சிவபரம், தொழில் படுநிலையில், நீலவண்ண சித்சத்தியினை தன் ஒரு பாகத்தில் கொண்ட சிவனாகத் தோன்றி நின்று, உயிர்களை யும், உலகங்களையும் இயக்குகிறது என்பதைச் சைவ நூல்கள் பலவும் திறம்படப் பேசுகின்றன.

''நீலமேனி வாலிழை பாகத்து, ஒருவன் இருதாள் நிழற்கீழ்
மூவகை உலகும் முகிழ்த்தன முறையே''[1]

என்பதிலிருந்தும் இதனைத் தெளிவாக உணரலாம். உடல் நலத்தைப் பேணுவதும், உள்ளப் பண்பினை வளர்ப்பதும், உயிருக்கு உய்தி காண்பதும் நம் ஒவ்வொருவரது கடமையாகும்.

இவ் இயலின் நிறைவாக, நம் தமிழ் இனம், ஒரு நாமம் ஓருருவம் ஒன்றுமில்லாத ஒருவனேயாகிய பரம்பொருளைச் சிவ பெருமான் என்ற திருநாமம் கொண்டு வணங்குவதற்கான காரணங்களில், இதுகாறும் சிந்தித்தவற்றைத் தொகுத்து நோக்குவோம்,

உலகப் பொது நியதி: மனித இருதயத்தின் ஒரு கூறு செங் குருதியாலும், மற்றொரு கூறு நீலக் குருதியாலும் நிறைந்திருக் கிறது எனக் கண்டோம். இத்தகைய உடற்கூற்று அமைப்பு நாடு, மொழி, மதம், இனம் முதலிய பல்வேறு குறுகிய எல்லை களுக்கெல்லாம் அப்பாற்பட்டு, மனித இனம் முழுமைக்கும் எவ் வித வேறுபாடுமின்றிப் பொருந்துவதாகும்.

இவ்வாறு உலகில் வாழும் மக்கள், சைவராயினும் வைணவ ராயினும், சமணராயினும், புத்தராயினும், கிறித்தவ ராயினும், இசுலாமியராயினும், வேறு கொள்கைகள்

---

1. ஐங்குறுநூறு - கடவுள் வாழ்த்து.

உடையோராயினும், அவர்கள் அனைவருக்கும் ஒரே கூரையாக அமைவது, சிவலிங்க வடிவினதாகிய வானவெளியே.

அவர்கள் எல்லாருடைய உடம்பிலும் ஓடுவன, ஒரே மாதிரியான செங்குருதியும், வாசி என்ற பிராணவாயுவுமே எல்லோருடைய இரத்தத்திலும் உள்ள சிவப்பு இரத்த அணுக்கள், வடிவாலும், நிறத்தாலும், செம்பவள நிறச் சிவபெருமானையே ஒத்திருப்பன.

உயிரினங்கள் அனைத்தும் வாசி இல்லாமல் வாழ முடியாது என்பதிலும், வாசியின் போக்குவரத்தைப் போன்றே இவ்வுலகில் பிறப்பதும் இறப்பதுமாகிய, பொதுவான போக்குவரத்து நிலையிலும் சிவபரத்தைச் சார்ந்தே உள்ளன. மேலும், ஒலியாலும், பொருளாலும், நிகழ்வுகளாலும், பிறவாலும், மக்கள் அனைவரும் எக்காலமும் விரும்புவது மங்கலமே.

எனவே, குருதியின் செந்நிறத்தையும், குருதி அணுக்களின் வடிவ அமைப்பையும், அவற்றின் முத்திற ஆற்றலையும், மூச்சுக் காற்றின் இயல்புகளையும், வாசியின் பெயரையும், மங்கலவழி இன்பங்களையும் தனக்கு உறைவிடமாகக் கொண்ட சிவபெருமாவே, சாதி சமய இன வேறுபாடின்றி, அனைவருக்கும் உரிய பரம்பொருள் என்பதில் ஐயமும் உளதோ? ஆகவே, பரமபிதா எனக் கூறினாலும், பரந்தாமா எனக் கூவினாலும், அருகன் என அழைத்தாலும், அல்லா எனத் தொழுதாலும், அங்கு வந்து அருள்புரியும் பரம்பொருள் ஒன்றே!

இவ்வாறு, காலங்கடந்த, மொழிகடந்த, தேசம்கடந்த, மத மாற்சரியங்களை எல்லாம் கடந்து எல்லாவற்றின் உள்ளும் செறிவாய்த் திகழ்கிற ஒரு கடவுளைத். தமிழ்ப்பண்பாட்டிற்கு உரிய பரசிவம் என்ற ஒரே ஒரு கடவுளைத், தனிப்பெரு முழுமுதற் பொருளாகக் கொண்டனர், நம் தமிழ்ச் சான்றோர்கள். ஆதலால் அவனது தமிழ்ச் சங்கத் தலைமையிலே தழைத்து ஓங்கி மகிழ்ந்திருந்தவர் என்பதில் வியப்பும் உளதோ? அச்செம்பொருள் பொருளும் ஆற்றலும்' (Matter and Energy) என்ற இக்கால அறிவியலார் கருத்துப்படி. சிவனும் சத்தியுமாகவே வெளித் தோன்றி அருள்புரிகிறது என்பதும் உறுதி இவ்வுண்மையை,

"யாதொரு தெய்வம் கொண்டீர் அத்தெய்வமாகி ஆங்கே
மாதொரு பாகனார்தாம் வருவர்..."[1]

"சிவன்என யானும் தேறினன் காண்க
அவன்எனை ஆட்கொண்டு அருளினன் காண்க
குவளைக் கண்ணி கூறன் காண்க
அவளும் தானும் உடனே காண்க"...[2]

என்ற சைவ ஞானநூல் மொழிகளாலும் அறியலாம்.

நமது இந்த உடம்பினுள் சிவபெருமான் உறைகிறார் என்ற உண்மையைப் பொதுவகையால் ஈண்டுச் சிந்தித்தோம். அவர் எவ்வாறெல்லாம் நமக்குத் தன்னைக்காட்டி நின்று ஆட்கொள்ளுகிறார் என்பதையும், உயிர்களாகிய நம்மவருள் தவநெறியால் தலையாயவரைத் தமது தானைத் தளபதிகளாகக் கொண்டு, எவ்வாறு ஆணை செலுத்துகிறார் என்பதையும் விரிவாக மேல் வரும் பகுதிகளில் காணவிருக்கிறோம்.

முன்னதாக, உடற்கூறு தொடர்பான இக்கால அறிவியலுக்கு (Physiology) ஏற்ப, மனித உடம்பின் அமைப்பையும் தொழிற்பாட்டையும் தெரிந்து கொள்ளுதல் பயனுடையதாகும்.

2. அறிவியலில் மனித உடல்

நமது மனித உடல் அமைப்பு ஒரு விந்தையான படைப்பு. அதைப் பற்றி ஓரளவேனும் தெரிந்து கொள்ளுவது நம் ஒவ்வொருவரது இன்றியமையாப் பொறுப்பு. கடவுள் இருக்கிறார் என்ற உண்மையைக் கருத்தூன்றிக் கற்பதற்கு இஃது ஓர் அரிய வாய்ப்பு.

எண்ணற்ற எலும்பு மலைகள், கோடிக்கணக்கான நாடி நரம்புக் காடுகள்; பன்னூறாயிரம் குருதி ஆறுகள்; உணவை ஆற்றலாக மாற்றும் சீரணநீர் ஊற்றுக்கள்; வளங்கொழிக்கும் ஓர் இதய வயல்; அங்குப் பூத்துக்குலுங்கும் செங்குருதிப் பூக்களும்

1 சிவஞான சித்தியார் - 115 அருள்நந்திசிவம்
2 திருவண்டப்பகுதி 62-65 - மாணிக்கவாசகர்

வெண்குருதிப் பூக்களும்; கழிவினை எரிக்கும் மண்ணீரல் சுடலை; காமத்தைக் கிளரும் கிழ், மேல் வசந்த மண்டபங்கள்; அடி வயிற்றின் உவர்க்கடல்; மேல் தோலின் உப்புநீர்க் கிணறுகள்; எலும்பு, நரம்புகளில் மூங்கில் துளைகள்; அவற்றில் இசை எழுப்பும் உயிர்க்காற்றுக்கள்; மூளையினுள் தித்திக்கும் அமுத ஊற்று;......

இவை போன்ற மிகப்பெரிய பொருள்களின் அரிய கட்டமைப்பே, நமது இந்த மனித உடம்பு. உயிர்களாகிய நமது உய்தி கருதி ஒரு கருத்தாவால் செய்து தரப்பட்ட செயப்படு பொருள், இது. இதன் ஆக்கத்தின் விழுப்பம் அளப்பரிது. அதனை அறிவியலாரின் கண்கொண்டு முதற்கண் நோக்குவோம்

ஐந்து மண்டலங்கள்: நமது மனித உடல் அமைப்பைப் பகுத்து ஆயும் இற்றைநாள் அறிவியலார் (Anatomists), தொழில் அடிப்படையில் இதனை ஐந்து முக்கிய மண்டலங்களாகப் பகுத்து ஆய்வு செய்கின்றனர்.

1) **புனர் உற்பத்தி மண்டலம்** (Reproductive system): இது நாபிக்குக் கிழ் உள்ள அடிவயிற்றுப் பகுதியாகும். இங்குத் தான், தந்தை தாயின் வயிற்றினுள் ஒரு குழந்தைக்கரு தோன்றி வளருகிறது.

2) **உணவு சீரண மண்டலம்** (Digestive system): இஃது இரைப்பையும், குடல்களும் உள்ளிட்ட வயிற்றுப் பகுதி. இங்குத் தான் நாம் உண்ணுகிற உணவு, சீரணமாகி, நமது உடம்புக்குத் தேவையான ஆற்றலாக மாறுகிறது.

3) **குருதி ஓட்ட மண்டலம்** (Blood circulatory system): இஃது இருதயமும் இரத்த நாளங்களும் உள்ளிட்ட நெஞ்சுப் பகுதி, உடலுக்குத் தேவையான தூய செங்குருதி இங்கு இருந்து தான் நம் உடல் முழுதும் உந்தித் தள்ளப்படுகிறது. நமது உடலின் பல பகுதிகளிலிருந்தும், அழுக்கு இரத்தமும் இங்குத் தான் வந்து சேருகிறது.

---

4) மூச்சுக் காற்று மண்டலம் (Respiratory system): இது நுரையீரல் உள்ள நெஞ்சின் பின்பகுதியும், கழுத்தும் உள்ளிட்ட பகுதி, நாம் இதன் உள்ளே இழுக்கின்ற பிராணவாயு என்ற தூய காற்று, குருதியிலுள்ள அழுக்கைப் போக்கிக் குருதியைத் தூய்மையும் ஆற்றலும் உடையதாக ஆக்குகிறது.

5) மைய நரம்பு மண்டலம் (Central Nervous system): இது மூளையும், முதுகுத் தண்டும் உள்ளிட்ட பகுதி.

நமது உலக வாழ்வில் இவை ஐந்து மண்டலங்களும் ஒருசேர இன்றியமையாதன. ஆயினும், நம் வயது முதிர முதிர, நமது உடல் தளர்ந்து, ஒவ்வொரு மண்டலமாகத் தன் தொழிற் பாட்டில் சிறிது சிறிதாக மங்கிக் கொண்டேவரும். இவற்றுள் நம் இறுதி மூச்சு வரையிலான மைய நரம்பு மண்டலமும் அதன் இயக்கமும் மிகவும் குறிப்பிடத்தக்க சிறப்புடையன.

எனவே, மைய நரம்பு மண்டலம் தனிச் சிறப்பு வாய்ந்தது என அறிவியலார் கருதுகின்றனர். சைவ சித்தாந்தக் கோட் பாடுகளும் இக்கருத்தினையே வலியுறுத்துகின்றன. மேலும் இருதயம் பற்றிய சிந்தனையும் சைவ வழிபாட்டு நெறியில் பெரும் பங்கு வகிக்கின்றது. ஆகவே, மைய நரம்பு மண்டலம், குருதி ஓட்ட மண்டலம் இரண்டின் தொடர்பான செய்திகளை இங்கு முதற்கண் நினைந்து, பிறவற்றை அவ்வப்போது உரிய இடங்களில் சிந்திப்போம்.

மைய நரம்பு மண்டலம்: அமைப்பும், தோற்றமும்: கால் அங்குலம் கனமுள்ள கடினமான எலும்பினால் ஆனது, நமது மண்டை ஓடு, அஃது ஒரு வில் போன்ற வளைந்த அமைப்பை உடையது. அதன் உள்ளே மூளை என்ற மிக நுண்ணிய பொருள் இருக்கிறது. அதன் தொடர்ச்சியாக நம் உடம்பில், முதுகு எலும்புகளை ஊடுருவிக் கீழ் மேலாகச் செல்லுவது சுழுனை என்ற நாடி,

இந்த மூளையும் முதுகந்தண்டும் இணைந்த பகுதியை அறிவியலார் மைய நரம்பு மண்டலம் என்பர். இதன் அமைப்பு, ஒரு பெண் தன் தலைமுடியை அழகாக வாரிப் பின்னலிட்டு

முதுகுப்புறம் தொங்கவிடும்போது. அவளது நெற்றிமுதல் இடுப்பு வரை அமைகிற சடைப் பின்னலின் தோற்றத்தைப் போன்றது.

நமது மூளையும், முதுகுத்தண்டும் (CSF என்ற) அமுத வெற்றில் அமிழ்ந்து, ஒரு மிதவையைப் போல் இருப்பதால், அதிர்வுகளால் அவை அல்லலுறுவதில்லை. மண்டை ஓட்டை ஒட்டினாற்போல், மூளைக்குக் காப்பாக PIA Mater, Arachnoid Mater, Dura Mater என்ற மூன்று மதிற்சுவர்கள் ஒன்றன் கீழ் ஒன்று அடுக்காக உள்ளன. இரண்டாவது, மூன்றாவது அடுக்கு களுக்கு நடுவில் அமுத வெள்ளம் நிறைந்து ஓடுகிறது. அதனைப் பாலாற்றுப் பாதை (Milky way) என்று கூறுவது பொருந்தும்.

உடலியல் வல்லுநர்கள், நம் மனித தலையில் உள்ள மூளையை, மூன்று பகுதிகளாகப் பிரித்து ஆய்வு செய்கிறார்கள். பெருமூளை, சிறுமூளை, நடுமூளை, என்பன அம்மூன்று பகுதிகள்.

பெருமூளை (Cerebrum) என்பது நம் தலையின் முன் பகுதி யில் உள்ளது. இது வலது, இடது என்ற இரண்டு கூறுகளை (hemispheres) உடையது. மூளையின் வலது பகுதி, நம் உடம் பின் இடது பக்கத்தையும் மூளையின் இடது பகுதி, உடம்பின் வலது பக்கத்தையும் கட்டுப்படுத்துகின்றன.

அண்மைக் கால ஆய்வுகள் மூளையின் வலப்பகுதி, பெரிதும் அமைதியாக (mute) இருக்கிறதென்றும், அவ்வாறு அமைதியாக இருந்தாலும், அண்டவெளி ஆய்வுக்கு அஃது உறுதுணையாக நிற்கிறதென்றும், விழுமிய செய்திகளை வெளியிடுகின்றன. பெருமூளையின் இடது கூறுதான், சிறுமூளையின் செயற்கருவி களையும் அறிவுக்கருவிகளையும் இயக்கி ஆணைபிறப்பிப்ப தாகவும் அவ்ஆய்வுகள் கூறுகின்றன.

பெருமூளையின் இரண்டு கூறுகளும் தனித்தனியே மூன்று பரப்புகளாக அமைந்துள்ளன. மண்டை ஓட்டினுள்ளே பொருந்தி நிற்குமாறு, மூளையின் மேல்பரப்பு (Supero lateral surface) குவிந்து (Convex) காணப் பெறுகிறது அதன் நடுப்

பகுதி (Medial surface) தட்டையாகவும் செங்குத்தாகவும் அமைந்துள்ளது. அடிப்பரப்பு (Inferior/basal surface) சமதள மாக இல்லாமல் குவிந்தும் குழைந்தும் (Concavo-convex) காணப்பெறுகிறது.

பெருமூளையின் மேற்பரப்பு ஒரு கொச்சகம் போலக் குவிந் தும் குழிந்தும் அமைந்துள்ளது. குவிந்த பகுதிகளை மலைச் சிகரங்கள் (Gyri) என்றும், குழிந்த பகுதிகளைப் பள்ளத்தாக்கு கள் (SULCI) என்றும் அழைப்பர். இந்தக் குவிகுழி அமைப்பு ஒரு சீராகவே உள்ளது; என்றாலும், ஆளுக்கு ஆள் அது வேறு படுவது மட்டுமன்றி, தனி ஒருவனின் இரண்டு மூளைக் கூறு களுள்ளும் சில மாற்றங்கள் கொண்டதாகவே காணப்பெறுகிறது 'மஞ்சு சூழ் மலைக் கூட்டம்' போல், மூளையின் சுருள் மடிப்பு களும் மிகுதியான அளவில் கார்மேகம் (Grey Matter) கவிவதற் குப் பெரிதும் துணை நிற்கின்றன.

பெருமூளை இணைப்பான் (கார்பஸ் கலோசம்): பெருமூளை என்பது நரம்புகளின் தொகுதி. இதன் இரு கூறுகளிலும் ஒத்த நரம்பு அணுக்கள் (Neurons) ஏராளமாக உள்ளன. ஒரு கூறி லிருந்து மறுகூறுக்கு செய்திகளை அனுப்புகிற வெண்ணிற இணைப்பான் (White commissure) இதன்கண் உள்ளது. இதற்கு கார்பஸ் கலோசம் என்பது பெயர், மூளையின் குறுக்காக நோக்கும்போது இது வானத்தில் உள்ள மூன்றாம் பிறையினைப் போல் தோற்றமளிக்கிறது. ஆதலால் இதனை நாம் வான்பிறை என வழங்குதல் பொருந்தும். இது நம் தலையின் மையப்பகுதி யிலிருந்து புருவ நடுவை நோக்கி நீண்டு கிடக்கிறது ஒரு பறவை யின் அலகு போன்ற இதன் குறுகிய முன்பக்கம் ஜெனு (Genu) என அழைக்கப் பெறுகிறது. ஆண்மையின் சின்னமாகக் காட்சி யளிக்கும் இதன் அடிப்பகுதியில் மூன்றாம் நாளம் (Third ventricle) உள்ளது. இவை தொடர்பான ஆய்வுகள் பல நெடுங்காலமாக மேற்கொள்ளப் பட்டாலும், "மூளையின் அளப்பரிய ஆற்றலை முழுமையாகக் கண்டவர்கள், யாரும் இல்லை" என்பதை இக்கால அறிவியலார் ஏற்கின்றனர்,[1]

---

1 "I am Joe's body" (Berkley Books New York-1981-PP-15)

மார்பகமும் பாலூட்டகங்களும்: (Mamillary Bodies) பெருமூளையின் இரண்டு கூறுகளும் ஒரு பெண்ணின் மார்பகங்களை ஒத்தனவாய் அமைந்துள்ளன. கழுத்துப் பகுதியை இடமாகக் கொண்டு மேலே தலையினுள் இருக்கும் பெருமூளையின் அடிப் பரப்பினை உற்று நோக்கினால், அங்கு இரண்டு பால்வட்டங்கள் இருப்பது புலனாகும்.

சிறுமூளை (Cerebellum): நம் தலையின் பின்னால் பிடரியில் உள்ளது சிறுமூளை. காது, கண், மூக்கு, நாக்கு, தோல் என்ற ஐந்து அறிவுக் கருவிகளை இயக்குகிற (Sensory Nerves) நரம்புத் தொகுதிகளும், கை, கால், வாய், கருவாய், எருவாய் என்ற ஐந்து செயற்கருவிகளை இயக்குகிற (Motor nerves) நரம்புத் தொகுதிகளும், இங்குத் தான் பின்னிப் பிணைந்து அடர்ந்து காடு போன்ற தோற்றத்துடன் காணப்பெறுகின்றன.

மண்டை ஓட்டு மதில் சுவர்களின் இடையில் வெள்ளமாய்ப் பெருகி வந்த அமுத ஆறு, சிறுமூளைக்குப் பின்புறமுள்ளதும் 'அமுத ஏரி' போன்றதுமான சிஸ்டர்னை (Cistern) நிரப்புகிறது.

நடுமூளை (Mid-brain): மேற்கூறிய பெருமூளை, சிறுமூளை இரண்டிற்கும் நடுவில் முதுகுத் தண்டின் உச்சியில் முகுளத்திற்கு (Spinal Medulla) மேலே அமைந்திருப்பது நடுமூளை. இதனை அறிவியலார் இன்பத்தானம் (Pleasure Centre) என்றும் கூறுவர்.[1] இரு கண்களாலும் நாம் பார்க்கும் புறப்பொருள்கள் இங்கு உள்ள திரை (Retina)யில் விழுவதால்தான் வெளியிலுள்ள பொருள்களை நம்மால் கண்டு அறியமுடிகிறது.

மூன்றாம் நாளம் (Third Ventricle) என்பது மேலே கூறிய நடுமூளையில் தொடங்கிச் சந்திரப் பிறையினைப் போன்று வளைந்த 'கார்பஸ் கலோச'த்தின் கீழ்ப்பகுதியில் உள்ளது. இதனுள் மூளை நீர் என்ற (CSF) அமுதம் நிறைந்து இருக்கின்றது. ஒரு ஆண்மகனிடத்துப் புனர் உற்பத்தி நீரைச் சுரக்கிற விரைகளைப் (Testes) போன்று தலையினுள் இது காணப்பெறுகிறது பெருமூளையின் இரு கூறுகளுக்கும், நடுவில் மொச்சை

1 "I am Joe's body" [Berkley Books New York - 1981-PP-15]

விதையின் முளை போன்று, இஃது அமைந்திருக்கிறது. இந்த நாளத்தின் இரு மருங்கிலும் மொச்சை விதையின் இரு பருப்பு களைப் போன்று, இரண்டு இரத்த நாளங்கள் அமைந்துள்ளன. அவை முதல் நாளம், இரண்டாம் நாளம் (First & Second Ventricles) என அழைக்கப் பெறுகின்றன.

ஞான கருப்பை: 'பினியல் பாடி. (Pineal Body) என்பது முற்கூறிய மூன்றாம் நாளத்தின் பின்புறமிருந்து முளைத்தெழுந்த அரியதோர் அமைப்பு ஆகும். மனிதனின் பதினான்கு வயதுக்குள் இது முழுவளர்ச்சி அடைந்து விடுகிறது. இந்த நுண்ணிய அமைப்பு ஓர் உயிர்ப்பு நீரைச் சுரப்பதாகவும், மனிதனுடைய பருவ வளர்ச்சியிலும், பால் உணர்ச்சியிலும் பெரும் பங்கு வகிப்பதாகவும் அண்மைக் கால ஆய்வுகள் கூறுகின்றன. டெஸ்கார்ட்டெஸ் (Descortes) என்ற மேலை நாட்டு அறிஞன், பினியல்பாடியை 'ஆன்மாவின் இருப்பிடம்' (Seat of the ;Soul) எனக் கருதினான்.

ஆகாய கங்கை: (Cerebro Spinal Fluid - CSF) என்பது மூளைக்கும், முதுகுத் தண்டுக்கும் வளமை சேர்க்கும் ஓர் அமுத ஆறு. இது நம் தலையின் புருவ நடுவில் தொடங்கி, மண்டை ஓட்டை ஒட்டினாற்போல் பரவிப் படர்ந்து, நமது பின் தலைக்கு வருகிறது; அங்கு ஓர் ஏரி போலத் தேங்குகிறது, அந்த ஏரிக்குச் சிஸ்டர்ன் (Cistern) என்று பெயர். அங்கிருந்து முதுகுத்தண்டு வழியாகக் கீழ் நோக்கிப் பொசிந்து உலக வாழ்வு தொடர்பான நம் செயற்பாட்டிற்குப் பெரிதும் பயனுறுகிறது.

நீர்த்தாரை (Cerebral Aqua Duct): என்ற கால்வாய் மூலம் இந்த 'அமுத ஆறு' நான்காம் நாளத்திற்குச் செல்லுகிறது. அங்கிருந்து மூன்று துளைகளின் மூலம் பாய்ந்து மூளையின் மடிப்புச் சுருள் களுக்குள் நிறைகிறது. மூளையின் ஆற்றலைப் பெருக்குகிறது; மேலும் மூளையைப் புற அதிர்வுகளிலிருந்து பாதுகாக்கிறது மூன்றாம் நாளத்தையும் நான்காம் நாளத்தையும் இணைக்கும் ஒரு சிறந்த கால்வாயாக இது திகழ்கிறது. இவ்வாறு உயர்ந்த தும், அரியதுமாகிய ஒரு பொருள், சாதாரண மனிதனுக்கு ஒவ்வொரு நொடியும் கீழ்நிலை உறுப்புகளை இயக்குவதிலேயே பெரும் அளவில் பயன்படுகிறது.

தலைமைச்சுரப்பி (Pituitary Gland): இது நம் தலையின் மையப் பகுதியில் உள்ளது. நம் இரு காதுகளையும் ஒரு நேர் கோட்டினாலும் புருவ நடுவையும் பிடரியையும் மற்றொரு நேர்கோட்டினாலும் இணைத்தால், அவ்விரு நேர்கோடுகளும் நம்தலையினுள் பெருமூளைக்குக் கீழே, மூக்கின் உட்புறத்தில், ஓர் இடத்தில் சந்திக்கும் அந்த இடத்தில் அமைந்துள்ளது, பிட்யூட்டரி என்ற தலைமைச் சுரப்பி, இது ஒரு சிறிய நாவல்பழம் போன்ற அமைப்புடையதாய்ப், பெருமூளைக்கு அடியிலுள்ள (Hypothalamus) என்ற தாமரைக் காம்பிலிருந்து ஒரு மெல்லிய இழையில் அழகாகத் தொங்கிக் கொண்டிருக்கிறது. தனக்கான ஆணைகளையும் நேரடியாக அத்தாமரைக் காம்பிலிருந்தே இது பெறுகிறது.

பெருமூளையின் இரண்டு கூறுகளைப் போன்றே, பிட்யூட்டரியும் மொச்சை வித்தைகளை ஒத்த இரண்டு கூறுகளை உடையது. புறத்தே உள்ள கூறில் தாமரை மொட்டில் சுரந்த இரண்டு உயிர்ப்பு நீர்கள் தேங்குகின்றன. அகத்தே உள்ள பகுதி ஏறத்தாழப் பத்து உயிர்ப்பு நீர்களைச் சுரக்கின்றது. தலையாய உயிர்ப்பு நீர் (Principal Hormone) இங்குத் தான் சுரக்கிறது. நமது உடம்பின் பிற சுரப்பிகள் (Glands) எல்லாவற்றிற்கும் இதுவே தலைமைச் சுரப்பி[1] (Master Gland) ஆகும்.

ஆண்களின் விந்துஅணு உற்பத்தி, ஆண்மை ஊற்றம் (Sperm Cells & Male Harmone), இவற்றை ஊக்குவிக்க வல்ல, உயிர்ப்பு நீர் ஒன்றும், விந்து ஓடும் வாய்க்காலைச் செம்மையாக வைத்துக் கொள்ளுகிற உயிர்ப்பு நீர் ஒன்றும், ஆக இரண்டு உயிர்ப்பு நீர்கள் இங்குத்தான் உற்பத்தி ஆகின்றன. அதே போல் பெண்களுக்குத் திங்கள் ஒன்றுக்கு ஒரு வளர்ந்த முட்டையை வழங்குவதும் இத்தலைமைச் சுரப்பியே.

"உருவு கண்டு எள்ளாமை வேண்டும்' என்பது முதுமொழி. அதற்கேற்ப, நமது உடல்வளர்ச்சி உள்ளத்தின் எழுச்சி, அறிவின்

---

1 இதனை 'ஆணைத்தானம்' எனச் சைவ சித்தாந்த அருளாளர் அழைப்பர்.

முதிர்ச்சி, புணர்ச்சி வேட்கை, புனர் உற்பத்தி முதலிய மாபெரும் செயல்கள் எல்லாம், ஒரு சிறிய (பட்டாணி மொச்சை அளவே உள்ள இந்த பிட்யூட்டரிச் சுரப்பியின்[1] கட்டுப் பாட்டிற்குள் தான் அமைகின்றன.

உடம்பின் மூலை முடுக்குகளிலெல்லாம், இஃது இவ்வாறு தன் ஆணையைச் செலுத்துகிறது. ஆயினும் தான் எவ்வெவ்வாறு செயல்பட வேண்டும் என்பதற்கான ஆணைகளைத் தனக்கு மேலேயுள்ள தாமரைக் காம்பு (Hypothalamus) போன்ற பகுதியிலிருந்தே நேரடியாகப் பெறுகிறது.

தலை எழுத்து அல்லது தலைவிதி பதிவு செய்யப்பெற்ற இடம் எனச் சிந்திக்கற் பாலதான அத்தாமரைக் காம்பின் அமைப்பும் செயற்பாடும் பற்றி இனிக் காண்போம்.

தாமரைக் காம்பு (Hypothalamus) என்ற பகுதி ஒரு கணிப் பானைப் போன்றது, இக்காலத்தில் விஞ்ஞானக் குறிப்புகள், வணிகத் துறையின் வரவு செலவுகள், அரசியல் அந்தரங்கங்கள், சமுதாயச் சீர்திருத்தங்கள் போன்ற பல நூறாயிரம் செய்திகளையும் ஒரு சிறிய கணிப்பானில் பதிந்துப் பன்னெடுங்காலம் பாதுகாக்க முடியும் என்ற ஒரு சிறப்பினை நடைமுறையில் காணுகிறோம்.

இத்தகைய கணிப்பான் ஒன்று இயற்கையாகவே இறைவனால் நமக்கு அருளப் பெற்று, நமது உடம்பில் உள்ளது என்ற உண்மையை எத்தனை பேர் அறிவர்? அறிவுத் தானமாகிய நமது பெருமூளை, ஆயிரம் இதழ் கொண்ட ஒரு தாமரை மலரினைப் போன்று காட்சி அளிக்கிறது. பெருமூளையின் அடியில், நமது தலையின் மையப் பகுதியில், பிட்யூட்டரி என்ற தலைமைச் சுரப்பிக்கு மேலே, மலரின் இதழ்களைத் தாங்கி

---

1 மூக்கு நுனியின் உட்புறத்துக்குச் சற்று மேலே அமைந்திருப்பதால், இதுவே மூளை நீரை மூக்குச் சளியாக்கி, வெளிக் கொணர்கிறது என்ற கருத்துப் பண்டைய கிரேக்க உரோமானியர்களிடம் நிலவி வந்தது. அக்கருத்துப் பற்றியே இச்சுரப்பிக்குப் பிட்யூட்டரி என்ற பெயரும் வந்தது. Pituit - Mucus: I'm Joe's Body P. 53.

நிற்கும் ஒரு மலர்க்காம்பு போன்று, அமைந்துள்ள பகுதியே ஹைப்போதாலமஸ் (Hypothalamus)[1] என அழைக்கப் பெறுகிறது. இஃது ஒரு மனிதக் கணிப்பான் ஆகும்.

பார்வைக் குறுக்கு வளையம் (Optic Chiasm), பிலத்துவாரம் (Infundibulam), பாலூட்டக அமைப்பு (Mammillary body) முதலிய சில அரிய உறுப்புகளின் கூட்டமைப்பே ஹைப்போதாலமஸ் ஆகும்.

எல்லைகள்: இதன் மேலே மூன்றாம் (பிறைவடிவ) நாளம்; கீழே பிட்யூட்டரி என்ற தலைமைச் சுரப்பி. இவ்வாறு Corpus Collosum என்ற ஆண்மை உறுப்புக்கும், பிட்யூட்டரி என்ற பெண்மைத் தானத்திற்கும் இடைப்பட்டு நிற்கும் இந்த மனிதக் கணிப்பான் ஒரு தனிச் சிறப்பு வாய்ந்தது. இதன் ஆற்றலோ வியத்தகு முறையில் அமைந்திருக்கிறது. பல்லாயிரம் ஆண்டுகளை உள்ளடக்கிய பழங்கால வரலாறுகளையும் எதிர் காலச் செய்திகளையும் அறியவல்ல ஆற்றல் இதற்கு உண்டு, என அறிவியலார் கூறுகின்றனர்.[2] மனித முனைப்பாற்றலுக்கு அப்பாற்பட்ட செயல்களைச் செய்யும் இது, ஓய்வு ஒழிவின்றி ஒரு நாளின் இருபத்து நான்கு மணி நேரமும் தொழிலாற்றுகிற மிக முக்கியமான ஓர் உறுப்பு ஆகும்.

---

1 அறிவுத் தானமாகிய மூளையையும் அன்புத் தானமாகிய இருதயத்தையுமே தன் அதிகாரத்தால் ஆட்டிப் படைக்கும் ஆற்றல் உடைமையால் இதனையே தலைவிதி அல்லது தலை எழுத்து என அருளாளர் கணித்தோதுவர்.

2 "It can trace its ancestory back 100-million years, and it does many of the same job for us that it has been doing since the earliest primitive creatures began to appear on the earth. It is a sort of co-ordinator for much of our nervous system and for our pituitary gland." — I'm Joe's Body.

Hypo means under; Thalamus is the receptacle or, the basis of a flower.

பிட்யூட்டரி சமுதாயக் கூட்ட உணர்வைத் தூண்டவல்ல ஆக்ஸிடோஸின் (Oxytocin) என்ற உயிர்ப்பு ஆற்றலை தோற்று விக்கிறது. தாய்சேய் அன்பு உறவுக்கும், மூளையின் வளர்ச்சிக்கும் இவ் உயிர்ப்பு ஆற்றல் பெரிதும் துணை நிற்கிறது. ஹைப்போ தாலமஸ் மூளையின் பிற பகுதிகளைப் போன்று சிந்தனை செய்வதோ, ஒளி பொருந்தியதோ, தோற்றத்தால் எழிலு டையதோ அன்று. எனினும் நம் ஒவ்வோர் அசைவிலும் இது முக்கியப் பங்கேற்கிறது. உடலின் இயக்கங்களை எல்லாம் ஒருங்கிணைக்கிறது. நமது உடம்பின் மொத்த எடையில் ஐம்பதில் ஒரு பங்கு (2%) எடையே உள்ளது, நமது மூளை அந்த மூளையின் எடையில் முந்நூறில் ஒரு பங்கு எடையே உள்ளது, இந்தத் தாமரைக்காம்பு. எனினும் உடலின் எந்த ஒரு பகுதியையும் விட மிகுதியான குருதியை இது பெறுகிறது.

முகுளம் (Medulla Oblangata) என்பது முதுகுத் தண்டின் தலைப்பகுதி. குமிழ் போன்ற வடிவமைப்பு உடைய இதன் மேற்பகுதியில் நடுமூளை அமைந்துள்ளது. நாம் விழித்திருக்கும் போது நமது மூளை செய்கிற அத்துணை வேலைகளையும், நமது உறக்கக் காலத்தில், இந்த முகுளமே செய்கிறது.

பார்வைக் குறுக்கு வளையம்: வீரக்கழல் — (Optic Chiasm): நமது முகத்திலுள்ள இரண்டு கண்களாலும் நாம் வெளிப் பொருள்களைக் காணுகிறோம். அப்பொருள்களின் நிழல், நமது மூளையின் பின் பகுதியிலுள்ள ஒரு திரை (Retina)யில் விழுகிறது. எனவே நம்மால் வெளிப் பொருள்களைக் காண முடி கிறது. பொருளின் நிழலைக் கண்மணிகளிலிருந்து மூளைத்திரைக்கு எடுத்துச் செல்ல ஏராளமான நரம்புகள் உள்ளன. சொல்ல வொண்ணாத அளவுக்குக் குறுக்கும் நெடுக்குமாகப் பின்னல்களை உடைய அவற்றிற்குக் காண்டல் நரம்புகள் என்றும் பார்வை நரம்புகள் (Optic Nerves and olfactory nerves) என்றும் பெயர். இந்தக் காண்டல் நரம்புகள் நமது பெருமூளையின் கீழ்ப்பகுதி யில் கத்தரிக்கோலினைப் போன்று இடவலமாற்றமாக ஓடும் போது, அங்கு ஒரு வளையம் அமைகிறது. இதனைப் (Opti Chiasm) பார்வை வளையம் என அறிவியலார் கூறுகின்றனர்

முதுகுத் தண்டு (Spinal Cord): நமது முதுகில் 33-முள் எலும்பு வளையங்கள் (Vertebrac) ஒன்றன்மேல் ஒன்றாகச் சேராக அடுக்கப் பெற்றுள்ளன. அவற்றின் துளைகள் வழியாகச் செல்லும் தேர்வடம் போன்ற ஒரு வலிமையான நரம்புத் தொகுதி அவ்வெலும்புகளை ஒரு கோவையாக இணைத்து நிற்கிறது. இதற்கு சுழுனை அல்லது முதுகுத்தண்டு என்று பெயர். இஃது எழுபத்து இரண்டாயிரம் (72,000) நாடி நரம்புகளாலான ஒரு தொகுதி என தொன்மையான தமிழ் நூல்களிலிருந்து அறிகிறோம். இது, நம் தலையிலுள்ள முகுளத்தில் தொடங்கி அடிவயிற்றில் தொப்புள் (நாபி) அளவிற்குத் தொங்குகிறது. அங்கிருந்து, இடுப்புக்கு அருகிலே இரண்டு கூறாகப் பிரிந்து, இரண்டு கால்களுக்கும் வலுவூட்டுகிறது. இது, நம் கழுத்துப் பகுதியில் (Cervical) ஏழு பக்க நரம்புகளையும், நெஞ்சுப் பகுதியில் (Thorax) 12-பக்க நரம்புகளையும், வயிற்றுப் பகுதியில் (Lumbar) 5-பக்க நரம்புகளையும், அடிவயிற்றுப் பகுதியில் (Saccral) 5-பக்க நரம்புகளையும், அதற்குக் கீழே (Coccyx) 2-பக்க நரம்புகளையும் ஆக 31-பக்க நரம்புகளைக்[1] கொண்டிருக்கிறது.

மைய நரம்பு மண்டலத்தின் செய்திகளை இந்த அளவில் மனத்திலிருத்தி, அடுத்துக் குருதி ஓட்ட மண்டலம் பற்றிக் காண்போம்.

இருதயம் (Heart): நமது நெஞ்சுக் கூட்டில் அமைந்துள்ள இது மார்பு எலும்புகளின் நடுவில் செவ்விதே பாதுகாக்கப் பெறுகிறது உறுப்பு என்ற எண்ணிக்கையில் இஃது ஒன்றுதான் என்றாலும், செயற்பாடு கருதி வலது, இடது என்றும் மேல், கீழ் என்றும் நான்கு கூறுகளாக இதனை அறிவியலார் சிந்திப்பர். இடதுபகுதி தூய செங்குருதியால் நிறைந்தது. இதன் இடது கீழ் அறையிலிருந்து ஆற்றல் மிகு செங்குருதி. அயோர்டா (AORTA) என்ற பெரு நாளத்தின் மூலம், நமது உடம்பின் மூலை முடுக்குகளுக்கெல்லாம் இடையறாது செலுத்தப் பெறுகிறது. இக்குருதி ஓட்டத்தின் மூலம், உடம்பின் எல்லாத்

---

1 Thiry -one pairs of nerves branch out from the special cord There are 33-vertabree in our back -Iam Joe's body - PP - 187

திசுக்களும் செயலாற்றலைப் பெறுகின்றன. அதேபோல் நம் உடலின் பல பகுதிகளிலிருந்து வினை செய்து திரும்புகிற நீல நிற அழுக்கு இரத்தம், (Vena Cava) வீனாக்காவா என்ற இரண்டு பெருநாளங்களின் மூலம் இடையறாது வலப்பகுதியில் விழுந்து கொண்டே இருக்கிறது. இவ்வாறு இமைப்பொழுதும் பிசகாமல் இரத்தம் போக்குவரத்துப் புரிகிற இடமாக இது திகழ்கிறது.

குருதி அணுக்கள் (Blood Cells): இவை பொதுவாகச் சிவப்பு இரத்த அணுக்கள் (RBC) என்றும் வெள்ளை இரத்த அணுக்கள் (WBC) என்றும் இரண்டு வகைப்படும்.

தலை, நெஞ்சு, முதுகு மற்றும் மூட்டுகளில் உள்ள எலும்புத் துளைகளிலிருந்தும், மண்ணீரலிலிருந்தும் குருதி அணுக்கள் இடையீடின்றி உற்பத்தியாகின்றன. இந்த இரத்த அணுக்களுக்கு I20-நாள் மட்டுமே வாழ்வு உண்டு; பின்னர் அவை அழிந்து மண்ணீரலில் ஒடுங்குகின்றன. இவ்வாறு ஒவ்வொரு நொடியும் பன்னிரண்டு நூறாயிரம் செங்குருதி அணுக்கள் அழிவதும் தோன்றுவதுமாக இருக்கின்றன,[1]

நிறைவுரை: இது காறும் நாம் கண்ட உடற்கூறு பற்றிய செய்திகள் எல்லாம் இற்றைநாள் அறிவியலார் பலரும் பல் வேறு காலகட்டங்களில் பலவாறாக உடலைக் கூறு செய்து ஆய்ந்தறிந்த உண்மைகளாம். ஆனால் உடலை அங்ஙனம் கூறு செய்யாமலேயே, உடற்கூற்றின் சிறப்பியல்புகளை நம் பண்டைத் தமிழ் முன்னோர்கள் ஆழ்ந்த சிவதியானத்தின் மூலம், மிக எளிதாக, அன்றாட நடைமுறையில் பயின்று, பெரும் பயன் அடைந்திருக்கிறார்கள். மீ ஒலி (Ultrasound) மூலம், உடலின் மிக நுண்ணிய உள்ளுறுப்புக்களையும் அவ்வாறு அறிய முடியும் என்ற உண்மையை இக்கால விஞ்ஞானிகளும் உறுதிப்படுத்து கின்றனர்.

எனவே சைவ சித்தாந்தத்தின் அரிய சாத்திரக் கருத்துக் களையும், புராண வரலாறுகளின் ஆழ்ந்த நுண்பொருள் களையும், இக்கால உடலியலோடும் உளவியலோடும் இணைத்து நோக்கி ஒத்த கருத்துக்களின் துணைகொண்டு நாமும் நம் உடம்பினுக்குள்ளே இறைமைப் பண்புகளைக் கண்டு தெளி வோமாக!

---

1 Page. '8 9 of I am Joe's Body

3. பொய்யுடம்பினுள் மெய்ப் பொருள் ஆட்சி

(களவியல்)

உள்ளம் பெருங்கோயில், ஊ(ன்)உடம்(பு) ஆலயம்
வள்ளல் பிரானுக்கு வாய்,கோ புரவாசல்,
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புல(ன்)ஐந்தும் காளா மணிவிளக்கே''[1]

முற்றுணர்வும், சிற்றறிவும்: சிவபெருமான் ஒருவரே கடவுள். அவர் எங்கும் நிறைந்திருக்கிறார்; ஆதியும் அந்தமும் இல்லாதவர்; முற்றறிவினர்; இன்பமே வடிவமானவர். இவ்வாறு சத்சித் ஆனந்தமாய் நிலவும் அவரே தனிப்பெரு முழு முதற் பொருள்.

ஆனால் உயிர்களாகிய நாமோ சிற்றறிவும், குற்றறிவுமாக அல்லலுறுகிறோம். நமது அவல நிலைக்கு இரங்கி, இறைவ வாகிய பரசிவம் நமக்குப் பேரின்ப வாழ்வு அருளுவதற்காக அருவம், அருஉருவம், உருவம் என்ற பல எளிய நிலைகளைத் தாமே மேற்கொள்ளுகிறார்.[2]

ஒன்றாய், உடனாய், வேறாய்... கடவுள் என்பவர் உயிர்' உலகம் முதலிய எல்லாவற்றிற்கும் வேறாகக் கடந்த நிலையில் இருப்பதாகவே, பொதுவாக அனைவரும் கருதுவர், ஆனால் கடந்திருக்கும் அவர், எப்போதும் நம்மோடு உடனாகவும் இருக்கிறார்; நம்முடனும் உலகப் பொருள்களுடனும் ஒன்றாகக் கலந்தும் இருக்கிறார். இது, சைவசித்தாந்தம் அறிவுறுத்துகிற உயரிய கொள்கை.[3]

---

1 திருமூலர் திருமந்திரம்

2 ''அருவமும் உருவா ரூபம் ஆனதும் அன்றி நின்ற உருவமும் மூன்றும் சொன்ன ஒருவனுக்கு உள்ளவாமே''-சிவஞான சித்தியார்-58

3 உலகெலாம் ஆகி, வேறாய், உடனுமாய் ஒளியாய் ஓங்கி, அலகு இலா உயிர்கள் கன்மத்து ஆணையின் அமர்ந்து செல்லத்தலைவனாய் இவற்றின் தன்மை தனக்கு எய்தல் இன்றித்தானே நிலவுசீர் அமலனாகி நின்றனன், நீங்காது எங்கும்''-சிவஞான சித்தியார்-91.

உடலியல் சைவக் கொள்கைகளுக்குப் புறம்பா? அரு உருவமாகவும், உருவமாகவும் இவ்வாறு அனைத்து உலகப் பொருள்களிலும் கலந்துள்ள சிவபெருமான், நமது இந்த மனித உடம்பிலும் செவ்விதே கலந்து தோன்றுகிறார் என்பது தெளிவு.

ஆகவே சைவசித்தாந்தச் செந்நெறியாளர்க்கு, உடலியல் பற்றிய செய்திகள் புறம்பானவை அல்ல; தெரியாதனவும் அல்ல. அவர்தம் அன்றாட அனுட்டான வழிபாட்டு நெறிகளில், அவை பெரும்பங்கு வகிப்பவையே. உடலியல் பற்றிய சிந்தனைகளும், பயிற்சிகளும் சைவக்கொள்கைகளுக்குப் பெரிதும் ஏற்புடை யனவே. ஆதலால்,

இந்த இயலில், உடம்பு உலகம் முதலிய சடப்பொருள்களுக்கு மூலமாகிய மாயையின் இயல்புகள் பற்றியும், நாம் உய்தி அடைய வேண்டும் என்ற பெருங்கருணை உள்ளத்தோடு, அதனைத் தொழிற்படுத்துகிற பரம்பொருளாகிய சிவபெருமான் நம் மனித உடலினுள் தங்கி இருந்து, தம்மை எவ்வாறு எல்லாம் வெளிப்பட உணர்த்தி நிற்கிறார் என்பது பற்றியும் சைவஞான நூல்களின் வழிச் சிந்திப்போம்.

உயிராலும் கடவுளும் ஊழித் தோற்றமும்: தனி முதல் நிலை (சிறப்பியல்பு): பரசிவம், சச்சிதானந்த வடிவினராய் எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் தனிப்பெரு நிலையை முன்னர்க் கண்டோம். அது நம் தலை உச்சிக்குமேல் 12-அங்குல உயரத்தில், துவாதசாந்தம் என்ற மீதானப் பெருவெளியில் சிவபெருமான் எவ்விதத் தொழிற்பாடும் இல்லாமல் 'சிவமே' எனச் சும்மா இருக்கும் சிவபரநிலை. அவ்வாறு அவர் சும்மா இருப்பதால், உயிர்களாகிய நமக்கு யாது பயன்?

தொழிற்படு நிலை (பொது இயல்பு): எனவே, நமக்குப் படிமுறையில் அறிவு விளக்கம் தந்து, நம்மைப் பேரின்பப் பெருவாழ்வில் நிலைபெறச் செய்வதற்காக, அவர் தொழிற்படுகிறார்' அண்டத்திலும், பிண்டத்திலும் அவ்வாறு அவர் எளிவந்து ஆற்றும் தொழில்கள் ஐந்து. அவை: படைத்தல், காத்தல்,

அழித்தல், மறைத்தல், அருளல் என்பன. அப்போது அவர் கொள்ளுகிற வேடங்கள் யாவை? என்பது பற்றிச் சிந்திப்போம்.

மாதொரு பாகன்: ஒரே பொருளாகிய பரசிவம், ஞானமே வடிவாய தம்முடைய வனப்பு ஆற்றலை (அருட்சத்தியை)த் தம்முள்ளிருந்து வெளிப்படுத்தி, இடப்பாகத்து அமர்த்தி, அப்பேராற்றலையே தமக்கு வடிவமாகவும் கொள்ளுகிறார்.

வனப்பு ஆற்றல் (சிற்சத்தி)[1]: கருணையின் நிலைக்களனாக இருப்பவர் சிவபெருமான்; அவர் நம்மைக் காத்து உய்விக்க விரும்புகிறார். அவருடைய இவ்விருப்பத்தையே தனக்கு அவர் இட்ட கட்டளையாக (ஆணையாக)க் குறிப்புணர்ந்து, அதன்படி நமது உள்ளும் புறமும் செயல்படுகிற அவருடைய பேராற்றலுக்குச் சிற்சத்தி, (Kinetic Energy), என்பது பெயர். சிவசத்தி அருட்சத்தி, வனப்பு ஆற்றல் என்பன போன்ற வேறுபல பெயர்களாலும் அவளை அழைப்பர். சூரியனும் அதன் ஒளியும் போலவும், மலரும் அதன் மணமும் போலவும், நெருப்பும் அதன் சூடும் போலவும் சிவபெருமானும் அவரது சிற்சத்தியும் எக்காலத்தும் நீங்காது உடனுறைபவர்கள்.

பரிக்கிரக சத்தி; (மாயை): ஞானமே வடிவான சிற்சத்தி[1] இவ்வாறு எப்போதும் சிவத்துக்கு உள்ளேயே நீக்கமின்றி இருக்கச், சிவபரத்திற்கு வெளியே அதிலிருந்து தனியான பொருளாய், நிலையானதாய். நுண்ணியதாய் உள்ள சடஆற்றல் ஒன்றும் உள்ளது. அதற்கு மாயை என்பது பெயர். மா— ஒடுக்கம்; யா — தோற்றம். நாம் காணுகிற உடல், உட்கருவிகள், உலகம், நுகர்ச்சி ஆகிய அனைத்துச் சடப்பொருள்களின் தோற்றத்திற்கும், ஒடுக்கத்திற்கும் காரணமான மூலமுதற் பொருளுக்கு மாயை என்பது பெயர்.

அறிவும், உயிரும் இல்லாத இச்சட ஆற்றலைச் சிவபெருமானது பரிக்கிரக சத்தி எனச் சைவ ஞான நூல்கள் கூறும். இது சிவத்தோடு தொடர்புடைய ஓர் ஆற்றல் எனச் சிறப்பிக்கப்

---

1 சத்தி தன் வடிவுஏ(து) என்னில், தடையில்லா ஞானமாகும்.

—சிவஞான சித்தியார் சு 1-62

பெற்றாலும், உயிர்களாகிய நம் ஊழ்வினைக்கு ஏற்ப, மேற்கூறிய பொருள்களின்பால் போலியான ஓர் இன்ப மயக்கத்தை அவ்வப் போது ஊட்டுவதால், இதனையும் பலங்களுள் ஒன்றாகவே சேர்த்தனர்.

''மாயை மயக்கமும் செய்யும் அன்றே'' —சித்தியார் 143

தேசுடைய மாயையும், மாசுடைய மாயையும்: உயிர்களாகிய நாம் உய்தி அடைவதற்காகச் சிவபெருமான் தொழிற்பட விரும்பியதும் அவருடைய சிற்சத்தி, மாயை என்ற பரிக்கிரக சத்தியின் ஒரு பகுதியைக் கலக்கி, அதிலிருந்து அண்டபேரண்ட மாகிய இப்பிரபஞ்சத்தை (Universe)த் தோற்றுவிக்கிறாள், சிவசத்தி இவ்வாறு தொழிற்படுவதைக் காஞ்சிப் புராணமும் சுந்தரர் தேவாரமும் எழிலுற எடுத்தியம்பும்.

''ஒருகா லத்தின் உருவ(ம்)மற்(று) ஒன்றே
இடப்பால் முப்பத்(து) இரண்(டு)அறம் வளர்ப்ப
வலப்பால் இரத்தல் மாநிலத் தின்றே''[1]

''தா(ர்)இ ருந்தட மார்பு நீங்காத்
தையலாள் உல(கு)உய்ய வைத்த
கா(ர்)இ ரும்பொழில் கச்சி மூதூர்க்
காமக் கோட்ட(ம்) உண்டாக,...''[2]

சிவபெருமானிடம் இருநாழி நெல் (இருமாயைகளைப்)பெற்று உமாதேவி முப்பத்து இரண்டு அறச்சாலைகளை (சுத்தமாயை-1, அசுத்தமாயா தத்துவங்கள்-31[3])யும் காஞ்சிக் காமக்கோட்டத்தில்

---

1 காஞ்சிப் புராணம் 2 சுந்தரர் தேவாரம் 7:5:6

3 சுத்தமாயை - 1 எனக் கொண்டமை : நாதம் முதலிய சிவதத்துவங்கள் ஐந்தும் சிவபெருமானுடைய தனி உறைவிடமாதலாலும், அங்கு பொதுநிலை உயிர்கள் (சகலர்) நுழைதல் இயலாது ஆகையாலும், உயர்பக்குவ ஆன்மாக் கள் சுத்தவித்தையில் தங்கித் திருவடிப்பேறு எய்துதலாலும் ஆன்மாக்களைப் பொறுத்தவரை, ஐந்தையும் ஒரே தத்துவமாக நம் முன்னோர் கணக்கிட்டி ருப்பார்கள் எனக் கருதுதல் பொருந்தும். எனவே சிவதத்துவம் 1+ அசுத்த மாயை தத்துவங்கள் 31 ஆக 32

32 - அறங்களை உமையம்மை வளர்த்தமை - புராணம்

32 - பண்ணைத்தோன்றிய என் நான்கு பொருளும் -தொல்காப்பியம்

32 - உயிர்களுக்கான சுத்தமாயா, அசுத்த மாயா தத்துவங்கள்

அமைத்தருளினாள் என்பது இப்பாடல்களின் கருத்து, மாயையின் கலக்குண்ட பாகத்தில், தேசுடைய மேற்பகுதி சுத்தமாயை எனவும், மாசுடைய கீழ்ப்பகுதி அசுத்தமாயை எனவும் அழைக்கப் பெறுவது கண்டோம்.

பொய்ப் பொருள்கள்: இவ்விரு மாயையிலிருந்துதான், நமது இந்த உடல், நாம் வாழுகிற உலகம், இங்கு நாம் நுகர்கிற பொருள்கள், அவற்றை நாம் நுகர்வதற்குத் துணையான கருவிகள் ஆகிய அனைத்தும் இறைவனால் நம் பொருட்டுத் தோற்றுவிக்கப் பெற்றன. இவை அனைத்தும் ஒரு கால எல்லை வரை இருந்து, பின்னர் மாயையின் உள்ளேயே ஒடுங்கி விடுவன. ஆகவே நிலையற்ற தன்மை காரணமாகப் பொய்ப்பொருள் எனப்பட்டன.

இரு பேருருவின் ஒரு பேரியாக்கை: சுத்த மாயையினாலான ஒரு பேருருவைத் தலைப் பகுதியாகவும், அசுத்த மாயையினாலான ஒரு பேருருவை உடற் பகுதியாகவும் கொண்டிருந்த சூரபதுமனைத் திருமுருகாற்றுப் படையில், நக்கீரத்தேவர் 'இரு பேருருவின் ஒரு பேரியாக்கை' எனச் சுட்டிக் குறிப்பிடுகிறார். முருகப் பெருமானது வேற்படையால், சூரபதுமனது உடல், இறுதியில் இரு கூறாகப் பிளக்கப்பட்டது. அதன் அசுத்தமாயைப் பகுதி, அழகிய ஒளி நிறைந்த மயில் ஊர்தியாயிற்று; சுத்தமாயைப் பகுதி, ஒலி வடிவாய சேவல் கொடியாயிற்று.

மனித உடம்பினுள் சிவபூமியும், சீவ பூமியும்: நமது மனித உடம்பிலும், தலையில் புருவநடுவுக்கு மேலுள்ள, உயர்ந்த இடம் சுத்தமாயையினாலானது கீழிடம் அசுத்தமாயையினாலானது; சுத்தமாயை ஐந்து தத்துவங்களாகவும்,

அசுத்தமாயை 31—தத்துவங்களாகவும்[2] விரிகின்றன.

இவற்றுள் சுத்தமாயையிலிருந்து[1] நாதம் முதலிய ஐந்து தத்துவங்கள்[3] தோன்றுகின்றன. அவற்றிற்குச் சிவதத்துவம் என்பது பெயர்.

இவ்வாறு சுத்த மாயையிலிருந்து வெளித் தோன்றிய சிவ தத்துவமே, சிவபெருமானுக்கு 'உறைவிடம்' ஆகிறது. உலக இயக்கத்தின்போது சிவபெருமான் நமது உடன்பின்கண் நின்று' நமக்காகத் தொழில் செய்கிற தொழிலகம் இது. ஒரு பெரிய தொழிற்சாலையின் முகப்பில் அமைந்த அதன் நிர்வாக இயக்கு நரின் அலுவலகத்தைப் போன்று, நம் முன்தலையிலுள்ள பெரு மூளையின் இரண்டு கூறுகளும் சிவன், சத்தி இருவரது தொழில கம் ஆகிறது. இயக்குநரோ தொழிற்சாலையின் எந்த மூலைக்கும் எளிதாகச் செல்லலாம்; ஆனால் எல்லாத் தொழிலாளிகளும் இயக்குநரின் தனியிடத்துள் எளிதில் நுழைதல் கூடாது அன்றோ?

---

1 சுத்தமாயையிலிருந்து தோன்றும் தத்துவங்கள் நாதம் → விந்து → சாதாக்கியம் → ஈசுரம் → சுத்தவித்தை ← ஆகச் சிவதத்துவம் 5

2 அசுத்தமாயையின் மேற்பகுதியாகிய சுத்தா சுத்தமாயையில் காலம், நியதி, கலை → வித்தை → அராகம், புருடன், மாயை... ஆக வித்தியர்தத்துவம் 7

அசுத்தமாயையின் கீழ்ப்பகுதியாகிய, பிரகிருதிமாயையில்

சித்தம் → புத்தி → அகங்காரம் → மனம் ஆகிய உட்கருவிகள் (அந்தக் கரணங்கள்)	4	
காது, கண், மூக்கு, நாக்கு, தோல் ஆகிய அறிவுக் கருவிகள்	5	
கை, கால், வாய், எருவாய் கருவாய் ஆகிய செயற்கருவிகள்	5	
ஒலி, ஒளி, நாற்றம், சுவை, ஊறு ஆகிய நுண்புலன்கள்	5	
ஆகாயம், காற்று, தீ, நீர், நிலம் ஆகிய பூதங்கள்	5	
ஆக ஆன்மதத்துவங்கள்		24
ஆக மாயையின் மொத்த தத்துவங்கள்		36

3 "வித்தையோ[டு], ஈசர், சாதாக்கியம், சத்தி, சிவங்கள் ஐந்தும் சுத்ததத்துவம், சிவன்தன் சுதந்திர வடிவம் ஆகும்"

—சிவஞான சித்தியார் - 86

'அதே போன்று சிவன் - சத்தியின் இயக்கம், நம் உடம்பு முழுவதுமே இருக்கும். ஆனால் உயிரோ தன் ஆற்றலைப் பெருமூளையினுள் செலுத்த முடியாது. இதற்குச் சான்று, என்னை? எனில் கூறுதும். உடலின் ஏதோ ஒரு சிறு பகுதியை வெட்டினாலும், மூளை ஆற்றல் அதனை உணரும்; ஆனால் மூளையையே வெட்டினால், உயிராற்றல் அதனை உணர இயலாது[1]. விஞ்ஞானகலர், பிரளயாகலர் என்ற உயர் பக்குவ ஆன்மாக்களுக்கு உடம்பு, உலகம், உட்கருவி, போகப் பொருள்கள் ஆகியவை இச்சிவதத்துவத்தில் தான் தோன்றுகின்றன.

கீழ்ப்பகுதியாகிய அசுத்த மாயையிலிருந்து, காலம் முதல் நிலம் ஈறாகவுள்ள 31–தத்துவங்களும் வெளிப்படுகின்றன. இந்த அசுத்த மாயா தத்துவங்கள் முப்பத்தொன்றும் சகல வர்க்கத்து ஆன்மாக்களாகிய நமக்கு **'அனுபவக் களம்'** ஆகின்றன.

உயிர்களாகிய நாம் பிராரத்த வினைக்கு ஏற்பக் குணநலங்களைப் பெறுவதும், இன்ப துன்பங்களை அனுபவிப்பதும் புது வினைகளைச் செய்து புதிய பிறப்புக்களுக்கு வித்திடுவதும் இங்குத்தான். இறைவனது பெருங்கருணைத் திறத்தினை நாம் உய்த்துணர்ந்து வழிபடுவதற்குரிய திருத்தலமும் இதுவே.

பண்டைத் தமிழ்ச் சான்றோராகிய தொல்காப்பியரும், சைவத்தின் இம் மேலான தத்துவக் கோட்பாட்டிற்கு ஏற்பவே, நூற்பா யாத்துள்ளமை காணுகிறோம்.

'முத(ல்)எனப் படுவது நிலம்பொழு(து)இரண்டின்
இயல்(பு)என மொழிப இயல்(பு) உணர்ந்தோரே'[2]

நிலம் என்ற முதல் தத்துவத்திற்கும், காலம் (பொழுது) என்ற 31-வது தத்துவத்துக்கும் இடைப்பட்ட அசுத்த மாயா தத்துவப் பரப்பே, நமது அகத்துறை இன்ப ஒழுக்கத்துக்கு முதற் பொருள் என்பது இதன் கருத்து.

1, I'm Joe's Body PP. 12 2, தொல் அகத் 4

இவ்வாறு மாயை என்னும் சட ஆற்றலிலிருந்து தான் சிவ போக பூமியும், உலக போக பூமியும் உருவாகின்றன என்பது சிறப்பு நிலை. மாயை எங்ஙனம் பொது வகையால், விரிந்து தொழிற்படுகிறது என்பதை இனிக் காண்போம்.

இந்த முப்பத்தாறு தத்துவங்களின் வெவ்வேறு சேர்க்கை யினால்தான் நம்முடைய உடம்பு, உட்கருவிகள், நாம் வாழுகிற உலகம். ஊழ்வினைக்கேற்ற நுகர்ச்சி என்பன உருப்பெறுகின்றன. எனினும், மகேஸ்வரனுக்கும், மாயைக்கும் உள்ள தொடர்பு பற்றிப் புலருக்கும் பலவித ஐயங்கள் எழுவதைக் காணுகிறோம். அதுபற்றி ஓரளவு சிந்திப்பது சிறப்பு.

மாயை சிவனுக்கு உடம்பா? மாயை என்பது ஒரு சத்தி என்றும், அது சிவபெருமானது பரிகிரக சத்தி என்றும், அதுவே உயிர்களாகிய நமக்கு உடம்பு ஆகிறது என்றும் கண்டோம். சிவபெருமான் நமக்காகவே பல எளிவந்த தோற்றங்களை எடுத்துக் கொள்ளுகிறார் என்றும் அறிந்தோம். அவ்வாறாயின், சிவபெருமானுக்கும் இந்த மாயையே உடம்பு ஆகிறதா? என்பது சிலரது ஐயம். அதற்கு விடை கூறுவதாக அமைகிறது, சகலாகம பண்டிதரின் ஞானமொழி. சிவபெருமானுக்குக்

''காயமோ மாயை அன்று;
காண்பது சத்தி தன்னால்''[1]

சிவபெருமான் (ஞானசொரூபி) முற்றுணர்வினன், அவன் மாயை என்னும் (சடஆற்றலை) அறிவில்லாப் பொருளைத் தனக்கு உடம்பாகக் கொள்ளுவதில்லை. ஞானமே உருவாகிய தன் சித்சத்தியையே தனக்கு உடம்பாகக் கொள்ளுகிறான் என்பது இப்பாடற் பகுதியின் கருத்து. மாயையின் வெளிப் பாடாகிய 36-தத்துவங்களையும், அவற்றின் பல்வேறு வகைச் சேர்க்கையால் உருவான உடல் உலகம் முதலியவற்றையும் **மாயாகாரியம்** என்றும் **மாயேயம்** என்றும் அழைப்பர். சிவபெருமானின் வைப்பு ஆற்றலே மாயை என்றாலும், அவன் அதனைத் தனக்கு உடம்பாகக் கொள்ளுவ

---

1 அருள் நந்திசிவம் - சிவஞான சித்தியார் 61

தில்லை மாறாகத். தனது வனப்பு ஆற்றலாகிய (சித்சத்தி) அருட்சத்தியையே தனக்கு எக்காலமும் உடம்பாகக் கொள்ளுகிறான். மாயாகாரிய உடம்போடு கூடிய உயிர்களாகிய நமக்கு அருள் பாலிக்க வேண்டிய பொழுதெல்லாம், ஏற்ற முறையிலே ஏதேனும் ஒரு மாயாகாரியப் பொருளை 1) ஊர்தியாகக் கொண்டு இவர்ந்தும், அமர்ந்தும், ஊர்ந்தும் 2) திரிசூலம் முதலிய கருவியாகக் கொண்டு தொழிற்படுத்தியும் 3) சிலைகளில் போன்று உள்நின்று (அதிட்டித்தும்) இயக்கியும் 4) அப்பொருளுக்குத் தன் வடிவத் தோற்றத்தை அருளியும் உபாங்கம், பிரத்தியாங்கமாகவே கொள்ளுகிறான். இவையே

''உலகு அவன் உருவில் தோன்றி ஒடுங்கிடும்''[2]

''சுத்த தத்துவம் சிவன்தன சுதந்திர வடிவம் ஆகும்''[3]

என்பவற்றால் அறியத்தக்க மெய்ப்பொருளாம். இதனைச் சிவபெருமானது சகஜநிலை என்பர் வடநூலார். ஒரு கண்ணாடியில் பிரதிபலிக்கும் நிழலுருவினையும் வானத்தில் தோன்றுகிற வானவில்லையும் இதற்கு உவமை கூறலாம்.

அடுத்து மாயையிலிருந்து வெளிப்படுகிற தத்துவங்களின் சிறப்பியல்புகளை ஒவ்வொன்றாகச் சிந்திப்போம்:

நாதம்; குவிபிரணவமும், விரிபிரணவமும்: (சமட்டி, வியட்டி பிரணவங்கள்) இறை ஆணையை ஏற்றுச் சிவசத்தி, மாயையைக் கலக்கியபோது, சுத்தமாயையிலிருந்து முதலில் தோன்றியது நாதம் எனக் கண்டோம். அஃதே ஓம் என்ற குவிபிரணவ ஒலியாகும். அதனைப் பரஒலி என்றும் பரநாதம் என்றும், தாரக மந்திரம் என்றும். சமட்டிப் பிரணவம் என்றும் அருளாளர் போற்றிப் பரவுவர். வான வெளியில் மட்டுமன்றி, அவ் ஒலி நம் மனித உடலினுள்ளும் எழுப்பப் பெறுகிறது. அத்தகைய அரிய பேற்றினைப் பெற்ற இடம் எது எனில், நம் முன்தலைப் பகுதியில் உள்ள அறிவுத் தானமாகிய பெருமூளையின் வலது கூறு ஆகும்.

---

2 அருள் நந்திசிவம் - சிவஞான சித்தியார் 68

3 மேற்படி 86

ஒலியிலிருந்து ஒளியும், இடியிலிருந்து மின்னலும் தோன்றுவது போல, நாதத்திலிருந்து விந்துதத்துவம் விரிந்தும் விரைந்தும் வெளிப்படுகிறது. ஓம் என்ற குவிபிரணவம் விரிந்து, அஉம் என்ற விரி பிரணவமாகிறது. அது நமது புருவ நடுவில் தொடங்கி, உச்சித்தலை, பிடரி, முதுகுத் தண்டு வழியாக மூலாதாரத்தில் எதிரொலிக்கிறது. அப்போது பிரணவ வடிவினராக மூத்த பிள்ளையாரும் மூலாதாரத்தில் எழுந்தருளுகிறார்.

ஒலிஅலை ஒருகல் தொலைவு கடப்பதற்குள், ஒளி அலை ஒரு நூறாயிரம் கல்தொலைவு கடக்கின்ற ஆற்றல் உடையது என்பதில் சைவ சித்தாந்தக் கட்டளைகளும், பூதத்துவ அறிவியலும (Physics) ஒருமித்த கருத்து உடையன. நாதத்தின் தலைவன் சிவபெருமான்; விந்துவை இயக்குபவள் சிவசத்தி. ''நமச்சிவாய வாழ்க, நாதன் தாள் வாழ்க!...'' வேகம் கெடுத்தாண்ட வேந்தன் அடிவெல்க!...'' பையச்சென்று பற்றறுப்பானை...'' என்பன போன்ற தேவாரத் திருவாசகத் தொடர்கள் நாதத் தலைவனாகிய சிவபெருமானது நிதானமான வேகத்தையும். 'தோடுடைய செவியன்', 'வேயுறு தோளிபங்கன்', 'போகமார்த்த பூன்முலையாள்',

'தன்னிற்பிரிவிலா எம்கோமான் அன்பர்க்கு
முன்னிஅவள் நமக்கு முன்சுரக்கும் இன் அருளே'

முதலிய தேவாரத் திருவாசகத் தொடர்கள் அம்மையின் விரைந்த செயல்பாட்டு ஆற்றலையும் வெளிப்படுத்துகின்றன.

இனி, விந்துவிலிருந்து தோன்றுவன காண்போம்.

1. அ) வன்னம், பதம், மந்திரம் என்ற சொல் அத்துவா-3
   ஆ) தத்துவம், புவனம், கலை என்ற பொருள் அத்துவா-3
2. சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி என்ற வாக்குகள்-4
3. நமஹ, ஸ்வதா, ஸ்வாகா, பட், ஹூம்பட், வஷட், வௌஷட் என்ற சப்தகோடி மஹா மந்திரங்கள்—7

4. வேத, ஆகம, புராண, இதிகாசங்கள்
5. தவ நெறியாளர்க்கான சாலோகம், சாமீபம் சாரூபம் என்ற பத முத்திகள்.

இவற்றுள், முதலாவதாகிய ஆறு அத்துவாக்களும் சிவபெருமானின் வடிவத் தோற்றத்தைப் பெறுகின்றன.

இவ்வாறு, மாயையிலிருந்து தத்துவங்கள் விரிந்தன. அவை அகக் கருவிகள் 36 ஆகவும் புறக்கருவிகள் 60 ஆகவும் ஆயின

அணுமுதல் அண்டபேரண்டம் வரை எல்லாப் பொருள் களுமே மாயையின் 36 தத்துவங்களின் பல்வேறு சேர்க்கையால் உருவாயினவே. அணு என்பது கண்ணுக்குப் புலனாகாத மிக மிகச் சிறிய பொருள். அண்ட பேரண்டம் என்பது கண்களுக் குள் அடங்காத மிகப் பெரியதொரு பொருள். இவை அனைத் திலும் இறைவன் கலந்திருக்கிறார்.

"ஒன்றும் நீ அல்லை, அன்றி ஒன்று இல்லை
யார் உன்னை அறியகிற்பாரே"
— என்பது மணிவாசகர் வாக்கு[1]

அணுமுதல் அண்ட பேரண்டம் வரையுள்ள அனைத்தும் பிரபஞ்சம் (Universe) என்ற சொல்லால் குறிக்கப்பெறும். நமது மனித உடம்பும் ஒரு குட்டிப் பிரபஞ்சமே (Mini Universe) சிவ பெருமான், மாயையிலிருந்து தோற்றுவித்த இப்பிரபஞ்சத்தைப் பிரதம மகா சிருட்டி (ஊழியின் முதல் தோற்றம்) எனச் சாத்திரங்கள் கூறும்.

மாப்பேருருவும், மானிட உடம்பும்:

மாப்பேருருவம்: இப்பெரிய பிரபஞ்சமே சிவபெருமானது மாகாயம் (விராட் புருட வடிவம்) எனச் சிறப்பித்துப் பேசப் பெறுகிறது. உலகினை அவன் தன் உருவிலே தோற்றி ஒடுக்குகிறான் என்பது இதன் பொருள்.

'மாகாயம் பெரிய(து)ஒரு மான்உரிதோல் உடைஆடை
ஏகாய(ப்) இட்(டு)உகந்த எரிஆடி உறையு(ம்) இடம்"[2]

---

1 திருவாசகம். கோயிற்பதிகம்-7
2 திருஞான சம்பந்தர் தேவாரம், புள்ளிருக்குவேளூர்

''உலகினை இறந்து நின்றது[1]
அரன்உரு என்பது ஓரார்;
உலகு அவன் உருவில்[2] தோன்றி
ஒடுங்கிடும் என்றும் ஓரார்;
உலகினுக்கு உயிரும்[3] ஆகி
உலகும் ஆய்[4] நின்றது ஓரார்
உலகினில் ஒருவன் என்பர் —
உருவினை உணரார் எல்லாம்''[3]

விராட் புருடனது வடிவம் எத்துணை பெரியது, பெருமை உடையது என்பதைத் திருவாதவூரர் வாய்மொழியாகக் கேட்போம்.

'பாதாள(ம்) ஏழினும்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியு(ம்) எல்லாப் பொருள் முடிவே
பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்...''[1]

பாடலின் கருத்து: ''பாதாள உலகம் ஏழினுக்கும் கீழாகச், சொல்லுக்கு அடங்காத நிலையில், அவரது திருஅடித் தாமரை உளளது. மலர்ப்போதினை மாலையாக அணிந்த அவருடைய திருமுடியோ எனில், எல்லாப் பொருள்களுக்கும் மேலான மிக உயர்ந்த நிலையில் உள்ளது. அவர், உமையைத் தன் இடப்பாகத்தில் அரை உடம்பாகக் கொண்ட, ஒரே ஒரு திரு மேனி மட்டுமே உடையவரல்லர். சிவசத்தியையே தனக்கு முழு உடம்பாகக் கொண்டதோடு, எண்ணற்ற வேறுபல திருமேனித் தோற்றங்களையும், உடையவர் அவர் என்பது குறிப்பு)

நாம் வாழும் நில உலகமும் அதனைச் சூழ்ந்துள்ள கடல்களும் மலைகளும், வானும், சூரிய சந்திரர்களும், பிறவும் சிவபெருமானது விராட்புருட வடிவத்தின் சிறுசிறு அங்கங்களேயாம்.

தில்லைச் சிற்றம்பலமே விராட்புருடனுக்கு இருதயத் தானம் எனச் சைவநூல்கள் சிறப்பித்துக் கூறும். நாம் உறங்கும்போது,

3 அருள்நந்திசிவம். சிவஞானசித்தியார் (68)
3-1 விஸ்வ அதீதன், 3-2 விஸ்வரூபன்
3-3 விஸ்வ அந்தர்யாமி 3-4 விஸ்வகாரணன்

1 திருவாசகம் - திருவெம்பாவை - 10.

உடம்பின்கண் இருதயத்தில்தான் தத்துவங்கள் பலவும் ஒடுங்கி, விழிப்பில் தத்தம் இடங்களை அடைகின்றன. அதே போன்று இப்பூவுலகிலுள்ள அனைத்துத் தல மூர்த்தங்களும் இரவுக் காலத்தில், தில்லைச் சிற்றம்பலத்தில் சேர்ந்து, வைகறையில் தத்தம் இடம் அடைகின்றன என்பது சாத்திரங்கள் கூறும் உண்மை.

உலகில் உள்ள ஏராளமான மலைகளே, விராட் புருடனது எலும்புகள். அவற்றுள் தலையிலிருந்து இடுப்பு வரை நடு நாயகமாகத் திகழ்வது மேருமலை. நிலத்திலும் கடலிலும் ஆகாயத்திலும் ஓடுகின்ற ஆறுகளே, விராட் புருடனின் குருதி நாளங்கள். விராட் புருடனது சிரசு, வானளாவி நிற்பது. அங்கு ஓடுகிற ஆறுக்கு ஆகாயகங்கை என்பது பெயர். வானத்துப் பிறை நிலவும் அவரது தலையில் அழகியதோர் அணியாக ஒளி வீசிக் கொண்டிருக்கிறது. உலகில் உள்ள காடுகளே அவரது நாடி நரம்புகள். அவரது நீண்ட அழகிய சடை, மேன்மேலும் வளரக்கூடியது.

''நீடவல்ல வார்சடையான் மேய நெடுங்களம்''[2] எனத் திருஞானசம்பந்தர் இறைவனது வார்சடையை வாழ்த்துவார். இவ்வாறு எழிலார்ந்த வடிவினராய், அண்டவெளியில் ஆனந்தத் திருநடனம் புரியும் சிவபெருமான், நமது பிண்டத்துள் எவ்வாறெல்லாம் தன் திருஉருவப் பொலிவினைக் காட்டி, நம்மை ஆட்கொண்டு அருளுகிறார் என்பதை இனிக் காண்போம்.

மூலாதார விநாயகர்: எந்த ஒன்றையும் தொடங்கும் போது, முதற்கண் விநாயகரைச் சிந்திப்பது சைவ மரபு. அதற்கேற்ப, முதலில் மூலாதார விநாயகரை நினைவு கூர்வோம்.

''நற்குஞ்சரக் கன்று நண்ணில், கலைஞானம்
கற்கும் சரக்கு அன்று காண்''—1

என்பது கொற்றவன்குடி உமாபதி சிவனார் திருவாக்கு. ''ஆனைமுகப்பிள்ளை அருள் புரிவாராயின், நாம் அனைத்துக்

---

2 திருஞான சம்பந்தர் தேவாரம் 1

சலைகளையும் முயன்று கற்க வேண்டியதில்லை. அவராலேயே அவை பெரிதும் உள்ளுணர்வாக நம் சிந்தையுள் தெளிவுறுத்தப் பெறும்'' என்பது இக்காப்புச் செய்யுளின் திரண்ட கருத்து. (திருநாரையூர்ப் பொல்லாப் பிள்ளையார், தன்னையே நம்பி யிருந்த நம்பியாண்டார் நம்பிக்கு அருள் பாலித்த வரலாற்றினை இதற்குச் சான்றாகக் கூறலாம்)

தோற்றமும், நிலைக்களனும்: மாயையின் முதல் தத்துவம் நாதம் அதற்குத் தலைவராகச் சிவபெருமான் இருந்து ஆணையிடுகிறார், அவரது ஆணைப்படி நாதத்திலிருந்து தோன்றுகிற விந்து தத்துவத்திற்குத் தலைமை ஏற்கிறாள், அவரது சித்சத்தி.

நாதத்தின் வெளிப்பாடு **ஓம்** என்ற பிரணவ ஒலி. குவிந்து சமட்டியாக செல்லுவது இவ்வொலி. இது விந்து தத்துவத்தில் **அஉம்** என வியட்டி பிரணவமாக விரிகிறது. குவிந்து விரியும் இவ் ஒலி ஒரு யானையின் துதிக்கையைப் போன்றது.

சிவனும் **சத்தியும்** முறையே நாததத்துவத்தையும் விந்து தத்துவத்தையும் ஆனைவடிவிலே பொருந்தி நின்று, ஓங்காரப் பிரணவங்களை உவந்து நோக்குகின்றனர். அதன் பயனாகச் சிவத்தின் மூத்த பிள்ளையாக ஆனைமுகப் பிள்ளையார் தோன்றுகிறார், நமது சிரசினுள் இருக்கும் பெருமூளை இரண்டு கூறுகளாக அமைந்த ஒரே பொருள் வலது கூறு சிவன். இடது கூறு சத்தி. நாம் விநாயகரை நினைந்து இரு கைமுட்டிகளாலும், இரு கடைப் புருவங்களின் அரு ல் குட்டிக் கொள்ளும்போது, வலது இடது மூளைக்கூறுகளில் அதிர்வு அலை தோன்றி, ஓங்காரவடிவில் மூளை முதுகுத் தண்டு நரம்புகளின் வழியாக அடிவயிற்றிற்கும் கீழே உள்ள மூலாதாரத்தை அடைகிறது. முழுமுதற்பொருளின் மூத்தபிள்ளை இவ்வாறு நம் உடம்பினுள் தோன்றுகிறார்.

விநாயகரது நிலைக்களன்: உயிர்களாகிய நாம் இன்ப துனபங்களை அவரவர் வினைக்கு ஏற்ப உலகியலில் நுகர்ந்து கழித்தல் வேண்டும் என்பது நியதி, வினைகளும், மலங்களும் ஒடுங்கிய நிலையில், உயிரோட்டம் கீழ் நிலையிலிருந்து விடுபட்டு

மேலான இறைவன் திருவடி இன்பத்தில் நிலைபெற வேண்டும் என்பது திருவருள் குறிப்பு.

இதற்கு உறுதுணையாக இருத்தற் பொருட்டுச், சிவபெருமானின் மூத்த பிள்ளையாராகிய விநாயகர், ஓங்கார வடிவத்துடன், நமது உடம்பின் கீழ்நிலை ஆதாரமாகிய, எருவாய்க்கும் கருவாய்க்கும் இடைப்பட்ட மூலாதாரத்தைத் தனக்கு நிலைக்களனாகக் கொள்ளுகிறார்.

விக்கினங்கள் என்றால் இடர்ப்பாடுகள் என்பது பொருள். தன்னை நினைந்து காரியங்களைத் தொடங்குபவர்களுக்கு, இடர்களை எல்லாம் நீக்கிக் காரிய சித்தி செய்வதும், தன்னைப் புறக்கணித்து முரண்பட்டாருக்கு இடர்ப்பாடுகளைக் கொடுப்பதும் அவரது இயல்பு. இவ்வாறு விக்கினங்களை ஆக்கியும் போக்கியும் அருள் புரிதலால், அவருக்கு விக்கினேஸ்வரன் என்று பெயர் வழங்குகிறது.

மூலாதாரத்தில் வல்லபை சத்தியோடு ஓங்கார வடிவில் வீற்றிருந்து. வேண்டியன அருளும் அவருக்கு மூலாதார விநாயகர், வல்லபை விநாயகர், குண்டலினிப் பிள்ளையார், ஓங்காரப் பிள்ளையார், கற்பகமூர்த்தி முதலிய பல பெயர்கள் உள்ளன.

ஆதிசத்தி: சிவபெருமான் முற்றறிவினர்; இயல்பாகவே மலமாசு நீங்கியவர். ஆனால் உயிர்களாகிய நாமோ சிற்றறிவினர். மேலும், மலக்கட்டின் காரணமாக, இயல்பான அச்சிறிய அறிவாற்றலும் முடங்கப் பெற்ற கீழோர், ஆதலால் சுத்த மாயையில் நின்று தொழில்படும் சிவபெருமானுக்கும், பிரகிருதி மாயையில் பெரிதும் உழலும் நமக்கும் இடையில் நின்று, இருவரையும் இணைக்கும் ஓர்இடைநிலை ஆற்றல் வேண்டியதாகிறது.

சிவபெருமானது ஆற்றலாகிய சிவசத்தியே அத்தகைய இணைப்பு ஆற்றலாகத் தொழிற்படுகிறாள். இடியிலிருந்தே மின்னல் தோன்றினாலும், மிகுதியான விரைவுடைய மின்னலே முதலில் நமக்குப் புலனாகிறது, அதேபோல், சிவத்திலிருந்தே சத்திவெளிப்பட்டாலும், சத்தியின் மிகுந்த விரைவு காரணமாக

அவளே முதலில் வெளிப்படுகிறாள். சிவசத்தி அளப்பரிய ஆற்றல் உடையவள். அவளது முழு ஆற்றலையும் உலகத்து உயிரினத்தால் எதிர் கொள்ள முடியாது.

எடுத்துக்காட்டாக, 33,000 மின் அழுத்தத்தில் உற்பத்தி யாகும் மின் ஆற்றல், அதே அழுத்தத்துடன் நமது வீடுகளுக்குக் கொண்டுவரப் படுவதில்லை. மாறாக, அப்பேராற்றலைச் சிறிது சிறிதாகக் குறைத்து. 230 - என்ற மின்அழுத்த அளவில் வீடு களுக்குக் கொணர்ந்து பயன்படுத்துகிறோம் அன்றோ? அதே போன்று சிவபெருமானும் நமது நலன் கருதித் தனது பராசத்தி யின் அளப்பரிய ஆற்றலைப் படிப்படியாகக் குறைத்து, எளி வந்த ஆற்றலாக வருமாறு அருள் புரிகிறார்.

சிவசத்தியின் ஆயிரத்தில் ஒரு கூறாகிய முதல்வெளிப் பாட்டிற்கு ஆதிசத்தி என்பது பெயர். முதல் வெளிப்பாடு, ஆதலால் **ஆதிசத்தி** என்றும், உயிர்களாகிய நம் கண்களுக்குப் புலனாகாமல் மறைந்திருந்து தொழிலாற்றுவதால் **திரோதாயி** என்றும், அவளுக்குப் பெயர்கள் ஆயின.

ஆதிசத்தியின் நிலைக்களன்: நமது உடம்பில் ஆதிசத்தி தொழிற்படும் இடம், நம் பின்தலைப் பிடரியிலுள்ள **சிறுமூளைப் பகுதியாகும்.** இது எல்லா மனிதர்களுக்குமே பொதுவான ஒரு நிலை. நமது சிறுமூளைப் பகுதியை நோக்கினால், அங்கு அறிவு நரம்புகளும் செயல் நரம்புகளுமாகக் (Sensory Nerves & Motor Nerves) கோடானுகோடி நரம்புகள் பின்னிப் பிணைந்து ஒரு பெரிய காடுபோல் மண்டிக் கிடக்கின்றன. சிவபெருமானது அருள் ஆற்றலாகிய சிவசத்தி நமது பின்தலையில், சுத்தமாயை அசுத்த மாயை என்ற இரண்டுக்கும் **இடையில்** (விந்து மாயைக் கும் மான்மாயைக்கும் இடையில்) மோகினி என்ற பெயரோடு சுத்தாசுத்த மாயையில் நின்று தொழிற்படுகிறாள். அதனால் தான் 'பெண்புத்தி பின்புத்தி' 'இடையன் புத்தி பிடரியிலே' என்ற வழக்கு மொழிகள் எழுந்தன. அவ்வாறன்றித் தாய்க் குலத்தின் அறிவு, தரத்தில் குறைந்தது என்று பொருள் கொள்ளுதல் தக்கதன்று.

ஆதிசக்தியின் கருணை: உயிர்களாகிய நமது ஊழ்வினைக்கு ஏற்ப, ஆதிசக்தி, நமது அறிவு நரம்புகளையும் செயல் நரம்பு களையும், மனம் முதலியவற்றையும் உலக முகமாகக் கீழ்நோக்கி இயக்குகிறாள். இன்ப துன்பச் சுழற்சியில் நம்மை ஆட்படுத்து கிறாள். எனவே சித்தாந்திகள் அவளைப் பாசங்களுள் ஒன்றாகவும் வைத்து எண்ணுவர். அவள், நமது ஊழ்வினைப் பயனாகிய 'ஊனப் பாலை' உரிய நேரத்தில் நமக்கு ஊட்டு கிறாள்: வினைக்கட்டின் சிறுமையை நமக்கு உணர்த்துகிறாள் அறியாமை, அகங்காரம் முதலிய ஆணவக்கேடுகளை அவ்வப் போது நம்மிலிருந்து களைந்து, நமது அறிவினைத் தெளிவிக் கிறாள். இஃதும் அவளது கருணையே ஆகும். இதனை மறக்கருணை என்பர்.

நமக்கு வினைகள் முழுமையாகக் கழிந்து, ஆணவ மலமும் ஒடுங்கிய காலத்தில், அதுகாறும் மறைப்பு ஆற்றலாயிருந்து நம்மை ஊழ்வினை வழிச் செலுத்திய அவள், தானே அருளாற்ற லாகி, நம்மை உலக பந்தமாகிய கீழ் நிலைகளிலிருந்து விடு வித்துச், சிவசிந்தனையில் செலுத்திச், சிவன் அருள் என்ற 'ஞானப் பாலை' ஊட்டிச் சிவபெருமானது திருவடிப் பேரின் பத்துக்கு ஆற்றுப் படுத்துகிறாள். இஃது அவளது அறக் கருணை.

இவ்வாறு உயிர்க் குழந்தைகளாகிய நமது மலமாசுகளைக் கழுவித் தூய்மை செய்து, தந்தையாகிய சிவத்திடம் சேர்ப்பிப் பவள், ஆதிசத்தியே. ஆதிசத்தியின் ஆயிரத்தில் ஒரு கூறு, இச்சாசத்தியாகும். இச்சா சத்தியின் ஆயிரத்தில் ஒரு கூறு ஞானசத்தியாகும். ஞானசத்தியின் ஆயிரத்தில் ஒரு கூறு கிரியா சத்தியாகும்.[1]

மின்விளக்கு, மின்விசிறி, மின்உலை, மின்ஒலிபெருக்கி என்ற வாறு பெயராலும், தொழிலாலும் மின் சாதனங்கள் வேறு பட்டு நின்றாலும், அவற்றில் பயனுறும் மின் ஆற்றல் ஒன்றே அன்றோ? அதே போலப், பராசத்தியிலிருந்து வெளிப்படுகிற பல சத்திகளும், பெயராலும் தொழிலாலும் வேறுபட்டிருப்பது

1 வாலைபானந்த சுவாமிகள் – சித்தாந்தப்பட விளக்கம் (1917) பக்-14.

போல் தோன்றினாலும், பொருளால் ஒன்றே என்பதை நாம் அறிதல் வேண்டும்.

மும் மூர்த்திகள்: படைத்தல் கடவுளுக்குப் பிரமன் என்பது பெயர்; காத்தல் கடவுளுக்கு விட்டுணு என்பது பெயர். அழிக்கும் கடவுள் உருத்திரன் என அழைக்கப்படுகிறார்.

காரண பிரமா: அண்டத் தொகுப்பு என்பது ஏராளமான அண்டங்களை உள்ளடக்கிய மிகப்பெரிய ஒன்று. இவ்வண்டங்கள் அனைத்தையும், பிரதம மகாசிருட்டியில் முதன்முதலாகப் படைத்தவர், சிவபெருமான் ஆவர். அவரே அதற்குப் பிரமா; அதாவது படைப்புக்கடவுள் (சிருஷ்டி கர்த்தா). அவரைச் சிவபிரமா என்றும் காரண பிரமா என்றும் அழைப்பர்.

காரண விட்டுணு: எக்காலத்தும் அழியாது நிலைத்திருக்கும் உயிர்களையும், பிரதம மகா சிருட்டியில் தோற்றுவிக்கப்பட்ட உலகப் பொருள்களையும், எக்காலத்தும் காத்தருளுபவர் சிவபெருமானே. அவரே அப்பொழுது விட்டுணு, அதாவது காத்தற்கடவுள் (திதிகர்த்தா) அவரைச் சிவவிட்டுணு என்றும், காரணவிட்டுணு என்றும் அழைப்பர்.

காரண உருத்திரர்: சிவபிரமா, சிவவிட்டுணு இவர்களைப் போன்றே, சிவ உருத்திரராகச் சிவபெருமானே மாப்பேரூழியில் பேரண்ட ஒடுக்கத்துக்குக் காரணராவார். அவரே சம்மார கர்த்தா. அவரைக் காரண உருத்திரர் என்றும் அழைப்பர். முத்தொழிலுக்கும் மூலகாரணர் ஆதல்பற்றிச் சிவபெருமான் மேற்கொள்ளும் மூர்த்தங்களுக்குக் காரணக் கடவுளர் (காரணேஸ்வரர்) என்பது பெயர். சிவபெருமானுக்கு வழங்கும் ஆயிர மாயிரம் திருநாமங்களுள் சம்பு என்பதும் ஒன்று. ஆதலால் காரணக் கடவுளரைச் 'சம்பு பக்கம்' என அழைப்பது சைவ மரபு.

காரிய பிரமா: என்பவர் யார்? சிவபெருமானால் உடல் முதலியன கொண்டு உருக்கொடுக்கப் பட்டவர்கள் நம் போன்ற உயிர்கள், இந்த உயிர் இனத்துள், சிவபிரமனை நினைந்து

த்வம் செய்து, தகுதியால் உயர்ந்த, ஆன்மாக்கள் அவ்வரைப் பலவாறாக வேண்டி நின்று, ஓரோர் ஓர் அண்டத்தைப் படைப்பதற்கான வரத்தைப் பெறுகின்றனர். உயிரினத்தைச் சேர்ந்த அவர்கள், ஒவ்வோர் உலகிலும் வாழவேண்டிய நம் போன்ற உயிர்களின் வாழ்வினைக்கு ஏற்ப, உடம்புகளையும், பிறவற்றையும் சிவபெருமானது ஆணைப்படி, ஒரு கால எல்லை வரை படைக்கிறார்கள்.

சிவபெருமான் பிரம வடிவில் இருக்கும் திருக்கோலத்தை மனம், மொழி, மெய்களால் இடையறாது சிந்தித்துக் கடுந்தவம் இயற்றி, அதனால் உயர்ந்த ஓர் உயிர், அவ்வாறு தான் ஒன்றிய மனத்துடன் யோக நெறியில் நின்று சிந்தித்த, அதே பிரம உருவத்தை (சாருபத்தை)ப் பெற்றுக், காரிய பிரமாவாகத் தொழிற்படுகிறது.

காரிய விட்டுணு: சிவபெருமானால் உருவாக்கப்பட்ட நம் போன்ற உயிர் இனத்துள், தவவலியால் உயர்ந்த தக்கதோர் ஆன்மா, ஒன்றிய மனத்துடன் இடையறாது சிவவிட்டுணு வடிவத்தையே சிந்தித்துக் கடுந்தவம் இயற்றி, அதே விட்டுணு வடிவத்தையும் (சாருபத்தையும்) ஓரோ ஓர் அண்டத்தை ஒரு குறிப்பிட்ட காலம் வரை, சிவ ஆணைப்படி காக்கின்ற தொழிலையும் சிவபெருமானிடமிருந்து வரமாகப் பெறுகிறது. சிவ விட்டுணுவுக்குக் காரண விட்டுணு என்றாற் போல, உயிரின விட்டுணுவுக்குக் காரியவிட்டுணு என்று பெயர்.

காரிய உருத்திரர்: காரிய பிரமாக்களும், காரிய விட்டுணுக்களும் நம போன்ற சகலவர்க்கத்து உயிரினத்தைச் சேர்ந்தவர்கள் என்பது இதனால் அறியப்பெறும். அவர்கள் அனைவரும், ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்களாலும் கட்டுண்டவர்கள் ஆவர்.

ஆனால், காரிய உருத்திரரோ, ஆணவம், கன்மம் என்ற இரண்டு மலங்களால் மட்டுமே தொடக்குண்ட பிரளயாகலர் ஆவர். யோக நெறி நின்று சிவ உருத்திர உருவினையே

சிந்தித்து, உருத்திர சாருபத்தையும், தூல பிரபஞ்சத்தை ஒடுக்கு கின்ற அதிகாரத்தையும், சிவபெருமானிடமிருந்து வரமாகப் பெற்ற அவர்கள், நம் போன்ற சகல வர்க்கத்தாரினும் உயர்ந்த வர்கள் ஆவர்.

உயிர்கள் ஆணவத்தால் பந்திக்கப்பட்ட நிலையில், தம் இயல்பான சிற்றறிவு மேலும் முடங்கிவிட, அவை அணுத்தன்மை அடைவதால், உயிரினத்திலிருந்து உயர்பதவி அடைந்த கடவுளரை 'அணுபக்கப்' என அழைப்பது சைவமரபு.

''இவ்வாறு அண்டங்கள் தோறும், பிரம, விட்டுணு உருத்திரர்கள் பலராக உள்ளனர் என்ற உண்மையை,

''இறைமை இவ்வாறு பகுத்திடத் தகாதேல்
உனை ஒழிந்து யாண்டு முற்றுறுமோ?
முறைபெறும் அண்டந் தொறும் அயன் அரன்
மால் மூவரும் வேறு வேறாகிப்
பிறமுறுங் கற்பந் தொறும் நவநவமாய்ப்
பிறந்து நின்ஆணையில் அடங்கி,
உறைவரே, ஆதி அந்தமும் இன்றி
ஒழிவற நிறைந்த வான் பொருளே!''

என்றும் சிவதத்துவ விவேகம் 42-ஆவது செய்யுளாலும், பிறவாற்றானும் அறிக.''[1]

மூவர்க்கு இடம்: நமது மனித உடம்பில், சிவபெருமான் அமர்ந்து, தொழிலியற்றும் இடங்களை 'ஆதாரங்கள்' என்பர். அத்தகைய ஆதாரங்கள் ஆறு. அவை, மூலாதாரம், சுவா திட்டானம், மணிபூரகம், அனாகதம், விசுத்தி, ஆக்ஞை என்பன. அவை அனைத்தும் மூளை முதுகுத் தண்டுகளால் ஆன மைய நரம்பு மண்டலத்தில் உள்ளன. ஆதாரங்கள் என்ற தால், அவை சிவபெருமானுக்கு ஆதாரமாயுள்ள இடங்கள் என்றோ, அவையில்லாமல் சிவபெருமான் தங்கி இருக்க முடியாது என்றோ எண்ணுவது அறியாமையே ஆகும்.

---

1 வாலையானந்த சுவாமிகள், சித்தாந்தப்பட விளக்கம் பக் 9, 10.

நின்வயத்தனாய்ச் சிவசத்தியையே தனக்கு உடம்பாகக் கொண்டு, அனைத்துப் பொருள்களுக்கும் ஆதாரமாய் இருப்பவர் சிவபெருமான். அவர் தங்கிநின்று தொழிற்படுவதற் கென்று, மாயா காரியத்தில் எவ்வித ஆதாரமும் அவருக்குத் தேவையில்லை. ஆயினும் அவர் நம்மீது கொண்ட கருணையின் காரணமாக மாயா காரியமாகிய நமது உடம்பில் ஒரோ ஓரிடத்தில், நமக்கு அருள்பாலிப்பதற்காகவே தங்குகிறார். அவ்விடங்கள் நமது ஆன்ம முன்னேற்றத்திற்கு ஆதாரமாக இருத்தலால், அவற்றை (நமக்கு) ஆதாரங்கள் என்றனர்.

ஒவ்வோர் ஆதாரத்திலும் சிவபெருமான் வெவ்வேறாகிய எளிவந்த தோற்றத்தினராய், அந்த அந்த மூர்த்தத்துக்கு உரிய சத்திகளோடு அமர்ந்திருந்து, ஆன்மாக்களை இயக்குகிறார். அவற்றுள் மூலாதாரத்தை விநாயகர் இயக்குகிறார் என முன்னரே கண்டோம். ஏனைய ஆதாரங்களையும் அவற்றை இயக்கும் அதி தேவதைகளாகிய சிவமூர்த்தங்களையும் ஈண்டுக் காண்போம்.

1	2	3	4
ஆக்ஞை	புருவநடு	Pituitary	சதாசிவம்
விசுத்தி	கண்டம்	Cervical	மகேஸ்வரன்
அனாகதம்	நெஞ்சு	Thorax	உருத்திரன்
மணிபூரகம்	நாபி	Lumbar	விட்டுணு
சுவாதிட்டானம்	அடிவயிறு	Saccral	பிரமன்
மூல · தாரம்	கருவாய்க்கும் எருவாய்க்கும் இடைப்பட்ட பகுதியில்	Coccyx	விநாயகர்

காரணக் கடவுளரின் இருப்பிடம் பற்றி இதுவரை கண்டனவ தோற்ற நிலைக்குப் பொருந்தி வருவன. இனி ஒடுக்க நிலையில், அவர்களது இருப்பிடங்கள் உயர்ந்து நிற்கும் சீர்மையினைச் சிந்திப்போம்.

தோற்றநிலை என்பது என்ன? முன் செய்த வினைகள் முதிர்ந்து, அதனதன் பயனைத் தரத் தொடங்குவதும், ஊழ்

வினை நுகர்ச்சிக்காக, உயிரினம் உலக வாழ்வினைத் தொடங்கு வதும் தோற்ற நிலையாம். இதனைப் 'பாலது ஆணை' என்றனர் பண்டைத் தமிழரும்.[1]

ஒடுக்க நிலை என்பது என்ன? மும்மலங்களின் ஆற்றல்கள் ஒடுங்குவதும், ஆன்மா முத்திப் பேற்றிற்காகச் சிவபெருமான் திருவடியில் ஒடுங்க முற்படுவதும் ஒடுக்கநிலை.

''ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே
அடக்கு வித்தால் ஆரொருவர் அடங்காதாரே''[2]

என்ற அப்பர் பெருமான் வாக்கிற்கு ஏற்ப, அனைத்தும் சிவச் செயல் எனக் கொண்டமையால், தோன்றுநிலை, ஒடுங்குநிலை எனத் தன் வினையில் கூறாது. தோற்றநிலை, ஒடுக்கநிலை எனப் பிறர்வினையாகக் குறித்தனர் ஆன்றோர்.

உயிர்களுக்கு அருளுவதில், சிவசத்தியே முதலில் ஓர் உரு வினைக் கொள்ளுகிறாள் என்றும், அவளது உருவிற்கு ஏற்ற தொரு வடிவத்தைச் சிவன் மேற்கொள்ளுகிறான் என்றும் ஞான நூல்கள் பகரும் 'பிடியதன் உரு உமை கொ(ள்)ள, மிகு கரியது வடிகொ(ண்)டு, ஆனைமுகப் பிள்ளையை அருளினார் வலிவலத்து இறைவன்' என வாழ்த்துகிறார் ஞானசம்பந்தர்.

சிவசத்தியின் எளிவந்த தோற்றங்களே மலைமகள், திருமகள், கலைமகள் எனவும், இவர்களை முறையே இரௌத் திரி, வைணவி, பிராமி என வடநூலார் அழைப்பர் எனவும் முன்னர்க் கண்டோம்.

பிரமனின் சத்தியாகிய பிராமியை அதிகாலை அனுட்டானத் தின்போது நம் இதயத் தானத்திலும், விட்டுணுவின் சத்தியாகிய வைணவியை நண்பகலில் புருவ நடுவிலும், உருத்திரனின்

1 தொல்காப்பியம் - களவியல் 2

2 அப்பர் தேவாரம், திருத்தாண்டகம்.

சத்தியாகிய இரௌத்திரியை அந்திப் பொழுதில் உச்சித் தலையிலும் சிந்திக்குமாறு சைவ அனுட்டான விதி[1] அறிவுறுத்து கிறது.

இவற்றிலிருந்து, சிவபெருமான் பிராமிக்கு ஏற்ற பிரமனாக நம் இதயத் தானத்தை இடமாகக் கொள்ளுகிறான் என்பதும், வைணவிக்கு ஏற்ற விட்டுணுவாகச் சிரசினை இடமாகக் கொள்ளுகிறான் என்பதும், இரௌத்திரிக்கு ஏற்ற உருத் திரனாகத் தலை உச்சியில் தங்குகிறான் என்பதும் பெறப்படும். இஃது ஒடுக்க நிலை.

சிரசினுள் நடுமூளை தொடங்கிப் புருவ நடுவரை நீண்டு கிடக்கும் மூளை இணைப்பான் (Corpus Collosum) மூன்றாம் பிறையினை ஒத்த வடிவினது. அதனை விட்டுணுவின் இடமாகச் சிந்தித்தல் பொருந்தும். 'மாயோன் மேய காடுறை உலகம்' என்பது தொல்காப்பியம்[2]. 'கார்போல நரம்புகள் மண்டிக் கிடக்கும் நமது பின்தலைப் பிடரியில் திருவடி ஊன்றிப், புருவ நடுவினை நோக்கிப் பள்ளி கொண்டு, தனக்கு மேலேயுள்ள உருத்திரரை தியானித்து, யோக நித்திரையில் இருக்கும் விட்டுணுவின் திருக்கோலமும், அவனது திருமுடிக்கு அருகில் உள்ள திருமகளின் திருஉருவும் எண்ணி வணங்குவதற்கு உரியனவாம்.

காரணக் கடவுளருக்கு மட்டுமேயன்றிக் காரியதேவர்களாகிய மும்மூர்த்திகளுக்கும் நம் உடம்பில் தொழிலகங்கள் உள்ளன. அவ் இடங்களைப் பற்றிச் சிந்திப்போம்.

ஒருவர் அணிகிற சட்டைக்கு முன்பக்கப் பாதி, பின் பக்கப்பாதி என இரண்டு பகுதிகள் உள்ளன அன்றோ? அதேபோல நம் நெஞ்சு, வயிறு, அடிவயிறு உள்ளிட்ட உடற் பகுதியை முன் பக்கப் பாதி என்றும் பின்பக்கப் பாதி என்றும் இரண்டு கூறாக நோக்கிலால், பின்னாலுள்ள முதுகுப் பக்கத் துச் சுழுமுனை ஆதாரங்களில், (நரம்பு மண்டலத்தில்) காரணக்

1 சைவ அனுட்டான விதியும் விளக்கமும் - சிவஸ்ரீதத் புருஷ தேசிகர்

2 தொல்காப்பியம் - அகத்திணையியல். 5

கடவுளராகிய சிவபிரமா முதலியோர் வீற்றிருப்பர்; அவ் ஆதாரங்களுக்கு நேர் முன்னால் புனர் உற்பத்திக் கருவிகள் நிறைந்த அடிவயிற்றில் காரிய பிரமனும், இரைப்பை, குடல் உள்ளிட்ட நாபிக்கமலத்தில் காரிய விட்டுணுவும், நெஞ்சில் காரிய உருத்திரரும் அமர்ந்து, காரணேசுவரர்களை வணங்கிக் கொண்டும், தத்தம் தொழிலைச் செவ்விதே செய்து கொண்டும் இருப்பர்.

காரியக் கடவுளரின் இயல்புகள் : பிரமன் மிகுகாமி: படைப் புக் கடவுளாகிய பிரமனை மிகுகாமி என்றும், தான் சிவ ஆணைப்படி மண்ணிலிருந்து உருவாக்கிய நங்கை ஒருத்தி எழிலுருவினளாய்த் தோன்றினால், அவளையே புணர்ச்சிக் குறிப் பொடு நோக்குகிற கீழ்மை உணர்வினன் என்றும் ஞான நூல்கள் கூறுகின்றன. ஆயினும், உலகில் புனர் உற்பத்தி தொடர்ந்து நிகழ்வதற்கு, அவனுடைய இருப்பிடமும் காம வேட்கையும் துணை செய்கின்றன. ஆதலால், சிவபெருமானே அவனுக்கு அவ்வேட்கையை அருளினார் எனக.

ஆன்மாக்களுக்கு உயர்ந்த அறிவினை நல்குகிற சிவபெரு மானே, உயிர் நுகர்ந்து தொலைக்க வேண்டிய ஊழ்வினை களுக்கு ஏற்ப, அறியாமையையும் ஊட்டுகிறார். இதனை,

"மோடுடைய சமணர்க்கும் முடையுடைய
சாக்கியர்க்கும் மூடம் வைத்த
பீடுடைய புலியூர்ச் சிற்றம் பலத்(து)எம்
பெருமானைப் பெற்றாம் அன்றே"[1]

என்ற சுந்தரர் வாக்காலும் அறியலாம். இவ்வாறு, சிவபெரு மான் சந்நிதியில், அதாவது நம் அடிவயிற்றுக் கருவழியில் தங்கியிருந்து, மற்றோர் உயிருக்கான உடம்பினைச் சிவ ஆணைப் படி உருவாக்கிக் கொண்டிருக்கிறார் காரிய பிரமா.

காரிய விட்டுணு : ஒரு நாட்டின் மன்னன் தனது குடி மக்களைப் பலவகையாலும் பாதுகாத்து, இன்பமுடன் வாழ வகை செய்கிறான். தீயோரைத் தண்டிக்கிறான். நல்லோரை

---

1 சுந்தரர் தேவாரம் - 7 : 90 : 9

அரவணைத்துக் கொள்ளுகிறான். அதே போன்றுதான். காரிய விட்டுணுக்களும் தத்தம் பொறுப்பில் உள்ள உலகத்தில், உயிரினங்களின் நலனைப் பேணிக்காக்கின்றனர். சிவஞான வேட்கையை நம்பால் காப்பதற்காகச் சிவபெருமானே மணிபூரகம் என்ற நமது நாபிக்கு நேர் பின்னால் சுழுமுனைப் பகுதியில் (Lumbar) சிவவிட்டுணுவாக விளங்கி நிற்கிறார் எனக் கண்டோம். அவரது சந்நிதியில் அதாவது நம் நாபிக் கமலத்தில் நின்று, முன்னர் உருப்பெற்ற உடம்பினைச் சிவ ஆணைப்படி காத்துக் கொண்டு இருக்கிறார், காரிய விட்டுணு.

விட்டுணு அமுதுப் பிரியன்: காத்தற் கடவுளாகிய விட்டுணுவை அமுதுப் பிரியன் என்பது பொது வழக்கு. அறுசுவை உண்டியில் ஆர்வம் மிக்கவன் என்பது இதன் பொருள். நாம் உண்ணுகிற உணவு, இரைப்பையில் சேர்கிறது. அங்கு அது சீரணமாகி ஆற்றலாக மாறி, நமது உடல் நலத்தைக் காக்கப் பயனுறுகிறது. அமுதினை ஆற்றலாக மாற்றும் இரைப்பையே விட்டுணுவுக்கு இருப்பிடமாவதற்கும், விட்டுணு அமுதுப்பிரியன் என்பதற்கும் உலகிலுள்ள வைணவ ஆலயங்களில் சுவையான பற்பல நைவேத்திய பிரசாதங்கள் பெருமளவில் புழக்கத்தில் இருப்பதற்கும், ஓர் ஒற்றுமை இருப்பதை உணர்கிறோம்.

மால் விடை: அறக்கடவுளையே தனது விடை ஊர்தியாகக் கொண்டவர், சிவபெருமான். அவர் ஒரு சமயம் முப்புரம் எரிக்கப் புறப்பட்டபோது, திருமால் அவருக்கு விடை ஊர்தியாகப் பணி புரிந்தார் என்பது புராணம். எக்காலமும் ஊர்தியாக உள்ளது, அறவிடை, ஏனையது மால்விடை என்பது கருத்து.

''தடமதில்கள் அவை மூன்றும்
தழ(ல்) எரித்த அந்நாளில்
இடப மதாய்த் தாங்கினான்
திருமால் காண் சாழலோ''[1]

என்பது திருவாசகம்.

1 திருவாசகம் - திருச்சாழல் - 15

நமது உடல் அமைப்பிலும் இவ் உண்மை பொருந்தி வரக் காணலாம். இரைப்பையை ஓர் இடபமாகச் சிந்தித்தால், அதன் மேலுள்ள உதரவிதானம் என்ற பகுதி சிவபெருமானது ஆசனமாகும். அவ் ஆசனத்தின் மேல் உள்ள இருதயத்தின் நான்கு பகுதிகளும், சிவன், உமை, வலம்புரி விநாயகர், முருகன் என்று அமைவதைக் காணலாம்.

உருத்திரன் அபிடேகப் பிரியன்: நமது நெஞ்சுத் தானத்தில் இருதயத்தை இருப்பிடமாகக் கொண்டவர், உருத்திரன். இவர் அபிடேகப் பிரியர் என்பது சிவாகம சாத்திரங்கள் கூறுகிற உண்மை. ஒவ்வொரு நாளும் சிவாலயங்களில் சிவலிங்கத் திரு மேனிக்குப் பலமுறை அபிடேகம் சிறப்புற நடைபெறக் காணு கிறோம். அதேபோல், நமது உடம்பிலும், உடலின் பல பாகங் களிலுமிருந்து நாளங்கள் வழியாக வருகிற குருதி, சிவலிங்க வடி வினதாகிய நமது இருதயத்தில் இரவும் பகலும் எந்நேரமும் ஓய்வு ஒழிவின்றி இடையறாது அபிடேகித்துக் கொண்டிருக்கிறது என்பதை அறியலாம்.

காரணக் கடவுளரின் அருளிப்பாடு: நிலையற்றனவாகிய உடம்பு, உலகம் முதலியவற்றைப் படைத்தும், காத்தும், அழித் தும் முத்தொழில் செய்வோர் காரியக் கடவுளர் எனக் கண்டோம். உயிரோ பிறப்பும் இறப்பும் இல்லாதது; நிலையான அவ் உயிர், நிலையான பேரின்பத்தில் நிலைபெற்றிருக்க வேண்டு மானால், அதனிடத்துச் சிவஞானத் தெளிவு முதலில் தோற்று விக்கப்பெற வேண்டும்; தொடர்ந்து வளருமாறு செய்ய வேண்டும்; இறுதியில் இறைவன் திருவடியில் அவ் உயிர் ஒடுங்கு மாறு செய்தல் வேண்டும். இம்மூன்று தொழில்களும் காரணக் கடவுளராகிய சிவபிரமா, சிவ விட்டுணு, சிவ உருத்திரரால் எவ்வாறு நிகழ்த்தப் பெறுகின்றன என்று காண்போம்.

படைத்தல்: வேதம் ஓதி, ஓமத்தீ வளர்த்தலால், பிரமனுக்கு வேதியன் என்ற ஒரு பெயரும் உண்டு. நமது உடம்பில், அடி வயிறு ஓம வேள்வி நிகழ்த்துதற்குரிய இடமாகும். சாதாரண மனிதர்களுக்கு மூலாதாரத்தில் மூண்டு எழுகின்ற கனலே, முறை யான சிவ மூலமந்திர தியானத்தால் ஆற்றல் மிகுந்த சிவாக்

கினியாகி மேல்நோக்கி எழுகிறது. காரணக் கடவுளாகிய சிவபிரமனே சிவாக்கினி எழுவதற்கு உறுதுணை புரிகிறார்.

சுவாதிட்டானத்தில், ஆன்மாக்களுக்குச் சிவபிரமா சிவ ஞானப் பேரொளியைக் காட்டி அறிவு விளக்கம் தருகிறார். அப்போது அது சிவதாணுவாய், திருவண்ணாமலைத் தீபமாய் ஒளிவிட்டுப் பிரகாசிக்கிறது. இது காறும் அசுத்தமாயா உடம் பிலேயே உழன்று கொண்டிருந்த உயிர், சிவாக்கினியால் மாசுகள் களையப் பெற்று, மேல் நோக்கி எழுந்து, சுத்தமாயையிலிருந்து உடம்பினைப் பெறுவதற்கும், அங்கிருந்து மேலும் உயர்ந்து சிவசத்தியையே அருள் உடம்பாகக் கொள்ளுவதற்கும் (சத்திநி பாதம்) ஏதுக்கள், சிவ பிரமனால் சுவாதிட்டானத்தில் தோற்று விக்கப் பெறுகின்றன.

காத்தல் : இவ்வாறு சுவாதிட்டானத்தில் தோற்றுவிக்கப் பட்ட சிவஞான விளக்கம், மணிபூரகத்தில் உள்ள சிவவிட்டுணு வால் காக்கப் பெற்று மிகுதியும் வலிமை பெறுகிறது. அதன் காரணமாக விட்டுணுவைப் போன்றே யோக நிட்டைகூடிச் சிவ பரத்துவத்தை அழுந்தச் சிந்திக்கிறது, ஆன்மா. அதனால் சிவஞானத் தெளிவு பெறுகிறது.

ஒடுக்குதல்: ரௌத்திரம் என்ற வடசொல்லுக்கு முனிவு, சிலம் என்பன பொருள். ரௌத்திர மூர்த்திக்கு [ருத்ரன்] உருத்திரன் என்பது பெயர். தீயனவற்றை அழித்தல் (தீய ஆற்றலை ஒடுக்குதல்) அவனது செயல்.

உயிர்கள் உய்தியடைய வேண்டும் என்பதற்காக உடல், உலகம் முதலியவற்றைத் தந்து, வாழ்வு, அனுபவம், அறிவு முதலிய பல நல்ல சாதனங்களை எலலாம் அருளி, அவற்றின் துணை கொண்டு பேரின்பத்தை நாடுமாறு எவ்வளவுதான் உணர்த்தினாலும், நம்போன்ற உயிர்கள் முந்தைய ஆணவத் தையும் வினைச் செயலையும் விட்டு நீங்காததோடு, இடைக்கால நிவாரணமாக இறைவனால் அருளப்பெற்ற மாயா உடம்பினை யும் உலகப் பொருள்களையுமே நிலைத்த பேரின்பமாகக் கொண்டு, மயங்கி, பிறப்பிறப்பு அவலத்துள் அழுந்திக்கிடப் பதைக் கண்டு, உருத்திரன் முனிவுறுகிறான். இதனை

''எந்தம் பிறவியில் கோபம் மிகுந்து
முரசெறிந்து மாப்பெரும் கருணையின் முழங்கி''[1]

என்ற மணிவாசகர் திருவாக்காலும் அறியலாம். எனவே காரிய உருத்திரன் பேய்க்கணங்கள் சூழச் சுடலையாடியாய் நின்று, உடல் உலகம் முதலிய மாயா காரிய தத்துவங்களை மாயையினுள் ஒடுக்குகிறான்.

காரண உருத்திரனோ, முதுகாடு உறையும் முக்கண்ணனாய் நின்று, மாயை, கன்மம், ஆணவம் ஆகிய மும்மலங்களைத் தன் வலது திருவடிக்கீழ் அழுத்தி, அவற்றின் ஆற்றல்களை எல்லாம் ஒடுக்குகிறான். இவ் இருவகை ஒடுக்கமும் உயிர்களாகிய நமது உய்தி கருதியே நிகழ்த்தப் பெறுகின்றன.

இவ்வாறு மும்மலங்களை ஒடுக்கியதோடு, சிவபெருமானின் தொழில் முடிவுற்றதா? எனில், இல்லை; இதுகாறும் கூறிய மூன்றும் பாசநீக்கத்தின் பாற்பட்டன என்றும் மறைத்தல், அருளல் என்ற மேலும் இரண்டு தொழில்களைச் சிவபெருமான் உயிர்களின்பால் மேற்கொள்ளுகிறார் என்றும் சிவபெருமானின் ஐந்தொழில் பற்றிச் சிவாகமங்கள் விரித்து உரைக்கின்றன.

மறைத்தல்: இக்காலத்தில் அறுவை சிகிச்சை செய்யும் ஒரு மருத்துவர், நோயாளிக்கு மயக்க மருந்து கொடுத்துத்தானும் தனது உருவத்தை மறைத்துக் கொண்டு, அறுவை சிகிச்சையைத் தொடங்குகிறார். சிகிச்சை முடிந்ததும் தானும் வெளிப்படு கிறார். நோயாளியின் மயக்கத்தையும் தெளிவிக்கிறார் அன்றோ? அதே போன்று, கடல் நஞ்சினையே தம் கழுத்தினுள் மறைத்துத் திருநீலகண்டனாகிய சிவபெருமான், நம் கழுத்துப் பகுதியில் மறைந்திருந்து, உயிர்களாகிய நமக்கு ஊழ்வினைப் பயனை ஊட்டி, அவற்றை நாம் நுகர்ந்து கழிக்குமாறு செய் கிறார். இஃது அவரது மறைத்தல் தொழில் ஆகும். அப்போது அவருக்கு மகேசன் என்பது பெயர்.

---

1 திருவாசகம் - திருஅண்டப்பகுதி 73 - 74.

அருளல்: இறுதியில் எல்லா மலங்களும் ஒடுங்கிவிட, சிவ ஞானத் தெளிவுபெற்ற உயிர்களைத் தம் இடது திருவடிக் கீழ் ஏற்று, அவரே அருள் பாலிக்கிறார். இஃது அவரது அருளல் தொழில். அப்போது அவர் சதாசிவத் திருமேனியாக நம் தலையில் ஆணைத்தானத்தில், பெருமூளையின் இருகூறுகளுக்கு நடுவிலுள்ளதும், பிறைவடிவினதுமான வெண்ணிற மூளை இணைப்பானை இயக்கிச், சீவன் முத்தான்மாவுக்குப் பேரின்பம் நல்குகிறார்.

மொத்தத்தில், காரணக் கடவுளரும் காரியக் கடவுளரும் வேறு வேறு என்பதை நாம் தெளிவாக உணர்தல் வேண்டும். காரணக் கடவுள் என்பவர் ஒருவரே. அவர் சிவபெருமானே ஆவர். 'பிறவா யாக்கைப் பெரியோன்' எனச் சங்கத்தமிழ் இலக்கியங்களாலும் 'ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும் சோதி' என இடைக்கால இலக்கியங்களாலும் போற்றப் பெறுகிற அவரே, யாவர்க்கும் மூவர்க்கும் தலைவர். அவரை ''மூவண்ணல் தன் சந்நிதி முத்தொழில் செய்ய, வாளா மேவு அண்ணல்...'' என வாழ்த்துவார், பரஞ்சோதியார்.

''செத்துப் பிறக்கின்ற தெய்வங்கள் மணவாள!
செங்கிரை ஆடி அருளே!''

எனப் பண்ணிசைப்பார், குமரகுருபரர். திருவாசகம் பாடிய மணிவாசகரோ, முழுவதும்

படைப்போற் படைக்கும் பழையோன்; படைத்தவை
காப்போற் காக்கும் கடவுள்; கரப்பவை
கரப்போன்; கரப்பவை கருதாக்
கருத்துடைக் கடவுள்...''

எனச் சிவபெருமானின் முழுமுதற் தன்மையைப் போற்றி மகிழ்வார்.

ஆனால் காரியக் கடவுளரின் நிலையோ முற்றிலும் வேறானதாகும். காரியக்கடவுளர் எண்ணிக்கையால் பலராவர். நாம் வாழுகிற இவ் அண்டத்தைப் படைத்துக் காத்து ஒடுக்கும் பிரம விட்டுணு உருத்திரர்களைப் போன்றே, ஒவ்வோர்

அண்டத்துக்கும் வெவ்வேறாக எண்ணற்ற காரியக் கடவுளர் உள்ளனர்.

''நூறு கோடி பிரமர்கள் நொந்தினர்
ஆறு கோடி நாராயணர் அங்ஙனே
ஏறு கங்கை மணல்எண்ணில் இந்திரர்
ஈறு இலாதவன் ஈசன் ஒருவனே.''1

எனக் காரியக்கடவுளரது எண்ணிக்கை மிகுதியையும், நிலையாத் தன்மையையும் எடுத்தியம்புகிறார் அப்பர் அடிகள். (நொந்தினர் = அழிந்தனர்). காரியக் கடவுளர் முழுமுதற் பொருளாகிய சிவபெருமானின் ஓரோ ஓர் எளிவந்த தோற்றத்தையே இடையறாது வழிபட்டுச் சாரூபம் பெற்றவர்கள் தத்தம் தொழில் பொறுப்பினை அவரிடமிருந்து வரமாகப் பெற்றவர்கள்,2 சிவபெருமானை இடையறாது வணங்கித் தமது பதவிகளைத் தக்க வைத்துக் கொள்ளுபவர்கள். அவர்களுடைய அதிகாரம் அளவாலும், காலத்தாலும், நிலப் பரப்பாலும் ஓர் எல்லைக்கு உட்பட்டதே ஆகும். நம்மைப் போன்றே அவர்களும் தத்தம் வினைக்கு ஏற்பப் பல தாய்மார்களின் வயிற்றிலே தோன்றிப் பிறப்பு இறப்புச் சுழற்சியிலே உழல்வர்; ஊழ்வினைப் பயனாகிய இன்ப துன்ப மயக்கம் உறுவர்.

''யாதொரு தெய்வம் கொண்டீர், அத்தெய்வமாகி ஆங்கே
மாதொரு பாகனார்தாம் வருவர்: மற்றுஅத் தெய்வங்கள்
வேதனைப் படும், இறக்கும், பிறக்கும், மேல் வினையும் செய்யும்
ஆதலான், இவைஇலாதான் அறிந்து அருள்செய்வன் அன்றே''3

என்பது சகலாகம பண்டிதராகிய அருணந்தி சிவனார் அருளிப்பாடு.

---

1 அப்பர் தேவாரம் 5:1008

2 வாலையானந்த சுவாமிதள் - சித்தாந்தப் பட விளக்கம், பக்.9

3 அருள்நந்திசிவம் - சிவஞான சித்தியார் 115

கோசலை வயிற்றினில் இராமராகப் பிறந்ததும், மாய மானின் வஞ்சனைக்கு ஆளானதும், மனைவியைப் பறிகொடுத்துப் புலம்பியதும், காரிய விட்டுணு நம்போன்ற ஆன்ம வர்க்கத்தைச் சேர்ந்தவர் என்ற கருத்தை அரண் செய்கின்றன அன்றோ? இராமலிங்கத்தை இராமேசுவரத்திலும், மேலும் பல சிவ இலிங்கங்களைப் பலப்பல இடங்களிலும் அமைத்து இராமர் வழிபட்டமையும், கண்ணன் உபமன்யு முனிவரிடம் தீக்கை பெற்றுச் சிவபூசை செய்து பேறு பெற்றமையும் வரலாற்று உண்மைகள்.

நிறைவுரை: இவ்வாறு அருளே வடிவான சிவபெருமான் உயிர்களாகிய நமக்கு நன்மை செய்ய விரும்புகிற பெருங்கருணையினால், நமது மூளைப்பகுதி (சுத்தமாயை)யைத் தனக்குத் தொழிலகமாக அமைத்துக் கொண்டு, ஊழ்வினைப் பயனாகிய பாலை நமக்கு ஊட்டுவதற்காகப் பிடரியில் (அசுத்த மாயையின் மேற்பகுதியில்) தனது ஆதிசத்தியை மறைப்பு ஆற்றலாக நிறுத்தி, அசுத்த மாயையின் 31-தத்துவங்களை, வினைக் கழிவு காலம் வரை, நமக்கு ஒரு விளையாட்டுப் பண்ணையாக ஆக்கி, நாம் வினை நுகர்ந்து படிமுறையில் அறிவு விளக்கம் பெற்று உய்வதற்காக நமது முதுகுத்தண்டில் (பிரகிருதி மாயையில்) தாமே காரணக் கடவுளராக மாற்றுருக்கொண்டும் வயிறு மற்றும் அடிவயிற்றுப் பகுதிகளில் காரியக் கடவுளராகப் பக்குவ ஆன்மாக்களை நிறுத்தியும், மலங்கள் ஒடுங்கிய வேளையில், நம்மை ஆட்கொண்டு சுத்தமாயை (பெருமூளை) என்னும் தனது பேரின்பப் பெருவெளியுள் நம்மை ஏற்றுச் சுத்தவித்தை (பிட்யூட்டரி) என்ற சிவ தத்துவத்தில் அந்தமிலா இன்பத்தை, இந்நில உலக வாழ்விலேயே நமக்கு அருளுகிறார் என்பது நன்றி உணர்வோடு சிந்திக்கற்பாலது.

> "அந்தம் ஒன்(று) இல்லா ஆனந்தம் பெற்றேன்
> யாது நீ பெற்ற(து) ஒன்று என்பால்[1]"

என்பது மாணிக்கவாசகரது அனுபவ அருள்வாக்கு.

---

1 திருவாசகம் 8 : 21 : 10.

4. சிவபூமி

திருமூலர் ஒரு சிவயோகி; மூவாயிரம் ஆண்டுகள் நம் தண்டமிழ் நாட்டில் வாழ்ந்தவர்; ஒவ்வோர் ஆண்டுக் கடுந்தவத் திற்குப் பிறகும் அத்தவநெறி மூலம் தாம் உணர்ந்த மெய்ப் பொருள் உண்மைகளைச் செறிந்த கருத்துடைய ஒரு செய்யு ளாகப் பாடினார். அவ்வாறு அவர் நமக்காகப் பாடியருளிய மூவாயிரம் பாடல்களின் தொகுப்பே திருமந்திரமாலை என வழங்கும் பத்தாம் திருமுறை.

'சிவபூமி என்பது என்ன?' என்று ஒரு கூட்டத்தில் வின வினால், 'சிவபெருமான் உறையும் இடம்' எனப் பலரும் பதிலிறுப்பர். 'சிவபூமி எங்கே இருக்கிறது?' என்ற அடுத்த வினாவை எழுப்பினால், ''இப்போது யார் கண்டது? அடுத்த பிறப்புகளில்தான் சிவபூமியைக் காணலாம்'' என்று கூறுவர் சிலர்; 'செத்தால்தான் சிவலோகம் தெரியும்' என்று விடை பகர்வர் வேறு சிலர்.

ஆனால், திருமூலரோ தமது திருமந்திரமாலையில், உயிரோடு கூடிய நமது இந்த மனித உடம்பிலேயே சிவபூமி இருப்பதை. ஒரு வண்ண ஓவியமாகவே வரைந்து காட்டுகிறார். அதன் சீர்மையை ஈண்டுச் சிந்திப்போம்:

''மேரு நடுநாடி, மிக்(கு)இடை பிங்கலை
கூரு(ம்) இமவா(ன்) இலங்கைக் குறியுறும்
சாரும் தில்லைவனத் தண்மா மலயத்து
ஊ(டு)ஏறும் சுழுனை, இவை சிவபூமியே.''[1]

இந்தத் திருமந்திரப் பாடல் முழுமையும் குறிப்பு மொழியா லாகிய சிறந்ததோர் மந்திரப் பனுவல் ஆகும். இதன் திரண்ட கருத்து என்ன? எனச் சிந்திப்போம்.

---

1 திருமந்திரம்: 27 47

உயிர்களாகிய நமது தலையிலுள்ள, பெருமூளைக் கூறுகளின் இணைப்பான் என்ற நடுநாடியும் முதுகு எலும்புகளை ஊடுருவி மேலேறுகிற சுழுனை என்ற நடுநாடியும் சேர்ந்த பகுதி, சிவபூமி யாகும். சுருக்கமாகக் கூறுவோமாயின், நமது மூளையும் முதுகுத் தண்டும் இணைந்த மைய நரம்பு மண்டலமே சிவபூமியாம். பொதுவாக, அண்டவெளியில் உள்ளவை அனைத்தும், பிண்டத் துள்ளும் அமைந்திருக்கின்றன என்பது ஆன்றோர் அனுபவம்.

எனவே இனி, இம்மந்திரப் பனுவலின் ஒவ்வொரு பகுதி யாக விரித்து, இமயம், மேரு, இலங்கை, தில்லை, சுழுனை, இடகலை, பிங்கலை, தண்மாமலை என்பன, நமது மனித உடம்பிலும் எவ்வாறு அமைந்துள்ளன என்பது பற்றி ஒவ்வொன்றாகச் சிந்திப்போம்.

அண்டத்தில் மேரு: நில உலகின் மையத்தில் உள்ள வான் அளாவிய பொன்னிற மலைக்கு மேரு மலை என்பது பெயர். இமயமலையின் சிகரங்களுள் ஒன்றிற்கு மேரு என்ற பெயருண்டு. தெற்கே இலங்கையில் தொடங்கி, மேற்குத் தொடர்ச்சிமலை என்ற பெயரோடு இந்திய நிலப்பரப்பின் இதயத்தை ஊடுருவி வடக்கே இமயமலையைத் தொட்டு வானளாவி நிற்பது, இந்த' மலை. திரிபுரம் எரிக்கப் புறப்பட்டபோது, சிவபெருமான் இந்த மேருமலையை வில்லாக வளைத்தார் என்பது புராணம்.

பிண்டத்தில் மேரு: நமது மண்டை ஓடு உறுதியான எலும் புக் கூட்டினால் ஆனது. நெஞ்சுப் பகுதி ஓர் எலும்புக் கூட்டி னாலும், முதுகுப்பகுதி முள்ளெலும்புக் கோவையாலும் ஆனவை. வில் போன்று வளைந்த தோற்றமுடையது இவ் எலும்புக் கூடு. இதன் மொத்த அமைப்பை மேரு என உருவ கிப்பது பொதுவான சைவமரபு.

நம் மண்டை ஓட்டினுள், ஆற்றல் மிகுந்த மூளை என்னும் உறுப்பு உள்ளது. இதுவும் மைய நரம்பு மண்டலத்தின் ஒரு பகுதியே. இது வலம் இடம் என இரு கூறுகளை உடையது. ஈண்டுச் சிறப்பாக, நம் ஆற்றல்மிகு மூளையின் வலப்பகுதியை மேரு என்றும், இடப்பகுதியை இமவான் என்றும் திருமூலர் குறிப்பிடுகிறார் எனலாம். வலப் பாகம் சிவன் என்பதும் இடப் பாகம் சத்தியின் கூறு என்பதும், சிவசத்தி (பார்வதி), இமவா னின் மகள் என்பதும் இங்கு இணைத்துச் சிந்திக்கற்பாலன.

இமவான் : இமயமலைக்கு அரசன் இமவான்; ஆயினும், இங்கு இமயமலையைக் குறிப்பதான ஆகுபெயர். நம் இந்திய நாட்டின் வட எல்லையிலுள்ள வான் அளாவிய வெள்ளிப்பனி மலைக்கு இமயமலை என்பது பெயர். இமயமலை ஒரு மடிப்பு மலை. இப்பொழுது இமயமலை இருக்குமிடத்தில், பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு ஓர் ஆழமான பெரிய கடல்[1] இருந்த தாகவும், பூமியின் அதிர்ச்சியால், நிலத்தின் மேற்பரப்பு மடிந்தும் குவிந்தும், மடிந்தும் குவிந்துமாக உயர்ந்ததில், இவ்வளவு உயர மான ஒரு மடிப்புமலை உருவானதாகவும், நிலநூல் வல்லுநர் கள் ஆராய்ந்து கூறுகின்றனர்.

பிண்டத்தில் இமயம் : அண்ட கோளத்தில் உள்ள இந்த இமயமலையைப் போன்று, நமது பிண்ட உடம்பிலும் ஓர் இமய மலை உள்ளது. நில உலகின் உயர்ந்த பகுதிக்கு மலை என்பது பெயர். நம் மனித உடம்பின் உயர்ந்த பகுதிக்குத் தலை என்பது பெயர். நமது தலையினுள்ளும் ஏராளமான மடிப்புகள் கொண்ட சிகரங்கள் உள்ளன. அவற்றின் தொகுப்பை மூளை எனக் கூறுகிறோம். நம் தலையிலுள்ள மூளை, ஒரு மடிப்பு மலை. மூளையிலுள்ள மடிப்புகளின் மிகுதியைப் பொறுத்தே நமது அறிவின் ஆற்றல் அமைகிறது என இன்றைய அறிவியலார் கணிக்கின்றனர்.

இமயம் என்ற மடிப்புமலை, நில அதிர்வினால் உருவாகி உயர்ந்து வளர்வதைப் போலக், கூம்பிக் கிடக்கும் நமது மூளை யும், சிவமூல மந்திர ஒலியின் அதிர்வினால் சிறப்பாக மலர்ந்து சுருள் சுருளாக வளர்ந்து. சிவஞானம் என்ற பேரறிவினைப் பெறும் என்பது குறிப்பு. நமது தலையிலிருக்கும் அறிவுத்தான மாகிய மூளையின் அமைப்பை இக்கால அறிவியலார் பலவாறு ஆய்ந்து கூறியுள்ளனர்.

---

1 Sea shells have been found in the Aunapoorna - Dhalagiri ranges of the Himalayas in Nepal.... அன்ன பூர்ணா - தௌலகிரி) This is one of the very many evidences to prove that these high peaks were once upon a time a deep sea... It is due to the relentless pressure of earth from the sub-continent, pushing northwards, that the highest peaks of the great Himalayas are still rising''. The book on Kailas Manasororar.

நம் தலையிலுள்ள மொத்த மூளையும் ஒரே பொருள்தான்; என்றாலும் அதன் இயக்கம், இருப்பிடம், பண்பு முதலியவற்றைக் கருதி, மூன்று பகுதிகளாகப் பகுத்து நோக்குகிறது அறிவியல். அவை, நமது முன் தலையிலுள்ள பெருமூளை (Cerebrum), பின் தலையின் பிடரிப் பகுதியில் உள்ள சிறுமூளை (Cerebellum), இவ்விரண்டிற்கும் நடுவில் உள்ள நடுமூளை (Mid brain) என்பன. இறைவன் தோற்றம் நமது இந்த மனித உடம்பில் எவ்வாறு இயைந்து வருகிறது எனக் காண்போம்.

சோமாஸ்கந்தர்: கூர்ந்து நோக்குவார்க்கு, நமது தலையில் உள்ள மூளையின் இந்த மூன்று பகுதிகளும் சேர்ந்து, திருக்கோயில்களில் உள்ள சோமாஸ்கந்தரை நினைவுக்குக் கொண்டு வரும், சோமாஸ்கந்தர் என்ற திருமூர்த்தம் ஆழ்ந்த பொருள் பொதிந்தது. ஒருபுறம் சிவபெருமான், மறுபுறம் உமையம்மை, இருவருக்கும் நடுவில், அழகிய குழந்தை வடிவினராக முருகப் பெருமான்; தம் அருமைக் குழந்தையோடு அம்மையப்பரது ஓர் இன்ப வெளிப்பாடு இது. இதுவே சோமாஸ்கந்த மூர்த்தம். இதனைச் சத்சித் ஆனந்த (சச்சிதானந்த) சொரூபம் என்றும் கூறுவர்.

மூன்று பகுதிகளால் ஆனது, நமது மூளை எனக் கண்டோம். முன் தலையிலுள்ள பெருமூளை, சிவபெருமான்: பிடரியிலுள்ள சிறுமூளை, உமையம்மை; நடுவிலிருக்கும் நடுமூளை, கந்தக் கடவுள், மற்றொரு வகையால் சிந்திப்பின், பெருமூளையின் இரு கூறுகளும் சிவனும் சத்தியும்; அவற்றின் நடுவில் நடுமூளையின் வெளிப் பாடாகிய மூன்றாம் நாளமும் (Third Ventricle) மூளை இணைப்பானும் (Corpuscollosam) கந்தப் பெருமான்.

நிலையான அறிவுப் பொருள்களான சிவனும் சத்தியும் இருபுறமும் இருக்க, இன்பப் பொருளான முருகன் அம்மைக்கும் அப்பனுக்கும் நடுவில் நம் நடுமூளையில் இருக்கிறார்; **சத்சித் ஆனந்தம்** என்ற அந்தமிலா அறிவானந்தத்திற்கு நமது தலையே இருப்பிடம் என்பதை இஃது உணர்த்துவதாகும். நமது பெருமூளை முற்றிலும் தூய்மையானது. **சுத்தமாயையினால்** ஆனது; இயல்

பாகவே மலங்களிலிருந்து நீங்கியவராகிய சிவபெருமான் நம் பொருட்டு ஐந்தொழில் புரியும் இடமாக இருப்பது. ஆனால், நமது சிறுமூளை, நடுமூளை, முதுகுத்தண்டு ஆகிய மூன்று இடமும் சுத்த அசுத்த மாயைகளின் கலப்பால் ஆயது. சிவ பெருமானது எளிவந்த ஆற்றல்களாகிய சத்தி, கந்தர், விநாயகர் முதலியோருக்கு இருப்பிடமாவது. மைய நரம்பு மண்டலமாகிய மூளைமுதுகுத் தண்டுப் பகுதி நீங்கலாக உள்ள, முற்றிலும் அசுத்தமாகிய ஏனைய உடற்பகுதியே, மலமாசுடைய உயிர்களாகிய நமக்குப் பெரிதும் இருப்பிடமாவது.

மேரு நடு நாடி : நமது முன் தலையிலுள்ளதும் மடிப்புகள் நிறைந்ததுமான பெருமூளைக்கு மேரு என்பது பெயர். பெரு மூளையின் இரு கூறுகளுக்கு நடுலில் பிறைவடிவத்தில் கிடக்கும் வெண்ணிற மூளை இணைப்பானுக்கு (Corpus collosum) மேரு நடு நாடி என்பது குறிப்புப் பெயர். பெருமூளையின் இருகூறு களுக்கு நடுவில் அமைந்திருப்பதால், இதனை 'மேரு நடு நாடி' மிக்குஇடைபிங்கலை' எனத் திருமூலர் குறிப்பிடுகிறார்.

முதுகெலும்புகளை ஊடுருவி மேலே ஏறும் நடுநாடியைச் சுழுனை என்ற பிறிதோர் சொல்லால், திருமூலர் குறிப்பிடுவ தால், ஈண்டு மேரு நடு நாடி என்றது, நம் தலையின் மையப் பகுதியில் பெருமூளையின் இரு கூறுகளுக்கு நடுவில் அமைந்துள்ள வெண்ணிற மூளை இணைப்பானையே எனபது பெறப்படும்.

நம் தலையினுள் முதல் நாளம், இரண்டாம் நாளம் (First & Second ventricle) என்ற இரண்டு நாளங்களும், தாலமஸ் (Thalamus) என்ற கருமுகில் கூட்டமும், இந்த மேரு நடு நாளத்தின் இடம் வலம் ஆகிய இரு பக்கங்களிலும் சூழ்ந்து உள்ளன. ஒரு மொச்சை விதையில், அதன் விதையை மருவிய பருப்புகள் இரண்டையும் போல, இவ்வை அமைந்திருக்கின்றன. பிறைவடிவ மூளை இணைப்பானோ படுக்கைத் தோற்றத்தை உடையதாக அன்றோ இருக்கிறது? இதனைச் செங்குத்தான மேரு நடு நாடி எனக் குறிப்பு மொழிதல் யாங்ஙனம் பொருந்தும்?' என்ற ஐயம் சிலருக்கு எழலாம்.

'வேந்தனும் ஓங்குக' என்ற திருஞானசம்பந்தரது அருள் வாக்கால், 'கூன்பாண்டிய' மன்னன், நின்ற சீர் நெடுமாறனாய் ஆண்மைப் பொலிவுடன் நிமிர்ந்து நின்றதைப்போல, ஓர் உண்மை அடியாரின் மெய்த்தவ நெறியாகிய ஆழ்ந்த சிவ தியானத்தின் பயனாகச், சிவமூல மந்திரத்தின் பேராற்றலால், அவரது தலையினுள், படுக்கையாகக் கிடக்கும் இந்த நாளம், திண்மை பெற்றுச் சிவபெருமானது பிச்சாடண ஆண்மைப் பொலிவுடன் திகழ்ந்து, தன்னைச் சிக்கெனப் பிடித்த சீரார்ந்த அவ் ஆன்மாவை, உச்சித்தலை வழியாக, மீதானத் தலைவனது திருவடியில் சேர்க்கவல்ல பெருமை உடையது. எனவே இதனை 'மேருநடுநாடி' எனப் போற்றினர், திருமூலதேவர்.

இலங்கை: நமது இந்திய நாட்டின் தென்கிழக்கில் கடலால் சூழப்பட்ட தீவுக்கு இலங்கை என்பது பெயர். நில உலகில் உள்ள இந்த இலங்கைத் தீவினைப் போன்று நமது உடம்பிலும் ஓர் இலங்கை உள்ளது. முதுகெலும்புத் தொடரின் அடிப் பகுதியிலுள்ள இரண்டு எலும்புகளின் தொகுப்பை (Coccyx) மூலாதாரம் எனச் சாத்திரங்கள் கூறும் இதனை 'இலங்கைக் குறியுறும்' என்ற தொடரால் திருமூலர் குறிப்பிடுகிறார், இந்திய எல்லை, கோடிக் கரையுடன் முடிவுற, மன்னார்குடா என்ற கடற்பகுதியை அடுத்துத் தெற்கே இலங்கை இருக்கிறது. கடலின் அடி ஆழத்தில் மலையின் தொடர்ச்சி இருக்கிறது. அதேபோல் சுழுமுனை நாடியானது நமது அடிவயிற்றின் சுவாதிட்டானப் பகுதியோடு நிற்க, அதன் கிளைகள் அங்கு உள்ள அமுதத் தேக்கத்திற்கும் கீழே அமைந்திருக்கிற மூலா தாரத்தைத் தொடுகின்றன. நமது உடல் அமைப்பைத் தத்துவ நோக்கிலும் நிலவியல் அடிப்படையிலும் சற்றே உன்னிப் பாய்க் காண்பவர்களுக்கு, இதன்கண் பொதிந்துள்ள உருவக நயம் புலனாகும்; ஒப்பியல் ஆய்வில் ஓர் இன்பம் பிறக்கும்; உயர்ந்த பயனும் சித்திக்கும்.

தில்லைவனம்: நடராசப் பெருமான் திருநடனம் புரிகின்ற சிற்றம்பலத்தை உடையதும், தில்லை என்ற ஒருவகை நெய்தற் காடுகள் நிறைந்ததும் ஆகிய சிதம்பரத்தைக் குறிப்பது, தில்லை வனம். சித்+அம்பரமே சிற்றம்பலம் எனக் கூறுவர் அறிஞர்.

இத்திருத் தலத்தை விராட்புருடனின் (உலகபுருடனின்) இருதயத் தானம் என்றும் தகராகாயம் என்றும் கூறுவது பண்டு தொட்ட மரபு. உலக நிலப்பரப்பில் சிறப்புற்றுத் திகழும் இத்திருத்தலம், நமது மனித உடலில் எங்கு உள்ளது?

இறைமை அன்புக்கு இருப்பிடம் நமது இதயகமலம். அது, பெரியமலை போன்றதான நமது நெஞ்சுக் கூட்டினுள் அமைந்திருக்கிறது.

அதேபோல், பேரறிவுக்கு நிலைக்களனாக இருப்பது நமது பெருமூளை, நரம்புத் தொகுதியாலான இமயமலை போன்ற திண்ணிய எலும்புக் கோட்டையினுள் அஃது அமைந்திருக்கிறது. மேலும் சிற்றறிவுக்கும், செயற்பாட்டிற்கும் உறுதுணையாவது சிறுமூளையின் நரம்புக்காடுகள். இது நம் பின்தலைப் பிடரியில் சிதம்பர ரகசியம் போல் மறைந்து நின்று, நம்மை இயக்குகிறது. மூளைப் பகுதியின் இம்மூன்று இடங்களையுமே 'தில்லைவனத் தண்பா மதியம்' எனக்குறிப்பிடலாம். எனினும், ஆன்மார்த்த சிவபூசை, அந்தர்யாக பூசையில், நாம் சிவபெருமானை இதயத் தாமரையில் தான் எழுந்தருளச் செய்து, அபிடேகம், ஆராதனை, உபசாரங்கள், நிவேதனங்கள் முதலிய மன வழிபாடுகளைச் செய்கிறோம். ஆதலால் நமது நெஞ்சினைச் சிவபெருமானுக்குப் பூசைத்[1] தானமாகவும், தலையைத் தியானத் தானமாகவும்[2], அடிவயிற்றை ஓமத் தானமாகவும்[3] சைவ சித்தாந்த சாத்திரங்கள் இடம் சுட்டி அறிவுறுத்தும். எனவே, நமது உடம்பில் சிவபெருமான் எழுந்தருளியிருந்து பூசை ஏற்கும் இடமாகிய இதயக் கமலமே, தில்லைவனம் ஆகும். விராட் புருடனது இதயக் கமலமாக அமைந்துள்ள தில்லைவனம், உயிர்களாகிய நமது இதயத்திலும் ஒளிவிட்டுப் பிரகாசிப்பது நாம் பெற்ற பேறேயோகும்.

சுழுனை: நமது முதுகெலும்பு, ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கப் பெற்ற முப்பத்து இரண்டு முள்ளெலும்புகளைக் கொண்ட ஒரு தொடர்மலையைப் போன்றது என முன்னர்க் கண்டோம். முதுகெலும்பு ஒவ்வொன்றிலும், ஒருதுளை இருக்கும். அத்துளைகள் எல்லாவற்றையும் ஊடுருவி, மேலே நமது தலை

யிலுள்ள ஆணைத்தானமாகிய 'இமவானை'யும், கீழே அடி வயிற்றிலுள்ள மூலாதாரத்தானமாகிய 'இலங்கைக் குறி'யையும் இணைத்துத் தேர்வடம் போன்ற ஒரு நரம்புத் தொகுதி உள்ளது இதற்கு வீணாதண்டு, முதுகந்தண்டு, தண்டுவடம், நடுநாடி. சுழுனா நாடி (Spinal cord) என்று பல பெயர்கள் உண்டு. திருமூலர் இதனைச் சுழுனை எனக் குறிப்பிடுகிறார்.

இடகலை, பிங்கலை என்ற இரண்டு குருதி நாளங்கள், இதன் இருமருங்கிலும் இதனைப் பின்னிப் பிணைந்து நிற்க அவற்றின் நடுவே, இந்த நாடி நடுநாயகமாக நெடிதுயர்ந்து நிமிர்ந்து நிற்றலால், நடு நாடி எனப் பெயர் பெற்றது. இங்ஙன மாக, அசுத்தமாயையினாலான நமது கீழ்ப்பகுதி உடம்பில், நடு நாடியாகச், சுழுனை என்ற நெடிய உயர்நோக்குப் பெருநாடி (Vertical-ஆக) உள்ளது என்பதையும் சுத்தமாயையினாலான நமது தலையினுள் 'மேரு நடுநாடி'யாக மூளை இணைப்பான் (Corpus collosum) என்ற படுக்கை நாளம் (Horizontal ஆக) இயங்குகிறது என்பதையும் இதிலிருந்து அறியலாம்.

வலஞ்சுழி விநாயகர்: அம்மை அப்பர் வடிவிலுள்ளது நமது இருதயம் எனக் கண்டோம். இருதயத்தின் வலது கீழ் அறை யிலிருந்து, தன் துதிக்கை போன்ற குருதிக்குழலால் (Pulmonary artery), அழுக்கு நிறைந்த நீலக்குருதியை, வலஞ்சுழித்து எடுத்துச் சென்று, நுரையீரலில் நிறைந்துள்ள 'வாசி'யால் (பிராணவாயுவால்) அதனைத் தூயதாக்கி, மீண்டும் அதனை இருதயத்தின் இடது மேல் அறையில் ஆற்றல் மிகுந்த செங் குருதியாகச் சேர்ப்பிப்பவர் விநாயகர். இவர் வலப்பக்கம் தன் துதிக்கையை வளைத்துச் சுழித்து, அம்மையப்பரை வலமாக வருதலால், 'வலஞ்சுழி விநாயகர்' எனப் போற்றப் பெறுகிறார் இவர் செய்வது உள்துறை ஆக்கப் பணியாகும். 'தந்தை தாயாரை வலம் வந்து, தம்பிக்கு முன்வரே மாங்கனியைப் பெற்றவர், விநாயகர்' என்பது புராணம், இக்கருத்து நமது இவ் உடல் அமைப்போடு இயைபு உடையதாகக் காணப் பெறுகிறது.

"தந்தை வலத் தா(ல்), அருள் கை கனியோனே"1 என இதனைப் பண் இசைத்துப் பரவுவார் அருணகிரியார். அவ்

1 நாடி நாளங்கள் 10 இடை, பிங்கலை, சுழுனை, காந்தாரி, அத்தி, சிங்குவை, அலம்புடை, புருடன், சங்குனி, குகு என்பன.

வரலாற்றுக்கு ஒரு சான்று, நமது இருதயத்தில் எழுந்தருளியிருக்கும் வலம் சுழி விநாயகர் ஆவார். ஈண்டு அவர் பெற்ற கனி 'வாசி' ஆகும்; தூய மூச்சுக்காற்று (Oxygen) என்பது பொருள். வாசி, வாசி என அடுக்கினால் சிவா சிவா என எதிரொலிக்கும்.

இடகலை, பிங்கலை: நமது இருதயத்தின் இடது ஏற்றறையிலிருந்து (Aorta) என்ற பெரியதொரு குழாய் மூலம், தூய்மையான செந்நிறக் குருதி வெளியேறுகிறது; அது சிறுசிறு குழாய்களில் பிரிந்து, நமது உடலின் மூலை முடுக்கெல்லாம் பரவுகிறது. இத்தூய இரத்தம் நமது உடலின் தொழிற்பாட்டிற்கு இன்றியமையாதது. உடல் முழுவதும் இங்ஙனம் பரவுகிற தூய இரத்தம், அங்கங்கே தொழிற்படுதலால், அழுக்காகி நீல இரத்தமாகிறது; சிறுசிறு குழாய்களின் மூலம், உள்முகப் பெருநாளம் (Vena Cava) என்ற மற்றோர் பெரிய குருதிக் குழாயைச் சேர்ந்து, மீண்டும் இருதயத்தை வந்து அடைகிறது.

இவ்வாறு இருதயத்தின் புறத்தேயும் உள்ளேயுமாகச் செல்லுகிற இரண்டு பெரிய இரத்த நாளங்கள், சுழுமுனை நாடியின் இரு மருங்கிலும் கொழுகொம்பு சுற்றிய கொடிகளைப் போன்று, பின்னிப் பிணைந்து கிடக்கின்றன. இவை இடகலை பிங்கலை என்று அழைக்கப் பெறுகின்றன.

நமது உடம்பில் உள்ள பத்துநாடிகளுள்[1], சுழுமுனை இடகலை, பிங்கலை என்ற மூன்றும் மிகச் சிறப்பு வாய்ந்தவை.

கூரும் இமவான்: கூரும் என்றால் பொருந்திய என்பது பொருள். இவை மூன்று நாடிகளும் நம் தலையிலுள்ள இமவானைப் பொருந்தி நிற்கின்றன என்பது திருமந்திரம். எவ்வாறு பொருந்தி நிற்கின்றன என நோக்குவோம்.

சுழுனை நாடி, வீணா தண்டாகிய முதுகுத் தண்டைப் பற்றி நிற்கும். இடகலையும் பிங்கலையும், கத்தரிக் கோல் பாகம் மாறினாற் போலவும், வீணாதண்டிற்கு வில்லுநாண் இட்டாற் போலவும், கொழுகொம்பு தழுவி ஏறுகிற கொடி போலவும், சுழுமுனையைச் சுற்றி மேலே ஏறுகின்றன.

---

1 வாலையானந்த சுவாமிகள் - சித்தாந்தப்படி விளக்கம் பக்கம் 51(1917)

இவை ஆதாரங்கள் ஆறினையும், மண்டலங்கள் மூன்றினையும் ஊடுருவிக் கபாலத்தை முட்டிக், குதிரை முகமுற்று. .நாசியளவும் பற்றி நிற்பன[1] மூலாதாரத்தில் தொடங்கிச் சுழுமுனையைப் பொருந்தி மேலே ஏறுகிற இவை, நம் தலையினுள் முதல் நாளம், இரண்டாம் நாளம், மூன்றாம் நாளம் என்ற பெயர்களோடு படுக்கையாகக் கிடந்து, மூக்கு அளவுக்குப் பற்றி நிற்கின்றன.

தண்மா மலை : நாம் நிமிர்ந்து நிற்கத் துணையாக இருப்பது, நமது முதுகில் உள்ள முள்ளெலும்புக் கோவை; ஒன்றன் மேல் ஒன்றாக முப்பத்திரண்டு எலும்புகள் உள்ளன; இவற்றை மிகவும் சீராக நம் முதுகில் அடுக்கி வைத்துள்ளார், இறைவன். இவற்றுள் நம் அடிவயிற்றில் இடுப்பெலும்புகளுக்கு இடையில் தொடங்கி, வயிறு நெஞ்சு வழியாக இருபத்தைந்து எலும்புகளும், கழுத்தினடியில் தொடங்கி நம் தலையின் நடு இடம்வரை ஏழு எலும்புகளுமாக, மொத்தத்தில் 32 எலும்புகள், மேற்குத் தொடர்ச்சி மலையைப் போன்று, பெரியதொரு மலைத் தொடராக அமைந்துளளன. இந்த முதுகெலும்புத் தொர்டரைத் "தண்மாமலை" என வருணிக்கிறார், திருமூலர்.

'தில்லை வனத் தண்மா மலை' என ஒரே தொடராகக் கொண்டு, தில்லைவனமாகிய நமது நெஞ்சுத் தானத்தில் உள்ள மலை போன்ற மார்பெலும்புக் கூட்டினைக் குறித்தார் எனிலும் பொருந்தும்.

இவ்வாறு, நம் தலையின் பெருமூளை முகப்பில் தொடங்கிப் பிடரியிலுள்ள சிறுமூளை, மார்பகத்திலுள்ள இருதயம் இவற்றின் வழியாக இடுப்பில் உள்ள மூலாதாரம் வரை பரவியுள்ள பைய நரம்பு மண்டலமே சிவபூமி, எனத் திருமூலர் வருணிக்கிறார்.

"செல்வ நெடு மாடம் சென்று சேண் ஓங்கிச்
செல்வ மதி தோயச் செல்வம் உயர்கின்ற
செல்வர் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய
செல்வன் கழல் ஏத்தும் செல்வம் செல்வமே"

என்பது திருஞானசம்பந்தர் அருளிய கோயில் திருப்பதிகம். இதில் 'செல்வ நெடுமாடம்' என்பது நம் உடற்பகுதியில் உயர்ந்து நிற்கும் மேரு நடு நாடி (முதுகுத் தண்டு)யினையும், 'செல்வ மதி' என்பது தலையில் பெருமூளைக் கூறுகளுக்கு நடுவில், பிறைமதி வடிவினதாய், ஆன்ம ஈடேற்றத்துக்குத் துணை நிற்கும் மூளை இணைப்பானையும், 'செல்வம் உயர்கின்ற செல்வர்' என்பது மும்மலக் கட்டாகிய ஞான வறுமையிலிருந்து விடுபட்டுச், சிவபெருமான் திருவடி எனும் நிலையான பேரின்பச் செல்வத்தினைப் பெற்ற பிரளயாகலர், விஞ்ஞானகலர் எனும் உயர்ந்த பக்குவ ஆன்மாக்களையும் 'சிற்றம்பலம்' என்பது ஆயிரம் இதழ்த் தாமரையாக நமது சிரசினுள் இருக்கும் பெருமூளையினையும், 'செல்வன்' என்பது சிவபெருமானையும் குறிப்பதாயிற்று.

சிவபூமி எனத் திருமூலரால் சிறப்புரைக்கப் பெறுகிற இம் மையநரம்பு மண்டலம், மெய்யடியார்களது உடம்பின்கண் எழிலுறு கூந்தலாகப் பின்னித் தொங்கவிடப் பட்ட ஒரு பெண்ணின் தலைமுடி போன்ற தோற்றத்தையும், திருக்கோயில் களில் உள்ள கொடிக்கம்பத்தைப் போன்ற வடிவத்தினையும் உடையதாய், நமது வீடுகளிலுள்ள தொலைக்காட்சிப் பெட்டி யின் ஒளி ஈர்ப்பானைப் (T.V. Antana) போன்ற செயற் பாட்டினையும் பயனையும் தரவல்லது என்பதை நாம் சிவாகம நெறியாகிய சிவயோகத்தில் நின்று அனுபவழி உணர்வோமாக!

திருச்சிற்றம்பலம்

5. யோக நெறியில் சைவ உணர்வுகள்

(செம் பொருளியல்)

நற்பதத்தார் நற்பதமே! ஞான மூர்த்தி!
நலஞ்சுடரே! நால்வேதத்து அப்பால் நின்ற
சொற்பதத்தார் சொற்பதமும் கடந்து நின்ற
சொலற்குஅரிய சூழலாய்! இதுஉன் தன்மை
நிற்பதுஒத்து நிலையிலா நெஞ்சம் தன்னுள்
நிலாவாத புலால்உடம்பே புகுந்து நின்ற
கற்பகமே! யான்உன்னை விடுவேன் அல்லேன்,
கனகமா மணிநிறத்து எம்கடவு ளானே![1]

நாம் மூச்சிழுக்கும் பிராணவாயுவுக்கு வாசி என்பது பெயர். வாசியை உள் நிறுத்தி, மனத்தை அலையவிடாமல், எண்ணங்களைச் சிவபெருமான் திருவடியில் ஒரு நிலைப் படுத்துதல்[2], சிவயோகம் எனப்படும் பொதுவாக. இது கடினமான நெறி முறை போலத் தோன்றும். ஆயினும் கால அடைவில், இது மிகவும் எளியதொரு பயிற்சியே. தொடக்கத்தில் இதற்குக் கற்பனை ஓரளவு இன்றியமையாததாகிறது.

கற்பனை ஒரு விளக்கம்: உலகில் கற்பனை செய்யாத மனிதனே இல்லை எனலாம். கற்பனை செய்யப்படும் பொருள்கள்தாம் வேறுபடுகின்றன. ஆற்றின் குறுக்கே அணை கட்ட

---

1 அப்பர் - திருத்தாண்டகம் 6:95:4

2 ''உயிரா வ(ண்)ணம் இருந்து உற்று நோக்கி
உள்ளக் கிழியில் உருஎழுதி
உயிர்ஆ வணம் செய்திட்டு உன்கைத் தந்து''-அப்பர் திருத்தாண்டகம்

இதன் பொருள்: மூச்சுக் காற்றினை வெளியேறா வண்ணம் நெஞ்சினுள் நிறைத்து, மன ஓட்டத்தைப், புறத்தே அலையா வண்ணம் உள்முகமாகத் திருப்பி, நெஞ்சுக் கூட்டின் உள்ளிருக்கும் இதய கமலத்தினை ஒன்றிய மனத்தால் உற்று நோக்கி, அவ் இருதயத்தையே சிவலிங்கத் திருமேனியாகச் சிந்தித்து, அங்கு அப்பெருமானின் திருவடியில் உயிரினை அடிமையாக நிலைபெறச் செய்து, அக வழிபாடு இயற்றினால் அங்கே சிவபரத்தைக் கண்டு இன்புறலாம். (எ-ம்)

விரும்பும் பொறியியல் வல்லுநர், தான் அவ்வாறு நினைத்த உடனேயே ஆற்றில் இறங்கி விடுவதில்லை முதலில், தன் சிந்தனையில். அந்த ஆற்றின் ஓட்டம், அணையின் கட்டமைப்பு முதலியவற்றைக் கற்பனை செய்து கொண்டு, பின் வரைபடம் எழுதி, மாதிரி-அணை (Model) அமைத்து. இறுதியில் உண்மை யான கட்டுமானம் என்றவாறு, படிமுறையில் தான் தொழிலில் இறங்குகிறார்.

ஒரு விஞ்ஞானியிடம், ''தங்கத்தின் 'அணு எடை' என்ன''? என்று வினவினால், அவர் ஓர் எண்ணைச் சொல்லுவார். 'அதனை எவ்வாறு அறிந்தீர்கள்?'' எனக் கேட்டால் 'நீர் வாயு (Hydrogen)வின் எடையை ஒன்று எனக் கற்பித்துக் கொண்டு (assumption) அந்த அடிப்படையிலேயே பிற பொருள்களின் அணு எடையைக் கணக்கிடுகிறோம்' என்பார். பொருளா தாரத் துறையை எடுத்துக்கொண்டால், இன்றைய இந்திய ரூபாயின் மதிப்பு 18/- காசு என்பர். 1947-இல் இந்தியா விடுதலை பெற்றபோது இருந்த நாணய மதிப்பினைக் கற்பனை யாக 'நூறு' காசு எனக் கொண்டு, பொருள்களின் மதிப்பிற்குத் தக்கவாறு நாணய மதிப்பைக் கணக்கிடுகிறார்கள்.

எனவே அறிவியலாகட்டும், கலை உலகமாகட்டும் எங்கும் எதிலும் கற்பனை இல்லாத இடமே இல்லை. மேலும் கற்பனை என்பது அவ்வளவு எளிதான செயல் அன்று. அதற்கும் ஒரு தனி உள்ளப் பண்பும் திறனும் வேண்டும். உணமை இவ்வாறி ருக்க, இன்றைய உலகில் சிலர் இறைவனையும், இறைமைப் பயிற்சிகளையும் வெற்றுக் கற்பனை என எள்ளி நகையாடுவது, அவர்களுடைய மேலெழுந்தவாரியான, ஆழமற்ற, அறிவுத் திறனையே காட்டுகிறது.

கீழ்மை உணர்ச்சிகளை முடுக்கிவிட்டு, ஆற்றல்களை வற்றச் செய்து, தீமை பயப்பனவற்றையும், முயற் கொம்பு போன்ற இல்லாதனவற்றையும், இவைபோன்ற சிறுமைகளையும் கற்பனை செய்வதே குற்றமாகும். எனவே நாம் புறம் பேசு வோரை ஒரு பொருளாகக் கொள்ளாமல், கடவுளைப் பற்றி முதலில் ஆழ்ந்து கற்பன்ன செய்ய முற்படுவோம்.

கடவுளும் கற்பனையும்: மனம், வாக்கு முதலியவற்றைக் கடந்தும், உயிருக்குள் உயிராகவும் இருப்பதால்தான், அவருக்குக் கடவுள் (கட+உள்) என்பது பெயர். விறகினில் தீ, கடைய வெளிப்படும். அவ்வாறே நம் உள்ளத்தைக் கடவினால், நம் உள்ளே உறையும் இறைவன் வெளிப்பட்டு அருளுவார். அதனாலும் அவருக்குக் கடவுள் என்பது பெயர். எனவே நம் உள்ளும் புறமும் நிறைந்திருப்பவராகிய அக்கடவுளைப் பற்றிய கற்பனை, ஏனைய உலகியல் கற்பனை, அறிவியல் கற்பனை களை எல்லாம் விட, அரிய பெரிய பயன்களைத் தரவல்லது என்பதை உறுதியாக நம்புவோம்.

சிவயோகத்தில் பாவனை: நமது சிந்தனை, உலகியலைப் பற்றியதாயின், அது கற்பனை; இறைவனைப் பற்றியதாயின், அது பாவனை: அதுவே யோக நெறியின் முதற்படி; மந்திரம், கிரியை, பாவனை மூன்றும் சைவ நெறிகள் என்பது சாத்திரக் கருத்து. சிவயோக நெறியில் கற்பனையை எவ்வாறு தொடங்கு வது எனச் சிந்திப்போம்.

தொழிலில் ஆழ்ந்து ஈடுபட்டிருக்கும் ஒருவர், தொலை தூரத்தில் உள்ள தம் மனைவி மக்களின் இனிய முகத்தை மனக் கண்ணால் கண்டு மகிழ்கிறாரன்றோ? அதே போன்றதுதான் ஆண்டவனைப் பற்றிய கற்பனையும், அன்பின் நிலைக்களனான கடவுளை, விநாயகர் வடிவிலும், முருகன் வடிவிலும் சிந்தித்து, அவர்களை மடியில் அமர்த்தி, நீங்கள் உண்ணும் உணவினை முதலில் அவர்களுக்கு ஊட்டிப் பாருங்கள்; சில நாட்களில் அவர்கள் தாமே உங்கள் மடியில் அமர்ந்து, உங்கள் கையைப் பற்றி, உணவினை ஏற்றருளும் இன்புறு தோற்றம், உவகைமிகு காட்சியாக, நன்கு புலனாகும்.

கற்பனையும் உள்ளுணர்வும்: கற்பனை என்பது மனிதன் சிற்றறிவு கொண்டு சிந்திப்பதன் விளைவு. அஃது ஆன்மாவின் நூல் அறிவாலும் உலக அனுபவங்களாலும் நிகழ்வது. இதனை அபரஞானத்தின் வகையாகக் கொள்ளுதல் பொருந்தும்.

உள்ளுணர்வு என்றால் என்ன? மைதானத்தில் ஆடுகிற கால் பந்து, கைப்பந்து முதலிய விளையாட்டுக்களை, வீட்டின்

புறத்தே விளையாடப் படுதலால், புற விளையாட்டு (Out-door games) என அழைக்கிறோம். வீட்டின் உள்ளே ஆடப்பெறும் சதுரங்கம் முதலிய விளையாட்டுக்களை உள் விளையாட்டு (Inside the door games,—indoor games) எனக் கூறுகிறோம். அதேபோல். ஒரு வகுப்பறையில், ஆசிரியர் மாணவர்களின் புறத்தே இருந்து கற்பித்தலைப் 'புறவழிக் கல்வி' (Tuition from ontside) என்றும், இறைவனே நம் உள்ளத்தின் உள்நின்று நல்ல பல அரிய செய்திகளை உணர்த்துதலை உள் உணர்வு (Tuition from inside=inside tuition=intuition) என்றும் கூறுகிறாம்

இத்தகைய உள் உணர்வினைப் பரஞானம் என்று கூறுதல் பொருந்தும். இறை இன்பத்தில் நம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ள அபரஞானம், பரஞானம் என்ற இரண்டுமே இன்றியமையாதன,

கல்வெட்டும் உடல்வெட்டும்: உலக வரலாறுகளை நாம் அறிந்து கொள்ளத் துணை நிற்பன, கல்வெட்டுக்களும் புதை பொருள்களும், செப்பேடுகளும், கையேடுகளும், பிறவுமாம். வரலாற்றுத் தொடர்பான நிகழ்ச்சிகளை எதிர்காலத்தவர்க்கு உறுதியுடன் அறிவித்தற்காக எழுப்பப் பெற்றவை இவை; இத்தகைய உலகியலைப் போன்று. தெய்வீகத்திலும் ஒரு சிறந்த வரலாறு உண்டு.

ஊழி முதலில் சிவபெருமான் உலசங்களைப் படைத்தார் ஆங்காங்கே நுகர்பொருள்களையும் வைத்தார்; அலைந்து திரிந்த உயிர்களாகிய நமக்கு அவரவர் வினைக்கு ஏற்றவாறு, உடம்பினை உருவாக்கினார்; துணையாகக் கருவி கரணங்களையும் அமைத்தார். இத்தகைய படைப்பு ஒவ்வொன்றும் ஒரு கல்வெட்டுப் போன்றது. நமது இந்த மனித உடம்பும் அத்தகைய கல்வெட்டுகளுள் ஒன்று; இதனை ஓர் 'உடல்வெட்டு' என்று கூடக் கூறலாம். கல்வெட்டுக் கூடக் கால அடைவில் கரைந்து விடலாம். உடல் வெட்டோ வாழையடி வாழையாக வளர்ந்து வருவது; மொழி, மதம், இனம், தொழில், நிலம், இடம். வயது முதலிய பாகுபாடுகள் இன்றி. எல்லா மனிதர்களுக்கும் ஒரே வகையான அமைப்புடன் விளங்குவது இந்த உடல் வெட்டினைத் துணை

யாகக் கொண்டு, சிவபெருமானது உருவம், வடிவம், செயல், வழிபாட்டுப் பயன் முதலியவற்றை நாம் ஓரளவு உய்த்து உணரலாம்

உடலை வெட்டி, அதன் அமைப்பு முறை காண முற்படுவது இன்றைய விஞ்ஞானம். வெட்டாமலேயே பொய்ப் பொருளாகிய இந்த உடம்பினுள் மெய்ப்பொருளாகிய சிவம் என்னும் செம் பொருளைக் கண்டு இன்புறுவது, சிவயோகம். கல்வெட்டு மொழி தெரிந்தவர்க்கு, அதைக் கற்றுணர்வது எளிது; அதே போல் 'உடல் வெட்டில் மெய்ப்பொருள் உண்மை'யை உணர்ந் தோர்க்குக், கண்ணுதற் கடவுளின் கருணை புலனாகும்; பேரின்பப் பெருவாழ்வுக்கான சிரிய வழி ஒன்றும் உறுதியாகத் தெரியும். ஆகவே, பேரின்ப வாயிலாகிய, உயரிய அச்சிவ யோக நெறி நின்று, செம்பொருளது சிறப்பினை அறிய முற்படுவோம்.

இறைவன் மறைந்தும் வெளிப்பட்டும் இருத்தல்: தீக்குச்சியிலும் தீப்பெட்டியிலும் ஃபாஸ்ஃபரஸ என்ற மருந்தினைப் பூசித் தடவி யிருக்கிறார்கள். இரண்டிலும் தீ மறைந்து கிடக்கிறது. அவை ஒன்றோடொன்று உராய்ந்ததும், தீ வெளிப்பட்டுத் தோன்று கிறது. தீக்குச்சி மனிதனால் செய்யப்பட்ட செயற்கைப் பொருள்; மரம் இறைவனால் செய்யப்பட்ட செயற்படுபொருள். பச்சை விறகினில் இயல்பாகவே தீ மறைந்து கிடக்கிறது; தொடக்கத்திலேயே அது நம் கண்ணுக்குப் புலப்படுவதில்லை. ஈரம் காய்ந்ததும் கடாவினால், உள்ளிருக்கும் தீ வெளிப்பட்டுத் தோன்றும். விறகுத்தீயை வெளிப்பட காண்பதற்குக் கூடுதல் முயற்சி தேவை.

பாலில் நெய் தெரிந்தும் தெரியாமலும் காணப்பெறுகிறது. அதையே உறையிட்டுத் தயிராக்கினால், நெய் அங்கு விளங்கித் தோன்றும். அவ்வாறு நெய்யினைப் பெறுதற்குச் சிறிய முயற்சி போதுமானது. ஆனால், தங்கம், பவளம், இரத்தினம் முதலிய மணிகளின் இயற்கை ஒளி, நம் ஊனக்கண்களுக்கே கூடத் தெளிவாகத் தெரிகிறது. இதனை,

"விறகில் தீயினன், பாலில் படுநெய்போல்
மறைய நின்றுளன், மாமணிச் சோதியான்
உறவு கோல் நட்(டு) உணர்வு கயிற்றினால்
முறுக வாங்கிக் கடையமுன் நிற்குமே" – 1

என்ற அப்பர் பெருமான் திருவாக்கால் உணரலாம். ஈண்டு; உறவுகோல் என்பது சுழு முனாநாடி; உணர்வு என்பது அன்பு, கயிறு என்பது இடகலை, பிங்கலை நாடிகள் [தேவர்களும், அசுரர்களும் பாற்கடல் கடைந்து அமுதம் பெற்ற புராண வரலாற்றினையும் ஈண்டு இணைத்துச் சிந்தித்தல் பயன் தரும்.]

இவைகளைப் போன்றே, நாம் மனக்கண்ணால் கடவுளை நம் உடம்பினுள் காணுதற்கு இடையறாது பயின்றால், அங்ஙனம் பார்த்துப் பழகிய தெய்வத் திருவுருவங்களுக்கும் நமது மனத்திற்கும் உள்ள நெருங்கிய தொடர்பு, பைய பையத் தெளிவாகும். கால அடைவிலே அத்தெய்வம் நம் உடம்பினுள் தனக்குரிய இடத்தையும், தான் அங்குத் தொழிலாற்றுகிற முறைகளையும் நமக்கு உள்நின்றே உணர்த்தும்.

சான்றாக, நாம் நாளும் வழிபடுகிற பிள்ளையார் எவ்வாறு நம் உடம்பினுள் தம்மை உள்நின்று உணர்த்துகிறார் என்பதைக் காண்போம்.

பிள்ளையார் ஓங்கார வடிவினர்: ஓங்காரம் என்ற பிரணவ ஒலியே சிவபெருமானது உடுக்கையினின்று தோன்றிய முதல் தத்துவம். அதிலிருந்து தான் நாம் காணக் கூடிய அனைத்துப் பொருள்களும் தோன்றின. ஒலிதான் முதலில் தோன்றியது என்ற கருத்தை இன்றைய அறிவியலாரும் ஏற்கின்றனர். எனவே ஓங்காரப் பிள்ளையை மூத்த பிள்ளையார் என அழைப்பர். அவரை வணங்கித் தொடங்கினால், எந்த ஒரு செயலும் முட்டின்றி நிறைவுறும் என்பது ஆன்றோர் அனுபவம், அவர்கள் வழிநின்று, நாமும் மூத்த பிள்ளையை முதற்கண் சிந்திப்போம்.

---

1 அப்பர் தேவாரம்

மூலாதார விநாயகர் : நமது இடுப்புப் பகுதியில் கருவாய்க்கும் எருவாய்க்கும் நடுவில் இருப்பது மூலாதாரம். இங்கு வளைந்தும் ஒருங்கிணைந்தும் அமைந்துள்ள எலும்புகளின் கூட்டமைப்பு (Coocyx) விநாயகரையே பெரிதும் நினைவூட்டும். மூலாதாரத்தை இயக்குகிற இவர்க்கு மூலாதார விநாயகர் என்பது பெயர். இவருக்கு வல்லபை, சித்தலட்சுமி என்ற இரு சத்திகள் உள்ளனர்.

விநாயகருக்கு உரிய மூலமந்திரத்தைச் சிந்தித்து, மும்முறை நெற்றிப் பொட்டில் குட்டிக்கொள்ளும் போதும், முழங்காலை மடக்கித் தோப்புக் கரணம் மூன்றுமுறை போடும்போதும், மந்திரத்தின் மின் ஆற்றலும் நரம்புகளின் அதிர்வும் இணைகின்றன. அப்போது மூலாதாரத்தில் விநாயகரது ஆற்றலை நாம் நன்கு உணரலாம். தொடக்கத்தில் இல்லையென்றாலும், கால அடைவில் உணரலாம் பிலத்துவாரம் போன்று நீண்டதொரு துளையை தன்னுள்ளே கொண்ட நமது முதுகுத் தண்டு, மூலாதாரத்தில் அமர்ந்திருக்கும் ஆனைமுகப் பிள்ளைக்குத் துதிக்கையாகத் தொழிற்படுகிறது. மனம் ஒன்றித் தம்மை அன்போடு நினைந்து வணங்குகிற உயிரைத் தமது இப்புழைக் கையினால் தூக்கிச், சிவலோகமாகிய சிரசினுள் சேர்ப்பிப்பவர், விநாயகரே.

நமது நெற்றியில், புருவ நடுவில் தொடங்கி, இடுப்பில் மூலாதாரம் வரை ஓர் அமுத ஆறு ஓடிக் கொண்டிருக்கிறது. அது, நாதத்தினின்று தோன்றிய விந்து சத்தியாகும். அதற்கு ஆகாயக் கங்கை (Cerebro Spinal Fluid) என்பது பெயர். அளவிட முடியாத ஆற்றலுடைய அப்புனித அமுதத்தைக் காமாக்கினி வயப்பட்டுக் கீழ்நோக்கி வீணாக்குவோரே இன்றைய உலகில் மிகுதி. சிவாக்கினி மூலம் அவ்வுயரிய அமுதத்தைக் குண்டலினி ஆற்றலாகப் பெருக்கி, வாசி என்ற மூச்சுக் காற்றின் துணைகொண்டு மேலே எழுப்பும் வித்தையைக் கற்பிப்பவர், மூலாதார விநாயகரே.

"மூலாதாரத்து மூண்டெழு கனலைக்
காலால் எழுப்பும் கருத்தறிவித்து"...[1]

---

1 விநாயகர் அகவல் - ஔவையார்.

என்று அகவித் துதிப்பார் ஔவையார். அவரைத் தம் துதிக்கை கொண்டு, திருக்கயிலாயத்தில் சிவபெருமான் திருமுன் விரைந்து சேர்ப்பித்தார், விநாயகர் என்பது வரலாறு.

அதே போல், தம்மை நினையாதோர்க்கு அவர் இடர்களைத் தோற்றுவிக்கவும் செய்வார். தம்மை நினையாத தேவரை அச் சுறுத்துதற் பொருட்டு அவர்கள் சிவபெருமானுக்காக அமைத்த தேரின் அச்சை முறித்தவர், விநாயகரே. "முப்புரம் எரிசெய்த அச்சிவன் உறை ரதம் அச்சது பொடி செய்த அதிதீரா!" என விநாயகரது திருப்புகழைப் போற்றுவார் அருணகிரிநாதர்,

அதே போன்று. இடர்களையுமாறு வேண்டி நின்ற தம் இளவலாகிய முருகனுக்குத் தினைப்புனத்து வள்ளியைத் திரு மணம் செய்து வைத்தவர் விநாயகரே.

"அத்துய ரதுகொடு சுப்பிர மணிபடு
அப்புனம் அதனிடை இபமாகி
அக்குற மகளுடன் அச்சிறு முருகனை
அக்கணம் மணம்அருள் பெருமாளே"[2]

இடர்களை வடமொழியில் விக்கினங்கள் எனக் கூறுவர். எனவே விக்கினங்களை இவ்வாறு ஆக்கவும், அழிக்கவும் வல்ல தலைவராகிய இவரை விக்கினேசுவரன் என அழைப்பர்.

நர்த்தன விநாயகர் : நமது முதுகில் வளைந்து நெளிந்து செல்லுகிறது, சுழுமுனை நாடி; இது திருக்கோயில்களில் காணப் பெறும் நர்த்தன விநாயகரின் தோற்றத்தை நமக்கு உணர்த்து வதாகும். அவர் அவ்வாறு வளைந்து நெளிந்து ஆடவில்லை யென்றால் நம்மால் ஒரு காரியமும் செய்யமுடியாது.

சித்தி புத்தி விநாயகர் : நம் தலையினுள் அறிவுத்தான மாகிய பெருமூளை இரண்டு கூறுகளாக உள்ளது. அவ் இரு கூறுகளையும் ஒருங்கிணைக்கிற பகுதிக்கு 'கார்பஸ் கலோசம்' என்பது பெயர். பெருமூளையின் வலக் கூறு சிவனாகவும்,

---

1 திருப்பரங்குன்றம் திருப்புகழ் - அருணகிரியார்

2 மேற்படி மேற்படி

இடக்கூறு சத்தியாகவும் இருக்க, அவற்றுக்கு நடுவில் உள்ள வெண்ணிறமான இந்த மூளை இணைப்பான், தும்பிக்கை விநாயகரின் தோற்றத்தைத் தருவதாகும். ஹைப்போதாலமஸ் என்ற சித்தமும், பீனியல்பாடி என்ற நுண்ணறிவுத் தானமும் (Hypothalamus & Epithalamus)[3] சித்தி புத்தி என்ற விநாயகரின் சத்திகளாகச சிந்திக்கத் தக்கவை.

வலம் சுழி விநாயகரின் தோற்றத்தை, இருதயத்தின் வலது கூறில் சிந்திக்கும் முறைமை பற்றி முன்னரே கண்டோம். சிவயோக நெறியில், விநாயகரைப் பற்றி உள்ளுணர்வுகள் இவ்வாறிருக்கப், பரசிவம் பற்றிய எளிவந்த தோற்றங்கள் எவ்வாறு அருளப் பெறுகின்றன என்பதைக் காண்போம்.

மீதானத் தலைவர்: நம் ஒவ்வொருவருடைய உடம்பின் தலைக்கு மேலே பன்னிரண்டு அங்குல உயரத்தைத் துவாத சாந்தம் என்பர். இதனைத் தமிழில் மீதானப் பெருவெளி எனக் கூறுவர். அங்கு அளப்பரிய ஒரு பேராற்றல் குவிந்து, தன்னுள் தானாக இயங்கிக் கொண்டிருக்கிறது. அப்பேராற்றல் நம் புறக் கண்களுக்குப் புலப்படாததாயுள்ளது. இவ்வாறு அதன் தோற்றமோ, இயக்கமோ வெளிப்படையாகக் காணப் பெறாமையால், நமது அழுக்கு மனத்தாலும் அதனை அசைபோட்டுச் சிந்திக்க முடிவதில்லை. இவ்வாறு மனம் என்ற ஆறாவது அறிவுக் கருவியாலும் அப்பேராற்றலைப் பற்றிய உண்மையையோ, சிறப்பியல்புகளையோ முழுமையாக அறிய முடியா நிலையில், வாழ்த்துரைகளுக்கெல்லாம் அப்பாற்பட்டதாகவே அதி நுண்ணிய அந்த ஆற்றல் நிலவுகிறது.

அப்பேராற்றலையே பரம்பொருள் என எல்லாச் சமயத்தவரும் போற்றுகின்றனர். நம் சைவத் தமிழுலகம் அதனைப் பரசிவம் எனப் பரவித் துதிக்கிறது இடையறாத அதன் தனிப் பெரும் இயக்கத்தை அண்டவெளித் திருநடனம்' என எண்ணி மகிழ்கிறது.

''இந்து வாழ் சடையான் ஆடும் ஆனந்த
எல்லையில் தனிப்பெருங் கூத்தின்

3 இந்நூல் பக்கம் 411

வந்தபேர் இன்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தார்''[1]

எனவே நாம் இரண்டு கரங்களையும் செவ்விதே ஒருசேரக் குவித்து தலைக்குமேல் தூக்கிச், சிவபெருமான் திருவடியை வணங்குதல் வேண்டும் எனச் சைவ ஞான நூல்கள் அறிவுறுத்து கின்றன.

அப்பெருவெளியில், அவ்வாறு திருநடனமிடுவதன்றிப், பர சிவம் நமக்காக வேறு எத்தொழிலும் அங்குச் செய்வதில்லை. இங்ஙனம் பரசிவம் பரவெளியில் 'சும்மா' இருப்பது பரசிவத் தின் தனிப்பெருநிலை அல்லது சிறப்பியல்பு ஆகும் என்பர்.

அவ்வாறாயின், மீதானப் பெருவெளியில் சிவத்திற்குச் சத்தி உளதா? என்பது சிலருக்கு எழுகின்ற ஐயம். அதனை ஓர் உலகியல் உவமை கொண்டு தெளிதல் சாலும். மலருக்கு மணம் உள்ளது அதே மணம் மலரின் மொட்டினுள்ளும் நிறைந்திருக் கிறது. ஆனால் இதழ் விரிந்த மலரிலிருந்து வீசிப் பரவுகிற அந்த நறுமணம், அதன் அரும்பிலும் மொட்டிலும் இல்லையோ? எனச் சிந்திப்பின், அம்மணம் அவற்றுள் அடங்கியே இருக்கிற தன்றோ? அதே போன்றுதான், பராசத்தியும் மீதானப் பெரு வெளியில் பரசிவத்தினுள் அடங்கி, அவரைப்போன்றே எத் தொழிலும் செய்யாது இருக்கிறாள்.

சிறைப் புறத்தான் : உடல் என்பது உயிர் சிறைப்பட்டுக் கிடக்கும் இடம். மீதானப் பெருவெளியில் 'சிவமே' எனச் சும்மா இருக்கும் இறைவன், உயிர்களாகிய நமக்கு அருள் புரியத் திருவுளம் கொள்ளுகிறார். ஆதலால், நமது உச்சித்தலை (Fontanella)க்கு இறங்கி வருகிறார்.

முன்னர், இறைவனது ஆணைப்படி உயிருக்கு ஏற்றதோர் உடம்பினை வடிவமைத்தவன் பிரமன்; அவன் உயிரை உச்சிக்குழி வழியாக உடம்பினுள் பொருத்தினான்; பின், அத்தலைவாயி லையும் அடைத்தான். அவ்வாறு வேதியனால் முன்னர் அடைக் கப்பட்டிருக்கும் தலைவாயிலை இறைவன் காணுகிறார். உள்ளே சிறைப்பட்டுக் கிடக்கும் உயிர், பக்குவம் அடைந்து,

---

1 பெரியபுராணம் த.பு. 106 - சேக்கிழார்

தம்மை விரும்பி, வரவேற்கிற காலம் வரை தாம் உடம்பிற்கு வெளியிலேயே — சிறைப் புறத்தானாகவே — தங்குகிறார்.

இறை அருள் வெளிப்படுதல் : பரசிவத்தின் ஆற்றலையே பராசத்தி என்றும், திரு அருள் என்றும், அருட்சத்தி என்றும், சிவசத்தி என்றும் சித்சத்தி என்றும் பல பெயர்களால் அழைக்கிறோம். சிவபெருமான் சிறைப் புறத்தானாக உடம்பின் வெளியிலேயே தங்கினாலும், மலமாசுகளை நீக்கி நம்மைப் பேரின்பத்தில் நிலை பெற்றிருக்கச் செய்ய வேண்டும் என்ற நீங்காத பெருவிருப்பு உடையவர். ஆதலால் அவர் கருணையே வடிவான தம்முடைய பராசத்தியின் ஆயிரத்தில் ஒரு கூறினை, நம் புருவ நடு வழியாகச் சிரசினுள் அனுப்பிப், பின்தலைப் பிடரியில் ஒரு மறைப்பு ஆற்றலாகத் தங்கச் செய்து, நமது ஊழ் வினைக்கு ஏற்பவும், புதுப்புது விருப்பங்களுக்கு ஏற்பவும் நம்மை அவள் இயக்குமாறு செய்கிறார்.

''வழிபடு தெய்வம் நிற்புறம் காப்பப்
பழிதீர் செல்வமொடு வழிவழி சிறந்து...''

என்ற தொல்காப்பியச் சூத்திரத்தாலும்[1] இதனை அறியலாம். பராசத்தியின் முதல் வெளிப்பாடு இது; ஆதலால் இதற்கு ஆதிசத்தி என்பதும் பெயராயிற்று.

நம் பின்தலைப் பிடரியில் மறைப்பு ஆற்றலாய் இருந்து கொண்டு, சிவபெருமானது இறை ஆணைக்கும், உயிர்களது ஊழ்வினைப் பயனாகிய 'பாலது ஆணைக்கும்' ஏற்ப ஆதிசத்தி, நம் வாழ்வில் திருப்பு முனைகளை அமைத்துத் தன் ஆணைவழி நம்மைச் செலுத்துகிறாள். அதனால் பராசத்திக்கு 'ஆணை' என்பதும் ஒரு பரியாயப் பெயர் ஆயிற்று.

சிவசத்தி இங்ஙனம் நம் பிடரியில் தங்கித் தொழிற்படுதலால், அவள் சிவபெருமானைப் பிரிந்து வந்தனளோ? என்ற ஐயம் சிலருக்கு எழலாம். இதனை முந்தைய 'மலரும் மணமும்' உவமையினைக் கொண்டே விளக்குதல் சாலும். மலரின் மொட்டு, தன் இதழ்களைச் சற்றே விரித்துப், போது

1 தொல்காப்பியம் - புறத்திணை இயல் - சூத்.

ஆகிறது; அப்பொழுது அதன் உள்ளிருக்கும் மணம் வெளியில் பரவுகிறது; எனினும், அஃது அம்மலரை வீட்டு முழுவதும் நீங்குகிறதா? எனில், அம்மலரிலும் இருந்து கொண்டு, நமக்கும் அஃது இன்பம் தருகிற தன்றோ?

அதேபோல், உயிர்களாகிய நம்மீது கொண்ட அளப்பரிய கருணையின் காரணமாகப் பரசிவம் தனது அருளாணை என்னும் இதழ்களை விரித்தலால், அவரது ஆற்றலாகிய சிவசத்தி வெளிப்பட்டு நமது புருவ நடுவிற்கு வந்து, பிடரியில் தங்கித், தொழிற்படத் தொடங்குகிறாள். எனினும் அவள் சிவத்தை விட்டு நீங்காமல் எப்பொழுதும் உடன் இருந்து கொண்டு, நமக்கும் இன்பம் அருளுகிறாள், இதனையே ''ஆணையின் நீக்கமின்றி நிற்கும் (இறை)'' என்கிறது சிவஞான போதம்.

மாதொரு பாகன்: இறை உணர்வு இன்றி, உலக வாழ்விலேயே ஊறிக் கிடப்போர்க்குச், சிறைப் புறத்து இறைவனின் இந்த நிலையிலிருந்து எவ்வித மாற்றமும் இல்லை. அவர்களெல்லாம்.

> ''பெருநோய்கள் மிகநலியப் பெயர்த்தும் செத்துப்
> பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின் றாரே![2]

என்ற அப்பர் பெருமான் திருவாக்கிற்குச் சான்றாகி பிறவிப் பெருங்கடலில் அலைமோதி அல்லல் உறுபவரே எனினும், அவர் களுக்கும் சிறிது சிறிதாக அப்பொய்மை வாழ்விலே ஒருவித கைப்பு, கால அடைவிலே ஏற்படும்; அப்பொழுது இறைவன் திருவடியில் நாட்டம் தோன்றும். அந்த நிலையில், சிவபெரு மான் தானே அந்த ஆன்மாவுக்கு ஏற்றதொரு குருவடிவில் தோன்றிச் சிவதீக்கை புரிவார். அதனை விரிவாகப் பின்னர்க் காண்போம்): அவ்வாறு சிவதீக்கை அருள்ப்பெற்ற ஆன்மா வுக்குப் பரசிவம் அவ் ஆன்மாவின் உடம்பினுள் இருந்து திரு வருள் பாலிக்க விருப்புகிறார். ஆதலால், அதுகாறும் சிறைப் புறத்தானாக உச்சித்தலைக்கு மேலே இருந்தவர், தலையின் உள்ளே நுழைகிறார்.

---

2 அப்பர் தேவாரம் 6:95:6

நம் தலையினுள் அறிவுத்தானமாக இருப்பது பெருமூளை அஃது ஒரே பொருளாயினும், வலது, இடது என்ற இரண்டு கூறுகளை உடையது. தலையினுள் நுழைந்த பரசிவம், அந்த அறிவுத் தானத்தையே தனக்கு இருப்பிடமாகக் கொண்டு, சிவன் என்றும் சத்தி என்றும் இரண்டு கூறுகளை உடைய ஒரே பொருளாகி, பெருமூளையின் இரண்டு கூறுகளிலும் தங்குகிறது. மூளையின் வலக் கூறு சிவன், இடக் கூறு சத்தி என்ற இந்த அமைப்பு, சிவபெருமான் மாதொரு பாகனாய் (அர்த்தநாரீசுர வடிவில்) நின்று அருள்பாலிக்கும் தன்மையை நினைவுறுத்து வதாகும்.

இதுகாறும் ஓர் உருவம், ஒரு நாமம், ஓர் இடம் இல்லாத நிஷ்களனாயும், மாயா காரியங்கள் யாவற்றையும் கடந்த விஸ்வ அதீதனாயும் இருந்த பரம்பொருள், இப்பொழுது அருவநிலை நீங்கி, அருஉருவம், உருவம் என்ற எளிய சகள நிலைகளில், நமது இந்த மாயா உடம்பினுள் விஸ்வ அந்தர்யாமியாகி நின்று அருள்புரிகிறார். இதனைச் சிவபெருமானது தொழிற்படுநிலை அல்லது பொது இயல்பு எனச் சைவ சாத்திரங்கள் சிறப்பித்துப் பேசும்.

இச்சாசத்தி, ஞானசத்தி, கிரியாசத்தி: உயிர்களாகிய நாம் மலப் பிணிப்புக் காரணமாக கடைநிலைப்பட்டு அல்லலுறு கிறோம். நம்மைக் கடைத்தேற்ற வேண்டுமென்ற பெருங் கருணை கொண்டவர் சிவபெருமான். ஆதலால் ஆதி சத்தியை மேன்மேலும் எளிய தோற்றம் கொள்ளச் செய்து நம்மையும் அவளது அரவணைப்பிலே தொழிற்படுத்துகிறார். நம்மை நமது ஊழ்வினைக்கு ஏற்பவும் உய்வினுக்கு ஏற்பவும் தொழிற் படுத்துவதற்கு ஆதிசத்தி எடுத்தருளும் உருவ வேறுபாடுகள் எண்ணற்றன. அவற்றுள் மூன்று பேதங்களைச் சைவ சாத்திரங்கள் சிறப்பித்துக்கூறும்.

முற்றறிவினராகிய சிவபெருமானது அருளாற்றல் தொழிற் படும் போது, 'ஒன்றதாய் இச்சா ஞானக் கிரியை என்(று) ஒரு மூன்(று) ஆகி[1]' இச்சாசத்தி, கிரியாசத்தி, ஞானசத்தி என ஒன்றிலிருந்து ஒன்று ஆயிரத்தில் ஒரு கூறாக வெளிப்படுகிறது.

1 சிவஞான சித்தியார் - 63

சிவபெருமானுக்கு இருப்பன போன்றே, சிற்றறிவுடைய உயிர்கள் அனைத்துக்கும் இச்சை, ஞானம், கிரியை என்ற முத்திற ஆற்றலும் உலக வாழ்வில் விளக்கமுற்றுத் தொழிற்படுகின்றன. அஃது யாங்ஙனம் எனக் காண்போம்.

இச்சா சக்திக்கு இருப்பிடம் மனம்: உள்ளத்தில் விருப்பு வெறுப்புகளைத் தூண்டுவது இச்சை என்னும் ஆற்றல். அவ்வாற்றலுக்கு நிலைக்களனாயிருப்பது மனம் என்னும் கருவி. மனம் என்பது அனைத்து உயிர்களுக்கும் பொதுவானதொரு கருவியே (Universal) 'என்றாலும், ஓரறிவு முதல் ஐயறிவு வரையுள்ள உயிரினத்துக்கு, அது தெளிவற்ற நிலையில் இயங்குவதாலும் பெருமை கூறும் அளவுக்கு அவற்றிற்கு மனப் பண்பு இல்லாமையாலும் அவற்றிற்கு அமைந்துள்ள மனத்தை ஆறாவது அறிவுக் கருவியாகக் கொள்ளுவது மரபு இல்லை. மக்கள் தொகையிலும் கூட, முற்கூறிய சிறுமைப் பண்புகளிலேயே உழல்வோரை மனமுடைய மனிதராக ஆன்றோர் மதிப்பதில்லை. கீழ்மை உணர்வுகளிலிருந்து விடுபட்டவர்களே உயர்திணையுள் வைத்து மதிக்கப் பெறுவர் ஆதலால்தான் "உலகம் என்பது உயர்ந்தோர் மேற்றே" என வரையறையும் செய்தனர், ஆன்றோர்.

ஆதிசத்தியின் ஆயிரத்தில் ஒரு கூறாகிய இச்சா சத்தி. அதி நுண்ணிய கருவியாகிய இந்த மனத்தையே தனக்குத் தொழிற்படுகளமாகக் கொள்ளுகிறாள்.

ஞானசத்தியும், அறிவுக்கருவிகளும்: சுவை, ஒளி, ஓசை, ஊறு, நாற்றம் என்பன ஐம்புலன்கள். அவை முறையே நாக்கு, கண், காது, மெய், மூக்கு என்ற அறிவுக் கருவிகளை இயக்குகின்றன. அவை சிறுமூளையிலுள்ள அறிவு நரம்புகளின் (Sensory Nerves) மூலம் இயக்கப் பெறுகின்றன. இச்சா சத்தியின் ஆயிரத்தில் ஒரு கூறு, ஞானசத்தி. அவள் இந்த அறிவு நரம்புகளையே தனக்கு தொழிற்படுகளமாகக் கொள்ளுகிறாள். ஆன்ப ஞானத்திற்குக் கருவியாகிய புத்தி தத்துவம் இஃது என்க.

கிரியா சத்தியும் செயற் கருவிகளும்: கை, கால், எருவாய், கருவாய். நாக்கு என்ற ஐந்தும் செயற்கருவிகள் இவை சிறு

மூளையில் உள்ள செயல் நரம்புகளின் (Motor Nerves) மூலம் இயக்கப் பெறுகின்றன. ஞானசத்தியின் ஆயிரத்தில் ஒரு கூறு கிரியா சத்தி; அவள் இந்தச் செயல் நரம்புகளைத் தனக்குத் தொழிற்படு களமாகக் கொள்ளுகிறாள். ஆன்ம செயற்பாட்டிற்குக் கருவியாகிய அகங்காரம் என்ற தத்துவம் இஃது, என்க.

மந்திர உபதேசமும், அருள் வாழ்வின் தொடக்கமும்: முந்திய இருள் வினைகளின் தொடர்பாகவே, நாம் இப்பிறவியில் இன்ப துன்பப் பயன்களை நுகர வேண்டியதாகிறது. சிவசத்தியே, இச்சா, ஞான, கிரியா சத்திகளாயிருந்து, அவற்றை நமக்கு ஊட்டுகிறாள். அவ்வாறு ஊட்டுவதற்கு ஆன்மாவின் இச்சா ஞான கிரியா ஆற்றல்கள் துணைக் கருவிகளாகின்றன. நமது உடம்பில் இதயமும், பிடரியும் அக்கருவிகளின் இருப்பிடமாகின்றன.

இருள் வினைகள் நீங்கிய வைசுறை வாழ்வில், முன்னைத் தவம் என்ற நல்ல அருள்வினை நமது மனத்தை இயக்கத் தலைப்படுகிறது. அஃது இச்சை என்ற உயிராற்றலைத் தூண்டுகிறது; நம்மைச் சிவத்தின்பால் விருப்புக் கொள்ளச் செய்கிறது.

முன்னர் இருள்வினை ஊட்டத்தில் உலகமுகமாகத் தொழிற்படுத்தியதைப் போன்றே, இப்பொழுது அருள்வினை ஊட்டத்திலும் இச்சா, ஞான, கிரியாசத்திகள் ஆன்மாவை இறைமுகமாக ஆற்றுப் படுத்துகின்றன. எனவே இறைமை உணர்வுகள் நம் உள்ளத்தில் விரைந்து எழுகின்றன. அப்போது, சிவசத்தியாகிய ஆணை, நமது வீடுபேற்று வேட்கையைச் சிவ பெருமானிடம் சேர்ப்பிக்கிறாள்.

சிவபெருமான், தாமே நிறைமொழி மாந்தராக[1] ஒரு மானுட குரு வடிவில் எழுந்தருளி, சிவசத்தியின் பரிந்துரைக்கும், நமது வினை முதிர்ச்சிக்கும் ஏற்பச் சிவ மூலமந்திரத்தை நம் செவிகளிலே உபதேசித்தருளுகிறார். இதனைச் சிவ தீக்கை எனக் கூறுவர்.

1 ''நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திரம் என்ப'' - தொல், செய்யுளியல் 480

தேரோடும் திருவீதி: நமது மனித உடம்பில் முதுகெலும்புக் கோவைகளின் ஊடே ஒரு நரம்புத் தொகுதி அமைந்திருக்கிறது: அதற்கு முதுகந்தண்டு என்பது பெயர். திருவிழாக்காலங்களில் இறைவன் பற்பல ஊர்திகளில் திருவீதி உலா வந்து, உலக யாந்தர் அனைவர்க்கும் அருள்பாலிக்கிறான் அன்றோ? அதே போல், நமது மனித உடம்பில் சிவபெருமானுக்குத் தேரோடும் திருவீதியாகத் திகழ்வது, நம் முதுகந்தண்டு ஆகும். சடமாகிய செப்புக் கம்பியில், ஆற்றல் நிறைந்த மின் ஓட்டம் நிகழும்போது அது மிகுதியான ஆற்றலுடன் இயங்குகிறது அன்றோ? அதே போல், சிவகுருவால் நம் செவியினுள் உபதேசிக்கப்பட்ட சிவ மூல மந்திரத்தின் ஆற்றல், அன்புத்தானமாகிய இருதயத்தையும் அறிவுத்தானமாகிய பெருமூளையையும் இயக்கத் தொடங்கு கிறது. அதனால் நரம்பு மண்டலத்தில் பல மாற்றங்கள் ஏற்படு கின்றன. மைய நரம்பு மண்டலத்திலுள்ள ஆறு ஆதாரங்களும் புதுப்பொலிவு பெறுகின்றன. அங்குக் கவிழ்ந்து கிடந்த ஆறு ஆதாரத்தாமரைகளும் நிமிர்ந்து, இதழ் விரித்துச் சிவபெரு மானது எளி வந்த மூர்த்தங்களுக்கு இருக்கை ஆகின்றன.

ஆதாரங்கள் என்பன யாவை? எனில், அவை திருவிழாக் காலங்களில் திருவீதி உலாவரும் இறைவன், மெய்யடியார் திருக்கூட்டத்திற்குத் திரு அருள் பாலிப்பதற்காக ஆங்காங்கே தங்குகிற மண்டபங்களைப் போல், நம் உடம்பினுள் மைய நரம்பு மண்டலத்தில் உள்ள ஆறு தாமரை இருக்கைகளாம். அவை : மூலாதாரம், சுவாதிட்டானம், மணி பூரகம், அனாக தம், விசுத்தி, ஆக்ஞை என்பன. அவற்றுள் கீழ்நிலை ஆதாரங் கள் நான்கும் முதற்கண் பொலிவுறுகின்றன. அங்கு உள்ள தாமரை மொட்டுக்கள் முறையே நான்கு, ஆறு, பத்து, பன்னி ரண்டு இதழ்களைக் கொண்ட தாமரை மலர்களாக விரிகின்றன. அவற்றுள் மூலாதாரத் தாமரை மொட்டினை நான்கு இதழ்த் தாமரையாக மலரச் செய்து, அங்கு மூத்த பிள்ளையாராகிய விநாயகர் அமர்ந்து அருள்பாலிக்கிறார்.

மும்மூர்த்திகள் : படைப்பவர் பிரமா, காப்பவர் விட்டுணு, ஒடுக்குபவர் உருத்திரன். முத்தொழில் செய்யும் இவர்கள மும் மூர்த்திகள் என முன்னரே கூறியதுபோல, நாத வடிவினராக

நமது உச்சித் தலைவழி உடம்பினுட் புகுந்த சிவபெருமான், நமக்குச் சிவஞானத்தைத் தோற்றுவிக்கும் சிவ பிரமாவாக ஆறு இதழ் கொண்ட சுவாதிட்டானத் தாமரையிலும்,

சிவஞானத்தைக் காத்து வளர்க்கும் சிவ விட்டுணுவாகப் பத்து இதழ்கொண்ட மணிபூரகத் தாமரையிலும், மும்மலங்களை ஒடுக்கி மனமருட்சியை நீக்குகிற சிவ உருத்திரராக பன்னிரண்டு இதழ்களைக் கொண்ட அனாகதத் தாமரையிலும் தாமே மும்மூர்த்திகளாக எழுந்தருளுகிறார்.

இந்த நிலையில் சிவபெருமான், சிவசத்தி, விநாயகர், முருகன் ஆகியோர் நமது உடம்பின் கண் அமர்ந்து அருள் பாலிக்கும் முறை பற்றியும், அப்போது உயிர் ஆற்றல் குவிந்து நின்று தொழிற்படுகிற முறை பற்றியும் சிந்திப்போம். அகப்பூசைக்கு உரிய இடம் நம் உடம்பில் நெஞ்சுத் தானத்தில் உள்ள இருதயம் என முன்னரே அறிந்தோம்,

இதயத் தாமரை: நமது இருதயம் என்பது ஒரே உறுப்பு; எனினும், அதன் தொழிற்பாடு கருதி, அதனை நான்கு கூறுகளாக அறிவியலார் சிந்திப்பர். அதேபோல், இருதயத்தின் வலது மேற்பகுதியைச் சிவன் என்றும் இடது மேற்பகுதியைச் சிவசத்தி என்றும், வலது கீழ் அறையை விநாயகர் என்றும், இடது கீழ் அறையை முருகப்பெருமான் என்றும் சிந்திப்பது சிவயோக நெறியால் விளைகின்ற சைவ உணர்வு.

நமது இருதயத்தின் வலது பகுதி அழுக்கான நீலக்குருதியால் நிறைந்திருக்கிறது. அதன் மேல் அறையையும் கீழ் அறையையும் இணைத்து நோக்கினால், கரிய நிறமுடைய அகோர சிவத்தின் மடியில் ஆனைமுகப் பிள்ளை அமர்ந்திருப்பது போன்ற தோற்றம் புலனாகும். அதேபோல் இருதயத்தின் இடது கூறு தூய செங்குருதியால் நிறைந்திருக்கிறது அதன்மேல் அறையையும் கீழ் அறையையும் இணைத்து நோக்கினால், மாதுளம் பூ நிறத்து மங்கை நல்லாளையும், அவளது மடியில் அமர்ந்திருக்கும் அன்புக் குழந்தையாம் செவ்வேள் பரமனையும் (முருகனையும்) அங்குக் கண்டு மகிழலாம்

உடலின் மற்ற இடங்களிலிருந்து செங்குருதியும், நீலக் குருதியும் இடையறாது இருதயத்தின் இரண்டு மேல் அறைகளி லும் குழாய்களின் மூலம் வந்து விழுந்து கொண்டே இருக்கின் றன. இது, மெய்யடியார்கள் சிவசிந்தையோடு செய்கிற நல் வினை தீவினைகளை சிவபெருமான் தாமே அபிடேகமாக ஏற்றருளுகிற உண்மையைப் புலப்படுத்தும்.

மேல் அறைகளில் இவ்வாறு வந்து சேர்ந்த குருதி, தனித் தனியே வால்வுகள் மூலம், கீழ் அறைகளுக்கு உந்தப்படுகிறது. வலது பக்க மேல் அறைக்கும் கீழ் அறைக்கும் இடையில் இருப்பது ''மூவிதழ் வால்வு'' (Tricuspid valve). இது சிவ பெருமான் திருக்கரத்தில் உள்ள திரிசூலத்தின் வடிவத்தை ஒத்தது.

அதேபோல் இடது பக்க மேல் அறைக்கும் கீழ் அறைக்கும் நடுவில் ஓர் ஈரிதழ் வால்வு (Mitral valve) இருக்கிறது. இது முருகப் பெருமான் கையிலுள்ள வேலினை ஒத்த தோற்ற முடையது.

ஒரு தந்தையின் வாரிசாகப் பெரிதும் தலைதூக்கி நிற்பவன் தலைமகனே அன்றோ? எனவே சிவபெருமானின் ஆயுதமாகிய திரிசூலம், அவர்தம் மூத்த பிள்ளையாகிய விநாயகருக்கும் உரியது அன்றோ? இவ்உண்மையை அரண் செய்வது போல், இருதயத்தின் வலது பக்க மூவிதழ் (திரிசூல) வால்வும் அமைந் திருக்கக் காணுகிறோம்.

அதே போல், ஒரு தாயின் அன்புக்குப் பெரிதும் நிலைக் களனாக இருப்பவன் இளைய மகனே. முருகப்பெருமான் தன் அன்னையாகிய உமையிடமிருந்து 'சத்திவேலி'னைப் பெற்றுக் கொண்டு, சூரபதுமன் முதலிய அவுணரை அடக்கப் புறப்பட் டான் என்பது கந்த புராணம் அறிவுறுத்தும் வரலாறு. இவ் உண்மைக்குச் சான்று கூறுகிற ஓர் 'உடல் வெட்டு'ப்போல், இருதயத்தின் இடப்பக்க ஈரிதழ் வால்வு அமைந்திருக்கக் காணு கிறோம்.

வழிபாட்டுக் கருவிகள்: வாழ்த்த வாயும், நினைக்க மட நெஞ்சும், தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவன் சிவபெருமான்.

இவை மட்டுமா? நெக்கு நெக்கு உருகி உள்குவார் நெஞ்சத்துள்ளே நிறை ஒளியாய்க் காட்சி தந்து, நுண்ணிய வழிபாட்டுக் கருவிகளையும் அன்றோ ஆங்கே அருளியுள்ளான்!

குருதிக் குழாய்களின் மூலம், இருதயத்தில் இறைவனுக்கு இடையறாது அபிடேகம் ஆகிக்கொண்டிருக்கிறது. காற்றுப் பைகளாகிய (Lungs) நுரையீரல்கள் சாமரையாகப் பயன்படுகின்றன மண்ணீரலே (Spleen) நிலைக் கண்ணாடியாகவும் நொடிக்கு நூறாயிரம் என அங்குத் தோன்றுகின்ற குருதி அணுக்களே அலங்கார தீபமாகவும் ஒளி வட்டமிடுகின்றன. ஈரலின் (Liver) அசைவு ஆலவட்டத்தைப் போன்றது. நெஞ்செலும்புக் கூட்டின் மேற்கூரை, குடையின் வடிவத்தையும்' மூளையின் அமைப்பு, கொடியின் தோற்றத்தையும், சிறுநீரகங்களின் (Kidney) இயக்கம் ஓலை விசிறியின் அசைவினையும் உணர்த்துவன.

இவ்வாறே பற்பல உள் உறுப்புக்களும் பலப்பல திருச்சின்னங்களை ஒத்தனவாகப் பயன் தருகின்றன. இவற்றின் இருப்பையும் இயக்கத்தையும் உள்நின்று உணர்த்துபவனும் சிவபெருமானே. வலம்புரிப் பிள்ளையைத் தொழுது, வழிபாட்டினை முறையாகப் பயின்றுவரின், கால அடைவில் இவை ஒவ்வொன்றாகப் புலனாகும்.

செவ்வேள் பரமன்: நமது இருதயத்தின் இடது கீழ் அறையில் வீற்றிருக்கும் முருகப் பெருமானின் கருணை அளப்பரிது. இருதயத்தின் இடது கூற்றில், தூய செங்குருதி நிறைந்திருக்கிறது. செங்குருதிப் பூக்கள் (அணுக்கள்) ஆற்றல் மிக்கவை. நம் உச்சந்தலையிலிருந்து உள்ளங்கால் வரை, உடம்பிலுள்ள எல்லா உறுப்புகளுக்கும், செங்குருதி சேர்க்கும் வளமை, மிகவும் இன்றியமையாதது. உடல் முழுவதும் பரவுகிற செங்குருதி, ஆங்காங்கே எல்லா உறுப்புகளையும் தொழிற்படுத்தி, அதன் விளைவாகச் சேருகிற அழுக்குகளைச் சுமந்து, செம்மை மாறிய நீ ·க்குருதியாகி, மீண்டும் நம் இதயத்தின் வலது மேல் அறைக்கு வந்து சேர்கிறது. இவ்வாறு இடது கீழ் அறையில் தொடங்கி உடல் முழுவதும் பரவிய செங்குருதி வலது மேல் அறையில்

உறையும் சிவபெருமானிடம் வந்து சேருகிற வரையில், அதனைச் சிறப்பாக இயக்குபவர், செவ்வேள் பரமனாகிய முருகன் ஆவார். முருகப்பெருமான் சிவபெருமானது நெஞ்சுத் தானத்திலிருந்து தோன்றியவர் என்பது வாதுளாகமம் கூறுகிற செய்தி.[1]

இங்கே மெய்யடியார்களாகிய நமது நெஞ்சினுள் இதயக் கமலத்தில் வீற்றிருந்து, நாம் உய்யும் பொருட்டு அருள்பாலிக்கும் முருகப்பெருமான் திருவடிக்கு எவ்வாறு நாம் நன்றி செய்ய வல்லோம்? பன்னிருகை முருகனே, ஆண்டியாய்த் தண்டாயுத பாணிக் கோலத்திலும் நமது முதுகுத் தண்டில் நின்று அருள் பாலிக்கிற முறைமையை முன்னர் 'வள்ளலும் வள்ளியும்' என்ற இயலில் கண்டோம்.

திரிசூலம் என்பது மூவிலைச் சூலம். அது சிவபெருமானது ஆயுதம் என்பதை யாவரும் அறிவர். அத்தகைய சிறப்பு வாய்ந்த திரிசூலம் நமது உடம்பின்கண் இல்லாத இடமே இல்லை எனலாம்.

நமது முன் தலையினுள் பெருமூளையின் இரண்டு கூறுகளையும் ஒருங்கே நோக்கினால் அங்கே மூவிலைச் சூலம் காணப் பெறும். அதேபோல் இருதயத்தின் இரண்டு பக்கங்களும் திரிசூலத்தின் சீரிய அமைப்பே என்பதைக் கூறவும் வேண்டுமோ?

சிவபெருமானின் ஆயுதமாகிய திரிசூலத்தின் மூன்று முனைகளும் நேர்நின்று நோக்குவார்க்கு மூன்று புள்ளிகளாகத் தோன்றுதலின், தமிழ் நெடுங்கணக்கில் மூன்று புள்ளி (முப்பாற் புள்ளி)களையே ஆயுத எழுத்தாகக் கொண்டனர், ஆன்றோர். ஆயுத எழுத்தின் பிறப்பிடம், சிரசு என்று சிலரும், நெஞ்சு என்று சிலரும் கூறி முரணி நிற்பதும் முற்கூறிய இவ் அமைப்பு முறையாலேயே எனலாம்.

நுரையீரல், சிறுநீரகங்கள் முதலியனவும் திரிசூலத்தின் தோற்றத்தினை ஒத்த அமைப்புடையனவே. உடம்பின் ஒவ்வோரிடத்திலும் பெரிய நரம்புகளிலிருந்து சிறிய நரம்புகள் கிளைத்

---

1 திருமுருகாற்றுப்படை - ஆறுமுக நாவலர் பதிப்பு

நுச் செல்லுகின்றன அவை ஒவ்வொரு இணைப்பும் திரிசூல அமைப்புடனேயே காணப் பெறுதல் உன்னி உணர்வார்க்கு இன்பம் பயப்பன அதேபோல், பெண்மையின் சின்னமாக விளங்கும் கருவாயும் திரிசூல அமைப்பினதே. இடகலை, பிங்கலை வழியாக இயங்குகிற பிராணவாயு நடுவிலுள்ள சுழுமுனை வழியாகக் குண்டலினி ஆற்றலை மேல் நோக்கி எழுப்புவதும், திரிசூலத் தோற்றமே.

சிவசூரியன்: திருக்கோயில் கருவறை போன்றது நம் இதயம். இதனைச் சூரிய மண்டலம் என நோக்குவது சைவ மரபு. இங்கே சிவபெருமான் வீற்றிருந்து, நாம் மனத்தூய்மையோடு செய்கிற அகப்பூசனைகளை ஏற்றருளுகிறார். காலை இளஞ்சூரியன் தன் செங்கதிர்களை விரித்துக் கொண்டு கடலிலிருந்து வெளித் தோன்றுவது போலச் சிவபெருமானும் சிவசூரியனாக நம் உடம்பின் நெஞ்சுத்தானத்தில் குருதிக் கடலிலிருந்து எழுந்தருளுகிறார். சூரியனைக் கண்ட இதயத் தாமரை மலர்கிறது. அகஇருள் நீங்குகிறது. 'இருளாய உள்ளத்தின் இருளை நீக்கி' எனப் பண்ணிசைப்பார் அப்பர் அடிகள்[1]

மால் விடையன்: நமது உடம்பின் வயிற்றுப் பகுதியே அப்பு மண்டலம். பரந்தாமன் பள்ளி கொண்ட பாற்கடலைப் போன்றது, இது. வயிறாகிய பாற்கடலில், குடலனைய அலைகளின்மேல், உணவுப் பையின் வடிவத்தில், உடல்காக்கும் உத்தமனாய்ப் பரந்தாமன் பள்ளி கொண்டனன். காரிய விட்டுணுவாகிய அவன் ஓர் அமுதுப்பிரியல் என்பது, உணவுப் பையில் அவன் உறைவதிலிருந்து தெளிவாகும்.

தனக்கும் மேலோனாகிய பரசிவத்தைப் பாங்காகப் பூசை செய்யும் பண்பாளன் திருமால் என்பதும், அவ்வப்போது இடப ஊர்தியாகிச் சிவத் தொண்டு செய்பவன் என்பதும் வரலாற்று உண்மைகள் குருவாயூர், திருவரங்கம், திருவாரூர் முதலிய தலங்களிலுள்ள பள்ளிகொண்ட பெருமாள், பரசிவத்தைத் தன் இடக்கையில் ஏந்தி, வலக்கையால் மலர்கொண்டு வழிபடுகிற பெற்றிமை சைவ வைணவ சமயங்களின் மிக நெருங்கிய ஒருமைப்பாட்டை உணர்த்துவதாகும்

---

1 திருத்தாண்டகம் - அப்பர்

''கடகரியும் பரிமாவும் தேரு(ம்)உகந்(து) ஏறாதே
இடப(ம்)உகந்(து) ஏறியவா(று) எனக்(கு)அறிய
இயம்பேடீ
தடமதில்க(ள்) அவைமூன்றும் தழ(ல்) எரித்த அந்நாளில்

இடபமதாய்த் தாங்கினான் திருமால்காண் சாழலோ''[2] என்ற திருவாசகச் செய்யுள் இக்கருத்தினை அரண் செய்வதாகும்.

நமது உடம்பில் இரைப்பையே இடபம்; இருதயமே சிவ பெருமான்; இடைப்பட்ட உதரவிதானமே இறைவன் திருவடி என்றவாறு அமைந்த உடற்கட்டிலிருந்தும் இவ்வுண்மைகள் புலனாம். நமது உடம்பிற்கு வெளியே உள்ள பொருள்களை அறிவதற்கு கண், காது, மூக்கு, நாக்கு, தோல் என்ற அறிவுக் கருவிகள் உள்ளன. ஆனால் உடம்பின் உள்ளே இருப்பதாகப் பாவனை செய்யப் பெறும் இறைவடிவ உண்மைகளை அறி வதற்கு நம்மிடம் எத்தகு கருவிகள் உள்ளன? எங்கு உள்ளன? அவற்றின் இயல்புகள் யாவை? என்பன பற்றிப் பலரும் வியந்து நோக்குவர். அவர்களுக்குச் சைவ சித்தாந்தம் அறிவுறுத்துகிற உடலியல் உண்மைகளைப்பற்றி ஓரளவு சிந்திப்போம்.

சிவபூமி : சிவதீக்கைக்கு முன், நம் உடம்பாகிய சிறைக்குப் புறத்தில் இருக்கிறார் சிவபெருமான். சிவதீக்கையின்போது, மூலமந்திர ஒலியால், நம் தலையிலுள்ள உச்சிக்குழி திறக்கிறது. அப்போது சிவபெருமானும் அம்மூல மந்திர வடிவிலேயே நம் உடம்பினுள் திருவடி வைக்கிறார். அப்பொழுதிருந்துதான் நமது இந்த உடம்பு ஒரு 'சிவபூமி' ஆகிறது. அதுகாறும் 'பேசாது' (Mute - ஆகக்) கூம்பிக்கிடந்த நம் பெருமூளையாகிய தாமரை மொட்டு, ஆயிரம் இதழ்களைக்கொண்ட அழகிய தொரு தாமரைப் போதாக மலர்கிறது.

இதுமுதல், சிவபெருமான் நமது பெருமூளையின் வலக்கூறி லும், அவரது அருட்சத்தி இடக்கூறிலும் இருந்து, நம்மை உயர்ந்த நெறிகளிலே இயக்கத் தலைப்படுகின்றனர். இவ்இரண்டு கூறுகளுக்கும் இடையிலுள்ள மூன்றாம் நாளம் கந்தவேளுக்கு நிலைக்களன் ஆகிறது.

---

2 திருச்சாழல் - 15 - மணிவாசகர்.

இருதலை மணியன்: இப்போது, புனிதமான இப்பூமியின் இருமருங்கிலும் நுண்ணிதே அடைபட்டுக் கிடந்த இரண்டு மூலாதார வாயில்களும் திறக்கின்றன. ஒன்று, நம் தலை உச்சியில் உள்ள மூலாதார வாயில், மற்றது நம் அடி வயிற்றிலுள்ள மூலாதார வாயில்.

நெற்றிப் புருவங்களுக்கு மேலுள்ள தலையின் பகுதியைச் சுத்தமாயை என்றும், அதன் கீழ் உள்ள உடற்பகுதியை அசுத்த மாயை என்றும் கண்டோம். எனவே, தோற்ற முறையில், சுத்தமாயையில் இருப்பது 'தலை வாயில்' என்றும் அசுத்த மாயையில் இருப்பது 'கடைவாயில்' என்றும் அழைக்கப்பெறும். அதேபோல், ஒடுக்க முறையில் இவ்வாயில்கள் மாற்றியும் கொள்ளத் தக்கனவாம். ஆதலால், அருளாளர், இருமுனை வாயில்களை உடைய மைய நரம்பு மண்டலத்தை, 'இருதலை மணியன்' என்று அழைத்தனர். இதனுள் இயங்கும் குண்டலினி ஆற்றலைத் துணைக்கொண்டு, ஆன்மாவை முத்தி நிலைக்கு ஏற்றுகிற சிவமூல மந்திரமும் இருதலை மணியனாகவே விளங்கக் காணலாம்.

தலையின் மூளைப் பகுதியையே தனக்குத் தொழிலகமாகக் கொண்ட சிவபெருமான், அடிவயிற்று மூலாதாரம் வரை தன் அருளாட்சியை நாம் அறியுமாறு புலப்படுத்துகிறார்.

கீழ் மூலாதாரம்: அடிவயிற்று மூலாதாரத்தில் எப்பொழுதும் நெருப்பு எரிந்து கொண்டிருக்கிறது. நாம் சிறிது நேரம் உட்கார்ந்து எழுந்த இடம், சுடுகிறதன்றோ? பலபல காமத்தராய் வாழ்வோர்க்கு, அது காமாக்கினியாய்ச் சுட்டு எரிக்கின்றது; சாதாரண இயல்பினருக்கு, அது சாடராக்கினியாக எழுந்து உடல் வளர்ச்சிக்கு உதவுகிறது. முத்தி பஞ்சாக்கரத்தை முறைப்படி சிந்திக்கிற உயர்நிலை ஆன்மாக்களுக்கு அந்த மூலாதார அக்கினியையே, சிவாக்கினியாக மூண்டு எழச் செய்து, மும்மல இருளை ஒடுக்கி, இறை ஒளியுடன் திகழுமாறு அருள் புரிகிறான் சிவபெருமான்.

இதனால், மணிவாசகர் போன்ற முறுகிய சிவஞானிகள், பரமுத்தி அடையும்போது, தம்பூத உடம்பை, இந்தச்சிவாக்கினி

கொண்டு, தானாகவே எரித்து, ஒளிப் பிழம்பாக எழுந்து, உச்சித் தலைக் கடைவாயிலைத் திறந்து வெளியேறி, மீதானப் பெருமான் திருவடியைச் சேர்கின்றனர் என்ற கருத்து, மிகுதியும் ஏற்புடையதாகவே தோன்றுகிறது.

"முக்கு ணம்,புலன் ஐந்துடன் அடக்கி
மூல வாயுவை எழுப்பி,(இ)ரு வழியைச்
சிக்கெ னும்படி அடைத்(து)ஒரு வழியைத்
திறந்து, தாண்டவச் சிலம்பொலி யுடன்போய்த்
தக்க அஞ்செழுத்து ஓர்எழுத்து உருவாம்
தன்மை கண்(டு)அருள் தரும்பெரு வெளிக்கே
புக்க அழுந்தினர் எமது(உ)ருப் பெறுவார்
புவியில் வேட்டுவன் எடுத்தமென் புழுப்போல்"[1]

மேல் மூலாதாரம்: தொடர்வண்டித் தடஅமைப்பில் மீட்டர் அளவு இரயில் பாதை (Meter Gauge) என்றும் அகல இரயில் பாதை (Broad Gauge) என்றும் இரண்டு வகை உள்ளன அன்றோ? அதேபோல் நம் உடம்பினுள் இருக்கிற ஆறு ஆதாரங்களும் 'மீட்டர் கேஜ்' இரயில் தடத்தை ஒத்தன. உச்சிக்குழியாகிய சகஸ்ராரம் தொடங்கி, மீதானம் என்ற பரவெளி வரையுள்ள பகுதி அகலப் பாதையின் (Broad Gauge) அமைப்பை ஒத்தது. உச்சிக்குழி என்பது ஆறு ஆதாரங்களுக்கும் மேலே உள்ளமையால், இது நிராதாரம் எனச் சாத்திரங்களில் உணர்த்தப் பெறுகின்றன.

சிவபெருமான் மந்திர வடிவினன்; நாததத்துவம்: பெருமூளைக் கூறுகளின் தனித் தன்மையிலிருந்து நாம் சில தத்துவ உண்மைகளை உணர முடிகிறது. பெருமூளையின் வலக்கூறு ஞானத்தின் நிலைக்களன். இது நாத தத்துவம் ஆகும். ஒலிவடிவான இத் தத்துவத்தின் தலைவர், சிவன். யாதொரு 'தொழிலும் செய்யாமல் 'சிவமே' என இருப்பவர் சிவன்.

'மூ அண்ணல் தன் சந்நிதி முத்தொழில் செய்ய,
வாளா மேவு அண்ணல்...''[2] எனப்

---

1 திருவாதவூரர் புராணம்.
2 திருவிளையாடல் புராணம் - கடவுள் வாழ்த்து, 6.

போற்றுவார் பரஞ்சோதியார். இங்கு இவ்வாறு பேசாது (Mute) இருக்கும் பெருமானது திரு ஐந்தெழுத்தினைப் 'பேசா எழுத்து' என்று போற்றிக், கொடி ஏற்றுவார் உமாபதி சிவனார்.[1]

இப்பகுதி நமக்கு அருளுவது பரஞானம் ஆகும். ஒன்றிய மனத்தால் சிந்திக்கப் பெறுகிற சிவமூல மந்திரம் (முத்தி பஞ்சாக்கரம்) நாத தத்துவமாகிய இந்த வலக்கூற்றுப் பெருமூளையினுள் ஓர் இறை அதிர்வினை (Spiritual Vibration-ஐ) ஏற்படுத்துகிறது.

அந்த ஒலி அலையும், அதன் அதிர்வுகளும் அதன் பக்கத்தில் உள்ள பிறை வடிவினதாகிய பெருமூளை இணைப்பானில் (Corpus Collosum) சிவ ஆற்றலைப் பெருக்குகின்றன; அதனைச் சிவலிங்க வடிவினதாக்கிச் சிவபெருமானது பிச்சாடன ஆண்மைப் பொலிவோடு அதனை விளங்கவும் செய்கின்றன.

விந்து தத்துவம்: செயற்பாட்டின் ஆணைத்தானபாக இருப்பது, பெருமூளையின் இடக்கூறு. இது விந்து தத்துவம் ஆகும் ஒளி வடிவான இத்தத்துவத்தைத் தொழிற்படுத்துபவர், சிவசத்தி. சிவபெருமானது உள்ளக் கருத்தையே (சங்கற்பத்தையே), தனக்கு அவர் இட்ட ஆணையாகக் கொண்டு, ஐந்தொழில் இயற்றுபவள் சிவசத்தி. உயிர்களோ மும்மலப் பிணிப்பின் காரணமாக உறங்கிக் கிடக்கின்றன. அவற்றின் இறைமைப் பண்புகளையெல்லாம் புத்துணர்வு பெறுமாறு, சிவசத்தி என்ற அருள் ஆற்றல், இங்கிருந்து கொண்டுதான், உசுப்பி எழுப்புகிறாள்.

சிவபெருமானது அருளாற்றலை 'வனப்பு ஆற்றல்' என்றும், சிவ என்பதில் உள்ள வகரம் வனப்பு ஆற்றலைக் குறிக்கும் என்றும் தமிழ் அறிஞர்கள் கூறுவர். எனவே வகரம் என்ற திருஐந்தெழுத்

1 ''அஞ்(சு) எழுத்து(ம்) எட்(டு) எழுத்து[ம்]
ஆ[று] எழுத்தும் நா[லு] எழுத்தும்
பிஞ்[சு] எழுத்தும் மேலைப்பெரு எழுத்தும்-நெஞ்[சு] அழுத்திப்
பேசு[ம்] எழுத்துடனே பேசா எழுத்தினையும்
கூசாமல் காட்டக் கொடி.''-கொடிக்கவி, உமாபதி சிவனார்,

தினைப் 'பேசும் எழுத்து' என்று போற்றுவார் உமாபதி சிவனார்[1] அறிவுத் தானத்தின் இப்பகுதி நமக்கு அருளுவது அபரஞானம் ஆகும்.

இவ்வாறு பேசா எழுத்தும், பேசும் எழுத்தும் இணைந்த நமது பெருமூளையின் வலது, இடது கூறுகளாகிய இரண்டு ஞான ஊற்றுக்களும், அன்னை உமையவளின் மார்பகங்களை ஒத்தன. பெருமூளையின் கீழ்ப் பகுதியிலுள்ள 'பால் ஊட்டகங் கள்' (Mamillary bodies) இதற்குக் கட்டியம் கூறுகின்றன

மூன்றாண்டுக் குழந்தைக்குச் சீகாழிப்பதியில், உமை அம்மை திருமுலைப்பாலில் பரஞானத்தையும் அபர ஞானத்தையும் குலந்து ஊட்டிய வரலாறு யாவரும் அறிந்ததே. நம்மில் பரமுத்தி வேட்கையோடு, முறையான சைவ நெறிநிற்கும் ஒவ்வொரு வருக்கும், அத்தகைய ஞானப் பாலினை ஊட்டுவதே அவளது விருப்பம்.

மெய்யடியார்கள் தவநெறியில் முதிர முதிரத், தலைவியின் நிலைக்கு உயர்கின்றனர். அப்போது மாயையினாலான உடம் பிலுள்ள பசுகரணங்கள் சிவசத்தியின் திருவருளால் பதிகரணங் களாக விளக்கமுறுகின்றன. அவர்கள் 'அருட் பெண்டிர்' ஆகின் றனர். அவர்களுடைய பெருமூளையின் இரு கூறுகளும் அச்சிவ ஞானப் பெண்டிர்தம பருத்த கொங்கைகள் ஆகின்றன.

''தன்னிலைமை மன்னுயிர்கள் சாரத் தரும் சத்தி
பின்னமிலான் எங்கள் பிரான்...[1]

சங்கத் தமிழ் நூல்களிலும், சைவ சமய இலக்கியங்களிலும் இக்கருத்து ஏற்றமுறக் குறிப்புணர்த்தப் படுவதைக் காணலாம்.

சாதாக்கிய தத்துவம்; பெருமூளையின் இருகூறுகளுக்கும் நடு வில் பிறைமதி வடிவில் உள்ளது, மூளை இணைப்பான் (Corpus Collosum). இது, சாதாக்கிய தத்துவம் ஆகும். ஞானமும் செயலும் சம அளவில் நிலவுகிற இத்தத்துவத்தின் தலைவர் சதா சிவம்.

---

1 திருவருட்பயன் - உமாபதிசிவம்.

நமது உடம்பில் சுத்த மாயைக்கும் அசுத்த மாயைக்கும் நடுவில் ஓர் எல்லையாக அமைந்திருப்பது இப்பிறைமதியே. இஃது ஆண்மைப் பொலிவு நிறைந்த சிவபெருமானது பிச்சாண்டிக் கோலத்தை நினைவுறுத்தும். தவமே சிறந்ததெனத் தருக்குற்றதாருகா வனத்து இருடிகளுக்கும், 'கற்பினும் உயர்ந்த தான கடவுள் வேறு இல்லை' என்று கருதியிருந்த அவர்தம் பெண்டிர்க்கும், அறிவுத் தெளிவூட்டுவதற்காகச் சிவபெருமான் கொண்ட அம்மணக் கோலமே பிக்ஷாடனக் கோலமாகும்.

ஈசுவர தத்துவம்: நமது தலையில் மூன்றாம் நாளத்தின் பின்புறம் கொடிபோல வளர்கிறது ஓர் அரிய உறுப்பு. அதனை ஞானக் கருப்பை எனவும் சாலும் (Pineal body). இதுவே ஈச்சுர தத்துவத்தின் இருப்பிடமாகும். இங்கு ஞானம் குறைந்து அருட் செயல்கள் மிகுந்திருக்கும். இத்தத்துவத்தின் தலைவர் மகேசுவரர். இங்கு இறைவன் திருஅருள் மறைந்திருந்து தொழிற்படுகிறது. சிவஞானக்கரு வளரும் இடம் இதுவே.

சுத்த வித்தை தத்துவம்: : பெருமூளையின் அடிப்பகுதியில் உள்ள தலைமைச் சுரப்பிக்குப் பிட்யூட்டரி (Pituitary) என்பது பெயர். இது சுத்தவித்தை என்ற தத்துவத்தின் இருப்பிடமாகும். நமது உடலில் மூலாதாரம் முதலிய ஆதாரங்களுள், இது ஆறாவது ஆதாரமாகும். இதற்கு ஆணைத்தானம் என்பது பெயர். சிவ ஆணையை ஏற்பதாலும், உயிர், உடம்பு, உலகம் முதலிய யாவற்றையும் தன் ஆணைவழிச் செலுத்துதலாலும் சிவசத்திக்கு ஆணை என்ற பரியாயப் பெயரும் உள்ளது. இந்த ஆதாரத்தில், திருவடிச் சார்புடைய துரிய நிலையில் உயிர் அணைகிறது. இங்கு ஆன்மாவின் சுய இயக்கத்தை விட, இறை இயக்கமே மேலோங்கி நிற்கிறது. சுத்த வித்தை என்ற இப் புனித இடமே நமது இப்பூவுலக வாழ்வில் ஆண்டவன் ஆன்மாவைப் புணர்ந்து பேரின்பம் ஊட்டுகிற 'ஆன்ம அல்குல்' ஆகும்.

"அந்தமில் சிறப்பின் ஆகிய இன்பம்
தன்வயின் வருதலும் வகுத்த பண்பே" -

என்பது பழம்பெரும் தமிழ்ச் சான்றோனின் அனுபவக் கூற்று.[1]

---

1 தொல் - பொருள் 239

''காம பாண(ம்) அட்(டு), அனந்த
கோடி மா தரைப் புணர்ந்த
காளை ஏறு கர்த்த(ன்) எந்தை அருள்பாலா''1

என்பது முருகன் அருளால் ஞானத் தெளிவு பெற்ற அருணகிரியின் வாக்கு.

சிவயோக தியானத்தின் போது உயிர் ஐந்து ஆதாரங்களைக் கடந்து, ஆறாவதாகிய இந்த ஆணைத் தானத்தை அடைகிறது. மற்ற அனைத்துத் தத்துவச் சட்டைகளையும் களைந்த அம்மண நிலையில் பிராணவாயு, உள்ளம் என்ற இரண்டு மட்டும் துணை நிற்க, உயிர் துரியத்தில் நிற்கிறது.

சிவபெருமான் மந்திர வடிவினராய் நின்றும் மூன்றாம் பிறை வடிவ மூளை இணைப்பானை இயக்குதலால் சிவத்தின் கூறாகிய வலப்பகுதியும், சத்தியின் கூறாகிய இடப்பகுதியும் பொருந்துகின்றன. அப்பொழுது அரியதோர் இறை ஆற்றல் அங்குத் தோன்றுகிறது. ஆளுமைமிக்க அப்பேராற்றலில் ஆண் இருக்கிறது, பெண் இருக்கிறது, அலியும் இருக்கிறது. சிவம் என்ற அது, மெல்லிய பெண்ணியல்புடைய, தூய ஆன்மாவை நம் தலையினுள் சுத்தவித்தை என்ற இடத்தில் புணர்ந்து இன் புறுத்துகிறது (இடந்தலைப்பாடு). அதனால்தான் மந்திரங்கள் பண்டு தொட்டே நம் தமிழ் மரபில்[2] தனிச் சிறப்புடன் விளங்குகின்றன. இவ் வைந்து சிவதத்துவங்களும் அமைந்துள்ள இடம், நமது தலையினுள் பெருமூளைப் பகுதியாகும்.

குண்டலினி: குண்டு[1], குண்டம்[2], குண்டலம்[3], குண்டலி[4], குண்டலினி[5] என்றவாறு இச்சொல்லைச் சிந்திப்பது பொருள் விளக்கத்துக்குத் துணை செய்யும். இவை முறையே 1) ஆழம், 2) நீர்நிலை, ஓமகுண்டம், 3) வட்டம், 4) பாம்பு எனப் பொருள் உடையன.

---

1 புள்ளிருக்கு வேளூர்த் திருப்புகழ் - 4

2 ''நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திரம் என்ப''
தொல்காப்பியம், செய்யுளியல் - 480

நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என்ற பூதத்துவப் பகுப்புடைய நமது உடம்பினுள் ஆழ்கடல் பகுதியாய் இருப்பது மணிபூரகம் என்ற நாபிக் கமலம். அதன் அடித்தள நிலப்பரப்பாக இருப்பது சுவாதிட்டானம் என்ற அடிவயிறு. மணிபூரகத்தை நீர்ப்பகுதி (அப்பு தத்துவம்) என்றும் சுவாதிட்டானத்தை நிலப்பகுதி (பிருதிவிதத்துவம்) என்றும் கொள்ளுவது சைவமரபு. இவற்றிற்கு ஆதாரமாக இருக்கிறது மூலாதாரம். இஃது கருவாய்க்கும் எருவாய்க்கும் இடையில் அமைந்துள்ளது. மூலாதாரம் என்ற ஓமகுண்டத்தில் மூண்டு எரிகிற அனல், ஒளியுடைய சிவசோதியாய்த் திகழும் இடம் சுவாதிட்டானம். மேலிருந்து வீழ்கிற ஆகாயகங்கை (விந்து சத்தி) கீழே எரிந்து கொண்டிருக்கிற சிவாக்கினி என்ற நெருப்பின் வெப்பத்தால் ஆவியாகிச் சுழித்து வட்டமிட்டு மீண்டும் மேல் நோக்கி எழத் தொடங்கும் இடம் சுவாதிட்டானம்.

மேலும், மூளை முதுகுத்தண்டு உள்ளிட்ட மைய நரம்பு மண்டலமும், அதனுள் இயங்கும் இறை ஆற்றலும் ஓங்கார வடிவத்துடனும், நீண்டதொரு பாம்பின் வடிவத்துடனும் காட்சி அளிக்கின்றன. எனவே நம் உடம்பினுள் சிவசத்தியால் இயக்கப் பெறும் விந்து தத்துவத்தைச் சிவஞானிகள் 'குண்டலினி சத்தி' என்றே குறித்து வணங்கினர். சுவாதிட்டானம் என்ற ஆதாரத்தில், ஓமகுண்ட நெருப்பின் வெப்பத்தால், ஆவியாகச் சுழித்துப், பாம்புபோல் வளைந்து மேலே ஏறும் விந்து சத்தியைக் 'குண்டலினிப் பாம்பு' என அன்போடு அழைத்தனர்.

நெருப்பின் ஆற்றலால் உணவு ஆக்குகிறோம்; ஆனால் நெருப்பிலேயே உணவினைப் போடுவதில்லை. நீர் ஆவியின் ஆற்றலால் இயந்திரங்களை இயக்குகிறோம், ஆனால் நீரினையே இயந்திரத்தில் நேராகச் செலுத்துவதில்லை. கருட மந்திரத்தின் ஆற்றலினால் பாம்பு கடித்த விஷத்தை இறக்குகிறோம். ஆனால் பறக்கும் கருடனையே கொண்டு வருவதில்லை. இவையே போல்தான், குண்டலினி ஆற்றலும். அது நமது சிவதியானத்திற்கு ஏற்றவாறு, தானாகவே மேல்நோக்கி ஏறுகிறது. அவ்வாறின்றி உடலின் உறுப்புக்கள் இடம் பெயர்தலோ, ஆற்றலை நாம் முயன்று ஏற்றுதலோ இல்லை. மூலாதார சிவாக்கினியும்

ஆகாயகங்கையாகிய விந்துசத்தியும் புணரும்போது, வேத மந்திரங்களின் மீ ஒலி ஆற்றலால், ஒரு வேதியல் மாற்றம் ஏற்படுகிறது. அதன் விளைவாகிய ஆற்றலையே குண்டலினி சத்தி என்கிறோம். அந்த ஆற்றலே அரிய முறையில் இயங்குகிறது. எந்த ஒரு தசையோ, நரம்போ, எலும்போ, நீரோ, நெருப்போ அவைய பிறவோ இங்கு இடம் பெயர்தல் இல்லை. அவற்றை வலிதே ஏற்ற முயன்றால், வேறுவகையான தீய விளைவுகள் ஏற்படலாம். இவ்வுண்மையை அறிவுறுத்த வந்த தொல்காப்பியரும், நிலம் மயங்குதல் இல்லை' என்ற கருத்தினை உணர்த்துதற்காக

''திணை மயக்குறுதலும் கடிநிலை யிலவே
நிலன் ஒருங்கு மயங்குதல் இன்று...''

என நூற்பா[1] யாத்தனர்.

முதற்பொருளாகிய நிலம் மாறுவதில்லை. அதன் ஆற்றலே திரிவுபட்டு மாறுகிறது. ஒரு நிலம் பிறிதொரு நிலமாகிறது. (எ-டு) பாலை, நெய்தலாகிறது

முத்தி நெறியில் ஆதிசத்தி : பராசத்தியின் முதல் வெளிப்பாடு ஆதிசத்தி என்றும், அவள் நம் பின்தலைப் பிடரியில் மறைந்திருந்து, நமது ஊழ்வினை நுகர்ச்சிக்கு ஏற்ப உயிரை இயக்குகிறாள் என்றும் முன்னர்க் கண்டோம். இது காறும் ஊழ்வினைக்கு ஏற்ப உயிரைக் கீழ்நோக்கிச் செலுத்திக் கொண்டிருந்த ஆதிசத்தி, இப்பொழுது தானே அருட்சத்தியாகி, உயிரை இறைவன் திருவடிக்குச் செலுத்துகிறாள்.

முத்தித் திருஐந்தில் ஆன்ம நலன் : அடிவயிற்றின் மூலாதாரத்துக்கும், நெஞ்சுத் தானத்துக்கும் இதுவரை போக்குவரவு புரிந்து கொண்டிருந்தது உயிர். ஒவ்வொரு நாளும் இடையறாது முத்தித்திரு ஐந்தெழுத்தினை முறையாக ஓதி அந்தர்யாகமாக எரி ஒப்பி வழிபாடு இயற்றுதலால், அதன் உள்ளத்து அடி ஆழத்தில் மீ ஒலி[1] தோன்றுகிறது. சுவாதிட்டானத்தில் சிவஞானாக்கினி சுடர்விட்டு ஒளிர்கின்றது.

---

1 தொல், அகத் – 12

1 மீ ஒலி (Ultra Sound) மூலம் உடலின் உள்ளே இருக்கும் உறுப்புக்களை, அறுக்காமலேயே மின்படத்தில் (Seanning) காணமுடியும் என்ற இக்கால அறிவியல் கணிப்பை முன்னரும் கண்டோம், சிவநாதம் என்பது பரஒலி. அஃது இந்த மீ ஒலியைவிடப் பலகோடி மடங்கு நுண்ணிய ஆற்றல் உடையது என்பதை நாம் உணர்தல் வேண்டும்.

பூப்பு எய்திய தலைவியாக ஆன்மாவும், அதன் ஆருயிர்த் தோழிகளாக மனம் முதலிய உட்கருவிகளும் மிகவும் பண்பட்ட நிலையினை அடைகின்றன. மனமும் ஆன்மாவும் மூலதாரத்துச் சிவஞானாக்கினியில் குளித்துத் தூய்மையுறுகின்றன. செந்தழல் மேனியானின் செவ்விய வடிவத்தையே ஆன்மாவும் பெறுகிறது. இதனைச் 'சாரூபம்' என மொழிவர்.

(முதுகின்) சுழுனை நாடியில் மூலாதாரம் முதலிய ஐந்து ஆதாரங்களும், (சிரசின்) மூளைப் பகுதியில்) ஆக்ஞை (ஆணை) என்ற ஆறாவது ஆதாரமும் இருப்பதை முன்னரே கண்டோம்.

மூலாதாரத்தில் விநாயகரும், சுவாதிட்டானத்தில் சிவ பிரமாவும், மணிபூரகத்தில் சிவ விட்டுணுவும், அனாகதத்தில் சிவருத்திரனும், விசுத்தியில் மகேசுவரனும், ஆக்ஞையில் சதா சிவனும் ஆதாரத் தெய்வங்களாக எழுந்தருளி, இறைபேரின்பத்தையே குறிக்கோளாகக் கொண்ட ஆருயிரின் பேநிலைப் பயணத்திற்கு அருந்துணை புரிகின்றனர்.

சுழுனையின் ஆதார தெய்வங்களை வணங்கிக்கொண்டே விந்துசத்தி விரைந்து மேலே எழுகிறது இடகலை பிங்கலை என்ற இரண்டு நாடிகளின் வழியாக முன்னர்ச் சிரசிலிருந்து இறங்கி வந்தமையால், சுழுமுனை நாடியினுள் ஏறும்போதும், ஆங்காங்கே ஆதார தெய்வங்களுக்கு உரிய இரண்டு சத்திகளாகவே அது விளங்குகிறது. (எ.டு) பிரமனுக்குக் காயத்திரி, சாவித்திரி.

இவ்வாறு சுழுனையில் இயங்குகிற குண்டலினி சத்தியின் துணையோடு, ஆன்மா ஒவ்வோர் ஆதாரத் தெய்வத்தையும் வலஞ்சுழித்து வணங்கிக் கலித்துக் கலித்து (Vertical - ஆக) மேலே ஏறுகிறது. கொழுகொம்பு தழுவி ஏறுகிற கொடிநிலையினைப் போன்று, இந்த ஆன்ம எழுச்சி அமைகிறது.

இவ்வாறு ஐந்து ஆதாரங்களைக் கடந்து சீவன்முத்தான்மா தலையினுள் நுழைகிறது; தலைவனைக் கூடுகிறது.

ஞான நிலை; (நான்காம் படிநிலை): ஞானம் என்பது என்ன? மெய்ப் பொருளாகிய பரசிவத்தைக் கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்தலையே, ஞானம் என்பர். சிவஞானம், பதிஞானம், உண்மை அறிவு, மெய்யறிவு போன்ற பல பெயர்களாலும் இதனை அழைப்பர்.

உண்மை அறிவு என்பது வேறு, உலகியல் அறிவு, உயிர் அறிவு என்பன வேறு என்பதை நாம் தெளிவாக உணர்தல் வேண்டும். பொதுவாக அறிவு வளர வேண்டுமானால் ஆன்றோர் சொற்களை உன்னிப்பாய்க் கேட்டு அதனை மீண்டும் மீண்டும் சிந்தனையில் அசைபோட்டு, அக்கருத்தின்கண் எழு கின்ற ஐயங்களை எல்லாம் தெளிந்து, இறுதியில் அதிலேயே ஒன்றிவிடுதல் வேண்டும். இதனை, கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டைகூடல் என வரிசைப்படுத்துவர். உலகியல் ஆயினும், ஆன்மீகமாயினும் இறையியலே ஆயினும் எவ்வகைக் கும் இது பொருந்தும்.

உலக தத்துவ அறிவும், ஆன்ம இயல்பு தொடர்பான அறி வும் பெறுவதற்கு அருள் நூல்களும் ஆன்றோர் அனுபவ மொழி யும் துணை புரியும். ஆனால் இறைமை பற்றிய அறிவு இறைவன் ஒருவனாலேயே ஊட்டப்பெறுவது இதனையே பதி ஞானம் என்பர். இது சுத்தமாயையினை ஆதாரமாகக் கொண்டு நிகழ் வது. தத்துவ அறிவு புறச் செவிகளால் கேட்டு அறியப்படுவது ஆனால் இறை அறிவினை நுண் செவியால் மட்டுமே கேட்டு உணரலாம்.

சிவன் பேரின்பப் பொருள்; ஞானமே வடிவானவன்; காலத் தால் மட்டுமன்றித் தன்னியல்புகளாலும் எவ்வித மாற்றமும் இல்லாத நிலைபேறுடையவன். அவன் அருளாலேயே அவன் திருவடியினை அணைந்து, ஆன்மா பேரின்பம் துய்க்கிறது

சிரசினுள் இருக்கும் மூன்றாம் பிறைவடிவ மூளை இணைப் பானைச் சிவபெருமான் திருவடி என்றும் முருகப்பெருமான் திருவடி என்றும் போற்றி மகிழ்வது 'சைவ மரபு என்பதை முன்னர்க் கண்டோம். சிவனும் சீவனும் இங்ஙனம் சிரசினில் கூடி, இன்புற்றிருக்கும் நிலையே ஞானநிலை ஆகும்.

ஞானத்தில் நால்வகை நெறி: ஞானநிலை எய்தியோரும் அடிமை, மகன்மை, தோழமை, அன்பு நெறிகளின்பால் வழுவாது நிற்பர் எனச் சைவ ஞானநூல்கள் கூறுகின்றன. அத்தகைய ஞானமேம்பாட்டினை முறையே ஞானத்தில் சரியை, ஞானத்தில் கிரியை, ஞானத்தில் யோகம், ஞானத்தில் ஞானம் என வகைப்படுத்தியும் காட்டுவர் கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டைகூடல் என்ற நான்கும் ஞானிகளிடத்து மேலோங்கி நிற்கும் இயல்புகள் என்பது சைவநூல் கருத்து. மெய்த்தவங்களின் நிறைவான பயன் ஞானம் எய்துதலே. அவ்வாறாயின் அவர்கள் எதைக் கேட்டு, எவ்வாறு சிந்தித்து, எங்ஙனம் தெளிந்து, நிட்டை கூடுகின்றனர் என நோக்குவோம்.

அண்டத் தொகுப்பின் தலைவாயிலே நாதம் என்றும், மாயையிலிருந்து முதலில் தோற்றுவிக்கப்பட்டது நாதமே என்றும், அந்த நாதத்திலிருந்துதான் நமது ஐம்புலன்களால் அறியப்படுகிற அனைத்துச் சடப்பொருள்களும் தோன்றின என்றும் முன்னரும் கண்டோம். இது உலகத்தின் தோற்ற முறை.

உலகம் மாப்பேரூழியில் ஒடுங்கும்போது, வெளிப்பட்ட வரிசைப்படியே ஒன்றனுள் ஒன்றாக ஒடுங்கி, அனைத்தும் நாதத்துள் ஒடுங்கி, இறுதியில் நாதம் மாயையில் ஒடுங்கும். இவ்வாறு, தோற்றகாலத்தில் தலைவாயிலாக இருந்த நாதம், ஒடுக்க காலத்தில் கடைவாயிலாக அமைகிறது.

எனவே பிறவிப்பிணியை முழுமையாக நீங்கி, மாயா உடம்பினை முழுவதுமாக நீத்து, முத்திப்பேறு எய்துகிற ஞானிகள் கேட்கத்தக்கது, கேட்டு மகிழ்வது கடைவழியாகிய பரநாதமாகும். அதிநுண்ணிய அப்பரநாதத்தைக் கேட்பதற்கு நம் போன்ற சாதாரணச் செவிகள் போதா. அதிநுண்ணிய செவிகள் வேண்டும். அதனால்தான், 'காது அற்ற ஊசியும் வாராது காண் கடைவழிக்கே' என்ற ஞானோபதேசம் பட்டினத்தார்க்கு அருளப் பெற்றது.

பரநாதத்தை எழுப்புபவர் யார்? துணைநிற்போர் யாவர்? அஃது எத்தகைய வடிவில் ஞானியை வந்தடைகிறது? என்பன காண்போம்:

'காசியில் இறக்க முத்தி' என்பதன் பொருளை முன்னர் (பக்-139) சிந்தித்தோம். காசியில் 'இறந்த' உயிரை அன்னை விசாலாட்சி தன்மடியில் கிடத்திக்கொள்ள, அதன் செவியில் அப்பனாகிய விசுவநாதர் திருஐந்தெழுத்தை ஓதிப் பரமுத்தி அருளுகிறார் எனப் புராணங்கள் கூறுகின்றன. இதிலிருந்து நாம் ஓர் உண்மையைத் தெரிந்து கொள்ளலாம். சிவஞானம் தலைப்பட்ட ஆன்மாவுக்கு அதன் நுண் செவியில் காசி விசுவ நாதர் மூலமந்திர உபதேசம் செய்ய, அதனை அவ் ஆன்மா கேட்கிறது; அம்மந்திரத்தின் துணைகொண்டு சிவபரத்தையே இடையறாது சிந்திக்கிறது; முறுகிய சிவ சிந்தனையில், சிவஞானத் தெளிவு பிறக்கிறது, அதனால் பற்றற்றான் தாளினைப் பற்றி, நிலை கொள்ளுகிறது.

இந்த நிலையில், ஆன்மா நிற்கும் இடம் நம் தலையினுள் பிட்யூட்டரி என்ற மூளைப்பகுதி. இதுவே சுத்தவித்தை என் பதும், அன்னை விசாலாட்சியின் திருமடி என்பதும் பொருந்தும். சிவபெருமான் அருஉருவாய் நின்று தொழிற்படுத்தும் நம் தலை உறுப்பு (மூன்றாம் பிறை வடிவ) மூளை இணைப்பான் என்பதும், சீவன் முத்த நிலையில் அவ் உறுப்பே சிவபெருமான் திருவடி என்பதும், **ஞானத்தின் சரியையில்** அந்த நாளம் பிட்யூட்டரியைத் தீண்டும்போது அதி நுண்ணிய பரநாத ஒலி ஆன்மாவால் கேட்கப்படும் என்பதும், அதுவே காசி விசுவநாதர் பக்குவ ஆன்மாவுக்குச் செய்கிற உபதேசம் என்பதும் உணரலாம்.

ஞானத்தின் கிரியையில் ஆன்மா இங்குத் திருவடி வழிபாடு இயற்றுகிறது. இறைவனின் திருவருள் கூடி வருகிறது. மூளைப் பகுதியிலுள்ள பாலூட்டகங்களிலிருந்து ஞானப்பால் ஊட்டம் நிகழ்கிறது. **ஞானத்தின் யோகத்தில்** ஆன்மா தெளிவு பெறும் போது, சிவபெருமான் தமது எண் குணங்களையும் அதற்கு அருளிச் சாருப நிலைக்கு உயர்த்துகிறார். பிட்யூட்டரியினை அணைந்த ஆன்மா, பிறைவடிவ மூளை இணைப்பானைச் சிக்கெனப் பிடித்துக் கொள்ளுகிறது.

சீவன் முத்தர் நிலை: உயிர் என்ற தலைவியைச் சிவபெரு மான் என்ற தலைவன் குறிஞ்சியாகிய நம் தலையினுள் ஆணைத் தானம் என்ற ஆன்ம அல்குலில் புணர்ந்து, பேரின்பம் ஊட்டு கிறார். இது நம் பண்டு தொட்ட தமிழர் கருத்து என்பதற்குச்

சான்றுகள் பல உள. 'குறிஞ்சிக்கு உரிப்பொருள் புணர்தல்' என்ற கூற்றாலும் 'புணர்ச்சிக்கு, இடம் தலை(ப்பாடு)' என்ற தொடராலும்,

''அந்தமில் சிறப்பின் ஆகிய இன்பம்
தன்வயின் வருதலும் வகுத்த பண்பே''[1]

என்ற சூத்திரத்தாலும், இவ் உண்மையினைத் தெளியலாம்.

இங்ஙனம் தலையினுள் தலைமக்கள் நிலையான அறிவானந் தத்நல் திளைத்திருப்பர்; எனினும் தலைவியாகிய 'ஆன்மா உடனே பரமுத்தி அடைவதில்லை. அதன் கணக்கிலுள்ள ஊழ் வினை நுகர்ந்து கழிக்கப்படுதல் வேண்டும் என்பது நியதி. ஆதலால் அதுவரை அவ்வான்மா, எவ்வளவுதான் முத்திக்குத் தகுதியுடையதாக இருந்தாலும் உலகத்தவரால் 'நல்ல உயர் பக்குவ ஆன்மா' என்று போற்றப்பட்டாலும், இன்னும் நுகர்ந்து கழிக்க வேண்டிய வினைகளின் எச்சம் காரணமாக, இறைமை நோக்கில் 'தீயோளாகி', அவ்வினை நுகர்தற் பொருட்டுச் சீவித் திருக்கவே வேண்டும், அத்தகைய ஆன்மாவே சீவன் முத்தான்மா என அழைக்கப் பெறும். ஐங்குறுநூறு[1] கபிலரின் குறிஞ்சித் திணைப் பாடல் ஈண்டு இணைத்துச் சிந்திக்கற்பாலது!

''பெயர்வழிப் பெயர்வழித் தவிராது நோக்கி
'நல்லள் நல்லள்' என்ப;
'தீயேள்' தில்ல மலைகிழ வோற்கே''[2]

இங்ஙனம், தலைவனாகிய சிவபெருமானுடன், பக்குவ ஆன்மா தலையின் உச்சிக்குழி வழியாக, உடம்பிலிருந்து விடுபட்டு, மீதானப் பெருவெளிக்கு நீங்குதல் என்பதே முடிந்த முடிவு. ஆயினும் அதற்கு மாறாக, வினைகளிலிருந்து முற்றிலும் நீங்காத ஆன்மா, அவ்வினை எச்ச நுகர்ச்சியின் பொருட்டுத், தலையினுள்ளேயே தங்க வேண்டிய சூழலில், சீவன்முத்தான்மா வாகத் தவித்து நிற்பதும் இயல்பே. இதனைக்,

1 தொல்காப்பியம், பொருளியல் - 239
2 ஐங்குறு நூறு 204 - கபிலர்

"கொண்டுதலைக் கழிதலும், பிரிந்துஅவண் இரங்கலும்
உண்டுஎன மொழிப ஓரிடத்தான[1]"

என்ற தொல்காப்பியரின் அனுபவ மொழியாலும் அறியலாம்.

பிறவாப் பெருவாழ்வு: மும்மலங்களும் நீங்கிய ஆன்மா பரமுத்திக்குத் தகுதியுடையதாகிறது. அப்போது, மூளை இணைப்பான் (Corpus Collosum) விரைந்து எழுந்து, தலையின் உச்சிக்குழியைத் திறந்து விடுகிறது. அந்த நாளத்தையே சிவ பெருமான் திருவடியாகச் சிக்கெனப் பிடித்து, உறுதியுடன் பற்றிக் கொண்டிருக்கும் உயிரும், அதனுடனேயே எழுந்து, உச்சிக்குழி வழியாகத் தலைவனுடன் வெளியேறி, மீதானத்தில், அவனது திருவடிப் பேரின்பத்தில் திளைத்திருக்கிறது. சிகையை (சிகாவை)த் திறந்து வெளிறுகிற இந்தநிலை காசிமுத்தி' எனப் பட்டது. இது சிவசாயுச்சியம் எனப்படும். இவ்வாறு சிகை வழிச் சென்று மீதானத் தலைவன் திருவடியில் பேரின்பத்தில் நிலைபெறுகிற ஆன்மா மீளவும் பிறப்பதில்லை. ஆதலால் இதனைப் பரமுத்தி என்றும் சாயுச்சியம் என்றும் கூறுவர்.

ஆதலால் தான், தன்னைச் சிவநெறியில் செலுத்துமாறும், சிவயோகிகளிடம் இணங்கி இருக்கச் செய்யுமாறும், பலவாறு முருகனிடம் இரந்து வேண்டுகிறார் அருணகிரியார்.

"ஓமத் தீவழு வார்கட்(கு) ஊர்,சிவ
லோகத் தேதரு(ம்) மங்கை பாலா!
யோகத்(து) ஆறு(உ)ப தேசத் தேசிக!
ஊமைத் தேவர்கள் தம்பி ரானே!"[3]

"சிவயோக நெறி நின்று நாளும் எரிஓம்புவார்கட்கு சிவ லோக வாழ்வினை அருளுகிற உமை மைந்தனே! சிவயோகத்தில் நிற்கும் உயரிய நெறியை மெய்யடியார்கட்கு உபதேசிக்கிற சற்குருநாதா! என்பது பொருள்.

---

1 தொல். அகத் - 17

2 திருச்செந்தூர் திருப்புகழ் - 29

தலைவிதி: ஹைப்போதாலமஸ் என்ற தாமரைக் காம்பு பற்றி முன்னர்க் கண்டோம். இது நமது உடலின் இயக்கங்களை எல்லாம் ஒருங்கிணைக்கும் மூன்று உறுப்புகளின் தொகுதி. மேலே தாமரை மலர் போன்ற தெய்வீகத் தானங்களாகிய மூளையின் பகுதிகள்; கீழே பிட்யூட்டரி என்ற ஆன்ம அல்குல் இவற்றை இணைத்து நிற்கும் பாலம் போன்றது, ஹைப்போ தாலமஸ் ஆகும்.

இதன் இயல்புகளை விரித்துரைக்க வந்த இக்கால விஞ்ஞானி கள், "இது, நமது மூளை என்ற அறிவுத் தானத்தையும், இதயம் என்ற அன்புத் தானத்தையுங்கூடத் தனது அதிகாரத் தால் ஆட்டி வைக்கும் ஆற்றல் மிக்கது. இஃது உடலிலுள்ள பிற உறுப்புக்கள் அடுத்தடுத்து என்ன செய்யவேண்டும் என்ப தை எச்சரிக்கிறது", என ஆய்ந்து கூறுவர். இதைத் தான் நாம் 'தலைவிதி' என்கிறோம். நம்மைப் பிணித்துள்ள மும்மலக் கட்டின் மூலவேர் இங்குத்தான் உள்ளது அந்த மூலவேரே, சித்தமலம். "சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனை ஆண்ட அத்தன்"[1] என வீடுபேறு அருளிய விமலனைப் புகழ்ந்து பாடுவார், மாணிக்கவாசகர்.

அந்த மூலவேரைக் களைதல் என்பது தாமரைக் காம்பின் பல்லாயிரம் ஆண்டு நினைவாற்றலை அழித்தல் ஆகும். அஃது ஆன்மாக்களாகிய நம்மால் முடியாது. அவ்வாறாயின் தலைவிதி யிலிருந்து நமக்கு விடுதலையே இல்லையா? என்ற வினா எழுகிற தல்றோ? தாமரைக் காம்பினில் (Hypothalamus) எழுதப் பட்ட நமது தலைஎழுத்தை அழிக்க வல்லது இறைவன் திருவடி ஒன்றே. அதன் சிறப்பினை அருணகிரியார், பாடுகிறார்.

"வேல்பட்(டு) அழிந்தது வேலையும் சூரனும்
வெற்பு(ம்), அவன்
கால்பட்(டு) அழிந்தது இங்(கு) என்தலை
மே(ல்)அயன் கையெழுத்தே"[2]

---

1 திருவாசகம் அச்சோ பத்து. 1

2 கந்தரலங்காரம் 40

இங்கு வேலையும், வெற்பும் (கடலும், மலையும்) மாயா மலத்தைக் குறிப்பன. சூரன் (சூரபதுமன் என்ற அசுரன்) ஆணவ மலத்தின் சின்னம் 'தலைமேல் அயன் கையெழுத்து' என்பது கன்ம மலம் என்ற வினைகளின் விளைவு. இம்மூன்று மலங்களும் முருகனின் வேல்பட்டு அழிந்தன. பிரமன் நம் சிரசினுள் எழுதிய தலையெழுத்தோ, முருகன் திருவடிபட்டு அழிந்தது என்பது இப்பாடலின் கருத்து.

விதியை மதியால் வெல்லலாம்: இத்தகைய திருவடிப்பேறு, பரமுத்தி என்பன போன்ற சாத்திரக் கூற்றுகள் நவீன அறிவியல் சிந்தனைகளுக்குப் பொருந்துமா? என்பது சிலரது ஐயம். எனவே அதனை ஓரளவு சிந்திப்பது பயனுடைத்து.

ஒரு மோட்டார்க்காரில் அதன் உடற்பகுதியையே முதலில் கட்டி முடிக்கிறார்கள்; பின்னர் அதன் ('Bonnet போனட் என்ற') முன்பகுதியைத் திறந்து ஓர் இயந்திரத்தை அதனுள் பொருத்து கிறார்கள்; அதன்பின் 'போனட்'டை மூடி அவ் ஊர்தியை ஓடச் செய்கிறார்கள் அன்றோ? அதேபோல், மண்ணிலிருந்து மனித உடம்பை உருவாக்குகிறான், பிரமன். அவ் உடம்பின் தலையில், உச்சிக்குழி வழியாக, உயிர் என்ற ஆற்றல் நிறைந்த ஒரு நுண்ணிய இயந்திரத்தைச், சிவ ஆணைப்படி பிரமன் பொருத்து கிறான். பின்னர் உச்சிக்குழியை மூடி, நாம் இந்த உலகில் உலவுவதற்கு வழிவகுக்கிறான். அவ் உயிர் அந்த ஒரு பிறவியில் நுகர்ந்து தொலைக்க வேண்டிய இன்பதுன்ப வினைகளின் பதி வேடு, ஒரு நாயின் கழுத்தில் கட்டப்பட்ட 'லைசென்சை'ப் போன்று, உயிரின் கழுத்தில் கட்டப்படுகிறது. நம் தலையினுள் பெருமூளைக்கு அடியில், பிறைவடிவ மூளை இணைப்பானுக்கும் பிட்யூட்டரிக்கும் இடையில் ஒரு தடுப்புச் சுவர்போல் அமைந் திருக்கிற 'ஹைப்போதாலமஸ்' என்ற கருவியே, அந்தப் பதிவேடு ஆகும்.

பிறைவடிவ மூளை இணைப்பான் – சிவன்; பிட்யூட்டரி– ஆன்மாவின் நிலைக்களன்; சிவனிடம் சீவன் அணுகமுடியாத வாறு தடையாக இருப்பன, தளைகள். ஹைப்போதாலமஸ் என்பது சிவசீவக் கூட்டத்துக்குத் தடையாக இருக்கும் தலைவிதி.

வினைப்பயன்கள் நுகர்ந்து கழிக்கப் பெறுங்கால், இத்தலைவிதிப் பதிவேட்டிலுள்ள நுண்ணிய 'தலை எழுத்து' சிறிது சிறிதாக அழிந்து விடுகிறது. மூன்றாம் நாளத்தை முருகன் திருவடி என்றும் சிவபெருமான் திருவடி என்றும் முன்னர்க் கண்டோம்: எனவே திருவடிபட்டுத் தலைவிதி அழிந்ததாக அருளாளர் பாடுகின்றனர். மூளை இணைப்பான் (Corpus Collosum) ஒரு சந்திரப்பிறை போன்ற வடிவினது, சந்திரனுக்கு மதி என்னும் ஒரு பெயரும் உண்டு அன்றோ? அதனால்தான் 'விதியை மதியால் வெல்லலாம்' என்ற பழமொழியும் எழுந்தது போலும்!

சுத்தமாயையில் பாலுறுப்புக்கள்: நம் ஒவ்வொருவர் உடம்பிலும் கண் புருவங்களுக்குக் கீழேயுள்ள உடற்பகுதி அசுத்த மாயையினால் ஆனது. மேலே உள்ள மூளைப்பகுதி சுத்தமாயையினால் ஆனது. கீழே உள்ள ஆண்-பெண் பால் உறுப்புக்களைப் போன்றே மூளைப் பகுதியிலும் தூய்மையான பால் உறுப்புக்கள் தெய்வீக நிலையில் அமைந்துள்ள பெற்றியை, முன்னரும கண்டோம் அவை மலக்கட்டினின்று நீங்கிய பிரளயாகலர், விஞ்ஞானகலர் என்ற தூய உயர்பக்குவ ஆன்மாக்களுக்கு நலன் பயப்பன.

ஞானத்தில் சரியையாளராகிய ஆன்மாவுக்குப் பிட்யூட்டரியே அன்னை விசாலாட்சியின் மடி. மூன்றாம் பிறைவடிவ மூளை இணைப்பானே விசுவநாதப் பெருமான். இங்கு, தூய ஆன்மாவுக்குச் சிவபெருமானாலேயே மந்திரோபதேசம் அருளப் பெறுகிறது.

ஞானத்தில் கிரியையாளர்க்கு அன்னையின் தூய பாலூட்டகங்களிலிருந்து சுரக்கும் ஞானப்பால், பிட்யூட்டரி என்ற பொற்கிண்ணத்தின் மூலம் ஊட்டப்பெறுகிறது.

ஞானத்தில் யோகிகள் பிட்யூட்டரியை நிலைக்களனாகக் கொண்டு, பிறைவடிவ மூளை இணைப்பானைச் சிவலிங்கமாகக் கண்டு, மூலமந்திரத்தால் தியானித்து மகிழ்வர்.

ஞானத்தில் ஞானிகளுக்குப் பிட்யூட்டரியே பெண்மைத் தானம்; மூளை இணைப்பானே சிவபெருமானின் ஆண்மைச் சின்னம். தலைமக்கள் புணரும் இடமாவது, தலையிலுள்ள பிட்யூட்டரி; அதுவே பேரின்பத் தானம்.

விருப்புக்கேற்ற பிறப்பு : வாழ்வின் இறுதியில் ஒவ்வொரு மனிதனுடைய உயிரும் அவனவன் விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்பவே, அவனது உடலைவிட்டுப் பிரிந்து செல்லுகிறது என்பர் அறிஞர். உதாரணமாக, உண்டியின் சுவையில் மயங்கிக் கிடப் போவது உயிர் அவனது வாய் வழியாகவே வெளியேறும். காட்சி இன்பத்திலேயே கருத்தைச் செலுத்துவோர்க்குக் கண் வழி யாகவே உயிர் நீங்கும் என்பர். (இதேபோல் பிறபிற புலன்-பொறி நிலைகளையும் கொள்ளுக).

அந்த வகையிலே, சிவயோகத்தில் முதிர்ந்து சிவஞானத் தெளிவு பெற்ற உயிர், தலைவி நிலைக்கு உயர்ந்து, உடம்பினுள் தலையில் பிட்யூட்டரி என்ற பெண்மைத் தானத்தை அணை கிறது.

எரிஓம்பலும், சிவமூலமந்திரத்தின் ஆற்றலும் கூடிய சிவ யோகத்தால் உடம்பிலும், உள்ளத்திலும் பல சிறந்த மாற்றங்கள் நிகழும். அதுவரை சிரசினுள் கூனுற்றுக் கிடந்த மூளைக் கூறு களின் நடுவிலுள்ள இணைப்பான் சிவமூலமந்திரத்தால் முறுக் கேறி, ஆண்மைப் பொலிவுடையதாக ஆகிறது. சிவபெருமான் சதாசிவமூர்த்தியாக அந்த மூன்றாம் பிறையினை இயக்கிப் பிட் யூட்டரியில் சீவன் முத்தான்மாவுக்குப் பேரின்பம் நல்குகிறார். அந்தமிலா ஆனந்தத்தில் திளைக்கும் உயிர், அவரது திருவடியை உறுதியோடு பற்றிக்கொள்ளுகிறது.

''தன்னை மறந்தாள் தன் நாமம் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே''

என்பது அப்பர் பெருமான் அருள்வாக்கு. தற்போதம் நீங்கிய சீவன் முத்தான்மா இங்ஙனம் தலைவனது திருவடியையே பற்றுக் கோடாகக் கொள்ளுகிற உண்மையை இவ் அமைப்பு உறுதி செய்கிறது. மணிவாசகப் பெருந்தகையின் 'பிடித்த பத்து' என்ற பதிகம் முழுவதும், சிவனது திருவடியைச் 'சிக் கெனப் பிடித்த' சீர்மையையே பேசுகிறது.

''அருளுடைச் சுடரே! அளிந்ததோர் கனியே!
பெருந்திறல் அருந்தவர்க்(கு) அரசே!
பொருளுடைக் கலையே! புகழ்ச்சியைக் கடந்த
போகமே! யோகத்தின் பொலிவே!

தெருளிடத்(து) அடியார் சிந்தையுள் புகுந்த
செல்வமே! சிவபெருமானே!
இருளிடத்(து) உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்;
எங்(கு) எழுந்(து) அருளுவ(து) இனியே?''[1]

தவர் = தொண்டு நெறி நிற்கும் சரியையாளர்; அருந்தவர் = மகன்மையில் மகிழும் கிரியையாளர். திறல் அருந்தவர்=தோழமையால் இன்புறும் யோகநெறியாளர்; பெருந்திறல் அருந்தவர் = அன்பு நெறிக்கு உயர்ந்த சிவஞானிகள். இந்த நால்வகை நெறியாளர்களுக்கும் தலைவனாய் இருந்து அருள் சுரப்பவர் சிவபெருமான். சிவஞானத் தெளிவு பெற்ற மெய்யடியார்களது சிந்தையுள்ளும், உடம்பினுள்ளும் யோகத்தின் விளைவாய்ப் பொலிவுற்றுத் திகழ்பவர், அவர். உண்மை அன்பு இருந்தால், அறியாமை சூழ்ந்த இவ் உலக வாழ்விலேயே, அவரது திருவடிகளைப் பற்றுக் கோடாகச் சிக்கெனப் பிடித்துக் கொள்ளுதலும் கூடும் என்பன மணிவாசகரது இப்பாடலின் திரண்ட கருத்தாம்.

இவ்வாறு தலை எழுத்தாகிய மும்மல மூலவேர் நம்மிடமிருந்து அழிவதற்கும், நாம் சிவப்பேறு எய்துவதற்கும், குமரக் கடவுளது குருவருளும், சிவபெருமான் திருவருளுமே துணையாகின்றன.

சிவபெருமானின் எளிவந்த தோற்றங்களையும் திருவருள் மேம்பாட்டினையும் அறிந்து கொள்ளுவதில் அறிவியல் சிந்தனைகள் ஓர் அளவிற்குத்தான் துணை நிற்பனவே யன்றி, இவையே நம்மை இறைவன் திருவடியில் சேர்ப்பதற்கான ஆற்றல் உடையன அல்ல என்பதை மனங்கொள்ளுதல் வேண்டும்.

உண்மையான பக்தியோடு சிவபெருமானை வாழ்த்தி வணங்கி வழிபட்டு மணிவாசகரைப் போல நாமும் சைவ நெறி நின்று அழுது அரற்றினால் இறைவன் திருவடியைப் பெறலாம் என்பதே அனுபூதிமான்களின் கருத்து, அன்பும் அழுகையும் மனத்தின் எழுச்சியோடும், உள்ளத்தின் கிளர்ச்சியோடும் தொடர்புடையன; முற்றிலும் உளவியல் அடிப்படையில் சிந்திக்கத் தக்கன.

எனவே நாமும் அருளாளர் வழியில் சைவ நெறி நின்று, உளவியலைச் சிந்திப்போம்.

---

1 திருவாசகம் 8;37:;4

6. சைவ நெறிகளும், உளவியலும்

(மெய்ப்பாட்டியல்)

உடலியல், உளவியல் (Physiology, Psychology) என்ற இரண்டும் இக்கால அறிவியல் பகுப்பாய்வில் சிறந்து விளங்குகின்றன. அவற்றுள் சைவ சித்தாந்தச் செந்நெறிகள் நமக்கு மிகுதியும் கற்றுத் தருவன உளவியலையேயாம்.

உடலியல் என்றால் என்ன? உளயவில் என்றால் என்ன? நமது முன்னோர் உளவியலுக்கு எற்றம் கொடுத்துச் சிந்தித்தமை ஏன்? என்பன போன்ற உயர்ந்த செய்திகளை நோக்குவது ஆன்ம வளர்சசிக்குப் பெரும் பயன் நல்குவதாகும்.

உடலியல்: நமது பூத உடம்பையும் புலனுடம்பையும் பற்றிய அறிவியலை உடலியல் என்று அழைப்பர், அறிஞர். பூதஉடம்பு என்பது புறத்தே நம் கண்களுக்குத் தெரிவது, இஃது எலும்பு, நரம்பு, தசை, தோல் முதலியவற்றால் ஆனது. புலனுடம்பு என்பது பூத உடம்பு செயல் படுவதற்குப் பொதுவாகத் துணை நிற்பனவாகிய சுவை, ஒளி, ஓசை, ஊறு, நாற்றம் என்ற ஐந்து அறிவுப் புலன்களைக் குறிப்பதாகும்.

உளவியல்: என்பதோ கண்ணுக்குப் புலப்படாமல் மிகவும் நுண்ணியதாயுள்ள நமது அக உடம்பினைப் பற்றியது. இந்த நுண் பகுதியை உள்ளம் என்ற பொதுப் பெயரால் அழைப்பர். உள்ளத்தைப் பற்றிய அறிவியலாதலால், உளவியல் என்பதாயிற்று. உயிர்களாகிய நாம் ஒவ்வொரு நொடியும் உடலாலும், உள்ளத்தாலும் வளர்ந்து கொண்டே இருக்கிறோம். எனவே, அவை பற்றிய அறிவு மிகமிக இன்றியமையாததாகும்.

சைவக் கோட்பாடுகள்: மனத்தை நினைவு மனம், நினைவற்ற மனம், அரைஉணர்வு மனம் (Conscious mind, unconscious mind, Sub-Conscious mind) என்ற அளவிலே இக்கால அறிவியலார் சிந்திக்கின்றனர்.

ஆனால், உடலையும், உள்ளத்தையும் பண்டு தொட்டே சைவ சித்தாந்திகள் மிகச் சிறப்பாக நுணுகி ஆராய்ந்துள்ளனர். அவ்வாறு அவர்கள் ஆராய்ந்த முறைமை பற்றிக் காண்போம்.

ஒரு தோழியைத் துணையாகக் கொண்டே, தலைவி இயங்குகிறாள், அமைச்சனது அறிவுரைப்படியே, அரசன் தன் நாட்டை ஆளுகிறான். அவற்றைப் போலவே, மனம் என்ற ஆறாவது அறிவுக் கருவியைத் துணைக் கொண்டே, உயிரும் செயல்படுகிறது.

காற்றால் அலைப்புண்ட கடல் அலை போல், மூச்சுக் காற்றால் அலைப்புண்டு திரிவது மனம். அவ்வாறு அலைந்து திரியும் மனத்தைப் பிராணாயாமம்[1] என்ற மூச்சுப் பயிற்சியின் மூலம் ஒருநிலைப்படுத்தி, நெஞ்சுத் தானத்தில் நிறுத்துதல் வேண்டும். அவ்விதம் நிலைத்து நிற்கும் மனத்தால், நெஞ்சுத் தானத்தில், இறைவனைச் சிந்திக்க வேண்டும்.

அலைந்து திரியும் மனத்தின் பரந்துபட்ட புறநோக்குச் சிந்தனைகளை விட அலைவிலாது குவிந்த மனத்தின் அக நோக்குச் சிந்தனைகள் ஆயிரமாயிரம் மடங்கு ஆற்றலுடையவை என்பது தெளிவு. அதேபோல் புறத்தே பரந்து பட்டுக் கிடக்கும் உலகப்பொருள் தொடர்பான புலனறிவுச் சிந்தனையை விட, அகத்தே குவிந்து செல்லும் அருள்அறிவுச் சிந்தனை கோடானுகோடி மடங்கு நன்மை பயப்பதாகும். அலைவில்லாது நிலைத்து நிற்கும் மனத்தில் சிந்திக்கப் பெற்ற இறை மந்திரமும் பாவனையும், செயல்களும், நம் உள்ளத்து விழுமிய அக நிகழ்ச்சிகள் என அழைக்கப் பெறுகின்றன.

எனவே நம் முன்னோர்கள் கண்ணுக்கு புலப்படும் உலகத்தையும், உடலையும் அவற்றின் கண் புலப்படுகிற மெய்ப்பாடுகளையும் உவமையாகக் காட்டிக் கண்ணுக்குப் புலப்படாத மனம் முதலிய நுண்ணிய அகக்கருவிகளின் இயக்கத்தையும் பிறமெய்ப் பொருள் உண்மைகளையும் நமக்கு அறிவுறுத்த முற்பட்டனர்.

---

1 பிராணன் - உயிர்க்காற்று. ஆயாமம் - நிலைகொள்ளுமாறு அடக்கி நிறுத்துதல்

மனம் என்பது என்ன? அதன தோற்றுவாய் யாது? என்பன பற்றி பொது வகையாலும், சிறப்பு வகையாலும் சிந்திப்பதற்கு முன்னோடியாகச் சில சித்தாந்த சைவ உண்மைகளைத் தெரிந்து கொள்ளுவது பயனுடையதாகும்.

உயிர்களும், குறிக்கோளும்: உயிர் என்பது ஒரு நுண்பொருள். நாமெல்லாம் உயிர்கள். சிற்றறிவுப் பொருள்களாகிய நாம் பேரறிவுப் பொருளாகிய ஆண்டவனது திருவடியில் எக்காலமும் பேரின்பம் துய்த்துக் கொண்டிருக்க வேண்டும். இதுவே உயிர்களாகிய நமக்குத் தலையாய குறிக்கோளாகும்.

ஆனால் அப்பேரின்பத்தை நுகரவிடாமல் ஆணவம் என்ற அநாதி மூலமலம் நம்மை வலிதே கட்டிநின்று அவலத்துள் அழுத்துகிறது.

உயிர்களாகிய நமது அறிவோ சிற்றறிவு; அதனைக் கொண்டு ஆணவ மலத்தின் உண்மையையோ, அதன் பிணிப்பிலிருந்து விடுபடும் வழிமுறைகளையோ அறியும் ஆற்றல் நமக்கு இல்லை. ஆதலால், இருள் உள்ளவரை, நமக்குத் துணைநிற்கிற சிறிய விளக்குப் போல, நாம் ஆணவ இருளிலிருந்து விடுபட்டு இறைவனது ஒளிமயமான திருவடி இன்பத்தைப் பெறுவதற்குத் துணையாகச் சிறியதொரு விளக்குப் போல, ஓர் இடைக்காலப் பற்றுக் கோட்டினை இறைவனே நமக்குத் தந்தருளினார். அதனையும் தன் பரிக்கிரக சத்தியாகிய மாயையிலிருந்தே அருளினார். சுத்த மாயை, அசுத்த மாயை என்ற இருமாயைகளின் விரிவான 36-தத்துவங்களால் ஆனது, அப்பற்றுக் கோடு.

இந்த முப்பத்தாறு தத்துவங்களையும் மூன்று பெரும் பிரிவுகளில் சித்தாந்திகள் நமக்கு அறிவுறுத்துகின்றனர். அவை: சிவ தத்துவம்-5. வித்தியா தத்துவம்-7, ஆன்ம தத்துவம்-24 என்ப இவற்றுள் சிவதத்துவம் ஐந்தும் விந்து என்ற சுத்த மாயையிலிருந்து தோன்றுவன.

---

1 விடுதல் + பெறுதல் = வீடுபேறு.

ஒரு தொழிலகத்தின் முன் பகுதியில் நிர்வாக இயக்குநர்க்கு உரிய சிறியதொரு தனி அலுவலகத்தைப் போலச், சிவதத்துவம் என்பது சிவபெருமானும் (சிவசத்தி, கணபதி, முருகன் என்ற) அவரது ஆற்றல்களும் தொழிற்படுகிற சிறப்பிடம், தலையாய இடம், நமது உடம்பினுள் அறிவுத் தானமாகிய மூளைப் பகுதியைச் சிவ தத்துவம் என இடம் சுட்டுதல் பெரிதும் பொருந்தும்.

காலம் முதல் நிலம் ஈறாக 31-தத்துவங்கள் அசுத்தமாயையிலிருந்து தோன்றுகின்றன. இப்பகுதியை ஆன்மாக்களின் போக பூமி[2] என்றும் விளையாட்டு ஆயம்[3] என்றும் கூறுப, ஒரு தொழிலகத்தில், இயக்குநர் இடம் நீங்கலாகத் தொழிலாளிகள் புழங்குகிற மிகப் பரந்த நிலப்பரப்பைப் போன்றது இது. நமது உடம்பில் மூளைப் பகுதி நீங்கலான ஏனைய உறுப்புக்கள் இதனுள் அடங்கும். அசுத்தமாயையின் மேல் ஏழு தத்துவங்களையும் **மோகினி** என்றும், **வித்தியா தத்துவம்** என்றும் சுத்தமும் அசுத்தமும் விரவிய, சுத்தாசுத்தமாயை என்றும் பல பெயரால் அழைப்பர். அசுத்த மாயையின் நிலம் ஈறாகியதும் 24-தத்துவங்கள் அடங்கியதுமான கீழ்ப்பகுதியை மான் என்றும், ஆன்மதத்துவம் என்றும், **பிரகிருதிமாயை** எனவும், பலவாறு அழைப்பர். அது, மூலப்பிரகிருதி முதல், நிலம் ஈறாக 24 தத்துவங்களைக் கொண்டது.

உயிர்களாகிய நமது வினைப்பயன் நுகர்ச்சிக்காகவும், அறிவு விளக்கத்துக்காகவுமே மாயையிலிருந்து இத்தத்துவ விரிவாக்கத்தை இறைவன் அருளினார். தத்துவங்கள் எவ்வாறு விரிகின்றன என்பதை நோக்குவோம்.

சித்தம் என்றால் என்ன? முக்குணங்களின் கூட்டம் என மொழிவர் ஆன்றோர். அசுத்தமாயை என்பதை ஒரு விதை

---

2 புவனியில் போய்ப்பிற வாமையில் நாள்நாம்
போக்குகின் றோம்அவமே இந்தப் பூமி
சிவன்உய்யக் கொள்கின்ற வா(று)என்று நோக்கி''
-திருவாசகம், திருப்பள்ளி எழுச்சி-10.

3 முதல் எனப் படுவதுநிலம் பொழுது இரண்டின்
இயல்[பு] என மொழிப இயல்[பு] உணர்ந் தோரே'' -தொல்.அகத்.4
பண்ணைத் தோன்றிய எண்ணான்கு பொருளும்
- தொல்காப்பியம் மெல்ப்பாட்டியல்-1.

எனக் கொள்ளுவோம். அதன் இரு மருங்கிலும் பருப்புகள் உள்ளன. அப்பருப்புகளின் நடுவில், உள்ளே இருக்கும் ஆதார முளையைப் (Embryo) போன்றது, பிரகிருதி என்ற மூலப்பகுதி, நாம் வாழும் பூமிக்கு முதற்பொருளாக இருப்பதால், இதனை பிரகிருதி என்றும், மூன்று குணங்களின் கூட்டு வடிவமாதலால் குணதத்துவம் என்றும் அழைப்பர்.

பசுவின் சாத்துவிக குணம், சிங்கம், புலியின் ரஜோகுணம், எருமையின் தாமச குணம் என்ற மூன்று வகைக் குணங்களும் வெளிப்பட விளங்கித் தோன்றாமல், ஒரே கூட்டமாகக் குவிந்து கிடக்கும் (அவ்வியக்க) நிலையே குணதத்துவம் எனப்படும்.

அவரவர் செய்கின்ற வினைக்கு ஈடான இன்பதுன்பப் பயனை, உரிய காலத்தில் உரிய அளவில் அவரவரே அனுபவித்துத் தொலைக்க வேண்டும் என்பது சைவக்கோட்பாடு. ஏனைய பல்லோராலும் இஃது ஏற்றுக் கொள்ளப்படுகிறது. இவ்வாறு கால நியதிக்கு ஏற்ப, உயிர் நுகர்ந்து தொலைக்க வேண்டிய, பிராரத்த வினையின் இன்ப துன்ப நுகர்ச்சியின் காலமும், அளவும் பிறவும் எழுதப்பெற்ற ஏட்டின் நகல்தான் இக்குண தத்துவக் கூட்டம். இது, '**வினைவழிச் சிந்தனை**' என்னும பொருளை உடையது. ஆதலால், இதனைச் சித்தம் (24)[1] எனவும் அழைப்பர். ''**சித்தம் அழகியார் பாடாரோ நம் சிவனை**''[2] என்பது மலம் நீங்கித், தெளிந்த சிந்தையோடு சிவஞான இன்பத்தில் திளைத்திருக்கும் உயர்பக்குவ ஆன்மாக்களின் இயல்பு பற்றிய திருவாதவூரரின் கணிப்பு ஆகும்.

பிரகிருதி, மூலப்பகுதி, குணதத்துவம், சித்தம் என்ற சொற்கள் ஒரே பொருளை - அசுத்த மாயையின் கீழ்ப்பகுதியைக் குறிப்பனவாம்.

நம் தலையினுள் ஆயிரம் இதழ்களைக் கொண்டதொரு தாமரை மலரினைப் போன்று அமைந்துள்ளது, பேரறிவத்தானமாகிய பெருமூளை. அதன் அடிப்பகுதியில் அம்மலர் இதழ்களைத்

---

1 *24, 23 முதலிய எண்கள் தத்துவ எண்கள்*

2 *திருவெம்பாவை - 3*

தாங்கி நிற்கும் ஒரு காம்பு போன்று அமைந்து உள்ளது. ஹைப்போதாலமஸ் (Hypothalamus) என்ற ஓர் உறுப்பு. அதனையே சித்தம் எனச் சுட்டுதல் பொருந்தும். இவை எல்லாம் ஆதாரமுளை (Embryo)[1]யின் அமைப்புப்பற்றிய சில செய்திகள்.

இனி, நம்பொருட்டு, உலகம் உடம்பு முதலியன தோன்றி இயக்கம் பெற வேண்டிய காலத்தில், இந்த முளை எவ்வாறு வெளிப்பட்டு வளர்கிறது என்பதைக் காண்போம்.

இறையருள் என்ற ஈரமண்ணின் துணையால் முற்கூறிய குண தத்துவம் என்ற ஆதார முளையானது கிழங்கின் வெளியே ஒரு முளைத் தண்டாக (Sprout) வளர்ந்து தோன்றுகிறது; அம்முளைத் தண்டுக்குப் **புத்தி** தத்துவம் (23) என்பது பெயர்.

அதிலிருந்து மூன்று கப்புகள் வெடிக்கின்றன. அவற்றிற்கு, **அகங்கார** தத்துவம (22) என்பது பெயர்.

'அகங்காரம்' என்றால் என்ன? 'நான்' என்ற உள்ள எழுச்சியை அகங்காரம் என்றும் 'தற்போதம்' என்றும் அழைப்பர். இஃது ஆணவம் என்ற மூலமலத்தின் தொடர்பால் விளைவது. அகங்காரம் என்பது ஒரே தத்துவமாயினும், அவரவர் இயல்பான மூன்று குணங்களின் வேறு பாட்டிற்கு ஏற்ப, அதுவும் மூன்று வகையாகிறது.

அவற்றில் சாத்துவிக குணத்தால் அறிவு மேலோங்கி அமைவதைத் தைஜஸ அகங்காரம் என்றும், ரஜோகுணத்தால் செயல் திறன் விகாரப்பட்டு அமைவதை வைகாரிக அகங்காரம் என்றும், தாமச குணத்தால் இச்சை (விருப்பம்) என்ற இயல்பு மிகுந்து அமைவதைப் பூதாதிக அகங்காரம் என்றும் கூறுப.

---

1 [சித்தம்] Embryo என்பதற்கு the beginning of anything; rhe Part of a seed which forms the future plant என ஆங்கில அகராதிகள் பொருள் விளக்கம் தரும். "வினையே பிறப்புக்கு வித்து, இருவினைக்கு ஏற்ப இன்ப துன்பங்கள் நிகழ்கின்றன. சித்தம் என்ற மூலப் பிரகிருதியிலிருந்தே ஆன்ம தத்துவங்கள் 24ம் தோன்றுகின்றன - என்பது சைவக் கோட்பாடு.

ஒவ்வோர் அகங்காரத்திலும் ஒவ்வொரு குணம் மேம்பட்டும் ஏனைய இரு குணங்களும் சிறுசிறு அளவிலும் நிலவுகின்றன.

மனத்தின் தோற்றுவாய்: தைஜஸாங் கராத்திலிருந்து மனம், கண், காது, மூக்கு, நாக்கு, தோல் என்ற ஆறு அறிவுக் கருவிகளும் (21—16), வைகாரிகாங்காரத்திலிருந்து வாய், கை, கால், எருவாய், கருவாய் என்ற ஐந்து செயற்கருவிகளும் (15—11), பூதாதிகாங்காரத்திலிருந்து சுவை, ஒளி, ஓசை, ஊறு, நாற்றம் என்ற ஐந்து (தன் மாத்திரைகளும்) நுண்பூத மூலக்கூறுகளும் ஆகாயம், காற்று, தீ, நீர், நிலம் என்ற ஐந்து பூதங்களும் (10—1) தோன்றுகின்றன.

எனவே மனம் என்ற அகக்கருவியானது நமக்கு உள்ள சாத்துவிக குணத்தின் மேம்பாட்டால் தைஜஸாங்காரத்திலிருந்து தோன்றுகிறது என அறிகிறோம்.

குணங்களின் ஆளுமை: பசுவின் சாத்துவிக குணம் நமக்கு மிகுந்திருந்தால், அமைதியான அந்த மனம் அருள் வழியில் செல்லும்; உலகியலில் நடுவு நிலையை நாடி நிற்கும். புலியின் முரட்டுக் குணம் மிகுந்திருந்தால், மனமும் வெறியாட்டம் ஆடும். உலகியலில், நாடாளும் மன்னர்க்கு இத்தகைய இரஜோ குணமும் வைகாரிகாங்காரமும் ஆளும் தன்மையும் மேம்பட்டு நிற்கும். எருமையின் தாமசகுணம் உடையவர்களுக்கு மனம் சோம்பித்திரியும்; அற்ப சிற்றின்பங்களில் ஆசை மிகுந் திருக்கும்.

இவ்வாறு ஒவ்வொருவருக்கும் ஒரோ ஒரு சமயம் ஒவ்வொரு குணம் மேம்பட்டும் ஏனைய இரு குணங்களும் சிறுசிறு அளவின தாகவும் விரவித் தோன்றுதல், இயல்பு.

மனத்தின் இயக்கம்: மனத்தின் இயக்கம் பற்றி அறிய வேண்டுமானால், உயிருக்குச் சட்டை போன்று உள்ள ஐந்து கோசங்களின் அமைப்பும் அவற்றின் தொழிற்பாடும் பற்றி முதற்கண் அறிதல் வேண்டும்.

"ஏகன் அநேகன் இருள் கன்மம் மாயை இரண்டு
ஆகஇவை ஆறுஆதி இல்"[1]
"இருபேருருவின் ஒரு பேரியாக்கை"[2]

என இருமாயைகளினால் ஆன இரண்டு உடம்புகளின் இயை பினைச் சாத்திர தோத்திர நூல்கள் இனிதே பகரக் காணு கிறோம். சுத்த மாயை அசுத்தமாயை என்ற இருமாயையி லிருந்து தோன்றிய முப்பத்தாறு தத்துவங்களும். அன்னமய கோசம், பிராணமய கோசம், மனோமயகோசம், விஞ்ஞானமய கோசம், ஆனந்தமயகோசம் என்றவாறு ஒன்றில் ஒன்று நுண்ணியதாய ஐந்து கோசங்களாக அருளப் பெற்றுள்ளன.

பூத உடம்பினைப் பற்றிய அறிவியலார் கருத்தோடு இச் சைவ சித்தாந்த தத்துவங்களும் கோசங்களும் எவ்வாறு பொருந்தி வருகின்றன என்பதைக் காண்போம்.

	மெய்ஞ்ஞானம்	விஞ்ஞானம்
I	சுத்த மாயையின் வெளிப் பாடாகிய சிவதத்துவம் ஐந்தும், ஆனந்த மய கோசமாகும்.	நம் தலையினுள் அமைந்து இருக்கும் அறிவுத்தானமாகிய மூளையின் மூன்று பகுதிகளும் ஆனந்த மய கோசம். (Pleasure Centre)[3]
II	அசுத்த மாயையின் வெளிப் பாடாகிய வித்தியா தத்து வம் ஏழும் விஞ்ஞான மய கோசமாகும்.	நம் தலையின் நடுப்பகுதியி லுள்ள முகுளமும், கழுத்துப் பகுதியிலுள்ள ஏழு முதுகுத் தண்டுப் பிரிவுகளும் விஞ்ஞான மய கோசத்தில் அடங்கும்.
III	பிரகிருதி மாயையின் வெளிப் பாடாகிய ஆன்ம தத்துவம் 24ம், மனோமய கோசம், பிராணமயகோசம், அன்னமய கோசம் என்ற மூன்று கோசங்களாம்.	நெஞ்சு, வயிறு, அடிவயிறு, இடுப்பு—ஆகிய உடற்பகுதியி லுள்ள 24—முதுகுத்தண்டுப் பிரிவுகளும் மிஞ்சிய உடற் பகுதியும் இதில் அடங்கும்.

1 திருவருட்பயன் - உமாபதிசிவம் - 14 சாத்திரங்களுள் ஒன்று
2 திருமுருகாற்றுப்படை - நக்கீர தேவர். 11ஆம் திருமுறை'
3 Pleasure Centre: 'Iam Joe's Body' PP. 13

மண்ணுடம்பு: சிற்றின்ப உடம்பு, (**அன்னமய கோசம்**) தோல், நாக்கு, மூக்கு, கண், காது என்ற ஐந்தும் அறிவுக் கருவிகள். கை, கால், வாய், எருவாய், கருவாய் என்ற ஐந்தும் செயற்கருவிகள், கை என்றும் கால் என்றும் கண் என்றும் மூக்கு என்றும் அவயவப் பகுப்புடைய நமது புற உடம்பை அன்னமய கோசம் எனச் சாத்திரங்கள் கூறும். 'சோற்றால் அடித்த பிண்டம்' என்பது இதன் பொருள். புறத்தே எல்லோர்க்கும் வெளிப்படையாகத் தெரிவது, இது.

இவற்றைக் கொண்டு உலகப் பொருள்களை நாம் நுகர்தல் வேண்டும், அதன்மூலம் முந்திய வினைகளைக் கழித்தல் வேண்டும்; அறிவு விளக்கம் பெற்றுப் பேரின்பம் துய்த்தற்கு முற்பட வேண்டும். இவையே படைப்பின் நோக்கம். எனவே, இதனை உரு உடம்பு, தூல உடம்பு, சிற்றின்ப உடம்பு என்று பல பெயரிட்டு அழைப்பர். இது மண்ணிலிருந்து தோன்றி, மண்ணிலேயே ஒடுங்குவதால், மண்ணுடம்பு என்பதாயிற்று.

புலன் உடம்பு: (பிராணமய கோசம்) கண் என்ற கருவி நமக்குப் பயனுடையதாக இருக்க வேண்டுமானால், அதற்குப் பார்வை ஆற்றலாகிய ஒளி வேண்டும். அதேபோன்று காது என்ற கருவிக்குக் கேள்வி ஆற்றலாகிய ஓசை வேண்டும். இப்படியே ஐந்து அறிவுப் பொறிகளும் நமக்கு அறிவு விளக்கம் தருவதற்கு ஐந்து நுண்ணிய புலன்கள் வேண்டும்.

சுவை, ஒளி, ஓசை, ஊறு, நாற்றம் என்ற இந்த ஐந்து நுண்புலன்களும் மேற்கூறிய அறிவுக் கருவிகளை இயக்குகின்றன. இந்த நுண்ணிய புலன்களின் கூட்டத்தை நுண்ணுடம்பு, புலனுடம்பு என அழைப்பர். உயிர் இந்த உடம்போடு ஒட்டி நிற்பதற்குத் துணை புரிவது, பிராணன் என்ற வாயுவாகும். எனவே பிராண வாயுவையே நுண்ணுடம்பு எனக் கொள்ளுவதும் ஒரு மரபாகும். கண்ணுக்குத் தெரியாத நுண்ணுடம்பு இது வாதலால், இதனை அரு உடம்பு, சூக்கும உடம்பு என்றும் பிராணமயகோசம் என்றும் கூறுவர். சுவையின்பம், காட்சி இன்பம் போன்ற உலகியல் சிற்றின்பத்துக்கு உறுதுணையாவது இப்புலனுடம்பு. ஆதலால் இது புற உடம்புடன் இணைத்தே சிந்திக்கப் பெறுகிறது.

பொன்னுடம்பு: (பேரின்ப உடம்பு, ஆனந்தமயகோசம்) உண்மைப் பேரின்பம் என்பது எக்காலத்தும் மாறுபாடின்றி ஒரே நிலையாக இருப்பது; துன்பக் கலப்பில்லாதது; ஞானமய மானது. நமது உடம்பிலும் அப்பேரின்பத்திற்கான நிலைக் களம் சிறப்பாக அமைந்துள்ளது. அவ்வாறு பேரின்பத் தான மாக அமைந்த இடம், சுத்தமாயையினாலான நமது தலை; 'எண்சாண் உடம்புக்குச் சிரசே பிரதானம்' என்பது ஆன்றோர் வாக்கு. நமது தலை ஒரு தெய்வீகக் கட்டமைப்புக் (celestial body) கொண்டது. அறிவுத் தானமாகிய மூளை, இங்குத்தான் அமைந்துள்ளது. முன்தலையிலுள்ள பெருமூளை இரு கூறு களாக உள்ளது எனவும், அவற்றின் நடுவில் பேரின்பத்தை நல்குகிற தெய்வீக ஆண்மைப் பொலிவும் (Corpus Collosum), பெருமூளைக்குக் கீழே, இன்பத்தானமாகிய ஆன்ம அல்குல்லும் (Pituitary), மற்றும் பல உயர்ந்த துணைக் கருவிகளும் இங்குத் தான் உள்ளன எனவும் முன்னரும் கண்டோம். ஒரே மலையில் குவடும், குகையும் புறக்காழ்ப்பு, அகக் காழ்ப்பாக அமைந் திருப்பனபோல, நமது தலையாகிய இமயகிரியிலும் ஆண் பெண் உறுப்புக்கள் ஒருசேர அமைந்துள்ளன.

இவ்வாறு பேரின்பத்துக்கு உறைவிடமான நமது மூளைப் பகுதியை ''ஆனந்த மயகோசம்'' என்ற அதிநுண்ணிய ஓர் உடம்பாகக் கொள்ளுதல் சைவ சித்தாந்த மெய்ஞ்ஞானத்திற்கும் ஏற்புடையதே, நமது முன் தலையிலுள்ள பெருமூளை, பின் தலையிலுள்ள சிறுமூளை, இவற்றிற்கு நடுவிலுள்ள நடுமூளை என்ற மூளையின் முப்பகுதிகளும் ஆனந்தமயகோசத்துள் அடங்கும். இப்பொன்னுடம்பு சுத்த மாயையினால் ஆனது; முன்னர்க் கூறிய மண்ணுடம்போ அசுத்த மாயையினால் ஆனது.

நுண்ணறிவுடம்பு: (விஞ்ஞானமய கோசம், கஞ்சுக உடம்பு) உயிரின் உய்திக்கு என அருளப்பெற்றது உடம்பு; அதன் தலை யிலே பரசிவத்தைக் கூடி உயிர் பேரின்பம் துய்க்கிறது எனக் கண்டோம். அவ்வின்ப நிலைக்கு உயிரை வழி நடத்துவதில், ஓர் இடைநிலை உடம்பு துணை நிற்கிறது. அதற்கு விஞ்ஞான மயகோசம் என்பது பெயர். அஃது அசுத்த மாயையின் மேற் பகுதியாகிய ஏழு வித்தியாதத்துவங்களால் ஆனது; சுத்தமும் அசுத்தமும் விரவியது; காலம், நியதி, கலை, வித்தை, அராகம்

என்ற ஐந்துடன் இங்குக் கூடிய உயிர், 'பஞ்ச கஞ்சுகனாய்'ப் 'புருடன்' என்ற பெயர் பெறுகிறது.

இறைமைப் பேரின்பம் பெறுதற்கான, விளங்கிய அறிவினை அவ்வுடம்பு உயிருக்கு நுண்ணிதே ஊட்டுவதால், விஞ்ஞான மய கோசம் என்றும் பஞ்ச கஞ்சுகனாய் உயிர் விளங்குவதால், 'கஞ்சுக உடப்பு' என்றும் அதனைச் சாத்திரங்கள் சுட்டி உணர்த்தும்.

இது நமது உடம்பிலுள்ள மைய நரம்பு மண்டலத்தின் மையக் கூறேயாகும். முகுளமும் (Spinal Medulla) முதுகுத் தண்டின் கழுத்துப் பகுதியும் (Cervical Spines) இவ்வாறு இறையருள் தொழிற்படும் இடைநிலங்களாம். நாம் விழித் திருக்கும்போது மூளைப்பகுதிகள் இடுகின்ற ஆணையை, நாம் உறங்கும் போது, இந்த முகுளமே மேற்கொள்ளுகிறது என அறிவியலாரும் கூறுவர்.

மன உடம்பு: (கருஉடம்பு, மனோமய கோசம்) குவிந்த பேரின்பத்துக்கு உறைவிடமான ஆனந்தமய கோசம் ஒரு புறம்; விரிந்து பரந்த சிற்றின்பத்துக்கு உறைவிடமான அன்ன மயகோசம் மறுபுறம். இவை இரண்டிற்கும் நடுவே இரண்டை யும் இணைக்கும் பாலமாக அமைந்திருப்பது மன உடம்பு ஆகும். இதனைக் கரு உடம்பு என்றும் புரியட்டகாயம் என்றும் அழைப்பர். மனம் என்ற ஆற்றல் மிக்க உட்கருவி இவ்வுடம் பினை இயக்குகிறது. மனத்திற்குத் துணையாக வேறுசில உட்கருவிகளும் இறைவனால் அருளப் பெற்றுள்ளன. புத்தி, அகங்காரம், சித்தம் என்பன அவை. அவற்றுள் சித்தம் எனபது ஊழ்வினைப் பதிவேடு, அதனை இன்ப துன்ப நுகர்ச்சிகள் வரையப்பட்ட 'தலைஎழுத்து' என்பர். அத்'தலைவிதி' நுகர்ந் தால் அன்றித் தொலையாது. எனவே சித்தத்தை விடுத்து, ஏனைய மூன்றையும் அந்தகரணம் எனக் கொள்ளுவது சைவ மரபு. ஆக மனம், புத்தி, அகங்காரம் சித்தம் என்ற நான்கு நுண்ணிய உட்கருவிகளும் மனோமய கோசத்தினை இயக்கு கின்றன.

மனம் என்பது என்ன? அகக்கருவி: மனம் என்பது ஓர் அகக் கருவி (அந்தக்கரணம்) என்றும், மாயையின் 36-தத்துதங்களுள் ஒன்று என்றும், உயிர்ப் பொருள்கள் அனைத்திலும் அது பரந்துபட்டு நின்று தொழிற்படுகிறது என்றும் சைவ சாத்திரங்கள் கூறுகின்றன.

அமைச்சு: மனம் என்பது உயிர் என்ற அரசனுக்கு அமைந்த ஓர் அமைச்சு[1] என்று உவமித்துக் கூறுவர், சைவ அருளாளர். அமைச்சர்களது அறிவுரைப்படி அரசன் ஒருவன் தொழிற் படுவதைப் போன்று, மனம் முதலிய நுண்ணிய நான்கு உட்கருவிகளோடு கூடி, உயிர் தொழிற்படுகிறது என அவர்கள் அறிவுறுத்துவர்.

தோழி: மனம் என்பது, உயிர் என்ற தலைவிக்கு உறு துணையாக நிற்கும் ஒரு தோழி என்று குறிப்புரைப்பர், அகத் துறையாளர் மாயையிலிருந்துதான் உயிருக்கு ஓர் உடம்பும், உலகமும், கருவிகளும், நுகர் பொருள்களும் உருவாயின மனமும் மாயையின் தத்துவக் குழந்தைகளுள் ஒன்றே ஆதலால் மாயை என்பது உயிருக்குச் செவிலித்தாய். அவளது மகளாகிய மனம், உயிர் என்னும் தலைவிக்கு ஒரு தோழி. சாத்திரங்கள் அறி வுறுத்தும் இவ்வுண்மைகளைச் சங்க இலக்கியங்களிலுள்ள குறிப்பு மொழிகளாலும் உணர முடிகிறது.

ஒரு குழந்தையை நல்வழியில் கொண்டு செல்வதற்கு, அக் குழந்தையை மற்றொரு நல்ல குழந்தையுடன் தோழமைப் படுத்த வேண்டும். தாய், தந்தை, உறவினர் போன்றோர் கூறும் அறிவுரைகளைவிடத், தோழன் ஒருவன் சொல்லுகிற ஒவ்வொரு சொல்லையும் வேதவாக்காகக் கொள்ளுவது மனித இயல்பு தீ நெறிகளின் கேட்டினைச் சுட்டி உணர்த்த வல்லவன் தோழனே. அவனே, நல்ல நெறிகளின் உயர்வினையும் உணர்த்தி, அவ்வழி யில் நிறுத்தவும் வல்லவன்.

எனவே, இறைவன் உயிர்களாகிய நமது அறிவினுக்குத் தெளிவினை ஊட்டுதற்காக, மனம் என்ற ஓர் உயர்ந்த தோழியை நமக்கு அருளினார்.

ஆறாவது அறிவு: மனம் என்பது மனித, தேவ இனங் களுக்கு அமைந்த ஆறாவது அறிவுக் கருவி[2] என்பது தொல் காப்பியர் போன்ற தமிழ்ச் சான்றோரின் பண்டு தொட்ட கொள்கை.

---

1 "அமைச்சு அரசு ஏய்ப்ப நின்று அஞ்சு அவத்தைத்தே"
- சிவஞானபோதம் 4-ஆம் சூத்திரம்

2 "ஆறு அறிவு அதுவே அவற்றொடு மனனே"
-தொல்கா - மரபியல்

தோல், நாக்கு, மூக்கு, கண், காது என்பன ஐந்தும் மற்ற அறிவுக் கருவிகள். இவை பருமையாக நம் கண்களுக்குப் புலனாகின்றன. இவற்றைப் போல, மனம் என்பது வெளிப் படையாகத் தெரியாமல் மிக நுண்ணியதாக அமைந்துள்ளது. மனம் என்பது ஒரு நுண்புலன் எனக் காண்பர், உடலியல் உள வியல் அறிஞர்.

குரங்கு: மனத்தின் இயல்புகளைக் குரங்கினைத்தோடு ஒப் பிட்டுக் கூறுகின்றன உபநிடதங்கள். கிளைக்குக் கிளை தாவித் திரியும் இயல்பினது குரங்கு; குறிக்கோளின்றி ஓடி அலைவது நாய்; ஆதாரமின்றி அலைந்து திரிவது பேய் இவற்றைப் போன்றதுதான் வினைவயப்பட்ட மனமும். எனவே ஆன்ம இயல்பினை நன்கு உணர்ந்து தெளிந்த அருளாளர், தம்மைத் தாமே, 'நாயேன்' என்றும் 'பேயேன்' என்றும் அழைத்துக் கொள்ளக் காணுகிறோம்.

மழைநீரைப் போன்று தூய்மையானது, தூய மனம்; நிலத் தின் இயல்புக்கு ஏற்ப, மழைநீர் தன் தூய்மையில் மாற்றம் பெறுவது போல, பிராரத்தம் என்ற ஊழ்வினைக்கு ஏற்ப, மனத்தின் தூய்மையும் மாற்றம் பெறுகிறது.

இவ்வாறு சைவ சித்தாந்திகள் உள்ளம் என்ற நமது அக உடம்பினை, மனோமய கோசம், விஞ்ஞான மயகோசம், ஆனந்த மயகோசம் என்றவாறு நுண்ணிய, அதிநுண்ணிய, அதனிலும் நுண்ணிய மூன்று அந்தரங்கக் கருவூலங்களாகச் சிந்திக்கின்றனர்.

மனம் ஏன் படைக்கப்பட்டது? அவரவர் செய்த வினைகளின் பயனை அவரவரே நுகர்ந்து கழிக்க வேண்டும் என்பது நியதி. எனவே, வினைப் பயன் நுகர்ச்சிக்கு ஏற்ற உடம்பு முதலியன நமக்கு இறைவனால் படைத்தருளப் பெற்றன. அவ்வாறு படைக்கப்பட்ட பொருள்களுள் மனமும் ஒன்று. பொருள்களின் பால் உயிருக்கு ஒரு பற்றுக்கோடு இருந்தால் மட்டுமே நுகர்ச்சி எளிதாகும். அத்தகைய பற்றுக் கோடாக அமைந்தது மனம். வினைவழிப் பட்ட காலத்திய உலகியல் வாழ்வாயினும், வினை யின் நீங்கிய காலத்திய ஆன்மீக வாழ்வாயினும், உயிரின் இயக்கத்திற்கு மனமே உறுதுணையாக நிற்கிறது.

உயிருக்கு மூன்று இயல்புகள் உள்ளன. அவை, இச்சை, ஞானம், கிரியை என்பன. அநாதி மூல மலமாகிய ஆணவ மலத்தால் முடக்குண்ட இவ்வாற்றல்களுக்குப் புத்துயிரும் புத்தொளியும் கொடுத்து, உயிரை இறைமை நிலைக்கு உயர்த்துவதற்கு மனத்தின் துணை இன்றியமையாது வேண்டற்பாலதாகும்.

துணை நிற்கும் தோழியாக உயிருக்கு மட்டுமன்றி, உயிரை இயக்குகிற பரசிவத்திற்கும் மனம் சிறந்த ஒரு தூதனைப் (Regent) போல் பணி செய்கிறது. உயிருக்கு எதில் விருப்பம்? உயிரின் அறிவு எங்கெல்லாம் செல்லுகிறது? உயிரின் செயற்பாடு எவ்வாறு உள்ளது? என்பவற்றை, அவ்வப்போது பரசிவத்துக்குத் தெரிவிப்பது மனமே. மலம் நீங்கிய உயிரைச், சிவபரம் களவுப் புணர்ச்சி கொள்ளும் காலத்தில், அத்தனிப் பெருந்தலைவனிடம் உயிரை ஆற்றுப் படுத்துவதும், தலைவனது குறிப்பு மொழிகளை உயிருக்கு உணர்த்துவதும் மனமே. இதனைத் ''தோழியிற் கூட்டம்'' எனச் சங்க நூல்கள் சிறப்பித்துப் பேசும். உயிரின் பக்குவத்திற்கேற்பச் சிவபெருமானாகிய தலைவனிடம், தலைவியை நோக்கி வருமாறு பகற்குறி, இரவுக்குறிக்கு அழைப்பதும், மறுப்பதும் கூட மனத்தின் வேலையாகிறது. ஆண்டவனுக்கும் ஆன்மாவுக்கும் பேரின்பக் கூட்டம் நிகழும் அந்த வேளையில் கூட, ஊழ்வினைக்கு ஏற்ப மனம் என்ற தோழி தன் கிறுக்காட்டத்தின் மூலம், ஆன்மாவைப் புறத்தே இழுத்துச் சென்று விட முடியும்.

அகக்கருவிகளின் நிலைக்களன்: உயிரின் ஆற்றல் உடல் முழுவதும் நீக்கமற நிறைந்திருந்தாலும், சிறப்பாக மூன்று இடங்களில் தொழிற்பட்டு நிற்கும். நமது உடலின் கண் நெஞ்சுத்தானமே, உயிர் என்னும் அரசனுக்கு **அத்தாணி மண்டபம்:** அடிவயிற்றுப் பகுதி, சிரசின் மூளைப் பகுதி ஆகிய இரண்டும் இரண்டு **வசந்த மண்டபங்கள்;** 'மூளை முதுகுத் தண்டுப்' பகுதியே இறைவனது **தேரோடும் திருவீதி** என்பதும், பக்குவமடைந்த உயிர்கள் இறைவன் திருவடியைப் பின்பற்றி இந்த அரச வீதியிலேயே உலாவருகின்றன என்பதும் அறியத்தக்க உண்மைகள். மனம் முதலிய அகக் கருவிகள் உயிருக்கும் இறைவனுக்கும் இணைப்புப் பாலமாக அமைந்து, உயிரை நெறிப்

படுத்தும். இந்த நிலையில் மனம் முதலியவற்றின் நிலைக் களனும் தொழிற்பாடும் நிறமும் குணமும் என்ன, என்ன? என் பதைச் சைவ சித்தாந்த அறிவு நூல்கள் மிகத் தெளிவாக கூறு கின்றன.

மனம் : ஒரு செய்தியைப் பற்றும் இயல்பினது. இது, நெஞ்சுத் தானத்தில் 'உயிர் அரசனது' அத்தாணி மண்டபமாகிய அரசவைக் கண் அமர்ந்து, தலைமை அமைச்சனைப் போல், ஆன்மாவின் உறங்கிக்கிடக்கும் விழைவாற்றலைத் தூண்டும்.

புத்தி என்னும் துணை அமைச்சனது இருப்பிடம், பின்புறச் சிரசிலுள்ள சிறுமூளையின் அறிவு நரம்புகள் (Sensory Nerves) ஆகும். மனம் மேலெழுந்த வாரியாகப் பற்றியதைப், புத்தி நிச்சயித்து உறுதிப்படுத்தும்; இது அறிவுப் பகுதி.

அகங்காரம் என்னும் துணை அமைச்சனது இருப்பிடம், நம் பின்புறச் சிரசிலுள்ள சிறுமூளையின் செயல் நரம்புகள் (Motor Nerves) ஆகும். புத்தி நிச்சயித்து ஆணையிட்ட வழி அகங்காரம் நாடி நரம்புகளை இயக்கித் தொழில்படுத்தும்; இது செயற் பகுதி.

சித்தம் என்பது மூலப் பொருள்; இந்த நுண்பொருளைப் பிரகிருதி மாயை என்பதும், பிரிக்கப்படாத முக்குண வடிவம் என்பதும், இதனின்று தான், ஆன்ம தத்துவங்கள் 24-ம் நுண் மையாகவும், பருமை நிலையாகவும் வெளித் தோன்றின என்ப தும் நாம் முன்னரே கண்ட சைவ சித்தாந்த உண்மைகள். நிலம் நீர், தீ, வளி, ஆகாயம் என்ற ஐம்பெரும் பூதங்களாலான இவ் வுடலின் முழுமுதல் வடிவம் (Embryo) சித்தம் என்பதும், எனவே உயிரும் உடலும் முதற்கண் பொருந்திய இடமாகிய, சிரசின் முன்பகுதியே, சித்தத்தின் இருப்பிடம் என்பதும் இதனால் உய்த்து உணரப்பெறும்.

ஆணவ இருளில் கட்டுண்ட உயிராயின், அதன் சித்தம் பல்லாற்றானும் சிக்குண்டு, திருகிய சிந்தையாகக் கலங்கி நிற்கும் என்பதும், இறைமை உணர்வில் திளைக்கும் உயிராயின், அதன் சித்தம், இறைவனது திருவருட் சிறப்பால், திருகு சிந்தை தீரப்

பெற்றுத், தெளிந்த, உயர்ந்த சிவானந்தச் செழுந்தேனைப் பருகி நிற்கும் என்பதும், ஆன்மீக நெறியாளர் அனுபவ வழி உணர்ந்து கூறிய உண்மைகளாம்.

"திருகு சிந்தையைத் தீர்த்துச் செம்மை செய்து
பருகி ஊறலைப் பற்றிப் பதம்அறிந்து
உருகி நைபவர்க்கு ஊனம் ஒன்று இன்றியே
அருகு நின்றிடும் ஆனைக்கா அண்ணலே"[1]

என்பது அப்பர் வாக்கு. இறைமை உணர்வும், அனுபவமும் முதிர முதிர, உடம்பின் சிரசுப் பகுதியே சிவதத்துவ விளக்கு மாகத் திகழ்வதையும் அறியலாம். 'பசுகரணங்கள் இறையருளால் பதிகரணமாக விழுப்பம் பெறும் என இதனைச் சாத்திரங்கள் சிறப்புரைக்கும். "சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனை ஆண்ட அத்தன்..." என்ற மணிவாசகரது கூற்று ஈண்டு இணைத்துச் சிந்திக்கற்பாலது.

மனம் - ஒரு பொதுவுடைமை: தாவரம் முதல் மனிதர், தேவர் வரை, அனைத்து அறிவுப் பொருள்களும், உயிர்கள் என அழைக்கப்பெறும். இவை அனைத்துக்கும் மனம் என்ற கருவி உண்டு. நீண்ட நெடுந்தூரம் பறந்து சென்று இரைதேடி எய்த்துப், பின்னர்க் கூட்டிற்குத் திரும்பித் தன் அருமைக் குஞ்சு களுக்கு உணவு ஊட்டுகிறதே சிட்டுக் குருவி, அது போன்ற வற்றிற்கு 'மனம் – இல்லை' என்று சொல்ல முடியுமா?

தனது இளங்கன்றின் முகம் பார்த்து வெள்ளமென மடி சுரக்கப், பஞ்சு போன்ற அதன் மெல்லுடலைப் பாசமுடன் நக்கித் துடைத்துக் கொண்டே அதற்குப் பாலூட்டி மகிழ்விக் கிறதே, பசு இனம், அதற்கு 'மனம் இல்லை' என்று கூறவும் இயலுமா? எனவே, இதிலிருந்து நாம், ஓர் உண்மையை அறிந்து கொள்ளுகிறோம். உயிர்கள் ஆணவ மலத்தாலும் இரு வினை களாலும் கட்டுண்டு அல்லலுறுகின்றன. ஓரறிவு முதல் ஆறறிவு வரையுள்ள அனைத்து உயிர்களுக்கும், மனம் என்ற கருவி, ஒரு பொது உடைமை; ஆயினும் அவரவரது ஆணவப் பிணிப்பின் அழுத்தத்துக்கும், வினைக்கட்டின் இறுக்கத்துக்கும் ஏற்பவே

1 அப்பர் தேவாரம் 5;31;2

மனம் என்ற கருவி, மறைந்து நின்றோ, அல்லது விளங்கி நின்றோ, செயல்படும் என்பது உணரப் பெறும்.

அவ்வாறாயின் ஆறறிவு மனிதனது மனத்துக்குத் தனிச் சிறப்பாவது யாது? என்ற வினா எழுகிறதன்றோ! தனக்குக் கீழே உள்ள ஐந்து அறிவுக் கருவிகளையும், ஒரு கட்டுக்குள் நிறுத்தி, மிக உயர்ந்ததாகிய மெய்ப்பொருளை நாடி அறிதலாகிய மேலான வேட்கையின் மூலமே மனித் மனம் தனிச் சிறப்புப் பெறுகிறது என்பது உய்த்துணரற்பாலது.

மனம் - ஒரு சடப்பொருள்: கண், காது, மூக்கு, நாக்கு தோல் என்பன அறிவுக் கருவிகள். அவற்றின் துணைகொண்டு உலகியலிலேயே உழலாமல், மெய்ப்பொருள் உணர்வு பெறுதற்கு முற்படுதலே, படைப்பின் நோக்கம். ஆயினும் அறிவுக்கருவிகள் எனப் பெயர் கொண்ட இவை, தாமே அறிவுள்ள பொருள்களா எனில், அன்று; இவை அறிவற்ற சடப்பொருள்களே.

கண் என்ற பொறி ஒரு பொருளைப் பார்ப்பதற்குப் பார்வை ஆற்றலாகிய ஒளி வேண்டும். அதேபோல் ஒவ்வோர் அறிவுப் பொறியையும் இயக்குதற்கு ஒவ்வொரு புலன் வேண்டும். இவ்வாறு பொறிகளை இயக்குகிற புலன்களாவது அறிவுடைய பொருள்களா எனில், அன்று; இவையும் சடப்பொருள்களே.

ஐந்து அறிவுக் கருவிகளும் அவற்றை இயக்கும் புலன்களும் அறிவற்ற சடமாதலால், அவைகள் எல்லாவற்றையும் செலுத்தவும் கட்டுப்படுத்தவும் ஒடுக்கவும், அவற்றினும் மிக நுண்ணிய பொருளாக, மனம் என்ற ஓர் உட்கருவியை ஆறாவது அறிவுக் கருவியாக இறைவன் அருளினார். பொறிபுலன்களைப் போன்று, மனமும் அனுபவத்தின் மூலமாக, நமக்கு அறிவு விளக்கம் தருகிறது. எனவே, மனத்தை உயிர் பெரிதும் அண்டியிருக்கிறது. உயிர் இவ்வாறு அறிவு விளக்கம் பெறுதற்குத் துணைநிற்கும் மனமாவது அறிவுடைய பொருளா எனில், அன்று; அஃதும் ஒரு சடப்பொருளே. அவ்வாறாயின், அஃது எவ்வாறு இயக்கம் பெறுகிறது? உயிருக்கு, விழைவு, அறிவு, செயல் என்ற மூவகை ஆற்றல்கள் உள்ளன; வடமொழியில் அவற்றை இச்சை, ஞானம்,

கிரியை என்பர். அவை ஆணவம் என்னும் மூலமலத்தால் முடக்குண்டு கிடக்கின்றன. மலக்கட்டினை நீக்கி, ஆற்றல்களை உயிரின்பால் விளங்கச் செய்து, உயிருக்கு மெய்யுணர்வு ஏற்படுத்த விரும்புகிறார் இறைவன்.

விழைவு ஆற்றல் (இச்சை) விளங்கித் தோன்ற வேண்டிய இடம் மனம். அதேபோல் அறிவு ஆற்றலுக்குப் புத்தி தத்துவமும், செயல் ஆற்றலுக்கு அகங்கார தத்துவமும் கருவிகளாகின்றன. விழைவு முதலிய ஆற்றல்களை மனம்முதலிய கருவிகளில் விளங்கச் செய்வதுதான் யாங்ஙனம்?

மனம், புத்தி, அகங்காரம் என்ற மூன்றுமே சடமாகிய அசுத்தமாயையிலிருந்து தோன்றிய ஆன்ம தத்துவங்கள். அவை தொழிற்படுவதற்கு அவற்றினும் மேலானவையும் சுத்தாசுத்த மாயையின் வெளிப்பாடும் ஆன மேநிலைக் கருவிகள் அவற்றை இயக்க வேண்டும். அதன் பொருட்டு அராகம், வித்தை, கலை என்ற வித்தியா தத்துவங்களை நியமிக்கிறார் இறைவன். அந்த மேநிலைக் கருவிகளாவது அறிவுப் பொருள்களோ? எனில் அல்ல. அவையும் சடப்பொருள்களே. எனவே அவற்றிலும் உயர்ந்தவையும் சுத்தமாயையிலுள்ளவையுமான விந்து, நாதம் என்ற தத்துவங்களைக் கொண்டு கலை, வித்தை என்ற இரண்டையும் இயக்குகிறார். அந்த அந்த ஆன்மா நுகர்ந்து தொலைக்க வேண்டிய ஊழ்வினைகளுக்கு ஏற்பவே மனம் என்ற தத்துவத்தை தன் சிற்சத்தியைக் கொண்டே இறைவன் தொழிற்படுத்துகிறார்.

மன உடம்பில் கருவிகள்: அன்னமய கோசம் என்ற புற உடம்பில் கண், காது முதலிய உறுப்புகள் இருப்பன போன்று மனத்தை ஆதாரமாகக் கொண்ட மனோமய கோசத்திற்கும், உறுப்புகள் உள்ளன. மனோமயகோசம் என்பது ஒரு நுண் உடம்பு. எனவே, அதற்கு உள்ள மனக்கண், மனக்காது முதலிய உறுப்புகளும் நுண்மையானவையே,

''ஆசையறாய் பாசம் விடாய்...,
மனமே! உனக்கென்ன வாய்?'' ...[1]

---

1 சிவபோகசாரம் - குருஞானசம்பந்தர் (தருமை ஆதீனகுரு முதல்வர்)

என மனத்தை வினவுகிறார் குருஞானசம்பந்தர்.

மனக் கண்ணின் தொழிற்பாடு: புறத்தே உள்ள பொருள்களை, நாம் புற உடம்பிலுள்ள ஊனக் கண்களால் காண்பதைப் போலவே, நமது உடம்புக்கு உள்ளேயும் வெளியேயும் உள்ள பொருள்களை நாம் மனக்கண் கொண்டு காண முடிகிறது. இதனைப் பாவனை (மானதக் காட்சி) எனச் சாத்திரங்கள் மொழிகின்றன; இலக்கியங்கள் இதற்குக் கற்பனை எனப் பெயர் சூட்டி மகிழ்கின்றன.

மனத்தின் தூண்டுதல் இல்லை என்றால் நாம் நமக்கு எதிரிலுள்ள பொருள்களைக் கூடக் கண்டு உணர முடியாது. பார்க்கப்பட்ட பொருள் உள்மனத்தில் பதிந்தால்தான் தொடர் நிகழ்ச்சி நடைபெறும். அதனால்தான், நம் முன்னோர்கள், பாடங்களை மனனம் செய்யுமாறு முற்காலத்தில் குழந்தைகளை வற்புறுத்தினர்.

மனமும் மெய்ப்பாடும் : மனம் பற்றியதை ஆதாரமாகக் கொண்டு, அவ்வப்போது உடம்பின் மேற்பரப்பில் நிகழ்வனவற்றை 'மெய்ப்பாடு' என்கிறோம். உடன் நிகழ்ச்சியால் மட்டுமன்றி, மனம் பற்றியதை முன்னர்ச் சித்தம் பதிவு செய்து, பின்னொருகால் நினைவுக்குக் கொண்டு வந்தாலும், அவ்வாறின்றி எதிர்கால நிகழ்ச்சி பற்றிய ஒரு கற்பனையாகவே இருந்தாலும், மெய்ப்பாடு நிகழும் என்பது அனுபவ வழி அறியத் தக்க உண்மையாகும்.

இன்றைய நிலை, காரணம் என்ன? இன்றைய உலகில், மனநோயாளிகள் மலிந்திருக்கின்றனர். பரந்துபட்ட மனஓட்டம், தக்கவற்றை விட்டுத், தகாதவற்றில் மனம் குவிந்து நிற்றல், சூறாவளியால் உந்தப்பட்ட கடல் அலை போன்ற மனமுடைமை, ஒன்று முழுமையுறுவதற்கு முன்னரே பிறிதொன்றைப் பற்றுதல், குறுக்கும் நெடுக்குமாகவோ, கீழும் மேலுமாகவோ முரண்பட்டுச் சிந்தித்தல், விரைவு என்ற பெயரால் நிகழும் பொறுமையற்ற சிந்தனைகள், – இவை போன்ற சீரற்ற மன ஓட்டத்தால் மனக் குழப்பங்கள் மிகுதியாகின்றன. இன்றைய மனநோய்ப் பெருக்கத்திற்கு அத்தகைய அவலங்களே காரணம் எனலாம்.

அதனால்தான் தாழ்வு மனப்பான்மை, மனப்போராட்டங்கள், மக்கள் தங்களுக்குள் சண்டையிடுதல் முதலியன இன்று பரவலாகக் காணப்படுகின்றன. இதிலிருந்து விடுபடுவதற்கு அறிவு நூல்களும், நீதி நூல்களும் ஓரளவு பயன் தருகின்றன எனினும், பிறன் மனை விழையாமை, பொய்யாமை, முதலிய அறக்கோட்பாடுகளை ஐயந்திரிபின்றிக் கற்ற அறிஞர்களும் கூட அவ்வழியில் மன உறுதியோடு நிற்கமுடியாமல் தடுமாறுகிறார்களே அஃது ஏன்? என்ற வினா எழுகிறது.

'காதற்ற ஊசியும் வாராதுகாண் கடைவழிக்கே' என்ற மந்திர மொழியால், உலகப்பற்று நீங்கப் பெற்றவர், பட்டினத்தார். அளவற்ற பொற்குவையையும் தூசு எனத் துறந்த அந்த ஞானியின்மேல், அரசனது மணிமாலை திருடியதாகக் குற்றம் சுமத்தப் பெற்றது. தண்டனை, 'கழுவேற்றம்' என்பதாயிற்று. கழு மரத்திற்குமுன் நிற்கும்போதுகூடப், பட்டினத்தார் மனம் கலங்கவில்லை. 'பண்டைய வினை முதிர்ச்சியால் விளைந்த பயனாக அதனைச் சிந்தித்தார் அந்த ஆன்ம தரிசனத்திலேயே கழுமரம் எரிந்து போயிற்று. அவரும் கடவுளரில் ஒருவராகக் கருதப்பெற்றார்.

ஆழ்நிலை மனம்: புற உடம்பில், உயிரின் இயக்கத்துக்குத் துணையாகவுள்ள கண், காது முதலிய கருவிகளைப் போன்று, 'மனம்' என்ற ஓர் ஆறாவது கருவியும் இருக்கிறது அன்றோ? அதேபோல மன உடம்புக்கு உள்ளேயும் 'ஆழ்நிலை மனம்' என்ற ஆறாவது அறிவுக்கருவி ஒன்று உள்ளது என்ற உண்மையை ஆழ்ந்த அனுபவ நிலையில் உணரலாம். இதனை உள்ளம், உள்மனம், ஆழ்நிலை மனம் என அழைத்தல் பொருந்தும்.

சைவ சித்தாந்திகள் இதனைச் **சித்தம்** என்ற சிறப்புப் பெயரால் அழைப்பர். நமது உடம்பில் தலையில் உள்ள (Hypothalamus) ஹைப்போதாலமஸ் என்ற பகுதியே இச்சித்தத்துக்கு இருப்பிடம். மனம், மொழி, மெய் என்ற திரிகரணங்களாலும் செய்யப்பட்ட வினைகளின் பதிவேடு, இதுவே. ஆதலால் நம் தலையில் உள்ள இதனைத் **தலை எழுத்து** என்பது சாலப் பொருந்தும் அன்றோ?

நமது மனத்தை, வெளிமனம், இடைமனம், ஆழ்மனம் என மூவகைப் படுத்தி ஆய்வு செய்கின்றனர் ஃப்ராய்டு, யுங் (Sigmound Freud, Jung) முதலிய மேலை நாட்டு உளவியல் அறிஞர்கள் இவற்றை மனம், புத்தி, சித்தம் என்ற மூன்று தத்துவங்களாகவும், இவை தொழிற்படுகிற இடத்தை அகங்காரம் என்ற தத்துவமாகவும் சைவ சித்தாந்திகள், குறிப்பிடுவதாகக் கொள்ளலாம். இந்நான்கையும் அந்தக்கரணங்கள் என அழைப்பர். இவற்றாலான உடம்பையே மனோமய கோசம் என்றும் குறிப்பிடுவர்.

சித்தம்: (உள்மனம்) நிலத்தின் மேற்பரப்பில் மட்டுந்தான் ஆறுகள் ஓடுகின்றன என்பதில்லை; கடலின் அடி ஆழத்திலும் கூட ஆறுகள் ஓடுகின்றன என்பது இன்றைய அறிவியலார் ஆய்ந்தறிந்த உண்மை. ஒரு கடலில், மேற்பரப்பின் அலை ஓட்டமும், ஆழ்கடலின் ஆற்றோட்டமும் (Current and under-current) ஒரே திசையில்தான் இருக்க வேண்டும் என்பதில்லை. அவை வெவ்வேறு திசையிலும் கூட இருக்கின்றன என அவர்கள் கண்டுள்ளனர்.

அதேபோலத்தான், அலைமோதும் மனக்கடலின் அடி ஆழத்திலும், ஓர் ஆற்றோட்டம் இருக்கிறது. அந்த ஆற்றோட்டம் சித்தத்தின் செயற்பாட்டால் நிகழ்கிறது. அது, முன் எப்பொழுதோ செய்த வினையின் எதிரொலியாகும்.

மனமும் மந்திரமும்: புறவினைகளில் அலைந்து செல்லாதவாறு மனத்தை ஒரு நிலைநிற்கப் பயிற்றுவித்தால், அஃது அறிவின் வளர்ச்சிக்குப் பெருந்துணையாய் நிற்கும். மனத்திற்கு அவ்வாற்றலைப் பெருக்குவது மந்திரம். மந்திரங்களுள் சிறந்தது சிவமூல மந்திரம் மந்திரங்கள் என்பவை, மனத்தால் தம்மைச் சிந்திப்பவரைக் காக்கவும் (இறைவனது பேரின்பத்தில் நிலைபெற்றிருக்கச் செய்யவும் வல்லன என்று ஞான நூல்கள் கூறுகின்றன

விதியின் விளையாட்டு: சில சமயங்களில் நம் மனமானது ஏதேனும் ஒரு மந்திரத்தைச் செபித்துக் கொண்டிருக்கும். வாம்

அசைவு கூட இருக்காது. ஆனால் அம்மனத்தின் அடி ஆழத்தில் முன்னொரு கால் நிகழ்ந்த ஏதோ ஒரு நிகழ்ச்சியின் சில பகுதிகள், நம் கட்டுக்குள் நில்லாது, நிழல்படம் போல் ஓடிக் கொண்டிருக்கும். வாய் முணுமுணுப்புக் கூட இல்லாமல், மனம் தான் இவ்வாறு மந்திரத்தை உரு ஏற்றிக் கொண்டிருக்கிறதே, இந்த முன் நிகழ்ச்சி எவ்வாறு குறுக்கே புகுந்து நிழலாட்டம் போடுகிறது? என்பது, ஒரு நியாயமான ஐயம், இதற்குச் சைவ சித்தாந்தமும், விஞ்ஞானமும் கூறுகிற காரணத்தில் ஓர் ஒற்றுமை நிலவக் காணுகிறோம்.

உள்மனத்தில் முன்னர் அழுத்தமாகப் பதிவானவை, உரிய காலத்தில் மேலெழுந்து ஆன்மாவின் நுகர்ச்சிக்கு வருகின்றன. சித்தம் என்ற ஆழ்நிலை மன எழுச்சி (Unconscious mind) மேல்நிலை மன ஓட்டத்தில் (Conscious Mental Perception) குறுக்கிடுகிறது. எனவே மனத்தின் ஓட்டம் ஒரு புறமாகவும் உள்மனத்தின் ஓட்டம் வேறொரு புறமாகவும் அலைக்கழிக்கக் காணுகிறோம்.

புல்பூண்டிலிருந்து தொடங்கிய நமது நீண்ட நெடிய வாழ்க்கைப் பயணத்தின் முந்திய நினைவுகளையும் இன்றைய நிகழ்ச்சிகளையும் இணைத்து நோக்கி, முன்னர்த் தொடர்புடையவற்றின்பால் மனத்தைச் செலுத்தியும், தொடர்பற்றவற்றின்பால் மனத்தை வெறுக்கச் செய்தும் நம்முடைய மனம், மொழி, செயல்களைக் கட்டுப்படுத்தி இயக்குவது சித்தம் என்ற தலைவிதியேயாகும்.

மனம் பற்றுதற்கு ஆதாரம் எது? முதன்முதலாக ஒரு பொருளைப் பற்றுவது, மனம் என்ற உட்கருவியே எனக் கண்டோம். அஃது எதனை ஆதாரமாகக் கொண்டு பற்றுகிறது? என்பதை நோக்குவோம்.

மூன்று வகையான ஆதாரங்களைக் கொண்டு மனம் ஒரு பொருளைப் பற்றுகிறது. அவை **புத்தி, சித்தம், இறை அருள்** என்ப. இவற்றுள் இறைஅருள் என்பது எக்காலத்தும் நிகழ்வது. எனவே பிறவற்றை மனம் எவ்வாறு பற்றுகிறது என்பதைச் சிந்திப்போம்.

புத்தியும் மனமும்: முற்றுணர்வினனாகிய சிவபெருமானுக்கு இச்சாசத்தி, ஞானசத்தி, கிரியாசத்தி என மூன்று ஆற்றல்கள் உள்ளமை போலவே, சிற்றறிவு உயிர்களாகிய நமக்கும் மூன்று ஆற்றல்கள் உள்ளன. அவற்றை (இச்சை, ஞானம், கிரியை) விழைவு ஆற்றல், அறிவு ஆற்றல், செயல் ஆற்றல்[1] என அழைப்பர். இந்த மூவியல்புகளின் ஏற்றத்தாழ்வுகளுக்கு ஏற்பவே நமக்கு உலகியல் பந்தபாசம் என்ற வீழ்ச்சியோ, அல்லது இறைமைப் பண்பு (பரம்பொருள் காட்சி) என்ற எழுச்சியோ ஏற்படுகிறது. ஒரு பொருளை விரும்பிப் பற்றுதல் இச்சை யாகும். இந்த இச்சைக்கு இருப்பிடம் மனம். இச்சையின் தூண்டுதலால்தான் அறிவு, செயல் என்ற ஏனைய இரு இயல்பு களும் தொழிற்படுகின்றன. அதன் விளைவாக ஆகாமியம் என்ற புதிய வினை தோன்றுகிறது.

பெண்கள் பிடரியிலிருந்து தொங்குகிற தம் நீண்ட சடையை மூன்று பிரியாகவே பிரித்துப் பின்னலிடுவர். ஆயினும், வெளி யிலிருந்து பார்ப்போர்க்கு அஃது இரண்டு பிரிபோன்றே தோற் றம் தரும். மற்றொரு பிரி மறைந்து நிற்கும். அதேபோல், ஆன்ம இயல்புகள் மூன்றனுள், புத்தியும் அகங்காரமும் பிடரி யிலிருந்து அறிவு நரம்புகளாகவும், செயல் நரம்புகளாகவும் வெளிப்பட, இச்சை என்ற இயல்பு, ஆதி சத்தி என்ற மறைப்பு ஆற்றலில் மறைந்து நின்றே செயல்படுகிறது; நம் பிடரியில் மறைந்துள்ள ஆதிசத்திதான் சிவ ஆணைக்கும், ஊழ்வினைக்கும் ஏற்ப, நம் மனத்தை இயக்குகிறாள்.

நாம் புதிது புதிதாக ஈட்டுகிற ஆகாமிய வினைகள் புத்தி தத்துவத்தில் பதிவாகின்றன. அவற்றுள் முதிரா வினைகள் (அதிர்ஷ்டமாக) எதிர்கால நுகர்ச்சிக்காகச் சித்தத்திலும், சிவ சத்தியிலும் பதிவாகின்றன; முதிர்ந்த வினைகள் (திர்ஷ்டமாக) அப்பொழுதே பயன்தரக் கூடியவையாய் உடனுக்குடன் மனத்தை இயக்கும் துணைக் காரணங்களாகின்றன.

---

1 Cognition, connotation, affection என மூவகைப் படுத்துவர் உளவியல் அறிஞர்.

இருவினைவயத்தாலும், பண்டு தொட்ட பயிற்சி வயத்தாலும் தன் முனைப்பின் காரணத்தாலும், புத்தியும் அகங்காரமும் மனத்தினைத் தூண்டுகின்றன. அப்பொழுது மனம் ஒரு பொருளைப் பற்றுகிறது. முன்னர்க் கூறியது போல, ஆதிசத்தி நம் கண்களுக்குப் புலனாகாமல் பிடரியில் மறைந்திருந்து இவ்வியக்கத்தை நடத்துகிறாள்.

கடலின் மேற்பரப்பில் தொடர்ந்து புரளுகிற அலைகளைப் போன்று, இவ்வகை மனப்பற்று மேலெழுந்தவாரியாகவும், விரைந்து மாறக் கூடியதாகவும் இருக்கும். சித்தத்தில் பதிந்துள்ள ஊழ்வினைக்கு ஏற்பவே, மனம், புத்தி, அகங்காரம் என்ற ஏனைய மூன்று உட்கருவிகளும் சிவசத்தியால் இயக்கப் பெறுகின்றன. நமது இந்த உலக வாழ்வின் சிறுமைக்கும், பெருமைக்கும் உயர்வுக்கும் தாழ்வுக்கும், இன்பத்துக்கும், துன்பத்துக்கும் இன்ன பிறவற்றிற்கும் நமது ஊழ்வினையும் சிவபெருமானது அருட்சத்தியுமே துணைக் காரணங்களாக உள்ளன என்பது சைவ சித்தாந்தம்[1].

இதனையே பழந்தமிழ்ச் சான்றோராகிய தொல்காப்பியரும் 'பாலது ஆணையாலே' என்ற தொடரால் குறிக்கக் காணுகிறோம். (பசு செய்கிற வினை: புல்தின்பதும் தண்ணீர் குடிப்பதும்; அவ்வினைக்கும் ஒரு பயன் உண்டு. அதுவே பசுவிடத்து ஊறுகின்ற பால். எனவே பால் என்பது வினைப்பயனை உணர்த்துகிற வழக்கு மொழியாயிற்று என்பதை முன்னர்க் கண்டோம்)

நமது உய்திக்கு உதவவேண்டும் என்பது சிவபெருமான் விருப்பம். அவ்விருப்பத்தையே இறைவனது ஆணையாக ஏற்றுச் செயற்படுபவள் சிவசத்தி. எனவே அவளுக்கு 'ஆணை' என்பது ஒரு காரணப்பெயராயிற்று. அன்பின் ஊற்றிடம் மனம்; அறிவின் உறைவிடம் புத்தி; செயற்பாட்டுக் கேந்திரம் அகங்காரம். இவை மூன்றும் தாம் தொழிற் படுவதற்குச், சித்தத்தையும், சிவசத்தியையுமே சார்ந்து இருக்கின்றன.

1 சிவஞானபோதம் இரண்டாம் சூத்திரம்.

அவை அவ்வாறு தொழிற்படும்போது, உடம்பின் மேற் பரப்பிலே சில மாறுதல்கள் ஏற்படுகின்றன. இதனையே மெய்ப்பாடு எனச் சுட்டியுணர்த்துவர், அறிஞர்.

இருவகை நோக்கு : மனத்திற்கு இரண்டுவகைத் தொழிற்பாடு உண்டு எனக்கண்டோம். அவை உயிரைப் புறவழியில் விரிந்து செல்லுமாறு தூண்டுதலும், அகவழியில் குவிந்து செல்லுமாறு ஆற்றுப் படுத்துதலுமாம்.

புறநோக்கு: சுவை முதலிய ஐந்து புலன்களையும் இயக்கி, அவற்றின் மூலம், நா முதலிய ஐந்து பொறிகளையும் செயற் படுத்தி, உயிர்களாகிய நமது அறிவை உலக முகப்படுத்தி உலகப் பொருள்களில் நம்மைச் செலுத்துவது, மனமே. இதனை உயிரின் புறநோக்கு (Objective awareness) என்றும் கீழ் நிலைத் தொழிற்பாடு என்றும் கூறுவர்.

அகநோக்கு : சிவாகமம், வேதங்கள் ஆகிய அருள் நூல் களில் கூறப்பட்ட உயர்ந்த மெய்ப்பொருளை நுணுகி அறிந்து, படிமுறையில் முன்னேறிக், கலை, வித்தை, அராகம் என்ற நுண்ணிய வித்தியா தத்துவங்களைப் பற்றிநின்று, அவற்றின் மூலம் சாதாக்கியம், விந்து, நாதம் என்ற அதிநுண்ணிய சிவ தத்துவத்தில் உயிரைச் செலுத்தி, நிலையானதும் அறிவு மய மானதுமான பேரின்பத்தில் நாம் திளைத்திருக்கத் துணை நிற் பதும் மனமே. இதனை உயிரின் உள்நோக்கு (Subjective Experience) என்றும் மேனிலைத் தொழிற்பாடு என்றும் கூறுவர். இத்தகைய இறை இன்பமே உயிருக்கு இயல்பான உரிமை என்பது தொல்காப்பியர் போன்ற பண்டைச் சான்றோர் தம் கருத்தாகும்.

மனம் ஒரே கருவி: ஏன் இரு நோக்கு? உயிரினம் முழுவதற் கும் மனம் என்பது ஒரே கருவிதான் என்றாலும் அஃது மனி தனுக்கு மனிதன், காலத்துக்குக் காலம் வேறுபட்டு இயங்குகிறது நம்மைப் புறநோக்கு, அகநோக்கு என இரு பக்கங்களிலும் செலுத்துகிறது. இதற்குக் காரணம் என்ன?

மலவழித் தொடர்பு: ஆணவ மலம் என்ற ஒன்று நம்மை அநாதிகாலந் தொட்டுப் பிணித்திருக்கிறது என்றும், நமது சிற்றறிவையும் முடக்கி நம்மை அறியாமை இருளில் பண்டு தொட்டே முடக்கி வைத்திருக்கிறது என்றும், பண்டு தொட்ட பயிற்சி வயத்தாலும், கொடிய ஆணவ மலப் பிணிப்பிலிருந்து விடுபட முடியாமையாலும், தன் முனைப்போடு தொடர்ந்து வினைகளைச் செய்து பிறப்பிற்கு வித்திடுவதாலும், அவரவர் வினைப்பயனை அவரவரே நுகர்ந்து தொலைக்க வேண்டிய நியதியாலும் உயிரை மனம் உலக முகப்படுத்த வேண்டியதா கிறது.

ஓர் ஒழுங்கோ, கட்டுப்பாடோ இல்லாமல், நிலையின்றித் தாவித் திரியும் குரங்கு, குரங்காட்டியின் பிடியினுள் சிக்கியதும் அவனது அதட்டலுக்கும் அச்சுறுத்தலுக்கும் அடிபணிகிறது. ஒரோ ஒரு சமயம் அவனை நோக்கியும் அது சீறுகிறது அன்றோ? அதேபோன்றுதான் ஒரு சாதாரண மனிதனின் மன ஓட்டங்கள் நூல் அறிவினால் ஒரு கட்டுக்குள் வருகின்றன என்றாலும், இடையிடையே கட்டுப்பாட்டினையும் மீறி, நமது மனித மனம் அறநெறிக்குப் புறம்பானவற்றில் ஈடுபடுவதோடு இறைவனையே இறுமாப்போடு நோக்கவும் செய்கிறது. அதனால் தான் நாம் இறை உணர்வின்றித் தன் முனைப்போடு தொடர்ந்து வினைகளைச் செய்கிறோம் என்றும், அவ்வினைக்குரிய பயன் களை நாமே நுகர்ந்து கழிக்க வேண்டுமென்றும், அவ்வாறு நம்மை வினை நுகர்விப்பதற்காகவும் அறிவு விளக்கம் பெறு விப்பதற்காகவும், மனம் முதலிய 36-தத்துவங்களும் மாயையி லிருந்து இறையருளால் நமக்காகவே தோற்றுவிக்கப் பெற்றன என்றும் சாத்திரங்கள் கூறுகின்றன. எனவே உயிர்களுக்கு உலக முகப்பட்ட புறநோக்கும் அமைந்தது என்பது கருத்து.

அருள்வழித் தொடர்பு: ஒரு கடிகாரத்தின் பெண்டுலம் (Pendulam) ஆடிக் கொண்டே இருக்கிறது. ஆட்டம் ஒரே சீராக இருப்பதால், காலக் கணிப்புக்கு உதவியாக இருக்கிறது. கடிகாரத்தின் விசை தீர்ந்ததும், ஆட்டமும் ஓய்ந்து ஒடுங்குகிறது; பெண்டுலம் ஒரே நிலையில் நிற்கிறது அன்றோ?

அதேபோன்று, அருள்வழி நடக்கும் ஆன்றோரின் மனமும் ஒரு சீராக அலை மோதிக் கொண்டிருக்கிறது. வினைகள் முற்றிலுமாகத் தீர்ந்து, ஆணவமும் ஒடுங்கிய நிலையில், அருளாளர்தம் மனமானது ஆண்டவன் திருவடியில் அமைதியுறு கிறது.

அவ்வாறு வினைகள் முடிவுற்று, ஆணவமும் வலி இழந்த போழ்து, உயிர் பெறுகிற அறிவுவிளக்கத்தினை 'வினையின் நீங்கி விளங்கிய அறிவு'[1] என்பார் தொல்காப்பியர். அதுகாறும் மறைப்பு ஆற்றலாயிருந்து வினைப் பயனாகிய பாலை ஊட்டிய சிவசத்தி, இப்பொழுது அருளாற்றலாகி, இறை இன்பத்தை நோக்கி மனத்தை இயக்குகிறாள். அதுகாறும் புறநோக்கிலே உலகமுகப்பட்டு அலைந்த நம் மனமும், இப்பொழுது அறிவு இச்சை செயல் என்ற மூன்றையும் 'தனது ஆற்றல்களாக'க் கொள்ளாது, சிவபெருமானது அறிவு இச்சை செயல்களாகவே கொண்டு சுவை ஒளி முதலிய ஐந்து பேரறிவுகளையும்[2] முக்கண் களிலே முயக்கித், தாமசம் முதலிய முக்குணங்களை இறை அனுபூதி என்னும் 'திருந்து சாத்துவீகத்'தில் குவித்துப், பரசிவத் தின் திருவடி நோக்கிச் செலுத்துகிறது. இதனையே ஒன்றிய மனம் என்பர். அவ்வாறு முக்குணமும் இணைந்த சித்தத்தைச் சிவபரத்தின் திருவடியில் சேர்த்துப் பேரின்பத்தில் உயிரை நிலைபெற்றிருக்கச் செய்கிறது, தூயமனம்.

உயர்வும், தாழ்வும், செல்வமும், வறுமையும், பெருமையும், சிறுமையும் நமது வினைப்பயன்களே. அவற்றுள் இப்பிறப்பில் நாம் நுகர்வதற்கு ஏற்றுக்கொள்ளும் வினையைப் பிராரத்தம்

---

1 'வினையின் நீங்கி விளங்கிய அறிவின்
முனைவன் கண்டது முதல் நூலாகும் - தொல் மரபியல்

2 ஐந்துபேர் அறிவும் கண்களே கொள்ள அளப்பரும் கரணங்கள்
நான்கும்
சிந்தையே ஆகக் குணம் ஒரு மூன்றும் திருந்து சாத்துவிகமே ஆக,
இந்துவாழ் சடையான் ஆடும் ஆனந்த எல்லையில் தனிப்பெருங்கூத்தின்'
வந்தபேர் இன்ப வெள்ளத்துள் திளைத்து மாறிலா மகிழ்ச்சியின்
மலர்ந்தார் - பெரியபுராணம் - 106.

''சித்தம் அழகியார் பாடாரோ நம் சிவனை'' -திருவெம்பாவை 3

அல்லது ஏன்றவினை என்பர். நமது தலையில் உள்ள தாமரைக் காம்பில் எழுதப்பட்டிருப்பதால் இதனைத் 'தலைஎழுத்து' என்பர். நாம் கருவினுள் உருப்பெறுவதற்கு முன்னரே சிவபெருமானால் அந்நுகர்ச்சியின் அளவு நிர்ணயிக்கப்படுகிறது. அந்த நுகர்ச்சிக்கு ஏற்ப, மனம் என்ற கருவி அமைந்தால்தான் நாம் அவற்றை நுகர்ந்து கழிக்க முடியும்.

நுகர வேண்டிய வினைப்பயனின் அளவு பரந்துபட்டிருப்பின், மனம் பரந்து விரிந்து செயல்பட வேண்டியிருக்கும். எனவே வரைமுறையின்றி கிளைக்குக் கிளைத் தாவித்திரியும் குரங்கினைப் போன்றதொரு அலைகின்ற மனத்தை நம்மில் சிலருக்கு ஆண்டவன் அருளுகிறார். நுகர்வினையின் அளவு குறைந்தோ, பண்டைய நற்றவம் மிகுந்தோ இருப்பின், அமைதியான மனத்தைத் தனக்குத் துணையாகப் பெறுகிறது அவ்வுயிர்.

வானிலிருந்து பொழியும் மழை, உலகம் முழுமைக்கும் தூய ஒன்றே ஆயினும், நன்னீர்க் குளத்தில் விழுந்த மழைநீர் நன்னீராகிறது; உவர்க் கடலில் சேர்ந்த மழைநீர் உவர்த் தன்மையைப் பெறுகிறது; செங்காவிக் கண்வாயில் செந்நீராகவும், கழிவுநீர்க்கால்வாயில் கழிவுநீராகவும், நிறம், குணம், மணம் முதலியவற்றால் மாறுகிறது அன்றோ? அதேபோன்றுதான் மனமும், பிற மாயா தத்துவங்களும் அமைந்துள்ளன. எல்லா உயிர்களுக்கும் பொதுவாகவே, மாயையிலிருந்து 36-தத்துவங்களையும், நடுவு நிலையுடன் தான் சிவபெருமான் விரித்தருளினார். என்றாலும் உயிர்களின் செய்வினை வேறுபாட்டால், வினைப்பயனின் தன்மைக்கு ஏற்ப மனத்தின் அமைப்பும் மாறுகிறது என்பது பெறப்படும்.

மனத்தை இயக்குபவர் யார்? மனத்தை அறிவு இயக்குகிறதா? அறிவினை மனம் இயக்குகிறதா? என்ற ஐயம் பல சமயங்களில் நமக்கு எழுவதுண்டு.

அறிவு என்பது, அறிவு, விருப்பம், செயல் என்ற உயிருக்குரிய மூன்று இயல்பான குணங்களுள் ஒன்று. எழுமைக்கும் ஏமாப்புடைய இவை மூன்றும் காலகாலத்துக்கு உயிருடன் உடனுறைபவை. மனம் என்பது மாயையின் காரியம் எனவே,

இடைக் காலத்தில் தோன்றி, உயிருக்குத்துணை நின்று, காலம், வந்துழி, மூலப் பொருளாகிய மாயையினுள் ஒடுங்கி விடுவது. எனவே அறிவு, நிலையான பொருள் என்பதும், மனம் நிலை யற்ற சடப்பொருள் என்பதும் தெளிவு.

அறிவு நிலையானதாக இருந்தும், மல அழுக்குகளால் மூடப்பட்டுக் கீழ்நிலையில் உழல்கின்றது மனம் நிலையற்ற சடமாக இருந்தும், இயல்பால் தூயதாக மிளிர்கிறது, ஊழ் வினைக்கு ஏற்ப இன்பதுன்பப் பயன்களை நுகர வேண்டிய நியதி. அறிவுப்பொருளாகிய உயிருக்கு உண்டு. நல்லன வற்றையும், உயர்ந்தனவற்றையும் நுகரவேண்டிய காலத்தில், அறிவும் நல்லனவற்றை, உயர்ந்தனவற்றையே சிந்திக்கும். அந்த நேரத்தில் அவ்வாறு உயரிய நெறியில் சிந்திக்குமாறு மனமும் தூண்டும்.

மாறாகத், தீயனவற்றில், கீழானவற்றில் உழல வேண்டிய காலத்தில், அறிவும் அதற்கேற்பவே சிந்திக்கும் 'விநாச காலா விபரீத புத்தி' என்பது பழமொழி. அவ்வாறு துன்பந்தரும் தீயனவற்றை நுகர்ந்தாலன்றி, மூலவித்தாகிய தீவினை தொலை யாது. ஆதலால், அந்தக் கீழ்நிலை நுகர்ச்சியும் உழற்சியும் அறிவுப் பொருளாகிய உயிருக்கு மிகமிகத் தேவையாகிறது. எனவே அந்த நேரத்தில், அவ்வாறு, தீ நெறியில் சிந்திக்குமாறு அறிவினைத் தூண்டுவதும், மனமே.

இங்ஙனம், அறிவு முதலிய இயல்புகளுக்கு விளக்கம் தருதற் காகவே மனம் இறைவனால் படைக்கப்பட்டது. எனவே தோழி யாகிய மனத்தைப் பின்பற்றியே, தலைவி எனும் அறிவு செயல் படுகிறது, என்பது பெறப்படும்.

ஆயினும், மனம் என்பது ஒரு சடப்பொருள். அதுதானாக இயங்க முடியாது. எனவே அதனை இயக்குவதற்கு ஒரு கர்த்தா வேண்டும் அன்றோ? சடமாகிய மாயையை விரித்து இயக்குபவள் சிவசத்தி எனக்கண்டோம். அவளே இச்சா சத்தியாய்ச் சிவ ஆணைப்படி மனத்தையும் இயக்குகிறாள். அவ்வாறு இயக்கும் போது உயிர் நுகர்ந்து கழிக்கவேண்டிய பிராரத்த வினைகளுக்கு ஏற்றவாறு முக்குண ஏற்றத் தாழ்வுகளையும் மனமாற்றங்களை யும் நிகழ்த்துகிறாள்.

எனவே, மனம் என்பது, உயிர்களாகிய நமது மேம்பட்ட அறிவு வளர்ச்சிக்கு உறுதுணை புரியும் ஒரு சிறந்த கருவி என்பதும், முக்குண வேறுபாட்டிற்கேற்பவே மன வேறுபாடு அமைகிறது என்பதும், சித்தம் என்ற ஊழ்வினைக்கு ஏற்பச், (சித்சத்தி என்ற) சிவஆற்றலால் அஃது இயக்கப் பெறுகிறது என்பதும நாம் தெளிவாக உணரத்தக்க உண்மைகளாம்.

புறத்தே உள்ள ஒரு பொருள் அல்லது நிகழ்ச்சி நமது பொறிகளின் வழியாகப் புகுந்து, புலன்களின் வழியாக ஊடுருவி, மனத்தின் துணையால் உயிரது அறிவினை எட்டுகிறது. ஆன்ம, சிற்றறிவுக்கு புத்தி தத்துவமும், உயிரின் செயற்பாட்டிற்கு அகங்காரத் தத்துவமும், உயிரின் இச்சைக்கு மனம் என்ற தத்துவமும் நிலைக்களன்கள். உயிருக்கான ஊழ்வினைப் பதிவே சித்தம் என்ற தத்துவம்.

இறைவன் திருவருள், நமது ஊழ்வினைக்கு ஏற்ப, நம்மைத் தொழிற்படுத்தும் முறையைச்,

சிவஆணை (சிவசத்தி) → இருவினை → முக்குணங்கள் (சித்தம்) → புத்தி → அகங்காரம் → மனத்தின் இயக்கம் → உயிரின் தொழிற்பாடு எனக் குறிப்பிடலாம்.

சித்தம் என்ற மூலப் பிரகிருதியிலிருந்துதான் உயிருக்கான அதிநுண்ணுடம்பும், பருமையான உரு உடம்பும் உலக நுகர் பொருள்களும் தோன்றுகின்றன. எனவே, பிராரத்தம் என்ற ஊழ்வினை வழியில்தான் ஒவ்வொருவரது வாழ்வும் அமைகிறது என்பது தவிர்க்க முடியாத விதியாகிறது. உலகச் சிற்றின்ப நுகர்ச்சியாகிய அஃறிணைப் புணர்ச்சியை அறிந்து, தெளிந்து, ஒதுக்கி அவ்வனுபவத்தையே உவமையாகக் கொண்டு இறை இன்பத்தைத் தருகிற உயர்திணைப் புணர்ச்சியிலும், இடந்தலைப் பாட்டிலும் வேட்கையுற்று நின்றால், மதிசூடிய சிவபெருமான் நம் தலையிலுள்ள பிறைமதி வடிவிலான மூளை இணைப்பானை இயக்கி, ஊழ்வினை ஏட்டினை உராய்ந்து அழித்து, ஆணைத் தானம் என்ற அல்குலில் ஆன்மாவுக்கு இந்த வாழ்விலேயே

பேரின்பம் ஊட்டுகிறார் என்பது தலைச் சங்ககாலம் முதலாக நம் தமிழினப் பெரியவர்கள் கொண்டிருந்த அனுபவமாகும்.

இவ்வாறு கண்ணுக்குப் புலனாகிற, நிலையற்ற சிற்றின்பக் கூறுகளையே உவமையாகக் கொண்டு புலனாகாத நிலையான சிவஞானப் பேரின்பத்தை நமக்கு உணர்த்த முற்பட்ட அவ்அருளாளர் திருவடிகளை எக்காலமும் மனம் கொள்ளுதல் நம் கடமையாகும்.

ஆதலால், நாமும் ஒன்றிய மனத்துடன் சிவபெருமான் திருவருளைச் சிந்தித்து, உவமை கண்டு, ஒப்பு நோக்கி இன்புறுவோமாக!

7 ஒப்பியல் (உவம இயல்)

அனுபவ அறிவுமிக்கப் பெரியவர்கள், ஆழ்ந்த நுண்ணுணர்வால், தாம் அறிந்தவற்றைப் பிறருக்குத் தெளிவாக உணர்த்த முற்படும் போது, பலவகை உத்திகளைக் கையாள்வது தொன்று தொட்ட மரபு. அத்தகைய உத்திகளுள் ஒன்றுதான் 'உவமித்தல்' என்பதும்.

"நன்கு தெரிந்த ஒரு பொருளின் வடிவம், குணம், செயல் பயன் என்பனவற்றை நினைவு கூர்ந்து, 'இவற்றைப் போன்றே இருக்கும்' என, அறியாத ஒரு பொருளை அறியச் செய்வது உவமித்தல் ஆகும்." அவ்வாறு உவமித்தற்கு, இரண்டு பொருள்களும் வடிவத்தாலோ, குணத்தாலோ, செயலாலோ, அன்றிப் பயனாலோ ஒன்றை ஒன்று ஒத்திருக்க வேண்டும். இது பொதுவான நியதி ஆகும். அவ்வாறு இரண்டு பொருள்களும் ஒத்திருக்கின்றனவா எனச் சிந்தித்தல் 'ஒப்பியல்' ஆகும்.

இந்த நியதிக்கு ஏற்ப, நம் மனித உடம்பிலுள்ள அங்க அமைப்புக்களையும், பிறவற்றையும், ஒப்புவமை கூறிச், சிவபெருமானைப் பற்றி ஓரளவேனும் தெரிந்து கொள்ள இயலுமா? என்பதை இங்குச் சிந்திக்க முற்படுவதால், இஃது ஒப்பியல் (உவமஇயல்) என்னும் பெயரதாயிற்று.

ஒப்பிலாமணி: ஒப்பு உவமைகளால் பரம்பொருளின் முழு முதல் தன்மைகளை ஒருசேர அறிதல் இயலாது என்பதே அருளாளர் அனுபவம். 'அம்மையே அப்பா! ஒப்பிலாமணியே!' எனப் பரவித் துதிப்பார், அப்பர் அடிகள்.

''உவமிக்கின் மிகையே, உன்னை ஒப்பாய்
மன்னும் உத்தரகோச மங்கைக்(கு) அரசே''

என வாழ்த்தி வணங்குவார், வாதவூர் அடிகள்.

''தனக்(கு) உவமை இல்லாதான் தாள் சேர்ந்தார்க்(கு)
மனக்கவலை மாற்றல் அரிது'' [அல்லால்]

எனக் கடவுள் வாழ்த்துக் கூறுவார் வள்ளுவப் பெருந்தகை.

'இறைவனாகிய சிவபெருமான் ஒப்புவமை !இல்லாதவர்; அவருக்கு அவரே ஒப்பு. நமது துன்பங்களை எல்லாம் போக்க வல்லவர் அவர் ஒருவரே, அவரது திருவடிகளை ஒன்றிய மனத்தால் உளமாறச் சிந்தித்து, வாயினால் வாழ்த்தி, உடலாலும் இறைத்தொண்டு செய்தலே நாம் அவரை அறிவதற்கான நெறி முறைகள்'' என்பன இப்பாடல்களின் திரண்ட கருத்து.

ஆயினும், பரம்பொருளாகிய அவர், நமது மனம், வாக்கு காயம் ஆகிய அனைத்தையும் கடந்தவராக இருக்கிறாரே! தனக்கு நிகராக உவமை கூறத்தக்க மற்றொரு பொருள் இல்லாதவராகவும் இருக்கிறாரே! அவரை நாம் எங்ஙனம் அறிவது? என்பதே பலரது ஐயம். நிலையான மெய்ப்பொருள் ஞானம் பற்றிய இதற்கான விடையை, நிலையற்ற பொய்ப்பொருள் தொடர்பான அறிவியலைத் துணைக்கொண்டு, இங்கு முறையாக ஒப்புநோக்கிச் சிந்திப்போம்.

அணு முதல் அண்ட பேரண்டம் முழுவதையும் உள்ளடக்கியது, இப் பிரபஞ்சம். இது மாயையிலிருந்து உருவாக்கப் பெற்றது. இப்பேரண்டத் தொகுப்பு முழுவதையும் தனக்கு ஒரு 'நிழல் உடம்பா'கக் கொண்டு, விராட்புருடராக விளங்குபவர், சிவபெருமான் எனச் சித்திரிக்கின்றன, சைவ சித்தாந்த சாத்திரங்கள்.

அப்பாலைக்கு அப்பாலாய் மனம் முதலியவற்றை எல்லாம் கடந்து நிற்கிறார், இறைவன்; எனினும் உலகில் காணப்படும் ஒவ்வொரு பொருளின் நுண்கூறாகிய அணுவுக்குள் அணுவாயும் அவர் எழில் நடனம் புரிகிறார். அவ்வாறு கடந்தும் உள்ளேயும் அவர் இருப்பதாலேயே அவரைக் கடவுள் என நாம் அழைக்கிறோம்.

''ஒன்றும் நீஅல்லை அன்றி ஒன்(று) இல்லை
யார் உன்னை அறியகிற் பாரே!''1

''இந்த உலகப்பொருள்களுள் ஒன்றாக நீ அல்லை. ஆயினும் நீ இல்லாத பொருளே இல்லை. அப்படி இருந்தும், வேறாய் நின்று, உன்னைக் காணவல்லார் ஒருவரும் இல்லை''1 என மணிவாசகர் இறைவனது தனிப்பெருந்தன்மையைப் பரவித் துதிக்கிறார்.

கடவுள் தம்மைப் போன்றே உடல், உலகம் முதலியவற்றைப் படைத்தருளினார். உயிர்களாகிய நமக்காக அவற்றைப் படைக்கும்போது, புறத்தே நமக்கு வேறாக நின்று படைக்கும் அவர், நம்மை ஆட்டுவித்து இயக்கும்போது, உயிர்மெய்யொடு கலந்து உயிருக்கு உடனாக நின்றும், உயிருக்குள் உயிராக ஒன்றி நின்று ஆடியும், தமது திருக்கூத்தைத் தொடர்கிறார். ஆயினும் ஆணவம், கன்மம், மாயை என்ற மூன்று மல அழுக்குகளினால் கட்டுண்ட நாம் அவரது இருப்பினையும் சிறப்பினையும் உணராது, பெரிதும் உலகியல் சிறுமையிலேயே உழன்று கொண்டிருக்கிறோம்.

பகலெல்லாம் அலைந்து திரிந்த உடம்பு அமைதியை நாடி வீட்டிற்குத் திரும்புகிறது. அதேபோல, வாழ்வெல்லாம் அலைந்து திரிகிற உயிர் அமைதியை நாடி இறைவன் திருவடியை அணைகிறது. இதுவே பொதுவான இயல்பு. எல்லாஉயிர்களும் இறுதியாகச் சென்று சேர வேண்டிய இடம் இறைவன் திருவடியே.

1 தில்லைத் திருப்பதிகங்கள் - அ சொ.சுப்பையா 1986, பக்.81-82

படைப்பின் நோக்கம்: இறைவன் திருவடி இன்பமே நிலையான சிறந்த பேரின்பம் என்பதை உயிர்களாகிய நாம் உய்த்துணர்வதற்காகவும், ஆணவாதி மலக்கட்டுகளிலிருந்து விடுபட்டு இறைமையை நோக்கி முன்னேறுவதற்கான விருப்பம், அறிவு பயிற்சி முதலியவற்றை நாம் பெறுவதற்காகவுமே, சிவபெருமான் உடல் முதலியன படைத்தருளினார்.

இவ்வாறு நமக்கு உடல் முதலானவற்றை ஆக்கித் தந்த சிவபெருமான், இதனுள்ளே தமது சாயலாகத் தம் வடிவம், இயல்புகள், திருவிளையாடல்கள், அவற்றின் பயன்கள் இவற்றை எல்லாம் செவ்விதே உருவாக்கியுள்ளார்.

> ''வினை, பயன், மெய், உரு என்ற நான்கே
> வகைபெற வந்த உவமத் தோற்றம்
> விரவியும் வரூஉம் மரபின என்ப''[1]

என்பது தொல்காப்பியர் கூறும் ஒப்பியல் ஆய்வு முறை. இந்த நான்கையும், நமது மனித உடம்பில் காணலாம் என்பது சிவயோக நெறி.

ஒரு மொழியில் ஆழமான அறிவு உள்ளவர்களுக்கு, அம்மொழி நூல்களைப் படித்துப் புரிந்து கொள்ளுவது எளிது. அதே போன்று, நமது மனித உடம்பின் அங்க அமைப்புகளையும் அவற்றின் செயற்பாடுகளையும் அறிந்தவர்கள் அவற்றை உவமையாகக் கொண்டு, சிவயோக நெறி நிற்பின், அத்தகைய சிவ சிந்தனையாளர்களுக்குச், சிவம் தமது உடம்பின் உள்ளே, மாணிக்கத்தின் இயல்பான ஒளிபோன்று, தெளிவாகத் தன்னை உணர்த்தி நிற்பது புலனாகும். சிவப்பு நிற இரத்தம் உடலைப் பாதுகாக்கிறது. அதேபோல் சிவந்த, செவ்விதாய, சிவம் என்னும் பரம்பொருள் உயிரைப் பாதுகாக்கிறது.

நாம் அவரை எளிதில் உணரவேண்டும் என்பதே அவருடைய விருப்பம். எனவே மாயை என்னும் கண்ணாடியில் தமது நிழலை (சாயலை) அவர் தம் ஒவ்வொரு படைப்பிலும் வெளிப்படவே அமைத்தருளி உள்ளார். அவற்றை நாம் உய்த்துணர்

1 தொல், உவமஇயல் - 1

வதற்கான ஒலிக்குறிப்புகளையும் அவரைக்கண்டுணர்வதற்கான ஒளிவடிவங்களையும் செவ்விதே ஆக்கியுள்ளார். அவருடைய திருவிளையாடல்களைப் பாராட்டுதற்குப் புராண வரலாறுகள் உள்ளன; அவரது திருவருளால் விளையும் உயரிய பயன்களைப் போற்றுதற்கு அருள்நூல்கள் உள்ளன; அவரது வடிவத்தின் சிறப்பினை விளக்கிக் காட்டுதற்குத் திருஉருவச் சிலைகளும் சிற்பங்களும் உள்ளன; அவரது எண்குண மேன்மைகளை எடுத்தியம்புவதற்குச் சைவ சாத்திர ஞான நூல்களும் ஏராளமாக உள்ளன. அவரது வியத்தகு பேராற்றல்களை எல்லாம் எண்ணிப் பார்த்து, ஏற்று, இன்புறுவதற்கு, இக்கால அறிவியலாரின் எண்ணற்ற ஆய்வு முடிவுகளும் ஏற்றவகையிலே துணை நிற்கின்றன.

எனவே புராணங்கள், அருள்நூல்கள், அறிவியல் முடிவுகள், உலக வழக்குகள் முதலிய பலதுறைக் கருத்துக்களையும் இணைத்து, முழுவதுமாக ஒப்புவமை காணமுடியாத, அம்முழுமுதற் பொருளின் ஓரோ ஒரு பகுதியைச் சிறுசிறு அளவிலேனும் இவண் ஒப்பு நோக்கிச் சிந்தித்து மகிழ்வோம்.

மனித உடம்பு : சித்சத்தியால் ஆன தன் உருவப் பொலிவினைப் போன்றே, மாயையிலிருந்தும் விராட்புருடம் என்னும் ஒரு பேருருவாகிய நிழலுடம்பினையும் தோற்றுவித்துக் கொண்ட சிவபெருமான், தனது அப்பெரிய வடிவத்தைப் போன்றே சிற்றறிவு உயிர்களாகிய நமக்கும், அவரவர் வினை அனுபவத்திற்கு ஏற்ப, மாயையிலிருந்து சிறுசிறு அமைப்புகளைத் தந்து அருளினார். அவை, உயிர்களின் பொதுவாழ்விற்கான உலகங்களும், தனி வாழ்விற்கான உடலங்களும் செயற்பாட்டுத் துணைக்கான கருவி கரணங்களும், நுகர்வதற்கான இன்ப துன்ப உலகியல் பொருள்களும் என நான்கு வகையாயின. இது பொது நிலை.

மனித உடம்பில் நானிலப் பகுப்பும் சிவவடிவும்: இனி, நமது உடம்பின் சிறப்பான அமைப்பு முறை பற்றிச் சிந்திப்போம். பெருமானது உடம்புபோல் தோன்றுவது பேரண்டம், நமக்கு அமைந்த உடம்போ ஒரு சிறு பிண்டம். நமது மனித உடம்பை

ஒரு குட்டிப் பிரபஞ்சம் (Mini Universe) என்று கூறினோம் இதுவும், இரு மாயைகளினால் ஆனது. இதன்கண், நானில அமைப்பை நோக்குவோம்.

குறிஞ்சி : விராட்புருடனது சிரசு, ஆகாய மண்டலம் எனவும் அவரது மண்டைஓடு, குறிஞ்சி மலையின் குவடு எனவும் கண்டோம் நமது உடம்பில் சிரசும், மண்டை ஓடும் அத் தன்மையனவே.

வானவெளியில் கருமுகிலும் வெண்முகிலும் சூழ்ந்து நிற்கும். அதுபோல் நம் தலையிலுள்ள மூளைப்பகுதியில் வெண்ணிறமும்[1] புகை நிறமும் கொண்ட பொருள்கள் நிறைந்து உள்ளன என உடலியல் அறிஞர் கூறுவர். விராட்புருடனுக்கு உள்ளவை போன்றே, நம் ஒவ்வொருவரது மனிதச் சிரசிலும் மாதொரு பாகனும் (Two Cerebral Hemispheres) ஆகாய கங்கை (CSF)யும் பிறைமதி (Corpus Collosum)யும், நெற்றிக் கண் (Third Ventricle) வீரகண்டா மணியும் (Optic chiasm) மிகச் சிறப்பாக அமைந்துள்ளன.

முல்லை : விராட்புருடனது நாடி நரம்புகளாகிய முல்லைக் காடுகளைப் போன்றே நமது உடலிலுள்ள எழுபத்து இரண்டாயிரம் நாடி நரம்புகளும் பின்னிப் பிணைந்து கிடக்கின்றன. அவற்றில் அறிவு நரம்புகளும் செயல் நரம்புகளும் (Sensory Nerves and Motor Nerves) முல்லைக் காடுகளைப் போன்று நமது சிறு மூளையில் தொடங்கி, முதுகுத்தண்டு, இடுப்பு, இரண்டு கால்கள் வரை ஒரு பெரிய நரம்புக் காடாக உள்ளன. நமது வயிற்றில் இரைப்பைக்குக் கீழே உள்ள அடர்த்தியான குடல் பகுதியும், ஓர் அடவியை (முல்லையை) ஒத்த அமைப்பினை உடையதாகும்.

மருதம்: விராட்புருடனது 'நிலஉலக உடம்புக்கு வளம் சேர்க்கும் வயல்வெளி **மருதம்** எனப்படும். அதேபோன்று, நம்

---

1 "Brain is a three pound mush - room of grey and white tissues of gelatinous consistency... all these fitted into the crown of a size of 7 - hats."

—I'm Joe's body - Page 11 (Reader's Digest)

மனித உட லுக்கு வளம் சேர்க்கும் மருதமாவது, குருதி ஆறுகள் சூழ்ந்த நமது இதய வயலாகும்.

நெய்தல்: உலகத்தின் உயர்ந்த மலையிலிருந்தும், முல்லை, மருதம் உள்ளிட்ட எல்லா நிலத்திலிருந்தும் வண்டலையும், கழிவுகளையும் ஆறுகள் எற்றிச் செல்லுகின்றன. இறுதியில் அவை சங்கமிக்கும் இடத்திற்கு உவர்க்கடல் என்பது பெயர். நெய்தல் என அழைக்கப் பெறுகிற இஃது, உலகின் மிகத் தாழ்வான நிலப்பகுதியாகும். உலகுக்கு உவர்க்கடல் போன்று நம் உடலின் அடிவயிற்றிலும் (Kidneys and urinary Bladders) உவர்ப்பு நீர்த் தேக்கங்கள் உள்ளன. இவற்றிற்குச் சிறு நீரகங்கள் என்றும், சிறு நீர்ப்பைகள் என்றும் பெயர். இவ்வாறு மாயை என்னும் ஓர் அதி நுண்ணிய பொருளிலிருந்து சிவபெருமான் தன்னைப் போன்றே மனித வடிவங்களை நம் உய்தி கருதிப் படைத்தருளினார். மேலும் அவர் தம் சிற்சத்தியுடன் நம்முள் தங்கியிருந்து நம்மை ஒவ்வொரு நொடியும் எல்வாறெல்லாம் வழி நடத்துகிறார் என்பதைக் காண்போம்.

நமது உடல் முழுவதும் இறைவன் நிறைந்திருக்கிறார், எனினும் மூன்று இடங்களில் அவர் சிறப்பாக வெளிப்பட்டு நிற்கிறார். அந்த இடங்கள், நம் தலையில் முன்பகுதி, மார்பில் இருதயம், அடிவயிற்றில் சுவாதிட்டானம் என்பன.

ஒன்று இரண்டாயது (மாதொருபாகன்): நாம் வீடுகளில் மின்சாரத்தை வெகுவாகப் பயன்படுத்துகிறோம். அஃது ஒரே பொருள்தான் என்றாலும் நேர்மின் ஆற்றல், எதிர்மின் ஆற்றல், (+ve. —ve) என இரு கூறுகளாகப் பிரிந்து, சடப்பொருளாகிய ஒரு செப்புக் கம்பியின வழியாகப் பாய்ந்து, நமக்கும் பெரும் பயன் தருகிறதன்றோ? அதேபோல், பரசிவம் என்பது ஒரே பொருள். அது சிவன் என்றும் சத்தி என்றும் இரு கூறாகி, மாயை என்ற களத்திலே கூடி நின்று, உயிர்களாகிய நமக்கு எப்பொழுதும் உயரிய நலன்களை அருளுகின்றது.

''பந்தணை விரலியும் நீயும் நின்அடியார்
பழங்குடில் தொறும் எழுந் தருளிய பரனே!''[1]

---

1 திருவாசகம் திருப்பள்ளி எழுச்சி - 8

எனப் பெருந்துறைப் பெருமானுக்குத் திருப்பள்ளி எழுச்சி பாடுவார் திருவாதவூரர். இதன் கருத்து: பந்துகள் (ஈண்டு அண்டங்கள்) வந்து சார்கின்ற விரலினை உடைய உமாதேவியும் நீயும், உனது மெய்யடியார்களின் பழைய குடிசையாகிய மாயா உடம்பி 'ல எழுந்தருளி யிருக்கிறீர்கள் (ஏ.ம்)

சுத்த மாயை என்பதே சிவபெருமானுக்குத் தொழிற் படுகளம். நமது மனித உடம்பினுள், அது முன் தலைப் பகுதியில், பெருமூளையாக அமைக்கப் பெற்றுள்ளது. பொருள் தன்மையால் ஒன்றேயாகிய அது, செயலாற்றலால் இரண்டு கோளங்களாக, ஒரு மொச்சை விதையினைப் போன்று, இரு கூறுபட்டு இயங்குகிறது. அக்கோளங்களுக்கு வலது கோளம், இடது கோளம் (Right hemisphere & Left hemisphere) என்று பெயர்.

வலது கோளம் பெரிதும் அமைதியாகவும், வான் பொருள் பற்றிய அறிவினை[2] வளர்க்கும் கருவியாகவும் இருக்கிறது என்றும், இடது கோளம், நமது உடலின் பல்வேறு இயக்க நிலைகளுக்கு ஆணைத்தானமாக இருக்கிறது என்றும் அறிவிய லார் ஆய்ந்து கூறுகின்றனர். வலப்புறம் சிவன், இடப்புறம் சத்தி என்ற மாதொரு பாகனது தோற்றத்தை இவ் அமைப்பு நினைவுறுத்துகிற தன்றோ?

இரண்டு மூன்றாவது (சோமாஸ் கந்தர்): ஒரே பரம்பொருள் சிவன், சத்தி, கந்தன் என்ற முத்திற வடிவாய்ச் சோமாஸ் கந்தர் என்ற பெயரோடு சிவாலயங்களில் இருப்பதைக் காணு கிறோம். உயிர்களாகிய நமக்கு இன்பம் ஊட்டுகிற போக வடிவம் என அருளாளர் இதனைக் கூறுவர். அதே போன்று, நமது மனித உடலில் அறிவுத்தானமாகிய மூளை என்ற ஒரே உறுப்பு, தொழிற்பாடு கருதிப் பெருமூளை (சிவன்) என்றும், சிறுமூளை (சிவசத்தி) என்றும், நடுமூளை (கந்தன்) என்றும் முக்கூற்றுப் பொருளாகச் சிந்திக்கப் பெறுகிறது. நடுமூளையை

2 The right hemisphere is essentially mute, but can do other things, such as make spatial jndgements''
— I am JoesP. 13 'Body (Readcrs' Digest'

இன்பத்தானம் (Pleasure Centre) என அறிவியலாரும் அழைப்பதில், ஓர் 'இன்ப'மான ஒற்றுமை நிலவுகிறதன்றோ!

மேலும் மொச்சை விதை போன்ற பெருமூளையின் இ கூறு (hemispheres) களுக்கு நடுவில், மூளை போன்ற ஒரு இணைப்பான் (Corpus collosum) இருக்கிறது. அது, நடு மூளையிலிருந்து தோன்றிப் புருவ நடுவை நோக்கி வளைந்து கிடக்கிறது. பெருமூளையின் இரண்டு கூறுகளும், சத்தியைத் தன் இடப்பாகத்தில் ஏற்ற சிவபெருமானையும், அதன் நடுவிலுள்ள மூளை இணைப்பான் கந்தமூர்த்தியைச் சிவசத்தியரது இன்ப வெளிப்பாடாகவும் நமக்கு நினைவுறுத்துமாறு அமைந்துள்ளன.

பருமையாக நாம் இதனை நோக்க விரும்பினால் நமது வலது கண்ணில் சிவனையும், இடது கண்ணில் சத்தியையும் மனத்தால் நினைந்து, அவை ஒன்றை ஒன்று நோக்குவதாக, நெற்றியில் புருவ நடுவில் நெற்றிக் கண்ணாகக் கந்தவேளையும் சிந்தித்தால், சிவதியானம் கைகூடும். சிவபெருமான் முக்கட் செல்வர் என்பது யாவரும் அறிந்ததே. அவரது வலதுகண் சூரியன், இடதுகண் சந்திரன், நெற்றிக்கண் அக்கினி. நெற்றிக் கண்ணிலிருந்து கந்தவேள் தோன்றினார் என்பது வரலாறு. நம் ஒவ்வொருவருடைய நெற்றிக் கண்ணிலும் அவர் இன்ப ஊற்றாக அருள்பாலிக்கிறார் என்பதைச் சிவதியானத்தின் மூலம் உணரலாம்.

மூன்று நான்காவது (சிவ குடும்பம்): ஒரே பொருளான சிவபரம், உயிர்களாகிய நமது விழைவு, அறிவு, செயல் திறன்களுக்கு ஏற்பச் சிவன் என்றும் சத்தி என்றும், விநாயகர் என்றும் முருகன் என்றும் பல வடிவங்களை மேற்கொள்ளுகிறது. வடிவங்கள் வேறாயினும், பொருள் ஒன்றே. இதற்குச் சான்று கூறினாற்போல, நமது இருதயம் என்ற ஒரே உடலுறுப்பு, செயற்பாடு கருதி, வலது, இடது என்றும் மேல், கீழ் என்றும் நான்கு அறைகளாக, அறிவியலாரால் சிந்திக்கப் பெறுகிறது.

விடைஏறி: அறக் கடவுள் தவமியற்றிச் சிவபெருமானுக்கு ஊர்தியாக இருக்கும் பேறு பெற்றார் என்பது புராணம். திரிபுரம் எரித்த காலத்தில், சிவபெருமானுக்குத் திருமால் விடை

ஊர்தியானார் என்பதும் வரலாறு. (திருச்சாழல்). இவ்வாறு சுத்தமாயையினைச் சேர்ந்த அறவிடையும் அசுத்த மாயையினைச் சேர்ந்த மால்விடையும் சிவபெருமானுக்கு ஊர்தியாயின. நமது உடம்பில் சுத்தமாயை என்பது பெருமூளை எனக் கண்டோம். சிவபெருமானது நிழல் வடிவமாகவே இஃது இருக்கிறது. சுத்தமாயைக்கும் அசுத்தமாயைக்கும் எல்லையாக அமைந் திருப்பன மூளை இணைப்பானும் மூன்றாம் நாளமுமே (Third ventricle) மூளை இணைப்பான் அறவிடையின் தோற்றமுடைய தாய்ச் சிவபெருமானுக்கு ஊர்தியாயிருக்கிறது.

நமது உடம்பில் அசுத்தமாயை என்பது புருவ நடுவுக்குக் கீழேயுள்ள உடற்பகுதி. இங்கு இருதயமே சிவவடிவம்; இரைப் பையே மால்விடை ஊர்தி.

'அமுதுப் பிரியன்' என அழைக்கப் பெறும் திருமால் நமது வயிற்றில் அன்னப்பையாகவும், மால்விடையாகவும் பொருந்தி நிற்பது எழிலுடைய காட்சி ஆகும்.

ஒன்று பலவாகியது (ஏகன் அனேகன்)[1]: முற்றுணர்வுள்ள சிவபெருமான் ஒருவரே பரம்பொருள். ஏகனாகிய அந்த ஒருவரே நமக்கு அருளுதற் பொருட்டுப் பல வடிவங்களைத் தாமாகவே ஏற்று, அனேக மூர்த்தங்கள் ஆகிறார். இதனை மணிவாசகர் தமது சிவபுராணத்தில், மிக அருமையாக அமைத்துப் பாடுகிறார்;

'ஏகன் அனேகன் இறைவ(ன்) அடி வாழ்க![1]

என்பது அவ் அருளாளரின் திருவாக்கு; ஒன்றாய இறைவன், பலவாக விரிந்து தோன்றி, அந்த ஒவ்வொரு நிலையிலும் தனது இறைமைத் தன்மை மாறுபடாத பெருமையை இது பறை சாற்றுகிறது.

ஏன் இறைவன் அனேகன் ஆனார்? என்பதற்கும் அவருடைய திருவாசகமே விடையும் பகர்கிறது, 'மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம், தேற்றனே! தேற்றத் தெளிவே,[1]

1 சிவபுராணம்

என்பது, சிவபெருமானது எண்ணிறந்த வடிவ வேறுபாடு களுக்குக்[2] காரணமாகக் கூறப்பெறுகிறது. அருளாளரது அனுபவ மொழியாகிய இதனைப் பற்றி ஓரளவு சிந்திப்பது, பயன் தரும்.

உயிர்கள் என்ற பெயர்த் தன்மையால், நாமெல்லாம் ஒன்று போல் காணப்படுகிறோம். ஆபினும், அறிவு வளர்ச்சியால் மிகுந்த ஏற்றத்தாழ்வு உள்ளவர்களாகவே இருக்கிறோம். ஒன்று முதல் ஐந்து வரையான சிற்றறிவினராக ஒரு காலத்தில் வாழ்ந்து, மனம் என்ற ஆறாவது அறிவினைப் பெற்றதால் மனிதரான நிலையிலும், நம்முடைய அறிவு ஒரே மாதிரியான தாக இல்லை. பண்டைய இழிநிலை, இன்றைய மனிதநிலை, உயர்ந்து வளர்ந்த தெய்வீக நிலை என்றவாறு பெருத்த மாறு பாடுகள் நம்மிடையே காணப்படுகின்றன.

எனவே நம்மை நடத்திச் செல்லும் சிவபெருமானும், நமது அறிவின் குறை-நிறைக்கு ஏற்பப் பல எளிய வடிவங்களை ஏற்க வேண்டியதாகிறது. இஃதும் அப்பெருமானுடைய அளப்பரிய கருணை வெளிப்பாடேயன்றி, வேறு இல்லை. இதனை ஓர் உவமை மூலம் விளக்கலாம்.

மின் ஆற்றல் (Electricity) என்பது 33,000 மின் அழுத்தத் தில் உற்பத்தி ஆகிறது; ஆனால் அதே அழுத்தத்துடன் நம் வீடு களுக்கு அது கொண்டு வரப்படுவதில்லை. மின் அழுத்தத்தைப் (Voltage) படிப்படியாகக் குறைத்து, இறுதியில் நமது தேவைக்கு ஏற்பத் தொழிற்சாலைகளில் 500V என்ற மின் அழுத்தத்திலும், வீடுகளில் 230V என்ற மின் அழுத்தத்திலுமே மின் ஆற்றலைப் பயன்படுத்துகிறோம். சூழலுக்கு ஏற்ப, இவ் அழுத்தம் மேலும் குறைவதையும் காணுகிறோம். இதேபோன்றுதான், ஆண்ட வனும் நமது அறிவின் ஆழத்திற்கு ஏற்பத், தன் ஆற்றலை வேறுபடுத்தி, வெவ்வேறு வடிவம் ஏற்கிறார்.

---

2 "வேறுவேறு உருவும் வேறுவேறு இயற்கையும் நூறு நூறாயிரம் இயல்பினதாகி ஏறுடை ஈசன் இப்புவனியை உய்யக் கூறுடை மங்கையும் தானும் வந்தருளி" - கீர்த்தித் திருவகவல் 23 - 26

செப்புக் கம்பி என்பது ஒரு நல்ல மின் கடத்தி, அதேபோல் நமது உடம்பிலுள்ள நரம்புகள், தெய்வீக ஆற்றல்களைக் கடத்தும் உயர்ந்த கருவிகளாம். திருமூலர், நமது மைய நரம்பு மண்டலத்தைச் (Central Nervous System) சிவபூமி[1] என வருணிப்பதிலிருந்தும் இவ்வுண்மை தெளிவாகும். உச்சித்தலை யிலிருந்து உள்ளங்கால் வரையுள்ள கோடானுகோடி நரம்பு களும், தெய்வீக ஆற்றலைக் கடத்த வல்லன. அவற்றின் கடத்தும் ஆற்றலும் இடத்துக்கு இடம் வேறுபடுகிறது,

நம் தலையின் பெருமூளையில், ஞானமே வடிவாய்க் குவிந்து உள்ளது, அதிநுண்ணிய அப்பேராற்றல். அது முதுகுத் தண்டின் அடிப்பகுதிக்கு வரும்போது விரிந்து பரந்ததாகி, ஞான நுண்மை குறைந்தும், செயல்திறன் மிகுந்தும் வெளிப்படுகிறது. உள்ளங்கால்களில் அதன் ஞானநுண்மை இல்லாதாகிச் செயல் வலிமை பெருகி நிற்கிறது. இவ்வாறு சிவபெருமானும் நம் இச்சை அறிவு செயல் திறனுக்கு ஏற்பப் பல்வகை உருக்கொள்ள வேண்டியது இன்றியமையாததாகிறது.

சலமிலன் சங்கரன்: சிவபெருமான், உயிர்களாகிய நமது நலனுக்காகவே பலவித வடிவ வேறுபாடுகளை ஏற்கிறார் எனக் கண்டோம். தோற்றத்தால் எத்துணை வேறுபடினும், நம்மைப் போல், அவர் இன்பதுன்ப நுகர்ச்சியால் கட்டுறுவதில்லை; தம் முடைய தனிப்பெருந்தன்மையை இழப்பதுமில்லை. மெய்யடி யார்களது இன்ப துன்பத்தை அவர்களோடு உடனாகவும் ஒன் றாகவும் இருக்கும் இறைவன் முழுமையாக உணர்வார்; ஆனால் அத் துன்ப இன்பக் கடலுள் தாம் முழுக மாட்டார், எனச் சைவ ஞான நூல்கள் கூறுகின்றன.

அண்டத்திலும் பிண்டத்திலும் இதற்கு ஆதாரங்கள் உள்ளன. இளஞ் சூரியனது தோற்றத்தால் தாமரை மலர்கிறது; அல்லி மலர் தனது இதழ்களை மூடிக் கொள்ளுகிறது. இங்ஙனம் சூரியனது வெப்பத்தால், வாழுகின்ற பொருள்களும் உள்ளன; வாடுகின்ற பொருள்களும் உள்ளன. ஆயினும் சூரியன் தனது இயல்புகளில் எவ்வித மாற்றத்தையும் அடைவதில்லை. இது அண்டவெளிச் சான்று.

1. சிவபூமி என்ற தலைப்பில் முன்னர்க் கூறியது.

இதேபோன்று நமது உடலாகிய பிண்டத்திலும் சான்று களை அமைத்துள்ளார், இறைவன். அவையே நம் முன் தலை யில் அறிவுத்தானமாகவுள்ள பெருமூளையும் அன்புத்தானமாகிய இருதயமும், உடம்பின் பிறபகுதிகளை ஒரு கத்தியால் வெட்டி னால் அதனால் விளைகிற துன்பத்தை நமது மூளை உணர்கிறது. ஆனால் மூளையையே அக்கத்தி கொண்டு வெட்டினால், மூளை எவ்வகைத் துன்ப உணர்வும் பெறுவதில்லை[1] என இன்றைய அறிவியலார் ஆய்ந்து கூறுகின்றனர்.

நாம் உண்ணும் உணவினாலும் பிற ஊக்கிகளாலும் அமிலங் களும் காரங்களும் பெருமளவில் உற்பத்தி ஆகின்றன. அவை குருதி ஓட்டத்தில் புகுந்தாலும், குருதியின் இயற்கைத் தன்மை அதனால் பாதிப்புறுவதில்லை.[2] அதே போன்று உயிர்கள் நுகர் கிற இன்ப துன்பங்களால், உயிருக்குள் உயிராக இருக்கும் சிவ பெருமான் விகாரப் படுவதில்லை. தன்னியல்பு மாறாத்தன்மை' அவரது தனிச் சிறப்பு.

சுடலை ஆடி; சிவபெருமானைச் சுடலையாடி என ஞானி கள் போற்றி மகிழ்வர். மண்ணிலிருந்து தோன்றிய உடல், மரணத்திற்குப் பின் மண்ணில் புதைக்கப்பட்டு அல்லது எரிக்கப் பட்டு, மண்ணோடு மண்ணாகவே ஆகிறது. உடம்பு சுடப்படும் இடம் சுடலை; இடப்படும் இடம் இடுகாடு.

வாழ்நாளில் எங்கெங்கு மனிதன் ஆடினாலும் ஓடினாலும், இறுதி இடம் அவனுக்குச் சுடலையே, ஆதலால் உடலில் இருந்து பிரிந்த உயிரினை ஏற்றுக் காத்தருளுவதற்காகச் சுடலையில் காத்திருக்கிறார், சிவபெருமான். அவர் நம்மீது கெகண்ட அளப் பரிய கருணையினால் தான், 'புறங்காடு அரங்காகச்' சுடலை யிலும் இடையறாது. நடனம் ஆடிக் கொண்டிருக்கிறார். எனவே அப்பெருமானைச் 'சுடலை யாடி' எனப் போற்றிப் பரவுகிறது நம் சைவ சமயம்.

---

1 Although all pain is felt in me (brain), I myself have no pain sensation even when I am cut''

—PP 12, last para, I'm Joe's body.

2 Human physiology by CC, Chatterjee, Medical Allied Agency, Calcutta, 9th Edn pp. 3—1

இத்தகைய சுடலை ஆட்டம், புற உலகில் மட்டுமன்று; நம் நெஞ்சகத்திலும் நிகழ்கிறது. அது தொடர்பான சான்றுகளைக் காண்போம்.

நமது இந்த மனித உடம்புக்கு ஒரு கால எல்லை உண்டு. அதேபோல், நம் உடம்பில் உள்ள செங்குருதி அணுக்களுக்கும் வெண்குருதி அணுக்களுக்கும் வாழ்நாள் எல்லையை வகுத்திருக்கிறார், இறைவன், குருதி அணுக்களுக்கு 120-நாட்கள் என்பது விஞ்ஞானம்; மனித உடம்புக்கு 120-ஆண்டுகள் என்பது மெய்ஞ்ஞானம். 120-நாட்களே வாழ்வுடைய குருதி அணுக்கள், கூட்டம் கூட்டமாக மாள்வதும் மீள்வதும் இடையறாது நடைபெறுகிற ஒரு தொடர் நிகழ்ச்சியாகும். நொடிக்குப் பன்னிரண்டு இலட்சம் என்ற அளவில் குருதி அணுக்கள் மாளுகின்றன. அவை ஆங்காங்கே உடம்பில் தேங்கி விடுமாயின், மிகப்பெரிய தீங்கினையே விளைவிக்கும். அவற்றை என் செய்வது? சிவபெருமான் அதற்கும் ஒரு வழி வகுத்துள்ளார். உலகத்து மண், சடலத்தை ஈர்த்துக் கொள்ளுவது போல, நம் உடலினுள் இருதயத்தைச் சார்ந்து மண்ணீரல் என்னும் ஓர் அமைப்பு உள்ளது. அம்மண்ணீரலே இறந்துபட்ட இரத்த அணுக்களை ஈர்த்துக் கொள்ளுகிறது; மீண்டும் மண்ணீரலிலிருந்தும், எலும்பு மச்சையிலிருந்தும் அதே அளவு புதிய அணுக்கள் தோன்றவும் துணை நிற்கிறது.

நமது இதயக் கமலமே சிற்றம்பலமாகிய அரங்கு; இங்கு ஆடுகிற சிவபெருமான், தனது வலக்காலை ஊன்றிய இடம், மண்ணீரல். தூக்கிய திருவடியே செங்குருதி நாளம்; அவரது உடுக்கையின் ஒலியே, நமது இதயத் துடிப்பு. ஆதலால் நமது இதய கமலத்தில், அச்சுடலையாடியை யாவரும் வணங்குவோம்.

கத்தரிக்கோல்: நமது முன்தலையில் உள்ள பெருமூளையின் இடக்கூறு, உடம்பின் வலப்பாகத்தையும், வலக்கூறு இடப்பாகத்தையும் இயக்குகின்றன என்பது உடலியல் விஞ்ஞானம்,[1] இந்த

1 "The left half controls much of the activity on the right side of his body and the other hemisphere the left"

—I'm Joe's body p.13.

இடவல மாற்ற இயக்கத்திற்கான காரணத்தை அறிவியல் அறிஞர்கள் பலரும் ஆய்ந்து காண முனைகின்றனர். ஆயினும், விடைகாண முடியாத அவர்களிடம் ஒரு வியப்புக்குறியே எஞ்சி நிற்கிறது. ஆனால் இதற்கோர் ஆன்மீக விளக்கமாகத் திருவானைக் கோயில் புராணத்தில் ஓர் அருள்வரலாறு காணப் பெறுகிறது.

கடுந்தவம் புரிந்தான் பிரமன்; காட்சியருள விரும்பினர், அம்மையும் அப்பனும். தவம் செய்த பிரமனோ மிகுகாமி. தன்னால் படைக்கப்பட்ட நங்கையின் எழில் வடிவத்தையே சாமுற நோக்கும் இழிகுணம் உடையவன். எனவே, காட்சிக்கு முன் ஒரு சோதனையாய், இறைவன் ஒரு திருவிளையாடல் புரிந்தார் இடப்பக்க அம்மையின் உருவை அப்பன் கொண்டார்; வலப்பக்க அப்பனது வடிவினை அம்மை ஏற்றாள். தியானத்திலிருந்து கண் விளித்தான் பிரமன்; சிவபெருமானது எழிலார் பெண்ணுருவைக் கண்டான்; இயல்பான காம விகாரம் தலை தூக்கியது.

அடிமனத்தின் ஆழத்தையும் அறியவல்லவர் சிவபெருமான் அல்லரோ? பிரமனது உள்ளத்து உணர்வு அலைகளைக் கண்டார். ஆண் உருவில் உள்ள தனது சத்தியை நோக்கிக் குறுநகை ஒன்று புரிந்தார்; அவளும் நாணி நின்றாள். பெண் சிரிக்க, ஆண் நாண, —முரண்பட்ட இச்செயல் பிரமனது மூளையில் தைத்தது; பிழையை உணர்ந்தான்; பெருமானது திருவடியில் வீழ்ந்தான்; பொருத்தருள வேண்டினான். இறுதியில் வரமும் பெற்றான், —என்பது வரலாறு. ஒவ்வோர் ஆண்டும் பங்குனிப் பெருவிழாவில் அம்மை அப்பர் இவ்வாறு பாற்றுருப் புனைந்து இடமும் வலமும் மாறித் திருவானைக்கோயிலில் திருவீதி உலா வருவது, ஒரு கண் கொள்ளாக் காட்சியாகும்.

தத்துவ நோக்கில் பார்த்தால், சிவபெருமானுக்கு நம் உடலில் இருப்பிடம், சுத்தமாயையினாலான பெருமூளை. அவரோ மாதொருபாகன். எனவே பெருமூளையின் வலக்கூறு சிவன், இடக்கூறு சத்தி, சிவபெருமான் செம்பவள நிறத்தினர் என்றும், அம்மை பச்சை நிறத்தினள் என்றும் ஞானநூல்கள் கூறுகின்றன.

பிரமன் தவம் செய்த இடமோ, நம் உடம்பில் அசுத்த மாயையினாலான அடிவயிற்றுப் பகுதி. இதற்குச் சுவாதிட்டானம்[2] என்பது பெயர். மூளையின் வலது பக்கத்துச் சிவன், உடம்பின் இடது பக்கத்தையும், இடது பக்கத்துச் சத்தி உடம்பின் வலது பக்கத்தையும் இயக்குகிறார்கள் அப்பொழுது, வடிவமும், வண்ணமும் மாறின; ஆனால் அவர்களது இயல்புகள் மாறவில்லை. அதனால், நமது இதயத் தாமரையில் வலது பக்கத்தில் நீல நிறத்துடன் சிவனும், இடது பக்கத்தில் செந்நிறத்துடன் உமையம்மையும் இருந்து அருள் புரிகின்றனர்.

தலை எழுத்து: ஒவ்வொரு நொடியும், நாம் ஏதேனும் ஒரு வினையைச் செய்து கொண்டே இருக்கிறோம். அது நல்வினையாகவும் இருக்கலாம்; தீவினையாகவும் அமையலாம் அவ்வாறு நாம் செய்கிற நல்வினை தீவினைகள் மிக நுண்ணிய வடிவில் புண்ணியமாகவும் பாவமாகவும் சிவசத்தியின் பால் நம் கணக்காகப் பதிவாகின்றன. சிவத்தின்பால் உள்ள இப்பதிவேடு, மூல ஏடு ஆகும். நாம் இவ்வாறு பல பிறப்புகளிலும் பலகாலமும் செய்த வினையீட்டத்தின் மொத்தத் தொகுதிக்குச் **சஞ்சிதம்** என்பது பெயர்.

சஞ்சிதத்தின் பெருங் குவியலிலிருந்து, முதிர்ந்தவற்றை மட்டுமே இப்பிறவியில் நாம் இன்பமாகவும் துன்பமாகவும் நுகர்ந்து கழிக்கிறோம். அவ்வாறு கழிப்பதற்காக இறையருள் கூட்டுவித்த வினைப் பகுதிக்குப் **பிராரத்தம்** எனபது பெயர். இதனையே விதி என்றும் தலை எழுத்து என்றும் ஊழ் என்றும் ஏன்றவினை என்றும் பால் என்றும் பலவாறாகக் கூறுவர். முன் செய்த செயல்களுக்கு ஏற்ற பயனை, நாம் ஒவ்வொருவரும் ஒவ்வொரு நொடியும் அனுபவிக்கிறோம். இவ்வினை அனுபவமே வாழ்க்கையாகும். இன்ப அனுபவங்கள்

---

2 சுவாதிட்டானம் என்பது நம் உடம்பில், உயிர் சிறப்பாகத் தொழிற்படும் ஆறு ஆதாரங்களுள் ஒன்று. இது. அசுத்தமாயையில் நம் அடிவயிற்றுப் பகுதியிலுள்ள நரம்பு மண்டலத்தில் உள்ளது. இதனைத் தொழிற்படுத்துபவர், காரண பிரமனாகிய சிவபெருமானே ஆவார். நம் அடிவயிற்றிலுள்ளபுனர் உற்பத்திக் கருவிகளைத் தொழிற்படுத்துபவன் காரிய பிரமா; சில ஆணைவழி நடப்பவன். அவனைப் பற்றிய செய்தியே ஈண்டுக் குறிக்கப் பெறுகிறது.

நிறைந்திருந்தால் 'இன்ப வாழ்வு' என மகிழ்கிறோம். துன்ப அனுபவங்கள் மிகுந்திருந்தால் 'துன்ப வாழ்வு' எனக் கவல்கிறோம்.

எனினும் இவ்வனுபவங்களை ஒரே இனிப்பாகவோ, ஒரே கசப்பாகவோ இல்லாமல், இரவும் பகலும் போல, ஒரே சீராகப் பின்னிப் பிணைத்துக் கலந்து ஊட்டுவது இறைவனது பெருங் கருணையாகும். இவ்வாறு, பிராரத்த வினைப் பயன்களை நுகர்ந்து கழித்துக் கொண்டிருக்கும் போதே, நாம் தன்முனைப் போடு செய்யும் புதிய வினைகளும், பழைய வினைத் தொகுப் பொடு சேர்ந்து கொள்ளுகின்றன. இந்தப் புதிய வரவுகளுக்கு ஆகாமியம்' என்பது பெயர்.

நாம் அனுபவிக்க வேண்டிய இன்ப துன்பங்கள், நமது முந்திய நல்வினை தீவினைகளாகிய புண்ணியபாவங்களுக்கு ஏற்பவே அமைதல் வேண்டும் என்பது நியதி. எனவே இந்த வினை அனுபவத்திற்கு 'விதி' எனப் பெயரிட்டனர், ஆன்றோர். வினைகள் எல்லாவற்றிற்கும் பயன் உண்டு. பயன் விளைவிக்காத வினையே இல்லை எனலாம் "Every action has an equal and opposite reaction" என்பது நியூட்டனின் பொருள் அலைவுக் கோட்பாடாகும். வினையும் பயனும் என்ற சைவ சித்தாந்த கொள்கையின் மாற்று வடிவமே. இன்றைய அறிவியல் கூறுகிற வினையும் எதிர் வினையும்' என்ற பூதத்துவ நியதியாகும்.

சிவபெருமான் நமது வினைக்கு ஈடாகவே, தமது சித்சத்தியைக் கொண்டு, வினைப் பயனாகிய இன்ப துன்பப் பாலை நமக்கு ஊட்டச் செய்கிறார்.

வினையின் நீங்கியவர்கள் திருஞானசம்பந்தர் போன்ற அருளாளர்கள். அவர்களுக்கு எவ்வித இன்பதுன்ப அனுபவமும் இல்லை, ஆதலால், உமையம்மை தனது திருமுலைப்பாலையே ஞானப்பாலாக ஊட்டினார் என்பது சைவ வரலாறு, வினை வயப்பட்ட நம் போன்றார்க்கு, அம்மை நேரில் தோன்றுவதில்லை; மறைந்திருந்தே வினைப் பயனாகிய பாலை ஊட்டுகிறாள்.

நாம் செய்கிற வினைகள் நுண்ணிய வடிவில் சிவசத்தியின் பால் பதிவாகின்றன எனக் கண்டோம். இறை நியதிக்கு உட்பட்டு, நாம் அவ்வக் காலத்தில் இன்பத்தையோ துன் பத்தையோ அனுபவிக்க வேண்டும் என்பது விதி எனவும் கண்டோம். அஃது எவ்வாறு நிகழ்கிறது என்பதை அறிவியலைத் துணைக்கொண்டு சிந்திக்கலாம். நாம் பேசுகிற பேச்சொலி ஒலிப்பதிவு நாடாவில் நுண்ணொலியாகப் பதிவாகிப் பின் மீண்டும் பேச்சொலியாகவே (Sound wave → Micro wave → Sound wave) நம்மால் கேட்கப் படுவதைப் போன்றுதான், நல்வினைகள் புண்ணியம் என்ற நுண்வடிவம் கொண்டு சிவ சத்தியின் பால் தங்கி, உரிய காலத்தில் இன்பம் என்ற பயனாக வெளிப்படுகிறது. தீவினை பாவமாகித் துன்பம் பயக்கிறது. அந்த விதிக்கான படிகள், தொடர்புடைய எல்லா இடங்களுக்கும் அனுப்பப் படுகின்றன.

நாம செய்த வினை என்ன? அதற்கேற்ற இன்ப துன்பப் பயன் என்ன? அதனை நாம் எவ்வாறு நுகர்தல் வேண்டும்? எப்பொழுது நுகர்தல் வேண்டும்? எந்த அளவு நுகர்தல் வேண்டும்? யார் யாருடைய கூட்டோடு நுகர்தல் வேண்டும்? என்பன போன்ற அனைத்துச் செய்திகளும் வழுவின்றி வரையப் பட்டிருக்கும் பதிவேடே, வினைகளின் மூல ஏடாகும்.

அதன் படிகளுள் ஒன்று, விண்கோள் (Planets)களில் பதியப் படுகிறது. மற்றொன்று, நமது இவ்வுடலை மண்ணிலிருந்து உருவாக்கும் படைப்புக் கடவுளாகிய காரிய பிரமனிடம் கொடுக்கப்படுகிறது. விண்கோள்கள் வெறும் சடப் பொருள்கள் என்பதையும், இக்காலத்தில் பெரிதும் பயனுறும் ரேடார் (Radar) கருவிகளைப் போன்றவையே என்பதையும் உணர்தல் வேண்டும். பிரமன், நமது இந்த உடம்பைச், சிவபெருமானது ஆணைப்படி, ஊழ்வினை நுகர்ச்சிக்கு உதவுமாறு வலியதாகவோ, மெலியதாகவோ உருவாக்குகிறான். நம் உடம்பின் முன்தலைப் பகுதியில், ஆயிரம் இதழ்த் தாமரை போன்ற மூளையின் கீழே, (Hypothalamus என்ற) தாமரைக் காம்பில் 'பிராரத்த வினையின் படியையும் பதிப்பிக்கிறான், இஃது ஒரு கல்வெட்டுப் போன்றது. இவ்வாறு விதிகள் எழுதிப் பதியப் பெற்றுள்ள இடம், நமது

தலை; எனவே இதனைத் தலைவிதி என்றும் தலை எழுத்து என்றும் முன்னோர்கள் குறிப்பிட்டனர்.

தலைவிதிக்கு ஏற்பவே ஒவ்வொன்றும் நிகழ்கிறது என்பது பண்டு தொட்ட நம்பிக்கை. அது ஒரு மூடநம்பிக்கை எனக் கூறுவது அறிவீனம்.

வீரக்கழல் (Optic Chiasm):

''கள்ள வினை வென்று. பிறப்பு அறுக்கச்
சாத்திய வீரக்கழல்''1

எனக் கூறுகிறார், உமாபதி சிவம்.

நம் தலையினுள் அமைந்திருக்கும் தாமரையின் ஆயிரம் இதழ்களும் வெறும் மொட்டாகவே இருந்து வாடி, வீணே உதிர வேண்டுமா? அன்றி விரிந்து மலர்ந்து மணம் பரப்பிச் சிவபெருமான் திருவடித்தாமரை ஆகவேண்டுமா? என்பது, ஒவ்வோர் ஆன்மா செய்திருக்கும் இருள் வினைகளையும் அருள் வினைகளையும் பொருத்ததே ஆகும்.

அறிவுக்கு மதி என்பதும் ஒரு பெயர். வானத்து முழு மதியில் களங்கம் இருப்பதைக் காணுகிறோம். அறிவு என்ற நம் மதிக்கும், 'ஆணவ — அழுக்கு' என்னும் களங்கம் (கட்டு) உண்டு, ஆனால் நாம் அதை உணர்வதில்லை. அதனால் 'நான், எனது' என இறுமாந்து திரிகின்றோம். சிவபெருமான் பிறைமதி சூடிய பெருமைக்குச் சுவையான வரலாறு ஒன்று உண்டு. அது பற்றிச் சிந்தித்தால், தலைவிதியை யாற்றுகிற தலைவன் சிவபெருமான் என்பது தெளிவாக உணரப் பெறும்.

பிறைமதி: வானத்து முழுமதிக்கு இருபத்தேழு மனைவியர். விண்ணில் தெரியும் அசுவினி முதலிய இருபத்தேழு நட்சத்திரங்களே அம்மனைவியர். அவர்களுள் கார்த்திகை, உரோகினி என்ற இருவரிடத்தில் மட்டும், சந்திரன் தனி அன்பு செலுத்தினான். அதனால், மற்ற மனைவியர் மனம் நொந்தனர் அவர்களது தந்தையாகிய தக்கன் வெகுண்டான்; அதன் விளைவு;

1 போற்றிப் பஃறொடை (68)

சந்திரனுக்கு ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு கலையாகத்தேயுமாறு சபித்தான், மனம் கலங்கிய சந்திரன், படைப்புக் கடவுளாகிய பிரமனை அணுகினான். தேய்ந்த கலைகளைப் படைப்பதற்குத் தன்னால் இயலாது எனக் கூறிய பிரமன், கலைகள் மேன்மேலும் தேயாதவாறு காத்துக் கொள்ளுமாறு விட்டுணுவிடம் அவனை அனுப்பினான்.

விட்டுணு, காக்கும் கடவுள், எனினும் தன்னால் தக்கனது சாபத்திலிருந்து அவனைக் காக்க இயலாது என்றும், சிவபெருமான் ஒருவரே அவனை அவ்அவலத்திலிருந்து காப்பாற்ற முடியும் என்றும் கூறி, விட்டுணு, அவனைச் சிவபெருமானிடம் அனுப்பி வைத்தார்.

தண்ணளி சுரக்கும் தனிப்பெருங்கடவுள், சிவபெருமான். மலநோய்க்கு மருந்தாகும் வைத்தியநாதர் அவர் ஒருவரே. வினை தீர்க்கும் அப்பெருமானது திருவடிகளில் சரண் என விழுந்தான், சந்திரன். அடைக்கலம் எனத் தன் காலில் விழுந்தவனைத் தன் தலையில் நிலையான அழகிய ஓர் அணியாகச் சிவபெருமான் சூடி அருளிச், சந்திர சேகரமூர்த்தி ஆனார். இஃது மூன்றாம் பிறைமதியை இறைவன் முடிமேல் ஏற்ற வரலாறு.

ஆண்மைப் பொலிவு: சிவபெருமான், சந்திரனைத் தம் முடி அணியாக இவ்வாறு ஏற்றுக் கொண்டதற்கு, ஒரு 'கல்வெட்டுச் சான்று' போல, அவர் நமக்காகப் படைத்தருளிய இந்த மனித உடம்பின் தலைப் பகுதியில் ஒரு பிறை வடிவ அமைப்பையும் எழிலுறத் தோற்றுவித்தார். அது பெருமூளையின் இரு கூறு களையும் இணைத்து மூன்றாம் பிறையினைப் போன்று வளைந்து நீண்டு கிடக்கிறது. அதற்கு மூளை இணைப்பான் (கார்பஸ் கலோசம், Corpus Collosum) என்று பெயர். இதன் கீழேயுள்ள நாளத்தை மூன்றாம் நாளம் (Third ventricle) என்றே அறிவிய லாரும் பெயரிட்டனர். (இதுவும் இறை ஆணை போலும்!) மொச்சை விதையின் நடுவில் உள்ள முளையை இருமருங்கும் சூழ்ந்திருக்கும் பருப்புகள் போன்று, மூளை இணைப்பானின் இரு மருங்கிலும் இரண்டு நாளங்கள் (First Ventricle and

Second Ventricle) மருவி நிற்கின்றன. இது, சந்திரனையும் அவனது அன்பு மனைவியராகிய கார்த்திகை உரோஹிணியையும் நினைவுறுத்தும்.

அறிவின் இருப்பிடம் மூளை. தன்முனைப்பு நீங்கி, ஒன்றிய இறை உணர்வோடு சிவ மூலமந்திரத்தைத் தியானம் செய்பவர்களுக்கு இந்த மூளை இணைப்பானின் மூலம் பெறுகிற இன்ப அனுபவங்கள் அளப்பரியன. பிறந்தது முதல் அஃது ஓர் உயிர்க் கருவியாகவே (பசு கரணம்) இருந்து வந்திருக்கிறது. சிவதியானத்திற்குப் பிறகு அஃது ஒரு தெய்வீகக் கருவி (பதி கரணம்) ஆகிறது

'ஆர்கலி சூழ்தென் இலங்கை அழகமர் வண்டோதரிக்குப்
பேரருள் இன்பம் அளித்த பெருந்துறை மேயபிரானை...'.

— திருவாசகம் குயிற்பத்து 8:18:2

இலங்கை மன்னன் இராவணன் சிறந்த சிவபத்தன் என்பதும் அவனது அன்பு மனைவியே வண்டோதரி என்பதும், வண்டோதரி ஆழ்ந்த சிவப்பற்றாலும் சிவஞானத் தெளிவாலும், இவ்உலக வாழ்விலேயே, இறை பேரின்பமாகிய திருவடிப் பேரின்பம் துய்த்தவள் என்பதும், மணிவாசகரின் இத்திருவாசகத் தொடரால் அறியற்பாலன.

கூன்பாண்டியனாக நலிவுற்றுக் கிடந்தான் பாண்டிய மன்னன் 'வேந்தனும் ஓங்குக' என்ற காழிப் பிள்ளையின் மறைமொழி கேட்டதும், அவன் கூன் நீங்கியது; நிமிர்ந்த முதுகு பெற்று நின்ற சீர் நெடுமாறன் ஆயினான் என்பது வரலாறு. அதுபோல நாம் மனம் ஒன்றி ஆழ்ந்த சிவ மூலமந்திர தியானம் செய்யும் போது, அதுகாறும் நலிவுற்றுக் கிடந்த மூன்றாம் பிறை அமைப்பு, பதிகரணமாக வீறுபெற்றுப் பிச்சாண்டிக் கோலத்தின் ஆண்மைப் பொலிவினைப் பெறுகிறது.

பிச்சாண்டியின் பெருமை: சிவபெருமான் பிச்சாடன வேடம் பூண்ட வரலாறு, சுவையானதும், பயனுள்ளதும், சிவஞானத் தெளிவூட்டுவதும் ஆகும்.

தாருகாவனத்து இருடிகள் தவ வலிமை மிக்கவர்கள்' அதனால் அவர்கள் கொண்டிருந்த அகங்காரமும் அளப்பரிது. தவத்தைச் செய்யத் தெரிந்த அவர்களுக்குத் தலைவனை உணரத் தெரியவில்லை. அவர்களுடைய மனைவியரோ, தத்தம் கணவற்குச் செய்யும் தொண்டினையும் கற்பினையுமே மேலானவை எனக்கொண்டு கடவுள் கொள்கையை ஒறுத் தனர்.

அவர்களுக்குச் சிவத்தின் தலைமைச் சிறப்பை உணர்த்த விரும்பினார், சிவபெருமான். மயக்கும் மோகினியாக விட்டுணுவை வரச்செய்து, தவசிகளது, தவச்சாலைகளின்பால் அனுப்பினார். அழகிய அம்மண உருவில் தாருகாவனத்துப் பெண்டிர்முன் தாமே பிச்சை ஏற்கச் சென்றார்.

மோகினியின் பேரழகில் மயங்கித் தம் தவவலியை இழந் தனர், இருடிகள். அவர்தம் பெண்டிரோ, பிச்சாடனக் கோலத் துப் பெருமானது அம்மண ஆண்மை அழகிலே மயங்கித் தம் ஆடைகளையும், வளையல்களையும் நெகிழ விட்டனர். தவத் தையும் கற்பையுமே உறுதிப் பொருள்களாகப் பிழைபட எண்ணித், தலைவராகிய பரசிவத்தை மதியாது தருக்குற்றதால், தாருகாவனத்துத் தவசிகள் தடுமாறிய வரலாறு, இது.

சிவபெருமான் பிச்சாண்டியாக நின்றார்; தன்னிடத்துப் பொருள் இல்லாததலாலா? அன்று, அன்று. அவரே மெய்ப் பொருள் ஆயிற்றே! அவர் நம்மிடத்தில் பிச்சையாக ஏற்பதெல் லாம், நம்மிடமுள்ள ஆணவாதி மலக் கேடுகளையே என்பது அறியற்பாலது. மலப்பிணிப்பு நம்மிலிருந்து நீங்கினால்தான், நமக்கு உறுதியான பேரின்பப் பெருவாழ்வு கிடைக்கும். எனவே பெருமான் பிச்சை ஏற்பதும், நம்மை உய்விக்கவே. இஃது அவருடைய அன்பு உள்ளத்தின் அருள் வெளிப்பாடே. நமது தலையிலுள்ள மூன்றாம் பிறைவடிவ அமைப்பு சிவபெருமானது இந்தப் பிச்சாடனக் கோலத்தை நமக்கு உணர்த்துவதாகும்.

பெண்மையும் பேரின்பமும்; உயிர்களாகிய நாம் அனைவரும் பெண்பாலரே என்றும், சிவபெருமான் ஒருவரே ஆண்மகன் என்றும் முன்னரும் கண்டோம். சுத்தமாயை, சிவபெருமானது ஐந்தொழில் புரியும் இடம் எனவும், நமது உடம்பில் அஃது, தலையிலுள்ள பெருமூளைப் பகுதி எனவும் அசுத்தமாயை, உயிர்களாகிய நமது வினைநுகர்வுப் பண்ணை எனவும், நமது உடம்பில் அஃது பெருமூளை நீங்கிய பிற பகுதிகள் எனவும் கண்டோம். சிவனுக்கும் சீவனுக்குமான இவ்விரு தானங்களையும் ஓர் எல்லைக்கோடு பிரிக்கிறது. அத்தகு எல்லையாக அமைந் திருப்பது, மூன்றாம் நாளமாகும்.

சிவயோக நெறி நின்று ஒன்றிய மனத்தோடு சிவபெரு மானையே ஆழ்ந்து தியானிக்கும் உயிர், இந்த மூன்றாம் நாளத் தின் அடியில், வஞ்சிக்கொடி என ஊர்ந்து சென்று 'பிட்யூட்டரி' (Pituitary)என்ற பெண்மைத் தானத்தில் நிலை கொள்ளுகிறது. இஃது ஆன்மாவின் துரிய நிலை. உள்ளமும் பிராணனனும் மட்டும் உடனிருக்க, மற்ற அனைத்துத் தத்துவ ஆடைகளையும் நீங்கிய உயிரின் 'அம்மண' நிலை, இது.

நம் தலையின் மையப் பகுதியில் உள்ளதும், உயிர்ப்பு ஆற்றலைச் சுரப்பதுமாகிய தலைமைச் சுரப்பியே பிட்யூட்டரி ஆகும் தத்துவ நோக்கில், சுத்தவித்தை எனவும், அகத்துறை இலக்கணத்தில், (ஆன்ம) அல்குல் எனவும் இஃது அழைக்கப் பெறுகிறது. ஆண்டவன் ஆன்மப் பேரின்பப் புணர்ச்சிக்கான ஞானபீடமாக அமைவது இதுவே.

சிவமூலமந்திரத்தின் ஊற்றத்தால் புதுப்பொலிவு பெறுகிற மூளை இணைப்பான், சிவமே ஆகிய (பிட்யூட்டரி என்னும்) பெண்மைத் தானத்தில், பொருந்திச், சிவத்தியானத்திலிருக்கும் உயிர்களாகிய நமக்குப் பேரின்பம் ஊட்டுகிறது. இதன் விளை வாக உயிர்களிக்குச் சிவஞானத் தெளிவு பிறக்கிறது.

விதியை மதியால் வெல்லலாம்: மூளை இணைப்பான் பிறைமதியின் வடிவினது, அது பெண்மைத்தானமாகிய பிட்யூட்டரியை நோக்கி முன்னேறி எழும்போது, பார்வை

வளையத்தை (Optic Chiasm) ஊடுருவி, அதனைத் தனது வீரக் கழலாக எழிலுற அணிந்துகொண்டு, தலைவிதி ஏட்டினைத் தாங்குகிற தாமரைக் காம்பினை (Hypothalamus)ச் செவ்விதே உராய்ந்து, அங்கு உள்ள நம் தலை எழுத்தினையும் தேய்த் தழித்துப், பெண்மைத் தானத்தைத் திண்டி, அங்கு உயிர்களாகிய நமக்குப் பேரின்பத்தை நல்குகிறது.

சிவமூல மந்திரத்தின் அளப்பரிய ஆற்றலையே உறுதுணை யாகக் கொண்டு, நம் தலையிலுள்ள மூன்றாம் பிறைமதியால், நமது ஊழ்வினையாகிய விதியை அழிக்க முடியும் என்பது, நம் முன்னோர்கள் அனுபவ வழி உணர்ந்த, பண்டு தொட்ட நம் பிக்கை. 'விதியை மதியால் வெல்லலாம்' என்ற அனுபவ அறிவுரையும் அக்காரணம் பற்றியே எழுந்தது எனலாம்.

கந்தன் திருவடி:

'வேல்பட்(டு) அழிந்தது. வேலையும்
சூரனும் வெற்பு(ம்), அவன்
கால்பட்(டு) அழிந்த(து) இங்கு என்தலை
மேல்) அயன் கையெழுத்தே!'[1]

என்பது அருணகிரியார் வாக்கு. முருகப் பெருமானது திருவடி, நம் தலையில் பிரமன் பதித்து வைத்த ஊழ்வினை ஏட்டின் படியை எவ்வாறு அழிக்கிறது என்பதைச் சிந்திப்போம்.

அம்மையப்பரை வலம் வந்த அண்ணன் கணபதிக்கு மாங்கனி கிடைத்தது. அண்டபேரண்டத்தை விரைந்து வலம் வந்த தமக்கு அக்கனி கிடைக்காததால், முனிவுற்ற முருகப் பெருமான் தனிமலை சென்று அமர்ந்தார். அதற்குக் கந்தமலை என்பது பெயர். நமது உடலில் அத்தகைய கந்தமலையாக அமைந் திருப்பது, நடுமூளைப் பகுதி (Mid brain), ஆகும். இன்பத்தின் இருப்பிடம் முருகன். இன்றைய அறிவியலாரும் நடுமூளையை இன்பத்தானம் (Pleasure Centre)[2] எனப் பெயரிட்டமைதான் எவ்வளவு பொருத்தம்!

1 கந்தரலங்காரம் 40 - அருணகிரியார்
2 I'm Joes' Body - Reader's Digest

முதுகுத் தண்டின் உச்சியில் இருப்பது முகுளம் (Medulla Oblangata) எனப்படும். முகுளத்திற்கு ஓர் அழகிய முடி சூட்டினாற்போல நடுமூளை உள்ளது. இந்த நடுமூளையிலிருந்து தொடங்கிப் புருவ நடுவை நோக்கி முன்னேறுகிறது மூளை - இணைப்பான். கந்தமலையிலிருந்து புறப்படுவதால் இது கந்தப் பெருமானது திருவடி எனப் போற்றப் பெறுகிறது. சிவமூல மந்திரத்தை நாம் முறையாகத் தியானம் செய்யும்போது, கந்தனது திருவடி, முன்னர்ப் பிச்சாடன மூர்த்திக்குக் கூறியது போல, தாமரைக் காம்பினை (Hypothalamus) உராய்ந்து மெய் யடியாரது தலைஎழுத்தை அழிக்கிறது. இவ்வாறு நம் தலை யிலுள்ள மூளை இணைப்பான், மூன்றாம் பிறைச் சந்திரனையும், பிச்சாண்டியின் ஆண்மைப் பொலிவையும் முருகப் பெருமானது திருவடியையும் கஜலெக்ஷிமியையும் அறவிடை ஊர்தியையும் நாம் சிந்தித்து வாழ்த்துவதற்குப் பல்வாறாகத் துணை புரிகிறது.

ஆகாய கங்கை: பண்டு ஒரு காலத்தில் பகீரதன் என்ற ஓர் அறநெறியாளன், நம் பாரதத்தில் வாழ்ந்து வந்தான். அவன் தன் முன்னோர்களது உய்வுக்காக ஆகாய கங்கையை நில உலகுக்குக் கொண்டுவர விரும்பினான். அவனது கடுந்தவத் தால் மகிழ்ந்த சிவபெருமான் ஆகாய கங்கையினைத் தம் தலையில் தாங்கிக் கொள்ள இசைந்தார். ஆயினும், வீறு கொண்டு வீழ்ந்த கங்கையின் ஆணவத்தை ஒடுக்க விருமபினார். எனவே தம் விரிந்த சடைமுடியினுள் கங்கை வெள்ளம் முழுவதையும் அடக்கிக் கொண்டார். பொங்கி வீழ்ந்த கங்கை நீரைப் புறத்தே காணாத பகீரதன் மீண்டும் தவம் இயற்றினான். அதனால் உள்ளம் நெகிழ்ந்த இறைவன், கங்கையின் 'வெள்ளைக் குரு நீரைத்' தமது முடியிலிருந்து, பிறைமதி வழியாகச் சிறிது சிறிதாகப் பொசிய விட்டார். அஃது அமுதமாக, நில உலகின் மடுவினுள் புகுந்து, முன்னோர்களது சாம்பலில் பாய்ந்தது; அவர்களுக்கு மேலான வாழ்வினையும் கொடுத்தது. இஃது யாவர்க்கும் தெரிந்த இனிய தொரு புராண வரலாறு. இதனை மாணிக்க வாசகரது திருவாசகத் தேன் மொழியால் சுவைத்து மகிழ்வது மேலும் இன்பம் பயப்பதாகும்.

''பெருநீ(ர்) அறச், சிறு மீன்துவண் டாங்கு நினைப் பிரிந்த
வெருநீர்மை யேனை 'விடுதிகண் டாய்; வியன் கங்கை[1]
பொங்கி
வருநீர்[2] மடுவுள்[3], மலைச்சிறு தோணி[4] வடிவின், வெள்ளைக்
குருநீர்[5] மதி[4] பொதி யும் சடை[6] வானக் கொழுமணியே!''

— நீத்தல் விண்ணப்பம்

நீர்நிலையில் உள்ள பெருமளவு நீர், வெய்யிலின் கடுமையால் வற்றினால், அங்கு வாழும் சிறு மீன்கள் நிலைக்களனின்றித் துவண்டு விடுமன்றோ? அதே போன்று வெம்மையான மல பந்தத்தினால் அடியேனும் ஆற்றல்களை இழந்து அல்லல் உற்றுத் துவண்டேன். ஆகாய கங்கையின் ஆணவத்தை ஒடுக்கிப், பகீரதனுக்கு அமுதநீர் அருளிய எம்பெருமானே! அடியேனுடைய மலக்கட்டுகளை அகற்றி, அருள்மழையும் பொழிந்து காத்தருள்வீராக என்பது இப்பாடலின் பொதுவான கருத்து.

இந்தப் புராண நிகழ்ச்சிக்குச் சான்று பகருகிறாற்போல், நமது மனித உடம்பிலும் ஓர் ஆகாய கங்கையை. (CSF) அமைத்திருக்கிறார், இறைவன். (இதன் விளக்கத்தை, 'அறிவியலில் மனித உடல்' என்ற இந்நூலின் இரண்டாம் இயலில் காண்க)

ஆகாய கங்கை தன் வழக்கமான பாதையிலிருந்து விலகி, **Aqua Duct** என்ற நீர்த்தாரை வழியாகப் பாய்ந்து, பகீரத கங்கையாகி, மூளையின் மடிப்புகளில் எல்லாம் தங்கி நின்று, நாம் சிவதியானம் செய்யும்போது, பிட்யூட்டரி என்ற தலைமைச் சுரப்பியில் கலந்து, நமது உடல் முழுமைக்கும் உறுதுணை புரிகிறது. அதனால் உடலுறுப்புகள் தெய்வீகப் பொலிவு பெறுகின்றன. CSF என்ற மூளைநீர் நிறைந்த இதனைப் பாலாற்று வெள்ளம் (Milky Way) என்று அன்புடன் அழைத்தல்

---

1 வியன் கங்கை - ஆகாய கங்கை - CSF. 2 வருநீர் - பகீரத கங்கை - Aqua Duct 3 மடு - ஆணைத்தானம் - Pituitary Gland. ஆன்ம அல்குல் 4 தோணி, மதி - பிச்சாண்டிக்கோலம் 5 வெள்ளைக்குருநீர் - அமுதநீர் - Cerebro Spinal Fluid 6 சடை சிவபெருமானது திருமுடி. Cerebrum 7 மடுவுள் மதி' என்ற தொடர் ஆண்டவன் ஆன்மப்பேரின்பக் கூட்டத்தை உணர்த்துவதாகும்

பொருந்தும். இவ் வெள்ளப் பெருக்கினால் விளையும் இன்ப நிலையை அருளாளர்களது அனுபவ வாயிலாகக் கேட்பது தனிச் சிறப்பு.

''சிறைபெறா நீர்போல் சிந்தைவாய்ப் பாயும்
திருப்பெருந் துறையுறை சிவனே!
இறைவனே! நீஎன் உட(ல்)இடம் கொண்டாய்
இனி உன்னை என்இரக் கேனே.''[1]

''காகம் உறவு கலந்(து)உண்ணக் கண்டீர்
அகண்டா காரசிவ
போக(ம்) எனும்பே ரின்ப வெள்ளம் பொங்கித்
ததும்பிப் பூரணமாய்
ஏக உருவாய்க் கிடக்கு(து), ஐயோ!
இன்புற்றிடநாம் இனிஎடுத்த
தேகம் விழுமுன், புசிப்பதற்குச்
சேர வாரும் சகத்தீரே!''[2]

''வான்வந்த சிந்தை மலம்கழுவ வந்(து)இழியும்
ஆனந்தம் காண் உடையான் ஆறு''[3]

கஜலெட்சுமி: திருக்கோயில் சுவாமி, அம்மன் கருவறை களின் நுழைவாயில்களில் நெற்றிப் பொட்டில், கஜலெட்சுமியின் தோற்றம் அழகுறச் செதுக்கப் பெற்றிருக்கும். இரண்டு யானை கள் தம் துதிக்கையில் தாமரை மலரும் அமுத நீரும் கொண்டு, திருமகளுக்கு வழிபாடு செய்வதைப் போன்ற காட்சி அமைப்பு டையது, அது.

நமது மனித உடம்பாகிய சிவாலயத்திலும், நம் தலையின் மையத்தில் பெருமூளையின் இருகூறுகளுக்கு இடையில் உள்ள மூன்றாம் நாளம் [Corpus Collosum] என்ற அமைப்பு கஜ லெட்சுமியின் தோற்றத்தையும், அதன் இரு மருங்குமுள்ள இரண்டு கார்முகிற் கூட்டங்களும் (Thalamus) இரு யானைகளின் தோற்றத்தையும், அவை பொழிகிற அமுத வெள்ளம் (CSF), யானையின் புனித குடமுழுக்கு வழிபாட்டையும் ஒப்பு நோக்கு மாறு நம்மைத் தூண்டுகின்றன.

---

1 திருவாசகம் 8:22:5   2 தாயுமானவர் பாடல்
3 திருவாசகம், திருத்தசாங்கம் 8:19:4

மூளையின் வரைபடத்தில், மூளையின் மேற்பரப்பிலும், உள் அமைப்பாகவும் உள்ள கருமுகில் கூட்டத்தையும் (Thalamus) அவற்றின் நடுவில் அமைந்திருக்கும் மூன்றாம் பிறை வடிவ மூளை இணைப்பானையும் (Corpus Collosum) இணைத்து நோக்கினால், அங்குக் கஜலெட்சுமியின் திருவுருவம் நம் மனக்கண்முன் தெளிவாகத் தோன்றி நிற்கும்.

ஆன்மார்த்த சிவபூசை செய்வோர், நண்பகல் அனுட்டானத்தின் போது, நம் முகத்தின் புருவ நடுவில் கஜலெட்சுமி என்ற வைணவியை அதிதேவதையாகச் சிந்திக்கின்றனர். அப்போது கரிய புருவங்கள் இரண்டும் கரிய யானைகளாகவும், திலகமிடுகிற மையப்பகுதி திருமகளாகவும் விளங்கி நிற்கும். சிவதியானத்தின் போது, கண்களின் நோக்குக் குவிந்து, புருவநடுவில் நிலை கொள்ளும். அதனால் எண்ணச் சிதறல்கள் தவிர்க்கப் பெற்றுச் சிந்தனை ஒரு முகமாகச் சிவ தியானத்தில் ஒன்றி நிற்கும். கால அடைவிலே சித்தத்தினுள்ளே சிவலிங்கக் காட்சி சித்திக்கும்.

பொற்காலம்: ஓரறிவுப் பொருள்களாகிய மரம், காய், கனிகளிலும் அறிவற்ற சடமாகிய மலை, கடல் முதலியவற்றிலுங் கூடச் சிவலிங்கத்தைக் கண்டு இன்புற்ற சான்றோர் பலர் நம் தமிழகத்தில் வாழ்ந்த காலம் ஒன்று இருந்தது. அதுவே தமிழகத்தின் பொற்காலம் எனலாம். வேப்பமரம், அதன் காய், பழம், கொட்டை இலை ஒவ்வொன்றிலும் சிவலிங்கத்தைக் கண்டான் வரகுண பாண்டியன் என்னும் பேரரசன்; அந்த 'வேம்புகட்கெல்லாம் விதானமும் அமைத்தான். அது மட்டுமா? தான் பெரிதும் விரும்புவதையே, பரம்பொருளாகிய தன் தலைவனுக்குக் கொடுத்தல் முறை எனத் தெளிந்து, அழகிய கூந்தலுடைய தன் அன்பு மனைவியையே பெருமானிடத்துக் கொடுத்தான், அப்பாண்டிய மன்னன். இவ் அரிய வரலாற்றினைப் பட்டினத்தார்[1] வாய்மொழியால் அறிகிறோம். (ஈண்டு, 'இயற்பகை நாயனார்' பெரிய புராண வரலாறும் இணைத்து நோக்குக.)

திரிகூடராசப்பக் கவிராயருக்குக் குற்றாலத்துக் குறும்பலா மரம் மட்டுமன்று; அதன் பழமும், அதனுள் சுளையும், அதனுள்

1 பதினோராந்திருமுறை - திருவிடைமருதூர் - மும்மணிக்கோவை - 28

கொட்டையும், பழத்தின் மேலுள்ள எண்ணற்ற முட்களுங்கூடச் சிவமாகவே காட்சி அளித்தன.[2]

இவ்வாறு எங்கும் இறைவனைக் கண்டு இன்புற்ற பெரியவர்கள், ஆறறிவுப் பொருளாகிய தம்மையும் சிவலோக நெறியில் நிறுத்தித் தம்முள்ளும் சிவபரத்தைக் கண்டு வழிபட்டு உயர்ந்தனர்; சமுதாயத்தையும் உயர்வித்தனர்; அனைத்து உயிர்களும் தத்தம் வாழ்வினை வாழ்ந்து, இறுதியிலே, முடிந்த முடிவான உண்மை அறிவானந்தத்தில் திளைப்பதற்கு உறுதுணையாயினர். அவர்களுடைய நோக்கிலே, நமது மொத்த மனித உடம்புமே சிவலிங்கம். அதுவேயன்றி, நமது தலை, இருதயம், இரத்த அணுக்கள். விரல்கள், நீரகங்கள் முதலிய ஒவ்வோர் உறுப்பும் தனித்தனியே சிவலிங்கமாம். எனவே அவர்களுடைய உயர்ந்த சைவநெறி நமக்கு நல்லதொரு வழிகாட்டி ஆகும்.

நிறைவு: இதுகாறும் கண்ட ஒப்பியல் செய்திகளிலிருந்து நாம் அறிந்து பயன்பெறத் தக்க உண்மைகளைத் தொகுத்து நோக்குவோம்.

நமது இந்த மனிதஉடல், பயனற்ற ஒரு வெற்றுக்கூடு அன்று; இஃது ஓர் அழகான சிவாலயம். அன்பு உள்ளமே, இறைவன் வீற்றிருந்தருளும் கருவறை. உயிரே சிவலிங்கத் திருமேனி. ஐந்து கோசங்களும் ஐந்து பிரகாரங்கள். பொறிபுலன்கள் அனைத்தும், வழிபாட்டிற்கான துணைக்கருவிகள். அங்கங்கள் பலவும் தங்க விக்கிரகங்கள், முதுகுத் தண்டும், மூளையின் மூன்று கூறுகளும் இவற்றின் இணைப்புமே கொடிக்கம்பம். மூளைச் சுருளே அறவிடைக்கொடி. சுருண்டு அம்பலாய்க் கூம்பிக் கிடப்பதைத் தியானத்தால் சற்றே அலரச்செய்து, போது ஆக்குதலே கொடி ஏற்றம்,

கோடானுகோடி செங்குருதி, வெண்குருதி அனுக்களே அலங்கார தீபம். இதயத்தின் துடிப்பே, இறைவனது ஐந்தொழில் நடனம். இவையே யன்றி, ஒவ்வோர் உறுப்பும், சூழலுக்கு ஏற்ப வெவ்வேறு இறை வடிவங்களைப் பெறுகின்றது என்பதும் அறியற்பாலது

---

2 குற்றாலக் குறவஞ்சி - திரிகூடராசப்பக் கவிராயர்.

ஒரு நிலையில் ஆதிசத்தியாகவும், மற்றொரு நிலையில் முருகப் பெருமானாகவும் பிறிதொரு நிலையில் கந்த வேளின் தண்டாயுதமாகவும், இன்னும் ஒரு சிந்தனையில் திருக்கோயிற் கொடிக் கம்பமாகவும் மற்றொரு நோக்கில் வான் முட்டிய சிவதாணுவாக (நெருப்புப் பிழம்பாக)வும் மேரு நடு நாடியாகவும், அனைய பிறவாகவும், நமது முதுகுத் தண்டு விளங்கி நிற்கக் காணுகிறோம். இவ்வாறு ஏராளமான உடற் கூற்றுச் செய்திகளைச் சைவக் கோட்பாடுகளோடு இணைத்துச் சிந்தித்தோம்.

அருளாளர்கள் சிவபோக நெறி நின்றனர். ஆண்டவனைத் தம் உடலிலும் உள்ளத்திலும் கண்டு இன்புற்றனர். 'யாம் பெற்ற இன்பம், பெறுக இவ்வையகம்' என்ற உயர்ந்த நோக்குடையவர்கள், அவர்கள், எனவே தாம் கண்டு இன்புற்ற வற்றை நமக்குத் தெளிவாக உணர்த்த விரும்பினர். அதற் காகவே தாம் அரிதிற்கண்ட நுண்ணிய அகக்காட்சிகளுக்குப் பருமையான புறவடிவம் கொடுத்துச் சிற்பங்களாகவும், சித்திரங் களாகவும், வானளாவிய கோயில்களாகவும், வடிவமைத்துத் தந்தனர். இவை அவ்வருளாளர் நமக்கு ஈந்து உவத்த அருட் கொடையெனில் மிகையாகாது. இவற்றை இவ்வாறு ஆக்கித் தந்த ஆன்றோர்க்கு நன்றி செய்தல் கடன். இறைமை உணர்வும், இடையறா இறை வழிபாடுமே இவர்களுக்கு நாம் செய்யும் நன்றிக் கடனாகும.

எனவே, நல்லதோர் இன்பச் செய்யுளாக நமக்கு அருளப் பெற்ற இந்த மனித உடம்பைக் கொண்டு நாளும் வழிபாடு இயற்றி உய்வோமாக!

8. மனித உடம்பு - ஓர் இன்பச் செய்யுள்

(செயப்படு பொருள்)

கருணைமிக்கவர் கடவுள். அவருடைய கருணை அளப்பரிது. உயிர்களாகிய நம்மை உய்வித்துப் பேரின்பத்தில் நிலை நிறுத்த வேண்டும் என்பதே அவர் விருப்பம். ஆனால், ஆண்டவன் என்ற அப்பரம் பொருளின் கருணையை, ஆன்மாக்களாகிய நாம் அறியவில்லை. அறிவதற்குத் தடையாக, நம்மைத் தளையிட்டு வலிதே பிணித்து நிற்பன, ஆணவம், கன்மம் என்ற மலங்கள். ஆண்டவனையும் ஆன்மாக்களையும் போன்றே, ஆணவாதி மலங்களும் ஆதி அந்தமில்லாத அநாதி காலத்தவை. எனவே தடைகளை நீக்கிப் பேரின்பத்தை உயிர்களாகிய நாம் நுகருமாறு செய்வது யாங்ஙனம்!

இருள் உடம்பு: உயிர், ஒரு காலத்தில் ஆணவ இருளையே முழுமையாகச் சார்ந்து, அதனையே தனக்கு ஓர் உடம்பாகக் கொண்டு திரிந்தது. அதனைக் **'கேவல நிலை'** **(தனி நிலை)** என ஞானநூல்கள் கூறும்.

மருள் உடம்பு: ஆணவத்தின் கொடிய தளைகளை நீக்கி, உயிரைப் பேரின்பத்தில் நிலைபெறச் செய்யத் திருவுளம் கொண்டார் இறைவன். எனவே ஓர் இடைக்கால நிவாரணமாகத் தமது வைப்பு சத்தியாகிய மாயையிலிருந்தே, மாயா உடம்பு, மாயா உலகம் முதலியவற்றைக் கொடுத்தருளினார். இப்பொழுது நாம் வாழுகிற, மாயா உடம்பொடு கூடிய, இந்த நிலைக்குச் **சகல நிலை** என்பது பெயர்.

அருள் உடம்பு: இறையருளால், மும்மலங்களும் முழுமையாக நீங்கி முத்திப்பேறு எய்துகிற உயிர், சிவசத்தியாகிய திருவருளையே தனக்கு உடம்பாகப் பெறுகிறது. இது **சுத்த நிலை** **(அருள்நிலை)** எனப்படும்.

சுருங்கக் கூறின், நமக்கு, **கேவலத்தில்** - மலமே உடம்பாக அமைந்தது. **சகலத்தில்** - சிவபெருமானது பரிக்கிரக ஆற்றலாகிய மாயையே உடம்பு ஆயிற்று. **சுத்தத்தில்** - சிவபெருமானது வனப்பு ஆற்றலாகிய திருவருட்சத்தியே உடம்பு ஆகிறது.

இவ்வாறு மலங்களால் நாற்றம் பிடித்த நம்மை அவற்றிலிருந்து மீட்டுத், தூய்மை செய்து பேரின்பம் நல்குதற்காகத், தம்முடைய மாயா ஆற்றலையும் அருளாற்றலையுமே நமக்கு உடம்பாகத் தந்தருளுகிற சிவபெருமானது பெருங்கருணைத் திறத்தினை எவ்வாறு போற்றுவது? இப்பொழுது நாம் இங்குச் சிந்திக்க இருப்பது, இடைப்பட்டதாகிய மாயா உடம்பைப் பற்றியதாகும்.

பயிற்சிக் களம்: எந்த ஒரு செயலுக்கும் முறையானதொரு பயிற்சி மிகவும் இன்றியமையாதது அன்றோ? பயிற்சியாளரின் திறமையோடு, பயில்வோனின் ஈடுபாடும். அத்தோடு பயிற்சிக்கு ஏற்ற களம், காலம், கருவிகளும் வெற்றிக்கு வழிகோலுவன.

பரசிவம் என்ற பயிற்சியாளர், பயில்வோராகிய நமக்கு அனுபவ வழி அறிவூட்டுவதற்காக, அமைத்துத் தந்த நல்லதொரு களமே, நமது இந்த மாயா உடம்பு. இதன் அமைப்பையும், வனப்பையும், உழைப்பையும் உயர்வையும் முறையாகச் சிந்திப்போம். எலும்பு, தசை முதலியவற்றை நரம்புகளால் பிணித்துத் தோல் என்னும் போர்வையால் மூடி, அழகுறச் செய்யப்பெற்ற ஒரு செய்யுளே, இன்றைய நமது இந்த மனித உடம்பு. இது, 96-தத்துவ மூலக்கூறுகளால் செவ்விதே வடிவமைக்கப் பெற்றுள்ளது.

உயிர் என்பது கண்ணுக்குப் புலப்படாத ஒரு நுண்பொருள். உடம்பு என்பது கண்ணுக்குப் புலனாகிற ஒரு பருப்பொருள் நுண்ணிய உயிரின் செயற்பாட்டிற்கும், இன்ப துன்ப நுகர்ச்சிக்கும், அறிவுப் பெருக்கத்துக்கும், பருமை உடம்பு ஒரு நிலைக்களனாகிறது.

செய்யப்படுவது செய்யுள்: எனவே நம் உடம்பும், ஒரு செயப்படு பொருளாயிற்று. அவ்வாறாயின் இதனைச் செய்தவர் யாவர்? எதனால் செய்தார்? எதற்காகச் செய்தார்? எவ்வாறு

செய்தார்? இது யாருக்கு உடைமை? என்பன போன்ற வேறு பட்ட பல வினாக்கள் எழுகின்றன அன்றோ? அவற்றிற்கான விடைகளை ஒவ்வொன்றாகச் சிந்திப்போம்.

சிவபெருமான் என்ற கர்த்தரே, நமது இந்த உடம்பினை ஆக்கித் தந்தவர்; அவர், தனது சிற்சத்தியைத் தொழிற்பாட்டுத் துணையாகவும், உயிர்களாகிய நமது ஊழ்வினைத் தொகுதியை ஆதாரத் துணையாகவும் கொண்டு, நமது வினை நுகர்ச்சிக்கு ஏற்றவாறு உடம்பினைப் படைத்தார்.

சிவபெருமானது விருப்பத்தையே, ஆணை எனக்கொண்டு இயங்குதலால் சிற்சத்திக்கு 'ஆணை' என்பது ஒரு பரியாயப் பெயராகும். அதே போல், பசுக்களாகிய உயிர்கள் உட்கொண்ட புல் தண்ணீர் முதலியவற்றின் விளைவே பால்; ஆதலால் நமது வினைப் பயனுக்குப் பால் என்பது ஒரு பரியாயப் பெயராயிற்று. எனவே, சிவபேருமான் நமது இந்த உடம்பைப் பாலது ஆணை யாலே[1] படைத்தருளினார் என நம் பண்டைய தமிழ்ச்சான் றோர் கருதினர்.

இனி எதற்காகச் சிவபெருமான் படைத்தார் என்பது பற்றிச் சிந்திப்போம். அதற்கு முன்னோட்டமாகச், சைவ சித்தாந்தம் அறுதியிட்டுக் கூறுகிற முப்பொருள்களின் திறன் பற்றி நோக்கு தல் இன்றியமையாததாகும்.

முப்பொருள் திறன்: இறை, உயிர், தளை என்பன மூன்றும் எக்காலத்தும் நிலையாக உள்ள பொருள்கள். இவற்றைப் பதி, பசு, பாசம் எனப் பகர்வர். இறையாகிய பரசிவம், முழுமையான அறிவும் நிலையான பேரின்பமுமே வடிவமாகக் கொண்டவர். அவருடைய இவ்வடிவத்தைச் சச்சிதானந்தம் எனக் கூறுவர். (சத்சித் ஆனந்தம்=நிலையானது, அறிவு மயமானது, இன்ப மானது) உயிர்களாகிய நாமும் அறிவுடையோம். ஆனால் நமது அறிவு சிற்றறிவு. வேறொருவர் நமக்கு அறிவினைப் புகட்டினால் மட்டுமே, அறிந்து கொள்ளுகிற இயல்புடைய குறை அறிவு. தளை எனப்படும் மலங்களோ, அறிவே இல்லாத சடப்பொருள்

1 ஒன்றே வேறே . . .
பாலது ஆணையாலே' - தொல். களவியல் 2

ஆயினும் அறிவுப் பொருள்களாகிய நம்மை இயல்பாகவே பிணித்து, நம் சிற்றறிவினையும் முடக்கிச், செயல் திறனையும் ஒடுக்கி, நம்மை ஆண்டாண்டு காலமாகக் கொத்தடிமையாக வைத்திருப்பன.

மாசே வடிவானவை மலங்கள்; தேசுடைய இறைஇன்பத்தை நாம் நுகர முடியாதவாறு, வலிய தடைகளாயிருப்பன; தீமை பயப்பன; துன்பம் தருவன. அவற்றிலிருந்து நாம் விடுபடுதல் வேண்டும். துன்பக்கலப்பில்லாத நிலையான இன்பத்தைப் பெறுதல் வேண்டும். இவை போன்ற உணர்வுகள் நமக்கு நிகழ வேண்டுமானால், நாம் செவ்விய முறையிலே அறிவு விளக்கம் பெற வேண்டும். அறிவு விளக்கத்துக்கு அனுபவம் இன்றியமையாத ஒன்று. அனுபவம் பெறுதற்குப் பொறி புலன்கள் வேண்டும். அதனால் தான், இறைவன் நமக்கு உடம்புகளையும் உணர்ச்சிகளையும் அருளினார்.

மூலமலமும் மூலப்பொருளும்: ஆணவமலமே[1] உடம்பு என்றவாறு, உயிர் அவ்வாணவத்துள் கட்டுண்டு வாடும் போது, கருணையே வடிவான கடவுள், அறிவுமுடங்கிக் கிடக்கும் உயிர்களாகிய நமது அவலத்தைக் காணுகிறார். கொடிய அத்தளைகளை நீக்கி, இனிய தம் பேரின்பத்துள் நம்மையும் சேர்த்துக் கொள்ளத் தண்ணளி புரிகிறார். அதன் விளைவு, அவருடைய பரிக்கிரக சத்தி (Potential Energy) யாகிய சட ஆற்றலிலிருந்து நமக்கு ஒரு சட உடம்பு கிடைக்கிறது. சிவபெருமானது சட ஆற்றலுக்கு மாயை என்பது பெயர். இது காறும் ஆணவ உடம்போடு பேயாட்டம் ஆடிய உயிர், இப்பொழுது மாயா உடம்போடு நாயோட்டத்துக்குத் தயாராகிறது. இது படிமுறையில் வளர்ந்து எவ்வாறு தேரோட்டமாகத் திகழ்கிறது என்பதைக் காண்போம்.

---

1 உயிருக்குக் கேவலத்தில் (அதாவது, கட்டுக் காலத்தில்) ஆணவமே உடம்பு, உயிருக்குச் சகலத்தில் (அதாவது, வினை நுகர் காலத்தில்) மாயையே உடம்பு, சுத்தத்தில் (முத்திக்காலத்தில்), சிவசத்தியே உடம்பு எனச் சைவ சாத்திரங்கள் தெளிவுறுத்துகின்றன.

முந்திய பிறப்புக்கள்: ஆணவ மலப் பிணிப்பின் வன்மை மென்மைக்கு ஏற்ப, உயிர்களாகிய நமது அறிவும், பலவாறாக வேறுபட்டுக் கிடக்கிறது. எனவே, இறைவன் நமக்கு அறிவு விளக்கம் தருகிற முறையும் பலதரத்ததாகிறது. அறிவு முடங்கிக் கிடந்த அவலத்திலிருந்து சற்றே தெளிந்து, ஓரளவு அறிவு பெற்றாலும், அசைய முடியாத நிலையில் புல் பூண்டு போன்ற உடம்புகளைத் தந்த இறைவன், 'படிமுறையில் இரண்டு, மூன்று நான்கு, ஐந்து என நாம் அறிவு விளக்கத்தில் ஏற்றம் பெறும் போது, முறையே நத்தை, சங்கு, எறும்பு, வண்டு, பாம்பு போன்ற, அந்த அந்த அறிவுக்கேற்ற உடம்பினை[2] அருளு கிறார்.

மனித உடம்பு: அவற்றின் வளர்ந்து, ஆறாவதாகிய மனம் என்ற அறிவுக் கதவு திறக்கப்படும் போது, நமக்கு இந்த மனித உடம்பினை அருளி, ஒரு நெறி முறையில் செலுத்துகிறார். ஒவ்வொரு வினைக்கும், ஏற்ற ஒரு பயன் உண்டு என்பது அறிவியலும் ஏற்கும் உண்மை. ("Every action has an equal and opposite reaction"—Newton's Law of Motion).

உயிர், எக்காலத்திலும் நிலையாக உள்ளதொரு பொருள். உடலோ, ஒரு குறிப்பிட்ட கால எல்லையில் அழியக் கூடியது, அன்புடைய ஓர் அன்னை, தன் குழந்தையின் உடம்புக்கு ஒவ்வொரு பருவ காலத்திற்கும் ஏற்றவாறு ஆடை அணி விக்கிறாள் அல்லவா? அதே போலக் கருணையுள்ள நம் இறை வனும், தமது குழந்தைகளாகிய நமக்கு (உயிருக்கு), ஒவ்வொரு பிறவியிலும், நம்முடைய அறிவுத்திறன், வினைப்பயன் இவற்றிற்கு ஏற்ப வெவ்வேறு உடம்புகளை மாற்றித்தந்து

---

2. "ஒன்[று]அறி[வு] அதுவே உற்றறிவதுவே [புல்லும், மரனும்]
இரண்[டு] அறி]வு] அதுவே அதனொடு நாவே [நந்தும், முரளும்]
மூன்[று]அறி[வு] அதுவே அவற்றொடு மூக்கே [சிதலும். எறும்பும்;
நான்[கு]அறி(வு) அதுவே அவற்றொடு கண்ணே (நண்டும், தும்பியும்)
ஐத்(து)அறி[வு] அதுவே அவற்றொடு செவியே [மாவும், புள்ளும்!
ஆ[று] அறி(வு) அறுவே அவற்றொடு மனனே (மக்கள், தேவர், அசுரர்)
நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத் தினரே"

-தொல்-பொருள். மரபியல் 571 - 577

அருள்பாலிக்கிறார், ஆனால், அவர் தந்த இந்த உடம்போ நிலையற்றதாயிருக்கிறது; இறுக்கும் துணை நிற்கிறது; மேலும், நம்மை மயக்கவும் செய்கிறது. நிலையான உயிருக்கு, இவ்வாறு நிலையற்றதாகிய ஓர் உடலை, ஏன் இறைவன் ஆதாரமாகத் தருகிறார்? என்பது பலரது ஐயம்; எவ்வாறு படைத்தார்? என்பது வேறு சிலரது வினா. உடம்புக்கும் உயிருக்கும் உள்ளதொடர்பு களைச் சீராகச் சிந்தித்தால், இது பற்றிய பல உண்மைகள் தெளிவாகும்.

1 மல உடம்பும் மாயா உடம்பும்: நமது அறிவை முடக்கி மயக்கி நின்ற ஆணவ உடம்புக்கு ஓர் இடைக்கால மாற்றாகவே இந்த மாயா உடம்பினைச் சிவபெருமான் நமக்கு அருளினார். இருளில் துணையாகும் விளக்குப் போன்றதே இந்த உடம்பும் ஆணவம் என்னும் இருள் மலம், அறிவைப் பெரிதும் முடக்கியது. ஆனால் மாயாமலம் அறிவுக்குச் சிறிது சிறிதாக விளக்கம் தருகிறது. அதனால் ஓரறிவிலிருந்து சிறிது சிறிதாக வளர்ந்து ஆறாவது அறிவாகிய மனத்தைப் பெற்று, நாம் மனித ரானோம்.

எவ்வாறு நாம் மனிதரானோம் என்று சிந்தித்துப் பார்ப்பதும் ஒரு சுவையான செய்தியே. மனிதனாகும் தகுதியுடைய ஆறறிவு உயிருக்கு, மனித உடம்பை அருளுகிறார், சிவபெருமான். அவர் அவ்வாறு வகுத்து அருளும் நெறிமுறைப்படி பிரமன் உடம்பை வடிவமைக்கிறான்.

வினையும் பயனும்: முந்திய இவ்வொவ்வொரு நிலையிலும் நாம் முனைப்பொடு பல செயல்களைச் செய்துள்ளோம். செயல், வினை, கருமம், கன்மம் தொழில் என்பன. ஒரே பொருளைக் குறிப்பன; ஒரு பொருள் பன்மொழி என்பர்.

உயிர் இந்தப் பிறவியில் நுகர்ந்து கழிக்க வேண்டிய வினைக்குப் பிராரத்தம் என்று பெயர். அதனையே 'தலை விதி' என்று கூறுவர். அதனைக் கால நியதிப்படி உயிர் நுகர்ந்து கழிக்க வேண்டும். அதனை ஒரு 'படிஓலை'யிட்டுக் காரிய பிரமனிடம் கொடுத்து, அவ்வினை நுகர்ச்சிக்கு ஏற்ற

தொரு வலிய மெலிய உடம்பினை அவ்வுயிருக்கு உருவாக்கும் படி சிவபெருமான் ஆணையிடுவார். பிரமன் அந்நிலப் பகுதியின் அணுஅளவு மண்ணைக் கொண்டு, வினைப் பயன் நுகர்ச்சிக்கு ஏற்ற ஓர் உடம்பினை உருவாக்கி, அதன் தலைப்பகுதியில் அவ்வுயிரையும், அது வினைக்கு ஏற்ப நுகர்ந்து கழிக்க வேண்டிய இன்பதுன்பப் பதிவேட்டையும் பொருத்தி, உணவு, காற்று, நீர் முதலியன வாயிலாகத் தக்கதொரு தந்தையின் விந்துவுள் சேர்ப்பன்.

உயிர்கள் ஈட்டிய வினைகளின் மூலஏடு சிவபெருமானிடம் இருக்கும்; மூல ஏட்டின் படிகள் அந்த அந்த உயிர் ஏற்கிற உடம்பின் முன்தலைப் பகுதியிலும் விண்கோள்களிலும் பொருத்தப் பெறும். பல பிறவிகளிலும் ஈட்டிய வினைகளின் தொகுதிக்குச் சஞ்சிதம் என்று பெயர். சஞ்சித வினைத் தொகுதியிலிருந்து இந்தப் பிறவியில், நாம் நுகர்ந்து தொலைத்தற்காக ஏற்றுக் கொண்ட வினையை ஏன்ற வினை என்றும் பிராரத்த வினை என்றும் அழைப்பர்.

2) **பிராரத்த வினை அனுபவம்:** வினைகள் அனைத்துக்கும் பயன் உண்டு. வினைகள் முதிர்ந்து உரிய காலத்திலேயே பயனைத் தரும். நல்வினைகள் புண்ணியமாகி இன்பமான பயனைக் கொண்டுவரும். தீவினைகள் பாவமாகித் துன்பமான பயனைத் தரும். பயனை நுகர்ந்தாலன்றி வினை தொலையாது. இன்ப துன்பப் பயன்களை அந்த அந்த வினையினைச் செய்தவனே நுகர்ந்து தொலைக்க வேண்டும் என்பது நியதி.

எனவே அத்தகைய வினை நுகர்ச்சிக்கு, ஏற்றதோர் உடம்பும் நுகர்தற்கான கருவி கரணங்களும், வினைப்பயனை ஊட்டுவதற்கான ஓர் உலகமும், நுகர்பொருள்களும், சூழலும் தேவையன்றோ?

செக்கிழுத்தல், சம்மட்டி அடித்தல் முதலிய கடுந்தொழில் செய்வது சிலருக்கு ஏன்ற வினையாகிறது. பூத்தொடுத்தல், புத்தகம் எழுதுதல் முதலிய மென்தொழில் செய்வது வேறு

சிலருக்கு நுகர்வினையாகிறது. கடுந்தொழிலாளனுக்கு மெலிய பூஞ்சை உடம்பைக் கொடுக்கவோ, மென் தொழிலாளனுக்கு வலிய பேருடம்பைக் கொடுக்கவோ சிவபெருமானால் முடியும். எனினும் அவர் அவ்வாறு செய்வதில்லை என்னை எனில், மாறுபட்ட உடம்புகள் அவர்களுடைய வினைநுகர்ச்சிக்குப் பயன் தாராததோடு, பிறன் மனைகவர்ந்த இராவணனைப் போன்று, தன் வலி கருதிய தீவினைக்கும் அவர்களை ஆட்படுத்தி, ஆகாமிய வினைக்கும் வழிகோலலாமன்றோ? எனவே, அவரவர் வினைப்பயன் நுகர்ச்சிக்கு ஏற்ப, வலிய/மெலிய உடம்பினைச் சிவபெருமான் அருளுகிறார். இது அவரது அளப்பரிய கருணையின் வெளிப்பாடு.

3) **நல்லன தீயன உணர்தல்:** நமக்கு இவ்வாறு ஓர் உடம்பினைத் தந்த இறைவன், நம்மை ஒரு தனிமனிதனாகப் படைக்காமல், சுற்றம் என்றும், நட்பு என்றும், சூழல் என்றும் பலதரப்பட்ட பிற உறவுகளையும் ஆக்கித் தந்தார். திக்குத் தெரியாத அவ்வுறவுக் காட்டில், சிலர் நரியாகவும், சிலர் புலியாகவும் இருப்பதைக் காணுகிறோம். சிங்கங்களையும் சிறுத்தைகளையும் மனிதவடிவில் சந்திக்கிறோம். பசுக்களும் பலவாக உலவி வரக் காணுகிறோம். மனிதர்களையும், மனிதருள் மாணிக்கங்களையும், தெய்வத் திருவுடையாரையும் பார்த்து மகிழ்கிறோம்.

இவர்களுடைய தொடர்பின் மூலம், நல்லன எவை, கெட்டன எவை என அனுபவ வழியாக அறிந்து, சிந்தித்துத் தெளிந்து, நல்லனவற்றை உவந்து பற்றியும், அல்லனவற்றை அறவே ஒதுக்கியும், வாழ்ந்து முன்னேற விரும்புகிறோம். அனுபவ அறிவு முதிர முதிர, ஆணவத்தின் கேடுகளை உணர்ந்து ஒதுக்க விழைகிறோம். நிலையான அறிவானந்தமாகிய பரசிவத்தின் திருவடிப் பேற்றினையே நாடுகிறோம் இத்தகைய அனுபவத்தைப் பெறுவதற்கும் உடம்பு தேவையாகிறது.

4) **விடியும் வரை விளக்கு:** இரவு நேரம்; இருள் சூழ்ந்து கிடக்கிறது; ஒன்றும் புலப்படவில்லை; அப்போது ஒரு சிறிய விளக்கு ஒளி தந்து துணை நிற்கிறது. ஆயினும் சூரியனின் ஒளி தோன்று

கின்ற விடிகாலைப் பொழுது வரைதான், அந்த விளக்கொளி பயன்படும். அதே போன்றதுதான் உடம்பும். ஆணவம் என்பது ஒரு காரிருள். அது நம் சிற்றறிவை முடக்கி, நம்மைக் கீழ்நிலை அவலத்தில் அழுத்திக் கொண்டிருக்கிறது. சிவசூரியன் என்பது ஞானப் பேரொளி. அதுவே நிலையான பேரின்பத்தை நல்க வல்லது பேரின்பமயமாகிய அப்பேரொளி தோன்றுகிறவரை, நமக்கு அறிவு விளக்கம்தர, ஒருசிறு விளக்கேனும் வேண்டு மன்றோ? அத்தகைய விளக்காக இடைக்கால ஒளிதரு கருவி யாகச், சிவபெருமான் நமக்கு அருளியதே இந்த மாயா உடம்பு.

மலம் நீங்கி, இறையருள் கூடும்வரைதான், உடம்புகளும் உணர்ச்சிகளும் தேவை. பகலில் விளக்கொளி தேவையில்லை யன்றோ? அதேபோல் இறை இன்பத்தில் திளைக்கும் போது, மாயா உடம்பினால் பயனில்லை. சிவபெருமானது திருவருட் சத்தியே அப்போது உயிருக்கு உடம்பாகிறாள்.

5) **நிலையாமை உணர்தல்:** மாயை என்பது நிலையான பொருள்களுள் ஒன்று. ஆனால் அதன் காரிய வெளிப்பாடாகிய உடல், உலகம் முதலியன, ஒரு கால எல்லைக்கு உட்பட்டு வாழுபவை. இவ்வுண்மையை நாம் ஆழ்ந்த அனுபவத்தின் மூலமே புரிந்து கொள்ள முடியும். அவ்வாறு நாம் புரிந்து கொள்ளுவதற்கு, இந்த உடம்பு முதலிய நிலையற்ற பொருள் களே அனுபவத் துணையாகின்றன.

உடம்பினைப் போன்றே உலகம், கருவிகள் நுகர்பொருள்கள் அனைத்தும் இடைக்கால உதவியாக வந்து நிலையற்ற பொருள் களே என்பதைக் 'காஞ்சித்திணை'[1] மூலம், பண்டைத் தமிழர்கள் பறைசாற்றி அறிவுறுத்தினர்.

6) **கூடும் குஞ்சும்:** உயிர்களாகிய நாம் அறிவுப் பொருள்கள் உடம்பு, உலகம் முதலியன அறிவற்ற சடப்பொருள்கள். எனவே இவை இரண்டும் வேறு வேறானவை. ஒருகால எல்லைக்குள் மட்டுமே இணைந்து வாழ்பவை. ஒரு முட்டையின் கூட்டினை உடைத்துக்கொண்டு வெளிப்படுகிற குஞ்சினைப் போன்று, வாழ் வின் கால எல்லையிலே, உயிரும் உடம்பும் பிரிகின்றன.

1 தொல்காப்பியம் - பொருளதிகாரம் - புறத்திணையியல்.

உயிரின் உள் ஆற்றல்: உள்நின்ற ஒரே ஒரு உயிர்தான் உடம்பினை வாழ்நாள் முழுவதும் மிகமிக எளிதாகத் தூக்கித் திரிந்தது; ஆனால் உயிர் பிரிந்தபோது இந்த உடம்பு நான்கு ஐந்து உயிர்கள் (மனிதர்கள்) புறத்திருந்து தூக்கினாலும், தூக்க முடியாத பளுவுடையதாகிறது அன்றோ? இதிலிருந்து நாம் அறிவது என்ன? உடம்பாயினும், உயிராயினும் புறத்தே அதற்கு அமைகிற துணையை விட, அகத்தே அமைகிற துணையே பேராற்றல் மிக்கது; எனவே நாம் ஒவ்வொருவரும், நமது அகத்தை எக்காலத்தும் இறைவனது உறைவிடமாகக் கொண்டு உள் ஆற்றலைப் பெருக்கிக் கொள்ளுதல் வேண்டும் என்பது உறுதியாக அறியற்பாலது.

7) **குஞ்சும் கோழியும்:** நாம் எல்லோரும் அறிவுப் பொருள்கள். நம்மைப் பிணித்துள்ள ஆணவ, கன்ம மலங்களோ அறிவற்றன. அவ்வாறிருந்தும் அவற்றால் பிணிப்புண்ட அவலத்தைப் புரிந்து கொள்ளும் அறிவோ, நம்மை நாமே அவ்அவலத்திலிருந்து விடுவித்துக் கொள்ளும் ஆற்றலோ, தற்காத்துக் கொள்ளும திறனோ நமக்கு இல்லை. நம்முடைய அறிவும், திறனும் மிக மிகச் சிறியன. பருந்திடமிருந்து குஞ்சினைக்காக்கும் தாய்க் கோழியைப் போல, மும்மலக் கட்டிலிருந்து நம்மைக் காக்க வல்லவர் சிவபெருமான் ஒருவரே. எனவே சிற்றறிவுப் பொருளாகிய நாம, நம்மிலும் மேலான, முற்றறிவுப் பொரு ளாகிய சிவபெருமானை நாடி நிற்றலே சிறப்பு. இந்த அநுபவ அறிவு, இவ் உலகவாழ்விலேதான் தோன்றுகிறது. அதற்கு இந்த உடம்பும் துணை நிற்கிறது.

8) **வழிபாடு:** உண்பது, உறங்குவது முதலியன உலகியல் சிற்றின்பங்கள். இவை எல்லாம் நிலையற்றன; துன்பக் கலப்பு டையன; வினையாகப் பரிணமித்து, மேன்மேலும் பிறவிகளுக்கு வித்து ஆவன. எனவே இவற்றையே வாழ்வின் முடிந்த முடி வாகக் கருதிக் கொண்டு, காலத்தையும் ஆற்றலையும் வீணாக் காது, இவற்றில் ஓரளவு மனம் செலுத்துவதோடு, வேத சிவாக மங்கள் முதலிய அருள் நூல்களில் கூறியவாறு புறத்தேயும் அகத்தேயும் சிவ வழிபாடு இயற்றுதல், சிவயோக நெறி நிற்றல் முதலிய உயர்ந்த சிவப் பணிகளையும் தவறாது மேற்கொள்ளுதல் வேண்டும். இவ் உண்மைகளை உணர்வதற்கும், இறைபணி நிற்றற்கும் உடம்பே துணைக் கருவியாகிறது.

9) எண் குணத்தான்: மனம், மொழி, மெய் ஆகியயாவற்றையும் கடந்து. ஆணவத்தார்க்கு வெகு தொலைவில் இருக்கும் சிவ பெருமான், அன்புடைய மெய்யடியார்க்கு உள்ளும் புறமும் எளிவந்து தோன்றுகிறார். சிவஞானப் பேறு பெறத் தகுந்தவர் களுக்கு இந்த வாழ்விலேயே தமது எண் குணங்களையும் அருளு கிறார். 'கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே' என இவ் உயரிய ஆன்மாக்களைப் பற்றிச் சிறப்பாகக் குறிப்பிடுவார், தொல்காப்பியர். அத்தகைய சிறப்பு உடைய ஆன்மாக்கள் இந்த உடலிலேயே அப்பேற்றினையும் பெறுகின்றன.

10) உடம்பு – ஒரு சுதை வேலை: சிவபெருமானது திருவிளை யாடல்கள் பலவும் அருளாளர்களால் புராண வரலாறுகளாகக் கூறப்பட்டுள்ளன. அத்திருவிளையாடல்களுக்குச் சான்று பகரும் சுதை வேலையாக நமது உடம்பு இறைவனால் வடிவமைக்கப் பட்டுள்ளது. (எ–டு) பகீரதனுக்கு அருள் புரியச் சிவபெருமான் ஆகாய கங்கையைத் தாங்கித் தம் சடையினுள் அடக்கினார் என்பது புராணம். அதற்குச் சான்று: நம் தலையினுள் மண்டை ஓட்டை ஒட்டி ஓடுகிற (CSF என்ற) மூளைநீர் (Aqua Duct என்ற) ஒரு மடு வழியாகப் புகுந்து, மூளையின் மடிப்புகளுள் தங்குதலே, 'ஓர் உடல் வெட்டு'ச் சான்று ஆகும். ஒரு மொழியில் வல்லார்க்கே, அம்மொழிநூல்கள் தெளிவாக அறியப்படுகின்றன. அதுபோலச் சிவயோக நெறி நின்றார்க்கே, நம் உடம்பில் பொதிந்துள்ள சிவத்தின் நுண் கூறுகள், சிவபெருமான் தாமே உள் நின்று உணர்த்துதலால், சிலையில் செதுக்கப்பட்ட சிற்பங்கள் போன்று, நன்கு புலனாகும். இவ்வாறு நம் உடம் பின் ஒவ்வொரு திசுவும், ஒவ்வொரு குருதி அணுவும், இறைமைக் காவியம் படைக்க வல்ல ஏற்றம் மிக்கன.

11) சீவன் முத்த நிலை: சிவபெருமான் சச்சிதானந்த வடிவினர் எனக் கண்டோம். நிலையான அவ் அறிவானந்தத்தை அடைய விழைவதே நமக்குச் சிறப்பு எனவும் கண்டோம். அத்தகைய பேரின்பம் மறுமையில்தான் கிட்டும் என்பதன்றி, இம்மையில். இப்பூவுலகில், இந்த உடம்புடனேயே நுகர்ந்து இன்புறத் தக்கது என்பதை நாம் உரிய பயிற்சிகளின் மூலம் அனுபவ வாயிலாகத் தெளிவாக உணரலாம்.

''அந்தமில் சிறப்பின் ஆகிய இன்பம்
தன்வயின் வருதலும் வகுத்த பண்பே''

என்பார் தொல்காப்பியர். அத்தகைய பயிற்சியையும், பேரின்பத்தையும் பெறுவதற்கு, இந்த உடம்பு முதலியன இன்றியமையாத தேவையாகின்றன.

12) யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்: இவ்வாறு பல்வேறு நிலைகளிலும் உயிர்களாகிய நாம், இறைவனோடு கூடி இன்புறுகின்ற பேற்றினை, உலகில் வாழுகின்ற அனைவரும் பெற்று உய்தி பெறுதல் வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தோடு அவர்களை ஆற்றுப் படுத்துவதற்கும், நமது இந்த உடம்பு நல்லதொரு கருவியாகிறது.

''வினையின் நீங்கி விளங்கிய அறிவின்
முனைவன் கண்டது முதல்நூல் ஆகும்''

என்பார் தொல்காப்பியர்.

வினையின் நீங்கி = ('எனது விருப்பத்தால், எனது அறிவால், எனது செயல்திறனால் நான் செய்தது' என்ற, தற்போதத்தாலும் தன்முனைப்பாலும விளைகிற) வினை இருளிலிருந்து விடுபட்டு; விளங்கிய அறிவின் = (சிவபெருமான் திருக்குறிப்பாலும அவர் உள்நின்று உணர்த்திய ஞானத்தாலும், அவர் உள்நின்று இயக்கிய அருளிப்பாட்டாலுமே இஃது இவ்வாறு செய்யப்பட்டது எனும்) ஒளிமயமான, நிறைந்த மெய்யுணர்வால் தெளிவு பெற்ற; முனைவன் = கூர்த்த மதியினர், கண்டது = செய்தது, முதல் நூல் ஆகும் = தலையாய உண்மைகளைக் கூறும் முதன்மை நூல் ஆகும்.

எனவே இருள்வினை நீங்குவதற்கும், அருள் ஞானம் கூடுவதற்கும், அனுபூதிமான் ஆவதற்கும், உலகினர் உய்தியுறுமாறு, இறைமை உணர்வினை அவர்களுக்கு ஊட்டுவதற்கும் இந்த உடம்பு தேவையாகிறது.

உடம்பினால் உயிருக்கு விளைகிற அளப்பரிய நன்மைகள் பற்றிய, இதுகாறும் கூறிய, பற்பல செய்திகளையும் தொகுத்துச் சிந்திப்போம்.

1) உடம்பு மாயா சத்தியிலிருந்து உருவாக்கப்பட்டது மாயாசத்தி என்பது சிவபெருமானது பரிக்கிரக சத்தி மாயை என்பது நிலையான பொருள். ஆனால் அதிலிருந்து தோன்றிய உடல் உலகம் முதலியனவோ நிலை மாறக் கூடியன. எனவே அநாதி கால ஆணவ உடம்புக்கு, ஓர் இடைக்கால மாற்று உடம்பாகவே, நமக்கு இந்த மாயா உடம்பு அருளப் பெற்றது.

2) இதன் துணைகொண்டு, உயிர் பிராரத்த வினைகளை நுகர்ந்து கழிக்கிறது;

3) நல்லனவற்றை ஏற்றுக் கொள்ளவும், தீயனவற்றை ஒதுக்கவும், அனுபவ வாயிலாகக் கற்றுக் கொள்ளுகிறது.

4) 'மாயா உடம்பு, ஒரு காலவரையறைக்கு உட்பட்டதே என்ற உண்மையைப் புரிந்து கொள்ளுகிறது.

5) உடல் முதலியவற்றின் நிலையாமையையும், சடத் தன்மையையும் உணர்கிறது.

6) அவ்வாறு உணர்ந்து, சித்தாகிய தானும், சடமாகிய மாயா உடம்பு, மாயா உலகம் முதலியனவும் வேறு வேறு பொருள்கள் என்ற உண்மையை உணர்கிறது.

7) 'முற்றறிவுப் பொருளாகிய முழுமுதற்கடவுளே நமக்கு எய்ப்பினில் வைப்பு' என்பதை உணரத் தலைப்படுகிறது.

8) சிவ அனுட்டானம், சிவ வழிபாடு, சிவயோக நெறி என்பனவே உய்திக்கு வழி என்ற உண்மையை உணர்ந்து, ஆகம வழிப் பூசைகளை மேற்கொள்ள முற்படுகிறது.

9) தேவரும் மூவரும் அறியா முக்கட் பெருமானைத் தன் அன்பால் மிக அருகிலிருக்க உணருகிறது.

10) தனது மனித உடம்பினுள்ளேயே சிவபெருமானது வடிவம், தொழிற்பாடு, குணநலன்கள், பேரின்பமாகிய பயன்-எல்லாவற்றையும், 'கல்வெட்டுச் சான்று' போலக் கண்டு நுகர்ந்து இன்புறுகிறது.

11) சீவன் முத்த நிலையை இப்பூவுலகில், இப்பூத உடம்பிலேயே நுகர்ந்து, பேரின்பத்தில் திளைக்கிறது.

12) உலகத்து உயிரினங்கள் அனைத்தும் உய்தி அடையுமாறு, இறைமைப் பண்புகளை நூல்களின் வாயிலாகவும், சிற்ப சித்திர வடிவமைப்புகளின் மூலமும், வெளிக்கொணர்ந்து,

"ஞாலம் நின்புகழே மிகவேண்டும்தென்
ஆலவாயில் உறையும்எம் ஆதியே"

எனச் சிந்தித்து அமைதியுறுகிறது.

இத்தகைய உயர்ந்த குறிக்கோள்களுக்காகவே நிலையான உயிர்களாகிய நமக்கு, நிலையற்ற இந்த உடம்பு, உட்கருவிகள், உலகம், நுகர்பொருள்கள் என்பன ஆக்கித்தரப்பட்டன.

இந்த உடம்பு யாருக்குச் சொந்தம்? உயிர்களாகிய நாம், செல்லுகிற இடத்துக்கெல்லாம் இந்த உடம்பைத் தூக்கிச் செல்லுவதால், இதனை 'நமது உடம்பு' என்றும் 'நம் உடைமை' என்றும் கருதி மயங்குகிறோம்.

சாத்திரக் கருத்து : இந்த உடம்பு, மாயையின் 96-தத்துவ மூலக் கூறுகளால் ஆனது எனவும், மாயை என்பது சிவபெருமானது மாயா சட ஆற்றல் (பரிக்கிரக சத்தி) எனவும், அவர் தமது சித்சத்தியாகிய திரு அருள் ஆற்றலைக் கொண்டே மாயா சட ஆற்றலை விரித்து, இவ்வுடம்பு முதலியவற்றை அருளினார் எனவும் வாழ்வுக் காலத்தில் இவ்வுடம்பினுள் அவர், 'பாலில் நெய்போலக் கலந்து நிற்கிறார் எனவும், வாழ்வின் முடிவில் இவ்வுடம்பு எரிக்கப்பட்டோ, புதைக்கப்பட்டோ, மாயை என்ற தாய்மூலத்தை அடைகிறது எனவும் சைவ ஞான நூல்கள் கூறுகின்றன.

நமது கடமை: எனவே, இந்த உடம்பு எவ்வளவுதான் நம்மோடு ஒட்டிய உறவுடையது போலத் தோன்றிடினும், இது சிவபெருமானது உடைமை; இதனை நாம் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு அனுபவிக்கும் உரிமை மட்டுமே நமக்கு உண்டு; விடியும் வரை விளக்குப்போல, நம் வாழ்வுக் காலத்தில் இஃது

அனுபவமாகிய அறிவு விளக்கம் தந்து, துணை நிற்பது. சிவ பெருமான் செலுத்திய நெறியிலேயே செல்லுவது; முந்திய வினைப்பயன்களை அனுபவித்துக் கழிப்பதற்கே இவ்வாழ்வு வந்து அமைந்தது; புதிய வினைகளைச் செய்வதற்காக அன்று; எனவே நமது நிலையற்ற சிறு நலன்களைப் பெருக்கிக் கொள்ள நினையாது, இந்த மனித உடலை நமக்குத் தந்தருளிய சிவ பெருமானது அன்புக் கோயிலாக இதனைக் கருதி, இதனுள் நெஞ்சுத் தானத்தைக் கருவறை ஆக்கி, இதயத்தையே சிவ லிங்கத் திருஉருவாகச் சிந்தித்து, இடையறாது வழிபாடு இயற்றுதல், நம் தலையாய கடமை என்பன போன்ற இறை உண்மைகளை நாம் தெளிவாக உணர்தல் வேண்டும். அத்தகைய சிந்தனையே, நமக்கு உண்மையான வாழ்வியல் பயனைத் தருவதாகும்.

9. பயனியல்

''ஏதுக்க ளாலும் எடுத்த மொழியாலும் மிக்குச்
சோதிக்க வேண்டா; சுடர் விட்டு(உ)ளன் எங்கள் சோதி:
மா துக்கம் நீங்க(ல்)உறுவீர், மனம்பற்றி வாழ்மின்,
சா துக்கள் மிக்கீர்! இறையே வந்து சார்மின் களே!''[1]

''இறைவனது இருப்பினையும் இயல்பினையும் பலவாறாக மிகுதியும் ஆராய வேண்டியதில்லை. இராசதம். தாமசம், சாத்துவிகம் என்ற மூவகைக் குணங்களுள், திருந்து சாத்துவிகப் பண்பினராய் ஒன்றிய மனத்தின் உள்ளன்போடு இறைவன் திருவடியினையே சார்ந்து வாழத் தலைப்படுவீராயின், அவன் சிவஞானம் என்னும் பேரொளிப் பிழம்பாய் உங்கள் முன் தோன்றுவன் அந்த ஞான சூரியச் செங்கதிர்களின் வியாபகத்தில், உங்களை பற்றியுள்ள பிறப்பு இறப்பு என்னும் பெருந்துன்பமும், அறியாமை என்னும் காரிருளும் அறவே நீங்கும். (அப்போது அவனைக் கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து அவனது பேரின்ப வெள்ளத்துள் நிலைத்திருக்கும் உயரிய பயனை நீங்களும் பெறலாம்.'' மூவாண்டு அகவையில் திருமுலைப்பால் அருந்திச் சிவஞானத் தெளிவு பெற்ற சீர்காழிச் செம்மலின் அறிவுரை இது.

---

1 திருஞான சம்பந்தர், திருப்பாசுரம் 3:54:5

ஆன்மீகத்தாரின் ஐயம்: ''இறை உணர்வோடு சைவ சித்தாந்த சாத்திரங்களையும் தோத்திரங்களையும் அனுபவ வழி கற்றுத் தெளிந்தால், சிவஞானம் சித்திக்கும். ஆனால் நிலையற்றனவாகிய உடல், உலகம் பற்றிய பொய்ப்பொருள் தொடர்பான அறிவியலைக் கற்பதனால், பயன் என்? மெய்ப் பொருள் சிந்தனைக்கும், சைவ நெறியின் மேம்பாட்டுக்கும் அறிவியல் யாங்ஙனம் துணை நிற்கும்?'' எனச் சைவ நெறியாளர் ஒருகணம் ஐயுறுவர்.

அறிவியலாரின் ஐயம்: அவர்களைப் போன்றே, உடல் இயல் அறிஞர்களும் உளவியல் நிபுணர்களும் தத்தம் இயல்பு களுக்கு ஏற்ப, ஐயம் எழுப்புவர். அவர்கள் சமயத் தொடர் பான சிந்தனைகளின் பயன் பற்றிச் சற்றே வியந்து நோக்குவர். ''சமய உண்மைகள் சோதனைக் கூடங்களில் நிரூபிக்க முடியா தன, வெவ்வேறு வகையான அனுபவத்தை ஊட்டுவன'' என்பன போன்ற சில தடைகளையும் அவர்கள் எழுப்புவர்.

ஆன்மீக அருளாளர், அறிவியல் அறிஞர்கள் இருசாராரது கருத்துக்களுக்கும் ஓர் இணைப்புப் பாலமாக, ஒன்றற்கு ஒன்று எவ்வாறு பயனுடையது என்பதைப் பற்றிச் சிந்திப்பதால், இது 'பயனியல்' என்பதாயிற்று.

இதுகாறும் பல இயல்களிலும் வகுத்தும் விரித்தும் கூறிய பற்பல செய்திகளை, ஈண்டு நடைமுறை வாழ்வுக்குப் பயனுறு மாறு, தொகுத்தும் சுருக்கியும் கூறியமையாலும், இதனைப் பயனியல் என்பது பொருந்தும்.

அறிவியலைப் 'பகுத்தறிவின் வெளிப்பாடு' என்பர். அதே போல் அன்பின் வெளிப்பாடாகிய ஆன்மீகத்தை 'மெய்யுணர்வின் தெளிவு' என்பது பொருந்தும்.

சிந்தனைக் கருவினைச் சோதனைக் குப்பிகளில் வார்த்து உருவாக்குவது அறிவியல். ஆனால், வேதனைகளையும் சாதனை களையுமே வித்தாகக் கொண்டது ஆன்மீகம்; ஆகவே ஆன்மீகம் என்பது அவரவர் உடம்பினையும் உள்ளத்தையுமே சோதனைக் கூடங்களாகக் கொண்டு, வளர்ந்து, வளம் காணும் இயல்பினது.

வேதியல், பௌதிகம் போன்ற அறிவியல் கொள்கைகளைச் சோதனைக் கூடங்களில் ஆய்வு செய்து, பொதுவான ஒரு முடிவு காணுகிறோம். அதேபோல, இறை அனுபவங்களையும் செவ்விதே நுகர்தல் கூடும்; முதற்கண் உள்ளம் என்னும் சோதனைக் கூடத்தில் தனித் தனியே பயிலுதல் வேண்டும். அனுபவம் முறுகிய நிலையில், ஒத்த இயல்பினராகிய பிறரையும் சேர்த்துக் கொள்ளலாம்; அப்போது அவர்களுக்குள் ஒரு பொதுமையைக் காணலாம்.

அறிவியலில் பல்வேறு துறைகள் உள்ளன. ஒவ்வொருவரும் ஏதோ ஒரு துறையில்தானே சிறப்புறுகின்றனர். அதேபோன்று தான், இறை அனுபவமும், அது நால்வகை நெறியும் நன்னான்கு (16) துறைகளுமாகச் சிந்திக்கப் பெறுகிறது.

படிமுறை அறிவு வளர்ச்சி என்பது இரண்டிலுமே காணப் பெறுகிறது. ஒரேவகையான அறிவியல் சோதனைகளிலும் கூட, மூலப் பொருள்களின் தரம், குணம், கலவை விகிதம், கலக்கும் முறை, கலவைக் குப்பிகளின் தூய்மை, தட்ப வெப்பம் முதலிய பல்வேறு நிலைகளுக்கு ஏற்பச் சோதனை முடிவுகளும் வேறுபடுகின்றன அன்றோ? அதேபோல்,

முழுமுதற்பொருளாகிய பரசிவம், எவ்வித மாறுபாடுமின்றி, எக்காலத்தும் ஒரே தன்மையனாக இருந்தும், உயிர்களைப் பற்றித்துள்ள மும்மலக் கட்டின் இறுக்கத்துக்கு ஏற்ப, அவ் உயிர்களின் இறை அனுபவமும் மாறுவது இயல்பாகிறது.

அறிவியல் பயிற்சியாளர்க்கு அறிவு மட்டும் இருந்தால் போதாது, ஒன்றிய மனமும் வேண்டும். அதே போன்று, சைவ நெறியில் தலைப்பட்டார்க்கு மனம் மட்டும் இருந்தால் போதாது. அந்நெறியில் கூறப்பட்டுள்ள கருத்துக்களைச் சிந்திக்கிற அறிவும் வேண்டும். அப்போதுதான், அவர்களது இறைமைக் கொள்கை வெறும் மூடநம்பிக்கை அன்று என்ற தெளிவும், துணிவும், விடாமுயற்சியும் தோன்றும். அன்பு இல்லாத அறிவு ஒருமுடவனைப் போன்றது. அதேபோல், அறிவு இல்லாத அன்பு ஒரு குருடனை ஒத்தது.

முன்னொரு காலத்தில் இரட்டைப் புலவர்கள் என்ற பெயரில், குருட்டுப் புலவர் ஒருவர் தோளில், நொண்டிப் புலவர் ஒருவர் அமர்ந்து வழிகாட்ட, இருவருமாகத் தமிழகத்து ஊர்கள் தோறும் சென்று, தீந்தமிழ்ப் பாக்களை முன்பாதி ஒருவரும் பின்பாதி ஒருவருமாகப்பாடி, அவற்றை ஆழ்ந்த பொருள் பொதிந்த செந்தமிழ்க் கருவூலமாக்கி, உலகுக்கு வழி காட்டினர். இதற்கு வரலாற்றுச் சான்றுகள் உள்ளன. எனவே, அறிவியலும் ஆன்மீகமும் இணைந்து செயல்பட்டால், இன்றைய உலகில் நம் தமிழினம் மீண்டும் ஒரு பொற்காலத்தைப் பெற்றுத் தலை நிமிர்ந்து நிற்கும் என்பது உறுதி.

உடற்கூறு தொடர்பாக இங்கு விரித்து உருவாக்கப்பட்ட அறிவியல் மட்டுமன்றி, அறநூல்களில் கூறப்பட்ட புலனடக்கம் கொல்லாமை, அன்புடைமை முதலிய பொது அறங்களும், நாளும் நாம் செய்கின்ற புறவழிபாடுகளாகிய சிறப்பு அறங்களும் கூடச், சிவஞானத்தை உணர்தற்கான நெறி முறைகளைக் காட்டுமேயன்றி, இவையே ஞானம் ஆகா; வீடு பேறும் ஆகா.

உணவு உடலின் ஆற்றலைக் கூட்டும் என்பது உண்மையே. அஃது உண்ணப்படாது புறத்திலேயே பூசப்பட்டால் பயன் விளையுமோ? உணவு உண்ணப்பட்டு, உடலினுள் சிரணிக் கப்பட்டுக் குருதியானால்தானே ஆற்றல் பெருகும்? அதேபோல, அறிவு நூல்களும, அறநூல்களும், அருள் நூல்களும் எடுத்தியம்பு கிற பலப்பல நல்ல கருத்துக்களையும் மன விருப்பத்துடன் இடை யறாது பயின்று, ஐயந்திரிபு அறத் தெளிந்து, அச் செந்நெறியில் ஒன்றிய சிந்தையுடன் பயின்று நிற்றலே சிவஞானக் கருவூலத் திற்குத் திறவுகோல் ஆகும்.

'எந்த ஒரு பயனையும் எதிர்பார்த்துக் காரியம் செய்யாதே' என அக்காலத்துப் பெரியவர்கள் அறிவுறுத்துவர். ஆனால் இப்போழுதெல்லாம் ஒவ்வொரு செயலையும் பயன் கருதியே செய்யும் பண்புதான் பரவலாகக் காணப்படுகிறது. எனவே சைவ நூல்களைக் கற்பதாலும் சைவ நெறி நிற்பதாலும் நாம் அடைகிற பயன்கள் யாவை? என ஓரளவு சிந்திப்போம்.

உலகில் வாழுகின்ற அனைத்து உயிர்களும் விரும்புவது இன்பமே! அவ்வாறு விரும்புவதில் குற்றம் இல்லை! ஆயினும், துன்பக் கலப்பில்லாத இன்பம் என்றோ, நிறைவான இன்பம் என்றோ, நிலையான இன்பம் என்றோ, பிறர்க்கு ஊறு செய்யாத இன்பம் என்றோ ஒன்று எங்கேனும் உள்ளதோ? எனில், இவ்வுலக நடைமுறை வாழ்வில் அத்தகைய பேரின்பம் பொது வகையால் காணப் பெறவில்லை.

ஆனால் சிறப்பு வகையில் பயின்று, அகன் ஐந்திணை வழி ஒழுகினால், நிலையானதும், நிறை அறிவுமான பேரின்பத்தை (சத் சித் ஆனந்தத்தை) இந்த உலகில், இந்த உடலிலேயே நுகரமுடியும் என்பது பண்டு தொட்ட நம் தமிழ்ச் சான்றோர்களின் உறுதியான அனுபவக் கூற்று:

"அந்தமில் சிறப்பின் ஆகிய இன்பம்
தன் வயின் வருதலும் வகுத்த பண்பே" என்ற தொல்காப்பிய நூற்பா இச்சீரிய கருத்தினை அரண் செய்வதாகும்.[1]

அத்தகைய நிலையான நிறையறிவுப் பேரின்பமாயும், அதற்கு நிலைக்களனாயும் இருப்பவர் சிவபெருமான் ஒருவரே; அவரின்றி ஓரணுவும் அசையாது என்பன சைவ அருளாளர் அனுபவம். பிறவாயாக்கைப் பெரியோனாய், திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுளாய், வாலிழை பாகத்தனாய் நீலமணி மிடற்றனாய்ப், பரங்கருணைத் தடங்கடலாய் விளங்கா நிற்கும் அவரிடம் அப்பேரின்பத்தை நுகர்தல் யாங்ஙனம் எனச் சிந்திப்போம்.

இம்மை, மறுமை, அம்மை என நம் வாழ்வினை முத்திறத்ததாய்ச் சிந்திப்பது நம் சைவ மரபு. இந்த உடலோடு வாழ்கிற இப்பொழுதைய வாழ்வு 'இம்மை' எனப்படும். இந்தப் பிறப்பு நீங்கி, உயிர் தன் ஊழ்வினை நுகர்ச்சிக்கு ஏற்ப, வேறோர் உடம்பினை எடுத்துக் கொண்டு வாழ்வது, 'மறுமை' எனச் சாத்திரங்கள் கூறும்.

மும்மலங்களும் ஒடுங்கி, ஆன்மா முத்திப் பேற்றில் சிவசத்தியாகிய அம்மையையே தனக்கு உடம்பாகக் கொண்டு,

---

1 தொல். பொருள்

சிவபெருமான் திருவடியில் 'இன்புற்றிருப்பதை' 'அம்மை' என்றே அழகுற அழைத்தனர் ஆன்றோர். இறையியலும் அறிவியலும் இணைந்த கல்வி, இம்மூன்று நிலைகளிலும் எவ்வாறு பயன் தருகிறது? என்பதை நோக்குவோம்.

இயல்புகளில் ஏற்றத் தாழ்வு: ஒரே வகுப்பில் ஒரே ஆசிரியரிடம் பயிலும் பல மாணவர்களும் அவரவர் அறிவாற்றலுக்கு ஏற்பத், தேர்வில் வெவ்வேறு மதிப்பெண்களைப் பெறுகின்றனர் அன்றோ? அதே போன்று மனிதர்கள் எல்லோரும் உடல் அமைப்பால் ஒரே மாதிரியான தோற்றத்தை உடையவர்கள் என்றாலும் உள்ளப் பண்பில் பலவகையாலும் வேறுபட்டிருக்கக் காணுகிறோம். இதற்குக் காரணம் என்ன? உயிர்களாகிய நாம் சிற்றறிவினர். நம் எல்லோருக்கும் ஆசிரியர் ஒருவரே. அவரே முற்றுணர்வினராகிய சிவபெருமான்.

நமது இயல்பான சிற்றறிவையும் விளங்க வொட்டாமல் ஆணவம் என்ற மூலமலம் வலிதே பிணித்து நிற்கிறது; ஆணவத்தின் தூண்டுதலால் முன்னைப்போடு நாம் செய்கிற ஒவ்வொன்றும் (வினை என்னும்) கன்ம மலமாகிறது. இவ்விரண்டின் வேறுபட்ட அழுத்தமான பிணிப்பினால்தான், நாம் ஒவ்வொருவரும் இந்த மாயா உலக வாழ்விலே, மிகப்பெருமளவில் வேறுபாடுடையவர்களாக உலவுகிறோம்.

எனவே, ஆணவம், கன்மம், மாயை என்ற இம்மூன்று மலக் கட்டினின்றும் விடுபட்டு நீங்கிப் படிமுறையில் அறிவு விளக்கம் பெற்று, நிலையான பேரின்பத்தில் திளைத்திருத்தல் என்பது ஒன்றே மனிதர்களாகிய நாம் முடிந்த முடிவாகப் பெறவேண்டிய தலையாய பயனாகும். அதனையே நாம் சீரிய குறிக்கோளாகக் கொள்ளுதலும் வேண்டும்.

படிமுறை வளர்ச்சி: இவ்வாறு எல்லா உயிர்களுக்கும் பேரின்பம் என்பது உரியதாயினும், மனிதராய்ப் பிறந்த எல்லோரும் பிறக்கும் போதே ஞானிகளாய்ப் பிறப்பதில்லை. எனவே அவர்கள் பேரின்பத்தை எய்துமுன், நீண்டதொரு அறிவுப் பயணத்தை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. பேரின்பக் குறியீட்டை நோக்கி நாம் சிறிது சிறிதாக அவ்வாறு முன்னேறு

வதற்கு ஒரு கருவியாகவே இந்த மனித உடல் நமக்கு அருளப் பெற்றது.

ஒரு விளையாட்டு வீரன், உயரம் தாண்டுவதில் உலக சாதனை புரிகிறான் என வைத்துக் கொள்ளுவோம். அவன் பிறந்த உடனேயே அத்தகைய சாதனையையோ, புகழையோ பெறுவதில்லை. பிறந்த குழந்தை தவழ்ந்து, கவிழ்ந்து, நிமிர்ந்து, நடந்து ஒடி, விழுந்து, எழுந்து — இவ்வாறு படிமுறையில் வளர்ந்து, நிறைவெய்திய காலத்தில்தானே உலக சாதனை புரிய முடிகிறது? அதனால்தான், பள்ளிகள், கல்லூரிகள் முதலிய கல்விக் கூடங்களில் மாணவர்களது அறிவு நிலைக்கு ஏற்பக் கீழ்மேல் வகுப்புகளையும், படிமுறையில் பாடத்திட்டத்தை (Syllabus)யும் அமைக்கிறார்கள். அதே போன்று நமது ஆன்ம வளர்ச்சியிலும் ஒரு படிமுறை அறிவு வளர்ச்சி நிலவுகிறது.

மூவகை அறிவு: படிமுறை அறிவினை மூவகைப் படுத்துவர் சைவ சித்தாந்திகள். அவை உலக அறிவு, உயிர் அறிவு, இறை அறிவு என்பன. அவற்றை வடமொழியில் பாசஞானம், பசு ஞானம், பதிஞானம் எனக் கூறுவர்.

உயிர்களாகிய நாம் சடமாகிய இந்த உலகில் தங்கிச் சடமாகிய உலகப் பொருள்களைக் கருவியாகக் கொண்டு, சடமாகிய உலகத்துப் பொருள்களைப் பற்றி அறிதல், சட அறிவு (பாசஞானம்) அல்லது உலக அறிவு எனப்படும். பற்பல கலைகளும் உடலியல், உளவியல் போன்ற அறிவியலும் இதனுள் அடங்கும்.

அடுத்து, உயிர் அறிவு அல்லது பசு ஞானம் என்பது, 'நான்', 'எனது' என்னும் தற்போதத்தாலும் தன்முனைப்பாலும் உயிரின் கண் நிகழ்வது; 'நானே கடவுள்' என்ற தற்புகழ்க் கிளவிக்கு வித்து ஆவது. இது 'கலை'க்கப்பட்ட அறிவின் தெளியாத இடைநிலை ஆகும்.

முதிர்ந்த முடிவாக, நமக்குக் கிட்டுவது, இறை அறிவு அல்லது பதிஞானம் எனப்படும். இஃது, இறை அருளால், இறைமை இயல்புகள் பற்றி, நம் உயிர் அறிவின் கண் தெளிவாக நிகழ்வது.

இதனைச் சிவஞானம், பதிஞானம், மெய்யறிவு, இறையறிவு முதலிய பல பெயர்களால் அழைப்பர்.

நிகழும் இடம் : இவற்றுள் முதலில் கூறிய பாசஞானமும், பசு ஞானமும் நமது பின்தலைப் பிடரியிலுள்ள சிறு மூளையில், அறிவு நரம்புகளின்பால் நிகழ்கின்றன. மூன்றாவதாகிய பதி ஞானம், நமது உடம்பில் எங்கு நிகழ்கிறது என நோக்குவோம். அறிவுத்தானமாகிய பெருமூளை சுத்த மாயா தத்துவங்களாலானது அதன் இடக்கூறு விந்து. அங்குப், பிட்யூட்டரி என்ற பெண்மைத்தானத்தில், ஆன்மாவின் கண் பதிஞானம் தோற்றுவிக்கப் பெறுகிறது.

பீனியல்பாடி என்ற கருப்பையில், அந்தச் சிவஞானக் கரு வளர்ந்து, நாதம் என்ற வலக் கூறில் நிறைவுறுகிறது. சிவபெருமான் மாதொரு பாகனாகத் திகழ்வதைப் போன்று நமது அறிவுத் தாலமாகிய பெருமூளையும் வலம், இடம் என்ற இரு கூறுகளை (Right & Left hemispheres) உடையது என முன்னரும் கண்டோம். (வரைபடம் காண்க)

ஞான வள்ளல் : "அவனன்றி ஓரணுவும் அசையாது" என்பது ஆன்றோர்தம் அனுபவ வாக்கு. முற்கூறிய உலக அறிவு, உயிர் அறிவு, இறை அறிவு - இவற்றுள் எதுவாயினும் அவரவர் வினைப்பயன் நுகர்ச்சிக்கு ஏற்பவே, இறைவனால் ஊட்டி அருளப் பெறுகிறது. இது ஞான சாத்திரங்கள் அறிவுறுத்தும் சீரிய உண்மை. சிவத்தை அறியும் அறிவினை நல்குமாறு, மணிவாசகர் சிவபெருமானிடம் இரந்து கேட்பதாக அமைகிறது ஒரு பாடல்; "உன்னை வந்திப்பதோர் நெறியறியேன்; நின்னையே அறியேன்; நின்னையே அறியும் அறிவு அறியேன்; உடையாய்! அடியேன் உன் அடைக்கலமே"[1] அறிவினை மட்டுமன்றி, அறியாமையை அருளுபவரும் சிவபெருமானே என்பதற்குத் தேவார மூவர்களுள் ஒருவராகிய சுந்தரர் பாடல் ஒன்றிலிருந்து சான்று காணலாம்.

"மோடுடைய சமணர்க்கும் முடையுடைய
சாக்கியர்க்கும் மூடம் வைத்த

1 திருவாசகம் 8:24:9

பீடுடைய புலியூர்ச் சிற்றம்பலத்(து)எம்
பெருமானைப் பெற்றாம் அன்றே."[2]

ஒவ்வோர் உயிருக்கும் அதனதன் உள்ளத்து எழுச்சிக்கு ஏற்பவே, இறைவன் மெய்யறிவினை அருளுகிறார். முதிர்ந்த அறிவை அருளுபவரும் அவரே; மூடஅறிவினைத் தருபவரும் அவரே என்பது இப்பாடலின் திரண்ட கருத்து. இவற்றுள் சிவஞானம் ஒன்றே நம்மை இறைவன் திருவடிக்குச் செலுத்துவது என்பதும், இறைவன் திருவடியில் இன்புற்றிருத்தலே நிலையான பேரின்பம் என்பதும் சைவக் கொள்கை.

நால்வகை நெறிகளும் பயனும்: இப்பேற்றினைப் பெறுவதற்குச் சைவ ஞான நூல்கள் நால்வகை நெறிகளைக் கற்பிக்கின்றன. அவை சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பன.

1. சரியை என்பது சரீரத்தால் செய்யப்படும் தொண்டு நெறி ஆகும். சிவதீக்கை பெற்ற அடியார்கள் தத்தம் உடம்பில் எலும்பு, நரம்பு, தசை ஆகிய மூன்றையும் மூட்டி நிற்கிற திரிகூடசங்கமங்களில் மந்திர நீரால் குழைத்த நீற்றினை மூன்று வரிகளாக (திரிபுண்டரமாக) 16-இடங்களில் பூசிக்கொள்ளுவது மரபு. அப்போது சிவபெருமானின் ஐந்து திருமுகங்களுக்கு உரிய பஞ்ச பிரம மந்திரங்களை அவர்கள் உச்சரிப்பர்.

முதலில் அவர்கள் சிவமந்திர ஆற்றலால், தண்ணீரைத் தீர்த்தமாக்கிக் கொள்ளுவர்; சாம்பலைத் திருநீறாக ஆக்குவர்; மூச்சுக் காற்றைத் தெய்வீக ஆற்றல் பெறச் செய்வர். மூச்சை உள்நிறுத்திக் குழைத்த திருநீற்றை உடம்பில் குறிப்பிட்ட இடங்களில் முறைப்படி பூசும்போது, அந்த அந்த மந்திரத்திற்கு உரிய சிவபெருமான் திருமுகம் ஆங்காங்கே திருநோக்கம் செய்யும். தொடர்ந்து பன்னெடுங்காலம் அவ்வாறு பயிலும் போது, எலும்புத் துளையின் மச்சைகளில் உற்பத்தியாகிற எண்ணற்ற குருதி அணுக்கள் சிவபெருமானின் தெய்வீக ஆற்றலைப் பெற்றுக் கால அடைவிலே, புதுப்பொலிவுடன் சிவமாந்தன்மையில் திகழ்கின்றன.

---

2 சுந்தரர் 7:90:9

இந்த நிலையில் சிவனுக்கும் சீவனுக்கும் உள்ள உறவு எவ்வாறு அமையும் எனில், அதுகாறும் உலக முகப்பட்டுப் புறத் திணையில் அலைந்து திரிந்த உயிர், இறைவனை நோக்கித் தன் சிந்தனையைச் சற்றே திருப்பிச் சரீரத் தொண்டு செய்யத் தலைப்படுகிறது. தலைவனாகிய சிவபெருமான் ஆண்டானாக வும், தொண்டு செய்யும் ஆன்மா அடிமையாகவும் நிற்றலால் இந்த உறவினை 'ஆண்டான்—அடிமை உறவு' என அன்புடன் அழைத்தனர் ஆன்றோர்.

திருக்கோயிலில் அலகிடுதல், மெழுக்கிடுதல், பூத்தொடுத்தல் முதலியவற்றைச் சரியைத் தொண்டு என்பது மரபு. நமது இந்த உடம்பு பஞ்சபூதங்களால் ஆனது. அவற்றுள் உடலின் மேல் தோல் நிலம் என்ற பூதத்தின் கூறு ஆகும். உருத்தி ராக்கம் அணிந்து திருஐந்தெழுத்து ஓதித் தோலின்மேல் திரு நீறு பூசிக் கொள்ளுவது சைவ அனுட்டானம் ஆகும். இவ்வாறு தொண்டு செய்தலே சரியையின் நெறி முறையாகும்.

இதற்கான பயன், மறுமையில் சிவலோக வாழ்வு, இதனை வடமொழியில் 'சாலோக பதவி' என்பர்.

2. கிரியை என்பது மகன்மை நெறி. சரீரத்திலுள்ள புறக் கருவிகளோடு, மனம் முதலிய அகக் கருவிகளும் இணைந்து காரியங்கள் செய்து, இறைவனுக்கு வழிபாடு இயற்றுவதால் இஃது இப்பெயர் பெற்றது. தலைவனாகிய சிவபெருமான் தந்தையாகவும் வழிபாடு இயற்றும் ஆன்மா அன்புக் குழந்தை யாகவும் நிற்றலால், இந்த உறவினைத் தந்தை—மகன் உறவு என்றனர், பெரியோர்.

நமது உடம்பில் இதயத்தில் நிறைந்திருக்கும் குருதி, நீர் என்ற பூதத்தின் கூறு ஆகும். அதேபோல் நம் அடிவயிற்று மூலாதாரத் தில் மூண்டெழுகிற கனல், தீ என்ற பூதத்தின் கூறு ஆகும். இவ்விரு இடங்களிலும் சிவ வடிவம் கண்டு அகப் பூசனை செய்து பதினாறு வகை முகமன் வழிபாடுகளையும் (சோடசோப சாரங்களையும்) முறையாக இயற்றுதல் கிரியையின் பாற்படும்.

இதற்கான பயன் மறுமையில் சிவபெருமான் அருகில் வாழ்தல்; இதனை வடமொழியில் 'சாமீப பதவி' என்பர்.

3. **யோகம்** என்பது தோழமை நெறி. இதில் இறைவன் தம்மையே, உயிர்களாகிய நமக்குத், தோழமையாகத் தருகிறான்.

உயிரையும், உடலையும் ஒருங்கிணைந்து நிற்பது பிராண வாயு என்ற மூச்சுக்காற்று ஆகும். இது, வாயு என்ற பூதத்தின் கூறு என்பதும் தெளிவு. இதனை ஒரு நிலைப்படுத்தி, மனத்தைக் குவித்துச், சிவ சிந்தனையில் தோய்தல், யோகம் எனப்படும். இதற்கான பயன் மறுமையில் சிவபெருமானது வடிவையும், உருவையும் பெறுதல்; இதனை வடமொழியில் 'சாரூப பதவி' என்பர். முற்கூறிய சரியை, கிரியை, யோகம் மூன்றையும் மெய்த்தவநெறி என்றும் அவற்றிற்கான பயனைப் பதமுத்தி என்றும் கூறுவர். யோக நெறியில் நிலை உயர்ந்தோர்க்கே ஞானம் சித்திக்கும்.

4. **ஞானம்** என்பது அன்பு நெறி. இதில் இறைவனுக்கும் உயிருக்கும் உள்ள உறவு தலைவன் - தலைவி என்ற உயரிய பேரின்ப உறவு ஆகும். நமது உடம்பில் இப்பேரின்ப உறவுக்கு இடமாக விளங்குவது, தலையிலுள்ள பெருமூளைப் பகுதியாகும். உடம்பின் மற்ற பகுதிகள் எல்லாம் அசுத்த மாயையினால் ஆகியிருக்க, இப்பெருமூளைப் பகுதி மட்டும், பிற பூதங்களை எல்லாம் அடக்கி ஆளும் **ஆகாயம்** என்ற பூதத்தின் கூறாகச் சுத்த மாயையினால் உருவாக்கப் பெற்றது.

சிவயோக நெறியிலான, ஆழ்நிலைத் தியானத்தில் முதிர்ந்த (உயிர் என்னும்) தலைவியைப் (பிட்யூட்டரி என்னும்) பெண்மைத் தானத்தில் சிவபெருமானே தலைவனாக விளங்கிப் புணர்ந்து பேரின்பம் நல்குகிறான். அப்போது, தலைவியாகிய உயிர் சூலுற்று. உயர்ந்த சிவஞானத்தையே கருவாகத் தன்னுள் பெறுகிறது. மாயையினாலான உடம்பை நீத்து, உயிர் சிவசத்தியையே உடம்பாகக் கொள்ளுகிற அம்மை நிலையில் சிவபெருமான் திருவடிப் பேற்றை உயிர் பெறுவதற்கு இத்தகைய சிவ

ஞானப் பேறு ஓர் அரிய பயிற்சியாகும். இதனை வடமொழியில் 'சிவசாயுச்சியம்' என்பர்.

இவ்வாறு சைவத்தின் தவநெறி, மண்ணில் தொடங்கி, நீரில் முழுக்காடி, நெருப்பில் திளைத்துக் காற்றின் துணை கொண்டு, ஆகாயத்திற்கு எழுகிறது. இஃது ஒரு நெறியான அறிவியல் செயன்முறை (A Systematic Scientific process) என்பதைக் காணும் போது, சைவப் பெருவாழ்வின் ஒப்புயர்வு அற்ற தனிப் பெருந் தன்மை புலனாகும்.

"நிலம் நீர், தீவளி விசும்போ(டு) ஐந்தும்
கலந்த மயக்கம் உலகம்; ஆதலின்,
இருதிணை ஐம்பால் இயல்நெறி வழாமைத்
திரிவில் சொல்லொடு தழாஅல் வேண்டும்"[1]

இவ்வாறு சொல்லாட்சியை நெறிமுறைப் படுத்த விழைந்த தொல்காப்பியர், ஐம்பூதங்களின் மயக்கும் 'மாயா' இயல்பி லிருந்து விடுபட்டுச் செம்பொருள் வயப்பட்ட 'அருள்வினை' யாளரை உயர்ந்தோர் என்றும், 'இருள்சேர் இருவினையாளரை' 'ஐயறிவு அஃறிணையாளர்' என்றும் வகைப்படுத்தி இலக்கணம் கூறி, நம்மை எல்லாம் செந்நெறி படுத்துகிறார்.

தொல்லாசிரியரின் இச்சீரிய கருத்து திருஞான சம்பந்தரின் தீந்தமிழ்ப் பனுவலிலும் ஒளிவிடக் காணலாம்.

நிலனொடு வானும் நீரொடு தீயும்
வாயுவும் ஆகி, ஓர் ஐந்து
புலனொடு வென்று, பொய்ம்மைகள்
தீர்ந்த புண்ணியர்..............[2]

இறைமைக் காட்சிகள் அனைத்தும் இத்தகைய புலன் நெறியாளர் மாட்டே நிகழ்தலின், இவர்களே உலகுக்கு உயர்ந்த வழிகாட்டி ஆவர்; இவர்களைப் பின்பற்றியே மரபுகள் தோன்று கின்றன என்பார் தொல்காப்பியர்.

---

1 தொல்காப்பியம் - மரபியல் 91

2 திருஞானசம்பந்தர் தேவாரம் (முதல் திருமுறை)

''வழக்குஎனப் படுவது உயர்ந்தோர் மேற்றே
நிகழ்ச்சி அவர்கண் ஆகலான''[1]

சைவ ஞான நூல்கள் பற்றிய அறிவினைப் போன்றே உடலியல், உளவியல் பற்றிய அறிவும் இப்பயிற்சிக்குப் பெரிதும் பயனுடையதாகின்றன. உடலியலும் சைவநெறியும் இணைந்த பயிற்சியைப் பிராசாதயோகம் எனச் சாத்திரம் வல்லார் பாராட்டுவர்.

மூளை என்பது உடலின் மொத்த எடையில் இரண்டு விழுக்காடே (2%) உள்ள நுண்ணிய ஒரு பொருள். எனினும் இவ்வளவு சிறிய பொருள் நம் இதயப் பகுதியிலிருந்து ஈர்த்துக் கொள்ளும் ஆற்றல்களின் அளவோ இருபது (20%) விழுக்காடு ஆகும். நாம் மூச்சிழுக்கும் பிராணவாயுவாயினும் சரி, நாம் உட்கொள்ளும் சர்க்கரை ஊட்டச்சத்து ஆயினும் சரி, உடம்பு முழுவதற்குமாக நமது இதயம் வெளியேற்றுகிற குருதியாயினும் சரி, அவற்றுள் மொத்தத்தில் இருபது விடுக்காடு நம் தலையி லுள்ள மூளைக்கு வந்து சேர்கிறது: இஃது அறிவியலார் ஆய்ந்து கண்ட உண்மை.

எனவே, நமது இதயத் தாமரையில் சிவபெருமானை எழுந்தருளச் செய்து அபிடேக ஆராதனைகளாலும், மலர், தூப, தீப, நைவேத்திய வழிபாடுகளாலும் நாம் செய்கிற உயரிய ஆன்மார்த்த வழிபாட்டின் பெரும் பகுதி நமது மூளைப் பகுதிக்கு நுண்ணிய முறையில் நல்ல வளத்தைச் சேர்க்கும் என்பதும் உறுதி அன்றோ?

இருதயத்துக் குருதியிலும், ஈரலின் காற்றிலும் உள்ள மாசுகள் நீக்கப் படுவது போன்றே, உயிரைப் பிணித்துள்ள பாசக்கட்டுகளும் ஓரளவு நீக்கப்படுகின்றன. இதய வளம் பெருகுதலால், எல்லா உயிர்களிடத்தும் நமக்கு அன்பு பெருகுகிறது.

''அன்பும் சிவமும் இரண்(டு(என்பர் அறிவிலார்
அன்பே சிவம் ஆவது ஆரும் அறிகிலார்
அன்பே சிவம் ஆவது ஆரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே''

1 தொல். மரபியல். 94.

என்பது திருமூலர் வாக்கு[1]. மூளையின் ஆற்றல் கூடுவதால். இறைமையை நோக்கிய அடுத்த படிநிலைக்கு, நம் அறிவும் சிறிது சிறிதாக வளர்கிறது.

இதன் மூலம் இம்மை நலன், மறுமைப் பேறு, அம்மைப் பேரின்பம் ஆகிய முத்திறப் பயனும் கிடைப்பது உறுதி என அனுபவ வழியாக உணர்ந்த அருளாளர் கூறுவர். சுந்தரரின் பண்ணிசை இதற்குச் சான்று பகரும்:

''இம்மை யேதரும் சோறும் கூறையும்
ஏத்தலாம் இடர் கெடலுமாம்
அம்மை யேசிவ லோகம் ஆள்வதற்கு
யாதும் ஐயுற(வு) இல்லையே!''[2]

இச்சை, அறிவு, செயல் என உயிரின் ஆற்றலை மூன்றாகக் கூறுவர் ஞானிகள். உயிர் ஆற்றல் நம் உடலின் எல்லாப் பகுதிகளிலும் பரவி நின்று வினைப் பயனுக்கு ஏற்பத் தொழிற் படும் இஃது உயிரின் பொது நிலை. பரந்து பட்ட அந்நிலையி லிருந்து குவிந்து உயிராற்றல் மேல் நோக்கிச் சென்றாலே, உயிருக்கு உய்தி. அதனால்தான் திருவள்ளுவரும் 'உள்ளுவ தெல்லாம் உயர்வு உள்ளல்' என அறிவுறுத்தினார். இஃது உயிரின் சிறப்பு நிலை.

ஓர் இரயில் எஞ்சினை எடுத்துக் கொள்ளுவோம். எத்தனை நூறாயிரம் செலவு செய்து அதனைத் தயாரித்தாலும், உறையில் வைத்திருக்கும் வரை, அதனால் பயன் என்ன? தண்டவாளத்தில் ஏற்றி ஓடவிட்டால் தானே எஞ்சினும் பழுதடையாது; பிறர்க்கும் பயனுடையதாயிருக்கும்.

அதே போன்று, புல்லாகவும் பூண்டாகவும், நண்டாகவும் நத்தையாகவும், எறும்பாகவும், பாம்பாகவும் எத்தனையோ ஐயறிவுப் பிறப்புகளில் உழன்று. சிறிது சிறிதாக அறிவு வளரப் பெற்று. அரிதாகிய இந்த ஆறறிவு மானுடப் பிறப்பினைப் பெற்றுள்ள நாம் உயிரின் ஆற்றலைப் பொது நிலையிலேயே வீணாக்கி விடாது. முதுகுத் தண்டு என்னும் தண்டவாளத்தில் ஏற்றிப் பேரின்பம் என்ற குறியீட்டை நோக்கி மேலே எழுந்து செல்லுவதன்றோ உண்மையான அறிவுடைமை ஆகும்? அதற்கு, உயிர்களாகிய நாம் யாது செய்தல் வேண்டும்?

1 திருமூலர் திருமந்திரம் 10:1:269
2 சுந்தரர் தேவாரம் 7:

நிறைமொழி மாந்தராகிய சிவகுரு ஒருவரைச் சார்ந்து நிற்றல் வேண்டும் திருவருள் துணைகொண்டு மறைமொழியாகிய மந்திரத்தை, அவர் நமது வலது செவியில் உபதேசிப்பார். அப்போது நம் உடலிலும், உள்ளத்திலும் என்ன நிகழும்? என்பதை சில அடிப்படைத் தத்துவ உண்மைகளைக் கொண்டு சிந்திப்போம்.

சடத்தில் இறைவன்: திருக் கோயில்களிலுள்ள சிலைகளும் சிற்பங்களும், கல்லாலும் உலோகத்தாலும் உருவாக்கப்பெற்றவை கல்லும் உலோகமும் இயற்கையில் அறிவற்ற சடப்பொருள்களே; மாயை என்னும் சட ஆற்றலி (Potential Energy) லிருந்து வெளிப் போந்தவையே. ஆயினும் மந்திரங்களின் ஆற்றலாலும் நிறைவான வழிபாட்டு நெறிகளாலும் அவை கடவுள் தன்மையை எய்துகின்றன அன்றோ? அதேபோன்று, மாயையினாலான நமது உடம்பும் கடவுள் தன்மையை அடைவதற்குச் சைவ வேதங்களும் ஆகமங்களும் அறிவுறுத்துகிற மந்திர வழிபாடுகள் உறுதுணை புரிகின்றன என்பதில் ஐயமும் உளதோ?

இதுகாறும் சிவயோக நெறிநிற்கும் உயிர் படிமுறையில் எவ்வாறு அறிவு விளக்கம் பெற்றுப் பரமுத்தியாகிய வீடு பேற்றினை அடைகிறது என்பது பற்றி விரிவாகக் கண்டோம். ஆனால், பொன்னும் பொருளும், பட்டமும் பதவியும் மனநலமும் உடல் நலமும் இன்ன பிறவு மன்றோ. இன்றைய உலக வாழ்வுக்கு இன்றியமையாத் தேவையாயின? அவற்றைப் பெற்று உலக இன்பம் துய்ப்பதற்குச் சிவநெறி எவ்வாறு துணை நிற்கிறது என்ற வினா எழுகிறதன்றோ?

உயிர்நலம், மனநலம், உடல்நலம் இவை ஒவ்வொன்றுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு வைகறைத் துயில் ,எழல், உடம்பினை உள்ளும் புறமும் தூய்மை செய்தல், தூயவற்றோடு மட்டுமே தொடர்பு கொள்ளுதல், சரியான நேரத்தில் காரியங்களைச் செய்தல் முதலிய நல்ல பழக்கங்கள், சிவநெறி நிற்போர்க்கு இயல்பாகவே ஏற்படுகின்றன.

திருக்கோயில்களில் வலம் வருமுறையிலிருந்து, வழிபடு நெறி வரை அனைத்துமே உடலுக்கும் உள்ளத்துக்கும் உயிருக்கும் அறிவியல் அடிப்படையிலான நல்ல பயிற்சியாகின்றன.

சிவமூல மந்திரத்தோடு பிராணாயாமம் என்ற மூக்சுப் பயிற்சியும் சிவஞானம் என்ற மனப் பயிற்சியும் செய்வதால் (Parkinson's Disease,) என்ற நடுக்கு வாதம், (Epilepsy, paralysis போன்ற) பக்க வாதங்கள் (Diabetis) என்ற நீரிழிவு நோய் (Blood pressure என்ற) இரத்த அழுத்த நோய் முதலிய பற்பல உடல் நோய்கள் வராமலேயே தடுத்துக் கொள்ளலாம்.

உலகியலில் அலைந்து திரிகிற மனம் விரைவில் எய்த்து விடுகிறது. அதுவே கால அடைவில் மனநோய்கள் பலவற்றிற்கு வித்தும் ஆகிறது. சடமாகிய மின்சாரக் கம்பி, மின் ஆற்றல் பாய்ந்து செல்லுங்கால், பேராற்றலைப் பெற்றுப், பலப்பல கருவிகளை இயக்கி, மின்சாதனங்களாக நமக்குப் பயன் தருகிறது அலறோ? அதேபோன்று சடமாகிய இந்த உடலும் இறைவன் திருவருள் இயக்கத்தால், அளப்பரிய ஆற்றலைப் பெற்று எண்ணு தற்கரிய பேரின்பப் பயனை நல்கும் என்பது உறுதி. அதனால், இறைமை உணர்வில் ஈடுபடும் மனம் மேன்மேலும் வளமும் திண்மையும் பெறுகிறது.

நிறைவுரை: எனவே, சைவ சித்தாந்திகள் உடலியலைப் புதியது என்று எண்ண வேண்டியதில்லை. உடலியலார், சைவ சித்தாந்தத்தைத் தமக்குத் தொடர்பில்லாத ஒன்றாகக் கருத வேண்டியதும் இல்லை. சைவ சித்தாந்தமும் அறிவியலும் இணைந்த கல்வியால் யாது பயன் என்பது பற்றித் தொகுத்து நோக்குவோம்.

1 சங்ககாலத் தமிழ்ச் சான்றோர்களும், திருஞான சம்பந்தர் முதலிய சமய குரவர்களும், மெய்கண்டார் முதலிய சந்தான குரவர்களும் கண்டு அனுபவித்த நெறி, சிவயோக சிவஞான நெறியாகும்.

2 தெய்வ வடிவங்களை நம் உடலுறுப்புக்களில் கண்டு வழி பட மெய்ஞ்ஞானமும், விஞ்ஞானமும் இணைந்த கல்வி பெரிதும் துணையாய் இருக்கிறது.

3 சைவ சாத்திர தோத்திரங்கள், பண்டைய இலக்கண இலக்கியக் குறிப்பு மொழிகள், புராணங்களின் நுண்ணிய உட்

கருத்துக்கள் இவற்றிற்கெல்லாம் உடலுறுப்புகளின் துணையால் பருமையான தெளிவான விளக்கம் பெற முடிகிறது.

4 உடலின் அமைப்பைக் கற்பதால் சிவானுட்டானம். பூசை முறைகளை எளிதாகத் தவறின்றிச், செவ்விதே செய்ய வாய்ப்பு ஏற்படுகிறது.

5 அன்றாடப் பயிற்சி, சிவபூசை முதலியவற்றிற்கான காரணங்களை ஆய்ந்து அறிவதன் மூலம் அவற்றில் ஒரு பிடிப்பு உண்டாகிறது.

6 மந்திரம், கிரியை, பாவனை என்ற மூன்றும் சைவ சித்தாந்தம் அறிவுறுத்தும் சாதனங்கள். ஓர் இறை அம்சத்தை உடலின்கண் பாவனை செய்து அதற்குரிய மந்திரத்தை தியானித்துத், தக்க முறையில் வழிபாடு இயற்றுவதற்கு உடலியல் அறிவு பெரிதும் துணை நிற்கிறது. (எ-டு) இருதயத்தைச் சிவலிங்கமாகப் பாவித்துச் சிவமூல மந்திரத்தை ஓதி, அபிடேக ஆராதனைகளாகிய கிரியைகளைச் செய்தல்.

7 சாத்திரங்கள் கூறும் மெய்ப்பொருளுக்கு அறிவியல் விளக்கம் கிடைப்பதால் அவை வெறும் பொழுது போக்கோ, மூட நம்பிக்கையோ அல்ல என்ற மனத்தெளிவு ஏற்படுகிறது.

8 உடலின் வளர்சசி, இம்மை வாழ்வுக்கு மட்டுமே இன்பம் கொணரும். உள்ளத்து எழுச்சியோ, இம்மை மறுமை இரண்டிற்கும் இன்பம் தரும். இவற்றோடு இறையின்ப உணர்ச்சியே உண்மையான ஆன்ம வளர்ச்சியாகும். உயிர் அறிவில் ஏற்படும் சிவஞானத் தெள்வே நிலையான உண்மைப் பேரின்பம். அதுவே. இம்மை, மறுமை, அம்மை ஆகிய மும்மைக்கும் இன்பம் தருவது. இதைப்பற்றிச் சிந்தித்துச் செயல் படுவதால், உடல்நலம், உள்ளப்பண்பு, உயிரின் ஆற்றல் பெருகுதல் என்ற படிமுறை ஆன்ம வளர்ச்சிக்கு இங்கு வழியேற்படுகிறது.

9 சிறுமூளையைச் சார்ந்த சிற்றறிவும் சிறு செயலும் மடைமாற்றம் செய்யப்பெற்றுப் பெருமூளைச் சார்புடையதாய்ப் பேரறிவும் அருட்செயல்களும் பேரொளியுமாய்த் திகழ்வதற்குச் சீரிய வாய்ப்பு ஏற்படுகிறது.

10 ஒவ்வொரு நாள் பயிற்சியிலும் புதிய புதிய உணர்வு களையும், அனுபவங்களையும் (Intuitions and Experiences) பெற முடிகிறது.

11 நிலையற்றது உடல்; நிலையானது உயிர்; எனவே உயிருக்கும், உடலுக்கும் உள்ள உறவு கால வரம்பிற்கு உட் பட்டது. உடலால் பெறுகிற இன்ப துன்பங்களும் நிலையற்றன. ஆனால், உயிருக்கும் கடவுளுக்கும் உள்ள உறவு நிலையானது. எனவே இறைவன் திருவடியைச் சிந்திப்பதால், உயிர் நிலையான உண்மைப் பேரின்பத்தில் திளைக்கிறது. இஃது இப்பிறவி நீங்கிய மறுமையில்தானோ என ஐயுற வேண்டியதில்லை. இந்தப் பிறவி யிலேயே இந்த மனித உடலுடனே அந்தமிலாப் பேரின்பத்தை அடைய முடியும் என்பது அருளாளர் அனுபவ வாக்கு

12 இறைவன் நமது உடம்பினுள் பல நல்லுறுப்புக்களை அருளியுள்ளார். தசை, எலும்பு, நரம்பு, குருதி என அவற்றை வறிதே பிண்டத் தொகுப்பாக இகழ்ந்து ஒதுக்காது, சிறந்த துணைக் கருவிகளாகக் கொண்டு, நாம் இறைவனைப் போற்றி வழிபடும் முறைகளையும், கடமைகளையும் பயிலுதல் வேண்டும்.

இதனைத் திருஅங்கமாலை என்ற திருப்பதிகத்தில் திருநாவுக்கரசர் மிகச் சிறப்பாக ஓதுகிறார். அப்பதிகத்தின் இறுதிப் பாடலிலிருந்து, அவர் தன்னுள்ளே தலைவனைக் கண்ட பெற்றி புலனாகிறது.

''தேடிக் கண்டு கொண்டேன் - திரு
மாலொடு நான் முகனும்
தேடித்தே டொணாத் தேவனை என்னு(ள்)ளே
தேடிக் கண்டு கொண்டேன்.''[1]

எனவே அறிவியலையும் சாத்திர தோத்திரங்களையும் முறையாக இணைத்துக் கற்று, அதன்படி நின்றால், நமது உடலின் ஒவ்வோர் அணுவிலும் இறைவன் கலந்து நிற்கிற

1 திருஅங்கமாலை - அப்பர் தேவாரம் 4 : 9 : 12

உண்மையையும், அவரது பொதுவான இயல்புகளையும் உணர்ந்து தெளியலாம். அது நமது ஆன்மீக மேம்பாட்டிற்குப் பெருந் துணையாகும்.

மேலும், உடலியல் - உளவியலையும், சைவநெறி முறைகளையும் நூல்களின் வழி அறிவது மட்டும் போதாது. இரண்டையும் இணைத்து உரிய சிவாகம நெறிப்படி ஒவ்வொருவரும் நடைமுறையில் பயிலுவது (Learning and application) அவரவர் தம் தனிப்பட்ட சொந்த முன்னேற்றத்திற்கேயாம்.

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக.[1]

என்பது தெய்வப் புலவரது அறிவுரை அன்றோ?

எனவே, நாமும் அருளாளர் அனுபவ வழி நின்று நிலையான உண்மைப் பேரின்பத்தை நோக்கி முன்னேறுவோமாக!

''வான்முகில் வழாஅது பெய்க, மலிவளம் சுரக்க, மன்னன்
கோன்முறை அரசுசெய்க, குறைவிலாது உயிர்கள் வாழ்க,
நான் மறை அறங்கள் ஓங்க, நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகம் எல்லாம்''

திருச்சிற்றம்பலம்

---

1 திருக்குறள் - *391*

மேற்கோள் அகராதி

தொல்காப்பியம் — செய்யுளியல் 35,143,205,207.210 211.212,215,218,219 220,304, 353,396,472.485

தொல்காப்பியம் — மரபியல் 5,12,42,65,167,223,224 227,230,232,235,297,299,301 341,525,561,563.

தொல்காப்பியம் — வினையியல் 165

தொல்காப்பியம் — உரியியல் 393

38. நீதி நெறி விளக்கம் 306

39. நெஞ்சுவிடு தூது 214,268,353,372

40. பதினோராம் திருமுறை 285,556

41. பட்டினத்தார் 400

42. பெரியபுராணம் 261,467,525

43. போற்றிப்பஃறொடை 547

44. மணிமேகலை 398

45. மூத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் 43,91

46. விநாயகர் அகவல் 327,399.464

47. Anatomy & Phisiology by Arther C. Guyton. MD.,

48. Gray's Anatomy 33rd Edn. —Longmans.

49. Pear's Encyclopedia

50. The Science Book of the human body — Edith E. Sproud M.D.

51 I'm Joe's Body — by JD. Ratcliff.

52. Oake's Pocket Medical Dictonary – Livingstone, London

அரும்பொருள் அகராதி

அ

ஆ

இ

ஒ

ஓ

க

கா

கீ

கு

கூ

கே

கொ

கோ

ச

சா

சி

சீ

சு

சூ

செ

சை

சோ

ஞா

த

தா

தி

தீ

தெ

பா

பி

பு

பெ

பே

பொ

ம

மூ

மே

யா

வ

வா

வி

வீ

வெ